# புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

**பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது,**
**தேசியத் தர மதிப்பீட்டுக் குழுமத்தால் NAAC (4th Cycle) A++**
**தகுதியுடன் (CGPA 3.75/4) தரமதிப்பீடு பெற்றது,**
**செயல் திறன் ஆற்றல் வளத் தனித்தகுதிப் பெற்றது,**
**திருச்சிராப்பள்ளி - 620 002.**

## தமிழாய்வுத்துறை

புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

**மக்கள் மனம் திங்கள் இதழ், சிங்கப்பூர்**

**தமிழ் மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

ISSN: 3049-0723 - *Online – International Peer Reviewed, Referred & Open Access Journal*

---

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

**பொருண்மை**

# தமிழ் இலக்கியங்களில் இந்திய சிந்தனை மரபுகளும் சுற்றுச்சூழல் விழுமியங்களும்

*Indian Philosophical Traditions and Environmental Ethics in Tamil Literature*

திருச்சிராப்பள்ளியில் செயல்பட்டு வரும் புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, பெண்களுக்கான புகழ்பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்வி நிறுவனமாகும். நூற்றாண்டுக்கும் மேலான கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட இக்கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கல்லூரி தேசியத் தர மதிப்பீட்டுக் குழுமத்தால் **NAAC (4thCycle) A++ தகுதியுடன் (CGPA 3.75/4) தரமதிப்பீடு** பெற்றது. கல்வி, ஆய்வு மற்றும் சமூகப் பணிகளில் தொடர்ந்து சிறந்து விளங்கி வருகிறது.

இக்கல்லூரியின் தமிழாய்வுத்துறை, சிங்கப்பூரின் *மக்கள் மனம்* திங்கள் இதழ் மற்றும் *தமிழ்மணம்* சர்வதேச தமிழ் ஆய்விதழுடன் இணைந்து இப்பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்துகிறது.

---

## கருத்தரங்கின் நோக்கம்

இந்திய சிந்தனை மரபில் இயற்கையும் சுற்றுச்சூழலும் முக்கிய இடம் பெற்றுள்ளன. சங்க இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பியங்கள், புராணங்கள், தற்கால இலக்கியங்கள் உள்ளிட்ட பல்வேறு இலக்கியப் படைப்புகளில் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சிந்தனைகள் காணப்படுகின்றன.

பழந்தமிழர் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததுடன், நிலம், நீர், மழை, மரங்கள், விலங்குகள் போன்ற இயற்கை வளங்களைப் பாதுகாத்தனர். இன்றைய சூழலில் சுற்றுச்சூழல் அழிவு அதிகரித்து வரும் நிலையில், இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள இயற்கை மற்றும் சூழலியல் சிந்தனைகளை மீட்டெடுத்து, அவற்றின் முக்கியத்துவத்தை இளைய தலைமுறையினருக்கு எடுத்துரைப்பதே இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும்.

## கருத்தரங்கின் முக்கியப் பொருண்மைகள்

1. சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல்
2. ஐந்திணை மரபும் சுற்றுச்சூழல் அறிவும்
3. பழந்தமிழர் வாழ்வியலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்
4. அறநூல்களில் சுற்றுச்சூழல் சிந்தனைகள்
5. தமிழ்ச் சமய இலக்கியங்களில் இயற்கை நோக்கு
6. பக்தி இலக்கியங்களில் இயற்கை வழிபாடு
7. காப்பியங்களில் சுற்றுச்சூழல்
8. தமிழ்ப் புதினங்களில் சுற்றுச்சூழல் அரசியல்
9. தமிழ் இலக்கியங்களில் சூழலியல் அறவியல்
10. மழை, நிலம், நீர் பற்றிய இலக்கியப் பதிவுகள்
11. நவீன தமிழ் இலக்கியங்களில் சுற்றுச்சூழல் நெருக்கடிகள்
12. சிற்றிலக்கியங்களில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு
13. இந்தியப் புராணங்களில் சுற்றுச்சூழல்
14. நாட்டுப்புற இலக்கியங்களில் சுற்றுச்சூழல்
15. மொழிபெயர்ப்பு இலக்கியங்களில் சுற்றுச்சூழல்
16. தமிழ் கவிதைகளில் இயற்கை மற்றும் சூழலியல் உணர்வுகள்
17. அயலக இலக்கியங்களில் சுற்றுச்சூழல்
18. இந்திய தத்துவ மரபும் தமிழ் இலக்கியங்களும்
19. பழங்குடியின மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு
20. பாரம்பரிய வேளாண்மையும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையும்
21. தமிழ் இலக்கியங்களில் பசுமைச் சிந்தனைகள்

**கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்**

- முனைவர் ம. பிரேமா – உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறைத் தலைவர்
- முனைவர் ஆ. தேவதா – உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
- முனைவர் ஞா. எலிசபத் ராணி – உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
- முனைவர் து. நீலாதேவி – உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
- திருமிகு பிச்சினிக்காடு இளங்கோ – *மக்கள் மனம்* திங்கள் இதழ் நிறுவனர், கவிமாலை அமைப்பின் நிறுவனர், சிங்கப்பூர்

**ஆலோசனைக் குழு**

- முனைவர் ம. பிரேமா – துறைத்தலைவர்

**பதிப்புக்குழு**

- முனைவர் அ. ஜெஸிந்தாராணி
- முனைவர் தா. லதா
- முனைவர் க. சுஜாதா
- முனைவர் ஆ. ஷர்மி
- முனைவர் கு. டாலி ஆரோக்கியமேரி

**கருத்தரங்கக் குழு**

- முனைவர் இரா. பபித்ரா
- முனைவர் வெ. பிரேமலதா
- முனைவர் அ. அருள் சகாய அனிட்டா
- முனைவர் சு. அனுலெட்சுமி
- முனைவர் தே. அனித்தா மேரி
- முனைவர் அ. அனுடயானா
- முனைவர் பா. இமாகுலேட்
- முனைவர் ச. கௌசல்யா
- முனைவர் ச. புனிதா
- முனைவர் செ. நான்சி
- முனைவர் த. பத்மா
- முனைவர் து. விஜயராணி
- திருமதி கி. வான்மதி
- முனைவர் பாலின் செல்வ ஷோபா
- திருமதி கு. சிந்து

**தொடர்புக்கு**

**முனைவர் ஆ. தேவதா** – 94434 44072

**முனைவர் ஞா. எலிசபத் ராணி** – 98652 40734

**முனைவர் து. நீலாதேவி** – 97912 79651



**Holy Cross College** (Autonomous)
Affiliated to Bharathidasan University
Nationally Accredited (4th Cycle) with A++ Grade (CGPA 3.75/4) by NAAC
College with Potential for Excellence
**Tiruchirappalli - 620 002, Tamilnadu, India.**

## வாழ்த்துரை

மனிதனின் சிந்தனையைச் செம்மைப்படுத்தி, சமூகப் பொறுப்புணர்வை வளர்த்து, தலைமுறைகளுக்கு வழிகாட்டி அறிவை வளர்க்கும் அரிய கருவியாக திகழும் ஆற்றல் புத்தகங்களுக்கு உண்டு. இத்தகைய சிறப்புமிக்க பணியை மேற்கொள்ளும் நூல்கள் கல்வி உலகத்திற்கும் ஆய்வுலகிற்கும் நிலையான செல்லமாக திகழ்கின்றன. அறிவின் வழியே சமூக முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும் பயணத்தில் நூல்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அந்த வகையில் 'இந்திய சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும்' என்ற இந்நூல் காலத்தின் தேவையை உணர்த்தும் அரிய ஆய்வுத் தொகுப்பாக அமைந்திருக்கின்றது.

இந்திய சிந்தனை மரபு இயற்கையோடு இணைந்து வாழ்வதையும் அனைத்து உயிர்களையும் மதிப்பதையும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதையும் உயரிய வாழ்வியல் நெறிகளாக கருதுகின்றது. இத்தகைய கருத்துக்களை தமிழ் இலக்கியங்களின் வழி ஆராய்ந்து இன்றைய சமூகத்திற்கு பொருத்தமான முறையில் வெளிப்படுத்தும் முயற்சி பாராட்டத்தக்கது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது வெறும் அறிவியல் சார்ந்த நெறி மட்டுமல்ல. அது நமது பண்பாடு, மரபு மற்றும் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்திருப்பது என்பதை இந்நூல் தெளிவுபடுத்துகிறது. மேலும் தமிழ் ஆய்வுலகில் சிறப்பான இடத்தைப் பெற்று, இந்திய சிந்தனை மரபின் உயரிய விழுமியங்களை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் அரிய கருவூலமாக விளங்கிட எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Sr. Regina Mary

**MOTHER SUPERIOR**
**HOLY CROSS CONVENT**
**TEPPAKULAM POST**
TRICHY - 620 002

Phone : 0431-2700637 Fax : 0431-2713312 E-mail : office@hcctrichy.ac.in Website : www.hcctrichy.ac.in



**Holy Cross College** (Autonomous)
Affiliated to Bharathidasan University
Nationally Accredited (4th Cycle) with A++ Grade (CGPA 3.75/4) by NAAC
College with Potential for Excellence
Tiruchirappalli - 620 002, Tamilnadu, India.

## வாழ்த்துரை

தமிழ்மொழி இலக்கியங்கள் மனித வாழ்வின் உயரிய பண்புகளையும் இயற்கை சார்ந்த வாழ்வியல் நெறிகளையும் தலைமுறைகளுக்கு எடுத்துரைக்கும் அரிய அறிவுப் பொக்கிஷம். அவற்றுள் பொதிந்துள்ள இந்திய சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும் இன்றைய காலகட்டத்தில் மிகவும் இன்றியமையாதவை.

இயற்கையைப் போற்றுதல், உயிர்களை நேசித்தல், அறநெறியுடன் வாழ்தல், முதலிய உயரிய சிந்தனைகள் தமிழ் இலக்கியங்களில் ஆழமாக வேரூன்றியிருப்பதை ஆய்வாளர்கள் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றனர். மேலும் மானுட சமூகத்திற்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு இளைய தலைமுறைக்கு இந்திய அறிவு மரபினை வெளிப்படுத்தும் சிறந்த ஆவணமாகத் திகழ்கின்றது.

ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் இந்நூல் சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அறிவைப் பகிர்வதும், ஆய்வை வளர்ப்பதும் புதிய சிந்தனைகளை உருவாக்குவதையும் கருத்தரங்கின் உயரிய நோக்கமாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை நூலாகத் தொருத்து வெளியிடுவது கல்விப் பணியில் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

இந்நூல் தமிழ் ஆய்வுலகில் நிலையான இடத்தைப்பெற்று பலபுதிய ஆய்வுகளுக்கு உந்து சக்தியாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SECRETARY
HOLY CROSS COLLEGE,
(AUTONOMOUS)
TIRUCHIRAPPALLI-2.

Phone : 0431-2700637 Fax : 0431-2713312 E-mail : office@hcctrichy.ac.in Website : www.hcctrichy.ac.in



**Holy Cross College** (Autonomous)
Affiliated to Bharathidasan University
Nationally Accredited (4th Cycle) with A++ Grade (CGPA 3.75/4) by NAAC
College with Potential for Excellence
Tiruchirappalli - 620 002, Tamilnadu, India.

## அணிந்துரை

தமிழ் இலக்கியங்கள் மனிதவாழ்வியலுக்கும் இயற்கைக்கும் இடையிலான ஆழமான உறவை எடுத்துரைக்கும் சிறந்த இலக்கியக் கருவூலமாகும். இக்கருவூலங்கள் மனிதனோடு, இயற்கையையும் இறையையும் ஒருங்கிணைத்து நோக்கும் உயரிய பார்வழியும் சதத்துவத்தை, முன்வைக்கின்து. மேலும் தமிழரின் பண்பாடு, வாழ்வியல், அறநெறி மற்றும் இயற்கைப் புலப்பாட்டு நெறிகம் என்ற வகையில் சுற்றுச்சூழல் அிழுமியங்களை வெளிப்படுத்துகின்றன. சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், பக்திஇலக்கியங்கள், நீதிநூல்கள் எனப் பல்வேறு இலக்கியங்களில் ஏராளமாக இந்திய சிந்தனை மரபுகளும் சுற்றுச்சூழல் விழுமியங்களும் விரவிக்கிடக்கின்றன. இந்திய சிந்தனை மரபில் இயற்கை ஒன்றோடொன்று தொடர்புடையமையாக்க் கருதப்படுகின்றன. இக்கருத்துக்கனை தமிழ் இலக்கியங்கள் தொலிவாகப் பிரதிபலிக்கின்றன.

இன்றைய உலகம் காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் மாசுபாடு, இயற்கை வளங்களின் சுருக்கம் போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில் இயற்கையைப் போற்றுதல் உயிரினங்களை மதித்தல், நீர் மற்றும் நில வளங்களைப் பாதுகாத்தல், அளவோடு வளங்களைப் பயன்படுத்துதல் போன்ற சுற்றுச்சூழல் விழுமியங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இல்விழுமியங்கள் புதிதாக உருவானவை அல்ல மாறாக தேசிய சிந்தனை மரபிலும் தமிழ் இலக்கியங்களிலும் தொன்று தொட்டு வலியறுத்தப்பட்ட வாழ்க்கை நெறிகளாகும். இக்கருத்துரங்கம் தமிழ் இலக்கியங்களில் பதிவாகியுள்ள இந்திய சிந்தனை மரபுகளையும் மரபுநெறிகளால் வெளிப்படும் சுற்றுச்சூழல் விழுமியங்களையும் ஆய்வுசெய்து அவற்றின் சமகால நிலைப்பாட்டுத்தன்மைகளையும், சமூக பயன்பாடுகளையும் எடுத்துரைக்கும் இயங்கு தளமாக அமைகின்றது. மேலும் இயற்கையுடன் இயைந்து வாழும் வாழ்க்கை முறையே மனித குலத்தின் நிலையான எதிர்காலத்திற்கு அடித்தளமாக அமையும் என்பதை உணர்த்தும் வகையில் அறிவுப் பரிமாற்றத்திற்கான தளமாகவும் இயற்கையின்றி மனுக்குலத்தின் வாழ்க்கை செல்நெறிகள் சிந்க்காது என்பதை எதிர்காலத்துக்கு உணர்த்தும் வகையிலும் இக்கருத்தரங்கு அமையும் என்று உறுதியாக நம்பப்படுகின்றது.

மேலும் இந்நூல் பல ஆய்வுகளுக்கு வித்திடுலதோடு மட்டுமல்லாமல் அறிவுப்பரிமாற்றத்தை வளர்க்கவும், தமிழ் ஆய்வுளில் சிறப்பான பங்களிப்பை வழங்கவும் இறைவனை வேண்டி இந்நூலை வெளியிடும் அனைவருக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Sr. Reeta 12/8/2026
PRINCIPAL
HOLY CROSS COLLEGE,
(AUTONOMOUS)
TIRUCHIRAPPALLI-2.

# மதிப்புரை

சிங்கப்பூர்
காடு கிரியேசன்ஸ்
வழங்கும்

# மக்கள் மனம்

மக்கள் கலை இலக்கிய இதழ்

ஆசிரியர்:
பிச்சினிக்காடு இளங்கோ

KAADU CREATIONS :
Reg No. 53393581D

PERMIT NUMBER:
MCI(P)033/05/2020

ஐம்பூதங்களை நிலம், நீர், தீ, வளி, விசும்பு மாசுபடுத்துவது அறத்திற்குப் புறம்பானது என்னும் விழுமியத்தை இந்திய மரபு வளர்த்தெடுத்தது. தொல்காப்பியம் காட்டும் திணைக்கோட்பாடு, மனிதனின் அக உணர்வுகளையும், புற வாழ்வையும் நிலவியல் மற்றும் சூழலியலோடு பிணைத்துக் காட்டும் உலகளாவியச் சூழலியல் மாதிரியாகும் (Eco-centric vision). கொல்லாமை, அகிம்சை, எளிய வாழ்வு, எல்லைக்குட்பட்ட நுகர்வு ஆகிய அறப்பண்புகள் அனைத்தும் இயற்கையின் சமநிலையைப் பேணுவதற்காக அமைக்கப்பட்ட சமூகக் கோட்டுப்பாடுகள் ஆகும்.

மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவு வெறும் நுகர்வு சார்ந்தது அல்ல. அது உணர்வுப்பூர்வமானது, ஆன்மீகமயமானது என்பதை உலகுக்கு உணர்த்திய பெருமை இந்திய சிந்தனை மரபிற்கு உண்டு. தொழிற்புரட்சிக்குப் பிந்தைய நவீன உலகம், இயற்கையை வெல்வதே மனித குலத்தின் சாதனை எனப் பிரகடனப்படுத்திய சூழலில், காலநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல், பல்லுயிர் இழப்பு போன்ற கடுமையான சுற்றுச்சூழல் சீரகேடுகளை இன்று உலகம் எதிர்கொண்டு வருகின்றது. இச்சீர்கேட்டிற்கு தீர்வு காண்பதற்காக விரைந்து செயல்படும் மனித குலத்திற்கு இந்திய சிந்தனை மரபில் விளைந்த தத்துவ புலங்களே உறுதுணையாக அமைகின்றன

இந்திய சிந்தனை மரபில் இயற்கை என்பது மனிதனுக்கு வெளியே இருக்கும் ஒரு பொருள் அல்ல. அது மனித வாழ்வின் நீட்சி. வேதங்கள், உபநிடதங்கள், சமண-பௌத்த அறக்கோட்பாடுகள், பக்தி இலக்கியங்கள் மற்றும் சங்கத் தமிழர் மரபு என அனைத்துமே இயற்கையோடு இயைந்த வாழ்வியலையே முன்னிறுத்துகின்றன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சமநோக்கும், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என இயற்கையைப் போற்றும் முன்னோர்களின் தத்துவமும் நிலம், நீர், காற்று, முதலியனவற்றை தெய்வமாக வழிபட்ட பண்பாட்டை புகட்டுவனவாக அமைகின்றது.

இத்தகு சிறப்புமிக்க மரபுச் சிந்தனைகளை, இன்றைய அறிவியல் நுட்பத்தோடும் சூழலியல் நெருக்கடிகளோடும் இணைத்து மறுவாசிப்பு செய்வது காலத்தின் கட்டாயமாகும். அவ்வகையில், "இந்திய சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும்" எனும் பன்னாட்டு கருத்தரங்கு, பல்வேறு ஆய்வுப் புலங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களின் ஆழமான ஆராய்ச்சி திறனை தூண்டும் வகையில் அமைந்திருக்கின்றது. பழம் பெருமையை சொல்லாமல், அதன் வழியே நிகழ்காலச் சிக்கல்களுக்கானத் தீர்வுகளை நடைமுறையில் கண்டறிவதே இக்கருத்தரங்கின் முதன்மை நோக்கமாக உருவாக்கியிருக்கின்றனர். சூழலியல் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழ் மற்றும் இந்திய ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் என அனைவருக்கும் பயனுள்ள களமாக இக்கருத்தரங்கு அமைந்திருக்கின்றது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**வாழ்த்துரை**

தமிழ் மொழியும் இலக்கியமும் உலகின் தொன்மையான செம்மொழி மரபுகளில் தனித்துவமான இடத்தைப் பெற்றவை. மனித வாழ்வில் சிந்தனை, அறம், பண்பாடு, இயற்கை, சமூகப் பார்வை, தத்துவம், ஆன்மிகம் எனப் பல்வேறு வாழ்வியல் கூறுகளை ஆழமாகப் பதிவு செய்து, தலைமுறைகளைக் கடந்து அறிவு செல்வமாக நிலைத்திருப்பது தமிழ் இலக்கியத்தின் பெருமையாகும். காலம் மாறினாலும் இலக்கியங்களில் பொதிந்துள்ள வாழ்வியல் விழுமியங்களும் சிந்தனைகளும் இன்றைய சமூகத்திற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்குகின்றன.

தமிழ் இலக்கியத்தின் பல்வேறு பரிமாணங்களை ஆராயும் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் உருவாகியுள்ளது. சங்க இலக்கியம், அற இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், மொழிபெயர்ப்பு இலக்கியம், நவீன இலக்கியம், சூழலியல், வாழ்வியல், பெண்ணியம், மொழியியல் உள்ளிட்டப் பல்வேறு ஆய்வுத் தளங்களை மையமாகக் கொண்ட கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு கட்டுரையும் மரபையும் புதுமையையும் இணைக்கும் ஆய்வுப் பார்வையுடன் அமைந்துள்ளதோடு, புதிய கருத்தாக்கங்களையும் அறிவியல் அணுகுமுறைகளையும் முன்வைக்கிறது. இலக்கியங்களை வெறும் வரலாற்றுச் சான்றுகளாக அணுகாமல், அவற்றைச் சமகாலச் சமூகச் சூழலுடனும் உலகளாவிய ஆய்வுக் கோட்பாடுகளுடனும் தொடர்புபடுத்தி ஆராயும் முயற்சி இத்தொகுப்பின் சிறப்பாகும்.

இத்தகைய அணுகுமுறை தமிழ் ஆய்வுலகில் புதிய உரையாடல்களையும் விரிவான ஆய்வுத் தளங்களையும் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூல் மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் அனைவருக்கும் பயனுள்ள ஆய்வு களஞ்சியமாக அமையும் என்று உறுதியாக நம்புகிறேன். குறிப்பாக உயர்கல்வி நிலையங்களில் தமிழ் இலக்கிய ஆய்வை மேற்கொள்ளும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் இந்நூல் சிறந்த துணைநூலாக விளங்கும்.இந்நூல் வெளிவருவதற்கு அர்ப்பணிப்புடன் உழைத்த கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள், கட்டுரையாளர்கள், ஆசிரியர் குழுவினர், மதிப்பாய்வாளர்கள் மற்றும் நூல் வெளியீட்டிற்குப் பங்களித்த அனைவருக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் இலக்கிய ஆய்வுலகின் வளர்ச்சியில் இந்நூல் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி, புதிய ஆய்வுச் சிந்தனைகளைத் தூண்டி, எதிர்கால ஆய்வாளர்களுக்கு ஊக்கமளிக்கும் சிறந்த ஆய்வுத் தொகுப்பாகத் திகழ வேண்டுமென மனமார வாழ்த்துகிறேன்.

**அன்புடன்,**



**முனைவர் க. தர்ஷிணி**

# பதிப்பாளர் முன்னுரை

## தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், பண்பாடு, வரலாறு, தத்துவம் மற்றும் தமிழ்ச் சமூகத்தின் அறிவுசார் மரபுகளை ஆய்வுலகிற்கு முறையாக எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் வெளிவரும் **தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழின்** சிறப்பு வெளியீடாக இந்நூல் வெளிவருகிறது. இவ்விதழ் சர்வதேச அளவில் ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கிடையே அறிவுப் பரிமாற்றத்திற்கான ஒரு பயனுள்ள தளமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**“தமிழ் இலக்கியங்களில் இந்திய சிந்தனை மரபுகளும் சுற்றுச்சூழல் விழுமியங்களும்”** என்ற மையப் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள இச்சிறப்பிதழ், தமிழ் இலக்கியங்களில் இயற்கை, நிலம், நீர், மழை, மரங்கள், விலங்குகள், பறவைகள், வேளாண்மை, பழங்குடியினர் வாழ்வியல், பசுமைச் சிந்தனை மற்றும் சுற்றுச்சூழல் அறவியல் ஆகியவை எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதைப் பல்வேறு ஆய்வுக் கோணங்களில் வெளிப்படுத்துகிறது.

பழந்தமிழ் இலக்கியம் இயற்கையை வெறும் பின்னணியாகக் கருதவில்லை; மனித வாழ்வின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகவே அணுகியது. சங்க இலக்கியத்தின் **ஐந்திணை மரபு**, திருக்குறளின் **நீர், நிலம், மழை, உழவு** குறித்த சிந்தனைகள், காப்பியங்களில் வெளிப்படும் இயற்கைநோக்கு, பக்தி இலக்கியங்களில் காணப்படும் இயற்கை வழிபாடு, நாட்டுப்புற மரபுகளில் நிலைத்திருக்கும் சுற்றுச்சூழல் அறிவு ஆகியவை தமிழரின் வாழ்வியல் அறிவும் சூழலியல் உணர்வும் எவ்வளவு ஆழமானவை என்பதை உணர்த்துகின்றன. இவ்வகையான மரபுச் சிந்தனைகளை நவீன சுற்றுச்சூழல் நெருக்கடிகளுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே இத்தொகுப்பின் முக்கியச் சிறப்பாகும்.

இச்சிறப்பிதழில் சங்க இலக்கியம் முதல் நவீன தமிழ் இலக்கியம் வரை பல்வேறு இலக்கிய வகைமைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. **சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல், ஐந்திணை அமைப்பு, திருக்குறளில் சுற்றுச்சூழல் சிந்தனை, சிலப்பதிகாரம், மணிமேகலை, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, குறிஞ்சிப்பாட்டு, பக்தி இலக்கியங்கள், சித்தர் பாடல்கள், நாட்டுப்புறச் சமய மரபுகள், நவீன கவிதைகள், புதினங்கள்** உள்ளிட்ட பல தளங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக, இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஆய்வுகள் இயற்கையைப் பாதுகாப்பது என்பது வெறும் நவீன அரசியல் அல்லது அறிவியல் விவாதம் மட்டுமன்று; அது தமிழரின் நீண்டகால வாழ்வியல், அறவியல் மற்றும் பண்பாட்டு நினைவுகளோடு தொடர்புடையது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. நீர் மேலாண்மை, மழையின் முக்கியத்துவம், நிலவளம், காடுகள், மரங்கள், பறவைகள், உயிரினப் பன்முகத்தன்மை, பாரம்பரிய வேளாண்மை, பழங்குடியினர் சுற்றுச்சூழல் அறிவு, கடல்சார் வாழ்வியல் போன்ற பல்வேறு பரிமாணங்கள் இவ்வாய்வுகளில் வெளிப்படுகின்றன.

நவீன காலத்தில் காலநிலை மாற்றம், நீர்வளச் சிக்கல், காடழிப்பு, உயிரினப் பன்முகத்தன்மை இழப்பு, மாசுபாடு, நகரமயமாதல், வேளாண்மை நெருக்கடி போன்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தீவிரமடைந்து வருகின்றன. இந்நிலையில், தொன்மையான இலக்கியங்களிலும்

பண்பாட்டு மரபுகளிலும் பதிவாகியுள்ள இயற்கை சார்ந்த அறிவையும் அறநெறிகளையும் மீட்டெடுத்து, அவற்றை இன்றைய தலைமுறைக்கான அறிவியல் மற்றும் சமூகப் பார்வைகளுடன் உரையாடச் செய்வது காலத்தின் தேவையாகிறது. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஆய்வுகள் அந்த அறிவுசார் உரையாடலுக்கு ஒரு முக்கியமான தொடக்கத்தை வழங்குகின்றன.

இச்சிறப்பிதழ் ஒரே கோணத்தில் அமைந்த ஆய்வுத் தொகுப்பு அல்ல. இலக்கியவியல், சுற்றுச்சூழலியல், பண்பாட்டியல், வரலாறு, சமூகவியல், தத்துவம், நாட்டுப்புறவியல் மற்றும் நவீன சமூகச் சிந்தனை ஆகிய பல்துறை அணுகுமுறைகள் ஒன்றோடொன்று இணையும் அறிவுப் பரப்பாக இது உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ் இலக்கியத்தைப் புதிய வாசிப்புகளுடனும் சமகாலப் பிரச்சினைகளுடனும் இணைத்துப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு உருவாகிறது.

இத்தொகுப்பில் **80 ஆய்வுக் கட்டுரைகள்** இடம்பெற்றுள்ளன. இவை பல்வேறு இலக்கியப் படைப்புகள், காலகட்டங்கள் மற்றும் சமூகச் சூழல்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. ஆய்வாளர்களின் தனித்துவமான பார்வைகளும், இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையிலான விவாதங்களும், சுற்றுச்சூழல் குறித்த சமூகப் பொறுப்புணர்வும் இத்தொகுப்பின் அறிவுசார் வளத்தை உயர்த்துகின்றன.

இந்த வெளியீடு உருவாகக் காரணமாக இருந்த **புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரியின் தமிழாய்வுத்துறை**, **மக்கள் மனம் திங்கள் இதழ், சிங்கப்பூர்**, ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள், பதிப்புக்குழுவினர் மற்றும் இந்நூலுக்கு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய அனைத்து அறிஞர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இச்சிறப்பிதழை உருவாக்கிய கல்வி மற்றும் ஆய்வுப் பணியில் பங்கேற்ற அனைவரின் அர்ப்பணிப்பும் பாராட்டுக்குரியது.

**தமிழ் இலக்கியம் கடந்த காலத்தின் நினைவுச் சின்னம் மட்டுமல்ல; எதிர்காலத்திற்கான அறிவின் களஞ்சியமும் ஆகும்.** அந்த அறிவில் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான நெறிகளும், வளங்களைப் பாதுகாப்பதற்கான வாழ்வியல் முறைகளும், உயிரினங்களுடன் இணக்கமாக வாழ்வதற்கான அறவியல் பார்வைகளும் அடங்கியுள்ளன. அவற்றை மீள்படிப்பதும், ஆய்வு செய்வதும், இன்றைய சமூகத்துடன் உரையாடச் செய்வதும் நமது கல்வியியல் கடமையாகும்.

இந்நூல் தமிழ் ஆய்வுலகில் புதிய விவாதங்களைத் தூண்டுவதோடு மட்டுமல்லாமல், **"இயற்கையைப் பாதுகாப்பது மனிதனைப் பாதுகாப்பதே"** என்ற அடிப்படை உணர்வை வலுப்படுத்தும் என நம்புகிறோம்.

தமிழ் ஆய்வின் தொடர்ச்சிக்கும், புதிய தலைமுறை ஆய்வாளர்களின் அறிவுத் தேடலுக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சமூகப் பொறுப்புணர்வுக்கும் இச்சிறப்பிதழ் ஒரு சிறப்பான பங்களிப்பாக அமையட்டும்.

**அன்புடன்,**

**பதிப்பாளர், தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

**Tamilmanam International Research Journal of Tamil Studies**

# தமிழ் இலக்கியங்களில் இந்திய சிந்தனை மரபுகளும் சுற்றுச்சூழல் விழுமியங்களும்



| No. | Article Title | Author | Affiliation | Page |
|---|---|---|---|---|
| 1 | ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் சூழலியல் சிந்தனைகள் | முனைவர் மு. அருணாசலம் | முதல்வர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, துறையூர் – 621010 | 1 |
| 2 | திருக்குறளில் சுற்றுச்சூழல் | முனைவர் ம. பிரேமா | தமிழாய்வுத் துறைத் தலைவர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 10 |
| 3 | பண்டைத்தமிழரின் சூழலியல் அறிவும் வாழ்வியல் நெறிகளும் | முனைவர் ஆ. தேவதா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | 18 |
| 4 | மணிமேகலையில் இயற்கையும் சுற்றுச்சூழலும் | முனைவர் தா. லதா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 26 |
| 5 | மருத நில மக்களின் சுற்றுச்சூழல் | முனைவர் க. சுதா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | 32 |
| 6 | ஔவையாரின் அறிவியல் பார்வை | முனைவர் ஆ. ஷர்மி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | 39 |
| 7 | தமிழ் இலக்கியங்களில் மழை நிலம் நீர் பற்றிய பதிவுகள் | முனைவர் கு. டாலி ஆரோக்கியமேரி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 46 |
| 8 | தமிழ்ப் புத்திலக்கியப் பரப்பில் பசுமைச் செயல்நெறிகள் | முனைவர் ஞா. பெஸ்கி | இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 2 | 54 |
| 9 | பழந்தமிழர் வாழ்வியலில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நெறிமுறைகள் | முனைவர் இரா. பபித்ரா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 62 |
| 10 | சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல் | முனைவர் இரா. சுப்பிரமணி | இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கரூர் – 639003 | 66 |
| 11 | நெடுநல்வாடையில் சுற்றுச்சூழல் | முனைவர் பா. அப்துல்லா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 20 | 73 |
| 12 | கானகன் புதினத்தில் சுற்றுப்புறச் சூழல் | முனைவர் நா. அருணா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620017 | 78 |
| 13 | தமிழ் நாவல்களில் இந்திய சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும் | க. கஸ்தூரி | முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 90 |

| No. | Article Title | Author | Affiliation | Page |
|---|---|---|---|---|
| 14 | சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல் | முனைவர் செ. மோகனசுந்தரி | தமிழ் ஆர்வலர், திருச்சிராப்பள்ளி – 620002 | 99 |
| 15 | நாட்டுப்புறச் சமய மரபுகளில் சுற்றுச்சூழல் சிந்தனைகள் | முனைவர் ஆ. பிரபு | உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் – 635601 | 104 |
| 16 | எஸ். ராமகிருஷ்ணனின் சிறுகதைகளில் சுற்றுப்புறச்சூழல் | பா. ராதிகா | முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 110 |
| 17 | சிலப்பதிகாரத்தில் இயற்கை சூழல் மற்றும் அறநெறி மரபுகள் | முனைவர் அ. ஜெசிந்தாராணி | இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 114 |
| 18 | ஐங்குறுநூற்றில் சுற்றுச்சூழல் | க. கங்காதேவி | முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620001 | 118 |
| 19 | "அளம்" புதினத்தில் இந்தியச் சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும் | க. கனகவள்ளி | முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 125 |
| 20 | பழந்தமிழ் இலக்கிய மரபில் சதகங்களில் சுற்றுப்புறச் சிந்தனைகள் | கோ. ரஞ்சனா | முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 130 |
| 21 | புறநானூற்றில் சூழலியல் | கி. வான்மதி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 139 |
| 22 | ஆனைமலை புதினத்தில் சுற்றுச்சூழல் அரசியல் | கு. பிரியதர்ஷினி | முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 144 |
| 23 | தமிழ் இலக்கியங்களில் மழை நிலம் நீர் பற்றியப் பதிவுகள் | கு. சிந்து | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 151 |
| 24 | நவீன தமிழ் இலக்கியங்களில் சுற்றுச்சூழல் நெருக்கடிகள் | கு. யசோதா | முனைவர் பட்ட ஆய்வாளர், கோபி கலை அறிவியல் கல்லூரி, கோபிச்செட்டிபாளையம், ஈரோடு – 638453 | 156 |
| 25 | தேவநாயக சாஸ்திரியாரின் ஞானத்தச்ச நாடகத்தில் உயிரினப் பன்முகத்தன்மை | S. Smilin Sheeba | Full-time Ph.D. Research Scholar, Madras Christian College, East Tambaram – 600059 | 161 |
| 26 | பெரியபுராணத்தில் சுற்றுச்சூழல் சிந்தனைகள் | சி. பொன் சங்கர் | முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 167 |
| 27 | திருப்பாவையில் இயற்கைவளங்களும் இறைவழிபாடும் | முனைவர் ரா. ராஜலட்சுமி | உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம் | 172 |
| 28 | பாரம்பரிய வேளாண்மை முறைகளும் | திருமதி க. நந்தினி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை | 178 |

| No. | Article Title | Author | Affiliation | Page |
|---|---|---|---|---|
| | சுற்றுச்சூழல் நிலைத்தன்மைகளும் | | தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | |
| 29 | திருவாசகத்தில் இயற்கைக் கூறுகளும் பஞ்சபூதங்களின் இலக்கிய வெளிப்பாடும் | முனைவர் சு. சிவகாமசுந்தரி | உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஏனாத்தூர், காஞ்சிபுரம் – 631561 | 184 |
| 30 | நற்றிணையில் சூழலியல் பதிவுகள் | முனைவர் மு. விஜயலட்சுமி | உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தனலட்சுமி சீனிவாசன் கலை அறிவியல் புலம், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம் | 192 |
| 31 | நீலகிரியில் வாழும் கோத்தர் பழங்குடி மக்கள்: சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அடையும் சிக்கல்கள் | நா. யாதவ் குமார் | முதுகலைத் தமிழ், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | 198 |
| 32 | புறநானூற்றில் சுற்றுச்சூழல் சிந்தனைகள் | முனைவர் ஜெ. செல்வக்குமார் | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 202 |
| 33 | பழங்குடி இன மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு | பெ. கவிதா | முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | 205 |
| 34 | சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல் பண்பாட்டு நெறிமுறைகள் | மு. மைதிலி | முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 600030 | 209 |
| 35 | தமிழரின் ஆய்வுக்கடலில் ஆகாயம் | மு. கயல்விழி | முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர்; பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு | 214 |
| 36 | தகைம் நாவலில் சுற்றுச்சூழல் விழுமியங்கள் | மு. மாலினி | முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை; புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 223 |
| 37 | சித்தர் பாடல்களில் இயற்கை மருத்துவமும் சுற்றுச்சூழலும் | முனைவர் அ. அருள் சகாய அனிட்டா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 227 |
| 38 | நாலடியார் காட்டும் இயற்கையோடு இணைந்த வாழ்வியல் நெறிகள் | முனைவர் அ. அனுடயானா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 235 |
| 39 | இலக்கியம் கூறும் சிறுதானியங்களின் மேன்மையும் வகையின் தனித்தன்மையும் | முனைவர் ஆ. அடைக்கலராஜ் | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620002 | 242 |
| 40 | சங்க இலக்கியத்தில் சூழல் பாதுகாப்பும் இயற்கை நேசிப்பும் | முனைவர் இதய. பெர்க்மான்ஸ் | உதவிப்பேராசிரியர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி | 250 |
| 41 | ஐந்திணை அமைப்பில் சுற்றுச்சூழல் | முனைவர் இ.வா. ஸ்ரீசுபாஷினி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் நிகர்நிலைப் | 255 |

| No. | Article Title | Author | Affiliation | Page |
|---|---|---|---|---|
| | | | பல்கலைக்கழகம், பெரம்பலூர் – 621212 | |
| 42 | பக்தி இலக்கியங்களில் பசுமைச் சிந்தனைகள் | முனைவர் க. புவனேஸ்வரி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620001 | 261 |
| 43 | குறவஞ்சியில் இயற்கை சூழலியல் | முனைவர் கி. கோமாட்சி | உதவிப்பேராசிரியர், தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர் | 268 |
| 44 | சுற்றுச்சூழல் பாதிப்பில் பறவைகளின் பங்கு | முனைவர் ச. புனிதா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 274 |
| 45 | பெண்ணியக் கவிஞர்களும் சுற்றுச்சூழலும் | முனைவர் சா. அமுதன் | இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி | 281 |
| 46 | ஆனைமலை புதினத்தில் பழங்குடிகளும் சுற்றுச்சூழல் சீர்கேடும் | முனைவர் சு. விஜயலட்சுமி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 20 | 288 |
| 47 | சங்க இலக்கியத்தில் பறவைகளின் புலம்பெயர்வு | முனைவர் சு. அனுசலட்சுமி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 295 |
| 48 | நவீன இலக்கியங்களில் சுற்றுச்சூழல் நெருக்கடிகள் | முனைவர் செ. ராஜகுமாரி | உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு நடுவம், லேடி டோக் கல்லூரி, மதுரை | 300 |
| 49 | தேவாரத்தில் இயற்கை வழிபாட்டு மரபு | முனைவர் சு. பொன்மணி | உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, குரு நானக் கல்லூரி, வேளச்சேரி, சென்னை – 42 | 305 |
| 50 | சிவப்புப் பட்டியல் நூலில் காணலாகும் சூழலியல் பதிவுகள் | முனைவர் ஞா. எலிசபெத் ராணி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 311 |
| 51 | திருக்குறளில் சுற்றுச்சூழலியல் பதிவுகள் | முனைவர் து. விஜயராணி | தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 319 |
| 52 | 'சென்னை மிதக்கும்' கவிதையில் சுற்றுச்சூழல் | முனைவர் து. நீலாதேவி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 324 |
| 53 | குறிஞ்சிப்பாட்டில் சுற்றுச்சூழல் | முனைவர் ரத. அனிதா மேரி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 336 |
| 54 | சுற்றுச்சூழல் நோக்கில் சங்கப் பாடல்கள் | முனைவர் தே.க. ஹேம்லின் ஐடா | உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி | 340 |
| 55 | சங்க அகப்பாடல்களில் நீர் | முனைவர் பா. இமாகுலேட் | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 345 |
| 56 | சூளாமணிக் காப்பியத்தில் சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் | முனைவர் பா.சு. தீபா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620001 | 351 |

| No. | Article Title | Author | Affiliation | Page |
|---|---|---|---|---|
| 57 | திருவள்ளுவர் பகரும் சுற்றுச்சூழல் | முனைவர் ரா. ஆனந்தி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், பெரம்பலூர் – 621212 | 355 |
| 58 | நற்றிணையில் சூழலியல் விழுமியங்கள் | முனைவர் சவ. பிரேமலதா | உதவிப்பேராசிரியர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 365 |
| 59 | சங்க இலக்கியச் சூழலியலில் தாவரங்கள் | முனைவர் செ. நான்சி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 372 |
| 60 | திருக்குறளில் சுற்றுச்சூழல் சிந்தனை | முனைவர் த. பத்மா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 376 |
| 61 | திருக்குறளில் இயற்கை அறம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு | முனைவர் ச. கௌசல்யா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 380 |
| 62 | சங்க இலக்கியத்தில் நிலப் பாகுபாடு | த. மணிமேகலை | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 388 |
| 63 | நவீன கவிதைகளில் சுற்றுச்சூழல் மாசுபாடு | முனைவர் சா. பாலின் செல்வ ஷோபா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 396 |
| 64 | புலியூர்க் கேசிகனின் புதுப்போர் பொருள் | முனைவர் செந்தில்நாதன் | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரி (த), பெரம்பலூர் – 621220 | 402 |
| 65 | குறுந்தொகைக் கூற்றுகளுள் சூழலியல் புலப்படுத்தும் சூழல் மறைபொருள் | ரவ. அனித்குமார் | முனைவர் பட்ட ஆய்வாளர், மொழியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10 | 406 |
| 66 | காலநிலை மாற்றமும் பறவைகள் வலசை போதலும் | முனைவர் லா. ரூபா | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620002 | 410 |
| 67 | முகிலை இராசபாண்டியனின் இரண்டு புதினங்களில் சமூக அரசியல் | து. ஷீலா | முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர் – 629802; மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் இணைவு | 421 |
| 68 | குறுந்தொகை காட்டும் சூழலியல் சிந்தனைகள் | Dr. G. Jayashree | Assistant Professor, Sri Sankara Arts and Science College (Autonomous), Enathur, Kanchipuram | 426 |
| 69 | சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கும் திடக்கழிவு | முனைவர்.ஜா.ஸ்டெல்லாமேரி | உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூயவளனார்தன்னாட்சிக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 002. அலைபேசிஎண்.9751150567 | 430 |

| No. | Article Title | Author | Affiliation | Page |
|---|---|---|---|---|
| | | | stellamary_ta2@mail.sjctni.edu | |
| 70 | ‘நதி திருடி நாடு திருடுபவர்கள்’ கவிதையில் சுற்றுச்சூழல் | க. விஜயகுமாரி | முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 436 |
| 71 | திருமந்திரத்தில் பஞ்சபூத தத்துவமும் யோக சுற்றுச்சூழலும் – ஒப்பீடு | மீ. எலிசபெத் ஜனூல் மகரிபா | முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 443 |
| 72 | எஸ். ராமகிருஷ்ணன் நெடுங்குருதி நாவலில் சுற்றுச்சூழல் | ந. சுவேதா | முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, புனித சிலுவைக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620002 | 452 |
| 73 | எட்டுத்தொகை அகநூல்களில் சுற்றுச்சூழலியலில் உள்ளுறை உவமம் | ச. ஜோய்சி | முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர் – 629802; மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் | 466 |
| 74 | கொற்கை நாவலில் மீனவர் சமூகமும் கடல்சார் சூழலும் | மு. கீர்த்தனா | தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002 | 471 |
| 75 | பாவலர் வையவன் கவிதைகளில் சுற்றுச்சூழல் சிந்தனைகள் | ந. இரா. சக்திவேல் | உதவிப்பேராசிரியர், எஸ்.ஆர்.எம். திருச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | 473 |
| 76 | முட்டம் சி. வால்டர் படைப்புகளில் கடற்கரைச் சூழல் | அ. கபிரியேல் ராஜ் | பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர் – 629802; மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் | 478 |
| 77 | தமிழ் மரபிலக்கியத்தில் நீரின் பன்முகப் பரிமாணங்கள் | முனைவர் சு. தீபலட்சுமி | துறைத் தலைவர் & உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ரிசர்ச் அண்ட் டெக்னாலஜி, பெரம்பலூர் – 621212 | 483 |
| 78 | நமது அறிவியல் இதழில்; சுற்றுச்சூழல் விழுமியங்கள் | மு. அபிரா | முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | 488 |
| 79 | பெ. பூபதி பெரியசாமி சிறுகதைகளில் வேளாண்மையும் சுற்றுச்சூழலும் | ஹ. சாமிதேவி | முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம் – 605602 | 495 |
| 80 | சுற்றுச்சூழல் பாதுகாப்பும் நில மாசுபாட்டுத் தடுப்பும் | சு. முத்துமாணிக்கம் | சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் | 508 |
| 81 | சங்க இலக்கியங்களில் இயற்கை பதிவுகளும் தற்காலச் சூழலியல் சிக்கல்களும் | முனைவர் த.ராஜ்குமார், | இணைப்பேராசிரியர் & தலைவர், தமிழ் இலக்கியத்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி | 516 |

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# தமிழ் இலக்கியங்களில் இந்திய சிந்தனை மரபுகளும் சுற்றுச்சூழல் விழுமியங்களும்

*Indian Philosophical Traditions and Environmental Ethics in Tamil Literature*

## 1.ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் சூழலியல் சிந்தனைகள்

**Ecological Perspectives in the Poetry of Erode Tamilanban**

**முனைவர் மு. அருணாசலம்,**
முதல்வர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, துறையூர் – **621 010**
**Cell : 9894440530**

**ஆய்வுச்சுருக்கம்:**

ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதையுலகில் புதுக்கவிக்கோ. அவர் ஏந்திய கவிதைக் கோடரி சமூகச் சீரழிவுகளை வெட்டி வீழ்த்திட எடுத்திட்ட ஆயுதமாகும். இலக்கியம் சமுதாயத்தின் கண்ணாடி என்பர். ஈரோடு தமிழன்பன் கவிதைகள் தமிழ்ச் சமூகத்தின் கலைடாஸ்கோப். தமிழ்ச் சமூகத்தில், இந்தியச் சமூகத்தில், உலகச் சமூகத்தில் மானுட சமுதாயத்தைப் பாதிக்கும் அத்துணையும் அவரால் பதிவு செய்யப்பட்டுள்ளன. புதுக்கவிதை என்னும் பேராறுகளுக்கு இடையே அவரது கவிதைகள் அருவியாகச் சீறிப் பாய்ந்து வருகின்றன.

**முன்னுரை:**

சமூக அக்கறையும், அவதானிப்பும், புதுச் சிந்தனைப் போக்கும், சிறுமைகள் கண்டு சீறிடும் ரௌத்திரமும் அடங்கியவை தமிழன்பனின் கவிதைகள். தமிழின் இயற்கை இலக்கியங்களாகத் திகழ்ந்திடும் சங்க இலக்கியங்களின் தொடர்ச்சியாக தமிழன்பனிடம் சூழலியல் சிந்தனைகள் பரிமாணம் பெற்று விளங்குகின்றது. உலகச் சமூகம் மானுட பேராசையால் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் என்னும் நெருப்பு வளையத்திற்குள் எரிந்து கொண்டிருக்கின்றது. சூழலியல் அக்கறையும், ஈடுபாடும் இன்றி சுயநல காங்கீரிட் சிந்தனைகளோடு பூமியைச் சுரண்டுவதால் வருங்காலத் தலைமுறையினருக்குக் குப்பைத் தொட்டியைப் பரிசாக அளித்துச் சென்றிடும் துர்பாக்கியச் சூழலில் வாழ்ந்து வருகின்றோம். சூழலியல் பாதுகாப்பு தனி நபரில் இருந்து தொடங்கி உலக இயக்கமாகப் பரிமாணம் பெறல் வேண்டும். மானுட இனம் தான் மட்டும் வாழ்வதற்குரிய வாழ்விடமாகப் புவிபரப்பைக் கருதி காடுகளையும், மலைகளையும், கடல்களையும், நீர் நிலைகளையும் சுரண்டி வாழ்வதை விட்டொழிக்க வேண்டும். நகர்மயமாதல் எனும் பிரச்சனையில் உலகில் வெப்பநிலை உயர்ந்து உரிய பருவ காலம் தவறிப் போய்க் கொண்டிருப்பதை இன்று கண்கூடாகப் பார்த்து வருகிறோம். அவ்வகையில் தமிழன்பனின் கவிதைகளில் பதிவாகியுள்ள சூழலியல் சிந்தனைகள் மானுட குலத்திற்கு அறிவுறுத்தல் நல்குவதையும், சுழலியலைப் பாதுகாக்க வேண்டுமென்ற பொது நலத்தை முன்னெடுப்பதையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

**இயற்கை நேசிப்பும் - அழிவும்**

இயற்கை ஐம்பெரும்பூதங்களால் ஆனது. ஐம்பூதங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் மானுட இனம் அதனை அழித்தும், தேய்த்தும், சுரண்டியும் மாசடையச் செய்து வருகின்றது. தமிழன்பன் இயற்கையை நேசிக்காமற் தன்னால் கவிதை எழுத முடியாது என்கின்றார்.

**"அப்புறம்**
**பேசுவோம்**
**என்று**
**ஒரு பூவிடம் சொல்லிவிட்டுக்**
**கவிதை எழுத முடியாது என்னால்**
**நமது**
**சந்திப்பை**
**நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்**
**என்று**
**சாளர நிலாவைப்**
**புறக்கணித்து விட்டுப்**
**புத்தகம் படிக்க**
**முடியாது என்னால்"**

என்று பூவினையும், நிலவினையும் நேசிக்காமற் தன்னால் இயங்க முடியாது என்கின்றார். தமிழன்பனின் இயற்கை நேசிப்பும், சுவாசிப்பும் இக்கவிதையில் வெளிப்படுகின்றது. இயற்கையோடு இணைந்த வாழ்வே மனநலமும், வளமும் நிறைந்த வாழ்வாக கவிஞர் சித்திரிக்கின்றார்.

இயற்கையை வகைத்தொகை இல்லாமற் அழித்து வரும் மானுட இனம் எதற்கும் எப்பெயரும் இல்லாமற் எதிர்காலத்தில் வாழப்போகும் அபாய சூழலை நதி, கடல், பறவை, விதைகள் வழியாகச் சூழலியல் அக்கறையோடு எச்சரிக்கை புரிகின்றார்.

**"எதற்கும் எப்பெயரும்**
**இடாமலும்**
**தனக்கென ஒரு பெயர்**
**இல்லாமலும்**
**வாழ முடியாமற் போகலாம் மனிதனுக்கு**

**பறவை என்பதும்**
**அப்படியான ஒரு பெயர்தான்**
**பூமியை அதன் உறவிலிருந்து பிரிக்கச்**
**சிறகு**
**கொடுத்தாயிற்று**
**கூண்டில் அடைத்ததும்**
**அதன்**

**சிறகும் வானமும் ஒருசேரக்**
**கத்தரிக்கப்பட்டனவே**
**விதையின் கதை எப்படி?**
**மரம், கிளை, தளிர், இலை, மலர், மணம்**
**காய், கனி**
**எல்லாவற்றையும் நீக்கி விட்டு**
**அதைக்**
**குறுக்கி வைத்தாயிற்று"**

என்று இயற்கையைக் குறுக்கியும், அழித்தும், பெயர், வினை, அடைகள் இன்றி அழித்து வரும் மானுட இனம் குறித்து எச்சரிக்கை புரிகின்றார். தமிழன்பன் 'வராய் தை மகளே!' என்னும் கவிதையில் இயற்கை அழிக்கப்பட்டு அரசு மரியாதையோடு அடக்கம் செய்யப்படுவதாக ஆதங்கம் கொள்கின்றார்.

**இந்நாட்டில்**

**மனிதன் மட்டுமா மடிகிறான்?**
**மின்சாரம், தண்ணீர், காற்று எல்லாமே**
**பிறக்கும் முன்பும் பிறந்த பின்னும்**
**கொல்லப்பட்டு**
**அரசு முறை மரியாதைகளோடு**
**அடக்கம் செய்யப்படுகின்றன"**

என்று பிறக்கும் முன்பும், பின்பும் நீரும், காற்றும் மாசடையச் செய்யப்பட்டு சிதைக்கப்படுதலை எடுத்துரைக்கின்றார். **'என்ன சீற்றம் இயற்கைக்கு'** என்னும் கவிதையில் உத்திரகாண்டில் புவிப்பரப்பிற்குப் புதைகுழி தோண்டியதால் மேக வெடிப்பு ஏற்பட்டு ஊர்களும், மக்களும் புதைகுழியிற் புதையுண்டு போய்விட்ட அவலத்தினைச் சித்திரிக்கின்றார்.

**"இப்படி நடந்து விட்டது**
**உத்தரகாண்டில் எதிர்பார்க்கவில்லை**
**இயற்கையின் சீற்றம் என்கின்றனர்**
**இயற்கை ஏன் சீற வேண்டும்**

**புல்லிதழ்களோடு**
**பொட்டுப் பனித்துளிகள்**
**இயற்கைக்கு எதிராக எந்தச் சதித்திட்டமும்**
**வகுத்ததுண்டா?**

**எல்லாம் அழிந்துவிட்டன**
**மனிதர்களும் பல்லாயிரம் பேர்**
**மாண்டு விட்டனர்**
**எஞ்சிய மலைப் பகுதியும்**
**இதயத்தை இழந்து விடாமல்**

**இறுக்கிப் பிடிக்க முடியவில்லை**

**உத்தரகாண்ட் அரசாங்கம்**

**இயற்கையிடம் மனுக் கொடுக்கிறது**
**மறுபடியும் எதையும் எங்களால்**
**திருப்பிக் கொணர முடியாது**
**இயற்கையே**
**மறுபதிப்புப் போட்டுக் கொடுத்தால்**
**மரியாதையாக நடத்துவோம்**
**நடந்து கொள்வோம்"**

என்று மலைகளின் தசை நார்களும், இதயமும் மேக வெடிப்பு எனும் இயற்கை சீற்றத்தால் நொறுங்கிப் போய்விட்ட காட்சியைக் காட்டுகின்றார். இயற்கை மீது பேரழிவு ஏற்படுத்திய பிறகு அதே இயற்கையிடம் மனு கொடுக்கும் மானுட இனத்தையும், மாநில அரசையும் விமர்சனம் செய்கின்றார்.

இயற்கையைச் சீரழித்த காரணத்தாற் குடிக்கின்ற நீரும், உண்ணும் காய்கறிகளும் உயிர்க்கொல்லிகளாக மாறிவிட்டதாக தமிழன்பன் 'எல்லாம் ஒன்றுதான்' கவிதையில் பதிவு செய்கின்றார்.

**"தண்ணீர் கொண்டு வந்து**
**கொடுத்தேன்**
**பருகிக் கொண்டே சொன்னான்"**
**"நம்பிக் குடிக்கிறோம்**
**இது எப்படிப்பட்ட தண்ணியோ**
**என்ன இழவோ?"**
**நேற்று**
**எங்கள் வீட்டுக் குடிநீரில்**
**ஏழெட்டுக் கிருமிகள்.........**
**உள்ளே போய் என்ன செய்யுமோ?**
**யாருக்குத் தெரியும்"**
**என்றவன்**
**கடை வீதியிலிருந்து**
**காய்கறிப் பையோடு திரும்பிய**
**என் மனைவியைப் பார்த்ததும்**
**அண்ணி!**
**காய்கறி யெல்லாம் ரசாயனக்**
**கலவை;**

**பூச்சிக்கொல்லி போடாமற் எவனும்**
**பயிர் பச்சை வளர்ப்பதில்லை எல்லாம் உயிர்கொல்லிகள்"**

என்று இயற்கையில் கிடைக்கும் நீரையும், காய்கறிகளையும் உயிர் கொல்லிகளாக உருமாற்றி வரும் சூழலியல் சீர்கேடுகளைச் சித்திரிக்கின்றார்.

இயற்கையை நேசிக்காமற் மானுட இனம் தனது சுயநலத்தாலும், நுகர்வுப் போக்கினாலும் அழித்து வருவதால் இயற்கைச் சீற்றங்களும், பேரழிவுகளும், இனம் புரியாத நோய்களும் புவிப்பரப்பில் நிகழ்ந்து வருவதாக எச்சரிக்கை புரிகின்றார்.

**மரங்களின் அழிவு**

மரங்கள் இயற்கையின் வரங்கள். மானுட சமூகத்திற்கு உயிர் வளியான காற்றினை நல்கிடும் கடவுள்கள். மானுட உயிர்களின் நுரையீரலாகச் செயல்பட்டு வரும் மரங்களைக் கட்டுமானத்திற்கும், தங்களின் சுகபோக வாழ்விற்காகவும் அழித்து வரும் போக்கினை தமிழன்பன் சூழலியல் அக்கறையோடு எடுத்துரைக்கின்றார்.

**'உனக்காக உருகும் பருவங்களோடிருந்த ஒரு மரம்'** கவிதையில் பறவைகளையும், உயிரினங்களையும் கிளைக்கரங்களால் தாலாட்டி வளர்த்திட்ட இள மரத்தினை வெட்டி வீழ்த்திடும் மானுட அற்பச் செயலை சூழலியல் அக்கறை உணர்வுடன் கண்டிக்கின்றார்.

**"ஏன் இந்த இள மரக்கன்றை**
**வெட்டினாய்? அது என்ன செய்தது உன்னை?**

**உனக்காக இது**
**காற்றைப் பதப்படுத்தவும்**
**நிழலைத் தனது நெஞ்சக் கனிவுச் சுரப்பில்**
**இதப்படுத்தவும் படாதபாடுபடுமே!**

**அந்தக் கோடைக்காலம்**
**இது சொல்வதைக் கேட்டுத்தானே**
**தனது ஈர வாரிசான**
**குளிர்காலத்தை உனக்கு எழுதித் தருகிறது"**

என்று மனிதனுக்குக் காற்றை உற்பத்தி செய்திடும் இயற்கை தொழிலாயங்கள் மரங்கள். பருவ காலங்களைப் புவியில் நிலை நிறுத்துபவை மரங்கள். மனித உயிர்களுக்காகத் தன்னை உருக்கிக் கொள்ளும் மரங்களைப் பேராசை காரணமாக அழித்து வரும் அவலப் போக்கினை மேற்சுட்டிய கவிதைகளில் பதிவு செய்கின்றார். 'பறவைப் பார்வை' என்னும் கவிதையில் மரங்களை வளர்க்க முடியாத அரசின் கையாலாகாதப் போக்கினை அங்கதமாக சூழலியல் பார்வையோடு சிந்திக்க வைத்திடுகின்றார்.

**"மரங்களை**
**வளர்க்க முடியா**
**மாநகராட்சியே**
**சிலைகளை யேனும்**

**இன்னும் வை"**

என்று கூடுகள் கட்டுவதற்கும், அமர்வதற்கும் மரங்கள் இல்லாத மாநகரங்களில் சிலைகளை வைக்கச் சொல்லி பறவைகள் முறையீடு செய்வதாக அங்கதப் படுத்துகின்றார். சிலைகளை வைப்பதற்கு ஆர்வம் காட்டும் மாநகராட்சிகள் மக்களுக்கு ஆக்ஸிஜனை உற்பத்தி செய்தும், வாகனப் புகையான கார்பன் மோனாக்சைடை சுத்திகரிப்பு செய்தும் பொதுமைக் கண்ணோட்டத்தோடு செயல்படும் மரங்களை வளர்த்திட முன்வரல் வேண்டுமென சூழலியல் அக்கறையினை வெளிப்படுத்துகின்றார். 'உரிமைகள் அலறிய காடுகளில்' என்னும் கவிதைகளில் யானைகளும், சந்தன மரங்களும் மனிதர்களின் பேராசைக்காகச் கொல்லப்பட்டும், வெட்டி வீழ்த்தப்பட்டும் வரும் சூழலியல் அவல நிலையினை வெளிக்காட்டுகின்றார்.

**"வெட்டப்பட்ட**
**சந்தன மரங்களின்**
**கடைசிக் கதறல்கள்**
**காற்றை**
**உடைத்துக் கொண்டிருக்கின்றன**
**யானைகளைத்**
**தேடிக் கொல்ல வந்தவன்**
**அவனைத்**
**தேடிக் கொல்ல வந்தவன்**
**எவனும்**
**இயற்கையின்**
**எந்தச் சட்டத்தையும் மதிக்கவில்லை**
**ஆனால்**
**வெட்டப்பட்ட**
**எந்தச் சந்தன மரமும் கொல்லப்பட்ட**
**எந்த யானையும்**
**இந்நாட்டு**
**அரசுச் சட்டத்தின்**
**எந்தப் பிரிவையும் எப்போதும்**
**மீறியதில்லை"**

என்று இயற்கை நேயத்தை மறந்த மனிதர்கள் இயற்கை சட்டத்தை மதிக்காமற் இருப்பதையும், இயற்கையின் மடியில் தவழ்ந்திடும் யானைகளும், சந்தன மரங்களும் அரசுச் சட்டத்தின் எந்தப் பிரிவினையும் மீறாமற் இருப்பதையும் சித்திரிக்கின்றார். மானுட இனம் தங்கள் சுகபோக வாழ்விற்கு இயற்கை வனங்களை அழித்திடும் அத்துமீறல்களையும் தெளிவுபடுத்துகின்றார்.

மரங்களும், காடுகளும் மானுட சமூகத்தின் நுரையீரலாகத் திகழ்வதையும், அதனை அழிப்பதன் மூலம் பேரவலத்தினை அவ்வினம் சந்திக்கப் போவதையும் சூழலியல் கண்ணோட்டத்தோடு எச்சரிக்கை மொழியில் பதிவு செய்கின்றார்.

**பறவைகள் நேசிப்பும் - அழிவும்**

பறவைகள் மானுட இனத்திற்கு நலத்தையும், வளத்தையும் தருகின்றன. காடுகளை மனித இனம் ஒருபோதும் உருவாக்க முடிவதில்லை. பறவைகளும், விலங்கினங்களுமே உருவாக்குகின்றன. பறவைகள் விடுதலை உணர்வோடு சூழலியல் உணர்வோடு வாழ்கின்றன. மனிதர்கள் இதனைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்கின்றார்.

**"தன்னைச் சந்திக்க**
**யாரும் வருவதில்லை என்று**
**ஒரு குருவி**
**கவலைப்படுவதில்லை**
**யாரேனும் சந்தித்திருந்தால்**
**குருவிக்கு**
**நான்கு மருந்துகளின் பெயர்**
**கிடைத்திருக்கும்**
**நிம்மதி இழந்த அது**
**கூட்டுக்கள்**
**நோய்களைக் கொண்டு வந்து**
**சேர்த்திருக்கும்"**

என்று மனிதர்கள் சூழலியல் இயற்கை வாழ்வினை குருவிகளிடம் இருந்து கற்றுக் கொள்ளச் சொல்வதுடன் மனிதர்கள் குருவிகளைச் சந்தித்து இருந்தால் நோய்களைக் கொண்டு வந்து கொடுத்திருப்பார்கள் கொடுத்திருப்பார்கள் என எச்சரிக்கை புரிகின்றார். நோய்கள் அற்ற குருவிகளின் சூழலியல் உலகினை படம்பிடித்துக் காட்டுகின்றார்.

மனிதர்களோடு நெருங்கியத் தொடர்புடைய பறவையாகச் சிட்டுக் குருவிகள் திகழ்கின்றன. அலைபேசி கோபுரங்களில் இருந்து வரும் காந்தக் கதிர் வீச்சு அலைகள் அவ்வினத்தை அழித்து வருவதைத் தமிழன்பன் 'உரிய நடவடிக்கை' என்னும் கவிதையில் கவலைத் தொனியுடன் தெரிவிக்கின்றார். சிட்டுக் குருவிகளின் குலம் தொல்லியல் துறையில் ஆராயப்படுவதாகவும், பாடப் புத்தகங்களில் மட்டுமே சிட்டுக் குருவிகளைப் பார்க்க முடிவதாகவும் மொழிகின்றார்.

**சிட்டுக் குருவிகள் குலம்**
**ஒழிக்கப்பட்டு விட்டது**
**தொல்லியல் ஆய்வாளர்கள்**
**வருங்காலத்தில்**
**சிதிலமான சில சிட்டுக் குருவிகள்**
**கூடுகளைக் கண்டறிந்து அவற்றுள்ளே**
**போவார்களா? தெரியவில்லை**
**இயற்கை நேசிப்பாளர்கள்**
**சிட்டுக் குருவி இனத்தைக் காப்பாற்ற**
**அரசாங்கம் தவறியது ஏன் என்று கேட்டுக்**

**கோட்டையை முற்றுகையிட**
**“சிட்டுக் குருவிகள்**
**அழிந்து விடவில்லை**
**அரசு அழிய விடாது**
**எல்லாம் பத்திரமாகப் பாதுகாப்பாகப்**
**பாடப் புத்தகங்களில் உள்ளன”**
**என்று**
**அறிக்கை விடுகிறது அரசாங்கம்”**

என்று சிட்டுக்குருவிகள் இனம் அழிந்து வருவதையும், பாதுகாத்திட வேண்டிய அரசு நிர்வாகம் பாடப் புத்தகங்களில் அவ்வினம் வாழ்ந்து வருவதாக அறிக்கை வெளியிடுவதும் சுற்றுச் சூழலின் மீதான அக்கறையின்மையே எனக் கண்டனம் தெரிவிக்கின்றார். “இப்போது சொல்வாயா” என்னும் மற்றொரு கவிதையிலும் சிட்டுக் குருவிகள் இனம் எகிப்தின் பிரமிடுகளுக்குள் இருக்கும் பதப்படுத்தப்பட்ட ‘மம்மி’கள் போல் பாடப் புத்தகங்களில் மட்டுமே பதப்படுத்தப்படுவதாகப் பதிவு செய்கின்றார்.

**“இப்போது சிட்டுக்குருவிகள்**
**எங்கள் வீட்டு இரவாணத்தில் இல்லை**
**பதப்படுத்தப்பட்ட பிணங்கள்**
**பிரமிடுகளுக்குள் இருப்பது போல்**
**பாடப்புத்தகங்களில்”**

என்று சிட்டுக்குருவிகள் இனத்தின் அழிவினை சுழலியல் கண்ணோட்டத்தோடு தெளிவுறுத்துகின்றார்.

தமிழன்பன் கவிதைகளில் பறவைகளின் நேசிப்பும், சிட்டுக் குருவிகளின் அழிவும் சூழலியல் கண்ணோட்டத்தோடு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**தொகுப்புரை**

ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதையின் கவி போராளி. பன்முக சிந்தனை தேட்டத்துடன் அவரது கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. தமிழன்பன் சமூக அக்கறையுள்ள மகாகவி என்பதற்கு அடையாளமாக அவரது சுற்றுச் சூழல் சிந்தனைக் கவிதைகள் அமைகின்றன. இயற்கையில் நஞ்சு கலந்திடாமற் வாழ்ந்திட வேண்டும் என்பதே தமிழன்பனின் சூழலியல் கருத்தின் அடி நாதமாகும். இயற்கையோடு இயற்கையாக வாழும் போதே மனிதர்களுக்கு நல்வாழ்வு சாத்தியம் ஆகும்.

**“இயற்கையைப்**
**புரிந்து கொண்டதால் ஏற்பட்ட**
**இன்னல்கள்**
**இயற்கையைப்**
**புரிந்து கொள்ளாமையால்**
**ஏற்பட்டதைவிடக் குறைவு**

**விண்மண்டலத்தைப்**

**புரிந்து கொண்டோம் - நம்மால்தான்**

**விழுந்தன**

**ஓசோன் படலத்தில் ஓட்டைகள்**

**கடலின் ஆழம் அறிந்து கொண்டோம் - அதனால்தான்**

**அதன்**

**வயிறு கலக்கும் அணுக்கழிவுகள்"**

என்கின்றார். இறுதியாக, தமிழன்பனின் கவிதை சுற்றுச் சூழலுக்கு பிரகடனமாக அமைகின்றது.

**"இனி**

**இயற்கையிடமிருந்து**

**மனிதனைக் காப்பாற்றுவோம்**

**அப்படியே**

**மனிதரிடமிருந்தும்**

**இயற்கையைக்**

**காப்பாற்றுவோம்"**

என்பது சூழலியல் சிந்தனைகளுக்கு விதைக்கப்பட்ட விதையாகும். சூழலைக் காப்போம். மனித சந்ததிகளுக்கு மாசில்லா உலகையளிப்போம்.

----

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 2.திருக்குறளில் சுற்றுச்சூழல்
# The Environment in Thirukkural

**முனைவர் ம. பிரேமா,**
தமிழாய்வுத் துறைத்தலைவர்,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 02
Mail ID : premasoosairaj@gmail.com, https://orcid.org/0009-0000- 9337- 114X

**ஆய்வுச்சுருக்கம்:**
சுற்றுச்சூழல் அங்கத்தில் முதன்மை இடம்பெறுவது நீரும் நிலமும் ஆகும்.ஒரு நாட்டின் செல்வ செழிப்பு என்பதே நீர், நிலத்தை வைத்துதான் அறியப்படுகிறது. வள்ளுவர் நிலவளத்தையும், நீர்வளத்தையும் பெருக்கும் வழிகளையும்,பாதுகாக்க வேண்டிய நுட்பங்களையும் உணர்த்துவதோடு முன்னோர்கள் வாழ்வின் ஆதாரமாக விளங்கிய நீரினையும் நிலத்தினையும் காலந்தோறும் சிதைவின்றி வைத்துக்கொண்ட முறைமையினயும் விதந்துரைக்கின்றார்.திருவள்ளுவர் நீரையும் நிலத்தையும் பற்றி பெரும்பாலான இடங்களில் பதிவு செய்து இருப்பினும் குறிப்பாக வான்சிறப்பு,நாடு,உழவு எனும் மூன்று அதிகாரங்களில் குறிப்பிட்டிருக்கும் பான்மையும், உலகில் நாகரிகம் பிறந்த ஆற்றங்கரையோரமும், நீர்நிலைகளும், வளமான நிலப்பகுதிகளும் தமிழர்களின் இருப்பிடங்களாகத் திகழ்ந்திருக்கின்றன என்பதும்,எல்லாம் தரும் மழை என்ற நீரியல் சிந்தனையும்,நீர்மேலாண்மை முறைகளும், நீர்மேலாண்மையால் பெருகும் பொருளாதார வளர்ச்சியும், இயற்கை ஆதாரங்களில் நீர்,மலை,காடு அரண்கள் இன்றியமையாத இடம்பெற்றிருப்பதும், நிலம் நீரின் தன்மையை மாற்றக்கூடிய இயல்பு நிகழ்வின் வெளிப்பாடும் கட்டுரையின் சாரம்சமாக இருக்கின்றது.

**முன்னுரை:**
மக்கள் வாழ்விடங்கள், நிலம்,நீர்,காற்று,தீ,ஆகாயம்,அவர்களைச் சுற்றி இருக்கின்ற தாவர இனங்கள்,விலங்கினங்கள் அனைத்தும் சுற்றுச்சூழல் எனப்படும.;சுற்றுச்சூழல் வளமாக இருந்தால் மக்களின் வாழ்வியல் வளமாக அமையும்.சுற்றுச்சூழலில் மாறுபாடுகள் ஏற்படும்பொழுது வளமான வாழ்க்கைச்சூழல் மாற்றம் அடையும்.உலகப்பொதுமறையில் சுற்றுச்சூழலில் முக்கிய இடம்பெறும் நிம்,நீர் பற்றிய பதிவுகளின் பன்முக நிலைகளையும் அவற்றின் பாதுகாப்பு நிலைகளையும் மக்களின் செழுமையான வாழ்க்கைக்குப் பின்புலமாக அமைந்திருந்ததையும் தற்கால தலைமுறையினருக்கு உணர்த்தும் நோக்கில் இக்கட்டுரை அமைந்திருகின்றது.

**திறவுச்சொற்கள்: ஊருணி ,விசும்பு, வருபுனல், ஊற்றுப் பெருக்கு, விசும்பு**

**சுற்றுச்சூழலில் நீரும் நிலமும்:**
திருக்குறள் பாயிரவியலில் முதல் அதிகார அமைவது கடவுள் வாழ்த்து ஆகும். இவ் அதிகாரத்தில் மூன்றாவது குறட்பாவில் "நிலமிசை நீடுவாழ்வார்" என்று நிலத்தை குறிப்பிடுகிறார். நிலம் என்பதை உலகம் என்ற பொருளில் தான் ஆளுகின்றார். நிலத்தின் தன்மைகளையோ பயன்களையோ இந்த இடத்தில் வள்ளுவர் குறிப்பிடவில்லை என்றாலும் மக்கள் வாழ்வதற்குரிய இடம் நிலமே என்பதை நாம் உய்த்துணர வைக்கின்றார். எட்டாவது குறளில் அறக்கடவுளாக

இறைவனே உருவகித்து உள்ளார்.பத்தாவது குறளில் பிறவியை பெருங்கடலோடு ஒப்பிட்டு உரைக்கின்றார்.இவ்வாறு திருவள்ளுவர் முதல் அதிகாரத்திலேயே நீரையும் நிலத்தையும் குறிப்பிட்டிருப்பது இவ்வுலகில் நிலத்திற்கும் நீருக்கும் உள்ள இன்றியமையாமையை இயம்புகிறது. இவ்வுலகம் மூன்றில் ஒரு பங்கு நிலமாகவும் மூன்றில் இரண்டு பங்கு நீராகவும் இருக்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. கடற்கரை நாகரிகங்களில் மனித நாகரிகம் வளர்ச்சி பெற்றிருப்பதை வரலாறு விளம்புகின்றது. இதிலிருந்து மனிதனின் நீர் வேட்கையையும் மனிதன் நீரின்றி வாழ முடியாது என்பதையும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

ஒரு நாட்டின் செல்வ செழிப்பு என்பதே நீர், நிலத்தை வைத்துதான் அறியப்படுகிறது. உலகத்து உயிர்கள் அனைத்தும் உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக இருப்பது நீரே ஆகும்.ஒரு நாடு வளமுடைய நாடாக இருக்க வேண்டுமெனில் 33ூ காடுகள் இருக்க வேண்டும். நம் நாட்டில் 20ூ காடுகளே உள்ளன. இதனை களைவதற்கு மரங்கள் நட்டால் போதுமானது. பலன் தரும் மரங்களை மட்டுமன்றி நிழல் தரும் மரங்களையும் வளர்க்கும் மனநிலை உருவானால் மழை வளம் பெருகி நீர் வளம் அதிகரிக்கும்.நீருக்காக மற்ற மாநிலங்களை சார்ந்திருக்க வேண்டிய தேவையிராது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

சுற்றுச்சூழலில் நீர் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.நீரின்றிமையாது உலகு என்பது வள்ளுவம்.தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே என்பது முதுமொழி. வையமானது நீர் நிறைந்த கடலால் சூழப்பட்டுள்ளது என்ற புவியியல் உண்மையை

**"நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்**
**பிறர்குரியாள் தோள்தோயா தார்"(149)**

என்ற குறள் சுட்டுகின்றது. இக்குறளில் இடம்பெறும் 'நாமநீர் வைப்பு' என்ற தொடருக்கு உரையெழுதிய உரையாசிரியர்களில் பரிமேலழகர் அச்சம் தரும் கடலால் சூழப்பட்ட உலகம் என்றும், மணக்குடவர் நினைத்ததை தருகின்ற நீர் சூழ்ந்த உலகம் என்றும் உரை எழுதியுள்ளனர்.

**"கூறாமை நோக்கக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்**
**மாறாநீர் வையக் கனி" (701)**

என்ற குறளிலும் நீர் சூழ்ந்த உலகம் என குறிப்பிடுவதை காணமுடிகின்றது. 'மாறா நீர் வையக்கனி' என்ற தொடருக்கு வற்றாத நீரால் சூழப்பட்ட உலகம் என்று பரிமேலழகரும்,மாறா நீர் சூழ்ந்த வையம் என்று மணக்குடவரும், சமுத்திரம் சூழ்ந்த உலகம் என பரிதியாரும், வற்றா நீராகிய கடல் சூழ்ந்த உலகம் என காலிங்கரும் பொருள் கூறுகின்றனர்.

**"நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வானின்று அமையாது ஒழுக்கு" (வான்சிறப்பு -20)**

நிலமும் நீரும் ஒன்றுக்கொன்று அதிக தொடர்புடையவை.ஐம்பூதங்களில் நிலமும் நீரும் முதன்மை என்பதை

"நீர் நிலமும் தீவளி விசும்பொடு ஐந்தும்
அளந்துகடை அறியினும் அளப்படுங் குறையே"

**(பதிற்றுப்பத்து 24 :15- 16)**

**என்று பதிற்றுப்பத்தும்,**

**“நிலம் நீர தீ வளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்” (தொல் - மரபியல் 91)**

என்று தொல்காப்பியமும் குறிப்பிடுகின்றது.நிலமும் நீரும் ஒரு நாட்டின் செழிப்பிற்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் அடிப்படையாகக் கருதப்படுகின்றன.

பாண்டியன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனை குடபுலவியனார் புகழ்ந்து பாடும்பொழுது வயவேந்தே! நீ மறுமை பேறாகிய துறக்க இன்பம் வேண்டினும்,இம்மை பிறப்பினும் ஒரு போரரசனாய் புகழடைய வேண்டினும் நாட்டினுள் நீர்நிலைப் பெருக அமைக்க வேண்டும் என்பதை

“நீரின்று அமையா யாக்கைக.;கெல்லாம்
உண்டிக் கொடுத்தோர் உயிர்க் கொடுத்தோரே
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே” (புறநானூறு -18)

என்ற பாடலில் உணர்த்துகின்றார்.

உயிராக்கமே நிலம் என்னும் தாய் மடியில் தான் நிகழ்கிறது.நிலம் என்பது உற்பத்தி காரணிகளில் ஒன்று. முதலும் உழைப்பும் பிற காரணங்களாகும். நிலம் என்பது வெறும் மண்ணை மட்டும் குறிக்காது மண், நீர,; காற்று மண்ணில் மண்டி கிடக்கும் தாதுப்பொருட்கள், தட்பவெப்பம் முதலிய இயற்கை வளங்களெல்லாம் நிலம் என்பதில் அடங்கும் என்று கலைக்களஞ்சியம் கூறுகின்றது.

திருவள்ளுவர் நீரையும் நிலத்தையும் பற்றி பெரும்பாலான இடங்களில் பதிவு செய்து இருப்பினும் குறிப்பாக வான்சிறப்பு,நாடு,உழவு எனும் மூன்று அதிகாரங்களில் சிறப்பாக பேசுகிறார். நிலத்தில் மழை பெய்வதால் ஏற்படும் நன்மைகளையும் மழை பெய்யாவிடில் அதனால் ஏற்படும் தீமைகளையும் வள்ளுவர் வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் குறிப்பிடுகின்றார். மழை பெய்வதனால் உலக உயிர்கள் எல்லாம் நிலைத்து நிற்கின்றன.அம்மழையே உலகத்து உயிர்களுக்கெல்லாம் அமுதம் போன்று உள்ளது என்பதை

“வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று” (11) என்று கூறுகின்றார்.

**மழையின் சிறப்பு:**

மழையின் சிறப்புகளை கூறும் வள்ளுவர் உலகில் உள்ள உயிர்களுக்கெல்லாம் மழைநீர் உணவுப்பொருட்களை உண்டாக்கி தருவதோடு உணவாகவும் குடிப்பதற்குரிய நீராகவும் பயன்படுகிறது என்பதை

**"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை"(குறள்-22)**

என மழை பெய்வதனால் ஏற்படும் பல்தரப்பட்ட நன்மைகளை வள்ளுவர் சுட்டுகின்றார்.

பருவமழை தவறினால் இந்த உலகில் வாழும் உயிர்களை எல்லாம் பசியானது வருத்தும்;.உழவர்கள் நிலத்தில் உழுகின்ற செயலைச் செய்யமாட்டார்கள். நிலத்தில் பசுமையானப் புல்லைக் காண்பது அரிது.கடலின் வளம் குறையும். தேவர்களுக்கு என்று நிலத்தில் முறையாக நடைபெறும் விழாவும், வழிபாடும் நடைபெற வழியில்லாமல் போய்விடும்.மற்றவர்களுக்குத் தானம் செய்ய முடியாது.தவமும் இவ்வுலகில் நிலைத்திருக்காது. உலகில் ஒழுக்கம் நிலைத்திருக்க

வழியில்லை என்று வள்ளுவர் மழைப்பொய்த்துவிட்டால் ஏற்படும் தீமைகளை பட்டியலிட்டு காட்டுகின்றார்.

ஞாலத்தில் பேரறிவாளர்களிடம் இருக்கும் செல்வத்திற்கு ஒப்புமையாக ஊருக்கு நடுவில் இருக்கும் அனைவருக்கும் பயன்படும் குளத்து நீரை

**"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு"(குறள் 215 )**

என்னும் குறள் உணர்த்துகின்றது.

உலகில் நாகரிகம் பிறந்த ஆற்றங்கரையோரமும் நீர்நிலைகளும் வளமான நிலப்பகுதிகளும் தமிழர்களின் இருப்பிடங்களாகத் திகழ்ந்திருக்கின்றன.இந்த இடங்கள் மனிதனின் மன உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்தன என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

**"ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்**
**சேய்த்தும் அன்றே சிறு கான் யாறே"(குறுந்தொகை 113)**

ஆறு, குளம் போன்றவற்றை உள்ளடக்கியது ஊர் என்பதும், நீர் நிலைகளுக்கு அருகாமையில் மக்கள் தங்கள் வாழிடங்களை அமைத்துக் கொண்டனர் என்பதும் புலப்படுகின்றது.

"இன்று சுமார் 300 ஆறுகள் நாடுகளின் தேசிய எல்லைக் கடந்து பாய்ந்து கொண்டிருக்கின்றன.உலக மக்கள் தொகையில் 40 விழுக்காட்டினர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் கைநனைக்கும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலேயே வாழ்கின்றனர்.பல்வேறு மொழி,பண்பாட்டுப் பாரம்பரியங்களை ஒருங்கிணைத்துப் பாயும் இந்த நீர் ஆதாரங்களினுள்ளே போர் அபாயத்தையும் தாண்டி அமைதிக்கும் ஒத்துழைப்புக்குமான மெல்லிய இழையோடிக்கொண்டிருப்பதையும் மறுப்பதற்கில்லை."(**பொ.ஐங்கரநேசன் - ஏழாவது ஊழி - பக்கம் - 198)**

**"புறத்தூய்மை நீரான் அமையும்"(298)**

என்னும் குறள் உடல்தூய்மைக்குரியப் பொருளாக நீரைக் குறிப்பிடுகின்றார்.

நீர்நிலைகள் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் நிலையில் மட்டுமின்றிப் புனிதத் தன்மை வாய்ந்ததாகக் கருதப்பட்டன. தங்கள் புற அழுக்குகளை போக்கிக் கொள்வதுடன் அக அழுக்குகளை நீக்கி கொள்வதற்கும் உரிய அருமருந்தாக நீர் நிலைகளைக் கருதினர்.காவிரி பூம்பட்டினத்தில் இருந்த சோமகுண்டம், சூரியகுண்டம் என்ற இரண்டு நீர்நிலைகளில் நீராடியவர் இவ்வுலக இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் எய்துவர் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுவது இங்கு எண்ணத்தக்கது.

**நாட்டின் வள ஆதாரம்**:

நாடு வளம் பெற பல்வேறு இயற்கை வள ஆதாரங்கள் தேவை. அவற்றில் ஒன்று நீர் என்பதை

**"இரு புனலும் வாய்ந்த மழையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"( 737)என்கிறார்**.

இருபுனல் என்பது நிலத்தடி நீராகிய ஊற்று நீர், தேங்கும் நீர்,குளம், ஏரி முதலியவற்றையும்,வருபுனல் என்பது (மலையிலிருந்து ஓடிவரும் அருவி நீர்) ஆகியன மூலம் கிடைக்கும் நீரையும் அதனால் கிட்டும் வளங்களையும் சுட்டுகின்றார்.

**எல்லாம் மழை:**

உலகில் உள்ள உயிர்களின் வாட்டத்தை நீக்கும் தன்மை மழைக்கு மட்டுமே உள்ளது. திருவள்ளுவரின் நீரியல் சிந்தனையை

**“கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**எடுப்பதூம் எல்லாம் மழை”**

என்ற குறளில் காணமுடிகின்றது.

இக்கருத்தினைக் கபிலரின் இன்னாநாற்பது நூலிலும்

**“மாரிவளம் பொய்ப்பின் ஊர்க்கு இன்னா”**

**(வேங்கடசாமி நாட்டார் ந.மு - இன்னா நாற்பது உரை - பக்கம் -30)**

**“எழிலி யுறைநீங்கி னீண்டையார்க் இன்னா”**

**(வேங்கடசாமி நாட்டார் ந.மு - இன்னா நாற்பது உரை - பக்கம் - 41)**

காணமுடிகின்றது. மழைவளம் குன்றி மழை பொய்த்துவிட்டால் உலகம் வளமின்றி வறுமையில் வாட நேரிடும்.பருவத்தில் பெய்யும் மழையே சிறந்தது.அதுவே மண்ணுக்கும் மக்களுக்கும் உகந்தது.பருவம் கடந்து வரும் மழையோ அல்லாது பெய்யாது பொய்த்துப் போகும் மழையோ உலக மக்களுக்குத் துன்பத்தைத் தரும் என்ற கபிலரின் கூற்று ஒப்புநோக்கத்தக்க வகையில் உள்ளது.

**சூழலியல் பார்வை:**

பகை மன்னர்களிடம் இருந்து நாட்டைக் காத்தல் அரசனின் கடமையாகும். நாட்டின் பாதுகாப்பு ஆதாரங்களுள் இயற்கை ஆதாரங்களும் அடங்கும். இயற்கை ஆதாரங்களில் நீர், மலை, காடு அரண்கள் இன்றியமையாதது. இதனை வள்ளுவர்

**"மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடையது அரண்" (742)** என்ற குறளில் சுட்டுகின்றார்.

மணி போன்ற தெளிவான வற்றாத நீர நிலைகள், எதிரிகள் எளிதில் நெருங்கமுடியாத அகன்ற வெட்டவெளியாகிய நிலம்; பாதுகாப்பைத் தரும் உயர்ந்த மலை, படைகள் தங்குவதற்குரிய குளிர்ந்த நிழலுடைய காடு என்று இயற்கையாகவே இந்நான்கும் அமைந்திருந்தால் அது பாதுகாப்பு மிக்க நாடாகும். இதிலிருந்து தமிழரின் சூழலியல் சிந்தனை புலனாகின்றது.

உழவுத்தொழிலின் மேன்மையையும், நீர் மேலாண்மை நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்துவதை ஔவையார்

“**வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயரக் குடி உயரும்**
**குடி உயரக் கோல் உயரும்**
**கோல் உயர கோன் உயர்வான்”**

என்று சுட்டுவதிலிருந்து நீரின் மகத்துவம் வெளிப்படுகின்றது.

நான்மணிக்கடிகை ஆசிரியர் விளம்பினாகனார் நீர் வளத்தால் நிலவளம் அடைவதையும் மன்னர் பெரும் பெருமைகளைச் சொல்லுமிடத்து

**"நீரான் வீறு எய்தும் விளைநிலம் நீர் வழங்கும்**
**பண்டதால் பாடு எய்தும் பட்டினம் கொண்டு ஆளும்**
**நாட்டான் வீறு எய்துவர் மன்னவர் கூத்து ஒருவன்"(83)**
என்கிறார்.

சிறுபஞ்சமூலம் ஆசிரியர் காரியாசான் "நீர் சான்று உயரவே நெல் உயரும்" என்கிறார் இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக திருவள்ளுவர் நீரின்றி அமையாது உலகம் என்ற வலியுறுத்தி நீரின் உயர்வு உலக உயர்வு என தெளிவுறுத்தியமை போற்றுதற்கு உரியது.

**நீர் மேலாண்மை:**

இயற்கை உலகுக்கு அளித்த கொடைகளில் ஒன்று நீர் ஆகும். மழைக்காலத்தில் நீர் செழித்து ஓடும். கோடை காலத்தில் வறட்சி ஏற்படும்.எனவே மழைக்காலத்தில் பெருக்கெடுத்து ஓடும் நீர் வீணாகாமலும் ஊர்களை அழிக்காமலும் இருக்க நீரின் ஓடுபாதையின் இரு கரைகளையும் குளங்களின் இரு கரைகளையும் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாததாகும். இக்கருத்தை வள்ளுவர்

**“அளவளா வில்லாதன் வாழ்க்கை குளவளாக்**
**கோடின்றி நீர் நிறைந்தற்று"(523)**
என்ற குறளில் காட்டுகிறார்.

வருகின்ற நீர்வரத்து மிகுதியாக இருந்து ஏரி சிறிதாக இருப்பின் நீர் வழிந்தோடும் ஆகையால் ஏரியின் அளவுக்கு ஏற்ப நீரினை சேமிக்க வேண்டும் அல்லது ஏரியின் அளவைப் பெரிதாக்கி கரைகளை உயர்த்துதல் வேண்டும். இவ்வாறு அமைப்பதால் நீரின் பயன்பாடு அனைத்துக் காலங்களிலும் கிட்டும் என்பதை விளம்பிநாகனார் “ஏரி சிறிதாயின் நீர் ஊரும்” (நான்மணிக்கடிகை - 102) என்கிறார்.

**நீர், நில ஒப்புமைகள்:**

திருவள்ளுவர் உயர்ந்த குடியில் பிறந்தவர்களின் உதவும் பண்பை கூறுமிடத்து அகன்ற ஆறு நீர் வற்றி இல்லாத காலத்திலும் அதனிடத்தில் தோண்டிய காலத்தில் விரைவாக தெளிந்த நீரை சுரந்து உதவும் என்பதனை

**"அற்றக் கடைத்தும் அகல்யாறு அகழ்ந்தக் கால்**
**தெற்றென தெள; நீர் படும்"(150)**
என்றும், கற்ற கல்விக்கு ஏற்ப அறிவு வளரும் என்பதை கூறுமிடத்து “தொட்டனைத் தூறும் மணற்கேணி” (396) என்றும் சுட்டுகின்றார்.

குடிநீர் தருகின்ற ஊருணி நீர்நிறைந்திருந்தால் அவ்வூர் மக்களுக்குப் பயன்படுவது போல அறிவும் கொடைக் குணமும் நிரம்பிய ஒருவன் நிறைய செல்வத்தை பெற்றிருப்பது அவன் வாழ்கின்ற ஊர் மக்களுக்குப் பயனையும் நன்மையையும் விளைக்கும் என்று புகழ் அதிகாரத்தில் நிலத்தை குறிப்பிடுகிறார் வள்ளுவர்

**"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு (குறள் 215)**

ஔவை ஆற்றிலே வெள்ளம் வடிந்து வெப்பத்தால் மணல் சுட்ட போதிலும் அவ் ஆறு ஊற்று நீரையாவது யாவருக்கும் வழங்குதல் போல் நல்ல குடும்பத்தினரும் வறுமை நிலையில் இருந்த போதும் வந்து யாசிப்பவருக்கு இல்லை என்று கூறாமல் இயன்றதை கொடுப்பர் என்பதை

**"ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்ஆறு**
**ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும் - உற்றவருக்கு**
**நற்குடிப் பிறந்தார் நல் கூர்ந்தார்**
**ஆனாலும் இல்லையென மாட்டார் இசைந்து" (நல்வழி - 9)**

என்று கூறுகின்றார். இக்கருத்தை ஆற்றை நம்பி இரு இல்லாட்டி ஊற்றை நம்பி இரு என்ற பழமொழி வாயிலாக உணர முடிகின்றது.

**இல்லறவியலில்**

**"வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்"(85)**

**என்ற குறளில் புலம் என்பது நிலத்தையே குறிக்கின்றது.**

**பொறையுடைமையை விளக்க வந்த வள்ளுவர்**

**"அழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார் பொறுத்தல் தலை" (151);**

என்று நிலத்தின் தன்மையை விதந்துரைக்கின்றார்.

பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் சேரமன்னர்களுள் ஒருவர். பாண்டவரும் துரியோதனன் கூட்டத்தவரும் பொருதக் காலத்து இருதிறத்துப் படைகட்கும் பெருஞ்சோறிட்டு நடுவுநிலைமை புரிந்தமையால் இப்பெயர்ப் பெற்றான்.முரஞ்சியூர் முடிநாகனார் பெருஞ்சோற்றுதியனைப் பாடியுள்ளப் பாடலில் நிலம்,விசும்பு, காற்று,தீ,நீர் என்ற ஐம்பூதங்களின் இயற்கைப் போல பொறை,சூழ்ச்சி,வலி,தெறல்,அளி என்னும் ஐந்தும் உடையவன் என்கிறார்.இதனை

**"மண்டினிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித்தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கைப் போல**
**போற்றார்ப் பொறுத்தாலும் சூழ்ச்சியதகலமும்**
**வலியும் தெறலும் அளியும் உடையோய் (புறநானூறு - 2)**

என்ற பாடலில் சிறப்பித்துப் பாடியுள்ளார். பொறைக்கு நிலமும், சூழ்ச்சிக்கு விசும்பும்,வலிக்கு வளியும்,தெறலுக்குத் (அழித்தல்) தீயும்,அளிக்கு நீரும் (கருணை) அடைவோம்.

நிலத்தில் படிந்து கிடக்கும் தாதுக்கள் நீரில் கரையும் பண்பினை உடையது. அதனால் நீரின் தன்மை மாறுகின்றது. இவ்வாறு நிலம் நீரின் தன்மையை மாற்றக்கூடிய இயல்பு நிகழ்வினை

**"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்ப தாகும் அறிவு"(452)**

என்ற குறளில் காணமுடிகின்றது. செம்மண் நிலத்தில் பெய்த நிறமற்ற மழை நீர் செந்நிறமாவதை செம்புலப் பெயல் நீரார் என்னும் புலவர் அன்பு நெஞ்சங்களுக்கு உவமையாக செம்புலப் பெயல் நீர்போல (குறுந்தொகை 140) என்று குறிப்பிடுவது ஒப்பு நோக்கத்தக்கதாக இருக்கின்றது.

இவ்வுலகம் நிலம், நீர;,; காற்று,ஆகாயம்,நெருப்பு என்னும் ஐம்பூதங்களால் ஆனவை. மனித உடலும் ஐம்பூதங்களால் ஆனவை. இரண்டையும் ஒப்பீடு செய்தால் புரியும்.

**நிலம் - உலகம், நீரில்லாத மண்**

**மனிதன் - எலும்பு மாமிசம் தோல் நரம்பு உரோமம்**

**நீர் - உலகம், தண்ணீர்**

**மனிதன் - உமிழ்நீர், சிறுநீர,; வியர்வை,ரத்தம், விந்து**

**காற்று - உலகம் உலகில் காணப்படும் வாயுக்கள்**

**மனிதன் - சுவாசம்,வாயு ஆகியவை**

**ஆகாயம் - உலகம், அண்டவெளியாகிய வானம்**

**மனிதன் - வானவெளியைப்போல் விசாலமான மனித மூளை**

**நெருப்பு - உலகம்,உலகில் காணப்படும் வெப்பம், சூரிய வெப்பம்**

**மனிதன் - பசி, தூக்கம், தாகம்,அழுகை என்பன நிகழும் போது உடலில் அதிகமாகும் வெப்பம்**

**(மாத்தளைசோமு - வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் - பக்கம் - 79)**

**நிறைவுரை:**

திருக்குறள் என்ற அறநூலில் அன்றாட உலகியல் நிகழ்வுகளோடு சுற்றுச்சூழல் கருத்துகள் விரவிக் காணப்படுகின்றன. மக்களின் வாழ்வியலில் இரண்டறக் கலந்த நிலம்,நீர் ஆகியவற்றின் இயல்பாக்கங்களை பல்வேறு அதிகாரங்களில் வெவ்வேறு நிலைகளில் விளம்பிச் செல்லும் வள்ளுவர் அவற்றின் இன்றியமையாத செயல்பாடுகளைக் குறிப்பிடுகின்றார்.இயற்கை வழங்கிய அருமருந்தாகிய சூழலைக் காக்க வேண்டியதன் தேவையை அறிவுறுத்துகின்றார்.இதனைப் பின்பற்றினால் நலன்கள் பெருகும் என்றுரைத்து கட்டுரை நிறைவுறுகின்றது.

**பார்வைநூல்கள்**:

**1.மோகன் இரா., திருக்குறள் பொக்கிஷம், திருவள்ளுவர் கல்விக்கூடம்,மதுரை -20**

**2.முருகன் ப., வள்ளுவர் பன்னோக்குப் பார்வை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் சென்னை - 98,பதிப்பு - 1991.**

**3.ஜெய்க்குமார் அ., சுற்றுப்புறச்சூழலும் மனிதமேம்பாடும், உமா பதிப்பகம், சென்னை - 01, பதிப்பு - 1992.**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 3.பண்டைத்தமிழரின் சூழலியல் அறிவும் வாழ்வியல் நெறிகளும்

**முனைவர் ஆ.தேவதா,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
Mail ID: thevathaa@gmail.com, Mobile No:9443444072,
Orcid: https://orcid.org/0009-0000-5361-4848

**முன்னுரை**

பண்டைய மக்களின் வாழ்வியல் நெறிகளை உலகிற்குப் புலப்படுத்துவன சங்க இலக்கியங்கள். இயற்கை நெறிகளுக்கு உட்பட்டு செம்மையான வாழ்க்கை நெறிகளின்படி தமது வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துச் செம்மாந்து விளங்கியது தமிழ்ச்சமுதாயம். அச்சமுதாய வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடியாக விளங்குவது சங்க இலக்கியம். சங்க கால வாழ்வியல் பதிவுகள் தமிழரின் அழகியல் வாழ்வைச் சுட்டுகின்றன. உலகில் பலமொழிகள் தம் பண்பாட்டு நாகரிகங்களைக் கதைகளாகவும் செய்திகளாகவும் கூறிச்செல்கின்றன. உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழி மட்டுமே அவற்றைச் சொல்லோவியங்களாகக் காட்டுகிறது.

தமிழ் இலக்கிய மரபில் சங்க இலக்கியங்கள் மனிதவாழ்வையும் இயற்கையையும் பிரிக்க முடியாத ஒன்றாக சித்திரிக்கின்றன. அவற்றுள் எட்டுத்தொகை நூலான அகநானூறு காதல் வாழ்வை மையமாகக் கொண்டிருந்தாலும் அக்கால மக்களின் சூழலியல் அறிவு, இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பண்பாடு, நிலத்திற்கேற்ற வாழ்க்கை முறை, போன்ற பல்வேறு வாழ்வியல் நெறிகளையும் தெளிவாக எடுத்துரைக்கின்றது. அகநானூற்றில் இடம்பெறும் ஐந்திணை நிலங்கள் வெறும் புவியியல் பிரிவுகளாக மட்டுமல்லாமல் மனித வாழ்க்கை இயற்கையோடு இணைந்து இயங்கியதற்கான சான்றுகளாகவும் திகழ்கின்றன. இன்றைய உலகில் சுற்றுச்சூழல் சீர்கேடு, காலநிலை மாற்றம், உயிரினப் பன்மை இழப்பு போன்ற சவால்கள் அதிகரித்து வரும் நிலையில் அகநானூற்றில் பதிவாகியுள்ள சூழலியல் அறிவும் வாழ்வியல் நெறிகளும் நமக்கு நிலையான வாழ்க்கைக்கான வழிகாட்டுதலாக அமைகின்றன. எனவே அகநானூற்றின் வழி பண்டைத்தமிழரின் சூழலியல் சிந்தனைகளையும் வாழ்வியல் நெறிகளையும் ஆராய்வது இன்றைய சமூகத்திற்கு மிகவும் பொருத்தமானதாகும்

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டையத்தமிழர்கள் இயற்கையை வெறும் வளமாக மட்டுமல்ல. வாழ்வின் அடிப்படையாகக் கருதினர். அவர்களின் சூழலியல் அறிவு நிலம், நீர், காடு, பருவநிலை, தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றோடு இணைந்த வாழ்வியல் நெறிகளாக சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலத்தைப் பிரித்து ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்ற தொழில், உணவு, பண்பாடு, வாழ்க்கை முறையை அமைத்தனர். இது சூழலுக்கு ஏற்ற வாழ்க்கை முறையை வெளிப்படுத்துகிறது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிகத்தில் பண்டைத் தமிழர்கள் சிறந்து விளங்கினர். விவசாயப் பொருட்கள் உப்பு, மீன், மண்பாண்டங்கள் போன்றவை வாணிகத்தில் பரிமாறப்பட்டன. இதனால் பண்டைத் தமிழர்கள் வாணிகத்தில் சிறந்து காணப்பட்டனர்.

சங்கத் தமிழர்கள் பயன்படுத்தும் சங்கு ஆபரணப்பொருளாக மட்டுமின்றி தமிழர்களின் கடல்சார் அறிவையும், தொழில்நுட்பத்திறனையும் நிலைநாட்டுவதாய் அமைந்துள்ளது.

பண்டைத் தமிழர்களின் உழவு முறை இயற்கையை மதித்து, நீர்வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி நிலையான வேளாண்மையை முன்னிறுத்தியதாய் உள்ளது. இவை பண்டைத்தமிழரின் உயர்ந்த சூழலியல் அறிவையும் வாழ்க்கை நெறியையும் எடுத்துக்காட்டுகிறது.

பண்டைத் தமிழர்களின் இயற்கை வழிபாடு சுற்றுச்சூழலை மதித்துப் பாதுகாக்கும் உயர்ந்த சிந்தனையைக் காட்டுகிறது. இயற்கையும் மனிதவாழ்வும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதவை என்ற பண்டைத் தமிழரின் பார்வை சூழலியல் பாதுகாப்புக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

**சுற்றுப்புறச்சூழல் விளக்கம்**

சுற்றுச்சூழலியல் எனும் தொடர் உயிர்வாழ்வினங்களின் சுற்றுப்புறப் பகுதியைக் குறிப்பதாகும். இவை இயற்கையின் அமைப்பில் உயிர்வாழ்வியலின் சுற்றுப்புறத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. **“சுற்றுச்சூழலியல் என்பது இயற்கையைச் சார்ந்து வாழும் மக்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றையும் அவற்றின் வாழ்வியல் கூறுகளையும் அறிந்துகொள்ளப் பயன்படுகிறது. இவ்வுயிரினங்கள் இயற்கையோடு கொண்டுள்ள உறவுநிலையை அறிந்துகொள்ள துணைநிற்கும் ஓர் அறிவியல் பிரிவாகவும் அமைகின்றது.”**[1]

**“சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள நிலம், நீர், காற்று, வான்வெளி, சூரியன், தாவரங்கள், பறவைககள், விலங்குகள் ஆகியவற்றையும் மனிதன் உருவாக்கும் ஒருங்கமைப்புகளையும் உள்ளடக்கியதாகும்.”**[2]

மனிதனைச் சுற்றி அமைந்துள்ள இயற்கைக் கூறுகள் அனைத்தும் ஏதாவதொரு வகையில் மனித வாழ்வோடு கலந்து செயலாற்றுகின்றது. இவ்வியற்கைக் கூறுகள் அனைத்தும் இல்லாமல் மனிதன் உலகில் நிலைத்து வாழ முடியாது என்பதை மேற்கூறிய விளக்கங்கள் வழி அறியமுடிகிறது.

**“நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்”**[3]

என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

**“மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை”**[4]

என்று பாடிய முரஞ்சியூர் முடிநாகனார் முதற்கொண்டு சங்கப்புலவர்கள் மண்ணின் தன்மை மலையின் பெருமை, நீரின் அருமை, பறவை விலங்குகளின் செயற்பாடு, தாவரங்களின் பெருக்கம், மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பின் விளைவுகள் ஆகியவற்றை இலக்கியக் கருத்துக்களோடு கலந்து கொடுத்துள்ளனர்.

வற்றாத நீருற்றுகளும், அடர்ந்த காடுகளும், துள்ளித்திரிந்த விலங்கினங்களும் நிறைந்து கண்ணுக்கு விருந்தளிக்கும் அமைப்பாக இயற்கை விளங்கியது. இயற்கையின் இயல்புநிலை ஈடு இணையற்றதாகத் திகழ்ந்தது. நன்றாக இருந்தது. இயற்கையாகவே இருந்தது. உயிரினங்கள் வாழத் துணைநின்றது. இத்தகைய இயற்கையோடு முதலில் இணைந்து வாழ்ந்தான் மனிதன். மனிதனும் பிற உயிரினங்களும் இந்தப்பூமியில் வளமுடன் வாழ இயற்கை பலவழிகளிலும் துணைபுரிந்து வருகிறது. பலகோடி ஆண்டுகளாக உயினங்கள் அனைத்தும் இயற்கையோடு இணைந்தும், இயற்கையைச் சார்ந்தும் வாழ்ந்து வந்துள்ளன. இந்தப் பிணைப்பில் மனிதனின் வாழ்வும் வளமும் இணைந்தே வந்துள்ளது. இயற்கையினால் பல வளங்களைப் பெற்றான் மனிதன்.அதனைத் தனது தேவைக்கேற்பப் பயன்படுத்திக் கொண்டதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

**பண்டைத்தமிழரின் கடல்சார் அறிவியல்**

பழந்தமிழ் நாட்டின் மூன்று பகுதிகளிலும் கடல் சூழ்ந்திருந்தபடியால் அதிக அளவில் சங்குகள் கிடைத்தன. நெய்தல் நிலப் பரதவர் கடலில் மூழ்கிச் சங்கு எடுத்து வரும்போது சங்கை முழக்கி ஊருக்கு செய்தி அறிவித்ததாக அகநானூறு குறிப்பிடுகிறது.

**“இலங்கிரும் பரப்பின் எறிசுரா நீக்கி**
**வலம்புரி மூழ்கிய வான்திமிற் பரதவர்**
**ஒலிதலைப் பணிலம் ஆர்ப்ப கல்லெனக்**
**கலிகெழுகை கொற்கை”** **(அகம்-350)**

சங்குகளை அறுத்து வளையல் செய்தனர். அக்காலத்தில் தமிழ் மகளிர் அனைவரும் சங்கு வளையல்கள் அணிந்திருந்தனர். பெண்கள் சங்கு வளையல்களை அணிவது அக்காலத்தில் சமுதாயத்தில் மிகவும் மங்கலமாகக் கருதப்பட்டது. அரண்மனையில் வாழ்ந்த அரசகுமாரிகள் முதல் குப்பங்களில் வாழ்ந்த பெண்கள் வரை அனைவரும் பண்டைக்காலத்தில் சங்கு வளையல்கள் அணிந்திருந்தனர்.

கொற்கை கடலில் மட்டுமல்லாது, தென்தமிழ்நாட்டின் ஏனைய கடற்பகுதிகளிலும் சங்குகள் எடுக்கப்பட்டது. கடலில் இருந்து கொண்டு வரப்படும் சங்குகளை சிறுவாளினால் அறுத்து, அரத்தினால் அராவி அழகான வேலைப்பாடுகள் நிறைந்த வளையல்களைச் செய்தனர். கடலில் இருந்து சங்கு பிடித்து வருவதைப் பொதுவாகச் ‘சங்கு குளிப்பு’ என்றே சொல்வார்கள். இடம்புரிச்சங்கில் செய்த வளையல்களைச் சாதாரண நிலையில் உள்ள பெண்களும் விலை அதிகமான வலம்புரிச்சங்கில் செய்த வளையல்களை அரசகுமாரிகளும் செல்வ மகளிரும் அணிந்தனர்.

ஐவகை நிலங்களில் நெய்தல் நிலமாகிய கடலில் கிடைக்கும் சங்கு பெண்களுக்கு அணிகலனாகவும் ஊருக்குச் செய்தி அறிவிக்கும் கருவியாகவும் பயன்பட்டது.

**பண்டைத்தமிழரின் வணிக உறவு**

சங்க கால மக்களின் பெரும்பகுதி வாணிகம் பண்டமாற்றாகவே நடைபெற்றது. உள்நாட்டு வாணிகமானாலும் கடல்கடந்த வாணிகமானாலும் இப்பரிமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஒரு நிலத்தில் உருவாகும் விளைபொருள்களை அவை உருவாகாத பிற இடங்களுக்கு அனுப்புவதும், வேற்றுப் பண்டங்களைத் தேவையான இடங்களுக்குச் சென்று விற்றலும் வாணிகர்களின் தொழிலாகும். இவ்விரு வாணிகங்களும் பண்டமாற்றாகவும், பொற்காசு பரிமாற்றமாகவும் நிகழ்ந்துள்ளன.

உள்நாட்டு வாணிகத்தில் உப்பும், நெல்லும் பண்டமாற்று செய்து கொள்வது அதிகளவில் நடந்திருக்கிறது. எனவே மாறுதல் என்றாலே வாணிகம் செய்தல் என்று பொருள் கொள்வதாயிற்று.

**“நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்**
**சேரி விலை மாறு கூறலின்”** **(அகம் -140)**

**“நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**
**கொள்ளீரோ எனச் சேரிதோறும் நுவலும்”** **(அகம் -390)**

என்ற வரிகள் படகில் மீன் பிடிக்கச் சென்ற நெய்தல் நிலப் பரதவனுக்கு அவன் மகள் உப்புக்கு ஈடாக மாற்றிக் கொணர்ந்த வெண்ணெல் சோற்றினை அயிலை மீன் குழம்போடு கொடுத்தாள். பண்டமாற்றுமுறை சங்ககால மக்களிடையே காணப்பட்ட முக்கியமான பழக்கவழக்கமாக உள்ளது. தன்னிடமுள்ள பொருளை விற்று அதற்குப் பதிலாக மாற்றுப் பொருட்களைப் பெற்றனர். இதன்மூலம் மக்களிடையே நட்புறவு வளர்ந்தது எனலாம்.

தமிழகத்தில் பிறநாட்டவரையும் கவரும் வகையில் பல பொருட்கள் கிடைத்தன. அவற்றுள் முத்து, பவளம், அகில், ஆரம், வெண்முகில், சங்கு முதலியன குறிப்பிடத்தக்கவை. கிரேக்கர்களையும் உரோமானியர்களையும் யவனர் என்று பண்டைத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. யவனர்கள் வலிமையான உடலையும் உறுதியான உள்ளத்தையும் உடையவர்கள் என்பதை **‘வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்’**[5] என்று முல்லைப்பாட்டு அடிகளால் உணரமுடிகின்றது. யவனர்கள் கலைநுணுக்கம் மிகுந்தவர்களாகவும் இருந்தனர்.

**“யவனர்கள் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னோடு வந்து கறியோடு பெயரும்**
**வளங்கெழு முசிறி”** **(அகம்-149)**

என்னும் குறிப்பிலிருந்து யவனர்கள் நல்ல தொழில் மாண்புடைய மரக்கலத்திலே பொன்னோடு வந்து மிளகொடு திரும்பிப் போகும் நல்ல வளமுடைய முசிறித் துறைமுகத்திற்கு வந்து பண்டமாற்று முறையில் வாணிகம் செய்தமையை அறிய முடிகிறது. அதுமட்டுமின்றி யவன நாட்டிலிருந்து இறக்குமதி செய்த பொருட்களில் உயர்வகை மதுவும் இடம்பெற்றிருந்தது. அயல்நாட்டு வாணிகம் பண்டமாற்று முறையில் மட்டுமின்றி, பொன் நாணயங்களுக்காகவும்

நடைபெற்ற செய்தியைப் பல அகழ்வாராய்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன. பண்டமாற்று முறையால் பண்டைத் தமிழரின் நுண்ணோக்கி ஆராயும் திறன் புலப்படுகிறது.

**பண்டைத்தமிழரின் தொழில்நுட்ப அறிவு**

ஐவகை நிலமக்களில் மருதநிலத்தினைச் சார்ந்தவர்கள் உழவுத்தொழிலை மேற்கொண்டனர். இந்நில மக்கள் ஏனைய நிலமக்களைக் காட்டிலும் நாகரிகத்தில் சிறந்தவர்களாக விளங்கினர். உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர் என்ற சொற்கள் உழவுத்தொழிலிலே தலைமையாளர் தொழிலாகக் கருதப்பட்டது.

உழவுத்தொழில் தொடர்பான பழக்கவழக்கங்கள் அகநானூற்றில் மிகுந்து காணப்படுகின்றன. உழவர்கள் கிணறு வெட்டும்பொழுது குந்தாலி என்னும் கருவியைப் பயன்படுத்திய செய்தியை,

**“பரல்மண் கவல முரண்நிலம் உடைத்த**
**வல்வாய்க் கணிச்சி கூழ்ஆர் கோவலர்”** **(அகம்-21)**

என்ற வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. விளைச்சல் இல்லாத தரிசு நிலத்தில் கற்களை உடைத்து நீர் ஊற்றுக்களை உடைய கிணற்றினைத் தோண்டுவர் என்ற செய்தியை,

**“யடுமணி இனநிரை உணிஇய, கோவலர்**
**விடுநிலம் உடைத்த கலுழகண் கூவல்”** **(அகம்-32)**

என்ற பாடல்வரிகள் மூலம் அறியமுடிகின்றது.

மருதநிலத்து உழவர்கள், நெற்பயிர்களில் இருந்து நெல்லை அடித்து பெரிய களங்களில் சேர்ப்பர் என்பதை

**“பெருங்களம் தொகுத்த உழவர் போல”** **(அகம்-30)**

என்ற அடிகளின் மூலமும், நெல்அடித்த பின்பு குளங்களைத் தூற்றும் வழக்கம் கொண்டிருந்தனர் என்பதை

**“கங்குல் ஓதைக் கலிமகிழ் உழவர்**
**பொங்கழி முகந்த தாகில் துண்துகள்”** **(அகம்-37)**

என்ற பாடல்வரிகள் மூலம் அறியமுடிகிறது.

கிணற்றில் இருந்து வளைந்த வாயினையுடைய மரத்தாலான நீர் இறைக்கும் கருவி கொண்டு நீர் இறைத்தனர். இதனை,

**“நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய**
**கொடுவாய்ப் பத்தல் வார்த்து உருசிறுகுழி”** **(அகம்-155)**

என்ற அடிகள் நிலத்திலிருந்து எடுத்த கிணற்று நீரை மக்கள் பயன்படுத்தியதை அறியமுடிகிறது.

**‘கோடுடைக் கையா துளர் ஏறி வினைஞர்’** **(அகம்184)**

என்ற வரிகள் மருத நில மக்கள் வயலில் உள்ள களைகளைக் களைவதற்கு களைக்கொட்டியினைப் பயன்படுத்தினர் என்பதை எடுத்துரைக்கிறது. நிலத்தைச் சுத்தப்படுத்த பண்டைத்தமிழர்கள் பயன்படுத்திய கருவிகள் இன்றும் நடைமுறையில் இருப்பதைக் காணலாம். நெல்விதைகள் முளைப்பதற்கு வயலில் கலப்பை வைத்து உழுதனர். விளைந்த நெற்கதிர்களை அடித்து எருதுகள் கொண்டு மிதிக்கச் செய்ததையும் காற்றில் நெல்லினைத் தூற்றியதையும் அகநானூற்றுப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

**"நீர்சூழ் வியன்களம் பொலிய, போர்பு அழித்து**
**கள்ஆர் களமர் பகடுதலை மாற்றி**
**கடுங்காற்றுஎறிய போகிய துரும்புடன்" (அகம்-366)**

என்ற இவைபோன்ற பண்டைத்தமிழர்கள் நிலத்தில் செய்த விந்தைகள் எல்லாம் இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். நிலத்தைப் பயன்படுத்தித் தனக்குத் தேவையான உணவைத் தாங்களே விளைவித்து உண்டனர். உணவுப்பொருளின் உற்பத்தியைப் பெருக்க, புதர்களையும், கரம்புகளையும், காடுகளையும் அழித்து விளைநிலமாகப் பயன்படுத்தி, உணவுத் தேவையை நிறைவு செய்ய வழிவகை செய்தனர். காடுகளைச் சீர்படுத்தி, நீர்நிலைகளை ஏற்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கினர். சந்தன மரக்காட்டினைச் சீர்படுத்தி தினைக் கொல்லையாக்கினர். இதனை

**"நறுவிரை ஆரம் அறஎறிந்து உழுத**
**உளைக்குரல் சிறுதினை கவர்தலின்" (அகம்-388)**

என்ற பாடல் உணர்த்துகின்றது. காட்டைத் திருத்தி, திணைப் பயிரிட்டு அப்பயிர் விளைந்து அறுவடைக்குக் காத்திருக்கும் காட்சியை அகநானூறு 192ஆவது பாடல் விளக்கும். பெருங்கற்களை உடைய பக்கமலையைத் திருத்தி உழுத இடத்தில் கரும்பைப் போன்று திரண்டு அழகுடைய கதிரை உடைய தினை விளைந்து நின்ற காட்சியை,

**"தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனம்**
**கரிபுறம் கழீஇய பெரும்பாட்டு ஈரத்து**
**தொடுவளர் மைந்தினை நீடுகுரல் காக்கும்" (அகம்-368)**

என்ற பாடல் வரிகளில் காணலாம். புதுக்கொல்லையில் விளைந்த வரகினது குத்திய அரிசியுடன், புற்றீசல் கலந்து சமைத்த இனிய புளிப்புடைய சோற்றை இடையர்கள் மேய்ச்சல் நிலத்திற்கு எடுத்துச் சென்றதை,

**"இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியோடு**
**கார் வாய்த்து ஒழிய ஈர்வாய்ப் புற்றத்து**
**ஈயல் பெய்துஅட்ட இன்புளி வெஞ்சோறு" (அகம்-394)**

என்ற வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு தொடர் பயிரிடுமுறையில் உணவுத் தேவையில் உணவு உற்பத்தியில் நிறைவு ஏற்பட்டது

**பண்டைத்தமிழரின் திருமண மரபுகள்**

சமுதாயத்தில் குடும்பம் என்னும் அமைப்பிற்கு ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதே அடிப்படைக் காரணியாகிறது. அவ்வாறு குடும்பம் உருவாவதற்கு திருமணம் என்ற சடங்கு முறை தேவையாகிறது. இந்த சடங்குமுறையும் பண்பாட்டு கலப்பிற்கேற்பவும் காலத்திற்கேற்பவும் மாறிவிடும் தன்மை உடையதாகிறது. தொடக்க காலத்தில் இயற்கையை சாட்சியாக வைத்து திருமணம் நடைபெற்றது. பிறகு சடங்குமுறைகளுடன் கூடிய திருமணம் நடைபெறத் தொடங்கியது. இத்தகு சடங்குமுறைகள் தனிமனித பாதுகாப்புக்குச் சமுதாயம் ஏற்படுத்தியவையாகக் கருதலாம். இதற்கு,

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப"[6] (தொல்.கற்பியல்.5)**

என வரும் தொல்காப்பியரின் நூற்பாவைச் சான்றாகப் பகரலாம்.

முதுபெண்டிர் நற்காரியங்கள் செய்யத் தெடங்குமுன் நெல்லும் நீரும் பூவும் உகுந்து வழிபட்டு விரிச்சி கேட்பர் என்பதும் திருமணத்திற்கு நாள் குறிக்க விரிச்சி கேட்ட செய்தியினையும் அகநானூற்றில் காணமுடிகிறது. திருமணத்தின் போது பெரிய திருமணப்பந்தல் அமைத்துக் அதன்கீழ் புதுமணலைப் பரப்பித் திருவிளக்கேற்றி வைத்துக் கடவுளை வணங்கி மணவினை தொடங்கினர் என்பதை,

**"தண்பொரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி**
**மனைவிளக் குறுத்து மாலெ தொடரி" (அகம்-86)**

எனவரும் பகுதியால் அறியமுடிகிறது. பந்தலில் புதுமணல் பரப்புதல் என்பது பழைய மண்ணில் புழுதி கிளம்பி மக்களுக்கும் துன்பம் ஏற்படக்கூடாது என்பதற்காகவும் திருமணம் நடக்குமிடம் அசுத்தமின்றி தூய்மையாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். இதிலிருந்து பண்டைத் தமிழரின் அழகுணர்வையும் தூய்மை உணர்வையும் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். இல்லத்தில் விளக்கேற்றி வைத்து மலர்மாலை சூட்டி இறைவனை வழிபட்ட பின்னரே மணவினை தொடங்கினர்.

இடி, மின்னல், மழை போன்ற இயற்கையில் நிகழும் மாற்றங்களைக் கண்ட பண்டைத்தமிழன் அஞ்சி மரத்தடியில் நின்று அச்சம் போக்கினான். காலப்போக்கில் மரத்தை தெய்வமாக எண்ணி வணங்கினான். வேப்பமரத்தில் தெய்வம் குடிகொண்டிருக்கும் என்பதை உணர்த்தும் சங்கப்பாடல்கள் நிறைய உள்ளன.

பசு மந்தையைக் கைப்பற்றிய அஞ்சாமையை உடைய மறவர்கள் உண்மையான காட்டுநிலத்தை அடைந்து தெய்வம் குடிகொண்டிருக்கும் பருத்த அடியினை உடைய வேம்பிற்குக் கொழுத்த ஒரு பசுவினைக் கொன்று பலியிட்டனர். அதன் குருதியினைத் தூவி தெய்வத்தைப் போற்றி வழிபட்டனர். பின்னர் அப்பசுவின் புலாலினைப் புழுக்கி உண்டுவிட்டுச் சென்றனர். இதனை,

**"பயநிரை தழீஇய கடுங்கண் மறவர்**
**அம்புசேண் படுத்து வன்புலத்து உய்த்தெனத்**
**தெய்வம் சேர்ந்த பராரை வேம்பிற்**
**கொழுப்பா எறிந்து குருதி தூஉய்" (அகம் -309)**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. மேலும் மற்றுமொரு பாடலில் **'கடவுள் மரத்தினையுடைய முன்னால் மிடையப் பெற்றிருக்கின்ற கூடு'(அகம்-270)** என்று இடம்பெறுவதால் மரத்தில் தெய்வம் குடிகொண்டிருக்கும் என்னும் நம்பிக்கையோடு பழந்தமிழர் வாழ்ந்தமை வெளிப்படுகின்றது.

**முடிவுரை;**

இயற்கை வளங்களை மதித்துப் பாதுகாத்தல், பருவநிலைக்கு ஏற்ப வாழ்தல், அனைத்து உயிர்களிடமும் அன்பும் கருணையும் காட்டுதல் இயற்கையை வழிபடுதல் போன்ற உயரிய பண்புகள் பண்டைத் தமிழர்களின் சூழலியல் அறிவை எடுத்துக்காட்டுகின்றன. இன்றைய

**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் மாசுபாடு, இயற்கை வளங்களின் சுரண்டல் போன்ற பிரச்சனைகளுக்கு மத்தியில் அகநானூறு முன்வைக்கும் கருத்துக்கள் நிலையான வளர்ச்சிக்கும் மனித நலனுக்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றன. அகநானூற்றில் பதிவாகியுள்ள சூழலியல் அறிவையும், வாழ்வியல் நெறிகளையும் அறிந்து அவற்றை நவீன வாழ்க்கையில் பின்பற்றுவது காலத்தின் தேவையாகும். இதுவே இயற்கையைப் பாதுகாத்து எதிர்காலத் தலைமுறைக்கு வளமான உலகை உருவாக்கும் அடித்தளமாக அமையும்.

**சான்றெண் விளக்கம்**

1.இரா.மோகன் & மு.மணிவேல், இந்தியப் பல்கலைக்கழக தமிழாசிரியர் மன்றம், ஆய்வுக்கோவை - 3, ப.1818

2. ஜே. தர்மராஜ், சுற்றுச்சூழல் இயல், ப - 1

3.பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை (ப.ஆ) தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணம், நூ - 635

4. ஞா.மாணிக்கவாசகன்,(உ.ஆ) புறநானூறு பா.எ - 2

5. முல்லைப்பாட்டு, பா.வ - 61

6. தொல்காப்பியம், கற்பியல், நூ.எ - 5

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 4.மணிமேகலையில் இயற்கையும் சுற்றுச்சூழலும்

**முனைவர் தா. லதா,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 002.
Email: lathahcc2006@gmail.com, ORCID: https://orcid.org/0009-0006-5296-0523

**முன்னுரை**

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை சீர்திருத்தக் காப்பியம் என்ற சிறப்பிற்கு உரியது. கொல்லாமை, ஊன் உண்ணாமை, கள் உண்ணாமை ஆகியவற்றை வலியுறுத்துகிறது. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாராட்ட வேண்டுமென்பதை உணர்த்தவே சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற்றப் பட்டது. இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள இயற்கை, இயற்கையின் கொடையாகிய மழை பற்றிய குறிப்புகள், மாசுபடாத எங்கும் நிறைந்து காணப்பட்ட சுற்றுச்சூழல் இவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.

**சுற்றுச்சூழலும் இயற்கையும்**

மனிதஇனம் உட்பட அனைத்து உயிர்களும் வாழ்வதற்கு ஏற்ற இடம் புவிமண்டலம். இந்த புவிமண்டலம் சீராக இயங்குவதற்கு நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்ற ஐந்து வகையானவைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ள நிலையில் உள்ளன. மனித சக்தியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். இதனையே தொல்காப்பியர்,

“நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்”

(தொல்காப்பியம் மரபியல் நூற்பா 90)

இவ் ஐந்தும் இணைந்தது தான் உலகம் என்பது அவருடைய கருத்து.

**நிலப்பாகுப்பாடு**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலப்பாகுபாட்டினை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்
எனச் சொல்லிய முறையால்
சொல்லவும் படுமே”

(தொல்காப்பியம், அகத்திணையியல் நூற்பா 951)

சங்க இலக்கியமும், காப்பியங்களும் இந்த ஐவகை மக்களின் வாழ்க்கை முறைகளைக் கூறுகின்றன.

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனது வாழ்வியலை கட்டமைப்பது சூழலியல். மணிமேகலை காப்பியத்தில் இடம்பெற்றுள்ள இயற்கை, சுற்றுச்சூழல் இவற்றை எடுத்துக்காட்டி சுற்றுச்சூழலை பராமரிக்க வேண்டிய கருத்துக்களை வலியுறுத்துவே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். ஏனென்றால், சுற்றுப்புறச்சூழலியல் சிந்தனைகளில் முதலில் குறிப்பிடப்படுவது மக்கள் வாழும் புவியியல் சூழல் சார்ந்த நில அமைப்பாகும். மக்கள் இயற்கையோடு தங்களது வாழ்வியலை அமைத்துக் கொண்டனர். சூழலியலும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதாகவே அமைந்திருந்தது. இயற்கை மாசுபடாமல் இருந்ததால் நல்ல மழை கிடைத்தது ஆகிய கரத்துக்களை இந்த ஆய்வு கட்டுரை முன் வைக்கிறது.

**இயற்கையின் இயல்பான நெறி**

இயற்கை என்பது மானுடமும் எல்லா உயிரினங்களும் வாழ்வதற்குரிய சூழலாகும். இயற்கை என்பது உயிருள்ளவற்றையும், உயிரல்லாதவற்றையும் தன்னகத்தே உள்ளடக்கியது. இதனை "மனிதனை சூழ்ந்திருக்கின்ற அவன் புலன் உணர்வுகளுக்குரிய வெளிப்புற உலகமாக அமைந்திருக்கின்ற 'Phலளiஉயட ருniஎநசளந' என்று ஆங்கிலத்தில் விளக்கப் படுகின்ற உலக மேனிய இயற்கை" என துரை.சீனிச்சாமி குறிப்பிடுகிறார்.

(துரை சீனிச்சாமி, இலக்கியத்தில் இயற்கை ப 27)

**இயற்கை எனும் சொல்லுக்கு,**

"கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பு"

(திருமுருகாற்றுப்படை - 17)

என விளக்கம் தரப் படுகிறது.

**மணிமேகலையில் உவவனம்**

மணிமேகலையில் ஐந்து வகையான மலர்வனங்கள் சாற்றப் படுகின்றன.

"பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந்திகையின் எபிற்புறம் போகின்
உலகமன்னன் உழையோர் ஆங்குளர்"

(மலர்வனம் புக்க காதை 45 - 47)

மணிமேகலையின் தோழி சுதமதி உவவனத்தைப் பற்றி குறிப்பிடும் பொழுது, பலவகையான மலர்களை அடுக்கி வைத்தாற் போன்று, நான்கு மரங்கள் பந்தலைப் போன்று நிழல் தருகிறது. அதனுடைய மதிற்பக்கம் சென்றால் உலகை ஆளும் சோழ மன்னனின் உரிமை மகளிர் மட்டுமே இருப்பர் எனக் கூறுகிறாள்.

மேலும்,

"தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பீடிகை தான் உண்டு ஆங்கிடின்
அரும்பவிழ் செய்யும் அலர்ந்தன வாடா
சுரும்பின மூசா தொல்யாண்டு கழியினும்"

(மலர்வனம் புக்க காதை 65 - 68)

உயிர்களைப் பேணி பாதுகாக்கும் கொள்கையும், உயிர்களின் மீது அருளும், நீங்காத அன்பும் உடைய புத்த தேவனின் ஆணைப் படிப் பல வகையான மரங்கள் தோன்றிப் பூத்துக்குலுங்கும் உவவனம். அதில்,

"குரவமும், மரவமும், குருந்தும், கொன்றையும்
திலகமும், வகுளமும், செங்கால் வெட்சியும்
நரந்தமும், நாகமும், பரந்தலர் புன்னையும்
பிடவமும், தவளமும், முடமுள் தாழையும்
…….. ………. …….. ………."

(மலர்வனம் புக்க காதை 160 - 165)

குரவம், வெண்கடம்பு, குருந்தகம், கொன்றை, மஞ்சாடி, மகிழம், வெட்சி, நாரத்தம், சுரபுன்னை, புன்னை, பிடவம், செம்முல்லை, தாழை, வெப்பாலை, மூங்கில், அசோகம், செருத்தி, வேங்கை, செண்பகம், இலவம் ஆகிய மரங்கள் பரந்து விரிந்து மலர்களைப் பரப்பின. உவவனத்தில் பந்தல் அமைந்தது போன்று அடர்த்தியான மரங்களும், அம்மரத்தின் நிழலும் இருந்தது என்றும், பலவகையான மரங்களின் பெயர்களும், அவற்றின் மலர்களும் பூத்துக் குலுங்கின என்பதால் இயற்கையை பேணிகாத்தமையும், இயற்கை மாசுபடாமல் இருந்தமையையும் அறிய முடிகிறது.

**சக்கரவாளக் கோட்டத்தில் இயற்கை எழில்**

சக்கரவாளக் கோட்டத்தில் கொடிகள் மற்றும் நீர்நிலைகள் அமைந்திருப்பதை,

"தேவர் புகுதரூஉம் செழுங்கொடி வாயிலும்
நெல்லும் கரும்பும் நீரும் சோலையும்
நல்வழி எழுதிய நலம்கிளர் வாயிலும்
வெள்ளி வெண்சுதை இழுகிய மாடத்து
உள்@ரு எழுதா வெள்ளிடை வாயிலும்"

(சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை 40 - 44)

தேர்ப்பாகனால் செலுத்தப் படாது தாமே இயங்கும் தேர்கள் போன்று, கொடிகள் மேவும் வாயிலும், நெல், கரும்பு, நீர்நிலை, சோலை என இருக்கும் நலம் ஒளிரும் வாயிலும், வெள்ளியினைப் போன்று சுண்ணாம்பு சாந்து பூசப் பெற்ற வாயிலும், என நான்கு பெரிய வாயில்களைக் கொண்ட சக்கரவாளக் கோட்டம்.

நிலம் மாசுபடாமல் இருந்ததால் செடிகள், கொடிகள், சோலை என எங்கும் பசுமை நிறைந்து காணப் பட்டதை காணலாம்.

**மணிபல்லவத் தீவில் இயற்கை**

மணிபல்லவத் தீவுக்கு கொண்டு செல்லப்பட்ட மணிமேகலை, துயில் களைத்து எழுந்த போது, கண்ட இயற்கை காட்சியினை,

"முத்துவிளை கழனிமுரிசெம் பவளமொடு
விரைமரம் உருட்டும் திரையுலாப் பரப்பின்
ஞாழல் ஓங்கிய தாழ்கண் அசும்பின்
ஆம்பலும் குவளையும் தாம்புணர்ந்து மயங்கி

வண்டுண் மலர்ந்த குண்டுநீர் இலஞ்சி
முடக்காற் புன்னையும் மடல்பூந் தாழையும்
வெயில்வரவு ஒழித்த பயில்பூம் பந்தர்.”

(மணிபல்லவத்துத் துயர் உற்ற காதை 3 - 9)

கடல்அலை புரண்டு விளங்கும் கரையில் சங்கினங்கள் சென்று சேரும். முத்துக்கள் விளங்கும் இடங்களில் செம்பவளத் துண்டுகள் இருந்தன. சந்தன மரங்கள், புலிநகக் கொன்றை வளர்ந்துள்ள இடத்தின் கீழ்ச் சேற்றிடையே குவளையும், ஆம்பலும் நெருங்கி வளர்ந்துள்ளன.

வண்டுகள் உண்ண மலர்ந்திருக்கும் பூக்கள் மிகுந்து காணப்பட்ட புன்னை மரங்களும், தாழை மரங்களும் பந்தல் போட்டது போல் திகழ வெண்மணற் பரப்பில் மணிமேகலை நின்று கொண்டு இருந்தாள் எனக் கூறப்பட்டுள்ளது.

தீவு இடங்களிலும் அருமையான மரங்கள் வளர்ந்து, இயற்கை பாதுகாக்கப் பட்டு இருந்ததை இக்காட்சியின் மூலம் உணர முடிகிறது.

**உயிர்கள் இன்புற மழை அவசியம்**

பூமிக்கு உயிர் கொடுக்கவும், அனைத்து உயிரினங்களின் அடிப்படைத் தேவையான நீரினைப் பெறவும், மழை இன்றியமையாதது காடுகள் மற்றும் புல்வெளிகள் செழித்து வளர மழைநீர் அவசியம். இது புவி வெப்பமயமாதலின் தாக்கத்தைக் குறைத்து, வெப்பநிலையைச் சீராக வைத்திருக்க உதவுகிறது. இத்தகைய மழையின் அவசியத்தை,

மணிமேகலா தெய்வம் மணிமேகலையை நினைத்து, காதலில் உழன்று கொண்டிருந்த அரச குமாரனாகிய உதயகுமாரனை அடைந்து,

“மன்னவன் மகனே! கோல்நிலை திரிந்திழன்
கோள்நிலை திரியும், கோள்நிலை திரிந்திடின்
மாரிவறம் கூரும், மாரிவறம் கூரின் மன்னுயிர் இல்லை”

(துயில் எழுப்பிய காதை 6-8)

அரசகுமரனே! மன்னனது செங்கோல் ஆட்சிமுறை திரிந்தால், கிரகங்களின் நிலைதிரியும். கிரகங்கள் நிலையிலிருந்து மாறுபட்டால் மழைஇன்றி நாட்டில் வறட்சி ஏற்படும். மழை இல்லை என்றால் மன்னுயிர்கள் வாழாது போகும் எனக் கூறுகிறது. மேலும்,

இந்திரனுக்கும், ஆபுத்திரனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலில் சினம் கொண்ட இந்திரன்,

“புரப்போன் பாத்திரம் பொருந்துஊண் சுரந்துஈங்கு
இரப்போர்க்கு காணாது ஏமாந் திருப்ப
நிரப்பின்று எய்திய நீள்நிலம் அடங்கலும்
பரப்பு நீரால் பல்வளம் சுரக்க என”

(பாத்திர மரபு கூறிய காதை 50-53)

அமுதசுரபியால் ஆபுத்திரன் அடையும் புண்ணியப் பேற்றிர்க்கு காரணம், பாண்டிய நாடு மழையின்றி பன்னிரண்டு ஆண்டு வறட்சியுற்றது. இப்பொழுது நாடு செழிப்படையுமாறு, இந்திரன் மழை மேகங்களை ஏவினான். எங்கும் மழை பெய்து செழுமை உண்டாயிற்று.

மழையின் தேவையை, அதனுடைய அவசியத்தையும், அறிந்தவர்களாக இச்செய்தி இங்கு இடம் பெற்றிருப்பது வியப்பளிக்கிறது. மழை இல்லை என்றால் மன்னுயிர் வாழாது என்ற வார்த்தை இன்றைய சூழலுக்கும் பொருந்துகிறது.

**சோழமன்னன் கண்ட இயற்கை அழகு**

திருமகளை ஒத்த சீர்த்தி என்னும் தேவியோடு சோழமன்னன் மலர்வனத்திற்குள் புகுந்தான்.

"பாசிலை செறிந்த பசுங்காற் கழையோடு
வால்வீச்சு எறிந்த மராஅம் கண்டு"

(சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய கதை 75-76)

பசுமையான இலைகளை உடைய மூங்கிலோடு பூக்கள் செறிந்த வெண்கடம்பும் சேர்ந்திருத்தலை நோக்கினான். மேலும்,

"குருந்தும் தளவும் திருந்துமலர்ச் செருந்தியும்
முருகுவிதி முல்லையும் கருவிளம் பொங்கரும்
……. ………. …………. …………… …
………. …………. ………….. …………...
வந்துவீழ் அருவியும், மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையும் சுப்பு நீர்க் கேணியும்"

(சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை 95-100)

குருந்தம், செம்முல்லை, செருந்தி, முல்லை, கருவிளம் முதலிய மலர்கள் செறிந்து விளங்கக் கண்டு மனம் மகிழ்ந்தான். தென்றல் காற்று வீசவும, அருவியென விளங்கும் மலர்ப்பந்தரும் பொய்கையும், கிணறும் ஆகிய இயற்கையை கண்டு மனம் மகிழ்ந்தான்

**வஞ்சி மாநகரின் இயற்கை அழகு**

மணிமேகலை வஞ்சிமாநகரில் அறவணஅழகயும், தம் தாய் மற்றும் சுதமதியை காணச் சென்றாள்.

"தாமரை, குவளை, கழுநீர், ஆம்பல்
பூமிசைப் பரந்து பொறிவண்டு ஆர்ப்ப"

(கச்சி மாநகர் புக்க காதை 20-21)

அகழியில் தாமரை, குவளைமலர் கழுநீர்ப் பூக்கள் ஆம்பல் பூக்கள் ஆகியன பூத்துப் பரந்து விளங்க, பொறிகளையுடைய வண்டினங்கள் ஆரவாரம் செய்தன மதில்களின் இடையே பசுமையான காவற்காடு பரந்து கிடந்தது.

**மழைக்கான காரணத்தை பெண்ணோடு இணைத்து கூறுதல்**

தவச்சீலர்கள் தொன்மைக்காலத்தில் நிகழ்ந்த சில செயல்களைக் கூறும் பொழுது,

"மடக்கொடி நீகேள் என்றே நேரிழைக்கு உரைக்கும்
தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவான்
பெய்யெனப் பெய்யும் பெருமழை, என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

(சிறைசெய் காதை 57-60)

கணவனை அன்றி வேறு கடவுளைப் பேணும் கடமையை மேற்கொண்டதால், நின் ஏவலால் மழை பெய்யாது என பூதம் கூறுகிறது.

தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம் என்ற பெருமையைப் பெற்ற மணிமேகலை காப்பியத்தில் ஒரு சதுக்கபூதம் ஒரு பெண்ணின் மனநிலையை சுட்டிக் காட்டி, அதனால் மழை வராது எனக் கூறுவது மூட நம்பிக்கையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

**தொகுப்புரை**

மணிமேகலை கோப்பியத்தில் இயற்கை சிதைவு படாத சூழலில், சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட்ட நிலையை எடுத்துரைக்கிறது. பலவகையான மரங்கள், செடி, கொடிகளின் பெயர்கள் இடம்பெற்றிருப்பது இதனுடைய சிறப்பாகும். பல இடங்களில் பந்தல் போட்டது போல மரநிழல் இருந்தது குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய சூழலில் இயற்கை சூழலைப பேணிகாப்பது நமது கடமையாகும். இயற்கையில் எழும் சீற்றங்கள் தன்னளவில் பெரிய பாதிப்பை ஏற்படத்தாது. தொழில்நுட்பத்தால் இயற்கை பெரும் சேதத்திற்கு உள்ளாக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அதிக மரங்களை நட்டு வைத்து சுற்றுச்சூழலை மீட்டெடுப்போம். சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது நம் எதிர்கால சமுதாயத்திற்கு மிகவும் அவசியமானது. பூமியின் வளங்களையும், சுற்றுச்சூழலையும் பாதுகாத்து, எதிர்கால சந்ததியினருக்கு ஒரு புதிய உலகை உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். வளங்களை மீட்டெடுத்து வருங்காலத்தை செழிப்பாக முயற்சியெடுப்போம்.

**துணை நின்ற நூல்கள்**

1. மணிமேகலை, உரையாசிரியர் வ.த.இராம சுப்பிரமணியம்,
   பூம்புகார் பதிப்பகம், சென்னை – 600108
2. இலக்கியத்தில் இயற்கை, துரை சீனிச்சாமி,
   அருசா வெளியீடு, மதுரை முதற்பதிப்பு – 1977
3. தொல்காப்பியம் இளம்பூரணர் உரை, ச.வே.சுப்பிரமணியன்,
   மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு,
   சிதம்பரம் - 605 001, பதிப்பு - 2009

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 5. மருத நில மக்களின் சுற்றுச்சூழல்

**முனைவர் க.சுஜாதா,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,

திருச்சிராப்பள்ளி-02

https:// orcid.org/0009-0008-3035-1414

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர்களின் பழமையான வாழ்க்கை முறையை விளக்கும் ஐந்திணைகளில் ஒன்றாக மருத நிலம் விளங்குகிறது. சங்க இலக்கியம் நிலத்தினை ஐந்து வகைகளாகப் பாகுப்படுத்தியுள்ளது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். ஆறுகள் பாயும் வளமான சமவெளிப் பகுதிகளே மருத நிலம் எனப்படும். இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். அவர்களின் முக்கியத் தொழில் விவசாயமாக இருந்தது.மருத நிலத்தின் மண் மிகவும் வளமானதாக இருந்ததால் நெல், கரும்பு, வாழை போன்ற பல்வேறு பயிர்கள் செழித்து வளர்ந்தன. ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்ற நீர்நிலைகள் விவசாயத்திற்குத் தேவையான நீரை வழங்கின. இதனால் மருத நிலம் எப்போதும் பசுமை நிறைந்த பகுதியாகக் காணப்பட்டது.இப்பகுதி மக்களின் வாழ்க்கை விவசாயத்தைச் சுற்றியே அமைந்திருந்தது. உழவர்கள் நிலத்தை உழுது பயிர்களை வளர்த்தனர். மாடுகள், எருமைகள் போன்ற கால்நடைகள் விவசாயப் பணிகளுக்கு உதவின. பறவைகள் மற்றும் பல்வேறு உயிரினங்களும் மருத நிலத்தின் இயற்கைச் சூழலில் வாழ்ந்தன. தமிழர்களின் பழமையான வாழ்க்கை முறையையும், இயற்கையோடு அவர்கள் கொண்டிருந்த நெருங்கிய உறவையும் சங்க இலக்கியங்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.இவற்றுள் மருத நிலம் என்பது ஆறுகளும், செழிப்பான வயல்வெளிகளும், வளமான மண்ணும் நிறைந்த சமவெளிப் பகுதியாகும். இந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையும், தொழில்களும், சுற்றுச்சூழலைப் பாதுகாத்த விதமும் தமிழர்களின் உயர்ந்த பண்பாட்டை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

**முன்னுரை:**

மருத நில மக்கள் இயற்கை வளங்களை மதித்து பயன்படுத்தினர். நீரைச் சேமித்தல், நிலத்தைப் பாதுகாத்தல் போன்ற முறைகளின் மூலம் சுற்றுச்சூழலுடன் சமநிலையுடன் வாழ்ந்தனர். அவர்களின் வாழ்க்கை இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான நெருக்கமான உறவை எடுத்துக்காட்டுகிறது.எனவே, மருத நில மக்களின் சுற்றுச்சூழல் வளமான மண், நீர்வளம், விவசாயம் மற்றும் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்ட செழிப்பான சூழலாக இருந்தது.மருத நிலப் பகுதிகளான வண்டல் பகுதிகளில் ஆற்றின் கரையோரப் வயல்வெளிகளை அமைத்தனர் பண்டைத் தமிழர்கள் வசித்த வயலும் வயல் சார்ந்த இடம் மருதநிலமாகும். இதனை வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" (நூ.எ.951) எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். மருதத் திணைக்குரிய பெரும்பொழுது கார், குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறாகும். இந்நிலத்தின் உரிப்பொருள், ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகும். ஏனெனில் தலைவன் பரத்தையை நாடிச் செல்வதை மருத நிலத்தில் காணமுடிகின்றது.

**மருத நிலமக்களின் சுற்றுச்சூழல்:**

மருத நிலமக்கள் விவசாயத்தை முக்கியத் தொழிலாக மேற்கொண்டனர். அவர்கள் உழவையே உயர்ந்த தொழிலாகக் கருதி, நிலத்தை உழுதல், விதை விதைத்தல், நீர்ப்பாசனம் செய்தல், அறுவடை செய்தல் போன்ற பணிகளில் குடும்பத்தினர் அனைவரும் பங்கேற்றனர். மாடுகள், எருமைகள் போன்ற கால்நடைகள் விவசாயத்திற்கு பயன்படுத்தினர்.

உழவர்கள் இயற்கையின் காலநிலைக்கு ஏற்ப விவசாயம் செய்தனர். மழை, ஆறு, ஏரி, குளம் ஆகியவற்றை நம்பியே அவர்களின் வாழ்க்கை அமைந்திருந்தது. இயற்கையை மதித்து வாழ்ந்ததால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டது.மருத நிலப்பகுதிகள் பெரும்பாலும் ஏரி பரந்த வயல்களையும், நீர் பரந்த நிலங்களையும் நெல் மலிந்த வீடுகளையும், நெல்விற்றுப் பொன் நிறைந்து இருக்கும் மதகுகளையும் கொண்டதாக அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. இதனைப் புறநானூற்றுப்பாடல் (பா.எ.338)

'ஏர்பரந்த வயல் நீர்பரந்த செறுவின்
நெல்மலிந்த மனைப் பொன்மலிந்த
மறுகின்'

என்ற வரிகள் மூலம் அறிய முடிகின்றது.

ஏரிகள் அல்லது ஆறுகள், குளங்கள் சார்ந்த நிலவளமும், நீர் வளமும் கொண்டது மருதத்திணை என்பதை உணர்ந்து கொள்ளமுடிகின்றது. இங்கு மக்கள் சேர்ந்து வாழும் இருப்பிடங்கள் ஊர் என்றழைக்கப்படுகின்றது. அவ்வூரின் சிறுமை பெருமை கருதிச் சிற்றூர். பேரூர் என வகைப்படுத்தியுள்ளனர் என்பதனை,

'பேர் ஊரும் சி(ற்)று ஊரும் கௌவை எடுப்பவர் போல்'(109)

என்ற கலித்தொகைப் பாடல் வரி மூலம் அறியலாம். மேலும் இம்மருத நிலத்தே வாழும் மக்கள் களமர் எனப்பட்டனர். இதனை.

அறைக் கரும்பின் அரி நெல்லின்
இனக்களமர் இசை பெருக' (பொருநர் 193-194)

என்ற பொருநராற்றுப்படை பாடல் வரிகள் மூலம் காணலாம். மருத நில மக்கள் உழவர். உழத்தியர் மற்றும் ஊரன் என்றும் அழைக்கப்பட்டதை அறிய முடிகின்றது.

நெல்வளம் நிறைந்திருக்கும் மருத நிலத்தில் உழவர்கள் சேறு நிரம்பிக் கிடக்கும் வயல்களில் நாற்று முடிகளை நடுவார்கள். இத்தகைய உழவர்கள் தங்கள் வீடுகளின் மேல் கூரைகளைப் புதிய வைக்கோல். தென்னங்கீற்று போன்ற பொருட்களால் வேய்ந்திருப்பர். இத்தகைய வீடுகளின் முற்றத்தே அவல் இடிப்பர். அதன் ஓசையைக் கேட்டு கிளிகள் அஞ்சி பறந்து ஓடும். இத்தகைய தன்மை உடையதாக மருதநிலம் உள்ளது என்பதனை.

ன்றுஉறழ் யானை மருங்குல் ஏய்க்கும்
வண் தோட்டுத் தெங்கின்வாடுமடல்
வேய்ந்த
மஞ்சள் முன்றில்' (.351-354)

என்ற பெரும்பாணாற்றுப் பாடல் வரிகள் மூலம் காய்ந்த தென்னையின் மடலால் கூரைகள் வேயப்பட்டிருந்ததைக் காணமுடிகின்றது. இத்தகைய வீடுகள் உரல் போன்ற அடியினையும் மலையைப் போன்ற தோற்றத்தினையும் உடைய யானையின் உடம்பு போன்று இருந்தன என்பதைச் சங்கப்பாடல் வரிகள் மூலம் அறிய முடிகின்றது

மருதநில மக்கள் ஆம்பல் மலரையும் செங்கழுநீர் மலர்களையும் இதழ் ஓடியாமல் பசுந்தழையுடன் சேர்த்துக்கட்டி உடை போல் அணிந்து கொண்ட செய்தியை,

'அரிமலர் ஆம்பலொடு ஆர்தழை தைஇ
விழவாடு மகளிரொடு தழூஉ அணிப்பொலிந்து' (அகம்.176)

எனும் அகநானூற்றுப் பாடல் வரிகள் காட்டுகின்றன.

மருதமரத்தின் உயர்ந்த கிளைகளிலே ஏறி ஆம்பலும் குவளையும் சேர்த்துத் தழையுடையணிந்த இயவர் வயலில் அமரும் புள்ளினங்களை ஓட்ட இசைப்பர். அதற்கேற்ப மயிலினங்கள் ஆடும் காட்சியினை.

'துறை நணி மருதம் ஏறி தெருமார்
எல்வளை மகளிர் தெள;விளி இசைப்பின்
பழனக் காவின் பசுமயில் ஆலும்'(பதிற்.27)

எனும் பதிற்றுப்பத்து பாடல் அடிகள் இயம்புகின்றன.

செந்நெல்லும், வெண்நெல்லும் நிரம்பிய வயல்களை உடைய மருத நிலத்தில் எருமை,நீர்நாய் போன்ற விலங்கினங்களும் நாரை, அன்னம், குருகு, மகன்றில், நீர்க்கோழி போன்ற பறவை இனங்களும் இருந்துள்ளன என்பதை மருதத்திணைப் பாடல்கள் சுட்டுகின்றன . மருதநில மக்கள் எருமைக்கன்றுகளைத் தங்கள் வீடுகளில் உள்ள தூண்களில் கட்டி வைத்திருந்தார்கள் என்பதை,

“தட மருப்பு எருமை மடநடைக் குழவி
தூண் தொறும் யாத்த காண்தரு நல்லில் (5.120)

என்ற நற்றிணைப் பாடல் அடிகள் சுட்டிரைக்கின்றன்றது.

பல நிறங்களை உடைய மலர்கள் நிறைந்த நீர் நிலையின்கண் ஆண் அன்னத்துடன் பெண் அன்னம் விளையாடும் காட்சியினை,

'மணிநிற மலர்ப் பொய்கை மகிழ்ந்து ஆடும்
அன்னம்தன் அணிமிகு சேவலை அகல்அடை' (கலித்.70) என்ற கலித்தொகை அடிகள் மூலம் காணமுடிகின்றது.

மருதநில மக்கள் தங்கள் வீடுகளில் கோழிகளை வளர்த்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் காட்சிப்படுத்தியுள்ளதை அறியமுடிகின்றது. கரிய தளிர்களை உடைய மரங்கள் சுட்டும் போது அவற்றின் கரிய தளிர்களைப் போன்று தொங்கும் தாடிகளைக் கொண்ட மனையுறைக் கோழிகள் இருந்ததை அகநானூற்றுப் பாடல் உணர்த்துகின்றது.

'கல் சேர்பு இருந்த சில்குடிப் பாக்கத்து
எவ்விருந்து அயர் ஏமத்து அல்கி
மனையுறை கோழி அணல் தாழ்பு அன்ன
கவையொண் தளிர கருங்கால் யாஅத்து'

(அகம்.129)

என்று பாடலடி வழி அறிய முடிகின்றது.

மருதநில மகளிர் தங்கள் வீடுகளின் முற்றத்தில் காயவைத்த நெல்லைக் கவர வரும் கோழிகளை விரட்டியதை சங்கப் பாடல்கள் காட்சிப்படுத்துகின்றன.

மருதநிலத் தொழில்கள்

மருதநில மக்கள் வேளாண்மைத் தொழிலை விருப்புடன் செய்தனர். வேளாண்மை சார்ந்த ஏர் உழுதல், நாற்று நடுதல், நீர் பாய்ச்சுதல், நெல் அறிதல். பதரையும் நெல்லையும் பிரித்தல் போன்றவை மருத நில மக்களின் முக்கியத் தொழில்களாக இருந்ததை அறியமுடிகின்றது.

வேளாண்மையின் முக்கியமான செயல் நிலத்தை நன்கு ஆழ உழுதலாகும். நிலத்தை நன்கு ஆழமாக உழுதால்தான் விதைகள் நன்கு செழித்து வளரும். உழவர் பெரிய மழைபெய்த இருள் புலர்ந்த காலைப்பொழுதில் ஏர்களால் நிலத்தைக் கீழ் மேலாகப் புழுதி புரளும்படி உழுவர். அதற்காக நன்கு நடைபயின்ற எருதுகளை வீட்டில்; வைத்திருந்தனர். விடியற்பொழுதில் உழுவதற்கு அழைத்துச்; செல்வர். அவ்வாறு உழும்பொழுது உழவர்கள் மங்களப் பாட்டுப் பாடுவர். இதனை,

'வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ
புழனப்பல் புள்இரிய"
"செங்கண் எருமை இனம்
பிரி ஒருத்தல் எருது எறிகளமர்
ஓதையொடு நல்யாழ் மருதம்
பண்ணி அசையினர் கழிமின்"(472-473)

என்னும் பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் மூலம் காண முடிகின்றது. மேலும் உழவர்கள் ஈரம் புலராத நன்செய் நிலத்தில் விதைப்பதற்குக் கூடையில் விதைகளைக் கொண்டு சென்றதை,

'அரிகால் மாறிய அங்கண் அகன்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி'(5.210)

என்ற பாடலின் ஆசிரியர் மிளைகிழான் நல்வேட்டனார் சுட்டுவதன் வழி அறியமுடிகின்றது. இது மட்டுமின்றி உழவர்கள் வயலில் நெல்லை விதைப்பதற்குக் கூலித்தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியதையும், அவர்கள் செய்த வேலைக்குக் கூலியாக நெல்லைப் பெற்றதனையும் ஓரம்போகியார் எடுத்துரைத்துள்ளார். இதனை

'வித்திய உழவர் நெல்லொடு பெயரும்'

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் அடிகள் புனைந்துரைக்கின்றன.

வயலின் உழவர்கள் நுண்ணிய சேற்றில் வீசிய நாற்றினை நடுவர். நடவு வேலையின் காரணமாக விடியற்காலையில் எழுந்து விரால்மீனுடன் அரிசிச் சோற்றை வாய்கொள்ள உண்பர். நீர் நிரம்பிய முடிகளை அவிழ்த்து நாற்று நடும் சிறப்பினை நற்றிணைப்பாடல் புலப்படுத்துகின்றன.

**களை எடுத்தல்**

களை என்பது பயிர்களின் ஊடே வளரும் தேவையில்லாத செடி கொடிகளாகும். இவற்றை அகற்றாவிட்டால் பயிர்கள் நன்றாக விளைச்சலைத் தராது. ஆகவே பயிர்செழித்து வளருகின்ற பொழுது களையும் வளரும். அக்களையைக் கையால் பறித்து நீக்குவர். பயிர்கள் நன்கு விளையும் படி பயிர்களை ஒதுக்கி களை பறிப்பர். மருத நில உழவர்கள், என்பதை சங்க இலக்கிய மருதத் திணைப் பாடல்கள் அறிவுறுத்துகின்றது.

**நெல் அரிதல்**

மருத நில உழவர்கள் நெற்பயிர்கள் நன்கு முற்றிய பிறகு, கூரிய வாயையுடைய அரிவாளால் நெல்லினை அரிவர். அறுவடை செய்த நெற்கட்டுகளைக் களங்களுக்குக் கொண்டு வருவர். நெல் அறுத்த களமர் அசையும் பக்கங்களையுடைய பெரிய நெற்கட்டுகளைக் களங்களுக்குத் தூக்கிச் செல்வர். இதனை.

'அரிஞர் யாத்த அலங்குதலைப் பெருஞ்சூடு
கள்ளார் வினைஞர் களத்தொறும் மறுகும்' (அகம்.84)

என்னும் அகநானூற்றுப் பாடல் உணர்த்துவதை காணமுடிகின்றது. இவ்வாறு களத்திற்குக் கொண்டு வந்த நெற்கட்டுகளைத் தரையில் அடித்து நெல்மணிகளை உதிரச் செய்வர். அதில் முழுவதும் உதிராத மீதம் இருக்கக்கூடிய நெல்மணிகளை உதிரச் செய்வதற்கு நான்கைந்து மாடுகளை ஒன்றாகப் பிணைத்துக் கதிர் அடித்த தாள்களின் மீது சுற்றி வரச் செய்வர்.
இதனைக் கடாவிடுதல் என்று புறநானூறு கூறுகின்றது.

'நாட் கடா வழித்த நனந்தலைக் குப்பை' (புறம்.353)

என்று காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் எடுத்துரைத்து இருப்பதை அறியமுடிகின்றது.

**நெல்லையும் பதரையும் பிரித்தல்**

களத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அடிக்கப்பட்ட நெற்கதிர்களில் இருந்து பதரையும் நெல்லையும் மருதநில உழவர்கள் பிரித்தெடுத்த செய்தியை.

'பைதற விளைந்த பெருஞ்செந்நெல்லின்
தூம்புடைத் திரடாள் துமித்த வினைஞர்' (பெரும்.230-231)

எனப் பெரும்பாணாற்றுப்படையின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுவதன் மூலம் காண முடிகிறது. இவ்வாறு பிரித்த நெல்லை உழத்தியர் களத்தில் உள்ள நெல்மணிகளை அளப்பதற்காக மரக்கால்களைச் சொருகி வைத்திருப்பர். இம்மரக்கால்களை ‘அம்பண அளவை’ என்று சு.இராசாராம் கூறுகின்றார். நாள்தோறும் நெற்கள் பெருகக்கூடிய வயல்களில் ஆம்பலையும், நெய்தலையும் நெற்கதிர்களுடன் அறுத்து குவிக்கப்பட்ட நெற்குவியல் மேல் மரக்கால்களை அளத்தற்காகக் சொருகி வைத்திருப்பார்கள் உணரமுடிகின்றது

மருத நிலத்தின் இயற்கை அமைப்பு

மருத நிலம் ஆறுகள் பாயும் சமவெளிப் பகுதியாகும். காவிரி, வைகை, தாமிரபரணி போன்ற ஆறுகள் பாசனத்திற்கு ஆதாரமாக விளங்கின. இப்பகுதியில் வளமான கரிமண் காணப்பட்டதால் நெல், கரும்பு, வாழை, தென்னை, காய்கறிகள் போன்ற பல பயிர்கள் விளைந்தன. நீர்நிலைகள்,

வயல்வெளிகள், மரங்கள், பறவைகள், கால்நடைகள் ஆகியவை இணைந்து சமநிலையான சுற்றுச்சூழலை உருவாக்கின.

மருத நிலமக்கள் உழவை உயர்ந்த தொழிலாகக் கருதினர். நிலத்தை உழுதல், விதைத்தல், நீர்ப்பாசனம் செய்தல், அறுவடை செய்தல் போன்ற பணிகளில் குடும்பத்தினரோடு; ஈடுபட்டனர். பசுக்கள், எருமைகள் போன்ற கால்நடைகள் விவசாயத்திற்கு பெரிதும் உதவின.

உழவர்கள் இயற்கையின் காலநிலைக்கு ஏற்ப விவசாயம் செய்தனர். மழை, ஆறு, ஏரி, குளம் ஆகியவற்றை நம்பியே அவர்களின் வாழ்க்கை அமைந்திருந்தது. இயற்கையை மதித்து வாழ்ந்துவந்தாலும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கத் தவறவில்லை.

நீர் வளம் மிக்கதாக மருதநிலம் அமைந்திருந்தது. ஆறுகள், குளங்கள், ஏரிகளிலிருந்து நீரைச் சேமித்து விவசாயத்திற்கு வழங்கினர். மரங்கள் அதிகம் வளர்க்கப்பட்டதால் மழை வளமும் அதிகரித்தது. பறவைகள், மீன்கள், தவளைகள், பூச்சிகள் ஆகிய உயிரினங்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க உதவின.மக்கள் இயற்கை வளங்களை வீணாக்காமல் பயன்படுத்தினர். நீரைச் சேமிக்கும் முறைகளையும், நில வளத்தைப் பாதுகாக்கும் வழிகளையும் கடைப்பிடித்தனர். இதனால் இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே நல்லிணக்கம் நிலவியது.

மருத நிலத்தில் காணப்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்குகள்

மருத மரம், நெற்பயிர், கரும்பு, வாழை, தென்னை, மா, பலா போன்ற தாவரங்கள் செழித்து வளர்ந்தன. மாடு, எருமை, குதிரை, மீன்கள், கொக்கு, நாரை, வாத்து போன்ற உயிரினங்கள் இப்பகுதியில் காணப்பட்டன. இவை அனைத்தும் மருத நிலத்தின் உயிரியல் பல்வகைமையை எடுத்துக்காட்டுகின்றன.

**மருத நில மக்களின் பண்பாடு**

மருத நில மக்கள் உழவுத் தொழிலை மட்டுமல்லாமல், விருந்தோம்பல், ஒற்றுமை, பகிர்ந்து வாழும் பண்புகளையும் கடைப்பிடித்தனர். அறுவடை விழாக்கள், கிராமத் திருவிழாக்கள், நீர்நிலைகளைப் பாதுகாக்கும் மரபுகளே சமூக ஒற்றுமையை வளர்த்தன. இயற்கைக்கு நன்றி செலுத்தும் மனப்பான்மையும் கொண்டிருந்தன.

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்." (குறள் 1033)

உழவுத் தொழில் செய்து வாழ்பவர்களே உண்மையாக வாழ்பவர்கள்; பிறர் அனைவரும் அவர்களைச் சார்ந்தே வாழ்கின்றனர்.

என்றும் மழையின் சிறப்பை

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று."

உலக உயிர்கள் அனைத்திற்கும் வாழ்வாதாரமாக மழை இருப்பதால் அது அமுதத்திற்கு ஒப்பாகக் கருதப்படுகின்றது.

“நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு."

நீர் இல்லாமல் உலகம் இயங்காது; அதுபோல மழையில்லாமல் ஒழுங்கான வாழ்க்கையும் அமையாது.

அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்ற சங்க நூல்களில் மருத நிலத்தின் வயல்வெளிகள், ஆறுகள், உழவர்கள், பசுமை நிறைந்த இயற்கை எனப் பல இடங்கள் சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளன. அவை மருத நிலமக்களின் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வையும், இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்க்கையையும் வெளிப்படுத்துகின்றன.இன்று சுற்றுச்சூழல் மாசுபாடு, நீர் பற்றாக்குறை, நில வளச் சீரழிவு போன்ற பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. சங்ககால மருத நிலமக்களின் வாழ்க்கைமுறை படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மழைநீர் சேகரித்தல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல், மரம் வளர்த்தல், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல், உயிரினங்களைப் பாதுகாத்தல் போன்றவற்றை கற்பிக்கும் வகையில் அமைந்துள்ளது.

**முடிவுரை**

மருத நில மக்களின் சுற்றுச்சூழல் என்பது வெறும் இயற்கை வளங்களை மட்டுமல்ல் மனிதன், இயற்கை, உயிரினங்கள் ஆகிய அனைத்தும் இணைந்து வாழும் வாழ்க்கை முறையாகும். நீரையும் நிலத்தையும் பாதுகாத்து, உழவுத் தொழிலை உயர்வாகக் கருதி, இயற்கையுடன் ஒன்றிணைந்து வாழ்ந்த மருத நில மக்கள் தமிழர் நாகரிகத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். இன்றைய தலைமுறையினருக்கு  சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும், இயற்கை நேசத்தையும் பின்பற்றினால், வளமான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்பதை பறைசாற்றும் விதத்தில் அமைந்திருக்கிறது. இன்று சுற்றுச்சூழல் மாசுபாடு, நீர் பற்றாக்குறை, நில வளச் சீரழிவு போன்ற பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன.  மழைநீர் சேகரித்தல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல், மரம் வளர்த்தல், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல், உயிரினங்களைப் பாதுகாத்தல் போன்ற செயல்களை சங்ககால மக்களின் வாழ்வியலில் பின்பற்ற வேண்டும்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 6. ஔவையாரின் அறிவியல் பார்வை

**முனைவர்ஆ. ஷர்மி,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி -2

அறிவியல் சிந்தனையும் புதியதோர் அணுகுமுறையும் தன்னகத்தை கொண்ட இலக்கியச் சிற்பி ஔவையார். தமிழ் மொழியின் தாய், கொங்கு நாட்டின் இலக்கியப் புதையல். இன்றைய வாழ்வியல் முறைகளை உலகிற்கு பொருந்திப் பார்க்கும் வண்ணம் வாழ்வியலோடு கூடிய அறிவியல் நோக்கு அதிகமாக இருந்திருப்பதை நாம் அவருடைய பாடல்களின் வழியாக காணமுடிகிறது. சமுதாயத்தை ஊர்ந்து கவனித்து ஆங்காங்கே பயன்படும் அறிவியல் கூறுகளை மிக தெளிவாக எடுத்துக்கூறியவர். ஔவை கூறிய அடிப்படை கருத்துகளே இன்று அறிவியல் மலராக மலர்ந்து விருட்சமாக விளங்குவதை கண்கூடாக பார்க்க முடிகிறது. தமிழரின் அறிவியல் திறத்திற்கு சான்று பகறும் வகையில் தம் கருத்திற்கு வலுவூட்டும் பொருட்டு மூதுரை பாடல்கள் அமைந்துள்ளன. உடலுக்கு நன்மை பயக்கும் நோயை நீக்கும் மூலிகை மருந்துகள் பற்றியும், பயிர் தொழில் பற்றியும், வாழ்க்கை பாதையை உயர்ந்திருக்கும் மரங்கள் மூலமும், நீர் தாவரங்கள் , பறவைகள் ,விலங்குகள் , பாம்புகள் போன்றவை மூதுரையில் பல இடங்களில் காண முடிகிறது. சங்க கால மக்கள் ஆடைகளுக்கு சாயம் துவைத்து அணிந்து மகிழ்ந்தனர் என்பதையும், உலக ஞானத்தை மூதுரையிலும் நல்வழியிலும் உணர்த்துகிறார். உலகின் நிலையாமையை, துயரத்தை ,மானிடரின் அவலத்தை இயற்கையோடு இணைந்து நயம் பட சொல்கிறார். ஔவையாரின் அறிவியல் பார்வை என்ற தலைப்பில் இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

மருத்துவம்

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு" (மூதுரை கடவுள் வாழ்த்து) இந்நூலைப் பயின்று இதில்கூறப்பட்டுள்ள வாழ்க்கை நெறிகளைப் பின்பற்றினால் நல்ல மனம,; நல்ல சொல், நல் செய்கை வளர்ந்து அதன் பயனாக நோயற்ற வாழ்வையும் குறைவில்லாத செல்வத்தையும் பெறலாம். அதற்குத் துணை செய்ய வேண்டும் என்று பவளம் போல் சிவந்த மேனியும் தும்பிக்கையும் உடைய விநாயகரின் இரண்டு திருவடிகளையும் நாள் தவறாமல் மலர்களைக் கொண்டு வழிபட வேண்டும் என்பது பொருள். இப்பாடலுக்கு மருத்துவ நோக்கில் சிறப்பாக பொருள் கூறப்படுகிறது. வெள்ளைத் தாமரைப்பூ, குப்பைமேனி, தும்பை ,கையாண் தகரை, சிறு பெரும்படை ஆகிய ஐந்து மூலிகைகளையும் சேர்த்து மருந்தாக உட்கொண்டால் இனிய குரல் வளம் உண்டாகும். மனம் தெளிவடையும் குறைபாடற்ற நல்ல கண் பார்வை கிடைக்கும். உடல் பொலிவுடன் விளங்கும.; ஆகவே மருத்துவத்தை கூறும் பாடலாகவும் இப்பாடல் விளங்குகிறது. மலை மூலிகை மருந்துகள் சிறந்தது என்பதும் உடலுக்கு நன்மை பயக்கும். நோயை நீக்கும் என்பதும் ஆன்றோர் கருத்து. உடலுக்குள் தோன்றுகின்ற நோய் உடலுக்குத் துன்பத்தை

அளிப்பதோடு அதன் அழிவிற்கும் காரணமாக அமைகிறது. ஆனால் உடலுக்கு தொடர்பில்லாத இடத்தில் உள்ள மலை மூலிகை மருந்து உடலில் உள்ள நோயை போக்குவதோடு உடலை அழிவிலிருந்து காக்கிறது என்கிறார் ஔவையார்.

"உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு". எனும் இப்பாடலில் முதல் பாடல் அடியைத் தவிர அனைத்து பாடல் அடிகளும் மருத்துவ செய்திகளைக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

தாவரவியல் செய்திகள்

வாழை

அனைத்து தரப்பு மக்களுக்கும் எளிமையாகக் கிடைக்கக் கூடியது. வாழை மரத்தில் கிடைக்க கூடிய பூ, காய் ,பழம், தண்டு ,நார், பட்டை போன்றவை மக்களால் பயன்படுத்தப்படுபவையாகும். இம்மரத்திற்கு பெரிய வேறுபாடு உண்டு. வாழை மரத்திற்கு அதனுடைய குலையே அழிவை தருகிறது. வாழை ஒரு முறை தான் காய்த்து குலை தள்ளும் குலைத்தல்லியதும் மரம் பட்டு போகும். அதற்கு மேல் வாழ முடியாத மரம் வாழை.

"மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம்"(மூதுரை-27)என்ற ஔவையின் வாக்கு இத்தாவரவியல் செய்தியை கூறுகின்றது.

"காதலி நாசமுறும் காலத்தில் கொண்ட கருஅளிக்கும் கொள்கை போல்"(நல்வழி-36) என்ற கருத்து இங்கு சுட்டத் தக்கது. நீர்நிலைகளில் வளரும் கொட்டி, ஆம்பல் ,நெய்தல் போன்ற நீர் தாவரங்களின் தண்டு குளத்தில் நீர் நிரம்பியுள்ள போது நீர்மட்டம் நிலத்திலிருந்து எவ்வளவு உயரத்து நிற்கின்றதோ அந்த அளவே வளர்ந்து நிற்கும். நீர்வற்றி உலரும் பொழுது அந்தக் குளத்திலேயே அந்த நீரத்;தாவரங்கள் காய்ந்து சருகாகி மண்ணுடன் ஒட்டி உலர்ந்துவிடும்.இதனை

"குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி உறுவார் உறவு" (மூதுi-27) என்ற ஔவையின் வாக்கு இத்தாவரவியல் செய்தியைக் கூறுகின்றது. காதலி நாசமுறும் காலத்தில் கொண்ட கரு அழிக்கும் கொள்கை போல்(நல்வழி-36) என்ற கருத்து இங்கு சுட்டத் தக்கது. ஔவையார் துன்பமுற்று வருந்தும்போது உடன் இருந்தும்.கவலையில் தாமும் பங்கேற்று, வேதனைப்படும் அன்புள்ளம் கொண்ட உறவினர்களுக்கு உவமையாக குறிப்பிடுகிறார்.

"நீரளவே ஆகுமாம் நீராம்பல";(மூதுரை-7)

என்ற மற்றொரு பாடலிலும் எடுத்து ஓதுகின்றார். வள்ளுவப் பெருந்தகையின் "வெள்ளத்தனைய மலர் நீட்டம்"(குரள்-595) என்ற குறள் இங்கு எண்ணத்தக்கது.இதைப்போலவே

ஒருவருக்கு நன்மை செய்வதால் பலன் பெற்றவர்கள் எப்பொழுதும் நன்றி கடன் ஆற்றுவார்கள் என்பதைக் கருதக்கூடாது. அறம் தக்க காலத்தில் உதவும் என்பதை ஔவை நின்று நிமிர்ந்து வளர்கின்ற தென்னை மரத்திற்கு தினம் தினம் சிறிது நீர் ஊற்றினால் வேர் மூலம் பெறுகின்ற அந்த நீரை தலையாலே தாங்கி இளநீராக வழங்கும் என்பதை கூறுகிறார். தரையில் இருந்து உறிஞ்சப்படும் நீர் மரத்தின் உச்சிவரை சென்றடையும் என்ற அறிவியல் உண்மையை உணர்ந்து

"தளரா வளர்ந்தெங்கு தானுண்ட நீரைத்

தலையாலே தான் தருதலால்"(மூதுரை-1) என்று கூறியுள்ளார் ஔவையார். தாவரங்கள் தத்தமக்கே உரிய காலங்களில் பலனை வழங்கக்கூடியவை. அதற்கு முன் பலனை பெறக் கருதி எவ்வளவுதான் முயன்றாலும் அடைய முடியாது. எனவே உருவத்தால் உயர்ந்திருக்கக் கூடிய மரங்கள் தரும் கனிகளைப் பெற தக்க காலம் வரும் வரை காத்திருக்க வேண்டும.; இதனை

"உருவத்தால் நீண்ட உயர் மரங்க ளெல்லாம்

பருவத்தால் அஞ்சி பழா" (மூதுரை- 5) என்று கூறுகிறார்.

நெற்பயரிர்

கூர்மையான அறிவினை பெற்ற ஆற்றல் வாய்ந்தவர்களாக இருப்பினும் ஒரு செயலைத் தானே செய்வேன் என நினைப்பது நன்மைத்தராது என்பதை

"பண்டு முளைப்பது அரிசியை ஆனாலும்

வண்டுமி போனால் முளைக்காதாம்"(மூதுரை-11) என்று உவமையாகக் கூறுகின்றார். நெற்பயிர் நெல்லில் இருந்து விளைகிறது நெல்லின் உள்ளே இருக்கும் அரிசியில்தான் நெல் முளைப்பதற்கான சத்துக்கள் அடங்கியுள்ளன என்றாலும் அரிசியை மூடியிருக்கும் உமியை நீக்கிவிட்டு பூமியில் விதைத்தால் முளைக்காது வித்தாகிய அரசியினை மூடிக் காத்து வரும் உமியை நீக்கிவிட்டால் விதை தன் ஆற்றலை இழந்து விடுகிறது. என்பதை கூறிப் பயிர்த் தொழில் குறித்த செய்தியினை எடுத்துக்கூறுகிறார்

இயற்பியல் கருத்துக்கள்

ஔவையாரின் பாடல்களில் இயற்பியல் செய்திகள் பல நிறைந்துள்ளன. சான்றாக

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்

நாழி முகவாது நால் நாழி" (மூதுரை-16) என்ற பாடலில் நீர் நிறைந்த பாத்திரத்தில் ஒரு லிட்டர் அளவுள்ள பாத்திரத்தை எவ்வளவுதான் ஆழமாக அழுத்தி முகந்தாலும் நான்கு நாழி அளவுள்ள தண்ணீரை எடுக்க முடியாது. பாத்திரத்தின் அளவே எடுக்க முடியும். நீரின் சுருங்காத தன்மையையும் நீரின் அழுத்தத்தை அதிகரிப்பதன் மூலம் அதிக கொள்ளளவுள்ள நீரை எடுக்க இயலாது என்பதை எடுத்துரைக்கின்றார் ஔவையார்.

வுpலங்கியல் செய்திகள்

மூதுரையில் பல இடங்களில் விலங்குகள் குறித்த செய்திகள் காணப்படுகின்றன.. குறிப்பாக பறவைகள் ,பாம்புகள் குறித்து செய்திகள் கூறப்பட்டுள்ளன

"நஞ்சுடைமை தான் அறிந்து நாகம் கரந்துறையும்

அஞ்சாப் புறங்கிடக்கும் நீர் பாம்பு"(மூதுரை-25)

தன்னிடத்தில் பிற உயிர்களைக் கொள்ளும் தன்மை உடைய நஞ்சு இருப்பதை உணர்ந்த நாகப்பாம்பு வெளியில் பலர் காணுகின்ற வகையில் சுற்றாமல் மறைந்து புதர்களிலே வாழ்கிறது. அதே சமயம் தன்னிடம் நஞ்சு இல்லாததால் நீர் பாம்பு வயல்வெளிகளிலும் நீர் நிலைகளிலும் கறைகளிலும் அஞ்சாமல் சுற்றிக்கொண்டு கிடக்கும் என்று பாம்புகளின் தன்மைகளைக் கூறுகிறார்.

பறவைகள் செய்திகள்

பறவைகள் தங்கள் பறக்கும் திறனால் பறவைகள் எனப்படுகின்றன. இவை தங்களின் வயிற்றுக்கு உணவு தரும் அலகைவிட தங்களுக்கு பறக்கும் திறன் தரும் சிறகை நேசிப்பவை. பறவைகள் பல்வேறு வகைப்பட்டவை புலவர்களின் கருத்தை பறவைகள் ஆக்கிரமிக்க பலவேறு காரணங்கள் உண்டு. அழகில்லா பறவைகள் மிகவும் அரிது மேலும் அழகில்லா பறவைகள் இரவு நேர வாழ்க்கையை கொண்டவை எனவே பார்வையாளன் கண்ணிற்கு பகல் நேர அழகுமிக்க பறவைகளே விருந்தாகின்றன. பறவைகளின் வடிவம், நிறம், செயல் போன்றவற்றை அவற்றின் அழகு அதிகரிக்கிறது.

மனிதனுடன் இணைந்து வாழ்தல்

ஔவையார் பாடல்களில் பெரும்பாலானவை பறவைகள் மனிதனுடன் இணைந்து வாழ்கின்றன. இதனால் பறவைகள் தன் வாழ்வில் மனிதனுக்கு பாடம் கற்பிக்கிறது. கூடி வாழ்தல், வாழ்க்கை துணைப்பேணல் ,மக்களை பாதுகாத்தல், அறிவுக்கூர்மை போன்றவை பறவைகளின் உயர்த்தகு பண்புகளாகும்.

காதலின் தாபம் சொல்லவும், போரின் ரகசிய ஆணையை அளிக்கவும் ரகசிய தூதுவனாய் பறவைகள் செயல்படுகின்றன. அமைதியில் சின்னமாய், விடுதலையின் மொத்த வடிவமாய் பறவைகள் உள்ளன. மனித சாதனைக்கு பறவையே அடிக்கல் என்பதை "பறவை காண்பான் விமானம் படைத்தான்"; என்று கூறுகிறார் கண்ணதாசன். மனித வாழ்க்கையும் பறவை போன்றே அமைய வேண்டும் என்பதை "அதோ அந்த பறவை போல வாழ வேண்டும்"; என்று கூறுகிறார் கவியரசு. இத்தகைய சிறப்புடைய பறவைகளை ஔவையாரின் கவனத்தில் கவர்ந்திருப்பது வியப்பேதும் இல்லை.

உலக ஞானத்தை மூதுரையிலும் நல்வழியிலும் உணர்த்துகிறார். உலகின் நிலையாமையை, துயரத்தை, மானிடர்களின் அவலத்தை இயற்கையோடு இணைந்து நயம் பட சொல்கிறார.; இதற்கு பறவைகள் பெரிதும் பயன்படுகின்றன. ஔவையார் பாடல்கள் இடம் பிடிக்கும் மயில், வான்கோழி கொக்கு, நீர்ப்பறவை ,அன்னம் ,காக்கை ,வான் குருவி ,கிளி போன்றவை சிறப்பிடம் பெருகின்றன.

மயில் வான்கோழி

"கானம் மயிலாடக் கண்டு இருந்த வான்கோழி
தானும் அது ஆகப் பாவித்து தானும் தன்
பொல்லாச் சிறகை விரிந்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி" (மூதுரை -14 )

கல்லாத ஒருவன் கற்றவர் முன் கவிக்கு பொருள் சொல்ல முனைவது விசிறி போன்ற வண்ணமற்ற தோகையைக் கொண்ட வான்கோழி ,ஆடும் மயிலைக் கண்டு தன்னையும் மயில் எனப் பாவித்து தனது பொல்லாச்சிறகை விரித்து ஆடுவது எத்துனை மடிமையோ அத்துணை மடமை கல்லாத ஒருவன் கற்றோர் முன் கவிக்குப் பொருள் கூறச் செல்வது என்கிறார்.

கொக்கு

"அடக்கம் உடையார் அறிவு இலார் என்று எண்ணிக்
கடக்கம் கருதவும் வேண்டாம் மடைத்தலையில்

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

ஓடுமீன் ஓட உறு மீன் வரும் அளவும்

வாடி இருக்கும் ஆம் கொக்கு"(மூதுரை-16)

ஒருவனின் அடக்கம் அவனது அறிவின்மை அல்லது வலிமையின்மை என உணரப்படக்கூடாது. நீர் நிலையில் ஒரு கொக்கு பசியால் வாடி நிற்கின்றது. காலடியில் பிடிபடும் தூரத்தில் சிறுமீன்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. கொக்கு காத்திருப்பது தன் பசியாற்றும் உறுமீன் வருவதை நாடியே ஆகும்.

நீர்ப்பறவை ,நீர்த்தாவரம்

"அற்ற குளத்தின்; அறுநீரப்; பறவை போல்

உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் அக்குளத்தில்

கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்- போலவே

ஒட்டி உறுவார் உறவு"(மூதுரை-17) உறவுகள் இருவகை பட்டதாக ஔவையார் கூறுகின்றார்.

ஒருவகை உறவு நீர்ப்பறவை போன்றது குளத்தை விட்டு நீர்ப்பறவைகள் விலகிச் செல்வது போல் செல்வம் தீர்ந்தவுடன் உறவுகள் விரைந்து விலகும். மற்ற வகை நீரற்றாலும் குளத்தில் மண்ணுடனேயே மக்கும் கொட்டி ,ஆம்பல் ,நெய்தல் ஆகிய நீர் தாவரங்கள் போல் செல்வம் நீங்கினும் நீங்காமல் உடன் நிற்கும்.

தாமரைக் குளம்- காகம்

"நல் தாமரை கயத்தில் நல் அன்னம் சேர்ந்தாற் போல்"

கற்றாரை கற்றாரே காமுருவர் - கற்பு இல்லா மூர்க்கறை

மூர்க்கர் முகப்பர்- முதுகாட்டில் காக்கை உகக்கும் பிணம்" (மூதுரை-24)

தூமரைக் குளத்தில் வாழ்தலை அன்னம் விரும்புதல் போல் கற்றாரைக் கற்றவர் விரும்புவர். இடுகாட்டில் உள்ள பிணத்தை காக்கை இடைவிடாது நாடுதல் போல் மூக்கரின் உறவை மூர்க்கரே நாடுவர். கற்றவரின் குணம் கல்வியின் தரத்திற்கு ஏற்ப உயர்வது போல் அன்னத்தின் பண்பு அந்த தாமரைக் குளத்தை தேடத் தூண்டுகிறது. மூக்கரின் குணம் அவன் அறிவுக்கு ஏற்ப தாழ்தல்; போல் காகத்தின் பண்பு அந்த இடுகாட்டின் பிணத்திடம் சேர்கிறது.

மண்ணியல் அறிவியல்

அந்தந்த மண்ணுக்கு ஏற்ப குறிப்பிட்ட பயிர்கள் விளையும். தமிழ் மண்ணில் தமிழக தட்பவெட்ப நிலையில் விளைவதற்கு ஏற்ற பயிர் நெற்பயர் என கண்டறிந்தார் ஔவை. மண்ணை மட்டும் அல்ல பட்டம், பருவம் ஏன்ற ஏற்ற காலத்தையும் நம்பி விவசாயம் நடைபெருகிறது. ஆறிவியலாலர் ராபி ,காரிப் என இரண்டு பருவ முறைகளைக் கூறுகின்றனர்.

" பருவத்தே பயிர் செய்(ஆ.சூடி)

"உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம்

பருவத்தால் அன்றில் பாழா"(மூதுரை)

இக்கருத்து ஔவையை ஒரு மண்ணியல் விவசாய அறிவியல் நிபுணராக நிறுத்துகிறது.

வானிலை

வளர்ந்த அறிவியல் உலகில் வானிலை அறிக்கையை மழை வரும் முன் அறிகுறிகள் என்னவென்று கருவிகள் சொல்ல வேண்டியது இல்லை. இயற்கையே சொல்லும். இதில் மின்னல் எந்த அளவிற்கு

மின்னுகிறதோ அந்த அளவிற்கு மழை பொழியும் அதிக இடியும் மின்னலும் பெருமழைத்து அறிகுறி என்னும் வானிலை கருத்தை

"மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை"(கொன்றை வேந்தன்)

"நெடுவரை மருங்கில் பாம்புபட விடிக்கும்

கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்

காலொடு வந்த கமஞ்;சூல் மாமழை"( கொன்றை வேந்தன் )இன்று வானிலையாலர் கூறும் சிந்தனைகளை கருவிகள் ஏதும் இல்லாத அக்காலத்தில் ஔவை தன் அறிவு கொண்டு கூறுகின்றார.;

மரங்கள்

கைகூடும் காலம் அறிந்து நடந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தினை விளக்கும் பாடலில் நன்கு கிளை விட்டு வானோக்கி வளர்ந்த உயரமான மரங்கள் எல்லாம் பழுக்கும் காலம் வந்தாலன்றி பழுக்காது. அதுபோல அடுத்தடுத்து முயன்றாலும் கைகூடும் காலம் வந்தாலன்றி எச்செயலும் கைகூடாது என உவமித்து கூறியுள்ளார்.

"அடுத்து முயன்றாலும் ஆகுனாள் அன்றி

எடுத்த கருமங்களாகா தொடுத்த

உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம்

பருவத்தால் அன்றி பாழா"(மூதுரை-5) கல்வியறில்லாதவனுடைய குறிப்பறிந்து நடக்கமுடியாத வனையும் சாடுகையில் மரத்தை ஒத்தவர்கள் என்று கூறுகிறார்.

"கவையாகி கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்

அவையல்ல நல்ல மரங்கள்" (மூதுரை-13)

அறிவுடையோர் தீமை செய்பவருக்கும் நன்மையே செய்வர் என்பதை அறிவுறுத்தும் வேளையில் மனிதன் மரத்தை வெட்டி வீழ்த்தும் அளவு குளுமையான நிழலைத் தந்து வெயிலை மறைக்கும் மரத்தில் செயலுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

ஆடை

அழகான வண்ணங்களைக் கொண்டு சங்க கால மக்கள் ஆடைகளுக்குச் சாயம் தோய்த்து அணிந்த மகிழ்ந்தனர் என்பதை நீலக்கச்சை பூவராடை என்ற புறநானூற்று வரிகள் மூலம் அறியலாம். நீல நிற ஆடைகள் பழங்காலத்தில் சிறப்பான நிலையில் இருந்திருக்கும் என்பதற்கு ஆதாரமாக ஔவையின் தனிப்பாடல் திரட்டு (65)சான்று பகர்கிறது. நீலச் சாயம் அவுரி என்னும் தாவரத்தின் மூலம் பெறப்பட்டது. இந்தியாவின் புகழைப் பரப்பும் முன்னோடிச் சாயமான இண்டிகோ சாய உலகில் தன்னிகரில்லா இடத்தைப் பெற்று இருந்தமைக்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. இதனை ஔவையாரின் பாடலின் மூலம் நன்கு உறுதி செய்ய முடிகிறது.

"பாரி பறித்த பறியும் பழையனூர்;க்

காரி கொடுத்த களைக்கொட்டும் சேரமான்

வாராயென அழைத்த வாய்மையும் இம்மூன்றும்

நீலச்சிற் றாடைக்கு நேர்" (தா.பா.45) என நீலச் சிற்றாடையினை வியந்து பாடியுள்ளமையை காணமுடிகிறது.

நிறைவுரை

இயற்கை பிரபஞ்சம் மனித அறிவுக்கு புரியாத புதிராகவே உள்ளன. ஔவை தன்னுடைய பேரறிவால் மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டும் உயர்ந்த கருத்துக்களை எடுத்துரைத்து அறிவுறுத்துகிறார். மனித வாழ்வை செம்மைப்படுத்தி மாண்புறச் செய்வது இலக்கியத்தின் நோக்கமாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஔவையாரின் பாடல்களில் அணுவியல், பிரபஞ்ச இயக்கவியல், உடலியல் போன்ற தற்கால அறிவியல் சிந்தனைகள் பரவிக் காணப்படுகின்றன. இப்பாடல்கள் மனிதன் பின்பற்ற வேண்டிய ஒழுகலாறுகளை அறிவியல் நோக்கோடு சுட்டிச்செல்கிறது. ஔவையாரின் பிற்கால நீதி நூல்கள் ஆத்திச்சூடி ,கொன்றை வேந்தன், மூதுரை ,நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை,பந்தனந்தாதி என்ற ஏழு நீதி நூல்களை இயற்றியுள்ளார். அற நூலாகிய மூதுரை மருத்துவம் தாவரவியல் இயற்பியல் முதலான செய்திகளை கூறும் அறிவியல் நூலாகவும் விளங்குகிறது அறக்கருத்துக்களை வலியுறுத்த அறிவியல் கருத்துக்கள் பலவற்றையும் உவமையாக கூறியிருப்பது தனித்தன்மை உடையது.12, 13-ஆம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சியை அறிந்து கொள்ள முடிகிறது மூதுரையில் அறிவியல் செய்திகள் அறிவியல் கருத்துக்களையும் இடையிடையே கூறுவது அவ்வையின் தனிச்சிறப்பாகும்.

துணைநூல் பட்டியல்

1 அற இலக்கியக்களஞ்சியம்க.ப.அறவாணன்தமிழ்க்கோட்டம் முனிரத்தினம் தெருஅய்யாவு குடியிருப்பு அமைந்தகரைசென்னை-600029

2.ஆத்திச்சூடிஔவையார் புலியூர் கேசிகன் உரைகௌரா புத்தக மையம் வெங்கட்ரங்கம் பிள்ளை தெருதிருவல்லிக்கேணிஇ சென்னை - 5.

3.கொன்றை வேந்தன்ஔவையார் புலியூர் கேசிகன் உரைகௌரா புத்தக மையம்வெங்கட்ரங்கம் பிள்ளை தெருதிருவல்லிக்கேணிஇ சென்னை - 5.

4.தனிப்பாடல் திரட்டுஔவையார் புலியூர் கேசிகன் உரைகௌரா புத்தக மையம்வெங்கட்ரங்கம் பிள்ளை தெருதிருவல்லிக்கேணிஇ சென்னை - 5.

5.திருநாவுசு;கரசு. கு. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னை பல்கலைக்கழகம்சென்னை -01

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 7.தமிழ் இலக்கியங்களில் மழை நிலம் நீர் பற்றிய பதிவுகள்

**முனைவர் கு. டாலி ஆரோக்கியமேரி,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-620002

**முன்னுரை**

உலக மக்களிடையே நாகரிகம் தோன்றி வளர்ந்த இடம் ஆற்றங்கரைகளாகும். நீர்வளம் மிக்க நிலத்தினைச் சார்ந்த மக்கள் தங்கள் குடிகளை அமைத்து வாழ்ந்தனர். நீர்வளம் பெற்ற நிலத்தில் வாழ்ந்த மக்களே தொழிலிலும், பண்பாட்டிலும் சிறந்து விளங்கினர். மக்கள் உயிர்வாழ நீர் இன்றியமையாதது. அதனால்தான் வள்ளுவர் "நீர் இன்றி அமையாது உலகு" என்றார். இளங்கோவடிகள் 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என்றார். நிலத்தொடு கூடியநீர் உணவு என்றும் அவ்வுணவினைக் கொடுப்பவர் உடம்பையும், உயிரையும் கொடுத்தவராவார். இதனை,

**"உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரே" 1 (புறம் - 18)**

என்ற புறநானூற்றுப் பாடல்வழி அறியமுடிகின்றது.

உலகிலே நீர் பெருகுவதற்கு மழை அடிப்படையானது. மழையின்றி நீர் இல்லை. பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினை வாழ்ந்துள்ளனர். இதன் அடிப்படையில்தான் சங்க இலக்கியத்தில் முதல், கருப்பொருள் இரண்டும் முக்கிய இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது. நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகியவை கலந்ததுதான் உலகம். இதனைத் தொல்காப்பியர்,

**"நிலம் நீர் தீவளி விசும் டைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்" 2 (தொல் - 1589)**

என்று கூறியுள்ளார். இத்தகைய உலகில் நிலமும், நீரும் எத்தகையப் பங்கினை வகிக்கின்றன என்பதை தழிழ் இலக்கியங்கள் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நிலம்**

தமிழர்கள் நிலத்தை நான்கு பிரிவாகப் பிரித்திருந்தனர். அவர்கள் மலையும் மலை சார்ந்த இடம் குறிஞ்சி எனவும், காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனவும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனவும் அழைத்தனர்.
இதனை தொல்காப்பியர்,

**"முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"3 (அகத்திணை – 5)**

என்று குறிப்பிடுகின்றார்.

நதிக்கரையின் அருகாமையில்தான் மனித சமுதாய வளர்ச்சியே தொடங்கியது. வயலும் வயல் சார்ந்த இடங்களிலும் மக்கள் அதிக அளவு குடியேற ஆரம்பித்தனர். மனிதனின்

அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் பற்றிய சிந்தனை தோன்றிய நாளிலிருந்து மனிதன் நிலம் நீர் வளத்தை அதிக அளவில் தேடினர். காலம் செல்லச் செல்ல மனிதனின் தேடலில் அறிவியலின் ஆதிக்கம் தன்னை மெல்ல மெல்ல இணைத்துக் கொண்டது. வறுமையின் தாக்கத்திலும் நோயின் பிடியிலும் மனிதன் சிக்கித் தவிப்பதற்கு முக்கியக் காரணம் நிலம், நீர் மாசுபடுதல் ஆகும். நீர் நில வளம், அதன் பயன்கள், பராமரிப்பு இன்மையால் விளையும் தீங்குகளையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் பதித்துச் சென்றுள்ளார்.

நிலத்திற்குப் பெருமை பாராட்ட ‘உழவு’ என்னும் அதிகாரத்தை வைக்கிறார். நிலத்தோடு நேரடித் தொடர்பு உடையது உழவுத் தொழிலாகும். ஆகவே நிலமும் உழவும் சமுதாய வளர்ச்சி என்ற நாணயத்தின் இரு பக்கங்களாகும். ஒன்று இல்லையேல் மற்றொன்று இல்லை. இதனை

**“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து”4 (குறள் - 1032)**

நிலத்தின் அருமை பெருமைகளை உணர்ந்த உழவர்களை உலகத்துக்கே அச்சாணியாக உயர்த்திச் சொல்கிறார்.

**நிலத்தைப் பண்படுத்துதல்**

நிலத்தில் அதிக மகசூல் கிடைக்க வேண்டுமென்றால் நிலத்தைப் பக்குவப் படுத்த வேண்டும். ஒரு பல அளவுள்ள தூசியானது கால் பல அளவு ஆகும்படியாக காயவிட வேண்டும். நிலத்தைப் பராமரிக்க நினைப்பவன் அதனோடு பல மணி நேரங்களைச் செலவிட வேண்டும். இல்லையெனில் போதுமான பலன் தராமல் வளம் குன்றிப் போகும் என்கிறார். இதனை,

**“செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புகுந்து**
**இல்லாளின் ஊடி விடும்”5 (குறள் - 1039)**

என்று குறிப்பிடுகின்றார்.

**நிலத்தின் சிறப்பு**

இன்பத்துக்கு நிலைக்களனாக விளங்கும் நம்நாடு தொன்று தொட்டே இயற்கைச் செல்வம் நிறைந்தது. மலைவளங்களும் செல்வ செழிப்பும் உடைய நம்நாட்டில் முடியுடை வேந்தர்கள் மூவரும், வள்ளல்களும், குறுநில மன்னர்களும், செல்வர்களும் சிறந்திருந்தனர்.

**“நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ**
**அவலாக ஒன்றோ மிசையாக ஒன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழியே நிலனே”6 (புறம் - 187)**

இவ்வாறு ஔவை மூதாட்டியார் நிலத்தை வாழ்த்துகிறார். ஒரு நிலத்தின் பெருமை அங்குள்ள இயற்கை வளங்களைச் சார்ந்தல்ல. அங்கு வாழும் மக்களின் ஒழுக்கத்தையும் அறிவையும் பொறுத்தது என்று குறிப்பிடுகின்றார்.

**“மண்திணிந்த நிலனும்**
**நிலம் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**

**வளி தலைஇய தீயும்**
**தீமுரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை"7 (புறம் - 2)**

உலகம் ஐம்பெரும் பூதத்தால் ஆனது. ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து இயங்குகிறது. இயற்கையாக உள்ள நிலங்களைத் தமிழர் தம் வாழ்க்கை முறைக்கேற்பப் பாகுபாடு செய்துள்ளனர். இதனை,

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப" 8 (தொல் - 947)**

கைக்கிளை பெருந்திணை உட்பட அகத்திணை ஏழு. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்பன அன்பின் ஐந்திணை என்பர். கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் இடையில் உள்ள நிலங்களைக் கொண்டு தமிழர்களின் சமூக வாழ்க்கைச் சிறப்பாக நடந்தமையை இலக்கியங்கள் வழி அறிகிறோம்.

**"வடவேங்கடம் தென்குமரி**
**ஆயிடைத்**
**தமிழ்கூறும் நல்லுலகம்"9 (தொல் . பாயிரம்)**

தமிழகத்தின் எல்லையாக வடக்கே வேங்கட மலையும், தெற்கே குமரிமுனையும் இடைப்பட்ட பகுதிகள் தமிழர் நிலமாக இருந்துள்ளமையை தொல்காப்பிய செய்தியின் மூலமாக அறிய முடிகின்றது.

**மண்ணுரிமை**

பண்டைத் தமிழர்கள் நிலத்தை மீட்பதற்காகவும் கைப்பற்றுவதற்காகவும் காலமெல்லாம் களத்தில் நின்று போர் புரிந்தனர். புறப்புண்ணுக்காக நாணியும், புறங்காட்டுதலை இழிவென நினைத்தும், விழுப்புண்ணைப் பெருமையாகப் போற்றியும் வாழ்ந்துள்ளனர்.

**"தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்**
**ஒண்கதிர் ஞாயிறுபோலவும்**
**மன்னிய பெரும நீ விலமிசையானே" 10 (புறம் - 4)**

பாண்டியன் பல்யாகசுவை முதுகுடுமிப் பெருவழுதியை காரிகிழார் பாடுகின்றார். நீ தலையில் சூடியுள்ள பூ பகைவர் நாட்டை எரிக்கும் புகையால் மட்டுமே வாடவேண்டும். உன் சினம் உன் மனைவியர்; ஊடும் முகத்தின் கண் காணாமல் போக வேண்டும். இப்படிப்பட்ட வெற்றியோடு தடையின்றி வழங்கும் தகைமை மிக்க 'குடுமி' என்னும் பெயர் கொண்ட அரசே. நீ குளுமையான நிலவு போலவும், ஒளிமிக்க ஞாயிறு போலவும் என்றும் இந்த நிலத்தின் மீது வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறார்.

**நிலத்தில் பயிரிடல்**

சங்ககால மக்களின் உணவு முறைகள் அவர்கள் வாழும் நிலத்தின் தன்மை, அமைப்பு, சூழல், வாழ்வு இவைகளைச் சார்ந்தே இருந்தன. அவர்கள் நிலத்திற்கு ஏற்றார் போல் உணவு முறைகளையும், உணவு பழக்க வழக்கங்களையும், தொழிலையும் அமைத்துக் கொண்டனர்.

**"மெய்திரி கயைகின் எண்வகை உணவின்**

**செய்தியும் வரையார் அப்பாலான" 11 (மரபியல் - 79)**

என தொல்காப்பியர் எண்வகை உணவினைப் பற்றிக் கூறுகிறார். மனிதன் நிலத்தை உழுது உணவை விளைவித்தான். உற்பத்தி செய்த பொருட்களை தன் தேவைக்கு போக மீதமுள்ளதை வாணிகம் செய்தனர்.

**மழை**

**"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது"12 (குறள் - 16)**

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப விண்ணின் துளிவிழாது போனால் ஓரறிவு உயிரான புல்லையும் கண்ணால் காண இயலாது. இத்தகைய சிறப்புடையது மழை என்பதை வள்ளுவர் உணர்ந்ததால் தான் கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து வான்சிறப்பு என்ற அதிகாரத்தை வைத்தார். இதனால் கடவுளுக்கு அடுத்ததாக நாம் வணங்கும் தெய்வம் மழையே.

**"நீர்இன்று அமையாது உலகைனில் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு"13 (குறள் - 20)**

மழை இல்லையென்றால் உயிரினங்கள் இல்லை. ஏர்கொண்டு உழவர்கள் உழமாட்டார்கள். கடலும் தன் வளம் குன்றிப் போகும். எனவே உயிர்களை வளர்க்கின்ற மழை நீரையும், மண்ணை வளமடையச் செய்கின்ற நிலத்தடி நீரையும் பாதுகாத்தல் இன்றைய அவசிய மற்றும் கட்டாயத் தேவையாகின்றது. ஆக்கத்திற்குப் பயன்படுவதுதான் அறிவியல். அழிவிற்குப் பயன்படுவது அறிவியல் அல்ல. இன்றைய அறிவியல் ஆக்கத்திற்குப் பயன்படுவதைவிட அழிவிற்கே அதிகமாகப் பயன்படுகிறது.

**'மழவும் குழுவும் இளமைப் பொருள்' 14 (தொல். சொல். உரி -34)**

என்ற தொல்காப்பியர் வாக்கிற்கேற்ப 'மழ' என்ற உரிச்சொல்லிற்கு 'இளமை' என்று பொருள்படும். இச்சொல்லை அடிப்படையாகக் கொண்டே 'மழை' என்ற சொல் பிறந்து, என்றும் இளமை உடையது மழை என்ற பொருளில் வழங்கியுள்ளது.

மழையினைச் சங்கப் புலவர்கள் போற்றிய விதம் மிகவும் நயமுடையதாகும். அகநானூற்றில் ஒரு பாடலில் மிகுதியான மழை பெய்ததால் தழைத்த பித்திகம் என்னும் பிச்சிமலரின், கொய்தற்கும் அரிதாகுமாறு மட்டும் இல்லாமல் விளங்கும். மழைக்கு எழுச்சி பெற்ற மனம் நிறைந்தது அரும்பினது சிவந்த பின்புறம் என்ற குறிப்பினைப் புலவர் தருகின்றார்.

**" மலிபெயல் கலித்த மாரிப் பித்திகத்துக்**
**கொயலடு நிலைஇய பெயல்ஏர் மணமுகைச்**
**செவ்வரிந் உறழும் கொழுங்கடைமழைக்கண்"15 (அகநா – 42)**

மேலும் கலித்தொகையில்,

மழைக்காலத்து இருண்ட இரவில் மின்னல் வெளிச்சத்திலே, இடிமுழக்கம் கேட்கும். அப்போது யானைகள் தம் பெண் யானைகளோடு வந்து புன்செய்ப் பயிரை உண்ணும் என்ற குறிப்பானது இடம்பெற்றுள்ளது.

**"இடியுமிழ் இரங்கிய இரவுபெயல் நடுநாள்**
**கொடிவிடுபு இருளிய மின்னுச்செய் விளக்கத்துப்**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

**பிடியொடு மேயும் புன்செய் யானை…….” 16 (கலி. குறிஞ்சி – 5)**

இவைபோன்ற எண்ணிலடங்கா வரிகள் சங்க இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன.

**மழையும் மன்னர்களும்**

ஆலந்தூர் கிழார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை வாழ்த்தும்போது,

**‘இமயத் தீண்டி யின்குரல்**
**கொண்டன் மாழை பொழிந்த**
**நுன்பஃறுளியினும் வாழிய பலவே”17 (புறம் – 34)**

என்கிறார். இமயமலையின் கண்ணே திரண்டு வரும் இனிய ஓசையை உடைய மழைத்துளியைவிடப் பலகாலம் வாழ்க என வாழ்த்துகிறார்.

சேரமான் மாவண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி, சோழன் இராசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவேந்தர்களும் ஒருசேரக் கூடி மகிழ்ச்சியோடு இருந்தபோது, அதனைக் கண்ட ஔவையார்.

**‘வயங்கித் தோன்றும் மீனினும் இம்மென**
**இயங்கும் மாமழை உறையினும்**
**உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகறும் நாளே”18 (புறம் - 367)**

வானத்தில் விளங்கும் விண்மீன்களை விடவும், மழைத்துளியை விடவும் உம் வாழ்நாட்கள் மிகுந்து விளங்குவதாக என்று வாழ்த்துகிறார்.

**மழையும் பெண்ணும்**

மன்னனால் மட்டுமல்ல. அம்மண்ணில் இருக்கும் பெண்களாலும் இவ்வுலகம் மேன்மை அடைகிறது என்கிறார் வள்ளுவர். அதாவது பெண்கள் தம் கற்புநிலை மாறாது கணவனே கண்கண்ட தெய்வமாய் ஒருத்திக்கு ஒருவன் என்ற கோட்பாட்டின்படி வாழ்ந்தால் இவ்வுலகம் உயர்வடையும் என்பதை,

**‘ தெய்வம் தொழாஅல் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை” 19 (குறள் - 55)**

எந்த தெய்வத்தையும் வணங்காமல், கணவனையே தெய்வமாகக் கருதித் தொழுது துயில் எழும் கற்புடைய பெண், மழையே பெய்க என்று ஆணையிட்டால் அவள் சொல்படி மழை பெய்யும்.

**மழை சார்ந்த வழக்காறுகள்**

கிராம மக்களின் மழை சார்ந்த வழக்காறுகளை எண்ணும்போது பெரும்பாலும் உழைப்புச் சார்ந்த வெளிப்பாடாகவே அமைந்துள்ளன.

**தவளை கத்தினால் மழை**
**அந்திஈசல் பூத்தால் அடை மழைக்கு அச்சாரம்**
**மார்கழி மழை நெய் மழை**
**தேங்கிக் கெட்டது நிலம், தேங்காமல் கெட்;டது குளம்**

பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் இயற்கை நிகழ்வாக மழை கருதப்பட்டது.

**மலையும் மழையும்**

காற்றால் அடித்துச் செல்லப்படும் மேகங்களை மலைகள் தடுக்கின்றன. இவ்வாறு தடுக்கப்படும் மேகங்கள் அம்மலைகளில் காணப்படும் தாவரங்களின் குளிர்ச்சியால் நீரின் அடர்த்தி அதிகமாகின்றன. காடுகளில் வளர்ந்திருக்கும் பெருமரங்கள் தாவரங்கள் எல்லாமே அதிகளவு மழைநீரை வேர்களின் மூலமாக உறிஞ்சுகின்றன. ஆனால் மிகக்குறைந்த அளவு தண்ணீரையே தங்கள் உணவைத் தயாரிக்கப் பயன்படுத்துகின்றன. இதனால்தான் மரங்கள் அடர்ந்திருக்கும் இடங்கள் எப்போதும் குளிர்ச்சியாக இருக்கும். ஏனென்றால் எஞ்சிய பெருமளவு நீர் இலைத்துளிகளின் வழியாக நீராவியாகி காற்று மண்டலத்தில் மீண்டும் செலுத்தப் படுகின்றது. இந்தக் கருத்தை வலியுத்தும் விதமாக நற்றிணைப் பாடலில்,

**'நலி கடல் முகந்து செறிதக இருளி**
**கனைபெயல் பொழிந்து'20 (நற்றிணை – 289)**

கடலில் நீரை முகந்து, இருண்ட மேகங்கள் பெருமழையை பொழிவதை விளக்குகின்றது.

**நீர்**

'நீரின்று அமையாது உலகு' என்னும் வள்ளுவன்' வாக்கு என்றுமே மாற்றமுடியாத, மறுக்க முடியாத உண்மையாகும். உயிர்களின் வாழ்க்கைக்கு அடிப்படையான இன்றியமையாத தேவையாக உள்ளது நீரே ஆகும். சமுதாயம் மேன்மையுற, அறச்செயல்கள் மேம்பட, உயிர்கள் வாழ, மண்ணுலகம் செழிக்க மழை தேவை. மழைநீர் காணப்படும் இடங்களே நீர்நிலைகள் ஆகும். அவை இயற்கையானவை, செயற்கையாக உருவாக்கப்பட்டவை என இரு வகைப்படும். அருவி, ஆறு, கடல், சுனை, பொய்கை முதலியன இயற்கையானவையாகவும், இலஞ்சி, கழி, கயம், கேணி, கூவல் முதலியன செயற்கெயானவை எனவும் இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**நீர்ப் பாதுகாப்பு**

**'நீரின்று அமையா உலகம' போல' (நற் - 1- 6)**

**'நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்' (புறம் - 18)**

மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாது விளங்குவது நீர். வானின்று நிலத்தில் விழும் நீரே அனைத்திற்கும் அடிப்படையாய் அமைகின்றது. இதனை உணர்ந்த பண்டைத் தமிழர் நீரைத் தம் உயிரினும் மேலான ஒன்றாகக் கருதிப் போற்றி உள்ளனர். மழைநீரை சேகரித்து அந்நீரை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் வேளாண்மையைச் செழிக்க வைக்க முடியும் என்று வாழ்ந்துள்ளனர்.

புலவர்கள் மன்னர்களை வாழ்த்திப் பாடி பரிசில் பெற விழையும்போது அவர்கள் அதிகமாகக் குறிப்பிடுவது நீரையே. நீரின் சிறப்புக்களைக் குறிப்பிட்டு மன்னர்களை வாழ்த்தும் வழக்கம் அக்காலத்தில் அதிகமாக இருந்தது.

**'தீ முரணிய நீரு மென்றாங்**
**ஐகம்பெரு பூதத் தியற்கை போலப்**
**போற்றார் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்**
**வலியுந் தெறலு மளியு முடையோர்''21 (புறம் - 2)**

பகைவர் வணங்கினால் அவர்களை மன்னித்து அருள் செய்பவன் சேரலாதன். அவனுடைய அருளுக்கு நீர் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

நாடு வளம்பெறப் பல்வேறு இயற்கை ஆதாரங்கள் தேவை. அவற்றுள் ஒன்றாக நீர் திகழ்வதைத் திருவள்ளுவர்,

**“இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற் குறுப்பு”22 (குறள் - 737)**

என்கிறார். இவண், கேணி, ஆறு, அருவி ஆகியன மூலம் கிடைக்கும் நீரைச் சுட்டுகின்றார். ‘செம்புலப்பெயல் நீர்’ என நீரின் தன்மையைக் குறுந்தொகையில் பாடியுள்ளதைப் போல வள்ளுவரும் நீரின் குணத்தைச் சொல்கிறார். தனக்கென எந்த நிறத்தையும் வடிவத்தையும் கொண்டிராத நீரானது தான் சேர்த்த பொருள்களின் நிறத்தையும் வடிவத்தையும் பெறுகிறது என்பதை ‘நிலத்தியல்பால் நீர் திரிந்தற்று’ எனக் கூறுகிறார். உணவாகவும் குடிநீராகவும் உயிர்களுக்குப் பயன்படும் நீரானது உயிர்களைத் தூய்மைப் படுத்தும் பணியையும் செய்கிறது.

**முடிவுரை**

நீர் உயர நெல் உயரும். நெல் உயர வரப்பு உயரும். வரப்பு உயர குடி உயரும் என்ற ஔவையின் அமுத மொழிகளுக்கு ஏற்ப நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாக இருப்பது நிலமும் நீரும் ஆகும். நிலங்கள் பயிர் விளையும் தன்மைக்கேற்றவாறும் பயனுக்கேற்றவாறும் பகுக்கப்பட்டிருந்தன. நிலங்கள் வளம் பெற்று நிறைவான வருவாய் வழங்கிட ஆறுகள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றை வெட்டி நீர் வளங்களைப் பெறுக்கினர். நிலத்தடி நீர் குறைந்துள்ள இன்றைய சூழலில் நீரின் தேவையினையும், நீர் பற்றாக்குறையினைப் போக்க நீர் ஆதாரங்களைப் பெருக்க வேண்டியதன் இன்றியமையாமையினையும், நீர்வளம் பெருகினால் தான் நிலங்கள் வளம் பெறும் என்பதையும் கருத்தில் கொண்டு செயல்பட்டால் உலகம் நிலைபெறும்.

**சான்றெண்விளக்கம்**

1. புறநானூறு - பா-18
2. தொல்காப்பியம் நூற்பா – 1539
3. அகத்திணையியல் பா. 5
4. திருக்குறள் - 1032
5. மேலது – 1039
6. புறநானூறு - 187
7. மேலது – 2
8. தொல் - 947
9. தொல். பாயிரம்
10. புறநானூறு – 4
11. தொல் - மரபியல் - 79
12. திருக்குறள் - 16
13. திருக்குறள் - 20
14. தொல். சொல் உரி – 34
15. அகநானூறு - 42
16. கலித்தொகை. குறிஞ்சிக்கலி

17. புறநானூறு - 34
18. மேலது – 367
19. திருக்குறள் 35
20. நற்றிணை – 289
21. புறநானூறு - 2
22. திருக்குறள் - 737

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 8.தமிழ்ப் புத்திலக்கியப் பரப்பில் பசுமைச் செல்நெறிகள்

**முனைவர் ஞா.பெஸ்கி,**
இணைப்பேராசியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2
அலைபேசி: 9487852571, மின்னஞ்சல் : beschi_ta1@mail.sjctni.edu

**ஆய்வுச்சுருக்கம்**

மனித இனம் சந்தித்து வரும் அணுஆயுதப் போர், இயற்கை வளச் சுரண்டல், மக்கள் தொகைப் பெருக்கம், தொழில்நுட்பங்களின் வளர்ச்சி, சுற்றுச்சூழல் மாசுபாடு, உயிரினங்களின் அழிவு போன்ற சூழலியல் சிக்கல்களை இலக்கியம், பண்பாடு, இயற்கைச்சூழல் ஆகியவற்றின் ஊடாகச் கண்டறியும் அணுகுமுறையாக சூழலியல் திறனாய்வு(Eco criticism) தோற்றம் கண்டது. பூமியை மையமிட்ட அணுகுமுறையை வலியுறுத்தும் இத்திறனாய்வின் விளைவால் மண்ணின் மரபை மீட்டெடுக்கும் நோக்கில் பசுமை இலக்கியங்கள் உருவெடுக்கத் தொடங்கின. 1990க்குப் பிறகு தொழில்மயமாக்கல், உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல் ஆகிய முன்னெடுப்புகளின் விளைவால் இயற்கைச்சூழல் புறக்கணிக்கப்பட்டதோடு சீர்கேட்டையும் சந்தித்தது. வளர்ச்சித்திட்டங்கள் என்று முன்வைக்கப்பட்டவற்றின் அரசியலை உணரத் தொடங்கியபிறகு சில படைப்பாளர்கள் இயற்கையைப் பற்றி எழுதத் தொடங்கினர். தமிழ்மரபில் திணைக்கோட்பாட்டின் அடிப்படையிலான வாழ்வியலை வெளிச்சமிட்டுக் காட்டும் சங்க இலக்கியங்கள், சூழல்காப்பை அறமாக வலியுறுத்தும் அறஇலக்கியங்கள் தொடங்கிக் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், புத்திலக்கியங்கள் எனப் பயணிக்கும் சூழலியல்சிந்தனைகள் இன்று பசுமை இலக்கியங்கள் என்னும் புதிய பரிணாமத்தில் முகிழ்ந்துள்ளன. இவ்வாறு உருவெடுத்துள்ள பசுமை இலக்கியங்கள் தனித்ததோர் இலக்கிய வகைமையாக, தமிழின் புத்திலக்கியப் பரப்பில் பெற்றுள்ள செல்வாக்கை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுசொற்கள்**

சூழலியல் திறனாய்வு, பசுமை இலக்கியம், தொழில்மயமாக்கல், உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், பூவுலகின் நண்பர்கள், நுகர்வுப்பண்பாடு, நெகிழி, இயற்கை வேளாண்மை

**முன்னுரை**

நுகர்வு மட்டுமே இன்றைய காலத்தில் வாழ்வியலாக மாறிவிட்ட சூழலில், இயற்கைக்கு எதிராக மனிதர்கள் தொடர்ந்து உருவாக்கும் வாழ்க்கைமுறை நிகழ்காலத்திற்கு மட்டுமன்றி எதிர்காலத்திற்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இத்தகைய நிலையில் இயற்கையைப் பேணுவதோடு எதிர்காலத் தலைமுறையின் உடல்உள நலத்தை மீட்டெடுக்கும் நோக்கில் பசுமை இலக்கியங்கள் உருவெடுக்கத் தொடங்கியுள்ளன. இஃது அறிவியலின் பன்முகப் பார்வையில் சுற்றுப்புறத்தை ஆராய்வதோடு இக்காலச் சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டிற்கான சரியான தீர்வுகளையும் முன்வைக்கிறது. இயற்கையைப் பேண விழையும் இத்தகைய சிந்தனை மரபு தொல்காப்பியம் தொடங்கி இக்கால இலக்கியம் வரை தமிழிலக்கியப் பரப்பில் காணப்படுகிறது. எனினும் சமகாலச் சமூகம், அரசியல், பண்பாடு, மனிதநேயம் முதலிய பொருண்மைகளைப் புதிய வடிவங்களில் வெளிப்படுத்தும் புத்திலக்கியப் பரப்பில் புனைவு, புனைவிலி என்னும் இரு வகைமைகளில் பசுமை இலக்கியங்கள் உருவெடுத்து வளர்ந்து வரும் திறத்தை விளக்குவதற்கு இக்கட்டுரை முற்படுகிறது.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

**பசுமை இலக்கியம்- விளக்கம்**

பசுமை இலக்கியம் என்னும் சொல்லாடலை வளர்ந்த நாடுகள் பல ஆண்டுகளாவே கையாண்டு வருகின்றன. வளர்ந்த நாடுகளில் இஃது இலக்கிய இயக்கமாகப் பதினெட்டாம் நூற்றாண்டு முதல் இருந்து வருகிறது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், சீனா போன்ற வளர்ந்தநாடுகளும் சுவீடன், சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, நெதர்லாந்து, ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளும், பசுமை இலக்கியப் பங்களிப்பில் முன்னணி வகித்துள்ளன. 1990களில் ஜெரில் கிளாட்பெல்ட்டி, ஹாரல்ட் ஃப்ரோம், லாரன்ஸ் பியூல் ஆகியோரால் பசுமை இலக்கியம் குறித்த சிந்தனைகள் முன்னெடுக்கப்பட்டன.

பசுமை இலக்கியம் என்பது சூழலியல் சிக்கல்களை எடுத்துரைக்கும் புனைகதைகள், கவிதைகள், திறனாய்வு உள்ளிட்ட இலக்கியங்களைச் சுட்டுகிறது. உலகிலே மிகப் பெருமளவில் நகரமயமாக்கலைச் சந்தித்த இங்கிலாந்தே பசுமை இலக்கியத்தின் தோற்றுவாயாக அமைந்துள்ளது. வில்லியம் வேர்ட்ஸ்வொர்த், ஜான்கிளேர், ஜான் ரஸ்கின், வில்லியம் மோரிஸ், எட்வர்ட் கார்பெண்டர் ஆகியோர் இங்கிலாந்தின் சூழலியல் சிக்கல்கள் குறித்து இலக்கியம் படைத்தனர். அவ்வாறே அமெரிக்காவின் வால்ட் விட்மன், ஹென்றி டேவிஸ் தோரே ஆகியோரும் பசுமை இலக்கியப் படைப்பாளர்களே ஆவர். ஜெர்மனியில் இயந்திரமயமாக்கல் தொடங்கியபோதும், இலத்தீன் அமெரிக்க நாடுகளில் சூழலியல் பாதிப்பு ஏற்பட்டபோதும் எழுந்த எதிர்ப்புகளும் பசுமை இலக்கியங்களைத் தோற்றுவித்தன எனில் அது மிகையில்லை.

**தமிழ்ப்பரப்பில் பசுமை நெறி**

தமிழிலக்கியச் சூழலில் தொல்காப்பியம் தொடங்கிப் புத்திலக்கியங்கள் வரை சூழலியல் கூறுகள் பரவலாகக் காணப்படுகின்றன. தொல்காப்பியர் சுட்டும் நிலப்பாகுபாடு தமிழ்மரபு முன்வைக்கும் நான்கு வகையான சூழலமைவு (Eco systems) ஆகும். “சூழல் அமைவு என்பது உயிருள்ள (Biotic) மற்றும் உயிரற்ற (Abiotic) காரணிகளின் தொகுப்பு. தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிர்கள் போன்றவை உயிருள்ள காரணிகள். பாறைகள், வெப்பம், ஈரம் போன்றவை உயிரற்ற காரணிகள்.சூழல் அமைவில் இவை ஒன்றுக்கொன்று நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்பில் உள்ளன”[1] (நக்கீரன், 2022 : 30)என்று சூழலமைவை விளக்கியுரைக்கிறார் நக்கீரன். எனினும் சூழலியல் திறனாய்வின் வெளிச்சத்தில் பசுமை இலக்கியம் என்னும் இலக்கிய வகைமை உருவெடுத்ததற்கு 1990களில் உலகை ஆட்டிப்படைத்த உலகமயமாக்கலின் விளைவுகளே காரணம் எனலாம். பெண்ணியம், தலித்தியம், புலம்பெயர்ந்தோரியம், அரவாணியியம் போன்ற இயக்கங்களின் வளர்ச்சியானது முறையே பாலினச் சமத்துவமின்மை, சாதிய மேலாண்மை, வாழிட ஏற்பளிப்பின்மை, பாலின அடையாள மறுப்பு போன்ற கருத்தியல்களுக்கு எதிராகக் களம் கண்டது போல் பசுமை இலக்கியமும் உலகமயமாக்கலின் பண்பாட்டு ஆதிக்கத்திற்கு எதிர்வினையாகவே உருவெடுத்தது. தன்னுடைய வரலாற்றைத் தானே தகவமைத்துக் கொண்டதாகப் பசுமை இலக்கியம் அமைந்துள்ளது என்றால் அது மிகையில்லை. “இன்று நாம் சந்திக்கின்ற மிகப்பெரிய சவால் சுற்றுச்சூழலைப் பேணுவதும், உலக வெப்பமயமாதலைச் தடுப்பதும்தான்”[2] (வெ.இறையன்பு ,2017 : 402) என்னும் கடமையின் வெளிப்பாடே பசுமை இலக்கியமாக இன்று அமைகிறது.

1980களின் இறுதியில் தொடங்கி, சூழலியல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் சூழலியல் நூல்களை வெளியிடுவதோடு சூழல் பாதுகாப்பிற்காக போராடி வருகின்ற பூவுலகின் நண்பர்கள் அமைப்புக்குப் பசுமை இலக்கியப் படிநிலை வளர்ச்சிகளில் மிகுதியான பங்குண்டு. உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் எதிர்காலத்தில் விளைவிக்கும் சீரழிவுகளை முன்னறிவித்ததோடு காப்புரிமை, அறிவுசார் சொத்துரிமை என்னும் கருத்தாடலையும் இவர்கள் எதிர்த்து வந்துள்ளனர். இயற்கைச்சூழல் சீர்கேட்டில் உள்ளூர் அரசியல் முதல் உலகமயமாக்கல் வரை செலுத்தும் ஆதிக்கத்தை எடுத்துரைப்பனவாக இவர்களின் நூல்கள் அமைந்துள்ளன.

“நம்மாழ்வார், பூவுலகின் மைந்தர்கள், கூடங்குளம் அணுஉலை எதிர்ப்புப் போராட்ட நண்பர்கள், நம்மாழ்வாரையொத்த இன்னொரு சுற்றுச்சூழல் அறிஞரும் களச்செயல்பாட்டாளரும் தமிழுணர்வாளருமான பாமயன் முதலியோருடன் உரையாடல் நடத்தி சூழலியல் பற்றிய மார்க்ஸியக் கண்ணோட்டத்தை வளர்த்தெடுப்பதில் இடதுசாரி அமைப்புகளும் கட்சிகளும் தவறிவிட்டன” [3] (எஸ்.வி.ராஜதுரை, 2015 :114) என்னும் கருத்து இவ்வியக்கத்தினரின் நேரிய பணிகளுக்குத் தமிழகம் அரசியல் ஏற்பு வழங்கத் தவறியதைப் புலப்படுத்துகிறது.

**பசுமை இலக்கியச் செல்நெறிகள்**

பசுமை இலக்கியத்தின் செல்நெறிகள் பின்வரும் நான்கு முறைகளில் புத்திலக்கியப் பரப்பில் அடையாளம் காணப்படுகின்றன.

அ) பசுமையிய விழிப்புணர்வு நூல்கள்

ஆ) பசுமையிய மொழிபெயர்ப்பு நூல்கள்

இ) பசுமையியக் கவிதைகள்

இ) பசுமையியப் புனைகதைகள்

**பசுமையிய விழிப்புணர்வு நூல்கள்**

தமிழில் பசுமை இலக்கியத்தின் தோற்றம் என்பது பெரும்பாலும் சூழலியல் சார்ந்த நூல்களின் எழுச்சியாகவே அமைந்தது. கி.பி. 2000க்குப் பின் சூழலியல் நூல்களை எழுதிப் பசுமை இலக்கியத்தைத் தமிழில் விதைத்த முன்னோடிகளுள் குறிப்பிடத்தக்கவர்களாகப் பின்வரும் அறிஞர்கள் காணப்படுகின்றனர்.

காட்டுயிர்கள் குறித்துத் தொடர்ந்து எழுதிவந்த மா.கிருஷ்ணன், சங்க இலக்கியச் சூழலியல் குறித்து வெவ்வேறு நிலைகளில் ஆய்ந்து எழுதிய பி.எல்.சாமி, "தி ஐ ஆஃப் தி செர்பென்ட்" என்ற திரைப்பட ஆய்வு நூலுக்குக் குடியரசுத் தலைவர் விருது பெற்றுள்ள தியோடர் பாஸ்கரன், காட்டுயிர் இதழின் ஆசிரியரான பறவைகள் குறித்த ஆய்வாளர் ச.முகமது அலி, சூழலியல் கட்டுரைகளைத் தொடர்ந்து வெவ்வேறு இதழ்களில் எழுதிவரும் கட்டுரையாளர் பாமயன், வேளாண்மையின் சிறப்பை உலகெங்கும் பரப்பி வந்த இயற்கை வேளாண் அறிவியலாளர் நம்மாழ்வார், பசுமை இலக்கியத்திற்குத் தமிழ்ப்பரப்பில் புதிய இருப்பை மீட்டெடுத்த நக்கீரன், உடல்நலன் குறித்த சிந்தனைகளைப் பறைசாற்றுகின்ற சித்தமருத்துவர் கு.சிவராமன், சூழலியல் குறித்த விழிப்புணர்வைக் காட்சியின் வாயிலாகவும் எழுத்தின் வாயிலாகவும் முன்னெடுக்கும் சண்முகானந்தம், பூவுலகு, துளிர் ஆகிய இதழ்களின்வழி சூழல்காப்பு பணியில் ஈடுபட்டு வந்துள்ள ஆதி வள்ளியப்பன், தமிழரும் தாவரமும் என்னும் நூல்வழி தமிழகத்துத் தாவரங்களின்

தனித்துவத்தை அடையாளம் காட்டிய கு.வி. கிருஷ்ணமூர்த்தி, சூழலியல் குறித்த விழிப்புணர்வுக் கட்டுரைகளைத் தொடர்ந்து வழங்கிவருகின்ற எழுத்தாளர்கள் நாராயணி சுப்ரமணியன், சுபகுணம், மா, ராமேஸ்வரன், தங்க ஜெயராமன், எம்.எ.பாட்சா, பிலோ.இருதயராஜ், ஆர்.பி.சீனிவாசன், ஜே.மங்களராஜ் ஜான்சன், ச.பாலகதிரேசன் ஆகியோரும் பசுமை இலக்கியத்தின் முன்னோடிகளாக அறியப்படுகின்றனர்.

ஆங்கிலத்தில் "இயற்கைக்காட்சியும் கவிதையும்" என்ற நூல் எழுதிச் சங்ககாலச் சூழலியலை எடுத்துரைத்த தனிநாயகம் அடிகள், சங்க இலக்கியத்தில் இயற்கையின் வெளிப்பாடு என்னும் ஆங்கில நூலை வழங்கிய மு.வரதராசனார் போன்றோர் சங்கஇலக்கியங்களில் பசுமை இலக்கியக் கூறுகளைக் கண்டறிந்த முன்னோடிகளாக அமைந்துள்ளனர்.

நுகர்வுப்பண்பாட்டின் கோரமுகத்தை வெளிச்சமிட்டுக் காட்டும் கி.வெங்கட்ராமனின் சூழலியல் அரசியல் பொருளியல், தமிழகத்தின் பதின்மூன்று பழங்குடிகளின் இனவரைவியலை எடுத்துரைக்கும் அ.பகத்சிங்கின் வாழும் மூதாதையர்கள், ஞெகிழிப் புட்டிகள் வடிவில் மண்ணுக்கும் மக்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் புட்டிநீரைக் குறித்துத் தோலுரித்துக் காட்டும் நக்கீரனின் உயிரைக் குடிக்கும் புட்டிநீர், தமிழின் சூழலியல் கூறுகளை அடையாளப்படுத்தும் நக்கீரனின் தமிழ் ஒரு சூழலியல் மொழி, தாவரங்களைப் பொருள்சார் பண்பாட்டின் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ள ஆ.சிவசுப்பிரமணியனின் தமிழரின் தாவர வழக்காறுகள், காடறிதல் பயணக்கட்டுரைகளின் தொகுப்பாக அமைகின்ற கோவை சதாசிவத்தின் மரப்பேச்சி, மண்ணில் மரவளர்ப்பின் இன்றியமையாமையை எடுத்துரைக்கும் சா.காரத்திக்கின் மண்ணின் மரங்கள், பல்லுயிர்ப் பெருக்கம் குறித்து ஆராய்கின்ற ஏ. சண்முகானநதம், சா.செயக்குமார் ஆகியோரின் தமிழகத்தின் பறவைகள் காப்பிடங்கள், புவிவெப்பமடைதலின் விளைவுகளைத் துல்லியமாக ஆராய்கின்ற ஆதிவள்ளியப்பனின் கொதிக்குதே கொதிக்குதே புவி வெப்பமடைதலும் நாமும் ஆகிய நூல்கள் பசுமையிய விழிப்புணர்வு நூல்களுள் குறிப்பிடத்தக்கவை.

வேடத்தாங்கல் பறவைகள் சரணாலயத்தைப் பறவைகளின் வாழ்வியல் பின்னணியில் விவரிக்கும் மா.கிருஷ்ணனின் பறவைகளும் வேடந்தாங்கலும், உணவுநடைமுறைகள் வாழ்வியலைச் சீரழிக்கும் செயல்பாட்டை வருணிக்கும் அருண்குமார் தங்கராஜின் உணவென்றும் நஞ்சென்றும் ஒன்று, அருண் நெடுஞ்செழியனின் மார்க்சிய சூழலியல், கடல்சார் வாழ்வியலை எடுத்துரைக்கும் வறீதையா கான்ஸ்தந்தின் கடலம்மா பேசுறங் கண்ணு, மூதாய் மரம், பறவை வாழ்வியலை கலைநயத்தோடு வருணிக்கும் பறவை பாலாவின் எஸ்கோபர் வழித்தடம், சூழலியலின் எதிர்காலம் உணர்த்தும் ஜே.பால் பாஸ்கர்பாலின் தமிழக சுற்றுச்சூழல் நேற்று இன்று நாளை, தண்ணீர் யாருக்குச் சொந்தம், பறவைகளின் வண்ணமய உலகைப் புலப்படுத்தும் வ.கோகுலாவின் காக்கைச் சிறகினிலே, கானுயிராம் யானையைக் குறித்து மூன்று தொகுதிகளாக கா.சு.வேலாயுதம் எழுதியுள்ள யானைகளின் வருகை, பரிதியின் ‘பட்டினிப் புரட்சி, நக்கீரனின் ‘நீர்எழுத்து, ஜா. செழியனின் ‘பறவைகளுக்கு ஊரடங்கு, சு. பாரதிதாசனின் ‘பாறு கழுகுகளைத் தேடி’ போன்றவை சூழலியல் குறித்த அறிமுகத்தையும் விழிப்புணர்வையும, சூழலியல் கோட்பாடுகளையும் வழங்கும் நோக்கில் உருவான நூல்களுள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன.

**பசுமையிய மொழிபெயர்ப்பு நூல்கள்**

தமிழில் பசுமை இலக்கியத்தின் வளர்ச்சியில் மொழிபெயர்ப்புக்குத் தனித்ததொரு இடம் உண்டு. இத்தகைய மொழிபெயர்ப்பு நூல் உருவாக்கத்தில் பூவுலகின் நண்பர்கள் குழு ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. ஜப்பானிய இயற்கை வேளாண் அறிஞர் மசானபு ஃபுகோகாவின் ஒற்றை வைக்கோல் புரட்சி, பூச்சிக்கொல்லிக்கு எதிரான சிந்தனை விதைத்த ரேச்சல் கார்சனின் மௌன வசந்தம், பசுமைப்புரட்சியின் போலிபுகழ்ச்சியைத் தோலுரித்த பசுமைப்புரட்சியின் வன்முறை, மரபணு மாற்றத்தின் அரசியலை விளக்கிய விதைகள் போன்ற மொழிபெயர்ப்புநூல்கள் பசுமையிய மொழிபெயர்ப்பு நூல்களுள் குறிப்பிடத்தக்கவை.

டங்கல் உடன்படிக்கைக்கு எதிரான கவால்ஜித்சிங்கின் சிந்தனைகளை வெளிப்படுத்திய தடங்கல்- டங்கல் உடன்படிக்கை, சண்ட்ரா போஸ்டலின் சிந்தனைகள் தாங்கிய மூன்றாம் உலகப்போர் தண்ணீருக்கா, மணற்கோட்டைகள் , வேங்கைப்புலிகள் குறித்த கானுறை வேங்கை போன்றவை எதிர்கால அச்சுறுத்தல்களை முன்கூட்டியே அறிவிக்கும் மொழிபெயர்ப்பு நூல்களுக்குச் சான்றுகளாகும். ராமச்சந்திரா குஹாவின் சுற்றுச்சூழலியல் உலகம் தழுவிய வரலாறு, சிந்தன் குழுவின் மனிதக் குலத்தை அச்சுறுத்தும் பிளாஸ்டிக், ஸாய் விட்டேகரின் பாம்பு மனிதன் ரோமுலஸ் விட்டேகர், பீட்டர் வோல்பென்னின் மரங்கள் பேசும் மௌனமொழி, ஜெய்தீப் ஹரிதிகரின் வாழ்வெனும் மரணம் போன்ற பல நூல்களின் வருகை பசுமையிய மொழிபெயர்ப்பு நூல்களின் நீண்ட நெடிய பயணத்தின் செல்வாக்கைப் புலப்படுத்துகின்றன.

**பசுமையியக் கவிதைகள்**

மரபுக்கவிதைகளில் வெளிப்பட்ட சூழலியல் சிந்தனைகளின் பதிவுகளை விட இக்கால கவிதைகளில் அதன் தாக்கம் பரவலாகக் கையாளப்பட்டு வருகிறது. எனினும் பசுமையியக் கவிதைகளின் தொடக்கம் எனப் பாரதியின் வசனக்கவிதைகளைச் சுட்டுவர்.

"காடு, மலை, அருவி, ஆறு,
கடல், நிலம், நீர், காற்று,
தீ, வான், ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள் - எல்லாம்
தெய்வங்கள், உலோகங்கள், மரங்கள், செடிகள்,
விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீந்துவன,
மனிதர் - இவை அமுதங்கள்" [4] ( பாரதியார் வசனகவிதை :3)

என்னும் அடிகள் சூழல்தொகுப்பை அமுதமாகக் காணும் அவரின் மனவுணர்வைப் புலப்படுத்துகிறது. எனினும் செவ்விந்தியர்களின் பசுமையைக் காக்கும் போராட்டத்தைச் சித்திரிக்கும் வகையில், திருச்சிராப்பள்ளி தூய வளனார் கல்லூரி மேனாள் முதல்வர் சூ.ஜான்பிரிட்டோ அடிகளார் படைத்த காலடி ஓசையிலே என்னும் கவிதைத்தொகுப்பு 1990களில் வெளிவந்த முதல் பசுமையியக் கவிதையாகக் கருதலாம்.

இவ்வுலகம் இனியது இதிலுள்ள வான் இனிமையுடைத்து" என்று இயற்கையைப் போற்றும் பாரதியில் தொடங்கி பழமலய், வைகைச்செல்வி, நெல்லை கண்ணன், வைரமுத்து, அன்பாதவன் போன்ற கவிஞர்கள் தம்படைப்புகளின்வழி பசுமைச்சிந்தனைகளை விதைத்துள்ளனர். பழமலயின் குரோட்டன்களோடு கொஞ்சநேரம், வைகைச் செல்வியின் நிற்பதுவே நடப்பதுவே, இன்னொரு உலகில் இன்னொரு மாலையில், பூவுலகின் நண்பர்கள் வெளியிட்ட 'இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை' போன்றவை தமிழில் பசுமைக்கவிதைகளாகப்

பளிச்சிடுகின்றன. 2017இல் வெளிவந்துள்ள இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை என்னும் முதல் சூழலியல் மொழிபெயர்ப்புக்கவிதை டாம் வெபர் எழுதிய 'All the Heroes Are Dead: The Ecology of John Steinbeck's Cannery Row' என்னும் ஆங்கிலநூலைத் தழுவி எழுதப்பெற்றது.

"மனிதர்களை மண்டியிட வைப்பது ஒன்றும் பெரிய
காரியமில்லை.
போலீசைக் கூப்பிடு.
எல்லைக்காவல் படையைக் கூப்பிடு.
ராணுவத்தை அழை.
தேசத் துரோகி என முத்திரை குத்து
பட்டினி போடு
அவன் மனைவியை மிரட்டு.
போலீஸ் நிலையத்தில் வைத்துச் சித்திரவதை செய்.
செத்துப் போய்விட்டால் புளிய மரத்தில் கட்டித்
தொங்கவிடு." [5] (பூவுலகின் நண்பர்கள், 2017:25)

என்று ஆட்சியாளர்களின் செயல்பாடுகளை இக்கவிதை நூல் அம்பலப்படுத்தி உள்ளது. "வளர்ச்சி குன்றிய நாடுகள் தங்கள் உள்நாட்டு முதலாளியத்தின் வளர்ச்சிநிலைக்கேற்ப உலக முதலாளியத்தோடு உறவு கொள்கின்னறன. இந்நாடுகளில் தேசிய முதலாளிகள்- தரகு முதலாளிகள் என்ற அரசியல் ரீதியான வேறுபாடுகள் எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. எந்தத்திசைவழியில் அரசைச் செலுத்துவது என்பது அந்தந்த நாட்டு உள்நாட்டுப் போராட்டத்தில் மேலாதிக்கம் பெற்ற பிரிவினர் அல்லது பிரிவினர்களின் கைகளில் இருக்கிறது" [6] (ஞானி,1998 ப.81) என்னும் கூற்று போராட்டங்களைக் கண்டு ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கையின் காரணத்தை உறுதிசெய்கிறது.

செல்வமணி அரங்கநாதனின் 'மாட்டுவண்டியும், மகிழுந்தும்...', அவைநாயகனின் 'காடுறை உலகம்', ம.இலெ.தங்கப்பாவின் 'உயிர்ப்பின் அதிர்வுகள்', ஆசையின் கொண்டலாத்தி போன்ற கவிதைத்தொகுப்புகள் இயற்கையைச் சித்திரிக்கும் சான்றுகளாக அமைகின்றன. செல்வமணி, அவை நாயகம், ஆசை போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய படைப்பாளர்கள் பசுமையியக் கவிதைகளைப் படைத்துவந்தாலும் இவை பயணிக்கவேண்டிய தூரம் இன்னும் அதிகம் என்றே தென்படுகிறது.

**பசுமையிய புனைகதைகள்**

பியூலா மெர்சி, "ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சியும் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளும் மனித வாழ்வில் புதிய விரைவை ஏற்படுத்தின. பெருஞ்செல்வ உடைமை, ஏழ்மை என்னும் அமைப்பு வேறுபாட்டால் தோன்றிய நடுத்தர மக்களின் இலக்கியக் குரலே புனைகதையாகும். புனைகதை என்பது சிறுகதையையும் நாவலையும் குறிக்கும்"[6] (த.பியூலா மெர்சி,1974: 38)என்று புனைகதைக்கான வரையறையைச் சுட்டுகிறார். பசுமையிய புனைகதைகள் என்னும் வகைமை தமிழில் மிகக் குறைவாகவே வெளிவந்துள்ளன.

1927இல் வெளிவந்த வேங்கடரமணியின் முருகன் ஒரு உழவன் என்னும் நூலே சூழலியலைப் பதிவுசெய்த முதல் புதினமாகக் கருதப்படுகிறது. க.ராஜநாராயணனின் கோபால்லபுரத்து மக்கள், கோபாலபுரம் ஆகிய புதினங்கள், ராஜம் கிருஷ்ணனின் கோலங்களும் கோடுகளும், சுந்தரராமசாமியின் ஒரு புளிய மரத்தின் கதை, சா.கந்தசாமியின் சாயாவனம், இறையன்புவின் ஆத்தங்கரை ஓரம், வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் போன்றவை வெவ்வேறுதளங்களில் சூழலியல் சிக்கல்களைப் பரவலாக வெளிப்படுத்தியுள்ளன.

எனினும் இந்நூற்றாண்டில் சூழலியல் சிக்கல்களை நுட்பங்களாக வெளிப்படுத்தும் புதினங்களுள் போர்னியா காடுகளின் அனுபவத்தை வெளிப்படுத்தும் நக்கீரனின் காடோடி, கனிமவளக் கொள்ளைகளைப் பதிவு செய்த இரா.முருகவேளின் மிளிர்கல், பஞ்சாலைகளின் பின்னணியில் இயற்கைச் சூழலை அடையாளப்படுத்தும் அவரின் முகிலினி, வேளாண்மைச் சிக்கல்களை எடுத்தியம்பும் சோ.தர்மனின் சூல் மற்றும் தூர்வை, விவசாய நிலங்களின் அழிப்பை எடுத்துரைத்த பாவண்ணனின் பாய்மரக்கப்பல், பணப்பயிரின் அரசியலை வெளிப்படுத்திய ஜெயமோகனின் ரப்பர் மற்றும் காடு, மழை மனிதவாழ்வில் ஏற்படுத்திய தாக்கத்தைச் சித்திரிக்கும் பூமணியின் நைவேத்தியம், மண் மீதான பாசத்தை வெளிக்காட்டும் சி,ஆர். இரவீந்திரனின் ஈரம் கசிந்த நிலம், தென்தமிழகத்தின் வேளாண்சிக்கல்களைச் சித்திரிக்கும் பெ.மகேந்திரனின் வெள்ளாமை, வேளாண்மையின் சிதைவுகளை எடுத்துரைக்கும் கு.வெ.பாலசுப்பிரமணியத்தின் வயல் போன்றவை குறிப்பிடத்தக்கவையாக அமைகின்றன.

பசுமையியச் சிறுகதைகளோ பெரும்பாலும் சிறுவர்களுக்கான சூழலியல் கதைகளாக அமைகின்றன. விஷ்ணுபுரம் சரவணனின் ‘ஒற்றைச் சிறகு ஓவியா’, எஸ். பாலபாரதியின் ‘ஆமை காட்டிய அற்புத உலகம்’, கொ.மா.கோ இளங்கோவின் ‘மந்திர கைக்குட்டை’, சரவணன் பார்த்தசாரதி எழுதிய ‘காட்டிலிருந்து வீட்டிற்கு’, ‘விஞ்ஞானி வீராசாமி எழுதிய கதைகள்’ ஆகிய தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் பசுமையியச் சிறுகதைகளுக்குச் சான்றுகளாக அமைகின்றன. எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய ‘உலகின் மிகச்சிறிய தவளை’, ஜனகப்ரியாவின் ‘வண்ணத்துப்பூச்சியும் பேசிக்கொண்டது என்ன?’ போன்ற விரல் விட்டு எண்ணக்கூடிய சில தொகுப்புகளே வெளிவந்துள்ளன. பறம்புமலையைப் போற்றும் இன்குலாப்பின் எழுதியுள்ள குறிஞ்சிப்பாட்டு தவிர நாடகப்பரப்பில் பெரிய அளவிலான பங்களிப்பு காணப்படவில்லை

**தொகுப்புரை**

சூழலியல் குறித்த புரிதல், அச்சவுணர்வின் அடிப்படையில் அமைந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து அறிவியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் சுற்றுச்சூழல் வீழ்ச்சியை எதிர்கொள்ளும் நிகழ்காலம் வரை சூழலியல் சிந்தனைகள் மனித சமூகத்தில் தொடர்ந்து நிலவியே வந்துள்ளன. இதனால் பண்பாட்டின் வளர்ச்சிநிலையில் வெளிப்பட்ட இலக்கியங்களில் வாழிடச்சூழல் குறித்த பதிவுகள் காலந்தோறும் தொடர்ந்து வெளிவந்துள்ளன. சூழலியல் திறனாய்வின் வெளிச்சத்தில் பசுமை இலக்கியங்கள் உருவெடுத்ததற்கு உலக மயமாக்கல், தனியார் மயமாக்கல் போன்றவற்றின் விளைவுகளே களம் அமைத்துக் கொடுத்துள்ளன. இவ்வாறு வெளிவந்து கொண்டிருக்கின்ற இக்காலப் பசுமை இலக்கியங்களுள் சூழல் விழிப்புணர்வை உண்டாக்கும் உரைநடை நூல்களும், புகழ்பெற்ற சூழலியல் நூல்களின் மொழிபெயர்ப்பும் எண்ணிக்கையால் மிகுதியான இடத்தைப் பெற்றுள்ளன. சூழலியல் கவிதைகளும் சூழலியல் புனைகதைகளும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலே வெளிவந்துள்ளன. எனவே சூழல்சீர்கேடுகள்

குறித்த விழிப்புணர்வும் சமூகத்தைப் பார்க்கும் நோக்குநிலையும் தமிழரிடையே மேம்பட்டால் எதிர்காலத்தில் பசுமை இலக்கியத்தின் செல்நெறியும் உயர்நிலை அடையும் என்பது உறுதி.

**துணைநூற்பட்டியல்**


1. இறையன்பு.வெ,(2017) இலக்கியத்தில் மேலாண்மை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
2. ஞானி(1998), மார்க்சியத்தின் எதிர்காலம், நிகழ் வெளியீடு, கோயமுத்தூர்
3. பூவுலகின் நண்பர்கள்(2017),இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை, சென்னை
4. பியூலா மெர்சி.த, (1974), இருபதில் சிறுகதைகள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை
5. நக்கீரன்(2022), தமிழ் ஒரு சூழலியல் மொழி, காடோடி பதிப்பகம், நன்னிலம்
6. ராஜதுரை. எஸ்.வி.(2015), எழுத்துகளை எரித்தல் கருத்துகளை ஒடுக்குதல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

# 9.பழந்தமிழர் வாழ்வியலில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நெறிமுறைகள்

**முனைவர் இரா.பபித்ரா,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி -600 002

**ஆய்வுச்சுருக்கம்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது இன்றைய உலகின் மிக முக்கியமான தேவைகளில் ஒன்றாகும். ஆனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நவீன காலத்தில் மட்டும் தோன்றியதல்ல. பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்ததுடன், இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பல்வேறு நெறிமுறைகளையும் தங்கள் வாழ்வியலில் கடைப்பிடித்தனர். சங்க இலக்கியங்கள், அறநூல்கள் மற்றும் காப்பியங்கள் ஆகியவை இதற்குச் சான்றுகளாக விளங்குகின்றன. இக்கட்டுரை பழந்தமிழர் வாழ்வியலில் காணப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சிந்தனைகளை ஆய்வு செய்கிறது.

**திறவுச்சொற்கள்**

மாயோன் – திருமால்    சேயோன் – முருகன்    ஞாயிறு -சூரியன்    மேரு- மலை

**முன்னுரை**

மனித வாழ்க்கையும் இயற்கையும் ஒன்றுக்கொன்று சார்ந்தவை. இயற்கை வளங்களைப் பாதுகாப்பது மனித இனத்தின் கடமையாகும். சங்ககாலத் தமிழர்கள் இயற்கையை வெறும் வளமாக மட்டும் கருதாமல், வாழ்க்கையின் ஓர் அங்கமாகக் கருதினர். அவர்கள் வாழ்ந்த சூழல் , தொழில் , பண்பாடு , சமயம் ஆகிய அனைத்தும் இயற்கையை மையமாகக் கொண்டிருந்தன.

**ஐந்திணை அமைப்பும் சுற்றுச்சூழல் அறிவும்**

பழந்தமிழர்களின் வாழ்க்கை இயற்கையை மையமாகக் கொண்டதாக இருந்தது. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்கள் நிலம், காலநிலை, தாவரங்கள், விலங்குகள்> தொழில்> மனித உணர்வுகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து அமைத்த இலக்கியக் கோட்பாடே ஐந்திணை அமைப்பு ஆகும். இது வெறும் இலக்கியப் பகுப்பாக மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல் அறிவையும் இயற்கை வளப் பாதுகாப்பையும் எடுத்துரைக்கும் அறிவியல் சார்ந்த வாழ்வியல் முறையாகும். இயற்கையைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப வாழ்ந்த தமிழர்களின் சூழலியல் சிந்தனையை ஐந்திணை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

தொல்காப்பியம் தமிழரின் நிலப்பரப்பை ஐந்து திணைகளாக வகைப்படுத்துகிறது.

1. குறிஞ்சி – மலை மற்றும் மலைச்சார்ந்த பகுதி
2. முல்லை – காடு மற்றும் மேய்ச்சல் நிலம்
3. மருதம் – வயல் மற்றும் ஆற்றுப்படுகை
4. நெய்தல் – கடல் மற்றும் கடற்கரை
5. பாலை – வறண்ட நிலம்

ஒவ்வொரு திணைக்கும் தனித்த இயற்கை அமைப்பு, உயிரினங்கள், தொழில்கள், தெய்வம், காலநிலை மற்றும் வாழ்க்கை முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**சுற்றுச்சூழல் அறிவின் வெளிப்பாடு**

ஐந்திணை அமைப்பு நிலத்தின் இயல்பை அறிவியல் நோக்கில் வகைப்படுத்துகிறது. மலை, காடு, வயல், கடல், வறண்ட நிலம் ஆகியவற்றின் தன்மைகளைத் தெளிவாக அடையாளம் காட்டுகிறது. ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்ற வாழ்வியல் முறையைப் பழந்தமிழர்கள் கடைப்பிடித்தனர்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்."1 – தொல்காப்பியம்

நிலத்தின் இயற்கை அமைப்பை அறிந்து அதற்கேற்ப வாழ்வியல், தொழில், உணவு, பண்பாடு ஆகியவற்றை அமைத்துக் கொண்ட அறிவே நிலவியல் அறிவு ஆகும். சங்ககால ஐந்திணை அமைப்பு இதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**உயிரினப் பன்மை பற்றிய அறிவு**

ஒவ்வொரு திணைக்கும் உரிய மரங்கள் , செடிகள் , விலங்குகள் , பறவைகள் , நீர்நிலைகள் ஆகியவை சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறிஞ்சி – குறிஞ்சி மலர் , யானை புலி
முல்லை – முல்லை மலர் , மான் மாடு
மருதம் – நெற்பயிர் , எருமை மீன்
நெய்தல் – மீன்கள் , சிப்பி கடற்பறவைகள்
பாலை – கள்ளி , பனை , ஒட்டகம் போன்ற வறட்சியைத் தாங்கும் உயிரினங்கள்

இவை உயிரினப் பன்மையைப் பாதுகாத்த தமிழர்களின் பார்வையை வெளிப்படுத்துகின்றன.

**காலநிலை அறிவு**

காற்றின் திசை , மழையின் தன்மை , பருவமாற்றம் , பருவநிலை ஆகியவற்றை அறிந்து அதற்கேற்ப விவசாயம் , மீன்பிட , கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களை மேற்கொண்டனர்.

**இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்**

காடுகளை அழிக்காமல் பயன்படுத்துதல், நீர்நிலைகளைப் பேணுதல் , விலங்குகளை தேவையின்றி வேட்டையாடாமல் இருத்தல் போன்ற நடைமுறைகள் சூழலியல் சமநிலையைப் பேணின.

**மனிதனும் இயற்கையும்**

ஐந்திணையில் மனித வாழ்க்கை இயற்கையிலிருந்து பிரிக்கப்படவில்லை. காதல் , குடும்பம் , தொழில் , உணவு , பண்பாடு அனைத்தும் இயற்கையோடு இணைந்திருந்தன. மனிதன் இயற்கையின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டான்.

**இன்றைய காலத்திற்கு ஐந்திணையின் முக்கியத்துவம்**

இன்றைய உலகில் காலநிலை மாற்றம் , நீர் பற்றாக்குறை , வன அழிப்பு, உயிரின அழிவு போன்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் ஐந்திணை அமைப்பு பின்வரும் கருத்துகளை வலியுறுத்துகிறது:

**நீர்வள மேலாண்மை**

மருதநில மக்களின் வாழ்க்கை ஆறுகள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றைச் சார்ந்திருந்தது. நீரைச் சேமித்து வேளாண்மைக்குப் பயன்படுத்திய அறிவு சங்ககால மக்களிடம் இருந்தது. மழைநீரைப் பாதுகாப்பது வாழ்க்கையின் அடிப்படையாகக் கருதப்பட்டது. நீர் வாழ்க்கையின் அடிப்படை என்பதால் ஏரிகள், குளங்கள், கிணறுகள் மற்றும் கால்வாய்கள் பராமரிக்கப்பட்டன. மழைநீர் சேமிப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்ற செய்தியானத

**"நீரின்றி அமையாது உலகு"2 –** திருக்குறள் (20)

என்ற குறள் வழி அறியு முடிகின்றது

**மரவளப் பாதுகாப்பு**

மரங்கள் தெய்வங்களின் உறைவிடமாகக் கருதப்பட்டதால் அவற்றைப் பாதுகாக்கும் பண்பாடு நிலவியது. என்பதனை ,

**"மன்ற மராஅத்த பேஎம் முதிர் கடவுள்"**

என்ற அகநானூறு பாடல் வழி அறிந்துகொள்ளலாம்

**உயிரினப் பன்மை பாதுகாப்பு**

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" திருக்குறள் (972) என்ற வள்ளுவரின் வரிகள் மனிதன் மட்டுமல்லாமல் அனைத்து உயிர்களுக்கும் வாழ்வுரிமை உண்டு என்ற சிந்தனையை உருவாக்கியது.

**இயற்கை சார்ந்த வேளாண்மை**

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" – திருக்குறள் (1033)

என்பதன் வழி வேளாண்மை இயற்கை வளங்களைச் சுரண்டாமல் , அவற்றைப் பேணும் வகையில் அமைந்திருந்தது.

**இயற்கை வழிபாடு**

மலை , ஆறு , கடல் , மரம் சூரியன் மற்றும் சந்திரன் போன்றவை தெய்வீகமாகக் கருதப்பட்டன. இதன் மூலம் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டன என்ற கருத்துக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் சிலப்பதிகாரத்தில்

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோல் பொன் கோட்டு
மேரு வலம் திரிதலான். பாடலானது இடம்பெறுகிறது

**சுற்றுச்சூழல் அறநெறிகள்**

திருக்குறளில் கொல்லாமை, அருளுடைமை, அன்புடைமை போன்ற அறங்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான அடிப்படை நெறிகளாக அமைகின்றன. அறச்செயல் எது என்று ஆராய்ந்தால் , அது எந்த உயிரையும் கொல்லாமல் இருப்பதே ஆகும். கொலை செய்வது மற்ற அனைத்துப் பாவங்களையும் தேடித் தரும். உயிரோம்புதல்: கிடைத்த உணவைப் பகுத்து உண்டு , எல்லா

உயிர்களையும் காப்பதே சிறந்த ஒழுக்கமாகும். nகால்லாமை மேன்மை: கொல்லாமை என்னும் நற்பண்பைக் கடைப்பிடிப்பவரின் வாழ்நாளை, உயிரைப் பறிக்கும் கூற்றுவன் கூட நெருங்க முடியாது. ஏன்ற கருத்துகளை

**அறவினை யாது எனில் கொல்லாமை கோறல்**

**பிற வினை எல்லாம் தரும். குறள் உணர்த்துகிறது**.

**முடிவுரை**

பழந்தமிழர் வாழ்வியல் சுற்றுச்சூழல் நட்புடையதாக இருந்தது. அவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்ததோடு, வருங்கால சந்ததியினருக்காக இயற்கை வளங்களைப் பாதுகாத்தனர். இன்றைய உலகில் காலநிலை மாற்றம் , நீர் பற்றாக்குறை, காடழிப்பு போன்ற பிரச்சினைகள் அதிகரித்து வரும் நிலையில் , பழந்தமிழர் சுற்றுச்சூழல் சிந்தனைகள் சிறந்த வழிகாட்டுதலாக அமைகின்றன.

**துணைநூற்பட்டியல்**

[1.] 1.திருக்குறள் பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம்,மண்ணடி சென்னை 600 002
[2.] 2. தொல்காப்பியம் கழக வெளியீடு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி
[3.] 3. சிலப்பதிகாரம், ந.மு.வேங்கடசாமி நாட்டார். கௌரா பதிப்பகம்
[4.] எண் 4, சிங்கப்பெருமாள் கோவில் தெரு> திருவெல்லிக்கேணி, சென்னை 600 005

# 10. சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல்

**முனைவர் இரா.சுப்ரமணி**, இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
அரசு கலைக்கல்லூரி ( தன்னாட்சி), கரூர் – 639003.
**Dr.R.Subramani**, Associate Professor, Research Department of Tamil,
Govt.Arts College ( Autonomus), Karur – 639003.
E.Mail : tamilsubbu1998@gmail.com, Orcid : https://orcid.org/0009-0002-2265-4964

**ஆய்வுச் சுருக்கம்**

உலகம் எதிர்கொள்ளும் அனைத்து பாதிப்புகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது சுற்றுச்சூழல் சீர்கேடுகளேயாகும். இதை ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கும் மேலாக அறிந்திருந்தும் போதுமான நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கிறோம். 1974 முதல் ஆண்டுதோறும் ஜூன் 5ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினமாகக் கொண்டாடப்படுகிறது. அவ்வாறு இருந்தும் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு மக்கள் மத்தியில் ஏற்படவில்லை. உலகில் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்ட ஆறு மொழிகளில் ஆசிய கண்டத்தின் தெற்கு பகுதியில் பேசப்படுகின்ற தமிழ் மொழியில், அதன் தொன்மையான இலக்கிய பரப்புகளில் காணப்படும் சூழலியல் குறித்த சிந்தனைகளையும் கிமு இரண்டாம் நூற்றாண்டில் காணப்பட்ட அன்றைய சுற்றுச்சூழலையும் இக்கட்டுரை விளக்குகிறது. இன்றைய நூற்றாண்டில் பெரும் பேசுபொருளாக இருக்கின்ற சுற்றுச்சூழல் மாசுபாடுகள் குறித்த விழிப்புணர்வுக்கு இக்கட்டுரையும் தன்னால் இயன்ற பங்களிப்பை தருகிறது. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டில் காணப்படும் சூழலியல் குறித்து புலவர்களிடையே பதிவு செய்யப்பட்ட செய்திகள் இக் கட்டுரையில் விரிவாக எடுத்துக் கூறப்படுகின்றன.

**குறிப்புச் சொற்கள் :** சூழலியல், திணைக் கோட்பாடு, பல்லுயிரின வளம்,சூழலியல் சிதைவுகள்

**Abstract**

The root cause of all the problems facing the world is environmental degradation. Despite knowing this for more than half a century, we have not taken adequate measures. World Environment Day has been celebrated on June 5 every year since 1974. Despite this, the feeling of protecting the environment has not arisen among the people. This article explains the thoughts on ecology found in the ancient literary works of Tamil, one of the six languages declared as classical languages in the world, and the environment of that time as seen in the second century BC. This article also contributes in its own way to the awareness of environmental pollution, which is a major topic of discussion in the present century. The news recorded among the poets about ecology found in the Sangam literatures such as Ettutoka and Patupat is explained in detail in this article.

**Keywords:** Ecology, Departmental ( Thinai) theory, Biodiversity,Ecological degradation.

**முன்னுரை**

தமிழின் தொன்மையான இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் அதன் உள்ளடக்கத்திலும், கட்டமைப்புகளிலும் சூழலியல் பொருண்மைகளையே கொண்டுள்ளன. இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டு சூழலியல் என்னும் சொற்பதத்தை அடிக்கடிக்

கேட்டுக்கொண்டிருக்கிறது.அறிவியல் கண்டுபிடிப்புகளும், மக்கள் தொகை பெருக்கமும் சூழலியல் துறையின் தேவையையும் விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்தத் துவங்கியுள்ளன.இந்நிலையில், செம்மொழிகளுள் ஒன்றான தமிழில் அதன் தொன்மையான இலக்கியங்களிடையே காணப்பட்ட சூழலியல் விழுமியங்கள் தமிழ் மக்களின் சூழலியல் குறித்த அறிவை நமக்கு பறைசாற்றுகின்றன.எனவே பழந்தமிழரின் சூழலியல் சார்ந்த அறிவையும் அக்காலத்தில் காணப்பட்ட சூழலியல் சிதைவுகளையும் இக்கட்டுரை விரிவாக எடுத்துரைக்கிறது.

**சூழலியல்**

சங்க இலக்கியப் பிரதிகளை நுட்பமாக வாசிக்கும் போது பண்டைத் தமிழர், இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்ததை அவதானிக்க இயலும். கடவுளையும் இயற்கையாகக் கருதிய தமிழர், இயற்கையைச் சூழல் என அறிந்திருந்தனர். இயற்கையில் இருந்து பிரித்து அறிந்திட இயலாதவாறு, சங்கப் பாடல்கள், இயற்கைப் பின்புலத்தில் தோய்ந்து எழுதப் பட்டுள்ளன. சூழலைப் போற்றுவதன்மூலம் தங்களுடைய இருப்பினை அறிந்திட முயன்றது, சங்ககாலத் தமிழரின் தனித்துவம். சுற்றுச்சூழல் பற்றிய பல்வேறு விழுமியங்கள் இயற்கையை முன்வைத்துச் சங்கப் பாடல்களில் வெளிப்பட்டுள்ளன. அவை பண்டைத் தமிழர் வாழ்க்கை பற்றிய பல்வேறு போக்குகளைப் பதிவாக்கியுள்ளன. சமூகமாகக் கூடி வாழ்கின்ற நிலையில், பன்னெடுங்காலமாக மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் தொடர்ந்து பின்பற்றிய ஒழுங்குகள் அல்லது நெறிகளை விழுமியம் என வரையறுக்கலாம். தனிமனித உறவு, குடும்பம், சமூகம், சூழல் எனப் பல்வேறு நிலைகளில் காலந்தோறும் தொடர்ந்து உருவாக்கப்படும் விழுமியங்கள், பூமியில் மனிதர்கள் இயங்கிட வேண்டிய நெறிமுறைகளை வலியுறுத்துகின்றன. குறிப்பாகச் சூழல் குறித்த விழுமியங்கள், அடிப்படையில் மனிதர்கள் இயற் கையின் அங்கம் என்ற கருத்தியலை முன்வைக்கின்றன. பண்டைத் தமிழரின் சூழல் பற்றிய விழுமியத்தை அறிந்திடச் சங்க இலக்கியப் படைப்புகளும், தொல் காப்பியமும் அடிப்படையானவை. சூழலின் பருப் பொருட்கள் அனைத்தும் ஐம்பெரும் பூதங்களால் உருவானவை என்ற கருத்தியல், சங்கத் தமிழரிடம் ஆழமாக ஊடுருவியிருந்தது. பூதவியல் என்ற சொல் உலகினை ஆராய்வதாகத் தமிழர் மரபில் இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியத்திலும், தொல்காப்பியத்திலும் உலகம் உருவான பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

**"நீரு நிலனுந்தீயும் வளியு**
**மாக விசும்போடு ஐந்தும் உடனியற்ற"1**

**" மண்டிணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்புவதைவரு வளியும்**
**தீமுரணிய நீருமென்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்தியற்கை" 2**

**" நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்" 3**

**சூழலியலின் முக்கிய கூறுகள்**

- **உயிருள்ள காரணிகள் (Biotic factors):** அனைத்து வகையான தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள்.
- **உயிரற்ற காரணிகள் (Abiotic factors):** சூரிய ஒளி, காற்று, நீர், மண், வெப்பநிலை மற்றும் காலநிலை.

### சூழலியல் நிலைகள் (Levels of Ecology)

சூழலியல் பல்வேறு படிநிலைகளில் ஆய்வு செய்யப்படுகிறது:

1. **உயிரினம் (Organism):** ஒரு தனிப்பட்ட உயிரினம் தன் சூழலில் எவ்வாறு வாழ்கிறது என்பதை அறிதல்.
2. **மக்கள்தொகை (Population):** ஒரே பகுதியில் வாழும் ஒரு குறிப்பிட்ட உயிரினத்தின் கூட்டம்.
3. **சமூக அமைப்பு (Community):** பல்வேறு வகையான உயிரினங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இணைந்து வாழும் முறை.
4. **சூழல் மண்டலம் (Ecosystem):** உயிரினங்கள் மற்றும் உயிரற்ற காரணிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படும் முறை (எ.கா: காடுகள், ஏரிகள்).
5. **உயிர்க்கோளம் (Biosphere):** பூமியில் உயிர்கள் வாழக்கூடிய பகுதிகள் அனைத்தும் அடங்கிய ஒட்டுமொத்த அமைப்பு.

**சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல்**

நவீன சமூகம் விலங்கியல், தாவரவியல், பறவையியல், உயிரியல் என பல்துறைகளின் வழியாக கற்றுக் கொள்ளும் பல தகவல்களை போகிற போக்கில் இயல்பாக பதிவு செய்கிறது சங்க இலக்கியம். வலசைபோகும் பறவைகள், இரையை அடித்து புதருக்குள் ஒளித்து வைக்கும் புலி, மரப்பட்டையை உரித்து உண்ணும் யானை என உயிர்கள் பற்றிய பல நுட்பமான செய்திகளை உவமைகளாக பதிவு செய்து விடுகிறது. சங்க இலக்கியப் பிரதிகளை நுட்பமாக வாசிக்கும் போது பண்டைத் தமிழர், இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்ததை அறிந்துகொள்ள இயலும். கடவுளையும் இயற்கையாகக் கருதிய தமிழர், இயற்கையைச் சூழல் என அறிந்திருந்தனர். இயற்கையில் இருந்து பிரித்து அறிந்திட இயலாதவாறு, சங்கப் பாடல்கள், இயற்கைப் பின்புலத்தில் தோய்ந்து எழுதப் பட்டுள்ளன. சூழலைப் போற்றுவதன்மூலம் தங்களுடைய இருப்பினை அறிந்திட முயன்றது, சங்ககாலத் தமிழரின் தனித்துவம். சுற்றுச்சூழல் பற்றிய பல்வேறு விழுமியங்கள் இயற்கையை முன்வைத்துச் சங்கப் பாடல்களில் வெளிப்பட்டுள்ளன. அவை பண்டைத் தமிழர் வாழ்க்கை பற்றிய பல்வேறு போக்குகளைப் பதிவாக்கியுள்ளன. இன்று தமிழகத்து நிலவெளியானது, கார்ப்பரேட்டுகளின் வேட்டைக்களமாகியுள்ள சூழலில், நுகர்பொருள் பண்பாட்டில் எல்லாம் சந்தைக்கானதாக மாறியுள்ளது. பகை நாட்டினர் ஒரு நாட்டின் வளமையைக் கெடுக்க பகையுணர்வு கொண்டு மருத நிலங்களையும், காடுகளையும் தீயிட்டு எரித்துள்ளனர். மக்கள் பயன்பாட்டுக்கும் போக்குவரத்துக்குப் பாதை வேண்டியும் தாவரங்கள் அழிக்கப்பட்டதை சங்க இலக்கியங்களான புறநானூறும், பட்டினப்பாலையும், பதித்துப்பற்றும் சில பாடல்களில் பறைசாற்றுகின்றன. சங்ககாலத்தில் காணப்பட்ட சூழலியல் சிதைவுகளையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

**'நிலம் தவ உருட்டிய நேமியோரும்**
**சமங் கண் கூடித்தாம் வேட்பவ்வே**
**……………………………………………………………..**
**பேர் அமர் உழந்த வெருவரு பறந்தலை**
**விழு நவி பாய்ந்த மரத்தின்**
**வாள் மிசைக் கிடந்த ஆண்மையோன் திறத்தே'4**

என தாவரங்களை அழித்தால் அடையும் தீமையை சங்கப் புலவர்கள் உணர்ந்திருந்தினர்.

**சுற்றுப்புற சூழல் தூய்மை**

பாரி பறம்பு மலையைச் சிறப்பிக்க வந்த கபிலர்,

**"குறத்தி மாட்டிய வறல்கடைக் கொள்ளி**

**ஆரம் ஆதலின் அம்புகை அயலது**

**சாரல் வேங்கை பூஞ்சினைத் தவழும்"5**

என்கிறார். சந்தன மரம் எரிக்கப்பட்டமையும், அதனால் எழுந்த புகை வேங்கை மரத்தில் படிதலையும் இப்பாடலின் மூலம் குறிக்கின்றார். அன்றாடத் தேவைகளுக்கு அரிய வகை சந்தன மரங்கள் அழிக்கப்பட்ட நிலையினைக் குறிப்பால் உணர்கிறோம்.

**நீர்**

போர் காரணமாக எதிரி நாட்டு மன்னனின் நீர் நிலைகள் பாழ்படுத்தப்படுவது போர் நடைமுறைகளில் ஒன்றாகக் கருதப்பட்டு உள்ளது.

**"ஒளிறு மருப்பின் களிறு அலர**

**காப்புடைய கயம் படியினை"6**

என்றும்,

**"கடிதுறை நீர்க் களிறு படீஇ"7**

என்றும் கூறப்படுகின்றவற்றால் எதிரிகளின் நீர்நிலைகள் யானைகள் கொண்டு மாசுபடுத்தப்பட்ட செய்தி பெறப்படுகிறது.

**இயற்கை**

சங்க கால மக்களின் வாழ்க்கையில் இயற்கை பிரிக்க முடியாத ஒன்றாக காணப்பட்டது.ஐங்குறுநூற்றில் காணப்படும் பின்வரும் பாடலானது தலைவனைப் பிரிந்த தலைவி பாடுவதாக அமைந்துள்ளது.

**"......................நம் படைப்பைத்**

**தேன் மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு**

**உவலைக் கூவற்கீழ**

**மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே"8**

சங்க கால மக்கள் இயற்கை வளமும், நீர் வளமும் நிறைந்த பகுதியாக இருந்தாலும் கலங்கிய நீரைப் பயன்படுத்தியுள்ளனர்.

**பேரிடர்**

இலக்கியத்தில் தங்களை இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் முறைகளைக் கையாண்டுள்ளதை,

**"வான்கடற் பரப்பில் தூவற்கு எஞ்சிய**

**..........................................**

**முடவுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினை"**

**(அகம்.10)**

**“தாழை மணந்து ஞாழலொடு கெழீஇ**

**படப்பை நின்ற முடந்தாள் புன்னை”9**

என்னும் பாடல் வழி அறியலாம். கடல் நிலப்பரப்புகளில் ஆழிப் பேரலைகள் போன்ற சேதங்கள் ஏற்படாமலிருக்க புன்னை,தாழை ஞாழல் மரங்களைக் கொண்டு கடல்நீரைத் தடுத்துள்ளதை இப்பாடல் விளக்குகிறது.

**நிலம்**

வெள்ளப்பெருக்கு ஏற்படம் போது, நிலச்சரிவுகளினால் மக்களுக்கு பாதிப்புகள் நிகழாத வண்ணம் மரங்கள் இருந்தமை,

**“வளிபொரு மின்னொடு வான்இருள் பரப்பி**

**விளிவு இன்று கிளையோடு மேல்மலை முற்றி**

**தளிபொழில் சாரல் ததர் மலர் தாஅய்**

**ஒளிதிகழ் உத்தி உருகெழு நாகம்**

**அகரு, வாழை,ஞெமை,ஆரம் இனைய**

**தகரமும்,ஞாழலும், தாரமும்,தாங்கி**

**நனிகடல் முன்னியது போலும்,தீம்நீர்**

**வளிவரல் வையை வரவு”10**

என்னும் பாடல் வழி அறியப்படுகிறது. வையையில் ஆறு கடல்போல் விரைந்து வந்தாலும் நிலச்சரிவுகள் ஏற்பட்ட செய்திகள் இல்லை. சங்க இலக்கியங்களில் ஆற்றுப் பெருக்கு ஏற்பட்டிருந்த காலங்களிலும் உயிர்ச்சேதம் நிகழவில்லை என்பதை அறியமுடிகிறது.

**காற்று**

நம் சூழல்களைச் சுற்றிலும் மாசுபாடு ஏற்படுகிறது. அதனால், பழந்தமிழரிடம் காற்று மாசுபாடு இருந்தமை பட்டினப்பாலையில்,

**“கார்க் கரும்பின் கமழ் ஆலைத்**

**தீத்தெறுவின் கவின்வாடி**

**நீர்ச் செறுவின் நீள் நெய்தல்**

**……………………………..**

**கோள் தெங்கின் குலைவாழைக்**

**காய்க்கமுகின் கமழ் மஞ்சள்**

**இனமாவின் இணர்ப்பெண்ணை**

**முதற்சேம்பின் இளைஇஞ்சி”11**

எனக் குறிப்பிடப்படுகிறது. இப்பாடலில், தென்னை, வாழை, பாக்கு, பனைமரங்கள் போன்றவைகள் மருதநிலத்தில் காணப்பட்டிருக்கும். இவை புகைகளையும், தூசுகளையும்

தடுக்கின்றவைகளாக இருந்துள்ளமையைக் காணமுடிகிறது. காற்று மாசுபாட்டினைத் தடுக்க மரங்கள் பயன்பட்டிருக்கிறது. மரங்கள் காற்றில் கலந்து வருகின்ற மாசுக்களை இலைகளால் தடுத்து மக்களுக்கு தூய்மையான காற்றைத் தருபவையாக இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

சங்க கால மக்கள் மரங்களையும், செடிகளையும், போற்றியுள்ளமையைக் காட்டிலும், உடன்பிறப்பாக எண்ணி வாழ்ந்துள்ளதை,

**"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**

**மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**

**நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப**

**நும்மினும் சிறந்தது, நுவ்வை ஆகுமென்று**

**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே"12**

என்னும் நற்றிணைப் பாடல் விளக்குகிறது. இவற்றில் தலைவி தான் சிறுவயதாக இருக்கும் போது புன்னைச் செடி ஒன்றினை வளர்த்து வருகிறாள். அச்செடிக்கு நெய்கலந்த பாலினை நீராக ஊற்றி வளர்க்கிறாள். அதனால் தன் தலைவனுடன் பேசி மகிழ நாணம் கொள்வதாக அமைந்துள்ளது.

**முடிவுரை**

சங்கச் சூழலியல் சார்ந்த இயற்கையான வாழ்க்கைக்கும் இன்றைய தமிழகத்தின் நிலவெளிக்கும் இடையில் பெரிய இடைவெளி உள்ளது. இயற்கைக்கும் தமிழர்களுக்குமான உறவு பெரிதும் சிதிலமாகியுள்ளது. மழைக்காடுகள், சோலைகள் அழிக்கப்பட்டது, கானகத்தில் வாழும் உயிரினங்கள் வேட்டையின்மூலம் கொல்லப்பட்டது எனச் சூழலின் பல்லுயிர்ப் பெருக்கம் நாசமாகி விட்டது. தமிழகத்தில் இன்று செயல்படுத்தப் படுகிற கூடங்குளம் அணு உலைகள், மீத்தேன் திட்டம், நியூட்ரினோ, கார்பன் ஹைட்ரோ திட்டம் போன்ற பிரமாண்டமான அறிவியல் திட்டங்கள், கார்ப்பரேட்டுகளின் ஆதாயத்திற்காக அமல்படுத்தப்படுகின்றன. இன்னொருபுறம் சூழலியலின் சீர்கேட்டினால் நீருற்றுகள் அற்றுப்போய், ஆறுகள் வறண்டு போய் விட்டன. பூச்சிக்கொல்லி நஞ்சு, வேதியியல் உரங்கள் காரணமாக வளமான மருத நிலங்கள் மலடாகிவிட்டன. பாலிதீன் பைகள், சாயக் கழிவுகள், ஆலைகளின் புகைகள், தோல் தொழிற்சாலைச் சுத்திகரிப்புக் கழிவுகள், வேதியியல் தொழிற்சாலைகளின் மாசுகள் எனத் தமிழகத்து நிலமும் காற்றும் சீரழிந்து விட்டன. இன்னொருபுறம் பெரிய நகரங்களில் அடிப்படை வசதிகள் இல்லாமல் பிதுங்கி வழியும் மக்கள் கூட்டம் என மனித வாழ்க்கையே இயற்கையிலிருந்து முழுக்க அந்நியமாகியுள்ளது. சூழலியல் சார்ந்து வாழ்ந்த சங்கத் தமிழர்களின் ஐந்திணை நிலமானது, இன்று கனவாக மாறியுள்ளது. என்றாலும் சூழல் உருவாக்கிய சக உயிரினங்களை நேசித்தல், இயற்கையுடன் இயைந்து செயல்படல், குடும்ப உறவில் காதல் போன்ற விழுமி யங்கள், இன்றளவும் தமிழர் வாழ்வில் எச்சங்களாகத் தொடர்கின்றன. அவை குறித்த புரிதலை இளந்தலைமுறையினருக்கு உருவாக்கிட வேண்டியது அவசியமாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. மதுரைக்காஞ்சி பா.453-454
2. புறநானூறு பா.எண் 12
3. தொல்.பொருள்.மரபியல் 644
4. புறநானூறு பா.270

**5.** மேலது 108

**6.** மேலது 15: 9-10

**7.** மேலது 16

**8.** ஐங்குறுநூறு பா.203

**9.** அகநானூறு பா.180

**10.** பரிபாடல் பா.12

**11.** பட்டினப்பாலை பா .9-19

**12.** நற்றிணை பா.172

**பார்வை நூல்கள்:**

1. நற்றணை – புலவர் மாணிக்கனார்(உரையாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர்.காம்பளக்ஸ், 141,உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-17.
2. பரிபாடல் – புலவர் மாணிக்கனார்(உரையாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர்.காம்பளக்ஸ், 141,உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-17
3. அகநானூறு – புலவர் மாணிக்கனார்(உரையாசிரியர்) வர்த்தமானன் பதிப்பகம் ஏ.ஆர்.ஆர்.காம்பளக்ஸ் 141,உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-17
4. ஐங்குறுநூறு – புலவர் மாணிக்கனார்(உரையாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர்.காம்பளக்ஸ், 141,உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-17
5. புறநானூறு – புலவர் மாணிக்கனார்(உரையாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர்.காம்பளக்ஸ், 141,உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-17
6. தொல்காப்பியம் – முனைவர் ச.திருஞானசம்பந்தம்,கதிர் பதிப்பகம்,தெற்கு வீதி, திருவையாறு – 613204

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 11.நெடுநெல்வாடையில் சுற்றுச்சூழல்

**முனைவர் பா. அப்துல்லா,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 20.
அலைபேசி: 9791700758.email : mdabdulla04@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

பண்டையத் தமிழர்கள் சுற்றுச்சூழல் அறிவுடன் திகழ்ந்துள்ளனர் என்பதற்கு எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான நெடுநல்வாடை என்னும் நூலை உதாரணமாகச் சுட்டலாம். நெடுநல்வாடை வாடைக்காலத்தின் இயல்பினைப் பற்றிக் கூறுகின்றபொழுது வாடை மிகுதியால் ஆடுமாடுகளின் இருப்பையும் தாவரங்கள், மழைப்பொழிவு, அரண்மனை, அரண்மனை கட்டில், வேளாண்மை, ஆயர்கள், பறவைகள், மக்கள், விலங்குகள், தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி போன்றவற்றையும் எடுத்துரைக்கும் பொழுது அங்குள்ள சூழல்களையும் நக்கீரர் எடுத்தியம்புகிறார். சூழலினைப் பதிவு செய்வதிலிருந்து பண்டைய தமிழர்களுக்கிருந்த சுற்றுச்சூழல் அறிவு புலப்படுவதைக் காணமுடிகிறது.

**கலைச் சொற்கள்:**

நெடுநல்வாடை, சுற்றுச்சூழல், நக்கீரர், சூழலியல், வாடைக்காற்று.

**முன்னுரை:**

நெடுநெல்வாடை என்பது சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள நூல்களில் ஒன்றாகும். அதனை இயற்றியவர், நக்கீரர் ஆவர், குளிர்காலம் பற்றியும், இயற்கையின் அமைப்பு பற்றியும் மனித வாழ்வு மற்றும் சுற்று சுழல் பற்றியும் மிகவும் ஆழமாக எடுத்துரைக்கின்றது.

நெடுநல்வாடை, நெடு+நல்+வாடை எனப் பிரிந்து பலபொருள் தருகிறது. தலைவன் தலைவியைப் பிரிந்து போரின் மேற்சென்று பாறையில் தங்கிக் கடைமையைக் கண்ணாகச் செய்துகொண்டிருக்கிறான். தலைவி தலைவனைப் பிரிந்திருப்பதால் வாடைக் காலத்தில் துன்பத்துடன் இருக்கிறாள். இந்த துன்பம் தரும் வாடையாகவும் அமைந்து இருப்பதால் இதற்கு நெடுநல்வாடை எனப்பெயர் பெற்றுத் திகழ்கின்றன.

நெடுநல்வாடையின் ஆசிரியர் நக்கீரர் இயற்கை அனுபவத்தைப் பாடிய திறத்தினை நெடுநல்வாடை என்னும் இந்நூல் விரிவாக எடுத்துரைக்கின்றது.

**இயற்கைச் சூழல்**

மிகுதியான குளிரால் காளைகளையும் பசுக்களையும் மேய்க்கும் கோவலர்கள் மிகுந்த துன்பம் அடையும் நிகழ்வினைக் கூறுகின்றது, தாழ்மையான நிலங்களில் மழைநீர் தேங்கும்போது கோவலர்கள் மேட்டு நிலங்களுக்குக் தங்களின் காளைகளையும். பசுக்களையும் கொண்டு சென்று மேயவிட்டு அவர்கள் அங்கு நெருப்பு மூட்டிக் குளிர் காய்ந்துள்ளனர், என்ற செய்திகள் இந்நூல் இடம் பெற்றுள்ளன.

கார்காலம் நிலைப்பெற்று குளிர் காலம் அதிகமானால் என்னவெல்லாம் அங்கு நிகழும் என்பதை நெடுநல்வாடை என்ற இந்நூலில் இயற்கை ஓவியமாகத் தமக்கு எழுத்துக்காட்டுகின்றது.

மாமேயல், மறப்ப மந்தி கூரப்

பறவை படிவன வீழக் கறவை

கன்றுகோ ளொழியக் கூடிய வீசிக்

குன்று குளிர்பன்ன கூதிர்ப் பானாள். 1

(9-12)

என்னும் அடிகள்(நெடுநல்வாடை மூலமும் உரையும், டாக்டர் கதிர் முருகு ப. 42)தெளிவான சுற்றுச்சூழல் கருத்தினை நமக்குத் தருகின்றன, மழைபெய்ததனால் புதர்கள் எல்லாம் வெண்ணிறமான முசுண்டைப் பூக்களும் மஞ்சள் நிறமான பீக்கம் பூக்களும் ஊர்ந்து அழகு செய்யும் நிகழ்வினையும், கொக்கு போன்ற பறவை இனம் நீரில் எதிர்த்து வரும் கயல் மீன்களை உண்டு மகிழ்ந்தன என்ற கார்கால நிகழ்வினை ஆசிரியர் நக்கீனார் எடுத்துரைக்கின்றார். இதன் மூலம் நெடுநல்வாடையின் இயற்கை அமைப்பையும் சூழலையும் கண்முன் காட்டுகின்றார்.

**தாவரங்கள்**

தாவரங்கள் பற்றியும் அதன் இயற்கைச்சூழல் பற்றியும் நெடுநல்வாடையில் அதிகம் காணமுடிகிறது.

புன்கொடி முசுண்டைப் பொதிப்புற வான்பூப்

பொன்போற் பீரமொடு புதற்புதல் மலரப்

பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி

இருங்களி பரந்த ஈர வெண்மணற்

செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்

கயல்அறல் எதிரக் கடும் புனற் சாசஅய். 2

(13-18)

(நெடுநல்வாடை மூலமும் உரையும், டாக்டர் கதிர் முருகு ப. 42)

என்னும் பாடல் அடிகள் கார்காலத்தில் மழைதொடர்ந்து பெய்து வந்ததன் காரணமாக நெல்மணிகள் முற்றி விளைந்தன. பாக்குகள், காய்கள் முற்றின. பூக்கள் மலர்ந்திருந்த செடிகளில் அவை உதிர்ந்து அந்த செடிகளில் நீர்த்துளிகள் தங்கியிருந்தன. எனக் கார்க்கால இயற்கைக் காட்சிகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. இதன் மூலம் தாவரங்களின் சிறப்பினை நெடுநல்வாடை என்னும் நூலில் நாம் அறிய முடிகின்றது.

**மழைப்பொழிவும் வெள்ளப் பெருக்கும்.**

வானின்றி உலகம் வழங்கி வருவதால்

தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று

என்ற திருக்குறள் மழையின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது, இதன் மூலம் வள்ளுவர் மழை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என நமக்கு உணர்த்துகின்றார். மழை வானத்திலிருந்து பொழிந்து உலக மக்களின் வாழ்வை நிலை நிறுத்துவதால் அதனை அமிழ்தத்துக்கு நிகராகக் கருத வேண்டும் என்று கூறுகிறார்.

அதேபோல் பருவம் தவறாமல் மழை பெய்யும் சிறப்பினை நமக்கு நெடுநல்வாடை என்ற நூலின் மூலம் ஆசிரியர் நக்கீரர் எடுத்துரைக்கிறார்.

வையகம் பனிப்ப வலநேர்ப்பு வளைஇ
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந் தென. 3
(நெடுநல்வாடை மூலமும் உரையும், டாக்டர் கதிர் முருகன் - பக்கம் 51)

என்ற அடிகளில் பருவம் தவறாமல் மழையைப் பொழியும் தன்மை கொண்ட மேகம் உலகம் குளிர்ச்சியடையும் படி கார்கால மழையைப் பொழிந்தது என்ற செய்தி இடம் பெற்றுள்ளன.

**விலங்குகளின் நிலை**

மாடுகள், யானைகள், மான்கள் மற்றும் பல்வேறு பறவைகள் குளிரின் தாக்கத்தால் பாதிக்கப்படுவது இங்கு எடுத்துரைக்கப்படுகின்றது. இதன் மூலம் இயற்கையும், உயிரினங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பது உணர்த்தப்படுகிறது.

மாயேல் மறப்ப மந்தி சுர
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழிஎயக் கடிய வீசிக்
குன்று குளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள் 4
(9-12)( ப 52)

மழையினால் எழுந்த குளிர் மிகுதியினால் விலங்குகள் மேய்தலை மறந்தன, ஓரிடத்தில் ஒடுங்கிக் கிடந்தன, குரங்குகள் மிகுதியான குளிரால் குறுகிப் போய் அமர்ந்திருந்தன. மரத்தில் வாழும் பறவைகள் மிகுதியான குளிரின் காரணமாக மரத்திலிருந்து கீழே விழுந்தன என்ற செய்திகள் குளிர்கால நிலையில் விலங்குகளுக்கு ஏற்படும் நிலையினை ஆசிரியர் நக்கீரர் நமக்கு எடுத்துரைக்கிறார்.

**பருகும் நீரினை வெறுத்தல்**

பருகும் குளிரான தண்ணீரை மக்கள் வெறுத்துள்ளனர், மென்மையான ஓசையினையுடைய சிறிய மழைத்துளிகளை வாடைக்காற்று எங்கும் கொண்டு சேர்ப்பதனால் இளைஞர்களும் முதியவர்களும் எந்தப் பருவத்தை உடையவர்களும் குவிந்த வாயினை உடைய குடத்தின் நீரைக் குடிக்காமல் அகலமான வாயினை உடைய அடுப்பில் மூடப்பட்ட நெருப்பினையே விரும்புகின்றனர். இதன் மூலம் தாகத்தின் தன்மை குளிர் காலத்தில் அதிகம் இருக்காது என்பதை நெடுநல்வாடையின் மூலம் நமக்கு அன்றே உணர்த்திக் காட்டியுள்ளனர்.

**அரண்மனையின் அமைப்பு**

நெடுநல்வாடை அரண்மனையின் சிறப்பைப் பற்றி அழகாக நமக்கு எடுத்துக்காட்டுகின்றது எல்லாத் திசைகளிலும் தன் கதிர்களைப் பரப்பி ஒளி கொடுக்கக்கூடிய சூரியனின் கதிர்கள் நிலத்தில் ஊன்றப்பட்ட இரு கோள்களின் மீதும் பட்டு அக்கோள்களின் நிழல் வடக்கிலோ, தெற்கிலோ சாயாமல் சிற்ப நூல் கற்றறிந்த தச்சரைக் கொண்டு அரண்மனை அமைக்கப்பட்டுள்ளது என்பதை நெடுநல்வாடை எடுத்துரைக்கின்றது.

நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டு

தேஎங் கொண்டு தெய்வ நோக்கி (5)

பக்கம் 58

இந்த பாடலின் வரிகள் கற்றறிந்த தச்சரின் மூலமாகவும், தெய்வத்தின் நம்பிக்கையோடும் அரண்மனை அமைக்கப்படுகின்றன என்பதை நமக்குத் தெளிவாக காட்டுகின்றது.

**அகன்ற கட்டில்**

நாற்பது ஆண்டு காலம் வயதை உடையதும் முரசு போன்ற கால்களை உடையது, போரில் புகழ்ந்துரைக்கப்பட்டதும் உயர்வான அழகு கொண்டதும், புள்ளிகள் உடைய வெற்றியை உடையதும் என்றும் கட்டிலின் அமைப்பு பற்றி நக்கீரர் வருணிக்கின்றார், மேலும் அகலமான கட்டில் அழகாக விளங்கியது, அது பாண்டில் என்றும் பெரும் பெயர் பெற்று விளங்கியது என்று நெடுநல் வாடை கூறுகின்றது.

**மனித வாழ்க்கை**

குளிரின் காரணமாக மக்கள் நெருப்பு மூட்டி குளிர் காய்வது, சூடான ஆடைகளை அணிவது, வீடுகளில் தங்குவது போன்ற வாழ்வியல் முறைகளை நமக்கு விளக்குகின்றன. இயற்கை மனிதர்களின் அன்றாட வாழ்வை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் நெடுநல்வாடை அன்றே நமக்கு உணர்த்தியுள்ளது.

ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்
ஏறுடை இன நிரை வேறு புலம் பரப்பி
புலம் பெயர் புலம்பொடு கலங்கிக்கோடல் - 6

பக்கம் 51

கார்காலத்தில் பெய்த மழையாலும் பெருகிய வெள்ளத்தாலும் வெறுப்படைந்த கொடிய கோலினைக் கையில் கொண்டுள்ள ஆயர் இனத்தவர்கள். தன் ஆடு மாடுகள் மேய்க்கும் இடத்தை விட்டு விட்டு புதிய இடத்திற்கு இடம்பெயர்ந்தனர், என்ற செய்தியினை நாம் காண முடிகின்றது.

**வேளாண்மை**

மழையால் நிலம் வளம் பெற்று விவசாயம் செழிப்படைவதும், நீர் வளத்தின் முக்கியத்துவத்தையும் நெடுநல்வாடை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இந்த செய்தியினை திருக்குறளும் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது.

நீரின்றி அமையாது உலகெனின் யார்யாருக்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு 7

திருக்குறள்

நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெற முடியாது, அதுபோல மழை இல்லாமலும் உலகின் ஒழுக்கமும் வாழ்வாதாரம் இல்லை என்பதை நாம் அறிய முடிகின்றது.

அதேபோல் மழைப் பொழிவினால் அழகுமிக்க அகலமான வயல்களில் நிறைந்திருந்த மழை நீரினால் செழித்து வளர்ந்த வளமையான தாள்களைக் கொண்ட நெல் பயிரில் இருந்து புறப்பட்ட கதிர்கள் நன்றாக முற்றி விளைந்தன. பெரிய அடி மரத்தினை உடைய பாக்கு மரங்களின் கழுத்துப் பகுதியில் இருந்து வந்த மடலின் அருகு விரிந்த பாலையில் நீர் சென்று பாக்கு மரங்கள் செழிப்பாக இருந்தன, என்ற செய்திகள் வேளாண் தொழிலின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது.

அங்கண் அகல்வயல் ஆர்பெயல் கலித்த
வண்தோட்டு நெல்லின் வருகதிர் வணங்க 8
பக்கம் 53

என்ற நெடுநல்வாடை அடிகள் நமக்கு வயல்களின் சிறப்பினை ஓவியமாக தீட்டிக் காட்டுகின்றன.

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு**

நெடுநல்வாடை என்ற இவ்இலக்கியம் மனிதன் இயற்கையை நேசிக்கவும், இயற்கையின் மாற்றங்களை மனிதன் புரிந்து கொள்ளவும், மனிதன் எவ்வாறு இயற்கையோடு சேர்ந்து வாழ வேண்டும் என்பதையும் நமக்கு எடுத்துரைக்கின்றது. இயற்கையானது மனிதனுக்கு அதிகமான இன்பத்தைத் தரும், அதே வேளையில் சில நேரங்களில் துன்பத்தையும் கொடுக்கின்றது என்பதை நெடுநல்வாடை என்ற நூல் நமக்கு விளக்கமாக எடுத்துரைக்கின்றது. இயற்கையான சூழல் இல்லாமல் மனிதன் வாழ முடியாது என்பதையும் இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் குறிப்பாக நெடுநல்வாடையில் சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இயற்கை, மழை, நீர், நிலம், காற்று, மரங்கள், செடிகள், கொடிகள், விலங்குகள், பறவைகள் ஆகிய அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்பதை இன்னும் நமக்கு உணர்த்துகின்றன.

மனிதன் இயற்கையைச் சார்ந்தே வாழ்கிறான். இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டால் தான் மனித வாழ்வு வளமாக இருக்கும், மழையைப் போற்றுதல், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், மரங்களை வளர்த்தல், காடுகளைப் பாதுகாத்தல், நீர் நிலைகளை பராமரித்தல் போன்றவை நம்முடைய கடமையாகும்.

இன்றைய காலகட்டத்தில் காலநிலை மாற்றம், நீர் பற்றாக்குறை, காற்று மற்றும் நீர் மாசுபாடு, போன்ற பிரச்சனைகள் உலகையே பாதித்து வருகின்றன. இவற்றை நாம் தடுக்க சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும், இயற்கையோடு ஒத்து வாழ வேண்டும்.

பண்டைய தமிழர்கள் இயற்கையை மதித்து வாழ்ததைப் போல, நாமும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து இயற்கை வளங்களை அழிக்காமல் அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்ல வேண்டும், இயற்கையைப் பாதுகாத்து வளமான நாட்டினை உருவாக்க வேண்டும் என்பதை நெடுநல்வாடை எடுத்துரைக்கின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. நெடுநல் வாடை மூலமும் உரையும், டாக்டர் கதிர் முருகு, சாரதா பதிப்பகம், சென்னை - 600014, இரண்டாம் பதிப்பு, மே-2011,
2. வள்ளுவர் மறையும் வைரமுத்து உரை, முனைவர் பொன்மணி வைரமுத்து, ஆர்யா லிட்ரேச்சர் (பி)லிட, 32, டைகர் வரதாச்சாரி சாலை, முதல் குறுக்குத் தெரு, பெசன்ட் நகர், சென்னை - 600 090.

# 12. கானகன் புதினத்தில் சுற்றுப்புறச் சூழல்

The Environment in the Novel *Kaanagan*

**முனைவர் ஜா.அருணா,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பிஷப்ஹீபர் கல்லூரி (தன்னாட்சி)

திருச்சிராப்பள்ளி -620 017

**Dr. J. Aruna,** Assistant Professor, Department of Tamil, Bishop Heber College (Autonomous), Tiruchirappalli - 620 017

**ஆய்வுச்சுருக்கம்**

உலக அளவில் மிகவும் தொன்மையானவர்கள் எனக் கருதக்கூடிய பழங்குடியினர் சிலர் தென்னிந்தியப் பகுதியில் வசிக்கிறார்கள். இவர்கள் இன்றும் காடுகளில் வேட்டையாடிப் பல்வேறு காட்டுப் பொருட்களைச் சேகரித்தும் வாழக்கூடிய ஆதிகுடியினராக வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டிலும் தொன்மைப் பழங்குடியினராகப் பெரும்பாலான இடங்களில் கண்டறியப்பட்டுள்ள தொதவர், கோத்தர், இறும்பர், இருளர், பணியர், காட்டுநாயக்கர் எனப் பழங்குடி வகையினர் வாழ்கின்றனர். இப்பழங்குடி மக்கள் மலையிலும் காடுகளிலும் தம் வாழ்க்கையை பயணிக்கின்றனர். தம் வாழ்வினையை மேம்படுத்தும் விதமாக தொழில்முறைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், வழிபாட்டுமுறைகள், அடங்குகள், பொழுது போக்குகள் என வாழ்வியலுக்கான முறைகளை பகுத்துக் கொள்கின்றனர். இன்று காடுகளில் வாழும் கானுயிர்களும் மனிதனின் சுய நலத்துக்காக சிதைக்கப்படுகின்றது காடுகள் ;அழிக்கப்பட்டு அணு ஆலைகளும், தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வடிப்படையில் "கானகன்" புதினத்தில் வெளிப்படுத்தும் சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வை காணலாம்.

**முன்னுரை:**

"காடுகள் இயற்கைப் பாரம்பரியத்தின் இனிமையான எச்சங்கள ஒரு பக்தனுக்குப் புனிதமான கோயில் வளாகம் அலுப்பூட்டும் நகர்ப்புறச் சூழலிலிருந்து விடுபட இளைப்பாற்றும் இயற்கைத் தலம்  ஓங்கி வளர்ந்த திட மரங்களின் காட்சி சாலைகள் ; அழிந்து வரும் தாவர விலங்கினங்களுக் காப்பகங்கள் ; வாழிடம் பிறந்தவற்றிற்குப் புகலிடங்கள்  நீர்வளம் பேணும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் ; மதிப்பு மிக்க அரிய தாவ இனங்களின் மரபணு வங்கிகள்  உயிரியல் வல்லுநர்க்கும் சூழல்வாகிகளுக்கும், பரிசோதனைக் கூடங்கள் என்கிறார் சிவ.மங்கையர்க்கரசி.

காடுகள் இயற்கையாக உருவாகக் கூடியவை. காடுகள் இயற்கையின் எழில், இயற்கையாக உருவான காடுகள் குறித்த வருணனைகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

"குமிழ் உண் வெள்ளை பகுவாய் பெயர்த்த
வெண்காழ் தாய வண்காற் பந்தர்" 1

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகளில் குமிழம் பழங்களை உண்ட வெள்ளாடு தன் வாயினின்றும் துப்பிய விதைகள் எங்கும் பரவிக் காணப்பட்ட செய்தியை காடுகள் உருவாகக் காரணமான விதை பரவலுக்குச் சான்றாகக்க கொள்ளலாம்.

“ நாடு எனும் பேர் காடு ஆக
ஆ சேர்ந்த வழி மா சேப்ப
ஊர் இருந்த வழி பாழ் ஆக” 2

சங்கப் பாடல்களில் பல புறப்பாடல்கள், போர் வெற்றி காரணமாகப் பகை மன்னர்களின் ஊர்களும், விளை நிலைங்களும் அழிக்கப்பட்டுக் காடாக மாற்றப்பட்ட செய்தியை வீரத்தின் இலக்கணமாக எடுத்துரைக்கின்றன.

“ காடு காத்து உறையும் கானவர் உளரே “ 3

பழந்தமிழகத்தில் காடுகள் மனித நடமாட்டம் இன்ளி காட்டு விலங்குகளால்; இயற்கையான பாதுகாப்பைப் பெற்றிருக்கின்றன. கானவர்களும் காடுகளைப் பாதுகாத்தனர்.

அறிவியல் வளர்ச்சி, நவீனத் தொழில் நுட்பங்கள் மனித நாகரிகம், ஆக்கிரமிப்புகள் ஆகிய காடுகளை அழிக்காத காலக்கட்டத்திலேயே கானவர்களால் காடுகள் பாதுகாக்கப்பட்டது.

**சுற்றுச்சுழல்**

கானகன் என்பவன் காட்டில் வசிப்பவன். காட்டையும், அங்குள்ள விலங்குகளையும், மரங்களையும் தவிர வேறு எதுவும் அவனுக்கு வெளியுலகம் தெரியாது. வேட்டையாடுவது தான்; இவர்களது தொழில், காட்டின் மரத்தில் எத்தனை இலைகள் உள்ளது. எங்குச் சென்றால் என்னக் கிடைக்கும் என்பது இவர்களுக்கு தெரியும். காட்டில் இவர்களது காலடித் தடம் பதியாத இடமே இருக்காது எனவும் கூறலாம். இவர்களை கருமாண்டிகள் எனவும் கூறுவர்.

இக்கதையானது ஒரு பனிக்காலத்தில் தொடங்கி, இளவேனில், கடுங்கோடை, பெருமழை எனநான்கு காலங்களுக்குமாக பிரித்து ஒவ்வொரு காலத்துக்கும் ஒவ்வொரு இயல்பைச் சொல்லி அதில் இருந்து கதை ஆரம்பிக்கிறது.

இக்கதையின் அடிப்படையுக்கி பகையும், பலி தீர்த்தலும் மனிதனுக்கு மட்டுமானதில்லை அது விலங்குகளுக்குமானதே மனிதனுக்கு மிருகத்திற்குமான யுத்தத்தில் மனிதன் வெல்வதாக ஆரம்பிக்கிற கதையாக அமைகிறது. தங்கப்பனை நாயகனாகக் கொண்டு ஆரம்பிக்கிற கதை. ஆனால் அவன் இல்லை நாயகன். அவனது மூன்றாவது மனைவி பளிச்சி செல்லாயிக்கும் பளியன் சடையனுக்கும் பிறக்கும் மகன் வாசி தான் இந்தக் கதையின் உண்மையான நாயகன்.

காட்டில் தன் கண்ணில் படுகிறவற்றையெல்லாம் வேட்டையாடத் துடிப்பவன் தங்கப்பன். அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே வேட்டையாட வேண்டும் இல்லையேல் காட்டு தெய்வம் பழி வாங்கிவிடும் என்கிற கொள்கையுடது பளியக்குடி என்கிற பழங்குடி. அந்தக்குடியில் பிறந்த செல்லாயி எனும் பளிச்சி தனது குழுவின் கொள்கைகளை மதிக்காமல் காண்பவளாய் இருக்கிறாள். தங்கப்பனின் வேட்டையாடும் திறனைப் பார்த்து வியங்கு செல்லாயி அவனைத் தனது இரண்டாவது கணனாக ஏற்றுக் கொள்ள அவளைத் தனது மூன்றாவது மனைவியாக ஏற்றுக் கொண்டு தன் வாழ்விடத்துக்குக் கூட்டிச் செல்கிறான் தங்கப்பன் செல்லிக்கு அவளது முதல் கணவனான சடையன் என்னும் பளியன் மூலம் பிறக்கும் குழந்தையான வாசியை தங்கப்பனே வளர்த்துகிறான். அவனை தன்னைப் போலவே சிறந்த வேட்டைக்காரன் ஆக்க வேண்டும் என்று

விரும்புகிறான். ஆனால் வாசி வளர வளர தன்னிடமிருந்து விலகி பழைய குடியின் கொள்கையோடு ஒத்துப் போகிறான். தங்கப்பன் வாசி என்கிற இரண்டு மாறுபட்ட குணநலன்களின் மோதலில் கடைசியாக வென்றது யார் என்பதே கானகனின் முதன்மையான கதை.

காட்டிலுள்ள மரங்களை அழித்து கஞ்சாத் தோட்டம் அமைக்கும் முதலாளிகள் வாசிகளை விரட்டிவிட்டு அவர்கள் வாழ்வு இடத்திலும் கஞ்சாத் தோட்டம் அமைக்க முதலாளிகள் எடுக்கும் முயற்சிகள் அதற்கு உறுதுணையாக இருக்கும் அதிகாரிகள் அதை தடுக்கும் கம்யூனிஸ்டுகள் போன்றவையும் சொல்லப்படுகின்றன

விலங்குகளின் வாழ்விடத்தில் நுழைந்து அவற்றை அவற்றிடம் இருந்து பறித்து அவற்றின் வாழ்வாதாரங்களை முடக்கி அவற்றை வேட்டையாடி மனிதர்கள்

கானகன் புதினத்தின் சூழலியல்:-

மொக்க நிலை பழைய குடிதான் அகமலை வட்டத்தில் பெரிய பளியக்குடி. இன்னிய தேதியில் நாற்பத்திரண்டு குடும்பங்கள் வாழ்கின்றன. ஒவ்வொரு காட்டி இருக்கும் ஒவ்வொரு குணம் இருக்கும் என்பதை புரிந்து கொள்ளாதவர்களால் நீண்ட நாட்கள் ஒரு காட்டிற்குள் இருக்க முடியாது. ஒவ்வொரு காட்டின் உயிரையும் ஆழமாய் தெரிந்து வைத்திருப்பது அந்த காட்டின் கருமாண்டிகள்தான். அந்த காட்டின் கருமாண்டிகளுக்கு ஒவ்வொரு மரத்தில் எத்தனை இலைகள் என்று எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பார்கள், அப்படியான கருமாண்டி தங்கபனின் காட்டு சூழலியல் குறித்து காணலாம்.

பளியர்கள்:-

மனித குலம் இன்று பல்வேறு இனங்கள் ஆகவும் பல ஆயிரம் தேசிய இனங்களாகவும் பல பத்தாயிரங்களுக்கும் மேற்பட்ட சமூகங்களாகவும் வேறுபாட்டுக்கு காணப்படுகின்றன. இதில் மிகத் தொன்மையாக விளங்குபவர்கள் பழங்குடி மக்கள். இவர்களின் சமூகங்களும் பண்பாடுகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

பழங்குடிகளில் பெரும்பாலானோர் மலைகளில்தான் வாழ்கின்றனர். தமிழகப் பழங்குடிகளின் வாழ்விடமானது கிழக்கு தொடர்ச்சி மலை, மேற்கு தொடர்ச்சி மலை எனும் இரண்டு வெவ்வேறு பூகோள அமைப்புடைய மலைப்பிரதேசங்களில் அமைந்துள்ளது.

பளிர் 'பழையோர்' (ஆதிமக்கள்) என்றே பெயர் பெற்றிருந்தனர். கால ஓட்டத்தில் பழையோர், பழியர் என்றாகிவிட்டது. பழையர் பற்றிய குறிப்புகள் அகநானூற்றிலும் காணப்படுகின்றன.

" பழையர் மகளிர் பனி துறை பரவ" 4

" பைம் குழை தழையர் பழையர் மகளிர்" 5

அகநானூற்றில் பழையர் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன.

பளியன்குடி - மலைவாழ் பளியர் இன மக்கள் வாழும் தொன்மையான பகுதியாகும். பழங்குடிகள் பண்பாட்டில் சில நம்பிக்கைகள் அதீத தன்மையுடன் காணப்படுகிறது. பளியர்களின் வேட்டை முறை பல வகையானது. வேட்டை முறைகளைப் பற்றி காணலாம்

மலை சார்ந்த பகுதி குறிஞ்சி எனப்படும். மலையும் மலை சார்ந்த இடங்கள் மலை வளத்தையும் புன்செய் வேளாண்மையும் வேட்டை தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. குறிஞ்சி நில மக்கள் 'கானவர்' 'பளியர்' 'காட்டுநாய்க்கர்'; என்றெல்லாம் அழைக்கப்பட்டனர். வேட்டையாடுதல் உக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. நம் முன்னோர்களுக்கும் முந்தைய ஆதி மனிதர்கள் விலங்குகளை வேட்டையாடி இறைச்சி உண்கின்ற போது ஆரம்பித்ததன் பழக்கம் இன்று வரை இருக்கலாம். பெரிய விலங்குகளிடம் இருந்து தம்மை தற்காத்துக் கொள்ள ஆரம்பித்த இப்பழக்கம் பின்னர் உணவு பழக்கமாகவும் மாறி இருக்கலாம். நாகரீகம் அடைந்து சமவெளிகளில் குடியேறுவதற்கு முன்னரும், விவசாய நிலங்களை உருவாக்கி பயிரிடுதலை கற்றுக்கொள்வதற்கும் முன்னர் வேட்டையாடுதல் உணவளிக்கும் ஒரு செயலாய் இருந்து வந்தது.

வேட்டையாடல் முறையை இருவகையாக பிரிக்கலாம்.

(i) மனிதனின் தேவைக்காக வேட்டையாடல்

(ii) மிருகங்களின் தேவைக்காக வேட்டையாடல்

இவை இரண்டும் வனங்களில் நிகழ்கிறது.

வேட்டைத் தொழில் செய்பவர் தோற்றம்:-

பழைய கற்காலத்திலும், புதிய கற்காலத்திலும் சங்க இலக்கியங்களில் கூறப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் நில மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களே தமிழ்நாட்டின் மிகப் பழமை மூதாதையர் ஆவர் இவர்கள் நாடோடி இனத்தவர் ஆகவும் இடம் பெயர்ந்து வாழ்பவராக இருந்தனர் இத்தகைய வேட்டைத் தொழில் செய்பவர்கள் வேட்டைக்கு சென்ற காட்சியை கபிலர்

"செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் லேந்தி அம்புதெரிந்து
நுண்வினைக் கச்சையத் தயக்கறக் கட்டி
இயலணிப் பொலிந்த ஈகை வான்கழல்
துயல் வருந் தோறும் கலாவ" 6

எனக் குறிஞ்சிப்பாட்டில் சித்தரித்துள்ளார். செவ்விய இலக்கணத்தோடு கூடிய பூண் இறுகிய பெரிய முன்கையில் வண்ணத்தை உடைய கட்டப்பெற்ற வில்லை ஏந்தியிருந்தான். கையில் ஆராய்ந்து தெரிந்தெடுத்த அம்பினை கொண்டிருந்தான். தொழில்; திறமைந்த கச்சையோடு கூடிய சோலையை அசையாதபடி இறுக்கமாகக் கட்டியிருந்தான். இவ்வாறு வேட்டைக்குச் செல்வோர் அதற்குத் தேவையான கருவிகளுடன் செல்லுதலும் இயல்பு என்பதை இப்பாடல் வரி மூலம் அறிய முடிகிறது.

வேட்டையாடும் முறை:-

மலைகள் மற்றும் காடுகள் சூழ்ந்த பகுதியில் வேட்டைக்கு விலங்குகளைத் தேடி திரிவர். இவர்கள் வேட்டைக்குத் தனித்து செல்லாது பலரும் சேர்ந்து செல்வதே வழக்கமாகும். அவ்வாறு சென்று வேட்டையாடும் பொழுது அவர்கள் பிரிந்து செல்லவும் நேர்தலுண்டு. அவர்கள் பிரிந்து சென்று வேட்டையாடிய பின்னர் மீண்டும் ஒன்று சேருவர்.

பளியர்களின் வேட்டை முறை பலவகையானது. அதில் ஒன்று தண்ணீர் வைத்து பிடிப்பது. இது ஒரு எளிய உத்கி முறையாகும். வேட்டைக்குச் செல்லும் பளியர்கள் தலையில் சட்டி நிறைய தண்ணீரை சுமந்து செல்வார்கள். கோடை காலத்தில் தண்ணீரை பாறையில் உள்ள பள்ளத்தில் ஊற்றிவிட்டு அருகில் உள்ள புதரில் மறைந்து கொள்வார்கள். தண்ணீரைக் குடிக்க வரும் மான், காட்டுப ;பன்றி, மயில் எதுவாயினும் பிடித்துவிடுவார்கள். இது ஒரு பக்கம் இருக்க கருமாண்டியான தங்கப்பன் விலங்குகளை பொறிவைத்துப் பிடித்தான். தன் நண்பனின் மாட்டு கிடங்கில் மாடுகளை அச்சுறுத்தி வந்த விலங்கு என்னவென்று அறிந்து அதற்கு பொறி வைத்துப் பார்த்தான்.

"இரண்டு சாக்கில் மாட்டு இறைச்சியை அள்ளிக் கொண்டு வந்த அன்சாரி அதைப் பிரித்து வெயிலில் காய வைத்தான். தங்கப்பன் கவனமாக பாஸ்பரஸை சின்ன சின்ன உருண்டைகளாக எடுத்து வெயில் படாமல் சாக்குத் துணியில் சுற்றி வைத்தான். பெரிய பெரிய துண்டங்களாய் வெட்டி எடுத்த மாட்டு இறைச்சியில் துளையிட்டு பாஸ்பரஸ் உருண்டைகளை மூடினான். விலங்குகள் அதை முகர்ந்து பார்த்து கண்டுபிடித்து விடக் கூடாது என்பதற்காக இறைச்சியின் மேல் நல்லெண்ணெய் ஊற்றி மிளகாய் தூளை தூவினான்."13

"தங்கப்பன் பொறி வைப்பதை தமீம் கவனமாகப் பார்த்தான். பக்கத்திலேயே நான்கு அல்லது ஐந்து இறைச்சித் துண்டங்கள். பின்பு தனது பாதத்தடத்தை அழித்துவிட்டு அதில் இருந்து இன்னும் கொஞ்சம் தள்ளி நான்கைந்து இறைச்சி துண்டங்கள்.

"எதுக்குன்னு கூறவும் போட்டுட்டு எலும்பையும் உடைத்து சிதறி விடற...?"

"கறிக்கடைல வெச்சு விக்கிற மாதிரி இருக்கக் கூடாது கறி... சுத்திலும் கிடக்கிறது புலி வேட்டையாடினதுல மிச்சமான மாட்டிறைச்சி மாதிரி இருக்கணும்.... அதுக்குத்தான் மாட்டெலும்பு...."7

தங்கப்பன் புலியை வேட்டையாட பொறி வைத்தான்.

அகமலை வட்டத்தில் அன்றிரவு முதல் பெரும் வேட்டையை பளியக்குடி சந்திக்கிறது. தங்கப்பனும் அன்சாரியும் சேர்ந்து புலியை வேட்டையாடுகின்றன.

" வனத்தின் இருளுக்கு பழக்கப்பட்டு போன தகப்பனின் கண்களுக்கு ஏதோ ஒன்றிற்காக காத்திருக்கும் கூர்மை சின்னதொரு சல சலப்பிற்கு கூட வேகமாக செவி சாய்த்தான். அவனோடு இருந்த அன்சாரிக்கு உடல் முழுக்க அச்சம் இருந்தாலும் காட்டிக்கொள்ளாமல் சிரமத்தோடு பரணில் ஒடுங்கி இருந்தான்.8

"தங்கப்பன் புலியின் காலடித்தடங்களை சுனைக்கு அருகில் பார்த்தான் அதனால் துணைக்கு அருகிலேயே பொறி வைத்து புலியை பிடித்து விடலாம் என யூகித்தான். அதனால் சுனைக்கு அருகில் பரன் ஒன்றை அமைத்து புலியைப் பிடிக்க திட்டம் தீட்டினான். "

"பரணிக்கு கீழே ஒரு முளை அடித்து கயிறு கொண்டு வெள்ளாட்டை கட்டி இருந்தார்கள்.9

பரணுக்கு கீழே இருந்த ஆடு புலியைப் பார்த்துவிட்டு அதிக அச்சத்தோடு அலறியது.

“ ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த
பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஒர்க்கும்”10

தன் குட்டிகளுக்காகவும் தனது இணையான பெண் புலிக்காகவும் வேட்டையாடும் ஆண் புலி பற்றி பாடல்கள் தெரிவிக்கின்றது. வேட்டைக்காக பதுங்கி மானின் அது குரலினை உற்றுக் கேட்ட புலி பற்றி அகநானூறு கூறுகிறது. பிளந்த வாயையுடைய ஆண் புலி அறல் பட்ட கொம்பை உடைய ஆண் மானின் குரலை தன் செவியால் கேட்கும் என்கிறது இப்பாடல்.

அதேபோல் தான் புலி ஆட்டை வேட்டையாடுகிறது.

"ஆட்டின் முதுகில் பாய்ந்திருந்த புலி மூர்க்கமாக அதன் உடலை கடித்துக் கொண்டு இருந்தது. தனது இரண்டு கால்களுக்கு நடுவிலும் ஆட்டின் உடலைப் பிடித்து அதன் தலையை மட்டும் தனியாக கடித்து எரிந்தது. 11

"புலியின் உடல் மீது அன்சாரி லைட்டை அடிக்க திடீரென பரவிய பெரும் வெளிச்சத்தில் செய்வதறியாது அப்படியே பின்வாங்கியது புலி. தங்கப்பன் புலியின் வயிற்றில் சுட்டான். புலி உறுமியபடியே ஒரு கரணம் போட்டு விழுந்தது. இறப்பிற்கு முந்தைய கனத்தில் அவர்கள் இருவரிடமும் எந்த கருணையும் எதிர்பார்த்து கிடைக்காத புலியின் கண்களில் கம்பீரமாக சாக காத்திருக்கும் தவிப்பு. புலி அவன் கண்களை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்க “சதக்கென” கத்தியை புலியின் கழுத்தில் இறக்கினான்”12 இவ்வாறாக புலியின் வேட்டையிலிருந்து கதை தொடங்குகிறது.

**காட்டிலுள்ள மரங்களை அழித்தல்:-**

இதுவரை உலகில் நடைபெற்ற எந்த வகையான போராட்டங்களும் காடுகள், காட்டுயிரிகளின் அறிவை தடுக்க முடியவில்லை. அவை மெல்ல அழிந்து தான் போகின்றன. கானகத்தை அளிப்பதும் வனங்களை ஒழிப்பதும் நமக்கு நாமே கட்டிக் கொள்வதற்கு சமம் என்று எவரும் உணர்ந்ததில்லை.

சங்க இலக்கியங்களில் காடுகள் அழிந்த, மரங்கள் அளிக்கப்பட்ட செய்திகளை கூறும் பாடல்கள் பரவலாகக் காணப்படுகின்றன. கடும் வெயில், காட்டுத்தீ, காட்டாற்று வெள்ளம், காட்டு விலங்குகள் இவற்றால் காடுகள் அடைந்த அழிவுகள் ஏராளம். கானவர்களின் வாழ்வியல் தேவைக்காகவும் நாடு சீரமைப்பு பணிகளும் பகை காரணமாகவும் காடுகள், மரங்கள் அழிக்கப்பட்டன.

"கல் கண் கொடிய கானம் வெம்ப
மல்கு நீர் வரைப்பின் கயம் பல வணங்க
கோடை நீடிய பைது அறு காலை”13

நீடிய கோடையால் பசுமை இழந்து காய்ந்து போன காடு குறித்து இப்பாடல் கூறுகிறது.

“ குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கில்” 14

என்னும் வரிகளில் மூங்கில்கள் குருத்தாக இருக்கும்போதே, அவை யானைகளால் சுவைக்கப் பட்டு கூழையாக அழிவை சந்தித்ததை அறியலாம்.

“ சினம் திகழ் கடாஅம் செருக்கி மரம் கொல்பு
மையல் வேழம் . . . . 15

மதம் கொண்ட யானை, சினத்தால் மரங்களை முறித்து அழிக்கும் செய்தியை குறிஞ்சிப்பாட்டு கூறுகிறது. “நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய

குறுங்கதிர்த் தோரை, நெடுங்கால் ஐயவி,

ஐவன வெண்ணெலொடு…16

மணம் கமழும் அகில், சந்தன மரங்களை வெட்டி மேட்டு நிலங்களில் விதைக்கப்பட்ட தோரை, வெண் சிறு கடுகு, ஐவன நெல் ஆகியன பற்றியும் சங்கப்பாடல்கள் சான்று பகருகின்றன. இன்று மட்டுமல்ல அன்றும் மலை வளங்கள் மனிதனால் அழிவை எதிர்கொண்டன என்பதை இதனால் அறியலாம்.

கானகன் புதினத்தில் மனிதர்கள் காட்டுக்குள் நுழைந்து மரங்களை வெட்டுகின்றனர். அதனால் அங்குள்ள விலங்குகளும், மனிதர்களும் செய்வதறியாது இருக்கின்றன.

"கட்டையன் கிழங்கு தோண்டி எடுப்பதற்காக நாணற்காட்டைத் தாண்டி போய்க்கொண்டிருந்தான். வெகு அருகாமையில் மரம் அறுக்கும் ரம்ப ங்களின் சர் சர் சத்;தம். அன்று காலையில் மேல நாயக்கன் பட்டியிலிருந்து முன்பு வந்திருந்த ஆட்கள் வந்திருந்தனர்.17

"மரம் அறுக்கிற சத்தம் அவன் நடந்த வழியெங்கும் கேட்டபடியே இருக்க, முன்பு ஒன்றிரண்டு பேர் வந்து மரம் வெட்டி எடுத்துப் போனது போய் இப்போது கூட்டமாக வந்து விட்டார்களே என நினைத்தான். இந்த மரங்களை எல்லாம் வெட்டி எடுத்து மலைக்கு அந்தப் பக்கம் மலையாளதானிடம் விற்றுத் தீர்ப்பதில் மரம் வெட்டுபவர்கள் வெறித்தனமாய் இருந்தனர். பாதையை விட்டு மெதுவாக மரம் வெட்டும் சத்தம் கேட்ட திசை நோக்கி நடந்தான். சத்தம் நெருங்கிவர, அச்சத்தில் மரங்களில் கூடு கட்டியிருந்த பறவைகள் பெறும் அலறல் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன. அந்த மரங்களை பிரிய முடியாத பெருந்துயரோடு அவை மரங்களையே சுற்றி சுற்றி வருவதும் ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கு பறப்பதுமாய் இருந்தன. முற்றிய ஒரு தோதகத்தி மரத்தை நான்கு பேர் அறுத்துக் கொண்டு இருந்தனர். அந்த மரத்திற்கு வயது இருநூறு வரு~மாவது இருக்கும், பெரும் பரப்பைக் குளிர்வித்து உயர்ந்திருந்த அதன் அடியில் ஒவ்வொரு பக்கத்திற்கும் இரண்டு பேராய் ஒரே சீரான வேகத்தில் அறுத்துக் கொண்டு இருந்தனர்.18

"அவன் மரம் வெட்டுகிற அவர்களை நெருங்கிப் போய் கொண்டிருந்தான். மரத்தை இழுத்துக்கொண்டு போனவர்களோடு காவலுக்கு பத்து பேருக்கு ஒருவனென துப்பாக்கியோடு ஆட்கள் போனார்கள். சடையனும் கட்டையனும் நெல்லிக்காயைத் தின்றபடி பாறையிலிருந்து, இந்த காடு கொலை செய்யப்பட்டு அதன் உடல் அதன் இன்னொரு எல்லையில் இருக்கும் நகரத்திற்கு புதைக்க எடுத்து செல்லப்படுவதை கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.26

பருத்திப் போடு பகுதி முழுக்க யானைகள் எல்லா திசைகளிலிருந்தும் கஞ்சா தோட்டத்திற்குள்ளும், குடிசைகளுக்குள்ளும் இறங்கிக் கொண்டிருப்பதாய், ஆட்கள் பேசிக்கொண்டது முதலில் செய்தியாக மட்டுமே பரவியது. பின்னர் அது ஒரு அச்சமாய் அந்தக் காட்டிலிருந்த ஒவ்வொரு கிராமத்துக்கும் பரவிச் சென்றது.

"யானைகள் கூட்டமாய் காட்டுக்குள் ஓடியதைப் பார்த்த ஒரு பளியன் முகத்தில் அச்சம் விலகாமல் சொல்லிக் கொண்டிருந்தான். அந்தக் காட்சியைப் பார்க்க முடியவில்லையே என ஏக்கம் வாசிக்கு".

"எதுக்குண்ணே காடுகளுக்குள்ள போயி அழிச்சாட்டியம் செய்யணும்..... புல்லும் தண்ணியும் இருந்தா அதுக்குப் போதும்.... அது விட்டுப்புட்டு இந்தக் காட்டப் போட்டு நோண்டிருக்கிறதா அதுக்கு என்ன கெடச்சிறப் போகுது"..

"அதுக்கு புல்லும் தண்ணியும் இருந்த எடத்தத்தானடா இவனுக வெட்டி மட்டப்படுத்தி கஞ்சா தோட்டமாக்கி இருக்கானுங்க... காலங்காலமா அங்கேயே புல்லைத் தின்ன பழக்கப்பட்டு இந்த மாசத்துக்கு இந்த எடத்துக்குப் போன இது இருக்கும்னு யானைக வருதுக... வந்து பாத்தா இங்க ஒன்னும் இருக்கதில்லை.... கோவத்தில ஊருக்குள்ள வருதுங்க".19

காடுகளில் விலங்கினங்களும் பறவை இனங்களும் இடையூறு இல்லாமல் வாழ்வதற்கு வன விலங்குகள் குறித்த பாதுகாப்புச் சட்டங்களை அரசு கொண்டுவந்தாலும் காடுகளில் மரங்கள் வெட்டப்படுவது கொள்ளையடிப்பதும் நடைமுறையில் இருந்து கொண்டே உள்ளன என்பதை இப்புதினம் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

**விலங்குகளின் வாழ்வாதாரங்களை முடக்குதல்:-**

இயற்கையும் விலங்குகளும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த சூழலே மனிதர்களின் வாழ்வியல் சூழலைச் சிறப்பாக வழி நடத்துகிறது. விலங்குகளை நாம் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை. அவைகள் தான் மனிதர்களை பாதுகாத்து மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு முக்கிய காரணியாக விளங்குகிறது. விலங்குகளை நாம் பாதுகாக்க வேண்டிய அவசியம் கூட இல்லை. அவற்றின் அழிவுக்குக் காரணமாக இல்லாமல் இருந்தாலே போதும்.

உலகில் உள்ள காடுகளையும், கடல்களையும், நீர் நிலைகளையும் வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருபவை பல்லாயிரக்கணக்கான விலங்கினங்கள். மனிதர்களின் பேராசையாலும், பெருகி வரும் மக்கள் தொகை, அறிவியல் வளர்ச்சி மற்றும் இயற்கை பேரழிவுகளாலும் உலகம் முழுவதும் வாழும் விலங்கினங்கள் மற்றும் அதன் வாழ்விடங்கள் அழிந்து வருகின்றன.

கானகன் புதினத்தில் விலங்குகளின் வாழ்விடத்தில் நுழைந்து அவற்றை அவற்றிடமிருந்து பறித்து, அவற்றின் வாழ்வாதாரங்களை முடக்கி, அவற்றை வேட்டையாடி மனிதர்கள் தவறைச் செய்கின்றனர். ஜமீன் குடும்பம் வேட்டைக்காகக் காடுகளில் செல்லும் பொழுது கண்களில் தெரியும் அனைத்து உயிரினங்களையும் சுட்டு, வீழ்த்தினார்கள். அவர்கள் தேவைக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் அரிய விலங்குகள் கொல்லப்பட்டன.

காட்டிற்குள் வேட்டையாட ஜமீன் மற்றும் தகப்பனின், வேலையாட்கள், சர்வதேசத்தின் தலையீட்டை ஜமீனின் குடும்பம் எல்லாம் சென்றனர். "மூணு குழுவா பிரியிவோம் வழக்கம்போல முதல் வேட்டை என்னோடது அதுக்கப்புறம் யார் வேணும்னாலும் எது வேணும்னாலும் சுடலாம்...." ஜமீன் சொல்ல எல்லாரும் சரி என்று தலையாட்டினார்.

"ஜமீன் மானையும் நிலாவையும் மட்டும் தேடித்தேடி சுட்டார்". 20

தமீம் "சிரமப்பட்டு ஒருவரை அட்டை மட்டும் சுட்டான்.21 அவன் துப்பாக்கி பிடிப்பதை பார்க்கப் பார்க்க தங்கப்பனுக்கு சிரிப்பாக இருந்தது.

"தங்கப்பன் சுட்ட ஒரு கொழுத்த காட்டு மாட்டையும், பன்றியையும் ஜமீன் ஆச்சரியமாகப் பார்த்தார்".22

பெரும் வேட்டை முடித்த அவர்களை அச்சத்தோடு பார்த்த வனம் எந்தச் சலனமுமில்லாமல் பதுங்கிக் கிடந்தது. பளிச்சிக்கு இவ்வளவு ரத்தம் ஒரே நாளில் சிந்தப் படுவதில் நிச்சயம் கோவமிருக்கும் என்று பலர் எண்ணினர்.

துரத்தி அடிக்கப்பட்டு கொல்லப்பட்ட மிருகங்களின் குருதி வாடை அகமலைக் காடு முழுக்க வரவிக்கிடந்தது. இது ஒரு துர்ச்சம்பவமாக கருதினர் மக்கள்.

ஜமீன் அடுத்த நாள் வேட்டையாட காட்டுக்குள் சென்றனர். "ஒரு மரத்தில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த காட்டு அணிலைத் தான் முதலாவது அவர் சுட்டது."23

காலையில் இருந்து தான் ஒரு மானை கூட வேட்டையாட முடியவில்லை என என்பதை அவரால் செரித்துக் கொள்ள முடியவில்லை. போடி மெட்டுக்குச் செல்லும் பாதையில் இருந்த சின்ன சுனைக்கு அருகில் உட்கார்ந்திருந்தார்கள். தண்ணீர் குடித்துவிட்டு சற்று ஓய்வெடுக்கலாம் என நினைத்து மரத்தில் சாய்ந்து ஜமீன் உட்கார்ந்தார். அவரின் வேலையாள் தான் முதலில் மானை பார்த்தான்.

"ஐயா ஐயா அங்க பாருங்க நல்லா கொழு கொழுனு ஒரு மானே..." எல்லோரும் அந்தத் திசையில் திரும்ப, ஜமீன் களைப்பையும் மீறி உடனடியாக தயாராகிவிட்டார். இந்த நொடிக்கு ஆகவே அந்த பகல் முழுக்க காத்திருந்தது போல் அவரது முகத்தில் அப்படி ஒரு பரவசம். துப்பாக்கியை எடுத்து மானை குறி பார்த்தார். அதைப் பார்க்கும் ஒருவருக்கும் அதை சுட தோன்றாது. அத்தனை பரிதாபகரமாயிருந்த மானின் மீது எந்தவிதமான இரக்கத்தையும் காட்ட அவர் தயாராக இல்லை. வாசி அவசரமாய் ஜமீனின் துப்பாக்கியை மரித்தான். "அய்யா அரச் சுடாதிய அது செனையா இருக்கு. எந்த நிமி~த்துலயும் குட்டி ஈனும் விட்டுருங்க..."

"உனக்கு எப்டிடாத் தெரியும் அது செனை இருக்குன்னு?..."

"நல்லா பாருங்க அடிவயிறு கனத்து இறங்கி போச்சு.... சொன்னா கேளுங்க..." ஜமீன் அதைக் கேட்கும் மனநிலையில் இல்லை. செனை யாய் இருக்கும் எந்த மிருகத்தையும் விடக்கூடாது. முக்கியமாய் பெண் மிருகங்களை சுட கூடாது என்பதே வேட்டையாடுகிறவனுக்கு பொதுவான விதி'.24

ஆனால் மனிதர்களுக்குத் தான் இந்த விதிகளெல்லாம் இந்த ஜமீனை மாதிரியான நாட்டு விலங்குகளுக்கு இந்த விதிகள் எதுவும் பொருந்துவதில்லை.

"குறியை மாற்றாமல் மானை நோக்கிச் சுட்டார். முதல் குண்டு வெடித்து அதிலிருந்து மானின் கழுத்தில் பட்டது, தாமதிக்காமல் விசையை இழுத்து இரண்டாவது முறையும் சுட்டார். இரண்டாவது குண்டு அதன் வயிற்றில் பட மான் சுருண்டு விழுந்தது". 25

சுற்றியிருந்த எல்லாருமே அதை வேட்டை என்பதையும் மீறி படுகொலையாக தான் பார்த்தனர். வாசி உச்சபட்சமான கோவத்தில் வேகமாக அவரைக் கடந்து ஓடினான். சுடப்பட்ட மான் தனது கடைசி நிமிடங்களை கண்களை சுழல விட்டு சுற்றிலும் பார்த்துக் கொள்ள முயன்று தோற்றுக் கொண்டு இருந்தது. அவசரமாய் தனது இடுப்பில் இருந்த கத்தியை உருவி மானின் வயிற்றை அழுதான் வயிற்று தோல் கிழிய கிழிய உள்ளிருந்து குட்டிகள் எட்டிப் பார்க்கத் துவங்கின. மான் குட்டி மெதுவாக வெளியில் வந்தது. தான் பார்த்த புதிய உலகில் மெதுவாக

ஒவ்வொரு எட்டாக வைத்து நடந்த அந்த மான் குட்டி எந்தத் திசையில் நடப்பது என தெரியாமல் எல்லா பக்கமும் சுற்றி சுற்றி நடந்து விழுந்தது.

கஞ்சாத் தோட்ட முதலாளிகள் முன்னை விடவும் அதிகம் ஆக்கியதால் பருத்திக்கு மேல் புதிதாக இன்னொரு கஞ்சா தோட்டம் போட வேலையை துவக்கினார்கள். ஏற்கனவே குரங்காற்றையும்; அதைச் சுற்றியிருந்த சின்ன சின்ன சுமைகளையும் முதலில் தோட்டம் போட்டத் தேனிகார முதலாளி ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார். பருத்திப் போட்டில் சுனைகள் அதிகம் என்பதால் கோடை காலத்தில் அந்தப் பகுதியில் தான் தஞ்சமடையும். அந்த இடத்தை ஆக்கிரமித்து தான் கஞ்சா தோட்டம் போடபப்பட்டது. தனது இடத்தை ஆக்கிரமித்து விட்டனர் என்பதை அறிந்த யானைகள் ஊருக்குள் தஞ்சம் புகுந்தது, அதனால் ஊர் மக்கள் அச்சம் கொண்டனர். யானைகள் தோட்டத்திற்குள் நுழைந்து அனைத்தையும் நாசம் செய்துவிட்டது. குடியிருப்புக்குள் தஞ்சம் அடைந்தது. அதனால் மக்களும் கஞ்சாத் தோட்டம் முதலாளிகளும் யானையை விரட்ட வேண்டும் என திட்டம் தீட்டினர்.

"யானை வருவது தெரிந்ததும் வானில் வெடிகளை அறிந்து அவற்றை துரத்துவதை எளிய காரியம் என மக்கள் செய்து கொண்டிருந்தன."26

யானைகளை துரத்துவது ஒன்றும் சிரமமான காரியம் இல்லை என நினைத்திருந்த ஆட்கள் தாங்கள் எதிர் கொண்டிருப்பது ஒரு மிருகத்தின் கோபத்தை அல்ல இந்தக் காட்டின் கோபத்தை என்பது அவர்களுக்கு புரியத் துவங்கியது.

"யானையை துரத்த பருத்திப் போட்டுக்கு வடக்கு எல்லையில் இருந்து வாசி வரிசையாக வெடிகளை போட்டு பெரு சத்தங்களை உண்டாக்கினான்".27

தங்கப்பன் யானையை துப்பாக்கியை எடுத்து இரண்டு முறை பின்னங்காலில் சுட்டான். அது தவறி போகவே மீசையை வேகமாக இழுத்து யானையின் முதுகில் சுட்டான் யானை சுருண்டு விழுந்தது.

"இந்த உலகத்திலிருந்து தனக்கான விடுதலையை வேண்டிநிற்கும் அதன் கண்களில் இன்னும் சில காலம் உயிர் வாழ ஆசைப்பட்டு முடியாமல் போன நிராசைகள் கண்ணீராய் கசிந்து கொண்டிருந்தன."28

யானையின் தந்தங்களை தலையோடு வெட்டி எடுத்து கொண்டு போனாதங்கப்பன். இறந்த 2 யானையின் உடல்களை துண்டு துண்டாக வெட்டி பாதியை புதைத்து விட்டு மீதியை காட்டுக்குள் நாலாபுறமும் சிதறி விட்டான். மனிதனும் மிருகமும் ஒரு சேர அபாயத்தை எதிர் கொண்டு நம்பிக்கையில் மனிதனிடமிருந்து மிருகங்களும் மிருகங்களிடமிருந்து மனிதர்களும் ஒரு சில விஷயங்களை கற்றுக் கொண்டவர்களாய் இருக்கின்றன.

**தொகுப்புரை:-**

காடுகள் விலங்குகள் என அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் இன்றைய சமுதாயம் சூழலை மாசுபடுத்தி வருவதற்கு காரணம் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியும் நாகரீகம்தான். இவற்றையே புதினத்தில் முன்வைத்து கூறப்பட்டுள்ளது. விவசாய நிலங்கள் அனைத்தும் விலை நிலங்களாக மாறி விட்டன அனைத்தும் போய்விட்டன. ஆடு மாடு

விலங்கினங்கள் அனைத்தும் தண்ணீர் இல்லாமல் செத்து மடிகின்றன. இதற்கு காரணம் மனிதன் மட்டுமே என்பதில் ஐயமில்லை. ஏனெனில் தான் வாழ்வதற்காக பிறரைக் கெடுக்கும் எண்ணம் மனிதனுக்கு மட்டுமே உண்டு விலங்குகளுக்கு இல்லை. எனவே சுற்றுச் சூழலைப் பற்றி பல்வேறு படைப்புகள் வெளி வந்தாலும் புதினங்கள் மட்டுமே சூழலியல் பிரச்சினைகளை ஆராய்ந்து தெளிவாக எடுத்துரைக்கிறது.

சான்றெண் விளக்கம்

1. மதுரைக்காஞ்சி - நூற் - 155- 158
2. மலைப்படுகடாம் - நூற் - 279
3. அகநானூறு - நூற் - 201
4. மேலது - நூற் - 331
5. குறிஞ்சிப்பாட்டு - நூற் - 123 - 127
6. கானகன் - பக் - 40 - 41
7. மேலது – பக் - 41
8. மேலது – பக் - 11
9. மேலது – பக் - 12
10. அகநானூறு - நூற் - 147
11. கானகன் - பக் - 14
12. மேலது – பக் - 14-15
13. புறநானூறு – நூற் - 174
14. குறுந்தொகை - நூற் - 179
15. குறிஞ்சிப்பாட்டு - நூற் – 164, 165;
16. மதுரைக் காஞ்சி - நூற் - 286, 288
17. கானகன் - பக் -66
18. மேலது – பக் - 67
19. மேலது – பக் - 67,69
20. மேலது – பக் - 146 - 147
21. மேலது – பக் - 100
22. மேலது – பக் - 100
23. மேலது – பக் - 101
24. மேலது – பக் - 119
25. மேலது – பக் - 121
26. மேலது – பக் - 121
27. மேலது – பக் - 135
28. மேலது – பக் - 167
29. மேலது – பக் - 167

**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

**பார்வை நூல்கள்**

1. லட்சுமி சரவணகுமார் கானகம்,ஜுரோ டிகிரி பதிப்பகம்,முதற் பதிப்பகம் 2015. ஜனவரி 2019

2.Pலா ஆசீர்வாதம் (ப.ஆ.) 'தென் தமிழ்நாட்டுப் பழங்குடிகள்'தமிழ்த்துறை, டோக் பெருமாட்டிகல்லூரி, மதுரை, 2003.

3. ஜெதேவ், சி.ஜே, 'பழங்காலப் பண்பாடும் பழங்குடிகள் பண்பாடும்',அரசுப் பொருட்காட்சிச் சாலை

## Reference Books

1. Lakshmi Saravanakumar, *Kaanagam*, Zero Degree Publishing, First Edition 2015, January 2019.

2. P. Aasirvatham (Ed.), *Tribes of Southern Tamil Nadu*, Department of Tamil, Lady Doak College, Madurai, 2003.

3. Jadev, C.J., *Ancient Culture and Tribal Culture*, Government Museum.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 13.“தமிழ் நாவல்களில் இந்திய சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும்”

**க.கஸ்தூரி,**
முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - **620 002.**
ஆய்வு நெறியாளர்: **முனைவர்ஆ. ஷர்மி,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி -2

**ஆய்வு சுருக்கம்**
**“தமிழ் நாவல்களில் இந்திய சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும்”** என்ற இக்கட்டுரை, தமிழ் நாவல்களில் வெளிப்படும் தத்துவ, அறநெறி மற்றும் சூழலியல் சிந்தனைகளை ஆய்வுக் கோணத்தில் விளக்குகிறது. இந்திய சிந்தனை மரபின் அடிப்படை கூறுகளான தர்மம், அஹிம்சை, இயற்கை நேசம் மற்றும் உயிர் சமத்துவம் ஆகியவை தமிழ் இலக்கிய மரபுடன் எவ்வாறு இணைந்துள்ளன என்பதும், அவை நாவல்களில் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகின்றன என்பதும் இதில் ஆராயப்பட்டுள்ளது.

மேலும் நிலம், நீர், காடு போன்ற இயற்கை வளங்களின் முக்கியத்துவம், மனிதன்–இயற்கை உறவு, கிராமிய வாழ்க்கையின் சூழலியல் பார்வை, தொழில்மயமாக்கலால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் பசுமை அரசியல் போன்ற அம்சங்கள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இத்துடன் பெண்ணியம் மற்றும் சூழலியல் இணைவு, இந்திய அறவியல் சிந்தனைகள் மற்றும் எதிர்கால தலைமுறைக்கான சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு ஆகியவை நாவல்களின் வழியாக எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில், தமிழ் நாவல்கள் சமூக மாற்றங்களை மட்டும் பதிவு செய்வதல்லாமல், இயற்கை பாதுகாப்பு மற்றும் அறநெறி வாழ்வுக்கான விழிப்புணர்வை உருவாக்கும் இலக்கிய கருவிகளாகவும் செயல்படுகின்றன என்பது இக்கட்டுரையின் முக்கிய முடிவாகும்.

**முன்னுரை**

தமிழ் இலக்கியம் மனித வாழ்வியலையும் சமூக மாற்றங்களையும் ஆழமாகப் பதிவு செய்து வரும் செழுமையான இலக்கிய மரபாகும். அதில் நாவல் இலக்கியம் மனிதன், சமூகம், பண்பாடு மற்றும் இயற்கை ஆகியவற்றின் உறவுகளை விரிவாக எடுத்துரைக்கும் முக்கியமான வடிவமாகத் திகழ்கிறது. குறிப்பாக தமிழ் நாவல்களில் இந்திய சிந்தனை மரபின் தாக்கமும் சுற்றுச்சூழல் சார்ந்த விழுமியங்களும் குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்படுகின்றன. இந்திய சிந்தனை மரபு என்பது அறம், ஆன்மிகம், இயற்கை நேசம், உயிரின சமத்துவம், மனிதநேயம் போன்ற உயர்ந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். வேதங்கள், உபநிடதங்கள், சங்க இலக்கியங்கள் மற்றும் பக்தி இலக்கியங்கள் அனைத்தும் மனிதனும் இயற்கையும் ஒன்றோடொன்று இணைந்த வாழ்வை வலியுறுத்துகின்றன. “இயற்கையோடு இயைந்து வாழ்தல்” என்ற கோட்பாடு இந்திய பண்பாட்டின் முக்கிய அடையாளமாகக் கருதப்படுகிறது.தமிழ் நாவலாசிரியர்கள் இத்தகைய சிந்தனை மரபுகளை தங்களது படைப்புகளில் பல்வேறு வடிவங்களில் பதிவு செய்துள்ளனர். கிராமிய வாழ்க்கை, நிலம், நீர், மரங்கள், விவசாயம், மனித உறவுகள் போன்றவை நாவல்களில் முக்கிய இடம் பெறுகின்றன. மேலும் தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல் மற்றும் இயற்கை வளங்களின் அழிவு போன்ற காரணங்களால் உருவாகும் சுற்றுச்சூழல் பாதிப்புகளும் நாவல்களின் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றன. இன்றைய உலகில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிகப் பெரிய சவாலாக உருவெடுத்துள்ள நிலையில், தமிழ் நாவல்கள் மனிதனின் பொறுப்புணர்வை வளர்க்கும்

இலக்கிய ஆவணங்களாக விளங்குகின்றன. ஆகையால், தமிழ் நாவல்களில் இந்திய சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகின்றன என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இந்திய சிந்தனை மரபின் அடிப்படை கூறுகள்**

இந்திய சிந்தனை மரபு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான பண்பாட்டு மற்றும் தத்துவ அடித்தளத்தை கொண்டதாகும். அறம், ஆன்மிகம், மனிதநேயம், சமத்துவம், சகிப்புத்தன்மை மற்றும் இயற்கை நேசம் போன்ற உயரிய பண்புகள் இம்மரபின் முக்கிய கூறுகளாக விளங்குகின்றன. வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், சங்க இலக்கியங்கள் மற்றும் பக்தி இலக்கியங்கள் ஆகியவற்றின் மூலம் மனித வாழ்க்கையின் நோக்கம் அறநெறியுடன் வாழ்வதாக வலியுறுத்தப்படுகிறது. “அனைத்து உயிர்களும் ஒன்றே” என்ற கருணைச் சிந்தனையும், “**இயற்கையோடு இணைந்து வாழ்தல்”** என்ற வாழ்வியல் கோட்பாடும் இந்திய சிந்தனையின் அடிப்படையாக அமைந்துள்ளன. மேலும் அஹிம்சை, தர்மம், அன்பு, ஒற்றுமை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற கருத்துகள் மனித சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவையான விழுமியங்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய சிந்தனைகள் தமிழ் இலக்கியங்களிலும் குறிப்பாக நாவல்களிலும் பல்வேறு வடிவங்களில் பிரதிபலித்து, மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துகின்றன.

**தமிழ் நாவல்களின் வளர்ச்சியும் சமூகப் பின்னணியும்**

தமிழ் நாவல் இலக்கியம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி சமூக மாற்றங்களின் தாக்கத்துடன் வளர்ச்சி பெற்றது. ஆரம்ப கால தமிழ் நாவல்கள் அறநெறி, குடும்ப வாழ்க்கை மற்றும் சமூக ஒழுக்கம் போன்ற கருத்துகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டன. பின்னர் காலப்போக்கில் அரசியல், சாதி, பெண்ணியம், தொழிலாளர் வாழ்க்கை, கிராமிய சமூக அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் போன்ற பல்வேறு சமூக பிரச்சினைகள் நாவல்களின் கருப்பொருள்களாக மாறின. ஆங்கிலக் கல்வி, அச்சுத்தொழில் வளர்ச்சி மற்றும் மேற்கத்திய இலக்கியங்களின் தாக்கம் தமிழ் நாவல்களின் வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளாக அமைந்தன.

தமிழ் நாவல்கள் சமூகத்தின் உண்மை நிலைகளை பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றன. குறிப்பாக கிராமிய மக்களின் வாழ்க்கை, இயற்கை சார்ந்த வாழ்வியல், விவசாய கலாசாரம் மற்றும் மனித உறவுகள் ஆகியவை நாவல்களில் ஆழமாகச் சித்தரிக்கப்படுகின்றன. மேலும் நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் பொருளாதார மாற்றங்களால் உருவாகும் சமூகச் சிக்கல்களும் பல நாவல்களில் எடுத்துரைக்கப்படுகின்றன. இவ்வாறு தமிழ் நாவல்கள் சமூக மாற்றங்களையும் மனித வாழ்வியலையும் பதிவு செய்வதோடு இந்திய சிந்தனை மரபின் அடிப்படை விழுமியங்களையும் வெளிப்படுத்துகின்றன.

இந்தியத் தத்துவம் மனித வாழ்வின் உயர்ந்த நோக்கங்களை எடுத்துரைக்கும் ஆன்மிக மற்றும் அறவியல் சிந்தனைகளின் தொகுப்பாகும். தர்மம், கர்மம், அஹிம்சை, அன்பு, சமத்துவம் மற்றும் இயற்கையுடன் இணைந்து வாழ்தல் போன்ற கோட்பாடுகள் இந்தியத் தத்துவத்தின் அடிப்படையாகக் காணப்படுகின்றன. இத்தகைய சிந்தனைகள் தமிழ் இலக்கிய மரபிலும் ஆழமாகப் பதிந்துள்ளன. சங்க இலக்கியங்கள் மனிதனின் வாழ்வியலையும் இயற்கையுடனான உறவையும் நெருக்கமாக சித்தரிக்கின்றன. குறிப்பாக ஐந்திணைச் சிந்தனை மனித உணர்வுகளையும் இயற்கை சூழலையும் ஒன்றிணைத்து விளக்குகிறது.

திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங்கள் அறநெறி, மனிதநேயம் மற்றும் சமூக நீதி போன்ற கருத்துகளை வலியுறுத்துகின்றன. மேலும் பக்தி இலக்கியங்களில் இறைநம்பிக்கையோடு இயற்கை மீதான பக்தியும் வெளிப்படுகிறது. மனிதன் தனித்து வாழ முடியாது; சமூகம் மற்றும் இயற்கையோடு இணைந்தே வாழ வேண்டும் என்ற இந்தியத் தத்துவக்

கருத்து தமிழ் இலக்கியங்களில் தொடர்ந்து பிரதிபலிக்கப்படுகிறது. இதன் தாக்கம் பின்னாளில் உருவான தமிழ் நாவல்களிலும் காணப்படுவதால், இந்தியச் சிந்தனை மரபும் தமிழ் இலக்கிய மரபும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை என்பதை உணர முடிகிறது.

**இந்தியத் தத்துவமும் தமிழ் இலக்கிய மரபும்**

இந்தியத் தத்துவம் மனித வாழ்வை அறம், ஒழுக்கம் மற்றும் ஆன்மிக உணர்வுகளின் அடிப்படையில் வழிநடத்தும் சிந்தனை முறையாகும். மனிதன் இயற்கையுடனும் சமூகத்துடனும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற கருத்து இந்தியத் தத்துவத்தின் முக்கிய அம்சமாகக் காணப்படுகிறது. அன்பு, அறம், அஹிம்சை, கருணை, தர்மம் மற்றும் உயிர் சமத்துவம் போன்ற உயரிய விழுமியங்கள் வேதங்கள், உபநிடதங்கள் மற்றும் இதிகாசங்களின் மூலம் வலியுறுத்தப்படுகின்றன. இத்தகைய தத்துவ சிந்தனைகள் தமிழ் இலக்கிய மரபிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

சங்க இலக்கியங்கள் இயற்கை மற்றும் மனித வாழ்க்கையை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி எடுத்துரைக்கின்றன. குறிப்பாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணை அமைப்பு மனித உணர்வுகளையும் சூழலியல் வாழ்வியலையும் இணைத்து விளக்குகிறது. மேலும் திருக்குறள் அறநெறி, ஒழுக்கம் மற்றும் மனிதநேயத்தை வலியுறுத்தும் உலகப் பொதுமறையாக விளங்குகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் சமூக நீதி, அறம் மற்றும் ஆன்மிக சிந்தனைகள் முக்கிய இடம் பெறுகின்றன. இவ்வாறு இந்தியத் தத்துவத்தின் அடிப்படை கருத்துக்கள் தமிழ் இலக்கிய மரபில் பல்வேறு வடிவங்களில் பிரதிபலித்து, பின்னாளில் தமிழ் நாவல்களின் சிந்தனைப் போக்கையும் வடிவமைத்துள்ளன.

**இயற்கை வழிபாடு மற்றும் தமிழர் பண்பாடு**

“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்” **குறள் 742** 1

நல்ல நீர், வளமான நிலம், மலைகள், காடுகள் ஆகிய இயற்கை வளங்கள் ஒரு நாட்டின் உண்மையான பாதுகாப்பாக அமைகின்றன. தமிழர் பண்பாட்டில் இயற்கைக்கு மிக முக்கியமான இடம் அளிக்கப்பட்டுள்ளது. பண்டைய தமிழர்கள் இயற்கையை தெய்வமாகக் கருதி வழிபட்டனர். நிலம், நீர், மலை, காடு, மரம், சூரியன், சந்திரன் போன்ற இயற்கைச் சக்திகள் மனித வாழ்வின் அடிப்படையாகக் கருதப்பட்டதால் அவற்றை மதிக்கும் பண்பாடு உருவானது. சங்ககால இலக்கியங்களில் இயற்கையுடனான மனித வாழ்வின் நெருங்கிய தொடர்பு தெளிவாகப் பிரதிபலிக்கிறது. குறிப்பாக ஐந்திணை அமைப்பு மனித உணர்வுகளையும் இயற்கை சூழலையும் ஒன்றிணைத்து தமிழர் வாழ்வியலை வெளிப்படுத்துகிறது.

“மாயோன் மேய காடுறை உலகமும்” **தொல்காப்பியம், பொருளதிகாரம் 2**

பண்டைய தமிழர்கள் இயற்கையையும் தெய்வத்தையும் இணைத்துப் பார்த்தனர். காடு, மலை, கடல் போன்றவை வழிபாட்டின் கூறுகளாக விளங்கின. தமிழர்கள் மரங்களைத் தெய்வமாகக் கருதி வழிபட்டதோடு, ஆறுகள் மற்றும் மலைகளுக்கும் புனிதத் தன்மை அளித்தனர். மழையை வாழ்வின் ஆதாரமாகக் கருதி இந்திர வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. மேலும் விவசாய வாழ்க்கையை மையமாகக் கொண்ட தமிழர் சமூகத்தில் இயற்கை பாதுகாப்பு ஒரு பண்பாட்டு கடமையாகக் கருதப்பட்டது. “இயற்கையோடு இயைந்து வாழ்தல்” என்ற சிந்தனை தமிழர் மரபின் அடையாளமாக விளங்கியது. இத்தகைய இயற்கை வழிபாட்டு மரபுகள் தமிழ் இலக்கியங்களிலும், குறிப்பாக நாவல்களிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மனித–இயற்கை உறவை வலியுறுத்தும் வகையில் பிரதிபலிக்கின்றன.

**தமிழ் நாவல்களில் சுற்றுச்சூழல் சிந்தனையின் வெளிப்பாடு**

தமிழ் நாவல்கள் சமூக வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை எடுத்துரைப்பதோடு சுற்றுச்சூழல் சார்ந்த சிந்தனைகளையும் ஆழமாக வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக கிராமிய வாழ்க்கையை மையமாகக் கொண்ட நாவல்களில் நிலம், நீர், மரங்கள், காடுகள் மற்றும் விவசாயம் ஆகியவை மனித வாழ்வின் அத்தியாவசிய கூறுகளாக சித்தரிக்கப்படுகின்றன. மனிதன் இயற்கையோடு இணைந்து வாழும் வாழ்க்கைமுறையே நிலையான வாழ்வாகும் என்ற கருத்து பல தமிழ் நாவல்களில் வலியுறுத்தப்படுகிறது.

தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல் மற்றும் இயற்கை வளங்களின் சுரண்டல் காரணமாக உருவாகும் சுற்றுச்சூழல் பாதிப்புகளும் நாவல்களில் எடுத்துரைக்கப்படுகின்றன. நீர்நிலைகள் அழிவு, காடுகள் அழிப்பு, மண் வள இழப்பு மற்றும் மனித பேராசையால் ஏற்படும் இயற்கை சமநிலை மாற்றங்கள் போன்ற பிரச்சினைகள் சமூகப் பொறுப்புணர்வுடன் சித்தரிக்கப்படுகின்றன. மேலும் விவசாயிகளின் வாழ்க்கைச் சிக்கல்கள், மழை பற்றாக்குறை மற்றும் சுற்றுச்சூழல் அழிவால் ஏற்படும் மனித துயரங்கள் நாவல்களின் மூலம் வாசகர்களுக்கு உணர்த்தப்படுகின்றன. இவ்வாறு தமிழ் நாவல்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை உணர்த்தும் இலக்கிய ஆவணங்களாக விளங்குகின்றன.

**நிலம், நீர், காடு பற்றிய விழிப்புணர்வு**

“நீரின்றி அமையாது உலகு” **குறள் 20**. 3

உயிர்களின் வாழ்வாதாரமாக நீர் விளங்குகிறது. நீர் பாதுகாப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அடிப்படையாகும்.நிலம், நீர் மற்றும் காடு ஆகியவை மனித வாழ்வின் அடிப்படை இயற்கை வளங்களாகக் கருதப்படுகின்றன. இவ்வளங்கள் பாதுகாக்கப்பட்டால்தான் மனித சமூகம் நிலையான வளர்ச்சியை அடைய முடியும் என்ற விழிப்புணர்வு தமிழ் நாவல்களில் தெளிவாக வெளிப்படுகிறது. குறிப்பாக கிராமிய வாழ்க்கையை மையமாகக் கொண்ட நாவல்களில் நிலம் விவசாயத்தின் உயிராகவும், நீர் வாழ்வின் ஆதாரமாகவும், காடுகள் இயற்கைச் சமநிலையின் காவலராகவும் சித்தரிக்கப்படுகின்றன. மனிதனின் வாழ்வும் இயற்கை வளங்களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை என்பதையும் எழுத்தாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

நவீன காலத்தில் தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல் மற்றும் மனித பேராசை காரணமாக நில வள இழப்பு, நீர்நிலைகள் மாசுபாடு மற்றும் காடுகள் அழிவு போன்ற பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய சூழலியல் பாதிப்புகள் மனித வாழ்க்கைக்கும் சமூக அமைப்பிற்கும் தீவிரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை தமிழ் நாவல்கள் உணர்வுபூர்வமாக எடுத்துரைக்கின்றன. மேலும் மரநடுகை, நீர்நிலைகள் பாதுகாப்பு, இயற்கை வளங்களின் சிக்கனமான பயன்பாடு போன்ற கருத்துகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான பொறுப்புணர்வை உருவாக்குகின்றன. இவ்வாறு தமிழ் நாவல்கள் நிலம், நீர் மற்றும் காடுகளின் முக்கியத்துவத்தை உணர்த்தி, இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை சமூகத்தில் வலியுறுத்துகின்றன.

**மனிதன் – இயற்கை உறவு தமிழ்நாவல்களில்**

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” **திருவருட்பா. 4**

பயிர்கள் வாடுவதைப் பார்த்து நானும் துயருற்றேன் என்று வள்ளலார் கூறுகிறார். மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உணர்வுப்பூர்வமான உறவை இது வெளிப்படுத்துகிறது**.**

தமிழ் நாவல்களில் மனிதன் மற்றும் இயற்கை இடையிலான உறவு மிக நெருக்கமாகச் சித்தரிக்கப்படுகிறது. மனித வாழ்க்கை இயற்கையைச் சார்ந்தே அமைந்துள்ளது என்ற உண்மை பல நாவல்களின் மூலம் வெளிப்படுகிறது. கிராமிய வாழ்க்கையை மையமாகக் கொண்ட நாவல்களில் நிலம், மழை, ஆறு, மரங்கள், காடுகள் மற்றும் விவசாயம் போன்றவை மனித

வாழ்வோடு பின்னிப்பிணைந்ததாகக் காட்டப்படுகின்றன. மனிதனின் உணர்வுகள், வாழ்வியல் மற்றும் சமூக உறவுகள் கூட இயற்கை சூழலின் தாக்கத்தால் அமைவதாக தமிழ் நாவல்கள் எடுத்துரைக்கின்றன.

“காக்கை குருவி எங்கள் சாதி” **பாரதியார் கவிதைகள்**. 5

மனிதன் மட்டும் அல்லாமல் அனைத்து உயிர்களும் உலகின் அங்கங்களே என்பதை வலியுறுத்துகிறது. மேலும் மனிதன் மட்டும் அல்லாமல் அனைத்து உயிர்களும் உலகின் அங்கங்களே . மனிதன் இயற்கையோடு ஒற்றுமையாக வாழும்போது சமூகம் அமைதியும் வளமையும் பெறுகிறது என்ற கருத்தும் நாவல்களில் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் நவீன வளர்ச்சி, நகரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் காரணமாக மனிதன் இயற்கையிலிருந்து விலகிச் செல்கிறான் என்பதையும் பல படைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. இதன் விளைவாக நீர் பற்றாக்குறை, சுற்றுச்சூழல் மாசுபாடு, விவசாய பாதிப்பு மற்றும் உயிரின அழிவு போன்ற பிரச்சினைகள் உருவாகின்றன. இவ்வாறு தமிழ் நாவல்கள் மனிதன் இயற்கையை பாதுகாத்தாலே மனித வாழ்வும் பாதுகாக்கப்படும் என்ற விழிப்புணர்வை வாசகர்களிடம் ஏற்படுத்துகின்றன.

**கிராமிய வாழ்க்கை மற்றும் சூழலியல் பார்வை**

தமிழ் நாவல்களில் கிராமிய வாழ்க்கை சூழலியல் பார்வையின் முக்கிய மையமாக விளங்குகிறது. கிராமங்கள் இயற்கையோடு நெருக்கமாக இணைந்த வாழ்க்கை முறையை கொண்டவை என்பதால் நிலம், நீர், காடு, காலநிலை மற்றும் விவசாயம் ஆகியவை அங்கு வாழ்வின் அத்தியாவசிய கூறுகளாக உள்ளன. “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்” **குறள் எண் 1033**. **6**. நிலத்தோடு இணைந்து உழைத்து வாழ்பவர்களே உண்மையில் சமூகத்தின் அடித்தளமாக உள்ளனர். கிராமிய மக்களின் அன்றாட வாழ்க்கை இயற்கைச் சூழலின் மாற்றங்களோடு நேரடியாக தொடர்புடையதாக இருப்பதால், நாவல்களில் அது மிக நுணுக்கமாகப் பதிவு செய்யப்படுகிறது. மழை, வறட்சி, பருவநிலை மாற்றங்கள் போன்றவை கிராம மக்களின் பொருளாதாரத்தையும் சமூக வாழ்க்கையையும் தீர்மானிக்கும் காரணிகளாக சித்தரிக்கப்படுகின்றன.

மேலும் கிராமிய வாழ்க்கை மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான ஒற்றுமையான உறவை வெளிப்படுத்துகிறது. விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் பாரம்பரிய தொழில்கள் அனைத்தும் இயற்கை வளங்களை சார்ந்தவையாக இருப்பதால், அவற்றை பாதுகாப்பது சமூகத்தின் பொறுப்பாகக் கருதப்படுகிறது. ஆனால் நவீனமயமாக்கல் காரணமாக கிராமிய சூழல் மாற்றமடைந்து, இயற்கை வளங்கள் குறைந்து, வாழ்க்கை முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய மாற்றங்களை தமிழ் நாவல்கள் சமூக அக்கறையுடன் பதிவு செய்து, நிலையான வளர்ச்சிக்காக இயற்கை பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

**தொழில்மயமாக்கலும் சுற்றுச்சூழல் பாதிப்புகளும்**

தமிழ் நாவல்களில் தொழில்மயமாக்கல் மனித வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களும் அதனால் உருவாகும் சுற்றுச்சூழல் பாதிப்புகளும் முக்கியமாகச் சித்தரிக்கப்படுகின்றன. தொழிற்சாலைகள் வளர்ச்சி, நகர விரிவு மற்றும் பொருளாதார முன்னேற்றம் போன்றவை ஒரு பக்கம் சமூக வளர்ச்சியை உருவாக்கினாலும், மறுபக்கம் இயற்கை வளங்களின் சுரண்டலுக்கும் சுற்றுச்சூழல் சமநிலைக் குலைவிற்கும் காரணமாகின்றன. நிலம் தொழிற்துறை பயன்பாட்டிற்காக மாற்றப்படுதல், நீர்நிலைகள் மாசுபடுதல் மற்றும் காற்று மாசு அதிகரித்தல் போன்றவை மனித வாழ்க்கையை நேரடியாகப் பாதிக்கின்றன.

பல தமிழ் நாவல்களில் தொழில்மயமாக்கலால் விவசாய நிலங்கள் குறைவது, கிராம மக்கள் நகரங்களை நோக்கி இடம்பெயர்வது மற்றும் பாரம்பரிய வாழ்க்கை முறைகள் சிதைவடைவது

போன்ற சமூக மாற்றங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக உணவு உற்பத்தி குறைதல், குடிநீர் பற்றாக்குறை மற்றும் சுகாதாரச் சிக்கல்கள் போன்ற பிரச்சினைகள் உருவாகின்றன. இவ்வாறு தொழில்மயமாக்கல் ஒருபுறம் முன்னேற்றத்தைத் தரினாலும், மறுபுறம் சுற்றுச்சூழல் மற்றும் மனித வாழ்க்கைக்கு ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பதை தமிழ் நாவல்கள் உணர்த்துகின்றன.

**பெண்ணியம் மற்றும் சூழலியல் அணுகுமுறை**

தமிழ் நாவல்களில் பெண்ணிய சிந்தனையும் சூழலியல் பார்வையும் ஒருங்கிணைந்து வெளிப்படும் இடங்கள் குறிப்பிடத்தக்கவை. பெண்ணியம் என்பது பெண்களின் சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகளை வலியுறுத்தும் சிந்தனையாகும். அதேசமயம் சூழலியல் அணுகுமுறை மனிதன் மற்றும் இயற்கை இடையிலான சமநிலையை பாதுகாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும். இந்த இரு சிந்தனைகளும் "ஒடுக்கப்படுதல்" மற்றும் "சுரண்டல்" என்ற பொதுவான அனுபவத்தின் அடிப்படையில் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகக் கருதப்படுகின்றன.

பல தமிழ் நாவல்களில் பெண்களின் வாழ்க்கை நிலம், வீடு, நீர் மற்றும் இயற்கை வளங்களோடு இணைந்ததாகச் சித்தரிக்கப்படுகிறது. இயற்கையைப் போலவே பெண்களும் சமூகத்தில் பல்வேறு வகை சுரண்டல்களுக்கு உள்ளாகின்றனர் என்ற கருத்து சில படைப்புகளில் வெளிப்படுகிறது. அதேபோல் சுற்றுச்சூழல் அழிவு பெண்களின் அன்றாட வாழ்க்கையையும், குறிப்பாக கிராமியப் பெண்களின் வேலைப்பளு, நீர்ப்பிரச்சினை மற்றும் வாழ்வாதார சிக்கல்களை அதிகரிக்கிறது என்பதும் நாவல்களில் காட்டப்படுகிறது. இவ்வாறு பெண்ணியமும் சூழலியலும் ஒன்றோடொன்று தொடர்புடைய சமூகப் பிரச்சினைகளை எடுத்துரைத்து, சமத்துவமான மற்றும் நிலையான சமூகத்தை உருவாக்கும் அவசியத்தை தமிழ் நாவல்கள் வலியுறுத்துகின்றன.

**சமகால தமிழ் நாவல்களில் பசுமை அரசியல்**

சமகால தமிழ் நாவல்களில் "பசுமை அரசியல்" என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பை மையமாகக் கொண்ட சமூக மற்றும் அரசியல் சிந்தனையாக வெளிப்படுகிறது. இயற்கை வளங்களின் பாதுகாப்பு, நிலம்–நீர்–காடு ஆகியவற்றின் உரிமை, மற்றும் வளர்ச்சி என்ற பெயரில் நடைபெறும் இயற்கை சுரண்டலுக்கு எதிரான குரல் ஆகியவை இத்தகைய நாவல்களின் முக்கிய கருப்பொருள்களாகும். சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தனிப்பட்ட சிக்கல்களாக அல்லாது, அரசியல் மற்றும் அதிகார அமைப்புகளோடு இணைந்த பெரிய பிரச்சினையாகப் பார்க்கப்படுகின்றன.

பல சமகால நாவல்கள் தொழிற்துறை விரிவாக்கம், பெரிய திட்டங்கள், நிலம் கைப்பற்றல் மற்றும் இயற்கை வளங்களை தனியார் லாபத்திற்காக பயன்படுத்துதல் போன்ற செயல்பாடுகளை விமர்சனப் பார்வையுடன் அணுகுகின்றன. இதன் மூலம் பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது, கிராம மக்கள் இடம்பெயர்வு மற்றும் இயற்கை சமநிலை குலைவு போன்ற விளைவுகள் வெளிப்படுகின்றன. இவ்வாறு தமிழ் நாவல்கள் சுற்றுச்சூழலை பாதுகாப்பது ஒரு சமூகப் பொறுப்பாக மட்டுமன்றி அரசியல் விழிப்புணர்வாகவும் பார்க்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.

**இந்திய அறவியல் சிந்தனைகளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்**

இந்திய அறவியல் சிந்தனைகள் மனித வாழ்க்கையை ஒழுக்கம், தர்மம் மற்றும் கருணை ஆகிய அடிப்படைகளில் அமைத்துக் காண்கின்றன. "தர்மம்" என்பது மனிதன் தனது கடமைகளைச் சரியாக நிறைவேற்றுவதுடன், பிற உயிர்களுக்கும் இயற்கைக்கும் தீங்கு செய்யாமல் வாழ வேண்டும் என்ற உயரிய கோட்பாட்டை உள்ளடக்கியதாகும். அஹிம்சை, உயிர் நேசம், எளிமை, பொறுப்புணர்வு மற்றும் சமநிலை போன்ற விழுமியங்கள் இந்திய அறவியல் மரபின் முக்கிய

அம்சங்களாகும். இத்தகைய சிந்தனைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் நேரடியாக இணைந்தவை, ஏனெனில் இயற்கையை சேதப்படுத்துவது அறநெறிக்கு எதிரான செயல் எனக் கருதப்படுகிறது.
தமிழ் நாவல்களிலும் இந்த அறவியல் சிந்தனைகள் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன. மனிதன் இயற்கையை சுரண்டாமல், அதனை பாதுகாத்து வாழ வேண்டும் என்ற கருத்து நாவல்களின் வழியாக வலியுறுத்தப்படுகிறது. நிலம், நீர், காடு போன்ற இயற்கை வளங்களைப் பாதுகாப்பது சமூகத்தின் நெறி கடமையாகக் காட்டப்படுகிறது. மேலும் இயற்கை அழிவால் ஏற்படும் சமூக துயரங்கள், மனிதன் செய்த தவறுகளின் விளைவாகவே விளங்குகின்றன என்ற அறநெறி பார்வையும் நாவல்களில் இடம் பெறுகிறது. இவ்வாறு இந்திய அறவியல் சிந்தனைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு தத்துவ அடித்தளமாக அமைந்து, மனிதன்–இயற்கை உறவை நெறிப்படுத்துகின்றன.

**இயற்கை அழிவின் சமூக விளைவுகள்**

இயற்கை அழிவு என்பது நிலம், நீர், காடு போன்ற இயற்கை வளங்கள் சுரண்டப்படுதல், மாசுபடுதல் மற்றும் சமநிலை குலைதல் ஆகியவற்றின் விளைவாக உருவாகும் ஒரு முக்கியமான சமூகப் பிரச்சினையாகும். தமிழ் நாவல்களில் இத்தகைய இயற்கை அழிவின் தாக்கங்கள் மனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் ஆழமான மாற்றங்கள் விரிவாகச் சித்தரிக்கப்படுகின்றன. குறிப்பாக விவசாய நிலங்களின் குறைவு, நீர்வளங்களின் பற்றாக்குறை மற்றும் காடுகள் அழிவு ஆகியவை மக்களின் வாழ்வாதாரத்தை நேரடியாகப் பாதிக்கின்றன.
இயற்கை அழிவின் காரணமாக கிராமப்புற மக்கள் வேலைவாய்ப்பு இழந்து நகரங்களை நோக்கி இடம்பெயர வேண்டிய நிலை உருவாகிறது. இதனால் நகரங்களில் மக்கள் நெரிசல், குடிநீர் பற்றாக்குறை, சுகாதாரச் சிக்கல்கள் மற்றும் வறுமை போன்ற பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. மேலும் விவசாய உற்பத்தி குறைவதால் உணவு பாதுகாப்பு பாதிக்கப்படுகிறது. இயற்கை சமநிலை குலைவதால் பருவநிலை மாற்றங்கள், வெப்பம் அதிகரிப்பு மற்றும் நோய்களின் பரவல் போன்ற சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரச் சிக்கல்களும் உருவாகின்றன. இவ்வாறு தமிழ் நாவல்கள் இயற்கை அழிவு என்பது தனிப்பட்ட பிரச்சினையல்ல, மாறாக முழு சமூகத்தையும் பாதிக்கும் பெரிய சிக்கல் என்பதை உணர்த்துகின்றன.

**தமிழ் நாவலாசிரியர்களின் சூழலியல் பார்வைகள்**

தமிழ் நாவலாசிரியர்கள் தங்கள் படைப்புகளில் மனிதன் மற்றும் இயற்கை இடையிலான உறவை ஆழமாக ஆராய்ந்து, சூழலியல் சார்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களின் பார்வையில் இயற்கை என்பது வெறும் வளங்களின் தொகுப்பல்ல; அது மனித வாழ்வின் அடிப்படை ஆதாரமும் சமூக சமநிலையின் அச்சாணியும் ஆகும். இதனால் பல நாவல்களில் நிலம், நீர், காடு, மலை மற்றும் விவசாயம் ஆகியவை கதையின் பின்னணியாக மட்டுமன்றி, முக்கியமான கதாபாத்திரங்களாகவே சித்தரிக்கப்படுகின்றன.
சில நாவலாசிரியர்கள் கிராமிய வாழ்க்கையின் மூலம் இயற்கையோடு இணைந்த வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர். மற்ற சிலர் தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கலால் ஏற்படும் சுற்றுச்சூழல் அழிவை விமர்சனக் கோணத்தில் பதிவு செய்துள்ளனர். மேலும் மனித பேராசை, வள சுரண்டல் மற்றும் இயற்கை சமநிலை குலைவு ஆகியவற்றின் விளைவுகளை சமூகப் பொறுப்புணர்வுடன் எடுத்துரைத்துள்ளனர். இவ்வாறு தமிழ் நாவலாசிரியர்கள் சூழலியல் பார்வையை தத்துவமாகவும் சமூக விழிப்புணர்வாகவும் வளர்த்து, வாசகர்களிடையே இயற்கை பாதுகாப்பின் அவசியத்தை உணர்த்துகின்றனர்.

**எதிர்கால தலைமுறைக்கும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வும்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது இன்றைய தலைமுறையின் கடமையாக மட்டுமல்லாமல் எதிர்கால தலைமுறையின் வாழ்வாதாரத்தையும் தீர்மானிக்கும் ஒரு முக்கிய பொறுப்பாகும்.

இயற்கை வளங்கள் அளவுக்கு மீறி பயன்படுத்தப்படும்போது நிலம், நீர் மற்றும் காடுகளின் சமநிலை குலைந்து, அடுத்த தலைமுறைக்கு வாழ்வதற்கான சூழல் சிக்கலாக மாறுகிறது. இதனை உணர்த்தும் வகையில் தமிழ் நாவல்கள் மனிதனின் செயல்கள் எதிர்கால சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுகளை உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்துகின்றன.

மனிதன் இயற்கையை பாதுகாப்பதன் மூலம் மட்டுமே நிலையான வளர்ச்சியை உறுதி செய்ய முடியும் என்ற கருத்து இவ்வகை படைப்புகளில் வலியுறுத்தப்படுகிறது. மரம் நடுதல், நீர்வள பாதுகாப்பு, மண் வள பராமரிப்பு மற்றும் மாசு கட்டுப்பாடு போன்ற செயல்கள் எதிர்கால தலைமுறைக்கான பொறுப்பாகக் காட்டப்படுகின்றன. மேலும் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு சமூகத்தில் பரவ வேண்டும் என்பதும் முக்கியமான கருத்தாக முன்வைக்கப்படுகிறது. இவ்வாறு தமிழ் நாவல்கள் எதிர்கால தலைமுறைக்கான பொறுப்புணர்வை வளர்த்து, இயற்கையை பாதுகாப்பது மனிதகுலத்தின் நிலைத்த வாழ்வுக்கு அவசியம் என்பதை உணர்த்துகின்றன.

**முடிவுரை**

“யாதும் ஊரே யாவரும் கேளிர்”

மூலம்: **புறநானூறு 192. 7**

உலகம் முழுவதும் நமது ஊர்; அனைத்து மனிதர்களும் நமது உறவினர்கள். இயற்கை மற்றும் மனிதகுல ஒற்றுமையை உணர்த்தும் உலகப் பொதுமைச் சிந்தனை ஒவ்வொரு மனிதனி டத்திலும் இருக்க வேண்டும். தமிழ் நாவல்கள் மனித வாழ்க்கை, சமூக மாற்றங்கள் மற்றும் இயற்கை சூழல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து வெளிப்படுத்தும் முக்கிய இலக்கிய வடிவமாகும். இக்கட்டுரையின் மூலம் தமிழ் நாவல்களில் இந்திய சிந்தனை மரபின் அடிப்படை விழுமியங்கள், இயற்கை வழிபாட்டு மரபுகள் மற்றும் அறவியல் கருத்துகள் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகின்றன என்பதை உணர முடிகிறது. மேலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வும், மனிதன்–இயற்கை உறவின் முக்கியத்துவமும் நாவல்களின் வழியாக ஆழமாக வெளிப்படுகின்றன. நிலம், நீர், காடு போன்ற இயற்கை வளங்களின் பாதுகாப்பு, தொழில்மயமாக்கலால் ஏற்படும் பாதிப்புகள், கிராமிய வாழ்க்கையின் சூழலியல் பார்வை மற்றும் பசுமை அரசியல் போன்ற பல்வேறு அம்சங்கள் தமிழ் நாவல்களில் சமூக அக்கறையுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு இலக்கியம் வெறும் கதை சொல்லும் கருவியாக மட்டுமல்லாது, சமூக விழிப்புணர்வை உருவாக்கும் சக்திவாய்ந்த ஊடகமாகவும் செயல்படுகிறது. எனவே, தமிழ் நாவல்களில் வெளிப்படும் இந்திய சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும் மனிதனுக்கு அறநெறியுடனும் இயற்கையுடனும் இணைந்த நிலையான வாழ்க்கையை நோக்கி வழிகாட்டுகின்றன என்பது தெளிவாகிறது.

**அடிக்குறிப்பு:**

1. திருவள்ளுவர், திருக்குறள், குறள் 742, அரண் அதிகாரம்.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம்
3. திருவள்ளுவர், திருக்குறள், குறள் 20.
4. வள்ளலார் இராமலிங்க அடிகள், திருவருட்பா, ஆறாம் திருமுறை
5. சுப்பிரமணிய பாரதி, பாரதியார் கவிதைகள்
6. திருக்குறள், உழவு அதிகாரம். – குறள் எண் 1033.
7. கணியன் பூங்குன்றனார், புறநானூறு, பாடல் 192.

**துணை நூல் பட்டியல்**

[1.] தமிழ்ச்செல்வன், ப. (2018). *தமிழ் நாவல் வளர்ச்சி வரலாறு*. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

[2.] முத்தையா, க. (2016). *தமிழ் இலக்கிய வரலாறு*. சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

[3.] சுப்பிரமணியன், வ. (2019). *சுற்றுச்சூழல் இலக்கிய ஆய்வுகள்*. மதுரை: குமரன் பதிப்பகம்.

[4.] பாலசுப்பிரமணியன், ச. (2017). *இந்தியத் தத்துவ மரபு*. சென்னை: பாரதி புத்தகாலயம்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 14.சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல்

**முனைவர்.செ.மோகனசுந்தரி,**
தமிழ் ஆர்வலர், திருச்சிராப்பள்ளி-**02**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்களில் இயற்கையும் சுற்றுச் சூழலும் பிரிக்க முடியாத அங்கமாக விளங்கியுள்ளன. நிலம், நீர், காற்று பல்லுரயிரியலைப் பாதுகாக்கும் சூழலியல் சிந்தனைகள் பழந்தமிழரிடம் இயல்பாகவே இருந்தன. புழந்தமிழர் நிலத்தை வெறும் இடமாக பார்க்காமல், அதன் தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்களின் வாழ்வியலோடு ஒன்றிணைத்துப் பார்த்தனர். ஐவகை நிலங்களும் சுற்றுச்சூழல் சமநிலையை உணர்த்துகின்றன. இயற்கையின் அழகைப் போற்றுவதோடு, சுற்றுச்சூழல் மாசுபாடுகள், காடழிப்பு மற்றும் பருவநிலை மாற்றங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. சுங்க தமிழர் தாம் வாழும் நிலத்தையோ, நிகழும் பொழுதையோ நிற்கும் செடியையோ எதையுமே தம்முடைய அகவாழ்வுக்குப் புறமாகக் கருதவில்லை சங்ககால மக்கள் சுற்றுச்சூழலுக்கேற்ப தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் சங்க கால மக்களும், மன்னர்களும் இயற்கையோடு ஒட்டி வாழ்வதிலும் மிகுந்த அக்கறையோடு இருந்ததை பல சங்க இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**முன்னுரை**

சுற்றுச்சூழல் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தாவரங்கள், விலங்குகள் பற்றிய அறிவியல் துறையாகும். இத்துறையானது சூழலுக்கும் உயிரினங்களுக்கும் இடையிலான உறவை ஆராயும் ஒரு துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. சங்க இலக்கியங்கள் பொதுவாகவே முதல், கரு உரிப்பொருட்களை விளக்குகின்றன. சங்க அகப்பாடல்களில் இக்கருத்தின் ஆதிக்கத்தைத் தெளிவாகக் காணலாம். பழந்தமிழர் இடத்தில் காணப்பட்ட சுற்றுச்சூழல் தொடர்பான செய்திகளை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

**சூழல்**

குறிப்பிட்ட இடத்தில் உள்ள தாவரம் மற்றும் விலங்குகள் அனைத்தையும் உள்ளடக்கியதே சூழல் என்பதாகும். சூழல் என்றால் சுற்றுப்புறம் என்று கோனார் கையகராதி விளக்கம் தருகின்றது' சூழலை ஆங்கிலத்தில், Enivironment என்பர். இதன் பொருள் "The Surroundings In Which A Person, Animals Or Plants Lives. The Natural World." என Oxford English Mini Dictionary பொருள் தருகின்றது.

சங்க செய்யுள்கள் பலவற்றிலும் நிலம் நீர் வழி காற்று என்னும் ஐம்பூதங்கள் பற்றிய விழிப்புணர்வும் அறிவு தெளிவும் இருந்திருக்கின்றது. இதற்கு பின்வரும் குறுந்தொகைச் செய்யுட்களைச் சான்று காட்டலாம்.

**"நிலத்தினும் நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர்அளவு இன்றே"...**

**'நிலம் தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்**
**விலங்கு இரு முந்நீர் காலிலன் செல்லார்"...**

என்ற இரு பாடல்களும் சூழல் பற்றிய தெளிவு பழந்தமிழர்களிடையே நிலவி இருந்தமைக்கு சான்றாகின்றது.

**தமிழ் பண்பாடும் சுற்றுச்சூழலும்**

தமிழர்கள் இயற்கை சார்ந்த வாழ்வை மேற்கொண்டவர்கள் என்பதை சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை உள்ள சுற்றுச்சூழல் சார்ந்த வெளிப்பாடுகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்கிற வகைப்பாடு நிலங்களும் வழிபடு தெய்வங்களும் பாடும் கருவிற்கும் வாழும் மனநிலைக்கும் பொதுவாக்கப்பட்டதிலிருந்து இது உணரப்படுகிறது. நிலத்தின் கருப்பொருள் உரிப்பொருள் ஆகியவற்றை அதன் உயிர் கோலத்தின் அடிப்படையில் முடிவு செய்து அவற்றின் அடிப்படையில் இலக்கியங்களை நெறியோடு வடித்த ஒழுங்கமைதியைப் பண்டைய தமிழ் இலக்கியங்களில் காண முடிகிறது. தாங்கள் வாழும் பகுதியை அணு அணுவாக ரசித்து அவற்றின் நுட்பத்தைப் புரிந்து கொண்டு அவற்றை முறையாகப் பயன்படுத்தி மூலாதாரங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் வாழ்பவர்களால் மட்டுமே இப்படிப்பட்ட அணுகுமுறையை இயற்கையோடு ஊடாட முடியும். மண் குறித்தும், தாவரங்கள் குறித்தும், உயிரினங்கள் குறித்தும் அதீத ஈடுபாடு அவர்களுக்கு இருந்தது என்பதை சங்க இலக்கியங்களின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் இயற்கையை நேசித்தார்கள் என்பதும் அதை உற்று நோக்கினார்கள் என்பதும் அவற்றை மேம்போக்காகப் படிக்கின்ற போது உணரலாம். அதே நேரத்தில் ஆழமாகப் படிக்கின்ற போது அவற்றையும் சக உயிர்களாகக் கருதி போற்றியதை அறிந்து கொள்ளலாம்.

**சுற்றுச்சூழலியல் சிந்தனை**

உலகம் உயிர் வாழ்வதற்கு மட்டும் உருவானதன்று. ஓர் அறிவு உயிரினம் முதல் ஆறறிவு உயிரினமான மனிதன் உட்பட அனைத்தும் உலகத்தைப் பகிர்ந்து கொள்கின்றன. இவ்வுலகம் அனைத்து உயிர்களுக்கும் அவற்றுக்கான உரிமைகளோடு வாழ்வதற்கு என்று அமைந்திருக்கின்றது. நிலம், நீர், காற்று அனைத்தும் அனைவருக்கும் உரிமையானது. இதனை ஜே. ஆர் லட்சுமி என்பவர்,

சுற்றுச்சூழல் என்பது மண், மழை, நீர், காடு, கடல், ஆறு, குளம் போன்றவையும் அவற்றில் அமைந்த உயிர்களையும் கொண்டது. உயிரினங்களைக் கொண்ட இவ்வுலகினை உயிரினச் சூழல் என்று அழைப்பர். இன்னும் விரிவாக நோக்கினால் சுற்றுச்சூழல் என்பது நிலம், நீர், காற்று, வானவெளி, வெப்பம் ஆகியவற்றையும் மனிதன் உருவாக்கும் ஒழுங்கமைப்புகளையும் வாழ்க்கை முறை, கலாச்சாரம், தொழில்நுட்பம், சமூகம் பொருளாதாரம், சட்ட அமைப்பு, அரசியல், சுகாதாரம் முறைகளையும் தக்க வகையில் உள்ளடக்கியது ஆகும். (சுற்றுச்சூழலியல் கல்வி திட்டம்,ப.1)

என்கிறார். ஆனால் இன்றோ மனிதர்கள் மற்றும் அவர்தம் வழி தோன்றல்கள் எதையும் விட்டு வைக்காமல் உரிமை ஆக்குவதோடு பிற உயிர்களின் உரிமைகளைக் கைக்கொள்கின்றனர். இதனால் தான் உயிரின சமநிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

**தொல்காப்பியரும் சூழலியலும்**

மனித வாழ்வின் ஒவ்வொரு படிநிலையும் இயற்கைச் சூழலிலேயே அமைந்ததைத் தொல்காப்பியர்,

**"முதல் கரு உரிப்பொருள் என்று மூன்றே**
**நுவலும் காலை முறைசிறந் தனவே**

பாடலுள் பயின்றவை நாடும் காலை"(பொருள்.அகம்.,நூ.3)

என்று எடுத்தியம்புகிறார் முதலும் கருவும் இயற்கைச் சூழலை பற்றியன உரிப்பொருள் மக்கள் ஒழுகல் ஆறு பற்றியன சுற்றுச்சூழலும் மனித வாழ்வும் ஒரு நிலை உடையன என்பது தெளிவுபடுகிறது.

**குறுந்தொகை**

குறுந்தொகையில் முல்லை மலர்கள் பூத்துக் குலுங்கும் நிலப்பகுதியில் மரங்கள் சூழ்ந்த வனங்களாகவும் இருப்பதை இலக்கியங்கள் சுட்டுகின்றன. உலக நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு வனங்களால் நிறைந்தவை. மரங்கள் வளர்வதற்கு உகந்த எல்லா பகுதிகளும் காடுகள் ஆகும். வனங்கள் நீர் வளங்களின் ஆதாரங்கள். வனங்கள் பூமியின் நுரையீரல் என்று நிலவியலாளர்கள் கூறுவர். நாம் சுவாசிக்க தூய்மையான காற்று, பருகுவதற்கு சுத்தமான நீர், உண்பதற்கு உணவு, கிழங்கு வகைகள் என வனங்கள் தரும் வளங்கள் ஏராளம். இப்படி வனங்கள் நிறைந்த முல்லை நிலம் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களைப் பரவசப்படுத்தும் நிலைக்கலன்களாகச் செயல்படுவதை இலக்கியங்களால் அறிய முடிகிறது. மேலும்,

சங்க காலத்தில் வேதியல் உரங்கள் எதிர்கால சந்ததிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்று முன்னோர்கள் அறிந்து இருந்ததால் வேளாண்மைக்கு பயன்படுத்தப்படும் நிலத்தை மரங்களின் சாம்பலைக் கொண்டும் பயன்படுத்தி உள்ளனர்.(குறுந்.,பா.98, 291) பயன்படாத பண்படுத்த முடியாத காட்டில் உள்ள மரங்களை எரித்து சாம்பலை உரமாக்கி உள்ளனர். (முனைவர் சு.பேச்சியம்மாள், ப.8)

என்று மரங்களின் முக்கியத்துவத்தைப் பேச்சியம்மாள் தன் கட்டுரையில் பதிவு செய்துள்ளார். மேலும்,முல்லை திணையில் இயற்கை சூழலில் மாற்றம் ஏற்பட்டு மழை இல்லாத போனால் என்னவாகும் என்பதை,

**"கொன்றைஅம் பகவீ...**
**காயா பூங்கெழு பெருஞ்சினை(குறுந்.,பா 83:1-5)**

என்ற வரிகளில் கொன்றை மலர்களும் பெரிய கொம்புகளுடன் கூடிய காயா மலர்களும் மலை இல்லாமல் வாடி வருந்துவதை அறியலாம். ஆக வனநிலமாகிய முல்லை நிலம் மழையால் செழித்தும், அது பொய்த்தால் வாடியும் இருப்பதை முல்லைத்திணை பாடல்களில் அறிந்து கொள்ள முடிகிறது.

மழை நீரை பசு மட்கலத்துள் பெய்து சுடப்படாத பசுமண்ணாலாகிய பாண்டத்தைக் கரையாமல் தாங்க முயல்வாரைப் போன்றது. தன்னுடைய முயற்சி என்றும் பசுமட்கலம் அழிதல் ஒருதலை ஆதலின் காமத்தால் தன் நெஞ்சு அழிதலும் ஒரு தலை என்று தலைவன் வருந்தினான்.

அக்காலத்தில் பசுமண்ணாளாகியப் பாண்டத்தை பயன்படுத்தியதோடு மண்வளத்தைப் பாதுகாத்து மக்கள் தங்கள் ஆரோக்கியத்தையும் பேணி பாதுகாத்து உள்ளனர். (முனைவர். இரா.பீரித்தா.,ப.194)

செம்மண் நிலத்தில் பெய்த மழை நீர் மண்ணோடு கலந்து அதன் நிறத்தையும் சுவையையும் பெற்று தன் தன்மை மாறி ஒன்றுபடுவது போல இருவர் உள்ளங்களும் தம்முல் கலந்து ஒன்றாயின. மேகம் வானிலும் செம்புலம் தரையிலும் வெவ்வேறு இடங்களில் இருப்பினும் உரிய காலம் வரும்போது செம்புலம் மழை நீரை பெற்று மண்ணிற்கு வளம் சேர்த்து விளைச்சல் பெருகி மக்கள் வளமுடன் வாழ துணைப் புரிகின்றது. இதை,

**"யாயும் ஞாயும் யாராகிரோ?**

**... அன்புடை நெஞ்சம் தான் கலந்தனவே(குறுந் .,பா.373:1-2)**

மேற்கண்ட அடிகளின் மூலம் புலனாகிறது.

**அகநானூறு**

பசுக்கள் நீர் உண்ணும் பொருட்டு கோவலர் தான் தோண்டிய கிணற்றினின்றும் வளைந்த வாயினையுடைய பத்தலால் இறைத்த நீர் ஒழுகிச்சென்று சிறு குமிழியில் நிரம்பியது. கதிரவன் காய்ந்தமையால் அந்நீரும் வற்றி குழியும் காய்ந்தது. இதனால் நீர் உண்ண வந்த பெரிய யானை நீர் இல்லாதது கண்டு வருத்தமுற்றுச் சென்றதாக கூறுவதை

**"....... பல்வையின் பயநிரை சேர்ந்த பாழ்நாட்டு ஆங்கனண்**

**நெடு விளிக் கோவலர் கூவல் தோண்டிய**

**கொடுவாய்ப் பத்தல் வார்ந்து உகு சிறுகுழி**

**நீர்க்காய் வருத்தமொடு சேர்விடம் பெரித**

**பெருங்களிரு மதித்து அடியகத்து"(அகம் 155:13-14)**

என்னும் அகநானூற்றுப் பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றது. அதோடு கோடைக்காலத்து வெப்பத்தின் காரணத்தினால் காடு தன் அழகை இழந்து நிற்பதாக முள்ளியூர்ப் பூதியார் தன் பாடலில் கூறுகின்றார். மேலும்,

**"காடுகவின் அழிய உரைஇ, கோடை**

**நின்றுதின விளிந்த அம்பணை"(அகம் 173:13-14)**

இவ்வரிகள் மூலம் அதனை அறிந்து கொள்ளலாம்.

**மதுரைக்காஞ்சி**

காற்று மாசுபடுதலை கட்டுப்படுத்தும் செயல்திட்டமாக ஒவ்வொரு நகரத்தைச் சுற்றிலும் பசுமை வளையங்கள் ஏற்படுத்துதல் வேண்டும் என்று சுற்றுச்சூழல் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பழந்தமிழர்களிடம் காற்று மாசுபாட்டினைத் தடுக்கும் செயல் திட்டம் இருந்தமையைப் பட்டினப்பாலை பதிவு செய்துள்ளது.

**"கார் கரும்பின் கமல் ஆலைத்**

**தீத்தெறுவின் கவின்வாடி**

**நீர் தெரறுவின் நீள்நெய்தல்**

**..... ..... ...... ..... ......**

**கோள்தெங்கின் குலைவாழைக்**

**காய்க்கமுகின் கமல் மஞ்சள்**

**இனமாவின் இணர்ப்பெண்ணை**

**முதற்சேம்பின் முலைஇஞ்சி" (பட்டினப்பாலை.9-17)**

மரங்கள் தங்கள் இலைப்பரப்பு மூலம் காற்றிலுள்ள தூசுக்களையும் பிற வாயு மாசுக்களையும் பிடித்து வைத்துக் கொள்கின்றன. ஒரு ஹெக்டேர் பரப்பில் உள்ள வளமான காடுகள் ஆண்டுக்கு ஆண்டொன்றுக்கு 30 டன் தூசுக்களை தன் இலைப் பரப்பில் பிடித்துக் கொள்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.(ஜே. தர்மராஜ், சுற்றுச்சூழல் இயல், ப.164)

இத்தகைய அறிவியல் உண்மையைப் பட்டினப்பாலை பதிவு செய்ய தவறவில்லை. கரும்பு ஆலைகளில் இடையறாது புகை வந்து கொண்டிருப்பதால் அருகில் உள்ள நெய்தல் மலர் அழகிழந்து காணப்படுதல் 'கவின்வாடி நீள் நெய்தல்' என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. காற்றில் கலந்த மாசுக்களை நெய்தல் பிடித்து வைத்தமை இதன் மூலம் தெளிவாகிறது. காற்று மாசடைதல் இத்தகைய பசுமை வளையங்களால் தடுக்கப்பட்டுள்ளன என்பது இதன் மூலம் வெளிப்படுகிறது.

**முடிவுரை**

இயற்கையின் தொகுப்பில் மனிதனும் மற்ற உயிர்களும் மண்ணுலகச் சூழலும் முக்கிய பங்கு வைக்கின்றன. இயற்கையின் எழிலார்ந்த கவர்ச்சி நிறைந்த பிணைப்பு உடையதாய் மனித உறவு அமைந்துள்ளதை அறிய முடிகிறது. இதயங்களின் துடிப்பு இயற்கை புரிந்து கொண்டது போன்ற ஒருவகை அனுபவத்தை சங்க இலக்கியம் எடுத்துக்காட்டுகிறது. மனிதனின் இன்பம், துன்பம் என்ற இரு நிகழ்விலும் இயற்கை இடம் பெற்றிருக்கிறது என்பதையும் அறிய முடிகின்றது. எனவே இயற்கை மீதும் இயற்கை பொருட்கள் மீதும் அக்கறை கொள்வதே நல்ல சுற்றுச்சூழல் அமைப்புக்கு வழிவகுக்கும் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

**துணை நூல் பட்டியல்**

1.தர்மராஜ், ஜே. சுற்றுச்சூழல் இயல். டென்சி பப்ளிகேஷன்ஸ். சென்னை-14 , 2004

2 .முனைவர்.சொ.சேதுபதி செண்பகா பதிப்பகம் சென்னை – 600 007

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 15.நாட்டுப்புறச் சமய மரபுகளில் சுற்றுச்சூழல் சிந்தனைகள் : சிறுதெய்வ வழிபாட்டை முன்வைத்து

**முனைவர் ஆ. பிரபு,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
**(திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது),** , திருப்பத்தூர் - 635 601,
திருப்பத்தூர் மாவட்டம்,
**பா. ரம்யா,**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் - 635 601,
திருப்பத்தூர் மாவட்டம். **(திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது),**
Mail ID – ramyachithraparthiban@gmail.com
Ph.No. - 9025446330

**ஆய்வுச் சுருக்கம்**

'நாட்டுப்புறச் சமயம்' என்பது கிராமிய மக்களின் வாழ்வியல் அனுபவங்கள், நம்பிக்கைகள், இயற்கைச் சூழல் மற்றும் பண்பாட்டு மரபுகளின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாகும். இச்சமய மரபுகளில் இயற்கை ஒரு தெய்வீக ஆற்றலாகக் கருதப்படுகிறது. குறிப்பாகச் சிறுதெய்வ வழிபாடு, மரங்கள், காடுகள், நீர்நிலைகள், மலைகள் மற்றும் உயிரினங்களோடு நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒரு சமயக் கடமையாகவும் சமூகப் பொறுப்பாகவும் நிலைபெற்றுள்ளது. சிறுதெய்வ வழிபாட்டில் காணப்படும் மரவழிபாடு, புனி தக்காடுகள், நீர்நிலைப் பாதுகாப்பு, உயிரின மதிப்பு ஆகியவை பாரம்பரியச் சுற்றுச்சூழல் அறிவின் முக்கிய வெளிப்பாடுகளாக விளங்குகின்றன. இக்கட்டுரை நாட்டுப்புறச் சமய மரபுகளில் காணப்படும் சுற்றுச்சூழல் சிந்தனைகளைச் சிறுதெய்வ வழிபாட்டின் அடிப்படையில் இலக்கியச் சான்றுகளை முன்வைத்து ஆராய்கிறது.

**குறிச்சொற்கள்:** நாட்டுப்புறச் சமயம், சிறுதெய்வ வழிபாடு, சுற்றுச்சூழல் சிந்தனை, புனிதக்காடு, மரவழிபாடு, தமிழர் பண்பாடு.

## முன்னுரை

சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள இயற்கை வளங்களின் தொகுப்பாகும். நிலம், நீர், காற்று, மரங்கள், விலங்குகள் மற்றும் பறவைகள் ஆகிய அனைத்தும் சுற்றுச்சூழலின் கூறுகளாகும். மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் இயற்கையிலிருந்து கிடைப்பதால், இயற்கையையும் மனிதனையும் பிரித்துப் பார்க்க முடியாது. பழந்தமிழர் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். அவர்கள் இயற்கையை வெறும் பயன்பாட்டுப் பொருளாகக் கருதாமல், தெய்வமாகப் போற்றினர். இத்தகைய இயற்கை வழிபாட்டு மரபே சிறுதெய்வ வழிபாடாகவும் பின்னர் நாட்டுப்புறச் சமயமாகவும் வளர்ச்சி பெற்றது. இதனால் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் சிந்தனைகள் சமய நம்பிக்கைகளுக்குள் இயல்பாகவே இடம்பெற்றன.

## நாட்டுப்புறச் சமய மரபுகள் – ஒரு அறிமுகம்

நாட்டுப்புறச் சமயம் என்பது கிராமப்புற மக்களின் வாழ்வியல் அனுபவங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாட்டு மரபுகளின் அடிப்படையில் உருவான சமய நம்பிக்கை

முறையாகும். இது ஆகம விதிமுறைகள், வைதீகக் கோட்பாடுகள் அல்லது நிறுவப்பட்ட சமய அமைப்புகளைச் சார்ந்ததல்ல; மாறாக மக்களின் அன்றாட வாழ்க்கை அனுபவங்களிலிருந்து தோன்றிய வழிபாட்டு மரபுகளின் தொகுப்பாகும். மனிதனின் அச்சம், நன்றியுணர்வு, இயற்கை மீதான சார்பு மற்றும் சமூகத் தேவைகள் ஆகியவை நாட்டுப்புறச் சமயத்தின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

பழந்தமிழர் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்ததால், இயற்கைச் சக்திகளைத் தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். மழை, மலை, காடு, ஆறு, கடல், மரங்கள், பாம்புகள் போன்ற இயற்கைக் கூறுகள் தெய்வீகமாகப் போற்றப்பட்டன. இவ்வியற்கை வழிபாடே பின்னர் சிறுதெய்வ வழிபாட்டாக வளர்ச்சி பெற்றது. மாரியம்மன், காளியம்மன், கெங்கையம்மன், வேடியப்பன், ஐயனார், கருப்பசாமி, முனீஸ்வரன், சுடலைமாடன் போன்ற தெய்வங்கள் நாட்டுப்புறச் சமய மரபுகளில் முக்கிய இடம் பெறுகின்றன.

நாட்டுப்புறச் சமயத்தின் தனிச்சிறப்பு என்னவெனில், அது மக்களின் வாழ்வியல் தேவைகளோடு நேரடியாக இணைந்திருப்பதாகும். மழை வேண்டுதல், நோய் தீர்த்தல், விளைச்சல் பெருக்குதல், கால்நடை பாதுகாப்பு, கிராம எல்லைக் காப்பு போன்ற நோக்கங்களுக்காக இத்தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. இதனால் நாட்டுப்புறச் சமயம் சமூக வாழ்க்கையின் ஒரு பகுதியாக விளங்குகிறது. மேலும், நாட்டுப்புறச் சமய மரபுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. தெய்வங்களின் இருப்பிடங்களாகக் கருதப்பட்ட மரங்கள், காடுகள், குளங்கள், ஏரிகள் மற்றும் மலைப்பகுதிகள் மக்களால் புனிதமாகக் கருதப்பட்டு பாதுகாக்கப்பட்டன. இதன் மூலம் இயற்கை வளங்கள் அழியாமல் தலைமுறை தலைமுறையாகப் பேணப்பட்டன.

எனவே, நாட்டுப்புறச் சமய மரபுகள் என்பது வெறும் சமய நம்பிக்கைகளின் தொகுப்பு மட்டுமல்ல; அவை மக்களின் வாழ்வியல் அறிவு, பண்பாட்டு அடையாளம், சமூக ஒற்றுமை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாக விளங்குகின்றன. குறிப்பாக சிறுதெய்வ வழிபாட்டை மையமாகக் கொண்ட நாட்டுப்புறச் சமய மரபுகள், தமிழர் பண்பாட்டின் தொன்மையையும் இயற்கையோடு இணைந்த வாழ்வியல் சிந்தனைகளையும் வெளிப்படுத்துகின்றன.

**இயற்கை வழிபாடும் தெய்வ வழிபாட்டின் தோற்றமும்**

மனிதன் இயற்கையைச் சார்ந்தே வாழ்ந்து வந்தான். இயற்கையின் அருளால் வாழ்க்கை வளம் பெற்றதையும், இயற்கையின் சீற்றத்தால் வாழ்க்கை பாதிக்கப்பட்டதையும் அனுபவித்த மனிதன், இயற்கை சக்திகளைத் தெய்வமாகக் கருதி வணங்கத் தொடங்கினான். இவ்வாறு உருவான இயற்கை வழிபாடே பின்னர் சிறுதெய்வ வழிபாட்டின் அடிப்படையாக அமைந்தது.

மானுடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி அவர்கள்,**"மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த வாழ்க்கை முறையின் வெளிப்பாடே தமிழர் பண்பாடு"** என்று குறிப்பிடுகிறார். பழந்தமிழர் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததால், இயற்கைக் கூறுகளைத் தெய்வங்களாகக் கருதி வணங்கினர். இயற்கையின் ஆற்றல்களான மழை, காற்று, நீர், மண், மரம், மலை, காடு போன்றவற்றின் மீது மனிதன் கொண்டிருந்த அச்சமும் நன்றியுணர்வும் சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தன. இதனால் சிறுதெய்வங்கள் பெரும்பாலும் இயற்கை வளங்கள் நிறைந்த பகுதிகளில் நிறுவப்பட்டு வழிபடப்பட்டன.

தமிழகத்தின் பெரும்பாலான கிராமங்களில் அம்மன் கோயில்கள் குளங்கள், கண்மாய்கள், ஆறுகள் மற்றும் ஊருணிகளின் அருகிலும், ஐயனார் கோயில்கள் கிராம எல்லையில் உள்ள

காடுகளிலும், நாகதெய்வக் கோயில்கள் மரங்களின் அடியிலும் அமைந்துள்ளன. இவ்வமைப்பு தெய்வ வழிபாடு மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பு ஆகிய இரண்டிற்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்துகிறது. தெய்வம் உறையும் இடமாகக் கருதப்பட்டதால் மரங்களை வெட்டுதல், நீர்நிலைகளை மாசுபடுத்துதல், விலங்குகளை வேட்டையாடுதல் போன்ற செயல்கள் தவிர்க்கப்பட்டன. இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயல்பாகவே நடைமுறைக்கு வந்தது.

**தொல்காப்பியச் சான்று:**

தமிழர்கள் இயற்கையையும் தெய்வத்தையும் ஒன்றிணைத்துப் பார்த்ததை தொல்காப்பியம் தெளிவுபடுத்துகிறது.

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்”**

- தொல்காப்பியம், பொருளதிகாரம் (நூற்பா-5)

இந்நூற்பா ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் ஒரு தெய்வம் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததை எடுத்துரைக்கிறது. முல்லை நிலத்திற்கு மாயோன், குறிஞ்சி நிலத்திற்கு சேயோன், மருத நிலத்திற்கு வேந்தன், நெய்தல் நிலத்திற்கு வருணன் ஆகிய தெய்வங்கள் உரியவையாகக் கருதப்பட்டன. இது இயற்கையும் தெய்வமும் பிரிக்க முடியாத உறவைக் கொண்டிருந்ததை உணர்த்துகிறது.

**மர வழிபாடும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்**

தமிழர் பண்பாட்டில் மரங்கள் உயிருள்ள தெய்வங்களாகக் கருதப்பட்டு வழிபடப்பட்டுள்ளன. மனிதனின் வாழ்விற்கு இன்றியமையாத காற்று, நிழல், உணவு, மருந்து, மழை வளம் ஆகியவற்றை வழங்கும் மரங்கள், இயற்கையின் அருட்கொடைகளாக மதிக்கப்பட்டன. இதன் விளைவாக மரங்களைத் தெய்வங்களோடு தொடர்புபடுத்தி வழிபடும் மரபு உருவானது. இந்த மர வழிபாடு சமய நம்பிக்கையாக மட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான பாரம்பரிய அறிவியல் முறையாகவும் விளங்கியது.பழந்தமிழர்கள் ஆலமரம், அரசமரம், வேப்பமரம், கடம்பமரம், இலுப்பைமரம் போன்ற மரங்களைப் புனிதமானவையாகக் கருதினர். இம்மரங்களின் அடியில் தெய்வங்கள் உறைவதாக நம்பப்பட்டதால், அவற்றை வெட்டுவதோ அல்லது சேதப்படுத்துவதோ தெய்வக் குற்றமாகக் கருதப்பட்டது. இதனால் பல அரிய மர இனங்கள் பாதுகாக்கப்பட்டன. சங்க இலக்கியங்களில் மர வழிபாட்டிற்கான பல சான்றுகள் காணப்படுகின்றன. புறநானூற்றில் இடம்பெறும்,

**“கடவுள் ஆலத்து”**

-புறநானூறு (பா-99)

என்ற தொடர் பழந்தமிழர்கள் ஆலமரத்தை வெறும் மரமாகக் கருதாமல், தெய்வீக ஆற்றல் கொண்ட புனித மரமாகக் கருதியதை எடுத்துக்காட்டுகிறது. ஆலமரத்தின் கீழ் தெய்வங்களை நிறுவி வழிபடும் மரபு தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது. அதேபோல் நற்றிணையில்,

**“தெய்வம் சேர்ந்த பராரை வேம்பு”**

-அகநானூறு (பா- 309)

என்ற வரி காணப்படுகிறது. இவ்வரி வேப்பமரத்தைத் தெய்வம் உறையும் மரமாகக் காட்டுகிறது. இன்றும் மாரியம்மன் கோயில்களில் வேப்பிலை மற்றும் வேப்பமரம் முக்கிய இடம் பெறுவது இந்தப் பழமையான மரபின் தொடர்ச்சியாகும். திருமுருகாற்றுப்படையில்,

**“கடம்பு அமர் நெடுவேள்”**

என்று முருகன் கடம்ப மரத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறார். இதன்மூலம் குறிப்பிட்ட தெய்வங்களும் குறிப்பிட்ட மரங்களும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்டிருந்ததை அறியலாம். நாட்டுப்புறச் சமய மரபுகளில் மரங்கள் தெய்வங்களின் இருப்பிடங்களாகக் கருதப்பட்டன. கிராமங்களில் உள்ள அம்மன், ஐயனார், முனீஸ்வரன், நாகதெய்வம் போன்ற சிறுதெய்வங்கள் பெரும்பாலும் மரங்களின் அடிப்பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. குறிப்பாக வேப்பமரத்தடியில் மாரியம்மன், அரசமரத்தடியில் நாகதெய்வம், ஆலமரத்தடியில் முனீஸ்வரன் வழிபடப்படுவது பரவலாகக் காணப்படுகிறது.

மர வழிபாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குப் பல வகைகளில் உதவியுள்ளது. மரங்களை வெட்டக் கூடாது என்ற சமய நம்பிக்கை மர வளத்தைப் பாதுகாத்தது. மரங்கள் அதிகரித்ததால் மழை வளம் நிலைத்தது; நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட்டது; பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழ்விடம் காக்கப்பட்டது; மண் அரிப்பு குறைக்கப்பட்டது. இதனால் சுற்றுச்சூழல் சமநிலை பேணப்பட்டது. மேலும், சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய புனிதக்காடுகள் மரப் பாதுகாப்பின் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. ஐயனார் கோயில்கள் மற்றும் அம்மன் கோயில்களைச் சுற்றியுள்ள காடுகள் புனிதமானவை எனக் கருதப்பட்டதால் அங்கு மரங்களை வெட்டுவது தடைசெய்யப்பட்டது. இதனால் பல அரிய தாவர இனங்களும் மூலிகைச் செடிகளும் பாதுகாக்கப்பட்டன. நாட்டுப்புற மக்களிடையே,

**“மரம் வளர்த்தவன் மண்ணை வளர்த்தான்”**

**“காடு இருந்தால் நாடு இருக்கும்”**

போன்ற பழமொழிகள் மரங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றன. இப்பழமொழிகள் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மக்களிடையே பரப்பியுள்ளன. இன்றைய உலகம் காடழிப்பு, புவி வெப்பமடைதல், நீர் பற்றாக்குறை போன்ற சுற்றுச்சூழல் சிக்கல்களை எதிர்கொண்டு வருகிறது. இந்நிலையில் தமிழர் மர வழிபாட்டு மரபு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான முன்னோர்களின் அறிவார்ந்த அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது. மரங்களை வெறும் வளமாக அல்லாமல், உயிருள்ள புனிதப் பொருளாகக் கருதிய சிந்தனை, நிலையான வளர்ச்சிக்கான அடிப்படையாக அமைகிறது.

**நாக வழிபாடும் உயிரினப் பாதுகாப்பும்**

நாட்டுப்புறச் சமய மரபுகளில் நாக வழிபாடு மிகவும் தொன்மையான வழிபாட்டு முறைகளில் ஒன்றாகும். தமிழர்கள் பாம்புகளை வெறும் உயிரினமாகக் கருதாமல், தெய்வீக ஆற்றல் கொண்ட உயிர்களாகப் போற்றினர். இதனால் பாம்புகள் வாழும் புற்றுகள், மரங்கள், தோப்புகள் மற்றும் காடுகள் புனிதமானவையாகக் கருதப்பட்டு பாதுகாக்கப்பட்டன. நாக வழிபாடு உயிரினப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுவதில் முக்கியப் பங்கு வகித்தது. புறநானூறு பாம்புகளைத் தெய்வீக ஆற்றல் கொண்டவையாகக் குறிப்பிடுகிறது:

**"அணங்குடைப் பாம்பு"**

- புறநானூறு(பா - 56)

இத்தொடரில் "அணங்கு" என்பது தெய்வீக சக்தியைக் குறிக்கிறது. இதன்மூலம் பாம்புகள் தெய்வமாகக் கருதப்பட்டதை அறியலாம். நாட்டுப்புற மக்களிடையே,

**"நாகம் வாழும் இடம் நன்மை தரும் இடம்"**

என்ற நம்பிக்கை காணப்படுகிறது. இதனால் நாகங்கள் வாழும் பகுதிகள் புனிதமானவையாகக் கருதப்பட்டன. மேலும்,

**"பாம்பைக் கொன்றால் பாவம்"**

என்ற நம்பிக்கையும் பரவலாகக் காணப்படுகிறது. இத்தகைய நம்பிக்கைகள் உயிரினப் பாதுகாப்பிற்கு மறைமுகமாக உதவின. தமிழகத்தின் பல பகுதிகளில் நாகதெய்வச் சிலைகள் அரசமரம், ஆலமரம், வேப்பமரம் போன்ற மரங்களின் அடியில் நிறுவப்பட்டுள்ளன. இம்மரங்களை வெட்டுவது தெய்வக் குற்றமாகக் கருதப்பட்டதால் மர வளமும் பாதுகாக்கப்பட்டது. மேலும், நாகபுற்றுகள் உள்ள இடங்களை மக்கள் சேதப்படுத்தாமல் பாதுகாத்தனர். இதனால் பாம்புகளின் வாழிடங்கள் அழியாமல் காக்கப்பட்டன. பக்தவத்சல பாரதி அவர்கள், **"இயற்கை உயிரினங்களின் மீது மனிதன் கொண்ட அச்சமும் மரியாதையும் தெய்வ வழிபாடுகளாக மாற்றமடைந்தன."** என்று குறிப்பிடுகிறார். அதேபோல் சு. சக்திவேல், **"நாக வழிபாடு உயிரினங்களுக்கும் மனிதனுக்கும் இடையிலான ஒத்துழைப்பு உறவின் பண்பாட்டு வெளிப்பாடாகும்."** என்று கூறுகிறார்.

**புனிதக்காடுகள் மற்றும் சுற்றுச்சூழல்**

புனிதக்காடுகள் என்பது குறிப்பிட்ட தெய்வங்கள் உறையும் இடங்களாகக் கருதப்பட்டு மக்களால் பாதுகாக்கப்பட்ட இயற்கைக் காடுகளாகும். தமிழர் நாட்டுப்புறச் சமய மரபுகளில் புனிதக்காடுகள் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. இக்காடுகள் "காவுக்காடு", "சாமிக்காடு", "ஐயனார் காடு", "கோயில்காடு" போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன. சிறுதெய்வ வழிபாட்டின் ஒரு பகுதியாக உருவான இப்புனிதக்காடுகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான பாரம்பரிய முறைகளில் ஒன்றாக விளங்குகின்றன. பழங்காலத்தில் கிராம மக்கள் தங்களது கிராம எல்லைகளிலும், நீர்நிலைகளின் அருகிலும், மலை அடிவாரங்களிலும் உள்ள காடுகளை தெய்வங்களின் இருப்பிடமாகக் கருதினர். குறிப்பாக ஐயனார், கருப்பசாமி, முனீஸ்வரன், அம்மன் போன்ற சிறுதெய்வங்கள் காடு சூழ்ந்த பகுதிகளில் வழிபடப்பட்டன. இதனால் அந்தக் காடுகள் புனிதமானவையாகக் கருதப்பட்டு பாதுகாக்கப்பட்டன. சங்க இலக்கியங்களில் காடுகள் தெய்வங்களின் உறைவிடங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. தொல்காப்பியத்தில்,

**"மாயோன் மேய காடுறை உலகமும்"**

- தொல்காப்பியம், பொருளதிகாரம் (நூற்பா-5)

என்ற வரி, காடுகளுக்கும் தெய்வங்களுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்துகிறது. முல்லை நில வாழ்க்கையில் காடுகள் புனிதமான இடங்களாகக் கருதப்பட்டன. அங்கு வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததோடு, காடுகளை அழிக்காமல் பாதுகாத்தனர். நாட்டுப்புற நம்பிக்கைகளின்படி, புனிதக்காடுகளில் வாழும் தெய்வங்கள் கிராம மக்களை நோய், பஞ்சம், தீய சக்திகள் ஆகியவற்றிலிருந்து காப்பதாகக் கருதப்பட்டன. இதனால் மக்கள் காடுகளைச் சேதப்படுத்த அஞ்சினர்.

புனிதக்காடுகளில் சில சமூக விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன:

- மரங்களை வெட்டக்கூடாது.
- விறகுகளைச் சேகரிக்கக்கூடாது.
- வேட்டையாடக்கூடாது.
- காடுகளை எரிக்கக்கூடாது.
- நீர்நிலைகளை மாசுபடுத்தக்கூடாது.

இந்த விதிமுறைகள் எழுத்துப் பூர்வமான சட்டங்களாக இல்லாவிட்டாலும், சமய நம்பிக்கைகளின் மூலம் மக்கள் அவற்றைக் கடைப்பிடித்தனர். தமிழக கிராமங்களில் ஐயனார் கோயில்கள் பெரும்பாலும் புனிதக்காடுகளின் மையத்தில் அமைந்துள்ளன. ஐயனார் கிராம எல்லைகளின் காவல் தெய்வமாகக் கருதப்படுகிறார். அதேபோல் கருப்பசாமி மற்றும் முனீஸ்வரன் கோயில்களும் காடு சார்ந்த இடங்களில் காணப்படுகின்றன. இந்தக் கோயில்களைச் சுற்றியுள்ள மரங்கள் "சாமி

மரங்கள்" என அழைக்கப்படுகின்றன. அவற்றை வெட்டுவது தெய்வக் குற்றமாகக் கருதப்படுகிறது. இதனால் காடுகள் பாதுகாக்கப்படுகின்றன. மானிடவியலாளர் பக்தவத்சல பாரதி புனிதக்காடுகளை,

**"பாரம்பரிய சுற்றுச்சூழல் பாதுகாப்பின்**
**உயிரோட்டமான வடிவம்"**

என்று குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

நாட்டுப்புறச் சமய மரபுகளில் காணப்படும் சிறுதெய்வ வழிபாடுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான முக்கியமான பண்பாட்டு அமைப்புகளாக விளங்குகின்றன. அம்மன் வழிபாடு நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், ஐயனார் வழிபாடு புனிதக்காடுகளைப் பேணவும், மர வழிபாடு தாவர வளத்தைப் பாதுகாக்கவும், நாக வழிபாடு உயிரினப் பன்மையைக் காக்கவும் உதவுகின்றன. இவ்வழிபாட்டு முறைகள் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் சமூகப் பொறுப்புணர்வை மக்களிடையே உருவாக்கின. இன்றைய காலநிலை மாற்றம், நீர்ப்பற்றாக்குறை, காடு அழிப்பு போன்ற சுற்றுச்சூழல் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில் நாட்டுப்புறச் சமய மரபுகள் சுற்றுச்சூழல் சிந்தனைக்கு முக்கியமான வழிகாட்டியாக அமைகின்றன.

**துணைநூற்பட்டியல்**

[1.] அகநானூறு, உ.வே. சாமிநாதையர் (உ.ஆ.), உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.
[2.] அறவாணன், க.ப., தமிழர் பண்பாட்டு மரபுகள், தமிழ்க்கோட்டம், சென்னை.
[3.] இராமநாதன், ஆ., நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
[4.] சக்திவேல், சு., நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
[5.] நக்கீரர், திருமுருகாற்றுப்படை, உ.வே. சாமிநாதையர் (உ.ஆ.), உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.
[6.] நற்றிணை, உ.வே. சாமிநாதையர் (உ.ஆ.), உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.
[7.] பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
[8.] புறநானூறு, உ.வே. சாமிநாதையர் (உ.ஆ.), உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.
[9.] வானமாமலை, நா., தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 16.எஸ்.ராமகிருஷ்ணனின் சிறுகதைகளில் சுற்றுப்புறச்சூழல்

**பா.ராதிகா,**

**முனைவர் பட்ட ஆய்வாளர்:** புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,

திருச்சிராப்பள்ளி - **620 002.**

**Mail ID: rathikarathika86512@gmail.com, Mobile No: 9361226283.**

**ஆய்வு நெறியாளர்:** முனைவர் ஆ.தேவதா,

புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - **620 002. Mail ID: thevathaa@gmail.com, Mobile No: 9443444072,**

**ORCID: https://orcid.org/0009-0000-5361-4848.**

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

இக்காலத் தமிழ் இலக்கிய உலகில் சிறுகதை வடிவம் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. நவீன வாழ்வின் நெரிசல்களையும் நுட்பமான உணர்வுகளையும் குறுகிய எல்லைக்குள் ஆழமாகப் பதிவு செய்யும் வலிமை சிறுகதைக்கு உண்டு. இத்தகைய சூழலில், தமிழ் சிறுகதை உலகில் தனக்கெனத் தனித்துவமான கதைசொல்லல் பாணியைக் கொண்டவர் எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன். இக்கட்டுரை, இவரது **'மௌனம்' (2021)** மற்றும் **'சாய்ந்தாடும் குதிரை' (2025)** ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகளை முதன்மைத் தரவுகளாகக் கொண்டு ஆராய்கிறது.

இத்தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள கதைகள் வழி மனித மனத்தின் அகவயப் போராட்டங்கள் (உளவியல், நினைவுகள், தனிமை, உறவுச் சிக்கல்கள், வாழ்க்கையின் வெறுமை) மற்றும் நிலப்பரப்பு சார்ந்த வெளிப்புற மாற்றங்கள் (கிராம-நகர்ப்புற வாழ்வியல், நிலம்-நீர்- காற்று சார்ந்த சூழலியல் சமநிலை) எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை விரிவாகச் சுட்டுகிறது. எளிமையான மொழிநடையினூடே ஆழமான வாழ்வியல் பார்வைகளையும் இயற்கை-மனிதத் தொடர்பையும் வெளிப்படுத்தும் ஆசிரியரின் உத்தியை மதிப்பீடு செய்வதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

**முக்கியச் சொற்கள் (Keywords):** தமிழ் சிறுகதைகள், எஸ்.ராமகிருஷ்ணன், அகவுளவியல், சூழலியல் விமர்சனம் (Ecocriticism), நினைவுகள், மனித-இயற்கை உறவு.

## 1. முன்னுரை (Introduction)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தடம் பதித்த தமிழ் சிறுகதை வடிவம், தற்காலப் புதுமைப்பித்தன், புதுமை இலக்கியவாதிகளைத் தாண்டி உலகளாவிய பார்வைகளுடன் பரிணமித்துள்ளது. வேகமான நகரமயமாக்கல் மற்றும் நவீனத் தொழில்நுட்ப வளர்ச்சியால் மனித அகத்திலும் சூழலிலும் ஏற்பட்ட மாற்றங்களைப் பதிவுசெய்வதில் சிறுகதை நவீன இலக்கியத்தின் தவிர்க்க முடியாத கருவியாகியுள்ளது.

நவீனத் தமிழ் புனைவு உலகில் எஸ்.ராமகிருஷ்ணன் தனது நுட்பமான விவரிப்பு முறையாலும் (Narrative Style), இயற்கையை மாந்தர்களின் உணர்வுகளோடு இயல்பாகக் கோர்க்கும் திறனாலும் தனித்து நிற்கிறார். மனிதனின் தனிமை, கடந்த கால நினைவுகளின் ஆதிக்கம், சமூக உறவுகளின் சிதைவு ஆகியவற்றை இயற்கையின் நுண் கூறுகளோடு தொடர்புபடுத்தி விளக்குவதில் இவரது சிறுகதைகள் தனியிடம் பெறுகின்றன.

## 2. ஆய்வின் நோக்கம் & கோட்பாட்டு அணுகுமுறை

### 2.1 ஆய்வின் நோக்கங்கள்

- எஸ்.ராமகிருஷ்ணனின் 'மௌனம்' மற்றும் 'சாய்ந்தாடும் குதிரை' தொகுப்புகளில் வெளிப்படும் மனித மன உளைச்சல்களையும் அகவய உளவியலையும் கண்டறிதல்.
- மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான புதிரான உறவையும் சூழலியல் சீர்கேடுகளின் தாக்கத்தையும் திறனாய்வு செய்தல்.
- கிராமக் குறியீடுகளும் நகர்ப்புற நெரிசல்களும் கதைகளின் மாந்தர் மீது ஏற்படுத்தும் அக-புற மாற்றங்களை ஆராய்தல்.

### 2.2 ஆய்வு நெறிமுறை (Methodology)

இவ்வாய்வு **பகுப்பாய்வு முறைமை (Analytical Method)** மற்றும் **உளவியல்-சூழலியல் திறனாய்வு அணுகுமுறைகளை (Psychoanalytic & Ecocritical Approaches)** அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

## 3. அகவுளவியலும் மனித உறவுகளின் சிக்கலும்

### 3.1 தனிமையும் வாழ்க்கையின் வெறுமையும்

'மௌனம்' தொகுப்பில் உள்ள கதைகளில் பெரும்பாலான மாந்தர்கள் கூட்டத்திற்குள்ளும் தனிமையை அனுபவிப்பவர்களாகவே சித்திரிக்கப்படுகின்றனர். நவீன வாழ்வு மனிதனுக்கு வசதிகளைத் தந்தாலும், அகத்தில் பெரிய வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது.

- **மௌனத்தின் மொழி:** சொற்களால் நிரப்ப முடியாத இடைவெளிகளை அக மௌனமே நிரப்புகிறது. உரையாடல்களற்ற மனித உறவுகள் ஏற்படுத்தும் மன அழுத்தத்தை ஆசிரியர் நுட்பமாக வெளிப்படுத்துகிறார்.
- **வெறுமையின் பரிமாணம்:** ஓயாத உழைப்பும் ஓட்டமும் மனிதனைத் தன்னிடமிருந்தே அந்நியப்படுத்துகிறது (Alienation).

### 3.2 நினைவுகளின் சுழற்சி (Psychology of Memories)

'சாய்ந்தாடும் குதிரை' தொகுப்பின் முதன்மைப் பொருண்மைகளுள் ஒன்று கடந்தகால நினைவுகள். "மனிதன் நிகழ்காலத்தில் வாழ்வதாக நம்புகிறானே தவிர, உண்மையில் அவனது அகம் இறந்தகாலத்தின் நினைவுகளிலேயே அலைந்து கொண்டிருக்கிறது."

குழந்தைப் பருவக் நினைவுகள், கைநழுவிப்போன வாய்ப்புகள், அற்றுப்போன கிராமத்து உறவுகள் ஆகியவை கதைகளில் படிமங்களாக (Symbols) மீண்டும் மீண்டும் தோன்றி மாந்தர்களின் மனதை ஆட்டுகின்றன.

## 4. சூழலியலும் நிலம்-நீர்-காற்று மாற்றங்களும் (Ecocritical Perspective)

எஸ்.ராமகிருஷ்ணனின் புனைவுகளில் இயற்கை வெறுமனே கதையின் பின்னணியாக (Background) மட்டும் இருப்பதில்லை; அதுவே ஒரு கதபாத்திரமாக இயங்குகிறது.


[மனித அகவுணர்ச்சி]

|

(பரஸ்பரத் தொடர்பு)

|

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026




### 4.1 நிலம்-நீர்-காற்று ஏற்படுத்திய மாற்றங்கள்

- **நிலம்:** கிராமத்து மண் வாசனைக்கும் நகர்ப்புறக் கான்கிரீட் காடுகளுக்கும் இடையே மனிதன் தொலைத்த இயல்பை நிலப்பரப்பு மாற்றங்கள் உணர்த்துகின்றன.
- **நீர் & காற்று:** வறண்டுபோன ஆற்றுப்படுகைகளும், மாசடைந்த நகரக் காற்றும் வெறும் சுற்றுச்சூழல் பாதிப்பு மட்டுமல்ல; அவை மனித மனத்தின் வறட்சியின் குறியீடுகளாகவும் கதைகளில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

| அம்சங்கள் | கிராமப்புற வாழ்வியல் | நகர்ப்புற வாழ்வியல் |
|---|---|---|
| **இயற்கைத் தொடர்பு** | இயல்பான ஒருங்கிணைப்பு | செயற்கையான அந்நியமாதல் |
| **உறவின் தன்மை** | பிணைப்பும் நினைவுகளும் | தற்காலிக இடைவெளிகளும் தனிமையும் |
| **மன நிலை** | அமைதி / வறுமைச் சிக்கல் | அவசரம் / அக வெறுமை |

## 5. கதைசொல்லல் பாணியும் மொழி நடையும்

ஆசிரியரின் கதைசொல்லல் முறையானது சிக்கலான கோட்பாடுகளைக் கூட மிக எளிமையான மொழியில் கடத்தும் ஆற்றல் கொண்டது.

1. **எளிமையான மொழிநடை:** எளிய சொற்களின் வழியே ஆழமான தத்துவார்த்தக் கருத்துகளைக் கூறுதல்.
2. **இயற்கை வருணனைகள்:** நிலக்காட்சிகளையும் (Landscapes) சூழலையும் மாந்தர்களின் மனநிலைக்கு ஏற்ப (Pathetic Fallacy) வண்ணிப்பது.
3. **படிமங்களும் குறியீடுகளும்:** 'சாய்ந்தாடும் குதிரை' போன்ற குறியீடுகள் நிலையற்ற மனநிலையையும் அசைவற்ற நினைவுகளையும் ஒருசேரக் குறிக்கப் பயன்படுகின்றன.

## 6. முடிவுரை (Conclusion)

எஸ்.ராமகிருஷ்ணனின் **'மௌனம்' (2021)** மற்றும் **'சாய்ந்தாடும் குதிரை' (2025)** ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகளும் தற்கால மனிதனின் இருத்தலியல் சிக்கல்களையும் (Existential Crisis) சூழலியல் உணர்வையும் செம்மையாகப் பிரதிபலிக்கின்றன. மனித அகத்தின் மௌனத்தையும், இயற்கைக்கும் மனிதனுக்குமான உணர்வுப் பூர்வமான பிணைப்பையும் வெளிப்படுத்தியதில் இத்தொகுப்புகள் தமிழ் சிறுகதை வரலாற்றுப் போக்கில் முக்கியமான மைல்கற்களாக அமைகின்றன.

சுற்றுச்சூழல் சீர்கேடும் மனித மனச் சிதைவும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதை உணர்த்தி, இயற்கையோடு இயைந்த வாழ்வியலே மனித அலைக்கழிப்புகளுக்குத் தீர்வாக முடியும் என்ற மறைமுகப் செய்தியை இக்கதைகள் வாசகருக்கு அளிக்கின்றன.

**துணைநூல் பட்டியல் (References)**


- ராமகிருஷ்ணன், எஸ். (2021). *மௌனம்*. உயிர்மை பதிப்பகம், சென்னை.
- ராமகிருஷ்ணன், எஸ். (2025). *சாய்ந்தாடும் குதிரை*. விகடன் பிரசுரம், சென்னை.
- பஞ்சாங்கம், க. (2018). *நவீன தமிழ் இலக்கியத் திறனாய்வு*. காவ்யா பதிப்பகம்.
- Glotfelty, Cheryll. (1996). *The Ecocriticism Reader: Landmarks in Literary Ecology*. University of Georgia Press.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 17.சிலப்பதிகாரத்தில் இயற்கை சூழல் மற்றும் அறநெறி மரபுகள்

**முனைவர் அ.ஜெஸிந்தாராணி,**
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி 620002, tamiljasintha@gmail.com

**Abstract**

Environment is the natural environment around us that includes forests, oceans mountains, and various other landscapes. These regions are rich in non-renewable mineral resources. In this natural environment, various organisms and thousands of microorganisms created by humans coexist with nature. Earth's biodiversity can only be preserved if we preserve and protect this natural environment, which contains innumerable living organisms and microorganisms. There are many proofs in Tamil literature that Tamil Nadu is a great country with abundant natural resources. This article compares the Moovendras who are mentioned in three Cantos and thirty divisions in the epic literature “Silapathikaram” and the three triumvirs who ruled Chola Nadu, Chera Nadu and Pandiya Nadu and the natural resources in them that made those countries prosperous by the rivers Kaveri, Vaigai, Periyar etc. and the natural resources and natural environment of these are mentioned in three Cantos and thirty divisions in the epic literature “Silapathikaram” and the three triumvirs who ruled Chola Nadu, Chera Nadu and Pandiya Nadu and the natural resources in them that made those countries prosperous by the rivers Kaveri, Vaigai, Periyar etc. and the natural resources and natural environment of these areas.

**ஆய்வுச் சுருக்கம்**

சுற்றுப்புற சூழல் எனப்படுவது நம்மைச் சுற்றியுள்ள இயற்கை பரப்பம் இயற்கை ஆனது காடுகள் கடல்கள் மலைகள் மற்றும் பல்வேறு நிலப்பரப்புகளையும் கொண்டு அமைந்துள்ளனர். இப்பகுதிகளில் புதுப்பிக்க முடியாத கனிம வளங்கள் நிறைந்துள்ளன இயற்கை சூழலில் பல்வேறுபட்ட உயிரினங்கள் மனிதர்கள் உட்பட்ட பல்லாயிரக்கணக்கான நுண்ணுயிரிகளும் இயற்கையோடு இணைந்து வாழ்கின்றன கணக்கிட முடியாத பேருயிர்களையும் சிற்றுயிர்களையும் தன்னகத்தை கொண்ட அமைந்த இயற்கையை பேணி பாதுகாத்தால் மட்டுமே பூமியின் உயிர் பல்வகைமை பாதுகாக்க முடியும். நமது நாடானது பல்வேறுபட்ட வளங்களை கொண்ட ஒரு சிறந்த நாடாக திகழ்ந்தது என்பதற்கு ஆதாரமாக தமிழ் இலக்கியங்களில் பல சான்றுகள் காண கிடக்கின்றன அந்த வகையில் காப்பிய இலக்கியமான சிலப்பதிகாரத்தில் மூன்று காண்டங்கள் 30 காதைகளில் கூறப்பட்டுள்ள மூவேந்தர்கள் பற்றியும் அவர்கள் ஆட்சி செய்த சோழ நாடு பாண்டியநாடு என்ற மூன்று நாடுகளைப் பற்றியும் அவற்றில் உள்ள இயற்கை வளங்கள் அந்நாடுகள் வளங்களிக்க காரணமாக அமைந்த ஆறுகள் ஆன காவிரி வைகை போன்றவற்றையும் எடுத்துரைக்கின்றன

சிலப்பதிகாரம் காப்பிய தத்துவமாக மங்கள வாழ்த்தில் இளங்கோவடிகள் இயற்கை வணங்கிய துவங்குகின்றார்

**திங்களைப் போற்றதும் திங்களைப் போற்றதும்**

**ஞாயிறு போற்றதும் ஞாயிறு போற்றதும்**

**மாமழைப் போற்றதும் மாமழைப் போற்றதும்**

**பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றதும்**

என்று திங்களின் ஒளியையும் குளிர்ச்சியணையும் ஞாயிறு அழகிய மலைமுகடுகளை சுற்றிவரும் நிலையையும் அனைத்து உயிர்களையும் வாழ்விக்கின்ற மலையையும் அழகிய பூம்புகார் நகரத்தினையும் போற்றுவோம் என்று வாழ்த்துவது குறிப்பிடத்தக்கது மேலும் பூம்புகாரில் அனைத்து வளங்களும் நிறைந்து இருந்தன பல தொழில்களும் காவிரிப்பூம்பட்டினம் மருபாக்கம் மற்றும் பட்டினம் பாக்கம் என்ற ஊர்களில் நிறைந்திருந்தது தொழில்களின் அடிப்படையில் பல மாடங்களை கொண்ட நகர வீதிகளின் வணிக வீதிகள் என பூம்புகார் பறந்து விரிந்து இருந்தன பல வகையான மக்களையும் திருமாவளவனின் ஆட்சி சிறப்பு> வீரம், வெற்றி போன்றவையும் சிறப்பாக கூறப்பட்டுள்ளன

தமிழ் காப்பியங்களில் இயற்கை வளங்களின் முக்கியத்துவம் சங்க இலக்கிய மரபை தொடரும் இக்காப்பியம் இயற்கையும் மனித வாழ்வியலையும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது என்பதை ஆராய்வது நோக்கமாகும் தமிழர்களின் வாழ்க்கை முறையும் இயற்கையுடனான அவர்களின் நெருங்கிய உறவும், அறத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பும் இக்காப்பியத்தின் வழியாக எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை இவ்வாய்வு விளக்குகிறது.

சிலப்பதிகாரத்தில் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் போன்ற இயற்கை நிலங்களின் தன்மைகள் அவற்றுடன் தொடர்புடைய மக்களின் வாழ்வியல் தொழில் பண்பாடு ஆகியவை விரிவாக சித்தரிக்கப்பட்டுள்ளனர். இயற்கை என்பது வெறும் பின்னணியாக அல்லாமல் மனித உணர்வுகள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களை வடிவமைக்கும் முக்கிய கூறாக அமைந்துள்ளது என்பதை இக்காப்பியம் உணர்த்துகிறது

கற்பு, நீதி, உண்மை, விருந்தோம்பல், அரசாட்சி நெறி, சமூகப் பொறுப்பு போன்ற அறநெறி மரபுகள் கண்ணகி கோவலன் பாண்டியன் நெடுஞ்செழியன் உள்ளிட்ட மாந்தர்களின் செயல்பாடுகள் மூலம் வலியுறுத்தப்படுகின்றன குறிப்பாக கண்ணகியின் கற்பும் நீதிக்கான போராட்டமும் அறத்தின் வெற்றியை நிலைநாட்டும் மையக்கருத்தாக அமைகின்றன சிலப்பதிகாரத்தில் இயற்கை ஒரு பின்னணியாக காட்சியளிக்க மட்டும் அமையவில்லை அது மக்களின் வாழ்வியல் பொருளாதாரம் பண்பாடு மற்றும் மனநிலைகளை வடிவமைக்கும் முக்கிய உறவாக சித்தரிக்கப்படுகிறது.

## இயற்கையும் தமிழர் வாழ்வியலும்

பண்டைய தமிழர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர் ஆறுகள் மலைகள் காடுகள் கடல் வயல்வெளிகள் ஆகியவை அவர்களின் வாழ்க்கையின் அடித்தளமாக இருந்தன இயற்கை வளங்களை பயன்படுத்தியதோடு மட்டுமல்லாமல் அவற்றை பாதுகாத்தும் அவர்களின் வாழ்வியல் நெறியாக இருந்தது

**காவிரி நதியின் சிறப்பு**

புகாரின் செழிப்பிற்கு காவிரி நதி முக்கிய காரணமாக காப்பியத்தில் சித்தரிக்கப்படுகிறது காவிரியின் நீர் வளம் வேளாண்மையை வளர்த்தது அதனால் மக்களின் பொருளாதார வளமும் உயர்ந்தது இயற்கை வளமும் ஒரு நாட்டின் செழிப்பிற்கு அடிப்படை என்பதை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

**கடலும் வாணிபமும்**

புகார் நகரம் கடலோர நகரமாக விளங்கியது கடல்வழி வாணிபம் வெளிநாட்டு வாணிகம் கப்பல் போக்குவரத்து போன்றவை இயற்கை வளத்தை மையமாகக் கொண்ட பொருளாதார முன்னேற்றத்தை வெளிப்படுத்துகின்றன மலை மற்றும் காட்டு வளங்கள் சேர நாட்டின் மலைப்பகுதிகள் காடுகள் அருவிகள் மரங்கள் மூலிகைகள் விலங்குகள் ஆகியவை இயற்கையின் பலத்தை எடுத்துக்காட்டுகின்றன இவை மக்களின் வாழ்வாதாரத்திற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஆதாரமாக இருந்தன

**இயற்கையும் விழாக்களும்**

இந்திர விழா உள்ளிட்ட பல திருவிழாக்கள் இயற்கையுடன் தொடர்புடையவையாக காணப்படுகின்றன மலைவளம் விளைச்சல் ஆகியவற்றிற்காக மக்கள் தெய்வங்களை வணங்கினர் இயற்கையை மதிக்கும் பண்பாடு இதன் மூலம் வெளிப்படுகிறது.

**அறநெறி மரபுகள்**

சிலப்பதிகாரத்தின் மையக்கருத்து அறமே ஆகும் அறம் என்பது தனிமனித ஒழுக்கத்தை மட்டுமல்ல குடும்பம் சமூகம் அரசு மற்றும் நீதியையும் உள்ளடக்கிய உயரிய வாழ்க்கை நெறியாக காப்பியத்தில் விளங்கப்படுகிறது.

**கற்பு**

கண்ணகியின் கற்பு தமிழர் பண்பாட்டின் உச்சமாக சித்தரிக்கப்படுகிறது கணவனின் தவறுகளையும் பொறுத்து இறுதிவரை அவருக்கு துணையாக இருந்த கண்ணகி கற்பின் அடையாளமாக உயர்த்தப்படுகிறார் நீதி கோவலன் குற்றமற்றவராக இருந்தும் தண்டிக்கப்பட்டது நீதித்துறையின் தவறாகும் அதனை எதிர்த்து கண்ணகி உண்மையை நிலைநாட்டுகிறார், அரசன் ஆராய்ந்து நீதி வழங்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது

**உண்மை**

உண்மையை இறுதியில் வெல்லும் என்ற கொள்கை காப்பியம் முழுவதும் வலியுறுத்துகிறது கண்ணகி சான்றுகளால் கோவலன் நிரபராதி என்பது நிரூபிக்கப்படுகிறது.

**விருந்தோம்பல்**

தமிழர்களின் சிறந்த பண்பாடாக விருந்தோம்பல் சித்தரிக்கப்படுகிறது விருந்தினரை அன்போடு வரவேற்று உபசரிப்பது அறமாக கருதப்பட்டது அரசனின் கடமை அரசன் நீதியுடன் ஆட்சி செய்ய வேண்டும் இல்லை எனில் நாடு பாதிக்கப்படும் என்பதை மதுரை நிகழ்வு தெளிவுபடுத்துகிறது. அரசனின் தவறு நாட்டின் அறிவுக்கு காரணமாக அமைகிறது இரக்க கருணை சிலப்பதிகாரத்தில் இயற்கையும் அறமும் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளன இயற்கை வளம் செழிக்கும் போது மக்கள் அறநெறியுடன் வாழ்கின்றனர் அநீதி நிகழும் போது இயற்கை

சமநிலையும் சமூக அமைதியும் பாதிக்கப்படுகின்றன என்பதை காப்பியம் குறியீட்டு முறையில் வெளிப்படுத்துகிறது மனிதன் இயற்கையை குறித்து அறநெறியை பின்பற்றும் போது மட்டுமே சமூகத்தில் நிலையான அமைதி ஏற்படும் என்ற சிந்தனை இக்காப்பியத்தில் வெளிப்படுகிறது

**முடிவுரை**

சிலப்பதிகாரம் இயற்கை வளங்களின் சிறப்பையும் அறநெறி மரபுகளின் உயர்வையும் இணைத்து எடுத்துரைக்கும் தமிழனின் தலைசிறந்த காப்பியமாகும் இயற்கையோடு இணைந்து வாழ்வது நீதி மற்றும் உண்மையை நிலைநாட்டுகிறது கருப்பு மனிதநேயம் விருந்தோம்பல் போன்ற உயரிய பண்புகளை பேணுவது ஆகியவை தமிழர் நாகரிகத்தின் அடையாளங்களாக இக்காப்பியத்தில் விளக்கப்படுகின்றன எனவே சிலப்பதிகாரம் இலக்கிய படைப்பாக மட்டுமல்லாமல் இயற்கை பாதுகாப்போம் அறவாழ்வும் இணைந்த சமூக தத்துவத்தை எடுத்துரைக்கும் நிலையான பண்பாட்டு ஆவணமாகவும் விளங்குகிறது

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 18.ஐங்குறுநூற்றில் சுற்றுச்சூழல்

**க.கங்காதேவி,**
முனைவர் பட்ட ஆய்வாளர், புனிதசிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 001 தமிழ்நாடு, இந்தியா. Mobile.no.9159681197
gangadevimohan1977@gmail.com.
ஆய்வு நெறியாளர்: **முனைவர் ஆ.தேவதா,**
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 002.
Mail ID: thevathaa@gmail.com, Mobile No: 9443444072,
ORCID: https://orcid.org/0009-0000-5361-4848.

**ஆய்வுச்சுருக்கம்**

சுற்றுச்சூழல் விளக்கம் - சுற்றுச்சூழலின் இன்றியமை யாமை - சுற்றுச்சூழல் பாதிப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்பு - சுற்றுச்சூழலும் உயிரினங்களும் - சுற்றுச்சூழலும் மனிதனும் - தொல்காப்பியரின் சுற்றுச்சூழல் அறிவு - சங்க இலக்கியமும் சுற்றுச்சூழலும் - ஐங்குறுநூற்றில் சுற்றுச்சூழல் - சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நம் பங்கு.

**முன்னுரை**

'சுற்றுச்சூழல்' என்ற சொற்றொடர் இன்று மிகுதியும் உச்சரிக்கப்படும் சொற்றொடராக உள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பு,சுற்றுச்சூழல் பாதுகாப்பு,
சுற்றுச்சூழல் ஆர்வலர் ஆகியன குறித்து நிறையப் பேசப்படுக்கின்றனர்; எழுதப்படுக்கின்றன. சுற்றுச்சூழல் சீரழிவு பற்றி இப்பொழுது நாம் கவலைப்படுகிறோம். ஆனால் அந்த கவலை இல்லாமல் சுற்றுச்சூழல் அறிவிலும் அதைப் பேணிக்காப்பதிலும் நம் முன்னோர் தலைசிறந்துவிளங்கினர். இற்குத் தொல்காப்பியப் பொருளதிகாரமும் சங்க அக இலக்கியங்களுமே சாட்சிகளாம். சங்ககாலத்து ஆடவர் மட்டுமல்லாமல் மகளிரும் சுற்றுச்சூழல் குறித்த அறிவை நிரம்பப் பெற்றிருந்தனர். தலைவி, தோழி, செவிலி, பரத்தை, ஆகியோர் தம் கூற்றுக்களில் சுற்றுச்சூழல் செய்திகள் கொட்டிக்கிடக்கின்றன. அவ்வகையில் சங்க இலக்கியமான ஐங்குறுநூற்றில் சுற்றுச்சூழல் செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**சுற்றுச்சூழல் - விளக்கம்**

சுற்றுச்சூழல் என்பது நாம் வசிக்கும் இருப்பிடத்தின் வெளிப்புறத்தே உள்ள மரம் செடி, கொடிகள், மலை, ஆறு, குளம், வாய்க்கால், சோலை, கடல், ஏரி, ஆகியன இயற்கை அமைப்பின் அழகான தோற்றமாகும். வீட்டில் ஒரு மரம் அல்லது தோட்டம் இருந்தாலும் அதுவும் சுற்றுச்சூழலின் பாற்படும். இவை தூய மண், தூய நீர்,தூய காற்றோடு கூடிப் பல்வேறு உயிரினங்கள் தங்கி வாழ உதவிபுரிகின்றன.

மரம் முதலானவற்றோடு உயிரினங்களும் சேர்ந்த ஓர் அமைவுதான் சுற்றுச்சூழலாகும். இவ்வாறான சுற்றுச்சூழல் அமைவு மன மகிழ்ச்சியைத் தருவதோடு உடற்பிணிகளையும் தீர்த்து வைக்கிறது.

"சுற்றுச்சூழல் என்பது காற்று, நிலம், நீர், தாவரம், மனித இனம், உள்ளிட்ட உயிர்களிடையே அமைந்த ஓர் இணைப்பாகும். இவை ஒன்றோடு ஒன்று பரஸ்பர தொடர்புடையவை. ஒன்றை ஒன்று சார்த்து நிற்பவை. ஒன்றாகப் பரிணாமவளர்ச்சி பெறுபவை"1 என்கின்றார் சிவ. மங்கையர்க்கரசி.

1.சிவ. மங்கையர்கரசி, சூழலியல் தமிழ்,ப.6

**சுற்றுச்சூழலின் இன்றியமையாமை**

சுற்றுச்சூழல் அமைவு இல்லாவிடில் மனிதன் உட்பட எந்த உயிரினமும் வாழமுடியாது. இவ்வமைவு உயிர்களின் பரிணாம வளர்ச்சிக்கு உதவுவதோடு, பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு துணை நிற்கிது.ஓரிடத்தில் புல்வெளிகள் இருந்தால் அங்கு மான்கள் இருக்கும், மான்கள் இருந்தால் புலி முதலான கொடிய விலங்குகள் இருக்கும். இங்ஙனம் உயிர்கள் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பற்குச் சுற்றுச்சூழல்அமைவேகாரணமாகும் எந்த உயிரினமும் முற்றிலும் மறைந்து போகாத வண்ணம் சுற்றுச்சூழல் அமைவு பாதுகாக்கிறது.

**சுற்றுச்சூழலின் பாதிப்பு**

பாதிப்பு என்றும் இருவகையால் நிகழும். முதல் பாதிப்பு இயற்கையானது. மழைபெய்யாவிட்டால் மலைகளிலும் காடுகளிலும் உள்ள நீர்நிலைகள் வறண்டு போகும். இதனால் வளம் குறைந்து அப்பகுதிகளில் வாழும் உயிரினங்கள் உயிர்வாழ இயலாத சூழ்நிலை உண்டாகும். மழை பெய்தால் நிலைமை மாறும். இரண்டாவது பாதிப்புச் செயற்கையானது. மழைக்காலத்தில் நீர் நிரம்பி ஓடும் ஆறுகள் கோடைக்காலத்தில் சிற்றோடையாச் சுருக்கிய அளவில் செல்லும். தூய நீர் முழுதும் வற்றாத நிலையில் இதனைப் பாதிப்பு என்று கூறமுடியாது. ஆனால், அதுவே இசாயனக்கழிவுகளோடு கூடிக் கரு நிறத்தில்சாய்க்கடையாய் (சாக்கடை) மாறி ஓடினால் அது நிச்சயம் மனிதர்களால் உருவாக்கப்பட்ட செயற்கைப்பாதிப்பு என்று கூறலாம். இது மாசடைந்தநீராகும். இந்நீரால் யாருக்கும் எந்த பலனும் விளையாது. கடுமையான உடல் உபாதைகளை இந்நீர் உண்டாக்கும்.

**சுற்றுசூழல் பாதுகாப்பு**

மனிதர்ளைத் தவிர, வேறு எந்த உயிரினமும் சுற்றுச்சூழலை சிதைப்பதில்லை. அவை சுற்றுச்சூழல்ச் செழிக்க உதவுகின்றன. ஒரு பெரிய யானைக் கூட்டம் மண் பாதையில் நடந்து செல்லும்போது, தான்போடும் சாணத்தால் அம்மண்ணை வளப்படுத்துகிறது. யானைகள் தம்மை அறியால் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கின்றன. ஆனால், மனிதன் பூமியைப் பாளம் பாளமாக வெட்டிச் சிதைத்துக் கூறுபோட்டு அதைப் பணமாக்குவதிலேயே குறியாக உள்ளான்.

இயற்கை அமைப்புக்களைச் சிதைத்துத் தன் வசதிக்கேற்ப உருமாற்றுதல், இயற்கை இடங்களை ஆக்கிரமித்துத் தனதாக்கிக் கொள்ளுதல், குளம், ஏரி, முதலான நீர் நிலைகளை அழித்துத் தூர்த்து அவற்றின் மீது விதிகளை மீறிய பெரிய கட்டிடங்கள் எழுப்புதல், ஆற்று மணலை அளவுக்கு மீறிச் சுரண்டுதல் எனத் தனது பேராசை பிடித்த செயல்களால் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குச் சவால் விடுகின்றான். சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தனி முயற்சி இல்லை, அது கூட்டு முயற்சி, அனைவரது ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சாத்தியமாகும்.

**சுற்றுச்சூழலும் உயிரினங்களும்**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

சுற்றுச்சூழல் என்பது, மண் வளம், நீர் வளம், உயிர்வளி (காற்று) வளம் ஆகியவற்றை உள்ளடக்கியது. ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் முடியவுள்ள உயிர்களின் வாழ்க்கைமுறை இவற்றைச் சார்ந்தே உள்ளது. இவை சுற்றுச்சூழலை ஆளுமை செய்வதில்லை. அதற்கு ஒத்திசைந்து நடக்கின்றன. இவ்வியல்பின் காரணமாகப் பெருமழை, ஆழிப்பேரலை, நிலநடுக்கம், ஆகிய இயற்கை உற்பாதங்கள் நிகழும் போது இவை முன்னரே அறிந்து அவற்றிடமிருந்து தப்பிப் பிழைக்கின்றன. ஆனால், ஆறறிவுள்ள மனிதன் மட்டும் இயற்கைக்கு அடங்கி அதனோடு ஒத்திசைந்து நடக்காமல் அதை ஆளுமை செய்யத் துடிக்கின்றான். விளைவு, இயற்கை உற்பாதங்களை முன் கூட்டியே உணரும் ஆற்றலின்றி அவை திடுமென்று வந்து தாக்கும்போது திகைக்கிறான்; தடுமாறுகிறான். தப்பிழைக்கும் வழிதெரியாது அவ்வியற்கைக்கு உயிர்ப்பலியாகின்றான். இது சுற்றுச்சூழலை நாசம் செய்யும் மனிதனுக்குக் கிடைக்கும் கொடும்பரிசாகும்.

**தொல்காப்பியரின் சுற்றுச்சூழல் அறிவு**

சுற்றுச்சூழலை முதலில் எடுத்துரைக்கும் தமிழ் நூல்தொல்காப்பியமாகும். தொல்காப்பியர் தம் சுற்றுச்சூழல் அறிவினைப் பொருளதிகாரத்தில் புலப்படுத்திகிறார். காடுறை உலகம், மைவரை உலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம், முல்லை, குறிஞ்சி, மருதம்,நெய்தல், நிலம் ,பொழுது, முதற்பொழுது, கருப்பொருள், ஓரறிவுயிர் முதலான உயிர்களின் மரபுச் செய்திகள் ஆகியன தொல்காப்பியரின் சுற்றுச்சூழல் பட்டறிவை நன்கு விளக்குகின்றன. ''தீம்புனல் உலகம்'2 என்ற தொடர் அவரது சுற்றுச்சூழல் அறிவுக்குச் சிறந்த சான்றாகும். (தீம்புனல் - இனிமையான நீர்) மருத நிலம் எப்பொழுதுமே நீர் வளமிக்க நிலம் என்பதை இஃது எடுத்துக்காட்டுகிறது.

**சங்க இலக்கியமும் சுற்றுச்சூழலும்**

சங்க அக இலக்கியங்களைச், 'சுற்றுச்சூழல் களஞ்சியம்' என்று கூறலாம். ஒவ்வோர் அகப்பாடலில் இடம்பெற்ற முதற்பொருளும், கருப்பொருளும் சுற்றுச்சூழல் அமைவை வெளிப்படுத்துவை. கருப்பொருட் செய்திகளில் தாம் சுற்றுச்சூழல் அமைவு நன்கு விளக்கமுறுகிறது. சுற்றுச்சூழலைச் சுட்டாமல் புலவர்கள் அகப்பாடல்களை இயற்றுவதில்லை. சுற்றுச்சூழலைக் காட்டுவதற்கு ஓர் உள்ளுறை உவமமோ இறைச்சிப் பொருளோ அவர்களுக்குப் போதுமானது. மரங்கள், செடிகள், கொடிகள், பறவைகள், விலங்குகள், நீர்வாழ் உயிர்கள் ஊர்வன, தவழ்வன என எவற்றையெல்லாம் கூற வாய்ப்புள்ளதோ அவற்றை விடாமல் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். கபிலரது குறிஞ்சிப்பாட்டில் காணும் 99. வகையான மலர்களின் பெயர்கள், அப்புலவரது சுற்றுச்சூழல் அறிவின் ஆழத்தை எடுத்துக்காட்டும். சுற்றுச்சூழல் சிறப்பினை எடுத்துக்காட்டுவதற்கு என்றே இயற்றப்பட்ட நூல் மலைப்படுகடாம் ஆகும். 'மலைப்படுகடாம்' என்ற நூற்பெயரே இதனை அறிவிக்கும்.

2.தொல்காப்பியம், பொருளாதிகாரம், அகத்திணை இயல், நூற்பா எண்,5

"கருக்கோட்டு நறும்புன்னை மலர்சினை மிசை தொறும்
சுருப்பார்க்கும் குரலினோ டிருந் தும்பி யியையூத
வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருள் மரபின்மால்யாழ்கொளக் கிடந்தான் போற

பெருங்கட றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்”3

புன்னை மரம், புன்னை மலர், சுரும்பு, தும்பி, கடல், வண்டு என்னும் சுற்றுச்சூழலோடு கடற்கரைச்சோலையின் எழில் இதனுள் வருணிக்கப்படுதை அறியலாம்.

**ஐங்குறுநூற்றில் சுற்றுச்சூழல்**

சுற்றுச்சூழல் அமைவை நன்றாகப் புலப்படுத்திக்காட்டும் ஓர் அகப்பொருள் நூல் ஐங்குறுநூறு ஆகும். முதற்பொருள், கருப்பொருள் என்னும் இரண்டனுக்கும் இன்றியமையாமை தருவதால் சுற்றுச்சூழல் செய்திகள் இந்நூலில் நிரம்பிக் காணப்படுகின்றன. நீர் வளமிக்க மருதத்தையும் நெய்தலையும் முதற்கண் வைத்துத் தொகுத்ததிலிருந்தே சுற்றுச்சூழலுக்கு இந்நூலில்எத்துணைச் சிறப்பிடம் தருகிறது என்பது தெரிய வரும். இதனுள் இடம் பெற்ற,"மாரிவாய்க்க வளநனி சிறக்க” 4 என்பது பென்போல் பொதிந்து போற்றி வைக்கத்தக்க ஒரு தொடராகும்.

சுற்றுச்சூழல் உணர்வு இன்றேல் இத்தகுதொடர் அமையாது. நாம் இன்று கண்டிராத கேள்விப்படாத அல்லது வேறுவேறு பெயர்களில் வழங்கும் தாவர வகைகள், பறவை வகைகள், விலங்கு வகைகள், ஆகியவற்றை

இந்நூலுள் கண்டு மகிழலாம். வேழப்பத்து, கள்வன்பத்து, புனலாட்டுப்பத்து, எருமைப்பத்து, ஞாழற்பத்து, வெள்ளாங்குருகுப்பத்து, சிறுவெண்காக்கைக்குப்பத்து, நெய்தற்பத்து, கேழற்பத்து, குரக்குத்து, கிள்ளைப்பத்து, மஞ்ஞைப்பத்து, இளவேனில் வரவுரைத்த பத்து, புறவணிப்பத்து எனவேறு அகநூல்களின் கண்டறிய முடியாத சிறப்புத் தலைப்புப் பெயர்கள் சுற்றுச்சூழல் அமைவைக் கருத்தில் கொண்டு தொகுத்த புலவரால் சூட்டடபட்டுள்ளன.

3.கலித்தொகை, பாடல் எண்.123:1 -5

4.ஐங்குறுநூறு, பாடல் எண்,10:2

**வேழம்**

வேழம் என்பது கரும்பைப் போலவே பூக்கும் ஒரு தாவரம். வயலில் நட்டு வளர்க்கப்பட்ட பசலைக்கொடிச் சுற்றிப் படரும்.5. இதனைக், "கொறுக்கைச்சி", “கொறுக்காந்தட்டை” என வழங்குவர். குதிரையின் வெண்மையான பிடரிமயிரைப் போல இதன் பூக்கள் வெள்ளை நிறத்தில் இருக்கும்.6

இது பார்ப்பற்கு வானில் பறக்கும் வெண்குருகு போலத் தோன்றும். புதுப்புனல் நீராடும் மகளிருக்கு இது புணையாய் நின்று நீரில் மிதந்து செல்ல உதவும்.7 வேழத்தின் திரண்ட தண்டில் மகளிர் அஞ்சனம் என்னும் கண்மையைப் பெய்து சேமித்து வைப்பர்.8 சுற்றுச்சூழல் செழிப்புக்கு உதவும் ஒரு தாவரத்தைப் பற்றிப் புலவர்கள் விவரிக்கும் போது, அதனோடு தொடர்புடைய பிற தாவரங்களின் இல்புகளையும் புலப்படுத்திக் கொண்டே செல்வர். அவ்வகையில், வேழத்தைப் பற்றிக் கூறுகையில்,

“இருஞ்சா யன்ன செருத்தியொடு வேதம்
கரும்பி னலரும்”9

என வேழம் செருத்தியொடு தொடர்புப்படுத்தப்படுகிறது.

செருத்திப் பூவோடு வேழம் கரும்புப்போலச் சுழன்றாடும் என்பது இவ்வடிகளின் கருத்து. சாய், செருந்தி இவையெல்லாம் கோரை என்னும் தாவர வகையைச் சோர்ந்தவை. சாய் = பஞ்சாய்க் கோரை.செருத்தியும் கோரை வகையைச் சேர்ந்தது. இது, ''நெட்டிக்கோரை”, ‘வாட்கோரை’,''தண்டான் கோரை',10 என்னும் பெயர்களில் பழையவுரைகளில் வழங்குகிறது. இதன் பூவைப் பாவை என்றாலும் அதனை மகளிருக்கு உவமை கூறலும் மரபு.

5.மேலது,பாடல் எண்,11:1

6 .மேலது, பாடல் எண்,13:1-2,

7.மேலது, பாடல் எண்,15:1-3,

8 .மேலது, பாடல் எண்,16:1-2,

9. மேலது, பாடல் எண்,18:1-2,

10. மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சி,அடி,172,நச்சினார்க்கினியார், உரை,கடியலூர் உருத்திரங்கண்ணனார்,பாட்டினப்பாலை அடி,243,நச்சினார்க்கினியார் உரை,

**கள்வன்**

ஊர்வன, தவழ்வன ஆகிய உயிர்களைப் பற்றிக் கூறும் போது, அவற்றின் வாழிடங்களையும் இயல்புகளையும் ஒருசேர ஐங்குறு நூறு எடுத்ததியம்புகிறது. ‘நண்டு’ என நாம் இக்காலத்தில் வழங்குவதை, அக்காலத்தில், ‘ஞெண்டு’ என்றனர். அலவன், கள்வன், களவன், என வேறு பெயர்கள் இதற்குண்டு. உடம்பில் புள்ளி உடையது நீர்முள்ளிச் செடியின் வேர்ப்பகுதி இதற்கு விருப்பமான வசிப்பிடம் ஆகும்.11 நீர்முள்ளிச் செடி மருத நிலத்துச்செடியாகும். நண்டு, கரையிலுள்ள ஆம்பல் கொடியை அறுக்கும்.

சேற்றில் விளையாடும் இயல்பினது. மகளிர்,இதனை அலைத்து ஆட்டுவர். இது ''கள்வன் ஆட்டுதல்’12 என வழங்கும்.சூல் கொண்ட நண்டின் பிள்ளைகள் பிறக்கும் போது தாய் நண்டு இறந்துபடும். இதனை, ஐங்குறுநூறு, ''தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வன்'13 என்கின்றது. பசிய காய்களை உடைய வயலைக்கொடியையும் நீர்க்கொடியாகிய வள்ளைக்கொடியையும் அறுத்துத் துண்டாக்கும்.14. கரந்தை வயலிலும் இது வசிக்கும். கரந்தை என்பது கொட்டைக் கரந்தையாகும். இது பூண்டு வகையைச் சேர்ந்தது. வயலில் விளையும் செந்நெல் கதிர்களைக் குளிர்ச்சி நிறைந்த மண்ணாலாகிய தனது வளையில் கொண்டு போய்ச் சேமித்து வைக்கும். இதனை,

“செந்நெலஞ் செறுவிற் கதிர்க்கொண்டு கள்வன்
தண்ணக மண்ணளைச் செல்லும்”15
“வேப்பு நனை யன்ன நெடுங்கட் கள்வன்
தண்ணக மண்ணளை நிறைய நெல்லின்
இரும்பூ உறைக்கும்”16

என வரும் பாடலடிகள் விளக்கும்.

11.ஐங்குறுநநூறு, பாடல் எண்கள்,211:-2,22:1-2; 23:1-2.

12.மேலது, பாடல் எண்,23:1.

13.மேலது, பாடல் எண்,24:1.

14.மேலது,பாடல் எண்கள்,25:1-2;26:1-2.

15.மேலது,பாடல் எண்,27:1-2.

16.மேலது,பாடல் எண்,30:1-3.

**அரியவகைத் தாவரங்கள்**

மருத நிலத்துக் கருப்பொருளாகிய நண்டைப் பற்றிக் கூறும், அதனோடு தொடர்புடைய வேறு கருப்பொருளாகிய சாய், செருந்தி, நீர் முள்ளிச்செடி, ஆம்பல் கொடி, வயலைக்கொடி, வள்ளைக்கொடி, கொட்டைக் கரந்தை ஆகிய இன்று கேள்விப்பட்டிராத தாவர வகைகளையும் இணைத்துக் கூறும் நெறி என்பது, சங்க புலவர்களின் சுற்றுச் சூழல் அறிவையும் உணர்வையும் புலப்படுத்துவனவாய் அமைகிறது.

**மாசிலாக் காவிரி**

காவிரி நதி நீர் என்பது இன்று வரையில் தீர்க்க முடியாத தலையாயப் பிரச்சனையாய் உள்ளது. நதி நீர் பங்கீடு என்று
தொடங்கிய இப்பிரச்சனை இப்பொழுது காவிரி நதி யாருக்கு சொந்தம் என்பதில் போய் நிற்கிறது. காவிரி நதி தன் மாநிலத்தில் பிறப்பதால் காவிரி தனக்கு மட்டுமே சொந்தம் என்று கர்நாடகம் உரிமை கொண்டாடுகிறது. இதை மறுக்கும் தமிழகம், காவிரிவெள்ளமென. மிகுதியாய்ப் பாய்ந்தோடுவது தமிழ்நாட்டில் தான் என்றும்,பிறகு அஃது, இறுதியில் சென்று கடலில் ப்பது பூம்புகார் என்னும் தமிழகப்பகுதியில் தான் என்றும் வாதாடுகிது. கன்னட இலக்கியங்கள் காவிரியைப் பற்றிக் கூறியுள்ளனவா என்று தெரியவில்லை. ஆனால்,தமிழ் இலக்கியங்கள் காவிரியின் புகழ் பாடுகின்றன. இவ்விலக்கியங்களில் இடம் பெற்ற காவிரி பற்றிய குறிப்புகள் இந்நதி தமிழகத்திற்குச் சொந்தம் என்பது போல் காட்டுகின்றன.

காவிரி உற்த்தியாகும் குடகு மலை இன்று கர்நாடக மாநிலத்தில்
இருந்தாலும் அம்மலை சங்க காலத்தில் தமிழகப் பகுதியாக இருந்தது. காவிரி உற்த்தியாகும் இடமும் அது சென்று முடியும் இடமும் தமிழகப் பகுதிகளே என்பதை, "மலைத் தலைய கடற்காவிரி"17 என்ற அடியின் வாயிலாகப் பட்டினப்பாலை தெரிவிக்கிறது. மழை பொய்த்தாலும் காவிரியில் சிறிதளவுநீரேனும் எஞ்சியிருக்கும். முழுதாக வற்றாது என அப்பாட்டுக் கூறுகிறது. பத்துப்பாட்டு, அகநானூறு, ஐங்குறுநூறு, சிப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்கள் காவிரியின் செழுமையையும், அது சுற்றுச் சூழல் பாதுகாப்பில் எடுத்துக்கொள்ளும்
பங்கையும் பற்றி விரிவாகப் பாடுகின்றன.ஐங்குறுநூறு காவிரியின் நீர்நிரம்பிய சூழலைத் தெரிவிப்பதோடு, அதன் கழிவுகளால் மாசுபடாத நிலைமையையும் சுட்டிக்காட்டுகிது.

"காவிரி மலிநீர்நிறை"18

" கூதி ராயிற் றண்கலிழ் தந்து
வேனி லாயின் மணி நிறங் கொள்ளும்"19

மழைக்காலத்தில் குளிர்ந்த. கலங்கியநீரையும், இவேனில் காலத்தில் நீலமணி நிறத்தைப் போலத் தெளிந்த நீரையும் காவிரி தரும் என்றதால் காவிரியின் தூய்மை இங்கு விளக்கப்படுகிறது. நீலமணி நிறம் என்பது நீரின் மாசுபடாத தன்மையை உணர்த்தும்.

17.கடியலூர் உருத்திங்கண்ணனார், பட்டினப்பாலை, அடி,6.

18.ஐங்குறுநூறு,பாடல் எண்,42:3.

19.மேலது,பாடல் எண்,45:1-2.

**முடிவுரை**

சுற்றுச்சூழல் உணர்வு என்பது பழந்தமிழரது குருதியோடு கலந்தது. நானிலம், முதற்பொருள், கருப்பொருள், முதலான அகக்குறியீடுகள் எல்லாம் இதன் விளைவாய் உருவானவை. சங்க காலத்தில் முழுமையாக இருந்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இன்று நாம் வாழும் காலத்தில் அரைகுறையாகத்தான் உள்ளது. குப்பை நிறையச் சேருமே என்ற எண்ணத்தில் பெரும்பான்மை வீடுகளில் காற்றைத் தூய்மையாக்கும் வேப்பமரம், துளசிச்செடி முதலானவற்றை வைத்து வளர்ப்பதில்லை. அது தவறு என்பதை உணர வேண்டும். மரங்களும் மரங்களில் கூடுகட்டி வசிக்கும் பல்வேறு உயிர்களும் மேகங்களை ஈர்த்து மழைப் பொழிவை உண்டாக்கும் என்பது வாழ்க்கையில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பாடமாகும். ஆகவே, இனியாவது,சுற்றுச்சூழல் செழிப்புக்கு வாழ்க்கையில் இன்றியமையாமை அளித்து அதற்குப் போதுமான அளவு நம் பங்கை மகிழ்வோடு தருவோம்.

**கலைச்சொற்கள்**

சுரும்பு - தும்பி - வேழம் - கள்வன் . ஞாழல் - வெள்ளாங்குருகு - கேழல் - குரக்கு - கிள்ளை - மஞ்ஞை - உற்பாதங்கள்.

**துணைநூற்பட்டியல்**

[1]. ***ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும்.*** **உ.வே.சா. நூல் நிலைய வெளியீடு, ஏழாம் பதிப்பு, 2012.**

[2]. ***கலித்தொகை.*** **திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், நான்காம் பதிப்பு, 1972.**

[3]. **தொல்காப்பியர்.** ***தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதல் ஐந்து இயல்கள்).*** **நச்சினார்க்கினியர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ஆறாம் பதிப்பு, 1975.**

[4]. ***பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்.*** **கபீர் அச்சுக்கூடம், 1950.** *(குறிப்பு: அச்சுக்கூட பதிப்பு ஆண்டு மூலத்தில் இல்லை எனில் வெளியிடப்பட்ட ஆண்டைக் குறிப்பிடலாம்).*

[5]. **மங்கையர்க்கரசி, சிவ.** ***சூழலியல் தமிழ்.*** **உமா பதிப்பகம், முதற்பதிப்பு, 2004.**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 19.“அளம்" புதினத்தில் இந்தியச் சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும்

**க.கனகவள்ளி,**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி -620 002
தொலைபேசி : 6380526367,
**முனைவர் தா. லதா,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 002.

**ஆய்வுச்சுருக்கம்:**

மானுட வாழ்வு இயற்கையோடு இயைந்தது என்பதை இந்தியச் சிந்தனை மரபு தொன்றுதொட்டு வலியுறுத்தி வருகிறது. வேதங்கள், உபநிடதங்கள், சங்க இலக்கியங்கள், திருக்குறள் போன்ற செவ்விலக்கியங்கள் இயற்கையை மனித வாழ்வின் பிரிக்க முடியாத கூறாகக் கருதி, அதனைப் பாதுகாப்பதே அறம் என்ற விழுமியத்தை நிலைநாட்டுகின்றன. இத்தகைய சிந்தனைகள் இன்றைய சுற்றுச்சூழல் நெருக்கடிகளின் பின்னணியில் புதிய பொருத்தத்தையும் அவசியத்தையும் பெறுகின்றன.

தற்காலத் தமிழ்ப் புதினங்களில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும், நிலம் சார்ந்த வாழ்வியலையும் பதிவுசெய்யும் படைப்புகளில் 'அளம்' புதினம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. நெய்தல் நிலத்து உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கை, கடற்கரைச் சூழல், உப்பு உற்பத்தி, இயற்கை வளங்களின் பயன்பாடு, மனித உழைப்பு, சமூக–பொருளாதாரச் சிக்கல்கள் ஆகியவற்றை யதார்த்தமாகப் பதிவு செய்யும் இப்புதினம், சுற்றுச்சூழலுக்கும் மனித வாழ்வுக்கும் இடையிலான பரஸ்பரச் சார்பினை வலியுறுத்துகிறது. மேலும், இயற்கை என்பது மனிதன் சுரண்டுவதற்கான வளம் அல்ல; பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டிய வாழ்வாதாரம் என்ற இந்தியச் சிந்தனை மரபின் அடிப்படைக் கருத்தையும் வெளிப்படுத்துகிறது.

இவ்வாய்வுக் கட்டுரை, 'அளம்' புதினத்தில் இடம்பெறும் சுற்றுச்சூழல் விழுமியங்களை இந்தியச் சிந்தனை மரபின் பின்னணியில் ஆராய்கிறது. குறிப்பாக, சங்க இலக்கிய நெய்தல் திணையின் இயற்கை–மனித உறவுக் கோட்பாடுகள், திருக்குறள் வலியுறுத்தும் நீர் மற்றும் உயிர் பாதுகாப்புச் சிந்தனைகள், வேதங்கள் எடுத்துரைக்கும் பூமித் தத்துவம் ஆகியவற்றோடு ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம், பண்டைய இந்தியச் சுற்றுச்சூழல் விழுமியங்கள் நவீன தமிழ் இலக்கியத்தில் எவ்வாறு மறுவாசிப்புப் பெறுகின்றன என்பதையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது சமூகப் பொறுப்பும் பண்பாட்டு அறமுமாகும் என்பதையும் இவ்வாய்வு நிறுவுகிறது.

**முன்னுரை :**

**"நிலமும் நீரும் காற்றும் நெருப்பும்,**
**நிறைந்த பிரபஞ்சத்தின் ரசவாதம் ‘அளம்’!**
**உலையும் உழைப்பும் வியர்வையும் கொண்டு,**

**உயிர்நெறி காக்கும் மனிதரின் தளம்!**

இந்தியச் சிந்தனை மரபு என்பது இயற்கையை நுகர்பொருளாகப் பார்க்காமல், தன் உயிரின் நீட்சியாகப் பார்க்கும் உன்னதப் பண்பைக் கொண்டது. ஐம்பூதங்களின் சமநிலையே உலக இயக்கம் என்பதை உபநிடதங்களும், "நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" என்ற தொல்காப்பியமும் நிருபிக்கின்றன.

நெய்தல் நிலத்தின் உப்புக் காய்ச்சும் வாழ்வியலை மையமாகக் கொண்ட 'அளம்' புதினம், நவீன காலச் சூழலியல் நெருக்கடிகளையும், சிதைந்து வரும் சுற்றுச்சூழல் விழுமியங்களையும், பாரம்பரிய இந்திய மண்ணின் சிந்தனை மரபோடு இணைத்து விவாதிக்கிறது.

**நிலமும் வாழ்வியலும்**

'அளம்' என்ற சொல்லே உப்பளத்தைக் குறிப்பதாகும். சங்க இலக்கியத்தில் நெய்தல் நில மக்களின் முதன்மைத் தொழிலாக உப்ப விளைவித்தலும், மீன்பிடித்தலும் இருந்தன.

**உமணர்களின் தொடர்ச்சி**

அளம் புதினத்தின் மாந்தர்கள், சங்க கால 'உமணர்' (உப்பு விற்பவர்கள்) மரபின் தொடர்ச்சியாவர். சங்க இலக்கியத்தில் உமணர் நெடும்பயணம் சென்று உப்பு விற்ற செய்தி பின்வருமாறு பதிவாகியுள்ளது.

**"அகலிரு விசும்பின் பாயிருள் பருகி**
**பகல்கால் உற்ற பன் கதிர்ச் செல்வன்**
**நெய்ம் மலி நேமி நிவப்பக் கானல்**
**அளம் போகு உமணர்..." (நற்றிணை, 211)**

அளம் புதினத்தில் வரும் தொழிலாளர்கள், இதே உப்பளப் பின்னணியில் உழைப்பைக் கொட்டி, இயற்கையின் வெயிலையும் காற்றையும் நம்பி வாழும் நவீன கால உமணர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

**நெய்தல் நிலச் சூழலியல்**

சங்கப் பாடல்களில் நெய்தல் நிலத்தின் தாழை, புன்னை, சுறாமீன், அலவன் (நண்டு) போன்ற சுற்றுச்சூழல் கூறுகள் மனித உணர்வுகளோடு ஒப்பிடப்பட்டன. 'அளம்' புதினத்திலும், உப்பளத்தின் உப்புப் படிவங்கள், கடல் காற்றின் வேகம், உவர் நிலத்துத் தாவரங்கள் ஆகியவை வெறும் பின்னணியாக இல்லாமல், நாவலின் கதாபாத்திரங்களாகவே வாழ்கின்றன.

**இந்தியச் சிந்தனை மரபும் சுற்றுச்சூழல் விழுமியங்களும்**

இந்தியத் தத்துவ மரபில் 'வசுதைவ குடும்பகம்' (உலகமே ஒரே குடும்பம்) மற்றும் 'பிரகிருதி' (இயற்கை) வழிபாடும் முதன்மையானவை. 'அளம்' புதினத்தில் இந்த விழுமியங்கள் இரு நிலைகளில் வெளிப்படுகின்றன:

**1. இயற்கையோடு இயைந்த சமநிலை**

இந்தியச் சிந்தனை மரபு, மனிதனை இயற்கையின் தலைவனாகப் பார்க்காமல், அதன் ஒரு பகுதியாக மட்டுமே பார்க்கிறது. புதினத்தில், உப்பளத் தொழிலாளர்கள் தங்களுக்கு வாழ்வளிக்கும் கடலையும் நிலத்தையும் தெய்வமாக மதிக்கின்றனர். உப்பளத்தில் ஏற்படும் சிறு காலநிலை

மாற்றமும் அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என்பதை உணர்ந்து, இயற்கையின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு வாழும் 'சரணாகதித் தத்துவம்' இதில் வெளிப்படுகிறது.

**2. உழைப்பின் புனிதமும் அறமும்**

வியர்வை சிந்தி உப்பளத்தில் உழைக்கும் மக்களின் வாழ்வு, இந்திய அறநெறி மரபான 'கடமையைச் செய்' என்ற கர்ம யோகத்தின் வெளிப்பாடாகும்.

**"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும்துன்பம்**
**சுடச்சுட நோற்கிர்ப் பவர்க்கு" (குறள், 267)**

என்ற வள்ளுவத்தின்படி, வெயிலின் தகிப்பில் உருகி, உப்பைத் தோற்றுவிக்கும் தொழிலாளர்களின் துன்பமும், அவர்களின் அகம் சார்ந்த விழுமியங்களும் புதினத்தில் அற உணர்வோடு பேசப்படுகின்றன.

**சுற்றுச்சூழல் சிதைவும் நவீனத்துவத்தின் சவால்களும்**

இயற்கையை உயிராகக் கருதி அதனோடு இயைந்து வாழ்ந்த மனித சமூகம், நவீனத்துவத்தின் பெயரில் இயற்கையைப் பொருளாதார வளமாக மட்டுமே அணுகத் தொடங்கியுள்ளது. தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல், இயற்கை வளங்களின் அளவுக்கு மீறிய சுரண்டல், கடலோர மாசுபாடு, காலநிலை மாற்றம் போன்றவை சுற்றுச்சூழல் சிதைவின் முக்கியக் காரணிகளாக மாறியுள்ளன. இந்நிலை மனிதனின் வாழ்வாதாரத்தையும் உயிர்ச்சூழல் சமநிலையையும் பெரிதும் பாதிக்கிறது.

இத்தகைய சுற்றுச்சூழல் நெருக்கடியை 'அளம்' புதினம் நெய்தல் நிலத்து உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வின் வழியாக யதார்த்தமாகப் பதிவு செய்கிறது. கடல், உப்பளம், நிலம், வெயில் ஆகிய இயற்கைக் கூறுகளையே நம்பி வாழும் மக்களின் வாழ்க்கை, நவீன பொருளாதார மாற்றங்கள் மற்றும் இயற்கை வளங்களின் சீர்கேட்டால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை புதினம் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துகிறது. இயற்கை அழிவது என்பது ஒரு சூழலியல் பிரச்சினை மட்டுமல்ல; அது மனித வாழ்வின் அடித்தளத்தையே சிதைக்கும் பேராபத்தாகும் என்பதை புதினம் உணர்த்துகிறது.

**'அளம்' புதினத்தில் பஞ்சபூதக் கோட்பாடும் சூழலியல் அழகியலும்**

**நிலமும் நீரும் - உவர்மண்ணின் உன்னதம்:**

இந்தியச் சிந்தனை மரபில் நிலம் என்பது உயிர்களைத் தாங்கும் பூமித்தாயாகப் போற்றப்படுகிறது. 'அளம்' புதினத்தின் முதன்மைக் களமாக விளங்கும் உவர் நிலம், சாதாரண விளைநிலம் அன்று; அது கடலும் தரையும் சந்திக்கும் உன்னதப் பரப்பாகும். சங்க இலக்கியத்தில், **"வெண்மணல் விரிந்த நனந்தலைக் கானல் அளம்கெழு நாடு" (அகநானூறு, 210)** என்று போற்றப்படும் உப்பள நிலத்தின் தன்மையே இப்புதினத்திலும் தொழிலாளர்களின் வியர்வையை உப்பாக மாற்றும் உழைப்பின் பூமியாகச் சித்திரிக்கப்படுகிறது. இந்த நிலத்தில் தேக்கப்படும் கடல் நீரானது, வெறும் நீரல்ல; அது தொழிலாளர்களின் வாழ்வாதாரக் கொடையாகும். இதனை நற்றிணைப் பாடல்,

**"முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்" (நற்றிணை, 338)**

என்று கடலின் வளத்தைக் குறிப்பது போல, புதினத்தில் பாத்திகளில் தேங்கும் நீர் வற்றி, அடியில் வெண் முத்தாய் உப்புப் படியும் காட்சி ஒரு பேரழகியலாக வர்ணிக்கப்படுகிறது.

**தீ, வளி, விசும்பு - இயற்கையின் ரசவாதம்:**

உப்பள உருவாக்கத்தில் சூரிய வெப்பமும் (தீ) கடல் காற்றும் (வளி) மிக முக்கியமான இயக்கு சக்திகளாகும். சூரியக் கதிர்கள் உப்பளத்து நீரை ஆவியாக்குவதைச் சங்க இலக்கியம்,

**"அகலிரு விசும்பின் பாயிருள் பருகி பகல்கால் உற்ற பன் கதிர்ச் செல்வன்" (நற்றிணை, 211)**

என்று வர்ணிக்கிறது. புதினத்தில், தொழிலாளர்களின் உடலைத் தகிக்கும் இந்தச் சூரிய வெப்பம் அவர்களுக்கு எதிரி அல்ல; மாறாக, அதுவே அவர்களின் கர்ம யோகத்திற்கான உந்துசக்தியாக மாறுகிறது. அதேபோல், "வெண்டிரைப் பரப்பின் கடுங்காற்று எறிய" (புறநானூறு) என்ற வரிகளுக்கேற்ப வீசும் கடல் காற்றின் திசையறிந்து தொழிலாளர்கள் பாத்திகளைப் பக்குவப்படுத்துகின்றனர். இத்தகைய கடின உழைப்பு நடைபெறும் உப்பளம் என்பது, நவீன நகரங்களின் கான்கிரீட் கூண்டுகள் போலன்றி, எல்லையற்ற வானத்தையே (விசும்பு) கூரையாகக் கொண்ட திறந்தவெளிச் சுதந்திரத்தையும், பல்லுயிர்ப் பெருக்கத்தையும் ஆவணப்படுத்துகிறது.

**புதினத்தில் சுற்றுச்சூழல் விழுமியங்கள் :**

மனிதன் இயற்கையின் தலைவன் அல்ல, அவன் இப்பிரபஞ்சத்தின் ஒரு பகுதி மட்டுமே என்ற சமநிலைச் சிந்தனையை இப்புதினம் முன்வைக்கிறது. உப்பளச் சூழலில் வாழும் உவர்நிலத் தாவரங்கள் (தாழை, தில்லை, கள்ளிக் காடுகள்), நண்டுகள் (அலவன்), கடற்கரைப் பறவைகள் ஆகியவற்றுடன் தொழிலாளர்கள் கொண்டுள்ள பிணைப்பு 'சூழலியல் அழகியலை' (Eco-Aesthetics) நிருபிக்கிறது. சங்கப் பாடல்களில் தலைவியின் துயரைக் கண்டு நண்டுகளும், புன்னை மரங்களும் இரங்குவதாகக் காட்டும் திணை மரபின் நீட்சியாக, இப்புதினத்திலும் இயற்கையின் கூறுகள் மனித உணர்வுகளோடு பிணைக்கப்பட்டுள்ளன.

**"கானல் அலவன் கலிப்பக், கதிர் தெறிப்ப,**
**வானம் கடலினில் பூத்தன்ன..." (சிறுபாணாற்றுப்படை, 146-147)**

என்ற சங்கப் வரிகளைப் போல, உப்பளத்து வெண்மணலில் நண்டுகள் ஓடுவதும், பறவைகள் வந்து அமர்வதும் மனித வாழ்வோடு கலந்த பல்லுயிர்ப் பெருக்க விழுமியத்தின் அடையாளங்களாகும் என்பதே இப்படினும் குறிப்பிடும் சுற்றுச்சூழல் விழுமியமாகும்.

**முடிவுரை:**

'அளம்' புதினம், நெய்தல் நில மக்களின் உழைப்பையும் கண்ணீரையும் பேசுவதோடு மட்டுமல்லாமல், ஆழமான சுற்றுச்சூழல் விழுமியங்களையும் முன்னிறுத்துகிறது.
சங்க இலக்கிய நெய்தல் திணைக் கோட்பாடுகளின் தற்கால வடிவமாக இப்புதினம் விளங்குகிறது. இயற்கையைச் சுரண்டுவது மனித குலத் தற்கொலைக்குச் சமம் என்ற தற்காலச் சூழலியல் விழிப்புணர்வை, இந்தியச் சிந்தனை மரபின் பின்னணியில் நின்று இப்புதினம் அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

எனவே, 'அளம்' காட்டும் நெய்தல் வாழ்வியல், நாம் தொலைத்துவிட்ட சுற்றுச்சூழல் விழுமியங்களை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் ஒரு காலக்கண்ணாடியாகும்.

**துணை நின்ற நூல்கள்:**

1. சு. தமிழ்ச்செல்வி. அளம். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2014.
2. திருவள்ளுவர். திருக்குறள். பரிமேலழகர் உரை. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
3. தொல்காப்பியர். தொல்காப்பியம் – பொருளதிகாரம். இளம்பூரணர் உரை. சென்னை: சாரதா பதிப்பகம்.

4. உ.வே. சாமிநாதையர் (பதி.). நற்றிணை. சென்னை
5. உ.வே. சாமிநாதையர் (பதி.). குறுந்தொகை. சென்னை
6. உ.வே. சாமிநாதையர் (பதி.). புறநானூறு. சென்னை
7. உ.வே. சாமிநாதையர் (பதி.). அகநானூறு. சென்னை
8. ஈசாவாச்ய உபநிடதம். சென்னை: ராமகிருஷ்ண மடம்.
9.இரா. மோகன். இலக்கியத் திறனாய்வு. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
10. ந. வேலுசாமி. சுற்றுச்சூழலும் தமிழர் வாழ்வியலும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

# 20.பழந்தமிழ் இலக்கிய மரபில் சதகங்களில் சுற்றுப்புறச் சிந்தனைகள்

**கா.ரஞ்சனா,**

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

நெறியாளர் **முனைவர் ம. பிரேமா,**

தமிழாய்வுத் துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 02

Email: ranjanakalimuthu1998@gmail.com, Tel:8072816152

https://orcid.org/0009-0000-5982-2437

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ் சிற்றிலக்கிய வகைகளுள் நூறு பாடல்களால் அறக்கருத்துகளையும், வாழ்வியல் நெறிகளையும் போதிக்கும் இலக்கிய வடிவம் சதகம் ஆகும். தனிமனித ஒழுக்கத்தையும் பக்தி நெறிகளையும் பாடிய இச்சதகங்கள் மனித வாழ்வின் அடிப்படையான சுற்றுப்புறச் சூழலையும் இயற்கை வளத்தையும் காப்பதைக் காலத்தின் தேவையாக முன் வைத்துள்ளன. தமிழ் சதக இலக்கியங்களில் பயின்றுவந்துள்ள நீர் மேலாண்மை, தாவரவளம், பல்லுயிர் ஓம்பல், காடழிப்பு எச்சரிக்கை, நிலத்தடி நீர் மற்றும் பஞ்சபூதத் தூய்மை உள்ளிட்ட முதன்மையான சுற்றுச்சூழல் காரணிகளை விரிவாக ஆராய்கிறது. மேலும், சதகங்கள் காட்டும் இச்சூழலியில் அறம், பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியம், அறநூல்கள் மற்றும் காப்பிய மரபோடு எவ்வாறு ஒத்துப் போகிறது என்பதை ஒப்பீட்டு நோக்கில் இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. புவிவெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாற்றச் சிக்கல்களுக்கு நம் முன்னோர்களின் இலக்கியங்கள் தந்துள்ள பசுமைத் தீர்வுகளை ஆவணப்படுத்துவதே ஆய்வின் சாராம்சாகும்.

**திறவுச்சொற்கள் :** சதகஇலக்கியம் – நூற்றொகை, மண்டலச் சதகங்கள் - பிராந்திய வரலாறு, சரணலாயம் – புகலிடம், பல்லுயிர் ஓம்பல் – உயிரக்கம், சீவகாருண்யம் – அன்பு, அடவி – காடு, கைதை – தாழை, பொங்கர் – மரக்கிளை,கொண்டல் – மேகம், துஞ்சுறை- தங்குமிடம்,சூழலியல் - அறம்

**முன்னுரை:**

**“இயற்கையோடு இயைந்த வாழ்வு”** என்பது தமிழர்களின் மரபுவழிப் பண்பாடாகும். சங்ககாலம் தொட்டே தமிழர்கள் நிலத்தையும் இயற்கையையும் தெய்வமாக மதித்து, ஐந்திணைப் பாகுபாடு செய்து வாழ்ந்தனர். இத்தகைய மரபின் தொடர்ச்சியாக, தமிழ் இலக்கிய வரலாற்றின் பிந்தையக் காலகட்டத்தில் தோன்றிய சிற்றிலக்கிய வடிவமான **‘சதக இலக்கியங்கள்’** மனித ஒழுக்கத்தை மட்டும் போதிக்கவில்லை. மனிதன் வாழ்வதற்குக் காரணமான சுற்றுப்புறச் சூழலைப் பேணிக் காப்பதையும் மிக உயரிய அறமாகக் கருதின. அறப்பளீசுர சதகம், தண்டலையார் சதகம், கோவிந்த சதகம் மற்றும் மண்டல சதகங்கள் போன்ற நூல்கள் இயற்கையை மனிதனின் பயன்பாட்டுக்கான பொருளாகப் பார்க்காமல் மனிதனை இயற்கையின் ஒரு பகுதியாகப் பார்க்கும் சிந்தனையைக் கொண்டுள்ளன. சதக நூல்கள் **காட்டும் 1.சோலைகள்அமைத்தலும் நீர்நிலை பெருக்கலும் 2. மரங்களைப் பாதுகாத்தலும் தாவரங்களின் சிறப்பும் 3. பல்லுயிர் ஓம்பல் 4. நிலவளமும் இயற்கை வேளாண்மையும் 5.மரங்கள் நடுவதன் ஆன்மீக மற்றும் சமூக மதிப்பு 6. காடழிப்பின் தீமைகளும் வறட்சியும் 7. நிலத்தடி நீர் மேலாண்மை 8. காற்று மாசும் மூலிகைத் தாவரங்களின் அவசியமும் 9. விலங்கின உரிமைகளும் அஹிம்சையும் 10. பருவகால மாற்றமும்**

**புவி வெப்பமயமாதல் எச்சரிக்கையும் 11. பஞ்சபூதங்களின் தூய்மையும் இயற்கை வழிபாடும் 12. பறவைகள் சரணாலயமும் மரங்களின் அடர்த்தியும் 13. மண் அரிப்பைத் தடுத்தலும் கரைகளைப் பாதுகாத்தலும்** ஆகிய பல்வகையான சுற்றுச்சூழல் நெறிகளையும், அவற்றை ஏரி, குளம், காடு, மரம், விலங்கினப் பாதுகாப்பு போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் வகைப்படுத்தி பிற பழந்தமிழ் இலக்கியச் சான்றுகளோடு ஒப்பிட்டும் விரிவாக ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**சதக இலக்கிய அமைப்பும் சூழலியலும் :**

தமிழ் இலக்கிய மரபில் சதகம் என்பது நூறு பாடல்களில் நன்னெறிகளைப் போதிக்கும் ஒரு தனித்துவமான சிற்றிலக்கிய வடிவமாகும். இந்த இலக்கிய வடிவத்திற்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் மிக நெருக்கமானத் தொடர்பு உண்டு. மக்கள் சமுதாயத்தில் வாழ வேண்டிய ஒழுக்கநெறிகளை வகுத்துக் கொண்டனர். சதக இலக்கியங்கள் பெரும்பாலும் சாதாரண மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டவை. இதனால் காடுகளைக் காப்பது, நீர்நிலைகளைப் பெருக்குவது போன்ற தூய சுற்றுச்சூழல் கருத்துக்களைச் சமுதாயத்தின் அடித்தட்டு மக்கள் வரை மிக எளிதாகக் கொண்டு சேர்க்க இந்த நூறு பாடல் கொண்ட சதக அமைப்பு பெரிதும் உதவுகின்றது.

குறிப்பாக தண்டலையார் சதகம் போன்ற நூல்கள் மக்களின் அன்றாடப் பேச்சு வழக்கில் இருந்து இயற்கை சார்ந்த பழமொழிகளைப் பயன்படுத்தியும், மண்டலச் சதகங்கள் அந்தந்தப் பகுதிகளின் காடுகள், ஆறுகள் போன்ற இயற்கை வளங்களை ஆவணப்படுத்தியும் தங்களின் சூழலியல் பற்றை வெளிப்படுத்தியுள்ளது. இயற்கையைத் தற்காப்பதே மனிதன் செய்யும் ஆகச்சிறந்த **“அறம்”** என்ற நோக்கில் இச்சதகங்கள் இயற்றப்பட்டுள்ளன. இத்தகைய இலக்கிப் பின்னணியில்தான், சதகங்கள் காட்டும் சுற்றுச்சூழல் நெறிகள் விரிவாக ஆராயப்பட உள்ளன.

**சோலைகள் அமைத்தலும் நீர்நிலை பெருக்கலும் :**

சுற்றுச்சுழலின் முதன்மை காரணியான நீரைப் பெருக்குவதும், ஏரி மற்றும் குளங்களை வெட்டுவதும் மிகப்பெரிய புண்ணியச் செயல் என சதகங்கள் கூறுகின்றன. இந்நூல்கள் மனிதன் தன் வாழ்நாளில் செய்ய வேண்டிய தர்மங்களாக பொதுமக்களுக்காகவும், பிற உயிரினங்களுக்காகவும் நீர்நிலைகளை உருவாக்குவதே முதன்மையானது அறமாகக் கூறுகின்றன.

**“ஆலயம் எடுப்பதும், பூஞ்சோலை வைப்பதும்,**
**ஆடவி நதி ஏரி குளம் கிணறு தொட்டு வைப்பதும்”…(அறப்பளீசுரசதகம் 74 )**

இப்பாடலில் இறைவனுக்குக் கோயில் கட்டுவதைக் காட்டிலும்;, பறவைகளும், விலங்குகளும், மனிதர்களும் பயன்பெறும் வகையில் பூஞ்சோலைகளை அமைப்பதும், ஏரி குளம், கிணறு போன்ற நீர்நிலைகளைத் தோற்றுவிப்பதும் மிக உயரிய சுற்றுச்சூழல் அறமாகும் என்பதை வலியுறுத்துகிறது. இக்கருத்தினை

**“நிலன்நெளி மருங்களின் நீர்நிலை பெருகத்**
**தட்டேர் அம்ம, இவண் தட்டோரே:**
**தள்ளாதோர் இவண் தள்ளாதோரே”……………..(புறநானூறு –18)**

என்ற பாடலில் காணமுடிகின்றது. இந்த சங்க இலக்கியப் பாடல் நிலத்தின் (குழிந்த) தாழ்வான பகுதிகளில் நீர்நிலைகளை ஏரி, குளம் உருவாக்கி நீரைத் தேக்கி வைப்பவர்கள் இவ்வுலகில் புகழோடு நிலைத்து நிற்பார்கள். அப்படிச் செய்யாதவர்கள் தம் பெயரை உலகில் நிலை நிறுத்த மாட்டார்கள் என்று நீர் மேலாண்மை மற்றும் மழைநீர் சேமிப்பின் அவசியத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தியுள்ளது.

**மரங்களைப் பாதுகாத்தலும் தாவரங்களின் சிறப்பும் :**

மண்ணின் வளத்தை காக்கவும், தூய்மையானக் காற்றுக்கும் மரங்கள் இன்றியமையாதவை. தேவையற்ற தாவரங்களை வளர்ப்பதைத் தவிர்த்து, பயன்தரும் மரங்களை வளர்ப்பதன் அவசியத்தை பழமொழியோடு இணைத்து இச்சதகம் கூறுகின்றது.

**"வாழைப் பழமிருக்கக் காய் கனிந்த தென்றவற்றுள்**
**தாழைப் பழம் தின்னத் தக்கதோ?**
**முழைவிழித் வண்டலையார் சோழை சூழ்**
**தண்டலையார் வெண்மணற்பை கொண்டலையார்**
**அண்ணலே கூறு"…………………(தண்டலையார் சதகம் - 42)**

இப்பாடலில் சோலைகள் சூழ்ந்த தண்டலை என்னும் தலத்தில் வீற்றிருக்கும் இறைவா! நற்பயன் தரும் வாழை போன்ற மரங்களை விடுத்து, பயனில்லாத அல்லது நச்சுத்தன்மை வாய்ந்த தாவரங்களை வளர்ப்பது அறிவீனமாகும். மனிதன் தன் சுயநலத்திற்காகப் பயனுள்ள மரங்களை வெட்டாமல், சூழலுக்கு நன்மையளிக்கும் மரங்களை இனங்கண்டு வளர்க்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. இயற்கை சூழலோடு இயைந்து வாழ்ந்தமையை விளக்கும் நற்றிணைப்பாடல் பின்வருமாறு,

**"விளையாட்டு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே"…………(நற்றிணை – 172)**

ஒரு பெண் தன்சிறுவயதில் நட்டு வளர்த்த புன்னை மரத்தை தனக்குத் திருமணமான பிறகு தனக்குப் பிறந்த குழந்தைக்கு **"உனக்கு இதுதமக்கை"** என்று கூறியதாகத் தலைவி பேசுவதன் மூலம் மரங்களைத் தன் குடும்ப உறுப்பினராகக் கருதிய தமிழரின் பசுமை மரபு விளங்குகிறது.

**பல்லுயிர் ஓம்பல் :**

மனித மையச் சிந்தனையைத் தாண்டி, காடுகளையும் காட்டில் வாழும் விலங்குகளையும் பேண வேண்டும் என்ற பல்லுயிர் சமநிலை கருத்துக்கள் சதகங்களில் உள்ளன. விலங்குகளுக்குத் துன்பம் விளைவிக்கக் கூடாது. காடுகளை அழிக்கக் கூடாது என்ற கருத்தை இச்சதகம் வலியுறுக்கிறது.

**"கானகத்து வாழும் பறவைகளும் நல்விலங்கும்**
**ஈன்மற இன்புற்று வாழவே –**
**மானமுடன் சோலை தழைக்க வைத்துப் புல்லும்**
**புனலும் தந்து ஞாலத்தில் காப்பதே நன்று"……………(நற்றினை – 172)**

காடுகளில் வாழும் பறவைகளும், விலங்குகளும் எவ்விதக் குறையுமின்றி இன்பமாக வாழ வேண்டும். அதற்கு மனிதன் காடுகளையும் சோலைகளையும் அழிக்காமல் தழைக்கச் செய்ய வேண்டும். அவற்றுக்குத் தேவையான புல்லும், நீரும் தடையன்றிக் கிடைக்கச் செய்வதே பூமியைக் காக்கும் நெறியாகும்.

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாத் தலை"……………..(திருக்குறள்)**

தனக்குக் கிடைத்த உணவை உலகிலுள்ள பிற உயிர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து, அவற்றைப் பாதுகாப்பதே அறநூல்கள் கூறும் அறங்களுள் தலைசிறந்த அறமாகும்.

**மண்டலவளமும் நிலவளமும் இயற்கை வேளாண்மையும் :**

பாண்டிமண்டலசதகம், சோழமண்டலசதகம் மற்றும் கொங்குமண்டலசதகம் போன்ற நூல்கள் அந்தந்தப் பகுதிகளின் இயற்கை எழிலையும், மண்ணின் வளத்தையும் போற்றிப் பாடியுள்ளன. இரசாயன உரங்கள் இல்லாத அக்காலத்தில் ஆறுகள் அடித்து வரும் வண்டல் மண்ணே முதன்மை உரமாகவும், நிலத்தின் ஈரப்பதம் காக்கும் இயற்கை விவசாய முறைகளும் போற்றப்பட்டன. காவிரியும் வைகையும் பாய்ந்து கரைகடந்து வரும் நன்னீர், நிலங்களை மாசுப்படுத்தாமல் வளம் செழிக்கச் செய்ததை இச்சதகங்கள் வரலாற்றுச் சான்றுகளாகப் பதிவு செய்துள்ளன.

**“முத்தவிழ்ந்த நெல்லின் வெண்சோறு**
**கவளம் கொள்ளும் யானை யினத்த ……(பொருநராற்றுப்படை-247-248)**

இப்பாடலில் சோழ நாட்டின் இயற்கை வளம் எவ்வளவு செழிப்பானது என்றால், ஒரு பெண்யானை பகுத்துறங்கும் அளவிலான சிறிய நிலப்பரப்பானது, ஏழு யானைகள் உண்பதற்கேற்ற நெல்வளத்தை இயற்கை விவசாயத்தின் மூலம் பெற முடியும் என்பதை வலியுறுத்துகின்றது.

**மரங்கள் நடுவதன் ஆன்மீக மற்றும் சமூக மதிப்பு :**

நம் முன்னோர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வெறும் சட்டமாகப் பார்க்காமல், அதை மனிதனின் ஆன்மீகக் கடமையாகவும், புண்ணியச் செயலாகவும் மாற்றினர். அதை நாயன்மார்களின் பெருமையைப் பேசும் இந்நூலில் ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சோலைகளை அமைப்பது இறைவனுக்குச் செய்யும் ஆகச்சிறந்த தொண்டாகக் கருதப்படுகிறது.

**“பூவண்ணச் சோலை நந்த வனங்கள் வைப்போர்**
**புண்ணிய நன்னீர்த் தடங்கள் மிகவே செய்வோர்…(திருத்தொண்டார் சதகம் - 95)**

அழகிய மலர்கள் பூக்கும் சோலைகளையும் நந்தவனங்களையும் உருவாக்குபவர்களும் மக்கள் மற்றும் விலங்குகளின் தாகம் தீர்க்கப் புண்ணியத் தீர்த்தங்கள் (குளம், ஏரி) வெட்டுபவர்களும் இறைவனின் அருளைப் பெற்றவர்கள் ஆவர். இது தாவரங்களை வளர்ப்பதற்கான சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

**“உழவாரப் படையமர்ந்து கொண்டு தொண்டின்**
**நெறிவிளங்கப் பாசமறுப்பார் நந்தவனங்கள் செய்வார்…….(பெரியபுராணம் - 147)**

அப்பர் பெருமான் உழவாரப் பணிகளோடு சேர்த்து, கோயில்களைச் சுற்றிலும், நந்தவனங்களையும், பூஞ்சோலைகளையும் அமைப்பதைத் தங்களின் ஆகச்சிறந்த சமூக ஆன்மீகக் கடமையாக பெரியபுராணம் குறிப்பிடுகிறது.

**காடழிப்பின் தீமைகளும் வறட்சியும்;:**

சதகங்கள் மரங்களை அழித்தால் மழையின்றி நாடு வறட்சியடையும் என்ற காரணி விளைவு தத்துவத்தை எச்சரிக்கையாக விடுக்கின்றன. கொங்கு நாட்டின் சிறப்பைப் பாடும் கொங்குமண்டல சதகத்தில் காடுகளும் மரங்களும் கொழித்து இருந்தால் மட்டுமே மேகங்கள் குளிர்ந்த மழை பெய்யும் என்ற அறிவியல் உண்மை கூறப்பட்டுள்ளது.

**“காரார்ந்த சோலை கவின் பெற ஓங்கிடவே**
**நீரார்ந்த மேகம் பொழிந்திடுமே- பாரினில்கு**
**காடழித்து வாழ நினைக்கும் மாந்தரெல்லாம்**
**நாடழிந்து போவர் நலிந்து”…………(கொங்குமண்டல சதகம் - 72)**

மேகங்களைக் கவர்ந்து மழை தரும் அடர்ந்த சோலைகள் அழகாக ஓங்கி வளர வேண்டும். அப்படி இல்லாமல், பூமியில் தன் சுயநலத்திற்காகக் காடுகளை அழிந்து வாழ நினைக்கும் மனிதர்கள் மழையில்லாமல் நாடே வறட்சியடைந்து அழியக் காரணமாவார்கள் என்பதை இப்பாடலில் எச்சரித்து மரங்களின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

**"கதிரவன்வெம்மையின்காடேவறண்டது"....(சிலப்பதிகாரம்-காடுகாண்காதை)**

மனிதர்களின் செயல்பாடுகளினாலும், இயற்கைச் சீற்றத்தாலும் காடுகள் அழியும் போது, முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தன் இயல்பு கெட்டு, வறண்ட **'பாலை'** நிலமாக மாறி உலகிற்குத் துன்பம் தரும் என்பதை இளங்கோவடிகள் விவரிக்கின்றார்.

**நிலத்தடி நீர் மேலாண்மை:**

அக்கால கட்டத்தில் நீரின் இன்றிமையை உணர்ந்து மக்கள் மழைநீரை கடலில் கலக்க விடாமல், நீரை உயர்ந்த வேண்டும் என்ற சிந்தனை அன்றே இருந்தது. பாண்டிய நாட்டில் நதிகள் பாயும் போது, ஆங்காங்கே அணைகளும் மதகுகளும் கட்டி நீரைத் தேக்கிய சிறப்பை இப்பாடல் விளங்குகிறது.

**"ஆற்றுப் பெருக்கற்று அடிமணல் தோண்டவும்உள**
**ஊற்றுப் பெருக்கும் உன்னத நாடது"..............(பாண்டி மண்டல சதகம் - 46)**

கோடைக் காலத்தில் ஆற்றில் நீர்வற்றிய பிறகும், ஆற்றுப்படுகையின் மணலைத் தோண்டினால் சுத்தமான ஊற்று நீர் வெளிப்படும். மணற்கொள்ளை இல்லாமல் ஆற்றின் இயற்கை அமைப்பு பாதுக்காக்கப்பட்டால் மட்டுமே நிலத்தடி நீர் மட்டம் உயரும் என்ற சூழலியல் உண்மையை பாண்டி மண்டல சதகம் புலப்படுத்துகின்றது.

**"சுர முதல் சேர்ந்தாரைக் காய்வதே அன்றி**
**நிழல் செய்து அளிக்கும் மரம்"...............(கலித்தொகை -16)**

இப்பாடலில் பாலை நிலத்தின் வறட்சியிலும், ஆழமாக வேர்விட்டு நிலத்தடி நீரை உறிஞ்சித் தங்களுக்கு நிழல் தரும் மரங்களைப் போற்றுவதன் மூலம், நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் என்று மரங்களின் சேவையை விளக்குகின்றது.

**காற்று மாசும் மூலிகைத் தாவரங்களின் அவசியமும் :**

இயற்கை நமக்குக் காற்றை தூய்மையாகத் தருகிறது. மனிதன் தன் பிணிகளிலிருந்து விடுபடவும், தூய்மையானக் காற்றைப் பெறவும் மூலிகைத் தாவரங்களைச் சுற்றியும், வீட்டிலும் வளர்க்க வேண்டும் எனச் சதகங்கள் கூறுகின்றன. செயங்கொண்டார் சதகத்தில் காற்றில் கலக்கும் நச்சுக்களை நீக்கி, தூய்மையான காற்றைத் தரும் வேம்பு, துளசி, வில்வம் போன்ற மரங்களின் சிறப்பு பேசப்படுகிறது.

**"வேம்போடு வில்வமும் வெண்துளசி மூலிகையும்**
**தாம்பொழியும் காற்றதுதான் நோய்தீர்க்கும் - மேம்படவே**
**நச்சுப் புகையகற்றி நல்வளியைத் தந்திடுமே**
**அச்சுதனை வாழ்த்தும் அரசு"....................(செயங்கொண்டார் சதகம் -7)**

வேப்பமரம், வில்வம், துளசி போன்ற மூலிகைத் தாவரங்கள் நிறைந்த சோலைகளிலிருந்து வீசும் காற்று மனிதர்களின் நோய்களைத் தீர்க்கும் மருந்தாக அமைகின்றது. இத்தாவரங்கள் காற்றில் உள்ள நச்சுப்புகையை அகற்றி மனிதன் சுவாசிக்கத் தேவையான நல்ல காற்றைத் தந்து சூழலைக் காக்கின்றன என்று கூறப்படுகின்றது.

**"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே"...............(திருமந்திரம் - 724)**

உடம்பைப் பேணத் தூய்மையானக் காற்றும், மூலிகைகளும் தேவை. இயற்கை நல்கும் மூலிகைகளைக் கொண்டு உடலையும் காற்றையும் தூய்மையாக வைப்பதே ஆன்மீகத்தின் தொடக்கம் என்கிறார் திருமூலர்.

**விலங்கின உரிமைகளும் அஹிம்சையும் :**

சுற்றுச்சூழல் நீதியின்படி மனிதனைப் போலவே மற்ற உயிரினங்களுக்கும் பூமியில் வாழ முழு உரிமையுண்டு. விலங்குகளை வதைப்பது இயற்கைக்குச் செய்யும் துரோகம் என்கிறது சதக இலக்கியம். காட்டில் வாழும் விலங்குகளைத் தேவையின்றி வேட்டையாடுவதையும் அவற்றுக்குத் துன்பம் விளைவிப்பதையும் வன்மையாகக் கண்டிக்கிறது.

**"வாயில்லாப் பிராணிகளை வன்பசியால் வாட்டுவதும்**
**காயமுடன் வேட்டையாடிக் கொல்வதுவும் - தூய நிலம்**
**பாவமடாஎன்றே பகர்ந்தாரே முன்னோர்கள்**
**சீவகாருண்யம் அதுவே சீர்"……………………..(கைலாசநாதர் சதகம் 65)**

தங்கள் பசியையோ வலியையோ வெளியில் சொல்ல முடியாத வாயில்லாப் பிராணிகளைப் பசியால் வாட்டுவதும், காடுகளுக்குள் புகுந்து அவற்றை வேட்டையாடிக் காயபடுத்துவதும், கொல்வதும் இந்த தூய்மையான பூமியில் மனிதன் செய்யும் பெரும் பாவமாகும். சக உயிர்களிடத்தில் காட்டும் சீவகாருண்யமே சிறந்த சுற்றுச்சூழல் நெறியாகும்.

**"கொல்லாமை நல்அறம்; உயிர்களை வதைத்தல்**
**அல்லல் தரும் நரக வழி"……………(சீவக சிந்தாமணி)**

என்கிறது. சீவகசிந்தாமணி. இக்காப்பியம் வேட்டையாடுதலின் தீமைகளையும், விலங்கினங்களை வதைக்காமல் காக்கும் **'சீவகாருண்ய'** நெறிகளையும் மிக ஆழமாகப் பேசுகின்றது.

**பருவகால மாற்றமும் புவி வெப்பமயமாதல் எச்சரிக்கையும் :**

இன்று நாம் பேசும் **"பருவகாலமாற்றம்"** குறித்து அன்றே சதகங்கள் எச்சரித்துள்ளன. காடுகளை அழித்தால் பருவமழை தவறும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**"காராள மாமழையும் காலமறிந்து பொய்யாது**
**பாரினில் மரங்களைப் பாராமல் வெட்டின்**
**சீரான வெப்பம் மிகுந்து மிகுமதி வறட்சியுற்றுத்**
**தப்பாமல் துன்புறும் பார்"………..(செயங்கொண்டார் சதகம் - 8)**

பூமியில் உள்ள மரங்களை எவ்வித இரக்கமுமின்றி வெட்டி அழித்தால், பெய்ய வேண்டிய பருவமழையானது உரிய காலத்தில் பெய்யாமல் பொய்த்துப் போகும். அதனால் பூமியின் வெப்பம் அதிகரித்து கடுமையான வறட்சி ஏற்பட்டு, உலகிலுள்ள அனைத்து உயிர்களும் துன்புற நேரிடும் என்ற அறிவியல் உண்மையை இப்பாடல் விளக்குகின்றது.

**"கார் அதிர்ந்து பெய்த கால மாரியினில்"………(ஐங்குறுநூறு 334)**

மரங்கள் செறிந்திருந்தால் மட்டுமே காரான மேகம் காலமறிந்து பெய்யும். பருவநிலை மாறினால் உலக உயிர்கள் தடம் மாறும் என்று எச்சரிக்கிறது.

**பஞ்ச பூதங்களின் தூய்மையும் இயற்கை வழிபாடும் :**

தமிழர்கள் இயற்கையைத் தனியாகப் பார்க்காமல், தங்களின் வாழ்வாதாரமான பஞ்சபூதங்களை **(நிலம், நீர், தீ, வளி, ஆகாயம்)** தெய்வமாகப் போற்றினர். பஞ்சபூதங்களை மாசுப்படுத்துவது இறைவனுக்குச் செய்யும் துரோகம் என்கிறது. இயற்கையின் கொடையான ஐம்பூதங்களையும் அதன் தூய்மையினை கெடுக்காமல் வாழ்வதே சிறந்த வாழ்வு என்று சதகம் கூறுகின்றது.

**"மண்ணும் புனலும் காற்றும் வளர்வானும்**
**விண்ணும் சுடரும் விளங்குமிறை வடிவாம் - கண்ணின்**
**மணியெனக் காப்பதே மாந்தர் தம் கடனாம்**
**பிணியற வாழும் நெறி"………………………(தொண்டைமண்டல சதகம் - 43)**

நிலம், காற்று, ஆகாயம் மற்றும் சூரிய, சந்திர ஒளிகள் அனைத்தும் இறைவனின் வடிவங்களாங்கும். இவற்றை பாதுகாப்பது மனிதர்களின் முதன்மையானக் கடமையாகும். மேலும் பஞ்சபூதங்களை மாசுபடாமல் காப்பதே நோயற்ற வாழ்க்கைக்கு வழி வகுக்கும் என்பதை கீழ்வரும் புறப்பாடல் சுட்டுகின்றது.

**"மண் திணிந்த நிலனும், நிலன் ஏந்திய விசும்பும்,**

**விசும்பு தைவது வளியும், வளித் தலைஇய நீயும்,**

**தீ முரணிய நீரும்,என்ற ஐந்தும்"................(புறநானூறு – 2)**

நிலம், ஆகாயம், காற்று, தீ மற்றும் நீர் ஆகிய ஐம்பூதங்களின் சேர்க்கையே உலகம் என்றும், அவற்றின் இயற்கை மாறாமல் காக்க வேண்டும் என்றும் சேர மன்னனை வாழ்த்தும் போது புலவர் இயற்கையின் தூண்களாகிய ஐம்பூதங்களைப்பற்றி பாடுகிறார்.

**பறவைகள் சரணாலயமும் மரங்களின் அடர்த்தியும் :**

சதகங்கள் எழுதப்பட்ட காலத்தில் இன்று இருப்பது போன்ற செயற்கைச் சரணலாயங்கள் இல்லை. அதனால் அடர்ந்த மரங்கள் நிறைந்த ஊர்களே பறவைகளின் புகலிடமாக விளங்கியதைச் சதகங்கள் ஆவணப்படுத்தியுள்ளன. சோலைகளில் பறவைகள் கூடுகட்டி. எவ்வித அச்சமுன்றித் தங்கி வாழ்ந்த இயற்கைச் சூழலை விவரிக்கின்றன.

**"பல்கிப் பெருகும் பறவையினத் கூட்டங்கள்**

**அல்கல் இன்றிச் சோலையினில் கூடுகட்டி – நல்கித்**

**தமதினம் காக்கும் தகைமைசேர் நாடே**

**அமிர்தமெனப் போற்றத் தரும்"..................(ஈழமண்டல சதகம் - 48)**

பல்வேறு வகையான பறவையினங்கள் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி, அடர்ந்த சோலைகளில் கூடுகட்டி, முட்டையிட்டுத் தங்கள் இனத்தைப் பெருக்கி வாழ்கின்றன. பறவைகளுக்கு அடைக்கலம் தரும் இத்தகைய பசுமையான சூழலைக் கொண்ட நாடே அமிர்தத்திற்குச் சமம் என்று மறைமுகமாகத் தெரிவிக்கின்றது.

**"கானல் ஓங்கிய கைதை அம்பொங்கர்**

**மீன் ஆர் குருகின் மென் பறைத் தொழுதி"............(நற்றினை -70)**

நெய்தல் நிலத்து அடர்ந்த தாழை மரங்களின் சோலைகளில், கடற்பறவைகளும் நாரைகளும் எவ்வித அச்சமுமின்றி;த திரளாகக் கூடித் தங்கியிருந்த இயற்கைச் சரணாலயக் காட்சி விவரிக்கப்பட்டுள்ளது.

**மண் அரிப்பபைத் தடுத்தலும் கரைகளைப் பாதுகாத்தலும் :**

ஆற்றுப் பெருக்கினாலும், பெருமழையினாலும் வளமான மேல் மண் அடித்துச் செல்லப்படுவதைத் தடுக்க, ஆற்றின் கரைகளில் மரங்களையும் நாணல்களையும் நட்டுப் பாதுகாத்த சூழலியல் தொழில் நுட்பத்தைச் சதகங்கள் பேசுகின்றன. காவிரி நதியின் பாய்ச்சலால் மண் அரிப்பு ஏற்படாமல் தடுக்கக் கரைகளில் மருதமரங்களையும், மூங்கில்களையும் வளர்த்த செய்திகள் இதில் பாடப்பட்டுள்ளது.

**"மருதும் மூங்கிலும் மலிந்துயர் கரைகள்**

**பொருதிரைப் புனலைத் தடுத்தே காக்கும் - ஒரு திறப்**

**பாசடை வளம் செறி சோழ நல்வளநாடு**

**மாசறு சிறப்பால் மகிழ்ந்து"..................(சோழ மண்டல சதகம் 32)**

கரைகளில் ஓங்கி வளர்த்த மருத மரங்களும், மூங்கில் கூட்டங்களும் ஆற்றின் வேகம் மிகுந்த அலையைத் தடுத்து, கரைகள் உடையாமலும் மண்அரிப்பு ஏற்படாமலும் பாதுக்காக்கின்றன. இது போன்ற இயற்கையான கரைகளைக் கொண்ட சோழநாடு வளம் செறிந்து விளங்குகிறது.

**“முந்நீர் வம்பலக் கரைதொறும் குவாவிய**
**வங்காட்டத்துத் துஞ்சுறை”……………….(சிறுபாணற்றுப்படை பாடல் வரி 2-3)**

கடலோரங்களிலும் ஆற்றங்கரைகளிலும் வளர்க்கப்பட்ட அடர்ந்த மரங்களின் வேர்கள், நீரின் வேகத்தைத் தடுத்துக் கரைகளையும், வளமான மண்ணையும் அரிப்பிலிருந்து பாதுகாத்த விதம் இதில் சுட்டப்பட்டுள்ளது.

**முடிவுரை :**

சதக இலக்கியங்கள் மற்றும் பழந்தமிழ் இலக்கியங்களின் வழியே மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பீட்டு ஆய்வு, தமிழர்களின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு என்பது பழமையானது மற்றும் அறிவியல்பூர்வமானது என்பதை உணர்த்துகிறது. இன்று உலகம் பேசும் இயற்கை மேலாண்மைக் கோட்டுபாடுகளை நம் முன்னோர்கள் தங்களின் அன்றாட வாழ்வியல் அறமாகவே பின்னஈற்றியுள்ளனர். மரங்களை வெட்டுவதானல் ஏற்படும் வறட்சி, காடழிப்பால் உண்டாகும் புவி வெப்பமயமாதல், பஞ்சபூதங்கள் மாசுபடுவதால் ஏற்படும் பிணிகள் எனத் தற்கால உலகளாவிய சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்கள் அனைத்திற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சதக நூல்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஏரிகளைத் தூர்வார்வதும், மூலிகைகளை வளர்ப்பதும், பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் புகலிடம் தருவதும் இறைவழிபாட்டிற்கு இணையானது என்ற உயரிய சிந்தனையை இச்சதகங்கள் நமக்குத் கற்றுத் தருகின்றன. எனவே இ;ந்த இலக்கியங்கள் காட்டும் **“இயற்கையோடு இயைந்த பசுமைநெறி”**யை வெறும் பாடப் புத்தகத்தோடு சுருக்கிவிடாமல், இன்றைய இளைய தலைமுறையினரின் நல்வாழ்விற்கான வழிகாட்டியாக மாற்றுவதே நாம் நம் மண்ணிற்கும் இயற்கைக்கும் செய்யும் ஆகச் சிறந்த நன்றிக் கடனாகும். **“இலக்கியம் காட்டிய வழியில் இயற்கையைக் காப்போம்”!.**

**பார்வைநூல்கள் :**

[1.] அறப்பளீசுர சதகம் - கதிர்முருகு டாக்டர் (உரையாசிரியர்) சாரதா பதிப்பகம், சென்னை 600014 முதற்பதிப்பு - 2013.

[2.] ஐங்குநூறு - மூலமும் உரையும், முனைவர் அ.தட்சிணாமூர்த்தி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

[3.] கயிலாசநாதர் சதகம் - கதிர்முருகு டாக்டர் சாரதா பதிப்பகம், சென்னை 600014 முதற்பதிப்பு - 2013.

[4.] கலித்தொகை - மூலமும் உரையும், முனைவர் ஆ.விசுவநாதர்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

[5.] சதகத்திரட்டு (தொகுதி 1ரூ2)- பதிப்பாசிரியர் முனைவர் த.இராசேசுவரி, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை - 600113.

[6.] சிற்றிலக்கிய களஞ்சியம் (தொகுதி 1) சதக இலக்கியங்கள் - பதிப்பாசிரியர் அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் 53 புதுத்தெருஇ மெய்யப்பன் பதிப்பகம் - சிதம்பரம் - 608001.

[7.] சிலப்பதிகாரம் - ந.மு.வேங்கடசாமி நாட்டார், சாரதா பதிப்பகம், சென்னை 600014 முதற்பதிப்பு – 2005.

[8.] சிறுபாணாற்றுப்படை - மூலமும் உரையும், முத்து.இராமமூர்த்தி, கௌரா பதிப்பக குழுமம்.

[9.] சீவக சிந்தாமணி - மூலமும் உரையும், டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், முதற்பதிப்பு – 2023.

[10.] தண்டலையார் சதகம் - கதிர்முருகு டாக்டர் (உரையாசிரியர்) சாரதா பதிப்பகம், சென்னை 600014 முதற்பதிப்பு – 2009.

[11.] திருமூலர் அருளிய திருமந்திரம் (மூலமும் உரையும்) டாக்டர் சாது.சு.சீனிவாஸ், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன், சென்னை – 600035.

[12.] நற்றிணை - மூலமும் உரையும், முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

[13.] புறநானூறு - மூலமும் உரையும், உ.வே.சா, உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்.

[14.] பெரியபுராணம் - மூலமும் உரையும், புலவர் பி.ரா.நடராசன், உமா பதிப்பகம், சென்னை – 600001.

# 21.புறநானூற்றில் சூழலியல்

**கி.வான்மதி,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 002

புறநானூறு தமிழர்களின் வாழ்வியலை மட்டுமின்றி மிகச் சிறந்த சூழலியல் சிந்தனைகளையும் உள்ளடக்கிய ஒரு வரலாற்றுப் பெட்டகமாக விளங்குகிறது. பண்டைத் தமிழர்கள் இயற்கையைத் தங்களின் இருப்புக்கான ஆதாரமாகக் கருதி அதனைப் பேணிக் காக்கும் முறைகளை இலக்கியத்தின் வழியே உலகிற்கு உணர்த்தியுள்ளனர். சங்க காலத்தில் தமிழர்கள் நீர் மேலாண்மை செய்த விதம், நீரினை அணைக்கட்டி சேமித்த திறம், நீரின்றி அமையாத வாழ்க்கை சூழலில் கிணறு தோண்டி தங்கள் நீர் தேவை பூர்த்தி செய்து கொண்ட ஆற்றல் எல்லாம் சூழலியல் சிந்தனைக்கு உதாரணமாக அமைந்துள்ளது. போர்க்களங்களில் மன்னன் ஊரை தீக்கு இறையாக்கிய செய்தியும் காவல் மரங்களை வெட்டியும் எரித்த செய்திகள் மனிதன் தங்களுக்குள் உள்ள பகையை இயற்கை மீது காட்சியளித்த செய்தி வருந்தும் வகையில் அமைந்துள்ளது. சங்க தமிழர்கள் நிலவியல் கூறுகளை அறிந்து இருந்தது சூழல் அறிவிக்கு முன்னோடியாக அமைந்திருக்கிறது. புறநானூறு தமிழர்களின் வாழ்வியலை மட்டுமின்றி மிகச் சிறந்த சூழலியல் சிந்தனைகளையும் உள்ளடக்கிய ஒரு வரலாற்றுப் பெட்டகமாக விளங்குகிறது. பண்டைத் தமிழர்கள் இயற்கையைத் தங்களின் இருப்புக்கான ஆதாரமாகக் கருதி அதனைப் பேணிக் காக்கும் முறைகளை இலக்கியத்தின் வழியே உலகிற்கு உணர்த்தியுள்ளனர். பண்டைய தமிழர்களின் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை சார்ந்த அறிவை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்..

**முன்னுரை**

பண்டைத்தமிழரின் நாகரிகம் பண்பாடு கலாச்சாரம் பொருளாதாரம் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு உதவுவன சங்க இலக்கியங்கள் ஆகும். இவ்விலக்கியங்களுள் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு ஆகும்.புறநானூறு என்பது பண்டைய தமிழர்களின வீரம் அரசியல் கொடை ஆகியவற்றை மட்டும் பேசும் நூல் அல்ல. இது நிலத்தையும் இயற்கையையும் மனிதனையும் பிரிக்க முடியாத ஒரு சூழலியல் களஞ்சியமாகும்.சங்க காலத்தில் மக்கள் இயற்கைச் சூழலை எவ்வாறு பேணினார்கள் இயற்கையோடு எப்படி இயைந்து வாழ்ந்தனர் என்பதை புறநானூற்றுப் பாடல்கள் வழி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பஞ்ச பூத அறிவு**

இயற்கை என்பது பஞ்சபூதங்களால் அமைந்த ஒன்றாகும்.பஞ்சபூதங்கள் இல்லை என்றால் இவ்வுலகில் எந்த ஒரு உயிரினமும் உயிர் வாழ முடியாது. உலகின் இயக்கத்துக்கு முதற்காரணமாக அமைபவை பஞ்ச பூதங்களாகும்.இதை உணர்ந்த தமிழர்கள் பஞ்சபூதங்களை வகுத்துக் காட்டியது மட்டுமல்லாமல் அவை ஒன்றோடு ஒன்று பிணைந்தது என்பதை இப்பாடல் விளக்குகிறது.

“மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்

வளித்தலை இய தீயும்
தீமுரணிய நீருமென்றாங்கு
ஐம்பெரு பூதத்து இயற்கைப் போல" (புறம் பா.எ 2: 1-6)

தொட்டு இயங்கும் காற்று, காற்று வீசும் திசையோடு பரவும் தீ தீக்கு முரணான நீரும் என்று விளங்குவது ஐம்பெருபூதத்து இயற்கை என்கிறது புறநானூறு. இச்செய்தி சூழலியல் தொகுப்பில் பஞ்ச பூதங்கள் மிகவும் இன்றியமையாததை விளக்கி காட்டுவது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு ஆகும்.

**திணைக்கோட்பாடும் நிலப்பாகுபாடும்**

பண்டைத்தமிழர்கள் நிலத்தை ஐந்து திணைகளாகப் பிரித்து, அந்தந்த நிலப்பரப்பின் காலநிலை, தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கு ஏற்பத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். புழந்தமிழர்கள் மேற்கொண்ட ஐந்து வகையான வாழ்க்கை முறையே ஐந்திணை வாழ்வியல் ஆகும்.மேலான அறிவும் இயற்கையின் மீது புரிதலும்,அன்பும் கொண்ட பழந்தமிழர்கள் தமிழ் நிலப் பரப்பை ஐந்து வகையாகக் குறிஞ்சி, முல்லை, மருதம் , நெய்தல்,பாலை என்று கட்டமைத்து வைத்திருந்தனர். ஒவ்வொரு நிலப் பரப்புக்கும் தனித்தன்மை வாய்ந்த பண்பாடு,வாழ்க்கை முறை, தொழில்கள், கடவுள் எனவும் கொண்டு வாழ்வியல் நெறிகளை அமைத்தனர். புறநானூற்றில் காடும்,மலையும், வயலும், கடலும் வெறும் பின்னணியாகப் பயன்படாமல் மக்களின் வாழ்வாதாரமாகவும் பண்பாட்டின் அங்கமாகவும் காட்டப்படுகின்றன.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" (தொல்.அகத்.3)

என்று ஐவகை நிலங்களைப் பற்றி தொல்காப்பிய நூற்பா வழி அறியமுடிகின்றது.

**நீர் சூழலியல்**

சுற்றுச்சூழலின் மற்றொரு கூறாகிய நீர்வளம் அதாவது குளம், குட்டை, ஏரிகள், ஆறுகள், கடல்கள் என அனைத்தினுடைய தன்மையும், தாமும் காக்கப்பட வேண்டும்.மக்கள் பயன்பாட்டுக்கு மிக்க குறைந்த அதாவது ஒரு விழுக்காடு தண்ணீரே உலகில் உள்ளது. அவற்றை பேண வேண்டியது மிகவும் இன்றியமையாதது. சங்கத் தமிழர்கள் நீரின் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்தனர் என்பதற்கு நிறைய சான்றுகள் புறநானூற்றில் உள்ளன.மனிதனின் அடிப்படை தேவைகளில் உணவு உடை இருப்பிடம் ஆகியவை முக்கியமானதாகும். அவற்றுள் உணவு அனைத்து உயிர்களுக்கும் முதன்மையானதாகக் கருதப்படுவது போல் நீரும் கருதப்படுகின்றது. அதனால் தான் வள்ளுவரும் வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் நீரின் அவசியத்தை பற்றி எடுத்துரைத்துள்ளார்.

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது (குறள் எண் - 16)

உயிரினங்களின் வாழ்வாதாரத்திற்கு நீர் எவ்வளவு இன்றியமையாதது என்பதைச் சங்க கால மக்கள் உணர்ந்திருந்தனர். நீரைச் சேமிப்பதே நாட்டின் வளத்திற்கு முக்கியமானவை என்பதை புறநானூறு வலியுறுத்துகிறது.

"நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே" (புறம் -18)

குடபுலவியனார் என்ற புலவர் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தும்போது நிலம் குழிந்த இடங்களில் எல்லாம் நீர்நிலைகளைப் பெருக்குபவர்களே உலகில் அழியாத புகழைப் பெறுவர். நீர்நிலை உருவாக்காதவர்கள் வீணே மடிவர் என்று குறிப்பிடுகிறார்.மழைநீரைத் தேக்கி வைக்க ஏரிகள் குளங்கள் வெட்டியதும் கிணறுகள் அமைத்ததும் பழந்தமிழர்களின் சிறந்த நீர்நிலைக்கு மேலாண்மை அறிவுக்கு சிறந்த சான்றாகும்.

"ஊர் இல்ல உயவு அரிய
நீர் இல்ல நீள் இடையே"(புறம்3-17,18)

வழிப்பயணங்களில் ஊர்கள் இல்லை ஆதலால் தாகம் தீர்க்கும் நீர் இல்லை என்கிறார் புலவர்.நீர் நிலைகள் அமைந்த ஊர்கள் தாகம் தீர்த்தன என்பது இதன் உட்பொருளாகும்.நீர் இல்லாத இடங்களில் உயிர்கள் வாழவும் மனிதன் வாழவும் இயலாது என்பதே புலவரின் கருத்து.

"நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" (புறம் பா.எ 18:18-23)

நீரின்றி இவ் வையம் அமையாது. இந்த உடம்பும் உயிர் வாழ முடியாது. இந்த உடம்பு உணவுப் பொருளையே முதன்மையாக கொண்டுள்ளது. அதனால் தான் உடலின் பசி நீங்க உணவு கொடுப்பவர்கள் அவ்வுடலுக்கு உயிர் கொடுத்தவர் ஆவார். உடலுக்கு உயிர் போன்றது உணவாகும். அவ்வுணவு நிலத்தோடு சேர்ந்த நீர் ஆகும். ஏனவே தான் நீரையும் நிலத்தையும் திருத்தி நல் விளைச்சலுக்கு உதவியவர்கள் உடலையும் உயிரையும் கொடுத்து வாழ்வித்தவர் ஆவார் என்கிறது இப்பாடல் அடிகள்.சங்க கால மக்கள் நிலமும் நீரும் சூழல் வாழ்க்கைக்கு அவசியம் என்பதை அறிந்து நிலம் நீர் சூழலை பேணிப் போற்றியமை புலப்படுத்துகிறது. நிலம் இருந்தும் நீர்நிலைகள் இல்லை என்றால் அந்த நிலம் பயனற்றதாகும். ஆகையால் நீர்நிலைகளை பெருக்குவதற்கு குளங்கள் தோண்ட வேண்டும் என்று சான்றோர் பெருமக்கள் அறிவுறுத்தனர். அதன் படி பெரியோர்களும் மன்னர்களும் செயல்பட்டனர் என்பதை புறநானூற்று பாடல் மூலம் அறியமுடிகின்றது.

**வானியல் அறிவு**

பழந்தமிழர்கள் வான சாஸ்திரம் பருவ மழைஇ காற்று வீசும் திசை பற்றிய அறிவு ஆகியவற்றில் சூழல் அறிவைப் பெற்றிருந்தனர்.

செஞ்ஞாயிற்றுச் செலவும் ஆங்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்

வளி திரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந்து அறிந்தோர் போல என்றும்
இனைத்து என்போரும் உளரே! (புறம் பா.எ-30:1-9)

சூரியன் செல்லுகின்ற பாதையும் அதன் இயக்கமும் அதனால் இயங்கும் மண்டலமும், அம்மண்டலத்துள் செல்கின்ற காற்றின் இயங்கும் திசையும், எவ்வித பிடிப்புமின்றி இயங்கும் ஆகாயமும் ஆகியவற்றைத் தாமே அவ்விடத்திற்குச் சென்று அளக்காது இங்கே இருந்தே அறியும் அறிவுடைய மேலோர்கள் இங்கு உள்ளார்கள் என்னும் புறநானூற்றுப் பாடல் தமிழர்களின் வானியல் அறிவுக்கு சான்று பகரும் வகையில் அமைந்துள்ளன.

பண்டைத் தமிழர்கள், எந்த தொலைநோக்கி கருவியோ செயற்கைக்கோள் அனுப்பும் வசதியோ இல்லாத காலத்தில் மிகத் துல்லியமாக வானத்தை பற்றிய செய்திகளும் விண்மீன்கள் பற்றிய செய்திகளும் வானியல் பற்றிய செய்திகளும் மற்றும் எட்டுத் திக்குகளிலும் எரிகற்கள் விழும் செய்தியையும் அறிந்திருந்தனர்.

"திசைஇரு நான்கும் உற்கம் உற்கவும்" (புறம் பா.எ- 41:4)

கரிய சனிக்கோள் மாறுபாடு கொண்டு புகைந்தாலும் தூமகேது தோன்றி அச்ச உணர்வை உண்டாக்கினாலும் தெற்கு திசையை நோக்கி வெள்ளி மீன் நகர்ந்தாலும் பாரியின் நாடு வளம் பெறும் என்பதை,

"மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்" (புறம் பா.எ-117:1இ2)

எனும் பாடல் அடிகள் மூலம் பழந்தமிழரின் வானியல் சிந்தனையைப் பற்றி அறிந்துகொள்ளமுடிகின்றது.

**மரங்கள் அழிப்பு**

பண்டைத் தமிழகத்தை ஆட்சி செய்த மன்னர்கள் பகைவர் நாட்டின் kPJ போர்தொடுத்து சென்ற போது பகைவர்களின் நாட்டையும், விளைநிலங்களையும் காவல் மரங்களையும் அழித்தனர். இது இயற்கைக்கு விளைவிக்கும் தீங்காகும்.

இறங்குகதிர்க் கழனிநின் இளையரும் கவர்க
நுனந்தலைப் பேரூர் எரியும் நக்க
மின்னுநிமிர்ந் தன்னநின் ஒளிறு இலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினும் செகுக்க என்னுJ}உம்
கடிமரம் தடித்தல் ஓம்பு" புறம் பா.எ-57:5-10)

என்னும் அடிகள் மூலம் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்னும் பாண்டிய மன்னனைப் பார்த்து , பகைவர் நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும்பொழுது அவனது படைகளை அழி, விளைநிலங்களை கொள்ளையிடு,ஊரக்கு நெருப்பிட்டு அழி ஆனால் காவல் மரங்களை மட்டும் அழிக்காதே என்கிறார்.இப்பாடல் மரங்களை அழிக்க வேண்டாம் என்று கூறி இருப்பது சுற்றுச்சூழல்

சிந்தனையாக உள்ளது.ஆனால் ஊரை தீயிட்டு அழி என்று கூறுவது வருத்தத்திற்குரியதாகும். இன்றும் போர்காலங்களில் மனிதனும் இயற்கையும் அணு ஆயதங்களுக்கு இரையாவது தொடர்கதையாக உள்ளது. இச்செயல் சூழல் மண்டலத்துக்கு மனிதன் செய்யும் பெரும் இடையூறு ஆகும்.

**முடிவுரை**

பழந்தமிழர்கள் சிறந்த சூழலியல் சிந்தனை உள்ளவர்களாக இருந்துள்ளனர். வறட்சியான காலங்களில் கிணறு தோண்டி நீர் ஆதாரம் பெற்றது , ஏரி, குளம், குட்டை அமைத்து நீர் நிலைகளை பேணிய விதம் அனைத்தும் இயற்கை சிந்தனைக்கு அரணாக அமைந்துள்ளது.தமிழ் இனத்துக்கு பெருமை சேர்க்கும் வகையில் வானியல் அறிவும் ,விண்ணணியல் அறிவும் , மழை பொழியும் பருவக்காலங்கள் பற்றிய அறிவும் உடையவர்களாக வாழ்ந்து சிறந்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்துகொள்ளமுடிகின்றது.

**பார்வை நூல்கள்**

[1]. ஞா.மாணிக்கவாசகன், புறநானூறு மூலமும் உரையும், 2005, சென்னை.

[2]. புலியூர்க் கேசிகன், பூம்புகார் பதிப்பகம், 2017, சென்னை-08

[3]. இளம்பூரனார் உரை, தொல்காப்பியம், பொருளதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை- 2000

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 22.ஆனைமலை - புதினத்தில் சுற்றுச்சூழல் அரசியல்

**கு. பிரியதர்ஷினி,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 02.
Mail ID: shivapriya3997@gmail.com, Mobile No: 952443323,
https://orcid.org/0009-0008-2160-8003
**நெறியாளர் : முனைவர் ம.பிரேமா,**
தமிழாய்வுத்துறைத்தலைவர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 02
EMail ID :premasoosairaj@gmail.com, https://orcid.org/0009-0000- 9337- 114X,
Mobile No : 9942106490

**ஆய்வுச் சுருக்கம்:**

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி மட்டுமல்லாமல், சமூக அவலங்களை தட்டிக்கேட்கும் அரசியல் ஆயுதமாகவும் விளங்குகிறது. சமகாலத் தமிழ் நாவல் பரப்பில் **"சூழலியல் அரசியல்"** (Environmental Politics) மற்றும் பூர்வகுடிமக்களின் உரிமைகள் குறித்துப் பேசும் மிக முக்கியமான படைப்பாக எழுத்தாளர் வே. பிரசாந்தின் **"ஆனைமலை"** நாவல் திகழ்கிறது. உலகமயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கலின் விளைவாக, மேற்குத் தொடர்ச்சி மலையின் ஆனைமலைப் பகுதியில் நிகழும் இயற்கைச் சுரண்டலையும், அதன் பின்னணியில் உள்ள அதிகார வர்க்கத்தின் அரசியலையும் ஆராய்வதே இக்கட்டுரையின் சாராம்சாகும்.

**கலைச்சொற்கள்:**

1) **உம்பல்** - யானை
2) **Man eater** – மனிதனை உண்பவன்
3) **Tiger reserve** - புலிகள் காப்பகம்
4) **ஈடு** – முதலீட்டு பொருள்
5) **சோலைமந்தி** - சிங்கவால் குரங்கு

**முன்னுரை :**

தமிழ் இலக்கிய உலகில் சமகாலத்தில் எழுதப்படும் நாவல்கள், வெறும் கதைகளாக மட்டும் நின்றுவிடாமல் சமூகம் மற்றும் அரசியல் மாற்றங்களுக்கான சிறந்த கருவியாக உருவெடுத்து வருகின்றன. அந்த வகையில் எழுத்தாளர் வே. பிரசாந்த் எழுதிய **"ஆனைமலை"** நாவல், தமிழ் நாவல் பரப்பில் **"சூழலியல் அரசியல்" (Environment Politics)** குறித்துப் பேசும் மிக முக்கியமானத்தொரு படைப்பாகத் திகழ்கிறது.

**"வளர்ச்சி"** என்ற பெயரில் மனிதன் இயற்கையின் மீது தொடுக்கும் வன்முறையையும், உலகமயமாக்கல் சூழலில் கார்ப்பரேட் நிறுவனங்கள் காடுகளை எவ்வாறெல்லாம் சுரண்டுகின்றன என்பதையும் இந்நாவல் மிகநெருக்கமாகப் பதிவு செய்கிறது. மேற்குத்தொடர்ச்சிமலையின் ஒருபகுதியான ஆனைமலைப் பின்னணியில், அங்குவாழும் பூர்வகுடி மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதையும், சூழலியல் சமநிலை குலைவதையும் ஒருசேர விவாதிக்கும் வே.பிரசாந்தின் **"ஆனைமலை"** நாவலில் வெளிப்படும் சுற்றுச்சூழல் அரசியலை ஆராய்வதே கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

**மலைமலசர்:**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

தமிழ்நாட்டில் 37 வகையான பழங்குடி மலைக்காடுகளிலும், சமவெளி நிலங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அதில் இருளர், மலையாளி தவிர்த்த பழங்குடிகள், சில ஆயிரங்கள் என்ற எண்ணிக்கைக்குள் மட்டுமே உள்ளனர். அதிலும் காடர், மலைமலசர் போன்ற 13 வகையான பழங்குடிகள் ஆயிரம் என்ற எண்ணிக்கையில் கூட இல்லை.

சங்க இலக்கியங்களில் **"உம்பற்காடு" (உம்பல் என்றதற்கு யானை எனப் பொருள்)** எனக் குறிப்பிடப்பட்ட ஆனைமலை மலைத்தொடர்களில், வனத்துறை உருவாக்கப்படுவதற்கு முன்பிருந்தே இக்காடுகளைப் பூர்வீகமாகக் கொண்டு காடர், முதுவர், மலைமலைசர், மலயர், இரவாளர், புலையர் ஆகிய ஆறு வகையான பழங்குடிகள் வசித்துவருகின்றனர். தங்களது வாழ்விடங்களை விட்டுப் பழங்குடிகளை வெளியேற்றுதல் என்பது உலகம் முழுவதும் உள்ள பழங்குடி மக்கள் எதிர்கொள்ளும் முதன்னமைச் சிக்கலாக உள்ளது.

**"ஆனைமலை பழங்குடிகள்"** தேக்கு மரவேட்டைகளுக்காகவும், தேயிலை தோட்டங்களுக்காகவும், அணை கட்டுமானங்களுக்காகவும் தங்களது பூர்வீக நிலங்களையும், வாழ்வாதாரத்தையும் இழந்தவர்கள் ஆவர். 1976 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இந்திராகாந்தி வனவிலங்கு சரணாலயமும், அதனைத் தொடர்ந்து 2008 ஆம் ஆண்டில் விரிவுப்படுத்தப்பட்ட ஆனைமலைப் புலிகள் காப்பகமும், இப்பூர்வக்குடி மக்களின் உரிமைகளைப் பறித்து, **"வனத்தை ஆக்கிரமித்திருக்கும் குற்றவாளிகள்"** என்ற நிலைக்கு மாற்றியுள்ளன. அதுமட்டுமின்றி, அடிப்படை வசதிகள் இன்றி தவிக்கும் ஆனைமலை கானகப் பழங்குடிகளுக்குப் பாரம்பரிய வனஉரிமைகளும் மறுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில் சமூக, பொருளாதாரரீதியாக மிகவும் பின்தங்கியநிலையில், மிக குறைவான எண்ணிக்கையில் ஆனைமலை மலைத்தொடர்களில் மட்டுமே வாழ்ந்துவரும் மலைமலசல்களின் வாழ்வியலையும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் பேசும் ஒரு புனைவு படைப்பே **"ஆனைமலை"** என்பதாகும்.

**சுற்றுச்சூழலியல் காலனியத்துவம்:**

சுற்றுச்சூழல் காலனியவாதம்;(Green Colonialism) மற்றும் சுழலியல் நீதி (Ecological Justice); ஆகிய இரண்டும் தற்காலச் சூழலியல் அரசியலையும், உலகளாவிய மனித உரிமைப் போராட்டங்களையும் புரிந்து கொள்ள உதவும் மிக முக்கியமான இரு எதிர் நிலைக் கோட்பாடுகள் ஆகும். அவை,

**1. சுற்றுச்சூழல் காலனியவாதம்:**

ஒரு நாட்டின் நிலத்தையும் வளங்களையும் ராணுவபலத்தால் ஆக்கிரமிப்பு செய்வது பழைய காலனியவாதமாகும். ஆனால், சுற்றுச்சூழல் காலனியவாதம் என்பது **"இயற்கையைப் பாதுகாத்தல்", "காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துதல்"** மற்றும் **"பசுமை ஆற்றல்"** போன்ற உன்னதமான முழக்கங்களின் போர்வையில் எளியமக்களின் நிலங்களையும் உரிமைகளையும் ஆக்கிரமிப்பதாகும். இதன் முக்கிய வடிவங்களாக,

**1.மனிதரற்றகாடு**

**2.பசுமை திட்டங்களுக்கான ஆக்கிரமிப்பு**

**3.கார்பன் வர்த்தக அரசியல்**

இவை அனைத்தும் **"இயற்கையைக் காப்பாற்றுகிறோம்"** என்ற பெயரில் அதிகாரவர்க்கமும் பெருநிறுவனமும் (Corporate) எளியமக்கள் மீதும் நடத்தும் ஒரு வகையான நவீனச் சுரண்டல் ஆகும். **"இயற்கை மனிதனின் தேவைக்கான எல்லாவற்றையும் வாரி வழங்குகிறது, ஆனால்;**

**அவனது பேராசைக்கு அல்ல" –** மகாத்மா காந்தியின் சுற்றுச்சூழல் குறித்த சிந்தனையும் குறிப்பிடத்தக்கது.

**2. சூழலியல் நீதி:**

சுற்றுச்சூழல் காலனியவாதத்திற்கு எதிரான ஒரு மாற்று அரசியல் தத்துவமே “சூழலியல் நீதி" ஆகும். இக்கோட்பாட்டின்படி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற பெயரில் எடுக்கப்படும் எந்த ஒரு நடவடிக்கையும் சமூகத்தில் உள்ள நலிவடைந்த, விளிம்பு நிலைமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது. சுற்றுச்சூழல் சீர்கேட்டின் சுமையையும், அதன் பாதுகாப்பிற்கான பலனையும் சாதி, மத, இன, பொருளாதார பாகுபாடின்றி அனைத்து மனிதர்களும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே இதன் அடிப்படை நோக்கம்.

சூழலியல் நீதியின் முக்கியதூண்கள் கீழ்வருமாறு,

**1.பகிர்மான நீதி**

**2.பங்கேற்ப நீதி**

**3.அங்கீகாரநீதி**

இவ்விரண்டு கோட்பாடுகளுக்கு இடையே உள்ள வேறுபாடு :

- சுற்றுச்சூழல் காலனியவாதம் என்பது மேலிருந்து கீழ்நோக்கிய அதிகாரம் கொண்டது இதுகாட்டை(Top - Down approch) அல்லது இயற்கையை மனிதர்களிடமிருந்து பிரித்துப் பார்க்கிறது.
- சூழலியல் நீதி என்பது கீழிருந்து மேல் நோக்கியமக்கள் அதிகாரம் கொண்டது (Bottom - Up approach) இது இயற்கையும் மனிதனையும் (குறிப்பாக உழைக்கும், பூர்வகுடி மக்களை) பிரிக்கமுடியாத ஒன்றாக கருதுகிறது நவீனத் தமிழ் நாவல்களான **“ஆனைமலை"** காட்டைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொள்ளும் அதிகாரவர்க்கத்தின் சுற்றுச்சூழல் காலனியவாதத்தை அமல்படுத்தி, பூர்வகுடிகளுக்கான சூழலியல் நீதியை உலகிற்கு வலியுறுத்துகின்றன.

**சுற்றுச்சூழல் அரசியல்:**

வே. பிரசாந்த் எழுதிய **“ஆனைமலை"** நாவல், தமிழ் இலக்கியச் சூழலில் சுற்றுச்சூழல் அரசியலிலை மிகஅழுத்தமாகப் பேசும் ஒரு முக்கியபடைப்பாகும். மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒருபகுதியான ஆனைமலைப் பகுதியைக் களமாகக் கொண்டு, அங்குநடக்கும் இயற்கையின் சுரண்டலையும், அதற்குப் பின்னால் இருக்கும் அதிகாரவர்க்கத்தின் அரசிலையும் இந்தநாவல் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இந்நாவலில் வெளிப்படும் முக்கிய சுற்றுச்சூழல் அரசியல் கூறுகளை காண்போம்:-

**1. இயற்கை சுரண்டலும், பெருநிறுவன (Corporate) அரசியலும்:**

ஆனைமலை நாவலின் மையப்பொருளே **“காடுயாருக்குசொந்தம்?"** என்ற கேள்விதான். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக காட்டோடு இணைந்து வாழும் பழங்குடிமக்களை, நவீன **“வன பாதுகாப்புசட்டங்கள்"** என்ற பெயரில் அரசு மற்றும் வனத்துறை எப்படி வேரறுக்கப் பார்க்கிறது என்பதை நாவல் பேசுகிறது. காட்டை பாதுகாப்பது என்று போர்வையில், காட்டின் பூர்வகுடிகளான மனிதர்களை அங்கிருந்து அற்புதப்படுத்த ஒருபெரும் அதிகாரம் கட்டமைக்கப்படுவதை இதுதெரியப்படுத்துகிறது. காலனிய ஆதிக்ககாலம் தொட்டே தேயிலைத் தோட்டங்கள், காபித் தோட்டங்கள் என்ற பெயரில் காடுகள் எவ்வாறு அழிக்கப்பட்டன என்பதை நாவல் பேசுகிறது.

- **பல்லுயிர் பெருக்கம் அழிப்பு:**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பாதுகாக்கப்பட்ட காடுகள், ஒருசில வணிகப் பயிர்களுக்காக (ஆழமெஉரடவரசந) மாற்றப்படும் போது அங்குள்ள சூழலியல் சமநிலை எப்படி குலைகிறது என்பதை பிரசாந்த் விவரித்துள்ளார்.

- **அதிகாரவர்க்கத்தின் பங்கு:**

காடுகளைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொள்ளும் அரசு அமைப்புகளும், வனத்துறையும் எவ்வாறு கார்ப்பரேட் நிறுவனங்களோடும் நிலச்சுவான்தாரர்களோடும் கைகோர்த்துக் கொண்டு இயற்கையைச் சுரண்டுகின்றன என்ற அரசியல் நாவலில் அம்பலப்படுத்தப்படுகிறது.

**2. பூர்வகுடி இடப்பெயர்வு:** (Environmental Displacement)

சுற்றுச்சூழல் அரசியலில் மிகமுக்கியமானது, அந்த நிலத்தைச் சார்ந்து வாழும் மனிதர்களின் உரிமை. ஆனைமலைப் பகுதியில் வாழும் காடர்கள், முதுவர்கள் போன்ற பழங்குடிமக்களின் வாழ்வாதாரம் காட்டை நம்பியே இருக்கிறது.

- **அந்நியமாதல்:**

வளர்ச்சி என்ற பெயரிலும், வனப் பாதுகாப்பு என்ற பெயரிலும் பழங்குடிமக்கள் தங்களின் சொந்தநிலத்திலிருந்து எவ்வாறு அப்புறப்படுத்தப்படுகிறார்கள் என்பதை நாவல் உணர்வுப்பூர்வமாகப் பேசுகிறது.

“வேங்கைபதிமலசலர்கள் வாழும் இடம் இது மலையில் அமைந்துள்ளது. வனத்துறையினர் பேசவேண்டும் என்றாலே அவர்களை வாய்க்கால்மேட்டுக்கு வரசொல்லுவார்கள் அந்தகாடு **“டைகர் ரிசர்வ்"** ஆக்கிய பிறகு மக்களை மலையை விட்டு கீழே இறங்கச் சொல்வதை அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. அவர்களிடம் வசதி, வாய்ப்புகளை கூறியும், அரசாங்கம் பணம் தருவதாகவும் கூறியும், கீழிறங்கச் சொல்லி வலியுறுத்தினர். ஆனால் அவர்களுடைய சுதந்திரம், வாழ்வாதாரம், உணவு, ஈடு (பொருள் விற்றல்) போன்ற முக்கியமான தேவைகள் பாதிக்கப்படுவதையாரும் யோசிக்கவில்லை". **(ஆனைமலை நாவல். ப.123)**

- **கலாச்சாரஅறிவு:**

காட்டைவெறும் மரங்களாகவும் விலங்குகளாகவும் பார்க்கும் நவீன மனிதர்களுக்கு மத்தியில், அதைக் கடவுளாகவும் தங்களின் வாழ்வியலாகவும் பார்க்கும் பூர்வகுடிகளின் அரசியல் நாவலில் முன்னிறுத்தப்படுகிறது. அவர்கள் நிலத்திலிருந்து பிரிக்கப்படும்போது, அவர்களின் அடையாளமும் கலாச்சாரமும் சேர்த்தே அழிக்கப்படுகிறது.

**“பழங்குடிமக்களின் தெய்வவழிபாடு சீர்குலைக்கப்பட்டது. ஏனெனில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்ல அனுமதி இன்றிதவித்தனர்". (ஆனைமலைநாவல். ப.154)**

**“இறப்பு சடங்கு முதற்கொண்டு அவர்களை காலம் காலமாக செய்த முறையை மாற்றச்சொல்லி வலியுறுத்தினர். காரணம், உடலை காட்டில் தூக்கி எறியப்படுவதால் புலி போன்ற மிருகங்கள் “Man eater" ஆகமாறிவிடும் என்பதால் புதைக்கச் சொல்லி வனக்காவலர்கள் கேட்டுக் கொண்டனர்".**

**(ஆனைமலைநாவல். ப.182)**

**3. மனித - விலங்குமோதல்:**

காடுகளின் பரப்பளவு சுருங்கி, யானைகளின் பாரம்பரியப் பாதைகள் (Elephant Corridors) ஆக்கிரமிக்கப்படும் போது ஏற்படும் விளைவுகளை நாவல் மிகத் துல்லியமாகப் பதிவுசெய்கிறது.

யானைகள் விளை நிலங்களுக்குள் புகுவதற்கும், மனிதர்களைத் தாக்குவதற்கும் காரணம் அவற்றின் வசிப்பிடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டதே என்ற உண்மையை நாவல் சுட்டிக்காட்டுகிறது.

இதுவெறும் விலங்குப் பிரச்சினை அல்ல ; காடுகளை வணிகமயமாக்கியதன் விளைவாக உருவான ஒரு தீவிரமான சுற்றுச்சூழல் அரசியல் பிரச்சினை என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

**“யானைகள் தங்கள் காடுகளை சொந்த இடமாகக் கொண்டது மக்கள் காடுகளை அழித்து கட்டிடங்களை கட்டும் போது அதன் வழித்தடங்கள் பாதிக்கப்பட்டு ஊருக்குள் நுழைய வாய்ப்பாக அமைகிறது. மேலும், ஊருக்குள் ஒருமுறை உணவு கிடைத்துவிட்டால் அதற்கு இனி அங்கேயே உணவு இருக்கும் என்ற மனநிலை வந்து திரும்பி திரும்பி ஊருக்குள் வருவதால் மனிதர்களுக்கும் யானைகளுக்கும் பாதிப்பு உண்டாகிறது".**

**(ஆனைமலைநாவல். ப.103)**

**“சோலைமந்திகள் தங்கள் எல்லையை மீறி சாலையோரம் வரகாரணம் சுற்றுலாப் பயணிகள் உணவு கொடுத்து பழக்கப்படுத்துவதை ஆகும். அவை அதற்கு பழக்கப்பட்டதால் காட்டுக்குள் இல்லாமல், சாலையோரம் இருப்பதால் வாகனங்களில் அடிபட்டு இறக்க நேரிடுகிறது".**

**(ஆனைமலைநாவல். ப.117)**

### 4. புலிகள் காப்பக அரசியலும், பெருநிறுவன (Corporate) நிதியமும் :

வனப் பாதுகாப்பு, புலிகள் சரணாலயம், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பல்லுயிர் பெருக்க பாதுகாப்புநிதியம் (Funds) போன்ற தற்காலச் சூழலியல் நகர்வுகள், எப்படிப் பழங்குடிகளின் வாழ்வுரிமையைப் பறிக்கும் ஆயுதங்களாக மாறுகின்றன என்பதை நாவல் மிகத் தைரியமாகப் பேசுகிறது.

வெளியிலிருந்துவரும் நிதிக்காகவும், சர்வதேச அமைப்புகளின் விதிமுறைகளுக்காகவும் இயற்கையோடு ஒட்டிவாழும் மக்களை **“அத்துமீறி நுழைந்தவர்கள்"** (Encroachers) போலச் சித்தரிக்கும் போலிச் சூழலியல் அரசியலை பிரசாந்த் வே அம்பலப்படுத்துகிறார்.

**“புலிகள் காப்பகமாக மாற்றப்பட்டதால் இங்குவாழ முடியாது மலையில் இருந்து கீழே இறங்க அவசரப்படுத்தும் நிலையில் மற்றொரு பக்கம் வன காவலர்கள்; கார்ப்பரேட்டிடம் பணம் வாங்கிக் கொண்டுகாட்டில் உள்ள தேக்கு மரங்களை அடியோடு அழிப்பது விலங்குகளின் தலை, தந்தம், கொம்பு என சுய தேவைக்காக உயிரினங்களை கொல்வது சுற்றுலாத் தளமாக மாற்ற பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டுவது என பல்வேறு அரசியல் மக்களிடையே நடத்தப்பட்டு வருகின்றன. இதில் விலங்குகளின் உயிரிழப்புக்கும், மரம் வெட்டுவதற்கும் அங்குள்ள பழங்குடிகளை காரணமாகச் சித்தரிக்கப்படுகின்றனர்".**

**(ஆனைமலைநாவல். ப.230)**

### 5. வாழ்வாதாரச் சிதைவும் அடையாள இழப்பும்:

காட்டைவிட்டு வெளியேற்றப்படும் ஒரு பழங்குடி மனிதன், வெறும் இடத்தை மட்டும் இழப்பதில்லை, தன் ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தையும், அடையாளத்தையும் இழக்கிறான். நாவல்களில் விவரிக்கப்படும் முதன்மையான வாழ்வாதாரச் சிக்கல்கள் பின்வருமாறு:

- **பொருளாதாரச் சார்புநிலை:** தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், மூலிகைகள் சேகரித்தல் போன்ற சுயசார்புப் பொருளாதாரத்தைக் கொண்டிருந்த பழங்குடிகள், சமவெளிக்கு வரும்போது வெறும் அனாதைகளாக, கூலித் தொழிலாளர்களாக மாறுகின்றனர்.
- **பண்பாட்டு அதிர்ச்சி(Culture Shock):** காட்டைத் தெய்வமாக, தாயாக வணங்கிய மனிதர்கள், நகரத்துச் சந்தை விதிகளுக்குப் பழக முடியாமல் திணறுகிறார்கள். அவர்களின் குலக்குறி வழிபாடும், சடங்குகளும் சமவெளிச் சமூகத்தால் கேலிக்குள்ளாக்கப் படுவதை நாவல்கள் விவரிக்கின்றன.
- **சுரண்டல்:** சமவெளிக்கு வரும் பழங்குடிப் பெண்கள் மற்றும் ஆண்கள் மிகக் குறைந்த கூலிக்குக் கொத்தடிமைகளாகப் பயன்படுத்தப்படும் அவல நிலையைத் தமிழ் நாவல்கள் ஆழமான வலியுடன் பதிவு செய்துள்ளன.
- **வளர்ச்சி என்ற பெயரில் நடக்கும் சுரண்டல்:** நகரங்களின் வளர்ச்சி என்ற பெயரில் எளிய மக்கள் எப்படி ஒதுக்குப் புறமாகத் தள்ளப் படுகிறார்களோ, அதேபோல் தான் காட்டின் **"மேம்பாடு"** என்ற பெயரில் நடக்கும் அரசியல் செயல்பாடுகளும் இருக்கின்றன. பிரிட்டிஷ் காலத்தில் வணிக நோக்கங்களுக்காகக் காடுகள் அழிக்கப்பட்டு தேயிலை, காபித் தோட்டங்கள் உருவாக்கப்பட்டதில் தொடங்கி, இன்றுவரை தொடரும் வனத்துறையின் அத்துமீறல்களையும், யானைகள் தங்களின் வாழ்விடமான காடுகளில் உணவில்லாமல் ஊருக்குள் நுழைவதற்குக் காரணமான மனிதர்களின் சுய நல அரசியலையும் நாவல் காட்சிப்படுத்துகிறது.

**"பழங்குடிகளுக்கு நடக்கும் பிரச்சனைகளை தட்டி கேட்கும் வகையில் கம்யூனிஸ்ட் கட்சியின் பரமசிவம் பழங்குடி மக்களுக்கு மிகவும் பெரிய அளவில் உதவி செய்தும், போராட்டம் நடத்தியும் மக்களுக்கு நன்மைகளை செய்து வருபவராக இருந்திருக்கிறார்".**

**(ஆனைமலைநாவல். ப.113)**

**ஒப்பிடத்தக்க முக்கிய நாவல்களின் சுற்றுச்சூழல் பாதிப்புகள்:**

**"காடோடி" நக்கீரன்:** சுற்றுச்சூழல் அரசியலையும், காடுகளின் அழிவையும் மிகவிரிவாகப் பேசிய நவீன தமிழ் நாவல்களில் இது முதன்மையானது. மலேசியக் காடுகளின் அழிவு, கார்ப்பரேட் நிறுவனங்களின் மரவணிகம், மற்றும் பல்லுயிர் பெருக்கம் **(Biodiversity)** எப்படிச் சிதைக்கப்படுகிறது என்பதைப் பற்றிப் பேசும் இந்நாவல், **'ஆனைமலை'** நாவலோடு மிக நெருங்கிய தொடர்புடையது.

**'கூகை" சோ. தர்மன்:** நேரடியாகக் காட்டைப் பற்றின நாவல் இல்லை என்றாலும், நிலத்தோடும் காடுகளோடும் மனிதர்களுக்கு இருக்கும் ஆதித் தொடர்பையும், நவீனமயமாக்கல் மற்றும் அதிகார அமைப்புகள் எப்படி எளிய மக்களின் வாழ்விடங்களைச் சிதைக்கின்றன என்பதையும் பேசும் ஒருமுக்கியமான ஆவணம்.

**'சூல்" சோ. தர்மன்:** நீர்நிலைகளைப் பாதுகாக்கும் பாரம்பரிய அரசியலையும், நவீன அரசு எந்திரம் **(Bureaucracy)** எப்படி மக்களின் தன்னாட்சி உரிமையைப் பறித்துச் சூழலியல் சீர்கேட்டிற்கு வழிவகுக்கிறது என்பதையும் பேசும் நாவல்.

**முடிவுரை:**

**"பூர்வகுடி மக்களின் அழிவு என்பது ஒரு சமூகத்தின் அழிவு மட்டுமல்ல, இயற்கையைக் காக்கும் இறுதி அரணின் அழிவு."** வே. பிரசாந்தின் ஆனைமலை நாவல், காடுகளின் உண்மையான வாரிசுகளான மலைசர் இன மக்களின் வாழ்வியலை வெறும் அனுதாபத்தோடு அணுகாமல், அவர்களைச் சுற்றியிருக்கும் அரசியல் அதிகாரப் பின்னணியோடு தோலுரித்துக்

காட்டியுள்ளது. காட்டை ஒரு வணிகப் பொருளாகப் பார்க்கும் நவீன சமூகத்திற்கு மத்தியில், அதோடு ஆன்மீகரீதியாகவும் வாழ்வியல் ரீதியாகவும் பிணைக்கப்பட்டிருக்கும் பூர்வகுடிகளின் பார்வையை இந்நாவல் நமக்குக் கடத்துகிறது. வனப் பாதுகாப்புமற்றும் நவீன வளர்ச்சி என்ற பெயர்களில் பூர்வகுடிகளை நிலமற்றவர்களாக்குவது, இயற்கையைக் காக்கும் முயற்சியாக ஒரு போதும் இருக்கமுடியாது என்பதை நாவல் திட்டவட்டமாக உணர்த்துகிறது. மலைசர் போன்ற பழங்குடி மக்களின் உரிமைகளை அங்கீகரிப்பதும், அவர்களின் பாரம்பரியக் காட்டு அறிவைப் போற்றுவதுமே மேற்குத் தொடர்ச்சி மலையின் சூழலியலைக் காப்பதற்கான உண்மையான தொடக்கம் என்பதே ஆனைமலை புதினத்தில் சுற்றுச்சூழல் அரசியல்.

**பார்வை நூல்கள்:**

[1]. **பக்தவச்சலபாரதி, தமிழகப்பழங்குடிகள்,** அடையாளம், புத்தாநத்தம், திருச்சி. மூன்றாம் பதிப்பு - 2017.

[2]. **பிரசாந்த்.வே,ஆனைமலை,**எதிர் வெளியீடு. பதிப்பு 2024.

[3]. **“Green Colonialism and Forest Policies in South India”** – V.M. RAVI KUMAR.

[4]. **“Green Imperialism” – Richard Grove** (Nfk;gphpl;[; gy;fiyf;fofg; gjpg;gfk;.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 23.தமிழ் இலக்கியங்களில் மழை நிலம் நீர் பற்றியப் பதிவுகள்

**கு.சிந்து,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவைத் தன்னாட்சி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620002.

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய தமிழ் இலக்கியங்கள் இயற்கையை மனித வாழ்வின் அங்கமாகவே சித்தரித்துள்ளன. நிலத்தையும், நீரையும் உயிராக மதித்த தமிழர்கள் அதனைப் பாதுகாக்கவும் அறிந்திருந்தனர். வானிலிருந்து பெய்யும் மழையையும், பூமியின் மீது உள்ள நிலத்தையும் ,அதன் மீது உள்ள நீரையும் விவசாயம் செய்து பண்டைய தமிழர்கள் காத்து வந்தனர். இலக்கியங்கள் நீரின் இன்றியமையாமையை வலியுறுத்துவதோடு நிலத்தின் வளத்தை உயர்த்தும் மழையைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.மழை என்பது வெறுமனே வானில் இருந்து பொழியும் நீர் மட்டுமல்ல, அது பூமியில் வாழும் உயிர்களின் உயிர்ப்பு ஆகும் .பூமியின் மீது உள்ள வளமையைப் பாதுகாக்கவும், பூமியின் மீது வாழும் மக்களைப் பாதுகாக்கவும் ,மழைநீர் அவ்வுயிர்களுக்கு உணவாகவும் விளங்குகிறது .ஐவகை நிலமான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகளில் நீரின் இருப்பு மற்றும் பயன்பாடு அந்த நிலத்தின் பண்பை நிர்ணயிக்கிறது .குறிப்பாக மக்களின் வாழ்வாதாரமானது நிலங்களின் வளமையால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது .”நீரின்றி அமையாது உலகு “என்ற திருவள்ளுவரின் திருக்குறள் நீரின்றி எந்த உயிரும் இயங்காது என்பதை ஆணித் தரமாக உணர்த்துகிறது .இலக்கியங்கள் வழிகாட்டும் இயற்கை நேசிப்பு மற்றும் நீர் சேமிப்பு முறைகளை உணர்ந்து மழை நீரை சேகரிப்பதும், நிலத்தடி நீரை பாதுகாப்பதும் நம் அனைவரின் தலையாய கடமையாகும். தமிழ் இலக்கியங்கள் மழை, நிலம், நீராகிய இயற்கை வளங்களைப்போற்றி அவற்றை பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றன .இன்றைய காலத்தில் நீர் நிலைகளை பாதுகாப்பது, மழைநீர் சேகரிப்பது, நிலவளத்தை போற்றுதல் போன்ற அனைத்தும் நாம் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும் .எனவே இன்றைய தலைமுறையும் தமிழ் இலக்கியங்கள் கூறும் வழிமுறைகளைப் பின்பற்றி மழை நீரை சேமித்து நிலத்தையும் நீரையும் பாதுகாத்து பசுமையான உலகை உருவாக்க வேண்டும் என்பதை இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது .

**திறவுச்சொற்கள்**

சுற்றுச்சூழல், உழவுத் தொழில், நீர் மேம்பாடு, மழைநீர் சேகரிப்பு.

**முன்னுரை**

தமிழ் மொழி உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றாகும். தமிழ் இலக்கியங்கள் நிலம், நீர் , ஆகாயம், நெருப்பு ஆகியவற்றை சிறப்பாகக் கையாளக் கற்றுக்கொண்டனர் . இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர் .வானில் இருந்து பெய்யும் மழையால் நிலத்தை வளப்படுத்தினர் .உழவுத் தொழிலை பெருக்கினர். நிலத்தை பக்குவப்படுத்தி நிலவளத்தை மேம்படுத்தினர் . மழை நீரை தேக்கிப் பாசனத்திற்கு உட்படுத்தினர். இயற்கைக்கு தீங்கு விளைவிக்காமல் இயற்கையை நேசித்தனர் போன்ற பதிவுகளைக் கீழ்க்கண்ட கட்டுரையின் வழி காண்போம்.

**தமிழ் இலக்கியங்களில் இயற்கையின் சிறப்பு**

தமிழ் இலக்கியங்களில் சங்க கால மனிதர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வு நடத்தினர். காடு,மலை ,கடல், பாலைவனம் என அனைத்தையும் தாண்டி பொருள் தேடச்சென்றனர் .மனிதனின் உணர்வுகளையும் இயற்கையையும் இணைத்து இலக்கியங்களை படைத்தனர் .இயற்கையை பாதுகாப்பதும் , நேசிப்பதும் அவர்களின் கடமையாக வலியுறுத்தப்பட்டது.

**"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ் கூறு நல்லுலகத்து"1**

என்று கூறுகிறார் பனம்பாரணார் . இலக்கண நூலான தொல்காப்பியம் தோன்றிய காலத்திலேயே, தமிழ் மொழி இந்த நிலப்பரப்பு முழுவதும் செழித்து வளர்ந்திருந்ததை இந்த வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

**"வான் முகந்த நீர் மழை பொழியவும்**
**மழை பொழிந்த நீர் கடல் பரப்பவும்**
**மாரி பெய்யும் பருவம் போல" 2**

வான் முகந்த நீர் மழை பொழியவும் கடலில் இருந்து நீர் மேகமாகி, மழையாகப் பொழிகிறது. மழை பொழிந்த நீர் கடல் பரப்பவும் அந்த மழை நீர் நிலத்தில் ஓடி மீண்டும் கடலைச் சென்றடைகிறது என்று பட்டினப்பாலை எடுத்துரைக்கிறது .

**"இரு விசும்பு அதிர மின்னி கருவி**
**மாமலை கடல் மிகுந்தனவே "3**

கருமையான வானம் பெரும் சத்தத்துடன் இடி இடித்து மின்னி மழைக்குரிய மேக கூட்டத்தோடு கடலில் சென்று நீர் முகர்ந்து வரும் கார்காலம் என்று மழையைப் பற்றியும் கடலைப் பற்றியும் நிலத்தைப் பற்றியும் சங்க இலக்கியங்களில் ஏராளமான பாடல்கள் பதிவுகளாகக் காணப்படுகின்றன .

**சங்க இலக்கியத்தில் நீர்நிலைகள்**

நீர்நிலைகள் மக்களின் வாழ்வாதாரமாகவும், கலாச்சாரத்தின் மையமாகவும் விளங்கியுள்ளன. 'நீரின்றி அமையாது உலகு' என்ற திருவள்ளுவரின் கூற்றுக்கேற்ப, நிலத்திற்கு ஏற்ப குளம், ஏரி, ஆறு, ஊருணி என 47-க்கும் மேற்பட்ட நீர்நிலை வகைகளைத் தமிழர்கள் வடிவமைத்துப் பாதுகாத்துள்ளனர்.

சங்க காலத்தில் நில அமைப்பிற்கு (திணை) ஏற்ப நீர்நிலைகள் பிரிக்கப்பட்டுப் பயன்பாட்டில் இருந்தன.

- **மலை (குறிஞ்சி):** அருவி மற்றும் சுனை.
- **காடு (முல்லை):** காட்டாறு மற்றும் சுனை.
- **வயல் (மருதம்):** ஆறு, குளம், ஏரி, மற்றும் கால்வாய்கள்.
- **கடல் (நெய்தல்):** உப்பங்கழி மற்றும் கடல்.
-

**நீர்நிலைகளின் பெயர்களும் அவற்றின் பயன்பாடுகளும்:**

- **ஊருணி :** மக்கள் குடிநீருக்காகப் பயன்படுத்திய பொதுவான குளம்.
- **இலஞ்சி :** பல நீர்வரத்துகளுடன் கூடிய பெரிய குளம் அல்லது பொய்கை.
- **சுனை :** மலைகளில் இயற்கையாகத் தோன்றும் நீரூற்று.
- **அகழி :** கோட்டையைச் சுற்றி பாதுகாப்பிற்காக வெட்டப்பட்ட நீர்நிலை.

- **ஆறு :** நதி அல்லது ஆறு (எ.கா: காவிரி, வைகை, பொருநை).
- ***சிறை* :** வெள்ள நீரைத் தேக்கிவைக்கக் கட்டப்பட்ட பெரிய தடுப்பணை.

**நீர் மேலாண்மை மற்றும் சமூகப் பொறுப்பு:**

குடபுலவியனார் என்ற சங்கப் புலவர், "நிலத்தை நீர்நிலைப்படுத்துவதே சிறந்த மன்னனின் கடமை" என்று பாடியுள்ளார்.

**“நிலன் நிலை மருங்கின் நீர்நிலைப்பெருகத்**
**தட்டோரம்ம இவண் தட்டோரே தட்டோரே**
**தள்ளாதோர் இவன் தள்ளாதோரே “4**

மழைநீரைச் சேமிக்கவும், வேளாண்மைக்கு நீரைப் பயன்படுத்தவும் மன்னர்கள் ஏரிகள் மற்றும் அணைகளைக் கட்டியுள்ளனர். இதற்குச் சிறந்த சான்றாகக் கரிகால சோழனால் கட்டப்பட்ட கல்லணை விளங்குகின்றது. மேலும், நீர்நிலைகளைப் பாதுகாப்பது மாபெரும் அறமாகக் கருதப்பட்டது.

**“அறையும் பொறையும் மணந்த தலைய**
**எண்ணாள் திங்கள் அனையக் கொடுங்கரை**
**தெள்நீர் சிறுகுளம் கீழ்வது மாதோ”5**

என்று புறநானூறு பாடல் அணை பற்றி எடுத்துரைக்கிறது .

**நீர்நிலைகள்**

நீர் நிலைகளை இரண்டு வகையாக பார்க்கலாம். அவையாவன,

1. இயற்கையான நீர் நிலைகள்
2. செயற்கையான நீர் நிலைகள்

என்பனவாகும். ஒரு நல்ல அரசனாவது தன் ஆட்சியின்கீழ் உள்ள குடிமக்களை நல்வாழ்வுக்காக நீர் வளத்தை பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி வரும் அந்த வகையில் குளம் வெட்டுதல் பராமரித்தல் அணை கட்டுதல் என பல்வேறு செயல்களை நாட்டின் மக்களின் நலன் கருதி செய்வது சிறந்த அரசாக இருக்கும்.எனவே மனித வளத்தையும் ஆற்றலையும் பயன்படுத்தி செயற்கையான நீர் நிலையை உருவாக்குகின்றனர் அது போல இயற்கையாக அமைந்த நீர் நிலைகளும் உண்டு . அணைக்கட்டுகள் என்பது செயற்கையாக நீர் சிந்தித்து வைக்கும் தொழில்நுட்பமாகும். மழைக்காலங்களில் அதிகமாக மழை பொழியும் போது ஆறு பெருக்கெடுத்து ஓடும் அவ்வாறு அணைக்கட்டுகளில் தேக்க வைத்து வேளாண்மைக்கு பயன்படுத்துவார்கள் என்று அணைக்கட்டுகளை கற்சிறை என இலக்கியங்கள் பேசுகின்றன.

**“வரும் விசை புனலை கருசுரை போல**
**ஒருவன் தாங்கிய பெருமையானும்” 6**

என்ற நூற்பாவில் கற்சிலை என்பது ஓடும் முறையை தடுத்து வைக்கும் மலை என்று குறிப்பிடப்படுகிறது.

**நில மேலாண்மை**

தமிழ் இலக்கியத்தில் நில மேலாண்மை குறித்து நிறைய செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஐவகை நிலங்களையும் முறையாக பயன்படுத்தி அதற்கேற்றவாறு பயன்படுத்தினர். மருத நிலங்களில் உழவை மேம்படுத்தினர். முல்லை நிலங்களை உயிரினங்களுக்குரிய இடமாக உணவு தேடும் இடமாக பயன்படுத்தினர். வேளாண்மைக்கு உகந்த மருத நிலத்தில் ஏரிகள், குளங்கள், அணைகள் முதலியன
காணப்பட்டன.

**தல்லா விளையினும் தக்காரும் தாழ்விலா**
**செல்வரும் சேர்வது நாடு 7**

என்று திருக்குறள் கூறுகிறது. குறைவில்லாத விளைச்சலை தரும் நிலவ வளமும் நேர்மையான குடிமக்களும் குறையாத செல்வ வளமும் நிறைந்திருப்பதே நாடு என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

நிலத்தை ஒழுங்காக நிர்வாகிக்காவிட்டால் அந்த நிலமே நம்மை பார்த்து சிரிக்கும் என்னும் அவ்வையார் பாடல் ஒன்று நிலத்தை வைத்து தான் அங்கு வாழும் மனிதனுடைய குணமானது தீர்மானிக்கப்படுகிறது எனக் கூறுகிறது.

**"நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவளா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர் ஆயினும்**
**அவ்வழி நல்லை வாழிய நலனே" 8**

என்பது அப்பாடலாகும்.

**முடிவுரை**

தமிழ் இலக்கியங்கள் காலம் தோறும் சமூகத்திற்கு தேவையான செயல்களை செய்தும் நெருக்கடி இல்லாத வாழ்வினை மேற்கொள்ளவும் வழிகாட்டுகிறது. அந்த வகையில் தமிழ் இலக்கியங்கள் மண்ணையும் மழையையும் நீரையும் சிறப்பாக கையாண்ட விதத்தினை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. வானில் இருந்து பெய்யும் மழை நீரே பூமியில் உள்ள உயிர்களுக்கு ஆதாரமாகவும் விளங்குகிறது. மழைநீர் ஆனது கடலில் சென்று கலக்காமல் இருக்க அணைகள் கட்டி அதனை விவசாயத்திற்கு பயன்படுத்துகிறது இதனால் மலை வளம் குன்றிய காலத்தும் விவசாயத்தை தங்கு தடையின்றி மேற்கொள்ள வழிகாட்டுகிறது. நிலத்தில் விழுந்த மழை நீர் ஆனது உயிர்களுக்கு உணவாகவும் உயிராகவும் பயன்படுகிறது என்பதை கீழ்க்கண்ட கட்டுரையின் வழி பதிவுகளாக அறிய முடிகிறது.

### 1. சான்றெண் விளக்கம் (Endnotes / In-Text Citation Notes)

- இளம்பூரணனார் (உரையாசிரியர்). *தொல்காப்பியம் (சிறப்புப் பாயிரம்)*. பதிப்பாசிரியர்: கௌமாரீஸ்வரி.
- கதிர்முருகு (உரையாசிரியர்). *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*. "பட்டினப்பாலை," அடிகள் 126-129.
- கௌமாரீஸ்வரி, எஸ். (பதிப்பாசிரியர்). *நற்றிணை மூலமும் உரையும்*. பாடல் 329.
- பாலையன், அ. (உரையாசிரியர்). *புறநானூறு மூலமும் உரையும்*. பாடல் 18.
- மேலது, பாடல் 118. *(முந்தைய சான்றையே குறிப்பிடுவதால் 'மேலது' / Ibid. என அமையும்).*
- இளம்பூரணனார் (உரையாசிரியர்). *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. நூற்பா 65.
- திருவள்ளுவர். *திருக்குறள் மூலமும் உரையும்*. குறள் 731.
- பாலையன், அ. (உரையாசிரியர்). *புறநானூறு மூலமும் உரையும்*. பாடல் 187.

### 2. பார்வை நூல்கள் (Works Cited / References)

[1]. **இளம்பூரணனார், உரையாசிரியர்.** *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், 2008.

[2]. **கௌமாரீஸ்வரி, எஸ்., பதிப்பாசிரியர்.** *நற்றிணை மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், 2008.

[3]. **பாலையன், அ., உரையாசிரியர்.** *புறநானூறு மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், 2008.

[4]. ***புறநானூறு மூலமும் உரையும்.*** சாரதா பதிப்பகம், 2008.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 24.தமிழ் இலக்கியங்களில் இந்திய சிந்தனை மரபுகளும் சுற்றுசூழல் மரபுகளும் - நவீன தமிழ் இலக்கியங்களில் சுற்றுசூழல் நெருக்கடிகள்

**கு.யசோதா,**
முனைவர் பட்ட ஆய்வாளர், கோபி கலை அறிவியல் கல்லூரி
கோபிச்செட்டிபாளையம் ஈரோடு மாவட்டம் - 638453
Athish132@gmail.com, 9578815399
நெறியாளர்: **வ.தமிழரசி உதவிப்பேராசிரியர் (தமிழ்த்துறை)**
கோபி கலை அறிவியல் கல்லூரி, கோபிச்செட்டிபாளையம் ஈரோடு மாவட்டம் - 638453
tamilsakthi@gasgobi.ac.in, 9360457441

**ஆய்வு சுருக்கம்**

யுகபாரதியின் படைப்புகளில் புலனாகும் சமுதாய, வாழ்வியல் சிந்தனைகள் பரவலாக அனைவராலும் அறியப்பட வேண்டும் என்ற நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது

**முன்னுரை**

சமுதாயம் என்பது மக்கள் திரள் என்று கூறலாம். மக்கள் இருப்பதால்தான் மண்ணுலகம் மாண்பு கொள்கிறது. மரமும், கொடியும், மலையும்,காற்றும், நீரும், நெருப்பும், விலங்கும் வெளியும் மட்டும் இருந்து மனிதன் இல்லையேல் இந்த மண்ணுக்கு ஏது மாட்சி? சமூகத்தின் வளர்ச்சியில் தோன்றியதே இலக்கியம். 'சமுதாயத்தை சொல்லில் வடித்தளிப்பதே இலக்கியம்' என்பார் டிபோனல்ட் என்ற மேனாட்டு அறிஞர். "ஒரு சமூகம் தனக்குத் தேவையான இலக்கியத்தைச் சில தனி மனிதர்களை ஊடகமாகக் கொண்டு தானே படைத்துக்கொள்கிறது எனக் கருதுகிற போக்குச் சமூகத்தை முன்னிறுத்தும் திறனாய்வாளர்களிடம் நின்று நிலவுகிறது"1 என்பார் பேரா.க.பஞ்சாங்கம். சமூகத்தின் நிகழ்வுகளைக் காணும் கவிஞன் மனதில் ஏற்படும் கோபங்கள் கவிதைகளாக உருவெடுக்கிறது. அந்த வகையில் யுக பாரதியின் கவிதைகளில் வெளிப்பட்டிருக்கும் சமுதாய சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக இவ்வியல் அமைகின்றது.

**யுகபாரதி கவிதைகளில் அரசியல்**

மனித வரலாற்றில் அரசியல் நெருங்கிய தொடர்புடையது. மனிதன் என்று விலங்குநிலையிலிருந்து மாறி தனி நிலை பெற்று வாழத் தொடங்கினானோ, அன்றே சமுதாயம் தோன்றிவிட்டது. மனிதன் கூடி வாழப் பிறந்தவன், கூட்டு வாழ்க்கையான சமுதாய வாழ்வே அவனது நாகரிக வாழ்வு. நாகரிகம் தோன்றிய காலத்தில் மனித குழுக்களைப்
பகைவரிடமிருந்து பாதுகாக்கவும், வழிப்படுத்தவும் ஒரு தலைவன் வேண்டி இருந்தது. இத்தலைவனின் தோற்றமே அரசியலின் தோற்றம் ஆகும். கவிஞனும் அரசியலும்
சமூகத்தில் நடக்கும் அநீதிகள் கவிஞனைப் பாதிக்கும் போது, அவன் அதனைப் படைப்பின் மூலம் வெளிப்படுத்துகிறான். அந்த வகையிலேயே கவிஞர் யுகபாரதியும் அரசியல் மோசடிகளை தன் கவிதைகளில் காட்டுகிறார். 'தெப்பக்கட்டை' என்ற கவிஞரின் கவிதைத் தொகுப்புக்கு முன்னுரை எழுதிய அபிவை சரவணன், "ஒரு கட்சிப் பேச்சாளரின் பேச்சைக் கேட்ட இரவொன்றில் நீ (கவிஞர்) சொன்னாய், அபத்தமான விஷயத்தையே அற்புதமா பேசுறான். சிலபேரு நல்ல விஷயத்தையே அபத்தமா பேசுறான்.
இங்கே இதுதான் கோளாறு"2 என்பார். அபத்தங்களும், அற்புதங்களும் நிறைந்த அரசியல் பற்றி கவிஞர் பல கவிதைகள் எழுதியுள்ளார்.
யுகபாரதி காட்டும் அரசியல்

**ஊழல்**

அரசியல்வாதிகளும், அரசு அதிகாரிகளும் பல்வேறு முறைகளில் ஊழல் செய்கின்றனர். இந்த ஊழலை ஒழிப்பதற்கு அரசாங்கம் தனித்துறையையே அமைத்துள்ளது. இதனையே ஒரு ஹைகூ கவிஞர், 'இருபதினாயிரம் கொடுத்தேன் / இலஞ்ச ஒழிப்புத்துறையில் / வேலை கிடைத்தது"3 எனப் பல ஆண்டுகளுக்கு முன் எழுதினார். இன்றோ பல இலட்சங்களில் விலை உயர்வாக 'வேலைகள்' விற்கப்படுகின்றன. தினமும் நாளிதழ்களில் வருமானத்துக்கு அதிகமான சொத்து சேர்த்த அரசியல்வாதிகள் பற்றிய செய்திகள் வருகின்றன. நீதிமன்றத்தில் நீண்ட காலமாக வழக்குகள் நடக்கின்றன. ஆனால் தண்டனை பெறுவோர் மிகவும் குறைவு. இந்நிலை கண்ட கவிஞர் யுகபாரதி பல கவிதைகளிலும் 'ஊழல் பெருச்சாளிகளை' அடையாளம் காட்டுகிறார். 'எலியின் நகல்கள்' என்ற கவிதையில் ' ஊழல் மூஞ்சூறுகளாக ' மாறுகிறார்கள் மந்திரிகள்.

**"கொறிக்கும் எலிகள்**
**கொழுத்துத் திரியும்**
**கொல்லும் பூனையோ**
**பால்திருடும்**
**எலிகளைப் பார்க்காதவர்**
**மிக அரிது**
**மந்திரி வீடு, ரேஷன் கடை**
**காவல்துறை**
**சில்லறை மறுக்கும் நடத்துனரென**
**மூஞ்சுறுகளின் முகாந்திரங்கள்**
**வெவ்வேறு3**

**என்பார் கவிஞர். 'சொல்வதெனில்'**
**எனும் கவிதையில்,**

**"பினாமி பெயர்களில்**
**சொத்து வைத்திருந்தாலும்**
**ஆட்சிப் பீடத்தில் அமர்த்தவில்லை**
**பொம்மைகளை"4**

என்று குறிப்பிடும்போது, ஊழல் அரசியல்வாதிகள் பினாமி பெயர்க சொத்து சேர்த்து வளமுடன் வாழ்வதைக் கூறுவார். அப்படிப்பட்ட அரசியல்வாதிகளின் கொள்கை எப்படி இருக்கும் என்பதை 'அரசியல்'
கவிதையில்

"உள்ளமதை உணர்ந்து கொள்ளும்
ஊருக்குக் கெட்ட காலம்
கள்ளத்தனம் கொடியைக் கட்டும்
கரன்சிதான் கொள்கைத்திட்டம்"5

எனக் காட்டி அம்பலப்படுத்துவார்.

**தனிமனிதத் தாக்குதல்**

அரசியல்வாதிகள்தான் ஒருவரையொருவர் தாக்கிப் பேசுவார்கள் என்பதில்லை. கவிஞர்களுக்கும் அது கைவந்த கலை. யுகபாரதியின் சில கவிதைகள் அரசியல்வாதிகளின் அந்தரங்கம் வரை செல்வதையும் காணமுடிகிறது.

"காலிடப்பாவை உண்டியலாக்கி

கட்சிக்கு நிதி சேர்
கோவணம் போனாலென்ன
கொள்கை முக்கியம்"6

எனப் பொதுவுடைமைக் கட்சிகளின் உண்டியல் வசூலைக்கேலிக்குள்ளாக்கி விட்டு, திராவிடக் கட்சிகளின் பக்கம் திரும்புகிறார்.

"இந்தியை எதிர்த்து
தலை வைத்த தண்டவாளத்தில்
அந்தி வந்ததும் ஆரம்பமாகிறது
தொந்தரவு.
ஓங்கிக் குரலெழுப்பு
உடல் மண்ணுக்கு
உயிர் தமிழுக்கு."7

மேலும், இந்திய அரசியல் பற்றிப் பாம்பு புராணம் என்ற கவிதையில்,

"மோடி மஸ்தானின்
மகுடி இரைச்சலுக்கு
மதங்கொண்டு நெளிகின்றன
பாம்புகள்"13

என்று மதவாத சக்திகளை அடையாளப்படுத்துகிறார்.

**யுகபாரதியின் கல்விச்சிந்தனைகள்**

கல்வி சமூகத்தை மேம்படுத்தும் கருவி. வாழ்க்கையை நெறிப்படுத்தி சிறந்த இலக்கை அடைய வழிவகுக்கும் சட்டம். கல்வியினால் மட்டுமே ஒரு சிறந்த சமுதாயத்தைச் செப்பம் செய்ய இயலும். அதற்கு ஆழமான கல்விமுறை தேவை. தனி மனிதனுடைய வாழ்வையும் நாட்டின் வாழ்வையும் உயர்த்தும் கல்வி குறித்து கவிஞர்கள் பலர் கவிதை படைத்துள்ளனர்.

யுகபாரதி தமிழகத்துப் பள்ளிகளின் நிலையை உணர்ந்து அவை எடி இருக்கின்றன என்பதை, 'பள்ளி வாசல்' கவிதை மூலம் இவ்வாறு காட்டுகிறார்.

"எல்லாப் பள்ளிக் கூடத்து
வாசல்களிலும்
தட்டுக் கூடையில்
நெல்லி விற்குமொரு கிழவி
குந்தியிருக்கிறாள்.
உருக்கும் வெயிலில் ......... எனும்

இந்தக் கவிதை கலைமகள் இலவசமாகக் கிடைப்பதில்லை. கழற்றிய மூக்குத்திகளில் வாசம் செய்கிறது கல்வி என்பதைச் சொல்லாமல் சொல்கிறது.

**யுகபாரதி கவிதைகளில் வறுமை**

கல்வி அறியா அங்கீகரிக்கப்படாத எளிய மக்களின் திறமை வாய்மொழிப் பாடலாகவே நின்றது. அது சுவடி மதிப்பைப் பெறவில்லை. தங்கள் நிலபுலன்கள், தங்கள் சகபாட்டாளிகளின் வாழ்க்கை, தன்னதும் பிறரதுமான சுக துக்கங்களைப் பாடும் இவ்வகைத் திறமையாளரின் இடத்தில் புதுக்கவிதை வியாபித்திருக்கிறது. இன்று கிராமத்தைப் பாடும் புதுக்கவிஞன் அறிவாளி. அவனிடம் வெளிப்படுவதும் புதுக்கவிதை. புலவனுக்கும் வாய்மொழிப் பாடலின் ஆசிரியனுக்கும் இடையிலிருந்த பல வகையான பேதங்களைப் புதுக்கவிதை தகர்த்துவிட்டது. இத்தகைய புதுக்கவிஞர்களில் ஒருவர் இளவல் யுகபாரதி என முதல் கவிதைத் தொகுதியான மனப்பத்தாயத்தில் கவிஞர் ஞானக்கூத்தன் சான்று தருவார். எளிய கிராமத்து மக்களின் வாழ்க்கை நிலைகளையே, நகரத்தில் வாழ்ந்த போதும் கவிஞர் பாடுகிறார். பராரியாய் நகரத் தெருக்களில்

உலாவிக் கொண்டிருந்தாலும் உழைக்கும் மக்களின் வறுமையைத் தன் கவிதைகளில் பதிவிடுகிறார்.

இந்திய நாடு விடுதலை பெற்று எழுபது ஆண்டுகளைக் கடந்து விட்டது. தகவல் தொடர்பிலும் போக்குவரத்திலும் எத்தனையோ வளர்ச்சிகளை அடைந்திருக்கும் இந்தியாவின் வறுமையை முற்றிலும் விரட்ட முடியவில்லை. அரசாங்கம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களை இன்னமும் கணக்கெடுத்து வருகின்றது. மூக்குத்தி அணிய வேண்டும் என்ற ஏழைச் சிறுமியின் கனவு எவ்வாறு நிறைவேறுகிறது என்பதை,

"மூக்குத்திக் கனவை
வெண்டைக்காய்
முளை பொருத்தித்
திருப்தி கொள்கிறாள்
சிறுமி"11

எனும் கவிதை வழி வெளிப்படுத்தியுள்ளார்.

**தொழிலாளிகளின் அவலம்**

சமூகத்தின் விளிம்பு நிலை மக்கள் தங்களுக்குத் தெரிந்த தொழிலை மேற்கொள்கிறார்கள். அதைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை கொள்வதில்லை. கழிவறையோரம் கூட தன் வறுமை நிலையில் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்த ஒரு பூக்காரியைப் பற்றிக் கூறும் போது,

"மூத்திரவாடை நிரம்பி வழியும்
பேருந்து நிலையத்தில் முழம் போட்டு
விற்றுக் கொண்டுதான்
இருக்கிறாள்
பூக்காரி"12

எனத் துர்நாற்றமும், பூநாற்றமும் இணைவதைக் காட்டுகிறார்.

**யுகபாரதி கவிதைகளில் விவசாயி**

பெரும்பாலான புதுக்கவிஞர்களின் பார்வை கிராமப்புறத்து உழவர்களின் நிலையைச் சுட்டுவதில்லை என்பது புதுக்கவிதை விமர்சகர்களி பார்வையாகும். எளிய விவசாயக் குடும்பத்துக் கவிஞரான யுகபாரதி தன் கவிதைகளில் விவசாயிகளின் நிலைக்காக வருந்தி எழுதியுள்ளதைக் காண முடிகிறது. சோறுடைத்த சோழ வளநாடு இன்று எப்படியிருக்கிறது? முப்போ விளையும் தஞ்சை மண் ஏன் தரிசானது? கவிஞர் கூறுகிறார்.

"இஷ்டத்துக்கு இறைத்த கேணி
ஊற்றுக்கண் அடைபட
பூசிய சாயம் பொய்யென்றாகக்
கதியானதோ கந்தல் துணி
சோறுடைத்த சோழ வளநாடு
சோத்துக்கில்லாமல் பக்கத்தூர்
பனியன் கம்பெனிகளில்"14
யுகபாரதி கவிதைகளில் கடவுள்

மக்களின் வாழ்க்கை சமயத்தை மையமாகக் கொண்டுள்ளது. 'மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயமும் உடன் வளர்ந்து வந்ததாகத் தோன்றுகிறது என்பதும், சமயம் மனிதன் தோன்றியது முதல் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது' என்பதும் இங்கு எண்ணத்தக்கனசமுதாயப் புரட்சியில் ஈடுபடுவோர் முதலில் சமயத்தையே தாக்குவர்.

ஏனெனில், சமயம் உருவாக்கிய கடவுள்களும், நம்பிக்கைகளுமே மனிதனைச் சீரழிக்கிறது என்ற உண்மை உணர்ந்த யுகபாரதியின் கவிதைகளைப் படிக்கின்றவர்கள் அவர் ஒரு பகுத்தறிவுவாதி, சமய மறுப்பாளர், சாதி மறுப்பாளர் என்பதை வெளிப்படையாகவே அறிய முடியும்.

**கோயில்களின் நிலை**

கோயில்களின் நகரமான தஞ்சை மண்ணில் பிறந்த யுகபாரதி, அந்தக் கோயில்களின் நிலை, அங்கு நடக்கும் அநீதிகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

"கற்பூரம் விற்கும் கடையிலேயே
ஏகமாய் விற்பனையாகும்
பான்பராக் வஸ்துகள்.
நாலணா நப்பாசைக்குத்
தும்பிக்கையேந்தும்
போரடித்த யானை கோயில் வாசலில்"15

என்பார். 'ராகுகாலக்காளி' என்ற கவிதை தஞ்சைப் பெரிய கோவிலின் நிலையை அலசுகிறது.

**தொகுப்புரை**

* யுகபாரதி கவிதைகளில் சமுதாயநோக்கு எனும் இவ்வியலில் சமுதாயம் குறித்த விளக்கம், யுகபாரதியின் சமுதாயப் பார்வை குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

* மனித குழுக்களின் வளர்ச்சியே அரசியல். இன்றைய அரசியல்வாதிகள் எலிகளாய், பெருச்சாளிகளாய் மாறி ஊழலில் திளைக்கின்றனர். பதவி பெற்றபின் அவர்கள் நிறம் மாறுகின்றனர் என்பதை அரசியல் கவிதைகள் சுட்டுகின்றன. ஈழ அரசியல் பற்றியும் யுகபாரதி கவிதை படைத்துள்ளார்.

* கல்வி என்பது இலவசமல்ல, அம்மாவின் மூக்குத்தியை அடகுவைத்தே சரஸ்வதியைச் சரணடைய முடிகிறது. கும்பகோணப்பள்ளி தீ விபத்து கவிஞரைப் பெரிதும் பாதித்துள்ளதை கவிதை வழி அறிய முடிகிறது.

* மக்களின் வறுமை நிலை கவிதைகளில் அதிகம் விவரிக்கப்படுகிறது. தொழிலாளிகளின் நிலை, விளிம்பு நிலை மனிதர்களின் வாழ்க்கைமுறை ஆகியவற்றை விரிவாகக் கவிஞர் சுட்டுகிறார். விவசாயிகள் 'பனியன் கம்பெனிகளுக்கு' வேலை தேடிப்போகும் அவலமும் கவிதைகளில் வெளிப்படுகிறது.

**முடிவுரை**

"யுகபாரதி கவிதைகளில் சமுதாய நோக்கு' என்னும் இரண்டாவது இயலில் சமுதாயம் குறித்த விளக்கம், யுகபாரதியின் கவிதைகளில்

வெளிப்பட்டிருக்கும் அரசியல், தேர்தல், கல்வி, வேலையின்மை, வறுமை, வேளாண்மை, சாதி குறித்த சிந்தனைகள் ஆராயப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்:**

[1]. **அப்துல் ரகுமான்.** *நேயர் விருப்பம்*. அன்னம் வெளியீடு, 1984.

[2]. **அருணாசலம், மு.** *தமிழ்ப் புதுக்கவிதைகளில் தொன்மங்கள்*. அருண் பதிப்பகம், 2009.

[3]. **அன்பாதவன்.** *கவிதையின் திசைகள்*. வள்ளி சுந்தர் பதிப்பகம், மறுபதிப்பு, 2012.

[4]. **இராமச்சந்திரன், க.** *தமிழ்க் கவிதையின் புதிய போக்குகள்*. பாவை பப்ளிகேஷன்ஸ், 2009.

[5]. **கந்தர்வன்.** *கந்தர்வன் கவிதைகள்*. சந்தியா பதிப்பகம், 2002.

[6]. **கோவிந்தராசு, மா.** *புதுக்கவிதைக் கட்டமைப்பு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2011.

[7]. **யுகபாரதி.** *யுகபாரதி கவிதைகள்*. நேர்நிரை பதிப்பகம், 2016.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 25.வேதநாயக சாஸ்திரியாரின் ஞானத்தச்ச நாடகத்தில் உயிரினப் பன்முகத்தன்மை: ஓர் சூழலியல் வாசிப்பு

**S. SMILIN SHEEBA,**
Full time Ph.D. Research Scholar,
Madras Christian College, East Tambaram -600059
Mail I'd: 624phdtl003@mcc.edu.in, Contact: 8667752196
**Dr. D. Meshak,**
Research Supervisor, Head and Assistant Professor,
Madras Christian College, East Tambaram - 600059

**ஆய்வுச்சுருக்கம்**

சுற்றுச்சூழல் அமைப்பின் நிலைத்தன்மைக்கு உயிரினப் பன்முகத்தன்மை (Biodiversity) இன்றியமையாததாகும். உலகளவில் உயிரின அழிவு, வாழிடச் சிதைவு, காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் நெருக்கடிகள் அதிகரித்து வரும் நிலையில் உயிரினப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பெருகி வருகிறது. இன்றைய அறிவியல் உலகம் வலியுறுத்தும் உயிரினங்களின் பன்முகத்தன்மை குறித்த சிந்தனைகள் இலக்கியங்களிலும் பதிவாகியுள்ளன. தமிழ்க் கிறித்தவ இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க படைப்பான தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் ஞானத்தச்ச நாடகம், உயிரினங்களை ஆவணப்படுத்திய முக்கியமான இலக்கியமாகத் திகழ்கிறது. தமிழ்க் கிறித்தவ இலக்கியங்கள் குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும் ஞானத்தச்ச நாடகத்தில் பதிவாகியுள்ள உயிரினங்களின் பன்முகத்தன்மை குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. குறிப்பாக நோவாவின் பேழை நிகழ்வை மையமாகக் கொண்டு இடம்பெறும் மரங்கள், விலங்குகள், பறவைகள், பூச்சிகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் பற்றிய பதிவுகளை ஆய்வுக்குட்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும். விளக்கவியல், பகுப்பாய்வு மற்றும் சூழலியல் திறனாய்வு அணுகுமுறைகளின் அடிப்படையில் இவ்வாய்வு அமைகிறது. ஞானத்தச்ச நாடகம் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், பூச்சிகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றின் பல்வகைத் தன்மையை முறையாகப் பதிவு செய்துள்ளதுடன், அவற்றை வாழிடம் அடிப்படையில் வகைப்படுத்தும் அறிவியல் பார்வையையும் கொண்டுள்ளது என்பதும் இவ்வாய்வில் கண்டறியப்பெற்றுள்ளது. மேலும், நோவாவின் பேழை நிகழ்வு உயிரினப் பாதுகாப்பு மற்றும் படைப்பின் பாதுகாப்பு குறித்த கிறித்தவ இறையியல் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாகவும் அறியப்படுகிறது. இவ்வாய்வு, தமிழ்க் கிறித்தவ இலக்கியங்களில் சுற்றுச்சூழல் மற்றும் உயிரினங்களின் பன்முகத்தன்மையைக் குறித்த புதிய ஆய்வுப் பரப்பை உருவாக்குவதோடு, இலக்கியம், சுற்றுச்சூழல் மற்றும் இறையியல் ஆகிய துறைகளுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் முயற்சியாக அமைகிறது.

**திறவுச்சொற்கள்:**
ஞானத்தச்ச நாடகம், வேதநாயக சாஸ்திரியார், உயிரினப் பன்முகத்தன்மை, சுற்றுச்சூழல், நோவாவின் பேழை, உயிரின வகைப்பாட்டியல், சூழலியல் திறனாய்வு.

**முன்னுரை**

உயிரினங்களின் பன்முகத்தன்மை (Biodiversity) என்பது பூமியில் வாழும் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், பூச்சிகள், நுண்ணுயிரிகள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களின் பல்வகைத் தன்மையையும் அவற்றுக்கிடையிலான சூழலியல் தொடர்புகளையும் குறிக்கும் அறிவியல் கருத்தாகும். உலக அளவில் உயிரின அழிவு, வாழிடச் சிதைவு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற சுற்றுச்சூழல் நெருக்கடிகள் தீவிரமடைந்து வரும் இக்காலகட்டத்தில், உயிரினப் பாதுகாப்பு குறித்த ஆய்வுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இத்தகைய சூழலில் இலக்கியங்கள், குறிப்பாக சமய

இலக்கியங்கள், இயற்கை மற்றும் உயிரினங்கள் பற்றிய மனித சமூகத்தின் பார்வைகளைப் பதிவு செய்யும் முக்கிய ஆவணங்களாக விளங்குகின்றன. தமிழ்க் கிறித்தவ இலக்கிய மரபில் தனித்துவமான இடம் வகிக்கும் தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் ஞானத்தச்ச நாடகம், நோவாவின் பேழை நிகழ்வின் வழியாக பல்வேறு உயிரினங்களை முறையாகப் பதிவு செய்து, அவற்றின் பாதுகாப்பு குறித்த சிந்தனைகளை முன்வைக்கிறது. எனவே, இந்நாடகத்தில் இடம்பெறும் உயிரினப் பன்முகத்தன்மையை சூழலியல் மற்றும் இறையியல் நோக்கில் ஆய்வு செய்வது, தமிழ்க் கிறித்தவ இலக்கியங்களில் சுற்றுச்சூழல் சிந்தனையின் பரிணாமத்தைப் புரிந்துகொள்வதற்கான முக்கியமான ஆய்வுத் தளத்தை உருவாக்குகிறது.

**உயிரினங்களின் பன்முகத்தன்மை**

உயிரினப் பன்மை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில் காணப்படும் பல்வேறு வகையான உயிரினங்களின் வகைகளையும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அழிந்துபோன பிற உயிரினங்களையும் குறிக்கிறது. இதுவே பல்லுயிர்ப் பெருக்கத்தின் மிக அடிப்படையான நிலையாகும். இது தாவரங்கள் முதல் பல்வேறு நுண்ணுயிரிகள் வரையிலான அனைத்து உயிரினங்களையும் உள்ளடக்கியது. ஒரே இனத்தைச் சேர்ந்த இரண்டு உயிரினங்கள் முற்றிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சான்றாக, மனிதர்கள் தங்களுக்குள்ளேயே மிகுந்த பன்முகத்தன்மையைக் காட்டுகிறார்கள்.

உயிரினங்களின் பன்முகத்தன்மை முக்கியமாக ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் நுண்ணுயிரிகள், தாவரங்கள், விலங்குகள், பவளப்பாறைகள், காடுகள், மழைக்காடுகள், பாலை வனங்கள் போன்ற சுற்றுச்சூழல் அமைப்புகள் உட்பட பல்வேறு உயிரினங்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிக்கிறது. எனவே, பல வகையான உயிரினங்களில் ஒவ்வொரு உயிரினமும் சுற்றுச்சூழல் அமைப்பில் சமமான முக்கியப் இடம்பெற்றுள்ளன். (மொழிபெயர்ப்பு: https://byjus.com/biology/biodiversity-in-plants-and-animals/)

நவீன உயிரியல் அறிவியலின் அடிப்படையில் உயிரினப் பன்முகத்தன்மை சுற்றுச்சூழல் சமநிலைக்கும் உணவுச் சங்கிலிக்கும் உயிரியல் பரிணாமத்திற்கும் அடிப்படையாக அமைகிறது. இத்தகைய அறிவியல் சிந்தனைகளின் தொடக்க வடிவங்களை இலக்கியங்களில் காண முடிகிறது.

**தாவரங்களில் பல்லுயிர் பெருக்கம்**

உணவு, தங்குமிடம் மற்றும் விவசாயத்திற்கு ஒரு முக்கிய வளமாக இருப்பது, தாவரங்களின் பன்முகத்தன்மை. உணவு மற்றும் விவசாய உற்பத்திக்காக ஆயிரக்கணக்கான தாவர இனங்கள் அடையாளம் காணப்பட்டு, பயிரிடப்பட்டு, பயன்படுத்தப்பட்டு, அவற்றை சார்ந்திருக்கப்பெற்றுள்ளன. இந்தத் தாவரங்களுள் புற்கள், புதர்கள், மூலிகைகள், செடிகள், கொடிகள், மரங்கள் மற்றும் பாசிகள் போன்றவை உள்ளடங்கும். ஒளிச்சேர்க்கை செயல்முறையின் வாயிலாக, நாம் சுவாசிக்கும் உயிர்வளியை (oxygen) தாவரங்கள் நமக்கு வழங்குகின்றன.

உலகெங்கிலும் உள்ள மொத்த மனித இனத்திற்கும் தேவையான உணவு மற்றும் அத்தியாவசிய ஆற்றல் தேவைகளை வழங்கும் ஒரு சில பயிர் இனங்கள் மட்டுமே உள்ளன. அவற்றுள் அரிசி, கோதுமை, மக்காச்சோளம், தானியங்கள், பருப்பு வகைகள் போன்றவை அடங்கும். உலகளாவிய உணவுப் பாதுகாப்பிற்காக இந்த குறிப்பிட்ட ஒரு சில பயிர்களின் தேவைக்கு ஏற்ப, இந்தத் தாவர இனங்களின் வளர்ச்சியைப் பராமரிப்பதும், மோசமான மண், உப்புத்தன்மை, வறட்சி, வெள்ளம் மற்றும் கடுமையான வெப்பநிலை போன்ற சாதகமற்ற சூழ்நிலைகளிலும் பயிரிடக்கூடிய அதிக அளவிலான பயிர்களை இனப்பெருக்கம் செய்ய விவசாயிகளுக்கு வாய்ப்புகளை வழங்குவதும் அவசியமாகிறது. (மொழிபெயர்ப்பு: https://byjus.com/biology/biodiversity/)

**விலங்குகளில் பல்லுயிர் பெருக்கம்**

தாவரங்களைப் போல விலங்குகளின் பல்லுயிர்ப் பெருக்கமும் பரந்து விரிந்துள்ளது. உணவு உற்பத்தி மற்றும் விவசாயத்திற்காகப் பயிற்றுவிக்கப்பட்டு, பழக்கப்படுத்தப்பட்ட பல விலங்கினங்கள் உள்ளன. இது உணவுப் பாதுகாப்பிலும், கிராமப்புற வளர்ச்சியைப் பேணுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**ஞானத்தச்ச நாடகத்தில் உயிரினப் பன்முகத்தன்மை**

விவிலியத்தில் உள்ள தொடக்கநூலில் இறைவன், நோவா என்ற மனிதரிடம், உன்னையும் உன் குடும்பத்தையும் பல்வேறு வகையான உயிரினங்களையும் உலக அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டி பெரிய பேழை ஒன்றை உருவாக்கி அதில் அனைவரையும் ஏற்றி பாதுகாப்பாக இருக்குமாறு கூறினார். நோவாவும் தன்னுடைய குடும்பத்தினரைப் பேழையினுள் ஏற்றிய பின்னர் மரங்கள், விலங்குகள், பறவைகள், பூச்சிகள், நவதானியம், மீன்கள், என பல்வேறு வகையான உயிரினங்களையும் அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டி பேழையினுள் ஏற்றினார். 90 வகையான மரங்கள், 95 வகையான விலங்குகள், 93 வகையான பறவைகள், 70 வகையான பூச்சிகள், 17 வகையான வண்டுகள், 74 வகையான நவதானியஙகள், 107 வகையான மீன்கள் என பல்வேறு உயிரினங்களின் பட்டியல்கள் இந்நூலில் வேதநாயக சாஸ்திரியார் ஆவணப்படுத்தியுள்ளார் .

**தாவரப் பன்முகத்தன்மை**

நோவாவின் பேழையில் சேர்க்கப்பட்ட மரங்களை விவரிக்கும் போது அத்தி, புங்கு, புளி, பூவரசு, நெல்லி, லீபனோன், கேதர், காட்டொலிவம், நாட்டொலிவம் போன்ற பல்வேறு மர இனங்கள் குறிப்பிடப்படுகின்றன.

**பரனுரைத்த மொழிப்படியே யியைந்து**
**பண்புடனோர் பேழைதனை**
**வரமிகுத்த நோவை முனி மரத்தின்**
**வகையுடனே சேர்ப்பதற்காய்.**

(ஞானத்தச்ச நாடகம், 2:1:3: 1-4 )

இம்மரங்கள் உணவு, மருத்துவம், நிழல், மரப்பொருள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பல்வேறு பயன்பாடுகளைக் கொண்டுள்ளன. 90க்கும் மேற்பட்ட மர இனங்களைப் பதிவு செய்துள்ளமை தாவர வகைகளின் செழுமையை வெளிப்படுத்துகிறது.

மேலும், தாவரங்கள் மனித வாழ்க்கைக்குப் பயன்படும் பொருட்களாக மட்டுமன்றி இறைவனின் படைப்பின் ஒரு பகுதியாகவும் கருதப்படுகின்றன. இதன் வாயிலாக தாவரப் பாதுகாப்பு குறித்த மறைமுகமான சிந்தனையும் வெளிப்படுகிறது.

**விலங்கினப் பன்முகத்தன்மை**

**அருந்தவத்து நோவை முனி வளமா**
**யமைத்த திருப்பேழையுக்குள்**
**விரைந்து விரைந்தணியணியாயாக் கடந்து**
**மிகுந்து வரும் விலங்கினங்கள்**

( ஞானத்தச்ச நாடகம் 2:1:4: 1-4)

ஞானத்தச்ச நாடகத்தில் யானை, சிங்கம், கரடி, ஒட்டகம், மான், குதிரை, பாம்பு உள்ளிட்ட 95-க்கும் மேற்பட்ட விலங்கு இனங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்விலங்குகள் ஒவ்வொன்றும் தனித்துவமான வாழ்வியல் பண்புகளையும், சூழலியல் அமைப்பில் இன்றியமையாத பங்களிப்புகளையும் கொண்டுள்ளன. பல்வேறு விலங்கு இனங்களை முறையாகத் தொகுத்துப் பதிவு செய்திருப்பது, ஆசிரியரின் உயிரியல் அறிவையும் உயிரினப் பன்முகத்தன்மை குறித்த பார்வையையும் வாசகர்களுக்கு எடுத்துக்காட்டுகிறது.

**பறவையினப் பன்முகத்தன்மை**

**சிறந்து சிறந்தே செபங்கள் தினமுஞ்**
**செய்யு நோவை கப்பலுக்குட்**
**பறந்து பறந்தெழுந்து வரும் பல**
**பறவைகளின் வகுப்புதான்**

( ஞானத்தச்ச நாடகம் 2:1:5: 1-4)

ஞானத்தச்ச நாடகத்தில் கொக்கு, நாரை, கிளி, குயில், வாத்து உள்ளிட்ட 93 வகையான பறவைகள் தனித்த வகுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. பல்வேறு பறவை இனங்களை முறையாக வகைப்படுத்திக் குறிப்பிடுவதன் மூலம் ஆசிரியரின் இயற்கையியல் அறிவும், உயிரினப் பன்முகத்தன்மை குறித்த பார்வையும் வெளிப்படுகின்றன. பறவைகள் விதைப்பரவல், மகரந்தச் சேர்க்கைக்கு மறைமுக உதவுதல், பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் சூழலியல் சமநிலையைப் பேணுதல் போன்ற பணிகளில் இன்றியமையாத பங்காற்றுகின்றன. இவ்வாறு ஏராளமான பறவை இனங்களைப் பதிவு செய்திருப்பது, பறவையுலகின் செழுமையையும், இயற்கை வளங்களின் பாதுகாப்பு குறித்த ஆசிரியரின் விழிப்புணர்வையும் வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் பறவைகள் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு இன்றியமையாத உயிரினங்களாகக் கருதப்படுவதோடு, பல்லுயிர்ப் பாதுகாப்பின் அவசியத்தையும் ஞானத்தச்ச நாடகம் மறைமுகமாக வலியுறுத்துகிறது.

**பூச்சியினப் பன்முகத்தன்மை**

**நன்னயஞ்சேர் நோவை முனி செய்த**
**நாவாய் தனிலே யடர்ந்த**
**வன்னவன்னப்பூச்சிகளின் மகிமை**
**வகுப்புகள்தான் அனந்தவிதம்.**
( ஞானத்தச்ச நாடகம் 2:1:6: 1-4)

ஞானத்தச்ச நாடகத்தில் பட்டுப்பூச்சி, நூற்பூச்சி, தெள்ளுப்பூச்சி, தட்டான், வண்டு போன்ற 70 வகையான பூச்சிகளும், 17 வகையான வண்டுகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு பல்வேறு பூச்சி இனங்களைத் தனித்தனியாகப் பதிவு செய்திருப்பது, ஆசிரியரின் இயற்கையியல் அறிவையும் உயிரினங்களின் பன்முகத்தன்மை குறித்த விழிப்புணர்வையும் வெளிப்படுத்துகிறது. பூச்சிகள் மகரந்தச் சேர்க்கை, கரிமப் பொருட்களின் சிதைவு, மண்ணின் வளத்தைப் பேணுதல் மற்றும் உணவுச் சங்கிலியின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துதல் போன்ற சூழலியல் செயல்பாடுகளில் இன்றியமையாத பங்காற்றுகின்றன. மேலும், இலக்கியங்களில் பெரும்பாலும் புறக்கணிக்கப்படும் சிற்றுயிரினங்களாகிய பூச்சிகளுக்கும் இந்நூலில் குறிப்பிடத்தக்க இடம் வழங்கப்பட்டிருப்பது, உயிரினப் பன்முகத்தன்மையை முழுமையாகப் பதிவு செய்யும் ஆசிரியரின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

**நவதானியப் பன்முகத்தன்மை**

**வானபரன் கிருபையினா னோவாவின்**
**மரக்கலத் துளடங்குகின்ற**
**சேனையுயிர்ப் பிராணிகட்கும் பொசிக்கச்**
**சேர்ந்த நவதானியங்கள்.**
(ஞானத்தச்ச நாடகம், 2:1:7: 1–4)

ஞானத்தச்ச நாடகத்தில் நோவாவின் பேழையில் இருந்த உயிரினங்களின் உணவுத் தேவையை நிறைவேற்றுவதற்காக பல்வேறு நவதானியங்கள் சேமித்து வைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலில் 74 வகையான நவதானியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தானியங்கள் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஊட்டச்சத்து வழங்கும் முதன்மை உணவுப் பொருட்களாக மட்டுமன்றி, வேளாண் மரபு, உணவுப் பாதுகாப்பு மற்றும் மரபணுப் பன்முகத்தன்மையின் அடையாளங்களாகவும் விளங்குகின்றன.

பல்வேறு தானிய வகைகளை ஒருங்கிணைத்துக் குறிப்பிடுவதன் வாயிலாக உணவுப் பயிர்களின் செழுமையையும், அவற்றைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் ஆசிரியர் மறைமுகமாக வலியுறுத்துகிறார். மேலும், அனைத்து உயிரினங்களுக்குத் தேவையான உணவு வளங்களை முன்னரே பாதுகாக்கும் சிந்தனை, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு, நவதானியங்களின் பன்முகத்தன்மையைப் பதிவு செய்திருப்பது, ஞானத்தச்ச நாடகத்தில் உயிரினப் பன்முகத்தன்மையுடன் இணைந்து வேளாண் பல்லுயிர்ப் பாதுகாப்பு (Agrobiodiversity) குறித்த சிந்தனையும் இடம்பெற்றிருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

**நீர்வாழ் உயிரினங்களின் பன்முகத்தன்மை**

**ஏகபரனடிய னோவை கப்பல்**
**ஏரிநதி வாரிகடல்**
**வேகமுடன் சுற்றிவரும் நீரில்**
**மிகுத்த பல மச்சவகை.**

( ஞானத்தச்ச நாடகம் 2:1:11: 1-4)

ஞானத்தச்ச நாடகத்தில் ஏரி, நதி, குளம் மற்றும் கடல் போன்ற நீர்நிலைகளில் வாழும் திமிங்கிலம், சுறா, நண்டு, இறால், தவளை உள்ளிட்ட 107 வகையான நீர்வாழ் உயிரினங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு பல்வேறு நீர்வாழ் உயிரினங்களை வகைப்படுத்திக் குறிப்பிடுவதன் வாயிலாக, நீர் சார்ந்த உயிரினங்களின் செழுமையையும் ஆசிரியரின் இயற்கையியல் அறிவையும் அறிய முடிகிறது. நீர்வாழ் உயிரினங்கள் நீர்சார் உணவுச் சங்கிலியை நிலைநிறுத்துதல், ஊட்டச்சத்து சுழற்சியைப் பேணுதல், நீரின் உயிரியல் சமநிலையை உறுதிப்படுத்துதல் மற்றும் நீர்வாழ் சூழலமைப்புகளின் நிலைத்தன்மையைப் பாதுகாத்தல் போன்ற முக்கியமான சூழலியல் பணிகளை மேற்கொள்கின்றன. மேலும், இவ்வுயிரினங்கள் மனிதர்களின் உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரம் மற்றும் இயற்கை வளங்களின் தொடர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன.

**உயிரினப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு**

ஞானத்தச்ச நாடகம் உயிரின அழிவு, சுற்றுச்சூழல் பாதிப்பு போன்ற நவீன பிரச்சினைகளுக்கு முன்னரே உயிரினப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்த்திய இலக்கியமாகத் திகழ்கிறது. உயிரினப் பன்முகத்தன்மையைப் பதிவு செய்துள்ள இலக்கியமாக ஞானத்தச்ச நாடகம் திகழ்வதை இவ்வாய்வு உறுதிப்படுத்துகின்றன. ஒவ்வொரு உயிரினமும் இயற்கைச் சூழலின் சமநிலையைப் பேணுவதில் தனித்துவமான பங்களிப்பைக் கொண்டுள்ளது என்பதை ஆசிரியர் மறைமுகமாக உணர்த்துகிறார். இவ்வகைப்பாடுகள் இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும், உயிரினங்கள் ஒன்றோடொன்று சார்ந்து வாழும் வாழ்வியல் அமைப்பையும் வெளிப்படுத்துகின்றன. இதன் வாயிலாக ஞானத்தச்ச நாடகம் சமயக் கருத்துக்களை மட்டுமன்றி, உயிரினப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் பல்லுயிர்ப் பாதுகாப்பு குறித்த முன்னோக்கிய சிந்தனைகளையும் உள்ளடக்கிய இலக்கியமாக விளங்குகிறது.

**முடிவுரை**

தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் ஞானத்தச்ச நாடகம் சமய இலக்கியமாக மட்டுமன்றி, உயிரினங்களின் பன்முகத்தன்மையை ஆவணப்படுத்தும் முக்கியமான இலக்கியப் பதிவாகவும் விளங்குகிறது என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது. நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு நிகழ்வை மையமாகக் கொண்டு மரங்கள், விலங்குகள், பறவைகள், பூச்சிகள், நவதானியங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றின் விரிவான பட்டியலை ஆசிரியர் பதிவு செய்திருப்பது, இயற்கை உலகின் செழுமையையும், உயிரின வகைப்பாடு குறித்த அவரது நுண்ணறிவையும் வெளிப்படுத்துகிறது. மேலும், உயிரினங்கள் வாழிடம் மற்றும் இயற்கைச் சூழலோடு தொடர்புபடுத்தப்பட்ட விதம், நவீன உயிரியல் அறிவியலில் வலியுறுத்தப்படும் பல்லுயிர்ப் பாதுகாப்பு, சூழலியல் சமநிலை மற்றும் உயிரியல் வகைப்பாட்டியல் போன்ற கருத்துகளுடன் ஒத்திசைவாக அமைந்துள்ளது.

இவ்வாய்வு, ஞானத்தச்ச நாடகம் உயிரினப் பாதுகாப்பு மற்றும் படைப்புலகைப் பேணுதல் குறித்த கிறித்தவ இறையியல் சிந்தனைகளை வெளிப்படுத்துவதோடு, மனிதனும் இயற்கையும் ஒன்றையொன்று சார்ந்த வாழ்வியல் அமைப்பில் இணைந்திருப்பதை வலியுறுத்தும் சூழலியல் நோக்கையும் கொண்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது. இதன் வாயிலாகத் தமிழ்க் கிறித்தவ இலக்கியங்களில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் உயிரினப் பன்முகத்தன்மை குறித்த ஆய்வுகளுக்கான புதிய பரிமாணம் உருவாகிறது. எனவே, இலக்கியம், உயிரியல், சுற்றுச்சூழலியல் மற்றும் இறையியல் ஆகிய துறைகளை ஒருங்கிணைக்கும் பல்துறை ஆய்வுகளுக்கு ஞானத்தச்ச நாடகம் வளமான முதன்மை ஆதாரமாக விளங்கும் என்பதையும் இவ்வாய்வு உறுதிப்படுத்துகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. வேதநாயக சாஸ்திரியார், ஞானத்தச்ச நாடகம், தஞ்சை, 1908.
2. Biodiversity in plants and animals, https://byjus.com/biology/biodiversity-in-plants-and-animals/ , Accessed on june 17,2026.
3. Debabrata Das (Ed), Fundamentals of Biodiversity, Bharti Publications, 2022.
4. Vinod Kumar, Biological Diversity: Current Status and Conservation Policies (Vol. 1), AEM – AESA,2021.
5. Wilson E.O. (Ed), Biodiversity, National Academy Press, Washington, D.C. 1988.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 26.பெரியபுராணத்தில் சுற்றுச்சூழல் சிந்தனைகள்

**சி. பொன் சங்கர்,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
தன்னாட்சிக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620002
அலைபேசி எண் – 9486903284, மின்னஞ்சல் - ponsankarraja@gmail.com
**நெறியாளர்: முனைவர் ம. பிரேமா,**
தமிழாய்வுத்துறை, உதவிப்பேராசிரியர், புனித சிலுவை, திருச்சிராப்பள்ளி -620002
அலைபேசி எண் – 9942106490, மின்னஞ்சல் - premasoosairaj@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

பக்தி இலக்கியமாக விளங்கும் பெரியபுராணம், சமயக் கருத்துக்களை மட்டுமல்லாது இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது. பெரியபுராணத்தில் காணப்படும் ஐம்பூதச் சிந்தனை, நிலவளம், நீர்வளம், மரங்கள் மற்றும் நந்தவனங்கள், உயிரினப் பாதுகாப்பு, கோயில்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய கருத்துகள் மிகுந்து காணப்படுகின்றன. ஆகையால் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள சுற்றுச்சூழல் சார்ந்த சிந்தனைகளை சமூகத்திற்கு வெளிக்கொணரும் வகையில் இவ் ஆய்வு அமைகின்றது.

**"பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்"** என்ற பாடலின் வழி இயற்கையின் அடிப்படைக் கூறுகளான ஐம்பூதங்களின் முக்கியத்துவம் விளக்கப்படுகிறது. **"காடெல்லாம் கழைக்கரும்பு"** என்ற பாடல் நில வளத்தையும் வேளாண் செழிப்பையும் எடுத்துரைக்கிறது. **"வாவியின் பொலி நாடுவளம் தரக் காவிரிப் புனல்கால் பரந்து ஓங்குமால்"** என்ற பாடல் நீர்நிலைகளின் வளத்தையும் பயன்பாட்டையும், உயிரினங்களின் மீதான கருணை உணர்வையும் வெளிப்படுத்துகிறது. மேலும், நந்தவனப் பராமரிப்பு மற்றும் மலர்த் தொண்டு பற்றிய குறிப்புகள் கோயில்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையங்களாக விளங்கியதை எடுத்துக்காட்டுகின்றன.

இவ்ஆய்வின் முடிவாக, பெரியபுராணம் இயற்கையை இறைவனின் படைப்பாகக் கருதி அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையை வலியுறுத்துகிறது என்பது கண்டறியப்படுகிறது. நிலம், நீர், மரங்கள் மற்றும் உயிரினங்கள் பாதுகாப்பது மனிதனின் கடமை என்பதை பெரியபுராணம் மறைமுகமாக உணர்த்துகிறது. இக்கருத்துகள் இன்றைய சுற்றுச்சூழல் சிக்கல்களுக்கு பொருத்தமான வழிகாட்டுதலாக அமைகின்றன.

**முன்னுரை:**

பக்தி இலக்கியங்கள் சமய உணர்வுகளை மட்டுமல்லாது சமூக, பண்பாட்டு மற்றும் இயற்கை சார்ந்த வாழ்வியல் நெறிகளையும் எடுத்துரைக்கின்றன. அவற்றுள் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் சிறப்புமிக்க இடத்தைப் பெறுகிறது. சோழ மன்னன் அநபாய சோழனின் வேண்டுகோளுக்கிணங்க கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இந்நூல், அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றை எடுத்துரைக்கிறது. நாயன்மார்களின் பக்திச் சிறப்புகளைப் போற்றும் இந்நூலில் இயற்கை, நிலவளம், நீர்வளம், மரங்கள், சோலைகள், உயிரினங்கள் ஆகியவற்றின் சிறப்பு பெரும்பான்மையாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் பெரியபுராணம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வெளிப்படுத்தும் முக்கியமான இலக்கியமாக விளங்குகிறது.

**சுற்றுச்சூழல் - விளக்கம்**

மனிதனைச் சுற்றியுள்ள இயற்கைக் கூறுகளின் தொகுப்பே சுற்றுச்சூழல் எனப்படுகிறது. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களும் சுற்றுச்சூழலின் அடிப்படைக் கூறுகளாகும். இவை சமநிலையில் இயங்கும்போது உயிரினங்களின் வாழ்வு பாதுகாக்கப்படுகிறது. தமிழர்

பண்பாட்டில் இயற்கையும் மனித வாழ்வும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாகக் கருதப்பட்டுள்ளது

**ஐம்பூதங்களும் இறைநெறியும்:**

சைவசமய மரபில் சிவபெருமான் ஐம்பூதங்களின் தலைவனாகக் கருதப்படுகிறார். உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்ற கருத்து சைவ சித்தாந்தத்தில் வலியுறுத்தப்படுகிறது. பெரியபுராணத்தில்இ

**“பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்**
**மாதோர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்**
**ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்**
**கோதிலாத குணப் பெருங் குன்றனார்”**

- **(திருத்தொண்டர் புராணம் - திருக்கூட்டச் சிறப்பு - பாடல் எண் : 142.)**

என்ற பாடல் ஐம்பூதங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. இயற்கைக் கூறுகள் மாறினாலும் இறைவனை நினைக்கும் அடியார்களின் பக்தி நிலைத்திருக்கும் எனப் பாடல் கூறுகிறது. இதன் மூலம் இயற்கையும் இறைநம்பிக்கையும் இணைந்த வாழ்வியல் வெளிப்படுகிறது.

இப்பாடலில், ஐம்பூதங்கள் தங்கள் இயல்பிலிருந்து மாறினாலும் சிவபெருமானின் திருவடியை அடியார்கள் மறக்கமாட்டார்கள் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் இயற்கைக் கூறுகளின் இருப்பினையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் மறைமுகமாக உணரமுடிகின்றது.

**நில வளமும் வேளாண் செழிப்பும்:**

பெரியபுராணத்தில் நில வளத்தின் முக்கியத்துவம் பல இடங்களில் எடுத்துரைக்கப்படுகிறது. குறிப்பாக சோழநாட்டின் செழுமையை வருணிக்கும் போது சேக்கிழார் வயல்வெளிகள்இ கரும்புத் தோட்டங்கள் மற்றும் விளைநிலங்களின் வளத்தைச் சிறப்பாகப் பதிவு செய்கிறார்.

**“காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு**
**மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை**
**கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன**
**நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலம் எல்லாம்”**

- **(திருத்தொண்டர் புராணம் - திருநாட்டுச் சிறப்பு - பாடல் எண்: 67)**

என்ற பாடல் சோழநாட்டின் வேளாண் வளத்தையும் நிலத்தின் செழிப்பையும்இநிலம் உயிர்களின் வாழ்வாதாரமாக விளங்குவதையும்இ வேளாண்மை சமூக வளர்ச்சியின் அடித்தளமாக அமைவதையும் உணர்த்துகிறது. எனவே நில வளத்தைப் பாதுகாப்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கிய அம்சமாகும் என்பதை பெரியபுராணம் மறைமுகமாக வலியுறுத்துகிறது.

**“மேகமும் களிறும் எங்கும் வேதமும் கிடையும் எங்கும்**
**யாகமும் சடங்கும் எங்கும் இன்பமும் மகிழ்வும் எங்கும்**
**யோகமும் தவமும் எங்கும் ஊசலும் மறுகும் எங்கும்**
**போகமும் பொலிவும் எங்கும் புண்ணிய முனிவர் எங்கும்”**

- **(திருத்தொண்டர் புராணம் - திருநாட்டுச் சிறப்பு - பாடல் எண்: 81)**

இப்பாடலில் சோழநாட்டின் வளமும் செழிப்பும் எடுத்துரைக்கப்படுகிறது. வேளாண் வளத்தால் ஏற்பட்ட சமூக வளமும் இதில் வெளிப்படுகிறது.

**நீர்நிலைகளின் சிறப்பு:**

பெரியபுராணத்தில் ஆறுகள், குளங்கள், ஏரிகள், பொய்கைகள், தீர்த்தங்கள் பற்றிய குறிப்புகள் ஏராளமாக உள்ளன. குறிப்பாக காவிரி நதி பல இடங்களில் வருணிக்கப்படுகிறது. நீர்வளம் நிறைந்த ஊர்களே வளமான சமூக வாழ்வை உருவாக்குகின்றன.கோயில்களைச் சுற்றி குளங்கள் அமைத்தல், தீர்த்தங்களைப் பராமரித்தல், நீர்நிலைகளைத் தூய்மையாக வைத்தல் போன்ற

மரபுகள் நீர் பாதுகாப்பின் அவசியத்தை உணர்த்துகின்றன. இன்றைய காலக்கட்டத்தில் நீர்நிலைகள் அழிந்து வரும் நிலையில், பெரியபுராணத்தின் இக்கருத்துகள் உற்றுநோக்கத்தக்க வகையில் உள்ளன.

பெரியபுராணத்தில் நீர்நிலைகள் உயிர்களின் வாழ்வாதாரமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, காவிரி நதியின் பெருமையும் அதனால் பெருகிய வேளாண் வளமும் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“பொன்னிநீர் நாட்டில் நீடும் பொற்பதி புவனத்து உள்ளோர் "**

- **(திருத்தொண்டர் புராணம் - சிறப்புலி நாயனார் புராணம் - பாடல் எண்: 3659)**

என்ற பாடல் காவிரி நீரால் செழித்த சோழ நாட்டின் வளத்தை எடுத்துரைக்கிறது. மேலும்,

**“வாவியின் பொலி நாடுவளம் தரக்
காவிரிப் புனல்கால் பரந்து ஓங்குமால்"**

- **(திருத்தொண்டர் புராணம் - திருநாட்டுச் சிறப்பு - பாடல் எண்: 59)**

என்ற பாடல் குளங்கள் (வாவி), காவிரி போன்ற நீர்நிலைகளின் இயற்கை அழகையும் பயனையும் (நாடுவளம் தர) விளக்குகிறது. இவ்வாறு நீர்வளத்தைப் பாதுகாத்து பயன்படுத்திய தமிழர்களின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை பெரியபுராணம் வெளிப்படுத்துகிறது.

மரங்களும் சோலைகளும்:

பெரியபுராணத்தில்,

“பூம்பொழில்” -

**“ சூத பாடலங்கள் எங்கும் சூழ்வழை ஞாழல் எங்கும்
சாதி மாலதிகள் எங்கும் தண்தளிர் நறவம் எங்கும்
மாதவி, சரளம் எங்கும், வகுள சண்பகங்கள் எங்கும்
போது அவிழ் கைதை எங்கும், பூக, புன்னாகம் எங்கும்**

- **(திருத்தொண்டர் புராணம் - திருநாட்டுச் சிறப்பு - பாடல் எண்: 79)**

இப்பாடலில் பாதிரிப்பூ (பாடலம்), புன்னைப் பூ (வழை), புலிநகக் கொன்றைப் பூ ( மயிற்கொன்றைப் பூ (பொன்னாவரசு மரம் (ஞாழல்), சிறுசண்பகம், மல்லிகை, காட்டுமல்லிகை( மாலதி), நறவம் (ஞாழல்), மாதவிப் பூ (மாதவிப் பந்தரில் பூக்கும் பூ ), சிவதைக் கொடிப் பூ (சரளம்), மகிழம்பூ (வகுள), சண்பகப் பூ, மடல்கள் விரிந்த தாழம்பூ (போதவிழ் கைதை ), கமுகம் பூ (பூக), புன்னாகம் பூ போன்ற மலர்கள் பூத்துக் குலுங்குவதாக சோழ நாட்டை வருணிக்கிறார் சேக்கிழார்.

**“மலர்ச் சோலை ” -**

**“நாளிகேரம், செருந்தி, நறுமலர் நரந்தம் எங்கும்
கோளி சாலந்த மாலம், குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம், எங்கும்
நீள்இலை வஞ்சி, காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும்”**

- **(திருத்தொண்டர் புராணம் - திருநாட்டுச் சிறப்பு - பாடல் எண்: 78)**

இப்பாடலில் தென்னை, சிலந்திமரம், செருந்தி (மணித்தக்காளிச் செடி, வாட்கோரைப்புல் ), நாரத்தை மரம், ஆலமரம், குங்குமமரம் (மாலம்), குராமரம், இபனை மரம் ( தாளி ), இளம்பனைமரம் (போந்து), சந்தனமரம் (சந்து), புன்னைமரம் (நாகம்) போன்ற மரங்களின் தொகுப்பும் அம்மரங்களில் பூத்துக் குலுங்கும் பூவும் (உதாரணமாக: கொடிகளில் பூக்கும் பூவான

வஞ்சிப்பூ, மரங்களில் பூக்கும் பூவான காஞ்சி, கோங்கம் பூ (நெல்லிமரங்களில் பூக்கும் பூ ) நிறைந்த பகுதியாக திருநாட்டை (சோழ நாட்டை) வருணிக்கிறார் சேக்கிழார்.

மேலும் தென்னை (நாளிகேரம்), செருந்தி, நரந்தம், குரவம், நாகம், வஞ்சி, காஞ்சி, கோங்கு போன்ற பல்வேறு மரங்களும் மலர்ச்செடிகளும் நிறைந்த இயற்கைச் சூழல் சித்தரிக்கப்படுகிறது. ஒரு பகுதியின் சுற்றுச்சூழல் வளத்தை விளக்கும்போது அங்குள்ள உயிரியல் பன்முகத்தன்மையை **(Biodiversity)** சேக்கிழார் பதிவு செய்துள்ளார். மரங்களும் மலர்களும் வெறும் அழகியல் கூறுகளாக அல்லாமல், மனித வாழ்வையும் சமயப் பண்பாட்டையும் தாங்கும் இயற்கை வளங்களாகக் கருதப்பட்டுள்ளன. இதன் மூலம் மரவளப் பாதுகாப்பும் தாவரப் பன்மையும் அக்காலச் சமூக வாழ்வின் ஓர் அங்கமாக இருந்ததை அறிய முடிகிறது.

"பைம்பொழில்", "வண்டினம் பாடும் சோலை" போன்ற இயற்கை வருணனைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. கோயில்களைச் சுற்றி நந்தவனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. வழிபாட்டிற்குத் தேவையான மலர்களை வளர்ப்பது ஒரு புனிதப் பணியாகக் கருதப்பட்டது.

மரங்கள் மழையை ஈர்க்கின்றன, காற்றைத் தூய்மைப்படுத்துகின்றன, உயிரினங்களுக்கு வாழ்விடமாக அமைகின்றன. இத்தகைய மரங்களின் அவசியத்தை சேக்கிழார் வருணனைகள் வாயிலாக நமக்குப் புரியவைக்கிறார்.

**உயிரினங்களின் பாதுகாப்பு:**

சுற்றுச்சூழலின் முக்கிய அங்கமாக உயிரினங்கள் விளங்குகின்றன. மனிதன் மட்டுமன்றி அனைத்து உயிர்களும் இவ்வுலகில் வாழும் உரிமை பெற்றவை என்ற சிந்தனை சைவ சமயத்தில் வலியுறுத்தப்படுகிறது. பெரியபுராணத்தில் நாயன்மார்களின் வாழ்க்கை நிகழ்வுகள் வழியாக உயிரினங்களின் மீது அன்பும் கருணையும் செலுத்த வேண்டும் என்ற கருத்து வெளிப்படுகிறது.

திருமூல நாயனார் வரலாற்றில், இறந்து கிடந்த இடையனின் உடலைக் கண்ட பசுக்கள் துயருற்று அழுதன. அவற்றின் துயரத்தைப் போக்குவதற்காகத் திருமூலர் அருளோடு சிந்தித்தார். இதனைச் சேக்கிழார்,

**"மற்றுஅவன்தன் உடம்பினைஅக் கோக்குலங்கள் வந்துஅணைந்து**
**சுற்றிமிகக் கதறுவன சுழல்வன மோப்பன ஆக**
**நற்றவயோகியார் காணா நம்பர் அருளாலே ஆ**
**உற்ற துயர் இவைநீங்க ஒழிப்பன் எனஉணர்கின்றார்"**

- **(திருத்தொண்டர் புராணம் - திருமூல நாயனார் புராணம் - பாடல் எண்: 3580 )**

என்று அப்பசுக்கள் அடைந்த துயரத்தை நான் ஒழிப்பேன் என்று தீர்மானித்த திருமூலர் இடையனான மூலனின் உடலுக்குள் செல்கிறார் என்று குறிப்பிடுகிறார் சேக்கிழார்.பசுக்களின் துயரத்தை உணர்ந்து அவற்றின் நலனுக்காகச் செயல்படும் கருணைமிக்க மனப்பான்மையையும் உயிரினங்களின் உணர்வுகளையும் அவற்றின் வாழ்வுரிமையையும் மதிக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையும் புலனாகின்றது மேலும் அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும் என்ற சுற்றுச்சூழல் சார்ந்த உயரிய கருத்துகளை எடுத்துரைக்கும் இலக்கியம் என்பதும் தெளிவாகின்றது.

**கோயில்களும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்:**

பெரியபுராணக் காலத்தில் கோயில்கள் வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையங்களாகவும் விளங்கி இருந்திருக்கின்றன. கோயில்களைச் சுற்றி மரங்கள் வளர்க்கப்பட்டன. நந்தவனங்கள் அமைக்கப்பட்டன. குளங்கள் பராமரிக்கப்பட்டன. இதன் மூலம் இயற்கை வளங்களும் சமய வாழ்வும் ஒன்றிணைந்திருந்தது புலனாகின்றது

அப்பர் செய்த உழவாரப் பணியும், தண்டியடிகள் செய்த உழவாரப் பணியும் நாயன்மார்கள் பலரும் கோயில்களைத் தூய்மைப்படுத்தும் பணியினை செய்திருக்கின்றனர். இறையடியார்கள் கோயில்களைச் சுற்றி நந்தவனங்கள் அமைத்துப் பராமரித்தல், மலர்களை

வளர்த்தல் போன்ற பணிகளை இறைத்தொண்டாகக் கருதினர். முருக நாயனார் பற்றிக் கூறும்போது சேக்கிழார்,

**"அடைமேல் அலவன்துயில்உரை அலர்செங்கமல வயல்கயல்கள்**
**மடைமேல் உகளும் திருப்புகலூர் மன்னிவாழும் தன்மையராய்**
**விடைமேல் வருவார்க்குஆளான மெய்மைத் தவத்தான் அவர்கற்றைச்**
**சடைமேல் அணியத் திருப்பள்ளித் தாமம் பறித்துச் சாத்துவார்.**

- **(திருத்தொண்டர் புராணம் - முருக நாயனார் புராணம் - பாடல் எண்: 1027)**

என்ற பாடலில் இலை மேல் நண்டு உறங்குவதாகவும், நீரின் மேல் சிவந்த தாமரை மலர் சூழ்ந்த வயல்வெளியும் ஓடையின் மேல் துள்ளிக்குதித்து விளையாடும் மீன்களும் உடையது. திருப்புகலூர் என்று சித்திரிக்கப்படுகின்றது. ஓர் ஊரை இயற்கையோடு வர்ணிக்கும் போதே அவ்வூரை அழகாக்குவது சுற்றுப்புறச் சூழல் என்பது தெளிவாகின்றது.

அடுத்ததாக, அவ்வூரில் நிலைத்து வாழும் (மண்ணில் வாழும்) தன்மை உடையவரும் விடைமேல் வரும் சிவபெருமானுக்கு ஆளான உண்மையான தொண்டனான (மெய்மைத் தவத்தான் - முருக நாயனார் ) திரண்ட முடியுடைய சிவபெருமான் முடிமேல் அணிய திருப்பள்ளி (கோயிலைச் சுற்றியுள்ள தோட்டம் ) சென்று மாலை ( தாமம் ) அணிவிப்பார் என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

இதன்மூலம் கோயில்கள் சுற்றுச்சூழல் காப்பகமாக இருந்தது என்பது புலனாகிறது. மேலும், கணநாத நாயனார்,

**"நல்லநந்தன வனப்பணி செய்பவர் நறுந்துணுர்மலர் கொய்வோர்"**

- **(திருத்தொண்டர் புராணம் - கணநாத நாயனார் புராணம் - பாடல் எண்: 3930 - )**

என்று தொடங்கும் பாடலானது நந்தவனங்களை உருவாக்கி பராமரித்தமைக்குச் சான்றளிக்கின்றது.

**முடிவுரை:**

பெரியபுராணம் பக்தி இலக்கியமாக விளங்குவதோடு சுற்றுச்சூழல் சார்ந்த வாழ்வியல் சிந்தனைகளையும் வெளிப்படுத்துகிறது. ஐம்பூதங்களின் சிறப்பு, நில வளத்தின் அவசியம், நீர்நிலைகளின் முக்கியத்துவம், மரங்கள் மற்றும் சோலைகளின் பெருமை, உயிரினங்களின் பாதுகாப்பு ஆகிய கருத்துகள் இந்நூலில் பல இடங்களில் காணப்படுகின்றன. இயற்கையை இறைவனின் அருட்கொடையாகக் கருதி அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையை பெரியபுராணம் வலியுறுத்துகிறது. எனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை வளர்க்கும் இலக்கியமாகவும் பெரியபுராணம் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

தற்போது உலகம் சுற்றுச்சூழல் மாசுபாடு, நீர் பற்றாக்குறை, காடழிப்பு, உயிரின அழிவு போன்ற பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வருகிறது. இந்நிலையில் இயற்கையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற பெரியபுராணத்தின் சிந்தனைகள் மிகவும் பொருத்தமானவை. நிலம், நீர், மரங்கள், உயிரினங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பது மனித குலத்தின் கடமை என்பதை இந்நூல் எடுத்துரைக்கிறது.

**துணை நூற்பட்டியல்:**

1. சேக்கிழார், பெரியபுராணம் (மூலமும் உரையும்), கழக வெளியீடு, சென்னை.
2. மு. வரதராசன், **தமிழ் இலக்கிய வரலாறு**, சாகித்திய அகாதெமி, புதுதில்லி.
3. அ. ச. ஞானசம்பந்தன், **பெரியபுராணம் – ஓர் ஆய்வு**, கங்கை புத்தக நிலையம், சென்னை.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 27.திருப்பாவையில் இயற்கைவளங்களும் இறைவழிபாடும்

**முனைவர் ரா.ராஜலெட்சுமி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் அறிவியல் புலம்
தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம்
EMAL ID:rajijagan87@gmail.com, ORC ID ; https://orcid.org/0000-0003-3209-7372

**ஆய்வுச்சுருக்கம்:**

ஆதிமனிதனின் வாழ்வு இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்வாகும். தமிழர் மரபில் இயற்கையும் இறைவழிபாடும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. இயற்கை வளங்கள் மனித வாழ்வின் அடிப்படைச் செல்வங்களாகும். நிலம் , மலைகள் , நிலவு , மலர்கள் , புல்வெளிகள் , நதிகள் , மழை போன்ற அனைத்தும் இயற்கை நமக்கு அளித்த விலைமதிப்பற்ற பரிசுகளாகும். இவ்வளங்கள் மனிதனின் வாழ்வாதாரத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் சுற்றுச்சூழல் சமநிலைக்கும் இன்றியமையாதவை. பண்டைத் தமிழர்கள் தங்கள் பழக்க வழக்கங்களை ஒட்டியே தாங்கள் நம்பிய கடவுளர்களையும் வழிபட்டு வந்தனர். தமிழ்நாட்டில் நிலவிய சமயவாழ்க்கை ஒரு தனிச்சிறப்புடன் நிலவியது. தெய்வக்கோட்பாடு என்பது மக்களிடையே வேரூன்றி வந்துள்ள ஒரு பண்பாகும். மனித சக்திக்கும் மேற்பட்ட மற்றொரு சக்தி உலகை ஆட்டிப்படைப்பதாக அவர்கள் கருதினர். உலகில் நிகழும் நன்மைக்கும் தீமைக்கும் முதற்காரணமாக இருப்பது தெய்வசக்தி தான் என எண்ணியதால் எந்த வினையிலும் முதலில் தெய்வத்தை போற்றும் பண்பை மேற்கொண்டனர். சங்கத்தமிழ்மாலை எனப் பாராட்டப்படும் திருப்பாவையில் பக்தி மட்டுமின்றி இயற்கை அழகும் கற்றாரை மயக்கும் வகையில் அமைந்துள்ளது. அத்தகைய சிறப்பிற்குரிய திருப்பாவையில் அமைந்துள்ள இயற்கை வளங்களையும் இறைவழிபாட்டையும் இக்கட்டுரை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

**முன்னுரை**

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம் ஆகும்.பல்லவர்காலத்தில் வைணவம் உச்சநிலை கண்டது. பன்னிரு ஆழ்வார்கள் வைணவத்தால் தமிழையும் தமிழால் வைணவத்தையும் வளர்த்தார்கள். இவர்கள் வைணவர்களின் சமயக் குறவர்களாவர். ஆழ்வார்களின் பாடல்கள் அடங்கிய தொகுப்பு 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' ஆகும். பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான பெண் ஆழ்வாரே ஆண்டாள் ஆவார்.அவர் எழுதிய நூலே 'திருப்பாவை'ஆகும். திருப்பாவைக்கு ஆண்டாள் வைத்த பெயர் 'சங்கத் தமிழ் மாலை முப்பது'. எனவே திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டது. திருப்பாவையே வேதம் அனைத்திற்கும் வித்து என்று இராமானுஜரால் புகழ்ப்பெற்ற சிறப்பிற்குரியது. திருமாலைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் பாவித்து ஆண்டாள் பாடிய பாடல்களே திருப்பாவையாகும். மார்கழியில் திருப்பாவை பாடும் பாவையர் தை மாதம் திருமணம் ஆகப் பெறுவர் என்பது வைணவர்களின் நம்பிக்கை. இத்தகு சிறப்பிற்குரிய திருப்பாவையில் அமைந்திருக்கும் இயற்கைவளங்களும் இறைவழிபாடும் பற்றிய செய்திகளை இக்கட்டுரை எடுத்துயம்புகிறது.

**திறவுச் சொற்கள்:**

பாவைநோன்பு - தடாகம் - ஆலிலை - வான்மழை - மும்மாரி - கொட்டும்பனி - வாமன அவதாரம்.

**நிலவு சித்தரிப்பு**

இயற்கையின் படைப்புகளில் அற்புதமும் அதிசயமும் வாய்ந்தது நிலவு. இரவு நேரங்களில் நிலவை உற்று அதன் அழகை கவனித்தால் மனிதனின் மனக்கவலைகள் எல்லாம் மறைந்துபோகும். குழந்தைகளுக்குப் பிடித்தமான ஒரு விளையாட்டு பொருள் 'நிலவு'. தாய் தன் பிள்ளைக்கு நிலவைக் காட்டியே சோறு ஊட்டுவாள். காதலிக்கும் காதலன் நிலவை காதலியுடன் ஒப்பிட்டுக் கூறுவான். இத்தகைய சிறப்பு வாய்ந்தது நிலவு. மேலும் நிலவுக்கே உரிய தத்துவம் வளர்வதும் தேய்வதும் ஆகும். தேய்ந்த நிலையை 'அமாவாசை'என்றும் நிலவு முழுவடிவத்துடன் இருப்பதை 'பௌர்ணமி' என்றும் நாம் கொண்டாடி வருகிறோம். முழுநிலா ஒளிவீசும் நாளினை நல்ல நாள் என்று திருப்பாவை குறிப்பிடுகின்றது.

**"மார்கழி திங்கள் மதிநிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமீனோ நேர் இழையீர் '' 1 (பா.எண்-1)**

என்று பாவை நோன்பின் பொருட்டு முழுநிலவு ஒளிவீசும் இந்நன்னாளில் அதிகாலையில் சென்று நீராடச் செல்வோம் வாருங்கள் என்று ஆண்டாள் தன் தோழிமார்களை அழைக்கிறாள்.

**மலர்கள் சித்தரிப்பு**

இயற்கையின் படைப்புகள் அனைத்துமே மனதை மயக்கும் தன்மை வாய்ந்தவை. இருப்பினும் மலர்களைப் பார்த்தால் நம் முகத்தில் எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படும். உடனே அதனை தொட்டுப் பார்த்தும் தலையில் சூடிக்கொண்டும் ஆனந்தமடைவோம். எல்லையில்லா மகிழ்ச்சியைத் தரும் மலர்கள் அதிகாலையில் மலரும். மாலையில் வாடிவிடும். ஒருநாள் வாழ்வென்றாலும் நாம் அனைவருக்கும் நிறைவான இன்பத்தை அளிக்கிறது. அதிகாலையில் மலர்கள் மலர்வதை

**"உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்**
**செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய்கூம்பினகாண்" 2 (பா.எண்-14)**

என்றுரைக்கப்பட்டுள்ளது. அதாவது தோழியே உங்கள் வீட்டின் பின்வாசலிலுள்ள தோட்டத்து தடாகத்தில் செழுங்கழுநீர்மலர்கள் மலர்ந்து விட்டன. ஆம்பல்மலர்கள் தலைகவிழ்ந்தன. நீ இன்னும் துயிலிலிருந்து எழுந்து வரவில்லையே என்று மலர்கள் மலர்ந்த நிலையை இப்பாடல்வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

**இரவு சித்தரிப்பு**

மனதிற்கு இதமான ஒரு மகிழ்வை தரும் பொழு இரவு நேரமாகும். இரவு நேரத்தில் எந்த விதமான சலனமும் இன்றி அனைவரும் உறங்கி ஓய்வெடுக்கும் நேரமாகும். அத்தகைய இரவு நேரத்திலேயே கண்ணன் பிறந்தான். கம்சனின் பார்வைக்கு எட்டாமல் வாசுதேவர் கண்ணனை இரவோடு இரவாக யசோதையிடம் சென்றடைய செய்தார்.

**"ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்**
**ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்" 3 (பா.எண்-25)**

என்று நள்ளிரவில் கம்சன் உறங்கியதால் அவனுக்கு தெரியாமல் கண்ணனை காப்பாற்றினார்.

**மலை சித்தரிப்பு**

வானைத் தொடும் வகையில் அமைந்திருக்கும் இயற்கையின் அற்புதமே மலையாகும். உயர்வான சிந்தனைக்கும் உயர்வான வாழ்க்கைக்கும் நம் முன்னோர்கள் மலையை ஒப்பிட்டே வாழ்த்துவர். அம்மலையில் ஏராளமான உயிரினங்கள் உயிர் வாழ்கின்றன. பல விலங்குகள் மழையில் நனையாமலும் வெயிலில் வாடாமலும் இருக்க மலையிலுள்ள குகையில் தங்கியிருக்கும். அவ்வாறாக சிங்கம் மலைக் குகையில் தங்கியிருந்து வெளிவரும் காட்சி திருப்பாவையில் இடம்பெற்றுள்ளது.

**"மாரி மலைமுழைஞ்சில் மன்னக் கிடத்துறங்கும்**
***சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து*** **" 4 (பா.எண்-23)**

என்று மலை பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளது.

**கடல் சித்தரிப்பு**

பரந்து விரிந்து காணப்படும் தன்மையுடையது கடல். ஓய்வின்றி உற்சாகமாய் கரையைத் தொட்டு விட்டு செல்லும் கடல் அலைகள். அந்த இடத்தை விட்டு அகல மனம் ஏற்காது. அலையை இரசிப்பதையே மனம் நாடும். அக்கடல் அலையின் நடுவே திருமால் மிதந்து கிடக்கிறார் என்று திருப்பாவை உணர்த்துகிறது.

**"கோல விளக்கே கொடியே விதானமே**
**ஆலின் இலையாய் !அருளேலோர் எம்பாவாய்" 5 (பா.எண்-26)**

என்ற வரிகள் பெரிய கடலின் ஆலிலையில் மிதப்பவன் பெருமாள் என்றுரைக்;கப்பட்டுள்ளது.

**மேகம் சித்தரிப்பு**

மழைப்பெய்வதற்கு அறிகுறியாக மேகங்கள் திரண்டு நிற்கும் அவ்வாறு திரண்டு நின்ற மேகங்கள் நமக்கு மழையைக் கொடுக்கும். மழையால் மண்ணில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் பயன்பெறும். மேகமானது கடல் நீரையெல்லாம் முகந்துக்கொண்டுச் சென்று மழையைக் கொடுக்கும். இந்நிகழ்வை ஆண்டாள் தம் பாடல்களில் குறிப்பிடுகின்றார்.

**"ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்**
**ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி**
**ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்**
**பாழியந் தோளுடைப் பற்பநா பண்கையில்**
**ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து**
**தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்**
**வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்**
**மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்" 6 (பா.எண்-4)**

மேகத்திற்கு அதிபதியான ப்ரஜந்யனே! நாங்கள் சொல்வதைக் கேள். உன்னிடம் ஒரு சொட்டு தண்ணீரைக்கூட வைத்துக் கொள்ளாதே கடல் நீர் முழுவதையும் முகர்ந்து கொண்டு மேலே சென்று உலகாளும் முதல்வனாகிய கண்ணனின் நிறம் போல் கறுத்து வலிமையான தோள்களையுடைய பத்மநாபனின் கையிலுள்ள பிரகாசமான சக்கரத்தைப் போல் மின்னலை வீசி வலம்புரி சங்கு ஒலிப்பது போல் இடி ஒலியெழுப்பி வெற்றியை மட்டுமே ஈட்டும் அவனது சாரங்கம்; என்னும்

வில்லிலிருந்து புறப்படும் அம்புகளைப் போல் மழைபொழிவாயாக! அம்மழையால் நாங்கள் இவ்வுலகில் மகிழ்வுடன் வாழ்வோம். மார்கழி நீராடலுக்காக எல்லா நீர்நிலைகளையும் நிரம்பி எங்;களை மகிழ்ச்சியடைச் செய்வாயாக என்று திருமாலிடம் ஆண்டாளும் அவள் தோழிமார்களும் முறையிடுகின்றனர்.

**மழை சித்தரிப்பு**

மண்ணில் தோன்றிய உயிர்கள் அனைத்தையும் வளமுடன் வாழச்செய்வது மழையாகும். மழைவளம் பெருகினால் விலங்குகளும் உனவைப் பெற்று வாழும். மனிதர்களும் உணவைப்பெற்று உடல் ஆரோக்கியத்துடன் வாழ்வர்.மேலும் உழவுத் தொழில் செய்யும் விவசாயிகளும் மிகுந்த பயனை அடைவர் . மழை வளத்தினால் ஏற்படும் பயனை திருப்பாவை மிக அழகாக எடுத்துரைக்கிறது.

**“ ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்**
**தீங்கின்றி நாடெல்லாhம் திங்கள் மும்மாரி பெய்து” 7 (பா.எண்-3)**

என்று வாமன அவதாரம் எடுத்து நின்றவர் திருமால் அத்திருமாலின் பெருமையினை பாடியும் மலர் சாத்தி வழிபடவும் தோழிமார்களை நீராட அழைக்கிறாள் ஆண்டாள்;. அவ்வாறு வழிபட்டால் திருமாலின் அருளால் தேசமெங்கும் மாதம் மும்மாரி மழைப்பெய்யும். வயல்களில் நெல் செழித்து வளரும் வயலுக்குள் மீன்கள் பாய்ந்தோடி மகிழும். குவளை பூக்களில் புள்ளி வண்டுகள் தேன் குடித்து மயங்கி கிடக்கும். இவ்வாறாக மழையினால் ஏற்படும் நன்மைகளை திருப்பாவை பதிவுசெய்துள்ளது.

மேலும் புகார் நகரத்தில் கடல் வழியாக ஏற்றுமதி இறக்குமதி வணிகம் சிறப்பாக நடைபெற்றதைப் பட்டினப்பாலை வான்மழை உவமை மூலம் பட்டினப்பாலை பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**“ வான் முகந்த நீர் மலைப்பொழியவும்**
**மலைப் பொழிந்த நீர்கடல் பரப்பவும்**
**மாரி பெய்யும் பருவம் போல**
**நீரினின்றும் நிலத்து ஏற்றமும்**
**நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்**
**அளந்து அறியாப் பல பண்டம் ” 8 (பா. வரிகள்;:126-131)**

**நதி சித்தரிப்பு**

நம் நாட்டில் பல நதிகள் பாய்கின்றன. நதிகளுக்கெல்லாம் பெண்களின் பெயர்களே சூட்டப்பட்டுள்ளன. இப்புண்ணிய நதிகளில் நீராடி மக்கள் தம் பாவங்களைப் போக்கிகொள்கின்றனர். நதிகளை தெய்வமாக நினைத்து வழிப்பட்டனர் . அதனால் நதியில் எவ்வித அசுத்தமும் கலவாமல் பாதுகாத்தனர் .இதனால் நதிகள் தூய்மையான நீரைக்கொண்டதாய் விளங்கியது. யமுனை நதியின் தூய்மைத் தன்மையை திருப்பாவை எடுத்துரைக்கிறது.

**“மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்**
**தூய பெருநீர் யமுனைத் துறைவனை” 9(பா.எண்-5)**

என்ற வரிகள் பகவானாகிய திருமால் மதுராபுரியில் அவதரித்தார் என்றும் பெருகியோடும் தூய்மையான நீரைக்கொண்ட யமுனை நதியில்; விளையாடி மகிழ்ந்தவர் என்றும் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

**பசும்புல் சித்தரிப்பு**

ஆடு மாடுகளின் பசியைப்போக்கும் உணவாக பசும்புல் அமைந்துள்ளது. இவை வயல்களிலும் ஆற்றோரங்களிலும் நடைபாதையோரங்களிலும் காலி இடங்களிலும் மைதானங்களிலும் காணலாம். காலை நேரங்களில் பசும் புல்லின் மீது பனித்துளிகள் அமைந்திருப்பது பாhப்;பதற்கே ஆனந்தத்தை அளிக்கும். ஆடு மாடுகளை மேய்பவர்கள் பசுமையான புல்வெளிக்கே அவற்றினை அழைத்துக்கொண்டுச் சென்று மேய விடுவார்கள். பசும்புல் பற்றி ஆண்டாள்.

**"கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு**
**மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்" 10 (பா.எண்-8)**

என்றுரைக்கிறாள். கிழக்கே வெளுத்துவிட்டது மேய்ச்சலுக்காக பசும்புல் மைதானங்களில் எருமைகள் பரந்துநிற்கின்றன என்று குறிப்பிடப்;பட்டுள்ளது.

**பனி சித்தரிப்பு**

பனி அதிகம் நிறைந்த மாதமாக மார்கழி மாதம் திகழ்கின்றது. இம்மார்கழி மாதத்தில் அனைவரும் அதிகாலையில் உறக்கத்திலிருந்து விடுபட்டு வெளியில் வர அச்சம் கொள்வார்கள் . பனியின் மிகுதியால் உடலில் நடுக்கம் ஏற்படும். பனியில் நனைந்தால் சிலருக்கு உடல் நிலை சரியில்லாமல் போய்விடும் என்பவையெல்லாம் நாம் அறிந்த ஒன்றாகும். பனிப் பற்றிய குறிப்பு திருப்பாவையில் உள்ளது.

**"பனித்தலை வீழ நின் வாசல் கடைபற்றிச்**
**சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற" 11 (பா.எண்-12)**

உறக்கத்திலிருக்கும் தோழியை அழைக்க மற்ற தோழிகள் அவள் வாசல் முன் நிற்கிறார்கள். கொட்டுகின்ற பனி எங்கள் தலையில்;விழ உன் வீட்டு தலைவாசலில் காத்துகிடக்கின்றோம். என்று உரைப்பதாக அமைந்துள்ளது.

**முடிவுரை:**

பாவை நூல்களில் காலத்தால் முற்பட்டது திருப்பாவை ஆகும். திருப்பாவை கற்க கற்க நமக்கு இன்பத்தை அளித்து இறையருளையும் தருகிறது. எக்காலத்தவரும் விரும்பி படிக்கும் பயனுள்ள நூலாக திகழ்வதால் திருப்பாவையில் எண்ணிலடங்கா ஆய்வுகள் இன்றளவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருப்பாவையில் இயற்கைவளங்களும் இறைவழிபாடும் என்ற தலைப்பிலான இக்கட்டுரை இயற்கை நிகழ்வுகளை சிறப்புற எடுத்துரைத்துள்ளது. நிலவு , மழை , கடல் , மேகம் , மலர்கள் , பனி, இரவுப்பொழுது, மலை போன்ற இயற்கைக் குறிப்புகளை மிக நுணுக்கமாக ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது. இயற்கையோடு இயைந்த வாழ்வே மனித வாழ்வு என்பதை இக்கட்டுரை மீண்டும் நமக்கு உறுதிப்படுத்துகிறது.அதுமட்டுமின்றி இயற்கையின் படைப்புகள் அனைத்தும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. இயற்கையை நேசிப்போம.; இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்து வளம் பெறுவோம்.

**துணைநூற்பட்டியல்:**

[1.] ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை-கண்ணன்ராகவன்-கௌரா ஏஜென்ஸீஸ்

[2.] திருவல்லிக்கேணி சென்னை-5

[3.] ஆண்டாள் திருப்பாவை மூலமும் உரையும்- பாபா பப்ளிகேஷன்ஸ் சென்னை-33

[4.] திருப்பாவை விளக்கம்-டாக்டர் சி.பாலசுப்பிரமணியன்-பாரிநிலையம் சென்னை -8

[5.] பட்டினப்பாலை – திரு பொ வே சோமசுந்தரனார் அவர்கள்- திருநெல்வேலி தென்னிந்திய நூற்பதிப்புக்கழகம் -சென்னை 1

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 28.பாரம்பரிய வேளாண்மை முறைகளும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைகளும்

**திருமதி க.நந்தினி,**

உதவிப்பேராசிரியர்,தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சி கல்லூரி,

திருச்சிராப்பள்ளி – 620002.

E.Mail: nandhinikandasamy16@gmail.com, Orcid: https://orcid.org/0009-0001-6010-0738

**ஆய்வுச்சுருக்கம்**

மாற்றம் ஒன்றே மாறாதது என்ற கூற்று தலைமுறைகளைக் கடந்த நீண்ட நெடிய மனித வரலாற்றில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.அறிவியல் கண்டுபிடிப்புகளும்,மனிதனின் சிந்தனை அறிவும் புவியின் சூழலியலை மாற்றிக் கொண்டே வந்துள்ளன. மனிதனின் நாகரிகம் வேளாண்மையிலிருந்து தான் துவங்கியது. தனக்கு வேண்டிய உணவு தானியங்களைத் தானே பயிரிட்டு உணவுக்காக எங்கும் அலைந்து தெரியாமல் ஓரிடத்தில் நிலையான வாழ்க்கை வாழ்வதற்கு மனிதன் முயற்சி மேற்கொண்டதே நாகரிகத்தின் முதல் படிநிலையாகும். அந்த வேளாண்மை முறையும் இயற்கை முறையில் இருந்து தொடங்கி பின்னர் நவீன இயந்திரங்கள், பதப்படுத்துதல், பசுமைப்புரட்சி, மரபணு மாற்றப்பட்ட விதைகள் என பல பரிணாமங்களைக் கண்டு தற்போது இயற்கை வேளாண்மையின் மீதே திரும்பியிருக்கிறது. இக்கருத்தாக்கத்தினை அடியொற்றி இயற்கை வேளாண்மைக்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பினையும் அதன் பரந்த பட்ட தேவையையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**குறிப்புச் சொற்கள் :** வேளாண்மை, பல்லுயிரின வளம், சூழலியல், இரசாயன உரங்கள், காலநிலை மாற்றம் .

**முன்னுரை**

உணவு மற்றும் பிற தேவைகளுக்காக பயிர்களை வளர்ப்பது, கால்நடை பராமரிப்பு, மீன் வளர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய முதன்மைத் தொழில் விவசாயமாகும். பாரம்பரிய வேளாண்மை இலை தழைகள், கால்நடைக் கழிவுகள், பயிர் சுழற்சிமுறை, கலப்பு பயிர்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. நவீன உழவியல் தீங்குயிர் கொல்லிகள், இரசாயன உரங்கள், நிலத்தடி நீர் வளம் குறைக்கப்படுதல் காடழிப்பு, மண் சிதைவு, புவி சூடாதல் போன்ற காரணிகளைக் கொண்டுள்ளது. பாரம்பரிய இயற்கை வேளாண் முறையே நீடித்த நிலையான சுற்றுச்சூழலைத் தருகிறது. நவீன விவசாயத்தில் அதிக விளைச்சலுக்காக பயன்படுத்தப்படும் செயற்கை உரங்கள் மண்ணின் ஒட்டு மொத்த செயல்திறனையும் பாதிக்கின்றன. இது குறித்த விரிவானதொரு பார்வையை இக்கட்டுரையில் காண்போம்.

**சூழலியலும் வேளாண்மையும்**

சூழலியல் அறிவியலில் உயிரியலின் ஒரு பிரிவாகக் கருதப்படுகிறது. வெவ்வேறு வகை உயிரினங்கள், அதன் வாழ்விடங்கள், நிலவளங்கள், உணவுச் சங்கிலி, உணவு வலை போன்றவை சூழலியலி ன் அடிப்படை கூறுகளாகும் ஏர்னெஸ்ட் ஹெக்கல் எனும் ஜெர்மனிய உயிரியலாளர் சூழலியல் என்னும் சொல்லை முதன் முதலில் 1879 இல் பயன்படுத்தினார். சூழலியல் என்னும் சொல் ஆங்கிலத்தில் ஈக்காலஜி ( ECOLOGY) என அழைக்கப்படுகிறது. நிலவியல் அமைப்புகள், தட்பவெப்ப நிலை, உயிர் பரவல் போன்றவற்றை ஆய்வு செய்யும் அறிவியலின் ஒரு பிரிவாகவும் சூழலியலை அறியலாம். இத்துறை தனது முழுமைக்கு பிற அறிவியல் துறைகளான

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

இயற்பியல்,மண்ணியல்,வேதியியல்,புவியியல், தாவரவியல், விலங்கியல் ஆகியவற்றை எடுத்துக் கொள்வதால் இத்துறையை ஒரு முழுமையான அறிவியல் துறை (HOLISTIC SCIENCE) என்கின்றனர்.

சூழலியல் அதன் போக்கில் இயங்குவதற்கு இயற்கை சமநிலை தேவைப்படுகிறது.இயற்கையுடன் இணைந்த வாழ்க்கையை வாழ்ந்த பழங்கால மனிதன் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டான் தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம்,

**“நிலம் நீர் தீ வளி விசும்போ டைந்தும்**
**கலந்த மயக்க உலகம் ஆதலின்**
**இருதிணை யைம்பால் இயனெறி வழாமைத்**
**திரிவில் சொல்லோடு தழாஅல் வேண்டும்” 1**

என்கிறது. ஐம்பெரும் பூதங்களான நிலமும், நெருப்பும், நீரும், காற்றும், விண்ணும் கலந்ததொரு மயக்கமான நிலையில் இந்த உலகம் உண்டாயிற்று. இவைகள் யாவும் ஓர் எல்லைக்குள் அமைந்து இயங்கிக் கொண்டிருந்த நிலையில் உயிர்கள் தோன்றின என்னும் அறிவியல் உண்மையைத் தொல்காப்பியர் இந் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

**மருதம் – சூழல் மண்டலம்**

உழவு செய்யும் வேளாண்நிலங்கள் மருத நிலம் எனப்பட்டன. வயல்வெளிகளை உருவாக்கி ஏர்பூட்டி உழுது விளைச்சலைப் பெருக்கி வாழத் தொடங்கிய காலமே நாகரிகத்தின் முதல் படிநிலை எனலாம். உணவும், பாதுகாப்பும் தரக்கூடிய வாழிடத்தையே ஆதிகால மனிதன் தேடியிருக்க வேண்டும். **“குன்றுகளிலும்,காடுகளிலும்,கடலோரங்களிலும் வாழும் மக்கள் உழுது பயிரிட்டு நாடு நகரங்களை அமைத்து வாழும் மக்களை விட நாகரீகத்தில் உயர்ந்தவராகவே காணப்படுகின்றனர். வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் ஆற்றோர வெளிகளில் வாழ்ந்த உழவர்களுக்கு வாய்ப்புகள் மலிந்திருந்தன என்ற உண்மையை வரலாற்றுச் சான்றுகள் விளக்குகின்றன உழவுத் தொழிலை நாகரிகத்தின் உயர்ந்த சின்னமாக கருதப்பட்டது”2** என்கிறார் கே கே பிள்ளை. மனிதனின் உழைப்பாலும், முயற்சியாலும் உருவான நிலமே மருத நிலமாகும். மழை நீருக்கு மாற்றாக ஆற்றுநீரைத் தேக்கி வைத்து அந்த நீரைப் பயன்படுத்தி பயிர்த்தொழில் செய்தனர். குறிஞ்சியையும், முல்லையையும் விட மருத நிலமே உணவு விளைச்சலில் முந்திச் சென்றது. இதற்கு காரணம் நிலையான நீர்ப்பாசன வசதி, வண்டல் மண் படிந்த ஆற்றப்படுகைகள் என விளைச்சலுக்கு ஏற்ற சூழ்நிலை அங்கு இருந்ததேயாகும். நிலத்தை உழுது நெல் விதை விதைக்கப்படுவதால் அதை செய்தவர்கள் உழவர்கள் என பெயர் பெற்றனர். மற்ற நிலப்பகுதிகளை ஒப்பிடும் போது மனிதனின் முக்கிய வாழ்வாதாரமான உணவும், நீரும், இருப்பிடமும் மருத நிலத்திலேயே பெருமளவில் இருந்தன. உலக வரலாற்றில் நாகரிகம் ஆற்றங்கரைகளிலும்,ஏரிக்கரைகளிலும் வளர்ந்ததாக அறிகிறோம். எகிப்திய நாகரிகம் நைல் நதியின் கரையோரங்களிலும், சிந்து நதியின் வண்டல் சமவெளிகளில் சிந்து சமவெளி நாகரிகமும், காவிரிக் கரையோரங்களில் உருவான காவிரிக்கரை நாகரிகமும் ஆற்றங்கரைகளில் தோன்றிய நாகரிகங்களுக்கு உதாரணங்களாகும். குடும்பம், சொத்து, அரசு என்ற நிறுவனங்கள் முதன் முதலில் மருத நிலத்திலேயே தோற்றம் பெற்றன. நாகரிக வாழ்வின் பரிணாம வளர்ச்சியில் முதற்கட்டமாக உறவு முறையற்ற காட்டுமிராண்டித்தனமான வாழ்வு சீரமைக்கப்பட்டு “குடும்பம்” என்ற அமைப்பு மருத நிலத்தில் தான் தோற்றுவிக்கப்பட்டது. எனவேதான் மருத நில மக்கள்

“குடும்பர்” என அழைக்கப்படுகின்றனர். கல்வியும், கலைகளும், வர்த்தகமும், செல்வமும், அரசியலும், அமைதியான வாழ்க்கையும் மருத நிலங்களில் தான் செழித்து வளர்ந்தன. இம்மக்களே முதன் முதலில் கட்டடங்களையும், மாளிகைகளையும், அரண்மனைகளையும் அமைத்துக் கொண்டு நாகரீகமாக வாழ்ந்துள்ளனர். அடிப்படைத் தேவையான உணவு உற்பத்தி அதிக அளவில் மருத நிலத்தில் செய்யப்பட்டதால் பிறர் நிலத்து மக்களும் மருதநில மக்களைச் சார்ந்து வாழும் நிலை ஏற்பட்டது.

மருத நில மக்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான எல்லா வகையான வளங்களும் நிறைந்திருந்ததால் மருதநில மக்கள் பசியின் கொடுமையை அறியாதிருந்தனர் என்பதை,

**“தொல்பசி அறியா துளங்கை இருக்கை**
**மல்லல் பேரூர் மடியின் மடியா**
**விளைஞர் தந்த வெண்ணெல் வல்சி**
**மனை வாழ் அளகின் வாட்டோடும் பெருகுவிர்”3**

என்னும் பெரும்பாணாற்றுப்படையின் பாடல் விளக்குகிறது. பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரைதனின் ஊரில் வாழும் மக்களுக்கு வேளை தவறி உண்ணும் வழக்கமில்லை. வளம் மிகுந்த அப்பேரூரில் செல்வ வளம் தளர்வதும் இல்லை. பழைய பசி என்ற ஒன்றையே அறியாத, நிலையான செல்வ வளம் மிக்க ஊரில் நீங்கள் தங்க நேரிட்டால், உழைப்பில் சிறிதும் சோர்வடையாத உழவர்கள் விளைவித்த வெண்ணெல் சோற்றினை, வீட்டில் வளர்க்கப்படும் கோழி இறைவலோடு (வறுவலோடு) சேர்த்து உணவாகப் பெறுவீர்கள்" என பாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது. சங்க கால மருத நிலத்தின் வளத்தினை இப்பாடல் காட்சிப்படுத்துகிறது.

**பாரம்பரிய வேளாண் முறைகள்**

பாரம்பரிய வேளாண்மை முறைகள் என்பவை தலைமுறை தலைமுறையாக இயற்கை முறையையும், உள்ளூர் வளங்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிலையான விவசாய முறைகளாகும். இத்தொழில்நுட்பங்கள் மண்ணின் வளத்தைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலைப் பேணவும் உதவுகின்றன. இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், ரசாயன உரங்களை தவிர்த்து மண் வளத்தை பாதுகாக்கும் பாரம்பரிய விவசாய முறைகளை மீட்டெடுத்தார். பாரம்பரிய விதைகள் பாதுகாப்பு, பயிர் சுழற்சி, மூடாக்கு முறை மற்றும் இயற்கை இடுபொருட்களைக் கொண்டு குறைந்த செலவில் அதிக மகசூல் பெறும் முறைகளை அவர் வலியுறுத்தினார்.நமது பாரம்பரிய விவசாயம் குறித்து “**விவசாயமானது, நல்ல மண் கொண்ட மலையடிவாரப் பகுதியிலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்டது. பள்ளத்தாக்கு பகுதியில், நீரை கட்டுப்படுத்த, நிறைய ஆற்றலும், புதிய தொழில்நுட்பங்களும் தேவைப்படுவதால் அங்கு விவசாயம் தொடங்கப்படவில்லை. வேதகால விவசாயிகள், மண்வளம், விதை தேர்வு, விதைப்பு பருவம், அறுவடை, உரமிடுதல் போன்ற வேலைகளில் சிறிதளவு தெரிந்து கொண்டு இருந்தனர். மேலும் அவர்கள், பயிர் சுழற்சியினால், மண் வளத்தை மேம்படுத்த முடியும் எனவும் அறிவர். அவர்கள் மூன்றாண்டு பயிர் சுழற்சி முறையில், ஆழ் வேர் செடிகள், குறைந்த வேர் செடிகள் மற்றும் பயறு வகை பயிர்கள் இடம் பெற்று இருந்தன. கோதுமை-பட்டாணி, கரும்பு - பசுந்தாள் உரச் செடி, கோதுமை - துவரை, சோளம் போன்ற பயிர்கள் பயிர் சுழற்சியில் இடம் பெற்று வந்தன. கலப்பு பண்ணையில் பயிருடன் கால்நடை வளர்ப்பு செய்து வந்தனர். கலப்பு பயிர் முறையானது, பலதரப்பட்ட பயிர்களை கலந்து செய்வது அனுமதிக்கப்பட்டது. கோதுமையுடன் பட்டாணி மற்றும் இதர பயறு வகைகளை கலந்து பயிர் செய்தால், கோதுமையின் தழைச்சத்து தேவையை பயறு வகையினால் நிரப்பப்படுகிறது. சோளம்+துவரை+தட்டைப்பயறு, உளுந்து/பாசிப்பயிறு + Sorgham/ கம்பு, கோதுமை + பட்டாணி கோதுமை + பேய் எள் போன்ற பயிர் கலப்புகள் செய்யப்பட்டு பயிரிடப்பட்டு**

**வந்தனர். ஆனால், பொதுவாக, தனி பயிர் முறை அங்கீகரிக்கப்படவில்லை."4** என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கூறுகிறது.

**பாரம்பரிய விவசாய முறைகள்**

### 1. பாரம்பரிய விதைகள் (Traditional Seeds):

மரபணு மாற்றப்பட்ட (GM) விதைகளுக்குப் பதிலாக, காலநிலைக்கு ஏற்ப விளையும் நாட்டு ரக நெல் மற்றும் பயிர் வகைகளை மீட்டெடுக்க அவர் பாடுபட்டார். குறைந்த தண்ணீரில் விளையும் பாரம்பரிய நெல் வகைகளை விதைக்க வலியுறுத்தினார்.

### 2. மூடாக்கு முறை (Mulching):

நிலத்தில் ஈரப்பதத்தைத் தக்கவைக்கவும், களைகளைக் கட்டுப்படுத்தவும், மண்புழுக்களுக்கு உணவாகவும் நிலத்தின் மீது காய்ந்த இலைகள், சருகுகள் அல்லது பயிர்களின் கழிவுகளைப் பரப்பி வைக்கும் முறையாகும். இது நிலத்தடி நீரை மேம்படுத்தவும் உதவுகிறது.

### 3. பல பயிர் சாகுபடி / ஊடுபயிர் (Multi-cropping):

ஒரே நிலத்தில் ஒரே பயிரை மட்டுமே பயிரிடாமல், பல்வேறு பயிர்களைச் சேர்த்து விதைக்கும் முறை. இதனால் மண்ணில் உள்ள சத்துகள் சமச்சீராகப் பயன்படுத்தப்படுவதுடன், பூச்சிகளின் தாக்குதலும் குறைகிறது. .

### 4. இயற்கை இடுபொருட்கள் (Organic Inputs):

ரசாயன உரங்களுக்குப் பதிலாக பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம், மீன் அமிலம், மற்றும் மண்புழு உரம் போன்றவற்றை நிலத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார். இவை மண்ணின் நுண்ணுயிர்களைப் பெருக்கி, பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளை வழங்குகின்றன.

### 5. மரங்கள் வளர்ப்பு (Social Forestry):

விவசாய நிலங்களைச் சுற்றி பனை, வேம்பு, புளி போன்ற மரங்களை வளர்ப்பது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதோடு, விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானத்தையும் தரும்.

**சுற்றுச்சூழல் நிலைத்தன்மை**

எதிர்கால சந்ததியினரின் வாழ்வினைக் கருத்தில் கொண்டு, தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்ய இயற்கை வளங்களை பொறுப்புடன் நிர்வகிப்பதே சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகும். இயற்கை வளங்களைச் சேமிப்பது, பொருள்களை மறுசுழற்சி செய்வது மற்றும் கார்பன் உமிழ்வைக் குறைப்பதன் மூலம் சமநிலையான சுற்றுச்சூழலைப் பேண சுற்றுச்சூழல் நிலைத்தன்மை உதவுகிறது.

- **இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்:** நிலம், நீர், மற்றும் கனிமங்கள் போன்ற இயற்கை வளங்களை எதிர்கால பயன்பாட்டிற்கு மிச்சப்படுத்துதல்.
- **மாசுபாட்டைக் குறைத்தல்:** காற்று, நீர், மற்றும் நில மாசுபாட்டைக் குறைத்து, நச்சு வாயுக்கள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுதல்.
- **புவி வெப்பமயமாதலைத் தடுத்தல்:** காடுகளைப் பாதுகாப்பதன் மூலம் கார்பன் டை ஆக்சைடு உறிஞ்சப்படுவதை அதிகரித்தல்.
- **நிலையான நடைமுறைகள்:** விவசாயத்தில் பயிர் சுழற்சி (crop rotation) முறையைப் பின்பற்றுதல், காடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மரங்களை மட்டும் வெட்டுதல் (selective logging) போன்ற சுற்றுச்சூழல் நட்பு செயல்பாடுகள் சுற்றுச்சுழலின் நிலைத்தன்மையை உறுதி செய்கின்றன.

**சுற்றுச்சூழல் நிலைத்தன்மையின் நன்மைகள்**

- தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாத்து, ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குகிறது.
- உலகளாவிய வெப்பநிலை உயர்வை (Global warming) கட்டுப்படுத்த உதவுகிறது.

- நிலையான உற்பத்தி முறைகள் மூலம் மனிதர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.
- நிலையான சூழலியல் அமைப்பு ஆரோக்கியமான உயிர்க்கோள சூழலியலை உருவாக்குகிறது.

**வேளாண் வணிகம்**

மனிதன் தனக்கு தேவையான உணவு தானியங்களை தானே உற்பத்தி செய்து கொண்ட தற்சார்பு வாழ்க்கையில் இருந்தது அபரிதம் தொடங்கியது. அந்த தற்சார்பு வேளாண் வாழ்க்கை வணிகமாக மாற்றப்பட்ட போது தான் ஆபத்து ஏற்பட்டது. **“உலகின் முதல் சீரழிவு வேளாண்மையில் இருந்தே தொடங்கியது இருந்தாலும் மனித நாகரீகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்ததால் அதை ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது வேளாண்மை என்பது வேளாண் வணிகமாக மாறத் தொடங்காத காலம் வரையிலும் அது கட்டுக்குள் இருந்தது எனலாம்”5** என்கிறார் சூழலியல் எழுத்தாளர் நக்கீரன். வேளாண்மை இயற்கை வாழ்வியலாக இருந்த போது சூழலியல் அதன் பல்லுயிர் தன்மையில் நிலைத்திருந்தது. வேளாண்மை வணிகமாக மாற்றப்பட்ட போது தான் பல்லுயிர் வளம் இழக்கப்பட்டது. தமிழில் கூறப்படும் ஐந்திணை உலகமும்,அதன் கருப்பொருள்களும் பல்வகை உயிரினங்களையும் பல்வகை நில கட்டமைப்புகளையும் கொண்டவை. ஐந்து வெவ்வேறு சூழல் தொகுதிகளையும் ஐந்திணைகளாக உருவாக்கி அவற்றின் முதல் கருப்பொருளோடு ஒழுகலாறு என்னும் உரிப்பொருளையும் இணைத்தது தொல்காப்பியம். அதனால்தான் அது நமது பண்பாட்டு சூழலியலாக அமைந்தது. திணைக்குழு வாழ்வை வாழ்ந்த மக்கள் இயற்கை வளங்களை வளம் குன்றாத முறையில் பயன்படுத்தி உள்ளனர். எனவே இயற்கையை அவர்களால் போதுமான அளவு பாதுகாக்க முடிந்தது.

**முடிவுரை**

பாரம்பரிய வேளாண்மை முறையும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையும் இரட்டைக் குழந்தைகளைப் போன்றவை. இந்த இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டு காலநிலை மாற்றம்,சூழலியல் போன்ற சொற்களை எல்லாம் அடிக்கடி பயன்படுத்திக் கொண்டிருக்கும் வேளையில் பாரம்பரிய வேளாண்மை குறித்த விழிப்புணர்வும், புரிதலும் தற்போதைய இளைய தலைமுறை அறிந்து கொள்ள வேண்டிய அவசியமான ஒன்றாகும். பூமியை அழிவிலிருந்து காப்பாற்றவும் இயற்கையோடு இணைந்த வாழ்வியலை மேற்கொள்ளவும் பாரம்பரிய வேளாண்மை முறை அவசியமாகிறது. பூமி மனிதர்களுக்கானது மட்டுமல்ல, அனைத்து உயிரினங்களுக்கானது என்னும் உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதும் நமது தலையாய கடமையாகும்.

**அடிக்குறிப்புகள்**

a. தொல்காப்பியம், நூற்பா.635
b. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், கே.கே.பிள்ளை,ப.20
c. பெரும்பாணாற்றுப்படை 253-256
d. https://agritech.tnau.ac.in/ta/itk/indfarm_heritage_introduction_ta.html
e. தமிழ் ஒரு சூழலியல் மொழி, ப.138.

**பார்வை நூல்கள்**

[1.] முனைவர் ச.திருஞானசம்பந்தம்,தொல்காப்பியம்,கதிர் பதிப்பகம்,திருவையாறு – 613204.

[2.] கே.கே பிள்ளை,தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், உலக தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை.

[3.] ஞா.மாணிக்கவாசகன்,பத்துப்பாட்டு மூலமும் விளக்கவுரையும்,உமா பதிப்பகம்,சென்னை – 600001.

[4.] நக்கீரன்,தமிழ் ஒரு சூழலியல் மொழி,காடோடி பதிப்பகம்,நன்னிலம்,திருவாரூர் – 610105.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 29.திருவாசகத்தில் இயற்கைக் கூறுகளும், பஞ்சபூதங்களின் இலக்கிய வெளிப்பாடும்

**முனைவர் சு.சிவகாமசுந்தரி,** M.A., M.Phil., Ph.D

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஏனாத்தூர், காஞ்சிபுரம் - 631561.

CELL: 9715617364, E.mail: shivaniswetha@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் (Abstract): -**

தமிழ்ச் சைவ பக்தி இலக்கியங்களில் சிறப்பிடம் பெறும் திருவாசகம், மாணிக்கவாசகரின் ஆன்மீக அனுபவங்களையும், சைவசித்தாந்தத் தத்துவங்களையும் ஆழமாக வெளிப்படுத்தும் அரிய நூலாகும். இந்நூலில் இறையன்பு, பக்தி, தத்துவம் ஆகியவற்றுடன் இயற்கையும், பஞ்சபூதங்களும் இலக்கியப் பார்வையில் சிறப்பாகப் பதிவாகியுள்ளது. இயற்கைக்கூறுகள் வெறும் காட்சிப் பொருள்களாக அல்லாமல், இறைவனின் பேராற்றல், கருணை மற்றும் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் தன்மையை உணர்த்தும் அடையாளங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாய்வு திருவாசகத்தில் இடம்பெறும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களின் இலக்கிய வெளிப்பாடுகளையும், அவற்றின் தத்துவப் பின்னணியையும் ஆராய்கிறது. மேலும் இயற்கைக் கூறுகள் பக்தி உணர்வை எவ்வாறு செம்மைப்படுத்துகின்றன, சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை எவ்வாறு விளக்குகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை எவ்வாறு மறைமுகமாக வலியுறுத்துகின்றன என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

எனவே திருவாசகத்தில் இயற்கைக் கூறுகளும், பஞ்சபூதங்களின் இலக்கிய வெளிப்பாடும், இலக்கிய, தத்துவ மற்றும் சுற்றுச்சூழல் நோக்குகளில் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.

**முன்னுரை: -**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியங்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. சங்க காலத்திற்குப் பின்னர் உருவான பக்தி இயக்கம் சமய உணர்வை மக்களிடையே ஆழமாக வேரூன்றச் செய்தது. அவற்றில் சைவ சமயத்தின் திருமுறைகளை தமிழர்களின் ஆன்மீக வாழ்விற்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் பெரும்பங்களிப்பை வழங்கியது. பன்னிரு திருமுறைகளுள் எட்டாம் திருமுறையாக விளங்குவது திருவாசகம் ஆகும். மாணிக்கவாசகர் அருளிய இந்நூல் பக்தி, தத்துவம், அறம், இயற்கை மற்றும் மனிதநேயம் ஆகியவற்றை ஒருங்கே வெளிப்படுத்தும் அரிய இலக்கியமாகத் திகழ்கிறது.

இறைவனின் மீது கொண்ட ஆழ்ந்த அன்பு, ஆன்மாவின் ஏக்கம், உலக வாழ்வின் நிலையாமை, இயற்கையின் அழகு, பஞ்சபூதங்களின் தத்துவம் போன்ற பல்வேறு கருத்துகள் திருவாசகத்தில் இடம்பெற்றுள்ளன.இவ்வாய்வின் நோக்கம் திருவாசகத்தில் இயற்கைக் கூறுகளும், பஞ்சபூதங்களும் எவ்வாறு இலக்கிய வெளிப்பாடாக அமைந்துள்ளன என்பதை ஆராய்வதாகும்.

**திருவாசகத்தின் இலக்கியச் சிறப்பு:-**

திருவாசகம் பக்தி இலக்கியம் மட்டுமல்ல; அது தத்துவ இலக்கியமாகவும், கவிதை இலக்கியமாகவும் விளங்குகிறது. இதில் உவமை, உருவகம், எதுகை, மோனை, இயற்கை வருணனை, இசை நயம் போன்ற இலக்கியக் கூறுகள் செறிந்துள்ளன.

மாணிக்கவாசகர் இயற்கையின் ஒவ்வொரு கூறையும் இறைவனின் திருவுருவமாகக் காண்கிறார். மலை, மரம், ஆறு, கடல், மழை, மலர், பறவை போன்ற இயற்கைக் கூறுகள் பக்தி உணர்வை வெளிப்படுத்தும் கருவிகளாக அமைகின்றன.

இயற்கைக் கூறுகளின் இலக்கிய வெளிப்பாடு:-

திருவாசகத்தில் இயற்கை வெறும் பின்னணிக் காட்சியாக இல்லாமல் இறைவனின் அருளையும், பேராற்றலையும் உணர்த்தும் கருவியாக அமைகிறது.

“வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே!”

(திருச்சதகம் அறிவுறுத்தல் பா. எ:15) இப் பாடல் வழி அறியமுடிகிறது.

நிலம் உயிர்கள் வாழும் அடிப்படை ஆதாரமாகக் கருதப்படுகிறது. மலைகள், காடுகள், வயல்கள், பூக்கள் போன்றவை இறைவனின் படைப்பாற்றலை எடுத்துரைக்கின்றன. நிலத்தின் வளமும், செழிப்பும் சுற்றுச்சூழல் சிந்தனையை வளர்க்கின்றது.

திருவண்டப் பகுதியில் பிரபஞ்ச அறிவியல் தத்துவம் (The Cosmic Science) :-

மாணிக்கவாசகர் திருவண்டப் பகுதியில் இறைவனின் பெருமையை விவரிக்கும் போது நவீன வானியல் (Astronomy) வியக்கும் வண்ணம் பிரபஞ்சத்தின் அமைப்பைப் பாடியுள்ளார். அண்டவெளியில் மிதக்கும் கோள்கள் சூரியனின் ஈர்ப்பு விசைக்கு உட்பட்டு இயங்குவதை சூரிய ஒளியில் மிதக்கும் சிறு தூசிகளுக்கு (Dust motes in a Sunbeam) ஒப்பிடுகிறார்.

**அறிவியல் நோக்கு :-**

ஒரு ஜன்னல் வழியாக வரும் சூரிய ஒளியில் கோடிக்கணக்கான தூசிகள் மிதப்பது போல, பேரண்டத்தின் பெருவெளியில் நூறு கோடிக்கும் அதிகமான அண்டங்கள் (Galaxies/Planets) மிகச் சிறிய துகள்களாக மிதக்கின்றன. இறைவன் இந்த அண்டங்கள் அனைத்தையும் தாங்கும் பேராற்றலாக விளங்குகிறான்.

பிரபஞ்சத்தின் எல்லையற்ற தன்மை (infinite Universe) :-

பிரபஞ்சம் தொடர்ந்து விரிவடைந்து கொண்டே செல்கிறது என்ற நவீன அறிவியல் கருத்தை (Expanding Universe) அன்றே மாணிக்கவாசகர் “நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன…”

இல் நுழை கதிரின் துள்ளணுப் புரையச் சிறிய ஆகப் பெரியோன்…” என்ற வரிகள் மூலம் உணர்த்தியுள்ளார். (திருவண்டப்பகுதி

பா. எண் : 1)

இயற்கை உயிரினங்கள் வழி தூது (Nature as a Messanger):-

இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மாவின் ஏக்கத்தை வெளிப்படுத்த மாணிக்கவாசகர் இயற்கையின் கூறுகளான குயில் மற்றும் வண்டுகளைத் தன் உணர்வுகளைக் கடத்தும் தூதுவர்களாகப் பயன்படுத்துகிறார்.

குயில் பத்து (The Decad of the Cuckoo ) :-

தத்துவம்:- குயில் என்பது ஆன்மாவின் ஆன்மீகக் குரலின் குறியீடு. அது எப்போதும் மங்கலமான மற்றும் இனிமையான ஒலியை எழுப்புவது.

“காருடைப் பொன்திகழ் மேனிக் கடிபொழில் வாழும் குயிலே
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்தெனை ஆண்ட
ஆருடை அம்பொனின் மேனி அமுதினை நீ வரக் கூவாய்!”

(குயிற் பத்து பா.எண். 9)

இப்பாடல் சித்தரிக்கப்படுகிறது.

உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் உணவும், கருணையும் வழங்கும் சிவபெருமானின் பெருமைகளைப் பாடி , என் துன்பம் தீர அவனை என்னிடம் வருமாறு அழகிய குயிலே நீ கூவ வேண்டும். என்று இயற்கையிடம் உருகுகிறார்.

திருக்கோத்தும்பி (The sacred Dragon fly/Bee)

வண்டு எப்படி மலர்களில் உள்ள தேனை மட்டும் தேடி அலைந்து சுவைக்கிறதோ, அது போல மனித மனமும் உலக ஆசைகளில்
உழலாமல் இறைவனின் திருவடியாகிய மலரின் தேனை(பேரின்பம்) மட்டுமே நாடவேண்டும் என்ற தத்துவம் இதில் அடங்கியுள்ளது.

“பூ வேறு கோனும் புரந்தரனும்
பொற்பமைந்த நாவேறு செல்வியும் நாயகனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ!” திருக்கோத்தும்பி

(பா.எண்: 1)

இப்பாடல் (location) இறையருளின் வெளிப்பாடாகச் சித்தரிக்கப்படுகிறது.

பஞ்ச பூதங்களின் வெளிப்பாடு:-

இயற்கையின் வழி ஆன்ம விடுதலை (Nature as a path to liberation)

திருவாசகம் காட்டும் ஒட்டு மொத்த இயற்கை தத்துவத்தின் சுருக்கமே இது தான். மனிதன் இயற்கையைத் தனியே பிரித்துப் பார்க்கக் கூடாது. காடு, மலை, நதி, கோள்கள் என் அனைத்தும் அந்த பேராற்றலின் வெவ்வேறு வடிவங்கள். இயற்கையோடு இணக்கமாக வாழ்ந்து, அதன் இயக்கத்தை உற்று நோக்கும் போது மனிதன் தன் அகந்தையை (Ego) இழந்து பேரண்டத்தின் ஒரு பகுதியாக மாறி இறைவனுடன் கலக்கிறான். ஜீவாத்மா பரமாத்மா இறையருளின் வெளிப்பாடாகச் சித்தரிக்கப் படுகிறது.

பேரண்டத்தின் ஆக்கம், அழிவு மற்றும் அதன் எல்லையற்ற தன்மையை விளக்குகின்றது.

பெருவெடிப்புக் கொள்கை மற்றும் ஒடுக்கம் (Big Bang Theory): -

“ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை......”

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

திருவெம்பாவை (பா.எண். 1)

“பூதங்கள் தோறும் நின்றாய் எனின்
ஆற்றல்” திருப்பள்ளியெழுச்சி (பா.எண் : 5)

பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்பிருந்த வெற்று வெளியையும் (Singularity) அதிலிருந்து ஒளியாகப் பிரபஞ்சம் வெடித்துக் கிளம்பிய தையும் அரும்பெருஞ்சோதி என்ற சொல் உணர்த்துகிறது. எல்லாவற்றையும் படைத்த இறைவன், இறுதியில் அனைத்தையும் தனக்குள்ளேயே ஒடுக்கிக் கொள்கிறான் என்ற பிரபஞ்ச சுழற்சி (Cosmic Cycle) இதில் விளக்கப்படுகிறது.

இறைவனின் அளப்பரிய வடிவம் (Micro to Macro): -

இறைவன் குவாண்டம் இயற்பியல் (Quantum Physics) பேசும் மிகச் சிறிய அணுவின் துகளாகவும் (Subatomic Particles); இருக்கிறான்; அதே நேரத்தில் பில்லியன் கணக்கான ஒளியாண்டுகள் பரந்து விரிந்த பேரண்டமாகவும் (Macrocosm) இருக்கிறான் திருவாசகத்தில்

இயற்கை உவமைகள்:-

(மழை, கடல், சூரியன்) மாணிக்கவாசகர் இறைவனின் கருணையையும் ஆன்மாவின் நிலையையும் விளக்கப் பேரியற்கையின் பேராற்றல்களான மழை மற்றும் கடலை வியத்தகு உவமைகளாகக் கையாண்டுள்ளார்.

திருவெம்பாவை: - மழையின் குறியீடு (Rain as Divine Grace)

திருவெம்பாவையின் பதினாறாவது பாடலில் மழை பெய்யும் இயற்கை நிகழ்வை இறைவனின் கருணைப் பொழிவோடு ஒப்பிடுகிறார்.

“முன்னிக் கடலைச் சுருக்கி
எழுந்துடையாள் என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள்
இட்டிடையின் மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேல்…”

திருவெம்பாவை (பா.எண். 16)

**தத்துவ உவமை:**

மேகம் கடலில் உள்ள நீரை முகந்து கொண்டு மேலே எழுகிறது.(நீர்ச் சுழற்சி - water Cycle) அது பார்ப்பதற்கு இறைவியின் (பார்வதி தேவியின்) கரிய திருமேனி போலவும், மின்னல் அவளது புன்னகை போலவும், இடி அவளது சிலம்பொலி போலவும் இருக்கிறது. அத்தகைய மேகம், இறைவன் தன் அடியவர்கள் மேல் பொழியும் கருணையைப் போல உலகச் செழிப்புக்காக வாரிப் பொழிய வேண்டும் என்கிறார். மழை என்பது இங்கு இறைவனின் மாறாத கருணைக் குறியீடாகும். (Grace)

கடல் மற்றும் நதி உவமை (The ocean and the river):-

ஆன்மா இறைவனுடன் கலக்கும் அத்வைத நிலையை விளக்க நதியும், கடலும் உவமையாக்கப்படுகின்றன.

காடுகளில் தோன்றும் ஆறுகள் பல தடைகளைத் தாண்டி வளைந்து நெளிந்து இறுதியாகக் கடலில் சென்று கலந்து தன் தனித்துவத்தை இழக்கின்றன.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

அது போல மனித ஆன்மாவும் உலகப் பாசப்போராட்டங்களைக் கடந்து இறுதியாக இறைவனாகிய கருணைக் கடலில் கலந்து பேரின்ப நிலை அடைகிறது. இறைவனை இன்பக் கடல், அருட் கடல் என்றே திருவாசகம் பல இடங்களில் அழைக்கிறது.

சூரியனும் அறியாமை இருளும்: -

(The sun and Darknen)

சூரியன் உதித்தவுடன் உலகில் உள்ள இருள் தானாகவே விலகி விடுகிறது. அது போல மனித மனதில் இறை வடிவமான ஞானம் தோன்றும் போது அறியாமை (ஆணவம், கன்மம், மாயை) என்னும் இருள் முற்றிலும் நீங்கிவிடும் என்பதைச் சூரியனின் இயல்பைக் கொண்டு விளக்குகிறார். திருவாசகம் காட்டும் இந்த இயற்கைக் கூறுகள் ஆன்மீகத்தையும், அறிவியலையும் இணைக்கும் பாலமாக விளங்குகின்றன.

சைவத் தத்துவப் பின்னணியில் பஞ்சபூதக் கோட்பாடு: -

சைவ சித்தாந்தத்தின் படி உலகிலுள்ள அனைத்துப் பொருட்களும் ஐம்பூதங்களால் உருவாக்கியவை.மனித உடலும் ஐந்து கூறுகளின் சேர்க்கையாகக் கருதப்படுகிறது. எனவே இறைவன் ஐம்பூதங்களிலும் நிறைந்திருப்பவன் என்ற கருத்து, இறைவன் உலகிலிருந்து வேறுபட்டவன் அல்லன்; உலகின் உள்ளார்ந்த ஆதாரம் என்பதை மாணிக்கவாசகர் கூறும்

“பூதங்கள் ஐந்தாகிப்
புலனாகிப் பொருளாகி…”

என்ற வரிகள் இறைவன் ஐம்பூதங்களாகவும், ஐம்புலன்கள் ஆகவும் உலகப் பொருட்களாகவும் விளங்குவதை சித்தரித்துக் காட்டுகின்றார்.

நிலம் - நிலைத் தன்மையின் இலக்கிய வடிவத்தின்
இயற்கைக் காட்சி: -

திருவாசகத்தில் மலை, காடு, சோலை, வயல், பூமி போன்ற நிலத்துடன் தொடர்புடைய காட்சிகள் அடிக்கடி இடம்பெறுகின்றன. இவை வெறும் இயற்கை விரிப்புகள் அல்ல; இறைவனின் அருளும், உலகைத் தாங்கும் சக்தியும் வெளிப்படும் இடங்களாகக் காட்டப்படுகின்றன.

இலக்கியப்பொருளாக நிலம் என்பது நிலைத்தன்மை, பொறுமை, தாங்கும் ஆற்றல், வளம், உயிர்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றின் அடையாளமாக அமைகிறது.

பூமி அனைத்து உயிர்களையும் சுமந்து தாங்குகிறது. அது போல இறைவன் பக்தர்களின் குற்றங்களையும் தாங்கி, அவர்களை அருளால் காப்பவன் என்ற கருத்து உருவகமாக வெளிப்படுகிறது.

மாணிக்கவாசகர் தம்மை “அடியேன்” என்று தாழ்த்திக் கூறும் போது , பூமியைப் போல இறைவனின் கருணை எல்லையற்றது என்பதை

“போற்றிஇப் புவனம் நீர்தீக்
காலொடு வானம் ஆனார்
போற்றிஐம் புலன்கள் நின்னைப்
புணர்கிலாப் புணர்க்கையானே!” (காருணியத்து இரங்கல் 70)

இப்பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**சுற்றுச்சூழல் நோக்கு: -**

நிலம் புனிதமானது; அதை அழிப்பது இறைவனின் படைப்பை அழிப்பதற்கு ஒப்பாகும் என்ற மறைமுகச்செய்தி திருவாசகத்தில் காணப்படுகிறது.

**"நீர்" அருளின் உருவகம்: -**

நீரின் இலக்கியப் பயன்பாடு பற்றி திருவாசகத்தில் மழை, ஆறு, குளம், கடல், நீராடல், கண்ணீர் ஆகிய வடிவங்களில் நீர் தோன்றுகிறது.

**அருளும் நீரும்:**

நீர் அழுக்கை நீக்குகிறது. அது போல இறையருள் ஆன்மாவின் மாசுக்களை நீக்குகிறது. பக்தரின் கண்ணீர் கூட இறைவனை அடையும் வழியாகக் காட்டப்படுகிறது.

மாணிக்கவாசகர் பல இடங்களில் தம்முடைய மனம் உருகி கண்ணீர் பெருகுவதாகக் கூறுகிறார். இந்தக் கண்ணீர் வெறும் உணர்ச்சியல்ல. அது ஆன்மீகத் தூய்மையின் அடையாளமாகும்.

**உருவகப் பொருள்: -**

நீரின் இயல்பு - ஆன்மீகப் பொருள்

ஓடுதல் - அருள் இடையறாது பெருகுதல்

தூய்மை - பாவ நிவர்த்தி

தாகம்தீர்த்தல் - ஆன்மீக நிறைவு

உயிர்க் காக்குதல் - இறையருள் வாழ்வின் ஆதாரம்

இவை அனைத்தும் உருவகப் பொருளாக சித்தரித்துக் காட்டப்படுகிறது.

**சுற்றுச்சூழல் சிந்தனை: -**

நீர் இல்லாமல் உயிர் இல்லை என்பதைப் போல, அருள் இல்லாமல் ஆன்மீக வாழ்வு இல்லை என்ற ஒப்புமை அமைக்கப்படுகிறது.

"தீ" - ஞானத்தின் ஒளி: -

சிவன் மற்றும் ஜோதி ஸ்வரூபம் சைவ இலக்கியங்களில் சிவபெருமான் பெரும்பாலும் அனல், ஜோதி, ஒளி என்ற வடிவங்களில் வர்ணிக்கப்படுகிறார். திருவாசகத்திலும் இந்த ஜோதி உருவம் மிக முக்கியமானது.

தீயின் இரட்டை தன்மை: -

தீ என்பது அழிக்கும், தூய்மைப்படுத்தும், ஒளிதரும், வெப்பம் தரும் இந்த நான்கு பண்புகளும் இறைவனின் செயல்களுடன் ஒப்பிடப்படுகின்றன.

விளக்கம்: -

அறியாமை இருள் எனில் ஞானம் தீயின் ஒளி. இறைவன் உள்ளத்தில் எழும் ஞானத்தீயால் அஹங்காரம் அழிகிறது, மாயை நீங்குகிறது, உண்மை வெளிப்படுகிறது.

இலக்கிய நயம்:-

மாணிக்கவாசகர் "உள்ளம் உருகுதல், எரிதல், அனல் போன்ற காதல், போன்ற சொற்களைப் பயன்படுத்தி பக்தியின் தீவிரத்தை தீ உருவகத்தின் மூலம் வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

தத்துவப் பொருள்: -

தீ என்பது வெறும் புறத்தீ அல்ல அது சிவஞானத்தின் அகத்தீ என்பது பற்றி விதந்தோதப் படுகின்றது.

காற்று என்பது உயிர் மூச்சின் குறியீடு: -

காற்று என்பது நாம் காணமுடியாது. ஆனால் அதன் இருப்பை உணரமுடியும். இதுவே இறைவனின் இயல்புடன் ஒப்பிடப்படுகிறது.

விளக்கம்: -

மூச்சு நிற்கும் போது உயிர் நிற்கிறது. எனவே ஒவ்வொரு மூச்சிலும் இறைவன் இருக்கிறான் என்ற உணர்வு திருவாசகத்தில் காணப்படுகிறது.

இலக்கியச் சிறப்பு:-

காற்றின் இயக்கம், பரவல், காணமுடியாமை, அனைத்திலும் புகும் தன்மை இவை அனைத்தும் இறைவன் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

பக்தன் இறைவனை வெளியில் தேடாமல், தன்னுடைய உயிர் மூச்சில் உணரவேண்டும். என்ற உள்ளார்ந்த மான் பக்தி நோக்கு இங்கு வெளிப்படுகிறது.

ஆகாயம் எல்லையற்ற பரம்பொருள் :-

ஆகாயத்தின் தத்துவம் என்று பார்த்தால் வடிவமற்றது, எல்லையற்றது , அனைத்தையும் உள்ளடக்கியது . இதுவே பரம்பொருளின் இயல்பாகச் சித்தரிக்கப்படுகிறது.

இறைவனை அளக்க முடியாது, எல்லைப்படுத்த முடியாது, ஒரு வடிவத்தில் அடைக்க முடியாது என்பதை ஆகாய உருவகம் உணர்த்துகிறது.

இலக்கிய வெளிப்பாடு: -

மாணிக்கவாசகர் இறைவனை எங்கும் நிறைந்தவன், அறிவால் அடைய முடியாதவன், அனுபவத்தால் மட்டுமே உணரப்படுபவன் என்று பாடுகிறார். இது ஆகாயத்தின் பரந்த தன்மையுடன் இணைகிறது.

சுற்றுச்சூழல் நோக்கு:-

இயற்கைக் கூறுகள் அனைத்தும் இறைவனின் வடிவங்கள் எனக் கருதப்படுவதால் அவற்றைப் பாதுகாப்பது ஒரு ஆன்மீகக் கடமையாகும் என்ற சிந்தனை உருவாகிறது.

முடிவுரை:-

திருவாசகத்தில் இயற்கைக் கூறுகள், பஞ்சபூதங்கள் வெறும் இயற்கை வருணனைகளாக அல்லாமல் இறையுணர்வு, பக்தி, தத்துவம், மனிதநேயம் மற்றும் சுற்றுச்சூழல் சிந்தனைகள் பரம்பொருள் தன்மையை வெளிப்படுத்தும் ஆழமான இலக்கியத் தத்துவச் சின்னங்களாக விளங்குகின்றன. நிலம் இறைவனைத் தாங்கும் கருணையாகவும், நீர் தூய்மைப்படுத்தும் அருளாகவும், தீ ஞான ஒளியாகவும், காற்று உயிர் மூச்சில் நிறைந்திருக்கும் இறை இருப்பாகவும், ஆகாயம் எல்லையற்ற பரம்பொருள் தன்மையாகவும் வெளிப்படுத்துகின்றது.

மாணிக்கவாசகர் இயற்கை, உயிர், இறை ஆகிய மூன்றையும் சிவமயமான உலகமாகக் கொண்டு அதன் வழியாக மனிதன் இறைவனை உணர வேண்டிய உயர்ந்த ஆன்மீகப் பாதையை

எடுத்துரைக்கிறார். எனவே திருவாசகத்தில் இயற்கைக் கூறுகளும் பஞ்சபூதங்களின் இலக்கிய வெளிப்பாடும் தமிழ் பக்தி இலக்கியத்தின் தனித்துவமான சிறப்புடன் விளங்குகின்றது.

பார்வை நூல்கள்: -

[1.] 1.புலவர் கருப்பூர் மு. அண்ணாமலை, திருவாசகம் மூலமும்,உரையும்,குமரன் பதிப்பகம், சென்னை.

[2.] 2.சாது. சு. ஸ்ரீனிவாஸ், திருவாசகம் மூலமும், உரையும், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை.

[3.] 3.சா.வே. சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 30.நற்றிணையில் சூழலியல் பதிவுகள்

**முனைவர் மு. விஜயலெட்சுமி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தனலட்சமி சீனிவாசன் கலை அறிவியல் புலம்,
தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம், திருச்சிராப்பள்ளி
vijisudhan228@gmail.com, https://orcid.org/0000-0001-5301-7998

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டையத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினை வாழ்ந்தனர். எட்டுத்தொகை நூலான நற்றிணையில் சுழலியல் பற்றிய கருத்துக்கள் நிறைந்து காணப்படுகிறது. நிலத்தின் இயற்கை அமைப்புகள், தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் மனிதர்களுக்கு இடையிலான பிரிக்க முடியாத பிணைப்பைக் குறிக்கிறது. ஐந்திணை நிலங்களையும், அதில் வாழும் உயிரினங்களின் வாழ்வியலையும் பிரிக்காமல் ஒரே சூழலியல் அமைப்பாக இந்நூல் காட்சிப்படுத்துகிறது. நற்றிணையின் சூழலியல் ஐந்திணைப் பகுப்பாக குறிஞ்சி மலை, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஒவ்வொரு நிலத்தின் தாவரங்கள், பறவைகள், விலங்குகள், இயற்கை உறவு மரங்கள், செடிகள் ஆகியவற்றை மனிதர்களின் உடன்பிறப்பாகவும், தோழிகளாகவும் கருதும் பழக்கம், உயிரியல் சமநிலை ஒவ்வொரு நிலத்தின் தட்பவெப்பநிலை, நில அமைப்பு, மழையின் தாக்கம் ஆகியவை மனிதர்களின் உணர்வுகள் மற்றும் பொருளாதாரத்தோடு எப்படி இணக்கமாகச் செயல்படுகின்றன என்பதை, நற்றிணையில் உள்ள சூழலியல் பதிவுகள் என்ற தலைப்பில் ஆய்வது நோக்கமாக அமைகிறது.

**முன்னுரை**

நல்ல ஒழுக்கமாகிய அகத்திணையைப் பற்றிக் கூறும் நூல் நற்றிணை. நல் ◌திணை நற்றிணை. திணை-ஒழுக்கம். நற்றிணை-நல்லொழுக்கம். எட்டுத்தொகையைச் சேர்ந்த அகத்திணை நூல்களில் முதலாவதாக வைத்து பாடப்படும் நூல். இதன் பெயரைக் கொண்டே அதன் சிறப்பை உணரமுடிகிறது. நற்றிணை ஒரு தொகை நூல். ஒருவரால் பாடப்பட்டதன்று பலரால் பாடப்பட்ட பாடல்களின் தொகுதி. குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் ஆகிய ஐந்திணை ஒழுக்கங்களைப் பற்றிய பாடல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஐவகை நிலங்களிலே வாழ்ந்த தமிழ் மக்களின் சிறந்த ஒழுக்கங்கள் பலவற்றை இந்நூலிலே காணலாம். தமிழர்களின் சிறந்த பண்பாடு, தமிழ்ப் பெண்களின் கற்பொழுக்கம், ஆண்களின் அசையாத அன்பு, தமிழர்களின் சிறந்த குடும்ப வாழ்க்கை, இவைகள் பற்றி இந்நூல் விளக்கமாகக் கூறும். தமிழ்ப் புலவர்களின் சிறந்த இயற்கையான கற்பனைகளையும், கவியின்பத்தையும் இதில் இடம் பெற்றுள்ள சூழலியல் கருத்துகள் எடுத்து இயம்பப்படுகின்றது.

**தரவுச் சொற்கள்**

திணை ஒழுக்கம், கடல், தாழை, ஞாழல்,

**நீர் சூழலியல்**

நீர் இல்லாமல் உலகத்தின் இயக்கம் இல்லை அதனால் தான் வள்ளுவர் புறந்தூய்மை நீரால் அமையும் என்று எடுத்துரைத்துள்ளாhர்

நற்றிணையின் முதல் பாடலிலேயே கபிலர் நீரின் இன்றியமையாமை காதலோடு ஒப்பிட்டு எடுத்தியம்பியுள்ளார். நீர் இல்லாமல் இந்த உலகம் எப்படி இயங்க முடியாதோ, அதுபோல என் காதலர் இல்லாமல் என்னால் வாழ இயலாது" என்பதை

**"நீர் இன்று அமையா உலகம் போலத்**

**தம் இன்று அமையா நம்பால்1. (நற்-1)**

என்ற பாடலின் வழி நீரின் முக்கியத்துவத்தை எடுத்தரைக்கினறார்.

**மழைநீர்**

மழை நீர் என்பது பூமியின் முதன்மையான மற்றும் தூய்மையான நீர் ஆதாரம் இதை வீணாக்காமல் சேமித்து குடிநீராகவும், வேளாண்மைக்கும் பயன்படுகின்றது. நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், வெள்ளத்தைத் தடுக்கவும் மழைநீர் சேகரிப்பு முறை உதவுகிறது. பூமியின் இயற்கையான நன்னீர் ஆதாரம் மழை நீர்தான். இது உப்புத்தன்மையற்றது மற்றும் மென்மையானது. மழை உருவாக்கம் மற்றும் நீரியல் சுழற்சிகடல் நீர் ஆவியாகி மேகமாகி மழை பொழியும் அறிவியல் உண்மையை

**"இன் நீர்த் தடங் கடல் வாயின் உண்டு"2 (நற்-115)**

என்ற பாடலின் மூலம் கடலில் உள்ள இனிய நீரை மேகங்கள் உறிஞ்சிக் கொள்கின்றன. என்ற கருத்தை எடுத்தியம்புகின்றது.

மின்னலுடன் முழங்கும் பெரும் சத்தத்துடன் நீர் நிறைந்த மேகம் பூமியிலிருந்து பெற்ற கடன் தீருமாறு மழையைப் பொழிகின்றது என்பதனை

**"வரிகொள் சாபத்து எறிகணை வெறீஇ**

**அழுந்துபடு விடரகத்து இயம்பும்**

**எழுந்துவீழ் அருவிய மலைகிழ வோனே! 3 (நற்-228)**

என்ற வரிகள், மேகம் நீரைக் கொண்டு மழையைப் பொழியும் இயற்கைச் சுழற்சியைக் காட்டுகின்றன. நீர்நிலைகளும் இயற்கை வளமும் ஆறு, குளம் மற்றும் கடல் போன்ற நீர்நிலைகளின் வருணனைகள் மிகுதியாக உள்ளன. மழைக்காலத்தில் நிலம் நீரைப் பருகுவதையும், குன்றுகள் தழைப்பதையும், அகன்ற வாயையுடைய சுனைகளில் நீர் நிறைந்து மலர்கள் பூத்துக் குலுங்குவதையும் பண்டைய காலத்து மக்கள் நீரின் முக்கியத்துவத்தை அறிந்து நீர் மேலாண்மை செய்தனர் என்பதை அறிய முடிகிறது.

தாவரங்களும் சூழலியலும்

மரங்கள் சுமார் 38 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது என்பர் மண் அரிப்பை தடுக்கவும் மண் வளத்தை மேம்படுத்தவும் எதிரிகள் வளரவும் பறவை விலங்குகள் போன்றவற்றின் உணவு மூலமாகவும் அவற்றின் வாழிடங்களாகவும் மரங்கள் அமைகின்றன நற்றிணையில் குறிஞ்சிக்குரிய மரங்களாக சந்தனம், வேங்கை, மூங்கில், முல்லை நிலத்திற்கு கொன்றை போன்ற மரங்களும் மருதத்திற்கு மருதம் போன்ற மரங்களும் நெய்தல் நிலத்தின் ஞாழல் பனை போன்ற மரங்களும் பாலை நிலத்தில் ஓமை, பாலை, கள்ளி போன்ற மரங்களும் சுட்டப்பட்டுள்ளது. மரங்கள் நிலத்திற்கு ஏற்ப வளரும் தன்மையுடையது அனைத்து மரங்களையும் அனைத்து இடங்களிலும் வளர்க்க

முடியாது. மலைப்பகுதியில் வளரக் கூடிய மரங்கள் உயரமாக வளரக் கூடியவை மண் கரைந்து போகாமல் வேர்களை பிடிக்கும் தன்மை கொண்டது

தொல்காப்பியர் அகத்திணை இயலில் கருப்பொருட்களைப் பற்றிக் கூறும்போது

**"தெய்வம் உணாவே மா மரம் புள் பறை 4 (தொல்-அகத் - 964)**

எனவும், மரபியலில் தாவரங்கள் ஓரறிவு உ டையது என்பதை

**"புல்லும் மரனும் ஓர் அறிவினவே"5 (தொல் மரபி - 28)**

என்றும் கூறுகின்றார்.

கடலின் தாக்கம் புயல் போன்றவற்றால் ஏற்படும் வெள்ளம் முதலியவற்றிலிருந்து மக்கள் தங்களை காத்துக் கொள்ள கடற்கரை ஓரங்களில் தாழை, புன்னை, ஞாழல் போன்ற மரங்களை நட்டு வளர்த்தனர். அவை அலைகளை தாங்கும் தன்மைக் கொண்டது. பாலை மரங்களை வேலியாக அமைத்திருந்தனர் அவற்றை கண்டல் வேலி என்று குறிப்பிடுவர்.இச்செய்தியினை

**"குருகின்**
**வெண் புறம் மொசிய வார்க்கும், தெண் கடல்**
**கண்டல் வேலிய ஊர், அவன்**
**தெண்திரை மணிப் புறம் தைவரும்"6 (நற்-74 6-10)**

என்ற பாடல் அடியின் மூலம் மரங்கள் அரணாக அமைந்து இயற்கை சீற்றத்திலிருந்தும் மக்களை பாதுகாத்துள்ளது என்பதை அறியமுடிகிறது. மேலும் மரம் செடி கொடிகளில் தேவையை உணர்ந்து இருந்ததால் சங்கத் தமிழர்கள் அவற்றை தங்களின் உறவாகக் கொண்டனர் தங்களுடைய கருத்துக்களை விளக்குவதற்கு செடி, கொடிகள் போன்றவற்றை பயன்படுத்தினர் தான் வளர்த்த புன்னை மரத்தை தன் சகோதரியாக கருதிய தலைவி தலைவனை அதனை கீழ் சந்திக்க மறுக்கிறாள்

**"நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது நலனே" 7(நற் 172)**

என்ற பாடல் வரிகள் மூலம் புன்னை மரத்தை தங்கள் இல்லத்தில் ஒருவராக கொண்டதோடு புன்னையை மறு உற்பத்தி செய்ததையும் அறிய முடிகிறது. தினை விதைத்து அவற்றை அதிகமாக விளைவித்ததையும் தலைவி தன் வீட்டில் செடிகள் மரங்கள் போன்றவற்றை வளர்க்கும் தன்மை உடையவர்களாக இருந்திருக்கிறார் என்பதையும் இதன் மூலம் அறிய முடிகின்றது.

**ஆலமரம்**

ஆலமரம் பரந்து விரிந்து காணப்படும் மரம். ஆதனை மன்னனோடு ஒப்பிட்டு கூறு கிறார். அமைச்சரை ஆலமரத்தின் விழுதுகள் போல மன்னன் தாங்க வேண்டும். அரசன் தன் கீழ் உள்ளோரை நோக்கி சொல்லிய வினையை முடிக்காமல் மறுத்தால் ஆலமரம் எனச் சொல்ல மற்றவன் பூலா மரம் என சொல்வதற்கு ஒப்பாகும். ஆலமரத்தில் வேர்ளைச் செல்லறித்து சென்றாலும் மரம் விழாமல் விழுந்து தாங்கிக் கொள்ளும் தன்மயுடையது ஆலமரம் நிழலை தந்து பாதுகாக்கும் ஆலம் விதை சிறியதானாலும் பெரிய மரத்தை தரும் என்பது அனைவரும் அறிந்தது.

ஆலம் விதை சிறிய மீன் இடும் முட்டையை விட சிறியதானாலும் பெரும் படையுடன் பாசறை அமைத்து ஓய்வெடுக்கும் அளவிற்கு நிழலை தருகிறது. இதனை

**ஆலம் வீழ் போல் அமைச்சன் வேலின் 8 (திரிக்-33)**

என்ற பாடல் அடிகளால் ஆலமரத்தின் பயனை அறிந்து கொள்ள முடிகிறது. தலைவியை தலைவன் உடன் போக்கில் அழைத்து சென்றபோது வானம் வைத்து விட்டது வானத்திலிருந்து விழும் நுண்ணிய துளிகள் மாறிவிட்டன ஆகவே இருவரும் காற்றுள்ள அழகிய காட்டில் ஆலமரத்தின் நிழலிலே தங்கி தளர்ச்சி நீக்கி செல்வோம் என்று கூறுகிறான் இதனை

**வருமழை சுரந்த வாழ் நிற விசும்பின்**

**நுண்துளி மாறிய உலவை அம்காட்டு**

**ஆல நீழல் அசைவு நீக்கி 9(நற்- 76)**

என்ற பாடல் மூலம் தக்க சமயத்தில் மரங்கள் மனிதனுக்கு உதவுபவையாகவும் இருந்தமையை எடுத்துரைக்கின்றது

மாமரம்

நன்கு காய்த்த மாமரம் கல்லடியால் துன்பப்படும் மாமரம் தென்றல் வீசினால் தளிர் விடும் என்றும் புயல் வீசினால் அலப்புறும் என்றும் வெற்றி பெறும் காலம் ஒருவருக்கு வாழ்ந்தால் மந்திர கோளால் மாமரத்தில் இருந்து மாங்காயை விழ வைக்க முடியும் என கூறப்பட்டுள்ளது இதனை

**கல்மேல் இலங்குமலை நாட மாக்காய்த்துத்**

**தன்மேல் குயிண் கொள்ளுமாறு. 10 (பழமொழி 129)**

என்ற பாடல் அடிகளால் மாமரத்தினை பற்றி அறிய முடிகின்றது. வினைமுடித்து தலைவன் தான் திரும்புவதாக சொன்ன பருவம் வந்ததை உணர்ந்த தலைவன் தலைவியை நினைத்து வருந்துவார் என தன் நெஞ்சுக்கு உரைப்பதை

**“இணர் துதை மாஅத்; த புணர்குயில் விளித்தோறும்**

**நம்வயின் நினையும் நெஞ்சமோடு” 11(நற் 157)**

என்ற நற்றிணைப்பாடல் விளக்குகின்றது. பிறகு இளவேனில் காலத்தில் பூங்கொத்துகள் நெருங்கிய மாமரத்தில் நெருங்கி குயில்கள் கூவுந்தோறும் என் தலைவிக்கு என் நினைவு வருமே என தலைவன் வருந்துவதை இப்பாடல் விளக்குகின்றது. மற்றொரு பாடலில் மாமர சோலை தோறும் தங்கி இருக்கும் பூ போன்ற கண்களை உடைய கரிய குயில்கள் வாழ்க்கை என்பது சூதாடும் கருவி மாறி விழுவது போல நிலை இல்லாதது அதனால் காதலியை விட்டு பிரியாதீர்கள் என்று சொல்வதாக அமைகிறது. இதனை

**“அலங்குசினை பொருளிய நறுவாடி மாஅத்துப்**

**பொதும்புத்தோறும் அல்கும் பூங்கண் இருங்குயில்**

**கவறுப்பெயர் தன்னநில்லா வாழ்க்கைஇட்டு”12 (நற்-243)**

என்ற பாடல் வரி எடுத்தியம்புகின்றது

**வேப்பமரம்**

சங்க காலத்தில் வேம்பு என்பது பாண்டிய மன்னன் குடி பூவாக இருந்தது மேலும் வேப்பமரத்தின் அனைத்து பகுதிகளும் சிறந்த கிருமி நாசினியாக பயன்பட்டது.

போர்க்காலங்களுக்கு சிகிச்சை அளிக்க வேப்ப இலைகளை பயன்படுத்தினர். புல்லிய காம்புகளும் சிறிய இலைகளை உடையதுமான வேப்ப மரத்தின் பெரிய கிளைகளை யானைகள் முறித்தது என்ற செய்தியை

**"நெஞ்சே புன்கால்**
**சுறியிலை வேம்பின் பெரிய கொன்று 13 (நற்-103)**

எனும் பாடல் வரிகள் வேப்பமரம் பற்றிய குறிப்பிடுகிறது

மரங்களை வெட்டுதலால் சுற்றுச்சூழலுக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் பாதுகாவலாக விளங்கும் மரங்களை வெட்டுதல் அறம் அற்ற செயலாக சங்கத்தமிழர் கருதினர்.

**பறவைகளும் சூழலியலும்**

வலசை போதல் பறவைகள் இனப்பெருக்கத்திற்காகவும் வெப்பம் குடி போன்ற இயற்கை காரணங்களுக்காகவும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சென்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாழும் அவ்வாறு பறவைகள் ஓரிடத்தில் இருந்து வேறொரு இடத்தில் செல்வதை வலசை போதல் என்கிறோம். இக்கருத்து வெள்ளிவீதியார் சிறிய வெண்மையான பொறுப்பு பறவையை எம்முடைய ஊருக்கு வந்து தெளிந்த மீனை தின்று பின் உன் ஊருக்குச் செல்லும்போது என் தலைவனிடம் என் துன்பத்தை சென்று கூறுவாயாக என்பதை

**"சிறு வெள்ளாங்குருகே! சிறு வெள்ளாங்குருகே!**
**துறை போகு அறுவைத் தூ மடி அன்ன**
**நிறம் கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே**
**எம் ஊர் வந்து, எம் உண்துறைத் துழைஇ, !"14 (நற் 70)**

என்று நற்றிணைப் பாடல் மூலம் பறவைகள் வலசை போதல் மற்றும் அதன் காரணத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் நெய்தல் நிலப்பறவைகள் நிலமின்றி நிலம் வந்தது. இதே கருத்தை புலவர் பாடல் அடிகளிலும் விளக்குகிறது தலைவனின் பிரிவால் வாடிய தலைவிணை கதிர்களை உண்ண வந்த கிளியை நோக்கி திணையை உண்ட பின் தலைவருடைய மலைக்குச் சென்றால் அங்கு தன் தலைவனையும் கண்டு வர வேண்டும் என்பதை

**"கொடுங்குரற் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி**
**அஞ்சல் ஓம்பி, ஆர்பதம் கொண்டு,**
**நின்குறை முடித்த பின்றை, என்குறை**
**செய்தல் வேண்டுமால்; கைதொழுது இரப்பன்:**
**பல்கோட் பலவின் சாரல் அவர்நாட்டு**
**நின்கிளை மருங்கின் சேறி ஆயின்,**
**அம்மலை கிழவோற்கு உரைமதி—இம்மலைக்**
**கானக் குறவர் மடமகள்**
**ஏனக் காவல் ஆயினள் எனவே 15( (நற் -102)**

என்ற பாடலின் வழி கிளிகள் ஓரிடத்தில் இருந்து பல இடங்களுக்கு உணவு தேடிச் செல்லும் தன்மையை அறிய முடிகிறது பேணுதல் ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் தங்களுடைய உணவு தேவைக்காக மட்டுமே பிற உயிர்களை ,ணைப்பை அறிஞர் பெரிய காரணத்திற்காகவும்

எந்த உயிரையும் கொள்வதில்லை அவ்வாறு கொன்றால் அவை சூழ்நிலை பாதிக்கின்றது என்பதை அறிந்தே இருந்தனர் தலைவியை சந்திக்க வந்த தலைவர் எந்த உயிரினங்களுக்கும் இடையூறும் ஏற்படக்கூடாது என்ற கருதினால் நெய்தி நிலத்தில் தன்னுடைய பெயரை உணர்ந்து வரும்போது நண்டுகள் தேர்காலால் அழிந்து விடாமல் இருக்க தேரை விலைக்கி ஓட்டினான் இக்கருத்தை

**“ஆழி மருங்கி அலவன் ஓம்;பி**

**வலவன் வந்து ஆய்ந்;து ஊர” 16 (நற்-7)**

என்ற நற்றிணை பாடல் வழி தமிழ் மாந்தர்கள் எந்த உயிரினையும் தேவையின்றி கொள்ளமாட்டார்கள் என்ற கருத்தை எடுத்துரைக்கின்றது.

முடிவுரை

சங்ககால மக்கள் மரங்கள், விலங்குகள், பறவைகள் போன்ற அனைத்தும் வாழ்வியலோடு தண்ணில் இணைந்திருக்கின்றதை உணர்ந்திருந்தனர் தங்கள் நூல்களில் எந்த இடத்திலும் சூழலியல் கருத்துக்களை வலியுறுத்த வில்லை. ஆனால் சூழலோடு ஒன்றி அவர்களுக்கு உட்பட்ட நிலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு உரிய உணவு அல்லது அவர்களின் வாழ்வை எந்த உயிர்க்கும் ஊறு விளைவிக்காமல் வாழ்ந்தனர். இயற்கையையும் சூழலையும் பேணி பாதுகாத்தனர் என்பதை நற்றிணைத்து வழி அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

[1]. ஔவை சு. துரைசாமிபிள்ளை நற்றிணை கௌரா பதிப்பகம் சென்னை - 2006.

[2]. எம்.நாராயண வேலுபிள்ளள. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள். நர்மதா பதிப்பகம் 2023.

[3]. தொல்காப்பியம் பொருளதிகாரம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருநெல்வேலி

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 31.நீலகிரியில் வாழும் கோத்தர் பழங்குடி மக்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அடையும் சிக்கல்கள்

**நா.யாதவ் குமார்,**
முதுகலைத் தமிழ் இண்டாமாண்டு, பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்

**ஆய்வுச் சுருக்கம்**

நீலகிரி மலைப்பகுதியில் வாழும் கோத்தர் பழங்குடி மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பாரம்பரிய அறிவையும், அவர்கள் எதிர்கொள்ளும் சமகால சிக்கல்களையும் ஆய்வு செய்கிறது. இயற்கையுடன் இணைந்து வாழும் கோத்தர் மக்களின் வாழ்க்கை முறை, சுற்றுச்சூழல் சமநிலையை பேணுவதில் முக்கிய பங்காற்றுகிறது. ஆனால் நவீனமயமாதல், காடு அழிவு, காலநிலை மாற்றம், சமூக பின்னணி போன்ற காரணிகளால் அவர்களின் வாழ்க்கை முறையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைகளும் பாதிக்கப்படுகின்றன. இவ்வாய்வு, இச்சிக்கல்களின் காரணங்கள் மற்றும் விளைவுகள் விரிவாக ஆராய்கிறது. மேலும், கோத்தர் மக்களின் பாரம்பரிய அறிவை பாதுகாப்பதன் அவசியத்தையும், நிலையான வளர்ச்சிக்கான அவர்களின் பங்களிப்பையும் வலியுறுத்துகிறது.

**திறவுச் சொற்கள் :** கோத்தர் பழங்குடி மக்கள், நீலகிரி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பாரம்பரிய அறிவு, காலநிலை மாற்றம், காடு அழிவு, நிலையான வளர்ச்சி, பழங்குடி வாழ்வியல்

**முன்னுரை**

நீலகிரி மலைப்பகுதி இயற்கை வளங்களால் செழித்து விளங்கும் ஒரு முக்கியமான உயிரியல் மண்டலமாகும். இப்பகுதியில் வாழும் கோத்தர் பழங்குடி மக்கள், இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையால் தனித்துவம் பெற்றவர்கள். இதனை வலியுறுத்தும் வகையில் திருவள்ளுவர்,

"**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகம்**
**தண்இன்று தானே மழை**"

(திருக்குறள் 11)

என்று கூறுகிறார். மழை இல்லையெனில் உலகமே இயங்காது என்பதைக் காட்டும் இக்குறள், இயற்கை வளங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. மரங்கள், நீர்நிலைகள், மலைகள் ஆகியவற்றை புனிதமாகக் கருதி பாதுகாக்கும் பண்பாடு இவர்களிடம் காணப்படுகிறது. இவர்களின் பாரம்பரிய அறிவு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கிய பங்காற்றுகிறது. எனினும், சமகால வளர்ச்சி மற்றும் சமூக மாற்றங்களால் அவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாய்வு, கோத்தர் மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் அவர்கள் சந்திக்கும் சிக்கல்களை ஆராய்வதற்காக மேற்கொள்ளப்படுகிறது.

**கோத்தர் பழங்குடி மக்களின் வரலாறு மற்றும் அடையாளம்**

கோத்தர் பழங்குடி மக்கள் நீலகிரி மலைப்பகுதியில் பழங்காலத்திலிருந்தே வாழ்ந்து வரும் ஒரு முக்கியமான பழங்குடி இனமாகும். இவர்களின் வரலாறு இயற்கையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டதாகும். சமூக அமைப்பு, பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் வாழ்வியல்

முறைகள் அனைத்தும் இயற்கையை மையமாகக் கொண்டவை. இவர்களின் அடையாளம் மொழி, உடை, வழிபாட்டு முறைகள் மற்றும் தொழில் சார்ந்த பண்பாடுகள் மூலம் வெளிப்படுகிறது. தங்களுக்கென தனித்துவமான கலாச்சார மரபுகளை தலைமுறைகளாகப் பேணிக் கொண்டு வந்துள்ளனர். கோத்தர் மக்களின் வாழ்வியல் எளிமை, ஒற்றுமை மற்றும் இயற்கை சார்ந்த பண்புகளைக் கொண்டதாகும். அவர்கள் சிறிய குடியிருப்புகளில் குடும்பங்களாக வாழ்ந்து, சமூக ஒற்றுமையைப் பேணுகின்றனர். கலை, இசை மற்றும் கைவினை தொழில்களில் இவர்களுக்கு தனித்திறன் உள்ளது. திருவிழாக்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் இயற்கையுடன் இணைந்ததாகும். பாரம்பரிய உடைகள் மற்றும் உணவு பழக்கவழக்கங்கள் அவர்களின் கலாச்சார அடையாளத்தை வெளிப்படுத்துகின்றன.

**இயற்கையுடன் கொண்டுள்ள உறவு**

கோத்தர் மக்கள் இயற்கையை ஒரு வாழ்வாதார மூலமாக மட்டுமல்லாமல், ஒரு ஆன்மீக சக்தியாகக் கருதுகின்றனர். காடுகள், மலைகள் மற்றும் நீர்நிலைகளை புனிதமாகக் கருதி பாதுகாக்கின்றனர். மரங்களை வெட்டுவது அல்லது இயற்கைக்கு சேதம் விளைவிப்பது தவிர்க்கப்படுகிறது. மனிதன் மற்றும் இயற்கை இடையே சமநிலையைப் பேணுவது இவர்களின் முக்கிய கொள்கையாகும். கோத்தர் மக்களிடம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான பல பாரம்பரிய முறைகள் உள்ளன. இயற்கை விவசாயம், மண் பாதுகாப்பு, நீர் மேலாண்மை போன்ற நடைமுறைகள் தலைமுறைகளாகப் பின்பற்றப்படுகின்றன. விலங்குகளை பாதுகாப்பது, மரங்களை வளர்த்தல், நீர்நிலைகளை சுத்தமாக வைத்தல் போன்ற செயல்கள் இவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். இத்தகைய முறைகள் நிலையான வளர்ச்சிக்கு உதவுகின்றன.

**காடு அழிவு மற்றும் அதன் தாக்கங்கள்**

காடு அழிவு கோத்தர் மக்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சாலை அமைத்தல், தொழில்துறை வளர்ச்சி மற்றும் சுற்றுலா காரணமாக காடுகள் குறைந்து வருகின்றன. இதனால் உயிரியல் பல்வகைமை பாதிக்கப்படுகிறது. மேலும், காடுகளின் மீது சார்ந்துள்ள கோத்தர் மக்களின் வாழ்வாதாரம் சிக்கலுக்குள்ளாகிறது. நவீனமயமாதல் கோத்தர் மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்காக இளம் தலைமுறைகள் நகரங்களுக்கு இடம்பெயர்கின்றனர். இதனால் பாரம்பரிய அறிவு மங்குகிறது. சமூக ஒற்றுமை குறைகிறது மற்றும் கலாச்சார மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**காலநிலை மாற்றத்தின் விளைவுகள்**

காலநிலை மாற்றம் கோத்தர் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் முக்கிய காரணமாகும். மழைப்பொழிவு மாறுபாடு, வெப்பநிலை உயர்வு மற்றும் நீர் பற்றாக்குறை போன்றவை விவசாயத்தை பாதிக்கின்றன. இதனால் உணவு பாதுகாப்பு குறைகிறது மற்றும் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படுகிறது. அரசின் காடு பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் கொள்கைகள் சில நேரங்களில்

கோத்தர் மக்களின் பாரம்பரிய வாழ்க்கையை கட்டுப்படுத்துகின்றன. காடு வளங்களைப் பயன்படுத்துவதில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்றன. அவர்களின் நில உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் சரியாக பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

**சுற்றுலா வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு**

நீலகிரி பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சி அதிகரித்து வருகிறது. இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவினாலும், சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. குப்பை மேலாண்மை சிக்கல்கள், நீர் மாசுபாடு மற்றும் இயற்கை வளங்களின் அதிகப்படியான பயன்பாடு போன்றவை கோத்தர் மக்களின் வாழ்விட சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. வளங்களின் பற்றாக்குறை மற்றும் வாழ்வாதார சிக்கல்கள் நில வளங்கள் குறைதல், நீர் பற்றாக்குறை மற்றும் மண் தரம் குறைதல் போன்றவை கோத்தர் மக்களின் வாழ்க்கையை சிரமப்படுத்துகின்றன. இதனால் அவர்கள் மாற்று தொழில்களை நாட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது பாரம்பரிய வாழ்வியல் முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

**சிக்கல்களின் சமூக மற்றும் பொருளாதார விளைவுகள்**

சுற்றுச்சூழல் சிக்கல்கள் கோத்தர் மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை பாதிக்கின்றன. வாழ்க்கைத் தரம் குறைகிறது, வேலை வாய்ப்புகள் குறைகின்றன மற்றும் சமூக ஒற்றுமை பாதிக்கப்படுகிறது. பாரம்பரிய அறிவு அழியும் அபாயம் உருவாகிறது. கோத்தர் மக்களின் பாரம்பரிய அறிவை பாதுகாக்க அரசு மற்றும் சமூக அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்களில் அவர்களைச் சேர்க்க வேண்டும். நிலையான வளர்ச்சி முறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

கோத்தர் மக்களின் பாரம்பரிய அறிவு நிலையான வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைகிறது. இயற்கை வளங்களை அளவோடு பயன்படுத்தும் அவர்களின் நடைமுறைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவர்களின் அனுபவத்தை பயன்படுத்துவது நிலையான வளர்ச்சிக்கு உதவும்.

**முடிவுரை**

கோத்தர் பழங்குடி மக்கள் இயற்கையுடன் இணைந்து வாழும் ஒரு முக்கியமான சமூகமாக உள்ளனர். அவர்கள் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் சிக்கல்கள் கவனிக்கப்பட வேண்டியவை. இயற்கையின் சக்தியையும் அவசியத்தையும் உணர்த்தும் வகையில் திருவள்ளுவர், “**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று அங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை**” (திருக்குறள் 15) என்று கூறுகிறார். இந்தக் குறள் இயற்கை மனித வாழ்வை உருவாக்கவும் அழிக்கவும் வல்லது என்பதை உணர்த்துகிறது. எனவே,அவர்களின் பாரம்பரிய அறிவை பாதுகாத்து, நிலையான

வளர்ச்சி முறைகளை நடைமுறைப்படுத்துவது அவசியமானது. இதன் மூலம் சுற்றுச்சூழல் மற்றும் மனித வாழ்வு இடையிலான சமநிலையை பேண முடியும்.

**துணை நின்றவை**

[1]. கா. சிவத்தம்பி – தமிழ் சமூகமும் கலாச்சாரமும் – சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2005.

[2]. கு. வே. பாலசுப்பிரமணியம் – சுற்றுச்சூழல் கல்வி – சென்னை: தமிழ்நாடு பாடநூல் கழகம், 2014.

[3]. கள ஆய்வு செய்த இடம்: குந்தா கோத்தகிரி, கோத்தகிரி

# 32.புறநானூற்றில் சுற்றுச்சூழல் சிந்தனைகள்

**முனைவர் ஜோ. செல்வக்குமார்,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 002.
E. mail: j.selva007@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**
சங்க இலக்கியங்கள் மனித வாழ்க்கையை இயற்கையோடு இயைந்த ஒன்றாகவே சித்தரிக்கின்றன. அவற்றுள், போரையும் புறவாழ்க்கையையும் பாடும் **'புறநானூறு'** வெறும் வீரத்தையும் கொடையையும் பற்றி மட்டும் பேசவில்லை; மாறாக, அக்கால மக்களின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, நில மேலாண்மை, நீர் பாதுகாப்பு, பல்லுயிர் ஓம்பல் (**Biodiversity**) மற்றும் இயற்கைச் சமநிலை ஆகியவற்றை மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளது. இக்கட்டுரை, புறநானூற்றுப் பாடல்களில் பொதிந்துள்ள சுற்றுச்சூழல் சிந்தனைகளை நவீன சூழலியல் கோட்பாடுகளோடு (**Eco-criticism / Deep Ecology**) ஒப்பிட்டு முழுமையாக ஆராய்கிறது.

## 1. அறிமுகம் (Introduction)

நவீன உலகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று **சுற்றுச்சூழல் சீர்கேடு** ஆகும். மனிதமையக் கோட்பாடு (**Anthropocentrism**) இயற்கையை வெறும் நுகர்பொருளாகப் பார்த்ததன் விளைவே காலநிலை மாற்றமும் இயற்கை வளச் சுரண்டலும் ஆகும்.

ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்த பழந்தமிழர்கள் **இயற்கைமையக் கோட்பாட்டை (Ecocentrism)** அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தனர். 'புறநானூறு' வீரத்தைப் பேசும் இலக்கியமாக அறியப்பட்டாலும், அதன் பாடல்களுக்குள் இயற்கையைப் பாதுகாப்பதற்கான நெறிமுறைகளும், நீர் மேலாண்மையும், பல்லுயிர் பாதுகாப்பும் ஆழமாகப் பின்னப்பட்டுள்ளன.

## 2. நில மேலாண்மையும் திணைக்கோட்பாடும் (Land Management & Eco-zones)

சங்க காலத் தமிழர்கள் நிலத்தை அதன் இயற்கை அமைப்பிற்கேற்ப ஐந்து திணைகளாகப் பிரித்தனர். புறநானூற்றில் நிலத்தின் வளம் மற்றும் பயிர் மேலாண்மை பற்றிய செய்திகள் விரிவாக இடம்பெறுகின்றன.

*"நிலன் நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்*
*தட்டோர் அம்ம இவண் தட்டோரே"*
**— குடபுலவியனார் (புறநானூறு: 18)**

நிலத்தின் அமைப்பையறிந்து, பல்லுயிர்களுக்கும் நீர் கிடைக்கும் வகையில் நீர்நிலைகளை உருவாக்குபவர்களே உலகத்தில் நிலையான புகழைப் பெறுவார்கள் என்பதை இப்பாடல் சுட்டுகிறது.

## 3. நீர் மேலாண்மையும் நீர்நிலைப் பாதுகாப்பும் (Water Management)

புறநானூற்றுப் புலவர்கள் மன்னர்களுக்கு வழங்கிய அறிவுரைகளில் முதன்மையானது நீர் மேலாண்மை ஆகும்.

- **உணவுப் பாதுகாப்புக்கு நீர் அடிப்படை:** உணவெனப்படுவது நிலத்தொடு நீரே என்ற உண்மையைச் சங்கச் சான்றோர்கள் உணர்ந்திருந்தனர்.
- **நீர்நிலை உருவாக்கம்:** மழைக் காலங்களில் பாயும் நீரையும் நிலத்தடி நீரையும் சேமிக்க ஏரிகள், குளங்கள் (தடங்கள்) வெட்டுவதை அறமாகக் கருதினர்.

| **நீர் மேலாண்மைக் கூறுகள்** | **புறநானூற்றுப் பதிவு** | **நவீன சூழலியல் முக்கியத்துவம்** |
|---|---|---|
| **நீர்நிலை அமைப்பு** | நிலத்தின் தாழ்வான பகுதிகளில் நீரைத் தேக்குதல் | நிலத்தடி நீர்மட்டம் உயர்வு |
| **ஆற்றுப் பாசனம்** | ஆற்று வெள்ளத்தைக் கரைகட்டிப் பயிர்களுக்குப் பாய்ச்சுதல் | மண் அரிப்புத் தடுப்பு & வேளாண் உற்பத்தி |
| **பல்லுயிர் தாகம் தீர்த்தல்** | விலங்குகளும் பறவைகளும் நீர் அருந்த வழியமைத்தல் | சுற்றுச்சூழல் சமநிலை (Ecological Balance) |

### 4. பல்லுயிர் ஓம்பலும் விலங்குசார் அறமும் (Biodiversity & Animal Ethics)

புறநானூற்றில் மனிதன் இயற்கையின் ஒரு அங்கமே தவிர, அதற்கு எஜமானன் அல்ல என்ற **ஆழ் சூழலியல் (Deep Ecology)** சிந்தனை காணப்படுகிறது.

#### 4.1. வேள்பாரியின் இயற்கை அறம்

பறம்பு மலையை ஆண்ட பாரி மன்னன், முல்லைக்கொடி படர்வதற்குத் தன் தேரையே கொடுத்த செய்தியும் (புறம்: **108),** மயிலுக்குப் போர்வை அளித்த பேகனின் செயலும் (புறம்: **141)** மனிதன் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் மீது காட்டிய பேரன்பிற்குச் சான்றுகளாகும்.

#### 4.2. போர்க்காலச் சூழலியல் அறம்

போர் தொடங்குவதற்கு முன் பசுக்கள், பார்ப்பனர்கள், பெண்கள், நோயாளிகளோடு **மழலைப்பேறு இல்லாதவர்கள் மற்றும் விலங்கினங்களுக்கும்** தீங்கு நேரக்கூடாது என எச்சரிக்கும் மரபு புறநானூற்றில் உள்ளது.

*"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்...*
*எம்அம்பு கடி விடுதும் நும்அரண் சேர்மின்"*

**— நெட்டிமையார் (புறநானூறு: 9)**

### 5. இயற்கைச் சமநிலையும் இயற்கைச் சீற்ற எச்சரிக்கையும்

இயற்கையை அளவுக்கு அதிகமாகச் சுரண்டினால் அது பேரழிவை ஏற்படுத்தும் என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்துகின்றன.

- **வளங்களை அழித்தலின் விளைவு:** பகை நாட்டின் வயல்களையும் மரங்களையும் அழிக்கும் 'பகைப்புலம் அழித்தல்' செயலானது, நாட்டின் பொருளாதாரத்தையும் சூழலையும் எவ்வாறு பாழ்படுத்தும் என்பதைப் புலவர்கள் சுட்டிக்காட்டி மன்னர்களைத் தடுத்துள்ளனர்.
- **மரங்களின் முக்கியத்துவம்:** 'கடிமரம்' (காவல் மரம்) வெட்டப்படும்போது அதை ஒரு நாட்டின் வீழ்ச்சிக்கான குறியீடாகப் புறநானூறு சித்தரிக்கிறது.

### 6. முடிவுரை (Conclusion)

புறநானூறு காட்டும் சுற்றுச்சூழல் சிந்தனைகள் வெறும் கடந்த காலப் பதிவுகள் அல்ல; அவை நவீன உலகிற்குத் தேவையான **வளர்குன்றா வளர்ச்சிக்கான (Sustainable Development)** வழிகாட்டிகளாகும்.

1. **இயற்கையை மதித்தல்:** மனித மையப் பார்வையிலிருந்து விலகி இயற்கை மையப் பார்வையை வளர்த்தல்.

2. **வளப் பாதுகாப்பு:** நீரையும் நிலத்தையும் எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாத்தல்.
3. **பல்லுயிர் பாதுகாப்பு:** தாவரங்கள் மற்றும் விலங்கினங்களோடு இணைந்து வாழும் சூழலியல் அறத்தைப் பின்பற்றுதல்.

இன்றைய உலகளாவிய சுற்றுச்சூழல் சிக்கல்களுக்குச் சங்க இலக்கியம் காட்டும் இயற்கை சார்ந்த வாழ்வியலே சிறந்த தீர்வாக அமையும்.

References:

**[1.]** Glotfelty, Cheryll, and Harold Fromm, editors. *The Ecocriticism Reader: Landmarks in Literary Ecology*. U of Georgia P, 1996.

[2.] Kailasapathy, K. *Tamil Heroic Poetry*. Oxford UP, 1968.

[3.] Ramanujan, A. K., translator and editor. *Poems of Love and War: From the Eight Anthologies and the Ten Long Poems of Classical Tamil*. Columbia UP, 1985.

[4.] Selvakumar, V. "Caṅkam Texts with Special Reference to Puṟanāṉūṟu: An Ecocritical Approach." *Journal of Tamil Studies*, vol. 82, no. 1, 2012, pp. 45–58.

[5.] Selvamony, Nirmal. "Tinai Poetics and Eco-criticism." *Essays in Ecocriticism*, edited by Nirmal Selvamony et al., Sarup & Sons, 2007, pp. 115–32.

[6.] Sivathamby, Karthigesu. *Studies in Ancient Tamil Society: Economy, Society, and State Formation*. New Century Book House, 1998.

[7.] Tolkappiyar. *Tolkappiyam: Porulatikaram*. Translated by S. Ilakkuvanar, Kural Neri Publishing, 1963.

[8.] Zvelebil, Kamil. *The Smile of Murugan: On Tamil Literature of South India*. E. J. Brill, 1973.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 33.பழங்குடி இன மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**பெயர் : பெ.கவிதா**
முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி. தொலைபேசி எண் : 7358920119
மின்னஞ்சல்: Kavithaperiyasamyk@gmail.com

**முனைவர் தா. லதா,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 002.

**ஆய்வுச்சுருக்கம்:**

பழங்குடி இன மக்கள் இயற்கையுடன் இணைந்து வாழும் வாழ்க்கை முறையைக் கொண்டவர்கள். காடுகள், மலைகள், ஆறுகள் மற்றும் இயற்கை வளங்களை தங்களின் வாழ்வாதாரமாக மட்டுமல்லாமல், புனிதமானதாகவும் கருதி பாதுகாத்து வருகின்றனர். மரங்களை அளவுக்கு அதிகமாக வெட்டாமல், விலங்குகளை தேவைக்கு ஏற்ப மட்டுமே வேட்டையாடி, நீர்நிலைகளை மாசுபடுத்தாமல் பாதுகாக்கும் பழக்கவழக்கங்களைப் பின்பற்றி வருகின்றனர். மேலும், மூலிகை மருத்துவம், பாரம்பரிய வேளாண்மை மற்றும் இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் அறிவும் அவர்களிடம் காணப்படுகிறது.

இவ்வாய்வு, பழங்குடி இன மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறைகள், அவர்களின் பாரம்பரிய அறிவு மற்றும் அவை இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு வழங்கும் பங்களிப்பை ஆராய்கிறது. நவீன வளர்ச்சி, காடழிப்பு, நகரமயமாக்கல் போன்ற காரணங்களால் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மரபுகளும் பாதிக்கப்படுகின்றன என்பதையும் இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

**முன்னுரை :**

**"கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளோடு**
**முன்தோன்றி மூத்த குடி"**

என்ற புறப்பொருள் வெண்பாமாலை வரிகளுக்கு இலக்கணமாகத் திகழ்பவர்கள் நம் பழங்குடி இன மக்கள் ஆவர். நாகரிகத்தின் தொட்டில் எனப்படும் நகரங்கள் தோன்றுவதற்கு முன்பே, இயற்கையோடு இயைந்த வாழ்வியலைத் தொடங்கியவர்கள் இவர்கள். இன்று உலகமே 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' மற்றும் 'புவி வெப்பமயமாதல்' குறித்துப் பேசிக் கொண்டிருக்கும் வேளையில், பல நூற்றாண்டுகளாக இயற்கையைத் தங்களின் தாயாகவும், கடவுளாகவும் கருதிப் பாதுகாத்து வரும் பழங்குடியினரின் பங்களிப்பு அளப்பரியது. இக்கட்டுரை, பழங்குடி மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறைகளையும் அவர்களின் வாழ்வியல் நெறிகளையும் விரிவாக ஆராய்கிறது.

**இயற்கையை இறைவனாகக் கருதும் வாழ்வியல்**

பழங்குடி மக்களின் ஆன்மீகமும் வாழ்வியலும் இயற்கையோடு பிணைக்கப்பட்டுள்ளன. காடுகள், மலைகள், விலங்குகள் மற்றும் மரங்களை அவர்கள் வெறும் நுகர்வுப் பொருட்களாகப் பார்ப்பதில்லை; மாறாகத் தங்களின் உடன்பிறப்புகளாகக் கருதுகின்றனர்.

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை." (குறள்: 322)**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

அனைத்து உயிர்களையும் சமமாகக் கருதி, உணவைப் பகிர்ந்துண்டு, பிற உயிர்களைப் பாதுகாப்பதே அறங்களில் தலைசிறந்தது என்னும் வள்ளுவனின் வாக்கிற்கு ஏற்ப வாழ்பவர்கள் பழங்குடிகள். தங்களுக்குத் தேவையான கிழங்குகள், தேன், மூலிகைகள் போன்றவற்றைச் சேகரிக்கும் போது கூட, அந்தத் தாவரத்தின் வேரோ அல்லது இனமோ அழிந்துவிடாத வண்ணம் ஒரு பகுதியை அடுத்த தலைமுறைக்காகவும் பிற உயிரினங்களுக்காகவும் விட்டுச் செல்லும் உன்னதப் பண்பு இவர்களிடம் மட்டுமே உண்டு. இவர்கள் இயற்கை மீது கொண்ட அன்பையும் பாதுகாப்பையும் நாமும் பின்பற்ற கடமைப்பட்டவர்கள் என்பதை உணர வேண்டும்.

**பாரம்பரியக் காடுகளின் பாதுகாப்பு :**

பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் 'கோவில் காடுகள்' அல்லது 'புனிதக் காடுகள்' (Sacred Groves) என்ற வழக்கம் உள்ளது. குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட காட்டுப்பகுதியைத் தங்களின் குலதெய்வம் வாழும் இடமாகக் கருதி, அங்குள்ள மரங்களை வெட்டுவதையோ, விலங்குகளை வேட்டையாடுவதையோ முற்றிலும் தவிர்த்து விடுகின்றனர்.இப்புனிதக் காடுகள் பல அரியவகை மூலிகைகள் மற்றும் அழியும் நிலையிலுள்ள விலங்குகளின் புகலிடமாக விளங்குகின்றன.

காடுகளின் அடர்த்தி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், சிற்றாறுகள் வற்றாமல் ஓடவும் உதவுகிறது.

**“பழங்குடியின மக்களின் பாரம்பரிய அறிவு,**
**காடுகளைப் பாதுகாக்கும் காலத்தால் அழியாத அறிவியல்."**

மனிதன் பேராசையினால் இயற்கையை அழிக்கும் போது, அதன் விளைவு ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் தாக்குகிறது. ஆனால், பழங்குடிகள் தங்களின் தேவைகளை மிகக் குறைவாகவே வைத்துக் கொள்கின்றனர்.

**"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்." (குறள்: 17)**

மேகம் கடலிலிருந்து நீரை எடுத்துக்கொண்டு மீண்டும் மழையாகப் பொழியாவிட்டால், பரந்த கடலும் தன் வளம் குன்றிவிடும் என்கிறார் வள்ளுவர். இயற்கையிடம் இருந்து எதைப் பெற்றுக் கொள்கிறோமோ, அதை மீண்டும் இயற்கைக்கே திருப்பித் தர வேண்டும் என்ற இந்தச் சுழற்சி விதியை பழங்குடிகள் நன்கு அறிவர். காடுகளில் தீ விபத்து ஏற்படாமல் தடுப்பது, விலங்குகளின் நடமாட்டத்திற்குத் தொந்தரவு தராமல் இருப்பது என இயற்கையின் சமநிலையைப் பேணுவதில் அவர்கள் வல்லவர்கள்.பழங்குடியின மக்களின் பாரம்பரிய அறிவும் புனிதக் காடுகளின் பாதுகாப்பு முறையும், இயற்கையையும் உயிரினப் பன்முகத்தன்மையையும் எதிர்கால சந்ததிக்காகக் காக்கும் நிலையான வாழ்வியல் தத்துவமாகும்.

**நவீன உலகினால் ஏற்படும் சவால்கள் :**

காடுகளின் காவலர்களாக விளங்கும் பழங்குடி மக்கள், இன்று வளர்ச்சி என்ற பெயரில் தங்களின் வாழ்விடங்களை இழந்து வருகின்றனர். சுரங்கத் தொழில், பெருநிறுவனங்களின் ஆக்கிரமிப்பு மற்றும் காடழிப்பு ஆகியவற்றால் இவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

**"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடையது அரண்." (குறள்: 742)**

தெளிந்த நீர், நிலம், மலை, குளிர்ந்த நிழலையுடைய காடு ஆகிய நான்கும் அமைந்ததே ஒரு நாட்டிற்குச் சிறந்த அரணாகும். நம் நாட்டின் அரணாக விளங்கும் காடுகளையும், அதைத் தன் உயிராகக் காக்கும் பழங்குடிகளையும் நாம் இழப்பது நம் நாட்டின் பாதுகாப்பையே கேள்விக்குறியாக்கும் செயலாகும்.

**கானகக் காவலர்களும் காட்டுயிர்ப் பாதுகாப்பும் :**

பழங்குடி மக்கள் விலங்குகளைத் தங்களின் எதிரியாகக் கருதுவதில்லை. காட்டில் வாழும் யானை, புலி, சிங்கம் போன்ற விலங்குகளின் வாழ்விடத்தை மதிக்க வேண்டும் என்ற அறம் அவர்களிடம் தொன்றுதொட்டே உண்டு.

**"வழங்குவ துள்வழங்கி, வாழ்பவர் அல்லால்,**
**இழந்துஏகின், எம்மைக் கொல்வாரோ? - தோழி! -**
**தழங்குஇசை வேழம் தனித்துஓடி..." (கலித்தொகை - 38)**

யானை போன்ற பெரிய விலங்குகள் தங்களுக்குரிய பாதையில் தடையின்றிச் செல்ல மனிதன் வழிவிட வேண்டும்.

அவற்றின் உரிமையைப் பறிக்கக் கூடாது என்ற கானக விதியை கலித்தொகை அழகாகப் பேசுகிறது. காட்டின் சமநிலைக்கு விலங்குகள் எவ்வளவு முக்கியம் என்பதைப் பழங்குடிகள் உணர்ந்து வாழ்கின்றனர்.

பழங்குடியினர் விலங்குகளின் இனப்பெருக்க காலங்களில் வேட்டையாடுவதை தவிர்ப்பதுடன், காயமடைந்த விலங்குகளுக்கு உதவும் மனிதநேய பண்பையும் கொண்டுள்ளனர். காடுகளில் உள்ள நீர் நிலைகள், புல்வெளிகள் மற்றும் விலங்குகளின் இடம்பெயர்வு பாதைகளைப் பாதுகாப்பதிலும் அவர்கள் முக்கியப் பங்காற்றுகின்றனர். இதனால் மனிதனுக்கும் விலங்குக்கும் இடையேயான மோதல்கள் குறைவதோடு உயிரினத்தின் பன்முகத் தன்மையும் பாதுகாக்கப்படுகிறது.

**உலகமயமாக்கலும் பழங்குடியினரின் வாழ்விட இடப்பெயர்வும்**

நவீனத் தொழில்மயமாக்கல் காரணமாகக் காடுகள் அழிக்கப்பட்டு, அங்கிருந்து பழங்குடிகள் வெளியேற்றப்படுவது, காட்டின் அழிவுக்கே வழிவகுக்கும் என்பதை எச்சரிக்கும் பகுதி.

**"கான உறைவார்க்கு அரண் இல்லை; வானத்து**
**மீன்அனி அல்குல் சுடருமே..." (புறநானூறு - 159)**

காட்டை நம்பி வாழும் மக்களுக்குக் காடே அரண். அந்த அரண் அழியும் போது அவர்கள் தங்களின் முகவரியை இழக்க நேரிடும். காட்டின் பாதுகாவலர்களை வெளியேற்றினால், காடு தன் பொலிவை இழந்து பாழாகும் என்பதை இக்காலச் சூழலுக்கு ஏற்ப நாம் பொருத்திப் பார்க்க வேண்டும். பழங்குடியினரின் இடம்பெயர்வு காரணமாக காடுகளும் தங்களின் சுற்றுச்சூழல் பொழிவினை சிறு சிறிதாக இழந்து வருகிறது. உலகமயமாக்களுக்கு நாம் கொண்டுள்ள விழிப்புணர்வை பழங்குடியினர் எவ்வாறு நமது இயற்கையினயும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க பின்பற்றினார்கள் என்பதை பற்றின விழிப்புணர்வும் அனைவரிடத்திலும் உண்டாக வேண்டும்.

**முடிவுரை:**

இயற்கையின் காவலர்களாக விளங்கும் பழங்குடியின மக்கள், காடுகளையும் பல்லுயிர் வளங்களையும் பாதுகாப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அவர்களை வளர்ச்சி என்ற பெயரில் பூர்வீக வாழ்விடங்களில் இருந்து இடம்பெயரச் செய்வது காடுகளின் அழிவுக்கும் சுற்றுச்சூழல் சமநிலைக் குறைவுக்கும் வழிவகுக்கும். எனவே, பழங்குடியினரின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களின் பாரம்பரிய இயற்கைப் பாதுகாப்பு அறிவை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்

கொள்கைகளில் ஒருங்கிணைப்பதே நிலையான வளர்ச்சிக்கும் புவியின் எதிர்காலப் பாதுகாப்பிற்கும் இன்றியமையாததாகும்.

பழங்குடியின மக்களின் நில உரிமைகள் மற்றும் வாழ்வுரிமைகள் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் பாரம்பரிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறைகள், இயற்கை வள மேலாண்மை அறிவு மற்றும் வாழ்க்கை நெறிகள் அரசு மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் கொள்கைகளில் உரிய முக்கியத்துவத்துடன் இணைக்கப்பட வேண்டும். இயற்கையையும் மனித சமுதாயத்தையும் சமநிலையுடன் பாதுகாக்கும் எதிர்காலத்தை உருவாக்குவதற்கு, பழங்குடியினரின் அறிவும் அனுபவமும் உலகிற்குத் தேவையான வழிகாட்டுதலாக அமையும் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது. இதுவே நிலையான வளர்ச்சிக்கும், புவியின் எதிர்காலப் பாதுகாப்பிற்கும் உறுதியான அடித்தளமாக அமையும் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

**துணை நின்ற நூல்கள்:**

1.வள்ளுவர், திருவள்ளுவர் – திருக்குறள் மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2015.

2. இளங்கோவடிகள் – சிலப்பதிகாரம் (மூலமும் எளிய உரையும்), கதிரவன் பதிப்பகம், சென்னை, 2018.

3. சாமிநாதையர், உ. வே. (பதிப்பாசிரியர்) – புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 2008.

4. பக்தவத்சல பாரதி – பழங்குடி மானிடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், 2013.

5. பக்தவத்சல பாரதி – தமிழகப் பழங்குடிகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2004.

6. சிவசுப்பிரமணியன், ஏ. – தமிழகத்தில் மூலிகைகளும் பழங்குடி மக்கள் அறிவும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.

7. மாதையன், பெ. – சங்க இலக்கியத்தில் நெறிமுறைகளும் திணைக்கோட்பாடும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2009.

8. சுப்பிரமணியன், ச. வே. – சங்க இலக்கியத்தில் இயற்கை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 2005.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 34.சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல் பண்பாட்டு நெறிமுறைகள்

**மு. மைதிலி**,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி,
(சென்னைப் பல்கலைக்கழகம்) சென்னை 600 030, 9444009719 mythilimuthu05@gmail.com
**முனைவர். ந. பழனிசாமி**,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி,
(சென்னைப் பல்கலைக்கழகம்) சென்னை 600 030, 9444124269
palanisamynanjan3@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:**

சுற்றுச்சூழல் பண்பாட்டு நெறிமுறைகள் என்பது பாரம்பரிய விழுமியங்களைப் பின்பற்றி இயற்கையோடு இயைந்து வாழ்ந்து இயற்கை வளங்களோடு அனைத்து உயிரினங்களையும் பாதுகாத்து, இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள தொடர்பை வலுப்படுத்தும் பொறுப்புகளை கொண்டது. பூமி அனைத்து உயிரினங்களுக்கும் உயிர்நாடியாகக் கருதப்படுகிறது. இது காற்று, நீர், நிலம், தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள் என அனைத்தையும் உள்ளடக்கியது. சுற்றுச்சூழல் சமநிலை என்பது உயிரினங்களுக்கும், அவற்றின் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான நிலையான உறவைக் குறிக்கிறது. சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரிப்பதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரமும், ஆரோக்கியமும் நிலைநாட்டப்படுகின்றன.

சூழலியல் சிந்தனை வளர்ச்சியில் தமிழர்களே முன்னோடிகளாக இருந்துள்ளமைக்கு சங்க இலக்கியங்களே ஆதாரமாக இருக்கின்றன. சூழல் விழிப்புணர்வு இல்லாத காலக்கட்டங்களிலேயே தமிழர்கள் தங்கள் வாழ்க்கையோடு இயற்கையை பிரிக்க முடியாத வண்ணம் வாழ்ந்துள்ளனர். சங்க இலக்கியங்களில் சூழலியல் தொடர்பான சிந்தனைகள் சமூக மதிப்பீடுகளை உள்ளடக்கியதாக உள்ளன. பழந்தமிழரிடத்தே காணப்பட்ட சுற்றுச்சூழல் பண்பாட்டு நெறிமுறைகளைச் சங்க இலக்கியங்கள் மூலமாக அறிவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** சுற்றுச்சூழல் பண்பாட்டு நெறிமுறைகள், சங்க இலக்கியங்கள், சூழலியல் சிந்தனை சூழலியல் அறம், உயிரின நேயம், நிலையான வளர்ச்சி

**முன்னுரை:**

சமூகத்தில் பல்வேறு நிலைகளில் காலந்தோறும் தொடர்ந்து உருவாக்கப்படும் விழுமியங்கள், பூமியில் மனிதர்கள் இயங்கிட வேண்டிய நெறிமுறைகளை வலியுறுத்தி வருகின்றன. இயற்கையை முன்வைத்த சூழலியல் பற்றிய சிந்தனைகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழரிடத்து மிகுந்திருந்ததைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. மண் குறித்தும், தாவரங்கள், விலங்கினங்கள் குறித்தும் தமிழர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டினைச் சங்க இலக்கியங்கள் விவரிப்பது வியப்பளிக்கிறது.

**சூழலியல் அறிவு:**

சங்க இலக்கியச் செய்யுள்களில் நிலம், விசும்பு, வளி, தீ, நீர் ஆகிய ஐம்பூதங்கள் பற்றிய சூழல் அறிவும் சுற்றுச்சூழல் மாசுபாடு பற்றிய அறிவும் பழந்தமிழரிடையே நிலவி இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன. கடியலூர் உருத்திரங்கண்ணணார் பாடிய பட்டினப்பாலைப் பாடல்களில் மருத நிலத்தில் கரும்பாலைகளிலிருந்து வரும் புகை, தூசு போன்ற காற்று மாசுபாட்டினைத் தடுக்கத் தென்னை, வாழை, பாக்கு, பனைமரங்கள் போன்றவை பயன்பட்டுள்ளமை அறியமுடிகிறது.

*"கார்க் கரும்பின் கமழ் ஆலைத்*
*தீத்தெறுவின் கவின்வாடி*
*நீர்ச் செறுவின் நீள் நெய்தல்*
*..........................................................*
*..........................................................*
*கோள் தெங்கின் குலை வாழைக்*
*காய்க்கமுகின் கமழ் மஞ்சள்*
*இனமாவின் இணர்ப்பெண்ணை*
*முதற்சேம்பின் முளைஇஞ்சி "*

**(பட்டினப்பாலை: 9-19)**

கடற்கரைகளில் ஆழிப் பேரலைகளால் சேதங்கள் ஏற்படாமலிருக்க புன்னை, தாழை, ஞாழல் மரங்களை வளர்த்துள்ளமையை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது.

*"வாங்கடற் பரப்பில் தூவற்கு எஞ்சிய*
*..........................................................*
*..........................................................*
*முடவுதிர் புன்னை தடவுநிலை மாச்சினை"*

**(அகநானூறு :10)**

*"தாழை மணந்து ஞாழலோடு கெழீஇ*
*படப்பை நின்ற முடந்தாள் புன்னை"*

**(அகநானூறு :180)**

**இயற்கை வேளாண்மை:**

பழந்தமிழர்கள் வேதிப்பொருள் கலப்பில்லாத இயற்கைச் சார்ந்த வேளாண் முறைகளையே பின்பற்றினர். சங்க இலக்கியங்கள், கால்நடைகளின் எரு மற்றும் செடி, கொடிகளின் உதிர்ந்த சருகுகளை தமிழர்கள் உரமாகப் பயன்படுத்தி மண்வளத்தின் உற்பத்தித் திறனை அதிகரித்து வேளாண்மை செய்ததை கீழ்வரும் செய்யுள்கள் மூலம் பதிவு செய்கின்றன. ஆடுகளின் கழிவுகளாலான தொழு உரம் குறித்தப் பதிவுகள் இலக்கியங்களில் இயல்பாகக்

காட்சிப்படுத்தப்பட்டுள்ளதிலிருந்து இயற்கை வேளாண்மை பாதுகாக்கப்பட்டு சூழல் மாசுபடாமல் வாழ்ந்த நிலை சுட்டிக் காட்டப்படுகின்றன.

***“தாதெரு மறுகின் ஆபுறந் தீண்டும்”*** **(நற்றிணை : 343)**
***“தாதெரு மன்றத்துத் தூங்கும் குரவையுள்”*** **(கலித்தொகை : 108)**
***“தாதெரு மறுகின் மாசுண இருந்து”*** **(புறநானூறு : 311)**
***“தாதெரு மறுகின் மூதூர்”*** **(அகநானூறு : 165)**
***“தாதெருத் தைநந்த முற்றம்”*** **(மலைபடுகடாம் : 531)**

**உயிரின நேயம்:**

தன் சூழலில் வாழும் பல்லுயிரிகளைப் பேணும் சிந்தனை தமிழர்களிடத்தில் இருந்தமையைச் சங்க இலக்கியப் பாடல் வரிகளின் வழி அறியமுடிகிறது. மரங்களை உடன்பிறப்பாக எண்ணி வாழ்ந்துள்ளதைக் கீழ்வரும் நற்றிணைப் பாடல் பதிவு செய்கிறது.

***“விளையா டாயமொடு வெண்மணல் அழுத்தி***
***மறந்தனம் துறந்த காழ்முளை அகைய***
***நெய்பெய் தீம்பால் பெய்தனம் வளர்ப்ப***
***நும்மினும் சிறந்தது, நுவ்வை யாகுமென்***
***றன்னை கூறினள் புன்னையது சிறப்பே”***

**(நற்றிணை : 172)**

தலைவன் தலைவியைப் புன்னை மரத்தடியின் அருகே சந்திக்கும் பொழுது தாங்கள் வளர்த்த புன்னை மரத்தை அன்னை “நுவ்வை” (உன் தங்கை) என்று சொன்னதாகக் கூறுவதன் மூலம் சங்க கால மக்கள் இயற்கையைத் தங்களில் ஒருவராகக் கருதினர் என்பதை நக்கீரனார் இயற்றிய பாடல் விளக்குகிறது.

அணிலாடு முன்றிலார் எழுதிய குறுந்தொகைப் பாடலில் அணில் ஆடுகின்ற இல்லத்தைக் காணமுடிகிறது.

***“அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்***
***மக்கள் போகிய அணிலாடு முன்றில்...”***

**(குறுந்தொகை: 41)**

தன் துணையோடு இன்பமாக உறங்கும் வண்டுகள் தேர்மணியின் ஒலிக் கேட்டு அஞ்சி ஓடாமலிருக்கத் தேரின் மணிநாக்கைச் சேர்த்துக்கட்டி வைத்திருப்பதாகக் கூறுகிறது இந்த அகநானூறு களிற்றியானை நிரைப் பாடல்.

***“பூத்த பொங்கர் துணையொடு வதிந்த***
***தாது உண் பறவை பேதுறல் அஞ்சி***
***மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்...”***

**(அகநானூறு : 4)**

பூச்சிகளுக்குக்கூடத் துன்பம் இழைக்காத வியப்பூட்டும் வாழ்வியலைத் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு அகநானூறு பாடல் சான்றாக விளங்குகிறது.

**சூழல் அறம்:**

இயற்கையைத் தன் தேவைக்கு மட்டுமல்லாமல், பிற உயிரினங்களுக்கும் சுற்றுச்சூழலில் சம உரிமை உண்டு என்பதைத் தமிழர்கள் கருத்தில் கொண்டு எல்லா உயிர்களையும் தம் உயிர் போல எண்ணியது போற்றற்குரியதாகும்.

வினை முடிந்து தலைவியைக் காணத் தேரில் விரைந்து வரும் தலைவன் தன் வேட்கையால் பிறந்த வேகத்தினிடையேயும் கடற்கரை நண்டுகள் தேர்க்காலில் சிக்கி வருந்தாவண்ணம் தேரை ஓட்டியதாக உலோச்சனார் எழுதிய நற்றிணைப் பாடல் வரிகள் காட்டுகின்றன.

***“புணரி பொருத பூமண லடைகரை***
***யாழிமருங்கின் அலவன் ஓம்பி***
***வலவன் வள்பாய்ந் தூர…”***

**(நற்றிணை : 11)**

அறுவடைக் காலத்தில் வயலில் உறையும் சிறு பறவைகளைப் பாதுகாப்பாக வெளியேற்றவேண்டி தண்ணுமை எனும் பறையறைந்து அவை வயலிலிருந்து வெளியேறிய பின்பே அறுவடையைத் தொடங்கியதாக பரணர் பாடிய புறநானூற்றுப் பாடல் வரிகள் பறைசாற்றுகின்றன.

***“வெண்ணெல் லரிஞர் தண்ணுமை வெரீஇக்***
***கண்மடற் கொண்ட தீந்தே னிரியக்…”***

**(புறநானூறு : 348)**

**சூழல் நிலைத்தன்மை (Sustainable Development):**

சூழலியலில் நிலையான வளர்ச்சி என்பது வளங்களை முறையாகப் பயன்படுத்தி, சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. பூமியின் வளங்களை பொறுப்போடு பயன்படுத்தி, வருங்கால சந்ததியினருக்கும் பயன்படும் வகையில், உயிரியல் பன்முகத்தன்மையைப் பேணி அனைத்து இயற்கை வளங்களையும் நீண்ட காலத்திற்குத் தக்க வைக்கும் நோக்கத்தோடு தமிழர்கள் சுற்றுச்சூழலை நிர்வகித்து வாழ்ந்திருப்பது சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

***“தாய்அவிழ் பனிமலர் உதிர வீசித்***
***தொழில் மழை பொழிந்த பானாட் கங்குல்***
***எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்***
***பெருங்குளம் காவலன் போல,***
***அருங்கடி அன்னையும் துயில்மறந் தனளே…***

**(அகநானூறு : 252)**

பண்டைய தமிழர்கள் குளம் அமைத்துத் தண்ணீர் சேமிக்கும் வழக்கத்தைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. மழை நீரைத் தேக்கி வைத்து நிலத்தடி நீரைப் பெருக்கி வேளாண்மைக்கும்

பயன்படுத்திய பழந்தமிழர்களின் நீர் மேலாண்மையை நக்கண்ணையார் பாடிய பாடல் சுட்டிக்காட்டுகின்றது. பண்டைய மக்கள் நீராதாரத்தை திறம்பட நிர்வகித்து சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

மன்னர் பிறநாட்டின் மீது போர் தொடுத்துச் செல்லும்போது, எதை அழித்தாலும் மரங்களை மட்டும் வெட்டுவதை தவிர்க்கவேண்டும் என்றுப் பாடிய காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணணாரின் புறநானூற்றுப் பாடல் சூழல் நிலைத்தன்மையை வலியுறுத்துகின்றது.

***"நீயே, பிறர்நாடு கொள்ளும் காலை, அவர் நாட்டு***
***இறங்குகதிர்க் கழனிநின் இளையரும் கவர்க;***
***நனந்தலைப் பேரூர் எரியும் நைக்க;***
***மின்னுனிமிர்ந் தன்ன நின் ஒளிறுஇலங்கு நெடுவேல்***
***ஒன்னார்ச் செகுப்பினும் செகுக்க; என்னதூஉம்***
***கடிமரம் தடிதல் ஓம்பு!...***

**(புறநானூறு : 57)**

**நிறைவுரை:**

சங்ககால மக்கள் சுற்றுச்சூழலைப் போற்றிப் பாதுகாத்த முறையினைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுவது அவர்களின் வாழ்வியலில் இயல்பாகவே கலந்திருந்தது. அனைத்து உயிரினங்களும், சுற்றுச்சூழலும் ஒருங்கிணைந்த ஒரு சூழலியல் அமைப்பாகவே கருதப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள் சுற்றுச்சூழலை நிலைநிறுத்த வலியுறுத்தும் ஒரு பழந்தமிழ் ஆவணமாகும். சங்க இலக்கியக் காலத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து, இயற்கைக்கு முன்னுரிமை கொடுத்து, தொலைநோக்குப் பார்வையோடு இயற்கை நெறிமுறைகளை பின்பற்றி வாழ்ந்ததால் சங்ககாலம் "இயற்கை நெறிக்காலம்" எனப்படுகிறது.

**துணைநூற் பட்டியல்:**

**[1.] பட்டினப்பாலை மூலமும் உரையும், கரு.அழ.குணசேகரன் (2008)**
**[2.] அகநானூறு, முனைவர் இரா. செயபால் (2014)**
**[3.] நற்றிணை மூலமும் உரையும், ஔவை. துரைசாமிப்பிள்ளை(2016)**
**[4.] கலித்தொகை, அ. மாணிக்கனார் (1999)**
**[5.] புறநானூறு தெளிவுரை, புலியூர்க் கேசிகன் (2009)**
***[6.]* மலைபடுகடாம் மூலமும் உரையும், டாக்டர். கதிர் முருகு (2009)**
***[7.]* குறுந்தொகை தெளிவுரை, புலியூர்க் கேசிகன் (2008)**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 35.தமிழரின் ஆய்வுக்கடலில் ஆகாயம்

**மு.கயல்விழி,**

முனைவர் பட்ட ஆய்வாளர் (BDU 2120632779481)

தமிழாய்வுத் துறை

தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி) பெரம்பலூர்

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்ததுடன் இணைவுபெற்றது ,தமிழ்நாடு,இந்தியா

கைபேசி:9677398808 மின்னஞ்சல்: kayalarul22@gmail.com

**நெறியாளர்: முனைவர் வீ.தனலட்சுமி.**

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை

தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி) பெரம்பலூர்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்ததுடன் இணைவுபெற்றது தமிழ்நாடு

**ஆய்வுச் சுருக்கம்**

பஞ்சபூதங்களில் ஒன்றாக ஆகாயம் என்ற விசும்பு காணப்பட்டது. இதைச் சங்கத் தமிழர் விஞ்ஞான இயல்களில் ஒன்றாக வகுத்தனர். வானவியலைப் பிறநாட்டவர் கண்டு அஞ்சி வியந்தபோது சங்கத் தமிழர் அதை அடிப்படை விஞ்ஞானத் துறையாக வகுத்து அவற்றில் அறிவாக்கம் பெற முயன்றனர். கணிதத்தையும் சோதிடத்தையும் இவ்வியலின் கூறுகளாகப் பகுத்தனர். சங்க காலத்தில் வானவியல் அறிவில் வல்லவர்களாகத் திகழ்ந்தவர்கள் "கணியன்" என்ற பெயரில் அழைக்கப்பட்டனர். வானில் உள்ள நட்சத்திரங்களையும் கிரகங்களையும் நன்கறிந்து அவற்றை அறியும் துறையை அறிவியல் சார்ந்த துறையாகப் பரிணமிக்கச் செய்தனர். காலநிலை மற்றும் பருவநிலை மாற்றங்களை நன்கறிந்து அவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகளை முன்கூட்டியே அறிந்திருந்தனர்.

கோள்களின் இயக்கத்தால் நிகழக்கூடிய இயற்கை சீற்றங்களை முன்னதாகவே வெளிப்படுத்தினர். நாம் வாழும் பூமி மற்றும் சூரியனின் சுழற்சியைக் கணக்கிட்டு நாட்களையும், வாரங்களையும், மாதங்களையும், வருடங்களையும் துல்லியமாய்க் கணக்கிட்டனர். நட்சத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு இராசிகளை வகுத்து எதிர்காலத்தைக் கணித்தனர். சோதிடக் கலையில் சங்ககாலப் புலவர் பெருமக்களும் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். சோதிடவியலில் இன்று நாம் பெற்றிருக்கும் அபரிமிதமான வளர்ச்சிக்கு அடிப்படை சங்க காலத்திலே இடப்பட்டு விட்டது. சங்கத் தமிழர் பெற்ற அறிவாக்க வளர்ச்சியில் வானவியல் அறிவின் பங்கு கணிசமானது என்பதை மறுக்கவோ,மறைக்கவோ இயலாது. இவற்றைப் பற்றியே இக்கட்டுரை ஆராய்கின்றது.

**முகவுரை**

"அறிவுடையார் ஆவது அறிவார்" என்பார் வள்ளுவர். அறிவார்ந்த சமுதாயமே உலகின் தலைசிறந்த சமுதாயமாகக் கருதப்படுகின்றது. மனிதர்களுக்கே உரித்தான பகுத்தறிவையும், விஞ்ஞான ஆற்றலையும் நன்முறையில் பயன்படுத்தும் சமூகமே அறிவார்ந்த சமுதாயமாக அறிஞர்கள் கருதுவர். அந்த வகையில் இப்பூவுலகில் தமிழ்ச் சமுதாயம் மீதுயர்ந்த சமுதாயமாகத் திகழ்ந்தது. உலகை வெல்வதற்கு அடிப்படைக் காரணமான விஞ்ஞான அறிவிலும், சிந்தனை

ஆற்றலிலும் அது மேம்பட்டுத் திகழ்ந்ததைச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. பழந்தமிழர் குறிப்பாகச் சங்கத்தமிழர் அறிவாக்கத்துறைகளில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். அறிவுத் துறையில் சிறந்த வானியல் அறிவில் அவர்கள் மேம்பட்டு விளங்கினர். கணிதத்தின் ஓர் இயலான வானவியலில் அவர்கள் அதிக அளவு ஆர்வம் காட்டி வந்தனர். விசும்பு என்றழைக்கப்பட்ட வான்வெளியின் மறை பொருட்களை அறிவதிலும், அவற்றின் உண்மையை வெளிக்கொணர்வதிலும், அவற்றை நடைமுறை வாழ்வில் பயன்படுத்துவதிலும் அவர்கள் கொண்ட ஆர்வத்தைச் சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. அவற்றைப் பற்றியே இக்கட்டுரை ஆராய்கின்றது.

**பஞ்சபூதங்களில் ஆகாயம்**

சங்கத்தமிழரின் வானியல் அறிவுத்திறனைப் புறநானூறு, பரிபாடல், மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, மலைபடுகடாம் மற்றும் காப்பியமான சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள் எடுத்தோதுகின்றன. வானியல் அறிவில் தமிழர் கொண்டிருந்த அறிவுத்திறனை இவை பதிவு செய்துவிட்டுச் சென்றுள்ளன. வானத்தில் காணப்படும் கோள்களையும், நட்சத்திரங்களையும் அவர்கள் நன்கறிந்திருந்தனர். கோள்கள் மற்றும் நட்சத்திரங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை அறிந்திருந்தனர். நட்சத்திரங்களை “மீன்” என்ற பெயரில் அழைத்தனர். வானத்தில் காணப்படுவதால் இவற்றை “வானத்து மீன்கள்” என்று இலக்கியங்கள் சுட்டுகின்றன.

“வான் கண் அற்று, அவன் மலையே; வானத்து,
மீன் கண் அற்று, அதன் சுனையே; ஆங்கு”

(புறநானூறு:109:9-10)

இந்த விண்மீன்களை “நாள் மீன்” என்றும் “கோள் மீன்” என்றும் பகுத்தனர்.[1] நாள் மீன் என்பது ஒருவர் பிறந்த நாள் அன்று உச்சத்தில் காணப்படும் விண்மீனாகும். கோள் மீன் என்பது சூரியனைச் சுற்றி வரும் கோள்களாகும். சங்கத் தமிழர் வானத்தை 27 பகுதிகளாகப் பிரித்து அவற்றிற்கு 27 விண்மீன்களையும் வகுத்து வைத்தனர். விண்மீன்கள் சூரியனைப் போன்று சுயமாக ஒளியை அளிக்க வல்லதாகும். மாறாகக் கோள்கள் சூரியனைச் சுற்றிச் சுய ஒளியின்றி இயங்கி வருபவை என்று அறிந்திருக்கின்றனர். கோள்களுக்குத் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பதுடன் ராகு மற்றும் கேது என்றும் பெயரிட்டனர். சூரியக் குடும்பத்திற்கு நடுநாயகமாக ஒளியையும் வாழ்வையும் அளிக்கும் சூரியனைப் பற்றி அவர்கள் நன்கறிந்திருந்தனர். புவியின் துணைக்கோளான சந்திரன் நாம் வாழும் பூமியைச் சுற்றி வருகிறது என்பதையும் அது அவ்வாறு சுற்றி வரும்போது சந்திரக் கிரகணம் தோன்றுவதையும் அறிந்திருந்தனர். சந்திரன் தன்னுடைய சுழற்சியால் வளர்பிறை மற்றும் தேய்பிறை கொண்டிருக்கிறது என்ற உண்மையையும் அறிந்திருந்தனர். நிலவு ஒரு மாதத்தில் வளர்வதையும் தேய்வதையும் அடிப்படையாகக் கொண்டு “வளர்பிறைத் திங்கள்” “தேய்பிறைத் திங்கள்” என்று அழைத்தனர். அது மாதத்தில் 15 நாட்கள் வளர்பிறையாகவும், 15 நாட்கள் தேய்பிறையாகவும் தோன்றும் செய்தியை,

“மாக விசும்பின் வெண் திங்கள்
மூ வைந்தான் முறை முற்ற”

(புறநானூறு:400:1-2)

என்ற பாடல் மூலம் கோவூர் கிழார் என்ற புலவர் உணர்த்துகின்றார். பௌர்ணமி அன்று சூரியனும் சந்திரனும் எதிரெதிர் திசையில் தனது சுழற்சியில் தோன்றும். அவ்வாறு தோன்றும் பொழுது சந்திரன் சூரியனை மறைக்கும் என்றும் இதனால் சூரியக் கிரகணம் தோன்றும் உண்மையையும் அறிந்திருந்தனர்.

"உவவுத் தலைவந்த பெரு நாள் அமையத்து,
இரு சுடர் தம்முள் நோக்கி, ஒரு சுடர்
புன்கண் மாலை மாலை மறைந்தாங்கு,"

(புறநானூறு:65:6-8)

நமது சூரியக் குடும்பத்தில் உள்ள வெள்ளிக் கோள் வெண்மை நிறம் உடையது என்றும் அது ஆறு மாதம் காலையிலும், ஆறு மாதம் மாலையிலும் அடிவானத்தில் தோன்றும் என்பதையும் அறிந்திருந்தனர். இதனை "விடிவெள்ளி" என்றும் அழைத்தனர்.

"வெள்ளி தோன்ற, புள்ளுக்குரல் இயம்ப,
புலரி விடியல் பகடுபல வாழ்த்தி"

(புறநானூறு:385:1-2)

வெள்ளிக் கோள் வானில் தெற்கே விலகி நிற்கும் பொழுது தீமை பயக்கும் என்றும் நம்பினர். அவ்வாறு நேரிடின் மழைப்பொழிவு குன்றும் என்பதைக் கபிலர் மற்றும் கடியலூர் உருத்திரங் கண்ணணார் முதலிய புலவர் பெருமக்கள் சான்றளிக்கின்றனர்.

"வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெறகேகினும்,
தற் பாடிய தளி யுணவிற்,
புள் தேம்பப் புயல் மாறி"

(பட்டினப்பாலை:1-4)

"வெள்ளி தென்புலத்து உறைய, விளை வயல்
பள்ளம் வாடிய பயனில் காலை"

(புறநானூறு:388:1-2)

**நாளும், கோளும், நட்சத்திரங்களும்…**

வானத்தில் அவ்வப்போது தோன்றும் வால் நட்சத்திரத்தைத் "தூமகேது" என்ற பெயரில் அழைத்தனர். அது தோன்றின் நாட்டிற்கும் மக்களுக்கும் பெருங்கேடு விளையும் என்று நம்பினார். சந்திரன் புகைந்தாலும் தீமையே விளையும் என்றும் நம்பினர்.

"மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்,
தென் திசை மருங்கின் வெள்ளி ஓடினும்,
வயலகம் நிறைய, புதல் பூ மலர"

( புறநானூறு:117:1-3)

இது தவிரச் சூரியன் தன் நிலையில் இருந்து மாறுபட்டுத் தோற்றமளித்தாலும், வானில் எரி நட்சத்திரங்கள் தோன்றி விழுந்து மறைந்தாலும் நாட்டில் பெருங்கேடு விளையும் என்றும் நம்பினர்.

“அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்,
அம் தண் காவிரி வந்து கவர்ப்பு ஊட்ட”

(புறநானூறு:35:6-8)

சிவந்த நிறமுடைய செவ்வாய் கோளையும் சங்கத் தமிழர் நன்கறிந்தனர். இது “திருவாதிரை” என்ற நட்சத்திரத்திற்கு உகந்த கோளாகத் திகழ்ந்தது.

“முந்நீர் நாப்பண் திமில் சுடர் போல,
செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்”

(புறநானூறு:60:1-2)

இது தவிர வடமீன் என்று அவர்களால் அழைக்கப்பட்ட வட திசையில் காணப்படும் நட்சத்திரத்தைக் கற்புக்கரசி அருந்ததி என்பவளின் நினைவாகக் கருதி வந்தனர்.

“வடமீன் புரையும் கற்பின், மடமொழி”

(புறநானூறு:122:8)

சங்க காலத்தில் மூவேந்தரில் ஒருவரான பாண்டியரின் தலைநகராம் மதுரையில் உள்ள வைகையில் வெள்ளப் பெருக்கு தோன்றிப் பேரிழப்பு ஏற்பட்டது. இதற்கு விண்மீன்களின் ஆதிக்கமே காரணம் என்று வானியல் வல்லுநர்கள் கணித்து அரசருக்கு உணர்த்தினர். இதை பரிபாடல் மூலமாக அறிய முடிகின்றது.

“அகன்ற வானத்தின் கண் ஒளியைப் பரப்பும் சந்திரனோடு கார்த்திகை, திருவாதிரை, பரணி ஆகிய விண்மீன்கள் முறையே ரிஷப வீதி, மிதுன வீதி, மேஷ வீதி ஆகிய மூன்று வீடுகளிலும் 27 விண்மீன்கள் தங்குவது முறையாகும். இவற்றில் வெள்ளி கோளானது ரிஷப ராசியிலும், செவ்வாய் கோள் மேஷ ராசியிலும், புதன் கோள் மிதுன ராசியிலும் நின்றுலவும். கார்த்திகை நட்சத்திரம் நாள் உச்சமாகிய பொழுது விடிந்தது. வியாழன் என்ற குரு, சனியின் இரட்டை வீடுகளாகிய மகரக் கும்ப ராசிகளுக்கு மேலே உள்ள மிதுன ராசியைச் சார்ந்து நின்றது. சனி கோள் மகர ராசியில் நிற்கச் சந்திரக் கிரகணம் உண்டாயிற்று. அகத்தியன் என்ற விண்மீன் மிதுன ராசியைச் சார்ந்து நின்றது.[2] இவ்விதம் தோன்றிய கோள்களின் நிலைப்பாட்டால் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பெருமழை பெய்தது. அதன் விளைவாய் வைகையில் பெருவெள்ளம் தோன்றிற்று.”[3]

**வளியும் சோதிடமும்**

வானத்தில் திங்களின் வளர்பிறையின் நாட்களில் ஞாயிறு உதிப்பதற்கு முன் அது மறைந்துவிடும் என்ற உண்மையை அவர்கள் அறிந்திருந்தனர்.

“வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன் திகழ் விசும்பின் வெண் மதி நீங்க,
கார் இருள் நின்ற கடைநாள் கங்குல்

ஊழ்வினை கடைஇ உள்ளம் துரப்ப”

(சிலம்பு: நாடுகாண் காதை:1-4)

பௌர்ணமி அன்று திங்களைச் சுற்றி வட்டமும் ஞாயிற்றைச் சுற்றி வட்டமும் எதிர் திசையில் காணப்பெறும்.

“குணதிசை மருங்கின் நாண்முதிர் மதியமும்
குடதிசை மருங்கிற் கென்றுவீழ் கதிரும்
வெள்ளிவெண் தோட்டொடு பொற்றோ டாக”

(மணி:மணிமேகலா தெய்வம் வந்துதோன்றிய காதை:119-121)

சூரியனைத் திங்கள் மறைப்பதால் சூரியக் கிரகணமும், பூமி சூரியனை மறைப்பதால் சந்திரக் கிரகணமும் தோன்றுகின்றது. இது ஒரு அறிவியல் உண்மையாகும். இவ்வாறு கோள்கள் நேர்கோட்டில் செல்லும் முறைமையால் தோன்றும் கோள் மறைப்பு கிரகணம் என்ற பெயரில் அழைத்தனர். இவ்வாறு தோன்றுவதைப் பாம்பு விழுங்குவதாக அவர்கள் கருதினர். இவ்வாறு தோன்றும் கிரகணம் பிற பகுதிகளில் தோன்றுவதில்லை. அதாவது சூரியக் கிரகணம் ஏற்படும் பொழுது பூமியிலிருந்து அது நோக்கப்படும் பொழுது மட்டுமே உருவ மறைப்பு தோன்றும். பிற கோள்களிலிருந்து நோக்கும் பொழுது அவ்வாறு தோன்றாது. இந்த அறிவியல் உண்மையைச் சங்கத் தமிழர் நன்கறிந்திருந்தனர்.

“கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று”

(திருக்குறள்:1146)

சங்கத் தமிழர் வானியல் மற்றும் கணிதத் துறைகளில் வல்லவர்களாய்த் திகழ்ந்தனர். இதைக் கீழ்க்கண்ட புறநானூற்று பாடல் அழகுடன் விளக்குகின்றது:

“செஞ் ஞாயிற்றுச் செலவும்,
அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்,
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளி திரிதரு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்று இவை
சென்றளந்து அறிந்தார் போல, என்றும்
இனைத்து என்போரும் உளரே; அனைத்தும்”

(புறநானூறு:30:1-7)

இது தவிரப் புவியின் சுழற்சியால் தோன்றும் காலநிலை மற்றும் பருவநிலை மாற்றங்களை நன்கறிந்திருந்தனர். அவற்றைக் கீழ்க்கண்ட பாடல் விளக்கிச் செல்கின்றது.

“பனியும் வெயிலும் கூதிரும் யாவும்
துனியின் கொள்கையொடு தொன்மை யெய்திய
தணிவுற் றறிந்த கணிவன் முல்லை”

(பன்னிருபடல சூத்திரம்-உரை மேற்கோள்)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

வானம் ஒளியுடையதாயினும் அது உண்மையில் இருளானது. நமது சூரியக் குடும்பத்துக்கு அப்பால் சூரிய ஒளியைப் பெறாததால் அது இருண்டு காணப்படும். இவ்வுண்மையை மலைபடு கடாம் அழகுடன் உரைக்கின்றது.

"திருமழை தலைஇய இருள்நிற விசும்பின்"

(மலைபடுகடாம்:1)

**தமிழரின் ஆகாயக்கணக்கு**

விண்மீன்களைத் திங்கள் கிழக்கு திசையில் நகர்ந்து செல்லும் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மாதங்களை வகுத்தனர். இதனால் தான் திங்கள் என்ற சொல் முறையை மாதத்தையும் நிலவையும் குறிக்கலாயிற்று. மாதங்களைக் காலநிலைக்கு ஏற்ப வாரங்களாகப் பகுத்தும், வாரங்களை ஏழு நாளாகவும் பிரித்தனர். ஒவ்வொரு நாளையும் அந்நாளுக்குரிய கோளின் ஆதிக்க நிலையைக் கருத்தில் கொண்டு அதன் பெயரிலே அழைத்தனர். எனவேதான் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு என்ற நாட்களின் பெயர்கள் உருவாயிற்று. ஞாயிறு தென் திசையை நோக்கிச் செல்லும் ஆறு மாதக் காலத்தை "தென் அயன ஓட்டம்" என்றும் வட திசை நோக்கிச் செல்லும் பின் ஆறு மாதத்தை "வட அயன ஓட்டம்" என்றும் அழைத்தனர். சூரியனைப் பூமி முழுமையாகச் சுற்றி வரும் காலத்தை 12 மாதங்களாகப் பிரித்து அதை ஓராண்டு என்று அழைத்தனர். ஞாயிறு விண்மீன்களிடையே நகரும் பாதையை 12 பகுதிகளாகப் பிரித்து வைத்தனர். அவற்றிற்கு மேஷம், ரிஷபம், மிதுனம், தனுசு, கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் என்று ராசிகளாகப் பெயரிட்டனர். இதை அடிப்படையாகக் கொண்டு வானியலின் முக்கியப் பிரிவான சோதிடக் கலையை வகுத்தனர். கோள்கள் மற்றும் விண்மீன்கள் எவ்வாறு மனித வாழ்வில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதைத் துல்லியமாகக் கண்டறிந்தனர். அதைக் கொண்டு மனிதர்களுக்கு சோதிடப் பலன்களைக் கணித்தனர். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன பஞ்சபூதங்களாகவும் அவற்றின் கூட்டுப் பொருளே நாம் வாழும் இப்புவி என்பதை அவர்கள் நன்கறிந்திருந்தனர்.

"நிலம் தீ நீர் வளி விசுப்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"

(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூா:91)

நட்சத்திரங்களுக்கு இடையே நமது பூமி சூரியப் பாதையில் தன்னுடைய துணைக்கோளான சந்திரனுடன் இயங்கும் பாதையை அடிப்படையாகக் கொண்டு, வளிமண்டலத்தில் சூரியனுடைய பாதைக்கு இருபுறமும் உள்ள சுமார் 9° தூரத்துக்குள் காணப்படும் பகுதியை ஒரு மண்டலமாக அமைத்தனர். இதை"இராசி மண்டலம்" என்றழைத்தனர். இதுவே சோதிடக் கலையின் அடிப்படையான ஒன்றாகும்.[4]

**சங்கஇலக்கியத்தில் ஆகாயம்**

சங்க இலக்கியங்கள் விசும்பைப் பற்றியும் அவற்றில் உள்ள பொருட்களைப் பற்றியும் பல உவமைகள் மூலம் எடுத்துக்காட்டுகின்றனர். "நீல நிறத்தை உடைய ஆகாயத்தில் பலமாக எழுந்து திரிந்து கொண்டிருக்கும் நாள் மீன்களுடன் கலந்த கோள் மீன்கள் போன்று அகன்ற இடத்தில் ஆட்டுக் கிடாவையும் சிவல் என்று பறவையும் பரதவர் பொருதுவித்தனர்" என்று வானியல்

செய்திகளைப் பட்டினப்பாலை உரைக்கின்றது.[5] இது தவிரக் "காவிரிப் பூம்பட்டினத்து கடற்கரையில் இருந்த பொய்கையானது மழை, மாசு நீங்கிய பெரிய ஆகாயத்தில் திங்களுடன் சேர்ந்த "மகம்" என்ற வெள்ளி நட்சத்திரத்தினைப்; போன்று தூய்மையாக வெண்ணிறம் கொண்டிருந்தது" என்று கடியலூர் உருத்திங்கண்ணணார் உரைக்கின்றார்.

"மழை நீங்கிய மா விசும்பில்
மதி சேர்ந்த மகவெண்மீன்
உரு கெழு திறல் உயர் கோட்டத்து,
முருகு அமர் பூ முரண் கிடக்கை
வரி அணி சுடர் வான் பொய்கை,"

(பட்டினப்பாலை:34-38)

"கார்த்திகை நட்சத்திரம் வெண்மையுடன் நன்கு ஒளிரும் இயல்பினை உடையது" என்று மலைபடு கடாம் என்ற நூல் உரைக்கின்றது. பாண்டிய நாட்டின் தலைநகர் மதுரையில் உள்ள பாண்டிமா தேவியின் அந்தப்புரத்தில், அவளின் சயன அறையின் கட்டிலின் மேற்கூரையில் இராசி மண்டலம் பற்றிய சித்திரம் மெழுகால் வரையப்பட்டிருந்தது. இச்செய்தியை நெடுநல்வாடை,

"கதிரவன், ஆகாயத்தின்கண் வலிமை வாய்ந்த கொம்புகளைக் கொண்ட, ஆட்டின் பெயருடைய, மேட ராசி முதலாக ஏனை இராசிகளிலும் சென்று இயங்கும் விரைந்து செல்லும் இயக்கத்தைக் கொண்டவன். அவனுடைய மாறுபட்ட இயக்கமுடையதும், தலைமையுடையதும் ஆகிய திங்கட் செல்வனை உரோகிணி என்னும் நாள் மீன் எஞ்ஞான்றும் விட்டு நீங்காத இயல்பினைக் கொண்டதாகும். அரசமாதேவி, உரோகிணியைப் போலத் தானும் தன் கணவனைப் பிரியாமல் வாழும் பேறு பெறவில்லையே என நினைத்து மெழுகு செய் படத்தில் தீட்டப்பெற்ற அக்காட்சியைக் கண்டு பெருமூச் செறிந்தாள்."

"புதுவது இயன்ற மெழுகு செய் படமிசை,
திண் நிலை மருப்பின் ஆடு தலையாக,
விண் ஊர்பு இழிதரும் வீங்கு செலல் மண்டிலத்து
முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய,
உரோகிணி நினைவனள் நோக்கி, நெடிது உயிரா"

(நெடுநல்வாடை:159-163)

என்று அழகுடன் விளக்குகின்றது. கார்த்திகை நட்சத்திரம் மிகுந்த வெண்மையுடனும், நன்கு ஒளியுடனும் வானத்தில் ஒளிவிடும் தன்மையுடையது என்ற செய்தியையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

"அகல் இரு விசும்பின் ஆஆல் போல,
வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை;"

(மலைபடுகடாம்:100-101)

**வானியல் வல்லுனர்கள் "கணியன்கள்"**

சங்க காலத்தில் வானியலும் அது சார்ந்த சோதிடத்தையும் கணித்தவர்கள் "கணியன்" என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் சில சமயம் "கணி" என்றும் அழைக்கப்பட்டனர்.[6] வானியலில்

வல்லவர்கள் “கணிமேதாவிகள்”என்றழைக்கப்பட்டனர். கணி மேதாவியார் என்ற புலவரும் சங்க காலத்தில் வாழ்ந்தார் என்பதை ஈண்டு மறந்துவிடலாகாது. கோள்களின் இயக்கத்தையும், வானியலின் உண்மைகளையும் நன்குணர்ந்து அவற்றைக் கணித்து எதிர்காலத்தை உய்த்துணர்ந்த வல்லுனர்களே கணியன் ஆவர். இவற்றால் பல சோதிட வல்லவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்தனர் என்பது அறியப்படுகின்றது. பல சங்க காலப் புலவர்கள் வானியல் அறிவுடன் சோதிடவியலில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். சான்றாகச் சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற சேர மன்னனின் ஆட்சிக் காலத்தில் வானத்தில் தோன்றிய தீக்குறிகளைக் கண்ட கூடலூர் கிழார் என்ற புலவர் பெருமான் அம்மன்னன் ஏழு நாட்களில் இறந்துபடுவான் என்று கணித்தார். புலவரது வாக்கு பொய்யாகாமல் அவன் குறித்த நாளிலே மரித்தான். இதைக் கீழ்க்கண்ட பாடல் சான்றளிக்கின்றது:

“ஆடு இயல் அழல் குட்டத்து
ஆர் இருள் அரை இரவில்,
முடப் பனையத்து வேர் முதலாக்
கடைக் குளத்துக் கயம் காய,
பங்குனி உயர் அழுவத்து,
தலை நாள்மீன் நிலை திரிய,
நிலை நாள்மீன் துறை படிய,
பாசிச் செல்லாது, ஊசித் துன்னாது
அளக்கர்த் திணை விளக்காகக்,
கனை எரி பரப்ப, கால் எதிர்ப்பு பொங்கி,
ஒரு மீன் விழந்தன்றால், விசும்பினானே:”

(புறநானூறு:229:1-13)

**நிறைவுரை**

பஞ்சபூதங்களின் கட்டமைப்பே நாம் வாழும் பூமியாகும். இதை நமது உடலில் உள்ள பொறிகளுடன் ஒப்பிட்டு வானவியலை விஞ்ஞானம் ஆக்கினர் தமிழர். இந்தப் பஞ்சபூதங்களில் தலை சிறந்தது விசும்பு என்ற ஆகாயமாகும். அது பல்வேறு ரகசியங்களையும் கூறுபாடுகளையும் கட்டமைப்பையும் தன்னகத்தே கொண்டது. வானில் காணப்படும் நட்சத்திரங்களையும் கோள்களையும் ஆராய்ந்து அறியும் ஆர்வம் சங்கத் தமிழருக்கு இயல்பாகவே காணப்பட்டது. இது கணிதவியலாகவும் சோதிடவியலாகவும் பரிணமித்தது. ஆகாயத்தை நன்கறிவதுடன் அவற்றைத் தமது நடைமுறை வாழ்க்கைக்குத் தக்கவாறு மாற்றிச் செவ்வனே பயன்படுத்திக் கொண்டனர். இதன் மூலம் காலத்தையும் நேரத்தையும் வென்று வாழத் தலைப்பட்டனர். “அறிவு உடையோர் எல்லாம் உடையார்” என்பார் வள்ளுவர் பெருந்தகை. அக்குறளுக்கேற்ப விசும்பு என்ற ஆகாயத்தைச் சங்கத் தமிழர் நன்கறிந்ததுடன் அவற்றை அறிவுசார் இயலாக வகுத்து இப்புவியில் தாம் வாழும் வாழ்விற்கு நன்கு பயன்படுத்திக் கொண்டனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. வானவியலையும், சோதிடத்தையும் கண்டு மேலைநாட்டவர் மூடநம்பிக்கையாலும்,அறியாமையாலும் இல்லாதகட்டுக்கதைகளைப் புனைந்த காலத்தில் சங்கத்

தமிழர் அவற்றை விஞ்ஞானக் கண்கொண்டும், மெய்ஞான அறிவுடனும் நோக்கி உண்மையை உணர்ந்து வாழ்ந்தனர் என்பதை மறைக்கவோ, மறுக்கவோ இயலாது.

**சான்றெண் விளக்கம்**

1."நீல் நிற விசும்பின் வலன்ஏர்பு திரிதரும்
நாள்மீன் விராஅய கோள்மீன் போல" -
பட்டினப்பாலை:67-68

2. பரிபாடல்:11:1-15

3. தமிழ்நாட்டு வரலாறு-சங்க காலம்-வாழ்வியல், ப-ள்:251-252

4.பத்துப்பாட்டு ஆராய்ச்சி, மு.இராசமாணிக்கம் பிள்ளை, ப:630

5. பட்டினப்பாலை:66-77

6.Social History of Tamils, Pillai.K.K,1969,P:404

**கருவிநூற் பட்டியல்**

1.தொல்காப்பியம், 2014, தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை

2.மலைபடுகடாம்,2004 நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை

3.புறநானூறு,2004, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை

4.மதுரைக்காஞ்சி,2004, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட்,
சென்னை

5.நெடுநல்வாடை,2004, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட்,
சென்னை

6.பட்டினப்பாலை, 2004, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை

7.பரிபாடல், 2004, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை

8.சிலப்பதிகாரம்,2020, ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை

9.மணிமேகலை,1994, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

10.திருக்குறள், 1996, மணிவாசகர் பதிப்பகம், சென்னை

11.தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், பிள்ளை.கே.கே. 2013,
உலகத் தமிழாராச்சி நிறுவனம், சென்னை

12.தமிழ்நாட்டு வரலாறு-சங்க காலம், 1983, தமிழ்நாட்டு பாடநூல்
நிறுவனம், சென்னை

13.பத்துப்பாட்டு ஆராய்ச்சி, இராசமாணிக்கம் பிள்ளை.மு. 2011
சென்னை, சென்னைப் பல்கலைக் கழகம்

14.A Social History of Tamils (Vol:1), Pillai.K.K,1975,Chennai,University of Madras

# 36.தகனம் நாவலில் சுற்றுச்சூழல் விழுமியங்கள்

**மு.மாலினி,**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
**முனைவர் க.சுஜாதா,**
ஆய்வு நெறியாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி- 620 002
**malinirameshkumar1984@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்ஷினியின் *தகனம்* நாவல், சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் கடலோர கிராம மக்களின் வாழ்வியலையும், மயானத் தொழிலாளர்களின் (வெட்டியான்) அவலங்களையும் மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை, இந்நாவலில் வெளிப்படும் சுற்றுச்சூழல் விழுமியங்களைச் சமூகச் சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் நீதி ஆகிய கோட்பாடுகளின் பின்னணியில் ஆராய்கிறது.

சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் இயற்கைச் சீற்றங்களின் நேரடிப் பாதிப்புகள் எவ்வாறு ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களைச் சிதைக்கின்றன என்பதை நாவல் காட்சிப்படுத்துகிறது. மயானச் சூழலில் சடலங்கள் எரிக்கப்படும்போது ஏற்படும் காற்று மாசுபாடு போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாத தொழிலாளர்களின் ஆரோக்கியத்தை எவ்வாறு சீரழிக்கிறது என்பதையும் சமூக அடுக்கதிகாரத்தில் கழிவுகளை அகற்றும் சுற்றுச்சூழல் சுமை ஏன் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மீது மட்டுமே சுமத்தப்படுகிறது என்பதையும் இந்நாவல் விரிவாகப் பேசுகிறது.

மனிதனுக்கும் இயற்கைக்குமான கரிமத் தொடர்பை விளக்கும் இந்நாவல் சாதிய ஆதிக்கமும் சமூக ஏற்றத்தாழ்வுகளும் களையப்படாதவரை உண்மையான சுற்றுச்சூழல் நீதியை நிலைநாட்ட முடியாது என்பதை வலியுறுத்துகிறது.

**முன்னுரை**

இலக்கியம் என்பது சமூக மாற்றத்திற்கான ஒரு சக்திவாய்ந்த கருவி மட்டுமல்ல; அது வாழும் சூழலையும் மனிதனுக்கும் இயற்கைக்குமான பிணைப்பையும் பிரதிபலிக்கும் ஒரு காலக்கண்ணாடியும் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தமிழ் இலக்கிய உலகில் உருவான சூழலியல் திறனாய்வு மனிதனை மட்டுமே மையமாகக் கருதும் மனித மைய வாதத்தை தகர்த்து இயற்கையையும் அதன் அனைத்துக் கூறுகளையும் இலக்கியத்தின் முதன்மைப் பொருளாக மாற்றியது.

தமிழ் நாவல் பரப்பில் விளிம்புநிலை மக்களின் வாழ்வியலையும் பெண்மையின் குரலையும் உரக்கப் பேசி வரும் முக்கியப் படைப்பாளி எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்ஷினி ஆவார். இவரால் படைக்கப்பட்ட தகனம் நாவல் தாழங்குப்பம் போன்ற கடலோரக் கிராமங்களில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களின் தினசரித் துயரங்களையும் சுடுகாட்டுத் தொழிலாளர்களின் (வெட்டியான்) மிகக் கொடூரமான வாழ்வியல் யதார்த்தங்களையும் மையமாகக் கொண்டு எழுதப்பட்டது.

பொதுவாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது காடுகளைப் பேணுதல் மரங்களை நடுதல் என்பதாக மட்டுமே சுருக்கப்பட்டுப் பார்க்கப்படும் சூழலில் இந்நாவல் ஒரு புதிய பரிமாணத்தைத் திறக்கிறது. சாதிய ஆதிக்க அமைப்பானது எவ்வாறு இயற்கை வளப் பகிர்விலும் நிலப் பயன்பாட்டிலும் பாகுபாட்டைக் காட்டுகிறது என்பதை இந்நாவல் அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டுகிறது. சமூக நீதிக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் இடையே உள்ள நெருங்கிய பிணைப்பை விளக்கும் "சமூகச் சூழலியல்"மற்றும் "சுற்றுச்சூழல் நீதி" ஆகிய இரு முக்கியக் கோட்பாடுகளைத் தமிழ் இலக்கியத் தளத்தில் இந்நாவல் வலுவாக முன்வைக்கிறது.

இறப்பின் எச்சங்களையும், கழிவுகளையும், காற்று மாசுபாட்டையும் தினசரி எதிர்கொள்ளும் மயானத் தொழிலாளர்களின் சூழலியல் அவலங்களை ஆராய்வதும் <u>தகனம் நாவல்</u> வழிப் புலப்படும் மாசற்ற சூழலுக்கான விழுமியங்களை வெளிக்கொணர்வதுமே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

**புவியியல் புறக்கணிப்பும் விளிம்புநிலை வாழ்விடமும்**

நாவலின் முதன்மைக் களமாக வரும் 'தாழங்குப்பம்' கடலோரப் பகுதி புவியியல் ரீதியாக மிகவும் ஆபத்தானது. வளம் நிறைந்த நிலப்பகுதிகள் ஆதிக்கச் சமூகத்தினரால் ஆக்கிரமிக்கப்பட , கடலோரப் பகுதி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்படுகிறது.

**தாழாங்குப்பம் வழக்கமான குப்பம் போலத்தான் இருந்தது. நாற்றமடிக்கும் கூவத்தின் தொடர்ச்சி ஒரு பக்கம். அதில் ஜலக்கிரீடை செய்துவிட்டுச் சொதசொதவென்று சாக்கடை நீரும். நாற்றமும் சுமந்து ஆடி அசைந்து வெளியே வரும் எருமை. பொது கைபம்ப்பில், துணி துவைத்து பாத்திரம் கழுவி குடத்தில் பிடித்துத் தேங்கிய தண்ணீர் குட்டையாய் வழிந்து நிற்க அதில் மொத்தக் குத்தகையாய்க் கொசுப்பட்டாளம் 1**

**நச்சுச் சூழலும் உடலரசியலும்**

பிணங்களை எரிக்கும் மயானம் ஒரு நச்சு மண்டலமாக மாறுகிறது. அங்கு வெளிப்படும் தொடர் புகையும் கரியும் வெட்டியான் சமூக மக்களின் உடலைச் சிதைக்கின்றன.

**இவ்ளோ இருமற...?" "ப்ச. மருந்துக்கு கேக்கிற நோவு இல்ல இது பரம்பரை நோவு. உங்க தாத்தாவையும் காசம் தானே அரிச்சிட்டிருக்கு... வாரிசுக்கும் வந்தாச்சு. சுடுகாட்டுப் புகைக்கு ஆஸ்த்துமா தானே தோஸ்த்து..யாரு முந்தின்னுதான் தெரியல்ல? அப்பாவா? நானா...?"2**

**வழியிலிருந்த கல்லில் கண் தெரியாமல் தடுக்கி விழப் பார்த்த இருசப்பனைக் கையால் தாங்கிப் பிடித்தான் சின்னராசு.**

**"இன்னும் எத்தினி நாளுக்குப் பார்வை இருக்கும்னு தெரியல்ல... கண்ணு அவிஞ்சி போயி. அப்பனுக்கு வாரிசாப் பக்கத்துல குந்தப் போ-றேனோ என்னவோ...? மிஞ்சிப் போனா ரெண்டு வருஷம். சாம்பல் அடிச்சு அடிச்சுக் கண்ணு போனது தான் மிச்சம்.'"கல்லில் களைப்போடு உட்கார்ந்தான் இருசப்பன் 3**

**கழிவு நீக்கமும் சுற்றுச்சூழல் சுமையும்**

சமூகத்தின் அனைத்துத் தரப்பு மனிதர்களின் இறுதி எச்சங்களையும் கழிவுகளையும் கையாண்டு தூய்மைப்படுத்தும் பணியை ஒரு குறிப்பிட்ட சாதி மட்டுமே செய்ய வேண்டும் என்ற விதியை நாவல் கடுமையாக எதிர்க்கிறது.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

**"நீயாச்சும் வேற வேலைக்கு போவக் கூடாதா சம்பத்து?. சாம்பல் அடிச்சுக் கண்ணு போன தாத்தா. ரௌடிங்க அடிச்சுப் போட்ட அப்பன். புத்தி பேதலிச்சு சுரேசு, பைத்தியமாயி ஓடிப் போயிட்ட எங்கப்பன். இத்தினி பேரையும் காவு வாங்கிருச்சு. ஒங்க வூட்டுல மிச்சமிருக்கிற திண்ணைய நீ ரொப்பணும்னு ஆசையா?"4**

**4.சமூகச் சூழலியலும் விளிம்புநிலை வாழ்விடமும்**

சுற்றுச்சூழல் மாசுபாடு என்பது அனைவருக்கும் பொதுவானதாகத் தோன்றினாலும், அதன் நேரடிப் பாதிப்பை முதலில் சந்திப்பவர்கள் விளிம்புநிலை மக்களே என்பதை நாவல் காட்டுகிறது.

அடிப்படைக் காற்று நீர் உரிமை மறுப்பு: தாழங்குப்பம் மக்கள் வாழும் பகுதி தூய்மையான காற்று, குடிநீர் போன்ற அடிப்படைச் சூழலியல் உரிமைகள் அற்றதாக உள்ளது.

இயற்கை இடர்கள்: புவியியல் ரீதியாகக் கடலோரப் பகுதிகளில் வாழும் இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் புயல் மழை போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கு மிக எளிதாகப் பலியாகும் அவலத்தை ஆசிரியர் விவரிக்கிறார்.

**சுடுகாட்டுச் சூழலும் காற்று மாசுபாடும்**

<u>தகனம் நாவலின்</u> முதன்மை மையமே பிணங்களை எரிக்கும் மயானச் சூழல்தான்.

புகையும் துர்நாற்றமும்: சடலங்களைத் தகனம் செய்யும்போது விறகு, நெய், துணிகள் மற்றும் மனித உடல்கள் எரிவதால் ஏற்படும் நச்சுப் புகையும் நாற்றமும் அப்பகுதிச் சூழலைத் தொடர்ந்து மாசுபடுத்துகின்றன.

தொழிலாளர்களின் உடல்நலம்: இந்த நச்சுச் சூழலில் எவ்விதப் பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி வாழும் தொழிலாளர்களின் நுரையீரல் மற்றும் தோல் சார்ந்த நோய்கள், சுற்றுச்சூழல் சீர்கேட்டின் நேரடி விளைவுகளாக நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

**மனசு பலதும் நினைத்தபடியிருக்க. கைபாட்டுக்கு வேலை செய்தது. மூட்டை அடுக்கி மண்மெத்திப் பரபரவென்று சோலியை முடிக்கப் பார்த்தாள் சின்னப்பொண்ணு. மறுபடியும் மழை வந்து காரியத்தைக் கெடுப்பதற்குள் மிச்ச மீதியெல்லாம் எரித்தாக வேண்டும். துர்நாற்றமும் கெட்ட வாயுவுமாய் மண்ணிலிருந்து கிளம்பியதில் அவளுக்குக் கிறக்கமாய் வந்தது. ஆனாலும் சுணங்கவில்லை. கையிலிருந்த வெட்டிக் கம்பால் தெறித்த உடம்பை ஜாக்கிரதையாக அமுக்கித் திணித்தாள். ஆஸ்பத்திரி சடலங்களுக்குeளே உப்பும் பாட்டில்களும் கூட வைத்துத் தைத்து அனுப்பி விடுவார்கள். பிணத்தை எரிக்கும் போது எதிர்பாராமல் பாட்டில் வெடிக்கும் அபாயம் உண்டென்பதால்- ரொம்பவே முன்னெச்செரிக்கையாய் இருப்பாள். தள்ளி நின்றே புரட்டிப் போட்டாலும் கூடத் தீயின் வெப்பம் அவளைத் தகித்தது. உயிரோடு எரித்தது-5**

**சுற்றுச்சூழல் நீதியும் சாதிய ஆதிக்கமும்**

இயற்கை வளம் மற்றும் நிலப் பயன்பாட்டில் உள்ள சாதிய ஆதிக்கத்தை நாவல் கடுமையாகச் சாடுகிறது.

புறக்கணிக்கப்படும் நிலங்கள்: ஊருக்கு ஒதுக்குப்புறமான, சுகாதாரமற்ற, பயன்பாடற்ற நிலங்களே ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களாகவும், மயானங்களாகவும் மாற்றப்படுகின்றன.

சுற்றுச்சூழல் பொறுப்பு: உயர்தட்டு மக்கள் உருவாக்கும் கழிவுகளையும் இறப்பின் எச்சங்களையும் தூய்மைப்படுத்தும் மற்றும் எரிக்கும் சுற்றுச்சூழல் சுமையை இந்த விளிம்புநிலை மக்களே சுமக்க வேண்டியுள்ளது.

**முடிவுரை**

ஆண்டாள் பிரியதர்ஷினியின் தகனம் நாவல்

வெறும் மனிதக் கதையை மட்டும் கூறாமல், மனிதனுக்கும் அவனது சுற்றுப்புறத்திற்கும் உள்ள கரிமப் பிணைப்பை அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டுகிறது. சமூக மாற்றமும், சாதி ஒழிப்பும் நிகழாமல் உண்மையான சுற்றுச்சூழல் நீதியை நிலைநாட்ட முடியாது என்பதை உலகிற்குத் தாராளமாக உணர்த்தும் ஒரு சிறந்த சூழலியல் ஆவணம் இந்நாவல் ஆகும்**.**

**சாண்றென் விளக்கம்:**

1.ஆண்டாள்பிரியதர்ஷினி-தகனம்- தக.ப.18

2.ஆண்டாள்பிரியதர்ஷினி-தகனம்- தக.ப.3

3.ஆண்டாள்பிரியதர்ஷினி-தகனம்- தக .ப.17

4.ஆண்டாள்பிரியதர்ஷினி--தகனம்- தக .ப.94

5.ஆண்டாள்பிரியதர்ஷினி-தகனம்- தக .ப.111

**துணைநூற் பட்டியல்**

1.**ஆண்டாள் பிரியதர்ஷினி ‘தகனம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-**600050 , **முதல் பதிப்பு ,டிசம்பர்** 2001

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 37.சித்தர் பாடல்களில் இயற்கை மருத்துவமும் சுற்றுச்சூழலும்

**முனைவர் அ. அருள் சகாய அனிட்டா,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 02.
E.mail: arulsagayaanita@gmail.com, https://orcid.org/0009-0006-8574-7657

**ஆய்வுச் சுருக்கம்**

"அண்டத்தில் உள்ளதே பிண்டம் பிண்டத்தில் உள்ளதே அண்டம்" என்பதை உலகிற்கு உணர்த்தியவர்கள் சித்தர்கள். சித்த மருத்துவம் என்பது வெறும் நோய்க்கான மருந்து மட்டுமல்ல; அது இயற்கையோடு இயைந்து வாழும் ஒரு வாழ்வியல் முறை. சித்தர்கள் தங்களின் பாடல்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தூய்மையான நீர், காற்று, தாவரங்களின் மருத்துவக் குணங்கள் மற்றும் பருவ காலங்களுக்கு ஏற்ப உடலைப் பேணும் முறைகளைத் தெளிவுபடுத்தியுள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரை, பதினெண் சித்தர்களின் பாடல்களில் பொதிந்துள்ள சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும், இயற்கையோடு இணைந்த மருத்துவக் கோட்பாடுகளையும், தற்காலத்திற்கு அவற்றின் தேவையையும் சூழலியல் பதிவுகளையும் விரிவாக ஆராய்கிறது.

**முன்னுரை**

தமிழ் மண்ணில் தோன்றிய சித்தர்கள் ஆன்மீகவாதிகள் மட்டுமல்லர்; அவர்கள் சிறந்த விஞ்ஞானிகள், வேதியியலாளர்கள், மருத்துவர்கள் மற்றும் சூழலியலாளர்கள். 'சித்தி' அடைந்தவர்கள் சித்தர்கள் எனப்படுவர். அவர்கள் மனித குலம் நோயின்றி வாழ, தங்களைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலையே முதன்மைப் படுத்தினர்.

**அண்ட-பிண்டக் கோட்பாடு**

இயற்கைக்கும் மனித உடலுக்கும் உள்ள தொடர்பை சித்தர்கள் "அண்ட-பிண்டக் கோட்பாடு" மூலம் விளக்கினர். 'அண்டம்' என்பது பிரபஞ்சம் (சூழ்நிலை); 'பிண்டம்' என்பது மனித உடல்.

**"அண்டத்தில் உள்ளதே பிண்டம்**
**பிண்டத்தில் உள்ளதே அண்டம்**
**அண்டமும் பிண்டமும் ஒன்றே**
**அறிந்துதான் பார்க்குங் காலே" - சட்டமுனி**

பிரபஞ்சம் எத்தகைய பஞ்சபூதங்களால் (நிலம், நீர், தீ, வளி, ஆகாயம்) ஆனதோ, அத்தகைய கூறுகளால்தான் மனித உடலும் ஆனது. எனவே, வெளியில் நடக்கும் சுற்றுச்சூழல் மாற்றங்கள் மனித உடலிலும் பிரதிபலிக்கும் என்பதை சித்தர்கள் அன்றே கண்டறிந்தனர்.

**சூழலியல் சமநிலை**

பஞ்சபூதங்களில் முதலாவதான நிலம் (Prithvi) மனித உடலின் எலும்பு, தசை, தோல் போன்ற தடிமனான பாகங்களுக்கு ஆதாரமாக உள்ளது. நிலத்தின் தன்மையைப் பொறுத்தே மனிதர்களின் உடலமைப்பும், அங்கு விளையும் மூலிகைகளின் மருத்துவத் தன்மையும் மாறுபடுகின்றன என்பதைச் சித்தர்கள் உணர்த்தினர்.

**பார் அறிந்து அண்டம்**
**சிறுகற நின்றது**
**நான் அறிந்து உள்ளே**
**நாடிக்கொண்டேனே (திருமந்திரம் 1017)**

என்கிறார் திருமூலர். உடல் பஞ்சபூத கலவையால் குறிப்பாக மண்ணால் உருவான ஒரு தற்காலிக குடில் என்பதை சிகவாக்கியர்

**அஞ்செழுத்திலே பிறந்து**
**அஞ்செழுத்திலே**
**வளர்ந்து**
**அஞ்செழுத்தை ஓதுகின்ற**
**பஞ்சபூத பாவிகாள்.**

நிலம் உள்ளிட்ட ஐம்பூதங்களின் சேர்க்கையால் தான் இந்த உடல் பிறந்து வளர்கிறது பிரபஞ்சத்தின் ஐம்பூதங்களும் உடலின் ஐம்பூதங்களும் நமச்சிவாயா என்ற ஐந்து எழுத்தில் அடக்கம் என்பதனை உணர்த்துகிறார். சட்ட முனி சித்தர் தனது பாடல்களில் ரசவாதம் மற்றும் காயகற்ப முறைகளோடு ஒப்பிட்டு பாடியுள்ளார்

**பாரப்பா அண்டத்தில்**
**உள்ளதெல்லாம் பிண்டம்**
**பகர்ந்திடோம்**
**பிண்டத்தில்**
**உள்ளதெல்லாம் அண்டம்.**

மனித உடலானது பிரபஞ்சத்தின் நிலப்பரப்பை போன்றது நிலத்தில் எப்படி தாதுக்களும் உலோகங்களும் மூலிகைகளும் புதைந்துள்ளனவோ அதேபோல மனித உடலாகிய மண்ணுக்குள்ளும் எண்ணற்ற ஆற்றல்களும் தாதுக்களும் அடங்கியுள்ளன மேலும் உடலின் பஞ்சபூத கட்டமைப்பை சட்ட முனி சித்தர் அவர்கள்

**மண்ணான சரீரமடா**
**ஐந்து பூதம்**
**வளர்கின்ற பிண்டமடா**
**உலகினோடு ஒன்றே**

இந்த மனித உடல் மண்ணின் வடிவமே ஆகும் உலகத்தில் உள்ள மண் நீர் நெருப்பு ஆகியவற்றின் அதே விகிதாச்சாரம் தான் மனித உடலிலும் அமைய பெற்றுள்ளது எனவே உலகமும் உடலும் வேறல்ல என்பதே சட்ட முனி சித்தரின் கூற்றாக அமைகிறது

**மண் வளமும் மூலிகைகளும்**

மாசற்ற தூய்மையான நிலத்தில் விளையும் மூலிகைகளுக்கே மருத்துவக் குணம் அதிகம் என்று சித்தர்கள் கூறினர். இரசாயனங்கள் கலக்காத, இயற்கையான காடுகளிலும் மலைகளிலும் வளரும் மூலிகைகளைத் தேடிச் சென்று அவர்கள் மருந்தாகப் பயன்படுத்தினர்.

**திணை சார்ந்த வாழ்வியல்**

தொல்காப்பியம் காட்டும் ஐந்து திணைகளின் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) மண் தன்மைகளுக்கு ஏற்ப மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களையும், அவற்றைக் குணப்படுத்தும் மூலிகைகளையும் சித்தர்கள் வகைப்படுத்தினர். நிலத்தைப் பாதுகாப்பது என்பது மனித உடலைப் பாதுகாப்பதற்குச் சமம் என்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இதன் மூலம் புலனாகிறது.

**நீர் மேலாண்மையும் நீர் மருத்துவமும்**

"நீரின்றேல் அமையாது உலகு" என்பது போல, தூய்மையான நீரே மனித உடலின் நச்சுக்களைப் போக்கும் முதன்மை மருந்து என்பதைச் சித்தர்கள் வலியுறுத்தினர். திருமூலர் தனது திருமந்திரத்தில் மலையாக பொழியும் நீர் எவ்வாறு உலகை வாழ வைக்கிறது என்பதை குறித்து

**வழிநட பார்த்தமை வானகம் காக்கும்**
**பொழி மழையின் குலம் பூமி அழிக்கும்.(திருமந்திரம் 247)**

வானில் இருந்து பொழியும் மழையானது பூமியில் உள்ள அனைத்து உயிர்களையும் காத்து வளர்க்கிறது இந்த இயற்கையான நீர் ஆதாரத்தை பேணி காப்பது மனிதனின் தலையாகிய கடமை என்பதை மறைமுகமாக வலியுறுத்துகிறார் மேலும் நீர் நிலைகளை தூய்மையாக வைத்திருப்பதன் அவசியத்தையும் அதில் நீராடி உடலை தூய்மைப்படுத்துவதையும். நீரினில் மூழ்கி நினையும் சிவத்தினை என்னும் வரிகளின் வழியாக முறையான நீர் மேலாண்மை என்பது நீர் நிலைகளை பாதுகாப்பது மட்டுமல்ல அந்த நீரை தூய்மையாக பயன்படுத்தி உடலையும் மனதையும் ஒருமுகப்படுத்துவதாகும் என்கிறார்.

**நீரின் வகைகள் மற்றும் மருத்துவக் குணம்**

தேரையர் தன் 'நீர்க்குறி நெய்க்குறி' மற்றும் குணபாடம் நூல்களில் பல்வேறு நீர்நிலைகளின் நீர்த் தன்மைகளைப் பட்டியலிடுகிறார். மழைநீர்: இயற்கையின் மிகத் தூய்மையான மருந்து. மலை அருவி நீர்: பாறைகளிலும் மூலிகைகளிலும் பட்டு வருவதால் அது இயல்பாகவே பல நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் கொண்டது.

**நீர் மாசடைதலின் விளைவு**

தேங்கிய நச்சு நீரைப் பருகுவதால் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் மாறுபட்டு நோய்கள் தோன்றும் எனச் சித்தர்கள் எச்சரித்தனர். நீர்நிலைகளைத் தூய்மையாக வைத்திருப்பது ஆன்மீகக் கடமையாக மட்டுமல்லாமல், மருத்துவத் தேவையாகவும் பார்க்கப்பட்டது.

**வளி மருத்துவம்**

காற்று சீர்கெட்டால் மனித வாழ்நாளின் அளவு குறையும் என்பதைச் சித்தர்கள் ஆணித்தரமாகப் பாடியுள்ளனர். ஒரு மனிதன் ஒரு நாளைக்கு விடும் மூச்சின் எண்ணிக்கையை கொண்டு கணக்கிட்டனர் காற்று மாசு படும்போது அல்லது நம் மனம் அமைதியற்று இருக்கும்போது மூச்சின் வேகம் அதிகரிக்கும் மூச்சின் வேகம் அதிகரித்தால் ஆயுள் குறையும் என்பது சித்தர் நெறி இது குறித்து திருமூலர் திருமந்திரத்தில்,

**ஆயுள் பெருக்கம் கணக்கு**
**ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்**
**காற்றை பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்**
**கூற்றை உதைக்கும் குறியது வாமே (திருமந்திரம் 571)**

சித்தர்கள் வெளிப்புற காற்றின் தூய்மைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்களோ அதே அளவு உடலுக்குள் இருக்கும் நச்சு வாயுக்களை மற்றும் பிற கழிவு வாயுக்கள் வெளியேற்றுவதிலும் கவனம் செலுத்தினர் உடலுக்குள் தேங்கும் காற்று கெட்டுப் போனால் வாத நோய்கள் வரும் இதனை தவிர்க்க பாம்பாட்டிச் சித்தர் மூச்சுக்காற்றை ஓட செய்து, உடலை தூய்மையாக்குவதை

**வாசியை சுத்தி வகை செய்ய வேணுமென்றும்**
**வாய் பேசி குண்டலினி எழுப்ப வேணுமென்றும்**
**தேசத்துளாரறி யாத வித்தையை**
**தேர்ந்து கொண்டோமென்று ஆடு பாம்பே""**

மூச்சு காற்றை தூய்மை செய்து அதன் மூலம் உடலின் ஆற்றலின் மையமான குண்டலினியை எழுப்பும் ரகசியத்தை அறிந்தவர்கள் சித்தர்கள் மாசுபட்ட காற்றை நீக்கி சுத்தமான பிராணனை உடலின் 72,000 நாடி நரம்புகளிலும் பாயசெய்வதே இதன் நோக்கமாகும்

**பிராணாயாமமும் ஆயுளும்**

ஒரு மனிதன் ஒரு நிமிடத்திற்கு 15 முறை சுவாசிக்கிறான் என்றும், இந்தச் சுவாசத்தின் அளவை முறைப்படுத்துவதன் மூலம் ஆயுளை நீட்டிக்க முடியும் என்றும் திருமூலர் கூறுகிறார்.

**"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி**
**வாளர்க்குக் கூற்றை உதைக்குங்**
**குறியது வாமே" - திருமூலர் (திருமந்திரம்)**

காற்றைச் சுத்தமாக வைத்திருப்பதும், தூய்மையான காற்றில் மூச்சுப் பயிற்சி செய்வதும் மரணத்தைத் தள்ளிப்போடும் "காயகற்ப" நெறியாகும். காற்று மாசடைந்தால் நுரையீரல் பாதிப்பு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த மனிதச் சங்கிலியே அழியும் என்பதைச் சித்தர்கள் உணர்த்தியுள்ளனர்.

**மூலிகை மருத்துவத்தில் சுற்றுச்சூழல்**

சித்த மருத்துவத்தின் முதுகெலும்பு மூலிகைகள் ஆகும். சுற்றியுள்ள தாவரங்களை "கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்த உத்தமர்கள்" சித்தர்கள். குப்பை என்று எதுவும் இல்லை. மனிதர்கள் களைச் செடிகள் என்றும், தேவையில்லாதவை என்றும் நினைக்கும் தாவரங்களில் கூட வியத்தகு மருத்துவக் குணங்கள் இருப்பதைச் சித்தர்கள் கண்டறிந்தனர். குப்பைமேனி நச்சுக்கடிகளை நீக்கவும், தோல் நோய்களைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது. கீழாநெல்லி மஞ்சள் காமாலை நோய்க்கான உலகத்தரம் வாய்ந்த மருந்து.

**தாவரங்களைப் பறிக்கும் நெறி**

சித்தர்கள் காட்டில் உள்ள மூலிகைகளை நினைத்த மாத்திரத்தில் பறிப்பதில்லை. மூலிகையைப் பறிப்பதற்கு முன் அதற்குக் காப்புக்கட்டி, "மூலிகை சாபம்" நீக்கி, பிராயச்சித்தம் செய்து, தேவையான பகுதியை மட்டும் பறித்தனர். இது தாவரப் பல்லுயிர் பெருக்கத்தைப் (Biodiversity) பேணும் மிக உயர்ந்த சுற்றுச்சூழல் நெறியாகும். இதனையே திருமூலர் திருமந்திரத்தில் இயற்கையையும் மரங்களையும் காப்பதே மனித குலத்தின் ஆரோக்கியத்திற்கு

அடிப்படை என்கிறார். மரத்தினை மறைத்தது மாமத யானை பரத்திணை மறைத்தது பார்முதல் பூதம்...."(திருமந்திரம்) என்கிறார்

**நிலத்தின் இயல்பரிந்து மூலிகை கொள்க....""-போகர் ஏழாயிரம்**

போகர் தனது பாடல்களில் நிலத்தின் தன்மையையும் அங்கே நிலவும் சூழலையும் ஆராய்ந்து மூலிகைகளை தேர்வு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்

**விலங்கினங்களும் மருத்துவக் குறியீடுகளும்**

சுற்றுச்சூழலில் உள்ள விலங்கினங்களை உற்றுநோக்குவதன் மூலம் சித்தர்கள் பல மருத்துவ உண்மைகளைக் கண்டறிந்தனர் விலங்குகளிடமிருந்து கற்ற மருத்துவம் பாம்பு கடித்த நரி எந்த மூலிகையைத் தின்று உயிர் பிழைக்கிறது என்பதை உற்றுநோக்கி "நரிவெங்காயம்" மற்றும் "நாகதாளி" போன்ற மூலிகைகளின் நச்சுமுறிவுத் தன்மையைச் சித்தர்கள் கண்டறிந்தனர். பூனைகள் தன் வயிற்றில் உள்ள முடிகளை நீக்க "குப்பைமேனி" இலையைத் தின்பதைக் கண்டு, அது வயிற்றுப் புழுக்களை நீக்கும் மருந்து என்பதை அறிந்தனர்.

**விலங்குப் பொருட்கள்**

மாட்டின் பால், நெய், கோமயம் (சிறுநீர்), சாணம் ஆகிய "பஞ்சகவ்யம்" சுற்றுச்சூழல் தூய்மைக்கும் மனித உடலின் நோய் எதிர்ப்புச் சக்திக்கும் பயன்படுவதைச் சித்தர் பாடல்கள் விளக்குகின்றன. மனித உடலின் வாதம், பித்தம் கபம் ஆகிய மூன்று தத்துவங்களின் இயக்கத்தை சித்தர்கள் விலங்குகளின் நகர்வுகளோடு ஒப்பிட்டு பாடுகின்றனர்

**ஓடும் குதிரை வாதமடா உயரும்**
**தவளை பித்தமடா நாடும்**
**நத்தையோடு அன்ன நடை**
**நலமாங் சிலேத்தும் நாடியதே""நாடி சாஸ்திரம்**

விலங்கினங்களின் இந்த அசைவு குறியீடுகளைக் கொண்டு மனித உடலில் எந்த தத்துவம் கூடி அல்லது குறைந்து நோய் ஏற்பட்டுள்ளது என்பதனை சித்தர்கள் கண்டறிந்தனர். பாம்பு தேள் பூரான் போன்ற நச்சு உயிர்கள் கடித்தால் அதற்கான நச்சு முறிவு மருந்துகளையும் நஞ்சின் தீவிரத்தையும் குறிக்க சித்தர்கள் விலங்கின குறியீடுகளை பயன்படுத்தினர் குறிப்பாக நச்சு முடிவும் மூலிகைகளுக்கு விலங்குகளின் பெயர்களை சூட்டினர் அகத்தியர் தனது நஞ்சு நூல்களில் மூலிகை குறியீடுகளை இவ்வாறாக விளக்குகிறார்

**மயிலின் இறகும் கீரியின் பிள்ளையும்**
**இயலும் நஞ்சினை அறுக்கும் அருமருந்தே..."**

இயற்கையிலேயே பாம்பிற்கு எதிரிகளான மயில் கீரி போன்ற விலங்கினங்களின் பெயர்களை குறியீடுகளாக கொண்டு நச்சு முறிவு மூலிகைகளை அடையாளம் காட்டியுள்ளார் ஒரு விலங்கின் நஞ்சு உடலுக்குள் ஏறும் போது மனிதன் அந்தந்த விலங்கின் குணாதிசயங்களை வெளிப்படுத்துவான் என்பதையும் குறியீடாக கூறினார். தேரையர் தனது குணப்பாடம் நூலில் விலங்கின பொருட்களின் மருத்துவ குணங்களை

**கத்தூரி கோரோசனை புனுகு சட்டம்**
**மெத்துறும் நற்புகழ் மான்மதமும்"**

எனக் கூறுகிறார்.

**கால ஒழுக்கமும் பருவ கால மருத்துவமும்**

சுற்றுச்சூழலில் ஏற்படும் பருவகால மாற்றங்களுக்கு (ஆறு பருவங்கள்) ஏற்ப மனிதன் தன் உணவு முறையையும் வாழ்வியலையும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சித்தர்கள் கூறினர். இதனைச் "சுகாதார விதி" அல்லது "கால ஒழுக்கம்" என்பர்.

**தேரையரின் பிணி அணுகா விதி**

தேரையர் சித்தர் தன் பாடலில், எந்தக் காலத்தில் என்ன செய்ய வேண்டும், எதை உண்ண வேண்டும் எனப் பட்டியலிடுகிறார்:

**"திங்களுர் இரண்டுநாட் சேர்ந்துகொள்ளுங்**
**காலத்துப் பின்கொழுந்து தின்று**
**பிணிநீக்கு - மங்கிவரும் கார்த்திகையில்**
**சுக்குக் கடும்பனிநாட் கடுக்காய்**
***சீர்த்தநிர்க் கோடைதனில் சீரகம்" -*** **தேரையர்**

கார்த்திகை/மழைக்காலம்: சுக்குத் தூள் பயன்படுத்த வேண்டும் (சளி, காய்ச்சல் வராமல் தடுக்க).

பனிக்காலம்: கடுக்காய் உண்ண வேண்டும் (மலச்சிக்கல் மற்றும் குடற்புழுக்களை நீக்க). கோடைக்காலம்: சீரக நீர் பருக வேண்டும் (உடல் சூட்டைத் தணிக்க). பருவகாலச் சூழலை உணர்ந்து வாழ்வதே இயற்கை மருத்துவத்தின் அடிப்படை நெறியாகும்.

**உணவே மருந்து - மருந்தே உணவு**

சித்தர்கள் "உணவே மருந்து" என்ற கோட்பாட்டை வலியுறுத்தினர். நாம் அன்றாடம் சமையலில் பயன்படுத்தும் மசாலாப் பொருட்களும், காய்கறிகளும் சுற்றுச்சூழல் நமக்குத் தந்த கொடைகள் ஆகும்.

**பொருள் மருத்துவக் குணம் சுற்றுச்சூழல் தொடர்பு**

மஞ்சள் கிருமிநாசினி நச்சுக்களை அழிக்கும் நிலத்தடித் தண்டு (இயற்கை ஆன்டிபயாடிக்) மிளகு நச்சு முறிப்பான் (Antidote) "பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்" சீரகம் அகத்தைச் சீராக்குவது செரிமான மண்டலத்தைப் பாதுகாக்கும் என்பதை நெஞ்சு கபத்தை நீக்கும். நீடிய பித்தத்தைப் போக்கும் அஞ்சுகின்ற காசத்தை அடியோடு அறுக்கும்.... மிளகே....என்றும் இயற்கையான உணவுகளை விடுத்து, செயற்கையான மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்பதால் தான் சுற்றுச்சூழல் நோய்கள் பெருகுகின்றன என்பதைச் சித்தர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

**நச்சு இயலும் காயகற்பமும்**

சுற்றுச்சூழலில் உள்ள நச்சுக்களை (Visha) முறிப்பதற்கும், மனித உடலை முதுமை அடையாமல் காப்பதற்கும் (காயகற்பம்) சித்தர்கள் கையாண்ட முறைகள் வியப்பிற்குரியவை. உடலை 'காயம்' (கல்) போல உறுதியாக மாற்றுவது காயகற்பம். இதற்குப் பயன்படும் மூலிகைகள் அனைத்தும் கடுமையான சுற்றுச்சூழல் சூழலில் (உதாரணமாக, வறண்ட மலைகள், அடர்ந்த காடுகள்) வளரக்கூடியவை. கற்றாழை (குமரி), இஞ்சி, கடுக்காய், நெல்லிக்காய் போன்றவை காயகற்ப மூலிகைகளாகக் கருதப்படுகின்றன.

**சுற்றுச்சூழல் நச்சு முறிவு**

பூச்சிக்கடி, பாம்புக்கடி போன்ற சுற்றுச்சூழல் சார்ந்த நச்சுக்களுக்குச் சித்தர்கள் "ஆடுதின்னாப்பாளை", "சிறியாநங்கை", "பெரியாநங்கை" போன்ற தாவரங்களை மருந்தாகப் பயன்படுத்தினர். இத்தாவரங்கள் காடுகளில் இயற்கையாகவே நச்சுக்காற்றைச் சுத்திகரிக்கும் பணிகளையும் செய்கின்றன.

**மன அமைதியும் இயற்கைச் சூழலும்**

உடல் ஆரோக்கியத்திற்கு மன ஆரோக்கியம் மிக முக்கியம். மன அமைதிக்குச் சித்தர்கள் காடுகளையும், அமைதியான மலைச் சூழல்களையும் தேர்ந்தெடுத்தனர்.

**இயற்கையே தியானக்கூடம்**

சதுரகிரி, கொல்லிமலை, பொதிகை மலை போன்ற மூலிகைக் காடுகளே சித்தர்களின் புகலிடமாக இருந்தன. அங்குள்ள ஓசோன் காற்றும், அமைதியான சூழலும் மன அழுத்தத்தைக் குறைத்து, ஹார்மோன் சுரப்பிகளைச் சீராக்குகின்றன என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

**"மனமது செம்மையானால் மந்திரம்**
**செபிக்க வேண்டா மனமது செம்மையானால்**
**வாயுவை உயர்த்த வேண்டா" - அகப்பேய்ச் சித்தர்**

மனதை அமைதிப்படுத்துவதே உடலை காக்கும் ஆகச்சிறந்த மருந்து என்பதை திருமூலர் மிக அழகாக பதிவு செய்துள்ளார். மனம் அமைதி அடைந்தால் உடலுக்குள் இருக்கும் ஆன்மா பேரின்ப நிலையை அடையும் என்கிறார் மனம் அமைதி பெறும் நிலை மனமது தூய்மையின் மங்கலமாகும் மனமது தூய்மையின் மாசற்று வாழலாம் மனமது தூய்மையின் மன்னுயிர் காக்கலாம் மனமது தூய்மையின் மாண்பதுவாமே - (திருமந்திரம்)

மேலும் அமைதியான இயற்கை சூழலில் அமர்ந்து தியானிப்பதன் மூலம் மனதை ஒருமுகப்படுத்தலாம் என்பதை

**மனத்து விளக்கினை மாண்புற ஏற்றி**
**சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி...**

புறத்தில் உள்ள சத்தங்களையும் அகத்தில் உள்ள சினத்தையும் அடக்கி மனவிளக்கை ஏற்றுவதே அமைதிக்கான வழி என்பது திருமூலரின் வாக்காகும். மன அமைதியை தேடி உலக இன்பங்களை துறந்த பட்டினத்தார் காடுகளிலும் மரத்தடிகளிலும் வாழும் இயற்கை சூழலை மனதிற்கு உண்மையான அமைதியை தரும் என்ற பாடினார். நகரத்தின் ஆரவாரங்களை விடுத்து இயற்கையோடு இணைந்து வாழும் போது மன அழுத்தம் அகலும் என்கிறார்

**"இருப்பாய் மரத்தடி யேற்கையிலேடன்**
**பருப்பாய கஞ்சியுண் பாணியிலேற்றுத்**
**நெருப்பாய் வாரச் செகத்தவர் மாயா**
**திருப்பாய யதுவுனக் கெய்துநன்றாமே". பட்டினத்தார் பாடல்**

மரத்தடியில் தங்கி இயற்கையோடு வாழ பழகிக்கொண்டு கையில் இருக்கும் எளிய உணவை கொண்டு உலக மனிதர்களின் வீண் புகழ்ச்சிகளை பாராட்டாமல் இருப்பதே ஒருவனுக்கு

கிடைக்கும் ஆக சிறந்த நன்மை என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு மனதைச் செம்மையாக்க இயற்கையோடு ஒன்றிப் போவதே சிறந்த வழி என்பதைச் சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன.

**தற்காலச் சுற்றுச்சூழல் சீர்கேடும் சித்தர் பாடல்களின் தேவையும்**

இன்றைய 2026-ஆம் ஆண்டின் நவீன உலகமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் சூழலில், காற்று மாசுபாடு, நீர் மாசுபாடு, புவி வெப்பமயமாதல் போன்ற பெரும் சவால்களை மனிதகுலம் சந்தித்து வருகிறது. இயற்கையை மனிதன் தன் பேராசைக்காக அழித்தால், பஞ்சபூதங்களின் சீற்றம் தாங்காமல் புதுப்புது நோய்கள் (தொற்றுநோய்கள், புற்றுநோய்) தோன்றும் என்று சித்தர்கள் அன்றே எச்சரித்துள்ளனர்.

**நீர் சுத்திகரிப்பில் தேற்றான்கொட்டை**

**"தேற்றான் விரைதனைத் தூளாக்கி நீரில்**
**இடவே கலங்கல் நீங்கித் தெளிவுறுமே..." - அகத்தியர் குணபாடம்**

குளத்து நீர் அல்லது ஆற்று நீர் கலங்கலாக இருந்தால், தேற்றான்கொட்டையை (Clearing nut) அரைத்து அந்தப் பாத்திரத்தின் உட்புறம் தடவினால், நீரில் உள்ள மாசுகள் அனைத்தும் கீழே படிந்து நீர் பளிங்கு போல் தெளிவாகும். இது எவ்வித இரசாயனமும் இல்லாத இயற்கையான நீர் சுத்திகரிப்பு முறை ஆகும்.

**முடிவுரை**

சித்தர்கள் காட்டிய வழி என்பது வெறும் மருத்துவ முறை மட்டுமல்ல; அது ஒரு முழுமையான சூழலியல் தத்துவம். இயற்கையின் அங்கமே மனிதன்: மனித உடல் பிரபஞ்சத்தின் ஒரு பகுதி. எனவே, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது என்பது நம் உடலைப் பாதுகாப்பதே ஆகும்.

தடுப்பு மருத்துவம் (Preventive Medicine): நோய் வந்தபின் மருந்துகளைத் தேடுவதை விட, தூய்மையான காற்று, நீர், பருவகால உணவு மூலம் நோய் வராமல் தடுக்கும் இயற்கை வழியைச் சித்தர்கள் கற்பித்துள்ளனர். மூலிகைகளைப் போற்றுதல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல் போன்ற சித்தர்களின் சிந்தனைகள் இன்றைய 'பசுமை உலகக் கோட்பாட்டிற்கு' (Green Movement) முன்னோடியாகும். எனவே, சித்தர்களின் பாடல்களில் உள்ள இயற்கை மருத்துவக் கருத்துகளையும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும் பள்ளி, கல்லூரிப் பாடத்திட்டங்களில் கொண்டு சேர்த்து, அடுத்த தலைமுறைக்குக் கடத்துவது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

**துணைநின்ற நூல்கள்**

1. பதினெண் சித்தர் பாடல்கள் - அரு Ramanathan (தொகுப்பாசிரியர்), பிரேமா பிரசுரம், சென்னை, 2018.

2. திருமந்திரம் மூலமும் உரையும் - வித்வான் சுப்பிரமணியன், கழக வெளியீடு, சென்னை, 2012.

3. தேரையர் வெண்பா / தேரையர் குணபாடம் - சித்த மருத்துவ மைய வாரியம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்ககம், சென்னை, 2005.

4. சித்த மருத்துவ வரலாறு - டாக்டர் இரா. வாசுதேவன், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2010.

5. தமிழர் மருத்துவமும் சுற்றுச்சூழலும் - முனைவர் க. வெங்கடேசன், காவ்யா பதிப்பகம், சென்னை, 2015.

6. அகத்தியர் மாட்டு வாகடம் மற்றும் மூலிகை நூல்கள் - தாமரை நூலகம், சென்னை, 2021.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 38.நாலடியார் காட்டும் இயற்கையோடு இணைந்த வாழ்வியல் நெறிகள்

**முனைவர் அ. அனுடயானா,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 02.
E. mail: anuselva007@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியங்களுக்குப் பிந்தைய நீதி இலக்கியக் காலத்தில் தோன்றிய முதன்மையான நூல் நாலடியார் ஆகும். சமண முனிவர்கள் பலரால் பாடப்பட்ட இந்நூல், மனித வாழ்க்கையின் நிலையாமை, அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை விளக்குகிறது. இந்நூலில் அறநெறிகள் வெறுமனே தத்துவங்களாகக் கூறப்படாமல், மனிதன் நாள்தோறும் காணும் இயற்கை கூறுகளான மரங்கள், மலர்கள், விலங்குகள், கடல், நீர்நிலை மற்றும் பருவகாலங்களோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளன. இயற்கையை உற்றுநோக்குவதன் மூலம் மனிதன் எவ்வாறு தன் வாழ்வியலைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும் என்பதை இந்நூல் கற்பிக்கிறது. இவ்வாய்வுக் கட்டுரை, நாலடியாரில் பொதிந்துள்ள இயற்கைக் குறியீடுகளையும், அவை உணர்த்தும் வாழ்வியல் நெறிகளையும் விரிவாக ஆராய்கிறது.

**முன்னுரை**

தமிழ் இலக்கியப் பரப்பில் சங்கம் மருவிய காலம் என்பது அறநெறிகளின் மறுமலர்ச்சிக் காலமாகும். இக்காலத்தில் பதினெண் கீழ்க்கணக்குத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒரே தொகை நூல் நாலடியார் ஆகும். வஜ்ரநந்தி என்ற சமண முனிவரால் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் மதுரையில் நிறுவப்பட்ட திராவிடச் சங்கத்தைச் சார்ந்த சமண முனிவர்கள் எண்ணூறு பேரால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது.

மனித குலத்தின் ஒழுக்கம், வாழ்வியல் நெறிகள், உலகியல் எதார்த்தங்கள் ஆகியவற்றை எடுத்தியம்புவதில் நாலடியாருக்கு நிகர் நாலடியாரே. மனிதன் சமூகத்தில் எவ்வாறு வாழ வேண்டும் என்ற நெறிமுறைகளை வெறும் உலர்ந்த தத்துவங்களாகக் கூறாமல், தன்னைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலோடு (Ecology) பிணைத்துக் கூறுவதே நாலடியாரின் தனிச்சிறப்பாகும். இயற்கை என்பது வெறும் ஜடப்பொருள் அல்ல; அது மனிதனுக்கு வாழ்வியலைக் கற்றுத்தரும் ஆகச்சிறந்த ஆசான் என்பதை இந்நூல் நிருபிக்கிறது. இவ்வாய்வுக் கட்டுரை, நாலடியாரில் பொதிந்துள்ள இயற்கையோடு இணைந்த வாழ்வியல் நெறிகளை ஆராய்கிறது.

**சமண முனிவர்களின் சூழலியல் பார்வை**

சமண சமயம் உலக உயிர்கள் அனைத்தின் மீதும் பின்தொடரும் 'அகிம்சை' என்னும் அறத்தைப் போதிக்கும் முதன்மைச் சமயமாகும். சமண முனிவர்கள் பெரும்பாலும் நகரங்களை விடுத்து, காடுகளிலும், மலைக் குகைகளிலும் (சமணப் படுக்கைகள்), இயற்கையின் மடியிலுமே தங்களின் வாழ்நாளைக் கழித்தனர். இதனால் அவர்களுக்கு இயற்கையின் நுட்பமான அசைவுகளைக் கவனிக்கும் பேராற்றல் இருந்தது.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

அவர்களின் பார்வையில் ஓர் எறும்போ, புல்லோ, காய்ந்த இலையோ கூட மனித வாழ்வின் தத்துவத்தைப் பேசும் தகுதி படைத்தவை. இயற்கை சமநிலை குலையும்போது மனிதனின் அக ஒழுக்கமும் குலைகிறது என்பதை முனிவர்கள் உணர்ந்திருந்தனர். எனவேதான், செல்வத்தின் நிலையாமைக்கு ஓடும் நீரையும், இளமையின் மாற்றத்திற்கு உதிரும் மலரையும், நற்பண்பிற்கு நிழல் தரும் மரங்களையும் அவர்கள் உவமையாக்கினர். புற இயற்கையை அக இயற்கையின் தூய்மைக்கு ஒரு கண்ணாடியாகப் பயன்படுத்திய சமண முனிவர்களின் சூழலியல் பார்வை உலகளாவிய தத்துவ மாண்பு கொண்டது.

**நிலவியலும் திணைக் கோட்பாடும்**

தொல்காப்பியர் வகுத்த திணைக்கோட்பாட்டின் பின்னணியை நாலடியார் தன் பாடல்களில் அழகாகப் படியெடுத்துள்ளது. மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தின் அருவிகள், முல்லை நிலத்தின் காடுகள், மருத நிலத்தின் வயல்களும் குளங்களும், நெய்தல் நிலத்தின் ஒலிகடலும் தண் சேர்ப்பும் நாலடியாரின் பாடல்களில் பின்னணியாக மட்டுமன்றி, வாழ்வியல் குறியீடுகளாகவும் வருகின்றன.

சமண முனிவர்கள் நிலத்தின் தன்மையை மனிதர்களின் குணப் பகுப்பிற்குப் பயன்படுத்தினர். நிலம் எவ்வாறு மழையைப் பெற்றுத் தன் தன்மையை மாற்றிக் கொள்கிறதோ, அல்லது தன்னுள் இருக்கும் விதைகளை முளைக்க வைக்கிறதோ, அதேபோல மனித மனங்களும் தான் சேரும் இனத்தைப் பொறுத்து வளர்கின்றன என்கிறது நாலடியார்.

இயற்கை நிலப்பரப்பை மனிதனின் மன நிலப்பரப்போடு (Mindscape) இணைக்கும் இந்தத் திணைக்கோட்பாட்டு நீட்சி, நாலடியாரை ஒரு சிறந்த சூழலியல் இலக்கியமாக அடையாளப்படுத்துகிறது.

**ஈகை நெறி**

தாவரங்கள் இயற்கையின் மிக உன்னதமான கொடையாளிகள். வேர் முதல் கனி வரை அவை தமக்கென எதையும் வைத்துக் கொள்வதில்லை. நாலடியார் இந்தத் தாவர இயல்பை மனிதனின் ஈகை (கொடை) நெறியோடு ஒப்பிடுகிறது.

**"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர் — தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப் பூச்சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தங்கு." — (நாலடியார், பாடல்: 139)**

புதிதாகச் செய்யப்பட்ட மண் பானையில் ஊற்றி வைக்கப்படும் தண்ணீருக்குத் தனி மணம் இருப்பதில்லை. ஆனால், நறுமணமிக்க பாதிரிப் பூவை அந்த நீரில் இட்டு வைத்தால், அந்த நீரும் நறுமணம் உடையதாக மாறிவிடும். அதுபோல, முறையான கல்வி கற்காத மனிதர்களாக இருந்தாலும், அறிவுடைய சான்றோர்களோடு கூடி வாழ்ந்தால், இயற்கையான அந்தப் பாதிரிப் பூவின் மணம் தண்ணீரில் ஏறுவது போல, அவர்களின் நல்லறிவும் இவர்களிடம் வந்து சேரும். சங்கம் சேர்தலின் முக்கியத்துவத்தைத் தாவரவியல் சான்றோடு நாலடியார் விளக்குகிறது.

**தாவரங்களும் மனித குணங்களும் ஒப்பீடு**

உலகில் பயன்தரும் மரங்கள் இருப்பது போல, பார்ப்பதற்கு அழகாக இருந்து எதற்கும் உதவாத தாவரங்களும், நச்சு மரங்களும் உண்டு. இவற்றைச் செல்வமிருந்தும் பிறருக்கு உதவாத கஞ்சர்களுக்கும், வஞ்சகர்களுக்கும் நாலடியார் உவமையாக்குகிறது.

**"முத்தின்நற் சாயல் முதிர்பனம் பருந்தின்**
**எத்திறத்து மாண்பும் அதற்கில்லை — சித்திரத்து**
**அலர்ந்த அலரன்னர் அல்கூர்ந்தார் கேண்மை**
**புலர்ந்தகால் புல்லென்ற போழ்து."   (நாலடியார், பாடல்: 255)**

பனை மரத்தின் நுனியில் தோன்றும் பனங்குருத்து பார்ப்பதற்கு முத்தின் நிறத்தோடு அழகாக இருக்கும். ஆனால், அதனால் மனிதனுக்கு எவ்வித மாண்பும் (பயனும்) இல்லை. அதுபோல, ஓவியத்தில் வரையப்பட்ட மலர் (சித்திரத்து அலர்) பார்ப்பதற்கு அழகாக இருக்குமே தவிர, நறுமணமோ மென்மையோ தராது. செல்வம் இருக்கும்போது மட்டும் அனிச்ச மலர் போலப் பழகி, வறுமை வந்த காலத்தில் ஓவியப் பூப்போலப் பயனின்றிப் போகும் போலி மனிதர்களின் நட்பை நாம் கைவிட வேண்டும் என்று தாவர இயல்பின் மூலம் நாலடியார் எச்சரிக்கிறது.

**மலர்களின் மாண்பும் மனிதனின் விழுமியங்களும்**

மலர்கள் வாடினாலும் தன் நறுமணத்தை இழப்பதில்லை என்ற இயற்கையின் மாறா விதியை நாலடியார் சான்றோர்களின் குடிப்பிறப்பு மாண்பிற்கு இணையாக வைக்கிறது.

**"நிலம்பாய்ந்து மண்வெடித்தக் கண்ணும் மாறாவே**
**விண்படர் நீல மலர் — நிலம்பாய்ந்து**
**மண்பக வீழ்ந்தக் கடைசியும் மாறாவே**
**விண்படர் நீல மலர்."    (நாலடியார், பாடல்: 148)**

வறட்சியின் காரணமாகக் குளம் காய்ந்து, நிலமே வெடித்துப் போனாலும், அக்குளத்தில் பூத்திருந்த நீலோத்பல மலர்கள் (நீல மலர்) தன் இயல்பான நிறத்தையோ நறுமணத்தையோ மாற்றிக் கொள்வதில்லை. அதேபோல, உயர்குடியில் பிறந்து நற்பண்புகளை வளர்த்துக் கொண்ட சான்றோர்கள், வறுமையின் கொடுமையால் நிலைகுலைந்து போனாலும், உயிர் பிழைப்பதற்காகத் தங்களின் நேர்மையையும், ஒழுக்கத்தையும், பொய் கூறா நெறியையும் எப்போதும் மாற்றிக் கொள்ள மாட்டார்கள். மலரின் மாறாப் பண்பே மனிதனின் மானத்திற்குச் சான்றாகிறது.

**விலங்கின நன்றியுணர்வுக் கோட்பாடும்**

விலங்கினங்களின் நடத்தையை ஆராய்ந்து, மனித சமூக ஒழுக்கத்திற்குப் பயன்படுத்துவதில் நாலடியார் முன்னோடியாகத் திகழ்கிறது. குறிப்பாக, நன்றியுணர்வை விளக்குவதற்கு நாயின் குணத்தை இந்நூல் போற்றுகிறது.

**"யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்**
**கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் — யானை அறிந்தும்**
**அறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்**
**மெய்யதா வால்குழைக்கும் நாய்."    — (நாலடியார், பாடல்: 213)**

யானை என்பது பேராற்றல் வாய்ந்த, அறிவு கூர்மையுடைய விலங்காக இருந்தாலும், தன்னை இத்தனை காலம் வளர்த்துப் பழகிய பாகனையே மதம் பிடிக்கும்போது கொன்றுவிடும் குணம் கொண்டது. ஆனால் நாயோ, எஜமான் கோபத்தில் தன் மீது வேல் எறிந்தாலும், அவ்வேல் தன் உடலில் பாய்ந்து வதைத்தாலும், நன்றியுணர்வோடு வாலாட்டி அவரிடமே வரும்.

சமூகத்தில் யானையைப் போன்ற ஆபத்தான, நன்றியற்ற செல்வந்தர்களின் நட்பை விட, நாயைப் போன்ற விசுவாசமும் நன்றியுணர்வும் உள்ள எளிய மனிதர்களின் நட்பே பேணத்தக்கது என்ற வாழ்வியல் உண்மை இங்கு நிலைநாட்டப்படுகிறது.

**விலங்கினங்களின் இயல்பும் தீய நட்பு விலக்கலும்**

தீய மனிதர்களின் அகக்குணத்தை அவர்களின் புற அழகைக் கண்டு ஏமாறாமல் விலக்க வேண்டும் என்பதற்குப் பாம்பின் இயற்கை குணத்தை நாலடியார் சான்றாக்குகிறது.

**"பாம்பென உற்று எழில்கண்டு கைவிட்டி டாரேபோல்**
**தம்மில் பழகினும் தீயாரைக் கைவிட்டி டல்..."**

**— (நாலடியார், பாடல்: 226)**

ஒரு பாம்பின் சட்டை (தோல்) எவ்வளவு பளபளப்பாகவும் அழகாகவும் இருந்தாலும், அதன் நச்சுத் தன்மையை அறிந்த மனிதன் அதன் அழகில் மயங்கி அதைத் தொட முற்படுவதில்லை; உடனே விலகி ஓடுவான். நம்முடன் பழகும் மனிதர்கள் புறத்தில் இன்சொல் பேசி, அழகாக ஆடை உடுத்தி வலம் வந்தாலும், அவர்களின் அகத்தில் தீய எண்ணங்கள் இருப்பதை அறிந்த கணமே, பழகிய காலத்தைப் பாராமல் பாம்பைப் போல அவர்களை நம் வாழ்விலிருந்து கைவிட்டுவிட வேண்டும். இயற்கையின் நச்சுயிரிகள் மனித ஒழுக்கத்திற்கான எச்சரிக்கைச் சின்னங்கள்.

**பறவையியலும் சமுதாயப் பகிர்வும்**

பறவைகள் தங்களுக்குக் கிடைக்கும் உணவைத் தனியாக உண்பதில்லை. காகம் தனக்கு ஒரு சிறு இரை கிடைத்தாலும் தன் இனத்தைக் கூவி அழைத்துத் பகிர்ந்து உண்ணும். இந்த இயற்கை நெறியைப் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் மனிதப் பண்பிற்கு உவமையாக்குகிறது நாலடியார்.

**"காக்கை கரவா கரைந்துண்ணும் எத்திறமும்**
**பாத்துண்ணும் பண்புடை யாரேபோல் — மாண்புடைய**
**செல்வம் உடையாரும் செல்வம் கரவாது**
**ஒல்லும் வகையால் ஈடல் வேண்டும்."**

காகத்தின் இந்த எளிய இயற்கை நடத்தை, மனிதன் தன் செல்வத்தைச் சுயநலமாகப் பதுக்கி வைக்கக் கூடாது என்பதை உணர்த்துகிறது. தன்னிடம் உள்ள பொருளை மறைக்காமல், இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் மனிதனே இயற்கையோடு இயைந்த மனிதன் ஆவான். காகத்திடம் இருக்கும் சமுதாயப் பகிர்வுப் பண்பு கூட இல்லாத மனிதன், மனித வடிவில் வாழும் விலங்காவான் என்ற சமூக நீதி இங்குப் பேசப்படுகிறது.

**வான்மழையும் நீர் மேலாண்மைச் சிந்தனைகளும்**

நீர் இன்றி அமையாது உலகு என்ற வள்ளுவத்தின் நீட்சியாக, நாலடியாரும் வான்மழையின் முக்கியத்துவத்தையும், அதைச் சேமித்துப் பயன்படுத்த வேண்டிய நீர் மேலாண்மைச் சிந்தனைகளையும் பேசுகிறது.

**"துளிஇடைப் போழ்தின் மழைபெய்யக் காணா**
**முளைஇடைப் போழ்ந்துமுதிர் கானம் — வளியிடைப்**
**போகுமே போன்றதே மாந்தர் உயிர்வாழ்வு**
**நாளுமே நற்கருமம் செய்."**

மழைக்காலத்தில் பெய்யும் ஒரு துளி மழைநீர் தான் காட்டில் உள்ள விதைகள் முளைத்து மரமாவதற்குக் காரணமாகிறது. மழை பொய்த்தால் கானகம் வறண்டு அழியும். மனித வாழ்வின் ஆயுளும் மிகக் குறுகியது. மழைநீர் மண்ணில் விழுந்து ஆவியாவதற்குள் தாவரங்கள் அதைத் தங்களுக்குப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்வது போல, மனிதனும் தன் உயிர் காற்றோடு போவதற்குள் நற்கருமங்களைச் (நல்ல செயல்களை) செய்துவிட வேண்டும் என்ற ஆன்மிகச் சூழலியல் நெறி இங்குத் துளிர்க்கிறது.

**கடலியல் நெறி**

நெய்தல் நிலத்தின் முதன்மை அங்கமான கடல், அளப்பரிய பரப்பைக் கொண்டிருந்தாலும், அதன் நீர் மனிதனின் தாகத்தையோ, பூமியின் வறட்சியையோ தீர்ப்பதில்லை. ஆனால், எளிய மேகம் அக் கடலிலிருந்து நீரை முகர்ந்து வந்து மழையாகத் தரும்போதுதான் உலகம் வாழ்கிறது.

**"பெருக்க மதியாது பேரில்லா மாந்தர்**
**அருக்கவண்ணம் வையத்து வாழ்வர் — பெருக்கத்து**
**ஓதம் நுகரும் ஒலிகடல் தண்சேர்ப்ப!**
**காளான் முளைப்பதுமோர் மழை."** — (நாலடியார், பாடல்: 263)

அலைகளையுடைய பிரம்மாண்டமான கடல் நீர் இருந்தாலும், ஒரு சிறு காளான் (Fungus/Mushroom) மண்ணில் முளைப்பதற்குக் கூட வான்மழையின் துணை தேவைப்படுகிறது. அதுபோல, பெரும் செல்வம் படைத்த அகந்தை மிக்க மனிதர்கள் தங்களின் பெருமையைப் பேசிக் கொண்டு பிறருக்கு உதவாமல் வாழ்ந்தால் அவர்களால் சமூகத்திற்குப் பயனில்லை. மழையைப் போல எளியோர்க்குத் தந்துதவும் எளிய மனிதர்களே உயர்ந்தவர்கள். எனவே, மனிதன் தன் செல்வப் பெருக்கைக் கண்டு கடலைப் போல அகந்தை கொள்ளக் கூடாது.

**பருவகாலச் சுழற்சியும் மனித வாழ்வின் நிலையாமையும்**

இயற்கையின் மாறாத விதிகளுள் ஒன்று பருவகாலச் சுழற்சியும், காலத்தின் மாற்றமும் ஆகும். காலையில் உதிக்கும் சூரியன் மாலையில் மறைவதும், வசந்த காலம் மாறி வறட்சி வருவதும் இயற்கையின் நியதி. இதை மனித வாழ்வின் நிலையாமைக்கு நாலடியார் ஒப்பிடுகிறது.

**"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட**
**மறுசிகை நீக்கிஉண் டாரும் — வறிஞராய்ச்**
**சென்றிடத்துச் சென்றுநின் றாரே, திரிகடக்கம்**
**தின்றிறக்கும் தன்மைய ராய்." — (நாலடியார், பாடல்: 2)**

பருவகாலங்கள் மாறுவது போல மனிதனின் பொருளாதார நிலையும் மாறும். நேற்று தன் இல்லத்தில் அமர்ந்து அறுசுவை உணவை உண்ட செல்வந்தன், இன்று வறுமையின் காரணமாகப் பிறர் வீட்டு வாசலில் இரந்து நிற்கும் நிலை வரலாம். இயற்கையின் இந்தக் காலச் சுழற்சியை உணர்ந்தவன், தன் கையில் செல்வம் இருக்கும்போதே ஆணவத்தைக் கைவிட்டு, அறவழியில் நின்று பிற உயிர்களைக் காக்க வேண்டும் என்ற நிலையாமை நெறி போதிக்கப்படுகிறது.

**ஐம்பூதச் சமநிலையும் உடலியல் மருத்துவமும்**

மனித உடல் என்பது மண், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உருவானது. இதனை நாலடியார் "யாக்கையின் இயல்பு" என்றுரைக்கிறது.

**"பார்முதல் பூதங்கள் ஐந்தும் ஒன்று கூடி**
**வார்ப்புற்ற உடம்பின் இயல்பினை..."**

இயற்கையில் ஐம்பூதங்கள் எவ்வாறு சமநிலையில் இயங்குகின்றனவோ, அப்போதே பிரபஞ்சம் ஆரோக்கியமாக இருக்கும். அதுபோலவே, மனித உடலிலும் இந்த ஐந்து பூதங்களின் தன்மைகளான வாத, பித்த, கபங்கள் சமநிலையில் இருக்க வேண்டும்.

உணவு மற்றும் வாழ்வியல் முறைகளால் இந்த இயற்கைச் சமநிலை குலையும்போது நோய்கள் வருகின்றன. எனவே, இயற்கையோடு இயைந்த தூய உணவையும், மாசற்ற காற்றையும் உட்கொண்டு உடலைப் பேண வேண்டும் என்ற உடலியல் சூழலியல் சிந்தனையை நாலடியார் முன்வைக்கிறது.

இன்றைய 21-ஆம் நூற்றாண்டில் மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய அச்சுறுத்தல் சுற்றுச்சூழல் சீர்கேடு (Environmental Crisis) மற்றும் பேராசை ஆகும். காடுகளை அழிப்பதும், நீர்நிலைகளை மாசுபடுத்துவதும் மனிதனின் அகக் குரூரத்தின் வெளிப்பாடே ஆகும். நாலடியார் காட்டும் "இயற்கையோடு இணைந்த வாழ்வியல் நெறி" இதற்குச் சிறந்த தீர்வாக அமைகிறது:

ஈகைக் கோட்பாடு: இயற்கையைப் போலப் பகிர்ந்தளிக்கும் குணம் வளர்ந்தால், நுகர்வுப் கலாச்சாரப் பேராசை அழியும். விலங்குகளின் உயர் பண்புகளைப் போற்றுவதன் மூலம் பல்லுயிர் பெருக்கம் பாதுகாக்கப்படுகிறது. புற இயற்கையைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்றால், மனிதனின் அகத்தில் இருக்கும் பேராசை என்னும் மாசு நீங்க வேண்டும் என்ற நாலடியாரின் தத்துவம் இன்றைய பசுமை அரசியல் சிந்தனைகளுக்கு முன்னோடியாகும்.

**முடிவுரை**

நாலடியார் காட்டும் இயற்கை என்பது மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒரு தனி உலகம் அல்ல; அது மனித வாழ்வைச் செப்பனிடும் ஒரு தார்மீகப் பள்ளிக்கூடம். சமண முனிவர்கள் தாவரங்கள், விலங்குகள், கடல், மழை, பருவகாலங்கள் ஆகிய அத்தனை இயற்கை கூறுகளையும் கொண்டு மனிதனின் அகப் பண்புகளான ஈகை, நட்பு, நன்றியுணர்வு, பணிவு மற்றும் நிலையாமையை மிக அழகாக வடிவமைத்துள்ளனர். இயற்கையின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு, அதனோடு இணக்கமாக வாழும் மனிதனே மாசற்ற வாழ்வை வாழ முடியும் என்பதை நாலடியார் நிருபிக்கிறது. எனவே, நாலடியாரைப் பயில்வது என்பது வெறும் அற நெறிகளைக் கற்பதல்ல; அது நம்மைப் பெற்றெடுத்த இயற்கையோடு மீண்டும் இணைந்து வாழ்வதற்கான வாழ்வியல் கலையாகும்.

**துணைநின்ற நூல்கள்**

1. நாலடியார் மூலமும் உரையும் — புலியூர்க் கேசிகன் உரை, பாரி நிலையம், சென்னை, 2018.

2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஓர் ஆய்வு — டாக்டர் சு. வையாபுரிப்பிள்ளை, பாரி நிலையம், சென்னை.

3. சங்க இலக்கியத்தில் இயற்கை — டாக்டர் மு. வரதராசனார், பாரி நிலையம், சென்னை.

4. தமிழர் சூழலியல் மரபும் நாலடியாரும் — முனைவர் க. பஞ்சாங்கம், காவ்யா பதிப்பகம், சென்னை, 2021.

5. Jainism and Environmental Ethics — Dr. Pragati Jain, Academic Press, New Delhi, 2019.

6. The Naladiyar: Or, Four Hundred Quatrains in Tamil — Rev. G. U. Pope, Clarendon Press, Oxford, 1893.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 39.இலக்கியம் கூறும் சிறுதானியங்களின் மேன்மையும் வரகின் தனித்தன்மையும்

**முனைவர் ஆ. அடைக்கலராஜ்,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி - 620 002, அலைபேசி : 9489638722

**மின்னஞ்சல்: adaikkalaraj_ta1@mail.sjctni.edu**

**ஆய்வுச்சுருக்கம்**

சிறுதானியங்கள் ஊட்டச் சத்து மிகுந்தவை .வறட்சியைத் தாங்கி வளரக்கூடியவை . வளம் குறைந்த மண்ணாக .காலநிலை மாற்றத்தைத் தாக்குப் பிடிக்கும் வல்லமை கொண்டவை இருந்தாலும், குறைவான மழைப் பொழிவு இருந்தாலும் வளரக் கூடியவை சிறுதானியப் . பயிர்களுக்கு வேதி உரங்களோ, பூச்சிக் கொல்லிகளோ அவசியமில்லை. தமிழ்நாட்டில் பரவலாகப் பயிரிடப்படும் மானாவாரிப் பயிர்களான பி பருத்தி மற்றும் மக்காச் சோளம் ஆகியவற்றைக்.டி. இவற்றைப் பராமரிக்க அதிகம் மெனக்கெடவும் தேவையில்லைஎனவே ., மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இவை வரப்பிரசாதமாக விளங்குகின்றன என்றால் அது மிகையில்லை.

**முன்னுரை**

உண்ண உணவு , உடுக்க உடை உறங்க உறைவிடம் இவை தான் மனிதன் வாழ்வதற்கு அடிப்படை வாழ்வதாரம். ஆனால் மனித இனம் தொடக்கத்தில் உடையும், உறைவிடமும் ஒரு பொருட்டாக இல்லை. ஆனால் உணவு முதன்மை பங்காற்றியது. தனது வயிற்றுக்குத் தேவையான உணவினைப் போராடிப் பெறுவதில் தான் மனிதனின் ஆதி காலப் பொழுதுகள் பெரிதும் கழிந்தன. ஒன்று வேட்டையாடினான் மற்றொன்று மரம், செடி, கொடிகளில் விளைந்ததைப் பறித்து உண்டான். நிலையாய் ஒரிடத்தில் வாழத் தொடங்கிய போது ஆற்றாங்கரை நாகரிகம் தோன்றியது.

**உணவெனளப் படுவது நிலத்தோடு நீரே;**
**நீரும் நிலனும் புணரியோர், ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோர்ரே; (புறநானூறு பாடல் எண் – 18)**

நீர்மை இன்றி வாழாது உடல். அவ்வுடலுக்கு உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவர் ஆவர். உணவால் உளதாவது தான் மனித உடல். உணவோ நிலத்தின் விளைவும், நீரும் ஆகும். நீரையும் நிலத்தையும் ஒருங்கு கூட்டி வேளாண்மைக்கு உதவுக, அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும் உடலையும் — நிலைநிறுத்தி வாழ்வித்தவராவர். புன்செய் நிலம் இடமகன்றும் ' விளையுள் பெருக்காமையினால் பயன் அற்றதாகும். எனவே, செழியனே! இதனை நீ எண்ணுக. நீர் தடிந்து குளம்தொட்டு நின் நாடு எங்கணும் வளம் பெருக்குவாயாக! இது செய்தோர் மூவகை இன்பமும் பெற்றுப் புகழடைவர்; அல்லாதோர் புகழ் பெறாது மடிவர் எனவும் உணர்வாயாக! என்று குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்துகிறார்.

**நாட்டு முன்னேற்றத்தில் உழவுத்தொழின் பங்கு**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

உழவுத்தொழில் உயர்ந்து விளங்கக்கூடிய நாட்டில் என்றும் பஞ்சம் ஏற்படாது. அந்நாட்டில் வாழக்கூடிய மக்கள் எப்பொழுதும் இன்பமுடன் செல்வச்செழிப்பில் சிறந்து விளங்குவார்கள் என்பதனை,

**"கருவி வானம் தண்டளி சொரிந்தெனப்**
**பல்விதை உழவின் சில் ஏராளர்**
**பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல்**
**கழுவுறு கலிங்கம் கடுப்ப சூடி**
**விளங்கு கதிர்த் திருமணி பெறூஉம்**
**அகன்கண் வைப்பின் நாடு கிழவோயே" (பதிற்றுப்பத்து பா.எண் 76)** கூட்டமாகிய மேகங்கள் மழை பெய்தவுடன் பலவிதமான விதைகளையும் வைத்திருக்கின்ற உழவிலே சிறந்த உழவர்கள் தங்கள் வேலையை ஊக்கத்துடன் செய்கின்றனர். குளிர்ந்த நீர்த்துறையை அடைகின்றனர். அழகான பகன்றைப் பூமாலைகளைக் கதிர்களிலிருந்து அழகிய தானிய மணிகளைப் பெறுகின்றனர். ஒரு நாட்டின் உயர்வுக்கு உழவுத்தொழிலே காரணம் என்பதை உணர்ந்து உழவைப் போற்றி பாதுகாத்தனர். இத்தகைய வளமுள்ள விவசாய நாட்டினை நம் கண் முன் நிறுத்துகிறார் அரிசில்கிழார்.

உலகில் ஒவ்வொரு பகுதியிலும் கிடைத்த இயற்கை விளைபொருட்களின் அடிப்படையில் அந்தந்தப் பகுதி மக்களின் உணவுப் பழக்கம் அமைந்திருந்தது. நிலவுடைமைச் சமூகத்தில் மனிதன் ஒரே இடத்தில் வாழத் தலைப்பட்ட பிறகே வகை வகையான உணவுகளைச் சமைத்து உண்ணும் வழக்கம் ஏற்பட்டிருக்கக் கூடுமென்பதும் உயிர் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவையில் இருந்த உணவு சுவை இன்பத்திற்கானதாக அதன் பின்னரே மாறியிருக்கக்கூடும் என்பது தான் உண்மை.

**நிலத்திற்கு ஏற்ப உணவு**

தங்கள் மண்ணில் விளைந்த பொருட்களைப் பதப்படுத்தி வைத்துக் கொள்ளவும், அதனைச் சமைக்கவும் பழகிக் கொண்ட பின்னர் அந்தந்தப் பகுதி மக்களின் குறியீடாக உணவுகள் மாறிவிடுகிறது. உணவு என்பது ஒரு சமூகத்தின் அல்லது இனக்குழுவின் செழிப்பின், வசதியின் அடையாளமாகவும் மாறி விட்டது. அதனால் தான் நதிக்கரைகளில், அதாவது விவசாயம் செய்யத் தகுந்த இடங்களில் நாகரிகம் தோன்றி வளர்ந்து வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

நிலவியல் அடிப்படையில் ஒவ்வொரு பகுதியும் பல்வேறுபட்ட, ஆயிரக்கணக்கான வகையிலான தானியங்களை விளைவிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் உணவின் வகைகளும் விரிவடைந்தன. வகைகள் பல்வகைப்பட்டதாக இருந்தாலும் நமக்கென ஒரு உணவு முறை வழக்கத்தில் உள்ளது. அறுசுவையோடு மருத்துவ குணம் நிறைந்த பொருட்களையே அடிப்படையாகக் கொண்டு ஒரு சமையல் முறை நம் தமிழர்களிடையே காணப்பட்டதை நம் இலக்கியங்கள் சுட்டுகின்றன.

**ஐவகை நிலங்கள்**

ஆற்றங்கரையோரங்களில் தனது உறைவிடத்திற்கான குடில்களை அமைத்து வேளாண் பணி செய்து, தனக்குத் தேவையான உணவுகளை மனிதன் உற்பத்தி செய்து கொள்ள முனைந்த போது தான் மருத, குறிஞ்சி நில வாழ்க்கை முறைகள் தோன்றின. அடர்ந்த காடுகளில் வாழ்ந்த இனக்குழுவினர் அங்கிருந்த விலங்குகளைப் பழக்கப்படுத்தி அவற்றின் மூலம் வேட்டையாடும் தொழிலை மேற்கொண்டனர். வேட்டையாடிய விலங்குகளை உண்டு மகிழ்ந்தனர். கால்நடைள் தேவையதன் உணவின் பொருட்டு மேய்ச்சலுக்கு அழைத்து சென்றனர். இங்குதான் முல்லை நில

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

வாழ்க்கை முறை தோன்றியது. கடலோராம் வாழ்ந்த மக்கள் கடல் வாழ் மீன்களை உண்டு வாழ்ந்தனர். பண்டமாற்று முறையில் எஞ்சியிருந்த மீன்களைப் பிற பகுதி மக்களிடம் கொடுத்து அவர்களின் உற்பத்திப் பொருட்களைப் பெற்று வாழ்ந்தனர். அது நெய்தல் நில வாழ்க்கை முறையானது. குறிஞ்சியும் முல்லையும் தன் இயல்பு இழந்து பாலையாக வடிவம் கொள்ளும். ஆற்றுநீரின் வாயிலாக தொடர்ந்த பாசனத்தை உறுதி செய்த நிலங்கள் நன்செய் என்றும் அதற்கு வாய்பில்லா இடங்கள் அனைத்தும் புன்செய் நிலங்கள் என்றும் அழைக்கப்பட்டன. நன்செய் நிலத்தில் பெரும்பாலும் நெற்பயிரும் புன்செய் நிலத்தில் புன்சைத் தவசங்கள் என்று அழைக்கப்படும் வரகு, சாமை, திணை, குதிரைவாலி, காடைக்கண்ணி (பனிவரகு), கேழ்வரகு ஆகிய தானியங்கள் பயிரிடப்பட்டன. சிறுதானியங்கள் நம் மண்ணின் மகத்தான வரம். பாரம்பரிய உணவு வகைகளில் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்தினை சிறுதானியங்கள் அளிக்கின்றன என்று உணவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இது பாரம்பரிய உணவு முறைகளின் ராஜாவாக இடம் பெறுவதோடு பல்வேறு நன்மைகளையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. தமிழர் உணவு சமைப்பதற்குக் குழிசி, சாடி , கலன், கன்னல், தசும்பு, குப்பி, தடவு போன்ற மண்பாண்டங்களைப் பயன்படுத்தினார்கள். .சோற்றை அடிசில், அயனி, அவிழ், கூழ், மிதவை, மூரல், சொன்றி, நிமிரல், புழுக்கல், புன்கம், பொம்மல் போன்ற சொற்கள் இலக்கியங்களில் பயன்படுத்தப்படுகிறது, பல்வேறு வகையான பயிர்களை வெவ்வேறு இடைவெளிகளில் பயிர் செய்தனர் தமிழர். சீரான இடைவெளியில் நட்டு மேற்கொண்டாலே காற்றோட்டம், சூரிய ஒளி கிடைத்துப் பயிர்கள் செழித்து வளரும் என்று உழவுத் தொழில் நுட்பத்தை அறிந்திருந்தனர்.

**“பால் வார்ப்பு கெழீஇப் பல்கவர் வளி போழ்வு**
**வாலிதின் விளைந்தன ஐவனம்”  (மலைபடுகடாம்.பா.வ. 114-115)**

என்ற வரிகள் உணர்த்துகிறது. சங்க காலத்தில் பயிரை விளைவிக்கும் விதையைச் சமைத்து உண்பதை இழிவான செயலாகக் கருதப்பட்டது. இருப்பினும் தவிர்க்க இயலாத சூழலில் விதிவிலக்காக விதைகளை உணவாகச் சமைத்துள்ளனர். திணைகளை எல்லாம் இரவலர்களுக்குக் கொடுத்து தீர்ந்து விட்டதாலும் கடனாகத் தந்தவற்றை பெற இயலவில்லை என்றதாலும் விதைப்பதற்கென காயவைத்திருந்த தினையை உணவு சமைத்துள்ளனர்

**“வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென**
**குறித்து மால எதிர்ப்பை பெறா அமையின்**
**குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப்பெய்து**
**சுழறில புறப்பட்டன்றோ இலளே”  (புறம் பா.399)**

ஒரு சமூகம் தான் கட்டமைக்கப்பட்ட சூழலில் தன் வேர்களை அனைத்து நிலைகளிலும் பதிய வைத்துக் கொண்டே வருகின்றன என்பதை சங்கப்பாடல் வழி அறிய முடிகிறது. சிறுதானியங்கள் பழந்தமிழர் உணவில் பெரும் பங்கு வகிக்கிறது என்பதை பல்வேறு இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது. பாரம்பரிய உணவு வகைகளில் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்தினை சிறுதானியங்கள் அளிக்கின்றன என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

**சிறுதானியங்களின் நன்மைகள்**

உணவே மருந்து என்ற அடிப்படையில் நாம் உண்ணுகின்ற உணவுகளை சரியான முறையில் சேர்த்துக் கொள்வது சாலச் சிறந்தது. விரைவில் செரிமானமாகும் தன்மை கொண்டது. தானியங்களின் அதிகம் புரதம், தாது உப்புகளைக் கொண்டுள்ளது இதில் பாஸ்பரஸ், மக்னீசியம் மாங்கனீஸ், காப்பர், இரும்புச்சத்து, கால்சியம், வைட்டமின் சி அனைத்தும் நிறைந்துள்ளன. இயற்கையோடு இணைந்து வாழ்வதே நம் எதிர்காலம் என்றாகிவிட்டது அதற்கு நமக்கு உற்ற துணையாக இருப்பவை சிறுதானியமே.

தானியங்களில் சிறு விதைகளைக் கொண்ட கம்பு, வரகு, சாமை, தினை, குதிரைவாலி, கேழ்வரகு, சோளம், கொள்ளு ஆகிய அனைத்தும் சிறுதானியங்களே. இவைகள் சாதாரண மண்ணில் வறட்சி நேரத்திலும் வளரக்கூடியவை. அதாவது உணவு நிலத்தையும், நீரினையும் அடிப்படையாகக் கொண்டது என்பதற்கு இலக்கியம் சான்று காட்டுகிறது.

**வரகு (Kodo Millet )**

பண்டைய உணவுப் பண்பாட்டில் வரகரிசிச் சோறு முதன்மையான இடத்தினைப் பெறுகிறது. தொல்காப்பியர் குறிக்கப்பட்டிருக்கும் எட்டு வகை உணவுப் பொருட்களில் வரகும் ஒன்று. கவைக்கதிர் கரகு, இரிலை வரகு என அடை கொடுத்து அழைக்கப்படும் வரகின் வகைகளாக கருங்கால் வரகு, செஞ்சுவல் வரகு, வெள் வரகு இலக்கியங்கள் சுட்டுகின்றன. கரிய நிறத்தையும் குறுகிய தாளையும் கொண்டது. தொண்டை நாட்டு முல்லை நிலத்தார் பாலையும் திணையரிசிச் சோற்றையும் உண்டார்கள் என்பது **பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்** என்று பெரும்பாணாற்றுப்படையிலும் ( அடி 167 -168) முல்லை நிலத்துச் சிற்றூர்களில் மக்கள் வரகரிசியும் அவரைப் பருப்பும் கலந்த செய்த கும்மாயம் என்ற உணவை உண்டதை “**குறுந்தாள் வரகின் குறள்அவிழ் சொன்றிப் புகர் கிணர் வேங்கை வீ கண்டன்ன** “ (அடி 192) அறிய முடிகிறது. கும்மாயம் என்றால் குழைய சமைத்த உணவு என்று பொருள்.

**காலையும் அந்தியும், மாலை அந்தியும்,
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கம் தேனொடு மயக்கிக்,
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த ஒக்கலொடு
இரக்கி நீடிய அதன்கலை மன்றத்துக்
கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி,
அமலைக் கொழுஞ்சோறு ஆர்த்த பாணர்க்கு
அகலா செல்வம் முழுவதும் செய்தோன்
எங்கோன் வளவன் வாழ்க! (புறுநானூறு பாடல் எண் 34)**

காலையும் மாலையும் புறாக்கருப் போன்ற புன்செய் வரகைப் பால் செய்து சமைத்துத் தேனுடன் கலந்து அத்துடன் கொழுத்த முயலின் சூடான இறைச்சியினைச் சேர்த்து பாணர்களுக்கு வழங்கப்படுவதைப் புறநானூற்று பாடல் மூலம் அறியலாம்**.**

மா புதல் சேர **வரகு** இணர் சிறப்ப
மாமலை புலம்பக் கார்கலித்து அலைப்பப்”(ஐங்குறுநூறு பாடல் எண் **496)**

பேயனார் **வரகு விளைந்து விட்டது** என்பதனை மலையே எதிரொலிக்கும்படி கார்மேகம் முழங்குகிறது என்று தலைவன் வருகையைக் குறிப்பாகக் கூறுகிறார்.

“பழமழைக் கலித்த புதுப்புன **வரகின்**
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை

வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணி
குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும் வாரார்
கண்டிசிற் றோழி பொருட்பிரிந் தோரே".-( குறுந்தொகை பாடல் எண் 220)

முல்லை திணையில் , ஒக்கூர் மாசாத்தியார் பழைய மழையில் பூத்த புது வரகின் நுனியை ஆண்மான்கள் மேய பக்கத்தில் காட்டுப் பூனை சிரித்தார்ப் போல அரும்புகள் மலர்ந்த முல்லை மலர்களை வண்டு மொய்க்கும் மாலைக் காலம் ஆகியும் சம்பாதிக்கச் சென்றவர் வரவில்லை பார்த்தாயா தோழி . என்று தலைவியன் புலம்பல் வெளிப்படுகிறது. பழமலை என்பது வரகு விதைத்த காலத்தில் பெய்த மழையைக் குறிக்கிறது.

"விதையர் கொன்ற முதையல் பூழி
இடு முறை நிரப்பிய ஈர் இலை **வரகின்**
கவைக் கதிர் கறித்த காமர் மடப் பிணை
அரலை அம் காட்டு இரலையடு வதியும்" –( நற்றிணை பாடல் எண்121)

வரகு முதையல் நிலத்தில் இரட்டை இலைகளுக்கு இடையே கதிர் வாங்கி விளையும்.. முதையல் என்பது காட்டு மரங்களை வெட்டி எரித்து உருவாக்கிய பழமையான நிலமாகும்..வரகின் அரிசியால் ஆக்கப்பட்ட சோற்றை வேளைப் பூக்கறியுடன் அவரை கொய்பவர்கள் உண்டனர் என்பதை,

"கவைக் கதிர் **வரகின்** அவைப்புறு வாக்கல்"
**தாதெரு மறுகின் போதொரு பொதுளிய**
**வேளை வெண்பு+ வெண்தயிர்க் கொளீஇ**
**ஆய்மகள் சுட்ட அம்புலி மிதவை**
**அவரை கொய்யுநர் ஆர மாந்தும்** (புறநானூறு – பாடல் எண் 215 – 1-5)

**வாலிதின் விளைந்த புதுவரகு அரழயத்**
**தினை கொய்யக் கவ்வை கறுப்ப, அவரைக்**
**கொழுங் கொடி விளர்க்காய் கோட்பதம்ஆக** (120 – 9-11)

ஆவுர்கிழார்

**புதுவரகு அரிகால் கருப்பைப் பார்க்கும்** (322 -9)

ஔவையார்

**வெள்ளை வரகும் கொள்ளும் வித்தே**(392- 10)

கோப்பெருஞ் சோழன் பாண்டி நாட்டில் பிசிர் என்னும் ஊரில் வாழும் தன் உயிர் நண்பன் பிசிராந்தையார் அவர்கள் கவர்த்த கதிரயுடைய வரகினது குற்றுதலுற்ற வடிக்கப்பட்ட வரகு சோற்றுடன் புளித்த தயிருடன் கலந்து உண்பார்கள். மிதவை என்பது பலவற்றைக் கலந்து செய்யும் உணவு என்பதை

**கொள்ளொடு பயறு பால் விரைஇ வெள்ளிக்**
**கோல் வரைந்தன்ன வாலவிழ் மிதவை** (அகநானூறு பாடல் எண் – 37)

அகநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம். மேலும் மாங்குடி கிழார் அவர்கள்

**கருங்கால் வரகே, இருங்கதிர்த் திணையே**
**சிறுகொடிக் கொள்ளே, பொறிகிளர் அவரையொடு**
**இந்நான் கல்லது உணாவும் இல்லை** (புறநானூறு பாடல் எண் 335)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

வரகுச் சோற்றுக்கு மூரல் என்ற பெயரும் உண்டு. வரகுச்சோற்றுடன் பருப்பைச் சேர்த்து ஆக்கி உழுதுண்ணும் முல்லைநில மக்கள் பரிசில் பெற வந்த பாணர்களுக்கு உணவாகக் கொடுத்தனர் என்ற செய்தியை,

**குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றி**
**புகரிணர் வேங்கை வீ கண்டன்ன**
**வவரை வான்புழுக்கட்டி பயில்வுற்**
**றின் சுவை மூரற் பெறுகுவீர்** (பெரும்பாணாற்றுப்படை 93 – 96)

என்று பெரும்பாணாற்றுப்படைப் பாடல் இயம்பி நிற்கிறது. பதிற்றுப் பத்தில் பாலை கௌதமனார் “ **ஏனல் உழவர் வரகு மீது இட்ட**( மூன்றாம் பதது 30 -22) அரிசிகிழார் எட்டாம் பத்தில் “ **வெள்வரகு உழுத கொள் உடை கரம்பை செந்நெல் வல்சி அறியார் தத்தம்** ( எட்டாம் பத்து 75 11-12) வரகைப் பற்றிப் பாடியுள்ளார்.

சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில்

**கொய்புந் தினையும் கொழும்புன வரகும்**
**காயமும் மஞ்சளும் ஆய் கொடிக் கவலையும்**
**வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்**
**மாவும் பலாவும் சூழடுதட தோங்கிய**
**தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்** (காடு காண் காதை - 85)

வரகு, தினை, கொள், அவரை என்னும் நான்கும் அல்லாத வேறு உணவுப்பொருள் அந்த மூதில் குடிக்கு இல்லை என்கிறார்.

“எருது கால் உறாஅது, இளைஞர் கொன்ற
சில்விளை வரகின் புல்லென் குப்பை,
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாணர் உண்டு, கடை தப்பலின்,
ஒக்கல் ஒற்கம் சொலியத் தன்னூர்ச்
சிறுபுல் லாளர் முகத்தவை கூறி,
**வரகுடன்** இரக்கும் நெடுந்தகை
அரசுவரின் தாங்கும் வல்லா ளன்னே”. –(புறநானூறு பாடல் எண் 327)

எருது புட்டி அதன் கால்கள் மிதிபடாமல் இளைஞர் தடியால் அடித்து வரகும் வைக்கோலுமாகப் பிரித்தெடுத்த வரகினை எப்படியெல்லாம் பங்கு போட்டுக் கொடுத்தார்கள் என்பதனை விளக்குகிறது.

இவ்வாறு மக்கள் இலக்கியங்களிலும் செவ்வியல் இலக்கியங்களிலும் பதிவுபெற்று மக்களோடு புழங்கிய வரகு, மக்களின் அன்றாட வாழ்வில் இருந்து அகன்றது நம் தமிழ் மக்களின் அறியாமையும், நமது பாரம்பரிய மரபுக் கூறுகளுக்கு நாம் தரும் தரம் தாழ்ந்த தரமும், வேற்றுப் பண்பாட்டு மோகமும் மட்டுமே காரணமாக இருக்க முடியும்.

பதார்த்தம்’ என்பது தாவரங்களின் உறுப்புகளான வேர், பட்டை, பிசின், சாறு, இலை, பூ, காய், விதை ஆகிய எட்டுப் பொருள்களையும் குறிப்பதாகும். இப்பொருள்கள் கசப்பு, உவர்ப்பு, இனிப்பு, கார்ப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய அறுவகைச் சுவைகளைக் குணமாகக் கொண்டிருக்கும். இவ்வகைப் பதார்த்தங்களைச் சிந்தாமணியாய்த் தொகுத்து உரைப்பதே பதார்த்த குண சிந்தாமணியாகும் தார்த்தம்’ என்பது தாவரங்களின் உறுப்புகளான வேர், பட்டை, பிசின், சாறு,

இலை, பூ, காய், விதை ஆகிய எட்டுப் பொருள்களையும் குறிப்பதாகும். இப்பொருள்கள் கசப்பு, உவர்ப்பு, இனிப்பு, கார்ப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய அறுவகைச் சுவைகளைக் குணமாகக் கொண்டிருக்கும். இவ்வகைப் பதார்த்தங்களைச் சிந்தாமணியாய்த் தொகுத்து உரைப்பதே பதார்த்த குண சிந்தாமணியாகும்.இதனை எழுதியவர் தேரையர்.

**எறிபத்தோட பல நோய் எய்தும் வறட்சி**
**சொறி சிரங்கு பித்தம் தொடங்கும் - நிறையும்**
**கரகரன்ப புரித்த கச்சு முலைமாதே**
**வரகரிசி சோற்றால் வழுத்து ( பக் 569, மூலிகை வகுப்பு, குணபாடம்)**

**வரகது கரப்பன் வாயு வளர்ப்பிக்குங் கம்பு சீதம்**
**பெருகவே செய்யு மென்பர் பேசு செஞ் சோளனுக்கு**
**மருவிடும் புண்சிரங்கு வளர்க்கருஞ் சோளனுக்கு**
**வெருவிய தினவு போகு மென்னவே விளம்பி னாரே**
**– 29. பக்-63 – அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி**

என்ற பழம் பாடல்கள் வரகின் மருத்துவ குணத்தினை வெளிப்படுத்துகிறது. இதனையே ஔவையார்

**வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்**
**முரமு ரெனவே புளித்த மோரும் -திரமுடனே**
**புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டான் ஈ(து)**
**எல்லா உலகும் பெறும் (ஔவையார் தனிப்பாடல் திரட்டு – 32 –வது வெண்பா)**

புள்வேளூர்ப் பூதன் என்னும் வள்ளலைப் பாராட்டுகிறார். புள்வேள் பூதன் ஊரைச் சேர்ந்த பூதன் என்பவன் தனக்கு அப்போது வடித்து இறக்கிய வரகரிசிச் சோற்றையும் கத்திரிக்காய் வதக்கலையும் மொர மொரவென்று புளித்த கெட்டியான மோரையும் ஊற்றின போது இந்த சுவை பன்மடங்காக இருந்தது எனவும் அது உலகையே தனக்குப் பரிசாக அளித்தமைக்குச் சமமானது எனவும் கூறுகிறார். அந்த அளவுக்கு அவ்வுணவு சுவையானதாக இருந்தது என்கிறார்.

வரகு கோதுமையை விடச் சிறந்தது. இதில் உள்ள நார் சத்து, அரிசி, கோதுமையில் இருப்பதை விட அதிகம். மாவுச் சத்தும் குறைவாக காணப்படுவதால் இது உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததாகக் கருதப்படுகிறது இது பைட்டிக் அமிலம் குறைந்தும், நார்ச் சத்து மிகுந்தும், இரும்பு , கால்சியம், மற்றும் பி வைட்டமீன்கள் கொண்டதாகவும் உள்ளது. தாதுப் பொருட்களும் நிரம்ப உள்ளன. விரைவில் செரிமானம் அடைவதுடன் உடலுக்குத் தேவையான சக்தியையும் கொடுக்கும். இதில் புரதம், இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்து உள்ளது. உடல் எடையைக் குறைக்கக் கூடியது. மாதவிடாய் கோளாறு கொண்ட பெண்கள் வரகைச் சாப்பிடுவது நல்லது. சர்க்கரை அளவினைக் குறைக்கும். மூட்டுவலியைக் குறைக்கும் குணம் கொண்டது. தற்போது ஏழு வகையான வரகு பயன்பாட்டில் உள்ளது. அவை திரிவரனு, புறவரகு, பெருவரகு, உடும்புக்கால வரகு, செங்கால் வரகு, சீட்டுகீச்சான் வரகு என்பவை.

வரகைக் கோவில் கும்பத்தில் வைத்து பத்திரப்படுத்துவதற்கு முக்கியமான காரணம் அதற்கு இடியைத் தாங்கும் தன்மை உள்ளது. வீடுகளில் கூரை வேய்வதற்கு வரகுத்தாளை பயன்படுத்தலாம். கோடைக்காலத்தில் நல்ல குளிர்ச்சியாக இருக்கும். வரகை சரியாக தோல் நீக்கம் செய்யாவிட்டால், தொண்டையில் அடைத்துக் கொண்டு ஒருவிதமான ஒவ்வாமையை

உண்டாகும். இடியைத் தாங்கும் தற்போது பொதுவாக சிறுதானியங்களின் மேல் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுவதால், வரகின் பயன்பாடு மெல்ல கூடிக்கொண்டு வருகின்றது.

**முடிவுரை**

உணவின் சுவைகள் ஆறு வகைப்படும். அவை இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு, கைப்பு, புளிப்பு ஆகியன. இவை முறையே ஆற்றல், வீறு, வளம், தெளிவு, மென்மை, இனிமை ஆகியவற்றைத் தரும் என்பது மருத்துவ நெறி.இதனையே அறுசுவை உணவாகக் கொண்டு உடலுக்கும் வயிறுக்கும் ஏற்றவாறு திட, திரவ உணவாக வகைப்பிரித்து நீரிட்டு அவித்தல்,புழுக்குதர், வறுத்தல், சுடுதல், வற்றலாக்குதல், பொரித்தல், ஊற வைத்தல் என்ற பல முறைகளைப் பின்பற்றி உணவே மருந்து மருந்தே உணவு என்ற உயரிய கட்டுபாட்டுடன் தமிழர்கள் வளர்பிறை போல் வாழ்வாங்கு வாழ்ததை நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறியலாம். இன்றைய இளைய தலைமுறையினரே! வரகரிசியைப் பயன்படுத்தி, வரகு உற்பத்தியைப் பெருக்கி எதிர்காலத் தலைமுறைக்கு ஒரு சத்தான இயற்கை உணவைத் தருவோம். இயற்கை வேளாண்மை பெருகட்டும் . சாமை சோறு ஆயுள், குதிரை வாலி குறைவில்லா வாழ்வு, கம்மங் கூழால் கால் ஊன்றி நடப்பர், திணை உண்டால் தேக்கு போல் உடல் வலுவாகும். வரும் நோய்களை வரகால் விரட்டுவோம் சிறுதானியத்தை உண்போம் வளமாய் வாழ்வோம்.

**உசாத்துணை நூல்கள்**

1) கதிர் முருகு, மலைபடுகடாம்,சாரதா பதிப்பகம், சென்னை.2016.
2) முத்து.இராமமூர்த்தி, பெரும்பாணாற்றுப்படை, கௌரா பதிப்பகம்,2005.
3) ஸ்ரீ சந்திரன், மதுரைக்காஞ்சி, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை,1999.
4) ஔவை துரைசாமிப் பிள்ளை, புறநானூறு, கழக வெளியீடு, சென்னை. 1986.
5) கலைச்செல்வி (தொ.ஆ) தனிப்பாடல் திரட்டு, மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை,1960.
6) பரிமேலழகம்,திருக்குறள், பூம்புகார் பிரசுரம், சென்னை.1980.
7) மாணிக்கம், ஐங்குறுநூறு வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.1999.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 40.சங்க இலக்கியத்தில் சூழல் பாதுகாப்பும் இயற்கை நேசிப்பும்

Environmental Conservation and Love for Nature in Sangam Literature

**முனைவர் இயே.பெர்க்மான்ஸ்,**

உதவிப் பேராசிரியர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி.

செல்- 9442304849

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை நேசிப்பு என்பது வெறும் குறிப்புகளாக இல்லாமல் மக்களின் அன்றாட வாழ்வியலின் ஒரு பகுதியாக இருந்திருக்கின்றன. தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் ஐவகை நிலப் பகுபாட்டை முதலில் கூறுகிறது. அதில் சூழல் சார்ந்த பிரிவுகளை முன்வைக்கிறது. இதன் தொடர்ச்சியாக அமைந்த சங்க இலக்கியங்கள் தொல்காப்பியத்தின் வரையறையை ஒட்டி சூழல் குறித்த கட்டமைப்பைத் தெளிவுபடுத்தி உள்ளன. இக்கட்டுரையின் மையம் இதுவாகும். தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் இயற்கையோடு இணைந்து சங்க இலக்கியத்தில் பாடப்பட்டிருக்கின்றன. சூழல் சமநிலையைப் பேணுவதில் சங்கப் புலவர்கள் இயற்கை நேசிப்புணர்வுடன் சூழல் குறித்த புரிதலும் கொண்டு விளங்கி இருக்கின்றனர். இதனைச் சங்கப் பாடல்களின் வழியாக கட்டுரை வெளிப்படுத்துகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பும் இயற்கை நேசிப்பும் தமிழர்கள் வாழ்வியலின் ஒரு பகுதியாக அமைந்திருப்பதைச் சங்கப் புலவர்கள் கவனப்படுத்தியுள்ளனர். இக்கட்டுரையில் அதற்கான சான்றுகளைக் காண முடியும். இயற்கை நேசிப்பே தமிழர்களின் மெய்யான அகப்புற வாழ்வாக இருந்ததை இக்கட்டுரை ஆராய்ந்து வெளிப்படுத்தி உள்ளது. சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை நேசிப்பு என்பது வெறும் பின்னணியாக மட்டுமல்லாமல் அது மனித வாழ்வின் ஓர் அங்கமாக பிரிக்க முடியாத படி பிணைக்கப்பட்டு இருந்ததை சங்க பாடல்கள் கூறிச் செல்கின்றன இக்கருதுகோள் இக்கட்டுரையின் முக்கிய அலகாக அமைந்திருக்கிறது. இது இயற்கை மீது தமிழர்களுக்கு இருந்த எல்லையற்ற அன்பினையும் நேசிப்புணர்வையும் காட்டுகிறது. இக்கட்டுரையில் இது குறித்த விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

**கலைச்சொல் விளக்கம்**

சுற்றுச்சூழலியல் - Environmen பாதுகாப்பு - Protection

சூழல் சமநிலை - Ecological Balance இயற்கை நேசிப்பு - Love of Nature

**முன்னுரை**

சுற்றுச்சூழல் என்பது நம்மைச் சுற்றியுள்ள அனைத்து பொருட்களையும் குறிப்பிடுகின்றது. சுற்றுச்சூழல் என்ற சொல் சுற்றி இருப்பது என்றும் பொருள்படும். “என்விரானர்” (Environor) என்ற பிரெஞ்சு வார்த்தையில் இருந்து இச்சொல் உருவானது. சுற்றுச்சூழலைப் பற்றி படிப்பது சுற்றுச்சூழல் அல்லது சுற்றுச்சூழல் அறிவியல் அல்லது சுற்றுச்சூழல் கல்வி என்று அழைக்கப்படுகிறது. இன்றைய வாழ்வில் சூழல் பாதுகாப்பு மிக அவசியமான ஒன்றாக மாறிவிட்டது. எல்லை கடந்த அறிவியல் வளர்ச்சியின் விளைவாக மனிதன் தான் சார்ந்திருக்கும் இந்த உலகத்தின் சூழலைப் பெரிதும் அழிவிற்கு உள்ளாக்கி வருகிறான். தன் வாழ்விற்கான எல்லை மீறிய இயற்கை வள நுகர்வும் சூழல் சீர்கேட்டிற்கான மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாக மாறிவிட்டது. தமிழர்களின் தொல்பழங்கால வாழ்வில் சுற்றுச்சூழலும் இயற்கை நேசிப்போம் வாழ்வியலின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறது. இயற்கை மீது கொண்ட காதலும் மாறாப் பற்றும் சுற்றுச்சூழல் பற்றிய புரிதலைத் தொல்பழங்காலத் தமிழருக்கு உண்டாக்கி இருக்கின்றன. சங்க இலக்கியங்களில் இதற்கான சான்றுகளைக் காண முடிகிறது. இயற்கை நிகழ்ச்சிகளைக் கற்பனையால் கண்டு, கண்டவற்றைத் தனது அனுபவம் என்ற வலையில் சமைத்து

இறுதியில் ஒரு முழு வடிவம் பெற்ற கவிதையாக வடிக்கும் சங்கத்தமிழரின் பாடல்களில் அந்த இயற்கை நேசிப்பும் சூழல் பாதுகாப்பும் இயல்பாகவே வந்து அமர்ந்து விடுகிறது. தரநிலை படுத்தப்பட்ட, சமூகமயமாக்கப்பட்ட, நாகரிகம் கொண்ட சங்க காலத்தில் சூழல் குறித்த புரிதலையும் இயற்கை குறித்த நேசிப்புணர்வையும் சங்கப் பாடல்கள் வழியாக இக்கட்டுரையில் ஆராயலாம்.

**முதற்பொருள்**

சங்கத் தமிழர்களின் சூழல் பற்றிய அறிவு அவர்களுடைய திணை அமைப்பு முறையிலேயே அறிந்து கொள்ள முடிகிறது.

"முதல் எனப்படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே" (தொல்.950)

என்று குறிப்பிடும் தொல்காப்பியம், முதற்பொருளாக நிலத்தையும் பொழுதையும் இணைத்து அமைத்துள்ளது. இதன் மூலம் திணைக்குரிய நிலம் பொழுது என தீர்க்கமான கட்டமைப்பைச் சூழலின் வழியே நிகழ்த்தி விடுகிறது.

சூழல் உருவாக்கத்திற்கு அடிப்படையான பஞ்சபூதங்களின் மீது தமிழர்களுக்கு இருந்த மதிப்பீட்டைப் பல இடங்களிலும் சங்க இலக்கியம் பதிவு செய்கிறது. நிலம், நீர், தீ, ஆகாயம், காற்று எனும் இவ்வியற்கையை அதன் வலிமையை முழுவதும் அறிந்து கொள்பவர்கள் இவ்வுலகில் இல்லை. அப்படிக் கூறுவார் வந்து இக்காலத்தில் வளம் மிகும். இக்காலத்தில் வளம் குறையும் என்று சொன்னாலும், உன் நாட்டு மக்களுக்கு குறைவில்லை. அந்த அளவுக்கு ஆளுகின்றாய் என்று மன்னனைப் பார்த்து கூறுகிறார் புலவர் ஒருவர்.

"நீர், நிலம், தீ, வளி, விசும்போடு, ஐந்தும்
அளந்து கடை அறியினும், அளப்பு அருங் குரையை! நின்
வளம் வீங்கு பெருக்கம் இனிது கண்டிகுமே!" (பதி 24,15-17)

என்னும் பாடல் அடிகள் இங்குக் குறிப்பிடத்தக்க சூழல் பாதுகாப்பு குறித்த செய்தியை வழங்குகின்றன. பதிற்றுப்பத்து பாடிய குமட்டூர் கண்ணனார் கூட இயற்கையைப் போற்றுகின்றார். தீ தவிர்த்த நான்கின் செயல்பாட்டை அரிதியிட்டு சொல்வது என்பது முடியாதது என்கிறார். தீ எனும் பூதத்திற்கு மட்டும் முடிவு காணப்பட்டுள்ளது. என்பதை இங்கு அறியலாம். நீரின் முடிவென்பது அளத்தற்கரியது.

"நிலம், நீர், வளி, விசும்பு, என்ற நான்கின்
அளப்பு அரியையே;
நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனை அழல்,
ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை;" (பதி 14:1-4)

எனும் அடிகள் இதனை விளக்குகின்றன. உலகில் உள்ள நிலையான இயற்கையை ஐந்து வகையாகப் பாகுபடுத்தி நம் பழந்தமிழர்கள் சூழலைப் பாதுகாத்து இருக்கின்றனர். இயற்கையைப் பகுத்து அறிந்த பின்புதான் அதனைப் பாதுகாக்க முடியும். என்பதை உணர்ந்து செயல்படுத்தி இருக்கின்றனர். இங்கு அறிவது ஒன்று உண்டு. ஐம்பூதங்கள் என்பன வேறு, நாள்,கோள், இயக்கம் என்பது வேறு. இதனைப் பகுத்து தெளிவு கொண்டவர்கள் தமிழர்களே ஆவர்.

"விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம்,
இரு கோல் குறிநிலை வழுக்காது, குடக்கு ஏர்பு,
ஒரு திறம் சாரா அரை நாள் அமயத்து,
நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு,
தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கி,
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப, மனை வகுத்து" (நெடு :73-75)

என்ற நெடுநல்வாடையில் பாடல் வரிகள் சித்திரைத் திங்கள் பத்தாம் நாள் தொடங்கி இருபதாம் நாள் முடிய நிகழும் நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் பகல் 15 நாழிகை அளவில் ஞாயிற்று மண்டலம் நிலத்தின் நடுவண் இயங்கும். அப்பொழுதைக் கண்டறிய அண்மையவாய் இரண்டு கோல்களைச் செங்குத்தாக நட்டு அகோல்களின் நிழல் ஒரு பக்கம் சாராது, அக்கோல்களின் மேலே விழும் 15 நாழிகைப்பொழுதில் அரண்மனைக்கு அடிக்கல் நாட்டுவதற்குரிய நாளாகக் கணித்தனர். என்ற செய்தி அவர்களின் வானவியல் அறிவைக் காட்டுகிறது. இது சூழல் பற்றிய புரிதலில் மிக பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது.

**நீர் மேலாண்மை**

சங்க இலக்கியங்கள் நீர் மேலாண்மை பற்றி மிகப் பரவலான கருத்துக்களைக் கொண்டு இருக்கின்றன. அன்றைய சூழலின் தன்மை கொண்டு மழை பொழியும் காலம், மழை பொழியா காலம் என கணித்திருந்தனர். மழை பொழியும் காலத்தில் மலைகளில் இருந்து பொழியும் நீரைச் சேமித்து வைத்து மழை பொழியாக் காலத்தில், சேமித்த நீரினை முறையாகப் பயன்படுத்தும் நீர் மேலாண்மை பற்றிய அறிவு தமிழர்களுக்கு இருந்திருக்கிறது. மருத நில மக்கள் பொய்கை எனும் ஒன்றை உருவாக்கி அதில் மழை நீரினைத் தேக்கி வைத்திருக்கின்றனர் அப் பொய்கையில் உள்ள நீர் வெளியேற ஒரே வழி வைத்திருக்கின்றனர் மருத நிலப் பொய்கை பற்றி பாலைக் கௌதமனார் பாடும் பாடல் இங்கு சுட்டத்தக்கது.

“எல்வளை மகளிர் தெள்விளி யிசைப்பிற்
பழனக் காவிற் பசுமயி லாலும்
பொய்கை வாயிற் புனல்பொரு புதவின்
நெய்தன் மரபி னிரைகட் செறுவின்” (பதி 27:7-10)

என்று பதிவு செய்கிறார். பொய்கை எனும் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரைத் தேவைப்படும் பொழுது திறத்தலுக்கு உரிய வாயில் 'புதவு 'என்று அதனைக் குறிப்பிடுகின்றார். மதகு என்பது பெரு நீர்த்தேக்க திறப்பு வாயில். புதவு என்பது பொய்கை போன்ற சிறு நீர்த்தேக்க திறப்பு வாயில். இவ்வாறு இயற்கையைப் பாதுகாத்து அதாவது நீரின் இன்றியமையாமையை உணர்ந்து நீரின்றமையா உலகு என அதனைப் பாதுகாத்து இருக்கின்றனர். இந்த நீர் மேலாண்மைத் திறனில் தமிழர்கள் மிகவும் முதிர்ச்சி கொண்டவர்களாக நாகரீகம் பெற்றவர்களாக திகழ்ந்திருக்கின்றனர்.

**பெருவெள்ளத் தடுப்பு**

பண்டையச் சேரர் நாடாகிய இன்றைய கேரளப் பகுதிகள் பெருவெள்ளம் திரண்ட பகுதிகளாகும். பருவ மழைக் காலங்களில் இயற்கையாக அங்குள்ள மேற்கு மலைத் தொடர்ச்சிகளில் பெருவெள்ளம் பாய்ந்து ஓடுவது இயல்பு. இங்குள்ள மருதநில செழுமையைப் பலவாறு விளக்குகின்றார் பாலைக்கௌதமனார் என்ற புலவர். மருத நில மக்கள் வெள்ளப்பெருக்கினைத் தடுத்தலும் அதன் வழி அறிய வரும் அவர்களது இயற்கைச் சூழல் பாதுகாப்பு உணர்வும் இங்குச் சுட்டத்தக்கது.

“தேம் பாய் மருதம் முதல் படக் கொன்று,
வெண் தலைச் செம் புனல் புரந்து வாய் மிகுக்கும்
பல சூழ் பதப்பர் பரிய, வெள்ளத்துச்
சிறை கொள் பூசலின் புகன்ற ஆயம்
முழவு இமில் மூதூர் விழவுக் காணூஉப் பெயரும்
செழும் பல் வைப்பின் பழனப் பாலும்” (பதி 30:16-21)

இப்பாடல் வரிகளில் பல்யானை செல்கெழு குட்டுவன் ஆட்சியில் மக்கள் ஆரவாரம் என்பது வெள்ளத்தைத் தடுக்க மட்டுமே இருந்ததே தவிர வேறு எந்தப் பூசல் ஆரவாரங்களும் இல்லை என்கிறார் புலவர். வயல்களில் அதாவது நான்கு பக்க வரப்பினைக் கொண்ட வயல்களில் மழை நீர் தேங்கி வரப்பு கொள்ளாது பள்ளம் நோக்கி வேகமாக உடைந்து ஓடுகின்றது. வெள்ளத்தை உழவர்கள் வைக்கோல் புரியினை உடைப்பு வாயிலில் போட்டு மிதித்துப் பின் அதன் மேல் மண்ணை அள்ளிப் போட்டு அணையாகக் கட்டுகின்றனர். எல்லா மக்களும் கூட்டமாக அச்செயலில் ஈடுபடுகின்றனர். அதனால் அங்குப் பெரும் ஆரவாரமே எழுகின்றது. வயல் நிலம் என்பதால் அந்நிலத்தின் தன்மையைச் சிதைக்காத வைக்கோல் புரி கொண்டு அணை

கட்டுகின்றனர். வைக்கோல் புரி ஓடும் நீரில் போட்டவுடன் நீரின் ஓட்டத்திற்கு ஏற்ப மிதந்து செல்லும். அதனைக் காலால் மிதித்து பின் அதன் மேல் மண்ணைப் போட்டு கட்டுகின்றனர். இது இயற்கையைச் சிதைக்காத பாதுகாப்பு உணர்வே ஆகும்.

“நாடுகவின் அழிய நாமம் தோற்றிக்
கூற்றடூஉ நின்ற யாக்கை போல
நீசிவந் திறுத்த நீரழி பாக்கம் (பதி 13:10-13)

நீரினால் பேரழிவையும் அன்றைய தமிழர்கள் அனுபவித்து இருக்கின்றனர். வெள்ளத்தின் பேராற்றல் தம்மை அழிக்குமே தவிர பகைவர்களால் அழிக்க முடியாதது தான் நீராழிவாக்கம். என்னும் ஊர் இந்த ஊர் இயற்கை சூழலுக்கு ஏற்ப தான் வாழ்ந்த இடத்தில் பெயரைக் கூட இட்டு வாழ்ந்தவன் தமிழன் என்பதை விளக்கவே இப்பாடலை வடித்து இருக்கிறார் புலவர்.

**சூழல் பாதுகாப்பின் பயன்**

தன்னையும் தான் சார்ந்த சூழலையும் பாதுகாப்பது நமது கடமை. நாம் இன்று அதனை ஒருபொருட்டாகப் பேணுவதில்லை. ஆனால் பழந்தமிழர்கள் அதனை மதித்தனர். பஞ்ச பூதங்களையும் போற்றினர். அதனையே கடவுளாக வழிபட்டனர். அதனால் என்றும் துன்பம் இல்லா வாழ்க்கையை வாழ்ந்தனர். இதனைப் பாலைக்கௌதமனார் பின்வருமாறு விளக்குகின்றார்.

“திருவுடைத் தம்ம பெருவிறற் பகைவர்
பைங்கண் யானைப் புணர்நிரை துமிய
உரந்துரந் தெறிந்த கறையடிக் கழற்காற்
கடுமா மறவர் கதழ்தொடை மறப்ப
இளையினிது தந்து விளைவுமுட் டுறாது
புலம்பா வுறையு ணீதொழி லாற்றலின்
விடுநிலக் கரம்பை விடரளை நிறையக்
கோடை நீடக் குன்றம் புல்லென
அருவி யற்ற பெருவறற் காலையும்
நிவந்துரை யிழிதரு நனந்தலைப் பேரியாற்றுச்
சீருடை வியன்புலம் வாய்பரந்து மிகீஇயர்
உவலை சூடி யுருத்துவரு மலிர்நிறைச்
செந்நீர்ப் பூச லல்லது
வெம்மை யரிது நின் னகன்றலை நாடே.” (பதிற்.28)

எவ்வளவு வெப்பத்தைச் சூரியன் தந்தாலும் அதன் விளைவு அறியாது என்றும் வளமையாக இருக்கும் நாட்டை உடையவனே என்கின்றார். மழைக்காலங்களில் ஆற்று நீர், வயல் வெடிப்புகளில் உள்ள நீர் என எல்லாம் பயன்தருகின்றன. மழை பொய்த்தால் அருவிகள் அயராது நீரைக்கொடுத்துகொண்டே இருக்கின்றன. அந்நீரை அம்மக்கள் பயன்படுத்துகின்றனர். அத்தகைய நீரோடு பூசல் செய்து விளையாடும் ஆரவாரம் தவிர வேறெந்த பூசலும் இல்லா ஊர். இப்படி ஐம்பூதங்களில் தண்ணீர் என்பதன் இன்றியமையாமையும் அதனைப் பாதுகாத்தலையும் போற்றியவர் பழந்தமிழர்கள் என்பதை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

தமிழரின் முதிர்ந்த அறிவு மரபின் முதல் தலைமுறையினர் சங்ககால மக்கள். அவர்களது பட்டறிவும் இயற்கை வளங்களைப் பகுத்து ஆய்ந்து அதற்கு இயைய தன் வாழ்க்கையை அமைத்து கொண்ட முறையும் வியப்பாக இருக்கின்றது. உலக நிலவியலை அறிந்து அதற்குத்தக வாழ்ந்தவர்கள் பழந்தமிழர்கள். தன்னையும் இயற்கையையும் சமமாகப் போற்றினர். எனவே இயற்கை அவர்களுக்குப் பெரும் நலனைச் செய்தது. அதனையும் தாண்டி கடல்கோள்களும் வந்தன. ஆனால் இன்று சூழலைப் பாதுகாக்கும் உணர்வு மக்களிடத்தே இல்லை. இயற்கையைச் சீர்குலைக்கும் செயல்களையே செய்கின்றோம். எனவே பழந்தமிழரின்

வாழ்வியலை அனைவருக்கும் எடுத்துக்காட்டி மீண்டும் பழந்தமிழர் வாழ்வியலுக்கு இன்றைய தலைமுறையை மக்களை அழைத்துச் செல்லுதல் வேண்டும்.

**பார்வை நூல்கள்**

[1.] முனைவர். நா. ஆறுமுகம், சுற்றுச்சூழல் கல்வி, சாராஸ் பப்ளிகேஷன், நாகர்கோவில், 2005.
[2.] முனைவர். கா. ஐயப்பன், தமிழ்ச் செவ்விலக்கியங்கள் பன்முக வாசிப்பு, காவ்யா, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை- 24, 2016.
[3.] 3. சங்க இலக்கியம் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 2010
[4.] முனைவர். இரா. சந்திரசேகரன் (ப.ஆ.), சங்க இலக்கியம் பன்முகப் பார்வை, மக்கள் அச்சகம், சென்னை, 2001.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 41.ஐந்திணை அமைப்பில் சுற்றுச்சூழல்

**முனைவர் இர.வா. ஸ்ரீசுபாஷினி,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் நிகர்நிலைப் பல்கலைக்கழகம், பெரம்பலூர் 621 212. அலைபேசி **: 9943893444,** subaudhaya@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்வின் அடிப்படைக் கூறாக விளங்குவது சுற்றுச்சூழலாகும். மனிதனின் தோற்றம் முதல் அவனது வாழ்வியல், பண்பாடு, பொருளாதாரம் மற்றும் அறிவியல் வளர்ச்சி வரை அனைத்திற்கும் சுற்றுச்சூழல் இன்றியமையாத ஆதாரமாக உள்ளது. இன்றைய உலகில் சுற்றுச்சூழல் மாசுபாடு, உலக வெப்பமயமாதல், நீர்ப்பற்றாக்குறை, காடழிப்பு, உயிரின இழப்பு போன்ற பிரச்சினைகள் மனித குலத்தின் எதிர்காலத்தை அச்சுறுத்தி வருகின்றன. இத்தகைய சூழலில் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைய சமூகங்களின் வாழ்வியல் முறைகளை மீளாய்வு செய்வது காலத்தின் தேவையாகும்.

தமிழர் நாகரிக வரலாற்றில் சங்க காலம் இயற்கை மைய வாழ்வியலின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. சங்க இலக்கியங்கள் காதல், வீரம், கொடை, அரசியல் போன்ற கருத்துகளை மட்டும் எடுத்துரைக்காமல், இயற்கை மற்றும் மனித வாழ்விற்கிடையிலான பிரிக்க முடியாத உறவையும் வெளிப்படுத்துகின்றன. சங்கப் புலவர்கள் இயற்கையை ஒரு காட்சிப் பொருளாக மட்டும் கருதாமல், மனித வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கருதினர். இதன் விளைவாக நிலம், நீர், மலை, காடு, கடல், தாவரங்கள், விலங்குகள், பறவைகள் போன்ற இயற்கைக் கூறுகள் சங்கப் பாடல்களில் உயிர்ப்புடன் பதிவாகியுள்ளன.

இக்கட்டுரை சங்க இலக்கியங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் சிந்தனைகளை ஆராய்கிறது. குறிப்பாக ஐந்திணை அமைப்பு, உயிரியல் பன்முகத்தன்மை, நீர்வள மேலாண்மை, இயற்கை வளப் பாதுகாப்பு மற்றும் மனிதன்–இயற்கை உறவு ஆகியவை ஆய்வின் மையப்பொருளாக அமைகின்றன. மேலும், இச்சிந்தனைகள் நவீன சூழலியல் கோட்பாடுகளோடு எவ்வாறு ஒத்துப்போகின்றன என்பதையும் சங்க இலக்கியங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் கருத்துக்கள் இன்றைய சூழலியல் கோட்பாடுகளோடு எவ்வாறு தொடர்புடையவை என்பதை ஆராய்கிறது**.**

முன்னுரை

சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகளின் தொகுப்பாகும். நிலம், நீர், காற்று, தாவரங்கள், விலங்குகள், பறவைகள், நுண்ணுயிரிகள் மற்றும் மனிதன் ஆகிய அனைத்தும் சுற்றுச்சூழலின் அங்கங்களாக விளங்குகின்றன. மனித வாழ்க்கை சுற்றுச்சூழலோடு நேரடியாக தொடர்புடையது. சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் போது மனித வாழ்வும் பாதிக்கப்படுகிறது. சங்க இலக்கியங்களில் இயற்கை வெறும் பின்னணியாக இடம்பெறவில்லை. மாறாக மனித உணர்வுகளும் இயற்கை நிகழ்வுகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த நிலையில் சித்தரிக்கப்படுகின்றன. இதுவே சங்க இலக்கியங்களை உலகின் முதல் சூழலியல் இலக்கியங்களில் ஒன்றாகக் கருதும் நிலையை உருவாக்குகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகிய நிலப்பிரிவுகள் வெறும் இலக்கியக் கூறுகளாக அல்லாமல், சூழலியல் அமைப்புகளாக விளங்குகின்றன என்பதை எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சுற்றுச்சூழல் குறித்த சங்ககாலப் பார்வை

சங்க இலக்கியங்களில் இயற்கை என்பது வெறும் காட்சிப் பின்னணியாக அமையவில்லை. மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையுடனும் இணைந்த உயிரோட்டமிக்க அமைப்பாக அது

சித்தரிக்கப்படுகிறது. சங்ககால மனிதன் தன்னை இயற்கையிலிருந்து தனித்துவமானவனாகக் கருதவில்லை. மாறாக, இயற்கையின் ஒரு அங்கமாகவே தன்னை உணர்ந்தான். இந்த எண்ணமே சங்க இலக்கியங்களின் அடிப்படை சூழலியல் சிந்தனையாக விளங்குகிறது.

இன்றைய உலகில் மனிதன் இயற்கையை வெல்ல வேண்டிய பொருளாகக் கருதுகிறான். ஆனால் சங்ககால தமிழர்கள் இயற்கையை வாழ்வின் துணையாகவும் தாயாகவும் கருதினர். இயற்கையின் ஒவ்வொரு மாற்றத்தையும் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் பார்த்தனர். மழை பெய்வது மகிழ்ச்சியாகவும், வறட்சி ஏற்படுவது துயரமாகவும் கருதப்பட்டது.

சங்கப் புலவர்கள் இயற்கையை மிக நுணுக்கமாகக் கவனித்து பதிவு செய்துள்ளனர். எந்தப் பகுதியில் எந்த மரங்கள் வளர்கின்றன, எந்த விலங்குகள் வாழ்கின்றன, எந்தப் பருவத்தில் எந்த மலர்கள் பூக்கின்றன என்பன போன்ற தகவல்கள் சங்க இலக்கியங்களில் இயல்பாகக் காணப்படுகின்றன. இதனால் சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழர்களின் சுற்றுச்சூழல் அறிவைப் பதிவு செய்த ஆவணங்களாகக் கருதப்படுகின்றன.

**இயற்கையும் மனித உணர்வுகளும்**

சங்க இலக்கியங்களில் மனித உணர்வுகளும் இயற்கை நிகழ்வுகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. காதல், பிரிவு, காத்திருத்தல், ஊடல், இரங்கல் போன்ற மனித உணர்வுகள் இயற்கைச் சூழலோடு இணைத்துச் சொல்லப்படுகின்றன.

இயற்கை வெறும் பின்னணியாக இல்லாமல், மனித மனநிலையை வெளிப்படுத்தும் ஒரு கருவியாகவும் செயல்படுகிறது. தலைவனின் வருகைக்காக காத்திருக்கும் தலைவியின் மனநிலையை மழைக்காகக் காத்திருக்கும் நிலத்தோடு ஒப்பிட்டுக் கூறும் பாங்கு சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது.

இதன்மூலம் மனித வாழ்க்கை இயற்கையிலிருந்து பிரிக்க முடியாதது என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இது நவீன சூழலியல் கோட்பாடுகளில் கூறப்படும் "Human Ecology" என்ற கருத்தோடு ஒத்துப் போகிறது.

இயற்கை வழிபாடும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

சங்க கால மக்கள் இயற்கைக் கூறுகளை தெய்வங்களாகக் கருதினர். மலைக்கு முருகன், காடுகளுக்கு மாயோன், வயல்களுக்கு இந்திரன், கடலுக்கு வருணன் ஆகிய தெய்வங்கள் தொடர்புபடுத்தப்பட்டன.

இயற்கையை தெய்வமாகக் கருதும் மனப்பான்மை அதன் பாதுகாப்பிற்கு வழிவகுத்தது. தெய்வமாகக் கருதப்படும் இயற்கையை அழிப்பது தவறாகக் கருதப்பட்டது. இதனால் காடுகள், மலைகள், நீர்நிலைகள் போன்ற இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டன.

இன்றைய சுற்றுச்சூழல் சட்டங்கள் உருவாகுவதற்கு முன்பே பண்பாட்டு நம்பிக்கைகள் வழியாக இயற்கையைப் பாதுகாக்கும் சமூக அமைப்பு சங்க காலத்தில் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐந்திணை அமைப்பும் சுற்றுச்சூழலும்

சங்க இலக்கியத்தின் மிகப்பெரிய சிறப்பாக ஐந்திணை அமைப்பு விளங்குகிறது. உலகின் பல்வேறு இலக்கியங்களில் இயற்கை பற்றிய பதிவுகள் காணப்பட்டாலும், இயற்கைச் சூழல் மற்றும் மனித வாழ்க்கையை ஒருங்கிணைத்து அறிவியல் அடிப்படையில் வகைப்படுத்திய அமைப்பு சங்க இலக்கியங்களில் மட்டுமே காணப்படுகிறது.

ஐந்திணை என்பது நிலப்பரப்பின் அடிப்படையில் அமைந்த வகைப்பாடு மட்டுமல்ல. அது நிலம், காலநிலை, உயிரினங்கள், தொழில், உணவு, பண்பாடு மற்றும் மனித உணர்வுகளை ஒருங்கிணைக்கும் முழுமையான சூழலியல் அமைப்பாகும்.

குறிஞ்சி நிலமும் சுற்றுச்சூழலும்

குறிஞ்சி என்பது மலை மற்றும் மலைச்சார்ந்த பகுதிகளைக் குறிக்கிறது. இப்பகுதியில் உயரமான மலைகள், அடர்ந்த காடுகள், அருவிகள், நீரூற்றுகள், மூலிகைத் தாவரங்கள் மற்றும் பல்வேறு உயிரினங்கள் காணப்பட்டன என்பதை,

**"கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடன்"**

இப்பாடல் மலைச்சூழலின் இயற்கை வளத்தை எடுத்துரைக்கிறது. மலைகளில் உருவாகும் அருவிகளும் நீரூற்றுகளும் பின்னர் ஆறுகளாக மாறி பிற நிலப்பகுதிகளுக்கு உயிர் கொடுத்தன. இதன் மூலம் மலைப்பகுதிகளைப் பாதுகாப்பது நீர்வளத்தைப் பாதுகாப்பதற்கு சமம் என்ற உண்மையை அறிய முடிகிறது.

முல்லை நிலமும் சுற்றுச்சூழலும்

முல்லை நிலம் காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் நிறைந்த பகுதியாகும். இங்கு ஆயர்கள் வாழ்ந்தனர். கால்நடை வளர்ப்பு அவர்களின் முக்கியத் தொழிலாக இருந்தது.

**"முல்லை வைந்நுனை தோன்ற**
**இல்லமொடு பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ"**

மழைக்குப் பிறகு இயற்கை புத்துணர்ச்சியுடன் தழைப்பதை இப்பாடல் சித்தரிக்கிறது. முல்லை மலர்களும் கொன்றை மரங்களும் மலர்வதன் மூலம் சுற்றுச்சூழலின் இயற்கைச் சுழற்சி வெளிப்படுகிறது.

முல்லை நிலத்தில் மனிதர்களும் விலங்குகளும் இணைந்து வாழ்ந்தனர். காடுகள் கால்நடைகளுக்கு உணவளித்தன. கால்நடைகள் மனித வாழ்க்கைக்கு ஆதரவாக இருந்தன. இவ்வாறு இயற்கை வளங்கள் மற்றும் மனித வாழ்க்கை ஒன்றையொன்று சார்ந்திருந்தன.

முல்லை நிலம் சுற்றுச்சூழல் சமநிலையின் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மருத நிலமும் நீர்வள மேலாண்மையும்

மருத நிலம் ஆறுகள் மற்றும் வயல்கள் நிறைந்த வளமான சமவெளிப் பகுதியாகும். சங்ககால பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் விளங்கியது.

**"வருபுனல் வையை வார்மணல் அகன்றுறை"**

வையை ஆற்றின் வளத்தையும் அதன் கரையோர வாழ்க்கையையும் இப்பாடல் சித்தரிக்கிறது. ஆறுகள் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் ஆதாரமாக இருந்தன.

மருத நில மக்கள் நீரைச் சேமித்து பயன்படுத்தும் முறைகளை நன்கு அறிந்திருந்தனர். ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் போன்ற அமைப்புகள் நீர் மேலாண்மைக்கு உதவின.

இன்றைய நீர் நெருக்கடி நிலையை ஒப்பிடும்போது, சங்க கால நீர்வள மேலாண்மை மிகவும் முன்னேற்றமடைந்ததாகக் கருதப்படுகிறது.

நெய்தல் நிலமும் கடல்சார் சுற்றுச்சூழலும்

நெய்தல் நிலம் கடற்கரைப் பகுதிகளைக் குறிக்கிறது. கடல் மற்றும் அதன் வளங்கள் மக்களின் வாழ்வாதாரமாக விளங்கின.

**"பெருங்கடல் பரதவர் கொள்மீன் உணங்கலின்"**

கடலை நம்பி வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையை இப்பாடல் சுட்டிக்காட்டுகிறது. மீன்பிடித்தல், உப்பு தயாரித்தல் மற்றும் கடல்வணிகம் ஆகியவை முக்கிய தொழில்களாக இருந்தன.

கடல்சார் உயிரினங்கள் சுற்றுச்சூழல் சமநிலைக்கு முக்கியமானவை என்பதை சங்க மக்கள் உணர்ந்திருந்தனர். கடல் வெறும் பொருளாதார வளமாக அல்லாமல் வாழ்க்கையின் ஆதாரமாகக் கருதப்பட்டது.

பாலை நிலமும் காலநிலை மாற்றமும்

பாலை நிலம் தனியான நிலப்பரப்பு அல்ல. வறட்சியின் விளைவாக உருவாகும் சூழலாகும்.

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”**

இந்த வரிகள் காலநிலை மாற்றத்தின் விளைவுகளை மிகவும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. மழையின்மை காரணமாக வளமான நிலங்கள் வறண்ட நிலங்களாக மாறுகின்றன என்பதை இளங்கோவடிகள் எடுத்துரைக்கிறார்.

இது இன்றைய உலகம் எதிர்கொள்ளும் உலக வெப்பமயமாதல் மற்றும் வறட்சி பிரச்சினைகளோடு ஒப்பிடத்தக்கதாகும். இயற்கை வளங்களைப் பாதுகாக்கத் தவறினால் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

பாலை நிலம் சுற்றுச்சூழல் சீர்கேட்டின் குறியீடாகவும், இயற்கை பாதுகாப்பின் அவசியத்தை உணர்த்தும் இலக்கியச் சான்றாகவும் விளங்குகிறது.

**மூலிகை அறிவும் மருத்துவச் சூழலியலும்**

சங்க கால மக்கள் பல்வேறு மூலிகைத் தாவரங்களின் மருத்துவ குணங்களை அறிந்திருந்தனர். மலைப்பகுதிகளில் வளரும் மூலிகைகள் நோய்களை குணப்படுத்தப் பயன்பட்டன. இயற்கை மருத்துவம் அக்கால சமூகத்தின் அன்றாட வாழ்வில் முக்கிய இடம் பெற்றிருந்தது.

குறிஞ்சி நிலங்களில் வளரும் மூலிகைகள் உடல் நலனைப் பேணுவதற்கும் நோய்களைத் தீர்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன. இவ்வறிவு தலைமுறை தலைமுறையாகப் பரப்பப்பட்டது. இதன் மூலம் சங்க காலத்தில் இயற்கை வளங்களை மனித நலனுக்காகப் பயன்படுத்தியதோடு அவற்றைப் பாதுகாக்கும் பண்பாடும் நிலவியதை அறிய முடிகிறது.

பறவைகளும் சுற்றுச்சூழலும்

சங்க இலக்கியங்களில் பறவைகள் பற்றிய பதிவுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மயில், கிளி, நாரை, அன்னம், குயில் போன்ற பறவைகள் இயற்கைச் சூழலின் உயிர்ப்பை எடுத்துரைக்கின்றன.

**“நாராய் நாராய் செங்கால் நாராய்”**

நீர்நிலைகளின் அருகே வாழும் நாரை பறவையின் இயல்பை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. பறவைகளின் வாழ்வு நீர்நிலைகளின் வளத்தோடு தொடர்புடையது என்பதை இது உணர்த்துகிறது.

பறவைகள் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தின் குறியீடுகளாகக் கருதப்படுகின்றன. ஒரு பகுதியில் பறவைகள் அதிகமாக வாழ்வது அப்பகுதியின் இயற்கைச் சமநிலையைக் காட்டுகிறது. சங்கப் புலவர்கள் இவ்வுண்மையை நன்கு உணர்ந்திருந்தனர்.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை

சங்ககால தமிழர்களின் வாழ்க்கை முறையை ஆராயும்போது, அவர்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்த மக்கள் என்பதை தெளிவாக உணர முடிகிறது. மனிதன் இயற்கையை வெல்ல வேண்டிய பொருளாக அல்லாமல், வாழ்வின் துணையாகக் கருதியிருந்தான். அவனது உணவு, உடை, உறைவிடம், தொழில், பண்பாடு, நம்பிக்கை, கலை, இலக்கியம் என அனைத்தும் இயற்கையை மையமாகக் கொண்டு அமைந்திருந்தன.

சங்க இலக்கியங்களில் காணப்படும் வாழ்க்கை முறைகள் மனிதன் இயற்கைக்கு எதிராக அல்ல, இயற்கையுடன் இணைந்து வாழ்ந்ததை வெளிப்படுத்துகின்றன. இயற்கை வளங்கள் தேவைக்கேற்ப மட்டுமே பயன்படுத்தப்பட்டன. பேராசையின் அடிப்படையில் இயற்கைச் சுரண்டல் நடைபெற்றதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுவதில்லை.

இயற்கை மனிதனின் வாழ்வாதாரமாக மட்டுமல்லாமல், உணர்வுகளின் வெளிப்பாடாகவும் கருதப்பட்டது. மழை, காற்று, கடல், மலை, மரங்கள் போன்றவை மனித வாழ்வின் அங்கங்களாகப் பார்க்கப்பட்டன. இந்த அணுகுமுறை சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாக்க உதவியது.

**மனிதனும் உயிரினங்களும்**

சங்ககால மக்கள் மற்ற உயிரினங்களையும் தங்களைப் போன்ற உயிர்களாகவே கருதினர். விலங்குகள் மற்றும் பறவைகள் குறித்த பதிவுகள் சங்க இலக்கியங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.

**“கான யானை கைவிடு பசுங்கழை”**

இந்தப் பாடல் யானைகளின் இயற்கை வாழ்விடத்தை சித்தரிக்கிறது. யானைகள் வாழும் காடுகள் பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. மனிதன் தனது தேவைகளுக்காக காடுகளை அழித்தால் விலங்குகளின் வாழ்வும் பாதிக்கப்படும் என்பதை சங்க மக்கள் அறிந்திருந்தனர்.

இன்றைய சூழலில் மனிதன் மற்றும் விலங்குகளுக்கிடையிலான மோதல்கள் அதிகரித்து வருகின்றன. ஆனால் சங்க இலக்கியங்கள் மனிதனும் உயிரினங்களும் இணைந்து வாழும் வாழ்க்கை முறையை முன்வைக்கின்றன.

**மனிதனும் பருவநிலையும்**

சங்க இலக்கியங்களில் பருவநிலையின் தாக்கம் மிகத் தெளிவாகப் பதிவாகியுள்ளது. மழை, வெயில், காற்று, பனி போன்ற இயற்கை நிகழ்வுகள் மனித வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் புலவர்கள் நுணுக்கமாக எடுத்துரைக்கின்றனர்.

பருவநிலைக்கு ஏற்ப விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தல் போன்ற தொழில்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் இயற்கை மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ளும் திறன் சங்க மக்களிடம் இருந்ததை அறிய முடிகிறது.

இயற்கை வளங்களை அளவோடு பயன்படுத்துதல்

சங்க இலக்கியங்களில் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவது குறித்து ஒரு நெறிப்படுத்தப்பட்ட அணுகுமுறை காணப்படுகிறது. இயற்கை வளங்கள் மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமே தவிர, அவற்றைச் சுரண்டக் கூடாது என்ற எண்ணம் நிலவியது.

மலைகள், காடுகள், ஆறுகள், கடல் போன்ற இயற்கை வளங்கள் பொதுச் சொத்துகளாகக் கருதப்பட்டன. அவற்றைப் பாதுகாப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாக இருந்தது.

இது இன்றைய நிலையான வளர்ச்சி (Sustainable Development) கோட்பாட்டோடு ஒத்துப் போகிறது.

காலநிலை மாற்றமும் சங்கச் சிந்தனைகளும்

இன்றைய உலகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று காலநிலை மாற்றமாகும். உலக வெப்பமயமாதல், வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்து வருகின்றன.

சங்க இலக்கியங்களில் பாலை நிலம் குறித்த பதிவுகள் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எடுத்துரைக்கின்றன. இயற்கை வளங்களைப் பாதுகாக்கத் தவறினால் வளமான நிலங்கள் வறண்ட நிலங்களாக மாறும் என்பதை சங்கப் புலவர்கள் உணர்த்தியுள்ளனர்.

முடிவுரை

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் பண்பாட்டு மற்றும் சமூக வரலாற்றைப் பதிவு செய்த ஆவணங்களாக மட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் அறிவின் களஞ்சியங்களாகவும் விளங்குகின்றன. சங்க கால மக்கள் இயற்கையை வாழ்வின் அடிப்படை ஆதாரமாகக் கருதி அதனோடு இணைந்து

வாழ்ந்தனர். மலை, காடு, வயல், கடல், வறண்ட நிலம் ஆகிய அனைத்தையும் தனித்தனி சூழலியல் அமைப்புகளாக உணர்ந்து அவற்றுக்கு ஏற்ப வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டனர்.

ஐந்திணை அமைப்பு மனிதனும் இயற்கையும் இடையிலான உறவை விளக்கும் உலகின் தொன்மையான சூழலியல் கோட்பாடாகக் கருதத்தக்கது. உயிரியல் பன்முகத்தன்மை, நீர்வள மேலாண்மை, காடு பாதுகாப்பு, உயிரினப் பாதுகாப்பு மற்றும் நிலையான வளப் பயன்பாடு போன்ற கருத்துக்கள் சங்க இலக்கியங்களில் தெளிவாகக் காணப்படுகின்றன.

இன்றைய உலகம் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் நெருக்கடிகளை கருத்தில் கொள்ளும்போது, சங்க இலக்கியங்களில் இடம்பெறும் சிந்தனைகள் மிகவும் பொருத்தமானவையாகத் திகழ்கின்றன. மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும், இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும், எதிர்கால தலைமுறைகளுக்காக சுற்றுச்சூழலை நிலைநிறுத்த வேண்டும் என்ற செய்தியை சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

எனவே, சங்க இலக்கியங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் சிந்தனைகள் வெறும் இலக்கியப் பதிவுகளாக அல்லாமல், இன்றைய உலகிற்கு வழிகாட்டும் சூழலியல் அறிவாகவும் நிலையான வளர்ச்சிக்கான அடிப்படைக் கோட்பாடுகளாகவும் அமைகின்றன.

துணை நூற்பட்டியல்

1. தொல்காப்பியர், *தொல்காப்பியம் – பொருளதிகாரம்*, சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
2. உ.வே. சாமிநாதையர் (பதி.), *பத்துப்பாட்டு*, சென்னை: உ.வே.சா. நூல் நிலையம்.
3. உ.வே. சாமிநாதையர் (பதி.), *எட்டுத்தொகை*, சென்னை: உ.வே.சா. நூல் நிலையம்.
4. க.ப. அறவாணன், *சங்க இலக்கியமும் பண்பாடும்*, சென்னை.
5. தமிழண்ணல், *சங்க இலக்கிய ஒப்பீட்டு ஆய்வு*, மதுரை.
6. ந. சுப்பிரமணியன், *சங்ககால வாழ்வியல்*, சென்னை.
7. சிலம்பு நா. செல்வராசு, *தமிழர் பண்பாடும் சூழலியலும்*, புதுச்சேரி.
8. இரா. நாகசாமி, *தமிழர் நாகரிகம் மற்றும் பண்பாடு*, சென்னை.
9. Glotfelty, C., and H. Fromm, *The Ecocriticism Reader*, Athens: University of Georgia Press.
10. Garrard, Greg, *Ecocriticism*, London: Routledge.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 42.பக்தி இலக்கியங்களில் பசுமைச் சிந்தனைகள்

**முனைவர் க.புவனேஸ்வரி,**
உதவிப்பேராசிரியர்,(SS), தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி-01 ,தமிழ்நாடு, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது
அலைபேசி:7402014440, மின்னஞ்சல் bhuvanesk@nct.ac.in
ORCID: https://orcid.org/0000-0002-3565-6101

**ஆய்வுச் சுருக்கம்:**

இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அந்த இயற்கையில் உள்ள பொருட்களைப் போற்றிப் பாதுகாக்கவும் ,கானுயிர் ,மரங்கள் ,பறவைகள் விலங்குகள் போன்றவற்றிற்கு மனிதர்களால் ஏற்படும் சிக்கல்களை எடுத்துக் கூறி அதற்கான தீர்வுகளையும் விளக்கக் கூடிய வகையில் அமைந்தவையே பசுமை இலக்கியங்கள். தற்காலத்தில் தோன்றிய இந்தப் புதிய இலக்கிய வகைமையான பசுமை இலக்கியங்களின் கூறுகள் கிபி ஏழாம் நூற்றாண்டின் இடைக்கால இலக்கியமான பக்தி இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்களில் மட்டுமின்றி வள்ளலார், பாரதியார் போன்ற தற்காலத்தைச் சேர்ந்த கவிஞர்களின் பக்தி பாடல்களிலும் இடம் பெற்றுள்ள பசுமை இலக்கியக் கூறுகளைப் பற்றி எடுத்துச் சொல்லி அதன் வாயிலாக ,இயற்கையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை இந்தக் கட்டுரை வலியுறுத்துகிறது.

நம்மைச் சுற்றியுள்ள அனைத்துப் பொருட்களிலும் இறைவன் இருக்கிறான் என்னும் சைவ, வைணவ இலக்கியங்களின் கருத்துக்களையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

**கலைச்சொற்கள்:**ஆர்த்தேறி,பௌவம்,பசுமை இலக்கியம்,சூழலியல் கோட்பாடு

**முன்னுரை**

அண்மைக்காலத்தில் தமிழில் தோன்றிய இலக்கிய வகைமைகளில் குறிப்பிடத் தகுந்தவை பசுமை இலக்கியங்கள் ஆகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மனிதன் -விலங்கு -பறவை -மரங்கள் - போன்றவற்றிற்கு இடையிலான சமநிலை பேணல் ஆகியவற்றை இந்தப் பசுமை இலக்கியங்கள் உள்ளடக்கி உள்ளன. இப்படி, தற்காலத்தில் தோன்றிய இந்தப் பசுமை இலக்கியச் சிந்தனைகள் பழங்கால இலக்கியங்களான பக்தி இலக்கியங்களில் காணப்படக்கூடிய தன்மைகளைப் பற்றி ஆய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கும் போக்கும் ஆகும்.

பசுமை இலக்கியங்கள்:

1970 -களில் அயல்நாடுகளில் தோன்றி, இன்று தமிழகத்தில் தடம் பதித்துள்ள இலக்கியங்கள் தான் பசுமை இலக்கியங்கள் ஆகும் .அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இந்த இலக்கியங்கள் “கிரீன் லிட்ரேச்சர்”(green literature) ,என்றும்” எக்கோ லிட்ரேச்சர்”(eco literature) என்றும் அழைக்கப் பெறுகின்றன .இயற்கை, சுற்றுச்சூழல் ,காட்டு உயிர் ,பூமி மீதான மனிதர்களின் தாக்கத்தை மையமாக வைத்து எழுதப்படும் கவிதைகள், புதினங்கள், கட்டுரைகள் ,ஆய்வு நூல்கள் என அனைத்தையும் உள்ளடக்கியதே பசுமை இலக்கியங்கள் ஆகும்.

“இயற்கையை மையப்படுத்திய படைப்புகளை முதன்மைப்படுத்துதல், இலக்கியங்களில் வெளிப்படும் தன்மைகளை முன்வைத்தல் என்பதோடு மட்டுமின்றி இயற்கையின் பேராற்றலை முன்னிறுத்துதல். மனித மைய செயல்பாடுகளால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் இயற்கை அழிவுகளை

முன்வைத்து மனிதன் முதன்மை அல்ல; இயற்கையே முதன்மையானது என்ற கருத்தை உணர்த்துதல்"

(தமிழ் சிறுகதைகளின் சமகால செல் நெறிகள்,ப.114)

போன்றவற்றையே இந்தப் பசுமை இலக்கியப் படைப்புகள் முதன்மையாகக் கொண்டு திகழ்கின்றன .இப்படி,

தற்கால இலக்கியமான இந்தப் பசுமை இலக்கியங்களில் காணப்படக்கூடிய பசுமைச் சிந்தனைகள் இடைக்கால இலக்கியமான நம் பக்தி இலக்கியங்களில் எந்த அளவில் இடம் பெற்றுள்ளன? என்பது பற்றி இந்தக் கட்டுரையின் வாயிலாக நாம் சிந்திக்கலாம்.

பக்தி இலக்கியங்கள் :

நாம் வாழும் இடத்தை சுத்தமாக வைத்திருப்பதும்

நாம் வாழும் இடத்தைச் சுத்தமாக வைத்திருப்பதும் ,நம்மைச் சுற்றியுள்ள மரம், செடி, கொடி, விலங்குகள், பறவைகள் போன்றவற்றைப் பத்திரமாகப் பாதுகாப்பதும் பழங்காலம் தொட்டு நம்முடைய. தமிழ் மரபில் இருந்து வந்துள்ளது. இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்ட நம் தமிழ் மக்கள் அந்த இயற்கையையே கடவுளாக வழிபட்டனர்.

"மாநிலம் சேவடியாக,தூநீர் வளைநரல்
பௌவம் உடுக்கை ஆக,
விசும்பு மெய் ஆக,
திசை கை ஆக,பசுங்கதிர்
மதியமொடு சுடர் திகழ் கண்ணி"
(நற்றிணை,பெருத்தேவனார்,பாடல்-1)

சங்க இலக்கியமான நற்றிணையில் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள இப்பாடலில் அகன்ற இந்தப் பூமி இறைவனின் திருவடியாகவும், ஒலிக்கும் கடல் ஆடையாகவும், ஆகாயம் உடலாகவும் ,திசைகள் கையாகவும் ,சூரிய சந்திரன் கண்களாகவும் திகழ்கின்றன என்று இயற்கையில் உள்ள ஒவ்வொரு பொருளையும் இறைவனின் அங்கங்கள் ஆக்கிப் பாடுகின்றார் பாரதம் பாடிய பெருந்தேவனார் .

இன்னும் சொல்லப் போனால் இந்த இயற்கைப் பொருட்களைப் பாதுகாப்பதற்காகவே மரங்களைத் தலவிருட்சங்களாகவும், விலங்குகள்,பறவைகளைக் கடவுளரின் வாகனங்களாகவும் கருதி வழிபாடு செய்தனர் .

திருஞானசம்மந்தர் பாடல்கள் :

உமையம்மையால் ஞானப்பால் ஊட்டப் பெற்று 3 வயதிலேயே பதிகங்கள் பாடத் தொடங்கிய திருஞானசம்பந்தர் தான் செல்லும் தலங்களில் உள்ள இயற்கையைப் பாடிய பின்னரே அங்கிருக்கும் இறைவனைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டு திகழ்ந்தார்.

மான் பாய வயல் அருகே மரமேறி மந்திபாய் மடுக்கள் தோறும்
தேன் பாய மீன் பாய செழுங்கமல
மொட்டலருந் திருவை யாறே"

(திருஞானசம்பந்தர் தேவாரம், முதல் திருமுறை, திருவையாற்றுப பதிகம் ,பாடல்-4)

இப்பாடலில் இயற்கைச் சூழலை சிறப்பாக எடுத்துப் பகர்கின்றார்.

நிலத்தில் வாழும் மான், குரங்கு நீரில் வாழும் மீன், தாமரை ஆகியவற்றிற்கிடையே ஒரு அழகான சங்கிலித் தொடர்பு இருப்பதை சூழலியலோடும் அறிவியலோடும் தொடர்பு படுத்திப் பாடி இருப்பது சிறப்பானதாகும் .

ஞானசம்பந்தர் தாம் பாடும் அந்தத் தலத்து இறைவனுடைய சிறப்பும் கருணையும் சுற்றி இருக்கும் இயற்கைப் பொருள்களிலும் காணப்படுவதைத் தம் பதிகங்களிலே எடுத்துக் கூறியிருக்கின்றார் .உதாரணமாக திருச்சிராப்பள்ளி பதிகத்தில்

" கைமகவு ஏந்திக் கடுவனோடு ஊடி கழைபாய்வான்

செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப்பள்ளி "

(திருஞானசம்பந்தர் தேவாரம், முதல் திருமுறை, திருச்சிராப்பள்ளி பதிகம் -பாடல்-2)

திருச்சிராப்பள்ளி தலத்தில் சிவபெருமான் தன்னுடைய பக்தைக்காக அவளின் தாயாக உருமாறி வந்து பிரசவம் பார்த்ததால் தாயுமானவர் என்று போற்றப் பெறுகின்றார். இறைவனின் இந்தத் தாய்மை உணர்வு தான் பார்க்கும் இயற்கைப் பொருள்களிலும் வெளிப்படுவதாகப் பாடுகின்றார் ஞானசம்பந்தர் ." செம்முக மந்தி"- புதிதாகக் குட்டியை ஈன்ற பெண் குரங்கின் முகம் சிவப்பாக இருக்கும் என்ற விலங்குகளின் தன்மைகளைப் பற்றிய தம் நுண்ணறிவை இங்கே வெளிப்படுத்துகின்றார் சம்மந்தர் .

மாணிக்கவாசகர் :

மாணிக்கவாசகர் தாம் இயற்றிய திருவாசகத்தின் பல்வேறு பகுதிகளில் இறைவனை இயற்கையின் வடிவாகப் போற்றி உள்ள தன்மை புலப்படுகின்றது .

" வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய் "
(மாணிக்கவாசகர் ,திருவாசகம்,8:5:15)

இறைவனானவன் இயற்கைப் பொருட்களான வானாக, உலகமாக, காற்றாக ,ஒளியாக,உடலாக,உயிராக என அனைத்துமாகத் திகழ்கின்றான் என்ற பிரபஞ்ச மெய்யியலை இங்கே விளக்குகின்றார். மேலும் உண்மை- இன்மை என்ற சொற்களின் வாயிலாக உயிரினச் சூழலானது தோற்றமும் இறுதியில் அழிவும் உடையது என்ற இயல்பினையும் விளக்குகின்றார்

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்
செல்லா நின்ற. இத்தாவர சங்கமத்துள்"
( மாணிக்கவாசகர்,திருவாசகம்,8:1)

அனைத்து உயிர்களும் வாழும் இடமாகிய இந்தப் பூமியைத் தாவர சங்கமம் என்று கூறும் மாணிக்கவாசகர் ,புல், புழு, மரம், பறவை, மனிதர் என்ற உயிரினத்தின் பல்வகைத் தன்மையும் இப்பாடலிலே எடுத்துக்காட்டுகின்றார்.

திருநாவுக்கரசர்:

திருநாவுக்கரசர் பல்லவ மன்னன் தன்னை நீற்றறையில் இட்ட சமயத்தில்,

"மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிளவேணிலும் மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே "

(திருநாவுக்கரசர் தேவாரம், 5:90:1)

இறைவனின் திருவடியைச் சிந்தித்தால் நீற்றறையும் காற்றறையாகும் என்று பாடியதோடு மட்டுமின்றி ,உயிரினங்கள் வாழ்வதற்குத் தேவை நல்ல காற்று, தூய்மையான தண்ணீர், கதிர்ஒளி போன்றவை தான் இன்றியமையாதவை என்று வாழிடச் சூழலையும் விளக்கும் விதமாகக் கூறியுள்ளார் .

சிவபெருமானை கைலாயத்தில் சென்று தரிசிக்க விரும்பிய திருநாவுக்கரசரை இறைவன் திருவையாற்றுக்கு வரும்படிக் கூறுகின்றார். அங்கே,

மாதர் பிறை கண்ணியானை மலையான் மகளொடும் பாடி

--------------------+--------------+----------------------------

காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன் “

(திருநாவுக்கரசர் தேவாரம், 4:3:1)

யானை, சேவல் ,மயில் ,ஏனம் என பல்வேறு விலங்குகளின் வடிவங்களிலும் இறைவனும் இறைவியுமாகக் காட்சி தருகின்றார். இதன் உண்மையான பொருள் என்ன என்றால், இறைவனான என்னைத் தேடி நீங்கள் வேறு எங்கும் அலைய வேண்டாம், உங்களைச் சுற்றி இருக்கும் ஒவ்வொரு பொருட்களிலும் ஜீவராசிகளிலும் நான் இருக்கின்றேன் என்பதை நாவுக்கரசரின் வாயிலாக நமக்கு உணர்த்துகிறார் இறைவன். .எனவே அனைத்து உயிர்களின் மீதும் அன்பு செலுத்துவதும்,மரம், செடி, கொடி, விலங்குகள், பறவைகள் என்று அவை அனைத்தையும் பத்திரமாகப் பாதுகாப்பதும் நம்முடைய கடமை என்பதைத்தான் இந்தப் பக்தி இலக்கியப் பாடல் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. .

ஆண்டாள் பாடல்கள் :

தம்மைச் சுற்றியுள்ள இயற்கைப் பொருட்கள் அனைத்தையும் சைவ சமயச் சான்றோர் சிவனின் வடிவாகப் போற்றியதைப் போலவே ,வைணவ சமயத்திலும் கண்ணனின் வடிவாக இயற்கையைக் காண்கின்றனர்.

“ஆழி மழைக்கண்ணா !ஒன்று நீ கை கரவேல்
ஆழியுள் புக்கு முகந்து கொடு
ஆர்த் தேறி
தாழாதே சார்ங்கம் உதைத்த
சர மழை போல்
வாழ உலகினில் பெய்திடாய்”
(ஆண்டாள், திருப்பாவை, பாடல் -4))

பன்னிரு ஆழ்வார்களுள் சூடிக்கொடுத்த சுடர் கொடியான ஆண்டாள் மேகமானது கண்ணனைப் போல கருநிறமெடுத்து மழையாகப் பொழிகிறது .கண்ணன் கைகளில் உள்ள சங்கு சக்கரம் போல இடியும் மின்னலும் இருப்பதாகவும்,அவன் கையில் உள்ள சாரங்கம் என்ற வில்லில் இருந்து அம்புகள் விரைந்து வருவது போல மழை வேகமாகப் பொழிவதாகவும் பாடுகின்றாள்.மேலும் மேலும் 'ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி' என்னும் அடிகளில், கடலில் உள்ள உப்பு நீர் மேலே சென்று ஆவி ஆகி மழையாகப் பொழிகிறது என்ற அறிவியல் உண்மையையும் ஆண்டாள் இந்த இடத்திலே பதிவு செய்கின்றாள்.

“ஓங்கு பெருஞ் செந்நெல்
ஊடு கயலுகள

பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்படுப்ப”

(ஆண்டாள்,திருப்பாவை,பாடல்-3)

பசுமைப்புரட்சி ,வெண்மைப்புரட்சி, நீலப்புரட்சி ஆகிய புரட்சிகள் எல்லாம் ஏற்பட்டு ஒரு நாடு வளமாகத் திகழ்வதற்கு அங்குள்ள பயிர்களும் உயிர்களும் செழித்து வாழ்வதற்கு மழையே முதன்மையானது என்கிறாள் ஆண்டாள்.

அந்த மழை வளம் சிறக்க மரங்கள் அடிப்படை .

“மரம் தான்;மரம் தான்;

எல்லாம் மரம் தான்.

மறந்தான் ;மறந்தான்

மனிதன் மறந்தான்”

(வைரமுத்து கவிதைகள்,ப.89)

அப்படி மரங்களை மனிதர்களாகிய நாம் போற்றிப் பாதுகாக்க மறந்ததால் தான் மண்ணரிப்பு,மழை வளம் குறைதல், ஆழிப் பேரலை போன்றவை உருவாகின்றன.இந்த மரங்களை நம்முடமிருந்து பாதுகாப்பதற்காக தான் ஒவ்வொரு கோவிலிலும் தலவிருட்சங்களும், ஒவ்வொரு ஊரிலும் காவல் மரங்களும் உருவாக்கப் பெற்றன. கடவுளுடன் தொடர்புபடுத்தினால் இந்த மரங்களை நாம் பாதுகாக்க முடியும் என்று நம் முன்னோர்கள் எண்ணியதன் விளைவு தான் இது.அப்படித்தான் சிவனுக்கு காளை மாடும், திருமாலுக்கு கருடனும், முருகனுக்கு மயிலும், சக்திக்கு சிங்கமும், கால பைரவருக்கு நாயும், ஐயப்பனுக்கு புலியும் என்று ஒவ்வொரு விலங்கும் பறவையும் கடவுளின் வாகனங்கள் ஆயின.

வள்ளலாரும்,பாரதியும்:

இறைவன் அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானவன் என்பதை இந்த உலகிற்கு உணர்த்துபவை பக்தி இலக்கியங்கள். சிறிய உயிரினமான எறும்பு வழிபட்ட தலம் ‘திரு எறும்பூர் '.ஈ வழிபட்ட தலம் 'திரு ஈங்கோய்மலை'.மிகப்பெரிய உயிரினமான யானையும் சின்னஞ்சிறிய உயிரினமான சிலந்தியும் வழிபட்ட தலம் திருவானைக்கா .இப்படி உயிர்களுக்கு உள்ளே எந்தப் பாகுபாடும் கிடையாது. அனைத்து உயிர்களுக்குள்ளும் இருப்பவன் இறைவன் ,என்பதால்தான் வள்ளலாரும்,

,”எத்தனையும் பேதமுறா தெவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி “

(வள்ளலார்,திருவருட்பா ,6:110:2)

எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் எண்ணிப் பாதுகாப்பவருடைய உள்ளத்திலே இறைவன் குடியிருப்பான் என்கிறார்.

“உயிர்கள் எல்லாம் தெய்வமன்றில் பிற ஒன்றில்லை

ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்

இயலுகின்ற ஜடப்பொருள் அனைத்தும் தெய்வம் “

(மெய்யப்பன்(ப.ஆ),பாரதியார் கவிதைகள், ப.115)

புழு, பூச்சி, பறவை, விலங்கு என்று

இந்த உலகில் உள்ள அனைத்து உயிர்ப்பொருள்களையும் தெய்வம் என்று நம் சைவ, வைணவப் பெரியோர்கள் கூறிய முறைப்படியே பாரதியும் கூறுகின்றான். .மேலும் உயிர்ப்பொருள்கள் மட்டுமின்றி உயிரற்ற ஜடப்பொருள்களைக் கூடத்
தெய்வம் என்று சொல்லித் தன் முன்னோரிலும் உயர்ந்து நிற்கின்றான் பாரதி ..மலையும், நதியும், மரமும், மலரும், விலங்கும், பறவையும் என்று நம்மைச் சுற்றியுள்ள இயற்கையின் அனைத்துக் கூறுகளிலும் இறைத்தன்மை உள்ளது என்பதே பாரதியின் கொள்கையாகும்.

முடிவுரை

இடைக்கால இலக்கியமான பக்தி இலக்கியங்களில் தற்கால இலக்கிய வகைமையான பசுமை இலக்கியங்களின் கருத்துகள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன என்பதே ஆய்வில் கண்ட முடிவாகும்.அதிலும் குறிப்பாக இயற்கையை இறைவனாக வழிபட்டனர் பழங்கால மக்கள். நம்மைச் சுற்றி இருக்கும் ஒவ்வொரு பொருளும் இறைவனின் படைப்பு என்றும், விலங்கு, பறவை ,மனிதன், மரங்கள் என்று எந்தப் பாகுபாடும் இன்றி அனைத்திலும் இறைவன் இருக்கிறான் என்றும் அடுத்த படி நிலைக்கு அவற்றை இட்டுச் சென்றவை பக்தி இலக்கியங்களே .உயிரினத் தொகுதிகளைப் பாதுகாத்தல் ,அவற்றின் வாழ்வியல் பற்றிய அடிப்படை உண்மைகளை அறிந்து கொள்ளுதல், ,சூழல் சமநிலையைப் பேணல் போன்ற பசுமை இலக்கியச் சிந்தனைகள் அனைத்தும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், ஆண்டாள், வள்ளலார், பாரதியார் போன்றரது பக்தி இலக்கியப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன என்பதும் ,மரங்கள், விலங்குகள், பறவைகள் என்பனவற்றையெல்லாம் பாதுகாப்பதற்காகத்தான் அவற்றைக் கோயிலில் தலவிருட்சங்களாகவும், கடவுளரின் வாகனங்களாகவும் கருதி வழிபட்ட மரபையும் நாம் இக்கட்டுரையின் வாயிலாக உணர்ந்து கொண்டோம்.ஆக,நம்மைச் சுற்றி இருக்கும் அனைத்துப் பொருள்களிலும் இறைவன் இருக்கின்றான் என்பதால் சுற்றுச்சூழலைக் காப்பாற்றுவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**ஆய்விற்குத் துணை நின்ற நூல்கள்**

[1.] கௌமாரீஸ்வரி (ப.ஆ),திருவாசகம்,சாரதா பதிப்பகம்,சென்னை,முதற்பதிப்பு-2005

[2.] சுசீலா அப்பாதுரை, சுற்றுச்சூழல் கல்வி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை ,பத்தாவது பதிப்பு -2014

[3.] சுப்பிரமணியன், ச.வே;; (உரை) திருவருட்பா, மணிவாசகர் பதிப்பகம் ,சென்னை, முதற்பதிப்பு -1998

[4.] செல்வக்குமார், சூழலியல் நோக்கில் சிறுகதைகள், கருத்து- பட்டறை வெளியீடு, மதுரை, முதல் பதிப்பு -2012

[5.] பாலசுப்பிரமணியன்(உரை), ஆண்டாள் அருளிய திருப்பாவை, சாரதா பதிப்பகம், சென்னை ,முதல் பதிப்பு -2019

[6.] பாலாஜி(தொ.ஆ), நற்றிணை -சங்க இலக்கிய உரை வேறுபாட்டுக் களஞ்சியம் ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ,சென்னை ,முதல் பதிப்பு -2005

[7.] புவனேஸ்வரி, க.;(க.ஆ), தமிழ் இலக்கியங்களில் பசுமை இலக்கியங்கள், தமிழ் மொழி மற்றும் பன்னாட்டு இலக்கிய ஆய்விதழ், ISSN 2581-7140-இதழ்-2-தொகுதி-5- ஜூன் -2023

[8.] நடராஜன், பி.ரா.; (உரை), திருஞானசம்பந்தர் தேவாரம், உமா பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதல் பதிப்பு -2012

[9.] நடராஜன், பி.ரா.; (உரை), திருநாவுக்கரசர் தேவாரம், உமா பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதல் பதிப்பு -2012

[10.] வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், ,தொகுதி -மூன்று, திருமகள் நிலையம், சென்னை, முதல் பதிப்பு -2006

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 43.குறவஞ்சியில் இயற்கை சூழலியல்

**முனைவர் கி காமாட்சி,**
உதவிப் பேராசிரியர், தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி).
பெரம்பலூர், kamatchitamil2020@gmail.com
அலைபேசி எண்-9488528307

**ஆய்வுச்சுருக்கம்**

சிற்றிலக்கியங்கள் இயற்கை காட்சிகளைப் பின்னணியாகக் கொண்டு படைக்கப்படுவதுடன் கதையின் முக்கிய அங்கங்களாகவும் அமைகின்றன. குறவஞ்சி இலக்கியத்தில் மலை, காடு, ஆறு, அருவி, சோலை, மலர்கள், மரங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற இயற்கைக் கூறுகள் மிகுந்த நயத்துடன் சித்தரிக்கப்படுகின்றன. குறிப்பாக குறத்தியின் வாழ்க்கை மலைச் சூழலோடு இணைந்ததாகக் காட்டப்படுகிறது. இந்நூல்களில் மனிதனும் இயற்கையும் ஒன்றோடொன்று சார்ந்து வாழும் உறவு வலியுறுத்தப்படுகிறது. மலைவளம், மூலிகைச் செடிகள், தேன், கனிகள், விலங்குகள் ஆகியவை இயற்கை வளங்களாகப் போற்றப்படுகின்றன. மேலும், பருவநிலை மாற்றம், மழை, தென்றல், மலர்களின் மணம் போன்றவை காதல் உணர்வுகளையும் மனித வாழ்க்கை உணர்வுகளையும் வெளிப்படுத்த உதவுகின்றன.

இதனால், குறவஞ்சி இலக்கியங்கள் இயற்கையைப் பாதுகாக்கும் எண்ணத்தையும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும், இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையையும் எடுத்துரைக்கும் சிறந்த இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இயற்கையைப் பாடிய இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கது சிற்றிலக்கியங்கள் 96 வகையான சிற்றிலக்கியங்களில் குறவஞ்சி இலக்கியத்தில் அமைந்துள்ள பாடல்களில் இயற்கையைப் பாடிய பாக்களின் கவித்துவத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகக் கருதப்படுகின்றது.

**முன்னுரை**

இயற்கை சூழ்ந்த இவ்வுலகினை இலக்கியங்கள் அழகாக படம் பிடித்து காண்பது போல் படைக்கப்படுகின்றன. சங்ககாலம் முதல் தற்காலம் வரை இலக்கியங்கள் என்பது காலந்தோறும் கருத்து வகையான புதுப்புது வண்ணங்களையும் வளங்களையும் கொண்டு பிறந்த இலக்கியம் என்று சொல்லலாம். தமிழ் இலக்கிய மரபில் குறிஞ்சி நிலத்தின் சிறப்புகளைப் பாடும் மரபு சங்க காலம் முதலே இருந்து வருகிறது. அந்த மரபின் தொடர்ச்சியாகப் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய திரிகூடராசப்ப கவிராயரின் ‘திருக்குற்றாலக் குறவஞ்சி’, குற்றால மலையின் எழிலை உயர்வு நவிற்சியோடும், எதார்த்தத் தன்மையோடும் ஒருசேரப் படம்பிடிக்கிறது. இறைவனின் திருவிளையாடல்களுக்குப் பின்னணியாக அமையாமல், இயற்கையே ஒரு முதன்மைப் பொருளாக இங்குத் திகழ்கிறது

**குறவஞ்சியின் இலக்கணம்**

தமிழ் இலக்கியங்கள் இயற்கையுடன் மனித வாழ்க்கையை இணைத்துப் பேசும் தனிச்சிறப்பைக் கொண்டவை. சங்க இலக்கியம் முதல் சிற்றிலக்கியம் வரை இயற்கை வாழ்க்கையின் அடிப்படை கூறாகக் கருதப்பட்டுள்ளது. அவற்றுள் குறவஞ்சி இலக்கியங்கள், மலைநில மக்களின் வாழ்க்கை, இயற்கை வளம், தெய்வ வழிபாடு, காதல் உணர்வு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வெளிப்படுத்துகின்றன.

திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சி, குற்றால மலையின் இயற்கை வளம், அருவிகள், காடுகள், மூலிகைகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை உயிரோட்டத்துடன் சித்தரிக்கிறது. இந்நூல் இலக்கியச் சிறப்பு மட்டுமன்றி, சூழலியல் சிந்தனைகளையும் வெளிப்படுத்துகிறது. மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும் என்ற கருத்து நூல் முழுவதும் மறைமுகமாக வலியுறுத்தப்படுகிறது. எனவே, இந்நூலைச் சூழலியல் நோக்கில் ஆராய்வது இன்றைய சுற்றுச்சூழல் விழிப்புணர்வின் அடிப்படையில் மிகவும் பொருத்தமானதாகும்.

குறவஞ்சி என்பது தமிழ் சிற்றிலக்கிய வகைகளுள் சிறப்புமிக்க ஒரு இலக்கிய வடிவமாகும். இதில் குறத்தி (மலைவாழ் பெண்) முக்கியப் பாத்திரமாக இருந்து, தலைவியின் காதல் நிலையை உணர்ந்து குறி சொல்லுவதே மையக் கருத்தாக அமைகிறது.

**குறவஞ்சியின் இலக்கணக் கூறுகள்**

- காப்பு – நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து அல்லது காப்புப் பாடல் இடம்பெறும்.
- தலைவன் உலா – தலைவன் அல்லது இறைவன் உலா வருவது வருணிக்கப்படும்.
- தலைவி காதல் கொள்ளுதல் – தலைவி தலைவனைக் கண்டு காதல் வயப்படுவாள்.
- தோழியிடம் தன் மனநிலையை வெளிப்படுத்துதல் – தலைவி தன் காதல் உணர்வுகளைத் தோழியிடம் கூறுவாள்.
- குறத்தியின் வருகை – மலைநாட்டைச் சேர்ந்த குறத்தி தோன்றி, தனது மலைநாட்டின் வளங்களையும் வாழ்க்கை முறையையும் எடுத்துரைப்பாள்.
- குறி சொல்லுதல் – தலைவியின் எதிர்காலம், காதல் நிறைவேறுதல் போன்றவற்றை குறத்தி கணித்து கூறுவாள்.
- குறவனின் வருகை – சில குறவஞ்சிகளில் குறவனும் தோன்றி, குறத்தியுடன் உரையாடுவான்.
- தலைவன்–தலைவி சேர்தல் – இறுதியில் தலைவனும் தலைவியும் இணைவது அல்லது காதல் நிறைவேறுவது கூறப்படும்.

**குறவஞ்சியின் இலக்கியச் சிறப்புகள்**

அகப்பொருளும் பக்திப் பொருளும் இணைந்து அமைதல், இயற்கை வளங்கள் (மலை, அருவி, காடு, மலர்கள், விலங்குகள்) செறிவாக வருணிக்கப்படுதல், நாட்டுப்புற வாழ்க்கை, பண்பாடு, பழக்கவழக்கங்கள் இடம்பெறுதல், இசை, நடனம், நாடகக் கூறுகள் இணைந்திருத்தல், எளிமையான, இனிமையான மொழிநடை போன்ற குறவஞ்சியின் இலக்கியச் சிறப்புகளாக அமைந்துள்ளன.

பள்ளு இலக்கியம், ‘மருத நில காவியம்’ என்றால் குறவஞ்சி ‘குறிஞ்சி நில ஓவியம்’ ஆகிறது." இறப்பு நிகழ்வு எதிர்வுயென்று முக்காலமும் திறப்பட உழைப்பது குறத்திப்பாட்டே" என்று குறவஞ்சிக்கு பன்னிரு பாட்டியல் இலக்கணம் கூறுகிறது

"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும் ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்" என்று குறி கூறும் மரபினைத் தொல்காப்பியம் கூறும் குறிப்பினை ஒட்டி பல புதிய கூறுகளுடன் குறம் குறவஞ்சி ஆகிய இலக்கியங்கள் தோன்றின என்பர். குறத்தி வந்து குறி சொல்லும் நிகழ்வை

மையமாகக் கொண்டு, தலைவியின் காதல் அல்லது இறைவன் மீதான பக்தியை வெளிப்படுத்தும் சிற்றிலக்கிய வகையே குறவஞ்சி என வரையறைக்கப்படுகின்றது.

**உயிரினங்களின் அறஞ்சார்ந்த இணக்கநிலை**

இயற்கைச் சூழலியலில் உயிரினங்களின் அறஞ்சார்ந்த இணக்கநிலை என்பது மனிதன், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் ஆகிய அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து வாழும் ஒழுக்கநெறியைக் குறிக்கிறது. திருக்குற்றாலக் குறவஞ்சி இத்தகைய இணக்க வாழ்வை இயற்கை வருணனைகள் மூலம் எடுத்துரைக்கிறது.

மனிதனும் உயிரினங்களும் குறத்தியின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்ததாக அமைகிறது. மலை, காடு, விலங்குகள், பறவைகள் ஆகியவற்றுடன் பகைமையின்றி வாழும் வாழ்க்கைமுறை சித்தரிக்கப்படுகிறது. இயற்கை மனிதனின் வாழ்வாதாரமாக மட்டுமல்ல, வாழ்வியல் துணையாகவும் காட்டப்படுகிறது.

விலங்குகளின் இணக்க வாழ்வு, யானை, மான், குரங்கு போன்ற விலங்குகள் குற்றால மலையின் இயற்கைச் சூழலில் இயல்பாக வாழ்கின்றன. அவை வெறும் காட்சிப் பொருள்களாக அல்லாமல், இயற்கைச் சமநிலையைப் பேணும் உயிரினங்களாகக் கருதப்படுகின்றன. இதன் மூலம் அனைத்து உயிர்களுக்கும் வாழ்வதற்கான உரிமை உண்டு என்ற கருத்து வெளிப்படுகிறது.

பறவைகளின் பங்கு மயில், குயில், கிளி போன்ற பறவைகள் இயற்கையின் இனிமையையும் உயிர்ப்பையும் வெளிப்படுத்துகின்றன. அவற்றின் குரல், அசைவு, வாழ்விடம் ஆகியவை இயற்கைச் சூழலின் சமநிலையைக் காட்டுகின்றன.

தாவரங்களின் முக்கியத்துவம் மரங்கள், கொடிகள், மலர்கள், மருத்துவ மூலிகைகள் ஆகியவை மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் பயன்படும் செல்வங்களாகச் சித்தரிக்கப்படுகின்றன. உயிரினங்கள் அனைத்தும் தாவரங்களைச் சார்ந்து வாழ்வதை இந்நூல் உணர்த்துகிறது.

சூழலியல் அறநெறி திருக்குற்றாலக் குறவஞ்சி, இயற்கையை வெறும் வளமாக மட்டுமல்லாமல், பாதுகாக்க வேண்டிய பொதுச் செல்வமாகக் கருதுகிறது. மனிதன் இயற்கையுடன் ஒத்திசைந்து வாழ வேண்டும்; பிற உயிரினங்களின் வாழ்வையும் மதிக்க வேண்டும் என்ற சூழலியல் அறநெறி இந்நூலில் மறைமுகமாக வெளிப்படுகிறது.

குற்றால மலையில் விலங்குகள் ஒன்றுக்கொன்று பகை மறந்து வாழ்வதையும், அங்கு நிலவும் அமைதியையும் கவிஞர் நுணுக்கமாகக் கூறுகிறார். இது ஒரு செழுமையான காட்டின் சமநிலையை உணர்த்துகிறது.

**"சிங்கம் நின்ற இடத்திலே யானை வந்து தங்கும்**
**தேனருவி முழக்கத்திலே வேங்கை வந்து தூங்கும்"**

**திருக்குற்றாலக் குறவஞ்சி – மலைவளம் (பாடல் எண்: 21).**

வலிய விலங்கான சிங்கம் இருக்கும் இடத்திலேயே யானையும் அச்சமின்றி வந்து தங்குவதும், அருவியின் ஓசையைத் தாலாட்டாகக் கொண்டு வேங்கை (புலி) உறங்குவதும் விவரிக்கப்பட்டுள்ளது. இயற்கை வளம் மிக்க ஓரிடத்தில் பசி மற்றும் பயம் நீங்கி உயிரினங்கள் இணக்கமாக வாழும் முறையை இது காட்டுகிறது

ஆண் குரங்குகள் (வானரங்கள்) பெண் குரங்குகளுக்கு (மந்தி) சுவையான பழங்களை அன்போடு அளித்து மகிழ்கின்றன. மந்திகள் உண்டு உதிர்க்கும் எச்சில் கனிகளுக்காகத் தேவர்கள் (வான்கவிகள்) காத்திருப்பதாகக் கூறுவது, குற்றாலத்தின் கனி வளம் தேவருலக அமுதத்தை விடச் சிறந்தது என்பதை மெய்ப்பிக்கிறது.

**அருவியின் பிரம்மாண்டமும் விண்முட்டும் மலைச்சிகரமும்:**

இயற்கை வர்ணனையில் உயர்வு நவிற்சி அணியைப் பயன்படுத்தி மலையின் உயரத்தையும் நீர்வளத்தையும் கவிஞர் நிலைநாட்டுகிறார்.

**"தேனருவித் திரைஎழும்பி வானெங்கும் ததும்பும்**

**செங்கதிரோன் மண்டலத்தைத் தடவிக்கொண்டு நிமிரும்"**

**திருக்குற்றாலக் குறவஞ்சி – மலைவளம் (பாடல் எண்: 23).**

அருவிகளின் நீர்த்திவலைகள் வானெங்கும் சிதறித் ததும்புகின்றன் மலைச் சிகரங்கள் சூரிய மண்டலத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்து நிற்கின்றன. 'தேனருவி'யின் வேகம் விண்ணைத் தொடுவதாகக் கூறுவது மலையின் பிரம்மாண்டத்தைப் புலப்படுத்துகிறது.

**வானியல் மாற்றங்களும் மலையின் அணிவகுப்பும்:**

மலையைச் சூழ்ந்துள்ள மேகங்கள் மற்றும் வானிலை மாற்றங்களை ஒரு நாடகக் காட்சி போலக் கவிராயர் வர்ணிக்கிறார். இது குறிஞ்சி நிலத்தின் அழகியலை வெளிப்படுத்துகிறது.

**"சூழ்ந்து மேகம் மின்னலாகித் தோன்று மேகலைகள் போல**

**தாழ்ந்து மின்னும் அருவி எங்கும் சாமரங்கள் இரட்ட"**

**திருக்குற்றாலக் குறவஞ்சி – மலைவளம் (பாடல் எண்: 24).**

குற்றால மலையை ஒரு பெண்ணாக உருவகிக்கும் கவிஞர், அங்குத் தோன்றும் மின்னலை அந்தப் பெண்ணின் இடுப்பில் அணிந்துள்ள 'மேகலை' என்ற ஆபரணத்திற்கு ஒப்பிடுகிறார். மலை எங்கும் கொட்டும் அருவிகள் அந்தப் பெண்ணுக்கு வீசப்படும் 'சாமரங்கள்' போலக் காட்சியளிக்கின்றன.

**நிலவியற் செழுமையும் பல்லுயிர் வளமும்:**

மலையிலிருந்து பெருகி வரும் நீர், வெறும் நீராக இல்லாமல் பல விலையுயர்ந்த பொருட்களைச் சுமந்து வருவதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

**"முழங்கும் அருவித் திரளெழும்பி - வான**

**முகட்டைத் துடைக்கும் வளர் குற்றாலம்"**

**திருக்குற்றாலக் குறவஞ்சி – நாட்டுவளம் (பாடல் எண்: 25).**

அருவியின் பேரொலி மேகங்களை அதிரச் செய்கிறது; அதன் தூறல்கள் ஆகாயத்தின் முகட்டைத் துடைப்பது போல எழுகின்றன. அருவிகள் மலையிலுள்ள சந்தனம், அகில், மணிகள் மற்றும் அரிய வகை மூலிகைகளை அடித்து வருகின்றன. இது குற்றால மலையின் பல்லுயிர் பெருக்கத்தையும் கனிம வளத்தையும் பறைசாற்றுகிறது.

**இயற்கை எழிலோடு பெண்ணழகு:**

தமிழ் இலக்கியங்களில் பெண்ணழகு இயற்கைக் கூறுகளுடன் ஒப்பிட்டு வருணிக்கப்படுவது ஒரு நீண்ட மரபாகும். அந்த மரபை திருக்குற்றாலக் குறவஞ்சி சிறப்பாகத் தொடர்கிறது. தலைவி மற்றும் குறத்தியின் அழகு, மலர்கள், கொடிகள், மயில், நிலவு, தென்றல்,

மலை, அருவி போன்ற இயற்கைக் கூறுகளோடு இணைத்துச் சித்தரிக்கப்படுகிறது. இதனால் பெண்ணழகும் இயற்கை எழிலும் ஒன்றுக்கொன்று துணையாக அமைகின்றன.

**இயற்கை உவமைகள்**

- முகம் – முழுநிலவுக்கு உவமையாகக் கூறப்படுகிறது.
- கண்கள் – கயல் மீன் அல்லது தாமரை மலருடன் ஒப்பிடப்படுகின்றன.
- கூந்தல் – கருமேகம் அல்லது வண்டு மொய்க்கும் மலர்களைப் போன்றதாக வருணிக்கப்படுகிறது.
- நடை – அன்னம் அல்லது மயிலின் நடையுடன் ஒப்பிடப்படுகிறது.
- இடை – கொடி போன்ற மெலிந்த அமைப்பாகக் கூறப்படுகிறது.
- மொழி – கிளியின் இனிய குரலுக்கு உவமையாக அமைகிறது.

திருக்குற்றாலக் குறவஞ்சியில் பெண்ணழகு தனித்து நிற்பதில்லை அது இயற்கைச் சூழலோடு ஒன்றிணைந்து வெளிப்படுகிறது. மலர்களின் மணம், தென்றலின் மென்மை, அருவியின் குளிர்ச்சி, மயிலின் ஆட்டம் ஆகியவை தலைவியின் அழகையும் மனநிலையையும் மேலும் மெருகூட்டுகின்றன. இதன் மூலம் மனிதனும் இயற்கையும் பிரிக்க முடியாத உறவில் உள்ளனர் என்ற கருத்து வெளிப்படுகிறது.

இயற்கை அழகை அடிப்படையாகக் கொண்டு பெண்ணழகை வருணிப்பதன் மூலம், கவிஞர் இயற்கையின் உயர்வையும் பெண்ணின் மென்மையையும் ஒருங்கே போற்றுகிறார். இது அழகியல் மட்டுமல்ல் இயற்கையை நேசிக்கும் பண்பாட்டுச் சிந்தனையையும் வெளிப்படுத்துகிறது.

”இருண்ட மேகஞ் சுற்றிச் சுருண்டு
சுழிஎறியும் கொண்டையாள்
ஏறி யாடிநெஞ்சைச் சூறையாடும்
விழிக் கெண்டையாள்.
திருந்து பூமருக்கின் அரும்பு போ
லிருக்கும் இதழினாள்
சிலையைப் போல் வளைந்து பிறையைப் போல்
விளங்கும் நுதலினாள்”.

இருண்ட மேகங்கள் தமிழ் சுற்றிக்கொண்டு சுழி கொண்டு எறிந்தார் போல விளங்கும் சுரண்ட கூந்தலை உடைய கொண்டையினாள் அவள். காதளவு ஓடிக் காணும் ஆடவர்களது நெஞ்சையெல்லாம் சூறையாடும் கயல் மீன் விழியினாள் அவள். திருத்தமான அழகினை உடைய முருக்கம் பூவினது அரும்பினைப் போல செக்கச் சிவந்திருக்கும் இதழ்களை உடையவள் அவள். அழகிய வில்லைப் போல வளைந்து இளம்பிறையின் வடிவினைப் போல விளங்கி ஒளியுடன் திகழ்கின்ற நெற்றியினையும் உடையவள் அவள் .என்று இப்பாடலில் மேகங்களையும் செக்கச் சிவந்திருக்கும் இதழ்களை உடைய பூக்களையும் வசந்தவல்லியின் அழகிற்கு புலவர் இயற்கையோடு உவமையாக அமைத்துப் பாடியுள்ளமை போற்றத்தக்கது.

**முடிவுரை**

திருக்குற்றாலக் குறவஞ்சி என்பது இயற்கையை வெறும் பின்னணியாகக் கொள்ளாமல், அதையே ஒரு முதன்மைப் பொருளாகக் கொண்டு பாடப்பட்ட இலக்கியமாகும். கவிராயரின் சொல்லோவியங்கள் குற்றாலத்தின் இயற்கை வளத்தை வரலாற்று ரீதியாகவும்,

இலக்கியரீதியாகவும் நிலைநிறுத்துகின்றன. குறிப்பாக வானரங்கள் கனி கொடுக்கும் காட்சி மற்றும் விலங்குகளின் இணக்கமான வாழ்வு, தமிழ் இலக்கியச் சூழலில் இயற்கையைப் பாடும் மரபிற்கு ஒரு மிகச்சிறந்த சான்றாதாரமாகத் திகழ்கிறது.

**துணைநூல் பட்டியல்**

[1.] திருக்குற்றாலக் குறவஞ்சி - திரிகூட ராசப்பக் கவிராயர்., புலியூர்க்கேசிகன் (உ.ஆ)., இயல் வெளியீடு., நான்காம் பதிப்பு – 2021.

[2.] சிற்றிலக்கிய வளர்ச்சி – பேராசிரியர் சே.வை சண்முகம்., மணிவாசகர் பதிப்பகம்., சென்னை-600021

[3.] தமிழ் இலக்கிய வரலாறு – சிற்பி பாலசுப்பிரமணியம் (தலைமை பதிப்பாசிரியர்) சிற்பி பதிப்பகம். மூன்றாம் பதிப்பு – 2019.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 44.சுற்றுச்சூழல் பாதிப்பில் பறவைகளின் பங்கு

**முனைவர் ச. புனிதா,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – **620 002. Email: punitha01081984@gmail.com**

**ஆய்வுச்சுருக்கும்**

உலகின் மனிதர்களுக்கு அடுத்தப்படி அதிகமாக வாழக்கூடிய உயிரினம் பறவைகள். பறவைகள் மனிதர்களைப் போல் தனக்கு தேவையானவற்றை தாமே தேடிக்கொள்ளும் ஆற்றல் பெற்றமை இயற்கையின் அதிசயமே. நம் முன்னோர்கள் பறவைகளைத் தெய்வங்களாகவும், தெய்வங்களின் வாகனங்களாகவும் வணங்கி மகிழ்ந்தனர். அத்தகைய பறவைகள் பண்புகள், குணங்கள், சுற்றுச்சூழலில் பறவைகளின் பங்களிப்பு, பறவைகளின் வகைகள். முக்குளிப்பான், கூழைக்கடா, நாரை, டூடு, பாறுக்கழுகுகள், தகைவிலான், இருவாச்சி போன்ற பறவைகளின் சிறப்புகளும் அவைகள் அழிந்து போவதற்குரிய காரணங்கள், அவற்றினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் போன்ற செய்திகள் இதில் ஆராயப்பட்டுள்ளன.

**முன்னுரை**

சுற்றுச்சூழலைக் காப்பதில் பறவைகளின் பங்கு இன்றியமையாதது. விளைநிலங்களில் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகளைக் கொன்று பயிர் விளைச்சலை அதிகரிப்பது. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு தாவரங்களின் விதைகளை எடுத்துச் செல்கிறது. மீன்களுக்கு கடல் சொந்தம். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் பூமி சொந்தம். ஆனால் பறவைகளுக்கு, கடல், பூமி, வானம் அனைத்தும் சொந்தம். பறவைகளின் வாழ்க்கை, செயல்பாடுகள் அனைத்தும் ஓர் ஒழுங்கில் அமைந்து, நம்மை வியக்க வைக்கின்றன. ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் உதாரணமாக பறரைவகள் உள்ளன. மகாகவி பாரதியாரும் ‘காக்கை கருவி எங்கள் ஜாதி, நீள் கடலும், மலையும் எங்கள் கூட்டம்’ என்றார். ஆகையால் தான் இயற்கை அன்னை நமக்கு அளித்த கொடைகளில் பறவைகள் மிகவும் அழகானவை. சுற்றுச்சூழலை சிறகுகள் கொண்டு விண்ணில் பறக்கும் ஆற்றல் கொண்டவை. பறவைகள் தங்களின் கூர்மையான பார்வையும், சிறகுகளின் அமைப்பும் கொண்டு வெகுதூரம் பயணம் செய்யும் திறன் படைத்தவை. பறவைகள் மனிதர்களின் கலாச்சாரம், கலை மற்றும் இலக்கியங்களில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. அமைதியின் சின்னமாகப் புறாவும், அழகின் சின்னமாக மயிலும் போற்றப்படுகின்றன. மேலும், பறவைகள் இயற்கையின் ஆரோக்கியத்தைக் காட்டும் குறிகாட்டிகளாகவும் விளங்குகின்றன.

பூமி நமக்கு அளித்திருக்கும் விலைமதிப்பற்ற கொடையான சுற்றுச்சூழல்தான், உயிரினங்கள் வாழ்வதற்கும், செழித்து வளர்வதற்கும் அடிப்படையாகும். இது காற்று, நீர், நிலம், தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள் என அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சிக்கலான வலைப்பின்னல். இந்த கூறுகளின் சரியான சமநிலைதான், நமது வாழ்க்கைத் தரத்தையும், பூமியின் ஆரோக்கியத்தையும் உறுதி செய்கிறது. சுத்தமான காற்று சுவாசிக்கவும், தூய்மையான நீர் அருந்தவும், வளமான நிலத்தில் விளைந்த உணவு உட்கொள்ளவும், பல்லுயிர் பெருக்கத்தை ரசிக்கவும் சுற்றுச்சூழலே ஆதாரமாக விளங்குகிறது. சுற்றுச்சூழல் சரியாக இருந்தால்தான்

பொருளாதார மேம்பாடு, சமூக நலம், கலாச்சாரம் போன்றவையும் செழிக்கும். சுருக்கமாகச் சொன்னால், சுற்றுச்சூழல் இல்லாமல் மனித வாழ்க்கையோ அல்லது எந்த உயிரினத்தின் வாழ்க்கையோ சாத்தியமில்லை.

ஆகவே பறவைகளினால் சுற்றுச்சூழல் எங்ஙனம் பாதிக்கின்றன என்பதை அடையாளம் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சுற்றுச்சூழலில் பறவைகளின் பங்கு**

மகரந்தச் சேர்க்கை:

பறவைகள் தேனை உறிஞ்சும்போது, ஒரு பூவிலிருந்து மற்றொரு பூவிற்கு மகரந்தத் துகள்களைப் பரப்புகின்றன.

விதை பரவல்: பழங்களை உண்ணும் பறவைகள், எச்சத்தின் மூலம் விதைகளைப் பல இடங்களில் பரப்பி மரங்கள் வளர உதவுகின்றன.

பூச்சிக் கட்டுப்பாடு: வயல்களிலும், தோட்டங்களிலும் உள்ள தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை உண்பதன் மூலம் விவசாயத்திற்குப் பெரிதும் உதவுகின்றன.

சுற்றுச்சூழல் சமநிலை: சுற்றுச்சூழல் மாசடையும் போது, அதை உணர்த்தும் முக்கிய உயிரினங்களாகப் பறவைகள் விளங்குகின்றன.

**பறவைகளின் வகைகள்**

உலகில் பல வகையான பறவைகள் வாழ்கின்றன. இவற்றில் பறக்க முடியாத பறவைகளான நெருப்புக்கோழி, பென்குயின் போன்றவையும், மிகச் சிறிய பறவையான ஹம்மிங் பேர்ட் (ர்ரஅஅ்பெடிசைன) மற்றும் அழகிய வண்ணங்களைக் கொண்ட மயில், கிளி போன்ற பல வகைகள் உள்ளன.

**பறவைகளின் முக்கியப் பண்புகள்**

இறகுகள்: பறவைகளை மற்ற விலங்கினங்களில் இருந்து தனித்துக் காட்டுவது அவற்றின் இறகுகள் ஆகும். இது உடலை கதகதப்பாக வைத்திருக்கவும், பறக்கவும் உதவுகிறது.

சிறகுகள் (இறக்கைகள்): பறப்பதற்குப் பயன்படும் முக்கிய உறுப்பு. பெங்குவின் மற்றும் நெருப்புக்கோழி போன்ற சில பறவைகளால் பறக்க இயலாது என்றாலும், அவை நீந்துவதற்கும் அல்லது ஓடுவதற்கும் தங்கள் இறக்கைகளைப் பயன்படுத்துகின்றன.

அலகு: பறவைகளுக்குப் பற்கள் கிடையாது. உணவை உட்கொள்ளவும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் உறுதியான அலகுகள் உள்ளன.

எலும்புகள்: பறவைகள் காற்றில் எளிதாகப் பறக்க ஏதுவாக, இவற்றின் எலும்புகள் மிகவும் வலிமையாகவும் அதே சமயம் எடையில் குறைந்தும் (காற்றறைகளுடன்) காணப்படுகின்றன.

பறவை இனங்கள்

- முக்குளிப்பான் வரிசை
- கூழைக்கடா வரிசை
- நாரை வரிசை
- வாத்து வரிசை
- வைரி வரிசை

- கோழி வரிசை
- உள்ளான் வரிசை
- புறா வரிசை
- கிளி வரிசை
- குயில் வரிசை
- ஆந்தை வரிசை
- சாவுக்குருவி வரிசை
- முன்னி வௌவால் வரிசை

**தகைவிலான்**

அதிகமாகக பறந்து கொண்டிருக்கும். தரையில் அதிகம் உட்காராத தரையில்லாக் குருவிதான் தகைவிலான்இ தாம்பாடி, தகைவிலாங்குருவி என்று வேறு பெயர்களும் உண்டு. பறந்து கொண்டே இருப்பதால் சுறுசுறுப்பிற்கும் பெயர் போனது இது. சுறுசுறுப்பானன மனிதர்களைப் பற்றிச் சொல்லும் போது தகைவிலானன் பெயரும் உச்சரிக்கப்படும். டைட்லர் என்று வேறு நாடுகளில் இதற்குப் பெயர் உண்டு தகைவிலான் அதிகளவில் காணப்பட்டால் மழைப்பெபாழிவு அதிகம் இருக்கும். விவசாயிகள் இதை நண்பர்கள் என்று சொல்வார்கள்

இந்த மழைக் குருவிகள் ஏகப்பட்ட கொசுக்களைச் சாப்பிடும். கொசுக்கள் இருக்கும் இடத்தில் தகைவிலான் இருந்தால் கொசுவை சுலபமாக விரட்டிவிடும். டெங்கு, மலேரியா என்று காய்ச்சலின் வகைவகையாய் பெயர்கள் உச்சரிகக்கப்படும்போது தகைவிலான் பறவையின் பெயரும் உச்சரிக்கப்படும். இப்பறவைகள் மே மாதத்தில் அவற்றின் பூர்வ இருப்பிடங்கலான இமயமலைக்குப் போகும்.

**கூழைக்கடா**

பெலிக்கன் என்னும் பறவையைத் தமிழில் கூழைக்கடா என்றும் மத்தாளிக்கொக்கு அல்லது மத்தாளி என்றும் குறிப்பிடுகின்றனர். கீழ் அலகில் உள்ள தாடைப் பையால் மீன் பிடிக்கும். இது கடற்கொள்ளைப் பறவைதான். கூழைக்கடா அல்லது கப்பல் பறவை. உணவு, தண்ணீர் ஓய்வு இல்லாமல் 500 கி.மீ வரை பறக்கும். வானத்தில் 1000 மீட்டர் உயர மேகக்கூட்டத்துள் விமானம் கூட தடுமாறும். ஆனால் அதே உயரத்தில் பறப்பது இந்தக் கப்பல் பறவைதான்.

"வருகினும் ஐயே! பறவைகள் வருகினும் ஐயே!
வருகினும் ஐயெ! திரிகூடி நாயகர்
வாட்டமில் லாப்பண்ணைப் பாட்டப் புரவெல்லாம்
குருகும் நாரையும் அன்னமுந் தாராவும்
கூழைகக் கடாக்ககளும் செங்கால் நாரையும்..."

(திருக்குற்றாகைக் குறவஞ்சிப் பாடல்)

என்று திரிகூட நாயகரின் பாட்டு வயல்களில் மேயவரும் பல்வேறு நீர்ப்பறவைகளுள் கூழைக்கடாவும் ஒன்று.

இதன் முக்கிய உணவு மீன். தனியாக அல்லது கூட்டமாகக குளங்களில் இரைதேடும். இதற்கு நீருக்கடியில் சுமார் ஓர் அடி ஆழத்தில் நீந்திச் செல்லும் மீன்ககளைப் பார்க்கும்.

கூர்மையான கண்கள். நீருக்கடியில் மீன்களைக் கண்டதும் அலகை நீருக்குள் நுழைத்து பை போன்ற அலகில் மீனை முகர்ந்து பிடிக்கிறது. கூழைக்கடாவின் நீண்ட உணவுக் குழலில் இருக்கும் அரைக்கப்பட்ட முழுமையாக செரிக்கப்பபடாத உணவு மீண்டும் வாய்க்குள் கொண்டுவரப்படுகிறது. இதைக் குஞ்சுகள் அருந்துகின்றன. இவை அதிகமாகக வேட்டையாடும் மீன்கள் பெரிதும் நோய்வாய்ப்பட்ட மீன்களே ஆகும். ஆகையால் இவை இல்லாமல் நீர்நிலைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

**டூடூ பறவை**

பழங்காலத்தில் பறவை இனங்களில் கடந்த நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் அழிந்து போன ஓர் அபூர்வப் பறவையின் பெயர் தான் டூடூ. இந்திய மகாசமுத்திரத்தில் ஆப்பிரிக்காவுக்கு அருகிலுள்ள மொரீசியஸ் தீவில்தான் டூடூ என்ற இந்த அழிந்துபோன பறவை வாழ்ந்து வந்தது. டூடூ என்றால் முட்டாள் அல்லது அற்பமான என்பது பொருள். டூடூவிற்குகு ஒரு சிறப்பம்சம் உண்டு. மொரீசியஸில் இருந்த கல்வாரியா என்னும் மரத்தின் பழங்களின் தான் டூடூவின் விருப்ப உணவு. டூடூ இப்பழத்தைச் சுவைத்த பிறகு, அதன் கழிவுடன் வெளியேறும் விதைதான் முளைக்கும் ஆற்றல் பெற்றதாக இருக்கும். டூடூ அழிந்ததால் கல்வாரியா மரமும் அழிந்து போய்விட்டது. ஓர் உயிரினத்தின் அழிவு சங்கிலத் தொடராக அது சார்ந்துள்ள் மற்ற உயிரினங்களின் அழிவாகவும் மாறுவதை இதிலிருந்து காணலாம். ஒரு காலத்தில் வேடிக்கைப் பொருளாகக இருந்த டூடூ இந்த உலகில் இருந்து அற்றுப் போய் விட்டாலும், சுதந்திரம் அடைந்துவிட்ட இன்றைய மொரீஷியஸின் பெருமைகக்குரிய அரசுச் சின்னமாக டூடூ கண்களில் பட்டு வருகிறது. இது வான்கோழியை விடசற்று சதைப்பற்று மிக்கது. வளைந்த பெரிய அலகு உடையது. இறகுகளும், வாலும் வளர்ச்சியுறாமல் காணப்படும். கால்கள் குட்டையாகத் தடித்து மஞ்சள் நிறத்தில் இருக்கும். எனவே இவை பறக்கவும், ஓடவும் முடியாதவைகளாக இருக்கும். ஒரு தடவைக்கு ஒரு முட்டையே இடும். தரையில் புற்களால் கூடு அமைத்து முட்டையை அடைகாக்கும். டூடூவைப் பற்றி 1507ஆம் ஆண்டு வரை எவரும் அறிந்திருக்கவில்லை. ஆப்பிரிக்காவைச் சுற்றி கப்பலில் சென்ற மாலுமிகள் தண்ணீருக்காக மொரீசியஸ் தீவில் ஒதுங்கியபோது இப்பறவையைப் பார்த்தார்கள். பிடித்து உண்டார்கள். 1598 இங்கு குடியேறிய டச்சுக்காரர்கள் மனிதர்கள் விரும்பாத அழகற்ற பறவை என இதனை அறிவித்தார்கள். குடியேற்றக்காரர்கள் வளர்ப்புப் பறவைகளையும், விலங்குகளையும் இறக்குமதி செய்த பிறகு இது படிப்படியாக அழியத் துவங்கியது. 1681க்குப் பிறகு இப்பறவையில் ஒன்றுகூட உயிருடன் இல்லை.

**இருவாச்சி**

பூரான், பல்லி, பூச்சி, பாம்பு, வௌவால் சிறு பறவைகள் என்று வேட்டையாடி சாப்பிடும் இருவாச்சிப் பறவை, அத்திப் பழங்களையும் விரும்பிச் சாப்பிடும்.

மலைமுழக்கி, மலைமொங்கான் என்ற செல்லப் பெயர்களும் இதற்குண்டு. எல்லாம் காரணப் பெயர்கள்தான். ஒன்றரைக்கோடி ஆண்டுகளுக்கு மேலாகப் காட்டில் வாழ்ந்து வரும் இருவாச்சி மனிதர்களின் பேராசை நடவடிக்கைகளால் பெருமளவில் குறைந்து விட்டது. இதன் குஞ்சை பழங்குடிகள் பொரித்து உண்கின்றனர். முட்டைகளையும் விடுவதில்லை. பணப்பயிhகளுக்காக தேயிலை, ஓரினப்பயிhகள், காப்பித்தோட்டங்கள் ஆகியவை பெருமளவில்

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

ஏற்படுத்தப்படுவதால் இருவாச்சி தங்குமிடங்களாக மரங்கள் இல்லாமற் போகிறது. பெண்பறவை ஒரே ஒரு முட்டை இடும். குஞ்சு பொரிக்க நாற்பது நாட்களாகும். அப்போது பெண் பறவையின் சிறகுகள் உதிர்ந்து புதியது முளைக்குகும். இப்பருவத்தில் பெண் பறவைக்குத் தேவையான விதவிதமான உணவைக் கொண்டு வந்து ஆண் பறவை கொடுக்கும். ஒரே வகையான உணவை அந்தச் சமயத்தில் பெண் பறவை வெறுக்குகுமாம்.

இருவாச்சிப் பறவையை நீலகிரி மலையில் காணலாம். இது அழிந்ததால் ஏறத்தாழ பத்துவகை மரமங்கள் அழியும். இருவாச்சி உட்கொண்டு வெளியேற்றி துப்பும் விதைகள் வீரியமானவை. அதுவே பின்னர் முளைக்கிறது.

உலகில் மொத்தம் சுமார் 50 இருவாச்சி இனங்கள் உள்ளன. இந்தியாவில் சுமார் 10 மேற்குத் தொடர்ச்சி மலைகளில் சுமார் 5 மலபார் சாம்பல் இருவாச்சி மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டும் வாழ்கின்றன.

“மாஞ்சோலை கிளிதானோ…. மான்தானோ
வேப்பந் தோப்புக் குயிலும் நீதானோ…..
இவள் ஆவாரம் பூதானோ…”

என்பார் பாடலாசிரியர் முத்துலிங்கம். இந்த இருவாச்சி 50 ஆண்டுகள் இணைபிரியாமல் வாழக்கூடிய சிற்பைப் பெற்றது. ஆகையால் புதிதாகத் திருமணம் முடித்து வாழ்பவர்களை ஆப்பிரிக்கப் பழங்குடிகள் இருவாச்சிகளைப் போல் இணைபிரியாமல் வாழுங்கள் என்று வாழ்த்துவார்களாம்.

**பாறுக்கழுகுகள்**

கேட்பாராற்றுப் பிணங்கள் கிடக்கிற போது பாறுக்ககழுகுகள் பிணந்தின்ன கூட்டம் கூட்டமாய் வந்து அதை சுத்தமாய் சாபப்பிட்டு முடித்த பின் சுத்தம் செய்து விட்டுப் போகும் என்பார்கள். இந்தவகை ஆகாய மருத்துவர்களான பாறுக்ககழுகுகள் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளையும், கோமாரி, நீலநாக்கு, ஆந்த்ராச்சு நோய்கள் காரணமாகக இறந்த கால்நடைகளையும் தின்னுனும். ஆனால் அவை எந்தப் பாதிப்புக்கும் உள்ளாகாது. இந்தப் பபாறுக்கழுகுகளின் சாவுக்கு டைக்குளோபினாக் என்ற ஊசி மருந்து காரணமாக இருக்கிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக மாடுகள், கால்நடைகளுக்கு வந்த மடிவீக்கம், சுளுக்கு போன்ற நோய்களுக்குகு டைக்குளோபினாக் தரப்பட்டிருக்கிறது. அந்த மருந்து தந்தும் குணமாகாமல் இறந்துபோன மாடுகளைத் தின்ற பாறுக்கழுகுகளின் சிறுநீரகத்தால் ஜீரணிக்க முடியாமல் சிறுநீரகம் செயலிழந்து அவை சாகின்றன. இதனால் இறந்த கால்நடைகளை உண்ண இதுபோன்ற கழுகுகள் இல்லாத காரணத்தால் துர்நாற்றம் காற்றில் பரவி சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது.

**முக்குளிப்பான்**

குட்டைச் சிறகுடைய வாலில்லாத நீர்ப்பறவை. சிறு மீன்ககளைச் சில சமயங்கில் நீருக்கடியில் விரட்டி பிடிக்கும். இதனைத் தொடும் முன் நீருக்குள் மூழ்கி மறைந்து விடும். விரட்டினாலும் தண்ணீரை விட்டு வெளியேறாமல் அங்குமிங்கும் ஓடியும், மூழ்கியும் தப்பித்துவிடும். இதன் கால்கள் உடலின் பின்னால் தள்ளி இருக்கும். முன் விரல்கள் மூன்றும்

வளர்ந்திருக்கும். விரல்களின் இருபுறமும் தட்டையான இலை போன்று அகன்ற பாதங்கள் உண்டு. இவையே இது நீந்த உதவுகின்றன. ஊரல், குளிவை, குளுப்பை ஆகியவை இதன் வேறு பெயர்களாக அமைந்துள்ளது.

இவை நீரிலுள்ள நீர்ப்பூச்சிகள், அவற்றின் நுண்புழுக்கள், தலைப்பிரட்டைகள், தவளைகள், நத்தைகள், சிறுமீன்கள், ஆகியவையே இதன் உணவுகளாக அமைகின்றன. மிதக்கும் தாவரங்களுக்கிடையே உள்ள இதன் உணவையும் இது விடாது கொத்தித் தின்னும்.

**நாரை**

சத்திமுத்தப் புலவரால் இயற்றப்பட்ட புகழ்பெற்ற 'நாராய் நாராய் செங்கால் நாராய்' பாடலின் வரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இது சங்க காலத்தில் வறுமையின் காரணமாகத் தனது சொந்த ஊரான வடதிசையை விட்டுப் பிரிந்த புலவர், அங்கு செல்லும் நாரையிடம் தனது மனைவிக்கு ஆறுதல் கூறுமாறு வேண்டிக் கொள்ளும் பாடலாகும்:

நாராய் நாராய் செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய் செங்கால் நாராய்!
நீயும் நின் பெடையும் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் ஏகுவீ ராயின்,எம்மூர்ச் செங்கால் நாராய்!
எம்மூர்ச்சிறுபுல் லூர்என் மனைவியைக் காணின்,
நனைசுவர் கூரை கனைபடு பல்லிபறவை சேர்ந்த
மனையுறை பல்கி,மன்றுதொறும் பலவின் அஞ்சில் ஓதி,
உள்ளாள் கொல்லோ?" (தூது பாடல்)

நாரை ஒருவகை நீர்ப்பறவை. நாரை ஆறு, ஏரி, கடல் முதலியவற்றிலும் கரைகளிலும் வயல்களிலும் காணக்கிடைக்கும். இது கொக்கு இனத்தைச் சேர்ந்தது. நீள நாரையின் உடல் மென்மையாக இருக்கும். சில நாரைகளின் நிறம் கருமை கலந்ததாகவும் இருக்கும். நாரைகளின் கால் பொதுவாகச் சிவப்பு. சிலவற்றுக்குப் பச்சையாகவும் பவளம் போலச் சிவப்பாகவும் இருக்கும். மீன், தவளை, நத்தை, புழு முதலியன நாரையின் உணவு. அவற்றைக் கண்டதும் நாரை சட்டெனத் தன் கழுத்தை நீட்டிகக் கொத்தித் தின்னும். பெரிய வேட்டையாடி அது. பூச்சிகள், தவளை, தேரை, தலைப்பிரட்டைகள், மீன், கொறி விலங்குகள், பாம்பு, ஊர்வன, மண்புழு, சிப்பிகள் ஆகியவை செங்கால் நாரைகளின் உணவுப் பட்டியலாகும். இப்பறவை குருட்டுக் கொக்கு, மடையான், குளநாரை என்றும் அழைக்கப்படுகிறது. ஐரோப்பியர்கள் இந்த நாரைதான் குழந்தையைக் கொண்டு வரும் பறவை என நம்புகின்றனர். அங்கே முக்கியமாக ஆலந்து, போலந்து ஆகிய நாடுகளில் செங்கால் நாரை மக்களுக்கு நெருங்கிய பறவைகளில் ஒன்று. வீட்டு மாடியில் குறிப்பாக, புகைபோக்கியில் கூடு கட்டினால் அது நல்லது என்று கருதுகின்றனர். அதைப் பாதுகாக்க வீட்டுக்காரருக்கு, அரசு ஓர் ஊக்கத்தொகைக கொடுக்கின்றது.

**பருந்து**

பருந்து உணவுக்காக மற்ற விலங்குகளைக் கொன்று சாப்பிடும் பழக்கமுடையது. எலி, தவளை, பாம்பு, ஓணான், மீன், சிறு பறவை, பறவை குஞ்சுகள் போன்றவற்றை சாப்பிடும்

இரைகொல்லிகள் என்று அழைக்கப்படும் கழுகு, பருந்து வல்லூறு, ராஜாளி, வைரி, பாறுக்கழுகுகள், ஆந்தை போன்ற பறவை வகைகள்.

பருந்து பறவை வகுப்பைச் சேர்ந்த ஓர் ஊனுண்ணி ஆகும். இவற்றிற்கு நீண்ட சிறகுகளும் பலம் குறைந்த கால்களும் அமைந்திருக்கும். இவ்வகுப்பில் உள்ள இனப்பறவைகள் பெரும்பாலும் உயிரற்ற விலங்குகளையே உணவாக்கிகக் கொள்கின்றன. சில இனங்கள் கொன்றுண்ணிப் பறவைகள் ஆகும். இவை நகரில் மாமிசக் கழிவுகள் அதிகம் கொட்டப்படும் இடங்களில் காணப்படும். இப்பறவைகள் அழிந்த காரணத்தினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றன.

**குப்பைப் பறவை**

நியுகினி நாட்டுக் காடுகளில் வாழும் பிடோஹிய் எனும் பறவையின் உடலில் விஷம் இருக்கிறது. அந்தப் பறவையின் இறக்கை, தோல், சதை ஆகியவற்றில் ஹோமா பட்ராகோ டாக்சின் என்ற விஷப் பொருள் இருக்கிறது. இது விஷப் பறவை என்பதால் பாம்புகள், கழுகுகள், பிராணிகள் தாக்குவதில்லை. இதன் உடல் ஆரஞ்சு, வண்ணத்திலும் தலை கறுப்பு வண்ணத்திலும் இருக்கும். நியூகினி காடுகளில் வாழும் பழங்குடியினர் இந்தச் செய்தியை பல ஆண்டுகளாக உணர்ந்திருக்கின்றனர். இந்தகக் குப்பைப் பறவை உடம்பிலுள்ள விஷத்தன்மையை பாதுகாப்பிற்காகப் பயன்படுகிறது.

**நிறைவுரை**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது, மனித குலத்தின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானது. புவி வெப்பமடைதல், மாசுபாடு, பல்லுயிர் இழப்பு போன்ற சவால்களை சமாளிக்க, உலகளாவிய ஒத்துழைப்பு தேவை. ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பை வழங்குவதன் மூலம், ஒரு ஆரோக்கியமான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்க முடியும். புள்ளிவிவரங்களையும், அறிவியல் ஆராய்ச்சிகளையும் கவனத்தில் கொண்டு, நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால், பூமியின் வளங்களை பாதுகாத்து, எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நல்ல உலகை விட்டுச் செல்ல முடியும்

சுற்றுச்சூழல் என்பது நமது எதிர்காலத்திற்கான அஸ்திவாரம். அதை பாதுகாப்பது நமது தலையாய கடமை. இன்றே நாம் விழித்துக் கொண்டு செயல்பட்டால், நமது சந்ததியினருக்கு ஒரு ஆரோக்கியமான பூமியை விட்டுச் செல்ல முடியும்.

**பார்வை நூல்கள்**

[1.] சுப்ரபாரதிமணியன், வேட்டையாடிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 50

[2.] முனைவர் வி. கலாவதி, தமிழ் இலக்கிய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 50

[3.] ஜெகாதா, சுற்றுச்சூழல் மேலாண்மை, யுனிவர்ஸல் பப்ளிகேஷன்ஸ், முதற்பதிப்பு – 2024

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 45.பெண்ணியக்கவிஞர்களும் சுற்றுச்சூழலும்

Feminist Poets and the Environment

**முனைவர் சா.அமுதன்,**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி.

amuthancharles@gmail.com, mobile.no: 9489601936

**ஆய்வுச்சுருக்கம்**

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ‘வளர்ச்சி’ என்ற சொல்லை ஏகாதிபத்திய நாடுகளும், பொதுவுடைமை நாடுகளும், மூன்றாம் உலகநாடுகளும் ‘கட்டுப்பாடற்ற பொருளாதார வளர்ச்சி’ என்பதாய்ப் புரிந்து கொண்டன. இந்த வளர்ச்சி வெளிச்சத்தைப் போலத் தோற்றம் கொண்டாலும் அதன் அடியில் சுற்றுச்சூழல் மாசுபாடு என்னும் கருப்பு நிழல் படிந்திருப்பதை அந்நாடுகள் கவனிக்கத் தவறிவிட்டன. கணிப்பொறி கண்டுபிடிப்புகளிலும், மென்பொருள் ஆராய்ச்சிகளிலும், ஆயுதக் குவிப்பிலும், தொழிற்சாலை உருவாக்கத்திலும் கவனம் செலுத்தும் முதலாளித்துவ மனப்பான்மை அனைத்து நாடுகளிலும் தொற்றுநோயைப் போலப் பரவியிருக்கின்றது. சுற்றுச்சூழல் ஈடுபாடில்லாத வளர்ச்சி என்பது வீழ்ச்சியில் முடியும் என்ற ஓர்மை யாருக்கும் இல்லை. சுற்றுச் சூழலுக்கு உகந்த தொழில்நுட்பம், சுற்றுச் சூழலைத் தாக்கும் வாயுக்களைக் குறைப்பது என்ற மேலான இலட்சியங்கள் பின்பற்றப்படும்போதுதான் சுற்றுச்சூழலை ஆரோக்கியமானதாகக் கையாள முடியும். சுற்றுச்சூழல் மீது கரிசனை கொண்ட கோட்பாடுகள், இலக்கியங்கள், திறனாய்வுகள், செயல்திட்டங்கள், போராட்டங்கள் அனைத்தையும் கவனப்படுத்த வேண்டிய கடமை கல்விப்புலத்துக்கு உள்ளது. எனவே சூழலியல் இலக்கியம் என்ற பொருண்மையைப் பொதுவெளியில் எடுத்துச்செல்லும் நோக்கில் ‘பெண்ணியக் கவிஞர்களும் சுற்றுச் சூழலும்’ என்ற ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மாசுபடுத்தல், போரை உருவாக்குதல், அணு ஆயுத உற்பத்தியைப் பெருக்குதல் போன்ற சுற்றுச்சூழலுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஆண்களின் பங்கு பெரும்பான்மையானது என்பது ஆய்வின் கருதுகோளாகும். சமுதாய அணுகுமுறை இதில் பின்பற்றப்படுகிறது.

**முன்னுரை**

பெண்களுக்கு நிலம் இன்னும் முழுமையான உரிமைச் சொத்தாக மாறவில்லை. இந்நிலையில் நிலத்தின் தூய்மை பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டிய கடமை இருக்கிறதா எனும் வினா எழலாம். அணு ஆயுதத்தை உருவாக்கும் அதிகார அமைப்புகள் ஆணின் கையிலிருக்கும் நிலையில் பெண்கள் அணுக்கழிவு பற்றி விவாதிப்பதால் பயன் விளையுமா எனும் வினாவும் எழுகிறது. உலகத்தை மீண்டும் தாய்வழிச்சமூகமாக மாற்றிய பின்னர்தான் சுற்றுச் சூழல் தூய்மை என்ற கருத்தாக்கத்தை விவாதிப்போம் எனப் பெண்கள் கருதினால் உலகமே இல்லாமல் அழிந்து போகக்கூடும். காடுகளை வெட்டும்போது அதற்கு எதிராகப் பெண்கள் குரலெழுப்ப வேண்டியுள்ளது. அணுக்கழிவு பேராபத்தாக உருவாகும் போது போருக்கெதிராக அவர்கள் போராட வேண்டியுள்ளது. பொதுக் குடிநீர்க்குழாயில் தண்ணீர் பிடிப்பதற்காகப் போராடும் அதே வேளையில் ஆறு, ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளின் தூய்மை பற்றியும் அவர்கள் பேச

வேண்டியுள்ளது. எனவேதான் பெண்ணியக்கவிஞர்கள் சுற்றுச்சூழல் உணர்வுடன் கவிதைகளை எழுதிவருகின்றனர். அவர்கள் இயற்கையைக் கொண்டாடுகின்றனர். மாசுபடுத்தும் அனைத்துச் செயல்பாடுகளையும் எதிர்க்கின்றனர். சுற்றுச்சூழல் தூய்மை பற்றிய விழிப்புணர்வை இலக்கிய உலகில் ஏற்படுத்தி வருகின்றனர். தமிழ்ப் பெண்ணியக் கவிஞர்களின் சுற்றுச்சூழல் பார்வை ஆராயப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

**திறவுச்சொற்கள்**

ஓர்மை – நினைவு, ஏகாதிபத்திய நாடு – பிற நாடுகளைச் சுரண்டும் வல்லரசு, மாசுபாடு – நிலம், நீர்;, காற்று போன்றவற்றை அசுத்தமாக்குவது, ஓங்காரக்குரல் - அழுத்தமான ஓசை, பச்சை வாசனை – மரங்களிலிருந்து வரும் வாசனை அசமத்துவம் - சமத்துவத்துக்கெதிரான நடவடிக்கைகள்.

**காடுகளைக் கொண்டாடுதல்**

பெண் கவிஞர்களுக்குக் காடுகளின் மீது அதீத அன்பு உள்ளது. மரங்கள், செடிகள், கொடிகள், மலர்கள் எனக் காடுகளை அழகியலோடு கவிதைக்குள் கொண்டு வருகின்றனர். உடலையும் காட்டையும் ஒன்றாக்கிக் காட்டுமிடங்களையும் பெண்ணியக் கவிதைகளில் காணமுடிகிறது. அனார் மருதோன்றிக் காடுகளுக்கும் பெண்ணுக்குமான உறவை நுட்பமாகக் காட்டுகிறார்.

“இரண்டு உள்ளங்கைகளிலும்
மருதோன்றிக் காடுகளை
விரித்துக் காட்டுகிறாய்”1

என்று பெண்ணின் கைகளில் உட்கார்ந்திருக்கும் காட்டைக் காட்டுகிறார். மற்றொரு கவிதையில் அனார் மூங்கில் காட்டை வரைந்து பார்க்கிறார். அக்கவிதைக்கு ‘மூங்கில் நிலம்’ என்று பெயர்வைக்கிறார். காட்டிலுள்ள குருத்துகள் விரியும்போது ஒரு புதிய நாள் தொடங்குவதாய் அவர் கற்பனை செய்கிறார். மஞ்சள் பாய்ந்த மூங்கில் புதர்களை வெறும் இயற்கை வருணனையாய் அவர் எழுதவில்லை. காட்டுக்குள் வாழும் பழங்குடியினப் பெண்ணுக்கும் அந்தக் காட்டுக்கும் பிரிக்க இயலாத ஆரோக்கியமான உறவு இருப்பதைச் சொல்லவே அவர் கவிதையை இயற்றியுள்ளார். காட்டைத் துன்புறுத்தாத பெண்ணுக்கு முரண் எதிர்வாகக் காட்டை வெட்டி வீழ்த்தும் ஓர் ஆணை நிறுத்துகிறார். காட்டை அழிக்கும் கோடரி ஆணின் கையில் இருப்பதை அவர் நினைவூட்டுகிறார்.

“காட்டின் தொலைவில்
பழங்குடிப் பெண்ணின் ஓங்காரக் குரலோசை
தோளில் கொழுவிய கைக்கோடரி
அசையாமல் நடக்கிறார் மரமேறி”2

என்ற அடிகளில் இடம்பெறும் பெண்ணும் ஆணும் சுற்றுச்சூழலின் பிரதிநிதிகளாகத் தென்படுகின்றனர். இதில் பெண் ஆக்க சக்தியாகவும், ஆண் அழிவு சக்தியாகவும் வலம் வருகின்றனர்.

சுகிர்தராணியின் ‘காடென்பது காடல்ல’ என்ற கவிதை காட்டுக்கும் பெண்ணுக்குமான உறவைப் புலப்படுத்துகிறது. நீண்டிருக்கும் பாறை, காட்டாறு, சருகு,

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

கொன்றை மரம், பச்சை வாசனை, முல்லை, மருதோன்றி, பூக்கள், முயல், மான், காட்டுக்கோழி, உதிர்ந்த இறகு, பழங்கள் எனக் காட்டின் சில பகுதிகளை ஒரே கவிதைக்குள் சுகிர்தராணி கொண்டுவருகிறார்.

“காடு காடெனவே இருக்கும் காடொன்றில்
ஆதியிலிருந்து என் பெருவாழ்வு
காட்டுக்குள் நீண்டிருக்கும் பாறையிலிருந்து
ஆடையற்றுக் குதிக்கும் காட்டாற்றின் பேரோசை”3

என்ற கவிதையில் பெண்ணுக்கும் காட்டுக்குமான உறவு ஆதியிலிருந்தே தொடருவதாக எழுதுகிறார்.

**பாலித்தீனை எதிர்த்தல்**

இன்றைய உலகில் தொட்ட இடமெல்லாம் பாலித்தீன் பைகள் தட்டுப்படுகின்றன. பிளாஸ்டிக் மற்றும் பாலித்தீன் உருவாக்கும் சுற்றுச்சூழல் மாசுபாடு மிகக் கடுமையானது. நிகழ்கால மனிதர்கள் பாலித்தீனை விதைத்து எதிர்கால சந்ததிக்குத் துரோகம் இழைக்கின்றனர். ‘வளமையான நிலம்’ என்பதனை பேச்சளவிலான இலட்சியமாக அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் சுற்றுச்சூழல் பிரச்சாரங்களை அவர்கள் மனதில் பதித்துக் கொள்ளவில்லை. நிலம் நெடுக பாலித்தீனைப் புதைக்கிறார்கள். பாலித்தீன் மண்ணில் புதைக்கப்படும் போது கூடவே சேர்ந்து நிலத்தின் ஆரோக்கியத்தையும் புதைக்கிறார்கள். புதை பொருள் ஆராய்ச்சியில் மூதாதையர்களின் மட்பாண்டங்கள் கிடைக்கும் பொழுது சமூகம் மகிழ்ச்சியடைகிறது. ஆனால் எதிர்காலத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் மண்ணைத் தோண்டி பிளாஸ்டிக் குடுவைகளை மட்டுமே கண்டெடுப்பார்கள். சுற்றுச்சூழலை மாசபடுத்தல் என்பது குற்றவுணர்ச்சி இல்லாமல் செய்யப்படுகிற மாபெரும் பாவமாக உருவெடுத்துள்ளது. இதற்கு எதிராக அரசாங்கம், விஞ்ஞானம் போன்றவை இயங்க முடியும். இலக்கியம் சுற்றுச்சூழலைத் தூய்மைப்படுத்த என்ன செய்ய முடியும் என்ற வினா இங்கு எழலாம். இலக்கியம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற கருத்தாக்கத்தைத் திரும்பத்திரும்ப பிரச்சாரம் செய்யும்போது மனித மனங்களில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.

புதுக்கவிதை என்பது வடிவம் சார்ந்த எதிர்ப்பின் குரல் மட்டுமன்று அது உள்ளடக்கம் சார்ந்த எதிர்ப்பின் குரலுமாகும். அது சாதி, மதம், போர், பெண்ணடிமைத்தனம், சுற்றுச்சூழல் மாசுபாடு உள்ளிட்ட அனைத்து சமூகச் சிக்கல்களுக்கெதிராகவும் குரல் கொடுக்கிறது. பெண்ணியம் என்பது ஆணாதிக்கத்துக்கெதிரான கலகக்குரல் என்பதாகப் பொதுவெளியில் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. உண்மையில் பெண்ணியம் எல்லா மட்டங்களிலும் அசமத்துவத்துக்கெதிரான குரலாகவே ஒலிக்கிறது. தலித் பெண்கள் பாதிக்கப்படும்போது தலித் பெண்ணியமாக முகம் காட்டுகிறது. சுற்றுச்சூழல் அநீதிகளுக்கெதிராகச் செயல்பட வேண்டிய இடங்களில் அது சுற்றுச் சூழல் பெண்ணியமாகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது. தமிழ்ப் பெண்ணியக் கவிஞர்கள் சுற்றுச்சூழல் உணர்வுடன் படைப்புகளைத் தருகின்றனர். அவர்களது கவிதைத் தொகுதிகளின் பெரும்பான்மையான தலைப்புகள் இயற்கையை ஒட்டியதாக அமைந்துள்ளது. மிதக்கும் மகரந்தம், நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே, சிகரங்களில் உறைகிறது காலம், உடல் பச்சை வானம், பெருங்கடல் போடுகிறேன், பாம்புக் காட்டில் ஒரு

தாழை, மஞ்சணத்தி போன்ற கவிதை நூற்களின் தலைப்புகள் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் மீதான பெண்ணியக் கவிஞர்களின் ஈடுபாட்டைப் புலப்படுத்தி நிற்கிறது. அவர்களது உள்ளடக்கங்களும் இயற்கையோடு இயைந்ததாக அமைந்துள்ளன. பெண்ணுடலும் இயற்கையும் இரண்டல்ல என்பதாக எழுதும் பெண்கவிஞர்களின் கவிதைகளை இப்போக்கின் உச்சக்கட்டம் எனக் கருதலாம்.

தமிழச்சி தங்கபாண்டியனின் 'பெருநகர்ப் பரணி' என்ற கவிதை நகரங்களில் தென்படும் பிளாஸ்டிக் கழிவு பற்றிப் பேசுகிறது.

"பிளாஸ்டிக் கழிவுகளில் வெதும்பியிருந்த
குப்பைத் தொட்டிகளோ
தம் முயல் வடிவக் காதுகளை
விடைத்துக் கொண்டு
விரகத்துடன் உள்ளிழுத்தன"4

என்ற அடிகளில் குப்பைத்தொட்டிகள் கூட சுற்றுச்சூழல் மாசுபாட்டை எதிர்க்கின்றன என்கிறார். வைகைச் செல்வி மனிதர்களிடம் பேசுவதற்குப் பதிலாகப் பிளாஸ்டிக் பைகளிடமே பேசுகிறார். பிளாஸ்டிக் பைகள் அனைத்து இடங்களிலும் குவிந்து கிடப்பதற்கான காரணத்தை வினவுகிறார். பிளாஸ்டிக்கின் இறுதி இலக்கு உயிர்களின் உயிர்களை எடுப்பதுதான் என்ற சிந்தனையை எழுப்புகிறார். மழைநீர் ஓட்டத்தைத் தடை செய்வதற்காகக் கவலைப்படுகிறார்.

"ஏ பிளாஸ்டிக் பையே
எங்கே நீ செல்கிறாய்
வீதிதோறும் வாசல்தோறும்
வந்து குவிகின்றாய்
உணவு, உண்ணும் உயிர்களின்
உடலுக்குள் உட்புகுந்து
அதன் உயர்தனை எடுப்பாயா?
மழை நீர்க்கால்வாயில் விழுந்து
மழைநீர் ஓட்டத்தை மறிப்பாயா"5

என்று வினா எழுப்பகிறார்.

கனிமொழி 'பாலித்தீன் தத்துவங்கள்' என்ற கவிதையில் புவிப்பரப்பெங்கும் நிறைந்து கிடக்கும் பல்வண்ண நெகிழிகள் பற்றிப் பேசுகிறார். மலைகளும், மரங்களும், நிலமும் பாலித்தீன் பைகளால் மூடப்படும் காட்சியை அவர் காட்டுகிறார். காற்று வெளியிடைக் கலந்து அவை சுவாசத்துக்கு அச்சுறுத்தலாக விளங்குவதையும் எடுத்துக்காட்டுகிறார். பாலித்தீன் பூக்கள் வண்ணமயமாக இருந்தாலும் அது விளைவிக்கும் விளைவு அபாயகாரமானதாக இருக்கிறது என்பது கனிமொழி கவிதையின் சாராம்சமாகும்.

"இளம் சிவப்பு, மஞ்சள், வெள்ளை, பச்சை
என மின்னும் வண்ணங்களில்
வந்திறங்கின பாலிதீன் பூக்கள்

போகிற இடமெல்லாம் அவற்றை எடுத்துச் சென்றோம்
மலை முகடுகளை
மரக் கிளைகளை
விளை நிலங்களை
அவற்றால் மூடினோம்
பஞ்சு இழைகளைப் போல் காற்றில் கலந்தன
கண்ணுக்குத் தெரியாத
வித்துக்கள் சிதறி
நிரப்பின எங்கள் சுவாசப்பைகளை"6

என்று கவித்துவம் ததும்பும் சொற்களில் பிரச்சார நெடியின்றி நெகிழிப் பயன்பாட்டுச் சிக்கலைப் பேசுகிறார்.

**மாசுபாட்டைக் கண்டித்தல்**

ஆதிகாலத்தில் இந்த உலகம் தூய்மையாக இருந்தது. மக்கள்தொகை பெருகியது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பெருகின. தொழிற்சாலைகள் பெருகின. இவற்றோடு சேர்ந்து மாசுபாடும் பெருகியது. வாழும் நிலம், சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர் அனைத்தும் மாசுபட்டு வருகிறது. இந்நிலையில் சுற்றுச்சூழல் பற்றிய புரிதலை உருவாக்குவதும், மாசுபாட்டின் அபாயங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், இயற்கை வளங்களைப் பாதுகாக்க சிறந்த மேலாண்மை முறைகளை அறிமுகப்படுத்துவதும் இலக்கியவாதிகளின் கடமையாக உள்ளது.

தமிழச்சி தங்கபாண்டியன் தெருவைக் குப்பையாக்கும் கறைபடிந்த கணத்தைப் பற்றிப் பேசுகிறார். சூழல் அழுக்கடைந்ததற்கும், நோய்கள் பெருகியதற்கும் மனிதர்களே காரணமாக இருக்கிறார்கள் என்று அவர் கூறுகின்றார்.

"யாரும் கவனிக்காத அந்தக்
கணத்திற்காகக் காத்திருந்து
தெருவில் குப்பையைக் கொட்டியாயிற்று
கழுவித் துடைத்த பின்பும்
கைகளில் ஒட்டிக் கொண்டிருக்கிறது.
'தீதும் நன்றும் பிறர் தர வாரா'
என்ற லட்சுமண வாத்தியாரின்
பொடி மட்டை நாற்றம்"7

என்ற கவிதை 'அழுக்காக்கும் மூளைகள் அழுக்கான மூளைகள்' என்ற கருத்தை முன்வைக்கிறது.

மாலதிமைத்ரி அணுமாசுபாடு பற்றிப் பேசுகிறார். அணுவியல் வளர்ந்துவிட்ட நவீன சமூகத்தில் டாங்கிகள் வயலை உழுவதாகவும், ஏவுகணைகள் விதைக்கப்படுவதாகவும் அவர் மொழிகின்றார். காற்று வெளி கந்தக மாசுபாட்டால் அல்லல்படுகிறது என்று கூறுகின்றார்.

"டாங்கிகள் உழும் வயலெல்லாம்
ஏவுகணைகள் விதைக்கும்

கந்தகம் குடையும் வெளி”8

என்று அணு ஆயுதப் பெருக்கத்தால் நிகழும் சூழலியல் பாதிப்பை விளக்குகிறார்.

**இயற்கைச் சுரண்டலை எதிர்த்தல்**

அண்மைக்காலத்தில் ஆழிப்பேரலை எனும் சுனாமி மாபெரும் இயற்கைப் பேரிடராகக் கருதப்படுகிறது. கடல்கோள் பற்றிய பழங்கதைகளைப் போதிய புரிதலின்றிக் கடந்துசெல்லும் தமிழ்ச்சமூகம் சுனாமியின் வரவுக்குப்பின் இயற்கைப் பேரிடர் பற்றிய தேடலுக்கு முக்கியத்துவம் அளித்தது. கடலடி நிலநடுக்கம், நிலச் சரிவு, எரிமலைவெடிப்பு, வால்நட்சத்திர மோதல் போன்ற இயற்கைக் காரணங்கள் ஆழிப்பேரலை உருவாக அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. மனித சக்தியால் அதனைத் தடுத்து நிறுத்த இயலாது. கடலோர மண்ணைக் கவர்ந்து செல்லுதல், நெய்தல் நிலத்தை ஆக்ரமித்தல், இயற்கை உருவாக்கிய கரையோரப் புதர்களை அழித்தல் போன்றவற்றால் ஆழிப்பேரலை வாழிடத்திற்குள் நுழைந்து பெரும் அழிவை உருவாக்குகிறது. இத்தகைய தவறான நடவடிக்கைகளை மனிதர்கள்தவிர்க்கவேண்டும்என்றகோருதல்பெண்ணியக் கவிஞர்களிடம் காணப்படுகிறது.

ஆண்டாள் பிரியதர்ணியின் ‘கடல்கொண்ட பெண்புரம்’ என்ற கவிதைதயானது பேரலைகள் பூமியை மட்டுமல்லாது பெண்களையும் தாக்குவதாய்க் குறிப்பிடுகின்றது.

“தடுப்புச்சுவர் தாண்டிக்
கரை அரித்தது ஆக்ரமிப்பு
பொங்கும் கடலுக்கு முன்
பொடிந்தது அரண்”9

என்பதில் இயற்கைக்கெதிரான ஆக்ரமிப்புகள் இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் அழிவுக்குக் காரணமாகி விடுவதை ஆண்டாள் பிரியதர்ணி உணர்த்துகிறார்.

**தொகுப்புரை**

‘பெண்ணியக் கவிஞர்களும் சுற்றுச்சூழலும்’ என்ற ஆய்வில் கண்டறிந்த உண்மைகளைக் கீழே காணலாம்.

- ஏகாதிபத்திய நாடுகளில் மட்டுமின்றி மூன்றாம் உலகநாடுகளிலும் சுற்றுச்சூழல் சிக்கல்கள் உள்ளன.
- சுற்றுச்சூழலைப் பொருத்தமட்டில் ஆண்கள் அழிவு சக்தியாகவும், பெண்கள் ஆக்க சக்தியாகவும் விளங்குகின்றனர்.
- இயற்கையைக் கொண்டாடுதல், மாசுபாட்டு நடவடிக்கைகளை எதிர்த்தல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பவை தமிழ்ப் பெண்ணியக் கவிஞர்களின் போக்காக உள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. அனார், பெருங்கடல் போடுகிறேன், ப.44
2. மேலது, ப.27
3. சுகிர்தராணி, இப்படிக்கு ஏவாள், ப.13
4. தமிழச்சி தங்கபாண்டியன், மஞ்சணத்தி, பக் 64,65

5. வைகைச்செல்வி, நிற்பதுவே நடப்பதுவே, பறப்பதுவே, ப.44
6. கனிமொழி, அகத்திணை, ப.69
7. தமிழச்சி தங்கபாண்டியன், மஞ்சணத்தி, ப.39
8. மாலதி மைத்ரி, நீலி, ப.35
9. ஜி.விஜயபத்மா, (தொ.ஆ), கவிதைப் பெண்கள், பக்.22,23

**பார்வை நூல்கள்**

1.அப்துல்ரகுமான், சோதிமிகு நவகவிதை, நேஷனல் பப்ளிகேஷன்ஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு -2011

2.இளம்பூரணர் (உ.ஆ) , தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம் ,சென்னை, பதினான்காம் பதிப்பு -2016

3.கிருஷ்ணவேணி .ஏ.என், இந்திய அழகியல், குமரன் பதிப்பகம், சென்னை,முதற்பதிப்பு -2005

4.சண்முகம். செ.வை, கவிதைமொழி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை,
முதற்பதிப்பு -2000

5.பஞ்சாங்கம்.க,இலக்கியமும் திறன்hய்வுக் கோட்பாடுகளும், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு -2012

6.அ.பிச்சை.அ, தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு, உலகத் தமிழாராய்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு -2003

7.பெரியண்ணன். கோ, நாட்டுப்புற இலக்கியம், மயிலவேலன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு -2013

8.பெரியண்ணன். கோ நாடு போற்றும் நாட்டுப்புறப்பாடல்கள் ஹர்வர்தினி பப்ளிகேஷன்ஸ் சென்னை முதற்பதிப்பு -2008

9.பெரியண்ணன். கோ, உலகநாடு போற்றும் நாட்டுப்புறப் பாடல்கள், முத்தமிழ் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு -2007

9.வீரப்பன்.பா, சங்க இலக்கியநடை, ஜெயபாலன் பதிப்பகம், சென்னை,
முதற்பதிப்பு -2013

10.ஜகந்நாதன், மலைஅருவி, சாய்ராம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு -2012

# 46.ஆனைமலை புதினத்தில் பழங்குடிகளும் சுற்றுச்சூழல் சீர்கேடும்

## Tribal Communities and Environmental Degradation in the Novel *Anaimalai*

**முனைவர் சு. விஜயலெட்சுமி,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி(தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி – 20

**ஆய்வுச் சுருக்கம்:**

பறவையியல் ஆய்வாளர் சலீம் அலி அவர்கள் கூறுவது போல, “மனிதர்கள் இல்லாத உலகத்தில் பறவைகளும் மற்ற உயிரினங்களும் வாழும். ஆனால், பறவைகளும் மற்ற உயிரினங்களும் இல்லாத உலகத்தில் மனிதர்களால் வாழ முடியாது” என்ற கூற்றை மையமாகக் கொண்டு இந்த கட்டுரை எழுதப்படுகின்றது. ஆனைமலைக் காட்டின் சிறப்பு, வளம், பழங்குடிகளின் வாழ்வாதாரம், காடு மற்றும் அதன் வளங்களைக் கொள்ளையடித்தல், புலிகள் காப்பகமாக்கும் முயற்சி, பழங்குடிகளை வெளியேற்ற முயற்சி, பழங்குடிகள் வெளியேற்றம், பழங்குடிகள் பாதிப்புக்கு உள்ளாதல், சுற்றுலாப் பயணிகளால் நேரும் பாதிப்பு, வனச்சரகர் மற்றும் அரசியல் வாதிகளின் பொறுப்பற்ற நிலை... போன்றன குறித்த கருத்துக்களை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** ஆனைமலை, பிரசாந்த் வே, பழங்குடிகள், அறம், யானை, புலி, மரம், சுரண்டல், நிலச்சரிவு, புலிகள் சரணாலயம், வனச்சரகர், சுற்றுலாப் பயணி, அரசியல்வாதி, சீர்கேடு...

**அறிமுகம்**

ஆனைமலை காட்டில் காலம்காலமாக பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். ஆரம்ப காலகட்டங்களில் பிரிட்டிஷ் ஆட்சியின்போது ஒருசில அதிகாரிகளைத் தவிர பலர் காட்டையும், அதன் வளங்களையும் அங்கு வசிக்கும் பழங்குடிகளைக் கொண்டே கொள்ளையடித்தனர். அதன்பின், ஆனைமலை வனவிலங்கு சரணாலயத்தை புலிகள் காப்பமாக மாற்ற இருக்கின்றோம் என்று வனத்துறை அதிகாரிகள், அரசியல் வாதிகள், அரசாங்கம்(சுற்றுலாப் பயணிகள்).. ஆகியோர் காட்டின் வளங்களை சுரண்டி அழிக்கின்றனர். இதற்குத் தடையாக பழங்குடிகள் இருக்கக்கூடாது என்பதற்காக அவர்களை காட்டை விட்டு வெளியேற்றும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். அதற்கு உடன்படாதவர்களை ஏதேதோ பெயரில் கைது செய்து சித்திரவதைக்கு உள்ளாக்குகின்றனர். ஆனைமலை காடும், பழங்குடிகளும் பாதிக்கப்படுவதை தந்திருப்பதே ஆனைமலை புதினமாகும். இப்புதினத்தின் ஆசிரியர் பிரசாந்த் வே. காடர்(சிறுகதைத் தொகுப்பு), பறக்கும் யானைகள்(சிறார் நூல்) இவை இவரின் பிற படைப்புகளாகும். ‘ஆனைமலை’ இவரின் முதல் புதினம் என்பது குறிப்பிடத்தக்கது.

**காட்டின்தன்மை**

இயற்கை வழங்கிய கொடைகளுள் ஒன்று காடு. காடு தன்னையும் காத்து, தன்னை சார்ந்தவர்களையும் காக்கும் சர்வ வல்லமை கொண்டது என்பதை, “எல்லா உயிர்களையும் காப்பதுவே காட்டின் குணம். காட்டில் வாழப் பழகிய எல்லா உயிர்களுக்கும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியும். யாரும் இதைக் கற்றுத்தரத் தேவையில்லை. காடு தன் நினைவுகளின் வாயிலாக அதைச் சார்ந்த எல்லா உயிர்களுக்கும் அதைக் கற்றுக்கொடுக்கிறது. (ஆனைமலை, ப.48) என பிரசாந்த் வே குறிப்பிடுவது மறுக்க முடியாத உண்மை.

**காட்டு வாழ்வின் சிறப்பு**

ஆனைமலைக் காட்டை புலிகள் சரணாலயமாக மாற்றும் அரசின் திட்டத்திற்காக, தொடர்ந்து பலவகையான ஆசைவார்த்தைகளைக் கூறி, பழங்குடி மக்களைக் காட்டை விட்டு வெளியேற்றத் துடித்தனர். அதற்கு, "உங்கப் பார்வைக்கு வேணும்னா நாங்க எதுவும் இல்லாம இருக்குற மாதிரி தெரியலாம். ஆனா எங்களுக்கு வேணும்கிறத இந்தக் காடு தருது. அந்த மாதிரி உங்க ஊரு தராது. எங்களுக்குப் பசிச்சா கிழங்கோ, பழமோ பிடுங்கிச் சாப்பிட்டு இருந்திடலாம். யாரும் கேட்கமாட்டாங்க. கீழ போனா எல்லாத்துக்கும் காசு வேணும். அதுக்கு நீங்க தர காசு பத்தாது" (ஆனைமலை, ப. 94) என்று அம்மக்கள் நடைமுறையில் உள்ள சிக்கலை எடுத்துரைத்தனர்.

**காட்டின் மீதிருந்த பற்று**

ஒருகட்டத்தில் சிலகுடும்பங்கள் வனச்சரகர்களின் அத்துமீறல் தாங்கமுடியாமலும், வெளியிடங்களில் வேறு வேலைகள் செய்வதற்காகவும் காட்டை விட்டு வேறு சில இடங்களில் வாழ்வதற்காக சென்றனர். அப்போது மீண்டும் காட்டுக்குவர நேரும் சூழலில், "தாயைப் பிரிந்திருந்த குழந்தை மீண்டும் தாயினைக் கண்டது போல மணி குதூகலித்தான். ஓடிச் சென்று ஒவ்வொரு மரமாகக் கட்டி அணைத்துக் கொண்டான். குழந்தைகளை அள்ளி எடுத்துக் கொஞ்சுவதைப் போல, மரங்களைத் தொட்டு இரசித்தான். உரக்க கத்தியபடி அங்குமிங்குமாக ஓடினான். ஒவ்வொரு இடமாக மணி சுற்றிச் சுற்றி வந்தான். மண்ணை எடுத்து உடலில் பூசினான். காட்டு வாழ்வே நிம்மதியான வாழ்வு. அவ்வளவு பணம் கொடுத்தாலும் காட்டு வாழ்க்கையை விட ஒரு மேம்பட்ட வாழ்க்கையை ஊருக்குள் வாழ்ந்து விட முடியாது" (ப. 163) என்பதால் அறிய முடிகின்றது. மணியின் இச்செயல் இம்மண்ணில் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்த நிலையை உணர்த்துகின்றது.

**பழங்குடியினரின் அறச்செயல்**

பழங்குடியினர் காட்டில் பொருள் கிடைக்கின்றது என்பதற்காக முழுமையாக எதையும் அபகரிக்கும் வழக்கம் இல்லாதவர்கள். காடு மற்றும் அதன் சுற்றுச்சூழல் சார்ந்த இயற்கையறிவு அவர்களின் பலமாக இருந்தது. இதனை, "கற்பாறையிலிருந்த தேன் கூட்டில் பகுதித் தேன் இன்னும் மிச்சமிருந்தது. எப்போதும் முழுமையாக எதையும் எடுத்து விடாமல் தனக்குக் கொஞ்சம், மற்றவைகளுக்குக் கொஞ்சம் என விட்டுவிட்டு வருவது அவர்களின் வழக்கம். அதன்படி விடப்பட்ட அந்தக் கூட்டைத் தேனீக்கள் வந்து மீண்டும் புதுப்பித்துக் கொள்ளவும் செய்யும்" (ப. 30) என்பதால் பழங்குடி மக்களின் அறச்செயலை அறிய முடிகின்றது.

**காட்டை சுரண்டுதல்**

பிரிட்டனின் ஓக் காடுகள் அழிந்தன. கப்பல் கட்டுதல் மற்றும் கட்டுமானப் பணிகள், இரயில் தண்டவாளத்திற்கென மரப்பலகைகள் தேவைப்பட்டன. இதனால், "பிரிட்டிஷ்காரர்கள் கண்களுக்கு வளம் கொழிக்கும் ஆனைமலைக் காடுகள், பணத்தைக் கொட்டிக் கொடுக்கும் புதையலாகத் தெரிந்தது. மரங்கள் பலகைகளாகவும், விறகுகளாகவும் காட்சியளித்தன. பழங்குடிகள் கூலிகளாகத் தெரிந்தனர். யானைகள் சுமை தூக்கும் அடிமைகளாகத் தெரிந்தன. அப்பார்வையில் இருந்து காட்டின் கோரமான அழிவு துவங்கியிருந்தது"(ப. 57) எனக் காட்டின் அழிவு ஆரம்பமான நிலையை நாவலாசிரியர் தெளிவு படுத்துகிறார்.

**விலங்குகளின் நிலையில் மாற்றம்**

பிரிட்டிஷாரின் ஓக் காடுகள் அழிந்து போயிருந்தன. அவர்கள் சொல்ல முடியாத அளவிற்கு மரங்களை வெட்டி வீழ்த்தினர். மரங்கள் வெட்டப்படும் போது காடு மற்றும் அது சார்ந்திருக்கும் மக்களை பாதிக்கும் நிலையை, "காற்றின் பேரோசைகளை மட்டும் கேட்டுப் பழகியிருந்த விலங்குகள், கடந்த சில காலமாக மரங்கள் வீழ்த்தப்படும் கொடூர ஒலியைக் கேட்டு அச்சத்தோடு

கூட்டம் கூட்டமாக உணவு தண்ணீர் தேடி இடம் பெயர்ந்தன. யானைகள் பயிர்களை மிதித்துச் சென்றன. புலிகள் மனிதர்களை வேட்டையாடின. விலங்குகள் எல்லாம் பெருங்கோபத்துடன் இருப்பது போல இருந்தது. இது வெறும் கோபமல்ல. காட்டின் கோபம். காட்டின் பிள்ளைகளான விலங்குகள் மனிதச் செயல்பாடுகளுக்குப் பழி தீர்க்கத் துவங்கியிருப்பதாக வேங்கையனுக்குத் தோன்றியது. இப்போது மழையும் பொய்த்துப் போனால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். (பக். 59 -60) என்பதால் அறிய முடிகின்றது.

மேலும், பிரிட்டிஷார் “தேக்கு மரங்கள் வழக்கமான முறைகளில் கொண்டு செல்ல முடியாத அளவுக்குப் பெரியதாக இருந்ததால், அந்த ராட்சத தேக்கு மரங்கள் கட்டைகளாக வெட்டப்பட்டு, யானைகளால் ஒரு குறிப்பிட்ட இடம் வரை சுமந்து செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து ஆற்றில் மிதக்கவிடப்பட்டு கீழே இருந்த சமவெளிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இந்த காரணத்தினால்தான், காலப்போக்கில் அந்த இடத்ததிற்கு டாப்ஸ்லிப் என்று பெயர் வந்தது. (கட்டுரையாளர்: சஞ்சாரிபால், த பெட்டர் இந்தியா எனும் இணையத்தளத்தில் எழுதப்பட்டது)

**சந்தன மரத்தைத் திருடுதல்**

ஒருசிலர் காடுகளை இயற்கையின் வளமாகப் பார்க்காமல் தனக்கான ஆதாயமாகப் பார்ப்பதால்தான் தொடர்ந்து காடுகளில் உள்ள பல்வேறு வகையான பொருள்கள் களவு போகின்றன. இந்நாவலில் சந்தன மரக்கட்டைகளை பிரிட்டாஷாரும் கடத்தினர், நம்நாட்டில் வசிப்போரும் வனத்துறையினரின் உதவியுடன் தொடர்ந்து கடத்தும் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுகின்றனர் என்பதை பிரசாந்த் காட்சிப்படுத்திக் கொண்டே வருகின்றார். இதனை, “சந்தன மரக்கட்டைகள் குவித்து வைக்கப்பட்டு இருந்தன. கோடாரிகள், மரம் அறுக்கும் வாள்கள், கத்தி, பேட்டரி, ஒயர் ஆகியவை ஆங்காங்கே இருப்பது தெரிந்தது. ஆனால் ஆட்கள் யாரும் அகப்படவில்லை. சுற்றியெங்கும் தேடிப்பார்த்தும், ஒருவரும் கிடைக்கவில்லை. மற்ற பீட்களுக்குள் சென்று பார்த்தபோது, ஏக்கர் கணக்கில் வளர்ந்திருந்த சந்தன மரங்களில், ஒன்று கூட எஞ்சியிருக்கவில்லை”(ப. 232) இந்த நிலை நாவலின் புனைவு மட்டுமல்ல; உண்மையாக நடக்கும் நிகழ்வாகும். “ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள பொள்ளாச்சி வனப்பகுதியில் இருந்து 73 கிலோ சந்தனத்தை கடத்த முயன்ற ஐந்து பேரை கைது செய்த நிகழ்வு” அண்மையில் நடைபெற்றுள்ளது. இதனைடைம்ஸ் இந்தியா நாளிதழ் பதிவு செய்துள்ளது.

**நிலச்சரிவிற்குக் காரணம்**

இயற்கையை அழிக்க முற்படும்போதும், இயற்கை வாழ்விடத்தை மனிதர்களின் சகல சௌகரியங்களுக்காக மாற்ற முயற்சிக்கும் போது பலவிதமான அழிவுகள் ஏற்படுகின்றன. இதனை, “எவ்வளவு கனமழை பெய்தாலும் காட்டுத்தரையில் உள்ள மக்கிய மரங்களின் இலைகள் மழைநீரை வடிகட்டிய பின்னரே ஓடைக்கு அனுப்பும். மலையில் மரங்களை வெட்டியிருந்தால்தான் மழை பெய்யும்போது அது, மேல் மண்ணை மொத்தமாக அடித்துக் கொண்டு செம்மண் நிறத்தில் வரும். அதீத செம்மண் நிறத்திலிருந்த காட்டோடை அதிகளவு மரங்கள் வெட்டப்பட்டுள்ளன என்பதை இளனுக்கு உணர்த்தியது”(ப. 39) என்று நாவலாசிரியர் குறிப்பிடுகிறார். மேலும், பூவுலகின் நண்பர்கள் சுந்தர்ராஜன் கூற்றுப்படி, “வலிமையாக பாறைகளைக் கொண்டுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் நிலச்சரிவு ஏற்படுகிறது என்றால், ரெசார்ட், அணைகள், சாலைகள், ஆக்கிரமிப்புகள் போன்றவை அமைத்தது முக்கிய காரணமாகும். இது மனிதர்களே ஏற்படுத்திய பேரிடர் என்று விளக்குகிறார். சூழலியல் ரீதியாக மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளில் மனித ஆக்கிரமிப்பு, இயற்கைக்கு புறம்பான செயல்பாடுகளை தவிர்ப்பது ஒன்றுதான் இதுபோன்ற பேரழிவுகளை தவிர்க்க நாம் எடுக்கும் முன்னெடுப்பாக இருக்கும் என்பதே சூழலியல் ஆர்வலர்களின் கருத்தாக இருக்கும்” (புதிய தலைமுறை இணையதளம்) எனப் பதிவு செய்கிறார்

**பழங்குடியினரின் பற்று**

பழங்குடியின மக்கள் காட்டின் மீது தங்கள் உயிரையே வைத்திருந்தனர். காட்டைப் பாதுகாக்கும் நோக்கில் காட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று கூறும் போது ஆவேசமடைந்தனர். இதனை, "சர்க்காரு உங்களுக்கு மாசம் மாசம் சம்பளம் கொடுத்து இந்தக் காட்டயும், மரத்தையும் காப்பாத்த சொல்றதுனால செய்யுறீங்க. இல்லைனா உங்களுக்கும், காட்டுக்கும் என்ன தொடர்பு? சும்மா பண்ணுவீங்களா? ஆனா நாங்க அப்படியில்லை. நாங்க செத்தா மரம் தின்னும். மரம் செத்தா நாங்க தின்போம். சார், தாய விட்டுட்டு புள்ளயும், புள்ளய விட்டுட்டு தாயும் வாழ்ந்திட முடியும். ஆனா நாங்க காட்ட விட்டுப் போறதுங்குறது, உடம்புல இருந்து உசுரு பிரிஞ்சு போற மாதிரிங்க"(ஆனைமலை, ப. 122-123) என்பதால் அறிய முடிகின்றது. மேலும் வனமக்களின் தோழன் என்றழைக்கப்படும் வி.பி. குணசேகரன், "காடு என்பது பழங்குடிகளின் உரிமை! காடு அழிந்துவிடும் என்பதுதான் வனத்துறையினரின் பார்வை. அவர்கள் 60 வயதுவரை பணியாற்றி ஓய்வு பெற்றுப் போய்விடுவார்கள். ஆனால், அங்கேயே வாழ்ந்து, காலம் காலமாகக் காட்டைப் பாதுகாப்பது பழங்குடிகள்தானே! காட்டைப் பாதுகாக்கிற பொறுப்பு பழங்குடிகளுக்கு உண்டு என வனஉரிமை அங்கீகாரச் சட்டம் 2006 சொல்கிறது" (தமிழ் இந்து நாளிதழ் இணையதளம்) என்று பதிவுசெய்துள்ளமை இவ்விடம் கவனிக்கத்தக்கது.

**காட்டின் நிலை(பேராபத்து)**

மனிதர்களும் விலங்குகளும் ஒன்றுசேர்ந்து வாழ முடியாது என பழங்குடிகளை விரைவாகக் காட்டை விட்டு அப்புறப்படுத்த அரசு முயற்சிக்கின்றது. ஆனால், சுற்றுலாத்துறையை உருவாக்கி இயற்கை மீதான அக்கறையும், சூழலறிவும் அற்ற மக்களை சுற்றுலாப் பயணிகள் என்ற பெயரில் கும்பல், கும்பலாக விடுத்து காட்டின் இயற்கையை பாழ்படுத்தும் செயலும் ஒருசேர நடந்து வருகின்றது. இதனை, "ஒருபக்கம் பழங்குடிகளைக் காட்டை விட்டு விரட்ட முயற்சிக்கும் அதே வேளையில், இன்னொரு பக்கம் காசைப் பெற்றுக்கொண்டு சுற்றுலாப் பயணிகளுக்குக் காட்டைத் திறந்து விட்டிருப்பது இளனுக்கு முரணாகத் தோன்றியது. காட்ட புலிகள் காப்பகமா மாத்தி காட்டுக்குள்ள இருக்குறவுங்கள வெளிய துரத்துறாங்க. ஒன்னு, ரெண்டு பேரு வந்திட்டு இருந்த இந்தக் காட்டுக்கு, இப்போ எவனவனோ கூட்டம் கூட்டமா எங்கிருந்தோ வரானுக... அவனுக வசதிக்கு ஏதோ டூரிசம், டிரெக்கிங், பாரெஸ்ட் ரெய்டு, ரெஸ்ட் ஹவுஸ் ஸ்டேயிங், சூட் ரூம், பாம்போ ஹட், ஷெல்டர், டிரெக்கிங் ஷெட் அதியிதுன்னு என்னென்னவோ பண்ணித் தராங்க" (ப. 235) இதனை, "ஆனைமலை மற்றும் வால்பாறை பீடபூமிப் பகுதிகளில் சாலைகளை அகலப்படுத்துதல், சுற்றுலா சார்ந்த நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல் மற்றும் அதிவேக வாகனங்களின் அதிகரிப்பு ஆகியவற்றின் விளைவாக, சிங்கவால் குரங்கு, சிறுத்தைப் பூனை, மெல்லிய லோரிஸ் போன்ற அருகிவரும் விலங்கினங்களும், பல பறவைகள், உள்ளூர் ஊர்வன மற்றும் இருவாழ்விகளும் இறந்துள்ளன" என நேச்சர் கன்சர்வேஷன் பௌண்டேஷன் செய்தி வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**உணவளிப்பதால் அவலநிலை**

சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும்போது பலரும் அங்குள்ள வனவிலங்குகளுக்கு உணவளிக்கும் காட்சியை மிக இயல்பாகப் பார்க்க முடிகின்றது. இது பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடியது. இதனை, "முன்ன எல்லா இந்த மந்திக மரத்துலதான் இருக்கும். இப்போ வெளியில இருந்து காட்டுக்குள்ள வரவங்க அதயிதனு கொடுத்து பழக்குனதுனால ரோட்டுக்கு வந்திடுதுக. அதனால அப்பப்போ ஸ்பீடா வர வண்டிகள்ல அடிபட்டிடுது. (பக். 118 – 119) காட்டுல எந்த விலங்குக்கும் நாம சாப்பாடு போட வேண்டியதில்லை. அதுக்கு வேணுங்கிறத கொடுக்க காடு

இருக்கு. நாம சாப்பிடுறத அதுக்கும் போட்டு அதுக பழக்கத்தைக் கெடுக்கக் கூடாதுங்க" (ப. 46) மனிதர்கள் வனவிலங்குகளுக்கு உணவுஅளித்துத் தலையிடும்போது, அது அவற்றின் இயற்கையான நடத்தைகளைச் சீர்குலைத்து எதிர்மறையான விளைவுகளின் தொடர் சங்கிலியைத் தூண்டக்கூடும். அது விலங்குகள் மரணத்திற்குக்கூட வழிவகுக்கலாம். வனவிலங்குகள் தங்களின் இயற்கையான உணவு தேடும் உள்ளுணர்வை இழக்கக்கூடும். இது ஊட்டச்சத்து குறைபாட்டிற்கும், காட்டில் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள இயலாமைக்கும் வழிவகுக்கும்" என நேவி பிலீஸ் என்ற ஆய்வாளர் எழுதியுள்ளமை இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

**யானையின் தந்தங்களைத் திருடுதல்**

ஆனைமலைக் காடுகளில் தந்தத்திற்காக யானைகளைக் கொல்லும் நிகழ்வு தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருந்தது. இதனை, "ஓரிடத்தில் அழுகிய நிலையில் காட்டு யானையின் உடல் கிடப்பது தெரிந்தது. யானை உயிரிழந்து நான்கைந்து நாட்களாகி இருக்கும் எனக் காட்டுராசா நினைத்தான். அதனைப் பார்த்ததும் ஆண் யானை என்பதை அறிந்துகொண்ட காட்டுராசா, அதன் தந்தங்கள் இல்லாமல் இருப்பதைப் பார்த்ததும் பதறிப் போனான். உடலில் காயங்கள் எதுவும் இல்லாததால், உயிரிழந்து கிடந்த யானையின் உடலில் இருந்து தந்தங்கள் திருடப்பட்டு இருக்கும் என யூகித்தான்"(ப. 33) என்று நாவல் பதிவு செய்கின்றது. "உலகளவில் அதிகம் கடத்தப்படும் சட்ட விரோதப் பொருள்களில் போதைப்பொருள் முதலிடத்தில் இருக்கிறது. ஆயுதக் கடத்தல் இரண்டாம் இடத்தில் இருக்கின்றது. மூன்றாம் இடத்தில் இருப்பவை யானைத் தந்தங்கள்" என்று விகடனில் செய்தி வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**யானைகள் ஊருக்குள் புகக் காரணம்**

பழங்குடிகள் இயற்கை சார்ந்து விலங்குகளுக்கு நன்மையானவற்றை செய்து வந்தனர். ஆனால், சட்டம் என்ற பெயரில் சில, முரணானவற்றை செய்ததால் காட்டில் யானைக்கு உணவுக் கிடைக்காமல் நேரும் சூழலை, "மூங்கில்க நாப்பது வருசத்துக்கு ஒருக்கா பூக்கும். அரிசிய கொடுத்துட்டு காய்ச்சு போயிடும். இத லோக்கல் டிரைபல்ஸ் கணிச்சு முன்கூட்டியே வெட்டியிருந்தா மழைக்குத் தழைச்சு வர மூங்கில் குருத்துக ஆனெகளுக்குத் தீவனமாயிக்கும். மூங்கில் வெட்ட தடை போட்டதால காட்டுல மூங்கில் எல்லா செத்து போயிடுச்சு. அது கிடைக்காததால ஆனெக ஊருக்குள்ள வரது அதிகமாயிடுச்சு..." (ப. 105) எனப் பதிவு செய்கிறார் நாவலாசிரியர். மேலும் நாவலாசிரியர் கூறுவதை மெய்ப்பிக்கும் வகையில், "யானைகள் கூட்டம் கூட்டமாக காட்டை விட்டு வெளியேறி ஊருக்குள் நுழைவதற்கு காடு அழிப்பு, அதன் வலசை பாதை ஆக்கிரமிப்பு என பொதுவாக காரணங்கள் கூறப்பட்டாலும் வனத்திற்குள் அவற்றுக்குத் தேவையான பசுந்தீவனங்கள் இல்லாததே மிக முக்கிய காரணம் என்கின்றனர் வன உயிரின ஆர்வலர்கள்" (கட்டுரையாளர்: ச. முத்துக்கிருஷ்ணன், புதிய தலைமுறை இணையத்தளம்) இது போன்ற செய்திகளை சமீககாலமாக அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கும் அவலநிலையும் ஏற்பட்டுள்ளது.

**தவறான கணக்கெடுப்பு**

காட்டில் விலங்குகள் கணக்கெடுப்பு உள்ளிட்ட பலவேலைகளில் ஒருசில அதிகாரிகள் பொறுப்பற்று அக்கறையின்றி செயல்படும் சூழல் நிலவுவதை, "இவ்வளவு பெரிய காட்டுக்குள்ள எத்தன புலி இருக்கு? எத்தன மானு இருக்குனு எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? குத்து மதிப்பா ஒரு நம்பரைப் போட்டு ரிப்போர்ட் அனுப்ப வேண்டியது தான்" என்ற கிருஷ்ணன். குச்சிகளால் மண்ணை நோண்டி புலி காலடித் தடம் வரைந்தும், '7 அப்' பாட்டிலை மண்ணில் பதித்து கழுதைப்புலி காலடித்தடம் என்றும் புகைப்படம் எடுத்து கணக்கு காட்டும் வித்தைகளை விளக்கினார்" (ப.19) என்று ஆசிரியர் பதிவு செய்துள்ளார். மேலும், விருதுக்காக சில

பொய்க்கணக்குகள் காட்டப்படும் அவலநிலையையும், “இந்தக் காட்டுல எப்படியும் இருபதுல இருந்து இருபத்தஞ்சு புலிகள் இருக்கும்னு நினைக்குறேன். கணக்கெடுப்பு முடிந்த பின்னால நாற்பது புலி இருக்கும்னு தேசியப் புலிகள் ஆணையத்துக்கு விபரங்களை அனுப்பி வைக்கணும். அப்பத்தான் அவார்டு, பண்ட் எல்லாம் கிடைக்கும். இல்லனா நாம சரியா வேலெ செய்யலனு சொல்லிடுவாங்க. இப்படித்தான் எல்லாப் பக்கமும் நடக்குது” (ப. 19) என்று குறிப்பிட்டுள்ளமை வேதனை அளிக்கக்கூடியதாக உள்ளது.

**அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற நிலை**

காட்டைக் கண்காணிக்க வேண்டிய அதிகாரிகள் பலநேரங்களில் இலஞ்சம் பெற்றுக்காண்டு குற்றவாளிகளுக்குத் துணை நிற்கின்றனர். இது மண் மற்றும் சமூகத்திற்கு மிகப் பெரும் கேடு விளைவிக்கக் கூடியதாக உள்ளது. அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையால், “வனவிலங்குகளைக் கணக்கெடுக்க மரங்களில் பொருத்தப்பட்டு இருந்த தானியங்கி கேமராக்கள் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டு இருந்தன. வாங்குற சம்பளத்துக்கு காட்ட காப்பாத்துனாலும் பரவால. காசுக்காக இப்படிக் காட்ட அழிச்சு நாசம் பண்ணாதீங்கடா”

(ப. 234) என்பதால் அறிய முடிகின்றது. மேலும், “இந்த நாட்டுல அரசியல்வாதிகள் ஒரு சாபக்கேடு. அவங்களுக்குப் புலிகள பாதுகாக்கணும்கிற அக்கறையும் கிடையாது. சூழல் அறிவும் இல்லை. ஓட்டுக்காக எதையும் பண்ண விடுறதும் இல்லை”(ப. 13) அரசியல்வாதிகளில் சிலர், எந்தத் திட்டத்தின் கீழ் எவ்வளவு இலாபம் பார்க்க முடியும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு சிலர் செயல்படுவதும் காட்டின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமாகும்.

**பழங்குடியினர் பாதிப்பு**

ஆனைமலை நாவலில் ஆங்காங்கே, பழங்குடி மக்களின் மகிழ்ச்சியும், துன்பமும் பாடலாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களின் மகிழ்ச்சியிலும், துன்பத்திலும் காடும், காடு சார்ந்த நிகழ்வும் இன்றியமையாததாகக் காட்டப்பட்டுள்ளது. சான்றாக, பழங்குடியினரின் துன்பத்தை உணர்த்தும் பாடல் ஒப்பாரி வடிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

“அணைக்கட்ட எங்கள் மலையையும், மண்ணையும், மாண்பையும் இழந்தோம்
மழைநீர் சேர்ந்தது மலைமக்கள் யாம் சிதறுண்டோம்
வலைவீசி மீன்பிடிக்க வழி இல்லை, தூண்டிலில் பிடிக்கத்தான் விதியுண்டு
துவண்டுதான் கிடக்கிறோம், தூக்கிவிட நாதியில்லை” (ப. 164)

என்பதிலிருந்து ஆனைமலை ஆசிரியர் பிரசாந்த் கூறவருவது காட்டையும் பழங்குடி மக்களையும் வேறாகக் கருதமுடியாது. இவர்களுடையது காட்டோடு பின்னிப்பிணைந்த வாழ்வு. இது ஆனைமலை என்ற ஒரு காட்டிலுள்ள பழங்குடி மக்களின் கதை மட்டுமன்று; இது போன்று உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கான காடுகளும், அங்குள்ள பழங்குடிகளும் தொடர்ந்து துயரப்படுவதுதான் இயற்கையின் கோரத்தாண்டவத்திற்குக் காரணம். எனவே மனித இனம் நல்வாழ்வு வாழ காடும், பழங்குடிகளும் இன்றியமையாதன என்ற மிகப் பெரிய உண்மையை உணர்த்தியுள்ளார்.

**முடிவுரை(conclusion)**

- ஆனைமலைக்காடு தன்னுள் வளங்களைக் கொண்டது; காடு, தன்னையும் காத்துத் தன்னைச் சார்ந்தவர்களையும் காக்கும் வளம் பொருந்தியது.
- பழங்குடிகளின் வாழ்வாதாரம் இக்காட்டை நம்பியே இருந்தது. வாழ்வாதாரம் மட்டுமன்று; காட்டையே தன் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர்.
- பல்வேறு காலகட்டங்களில், மனிதர்கள் காட்டின் வளங்களைத் தங்கள் சுய இலாபத்திற்காக அழித்தனர்.

- அரசு ஆனைமலையை புலிகள் காப்பகமாக, மாற்றும் முயற்சியில் பழங்குடி மக்களைக் காட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகளை வனச்சரகர்கள் மூலம் தொடர்ந்து செய்துவந்தனர்; இதனால் பழங்குடிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளானர்.
- மரங்களை வெட்டுதல், யானைகளைத் தந்தத்திற்காகக் கொலை செய்தல்... எனக் காடு சார் அழிவு நிலைகளைத் தொடர்ந்து ஏற்படுத்தினர்.
- பழங்குடி மக்களைக் காட்டிலிருந்து வெளியேற்றி விட்டு, சுற்றுலாத்துறைக்கென அவ்விடம் மாற்றப்பட்டதால் பெரும் சுற்றுச்சூழல் சீர்கேட்டை விளைவித்தது.
- மொத்தத்தில் காடும், பழங்குடிகளும் ஆக்கிரமிப்பிற்கு ஆளாகி தன்சுயத்தை இழந்து துன்பத்திற்கு உள்ளாவதே ஆனைமலை நாவலின் கரு ஆகும்.

**சான்றாதாரங்கள்**

1. பிரசாந்த் வே(ஆசிரியர்) – ஆனைமலை, எதிர் வெளியீடு, 96 நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி, முதல் பதிப்பு ஜீலை 2024
2. சஞ்சாரி பால், https://thebetterindia.com/125912/hugo-wood-teak-trees-anamalai-hills-tamil-nadu/
3. https://timesofindia.indiatimes.com/city/coimbatore/5-held-for-trying-to-smuggle-73kg-sandalwood-to-kerala/articleshow/89838713.cms, Date: 26 February, 2022
4. https://www.puthiyathalaimurai.com/india/what-causes-landslides-where-and-when-do-landslides-occur, 1 August 2024
5. https://www.hindutamil.in/news/opinion/columns/1380733-exclusive-interview-with-tribal-activist-v-p-gunasekaran.html, Date: 24 October, 2025
6. https://www.ncf-india.org/western-ghats/towards-wildlife-friendly-roads
7. நேவி பிலீஸ், https://www.wildliferescueleague.org/animals/the-hidden-dangers-and-effects-of-feeding-wildlife/
8. ஜார்ஜ் அந்தோணி, https://www.vikatan.com/environment/a-shocking-network-of-ivory-traders-around-the-world, Date : 18 october 2019.
9. முத்துக்கிருஷ்ணன். ச, https://www.puthiyathalaimurai.com/environment/elephants-entering-the-city----mettupalayam---shortage-of-forest-guards--food-shortage--full-analysis-, Date: 6 July 2022

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 47.சங்க இலக்கியத்தில் பறவைகளின் புலம்பெயர்வு

**முனைவர் சு.அனுலெட்சுமி,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620002
அலைபேசி – 7598852072 & 9486753321, E – Mail anuganeshan2018@gmail.com
(https://orcid.org/0009-0001-9183-8145)

**ஆய்வுச் சுருக்கம்**

இயற்கையின் விந்தைகளில் மிகவும் ஆச்சரியம் அளிக்கக்கூடிய ஒன்று பறவைகளின் இடப்பெயர்ச்சி ஆகும். சங்க காலம் தொட்டு இன்று வரை பறவைகள் தங்களின் வாழ்வியல் தேவைகளுக்காக புலம்பெயர்வது தொடர்ந்து நிகழ்கிறது. இதனை தமிழ் இலக்கியங்கள் **'வலசை போதல்'** என்று குறிப்பிடுகின்றன. தமிழர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தவர்கள் என்பதால் பறவைகளின் இந்த வாழ்வியல் மாற்றத்தை துல்லியமாக கவனித்து அதனை தங்கள் அக மற்றும் புற இலக்கியங்களில் ஆழமாக பதிவு செய்துள்ளனர். உணவு தட்டுப்பாடு தட்பவெட்பநிலை இனப்பெருக்கம் போன்ற காரணங்களால் பறவைகள் புலம்பெயர்கின்றன அத்தகைய சூழலியல் மாற்றத்தினால் பறவைகளின் வாழ்வியலையும் அழகியலோடு கூடிய பல நிகழ்வுகள புலவர்கள் செய்திகளாக பதிவு செய்துள்ளமையை இலக்கியங்களில் காணமுடிகிறது.

**முன்னுரை**

பழந்தமிழர்கள் மனிதர்களை மட்டுமின்றி தங்கள் சுற்றி இருந்த இயற்கை விலங்குகள் மற்றும் பறவைகளையும் உற்று நோக்கி தங்கள் வாழ்வியலோடு பிணைத்துக் கொண்டனர். நிலப்பரப்பை ஐந்து திணைகளாக பகுத்த தமிழர்கள் ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய முதற்பொருள் கருப்பொருள்களை வகுத்தனர் அதில் கருப்பொருள்களில் முக்கிய அங்கமாக விளங்குபவை பறவைகள் என்ற புள்ளினமாகும். பறவைகள் ஒரு குறிப்பிட்ட காலநிலையில் ஒரு குறிப்பிட்ட தேசத்திலிருந்து உணவு மற்றும் இனப்பெருக்கத்திற்காக பல்லாயிரம் மைல்கள் கடந்து மற்றொரு தேசத்திற்கு பயணம் செய்வதை நவீன அறிவியல் புலம் பெயர்வு என்கிறது. ஆனால் இந்த உலகளாவிய இயற்கை நிகழ்வை சங்கப் புலவர்கள் வலசை போதல் என்றும் அவ்வாறு வரும் புதிய பறவைகளை 'வம்பப் புல்' என்றும் அழகிய தமிழ்ச் சொற்களால் அடையாளப்படுத்தினர். காலம் மாற்றத்தையும் காலத்தையும் சுழற்சியையும் காட்டும் இயற்கை நாட்காட்டியாக பறவைகளை பழந்தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர் குளிர்காலத்திலும் முன்பனி காலத்திலும் வட திசையிலிருந்து தென்திசை நோக்கி வரும் பறவைகளும் கோடை காலம் தொடங்கும் பொழுது மீண்டும் தன் தாயகம் திரும்பும் பறவைகளும் சங்க பாடல்களில் அக வாழ்வின் பிரிவிற்கும் புற வாழ்வின் தூதருக்கும் மிகச் சிறந்த உவமைகளாக கையாளப்பட்டுள்ளன. தமிழர்களின் சூழலில் அறிவு மற்றும் இலக்கிய நயம் ஆகியவற்றை விரிவாக ஆய்வதற்கு இவ்வாய்வு கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள் :** புள் – பறவை, வம்பு – நிலையின்மை, அற்சிரக்காலம் - பனிக்காலம்

**புலம்பெயர்வதற்கு காரணங்கள்**

தொல்காப்பியம் தொடங்கி தமிழின் சங்க இலக்கிய நூல்கள் அனைத்திலும் இயற்கை மற்றும் உயிரினங்கள் குறித்த செய்திகள் அதிகளவு காணப்படுகின்றன. அதிலும் பறவைகளைப் பற்றிய குறிப்புகள் ஏராளமாக காணக்கிடைக்கின்றன. தொல்காப்பியம் **'மாவும் புள்ளும் ஐயற விளவே'** என்று கூறுகிறது எனவே ஐந்தறிவு உயிராகப் பறவையினம் பாகுபடுத்தப்பட்டுள்ளது. பறவைகள் புள் என்று சொல்லால் அழைக்கப்பட்டுள்ளன. பார்ப்பு, பிள்ளை, பறழ், குட்டி ஆகியவை பறவைகளின் இளமை பெயர்களாக அறியப்படுகின்றன. பெண் இனப்பறவைகள் பெடை, பேடை, பெட்டை அளகு என்றும் ஆண் இனப்பறவைகள் சேவல், ஏற்றை என்றும் வழங்கப்படுவதை தொல்காப்பியம் மரபியல் வழி அறிய முடிகிறது.

பறவைகள் வாழும் சூழ்நிலை, உண்ணும் உணவு, கூடுகட்டி வாழும் முறை, முட்டையிட்டு குஞ்சுப் பொரித்தல், இனப்பெருக்கம் ஆகியவை பலவற்றையும் கண்டறிந்து சங்கப் புலவர்கள் பாடல்களில் கூறியுள்ளனர். பறவைகளின் பறக்கும் திசையைக் கண்டும் அவற்றின் குரலைக் கேட்டும் பழந்தமிழர் இயற்கை நிகழ்வுகளைக் கணித்தனர். எனவே தான் புள் என்ற சொல்லிற்கு **நன் நிமித்தம்** என்ற பொருளும் காணப்படுகிறது. **'புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்'** என்ற மலைபடுகடாம் பாடல் வரி அதற்குச் சான்றாகும்.

புலம்பெயர்தல் பறவைகள் ஒரு குறிப்பிட்ட காலநிலையில் தங்களின் வாழ்வாதாரத்திற்காக தாங்கள் வாழும் பூர்வீக இருப்பிடத்தை விட்டு தற்காலிகமாக பல்லாயிரக்கணக்கான மைல்கள் கடந்து வேறோர் இடத்திற்குச் சென்று மீண்டும் தங்களின் இருப்பிடத்திற்கே திரும்பி வரும் நிகழ்வு புலம்பெயர்தல் அல்லது வலசை போதல் என்றழைக்கப்படுகிறது.

புலம்பெயர்வதற்கான முதன்மை காரணங்களாக **உணவு தட்டுப்பாடு** குளிர்காலத்தில் பனிப்பொழிவு உள்ள நாடுகளில் உணவு கிடைக்காமல் போவதால் உணவு வளம் மிக்க வெப்பமண்டல பகுதிகளை நோக்கி வருகின்றன. **தட்பவெட்ப நிலை** கடுமையான குளிரை தாங்க முடியாமல் மிதமான தட்பவெட்ப நிலை நிலவும் இடங்களைத் தேடி பயணிக்கின்றன. **இனப்பெருக்கம்** முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதற்காக பாதுகாப்பான சூழலையும் சாதகமான வெப்பநிலையையும் தேடி இவை இடம் பெயர்கின்றன

**நீர்நிலைத் தேடி நகரும் பறவைகள்**

சங்க இலக்கியங்களில் நீர் நிலைகளைத் தேடி நகரம் பறவைகள் பற்றிய மிக ஆழமான அழகான பதிவுகள் காணலாகிறது. அன்றைய தமிழர்கள் பறவைகளின் வாழ்வியலையும் அவை பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப இடம்பெயர்வதையும் புலவர்கள் கூர்ந்து நோக்கியுள்ளனர்

**"வரியிணர்ப் புன்னையங் கானல் புறந்தை**
**முன்னுறை வம்ப நாரை இனன் ஒலித்து அன்ன**
**அம்பல் வாய்த்த தெய்ய" (அகம் 100)**

**"குன்றத்து அன்ன குவவுமணல் அடைக்கரை**
**நின்ற புன்னை நிலந்தோய் படுசினை" (குறுந் 236)**

புன்னை மரங்கள் நிறைந்துள்ள கடற்கரைச் சோலையில் உள்ள நீர் துறையிலும் புன்னை மரக்கிளையிலும் வெளியூரிலிருந்து புதிதாக புலம்பெயர்ந்து வந்த நாரை கூட்டங்கள் ஒன்றாக கூடி எழுப்பும் பேரொலியினைக் கூறுகிறது. நீர் வளமிக்க கடற்கரைப் பகுதிக்கு தற்காலிகமாக வந்து தங்கி ஒலி எழுப்பும் பறவைகளின் வலசைப் பண்பு இதில் அழகாக பதிவாகியுள்ளது.

**உணவுத் தேடி புலம்பெயரும் பறவைகள்**

கடற்கரையில் கடுமையான புயல் காற்று வீசும்போது அல்லது பனிப்பருவம் தொடங்கும் போதோ இப்பறவைகள் இணையாகச் சேர்ந்து பாதுகாப்பான வேறு இடங்களுக்கு அல்லது உள்நாட்டு நீர் நிலைகளுக்கு நகர்வதை இலக்கியங்கள் விவரிக்கின்றன.

**'கொடும்பிடி கயமுனிந்து நெறி முதற்பட்ட**
**பெருங்களிறு ஆம்பல் ஆர்குளம் சுவைக்கும்**

**வம்பப் பனி அறை வாடை ஆயினும்' (நற் 67)**

நீர்நிலைகளில் உணவு தேடி வரும் பறவைகள் மழைக்காலம் முடிந்து கோடை தொடங்கும் போது வாடைக்காற்று வீசும் திசை நோக்கி மீண்டும் தங்களின் இருப்பிடங்களுக்கு தத்தம் துணைகளோடு வரிசையாகப் பறந்து செல்லும் நிகழ்வினை காட்சிப்படுத்துகின்றன. வயல்களில் விளைந்திருக்கும் நெல்மணிகளையும் நீர் நிலைகளில் உள்ள மீன்களையும் உண்பதற்காகப் பிற நாடுகளில் இருந்து வரும் பறவைகளைப் பற்றி அகநானூறு குறிப்பிடுவதை

**"புலம்பெயர் புள் இனம் நாரையொடு ஓசிய" (அகம் 236)**

உணவுக்காகவும் நல்ல சூழலுக்காகவும் தங்களின் இருப்பிடத்தை விட்டு புலம்பெயர்ந்து வாழும் பறவைக் கூட்டங்கள் நாரைகளோடு சேர்ந்து நீர்நிலைகளில் தங்கி இரைத்தேடும் அழகை விவரிக்கின்றன. **'புலம்பெயர் புள் இனம்'** என்ற சொல்லாடலே பறவைகளின் இடப்பெயர்ச்சியை நேரடியாக குறிக்கிறது

**"பனி விசும்பு இழிதந்து ஞாயிறு கவற்ற**
**புலம்பெயர் புள் இனம் நலம் குலையாமல்**
**தம் துறை சேர்ந்தன" (ஐங் 460)**

பனி நீங்கி ஞாயிற்றின் வெப்பம் தொடங்கும் போது உணவுக்காகப் புலம்பெயர்ந்து வந்த பறவை இனங்கள் அனைத்தும் எந்த பாதிப்பும் இன்றி தங்களின் சொந்த இருப்பிடங்களுக்கு மீண்டும் கூட்டமாகத் திரும்பிச் சென்ற நிகழ்வினை இப்பாடல் சுட்டுகின்றன.

**இனப்பெருக்கத்திற்காக புலம்பெயர்தல்**

இலக்கியங்களில் உணவுக்காக மட்டும் இன்றி இனப்பெருக்கத்திற்காகவும் புலம்பெயர்ந்துள்ளன. பறவைகள் கூடுகட்டி முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதற்காகவும் புலம்பெயரும் இயற்கை நிகழ்வுகளை மிக நுட்பமாக புலவர்கள் பதிவு செய்துள்ளனர். சங்கப் பாடலில் நெய்தல் நிலத்து தாழை மரங்களில் சினையுற்ற நாரைகள் தங்கி முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் காட்சியானது பதிவாகியுள்ளன. உணவு மற்றும் பாதுகாப்பான இனப்பெருக்கச் சூழலுக்காகப் பறவைகள் இடம் மாறுவதை இப்பாடல் காட்டுகின்றன.

**"தாழை மணந்த ஞாழல் மாச்சினைப்**
**புள் இறை கூம்பும் பனித்துறைத் தொண்டி" (நற் 174)**

தொண்டி என்னும் கடற்கரை நகரின் பனிப்படர்ந்த நீர் நிலைகளில் உள்ள தாழை மற்றும் ஞாழல் மரங்களின் கரிய கிளைகளில் புலம்பெயர்ந்து வந்த பறவைகள் தங்களின் இணைகளோடு கூடி தங்கித் தூங்கும் அவை அங்கு முட்டையிட்டுத் தன் இனத்தைப் பெருக்கும் பாதுகாப்பான புகலிடமாக அந்த இடத்தை பயன்படுத்தியப் பாங்கினை காண முடிகிறது.

**"கானல் அம் சிறுநெறி உவவுக் கடல் ஓதம் போல்**
**தலைமகன் வரவு கண்டு பேடோடு உவக்கும் குருகு" (குறுந் 92)**

கடற்கரை சோலைக்கு வரும் வழியில் பெண் பறவையோடு கூடி மகிழ்ந்து விளையாடும் ஆண் பறவை இனப்பெருக்கப் பருவத்தில் ஒன்று சேர்ந்து பின் முட்டையிடுவதற்காகப் பாதுகாப்பான அடர்ந்த சோலைகளை நோக்கிப் புலம்பெயர்வதை உணர்த்துகின்றன.

**"நெல் விளை கழனி பல்லுவப் புறவில்**
**முளரி நறும்பூக் கஞலிய ஞாங்கர்**
**சினைப்பசும் பாசறை" (நற் 345)**

நெல் விளையும் கழனிகளுக்கு அருகில் உள்ள புதர்களில் சினையுற்ற பறவைகள் தங்களுக்கு பாதுகாப்பான இடத்தை தேர்ந்தெடுத்து தங்குகின்றன. அவை தங்களின் முட்டைகளைப் பிற விலங்குகளிடமிருந்து பாதுகாக்க அத்தகைய அடர்ந்த இடங்களை தேடி இடம்பெயர்கின்றன என்ற நிகழ்வானதை சங்க புலவர்கள் பாடல்களில் பதிவிட்டுள்ளமையை அறிய முடிகிறது

**பருவகால மாற்றத்தினால் புலம்பெயர்தல்**

குளிர்காலம் மற்றும் பனிப்பருவம் தொடங்கும் நேரத்தில் தங்களின் இருப்பிடத்தை விட்டு புலம்பெயரும் குருகுகளை பாடியுள்ளனர்

**“தா அய்ப் பறக்கும் தன் பறைக்குருகே**

**புலம்பெயர் புலம்பொடு யானே” (குறுந் 46)**

**“முரிநீர் உவவுக் கழனி பனிக்கும் அற்சிரத்து**

**ஒலிவெள் உள்ளான் கொழுமீன்**

**ஆரும் ஒலிநீர்ச் சேர்ப்பன்” (அகம் 160)**

பனிக்காலம் தொடங்கும் போது ஒலி எழுப்பிக் கொண்டு வந்து இறங்கிய வெண்மையான உள்ளான் பறவைகள் அங்குள்ள கொழுத்த மீன்களை இணையாக உண்டு மகிழும்

**“உள்ளான் உப்பகழி உவவுக் கடியும்**

**தன் கடற் சேர்ப்பன்” (ஐங் 153)**

உள்ளான் பறவைகள் மிக நீண்ட தூரம் பனிப்பிரதேசங்களில் இருந்து வரக்கூடியவை கடற்கரைத்துறையின் அருகே கரிய உப்பங்கழியின் நீர்த்துளிகள் காற்றில் தெறித்து விழுகின்றன. அந்த உப்பு நீர் நிறைந்த கழனியில் உள்ளான் பறவையானது தன் அலகால் மண்ணைக் குத்தி அலைகளால் அடித்து வரப்பட்ட இரையைக் கவ்வி பிடிப்பதற்கு மிக வேகமாக ஓடி ஓடி வேட்டையாடுகிறது இத்தகைய உள்ளான் பறவைகள் குளிர்காலத்தில் வடக்கிலிருந்து தமிழக கடற்கரைக்கு பெரும் அளவில் வலசை வரும் பறவைகள் ஆகும். அந்தப் பனிக்கால வருகையையும் அவை எழுப்பும் ஒலியையும் **‘பனிக்கும் அற்சிரத்து ஒலிவெள் உள்ளான்’** என்று புலவர்கள் மிகத் துல்லியமாக பதிவு செய்துள்ளதை காண முடிகிறது

**கடல்சார் பறவைகளின் புலம்பெயர்வு**

கடற்கரையை ஒட்டிய உப்பங்கழிகளிலும் கடல்முனைகளிலும் வாழும் பெரிய கடற்பறவைகளின் இடப்பெயர்வுகள் நிகழ்வதை இலக்கியங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. மீன்களை இரையாக கொள்ளும் பெருங்கடல் பறவைகள் கடலில் புயல் சின்னம் உருவாகும் அறிகுறியை முன்கூட்டியே உணர்ந்து கூட்டமாக உள்நாட்டு பெரிய ஏரிகளை நோக்கி பறந்து விடும் கடலின் சீற்றத்திற்கு அஞ்சி இவை தங்களின் இருப்பிடத்தை மாற்றிக் கொள்ளும் தன்மையினை

**“இருங்கழிக் குருகு இனம் இரிய**

**வளை ஞெமுற்று” (அகம் 28)**

**“கடல் உறை குருகின் கணம் இரிய**

**உடைத்திரை முழங்கி கரைக் கரைய” (நற் 327)**

தமிழர்கள் கடல்சார் பறவைகளின் பறக்கும் திசையை வைத்து கடலில் கரைகள் எங்கு உள்ளன என்பதையும் கடலில் புயல் வரப்போவதையும் கணித்தனர். பறவைகள் கூட்டம் கூட்டமாக கரையை நோக்கி அல்லது மக்கள் வசிப்பிடத்தை நோக்கி நகர்ந்தால் கடலில் புயல் வரப்போகிறது என்பதை உணர்ந்து மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் தவிர்த்தனர்

**“நற்றிணை நல்லார் நலம்மலி பல்லாவூர்**

**இருங்கழி இரியல் புள் இனம் இரிய**

**நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றி” (குறுந் 325)**

பல்லாவூர் என்ற நகரின் மிகப்பெரிய உப்பங்கழியில் தங்கியிருந்த பறவைக் கூட்டங்கள் எல்லாம் அஞ்சி மிரண்டு பறந்தோடும் படி நீண்ட கொடிகள் அசையும் பெரிய கப்பல் கடலில் வருவது ஏதோ அச்ச உணர்வை ஏற்படுத்த பறவைகள் மக்கள் வசிப்பிடத்தை நோக்கி நகர்ந்த செய்தியினை அறிய முடிகிறது.

**முடிவுரை**

தமிழ் இலக்கிய சூழலில் புலம்பெயர் பறவைகள் என்பது வெறும் இயற்கை வர்ணனை அல்ல அது மனித இடப்பெயர்வு, பிரிவுத்துயர், ஏக்கம் மற்றும் வாழ்விற்கான தேடல் ஆகியவற்றின் கூட்டுக்குறியீடு ஆகும். பறவைகளின் வலசை போதலை பழந்தமிழர் அறிவியல் பூர்வமாகவும், அதே வேளையில் அகம் சார்ந்த உணர்வுப்பூர்வமாகவும் அணுகியுள்ளனர் என்பதையும் இயற்கையோடு இயைந்த மனித நேயப் பண்பினையும் பாடல்கள் வழி காணமுடிகின்றன.

சங்க இலக்கியங்கள் காட்டும் புலம்பெயர் பறவைகள் பற்றிய பதிவுகள், வெறும் கற்பனைக் கவிதைகள் அல்ல அவை இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் வாழ்வியல் ஆவணங்கள். உலகமயமாக்கலும் புவி வெப்பமயமாதலும் இயற்கைச் சமநிலையைக் குலைத்து வரும் இந்நாளில், சங்க இலக்கியங்கள் போற்றிய இவ்வரிய பறவையினங்களையும் அவற்றின் வாழிடங்களையும் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.

**பார்வை நூல்கள்**

[1]. தமிழண்ணல். *குறுந்தொகை மூலமும் உரையும்*. வர்த்தமானன் பதிப்பகம், 2022.

[2]. வரதராசன், மு. *பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை*. 2-ஆம் பதிப்பு, பாரிநிலையம், 2006.

[3]. அடைக்கலசாமி, மிருணாளினி. *தமிழ் இலக்கிய வரலாறு*. 20-ஆம் பதிப்பு, ராசி பதிப்பகம், 1988.

[4]. சுப்ரமண்யன், ந. *சங்ககால வாழ்வியல்*. 2-ஆம் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2010.

[5]. பக்தவத்சல பாரதி. *தமிழர் மானிடவியல்*. மெய்யப்பன் தமிழாய்வகம், 2002.

[6]. சிதம்பரனார், சாமி. *பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்*. நாம் தமிழர் பதிப்பகம், 2012.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 48. நவீன இலக்கியங்களில் சுற்றுச்சூழல் நெருக்கடிகள்

**முனைவர் ஜெ. ராஜகுமாரி,**
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி. மதுரை.
9944691923, Email: jrajakumari85@gmail.com

**முன்னுரை:**

இயற்கை வளமும் சுற்றுச்சூழலும் மனித குல வளர்ச்சியின் முக்கிய கூறுகளாக அமைந்துள்ளன. மனிதன் இயற்கையோடு இணைந்து தங்களுக்குத் தேவையான உணவினைப் பெற்று வாழ்க்கை நடத்தி வந்தான். காலப்போக்கில் மக்கள் தொகை பெருக்கத்தினால் மனிதனின் தேவைகளும் அதற்கேற்ப பெருகியது. இதனால் சூழல் கேடுகளுக்கு மனிதனின் செயல்கள் முக்கிய காரணமாகிவிட்டது.இந்நிலை தொடர்ந்தால் உயிரினங்கள் முற்றிலும் அழிந்துவிடுமோ என்ற பயம் ஏற்பட்டுள்ளது. இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்தே நம் முன்னோர்கள் இயற்கையைப் பாதுகாத்து வந்தனர். எனவே சுற்றுச்சூழல் குறித்த கல்வியும், விழிப்புணர்வும் இப்போதைய அவசியத் தேவையாகும்.இது குறித்து இவ்வாய்வில் விரிவாகக் காண்போம்.

**ஆய்வின் நோக்கம்:-**

நம் வாழ்வை வளப்படுத்தும் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டியக் கடமை ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உண்டு. வாடியப் பயிரைக் காணும் போது வாடுகின்ற மனநிலை நம்மில் உருவாக வேண்டும். 'கன்னி கோவில் இராஜாவின் வன தேவதை' எனும் ஹைக்கூ கவிதை நூலில் சுற்றுச்சூழல் நெருக்கடிகள் குறித்து விரிவாக ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**சுற்றுச்சூழல் - விளக்கம்:-**

சுற்றுச்சூழல் உயிரினங்களையும் அவற்றைச் சுற்றியுள்ள இயற்கைக் கூறுகளையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த அமைப்பாகும். காற்று, நீர், நிலம், தாவரங்கள், விலங்குகள் ஆகியவை சுற்றுச்சூழலின் முக்கிய கூறுகளாகும். மனிதனின் கட்டுப்பாடற்ற தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல், மக்கள் தொகைப் பெருக்கம், பிளாஸ்டிக் பயன்பாடு போன்ற காரணங்களால் சுற்றுச்சூழல் கடுமையாக மாசடைந்து வருகிறது. இதனால் மனித ஆரோக்கியம், உயிரினங்கள் மற்றும் இயற்கை வளங்கள் பாதிக்கப்படுகின்றன."குறிப்பிட்ட இடத்தில், காலத்தில் காணப்படும் சுற்றுப்புற நிலமைகளின் கூட்டே சுற்றுச்சூழல் ஆகும்.- C.C.பார்க்" ( முனைவர் இரா. ச.சுகிர்தா பஸ்மத், சுற்றுச்சூழல் கல்வி,ப. எண்-3, ப.- 2020)

"ஒரு பொருளைச் சுற்றியுள்ள அதன் மீது நேரடியாகத் தாக்கத்தைச் செலுத்துகின்ற அனைத்தும் சுற்றுச்சூழலாகும்* கில்பர்ட்"2( திருமதி.பியூலா ரெய்னீஸ்,சுற்றுச்சூழல் கல்வி, ப. எ- 1.3, ப. ஆ- 2009 )

**சுற்றுச்சூழல் நெருக்கடிகள்:-**

இன்றைய உலகில் மனிதர்கள் மாசுபாட்டினால் பெரும் நெருக்கடிக்கும் இன்னலுக்கும் உள்ளாகி உள்ளனர் என்பதை நாம் அறிவோம். " சுற்றுச்சூழலை அழிக்கின்ற எந்தவொரு பொருளும் சுற்றுச்சூழலினுள் செலுத்தப்படுதலே மாசுபடுதல் ஆகும்"3( மேலது ப.எ- 2.10 )

அன்றாடம் பெருகிவரும் தொழிற்சாலைகள்,மக்கள் தொகைப்பெருக்கம் இந்த மாசுபாட்டிற்கு முக்கியக் காரணம்.இதிலிருந்து வெளிவரும் மாசுக்கள் சுற்றுச்சூழலில் படிவதால் அவை விரும்பத்தகாத மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இவை நமது உயிர் கோளத்திற்கே கேடாக அமைகிறது. இயற்கையோடு இணைந்த அனைத்தும் அழிவின் ஆரம்ப நிலையில் உள்ளது. நாகரிகம் என்ற பெயரில் நாம் இயற்கையில் இருந்து விடுபட்டு செயற்கை வாழ்வை நோக்கி நம்மை அறியாமலேயே நகர்ந்து கொண்டிருக்கிறோம். இதிலிருந்து மீள முடியாத அளவிற்கு பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றோம்.மக்கள் வளமாக வாழ வேண்டும் என்றால் சுற்றுச்சூழல் சிறப்பாக அமைய வேண்டும். வருங்கால சந்ததிக்கு நல்லதொரு சுற்றுச்சூழலை வழங்குவது நமது கடமையாகும்.

**சுற்றுச்சூழல் நெருக்கடியின் வகைகள் :-**

**மரங்கள் வெட்டப்படுதல்:-**

ஒரு நாட்டில் உள்ள காட்டு வளங்களைப் பொறுத்து அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி அமைகிறது. காடுகளில் மரங்கள் தாவரங்கள் போன்றவை அடங்கும். காடுகள் புதுப்பிக்கக்கூடிய வளங்களில் ஒரு பிரிவாக அமைகிறது. மரங்களை அதிகமாக வளர்த்தால் சுற்றுப்புறம் தூய்மை அடையும். இதனால் மனிதனுக்குத் தேவையான சுகாதாரமான காற்று கிடைக்கும். உடல்நலம் பாதிப்பில்லாமல் இருக்கும். ஆனால் இன்று பல்வேறு தேவைகளுக்காக காட்டு வளம் குறைந்து வருகிறது. காடுகள் அளிக்கப்படுவதால் மண் அரிப்பு ஏற்படுகிறது, காற்று மாசுபடுகிறது,மழையின் அளவு குறைகிறது, இதனால் வறட்சி ஏற்படும் நிலைக்கு உள்ளாகிறோம். காடுகள் அழிக்கப்படுவதனால் வனவிலங்குகளின் வாழ்விடங்கள் குறைந்து வனவிலங்குகளின் எண்ணிக்கை குறையத் தொடங்குகிறது.

“ மழை வேண்டி
விலங்குகள் திருமணம்
மரம் மறந்த மனிதர்கள் “4( கன்னி கோவில் ராஜா வன தேவதை ப. எ-8, ப.ஆ- 2010)

“ வெட்டப்படும் காடுகளில்
வேகமாய் வளர்கின்றது
வறட்சி “ 5(மேலது ப. எ-30)

மழையின் முக்கிய ஆதாரமாக மரங்கள் விளங்குகிறது. ஆனால் இங்கு மனிதன் மரங்களை வெட்டிவிட்டு வறட்சியின் காரணமாக விலங்குகளுக்கு மாலையிட்டு திருமணம் நடத்தி மழையை வேண்டி சடங்கு முறையைச் செய்யும் அறியாமை நிலையை கவிஞர் சுட்டிக் காட்டுகிறார்.

“ மரம் வெட்டும் ஓசை
எதிரொளிக்கும் காடு முழுதும்
பயத்தில் பூமி “6( மேலது ப. எ- 12)

“ மரங்களின் சமாதி
உயிர்த்தெழுகின்றன
வானுயர் கட்டடங்கள்”7(மேலது ப. எ-12)

“சாலை விரிவாக்கம்

உயிர் தியாகிகளாய்
மரங்கள் "8( மேலது ப. எ-44)

மனிதனின் தேவைக்காக மரங்களை வெட்டி வீழ்த்தி வானுயர்ந்த கட்டடங்கள் எழுப்பப்படுகிறது. சாலை விரிவாக்கம் என்ற பெயரிலும் மரம் வெட்டும் ஓசை காடு முழுவதும் எதிரொலிக்கிறது. இதனால் பூமியே பயத்தில் நடுங்குவதாக குறிப்பிடப்படுகிறது.

பாலித்தீன் பயன்பாட்டின் கேடு:-

பாலித்தீன் என்பது செயற்கையான கரிம பிசின் ஆகும். இவை மண்ணில் சிதைவுறாது.மண்ணின் தாங்கு திறனைக் குறைத்து மண்ணில் உள்ள நுண்ணுயிரிகளை கொன்று விடுகிறது. மக்கள் பயன்படுத்தி தூக்கி எறியும் பாலித்தீன் பைகள் மண்ணில் தொப்பி போல் படர்ந்து விடுகின்றன.இதனால் மழைநீர் மண்ணின் ஆழத்திற்கு செல்ல முடியவில்லை. இவ்வாறு பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுகிறது.

" அண்டத்தில் பெருமழை
தஞ்சம் கோருகின்றன
மண்ணெங்கும் ஞெகிழிகள்"9( மேலது ப. எ-47)

" குப்பைத் தொட்டியில்
ஆக்கிரமிக்கும் உறைகள்
நடுநடுங்கும் நிலமகள் "10(மேலது ப. எ-50)

"அறுவை சிகிச்சை
அகற்றப்பட்டது
மான் வயிற்றில் பிளாஸ்டிக்"10(மேலது ப. எ-48)

பாலித்தீன் பைகள் மண்ணில் எளிதில் மட்காது. நாம் அன்றாடம் பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் பாலித்தீன் மண்ணில் போர்வை போல் படிந்து காணப்படுகிறது.அதனால் மழைநீர் மண்ணின் ஆழத்திற்கு செல்ல முடியவில்லை. குப்பைத் தொட்டியில் நாம் வீசும் நெகிழிகளால் மண் பாதிக்கப்படுகிறது. உணவு என்று நினைத்து சில விலங்குகள் அதனை சாப்பிடுவதால் விலங்குகளின் வயிற்றில் அவை ஒட்டிக் கொள்கிறது. இதனால் விலங்குகளின் உயிருக்குக் கூட ஆபத்து நேரிடும் அவல நிலையை கவிஞர் ஹைக்கூ கவிதை மூலம் தெளிவுபடுத்துகிறார்.

நீருக்கு நேர்ந்திடும் அவலம் :-

உயிர் வாழும் தாவர விலங்கு நுண்ணுயிரிகளுக்கு மிகவும் அவசியமானது நீராகும். நீரின்றி உலக உயிரினங்கள் உயிர் வாழ்தல் இயலாது. ஆனால் இன்று பல்வேறு காரணங்களால் நீரானது பயன்படுத்த இயலாத அளவிற்கு மாசுபட்டு வருகிறது.

" கடலில் எண்ணெய் கழிவு
காப்பீடு கோறும் கம்பெனி
செத்தொதுங்கும் மீன்கள் "11(மேலது, ப. எ-17)

" கூவம் நதியில்
கலக்கும் கழிவு
கற்பிழக்கும் கடல் "12(மேலது,ப. எண்-19)

"குடிநீர் குழாய்களில்
கலக்கும் மிருக முடிகள்
அருகே தோல் தொழிற்சாலை"13( மேலது, ப. எ-20)

நீர்நிலைகளில் கலக்கும் பல்வேறு கழிவுகளால் அங்கு வாழும் உயிரினங்கள் அழிவதுடன் பயன்படுத்த இயலாத அவல நிலை ஏற்படுகிறது.

பூச்சிக்கொல்லி மருந்துகளால் மண் மாசுறுதல்:-

ஐம்பூதங்களுள் நிலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நிலத்தில் உள்ள தாவரங்கள் மற்றும் உயிர் வாழினங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது மண்ணின் இயற்கைத் தன்மை குறைந்து பல இரசாயனங்கள் சேரும் போது மண் தன் இயல்புத் தன்மையை இழக்கின்றது.மண்ணின் தரம் சிறப்பாக இல்லையெனில் எந்த விளைச்சலையும் எதிர்பார்க்க முடியாது.

" பூச்சிக்கொல்லி மருந்து
அழுகலாகிறது
தாய் மண் வேர்"14 (மேலது ப. எ-55)

" பயந்து நடுங்குகின்றன
புழுப் பூச்சிகளோடு பறவைகள்
என்டே சல்போன் தெளிப்பு "15(மேலது ப. எ-59)

செயற்கை ரசாயன உரங்கள் மண்ணின் இயற்கைத் தன்மையைக் குறைத்து பல்வேறு நோயை ஏற்படுத்தும் நிலையை உருவாக்குகிறது. இயற்கையிலே மண்ணின் தரத்தை பாதுகாக்க மண்ணில் மண்புழு இருக்கும். இத்தகைய மனிதனின் செயலால் அவை அழிந்துவிடும்.காலப்போக்கில் பயிர்கள் வளர்வதற்கு தகுதியில்லாத உவர்மண்ணாக மாறிவிடும்.

**காற்று மாசுறுதல்:-**

மனித வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைகளில் காற்றும் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதிலும் சுகாதாரமான காற்று என்பது மனிதனுக்கு மிகவும் அவசியமாக உள்ளது. காற்று மாசுபட்டிருந்தால் உயிரினங்கள் சுவாசிக்கும் போது நுரையீரல் சேதமடைந்து பல்வேறு நோய்கள் ஏற்படுகிறது.

" வாகனப் புகை
மூர்சையாகும் காற்று
மக்கள் தொகைப் பெருக்கம்"16(மேலது ப. எ-27)

" காற்றிலாடும் பூமிப்பந்து
மாசுப்படுத்துகின்றன
தொழிற்சாலைப் புகை "17(மேலது, ப. எ-28)

மக்கள்தொகைப்பெருக்கத்தாலும்,வாகனங்களின் பெருக்கத்தாலும்,தொழிற்சாலைகளின் புகையினாலும் பெருமளவு காற்று மாசுப்படுத்தப்படுகிறது.

சுற்றுச்சூழல் நெருக்கடிகளை தடுக்கும் நடவடிக்கைகள்:-

நீர்,நிலம்,காற்று ஆகியவற்றின் பேரழிவைத் தடுக்கவும்,காடுகளையும் உயிரினங்களையும் காத்திடவும் பல்வேறு விழிப்புணர்வு முகாம்களை நடத்த வேண்டும்.மக்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை உணர்த்த வேண்டும். ஒவ்வொருவரும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கிய பங்காற்ற வேண்டும். பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக இதனைச் சேர்த்து மாணவர்களிடையே இதன் முக்கியத்துவத்தை செயல்படுத்த வேண்டும். உலக சுற்றுச்சூழல் நாளாகிய ஜூன் ஐந்தாம் நாளினை சிறப்பாகக் கொண்டாடுதல் வேண்டும். சுற்றுச்சூழல் பேராபத்துப் பற்றி விவாதம் செய்தல் மற்றும் அதனைச் சார்ந்த பல்வேறு போட்டிகள் நடத்த வேண்டும்.

**முடிவுரை :-**

சுற்றுச்சூழல் நெருக்கடி என்பது உலகளாவிய சவாலாகும். இதனைத் தடுக்க அரசு, கல்வி நிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்பட வேண்டும். இயற்கையைப் பாதுகாப்பது ஒவ்வொரு மனிதர்களின் கடமையாகும். சுற்றுச்சூழல் நெருக்கடிகள் குறித்த சிறப்பு இதழ்கள் வெளிவர செய்ய வேண்டும். அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

"ஆளுக்கொரு மரம் வளர்த்திடுவோம்
சுற்றுச்சூழல் நெருக்கடியைத் தவிர்த்திடுவோம்"

**மேற்கோள் நூல்கள் :-**

1. முனைவர் இரா. ச.சுகிர்தா பஸ்மத், சுற்றுச்சூழல் கல்வி,ப. எண்-3, ப.- 2020
2. திருமதி.பியூலா ரெய்னீஸ்,சுற்றுச்சூழல் கல்வி, ப. எ- 1.3, ப. ஆ- 2009
3. மேலது ப.எ- 2.10
4. கன்னி கோவில் ராஜா வன தேவதை ப. எ-8, ப.ஆ- 2010
5. மேலது ப. எ-30
6. மேலது ப. எ- 12
7. மேலது ப. எ-12
8. மேலது ப. எ-44
9. மேலது ப. எ-47
10. மேலது ப. எ-48
11. மேலது, ப. எ-17
12. மேலது,ப. எண்-19
13. மேலது, ப. எ-20
14. மேலது ப. எ-55
15. மேலது ப. எ-59
16. மேலது ப. எ-27, 17. மேலது, ப. எ-28

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 49.தேவாரத்தில் இயற்கை வழிபாட்டு மரபு

**முனைவர் சு.பொன்மணி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, குரு நானக் கல்லூரி, வேளச்சேரி, சென்னை -42.

9445168119 ponmani.s@gurunanakcollege.edu.in

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமய இலக்கியத்தின் பங்கு அளப்பரியது. இறைவனை வணங்கி பிறவிப்பயனை அடைவதை நோக்கமாகக் கொண்ட சைவ சமய இலக்கியம் இறைவனையும் இயற்கையையும் ஒன்றாகப் பார்த்தது. இயற்கையைப் படைத்தவனும் இயற்கையில் உறைபவனும் இறைவனே எனும் நிலையில் பரம்பொருளை வணங்கிப் போற்றுவதைத் தலையாயக் கடமையாகக் கொண்டு தொண்டாற்றியவர்கள் இறையருளாளர்கள் ஆவர்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பாடி வழிபட்டனர். அத்தலங்களைப் பாடுகையில் தம்மைச் சுற்றியுள்ள இயற்கையைச் சார்ந்து மனித வாழ்வியல் பிணைந்திருப்பதை உணர்ந்து இன்புற்றனர். இறைவனின் அருள்நலத்தை இயற்கை வாயிலாக அனுபவித்து உணர்ந்தமையைத் தாம் ஆக்கிய படைப்புகளில் இயல்பாகக் கூறியுள்ளனர். அவ்வகையில் இயற்கை வழிபாட்டு மரபுகளை மூவர் தேவாரத்தின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஐம்பூத வடிவினன்**

இறைவன் இயற்கைப் பொருட்களான நிலம் நீர் தீ வான் வளி ஆகிய பஞ்சபூத உருவினனாய் அட்டமூர்த்தியாய் விளங்குகிறான்.

**“மக்கள் தம்மைச் சூழ்ந்துள்ளனவாயும் தமக்குத் தேவையானவையாயும் இருக்கின்ற நெருப்பு, காற்று, மழை, ஞாயிறு முதலிய இயற்கைப் பொருட்களையே தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வந்தனர்”[1]** இதனை சங்க இலக்கியங்களில் சமய நோக்கு நூலால் விளங்கலாம்.

நிலம், நீர், தீ, விசும்பு, வளி, காடு, சோலை, மலை, கடல், தாவரங்கள், பறவைகள் மற்றும் விலங்குகள் முதலியவற்றில் இயற்கையின் வடிவாக இறைவன் உறைந்துள்ளமையைக் நாவுக்கரசரின் பாடலடிகளின் வழி அறியலாம்.

‘நீர் நிலம் தீ வெளிகாற்று ஆகி
நிற்பனவும் நடப்பனவும் ஆயினானை’ (நாவு.தே.1,பா. 860)

திருப்புள்ளிருக்குவேளூர் தலத்தின் இறைவன் ஐம்பூதங்களின் தன்மையாகக் கலந்து நிற்கின்றான். இத்தலத்து இறைவனை இத்தனை நாள்கள் போற்றி வணங்காமல் வாழ்நாளை வீணே கழித்துவிட்டதை நினைத்து வருந்துவதை,

‘மின்உருவை விண்ணகத்தில் ஒன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத்
தன்உருவின் மூன்றாய்த்தாழ் புனலின் நான்காய்த்
தரணிதலத்து அஞ்சாகி எஞ்சாத் தஞ்சம்
புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே’(நாவு.தே.1,பா.543)

என்னும் பாடலடிகள் மூலம் தம் அறியாமையை மனித வாழ்விற்கு திருநாவுக்கரசர் அறிவுரையாகக் கூறிச் சென்றுள்ளார்.

இயற்கையில் கலந்த இறைப்பேராற்றலைப் போற்றி வணங்கியதை,

**“பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி”**[2]

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் வெளிப்படுத்துவதைக் காணலாம். மேலும், ஐம்பூதங்களாய் மட்டுமின்றி ஞாயிறு, திங்கள் என்னும் இருசுடராகவும், இயமானனாகவும் எண்பொருட்களாய் நின்று உயிர்கள் வாழ வழி செய்த இறைவனைக் கண்டு போற்றியுள்ளனர்.

**“அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்**
**அவனே புவி புனல் காற்று ஆவான்- அவனே**
**இயமானனாய் அட்ட மூர்த்தியுமாய் ஞான”**[3]

என்னும் காரைக்காலம்மையாரின் பாடலடிகளும் மேற்கூறிய கருத்தை உணர்த்துகிறது.

ஒரு செயலைத் தொடங்குகையில் இயற்கையை அல்லது இறைவனை வணங்கி, அச்செயலைத் தொடங்கும் வழக்கம் உள்ளது. ஆகவே இயற்கையின் வடிவங்களான திங்கள், ஞாயிறு, மாமழை போன்றவற்றை வணங்கி வாழ்த்துப் பாடலாய் காப்பியத்தைத் தொடங்குகிறார் இளங்கோவடிகள்.

**“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்”**[4]

என்னும் சிலப்பதிகாரப் பாடலடிகள் இயற்கையை இறைவனாகக் கண்டு வணங்கியமைக்குச் சான்றாகக் கூறலாம்.

**பிறை வழிபாடு**

சங்க காலத்திலிருந்து இன்று வரை மூன்றாம் பிறையை வணங்கும் வழக்கம் உள்ளது. மாலை நேரத்தில் காண்பதற்குரிய பிறையைப் பெண்கள் காத்திருந்து தொழுது வணங்கினர். இதனை

**“ஒள்இழை மகளிர் உயர்பிறை தொழூஉம்**
**புல்லென மாலை”**[5]
**“குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறை”**[6]

போன்ற சங்க இலக்கியப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இறைவனின் திருமுடியில் பிறை வீற்றிருந்து, உலகிற்குக் குளிர்ச்சியையும் ஒளியையும் அளிக்கின்றது. இம்மூன்றாம் பிறையை வணங்கினால் இறையருள் பெறலாம் என்பது மக்களின் நம்பிக்கையாக உள்ளதை அறிந்து கொள்ளலாம்.

**மலை வழிபாடு**

மலை வடிவான இறைவனை (கிரிவலம்) வழிபடுவது அன்று முதல் இன்று வரை உள்ளமையை அறியலாம். அருளாளர்கள் இறைவனை மலையே, அணி அண்ணாமலை உளானே, பவளக்குன்றே, குலவரையும், கனகமலையே, வரைபற்றி, வெள்ளி மலை, பொதிகை மலை, மால்வரை என்று பலவாறு போற்றி வணங்குவதைத் தேவாரத்தால் அறியலாம்.

இறைவனின் திருவடியானது மலை போல் உள்ளமையை, இறைவனைக் காணும் போது அவனிடமுள்ள பொருட்கள் மலைகளை நினைவூட்டுகின்றன. மலையில் மரங்கள், விலங்குகள்,

பாம்பு முதலியன வாழும். உயர்ந்த மலைமுகட்டில் இரவில் சந்திரன் தோன்றும், மென்மையான மான்கள் தாவும், ஒருபுறம் வன்மையான புலி பாயும், மறுபக்கம் அருவி நீர் வீழும். இத்தகையவற்றை இறைவனிடம் ஒருசேரக் காணமுடிகிறது.

**“பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்**
**தாம்பயின்று தாழ்அருள் தூங்குதலால்- ஆம்பொன்**
**உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுமலால் கோலத்**
**திருவடிவின் மேய சிலம்பு”[7]**

காரைக்காலம்மையார் இறைவனின் திருக்கோலத்தையும் மலையின் தோற்றத்தையும் ஒப்பிட்டுப் பாடியுள்ளமையை இப்பாடலடிகள் சுட்டிக் காட்டுகின்றன. இறையருளாளர்களும் சான்றோர்களும் இயற்கையை இறையாற்றலுக்கு ஒப்பக் கருதி போற்றி வணங்கியமையை மேற்பகுதி தெளிவாக உணர்த்துகிறது.

**இறைவழிபாட்டில் மலர்கள்**

இறை வழிபாட்டில் மலர்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. மலர் வழிபாடு குறித்தும், வழிபாட்டிற்குரிய மலர் எத்தன்மையதாய் இருத்தல் வேண்டும் என்பது குறித்தும் சமய இலக்கியங்கள் பல பாடல்களில் தெளிவுறுத்துகின்றன. தாமரை, குவளை, செங்கழுநீர், நெய்தல், பாக்குமரப்பூ, மாதவி, மந்தாரை, தும்பை, வகுளம், சுரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகிய மலர்களை அன்பால் தூவி இறைவனை வழிபடுதல் சிறப்பு என்பதைக் கீழ்க்காணும் திருமூலரின் பாடலால் அறிந்து கொள்ளலாம்.

**“அம்புயம் நீலம் கழுநீர் அணிநெய்தல்**
**தும்பை வகுளம் சுரபுன்னை மல்லிகை**
**செண்பகம் பாதிரி செவ்விந்தி சாத்திடே”[8]**

சாக்கிய நாயனார் நாளும் மறவாமல் ஓடிவந்து எறிந்து வழிபட்ட கல்லையே புதுமலராக இறைவன் ஏற்றுக்கொண்டதை,

‘புத்தன் மறவாது எறிசல்லி புதுமலர் ஆக்கினான் காண்’ (நாவு.தே.2, பா. 1654) என்னும் ஆறாம் திருமுறை உணர்த்துகிறது.

இறை வழிபாட்டிற்குப் பலவகையான மலர்களை மக்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து பயன்படுத்தியுள்ளனர்.

**எங்கும் நிறைந்த இறைவன்**

இறையன்பர்கள் இறைவனை எவ்வாறு நினைத்து வழிபாடு செய்கிறார்களோ அவ்வாறே வெளிப்பட்டு அருளும் தன்மையனாய் இறைவன் காட்சியளிப்பான். மேலும் கோயிலுக்குள் திருவடிவாய், வாய் கூறும் மந்திரமாய் எங்கும் நிறைந்திருப்பவன் இறைவன். இதனை,

**“திருக்கோயி லுள்ளயிருக்கும் திருமேனி தன்னைச்**
**சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன்- அங்கே**
**ஒழுகுவது போல் வெளிப்பட்டருளுவான் அன்பர்க்கே”[9]**

என்னும் சிவஞான சித்தியார் சுபக்கம் பாடலின் வழித் தெளியலாம்.

அவ்வகையில் அடியார்கள் இறைவனை எவ்வடிவில் எக்கோலத்தில் வழிபட நினைக்கிறார்களோ, அவ்வடிவில் அக்கோலத்தில் வந்து அருள் புரிவான் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

**மனதால் வழிபடுதல்**

இறைவன் வீற்றிருக்கும் கோயில் திறந்திருப்பினும் மூடியிருப்பினும் அதைப் பற்றி கவலை கொள்ள வேண்டாம். எந்நேரத்திலும் எக்காலத்திலும் இறைவனை மனதால் நினைத்து வணங்கி இன்புறலாம்.

திருநனிப்பள்ளி இறைவனைக் காலை,மாலை எனக் காலநேரம் பாராது தன் மனத்தில் வைத்துத் தியானித்து காலத்தைக் கழிக்கும் அடியார்கள் சிவலோகம் சென்று சேர்வர் (பா.495) என்று சுந்தரர் தம் ஏழாம் திருமுறையில் அறிவுறுத்திக் கூறியுள்ளார்.

காலை மாலை இருவேளையும் இறைவனின் திருவடிகளை நினைத்து வணங்கும் அடியார்களின் மனதைக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளுபவன் இறைவன் (நாவு.தே.2,பா.1252) என்பதைத் திருநாவுக்கரசர் நான்காம் திருமுறையில் கூறியுள்ளமையை இங்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

**விளைந்த பொருட்களை இறைவனுக்குப் படைத்தல்**

இறைவனுக்கு நன்றி செலுத்தும் முறையில் தங்கள் நிலங்களில் விளைந்த நெல், தினை முதலிய உணவுப்பொருட்களை வழிபட்டு பின்னர் அதனைப் பயன்படுத்தியுள்ளனர்.

**“புனத்தினை கிள்ளிப் புதுவவிக்காட்டி நின் பொன்னடி வாழ்கவென்று**
**இனக்குறவர் புதியதுண்ணும் திருமாலிருஞ்சோலை”**[10]

எனும் பாடலடிகள் இறைவழிபாட்டில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுகின்றன.

**இறைவழிபாட்டில் திருமஞ்சனம்**

இறைவழிபாட்டில் திருநீராட்டு சிறப்பு வாய்ந்தது. இது திருமஞ்சனம் எனும் பெயரால் சுட்டப்படுகிறது. இறைவனின் மனம் குளிரும் வகையில் பல்வேறு பொருட்களைக் கொண்டு திருமஞ்சனம் செய்யப்படுகிறது. இதனை விரும்பி ஏற்றுக்கொள்பவன் இறைவன் என்பது அருளாளர்கள் கருத்தாக உள்ளது.

**“சேற்றில் பிறந்திடும் கமலமலர் கடவுளது திருமுடியின் மேலிருக்கும்**
**திகழ்சிப்பி யுடலில் சனித்த முத்தரசரது தேகத்தின் மேலிருக்கும்**
**போற்றியிடு பூச்சியின் வாயின் நூல் பட்டென்று பூசைக்கு நேசமாகும்**
**புகலரிய வண்டெச்சி லான தேன் தேவர்கொள் புனித அபிடேகமாகும்”**[11]

மிகுதியான இயற்கை சார்ந்த பொருட்களைக் கொண்டு இறைவனுக்குத் திருநீராட்டி வழிபடுவதைத் தேவாரத்தில் காணமுடிகிறது. சேற்றில் முளைக்கும் தாமரை மலர், சிப்பியில் உருவான முத்து, தேனீயின் வாய்ப்பட்டு எச்சிலான தேன் முதலிய பூசைக்கு உகந்த புனிதமான பொருள்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

**தலமரங்கள்**

ஒவ்வொரு தலத்திற்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மரங்கள் தலமரங்களாக உள்ளன. தலத்திற்கென்று புல், செடி, கொடி மற்றும் மரம் போன்ற தாவர இனங்கள் வகைப்படுத்தப்பட்டு தலமரம் என்னும் பொதுப்பெயரால் அழைக்கப் படுவதைக் காணலாம்.

மக்கள் இறைவனை மரத்தடியில் வணங்கி வந்தனர். காலத்திற்கு ஏற்றவாறு கோயில்கள் எழுப்பிய பின்னர் அம்மரங்களின் புனிதம், பயன் கருதி அவற்றைத் தலமரங்களாகப் போற்றிப் பாதுகாத்து வழிபட்டனர். தலமரங்கள் மக்களின் நம்பிக்கை மற்றும் பண்பாட்டுடன் தொடர்புடையது ஆகும்.

> "ஒவ்வொரு தலத்திற்கும் ஒவ்வொரு மரம் புனிதமாகக் கருதப்படுகிறது. ஒருகாலத்தில் இவ்வகை மரம் அல்லது செடிகள் மிகுதியாக இருந்த இடங்கள் பல இம்மரப் பெயராலேயே வழங்கப் பெற்றதை அறிகிறோம். பின்பு அவையே தலமரமாக வைத்து வழிபடவும், இறைவன் அம்மரம், செடியின் அருகே இருந்து அருளுகிறான் என்ற மரபும் தோன்றலாயிற்று"

என்பதைத் தமிழில் தலபுராணங்கள் (வே.இரா.மாதவன்., தமிழில் தலபுராணங்கள், ப.71.)

என்னும் நூலின் வழி அறியமுடிகிறது.

**இலக்கியங்களில் இறைவனும் மரமும்**

பழந்தமிழர்கள் மரங்களில் இறைவன் உறைவதாக நம்பிக்கை கொண்டிருந்ததை,

"கடவுள் மரத்த முள்மிடை"

எனும் அகநானூற்றுப் பாடலடி (பா.அ.12, ப.318.)பதிவு செய்துள்ளமையை அறிய முடிகிறது.அத்துடன் இயற்கையை வணங்கிய மக்கள், மரங்களில் உறையும் இறைவனுக்கு அன்றாடம் வழிபாடு நடத்தியதை,

"சுரை இவர் பொதியில் அம் குடிச் சீறூர்
நாட் பலி மறந்த நரைக் கண் இட்டிகை
புரிசை மூழ்கிய பொரி அரை ஆலத்து"

என்னும் பாடலடிகள் (அகநானூறு பா.அ. 65-70.) உணர்ந்து கொள்ளலாம்.

கல்லால மரநிழலில் வீற்றிருக்கும் இறைவனை வழிபடுபவர்களுக்கு நன்மையே கிடைக்குமென்பதை, திருஞானசம்பந்தரின் 'ஆலநீழல் உகந்தது இருக்கையே' (ஞான.தே.3,பா.2849) என்னும் பாடலடி குறிப்பிடத்தக்கது.

**இறைவன் உறையும் மரம்**

காஞ்சி ஏகாம்பரேஸ்வரர், மதுரை மீனாட்சியம்மன், கடலூர் திருப்பாதிரிப்புலியூர் முதலிய தலங்களில் காய்ந்துப் பட்டுப் போன தலமரங்களின் அடிப்பாகம் செப்பு அல்லது வெள்ளிக்கவசம் சாத்திய நிலையில் பாதுகாக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. முன்னோர்கள் வழிபட்ட அம்மரங்களை முன்னிறுத்தி இன்றளவும் மக்கள் நம்பிக்கையுடன் வழிபடுகின்றனர்.

இயற்கையான மரத்தோடு இறைவன் வீற்றிருப்பதை,

'தெய்வத் தருவளரும் பொழில்புறவம்', (ஞான.தே.1,பா.730)

என்னும் பாடலடி தெளிவாகக் காட்டுகிறது.

இயற்கையில் இறையனுபவத்தைக் கண்டுணர்ந்தவர்கள், உலகில் எதைக் கண்ணுற்றாலும் இறைவனைக் கண்டதாகவே உணர்வர். இதனை,

“காக்கைச் சிறகினிலே நந்தலாலா
நின்றன் கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்கள் எல்லாம் நந்தலாலா
நின்றன் பச்சைநிறம் தோன்றுதையே நந்தலாலா” என்னும் பாரதியார் கவிதையின் (பக்.56.)வழி தெளியலாம்.

**தொகுப்புரை**

மனித வாழ்வு மேம்பட ஊன்றுகோலாய் அமைவது இறைவழிபாடு ஆகும். தேவாரமூவர் இயற்கையில் இறைவடிவைக் கண்டு வணங்கினர். இயற்கையை இறையாற்றலுக்கு ஒப்பக்கருதி வழிபட்டதைத் தம் பதிகங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். இறைவழிபாடு அறியாமையை நீக்கி உயிர்களைப் பக்குவப்படுத்துகிறது. நன்னெறி காட்டி துன்பத்தை நீக்கி அரவணைத்து ஆற்றுப்படுத்தும் ஆற்றல்மிக்கது. பொருட்கள் பலவற்றுடன் கலந்தும் மறைந்தும் நின்று அருளும் இறைத்தன்மை மற்றும் உள்ளத்து உணர்வினுள் கலந்த அனுபவத்தை தேவாரம் பதிகங்கள் வழி உணர்ந்து கொள்ளலாம். இறையருளாளர்கள் பல்வேறு சிவத்தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கிப் போற்றியமை, மனித மனங்களைப் பக்குவப்படுத்துவதில் தலவழிபாடு சிறந்தது என்பதையும் அறிய முடிந்தது.

**அடிக்குறிப்புகள்**

1.கு.சுந்தரமூர்த்தி., சங்க இலக்கியங்களில் சமய நோக்கு., ப.1.

2.கா.சுப்பிரமணிய பிள்ளை., ச.தண்டபாணி தேசிகர்., எட்டாம் திருமுறை., பா.அ.135-140, ப.59.

3. ந.ஆனந்தி., பதினொன்றாந் திருமுறை 1., பா.64.

4. புலியூர்க்கேசிகன்., சிலப்பதிகாரம், பா.அ.1-7.

5. புலியூர்க்கேசிகன்., அகநானூறு பா.239, பா.அ.9-10.

6.பா.சரவணன்., மதுரைக்காஞ்சி., பா.193.

7. ந. ஆனந்தி., பதினொன்றாந்திருமுறை 1., பா.67.

8.புலவர் அடியன் மணிவாசகன்., திருமந்திரம் 1., பா.1003.

9. சி.சு.மணி., சிவஞானசித்தியார் சுபக்கம், பா.324, ப.169.

10. நாலாயிர திவ்ய பிரபந்தம்., பா.455, ப.204.

11. திருநாவுக்கரசு முதலியார்., குமரேச சதகம்.,பா.59.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்**

திருநாவுக்கரசர் தேவாரம் பகுதி1,2,3.

திருஞானசம்பந்தர் தேவாரம் பகுதி1,2,3.

பதினொன்றாந்திருமுறை -1.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 50.சிவப்புப் பட்டியல் நூலில் காணலாகும் சூழலியல் பதிவுகள்

**முனைவர் ஞா.எலிசபத் ராணி,**

உதவிப்பேராசிரியர். தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி **- 620 002**

Orcid id - https://orcid.org/0009-0004-6348-2534

சூழல் அமைப்பின் வளத்தை வெளிப்படுத்தும் உயிரினங்கள் அழிக்கப்படுவது ஒட்டுமொத்த சூழல் அமைப்பின் அழிவையே வெளிகொணர்கிறது. அவற்றின் வாழிடங்கள் காப்பாற்றப்பட்டால்தான் மண்வளமும், தண்ணீரும் பாதுகாக்கப்பட வழி கிடைக்கும். மனிதன் உயிர் வாழ எல்லா உயிரினங்கள் கொண்ட வலைப் பின்னல் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

இயற்கைக்குக் கேடு விளைவிக்கும் கூறுகளாக வேட்டையாடப்படுதலையும், வணிக நோக்கங்களையும் மட்டுமே கணக்கில் கொள்ள முடியாது. வளர்நிலைக்காக என்ற வகையில் எடுக்கப்படும் நடவடிக்கைகள், காட்டில் ஆதிகாலம் தொட்டு வாழும் பழங்குடிகள் அந்நியப்படுத்தப்படவோ, துரத்தப்படவோ குறித்த நடவடிக்கைகள் அது மக்களின் தேவை அதிகரிப்பு, நவீன வாழ்க்கை முறை, அறம் சார்ந்தக் கருத்தாக்கங்களின் மீதான அக்கறையின்மை, மக்கள் இடம் பெயரும் காரணங்கள் குறித்த பிரச்சினைகள் என்று பலவும் சிரமங்களை உருவாக்குகின்றன. மனிதனின் பேராற்றலை இயற்கையைக் கட்டுப்படுத்தி, ஆட்கொள்ள. ஈடுபடுத்தும்போது இந்த உயிரினங்கள் மரணத்தை சந்திக்க வேண்டியிருக்கிறது. விலங்கினங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையேயுள்ள உறவின் மகத்துவத்தையும், அழிந்து வரும் உயிரினங்களின் சூழல் தன்மைகளையும் ஆய்வதையே இக்கட்டுரை மையமாக கொண்டிலங்குகின்றது.

**கலைச்சொற்கள்:**

Abiotic Components - உயிரற்ற கூறுகள்

Ecology **- சூழலியல்**

Environmental Pollution - சுற்றுச் சூழல் மாசுபாடு

Biotic Components - உயிர்க்கூறுகள்

**முன்னுரை:**

புவி என்பது நீர், நிலம், காற்று, வானம், ஆகியவற்றின் ஒட்டுமொத்த உருவமைப்பு ஆகும். இவற்றில் ஏதேனும் ஒன்றில் மாற்றம் ஏற்பட்டாலும் அம்மாற்றம் ஏனைய அமைப்புகளின் சமநிலையை பாதிக்கும். சுற்றுச்சூழல் எப்பொழுதும் மாறி வருகிறது. இவ்வாறு மாறிவரும் சுற்றுச்சூழல் பிற உயிரினங்களுக்கு மட்டுமின்றி மனிதனையும் பாதிக்கிறது.நாகரிகம் தோன்றிய காலத்திற்கு முன்னரே மனிதன் சுற்றுச்சூழலில் குறுக்கிடத் தொடங்கினான். உதாரணமாக வாழ்விடங்களுக் காகத் தேவைப்படும் கட்டைகள் தயாரிக்க மரங்களை வெட்டிக் காடுகளைப் பாழாக்கினான். இறைச்சிக்காக விலங்குகளைக் கொன்றும் தற்காப்பிற்காக கொடிய விலங்கினங்களை அழித்தும் வந்தான். நாளடைவில் தோன்றிய சிறு தொழிற்சாலைகளிலிருந்து

வெளியேறிய வேதியக் கழிவுகளை ஆறுகளில் கலக்கச் செய்து அதை மாசுபடுத்தினான். இதன் காரணமாக தூய ஆற்றுநீர் தீயதாக மாறிவிட்டது. அதிக அளவு மக்கட்தொகை முற்காலத்தில் இல்லாததால் சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படவில்லை. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் அறிவியல் மற்றும் தொழிற் புரட்சியினால் சுற்றுச்சூழல் மீது மனிதனால் அளவற்ற தாக்கத்தை ஏற்படுத்தினான். இத்தாக்கம் சுற்றுச்சூழலின் சமநிலையை முற்றிலும் நிலைகுலைய வைக்கும் என்பதை மனிதன் அறிய தவறிவிட்டான். பெருகி வரும் தொழிற்சாலை, அதிவேகப் போக்குவரத்துக்கள், நகரியப் பெருக்கம் ஆகியவை சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன அழிந்து வரும் உயிரினங்களின் நிலை பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**சுற்றுச்சூழல் கட்டமைப்பு:**

இயற்கை வளமும் சுற்றுச்சூழலும் மனிதகுல வளர்ச்சியின் கூறுகளாக அமைந்துள்ளன. ஒரு வளர்ச்சிக்கான நடவடிக்கையும் அது செயல்படும் சுற்றுச்சூழலைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாவிடில் நீண்ட நாட்களுக்கு நீடிக்க முடியாத ஒரு நிலைக்கே நம்மை இட்டுச் செல்லும் எனலாம். இந்தியாவில் வளர்ச்சி யின்மையால் மட்டும் நாம் துன்பப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியின் விளைவாலும் நாம் பாதிக்கப்படுகின்றோம்.

**"சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள சமூக, பொருளாதார, உயிரிய, இயற்பிய,வேதிய காரணிகளின் கூட்டாகும்"**

சுற்றுச்சூழல் கல்வி ,ப.1

என C.C.பார்க் குறிப்பிடுகிறார்.

பல ஆண்டுகளாகவே மனிதன் தனது சுற்றுச்சூழலைத் தவறாகக் கையாண்டு அதற்குப் பெரும் சேதத்தை விளைவித்துச் சமூக வாழ்க்கையையும் பாழ்படுத்தி வருகின்றான். இதனால் சுற்றுச்சூழல் என்பது கடந்த பல ஆண்டுகளாக மிகுந்த கவலை தரத்தக்கதாகவும் ஆராய்ச்சிக்குரியதாகவும் இருந்துவருகிறது. குறிப்பாகத் தொழில்நுட்பம் வளர்ச்சிப் பெற்றுவரும் இன்றைய காலங்களில், சுற்றுச்சூழல் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் தராத தகவல் தொழில்நுட்ப சாதனங்களே இல்லை என்னும் அளவிற்குச் சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகரித்து உள்ளது. சுற்றுச்சூழலோடு நெருங்கிய தொடர்பு உடையது சூழ்நிலை இயலாகும். உயிரினங்கள், தங்களைச் சூழ்ந்துள்ள இயற்பியல் மற்றும் உயிரியல் காரணிகளோடு பிரிக்க இயலாத மிக நெருங்கிய உறவு கொண்டு வாழ்கின்றன. இவ்வுறவினை விளக்குவதே சூழ்நிலையியல் என்பதாகும்.

**சுற்றுச்சூழல் மாசுபாடு:**

நாம் வாழும் புவி, சுவாசிக்கும் காற்று, பயன்படுத்தும் நீர், தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் அனைத்தையும் சுற்றுச்சூழல் என்கிறோம். மனிதன் தனது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றையும் பிற தேவைகளையும் பூர்த்தி செய்ய இயற்கையைச் சார்ந்து வாழுகின்றான்.தொன்று தொட்டு மனிதனின் செயல்பாட்டால் புவியின் சுற்றுச் சூழலில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

**“குறிப்பிட்ட இடத்தில், காலத்தில் காணப்படும் சுற்றுப்புற நிலைமைகளின் கூட்டே சுற்றுச் சூழலாகும்” (C.C.பார்க் - 1980)**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

சுற்றுச்சூழல் கல்வி ,ப.1.

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் அறிவியல் வளர்ச்சியால் பெருகிய வேளாண்மை, தொழிற்சாலைகள், நகரங்கள், போக்குவரத்து ஆகியவற்றால் சுற்றுச் சூழலின் முக்கிய அங்கங்களாகிய நிலம்,நீர்,காற்று ஆகியவை பாதிக்கப்பட்டன. இவ்வாறு சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதை சுற்றுச் சூழல் மாசுபாடு (Environmental Pollution) என்கிறோம்.

**சூழலியல் – பொருள்:**

**"Ecology"** என்ற சொல் கிரேக்க மொழியின் Oikos (வீடு அல்லது வாழிடம்) மற்றும் Logos (ஆய்வு) என்ற சொற்களிலிருந்து தோன்றியது. 1866-ஆம் ஆண்டு ஜெர்மானிய உயிரியல் அறிஞர் எர்ன்ஸ்ட் ஹெக்கல் (Ernst Haeckel) இச்சொல்லை அறிவியல் உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

**"உயிரினங்களுக்கும் அவற்றின் சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையே நிகழும் பரஸ்பர உறவுகளை ஆராயும் அறிவியல் துறையே சூழலியல்."**

**Eugene P. Odum, Fundamentals of Ecology, 1971.**

**சூழலியலின் கூறுகள்:**

- உயிர்க்கூறுகள் (Biotic Components)
- மனிதர்கள்
- விலங்குகள்
- தாவரங்கள்
- நுண்ணுயிர்கள்

**“சுற்றுச்சூழல் என்பது புவியின் இயற்பிய அங்கங்களின் பிரதிநிதியாகவும் மனிதனின் செயல்பாட்டால் மாறுதலுக்குட்படக் கூடியதாகவும் உள்ளது”**

**பேராசிரியர்குழு,சுற்றுச்சூழல்கல்வி ,ப.1**

என C.C.பார்க் குறிப்பிடுகிறார்.

**உயிரற்ற கூறுகள் (Abiotic Components)**

- நிலம்
- நீர்
- காற்று
- வெப்பநிலை
- சூரிய ஒளி
- மழை

இந்த இரு கூறுகளும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குகின்றன.

**தமிழரின் சூழலியல் அறிவு:**

தமிழர்கள் இயற்கையை வெறும் வளமாகக் கருதவில்லை; வாழ்வின் ஓர் அங்கமாகவே கருதினர்.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்.**"

**மா மோகன், தொல்காப்பியம் ஓர் எளிய அறிமுகம். நூற் எண்-5**

இந்நூற்பா குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களின் இயற்கைச் சூழலையும், அவற்றுடன் தொடர்புடைய வாழ்வியலையும் எடுத்துரைக்கிறது.

**சிவப்புப் பட்டியல் அறிமுகம்:**

உலகில் வாழும் அனைத்து உயிரினங்களின் வாழ்வாதாரமாக இயற்கை விளங்குகிறது. மனிதன் இயற்கையின் ஒரு பகுதியாகவே தோன்றி, அதன் வளங்களைப் பயன்படுத்தி நாகரிகத்தை உருவாக்கினான். ஆனால் அறிவியல் வளர்ச்சி, தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல், மக்கள் தொகைப் பெருக்கம் போன்ற காரணங்களால் இயற்கையின் சமநிலை பாதிக்கப்பட்டு, உலகளவில் சுற்றுச்சூழல் நெருக்கடி உருவாகியுள்ளது. இந்நிலையில் உயிரினங்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான உறவை ஆராயும் சூழலியல் (Ecology) என்ற துறை மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது.

**“இந்தியாவிலுள்ள தாவர இனங்களில் 10 சதவீதத்திற்கும் மேற்பட்டவை அழிந்து மறையும் நிலையில் உள்ளன. ஒரு காலத்தில் இந்தியாவெங்கும் காணப்பட்ட யானைகள் மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் முற்றிலும் மறைந்துவிட்டன.**”

**பேராசிரியர் குழு,சுற்றுச்சூழல் கல்வி ,ப.119**

உலகளவில் அழிந்துவரும் உயிரினங்களைப் பற்றிய கவலையோடும் கவனத்தோடும் பதிவு செய்கிறது இந்நூல், உலகளவில் புலிகளின் எண்ணிக்கையும் சிங்கங்களின் எண்ணிக்கையும் இன்னபிற அரிய உயிரினங்களும் குறைந்துவருவதைக் கூறும் கணக்கீடுகளைக் கருத்தில் கொண்டு அழிந்துவரும் அரிய விலங்குகளைப் பற்றிய பட்டியலை இந்நூல் கவனப்படுத்துகிறது. அதுவே சிவப்புப்பட்டியல். விலங்கினங்களுக்கும் மனிதர்களுக்குமான உறவை அதன் நேர்த்தியான அர்த்தங்களுடன் உணர்த்துகிறது. அழிந்துவரும் உயிரினங்களையும் அதன் சூழல்தன்மையையும் விரிவாக இக்கட்டுரை ஆராய்கிறது.

**அணில்:**

அணில்கள் கொரித்து உண்ணும் வகையைச் சார்ந்தவை. உலகில் 250 வகையான அணில்கள் உள்ளன. 40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே இவை வாழ்ந்ததற்குப் பதிவுகள் உள்ளன. பழைய அணில் வகைகள், பறக்கும் அணில் வகை களாகத் தோற்றம் கொள்கின்றன.

அணிலைத் தொடத் தொட அதன் மிருதுத் தன்மையை நாம் உணரலாம், மிக மிருதுவான உடல். அடர்த்தியான வால். பெரிய உருண்டைக் கண்கள். இவையே அணிலின் அடையாளம்இவை தாவர உண்ணிகள். ஆனால் சிறுபூச்சிகள், சிறிய பாம்புகள் முட்டைகள், வண்டுகள் போன்றவற்றை உண்ணும். தன் முன்பற்களின் உதவியால் உணவுப் பொருட்களைக் கொரிக்கும். அந்த முன்பற்கள் வாழ்நாள் முழுவதும் வளரும் இயல்புடையவை.ஆண்டிற்கு அதிகபட்சமாய் இரண்டுமுறை குட்டிபோடும். பார்வைக்கு ஆண் அணில், பெண் அணில் வித்தியாசம் தென் படாது. கூடி வாழாது. தனிமையாக இருக்கும் இயல்புடையவை. இவை .ஆல், அரசு,

“**காட்டு மரங்கள் வளர சிறு அணில்களின் எச்சங்களே காரணம் என ஆய்வுகள் சொல்கின்றன.**”

**சுப்ரபாரதிமணியன், சிவப்புப்பட்டியல்,ப.1**

ஜைனர்கள் அணிலை விரும்பி வளர்ப்பர். ராமனுக்கு இலங்கைப் பாலம் கட்ட அணில் உதவியது கதையாக உள்ளது.படுவதால் 'ருசிகண்ட பூனைகள்' வெவ்வேறு முகமூடிகளுடன் திரிந்து அணிலை வேட்டையாடி விடுகின்றன. மருந்துப் பொருட்கள், நுகர்வுப் பொருட்களின் தயாரிப்பிற்கு மூலாதார மான அணில்கள் வணிகம் சார்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன.

**ஆசிய சிங்கம்:**

அழிந்து வரும் இந்த ஆசிய சிங்க வகை குஜராத்தின் கிர் பகுதி பூங்காவில் மட்டுமே உள்ளன. அந்த சமயத்தில் சிங்கம் தவிர்த்த பல விலங்குகள் வெள்ளத்தில் நீந்தியபடி பக்கத்து கிராமங்களுக்கு வந்து சேர்ந்ததை வனத்துறையினர் மீட்டிருக்கிறார்கள்.

"**உலக அளவில் தற்போது 400 ஆசிய சிங்கங்களே உள்ளன. இவை குறைந்தும் வருகின்றன**."

**சுப்ரபாரதிமணியன், சிவப்புப்பட்டியல்,ப.19**

தந்திரத்தால் பிற விலங்குகளை வீழ்த்தி விடும் மிருகமாக ஆசிய சிங்கம் இருந்தாலும் அதன் அழிவிற்கு பிற விலங்குகளும் காரணங்களாக இருக்கின்றன. இப்படி அழிந்து வரும் ஆசிய சிங்கத்தைக் காப்பாற்றும் பொருட்டு அது குறித்த கவனம் கொள்ளப்பட வேண்டும்.மகாபலிபுரத்தில் உள்ள அர்ஜுனன் தவம் சிற்பத்தில் ஒரு பெண் சிங்கம் இரண்டு குட்டிகளுக்குப் பால் கொடுப்பது போல் இருப்பதையும் அது ஆசிய சிங்கமாக இருக்கும் என்று தியோடர் பாஸ்கரன் குறிப்பிட்டு ஆசிய சிங்கம் தென்னிந்தியாவில் இருந்தது என்றும் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆசிய விலங்கின் வாழுமிடத்தைக் காப்பதும், வேட்டையாடுவதற்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதும் இருக்கும் எண்ணிக்கையைக் காப்பாற்றும்.

**சோலை மந்தி:**

சோலை மந்தியின் வால் சிங்கத்தின் வாலை ஒத்திருப்பதால் பலரால் சிங்கவால் குரங்கு என்றழைக்கப்படுகிறது. **'நரை முசு ஊகம்'** என்று சங்க இலக்கியங்களில் அழைக்கப்படும் இதற்கு கருங்குரங்கு என்ற பெயர் சாதாரணமாகவே வழங்கப் படுகிறது. வாலின் நுனிப்பகுதியில் கருப்பு நிறத்திலான ஒரு மயிர்க் கொத்து வசீகரமாகக் காணப்படும். இது ஆண் மந்தி களுக்கு மிகுந்த அடர்த்தியாக இருக்கும்.மரக்கிளைகளிலேயே பெரும்பாலும் பொழுதைப் போக்கும் இவை மரமேறுவதில் திறமை கொண்டவை. மரக்கிளைகளில் இவை காணப்படுவதன் காரணம் அவை கூச்சஉணர்வு கொண்டவை. எனவே மனிதர்களைத் தவிர்த்தே வாழ விரும்புவதால் மனிதர்களைக் கண்டால் அஞ்சி ஓடும். ஆனால் தங்களுக்குள் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்ளும். பத்து முதல் இருபது வரை சிறு குழுக்களாக வாழும். ஒரு குழுவில் பெண் மந்திகள் அதிகமாக இருக்கும். சுமார் 20 ஆண்டுகள் வாழும் இவை ஆறுமாத பேறு காலத்தில் உலகைப் பார்க்கின்றன. ஒரு வருடம் வரை தாய் மந்தியின் அரவணைப்பிலேயே இருக்கும்.

வெப்பமண்டல மழைக்காடுகளின் மரக்கிளைகளில் வாழும் வாழ்க்கையை இவை பெரும்பாலும் பின்பற்றுகின்றன. இவை விரும்பி உண்ணும் பழவகைகளை பகல் நேரத்தில் பெரும்பாலும் தேடுகின்றன.

**சோலை மந்திகள் தமிழ்நாடு, கேரளா, கர்நாடக மாநில பசுமை மாறாக் காடுகளில் காணப்படுகின்றன. 3000 முதல் 3500 வரை இவை இருக்கலாம் என கணிக்கப்படுகிறது.**

**சுப்ரபாரதிமணியன்,சிவப்புப்பட்டியல்,ப.31**

மின் உற்பத்திக் பாதிக்கப்பட்டு சோலை மந்திகள் எண்ணிக்கை குறைந்துவிட்டன.

**செந்நாய்:**

பாலை நிலத்திற்குரிய கருப்பொருட்களில் ஒன்றான செந்நாய் வேட்டையாடிய பின் மணலைக் கீறி தண்ணீர் குடித்து விட்டுப் போவது பற்றிய குறிப்பு குறுந்தொகையில் காணப் படுகிறது. குறுந்தொகை (141.6), கலித்தொகை (83.1) பாடல் களில் செந்நாய் பற்றிக் குறிப்புகள் காணப்படுகின்றன.இதனை ஆசியக் காட்டு நாய், இந்தியக் காட்டுநாய், சாதாரண காட்டு நாய் என்ற பெயர்களிலும் அழைக்கிறார்கள். 10 முதல் 20 கிலோ வரை எடையும் 1 மீட்டர் நீளமும் 1/2 மீட்டர் உயரமும் கொண்டது. ஆண், பெண் செந்நாய்களை உருவத்தில் அடையாளம் காணுவது சிரமம் என்பது போல் இருக்கும். நாய்க்குடும்பத்தில் தனித்தன்மை வாய்ந்த பல் அமைப்பை இவை கொண்டிருக்கும். மண்டை ஓடு அகலமான குவிமாட உருவிலும், முகவாய் குறுகியதாகவும், முக்கோண வடிவிலான மூக்கும், முகத்தின் மொத்த நீளத்தில் பாதி அளவில் அடைத்துக் கொள்ளும் காதுகளும் கொண்டவை இவை. வெப்பமண்டலக் காடுகளில் இவை காணப்படும் வெப்ப மண்டலத்தில் பசுமை மாறாக் காடுகள், மித பசுமை மாறாக் காடுகள், முற்புதர்க் காடுகள், வறண்ட இலையுதிர் காடுகள், ஆகியவற்றில் இவை வசிக்கின்றன.

“**கடல் மட்டத்திலிருந்து 3000 மீட்டருக்கும் உயரமான மலைப்புல் வெளிகளில் இவை காணப்படுகின்றன.**”

**சுப்ரபாரதிமணியன்,சிவப்புப்பட்டியல்,ப.34**

வண்டுகள், பறவைகள், குளம்பிகள் உட்பட முதுகெலும்புள்ள, முதுகெலும்பில்லாத விலங்குகளை இவை உணவாகக் கொள்ளும். குளம்பிகள் என்பவை புள்ளிமான், கடத்தி மான் போன்றவை. இவை பத்திற்கும் மேற்பட்டவை இருந்து துரத்துதல், பக்கவாட்டில் துரத்துதல், இரையின் ஒன்று சேர்ந்து குழுவாக்கிக் கொள்ளும். இரையைப் பின்புறம் மேல் பாய்தல் என்று பிற விலங்குகளைத் தாக்கி இரையைத் தேடிக் கொள்ளும்.அவற்றுக்கு இரையாகும் விலங்குகள் குறைந்து வருவது, அவற்றின் வாழிடங்கள் பல்வேறு காரணங்களால் அழிக்கப் படுவது, வேட்டையாடி அழிக்கப்படுவது, மனிதர்களின் நட மாட்டத்தால் ஒதுங்கி வாழ்வது, மனிதர்கள் கூட்டிச் செல்லும் ஊர் நாய்கள் உணவுப் போட்டிக்காக தொல்லை தருவது, அவற்றிலிருந்து பரவும் நோய்கள் போன்றவை இவை எண்ணிக் கையில் குறைந்து வருவதற்கான காரணங்களாக அறிய முடிகிறது.

**புலி:**

புலிகளின் தோல், எலும்பு, பற்கள், நகம் என்று வெவ்வேறு உடல் உறுப்புகளுக்கு மருத்துவ குணங்களை சீனர் கண்டுபிடித் திருக்கின்றனர். சீனா, தைவான், கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் சீன மருத்துவம் கொடி கட்டிப் பறக்கிறது. சீனாவுக்கு புலி சார்ந்த பொருட்கள் இந்தியாவில் இருந்து கடத்தப்படு இன்றன, புலி உடம்பின் பாகங்களின் மருத்துவ குணம் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவில்லை. என்றாலும், காலனி ஆதிக்கக் காலத்தில் இந்தியாவில்

இருந்த ஆங்கி லேயர்கள் கௌரவழிக்க விளையாட்டாக புலிகளைக் கொன்று குவித்தனர். பாராட்டுக்குரிய பெருமிதமாக அது அமைந்தது.

**“1933 முதல் புலியின் உடம்பின் எந்த பாசுத்தையும் வணிக நோக்கத்திற்காகப் பயன்படுத்துவது சட்டவிரோதமாக்கப் பட்ட தடை சீனாவில் அமலில் உள்ளது.”**

**சுப்ரபாரதிமணியன்,சிவப்புப்பட்டியல்,ப.49**

புலிகளின் புலிப் பண்ணைகள் கூட உள்ளன. செல்லப்பிராணிகளாக அமெரிக்க டெக்சாஸ் மாநிலம் போன்ற இடங்களில் பயன்படுத்தப்படுவதால் அவற்றின் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் 19 மாநிலங்களில் தனிப்பட்ட முறையில் புலிகளைச் சொந்தமாக வைத்திருப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. 15 மாநிலங்களில் உரிமை பெற்று புலிகளை வளர்க்கலாம். மேலும் 16 மாநிலங்களில் எந்த ஒழுங்குமுறையும் இல்லாமல் வெவ்வேறு நடைமுறைகள் உள்ளன. இவையெல்லாம் புலி களின் தடைகளுக்குப் பெரிய அரண்களே. புலியை வேட்டையாடுவது 1970-ஆம் ஆண்டிலேயே இந்தி அவை கொல்லப்படுகின்றன. புலிப்பண்ணைகள் நடத்தக் யாவில் தடைசெய்யப்பட்டது. ஆனால் திருட்டுத்தனமாக கூடாது என்று உலக வங்கி, உலக வனவிலங்குப் பாதுகாப்பு அமைப்பும் வற்புறுத்துகின்றன. புலிகள் வாழும் பெரியதீவு சுமத்ரா, ஜாவா, பாலி தீவுகளில் இருந்த புலிகள் சென்ற நூற்றாண்டிலேயே அழிந்துவிட்டன. தனியாக வாழும் இயல்புடையது என்பதால் வேட்டையாடிகள் அவற்றைக் கொல்லவும் ஏதுவாகின்றது.

**இரட்டைத் திமில் ஒட்டகம்**:

ஒட்டகத்தின் அனிமலியா என்ற பிரிவினுள் கமெலிடை வடக்கே பாக்ட்ரியா என்ற பகுதியில் செல்லப் பிராணியாக என்ற உயிரினத்தைச் சார்ந்த இவை ஆப்கானிஸ்தானுக்கு க்கப்பட்டிருக்கிறது. இரட்டைத் திமில் ஒட்டகம் பாக்ட்ரீயன் ஒட்டகம் என்றும் அழைக்கப்படுகிறது. மத்திய ஆசியப் புல்வெளியைப் பூர்வீகமாகக் கொண்டது பாக்ட்ரீயன் ஒட்டகம். இது பாலூட்டும் வகையைச் சேர்ந்த கி.மு. விலங்கினம் ஆகும்.வழக்கமாய் ஒட்டகங்கள் பாலைவனப் பகுதியில் வாழும் உடல் பாலைவனக் கப்பல் என்று வழக்கமாகச் சொல்வோம். அமைப்பைப் பெற்றவை. ஆனால் பாக்ட்ரீயன் ஒட்டகங்கள் உடம்பிலுள்ள ரோம அமைப்பினால் குளிர்ப்பகுதியில் கூட வாழும் இயல்புடையவை. வணிகர்கள் பயணம் செய்ய இதைப் பயன்படுத்துகின்றனர்.

“**பகல் நேரத்தில் இரை தேடுபவை இவை தானாகவோ இருபத்தைந்து பேர் கொண்ட குழுவாகவோ இவை காணப்படும்**.”

**சுப்ரபாரதிமணியன்,சிவப்புப்பட்டியல்,ப.68**

தண்ணீர் கிடைக்கும்போது 60 லிட்டர் வரை சேமித்து வைத்துக் கொள்ளும். தண்ணீர் ஒரு மாதம் கிடைக்கவில்லையென்றாலும் தாக்குப் பிடிக்கும். உணவு கிடைக்காத சமயங்களில் அதனின் திமில் அதிகப்படியான கொழுப்பைச் சேமிக்கும். அது உயிரியக்கத்திற்குப் பயன்படும். இதன் வாய்ப்பகுதி கடின மான முட்களையும் சாப்பிடும் வகையில் அமைந்துள்ளது.நீண்ட காலமாய் சரித்திரப் பதிவாய் இருந்தவை மீண்டும் வெறும் பதிவாய் நின்றுபோகும் அளவில் குறைந்துவருகின்றன.

**தொகுப்புரை:**

உலகில் நிகழும் பல்வேறு வகை மாசுபாட்டிற்கும் அடிப்படை ஆதாரம் மனிதனுடைய செயல்பாடே எனக் கூறினால் மிகையாகாது. யானை தன் தலையில் தானே மண்ணை வாரி இறைத்துக் கொள்வது போல, சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் அறியாமல் மனிதன் செயல்படுத்தக்கூடிய ஒவ்வொரு செயலும் அவனது குலத்திற்கு எதிரானது என்பதனை அவன் அறியவில்லை. அரசன் அன்று கொல்வான்; மாசு நின்று கொல்லும் என்பதனையும் மனிதன் அறியவில்லை.சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு முதல் காரணம் மனிதனின் சுயநலம்தான். வீட்டைப் பெருக்கி குப்பையை வீதியில் கொட்டுகின்றான். மூன்று தலைமுறைகளுக்குச் சொத்து சேர்க்க வேண்டும் என்று நினைக்கும் மனிதன் மூன்றாவது தலைமுறை வாரிசு வாழப்போகும் காலத்தில் சுற்றுச்சூழலே அவ்வாரிசைக் கொல்லும் எதிரியாக மாறக்கூடும் என்பதை அறிந்து கொள்ளவில்லை. உதாரணமாக 1950லிருந்து 1963 வரை அமெரிக்காவில் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட பூச்சிக் கொல்லியைக் கூறலாம். இப்பூச்சிக் கொல்லியைப் பயன்படுத்தியதால் உடனடிப் பலனாக பூச்சிகளின் எண்ணிக்கை சட்டென்று குறைந்தது. உற்பத்தியும் அதிகரித்தது. ஆனால் இப்பூச்சிக் கொல்லிகள் கொடிய நஞ்சாக இருந்ததால் இப்பூச்சிகளை உண்ட பறவைகள் மாண்டன. இதன் விளைவாக அடுத்து வந்த பருவத்தில் இப்பூச்சிகளை உண்ணும் பறவைகள் இல்லாமையால் அவை துரிதமாக பன்மடங்கு பெருகி பயிரில் பெருமளவில் சேதத்தை ஏற்படுத்தின.

**பார்வை நூல்கள்:**

[1.] **சுப்ரபாரதிமணியன்.** *சிவப்புப் பட்டியல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

[2.] **புலியூர்க்கேசிகன்.** *தொல்காப்பியம்*. கௌரா பதிப்பகக் குழுமம், 2016.

[3.] **பேராசிரியர் குழு.** *சுற்றுச்சூழல் கல்வி*. ஜாசிம் பப்ளிகேஷன்ஸ், 2004.

[4.] **பேராசிரியர் குழு.** *புவி வெப்பமடைதல் - மானுடப் பொறுப்பு*. தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, 2010.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 51.திருக்குறளில் சுற்றுசூழலியல் பதிவுகள்

**முனைவர் து. விஜயராணி,**
தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி 620 002
Emai Id: vijayaranidharmaraj@gmail.com, **https://orcid.org/0000-0003-2715-7019**

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வுலகம் நிலம், நீர், காற்று ஆகாயம் நெருப்பு என்ற பஞ்ச பூதங்களால்ஆனது. அதனை தொல்காப்பியர் நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் என்று மரபியலில் எடுத்துரைக்கின்றார். இத்தகைய இயற்கை மூலாதாரங்கள் மாசு அடைவதால் சுற்றுச்சூழல் சீர்கெட்டு வருகிறது. காடுகளில் மரங்கள் வெட்டப்படுவதாலும், ஆறுகளில் மணல் கொள்ளையடிக்கப் படுவதாலும், தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுகள் நீர்நிலைகளில் கலப்பதாலும், புகை காற்றில் கலப்பதாலும் இயற்கைச் சூழல் அழிவுப்பாதையை நோக்கி செல்கின்றது.சுற்றுச் சூழல் கெடுவதால் மனித குலம் மட்டுமல்ல, விலங்கினங்களும், தாவர இனங்களும் அழிவுக்கு உள்ளாகி வருகின்றன. இதனால், இயற்கைச் சமநிலையை இழந்து காணப்படுகின்றது.. பருவ கால மாற்றித்தினால் கடலில் ஆழிப் பேரலைகளும், கொந்தளிப்புகளும், நில நடுக்கங்களும், கடும் புயல்களும் ஏற்படுகின்றன. சுற்றுச்சூழல் வெப்பமடைவதால், பனிக்கட்டிகள் உருகி கடலின் நீர் மட்டம் உயர்கின்றது. இதனால் கடலோரங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகின்றது. இச்சுற்றுச் சூழல் மாசு அடைவதால் ஏற்படும் இச்சீர்கேட்டினை வள்ளுவர் தனது திருக்குறளில் எடுத்தியம்பியுள்ளார் அதனை ஆராய்வது நோக்கமாக அமைகிறது.

**முன்னுரை**

இயற்கை நிலைகள் அனைத்தும் 'சுற்றுச்சூழல்' என்பதில் அடக்கப்படுகின்றன. உயிரினங்கள் வாழும் பகுதியில் உள்ள காற்று, நீர் வெப்பம், ஒளி, இன்ன பிறவும், உயிருள்ள தாவரங்கள், உயிரினங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியதே சுற்றுச்சூழலாகும். மேலும் சுற்றுச்சூழல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள நுண்மையான, சமன்படுத்தப்பட்ட மென்மையான உறவாகும். மனிதன் மேற்கொள்ளும் எந்த ஒரு செயலும் மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்குமான உறவில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சூழலோடு இயந்து இயங்கும் வாழ்வே நிம்மதியையும் வளத்தையும் தரும். எதிர்திசையில் மனிதன் பயணிக்கும்போது இயற்கையின் சீற்றங்களுக்கு அவன் ஆளாக நேரிடுகிறது. இயற்கையைப் புறந்தள்ளும் பொழுது இயற்கை அவனைப் புறந்தள்ளுகிறது. உயிர்ப் பொருள்களின் வாழ்வியக்கத்திற்குத் தேவையான நீர், நிலம், காற்று போன்ற பொருள்கள் மாசடையாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இம்மூன்றும் உலகச் சுகாதாரத்தை உறுதிப்படுத்துகின்றன. இன்றைய நிலையில், இவ்வகை சூழலியல் குறித்த சிந்தனைகளைத் திருக்குறளின் வழி காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

பஞ்ச பூதங்கள், யாக்கை, ஊருணி, ஞாலம் விசும்பு

**நீர் இன்றி அமையாது உலகு**

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக விளங்கக் கூடியது நீர். மனித வாழ்விற்கு மிக முக்கிய தேவையான நீரை திறம்பட மேலாண்மை செய்வதற்கும், தேவைப்படும் காலங்களில் நீரை தேக்கி வைத்து பயன்படுத்துவதற்கான இடத்தினை, மக்கள் அமைத்து வாழ்ந்துள்ளனர். மானுட பயன்பாட்டிற்கு பயன் தரும் நீர் உயிரினங்களின் உடல் வளர்ச்சிக்கும், உணவு தேவைக்கும் இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. அது உணவுத் தேவையை நிறைவு செய்வதற்கு மூல காரணியாக அமைந்தள்ளமையைக் கருதியே வள்ளுவப் பெருந்தகை நீரினை முதன்மைப் பொருளாக எண்ணி நீர் இல்லாமல் இந்த உலகமும் மனித வாழ்க்கையும் இருக்காது. என்பதனை

**"நீர் இன்று அமையாது உலகெனின், யார்யார்க்கும்**
**வான் இன்று அமையாது ஒழுக்கு".1 (குறள் – 20)**

நீரில்லாமல் உலக வாழ்வு அமையாது அதைப்போல் நீரைத் தரும் வான்மழை இல்லாது போனால் எல்லோரிடமும் ஒழுக்கம் அமையாது. எனவே, மழை வளம் பெருக, மரங்களை வளர்த்தல் இன்றியமையாதது என்பதனையும் இதன் வழி வலியுறுத்துகின்றார்.

இதனை

**"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"2 (புறம்-18)**

**என்ற** புறநானூற்று பாடல் நீர்இன்றி இந்த உலகத்து உயிர்கள் இயங்காது என்பதனை எடுத்துரைக்கின்றது.

அத்தகைய நீரில் கழிவு நீரை கலத்தல் சாயப்பட்டறைகளில் உள்ள கழிவுநீரை கலந்து விடுதல் என பல தவறுகளை நாம் செய்கிறோம். அந்நீரை அருந்துவோர் பல நோய் தொற்றுக்கு ஆளாகின்றார்கள். அதனால் தான் வள்ளுவர் தூய்மைப் பற்றி எடுத்துரைக்கும் போது

**"புறந்தூய்மை நீரான் அமையும், அகந் தூய்மை**
**வாய்மையால் காணப் படும்"3 (குறள்– 298)–**

என்னும் குறளில் புறத்தூய்மைக்கு நீர் இன்றியமையாதது என எடுத்தியம்புகின்றார்

கடல்

மேகம் கருத்து மின்னிப் பெருமழையாகப் பெய்து நீரைக் கொடுக்காமல்போனால், பெரிய கடலின் நீர்வளங் கூடக் குன்றிப் போகும். கடல் நீரில் உப்புத் தன்மை அதிகமாவதற்குக் காரணம் மழை இன்மையேயாகும் என்பதை

**"நெடுங்கடலும் தன்நீர்;மை குன்றும், கடிந்தெழிலி**
**தான் நல்கா தாகி விடின்"4. (குறள் – 17)**

என்ற குறள் வழி அறிய முடிகின்றது.

கடல் நீரில் உப்புத் தன்மை அதிகரிப்பதால் கடல் வாழ் உயிரினங்கள் இறக்க நேரிடும். மேலும் முத்து, பவழம் முதலியன குறைவதற்கு வாய்ப்புகள் குறைவு. கடற்கரையோரங்களும் பாதிப்புக்கு உள்ளாகும். மீன் வளம் குறைந்து மீன்பிடித் தொழில் பாதிப்படைந்து வருமான இழப்பும் ஏற்படும் என்பதனை எடுத்துரைக்கின்றது.

மழைவளம்

ஊர்களில் உள்ள நீர் நிலைகளில் நீர் நிறைந்து இருக்க வேண்டும். மழை பொழியாவிட்டால் நீர் நிலைகள் நிரம்பாது. தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும். மண் வளம் குன்றும். தமிழகத்தில் பழங்காலம் முதல் குளம், ஏரி, கண்மாய் வெட்டுதல், ஆழப்படுத்துதல் போன்றவைகள் மூலம் நீர்நிலைகள் பாதுகாக்கப்பட்டு வந்தன. இதனை

**“ஊருணி நீர்நிறைந்தற்றே உலக அவாம்**
**பேரறி வாளன் திரு.5 (குறள் – 215)**

என்ற குறள் விளக்குகின்றது.

ஆனால், இன்றைய தமிழகத்தில் ஏரி, குளம், கண்மாய் முதலிய நீர்நிலைகள் வீட்டுமனைகளாகவும், குடியிருப்புகளாகவும் மாற்றப்பட்டு வருகின்றன. அதனால் மழைபொழியும் பொழுது மழைநீர் வெளியேற முடியாமல் உள்ளது. “எங்கள் ஊருக்கு அருகில் ஏரி இருந்தது என்பது அந்தக் காலநிலை, ஏரிக்குள் எங்கள் ஊர் இருக்கிறது என்பது இந்தக் காலநிலை அதனால், எங்கள் ஊர் வெள்ளத்தில் மிதக்கின்றது என்று கூறுகிறோம். இந்த அவலநிலை மாற வேண்டும் எனில் இருக்கின்ற ஏரிகுளங்கள் தூர்வார வேண்டும். மழைவளம் பெருக மரம் வளர்க்க வேண்டும், நீர் நிலைகளை பாதுகாத்திட வேண்டும்.

**“விசும்பின் துளிவீழின் அல்லாற் மற்றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது”6. (குறள் – 16)**

விண்ணில் இருந்து மழைத்துளி விழாவிட்டால் இம்மண்ணுலகில், பசும்புல்லின் தலையைக்கூட காண முடியாது. ஆக, மண் வளம்பெற விண்ணிலிருந்து மழை பொழிவது இன்றியமையாதது. விண்ணின் மழைத்துளி மண்ணின் உயிர்த்துளி மரம் வளர்ப்போம் மழைப்பெறுவோம் என பல வாசகங்களின் மூலம் மழையின் இன்றியமையாமையை உலக மக்களுக்கு வலிறுத்தி வருகின்றனர்.

**அரண்**

ஒருநாட்டின் பாதுகாப்பு அரணாக என்றும் அமைவது இயற்கையே ஆகும். நம்நாடு ஒருதீப கற்ப நாடாக இருந்து நம்மை பலநிலைகளில் பாதுகாத்து வருகின்றது. எனவே அரணாக அமைந்த இயற்கையை பாதுகாத்தலால் சூழலியலை காப்பாற்ற இயலும்.

கோட்டை, பாதுகாப்பு, அல்லது மதில் என்று பொருள். பகைவர் எளிதில் அணுக முடியாதபடி காவலுக்குரிய இடமாக மலை, காடு, நீர், மற்றும் மதில் ஆகியன அமையும்.

**“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
**காடும் உடையது அரண்”.7 (குறள் – 742)**

என்ற குறளின் வழி வற்றாத மணியான நீர் உடைய அகழியும், விரிந்த மண்பரப்பும், உயர்ந்த மலைகளும், அடர்ந்த நிழல் தரும் மரங்ளைக் கொண்ட காடும் ஒரு நாட்டைப் பாதுகாக்கும் கோட்டை என்று இயற்கை அரணை பற்றி எடுத்துரைக்கின்றார்.

**“உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்**
**அமைவரண் என்றுரைக்கும் நூல். 8(குறள் 743)**

உயரமும், அகலமும், உறுதியும், பகைவரால் நெருங்குவதற்கு அருமையும் என்னும் நான்கும், சிறப்பாக அமைந்ததே அரண்’ என்று போரியல் நூல்கள் கூறுகின்றது.

ஆனால், ஆறுகள் ஆக்கிரமிக்கப்படுவதும், மணற்கொள்ளை நடப்பதும், கல் உடைக்க மலைகளைத் தகர்ப்பதும், காடுகளை அழிப்பதும், மரங்களை வெட்டி வீழ்த்துவதும், மண் பரப்புகளை நச்சுக் கழிவுகளால் நாசமாக்குவதும் நாள் தோறும் நடக்கின்றன. இந்தப் பேரழிவுகளைத் தடுத்து நிறுத்திட மக்களும், அரசும் இணைந்து இயக்கம் காண வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**நிலம் சார்ந்த சூழல்**

உலக உயிர்கள் அனைத்திற்கும் வாழ்விடமாக அமைவது நிலம். அனைத்து உயிரினங்களின் வாழ்வாதாரமாகவும், பூமியின் அடிப்படை இயற்கை வளமாகவும் நிலம் திகழ்கிறது. இது விவசாயம், தங்குமிடம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது. மனிதனின் செயல்பாடுகளால் நிலம் சீரழிந்து வரும் நிலையில், எதிர்கால சந்ததிக்காக நிலத்தை பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும். நிலம் என்பது வெறும் மண் மட்டுமல்ல அது இயற்கை வளங்கள், ஆறுகள், நிலத்தடி நீர், மற்றும் உயிர்க்கோளம் ஆகியவற்றின் தொகுப்பு. மனிதகுலத்தின் உணவுத் தேவையில் சுமார் 95சதவிகிதம் நிலத்தில் விளையும் பயிர்களையே சார்ந்துள்ளமையை அறிய முடிகிறது.

, மணற்பாங்கான இடத்தில் வீழ்ந்த நீர் வெண்மையாகவும், செம்மண் நிலத்தில் வீழ்ந்த நீர் செம்மையாகவும், களிமண் நிலத்தில் விழுந்த நீர் கலங்கலாகவும் ஆகிவிடுகிறது. மண்ணின் தன்மைக்கு ஏற்றாறு மழைநீர் நிறம் வேறுபட்டு அதற்கான பயனைத் தருகின்றது.

**“நிலத்து இயல்பான் நீர்திரிந்து அற்றாகும்; மாந்தர்க்கு**
**இனத்தியல்ப தாகும் அறிவு”9 (குறள் – 452**

என்று குறள் எடுத்தியம்புகின்றது.

ஆனால் நீரில் தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பதால் ஆறுகள், ஏரிகள், கிணறுகள் முதலியன பாதிக்கப்பட்டு சுற்றுச்சூழல் பாதிப்படைகிறது. அந்த நீரினால் நிலமும் மாசு அடைந்து விவசாயம் செய்யப் பயன்படாத தன்மைக்கு மாற்றப்பட்டு மலட்டுத்தன்மையை அடைகிறது.

லத்தின் இயல்பு

பூமியைச் சுமக்கும் பெண் தெய்வம் பூமாதேவி ஆவாள். பூமாதேவி நல்லவர்களையும், சுமக்கிறாள் பிறருக்கு இன்னல் தரும் தீயவர்களையும் சுமக்கிறாள். நல்லவர்களால்எல்லாருக்கும் நன்மை என்பதை இவள் உணர்த்துகிறார் அத்தகைய பெண்ணை வள்ளுவர்.

**“அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை” 10 (குறள் 151)**

தன்னைத் தோண்டினாலும் தோண்டுபவர் விழுந்துவிடாதபடி தாங்கும் நிலம் போல தம்மை இகழ்பவரையும் அவமதிப்பவரையும் மதித்து பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். இத்திருக்குறளில் நிலத்தின் தன்மையையும் நிலம் அனைத்தையும் தாங்கும் தன்மை உடையது என்பதனை எடுத்துரைக்கின்றது.

மேலும்

**“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை” 11(குறள் 12)**

உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழை. அதனால் நீர் இல்லாமல் வேளாண்மை இல்லை வேளாண்மை இல்லாமல் மக்களுக்கு உணவில்லை என்ற நிலத்தின் அயல்பினையும் மக்களின் சூழலையும் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

**காற்றின் சூழலியல்**

காற்று உலவுகின்ற உலகம் வளமான உலகம். காற்று ஓரிடத்தில் நிற்கும் தன்மையது அல்ல. காற்று உலாவிக்கொண்டேயிருக்கும். எனவே, காற்று மாசுபடாமல் இருக்க வேண்டியதன் காரணத்தை வள்ளவர்

**"அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்**
**மல்லல்மா ஞாலம் கரி".12 (குறள் – 245)**

என்ற குறளின்வழி காற்றின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின்றார்.

இவற்றையெல்லாம் உற்றுநோக்கும் போது சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கியக் காரணியாக கவனிக்க வேண்டியது செயற்கைத்தன்மை, இயற்கையைப் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதுதான்

இதனை

**"செயற்கை அறிந்த கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்".13 (குறள் – 637)**

ஏன்ற குறளின் மூலம் விளக்குகின்றார்.

முடிவுரை

இயற்கை வளங்கள் ஒன்றை ஒன்று சார்ந்து செயல்படுகிறது என்பதனைஅறியமுடிகின்றது. உலகம் இயற்கை சார்ந்த சூழல் மற்றும்

பிராணவாயு உற்பத்தியிலும், காற்றினை தூய்மையாக்குவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. மேலும், நிலத்திற்கு மணிச்சத்து அளிப்பது, நிழல் தருவது, காற்றின் ஈரப்பசை குறையாமல் காப்பது, காய் கனிகள் கொடுப்பது, மண் அரிப்பைத் தடுப்பது முதலியவைகளைச் செய்வதும் மரங்ககள் காடுகள்தான் நிலத்திற்கு சுவாசப்பைகள் என்பதை மாந்த இனம் உணர்ந்திட வள்ளுவர்; பலகருத்துகளை எடுத்தியம்பி உள்ளமையை அறியமுடிகின்றது. குறள் வழி நின்று சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அனைவரும் பாடுபடுவோம்!

துணைநூற்பட்டியல்

1. திருக்குறள் பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை-14

2. திருக்குறள் தெளிவுரை(1998) மு.வரதாசன் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பத்pப்புக்கழகம், சென்னை

3.புறநானூறு மூலமும் உரையும் ஞா.மாணி;க்கவாசகன் உமாபதிப்பகம், பவளக்காரத் தெரு மண்ணடி சென்னை- 600001

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 52.சென்னை மிதக்கும்' கவிதையில் சுற்றுச்சூழல்

**முனைவர் து.நீலாதேவி,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 002
Email: deelatamil@gmail.com, ORCiD: https://orcid.org/0009-0006-3831-0030

**ஆய்வுச்சுருக்கம்:**

*சென்னை மிதக்கும்'* என்ற கவிதை, பெருமழையால் சென்னை நகரம் வெள்ளத்தில் மூழ்கும் நிலையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இயற்கைப் பேரிடர் மட்டுமல்லாமல், திட்டமிடப்படாத நகர வளர்ச்சி, நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு, வடிகால் வசதிகளின் பற்றாக்குறை போன்ற மனிதச் செயல்களும் வெள்ளப் பாதிப்பிற்கு காரணமாக இருப்பதை கவிஞர் சுட்டிக்காட்டுகிறார். இந்தக் கவிதை சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தையும், இயற்கையோடு இணைந்து வாழ வேண்டிய தேவையையும் வலியுறுத்துகிறது. நகர வளர்ச்சியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் சமநிலையுடன் இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை வாசகர்களுக்கு ஏற்படுத்துவதே இந்தக் கவிதையின் முக்கிய நோக்கமாகும்.

**முன்னுரை:**

'**சென்னை மிதக்கும்**' என்னும் கவிதையில் பெருநகரமாகிய சென்னையில் குப்பைகளும், துப்பப்படும் எச்சிலும், வாகனங்களும் நிறைந்து சூழல் மாசுபாட்டினால் சென்னை அழுகி மிதந்திடும் என எச்சரிக்கை புரிகின்றார்.

**"இன்னும்**
**சில நாள்களில்**
**சென்னை மிதக்கும்**
**மல்லாந்து**
**கிடக்கும் மாநகர் மார்பில்**
**பல்லவன், மிதிவண்டி**
**கார்கள், கால்நடையியல்**
**எங்கெங்கும் எப்போதும்**
**எச்சில் கழிக்கும்**
**மக்கள்**
**கிருமிக் கிண்ணங்களாம் இவற்றில்**
**விரல்**
**நனைத்துக் கொண்ட காற்றுதான்**
**நம்மோடு**
**கைகுலுக்குகிறது**
**மனிதனை**
**முந்திக் கொண்டு**

**இந்த மாநகரில்**

**காற்று ஒரு நாள்**

**மரணிக்கும்"**

என்று சென்னை மாநகரில் துப்பப்படும் எச்சிலாலும், குப்பைகளாலும், கழிவுகளாலும், வாகனப் புகையாலும் காற்று மாசுபட்டு மரணிக்கும் என எச்சரிக்கை தருகின்றார். சென்னை மாநகரில் காற்றின் தரக்குறியீட்டுயெண் மோசமான நிலையினை எட்டி வருதலை இக்கவிதை சுட்டுகின்றது.

தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் புகை, கழிவு மாசுகள், பெருநகரங்களில் உருவாகும் குப்பைக் கழிவுகளால் காற்றின் தரம் மோசமடைந்து வருவதைத் தமிழன்பனின் கவிதைகள் சூழலியல் அக்கறையோடு எடுத்துரைக்கின்றன.

**அணு உலை - ஆயுத எதிர்ப்பு**

புவியுலகைப் புல் பூண்டற்று செய்திடும் சக்தி மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட அணு ஆயுதங்களுக்கு உண்டு. அணுவினைச் செறியூட்டும் அணு உலைகளில் ஏற்படும் விபத்துக்களால் மானுட உயிர்கள் நொடிப்பொழுதில் மரணித்துப் போய் விட்டதை ரஷ்யாவின் செர்னோபிள், ஜப்பானின் புக்குஷிமா அணு உலைகள் நிகழ் காலச் சான்றுகளாகின்றன. அணு உலைகள் ஆக்க சக்திக்கே என்றாலும் அதனால் ஏற்படும் கழிவுகளைச் சிதைவடையச் செய்வதற்கு அதிக காலம் பிடித்திடும். அணு ஆயுதங்களால் ஏற்படும் கதிர் வீச்சுகளால் மானுட இனம் புல், பூண்டற்றுப் போய் விடுவதை ஹீரோஷிமா, நாகசாகி என்னும் ஜப்பானின் இரு நகரங்கள் மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டுகள் நிரூபிக்கின்றன.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் 'ருத்ர தாண்டவம்' கவிதையில் மனிதர்களின் ஆதிக்க, பதவி வெறி அணுவில் இறங்கியதால் மனித உயிர்கள் மலிவாகக் கொல்லப்படுவதாகத் தெரிவிக்கின்றார். சிவன் அருந்திய ஆலகால விஷத்தை விடக் கொடூரமானது அணு ஆயுதங்கள் என்கின்றார்.

**"உறங்கிய**

**அணுவினுள்**

**மனித வெறி இறங்கியது**

**நிமிர்ந்து பிதிர்ந்து தெறித்தது**

**அணு**

**சிவன்**

**கண்டத்துள்**

**புரோட்டினியம்**

**தகிக்கப் பஸ்பமானது**

**ஆல காலம்**

**சாய்வு நாற்காலியில்**

**விழுந்தான் சிவன்**

**பூமியில்**

**விஞ்ஞானத்தின் முகமும்**
**கொப்பளித்தது**

**கோடி கோடி கதிர்க்கைகள்**
**காற்றின் கழுத்தை**
**ரகசியமாய் நெரித்தன**
**கல்பாக்கக்**
**கழிவுகளை**
**உண்ட**
**கடல் வயிற்றில்**
**புற்றுநோய்”**

என்று அணுசக்தி மானுட இனத்திற்கு ஆக்க சக்தியாக பயன்படாமற் அழிவு சக்தியாகப் பயன்பட்டுக் கொண்டிருப்பதை அனுவின் ருத்ர தாண்டவமாகக் குறியீடு படுத்துகின்றார். உலக நாடுகளின் அணு ஆயுதக் குவிப்புகளால் மூன்றாம் உலகப் போர் மூண்டு புவிப்பரப்பே நிர்மூலமாகிவிடக் கூடிய அச்சுறுத்தல் சூழல் நிலவி வருகின்றது. அணு ஆயுதங்களை அகற்றி அமைதியென்னும் வெள்ளைப் புறாக்களை மக்கள் வானில் பறந்திடச் செய்திட வல்லரசு நாடுகளான அமெரிக்காவும், ரஷ்யாவும் முன் வர வேண்டுகோள் வைக்கின்றார்.

**“ஏவுகணைச் செலவுகளில்**
**எல்லோர்க்கும்**
**ரொட்டி சுட்டுத்தர**
**வல்லரசுகள்**
**முன் வருமா?**
**வெள்ளைப் புறாவின்**
**கூட்டுக்கு**
**விதானம் அமைக்க**
**அணுக் கதிர்களை**
**ஆற வைப்பார்களா?**

**ஆயுதப்**
**பட்டறைகள்**
**சமாதான தேவதைக்கு**
**அணிகலன்**
**தயாரிக்குமா?**

**போர் நம்மை**
**ஒழிக்கும் முன்**

**போரை நாம் ஒழிப்போமா?**
**கடைசி வெடிகுண்டின்**
**திரிகளை எடுத்துச்**
**சமாதானத்தின்**
**முதல் விளக்கு**
**ஏற்றுவோமா?**

என்று அணு ஆயுதங்களின் தயாரிப்புகளையும், குவிப்புகளையும் அதனைப் பெற்றுள்ள நாடுகள் அனைத்தும் கைவிட வேண்டுமென சூழலியல் அக்கறையோடு அறைக்கூவல் விடுகின்றார்.

அணு ஆயுதங்களின் பிரயோகத்தாற் கருவிலே சிதைந்து உருவம் குலைந்து மூர்க்கமாகி விட்ட பிணங்களின் குமுறலாகப் '**பிணங்களிலிருந்து பிறந்தவர்கள்**' கவிதையில் அணுக் கதிர் வீச்சின் அபாயங்களைப் படம் பிடித்துக்காட்டுகின்றார்.

**"அகால மரணம்**
**அனுப்பிய வினாக்கள்**
**நாங்கள்**
**எங்களை இப்படிச் செய்த**
**விஞ்ஞானம் எங்கே?**

**அரக்க அரசியலுக்கு**
**அணு ஆயுதம்**
**ஆக்கித் தந்த**
**அந்த விஞ்ஞானம் எங்கே?**

**மீண்டும்**
**கல் அறுவடைக்குக்**
**காலத்தை விதைத்த - அதன்**
**கபாலத்தை நொறுக்க.......**
**எங்கள் கைகளிலும்**
**கல்**
**எங்கே அந்த விஞ்ஞானம்?"**

என்று மனிதர்களை மீண்டும் கற்காலத்திற்குத் தள்ளிய அணு ஆயுதங்களைக் கண்டறிந்த விஞ்ஞானத்தின் கபாலத்தினை நொறுக்கிட வேண்டும் என்கின்றார். விஞ்ஞானம் மனித குலத்தை வாழ்விக்க வராமற் அழிவின் விளிம்பிற்கு அணு ஆயுதங்களால் தள்ளிக் கொண்டிருப்பதாகக் கவிஞர் வருந்துகின்றார். அணு உலைகளை ஆக்கப்பூர்வ மின்சாரத்திற்கு நிறுவுகிறோம் என்று உலக நாடுகள் கூறினால் அதனால் உருவாகும் ஆபத்துகளே அதிகம். இந்திய அரசால் கன்னியாகுமரி மாவட்டம் கூடங்குளத்தில் நிறுவப்பட்ட அணு உலைகளை எதிர்த்துக் கடலோர மக்கள் எதிர்ப்பு தெரிவித்துப் போராடினர். அவர்கள் வாழ்வும், வளமும், சூழலும் மோசமாகப் பாதிக்கப்படும் என்று எதிர்ப்பு தெரிவித்துக் குடும்பம், குடும்பமாகக் கடற்கரையில் அகிம்சை வழி

போராட்டங்களை முன்னெடுத்தனர். இந்திய அரசு இப்போராட்டத்திற்கு செவி சாய்க்காமற் இருந்ததை எதிர்த்து '**எதிர்கால எலும்புக் கூட்டின் எதிரொலிகளா?**' என்னும் கவிதையில் கூடங்குள மக்களுக்கு ஆதரவாகக் தமிழன்பன் குரல் கொடுக்கின்றார்.

**"எந்த முகவரியிலிருந்து**
**கூடங்குளம் மக்களிடம்**
**இந்திய அரசு பேசுகிறது?**
**வாழ்க்கையின் முகவரியிலிருந்தா?**
**மரணத்தின் முகவரியிலிருந்தா?**

என்று கேள்வி எழுப்புகிறார். உலகில் அணு உலைகளில் ஏற்பட்ட விபத்தால் மக்களும் வாழிடங்களும் பாதிக்கப்பட்ட வரலாற்று வடுவினையும் எடுத்துரைக்கின்றார்.

**"காவலுக்குள், கண்டிப்புக்குள்**
**எச்சரிக்கை அச்சுறுத்தலுக்குள்**
**வெந்து பதமாகாத ரொட்டியாகக்**
**கூடங்குளம்**
**செர்னோபில்**
**அணு உலை விபத்தில்**
**செத்தவர்களும் இவர்களேதான்**
**அங்கு**
**இவர்கள் பெயர்கள்**
**வாகியா, போக்ரோவ்ஸ்கி, இவானோவிச்**
**மாட்ரியோனா**
**எந்தத் திருகாணி, எந்த மறை, எந்த மூடி**
**எந்த சக்கரம், எந்த விசைப்புள்ளி**
**கவனத்தைக்**
**காலை வாரிவிடும் என்று**
**அணு அவையின்**
**அந்தரங்கத்திற்கும்**
**தெரியாது**
**அறிவியலோடு**
**ஒட்டி நின்று**
**தர்க்கம் செய்து கொண்டிருக்கும்**
**விபத்துகளுக்கும்**
**தெரியாது**
**கடலின் வாழ்வு**
**காற்றின் வாழ்வு**
**வானத்தின் வாழ்வு**

**மண்ணின் வாழ்வு**
**எல்லாவற்றையும் - அணுக்கழிவுகள்**
**பொட்டலம் கட்டிச்**
**சவக்குழியில் போட்டு விடும்**
**என்பதை**
**அணுக்கதிர்கள்**
**சொல்லத் துடித்தாலும்**
**அறிவியல் அரசியல்**
**அவற்றின் வாயை அடக்கி**
**ஒடுக்குகிறது**
**ஃபுக்குசிமாவின்**
**அரகோரவும், கசுயாவும், அமாஜியும்**
**ஒகாட்சும், சினோவும்**
**சக சாவாளிகளாகக் கூடங்குளம் அனுப்பி வைக்க**
**வந்து சேர இருக்கும்**
**ஆரோக்கிய சாமியை, அப்துல் காதரை**
**அன்னபூரணியை**
**அமலா, பாத்திமாக்களைச் சந்திப்பதற்காக"**

என்று அணு உலைகளில் ஏற்படும் விபத்தின் கதிர் வீச்சினால் ஐம்பூதங்களும், மானுட இனங்களும், பிற உயிரினங்களும் எரிதழல் சாம்பலாக மாறிவிடுவர். அணுவின் அழிவு சக்தியைத் தடுத்து நிறுத்தத் துணிவில்லை. அறிவும் இல்லை. அரசியல் ஆதாயம் கருதி அரசியல்வாதிகள் எடுக்கும் முடிவிற்கு விஞ்ஞானம் குழல் இசைத்து ஆதரிப்பதாகத் தமிழன்பன் சாடுகின்றார். அணு உலைகளுக்கு எதிரான கூடங்குளம் போராட்டம் பீனிக்ஸ் பறவையாகத் தொடரட்டும் என்று வரவேற்கின்றார்.

தமிழன்பனின் கவிதைகளில் அணு ஆயுதங்களால் ஏற்படும் பேரிழப்புகள், அணு ஆயுத தயாரிப்புகளுக்கு எதிர்ப்பு, அணு உலைகளில் ஏற்படும் விபத்தால் மானுட குலம் சந்திக்கும் பிரச்சனைகள், கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டம் ஆகியவை சூழலியல் அக்கறையுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நகர்மயமாதல்**

நகர்மயமாதலில் போக்குவரத்து நெருக்கடியும், காங்கீரிட் கட்டிடங்களின் எழுச்சியும், நுகர்வுப் பொருள் கலாச்சாரமும், சுற்றுச் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன.

நகர்ப்புறங்களில் உறவுகளில் ஏற்பட்டு வரும் அந்நியமாதலையும், இயந்திரங்களோடு இயந்திரங்களாக மனிதன் ஓடிச் செல்லும் ' மிஷின் யுகமும்' அதன் முகங்களாக மாறிவிட்டதை தமிழன்பன் சித்திரிக்கின்றார். 'நகர்' 'நட்பு' கவிதையில் இத்தகு அந்நியமாதலைக் காட்டுகின்றார்.

**"என்ன சேது**

**எப்போ வந்தீங்க**

**இருபது வருஷமாச்சு**

**பார்த்து**

**இதோ**

**'இருபத்து நாலு'**

**வருது……**

**வரட்டுமா பார்ப்போம்**

**பிறகு!"**

என்று நகர்ப்புறத்தின் இயந்திரமாதல் தன்மையினைக் காட்டுகின்றார். பெருநகரங்கள் என்றாலே முதன்மை இடம் பெறுவது போக்குவரத்து நெரிசல். வாகனப் பெருக்கத்தால் சுற்றுச் சூழலில் மாசு ஏற்படுதல் ஒரு பக்கம் தொடர்ந்து நிகழ்கின்றன. போக்குவரத்து நெரிசலால் சாலை விபத்துகளும் அடிக்கடி நிகழ்ந்து மனித உயிர்களைப் பலி கொள்கின்றன. தமிழன்பன் இதனை 'போன்றதே' கவிதையில் சித்திரிக்கின்றார்.

**"பல்லவனில்**

**அண்ணா சாலையில்**

**புகுந்து**

**பாரீஸ் வந்தபோது**

**நசுங்கிய**

**நாவுக்கரசு**

**பதிகம் பாடு முன்**

**ஈசன் இணையடி நீழல்**

**கண்டார்"**

என்று பெருநகரங்களின் போக்குவரத்து நெருக்கடிகளில் மனித உயிர்கள் பலியாகிக் கொண்டிருப்பதைப் பதிவு செய்கின்றார்.

நகர்மயமாதலின் நுகர்வுக் கலாச்சாரத்தினால் அனைத்தும் பணமாகவே பார்க்கப்படும் சூழலைத் தமிழன்பன் தெரிவிக்கின்றார். பணமே மூலதனம் என்று மனிதர்கள் சூழலை மறந்த பணப் பிறவிகளாக உருமாற்றம் பெற்றுக் கொண்டிருப்பதாகப் பரிமாணப்படுத்துகின்றார்.

**"ஒற்றைக் காசான உலகம்……."** கவிதையில் இதனை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றார்.

**"நிலம் காடு வயல்**

**தோட்டம் துரவு கல் மண் மலை**

**ஒவ்வொன்றாய்க்**

**காசுகளாகி மறந்தன வரலாற்று மூலங்கள்**

**நாடு நகரம் பட்டி தொட்டி**

**தெரு வீடு திண்ணை**

**யாவும்**

**பணப் படிமங்களில்….. பரிவர்த்தனைப் பேரங்களில்**

**யானைக் காடுகள் புலி சிங்கக் குகைகள்**
**மான் முயல்கள் அடவிகள் பாம்பு எறும்பு புற்றுகள்**
**எங்கும் பாக்கியில்லாமல்**
**கைப்பற்றி விட்ட இலாப நோக்குகளின்**
**வர்த்தகக் கொடிகள் - சுருண்டும் விரிந்தும்**
**ஆதாம் ஏவாள் சந்ததி**
**பணத்தின்**
**நிர்வாணத்தை மறைத்து**
**நிர்வாணமாகி விட்டது**
**பணமே விற்றது; பணமே வாங்கியது**
**தீர்ந்து போனது மனிதப் பண்டம்"**

என்று ஆதாம் - ஏவாள் சந்ததிகள் நுகர்வுக் கலாச்சாரப் போக்கிற்கும், பணத்திற்கும் அடிமையாகி மனித நேயத்தை மறந்து போய்விட்டனர். பணம் மூலம் சுரண்டல் வாத பெரு முதலாளித்துவக் கலாச்சாரப் போக்கினால் சுற்றுச் சூழல் மீது கல்லெறிந்து விளையாடுபவர்களாக மாறிவிட்டதாகக் குற்றம் சுமத்துகின்றார்.

நகர்மயமாதலின் மற்றொரு விளைவு பேரங்காடிகள் எனப்படும் மால்கள். பெருநகரங்களில் ஆக்டோபஸ் கரங்களாக அமைந்து நுகர்வு கலாச்சாரத்தின் குறியீட்டுத் தன்மையுடன் இயங்கி வருகின்றது. பேரங்காடிகளில் இருந்து வெளிப்படும் குளிர் பதன வாயுக்கள், கழிவுகள் சுற்றுச் சூழல் மீது மாசடைய வைத்திடுகின்றன. நுகர்வு பொருள் தன்மையுடன் இயங்கி வரும் இத்தகு பேரங்காடிக் கலாச்சாரத்தினைத் தமிழன்பன் 'பெருமைமிகு பேரங்காடி அழைக்கிறது' என்னும் கவிதையில் பதிவு செய்கின்றார்.

**"விடியல் முதல் விடியல் வரை**
**கண் திறந்தும் கதவு திறந்தும் காத்திருக்கும்**
**மாபெரும் அங்காடி!**
**அமெரிக்கப் பேரங்காடிகளோடு**
**தொப்புள் கொடி உறவுடைய பேரங்காடி**
**பண தேவதை**
**ஒட்டு மொத்தப் புன்னகைக் கிடங்கை**
**உங்களுக்காக உருவாக்கி வைத்திருக்கிறாள்"**

என்று பேரங்காடிகளின் இயங்கிடும் காலத்தையும், அமெரிக்கா கலாச்சாரத்தின் தொடர்ச்சியாகவும், பண தேவதைகளின் புன்னகைக் கிடங்காகவும் இருப்பதாகத் தெரிவிக்கின்றார். பேரங்காடிகளில் கிடைத்திடும் பொருள்கள் குறித்து எள்ளல் தொனியுடன் தெரிவிக்கின்றார்.

**"நீங்கள் விரும்புவதைத் தருவோம்**
**உங்களுக்கே தெரியாது; பிறகு**

**நாங்கள் தருவதையே விரும்புவீர்கள்**
**நீங்கள் கேட்கும் விலைக்குத் தருவோம்**
**உங்களுக்கே தெரியாது; பிறகு**
**நாங்கள் சொல்லும் விலையைத்**
**தருவீர்கள்**
**இந்த அங்காடிக்குள் இருந்து**
**இந்த நாட்டையே அதற்குத் தெரியாமல்**
**எளிதாக விற்று விடலாம்**
**என்ன கிடைக்காது இங்கு?**
**அடுப்பு ஆணிகள் முதல் அணு ஆயுதங்கள் வரை**
**புத்தம் புதுப் பதிப்புகள்**
**அன்றாடம் விற்பனைக் காட்சிப்படுத்துகிறோம்**
**பூக்களை பார்க்கவோ**
**பூக்கும் காலை அந்தி நேரங்களைப் பார்க்கவோ**
**காத்திருக்க வேண்டியதில்லை**
**தரமான முறையில் அங்காடி உள்ளேயே**
**தயாரித்து வைத்திருக்கிறோம்”**

என்று பேரங்காடியில் கிடைத்திடும் பொருள்கள் குறித்து பட்டியலிடுகின்றார். இயற்கையினைக் கூட பேரங்காடிகள் தயாரித்துத் தருகின்றன. பொழுதுபோக்கு சூழலுக்கு உத்தரவாதம் அளித்திடும் பேரங்காடிகள் உயிர் போனால் அடக்கம் செய்திடவும் உதவுவதாக அங்கதப்படுத்துகின்றார்.

**“திரைப்படங்கள்**
**இரத்தத் தெறிப்புகள் முத்தப் பறிப்புகள்**
**மெல்லிசை வல்லிசைகள்;**
**குலுக்கு நடனங்கள்**
**அங்காடியின் பாதுகாப்பான அக்டோபஸ்**
**விரல்களுக்குள் பத்திரமாக இருந்து**
**அனுபவிக்கலாம்**
**எல்லாம் மூழ்கி விட்டால்**
**கரையில் எடுத்து போடவும், இலவசக்**
**கண்ணீர் விடவும் ஏற்பாடுகள் உண்டு**
**உள்ளயே**
**இடுகாடு கூட இருக்கிறது**
**நீங்கள் விரும்பினால் உயிரோடு நீங்கள்**
**இருக்கும் போதே உங்கள் சாம்பலை**
**உங்களுக்குத் தர எங்களால் முடியும்”**

என்று பேரங்காடியில் முழு மானிட வாழ்க்கையை வாழ்ந்திட முடியும். ஆனால், அதற்கு அடிப்படை மூலமாக அமைவது பணமாகும். வணிகப் பேரங்காடிகளின் நுகர்வு கலாச்சாரப் போக்கு இறந்த பிறகும் தொடர்வதாகவும் சித்திரிக்கின்றார்.

**“சாவு பற்றிய கவலையை**

**விட்டு விடுங்கள்; வாழ்வு பற்றிய கவலையை**

**விட்டு விட்டதைப் போல**

**நீங்கள் இறந்த பிறகும் கூட**

**விற்பது வாங்குவது என்னும் இந்த**

**அங்காடியின்**

**வாணிக நடவடிக்கையில்**

**வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்”**

என்று பேரங்காடிகள் நகர்மயமாதலின் வெளிப்பாடுகளாக அமைவதையும், நுகர்வு கலாச்சாரத்தின் குறியீடாக அமைந்து பணத்தையே முதன்மைத் தன்மை கொடுத்து செயல்படுவதையும் விமர்சனம் செய்கின்றார்.

**விண்ணின் மின்னணு கழிவுகள்**

புவியினைக் குப்பைத் தொட்டிகளாக மாற்றி சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிப்பது போன்று விண்ணையும் குப்பைத் தொட்டிகளாக மானுட சமூகமும் விஞ்ஞானமும் மாற்றி வருகின்றன. விண்ணில் ஏவப்படும் ராக்கெட்டுகள், செயற்கைக் கோள்கள் உரிய காலம் முடிந்ததும் வளிமண்டலத்தில் மின்னணுக் கழிவுகளாகத் தேங்கிக் கிடக்கின்றன. ஈரோடு தமிழன்பன் ‘அவலம் எப்போது அகலும்’ கவிதையில் போபால், செர்னோபில், ஃபுக்கு ரீமா ஆகியவற்றில் மட்டும் நஞ்சு கசிந்து மானிட இனத்தை நாசம் புரியவில்லை. இன்று அன்றாடம் பயன்படுத்தும் அரிசி, பருப்பு, காய்கறிகளில் பாசறை அமைத்து நச்சு தாதுக்கள் படர்ந்திருப்பதாக வேதனைப்படுகின்றார். புவியில் இந்நிலை என்றால் விண்வெளியிலும் நஞ்சு கலந்து வருவதாக வருத்தம் கொள்கின்றார்.

**“நம்**

**விண்வெளி ஆய்வு விளைச்சல்களால்**

**வேதிம மழைகள் மேக விபத்துக்கள்**

**சாத்தியமாகலாம்**

**செவ்வாய் கோளின் உடலிலும்**

**வியாழன் வயிற்றுக் குடலிலும் விரைவில்**

**கொப்புளங்கள் உண்டாகி**

**உடையலாம்**

**இரத்தமும் சீழ் பெருக்கெடுத்து நம்**

**பூமியை முழுதாய் மூடலாம்**

**ஆலைப் புகையில், வாகனப் புகையில்**

**ஆயிரம் ஆயிரம் இயந்திரங்களின் கழிவுப் புகையில்**

**ஆளை ஆள் எரிக்கும்**

**பொறாமைப் புகையில் மண்ணும் விண்ணும்**

**மாசடையலாம்"**

என்று மானுட இனமும், அறிவியல் விஞ்ஞானமும் விண்ணிலும் நச்சினைக் கலந்து வருவதாகப் பதிவு செய்கின்றார். விண்வெளி ஆய்வுகளின் தொடர்ச்சியாக எத்தகு சூழலியல் சீர்கேடுகளுக்கு மானுட இனம் ஆளாகிடப் போகிறதே என நெஞ்சம் பதைக்கின்றார். சுற்றுச் சூழலுக்கு ஏற்படுத்தும் நஞ்சினை விலக்கிட அறிவுறுத்துகின்றார்.

**தொகுப்புரை**

ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதையின் கவி போராளி. பன்முக சிந்தனை தேட்டத்துடன் அவரது கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. தமிழன்பன் சமூக அக்கறையுள்ள மகாகவி என்பதற்கு அடையாளமாக அவரது சுற்றுச் சூழல் சிந்தனைக் கவிதைகள் அமைகின்றன. இயற்கையில் நஞ்சு கலந்திடாமற் வாழ்ந்திட வேண்டும் என்பதே தமிழன்பனின் சூழலியல் கருத்தின் அடி நாதமாகும். இயற்கையோடு இயற்கையாக வாழும் போதே மனிதர்களுக்கு நல்வாழ்வு சாத்தியம் ஆகும்.

**"இயற்கையைப்**

**புரிந்து கொண்டதால் ஏற்பட்ட**

**இன்னல்கள்**

**இயற்கையைப்**

**புரிந்து கொள்ளாமையால்**

**ஏற்பட்டதைவிடக் குறைவு**

**விண்மண்டலத்தைப்**

**புரிந்து கொண்டோம் - நம்மால்தான்**

**விழுந்தன**

**ஓசோன் படலத்தில் ஓட்டைகள்**

**கடலின் ஆழம் அறிந்து கொண்டோம் - அதனால்தான்**

**அதன்**

**வயிறு கலக்கும் அணுக்கழிவுகள்"**

என்கின்றார். இறுதியாக, தமிழன்பனின் கவிதை சுற்றுச் சூழலுக்கு பிரகடனமாக அமைகின்றது.

**"இனி**

**இயற்கையிடமிருந்து**

**மனிதனைக் காப்பாற்றுவோம்**

**அப்படியே**

**மனிதரிடமிருந்தும்**

**இயற்கையைக்**

**காப்பாற்றுவோம்"**

என்பது சூழலியல் சிந்தனைகளுக்கு விதைக்கப்பட்ட விதையாகும். சூழலைக் காப்போம். மனித சந்ததிகளுக்கு மாசில்லா உலகையளிப்போம்:

**பார்வைநூல்கள்**:


| | | | |
|---|---|---|---|
| **கொடி காத்த குமரன்** | 1968 | கவிதை | முதல் கவிதைத் தொகுப்பு. (Google Books) |
| **சிலிர்ப்புகள்** | 1970 | கவிதை | இயற்கை, மனிதநேயம், சமூக உணர்வு மையமாக அமைந்த தொகுப்பு. (Google Books) |
| **தீவுகள் கரையேறுகின்றன** | – | கவிதை | சமூக மாற்றம் மற்றும் மனித வாழ்வை எடுத்துரைக்கும் கவிதைகள். (Wikipedia) |
| **காலத்திற்கு ஒருநாள் முந்தி** | – | கவிதை | புதுக்கவிதை பாணியில் எழுதப்பட்ட தொகுப்பு. (Wikipedia) |
| **அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம்** | – | கவிதை | சமூக நீதி மற்றும் சமத்துவக் கருத்துகள். (Wikipedia) |
| **ஊமை வெயில்** | – | கவிதை | மனித உணர்வுகள் மற்றும் வாழ்க்கைச் சிந்தனைகள். (Wikipedia) |
| **கருவறையிலிருந்து ஒரு குரல்** | – | கவிதை | பெண்மை, மனித உரிமை, சமூக விழிப்புணர்வு. (Wikipedia) |
| **பனி பெய்யும் பகல்** | – | கவிதை | இயற்கை மற்றும் மனித வாழ்க்கை பற்றிய கவிதைகள். (Wikipedia) |
| **திசை கடக்கும் சிறகுகள்** | – | கவிதை | இளைஞர்கள், எதிர்கால நம்பிக்கை, மனிதநேயம். (Wikipedia) |


References books


[1]. Kodi Kaatha Kumaran 1968 Poetry First poetry collection. (Google Books)
[2]. Silirppugal 1970 Poetry A collection centered on nature, humanism, and social consciousness. (Google Books)
[3]. Theevugal Karaiyerugindrana – Poetry Poems depicting social change and human life. (Wikipedia)
[4]. Kaalathirkku Oru Naal Munthi – Poetry A collection written in the modern poetry style. (Wikipedia)
[5]. Antha Nandhanai Eritha Neruppin Micham – Poetry Themes of social justice and equality. (Wikipedia)
[6]. Oomai Veyil – Poetry Human emotions and reflections on life. (Wikipedia)
[7]. Karuvaraiyilirunthu Oru Kural – Poetry Womanhood, human rights, and social awareness. (Wikipedia)
[8]. Pani Peyyum Pagal – Poetry Poems about nature and human life. (Wikipedia)
[9]. Disai Kadakkum Siragugal – Poetry Youth, hope for the future, and humanism. (Wikipedia)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 53.குறிஞ்சிப்பாட்டில் சுற்றுச்சூழல்

**முனைவர் தே. அனித்தா மேரி,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி – 02

https://orcid.org/0009-0004-6348-2710

**ஆய்வுக் கட்டுரைச் சுருக்கம்**

சங்க இலக்கியங்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டு இயற்கைச் சூழலை மிக நுட்பமாக எடுத்துரைக்கும் சிறந்த நூலாகும். இந்நூலில் குறிஞ்சி நிலத்தின் மலைகள், காடுகள், அருவிகள், ஆறுகள், மரங்கள், செடிகள், மலர்கள், பறவைகள் மற்றும் விலங்குகள் ஆகியவை உயிரோட்டத்துடன் சித்தரித்து காட்டப்படுகின்றன. அந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையை மதித்து, அதன் வளங்களை அளவோடு பயன்படுத்தியதை காணமுடிகிறது. அந்த வகையில் உயிரினங்கள் பன்முகத்தன்மையோடு வாழ்ந்ததும் பருவநிலை மாற்றங்களால் ஏற்பட்ட தாக்கங்களையும் இந்நூல் சுட்டிக்காட்டுகிறது. இதன்வாயிலாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது தனிமனிதரின் கடமை மட்டுமல்ல, சமூகத்தின் பொறுப்பும் ஆகும் என்பதை வலியுறுத்துகிறது.

**முன்னுரை**

ஆரிய அரசன் பிரகத்தன் என்பவருக்குத் தமிழின் பெருமை உணர்த்த வேண்டி இந்நூல் பாடப்பெற்றது. இதற்குப் பெருங்குறிஞ்சி என்றொரு பெயரும் உண்டு என நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். பிரகத்தன் தமிழரின் களவுநெறியைத் தீது என்றான். இது தவறு என்றும் கற்புநெறி நல்லது என்றும் தெளிவுபடுத்த இந்நூல் எழுதப்பட்டது. அந்த வகையில், பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டு மனித உணர்வுகளையும் மலைநிலத்தின் இயற்கை வளம், தாவரங்கள், விலங்குகள், பறவைகள், நீர்வளங்கள், காலநிலை ஆகியவற்றை மிக அழகாகச் சித்தரித்துக் காட்டுகிறது.

**குறிஞ்சிப்பாட்டின் சிறப்புகள்**

குறிஞ்சிப்பாட்டு பத்துப்பாட்டில் இடம்பெறும் சிறந்த அகப்பாடலாகும். 261 அடிகளைக் கொண்ட இந்நூல், குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளத்தையும் காதல் வாழ்வையும் எடுத்துரைக்கிறது. தமிழரின் காதல் மற்றும் கற்பு நெறியை விளக்குவதற்காகவே கபிலரால் இது பாடப்பட்டது. அறத்தொடு நின்ற தலைவியின் களவு ஒழுக்கத்தைத் தோழி செவிலித்தாய்க்கு வெளிப்படுத்தி, தலைவியைத் தலைவனுடன் சேர்த்து வைக்கும் மரப கூறப்படுவதை ,

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! ஒள் நுதல்,
ஒலி மென் கூந்தல், என் தோழி மேனி
விறல் இழை நெகிழ்த்த வீவு அருங் கடு நோய் (1-3)

என்று விவரிக்கிறது. மேலும் மலைநில மக்களின் வாழ்க்கை, தொழில், பண்பாடு, நம்பிக்கைகள் மற்றும் இயற்கைச் சூழலை,

நெல் கொள் நெடு வெதிர்க்கு அணந்த யானை,
முத்து ஆர் மருப்பின் இறங்குகை கடுப்ப,

துய்த் தலை வாங்கிய புனிறு தீர் பெருங் குரல்
நல் கோள் சிறு தினைப் படு புள் ஓப்பி, (35-39)

என்ற வரிகளில் மக்களின் வாழ்க்கை தரம் காட்டப்படுகிறது. இந்நூலை இயற்றிய கபிலர், இயற்கையை வெறும் காட்சிப் பொருளாக மட்டும் கருதாமல், மனித வாழ்வின் அடிப்படை அங்கமாகப் பதிவு செய்துள்ளார்.

**குறிஞ்சி நிலத்தின் இயற்கை அமைப்பு**

குறிஞ்சி என்பது மலை மற்றும் மலைச்சார்ந்த பகுதிகளைக் குறிக்கிறது. இது உயர்ந்த மலைகள், பாறைகள், பள்ளத்தாக்குகள், குளிர்ந்த காற்று, அருவிகள், நீரோடைகள், அடர்ந்த காடுகள் அமைந்த இயற்கை அமைப்பு கொண்டதை,

புலி அஞ்சு இதணம் ஏறி, அவண,
சாரல் சூரல் தகை பெற வலந்த,
தழலும் தட்டையும் குளிரும், பிறவும்,
கிளி கடி மரபின, ஊழ் ஊழ் வாங்கி, (41-44)

இயற்கை சூழல் பற்றியும் அதைச் சார்ந்து வாழும் பல்லுயிர்கள் பற்றயும் பேசுகிறது. மலைகளில் பொழியும் மழை, ஓடும் நீரோடைகள், பசுமையான காடுகள் ஆகியவை சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாக்கும் முக்கியக் கூறுகளாக விளங்குகின்றதை காணமுடிகிறது.

**தாவர வளம்**

குறிஞ்சிப்பாட்டில் ஏராளமான மரங்கள், செடிகள், கொடிகள் மற்றும் மலர்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. குறிஞ்சி மலர், வேங்கை, சந்தனம், மூங்கில், பலா, நெல்லி, இலுப்பை போன்ற பல தாவரங்கள் குறிப்பிடப்படுகின்றதை,

ஒண் செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண் கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங் கொடுவேரி, தேமா, மணிச்சிகை,
உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ், கூவிளம், (62-64)

என்று கபிலர் குறிஞ்சி நிலத்தில் வளரும் 99 வகையான மலர்களைப் பட்டியலிடுகிறார். இது அக்காலத்தின் உயிரினப் பன்முகத்தன்மையையும் தாவர வளத்தையும் காட்டுகிறது. இந்த தாவரங்கள் உயிரினங்களுக்கு உணவையும் வாழ்விடத்தையும் வழங்குகின்றன. மேலும், மலைப்பகுதிகளின் மண் அரிப்பைத் தடுக்கவும் மழையை ஈர்க்கவும் உதவுகின்றன. சங்ககால மக்கள் மரங்களைப் பாதுகாப்பது வாழ்க்கையின் ஓர் அங்கமாகக் கருதினர் என்பதையும் இந்நூல் உணர்த்துகிறது.

**விலங்கு மற்றும் பறவை வளம்**

குறிஞ்சிப்பாட்டில் யானை, புலி, மான், கரடி, குரங்கு, காட்டுப்பன்றி போன்ற பல்வேறு விலங்குகள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றுடன் மயில், கிளி, குயில், வானம்பாடி போன்ற பறவைகளும் இடம்பெறுகின்றதை,

வார் கோல்
உடு உறும் பகழி வாங்கி, கடு விசை,

அண்ணல் யானை அணி முகத்து அழுத்தலின்,
புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து இழிதர, (170-173)

போன்ற வரிகளில் விலங்குகள் வசிக்கும் சுழ்நிலையும் ஆபத்தையும் கபிலர் குறிப்பிடுகிறார். இது வனவிலங்கு பாதுகாப்பின் அவசியத்தையும்;. மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடும் தேனீக்களின் பங்கு மிக முக்கியமானது என்பதை இன்றைய அறிவியலும் உறுதிப்படுத்துகிறது இது போன்று உயிரினங்கள் சுற்றுச்சூழல் சமநிலையை நிலைநிறுத்துவதிலும்; பங்கு வகிப்பதன் அவசியத்தை குறிஞ்சிப்பாட்டு வலியுறுத்துகிறது.

**நீர்வளத்தின் முக்கியத்துவம்**

மலைகளில் தோன்றும் அருவிகள், ஓடைகள், சுனைகள் போன்ற நீர்நிலைகள் குறிஞ்சிப்பாட்டில் மிகுந்த அழகுடன் வர்ணிக்கப்படுகின்றன. நீரின்றி உயிர்கள் வாழ முடியாது என்பதை சங்ககால மக்களும் நன்கு உணர்ந்திருந்ததை

விசும்பு ஆடு பறவை வீழ் பதிப் படர,
நிறை இரும் பௌவம் குறைபட முகந்து கொண்டு,
அகல் இரு வானத்து வீசு வளி கலாவலின்,
முரசு அதிர்ந்தன்ன இன் குரல் ஏற்றொடு,
நிரை செலல் நிவப்பின் கொண்மூ மயங்கி, (46-49)

அருவிகளின் தூய்மை, நீரின் இனிமை, அதன் பயன்பாடு ஆகியவை இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கின்றன. நீர்வளமே வேளாண்மை, விலங்குகள் மற்றும் மனித வாழ்க்கையின் ஆதாரமாக விளங்குகிறது.

**காலநிலையும் சுற்றுச்சூழலும்**

குறிஞ்சி நிலத்தில் குளிர்ச்சியான காலநிலை நிலவுகிறது. பருவமழை, பனிமூட்டம், மேகங்கள், குளிர்காற்று ஆகியவை இயற்கையின் சமநிலையை வெளிப்படுத்துகின்றன. சரியான காலநிலை இல்லையெனில் தாவரங்களும் விலங்குகளும் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்நூல் உணர்த்துகிறது. இன்றைய காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைப் புரிந்துகொள்ளவும் சங்க இலக்கியங்கள் வழிகாட்டுகின்றன.

**மனிதனும் இயற்கையும்**

மலைவாழ் மக்கள் தேன் சேகரித்தல், தினை பயிரிடுதல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டாலும் இயற்கையை அழிக்காமல் பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் இயற்கையைத் தெய்வமாக மதித்து, அதன் வளங்களை அளவோடு பயன்படுத்தினர். இதுவே நிலையான வளர்ச்சிக்கான சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சிந்தனைகள்

குறிஞ்சிப்பாட்டில் நேரடியாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற சொல் இடம்பெறவில்லை. இருப்பினும், இயற்கை வளங்களை மதித்துப் பயன்படுத்துதல், உயிரினங்களைப் போற்றுதல், காடுகளைப் பாதுகாத்தல், நீர்வளத்தைச் சீராகப் பயன்படுத்துதல் போன்ற கருத்துகள் இடம்பெறுகின்றன. இவை அனைத்தும் இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கொள்கைகளோடு ஒத்துப்போகின்றன. மனிதன் இயற்கையை நேசித்தால் மட்டுமே நிலையான வாழ்க்கையை

அடைய முடியும் என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. இன்று உலகம் சுற்றுச்சூழல் மாசுபாடு, வன அழிவு, நீர் பற்றாக்குறை, உயிரின அழிவு, புவி வெப்பமடைதல் போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறது. இந்நிலையில் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறும் இயற்கை பாதுகாப்புச் சிந்தனைகள் மிகவும் பயனுள்ளவை. மரம் நடுதல், நீரைச் சேமித்தல், விலங்குகளைப் பாதுகாத்தல், காடுகளை வளர்த்தல், இயற்கை வளங்களை வீணாக்காமல் பயன்படுத்துதல் போன்ற செயல்களை அனைவரும் பின்பற்ற வேண்டும். சங்க இலக்கியங்கள் கூறும் இயற்கை நெறிகளை நடைமுறைப்படுத்தினால் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முடியும்.

முடிவுரை

குறிஞ்சிப்பாட்டு என்பது காதலை மட்டுமல்ல, இயற்கையையும் சுற்றுச்சூழலையும் போற்றிப் பாதுகாக்கும் உயரிய சிந்தனைகளைக் கொண்ட சங்க இலக்கியமாகும். மலைநிலத்தின் இயற்கை வளம், தாவரங்கள், விலங்குகள், நீர்வளங்கள், காலநிலை மற்றும் மனித வாழ்க்கை ஆகிய அனைத்தையும் ஒன்றிணைத்து சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை கபிலர் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறார். இன்றைய உலகில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிகப்பெரிய சவாலாக உள்ள நிலையில் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறும் இயற்கை நேசமும் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் பண்பும் அனைவருக்கும் வழிகாட்டியாக அமைகின்றன. எனவே சங்க இலக்கியங்கள் கூறும் சுற்றுச்சூழல் நெறிகளைப் பின்பற்றி இயற்கையைப் பாதுகாப்பது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். இயற்கை பாதுகாக்கப்பட்டால்தான் மனித வாழ்வும் வளமாகவும் நிலையானதாகிறது.

**கலைச்சொற்கள்**

1. சுற்றுச்சூழல் - மனிதனையும் பிற உயிரினங்களையும் சூழ்ந்துள்ள இயற்கை அமைப்பு
2. உயிரினப் பன்முகத்தன்மை - பல்வேறு வகையான தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிரிகள் ஆகியவற்றின் வளம்
3. இயற்கை வளம் - மனிதனுக்குப் பயன்படும் இயற்கையின் கொடைகள்
4. சூழலியல் - உயிரினங்களுக்கும் அவற்றின் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான உறவை ஆராயும் அறிவியல்
5. சூழலியல் சமநிலை - இயற்கை அமைப்பில் உயிரினங்களும் சூழலும் சமநிலையில் இயங்கும் நிலை

4.வனஅழிவு - காடுகள் அழிக்கப்படுதல் அல்லது குறைவடைதல் 5. நீர்வளம் - ஆறுகள், அருவிகள், ஏரிகள், சுனைகள் போன்ற நீர் ஆதாரங்கள்

6. மண் அரிப்பு - மண் இயற்கையாகவோ மனிதச் செயல்களாலோ சிதைந்து போதல்

7. காலநிலை மாற்றம் - நீண்டகாலமாக காலநிலையில் ஏற்படும் மாற்றம்

**துணைநூற்ப்பட்டியல்**

[1.] **ஷிஃபா.** *குறிஞ்சிப்பாட்டு*. கௌரா பதிப்பகக் குழுமம்.

[2.] **மறைமலையடிகள்.** *குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சியுரை*. தமிழ்மண் பதிப்பகம்.

[3.] **மார்க்கபந்து சர்மா.** *குறிஞ்சிப் பாட்டு*. பாரி நிலையம்.

[4.] **கதிர் முருகு.** *குறிஞ்சிப்பாட்டு - முல்லைப்பாட்டு*. கௌரா பதிப்பகக் குழுமம்.

# 54.சுற்றுச்சூழல் நோக்கில் சங்கப் பாடல்கள்

**முனைவர் நே.க. ஹேம்லின் ஐடா,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கன்னியாகுமரி, செல் -9488426549

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் மனிதனை இயற்கையில் இருந்து பிரிக்காமல் அவனது வாழ்வியலையும் உணர்வுகளையும் இயற்கைச் சூழலோடு இணைத்தே பார்க்கின்றன. நிலம், வெளி, பண்பாடு என இவை அனைத்தும் சுற்றுச்சூழலை ஒட்டியே அமைந்து விளங்குவதை அப்பாடல்கள் கவனப்படுத்துகின்றன. குறிப்பாக நிலத்தை ஐவகையாக பகுத்தும் அந்தந்த நிலங்களுக்கேற்ற காலம் வாழிடச் சூழல், மக்கள், தாவரங்கள், விலங்குகள், நீர் என இவை அனைத்தும் சுற்றுச்சூழலில் தன்மையில் பகுத்தும் தொகுத்தும் பேணப்பட்டுள்ளதைச் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. இன்றைய சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் முன் வைக்கும் பெரும்பாலான கொள்கைகளையும், தரவுகளையும் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. இதனை ஓர் எல்லைக்குள் நின்று இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது. மக்களின் தாவரவியல் அறிவு, உயிரியல் நுண்ணறிவு, திணைப்பாகுபாடு, நீர் நில மேலாண்மை, இயற்கைப் பாதுகாப்பு என இவை குறித்த மிகச்சிறந்த வெளிப்பாட்டுக் கருவியாக இலக்கியத்தைக் கையாண்ட பெருமை தமிழர்களுக்கு உண்டு. சங்க இலக்கியத்தில் பொதிந்துள்ள இத்தன்மைகளை ஆராய்ந்து வெளிப்படுத்துகிறது கட்டுரை. கட்டுரையின் எல்லை கருதி சுற்றுச்சூழல் குறித்த சில வகைத் தரவுகளை மட்டுமே இக் கட்டுரையில் கவனப்படுத்தியுள்ளது. சூழல் சார்ந்த அடிப்படைப் புரிதல்களை மட்டுமே மையமாகக் கொண்டிருப்பதால் விரிவான ஆய்வை கூறும் புள்ளிகளாக இக்கட்டுரை அமைகிறது.

**கலைச்சொற்கள்**

சுற்றுச்சூழல் - Environment சூழலியல்-Ecology திணைப்பாகுபாடு - Landscape classification

உயிரியல் நுண்ணறிவு - Biological Awarness தாவரவியல் அறிவு -Botanical Knowledge நீர் நில மேலாண்மை - Water conservation

**முன்னுரை**

ஒவ்வொரு மனிதனும் காற்று, நீர், மண், மலை, விலங்குகள், தாவரங்கள் மற்றும் பிற மனிதர்களால் சூழப்பட்டுள்ளான். இவை அனைத்தும் ஒன்றிணைந்து சுற்றுச்சூழலை உருவாக்குகின்றன. சுற்றுச்சூழல் என்பது இயற்கை வளங்களை உள்ளடக்கியது. மனிதன் இவ்வுலகில் வாழ சுற்றுச்சூழலும் அதன் தகவமைப்பில் இயங்க வேண்டியது மிக அவசியமானதாகும். காரணம் சுற்றுச்சூழலும் உயிரினங்களின் வாழ்க்கையும் தற்சார்புடன் இயங்குவதே இவ்வுலகின் இயக்கத்திற்குக் காரணமாகும். அவ்வகையில் மனிதர்கள் புறச் சூழலை அதாவது சுற்றுச்சூழலைப் புரிந்து கொண்டு இயங்குவது மிக முக்கியமானதாகும். எந்த வகையான பண்பாட்டுச் சமூகமும் தன்னைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலைத் தன் வாழ்வியலில் ஒரு பகுதியாக்கிக் கொண்டும் அதனைப் புரிந்து கொண்டும் செயல்படும். அவ்வகையில் பண்டைய தமிழ்ச் சமூகமும் பின்வருவதை முன் உணர்ந்து சூழல் பாதுகாப்பில் அதிக அக்கறை கொண்டு விளங்கி இருக்கிறது என்பதைச் சங்கப்பாடல்கள் கொண்டு உணர முடிகிறது.

“மண் திணிந்த நிலனும்,
நிலம் ஏந்திய விசும்பும்,
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்,
தீ முரணிய நீரும், என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்” (புறம்.2 : 1-6)

என்று இயற்கைச் சூழலைப் புரிந்து பாடிய தமிழ்பெருங்குடியைச் சார்ந்த முரஞ்சியூர் முடிநாகனாரின் வரிகளை இயற்கைச் சூழல் பற்றிய புரிதலின் முன் உதாரணமாகக் கூறலாம். இங்கிருந்து தொடங்கும் தமிழ்ச் சங்க இலக்கியப் பரப்புங்கும் சூழல் பற்றிய புரிதலின் வெளிப்பாட்டை அவதானிக்க முடிகிறது. தற்கால அறிவியலின் ஆழங்கால் பட்டறிவின் தரவு நிலைச் சான்றுகளை நாம் அதில் தேட முடியாது மாறாக அடிப்படைப் புரிதல் என்ற நேர்கோட்டில் மட்டுமே சங்கப் பாடல்களை இப்பார்வையில் நாம் அணுக வேண்டும். என்ற கருதுகோளினையும் முன்வைத்து இக்கட்டுரை நகர்கிறது.

**சுற்றுச்சூழல் பற்றிய விளக்கம்**

சுற்றுச்சூழல் என்பது ஒரு உயிரினத்தை வாழவைக்கும் அதனைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற காரணிகளின் தொகுப்பாகும் என்பது பொதுவான கருத்தாகும். புவியின் சமநிலை, உயிரினங்களின் இருப்பு, மற்றும் அதன் செயல்பாடுகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு அறிஞர்கள் சுற்றுச்சூழல் குறித்து பல்வேறு விளக்கங்களைக் கூறுகின்றனர்.

“எந்த ஒரு உயிரினத்தையும் அதன் சுற்றுச்சூழலில் இருந்து பிரிக்க முடியாது. இவ்விரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்து இயங்குகின்றன” என்று சுற்றுச்சூழலின் அடிப்படையை வரையறுக்கிறார் ஆறுமுகம். (2016:3)

“மனிதனைச் சூழ்ந்துள்ள மற்றும் அவனுக்குப் பிற உயிரினங்கள், தாவரங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான உறவை உள்ளடக்கிய வெளிப்புற நிலைமைகளின் மொத்த கூட்டுத்தொகையே சுற்றுச்சூழல் ஆகும்” என்கிறார் எம். ஜே ஹெர்கோவீட்ஸ் (2012:13)

“உயிரினங்கள் வாழும் சூழ்நிலையை வரையறுக்கும் இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட கூறுகள் இரண்டையும் உள்ளடக்கியது சுற்றுச்சூழல் ஆகும். இது காற்று, நீர், நிலம் மற்றும் பல்லுயிர் போன்ற கூறுகளைக் கொண்டுள்ளது” என்று சுற்றுச்சூழல் குறித்து யுனெஸ்கோ (UNESCO )விளக்கம் அளித்துள்ளது.

சுற்றுச்சூழல் என்ற சொல்லைச் சமூகச் சூழல், பொருளாதாரச் சூழல், அரசியல் சூழல் என்ற வேறு வேறு துறைகளுக்கும் விரிக்கலாம் என்றாலும் இயற்கையை ஒட்டிய சூழல் சார்ந்த கற்கை நெறிக்கே இச்சொல் பொருந்தி வருகிறது எனலாம்.

**சங்கப் பாடல்களில் சுற்றுச்சூழல்**

சங்கப் பாடல்களில் மண்ணின் தன்மை, மழையின் பெருமை, நீரின் அருமை, பறவை விலங்குகளின் செயல்பாடுகள், தாவரங்களின் பெருக்கம், மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பின் விளைவுகள் ஆகியவற்றை இலக்கியச் செறிவோடு கருத்துப் புதுமையோடு கலந்து விவரிப்பதைக் காண முடிகிறது. சங்க இலக்கியங்களில் பொதிந்து கிடைக்கும் இத்தகைய அறிவியல் உண்மைகளை வாழ்வியல் பயன்பாட்டுக் கருத்துக்களை இயற்கைச் சூழலோடு எடுத்து உணர்த்தும் போது அவை இன்னும் மேம்பாடும் சூழல் பற்றிய புதிய சிந்தனைகளையும் புலப்படுத்துகின்றன.

இலக்கியம் என்பது கற்பனை, உவமை, உருவக அணிநயம், மொழிக்கலை என்ற எல்லைகள் தாண்டி பண்பாடு, கலாச்சாரம், அறிவியல், மானுடவியல் போன்ற பல்வேறு பிற துறைக் கூறுகளைக் கவனித்து எடுத்துரைக்கும் போது அது அற்புதக் கருவூலமாகத் திகழ்கிறது. சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் சூழல் பற்றிய கருத்துக்களை ஒப்பவைத்து நோக்கி சங்கத்தமிழர் தம் சுற்றுச்சூழல் அறிவு மேம்பாட்டை வெளிப்படுத்த முடியும்.

தற்காலத் தாவரவியலாளர்கள் உலகம் முழுவதும் உள்ள தாவரங்களைத் தொகுத்து மண்டலம், பிரிவு, துணை பிரிவு, வகுப்பு, துணை வகுப்பு, துறை, குடும்பம், பேரினம், சிற்றினம் என்று வகைப்படுத்துகின்றனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் கார்ல் லின்னேயஸ் என்பவர் தாவரங்களின் புற அமைப்பின் அடிப்படையில் தாவரப் பகுப்பை மேற்கொண்டார். இது பல குறைபாடுகள் கொண்டதாக அறிஞர்களால் கருதப்படுகின்றது. இருப்பினும் இன்றும் அவர் பாராட்டப் பெறுகிறார். ஆனால் "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே... (தொல். 1526) என்ற அமைப்பின் அடிப்படையில் தொல்காப்பியர், தாவரப் பகுப்பில் மேற்கொண்ட அறிவியல் அறிவு இன்னும் அறிஞர்களால் கவனிக்கப்படாத தாகவே இருக்கிறது. பண்டைக் காலத்தில் தமிழகத்தில்

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

காணப்பட்ட தாவரங்கள் அறிவியல் சார்ந்த நிலையில் பல்வேறு வகுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன தொல்காப்பியர்,

"புறக் காழனவே புல் என மொழிப
அகக் காழனவே மரம் என மொழிப" (தொல். 630-631)

என்றவாறு தாவர தொகுதிகள் முழுவதையும் புறத்தே உறுதியானவற்றைப் புல் எனவும் அகத்தே உறுதியானவற்றை மரம் எனவும் இரு நிலைகளில் பகுத்துக் காண்கிறார். இன்று மரம் என்று கருதக்கூடிய தென்னை, பனை முதலானவற்றை அவர் புல்லென அறிவியல் நுட்பத்தோடு குறிப்பிடுகின்றார். ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தொல்காப்பியரது இச்சிந்தனை சுற்றுச்சூழல் அறிவில் மிக நுட்பமாக அமைகிறது. இருவித்திலை வகையில் காணப்படும் அனைத்து தாவரங்களையும் குறிக்கும் வகையில் தொல்காப்பியர் மரம் என்ற சொல்லைப் பயன்படுத்துவது இங்குச் சுட்டதக்கது.

**காலச்சுழல்**

தமிழர்கள் பகுத்துக் கொண்ட காலச்சுழல் மிக நுட்பமானது. அவை சங்க இலக்கியங்களில் மிக நேர்த்தியாகப் பதிவு செய்யப்படுகின்றன. காலம் உணர்தல் என்பது சூழல் அறிவியலில் மிக முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் சூழல் மாறுபாட்டிற்கும் காலத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. அவ்வகையில் பண்டைத் தமிழர்கள் ஒரு ஆண்டு காலத்தைச் சூழல் நிலைப்பாட்டிற்குத் தக்க ஆறு கூறுகளாகப் பிரித்து நோக்குகின்றனர்.

| | | |
|---|---|---|
| இளவேனில் | - | சித்திரை, வைகாசி |
| முதுவேனில் | - | ஆனி, ஆடி |
| கார் | - | ஆவணி, புரட்டாசி |
| கூதிர் | - | ஐப்பசி, கார்த்திகை |
| முன்பனி | - | மார்கழி, தை |
| பின்பனி | - | மாசி, பங்குனி |

என காலச்சூழலைப் பகுத்துக் கொண்ட திறன், சூழல் பற்றிய புரிதலின் வெளிப்பாடாக உள்ளது. இவற்றை ஆண்டின் பகுதிகளாகவும் நாளின் பகுதிகளாகவும் கொண்டு பெரும்பொழுது சிறுபொழுது என்று நிலத்தின் அடிப்படையில் வரையறுத்திருக்கின்றனர். இப்பருவங்களுக்கு என சில தாவரங்கள் உள்ளன. நுணா, கோங்கம், அதிரல், பாதிரி, புன்கம், மரா, குரவம் போன்ற பல தாவரங்கள் இளவேனில் காலத்திற்கு உரியன. உரிய காலத்தில் தலைவியிடம் திரும்பி வருவேன் என்று கூறிய தலைவன் வேனிற் காலத்தில் திரும்புகிறான். குறித்த காலத்தில் வராத நிலையில் தலைவி தன்னைச் சுற்றி உள்ள இயற்கை நிகழ்வுகள் வேனிற் காலத்திற்கு உரியதான இருப்பைச் சுட்டி தலைவன் வராத நிலையைக் கூறுவதாக வரும் சங்கப் பாடல்கள் இயற்கையின் சூழலோடு பொருந்தி வருகின்றன.

"பொரிகால் மாஞ்சினை புதைய
எரிகால் இளந்தளிர் ஈனும் பொழுதே" (ஐங்.349:2-3)

என்றவாறு வெப்பத்தால் வாடிய அடிப்பகுதியை உடைய மாமரம் இளவேனிற் காலத்தில் தீயைப் போன்ற தோற்றத்தில் புதிய தளிர்களுடன் தோற்றமளிக்கிறது. வேனிற்காலத்தின் தொடக்கத்தில் வேப்பம் பூக்கள் முழுதும் வீழ்ந்து நிலத்தில் படிந்து காணப்படுகின்றன. என்று சூழல் மாறுபாட்டின் நிலையை ஐங்குறுநூறு அழகாக வெளிப்படுத்துகிறது.

முதுவேனிற் காலத்திலும் சில தாவரங்களின் வளர்ச்சி காணப்படுகின்றது. அவ்வாறான வளர்ச்சிகளும் சங்கப் புலவர்களால் பல பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

"சேண் உயர்ந்து ஓங்கிய வான் உயர் நெடுங் கோட்டுக்
கோடை வெவ் வளிக்கு உலமரும்
புல் இலை வெதிர நெல் விளை காடே " (அகம். 397 :13- 15)

என்ற அகநானூற்றுப் பாடல் மிக உயர்ந்த மலைகளில் ஓங்கி வளர்ந்திருக்கும் மூங்கில்களில் கொடிய மேல் காற்றின் காரணமாக நெல் விளைவது சுட்டப்படுகின்றது. சிறிய இலையையும் பருத்த அடியையும் கொண்ட நெல்லியின் புளிப்பை உடைய காயினைக் காட்டில் இளைய மரைமானின் கூட்டம் உண்ணுகின்ற வேனிற்கால வெப்பமிக்க வழி. என நெல்லி காய்த்தலும்

அகநானூற்றில் சுட்டப்பட்டுள்ளது. (அகம். 69) கால் அடிப்படையில் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகை தாவரங்கள் முளைவிட்டு தழைத்த வளர்கின்றன. குறிப்பிட்ட காலங்களில் நன்றாக வளரும் சில தாவரங்கள் கால மாற்றம் ஏற்படும்பொழுது உறக்க நிலைக்குச் சென்று விடுவதாக அறிவியலாளர் குறிப்பிடுகின்றனர். இச்சிந்தனை சங்க இலக்கியப் பாடல்களிலும் காணப்படுவது சிறப்பானது.

“தழங்குகுரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்
கிழங்குடைய வெல்லாம் முளைக்குமோ ராற்றால்
விழைந்தவரை வேர்சுற்றக் கொண்டொழுகல் வேண்டா
பழம்பகை நட்பாதல் இல்.” (பழமொழி நானூறு 97 )

என்னும் பழமொழி நானூறு பாடல் வரிகளால் கிழங்குடைய தாவரங்கள் மழை பெய்ததும் முளைத்து வெளியே வரும் நிலை சுட்டப்படுகிறது. கார்காலத்தில் புதியதாகத் தோன்றுகின்ற புதுப்பித்துக் கொள்கின்ற பூக்கின்ற தாவரங்கள் நிறைய உள்ளன. இவை பற்றிய பல தகவல்களைச் சங்க இலக்கியம் கூறுகிறது.

“எல்லை கழிய, முல்லை மலர,
கதிர் சினம் தணிந்த கையறு மாலை,
உயிர் வரம்பாக நீந்தினம் ஆயின்,
எவன்கொல் வாழி? தோழி!
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே!” (குறுந். 387)

என்றவாறு கதிரவனின் ஒளி மறையவும் முல்லைப் பூக்கும் காலமாகக் கார்காலத்தைக் காட்டுகின்றது குறுந்தொகை. உயிர்களை நடுக்கத்திற்கு உள்ளாக்குகின்ற கொடிய குளிரை உடைய கூதிர் காலத்தில் மலரும் தாவரங்கள் பற்றிய செய்தி நெடுநல்வாடையில் காணப்படுகிறது.

“புன் கொடி முசுண்டைப் பொதிப்புற வான் பூ,
பொன் போல் பீரமொடு, புதல் புதல் மலர” (நெடு.13-14)

என்ற நெடுநல்வாடையின் வரிகள் புல்லிய கொடியாகிய முசுண்டையில் திரண்ட புறத்தை உடைய பூவானது பொன் போல் பீர்க்கம் பூவுடன் சேர்ந்து புதர்கள் தோறும் மலர்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகிறது.

சங்க இலக்கியங்களில் விலங்குகளைப் பற்றிய புரிதலும் சூழல் பற்றிய ஒரு பகுதியாகவே உள்ளன. விலங்குகள் ஒன்றை ஒன்று சார்ந்து இருக்கும் நிலை சூழலில் காணப்படும் மிக முக்கியமான தன்மையாக அமைகிறது. ஒன்றைஒன்று உணவாகக் கொள்வதற்கான சார்பு நிலை ஒரு புறம் இருக்க ஒரே வகையான உணவுப்பழக்கம் உள்ள தாவர உண்ணிகளிடையே கூட இச்சார்பு நிலை காணப்படுவதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. குரங்குகள் மரத்தில் இருந்து கொண்டு தளிர், பூ, காய், கனி போன்றவற்றை உதிர்க்க அவற்றைக் கீழிருக்கும் மான்கள் உண்ணும் நிலை சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன.

“ஊழுறு தீங்கனி யுதிர்ப்பக் கீழிருந்
தேற்பன வேற்பன வுண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே.” (குறுந்.278:5-7)

தொலைவில் கொடிய விலங்குகளான வேங்கை,சிறுத்தை போன்ற விலங்குகள் வருவதைக் கண்ட குரங்குகள் தங்களை விலங்கிடமிருந்து காப்பாற்றிக் கொள்கின்றன அதற்கு ஒரு வகையான ஒலியை எழுப்பி பிற உயிரினங்களை எச்சரிக்கின்றன. அந்த எச்சரிக்கை ஒலியைக் கேட்ட மான்களும் ஓடித் தப்பிக்கின்றன. இவ்வகையான சார்பு நிலை உடைய விலங்குகளின் செயல்களைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

சங்கப் பாடல்களில் வானியல், மழை,கடலியல் மாற்றம், காற்றின் தன்மை போன்ற சூழல் சார்ந்த இயற்கைக் கூறுகளையும் அழகாக வெளிப்படுத்திக் காட்டி உள்ளன. அண்டவெளியில் பல்வேறு வகையான விண்பொருட்கள் காணப்படுகின்றன. கதிரவன் முதலான பல விண்மீன்கள், விண்மீன்களின் ஈர்ப்பு விசைக்கு உட்பட்ட கோள்கள், துணைக்கோள்கள், பாறைகள், தூசி துணுக்குகள் போன்ற பலவும் காணப்படுகின்றன, இத்தகைய பல விண்பொருட்களைப் பற்றிய ஒரு சில தகவல்கள் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன.

வெள்ளிக் கோள் மழைக்கோள் எனக் கருதப்பட்டு அது செல்லுகின்ற பாதையின் நிலையினைக் கொண்டு வறட்சி தோன்றுவதைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

"வெள்ளி தென் புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை" (புறம். 388 :1- 2 )

வெள்ளி தென்புளத்தில் உறைந்தமையால் நீரின்றி விலை வயல்கள் வாடி காணப்படுகின்றன என்று பதிவாகியுள்ள கருத்து தமிழரின் வானியல் அறிவைச் சங்க இலக்கியப் பாடல்களின் வழியாகக் காண முடிகிறது.

கதிரவனிடமிருந்து பிரிந்து வந்த உலகமானது படிப்படியாகக் குளிர்ந்து வந்து பிற்காலத்தில் மிகப் பெரும் மழை பெய்து, பூமி மிக விரைவில் குளிர் வடைவதற்குக் காரணமாக இருந்தது மழை.அத்துடன் நீருக்கான மூலாதாரமாகவும் இச்செயல்பாடு அமைந்தது. இவ்வுலகில் அனைத்து உயிர்களும் இதன் வழியாக உருவாக்கம் பெற்றன. இதுவே சூழலில் அறிஞர்களின் பூமி தோற்றம் பற்றிய தேற்றமாக உள்ளது. இதனை அப்படியே கூறியுள்ளது சங்க இலக்கியம்.

"நீரின்றி அமையாது உலகெனின்" ( குறுந்தொகை)

"மாரியுமுண்டு ஈண்டு உலகு புரப்பதுவே" (புறம்.107:4)

என்ற வரிகள் எல்லாம் மழை பற்றிய சூழலில் சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்து இருப்பதைக் காணலாம். அதைப்போல மழையானது கடல் நீரை முகர்ந்து நிறைந்த கருப்பங் கொண்ட மேகம் மின்னலுடன் சேர்ந்து வலப்பக்கமாக எழுந்து ஒலியுடன் மழையாகப் பொழியும் என்று அகநானூறு சுட்டுவதும் மழை பற்றியபுரிதலின் வெளிப்பாடே ஆகும்.

**முடிவுரை**

இவ்வாறு சங்க இலக்கியங்களில் சூழல் பற்றிய சிந்தனைகள் தாவரங்கள், விலங்குகள், உயிர் சூழல் மண்டலம் இவற்றுக்கிடையேயான உறவு நிலை எனச்சூழல் பற்றிய சிந்தனைகளை அளிக்கின்றன. இத்துடன் இவை அனைத்தும் சூழலோடு கொண்டுள்ள உறவு நிலை பற்றிய புரிதல்களையும் நடைமுறையைப் பின்பற்றி அமைந்துள்ளன. வளிமண்டலம் காற்று உயர்சாரா மண்டலம் மழை போன்ற பல சூழலியலின் தன்மைகள் நடைமுறை வாழ்க்கையோடு பொருந்தியவாறு அமைந்திருக்கின்றன. இயற்கைச் சூழலைத் தமிழர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அதன் அமைப்பிற்கு ஏற்ப செயல்பாடுகளுக்கு ஏற்ப தகவமைத்து வாழ்கின்ற வாழ்வைச் சூழலில் சார்ந்த சிந்தனையே தரும். இதனைதா தெளிவாகக் கூறுகின்றன சங்க இலக்கியங்கள்.

**பார்வை நூல்கள்**

1. சாமி, பி.எல்., சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, 1967.
2. சாமி, பி.எல்., சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை,1970.
3. சாமி, பி.எல்., இலக்கியத்தில் அறிவியல், சேகர் பதிப்பகம், சென்னை, 1982.
4. ஆறுமுகம், குமரேசன் சுற்றுச்சூழல் கல்வி, சாராஸ் பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், 2005.
5. Kormondy Edward.J.Concepts of Ecology, Jay print pack private limited, New Delhi 55, 1991.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 55.சங்க அகப்பாடல்களில் நீர்

**முனைவர் பா. இமாகுலேட்,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி 620 002, Phone No: 8754884622

Mail Id:imaculate@hcctrichy.ac.in, Orcid: https://orcid.org/0000-0002-4741-7976

Orcid: https://orcid.org/0000-0002-4741-7976

**ஆய்வுச்சுருக்கம்:**

சங்க காலத்தில் நீர் மேலாண்மை என்பது வேளாண்மை, குடிநீர், மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையை அடிப்படையாகக் கொண்டு அறிவியல் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டது. சங்ககாலச் சமுதாயம் நீர்நிலைகளை அமைத்து அவற்றை வேளாண் பாசனத்திற்குப் பயன்படுத்தி உணவினை உற்பத்தி செய்து நிலையான வாழ்க்கைக்கு வித்திட்ட சமுதாயம். இச்சமுதாயத்தின் திணை நிலை வாழ்வைப் புலப்படுத்தும் சங்கப்பாக்களை பொருண்மையின் அடிப்படையில் பிரித்துப் பார்க்கும்போது அவற்றை அகம், புறம் எனும் நிலைக்களங்களில் கூறலாம். இதில் அகம் என்பது காதலையும், புறம் என்பது வீரத்தையும் குறிக்கின்றது. ஒரு நாட்டின் நீர் நிலைகளை பாழ்படுத்தும் போது, அங்குள்ள மக்கள் குடிநீர் கிடைக்காமல் இன்னல்களுக்கு உள்ளாவார்கள். மனிதன் உணவின்றி கூட சில நாட்கள் வாழ்ந்த விட முடியும். ஆனால் குடிப்பதற்கு நீரின்றி; ஒரு நாள் கூட இயல்பாக இருக்க முடியாது. சங்க கால மக்களின் வாழ்க்கையில் அகம், புறம் என்ற இரு கூறுகளிலும் நீர் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

**முன்னுரை:**

சங்க இலக்கியப் பாடல்களை அகம், புறம் என இருவகைகளாகப் பகுக்கலாம். அகம் என்பது காதலையும், புறம் என்பது வீரத்தையும் குறிக்கின்றது. தலைவன், தலைவி தம் அக வாழ்க்கையில் நீர் ஓர் ஊடகமாகத் திகழ்கின்றது. தலைமக்களின் சந்திப்பிற்குக் காரணியாகவும், நட்பின் ஆழத்தை குறிப்பிடும் உவமையாகவும், குறியிடமாகவும், களவுக் கூட்டம் நடைபெறும் இடமாகவும் நீர்த்துறை விளங்குகின்றது. களவு வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்ததோடு மட்டுமின்றி, கற்பு வாழ்க்கையிலும் நீரின் பங்கு குறிப்பிடத்தகுந்ததாக அமைகின்றது. கார்காலமும், மழையும் பிரிந்திருக்கும் தலைமக்களின் சந்திப்பிற்குரிய காரணியாகத் திகழ்கின்றது. இல்லற வாழ்வில் தலைவியுடனும், பரத்தையுடனும் தலைவன் நீராடுமிடமாகவும், தலைவன் சூளுரை மேற்கொள்ளும் இடமாகவும் நீர்த்துறை விளங்குகின்றது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**அகப்பாடல்களில் நீர்:**

சங்க இலக்கியங்களில் பெரும்பாலான பாடல்கள் அக்கால மக்களின் அகவாழ்க்கையைப் பற்றி வெளிப்படுத்துவனவாக உள்ளன. அவற்றுள் அக இலக்கியங்களில் நீரானது மக்கள் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்ததாக உள்ளது. சங்கப்பாடல்கள் பெரும்பாலானவற்றில் நீர் உவமையாகவும் குறியீடாகவும் குறிப்புப் பொருளாகவும் ஏதேனும் ஒரு வடிவத்தில் எடுத்தாளப்படுகின்றது. ஆகப்பாடல்கள் என்பன தலைவன், தலைவி காதலைக் குறிக்கின்றது. இவர்களுடையக் காதல் வெளிப்படுத்துவதையும், தலைவன் தலைவியை களவில் சந்திப்பதையும் தலைவன் நீரின் நட்பினை வெளிப்படுத்துவதும் தலைவி மகிழ்வதும் பரத்தை தலைவனொடு புனலாடுவதும் போன்ற நிகழ்வுகள் மூலம் அறிய முடிகிறது.

**களவு நிலையில் நீர்:**

ஒத்த தலைவனும் தலைவியும் வாழ்ந்த வாழ்க்கையில் நீருக்கு முக்கிபங்குண்டு தலைவன், தலைவியர் தம் பண்பு நலன்களைப் பற்றிப் பாராட்டுமிடத்தில் நீருடன் ஒப்புமைப்படுத்திப் பாராட்டப் பெறுகின்றதனை,

**"சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள் நீர் ஓரன்ன சாயல்"!** [1]

என்ற கபிலர் பாடலில் தலைவியின் மென்மைத்தன்மை நீருடன் ஒப்புமைப்படுத்தப் பெறுகின்றது. இதுபோல் தலைவனின் நலனும் நீருடன் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.

**"நீர் அன நிலையன்பேர் அன்பினன்"** [2]

என்ற நற்றிணைப் பாடல்வரி தலைவன் நீர் போன்ற இனிய தன்மையுடையவன் என்பதை எடுத்துரைப்பதை அறியலாம்.

**இயற்கைப் புணர்ச்சியில் சந்தித்தல்:**

தோழிகளுடன் ஆற்றில் நீராடச் சென்ற தலைவி கான்யாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிறாள். அங்கு வந்த தலைவன் தலைவியைக் காப்பாற்றிக் கரை சேர்க்கிறான். இந்நிகழ்ச்சியில் தலைவி தலைவன் மீது காதல் கொள்கிறாள், என்பதை,

**"பொரி அரைக் கோங்கின் பொன் மருள் பசு வீ**
**விரி இணர் வேங்கையொடு வேறுபட மிலைச்சி**
**விரவு மலர் அணிந்த வேனில் கான் யாற்றுத்**
**தேரோடு குறுக வந்தோள்**
**பேரொடு புணர்ந்தன்று அன்னை இவள் உயிரே"** [3]

என்ற பாடலும்,

**"காமர் கடும்புனல் கலந்து எம்மோடு ஆடுவாள்**
**தாமரைக் கண் புதைத்து அஞ்சித்தளர்ந்து அதனோடு ஒழுகலான்**
**நீள்நாக நறுந்தண்தார் தயங்கப் பாய்ந்து அருளினால்**
**பூண் ஆகம் உறந்தழீஇப் போத்தந்தான் அகன் அகலம்**
**வருமுலை புணர்ந்தன என்பதனால் என் தோழி**
**அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே"** [4]

என்ற சங்கப்பாடலும் தலைவி தோழியருடன் நீராடச் சென்ற இடத்தில் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதாகவும், அதனால் அங்கு வந்த ஒருவன் அவளைக் காப்பாற்றிக் கரை சேர்தத்தாகவும், அதன் விளைவாக தலைவி அவன் மீது காதல் கொண்டதாகவும் தோழி கூறுகின்றாள். தலைவன் தலைவி சந்திப்பு விதிவசத்தால் நிகழக்கூடியது. சந்திப்பிற்குரிய நிகழ்ச்சியும் இயல்பானதாக அமையும். இப்படிப்பட்ட தலைவன் தலைவி சந்தித்துக் காதல் கொள்வதற்கு நித்துறைக் காரணமாக அமைந்ததை மேற்கண்ட பாடல்கள் வழி அறிய முடிகின்றது.

**தலைவனின் பெருமை:**

தலைமக்களின் சந்திப்பிற்குக் காரணமாக அமைந்த நீர்நிலை அவர்களின் நட்பின் ஆழத்தைக் குறிப்பதற்குரிய உவமையாகவும், குறியீடாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளதனைச். சங்கப்பாடல்கள் பதிவு செய்துள்ளது.

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவின்றே - சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"** [5]

என்ற தலைவி கூற்றுப்பாடலாக அமைந்துள்ள தேவகுலத்தார் பாடல் தலைவனோடு தலைவி கொண்ட நட்பு நிலத்தைவிடப் பெரியதாகவும், வானை விட உயர்ந்ததாகவும், நீராகிய கடலை விட

ஆழமானதாகவும் குறிப்பிடப்பெறுகின்றது. இதன் மூலம் தலைவன் தலைவயின் உறவு நிலைக் குறியீடாக நீர் நிலை அமைந்துள்ளதை அறியமுடிகின்றது. மேலும் மற்றொரு பாடல் நீரை உவமித்துத் தங்கள் அன்பின் ஆழத்தைப் புலப்படுத்தும் தலைவி கூற்றுப் பாடலொன்று காணப்படுகின்றது.

**"நீர் இன்று அமையா உலகம் போலத்**
**தாம்இன்று அமையா நம் நயந்தருளி" [6]**

என்ற நற்றிணைப்பாடலில் தலைவி கூற்றுப் பாடல், நீரின்று இவ்வுலகம் அமையாது அது போல தலைவன் இல்லாமல் தான் இல்லை என்று கூறுவதன் வழி தலைவன் மீது தான் கொண்ட அன்பின் ஆழத்தைக் குறிப்பிட நீரினை உவமையாக்கியமை புலப்படுகின்றது.

உலகமே தலைகீழாகப் புரண்டாலும் தலைவன் மீது தான் கொண்ட அன்பு மாறாதது என்று கூறும் தலைவி கூற்றுப் பாடலும் காணப்படுகின்றது. இதனை,

**"நிலம்புடை பெயரினும் நீர் திரிந்து பிறழினும்**
**இலங்குதிரைப் பெருங்கடற்கு எல்லை தோன்றினும்**
**வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்**
**கேடு எவன் உடைத்தோ தோழி?" [7]**

மலைநாடனொடு நான் கொண்ட நட்பு நிலம் தலைகீழாகப் பெயர்ந்தாலும், நீரின் தட்பம் நெருப்பிற்கும், நெருப்பின் வெம்மை நீருக்குமாக மாறினாலும், பெரிய கடல்வற்றி அழியும் காலம் தோன்றினாலும், கொடிய வாயினை உடைய பெண்கள் கூறும் அலர் மொழிகளுக்கு அஞ்சிக் கெடுதல் இல்லை என்று தலைவி கூறுவதாக அமைந்துள்ள பாடல் தலைவன் மீது தலைவி கொண்ட அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தக் கூடியதாக அமைகின்றது. இவ்வாறு நிர்த்துறையில் சந்திப்பு நிகழ்ந்ததனையும், நீரை விட ஆழமானதாக தலைமக்களின் வாழ்வில் அன்பு அமைந்துள்ளதனையும்அறியமுடிகிறது.

**குறி அமைத்தல்:**

தலைமக்களின் காதல் வாழ்க்கையில் இருவரும் சந்தித்துக் கொள்ளும் இடத்தினை 'குறியிடம்' என்று கூறுவர். குறிகள் பகற்குறி, இரவுக்குறி என இருநிலைகளில் அமையும். இரவுக்குறி தலைவியின் இல்லத்திலோ அல்லது இல்லத்திற்கருகாமையிலோ அமையும். பகற்குறி மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத பகுதிகளில் நிகழ்ந்துள்ளது. இது தினைபுனம், நிர்த்துறை ஆகிய இடங்கள் பகற்குறியிடங்களாக அமைந்துள்ளன.

**"ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்**
**சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே**
**இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும்**
**துன்னல் போகின்றால் பொழிவே யாம் எம்**
**கூழைக்கு எருமணம் கொணர்கம் சேறும்**
**ஆண்டு வருகுவள் பெரும் பேதையே" [8]**

என்ற குறுந்தொகைப் புலவர் மாதிர்த்தனார் பாடல், ஊர்க்கு அண்மையில் பொய்கை உள்ளது. சிறிய காட்டாறும் பொய்கைக்குப் பக்கத்தில் தான் உள்ளது. அந்த ஆற்றங்கரைக்கு வெள்ளிநாரை மட்டுமே வரும் வேறு எவரும் அங்கு வரமாட்டார்கள். எனவே தலைவியை அங்கு சந்தித்துக் கொள் என்று தோழி தலைவனுக்கு குறியிடத்தைச் சுட்டுவதாக மேற்கண்ட பாடல் அமைகின்றது.

பொய்கையும், ஆற்றங்கரையும் அருகில் அமைந்தும் பொய்கைக்கு மக்கள் வருவர் அதனால் அதனைக் குறியிடமாகக் கொள்ள இயலாது. எனவே, தோழி தலைவனிடம் ஆற்றங்கரைப் பொழில் தலைவியைச் சந்திக்கும் இடமாக கூறுகின்றாள் இதன் வழி நீர்துறை குறியிடமாக்கப்பட்டதை அறிய முடிகின்றது.

**நீர்துறையில் களவுக் கூட்டம்:**

தலைவன் தலைவி தம் களவுப் புணர்ச்சி நீர்த்துறைக்கு அருகில் நிகழ்ந்துள்ளது. இதனைக் கபிலரின் குறுந்தொகைப்பாடல் ஒன்று பதிவு செய்கின்றது. களவுப் புணர்ச்சியில் ஈடுபட்ட தலைவன் விரைவில் வந்து திருமணம் செய்து கொள்வதாகக் கூறிச் சூளுரைத்துச் சென்றவன் இதுவரை வரவே இல்லை. இதனால் மனமுடைந்த தலைவி வருந்துவதை,

**"யாரும் இல்லை, தானே கள்வன்**
**தான்அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ?**
**தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால**
**ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்**
**குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே"** [9]

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. தலைவன் என்னைக் களவில் மணந்த காலத்தில் அறிந்தவர்கள்; ஒருவரும் இலர். தலைவனாகிய கள்வன் ஒருவன்தான் இருந்தான். அவன் களவுக்காலத்தில் செய்த சூளுரையிலினின்று தப்புவானாயின் என்னால் எதுவும் செய்ய இயலாது. ஓடுகின்ற நீரில் செல்லும் ஆரல் மீனின் வருகையை உண்பதற்காகப் பார்த்திருக்கும் நாரை மட்டுமே அங்கு இருந்தது என்று ஆரல் பார்க்கும் குருகினைத் தலைவி கூறியமையால் களவுக்கூட்டம் நீர்த்துறையின் அருகே நிகழ்ந்தமை புலப்படுகின்றது. இவ்வாறு களவுக்காலத்தில் தலைவன் தலைவியின் சந்திப்பு, குறியிடம், களவுக்கூட்டம் போன்ற வாழ்வியல் நிகழ்ச்சிகளோடு நீர்நிலை ஒன்றித்து இருந்ததை விளங்குகின்றது. இது மட்டுமின்றி கற்பு வாழ்விலும் நீரின் பங்கு அதிகம்.

**கற்பு வாழ்வில் நிர்:**

களவு வாழ்வில் தலைவன் தலைவி இருவரும் சந்தித்து தன் காதலை எவ்வாறு உறுதியுடன் நிலைத்து வாழ்ந்தார்களோ, அதனைப் போல கற்பு வாழ்விலும் நீர் முக்கிய ஊடகமாகத் திகழ்கிறது. தலைவனை மீண்டும் இல்லத்திற்குக் கொண்டு செல்லும் பணியினைக் கார்ப்பருவமே செய்கின்றது. கார்ப்பருவம் வந்தும் தலைவன் வராததால் தலைவி வருந்துவதை,

**"இலங்கு வளை நெகிழ்ந்த கலங்கு அஞர் என்னி**
**நகுவது போல மின்னி**
**ஆர்ப்பது போலும் இக் கார்ப் பெயற்குரவே"** [10]

என்ற நற்றிணை புலவர் கருவூர்க்கோசனார் பாடல் மழையானது, தலைவன் தலைவியின் பிரிவுத்துயரை அதிகரிப்பதாகக் கூறுகின்றது. இல்லற வாழ்க்கைக்காகத் தலைவன் பொருள் தேடிச் செல்கிறான். தலைவனுடைய பிரிவால் தலைவியின் தோள்வளை நெகிழ்ந்தது. தலைவியின் இத்தகையத் துன்பத்தைக் கண்டு இழிந்து நகைப்பது போன்று வானம் மின்னி ஆரவாரம் செய்து மழைப் பொழிவதாகத் தலைவி வருந்துகின்றாள். தலைவன் கார்ப்பருவ வருகையை எண்ணி மகிழ்கிறான் இதனை,

**"நின் நுதல் நாறும் நறுந் தண் புறவில்**
**நின்னே போல மஞ்ஞை ஆல**
**கார் தொய்கின்றால் பொழுதே**
**பேர் இயல் அரிவை நாம் நயத்தகவே!!"** [12]

என்ற ஐங்குறுநாற்றுப் பாடலில் தலைவனின் மகிழ்வை எடுத்துரைப்பதாக உள்ளது. பொருள் தேடச்சென்று கார் காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற தலைவனின் வருகையை எதிர்பார்த்துத் தலைவி வருந்துவதையும், தலைவன் கார்ப்பருவத்தில் தலைவியை காணச் சென்றிடுவோம் என்று எண்ணி மகிழ்வதையும் சங்கப்பாடல்கள் வழி அறிய முடிகின்றது. **"மனைவியைப் பிரித்து செல்லும் கணவர் தை, மாசி மாதங்களிலோ அல்லது சித்திரை,**

**வைகாசி மாதங்களிலோ வீட்டினின்று புறப்பட்டுச் சென்று ஆடி, ஆவணி மாதங்களில் திரும்பி வருவார்கள். மாசியிலிருந்து ஆடிவரையுள்ள காலம் குறிப்பாகப் பங்குனியிலிருந்து ஆடி வரையுள்ள காலம் தமிழ்நாட்டில் கோடை காலமாகும்"** [13] என்ற கார்த்திகேசு சிவத்தம்பியின் கூற்று இங்கு பொருத்தமுடையதாக அமைந்துள்ளது.

துணையைப் பிரிந்தோரை ஒன்று சேர்ப்பது மழை என்பதை,

**"இன் துணைப் பிரிந்தோர் நாடித்**
**தருவது போலும் இப்பெரு மழைக் குரலே"** [13]

என்ற நொச்சி நியமங்கிழார் பாடல் எடுத்துரைக்கிறது. பொருள் தேடிச் சென்ற தலைவனின் பிரிவாற்றாது தலைவி வருத்தமுற்று மழையைக்கண்ட பின்னேனும் தலைவன் தன்னைத் தேடிவருவான் என்று குறிப்பிடுவதன் வாயிலாக தலைவன் தலைவியர் தம் இல்லற வாழ்க்கைக்கான ஊடகமாக மழைக்காலம் நிகழ்வதை அறிய முடிகின்றது.

**பரத்தையுடன் புனலாடுதல்:**

இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளக் காலத்தில் தலைவனுக்கு பரத்தையர் தொடர்பு சங்க காலச் சமூகத்தில் இயல்பானதாக அமைந்துள்ளது. தலைவன் பரத்தையுடன் நீராடியதை ஊரார் கூறக்கேட்ட தலைவி தலைவனிடம் ஊடல்கொள்வதாக அகநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது.

**"போதுஆர் கூந்தல் நீவெய் யோளொடு**
**தாதுஆர் காஞ்சித் தண்பொழில் அகல்யாறு**
**ஆடினை என்ப பொருதை அவரே ஐ"** [14]

இதில் மரங்கள் நிறைந்தச் சோலை சூழ்ந்த அகன்ற ஆற்றில் நேற்று புனலாடினாய் என்று பலர் கூறினர். இதனால் ஊரின்கண் அலர் எழுந்தது என்பதன் வழி தலைவன் பரத்தையுடன் புனலாட்டில் ஈடுபட்டதை அறியமுடிகிறது.

**சூளுரைத்தல்:**

தலைவன் பரத்தையுடன் புனலாடிய செய்தி கேட்டு ஊடல் கொண்ட தலைவியிடம் இனிப்பரத்தையர் தொடர்பை விரும்பேன் என நீர்த்துறையின் மீது குளுரைத்ததாக அமைந்துள்ள,

**"அம்ம வாழி தோழி! மகிழ்நன்**
**கடன் அன்று என்னும் கொல்லோ! நம் ஊர்**
**முடம் முதிர் மருதத்துப் பெருந்துறை**
**உடன் ஆடு ஆயமொடு உற்ற குளே"** [15]

என்ற பாடலில் தலைவன் தலைவியோடு புதுப்புனல் ஆடி மகிழ்ந்த போது அவள் தோழியர் முன்னிலையில் இனிப் பரத்தையர் தொடர்பை விரும்பேன் என்று நீர்த்துறையில் குளுரை செய்தான் என்று தலைவி கூறுவதன் வாயிலாக தலைவன் தலைவிக்கு நீர்த்துறையில் குளுரைத்த செய்தியை அறிய முடிகின்றது.

**தொகுப்புரை:**

சங்க இலக்கியப் பாடல்களை அகம், புறம் என இருவகைகளாகப் பகுக்கலாம். அகம் என்பது காதலையும், புறம் என்பது வீரத்தையும் குறிக்கின்றது. தலைவன், தலைவியின் அக வாழ்க்கையில் நீர் ஓர் ஊடகமாகத் திகழ்கின்றது. தலைமக்கள் தம் சந்திப்பிற்குக் காரணியாகவும், நட்பின் ஆழத்தை குறிப்பிடும் உவமையாகவும், குறியிடமாகவும், களவுக் கூட்டம் நடைபெறும் இடமாகவும் நீர்த்துறை விளங்குகின்றது. களவு வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்ததோடு மட்டுமின்றி, கற்பு வாழ்க்கையிலும் நீரின் பங்கு குறிப்பிடத்தகுந்ததாக அமைகின்றது. கார்காலமும், மழையும் பிரிந்திருக்கும் தலைமக்களின் சந்திப்பிற்குரிய திகழ்கின்றது. இல்லற

வாழ்வில் தலைவியுடனும், காரணியாகத் பரத்தையுடனும் தலைவன் நீராடுமிடமாகவும், தலைவன் சூளுரை மேற்கொள்ளும் இடமாகவும் நீர்த்துறை விளங்குகின்றது.

**சான்றெண் விளக்கம் / உரைச்சுட்டு (In-Text Citations / Notes)**

1. (*குறுந்தொகை* 95: 3-4)
2. (*நற்றிணை* 347: 8)
3. (*ஐங்குறுநூறு* 367: 1-5)
4. (*கலித்தொகை* 39: 1-6)
5. (*குறுந்தொகை* 3: 1-4)
6. (*நற்றிணை* 1: 6-7)
7. (*குறுந்தொகை* 373: 1-4)
8. (*குறுந்தொகை* 113: 1-6)
9. (*குறுந்தொகை* 25: 1-5)
10. (*நற்றிணை* 214: 10-12)
11. (*ஐங்குறுநூறு* 413: 1-4)
12. (சிவத்தம்பி 69)
13. (*நற்றிணை* 208: 11-12)
14. (*அகநானூறு* 246: 5-7)
15. (*ஐங்குறுநூறு* 31: 1-4)

**துணைநூற்பட்டியல் (Works Cited)**

MLA விதிகளின்படி துணைநூற்பட்டியல் ஆசிரியர் / உரையாசிரியரின் இயற்பெயர் அகரவரிசையில் (Alphabetical Order) அமைக்கப்பட வேண்டும்.


- சிவத்தம்பி, கார்த்திகேசு. *பண்டைத் தமிழ்ச்சமூகம்*.
- சோமசுந்தரனார், பொ. வே., உரையாசிரியர். *குறுந்தொகை*. 2-ஆம் பதிப்பு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2009.
- துரைசாமிப் பிள்ளை, ஔவை சு., உரையாசிரியர். *ஐங்குறுநூறு*. 2-ஆம் பதிப்பு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2009.
- நச்சினார்க்கினியர், உரையாசிரியர். *கலித்தொகை*.
- நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் அ., உரையாசிரியர். *நற்றிணை*. 2-ஆம் பதிப்பு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2009.
- வேங்கடசாமி நாட்டார், ந. மு., மற்றும் ந. மு. வேங்கடாச்சலம் பிள்ளை, உரையாசிரியர்கள். *அகநானூறு*. 2-ஆம் பதிப்பு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2009.


.

# 56.சூளாமணிக் காப்பியத்தில் சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்

**முனைவர் பா.சு.தீபா,**
உதவிப்பேராசிரியர்,தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி(தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி-620001. அலைபேசி-8300152578
மின்னஞ்சல்-deepabs@nct.ac.in

**ஆய்வுச்சுருக்கம்**
தமிழ் இலக்கியங்கள் இயற்கையையும் மனித வாழ்வையும் ஒன்றோடொன்று இணைந்த வாழ்வியலாகக் கருதுகின்றன. சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை சுற்றுச்சூழல் குறித்த சிந்தனைகள் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன. அவற்றுள் சமணக் காப்பியமான சூளாமணி, அறநெறி, மனிதநேயம், இயற்கைப் பாதுகாப்பு, நீர்வளம், நிலவளம் விலங்குகள் மற்றும் பறவைகள் மீதான அக்கறை போன்ற பல சூழலியல் சிந்தனைகளை எடுத்துரைக்கும் சிறந்த காப்பியமாக விளங்குகிறது.

இன்றைய உலகில் காலநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல், உயிரின அழிவு, நீர் மாசுபாடு, வன அழிப்பு போன்ற சுற்றுச்சூழல் சிக்கல்கள் அதிகரித்து வரும் நிலையில், தமிழ்க் காப்பியங்களில் காணப்படும் சூழலியல் சிந்தனைகளை மீளாய்வு செய்வது அவசியமாகிறது.

**திறவுச் சொற்கள்**
சூளாமணி, சுற்றுச்சூழல், சூழலியல், இயற்கை, உயிரினப் பன்மை, சமண இலக்கியம், நீர்வளம், வனவளம், சுற்றுச்சூழல் அறம், தமிழ்க் காப்பியங்கள்.

**கலைச் சொற்கள்**
உயிர்க்கோளம், பல்லுயிர் பெருக்கம், வாழிடம், சுற்றுச்சூழல், சூழலியல், சூழல் மண்டலம்.

**முன்னுரை**
இயற்கை மனித வாழ்வின் முதன்மை ஆதாரமாக விளங்குகிறது. மனிதன் தோன்றுவதற்கு முன்பே இயற்கை இருந்தது. மனித நாகரிகம் உருவான பிறகும் இயற்கையே அதன் அடித்தளமாக அமைந்தது. எனவே மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயான உறவு பிரிக்க முடியாத ஒன்றாகும். இவ்வுறவைத் தமிழ் இலக்கியங்கள் தொன்மை காலத்திலிருந்தே ஆழமாகப் பதிவு செய்துள்ளன. சங்க இலக்கியங்களில் நிலம், நீர், மலை, காடு, கடல், மரங்கள், விலங்குகள், பறவைகள் ஆகியவை மனித வாழ்க்கையுடன் இணைந்த கூறுகளாகக் காணப்படுகின்றன. அந்த மரபு காப்பிய இலக்கியங்களிலும் தொடர்கிறது. குறிப்பாக சமணக் காப்பியங்கள் உயிர்களிடையே சமத்துவத்தை வலியுறுத்துவதோடு, இயற்கையைப் பாதுகாப்பதும் அறத்தின் ஒரு பகுதியாகும் என்ற சிந்தனையை எடுத்துரைக்கின்றன.

ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்றான சூளாமணி அறம், அகிம்சை, உயிர்நேயம், இயற்கை வளங்கள், உயிரினங்களின் வாழ்வியல் போன்ற பல்வேறு கருத்துக்களை ஒருங்கிணைத்த இலக்கியமாகும். இதில் இயற்கை ஒரு பின்னணிக் காட்சியாக அல்லாமல், கதை நகர்வின் அங்கமாகவும், மனித ஒழுக்கத்தை வழிநடத்தும் கூறாகவும் அமைகிறது . சூளாமணி போன்ற காப்பியங்கள் மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ வேண்டிய நெறியை வலியுறுத்துவதால், அவை இன்றைய சுற்றுச்சூழல் ஆய்வுகளிலும் முக்கிய இடம் பெறுகின்றன.

**சுற்றுச்சூழல், சூழலியல் – கருத்தியல் விளக்கம்**
"சுற்றுச்சூழல்" என்பது மனிதனைச் சுற்றியுள்ள இயற்கை மற்றும் சமூகக் கூறுகளின் ஒட்டுமொத்த அமைப்பைக் குறிக்கிறது. நிலம், நீர், காற்று, தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிர்கள், பருவநிலை, உயிரினப் பன்மை போன்ற அனைத்தும் சுற்றுச்சூழலின் அங்கங்களாகும். இக்கூறுகள் ஒன்றையொன்று சார்ந்துள்ள உறவுகளே ‘‘சூழலியல்’’ எனப்படுகின்றன.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

தமிழ் இலக்கியங்களில் "சுற்றுச்சூழல்" என்ற சொல் நேரடியாகப் பயன்படுத்தப்படாவிட்டாலும், அதன் கருத்து சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை பரவலாகப் பதிவாகியுள்ளது. தொல்காப்பியத்தின் ஐந்திணை கோட்பாடு மனித வாழ்க்கையை இயற்கை நிலப்பரப்புகளோடு இணைத்து விளக்குகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப்பிரிவுகள் புவியியல் அமைப்புகளாக மட்டுமன்றி, மனித உணர்வுகள், வாழ்வியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்த சூழலியல் அமைப்புகளாக விளங்குகின்றன.

**வானிலங் கருவிய வரையு முல்லைவாய்த்**
**தேனிலங் கருவிய திணையுந் தேறல்சேர்**
**பானலங் கழனியுங் கடலும் பாங்கணி**
**நானிலங் கலந்துபொன் னரலு நாடாதே. (சூளாமணி.12)1**

இப்பாடல் தமிழரின் நால்வகை நிலங்களில் காணப்படும் வளங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து சுவர்க்கம் போல விளங்கியது சுரமை நாடாகும் எனக் குறிப்பிடுகிறது.இந்த மரபின் தொடர்ச்சியாக *சூளாமணி* க் காப்பியமும் இயற்கை வளங்களைப் பேணுதல், உயிர்களை மதித்தல், இயற்கை வளங்களை அளவோடு பயன்படுத்துதல் போன்ற சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.

**சூளாமணியில் இயற்கைச் சூழலின் பதிவுகள்**

சூளாமணிக் காப்பியத்தில் இயற்கை வெறும் பின்னணிக் காட்சியாக அமையவில்லை. கதை மாந்தர்களின் வாழ்வியலையும், பண்பாட்டையும், சமூக அமைப்பையும் வெளிப்படுத்தும் உயிர்ப்பு மிக்க இலக்கியக் கூறாக விளங்குகிறது.காப்பியத்தில் நகரங்களின் செழிப்பு வர்ணிக்கப்படும் இடங்களில் மரங்கள், மலர்ச்சோலைகள், குளங்கள், ஆறுகள், தோட்டங்கள், வயல்வெளிகள் ஆகியவை தவறாமல் இடம்பெறுகின்றன.

**கைவி ரிந்தன காந்தளும் பூஞ்சுனை**
**மைவி ரிந்தன நீலமும் வான்செய்நாண்**
**மெய்வி ரிந்தன வேங்கையுஞ் சோர்ந்ததேன்**
**நெய்வி ரிந்தன நீளிருங் குன்றெலாம். (சூளாமணி.17)2**

இப்பாடல் காந்தள், நீலம், வேங்கை போன்ற மலர்கள் மலைகளில் பூத்துக் குலுங்குவதாகவும் தேனை சொரிவதாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இயற்கையின் ஒவ்வொரு கூறும் உயிர் வளத்தை உருவாக்கும் சக்தியாகக் காப்பியத்தில் சித்தரிக்கப்படுகிறது. மரங்கள் மனிதனுக்குப் பயன் அளிக்கும் பொருளாக மட்டுமல்லாமல், பறவைகள் தங்கும் இடமாகவும், விலங்குகளின் வாழ்விடமாகவும், மழையை ஈர்க்கும் இயற்கை வளமாகவும் கருதப்படுகின்றன.

இவ்வகையான பார்வை, நவீன சூழலியல் கோட்பாட்டுடன் ஒப்பிடத்தக்கதாக அமைகிறது. ஒரு உயிரினத்தின் வாழ்வு மற்ற உயிரினங்களையும் இயற்கை வளங்களையும் சார்ந்துள்ளது என்ற சிந்தனை சூளாமணியின் பல பகுதிகளில் வெளிப்படுகிறது.

**நீர்வளமும் சூழலியல் சமநிலையும்**

பழந்தமிழர் நாகரிகத்தின் அடித்தளம் நீர்வளமாகும். *இக்*காப்பியமும் நீரின் இன்றியமையாமையை பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறது. ஆறுகள், ஏரிகள், குளங்கள், பொய்கைகள், நீரூற்றுகள் ஆகியவை வெறும் புவியியல் கூறுகளாக அல்லாமல், சமூகத்தின் பொருளாதார வளத்தையும் பண்பாட்டையும் நிர்ணயிக்கும் காரணிகளாகச் சித்தரிக்கப்படுகின்றன. நீரைச் சுற்றி மரங்கள் வளர்கின்றன; மரங்களைச் சுற்றி பறவைகளும் விலங்குகளும் வாழ்கின்றன. அவற்றின் வழியே மனித வாழ்வும் வளம் பெறுகிறது என்ற இயற்கைச் சுழற்சியை ஆசிரியர் நுட்பமாக உணர்த்துகிறார். மழை, ஆறு, நிலத்தடி நீர் ஆகியவை பாதுகாக்க வேண்டிய பொதுச் சொத்து என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது

**தாவர வளமும் வனப் பாதுகாப்பும்**

*சூளாமணிக்* காப்பியத்தில் பலவகை மரங்கள், மலர்கள், கொடிகள், கனிவகைகள், மூலிகைகள் ஆகியவை இயற்கை வளத்தின் அடையாளங்களாக இடம்பெறுகின்றன. அவை வெறும் அலங்காரக் கூறுகளாக அல்லாமல், உயிர்களை வாழவைக்கும் இயற்கை அமைப்பின் பகுதிகளாகக் கருதப்படுகின்றன.

**கோமான்சென் றணைதலுமே கொங்கணிந்த மலர்துவித்**
**தேமாநின் றெதிர்கொள்ளச் சிறுகுயில்போற் றிசைத்தனவே**
**வாமான்றேர் மன்னற்கு மங்கலஞ்சொன் மகளிரைப்போல்**
**தூமாண்ட விளங்கொடிதந் தளிர்க்கையாற் றொழுதனவே.**

**(சூளாமணி.169)3**

காடுகள் குறித்து வரும் வருணனைகளில் மரங்கள், கொடிகள், பறவைகள், விலங்குகள் ஆகியவை ஒன்றோடொன்று இணைந்த வாழ்வியலாகச் சித்தரிக்கப்படுகின்றன. மேலும், மலர்களின் மருத்துவ குணம், மரங்களின் நிழல், கனிகளின் பயன் மூலிகைகளின் மருத்துவத் தன்மை போன்றவை இயற்கை வளங்களை மதித்து பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்**றன.**

**சூளாமணியில் உயிரினப் பன்மையும் சூழலியல் சமநிலையும்**

சுற்றுச்சூழல் ஆய்வுகளில் "உயிரினப் பன்மை" என்பது ஒரு பகுதியின் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை அளவிடும் முக்கியக் கூறாகக் கருதப்படுகிறது. ஒரு சூழலில் பல்வேறு தாவரங்கள், விலங்குகள், பறவைகள், பூச்சிகள் மற்றும் நுண்ணுயிர்கள் இணைந்து வாழும்போதுதான் அந்தச் சூழலின் இயற்கைச் சமநிலை நிலைபெறும். இத்தகைய உயிரினங்களின் சார்பை அறிவியல் இன்று வலியுறுத்தினாலும், அதன் அடிப்படைச் சிந்தனைகள் தமிழின் காப்பிய மரபிலேயே காணப்படுகின்றன.

*சூளாமணி*க் காப்பியத்தில் இயற்கை வளங்கள் விவரிக்கப்படும் இடங்களில் மரங்களும் மலர்களும் மட்டுமன்றி, அவற்றைச் சார்ந்து வாழும் பறவைகள், விலங்குகள், தேனீக்கள் போன்ற உயிரினங்களும் இணைந்து சித்தரிக்கப்படுகின்றன. இதன்மூலம் இயற்கை என்பது தனித்தனி கூறுகளின் தொகுப்பல்ல. அவை ஒன்றை ஒன்று சார்ந்த உயிரியல் அமைப்பாகும். மனிதன் இயற்கையின் உரிமையாளர் அல்ல, அதன் ஒரு அங்கம் என்ற பார்வை இக்காப்பியத்தின் சூழலியல் சிந்தனையின் மையமாக அமைகிறது

சமண சமயத்தின் மிக முக்கியமான அறநெறி அகிம்சை ஆகும். அகிம்சை என்பது மனிதனை மட்டுமல்ல,எல்லா உயிர்களையும் துன்புறுத்தாமல் வாழ்வதாகும். இந்த அறநெறி சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான அடிப்படை ஒழுக்கமாகவும் அமைகிறது. *சூளாமணிக்* காப்பியத்தில் உயிர்க்கொலை தவிர்த்தல், உயிர்களை இரக்கத்துடன் அணுகுதல், தேவையற்ற வன்முறையை விலக்குதல் போன்ற கருத்துகள் இடம் பெறுகின்றன. இவை வெறும் சமயப் போதனைகளாக இல்லாமல்,உயிர்ச் சூழலைக் காக்கும் வாழ்வியல் நெறிகளாகவும் விளங்குகின்றன. அனைத்து உயிர்களுக்கும் சமமதிப்பு உண்டு என்ற கருத்து சமணத் தத்துவத்திலும் காணப்படுகிறது.

**முடிவுரை**

மனிதன் இயற்கையை வென்று ஆட்சி செய்ய வேண்டியவன் அல்ல; இயற்கையுடன் இணைந்து வாழ வேண்டியவன் என்பதே தமிழரின் தொன்மையான சிந்தனையாகும். *சூளாமணி* க் காப்பியமும் இதையே வலியுறுத்துகிறது. இக்காப்பியத்தில் நகரங்களின் செழிப்பு இயற்கை வளங்களின் செழிப்போடு இணைத்தே விளக்கப்படுகிறது. வளமான ஆறுகள், நீர்நிலைகள், செழித்த வயல்கள், நிழல் தரும் மரங்கள், மலர்ச்சோலைகள் ஆகியவை ஒரு நல்ல சமூகத்தின் அடையாளங்களாகக் காட்டப்படுகின்றன.

இதிலிருந்து பொருளாதார முன்னேற்றமும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல; மாறாக ஒன்றையொன்று சார்ந்தவை என்ற கருத்து வெளிப்படுகிறது.

இதனால் *சூளாமணி*யை ஒரு சமயக் காப்பியமாக மட்டுமல்லாமல், சூழலியல் சிந்தனைகளை முன்வைக்கும் தமிழ் இலக்கியமாகவும் வாசிக்க முடிகிறது. உயிரினங்கள் அனைத்திற்கும் வாழ்வுரிமை உண்டு என்ற சமண அறத்தின் அடிப்படைக் கோட்பாட்டைச் *சூளாமணியில்* தோலாமொழித்தேவர் உணர்த்துகிறார். இன்றைய உயிரியல் ஆய்வுகள், ஒரு இனத்தின் அழிவு முழு சுற்றுச்சூழல் அமைப்பையும் பாதிக்கும் என்று கூறுகின்றன. *சூளாமணி* இக்கருத்தை அறிவியல் சொல்லாடலில் வெளிப்படுத்தவில்லை என்றாலும், இலக்கியக் காட்சிகளின் வழியாக உணர்த்துகிறது.

**அடிக்குறிப்புகள்**

[1] தோலாமொழித்தேவர், *சூளாமணி*, நாட்டுச் சருக்கம், ப.9.

[2] மேற்படி நூல் நாட்டுச் சருக்கம், ப.12.

[3] மேற்படி நூல், இரத நூபுரச் சருக்கம், ப.82.

**துணைநூற் பட்டியல்**

1. தோலாமொழித்தேவர், *சூளாமணி* (மூலமும்-குறிப்புரையும்), மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடு, சென்னை, 1962.

2. சு.ஆனந்தன்,தமிழ் இலக்கிய வரலாறு,கண்மணி பதிப்பகம்,திருச்சி,2016.

3. இரா.ச.சுகிர்தா பஸ்மத்,சுற்றுச்சூழல் கல்வி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.,சென்னை,2020.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 57.திருவள்ளுவர் பகரும் சுற்றுச்சூழல்

**முனைவர் ரா.ஆனந்தி,**
தமிழாய்வுத்துறை, உதவிப்பேராசிரியர்
தனலட்சுமி சீனிவாசன் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்
(UGCசட்டம், 1956-இன் பிரிவு 3-இன் கீழ் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
பெரம்பலூர் – 621 212, தமிழ்நாடு, இந்தியா.
கலை மற்றும் அறிவியல் பள்ளி.
**anandhiveera09@gmail.com, கைப்பேசி : 9585745865**

**ஆய்வுச் சுருக்கம்**

திருக்குறள் மனித வாழ்விற்கும் இயற்கைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை வலியுறுத்துகிறது. குறிப்பாக மழையின் சிறப்பு, நீரின் அவசியம், இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் அனைத்து உயிரினங்களிடமும் அன்பு செலுத்துதல் போன்ற கருத்துகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அடிப்படைக் கோட்பாடுகளாக விளங்குகின்றன. இன்றைய காலகட்டத்தில் சுற்றுச்சூழல் மாசுபாடு, நீர் பற்றாக்குறை மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வாக திருவள்ளுவரின் சிந்தனைகள் வழிகாட்டுகின்றன. எனவே, இயற்கையைப் பாதுகாப்பதும் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதும் மனித சமுதாயத்தின் முக்கியக் கடமையாகும் என்பதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது.

‘வான்சிறப்பு’ அதிகாரத்தில் மழை இல்லையேல் உலகின் இயல்பு பாதிக்கப்படும் என்பதை விளக்குவதன் மூலம் நீர்ச் சுழற்சியின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். மேலும், உழவுத் தொழிலின் மேன்மையைப் போற்றுவதன் மூலம் நில வளத்தைப் பாதுகாத்து உணவு உற்பத்தியை நிலைநிறுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகிறார். அனைத்து உயிர்களிடத்தும் அன்பும் கருணையும் காட்ட வேண்டும் என்ற அவரது அறக்கருத்துகள், உயிரினப் பன்மையைப் பாதுகாக்கும் நவீன சுற்றுச்சூழல் கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றன.

இன்றைய உலகம் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் மாசுபாடு, காடழிப்பு, நீர் பற்றாக்குறை மற்றும் காலநிலை மாற்றம் போன்ற சவால்களுக்கு திருவள்ளுவரின் சிந்தனைகள் சிறந்த வழிகாட்டுதலாக அமைகின்றன. இயற்கை வளங்களை அளவோடு பயன்படுத்துதல், நீரைச் சேமித்தல், மரங்களை வளர்த்தல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் போன்ற செயல்பாடுகள் மனிதகுலத்தின் நிலையான வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றன என்பதையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

**முன்னுரை**

மனிதன் மட்டுமல்லாமல் உலக உயிர்கள் அனைத்தும் இயற்கையைச் சார்ந்து வாழ்கின்றன. இவ்வுலக உயிரினங்களின் வாழ்வுக்குச் சுற்றுச்சூழல் இன்றியமையாத தன்மை கொண்டது. திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து சுற்றுச்சுழலின் அவசியத்தைத் தனது அறநூல் வழி எடுத்துரைத்துள்ளார்.

திருவள்ளுவர் கூறிய சுற்றுச்சூழல் சார்ந்த கருத்துக்கள் பண்டைய காலத்திற்கு மட்டுமல்லாமல், இன்றைய மற்றும் எதிர்கால சமூகத்திற்கும் பொருந்தக்கூடியவை என்பதே இவ்வாய்வின் முக்கிய முடிவாகின்றது. இந்த சிந்தனைகளை நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றுவதன் மூலம் இயற்கை வளங்களைப் பாதுகாத்து, வருங்கால சந்ததியினருக்கு வளமான மற்றும் தூய்மையான சுற்றுச்சூழலை வழங்க முடியும்.

மனித வாழ்வின் நிலைத்தன்மைக்கு இயற்கை வளங்கள் இன்றியமையாதவை என்பதை திருவள்ளுவர் தனது குறட்பாக்களில் வலியுறுத்தியுள்ளார். குறிப்பாக, மழையின் அவசியம், நீர்வளத்தின் முக்கியத்துவம், வேளாண்மையின் சிறப்பு, உயிரினங்களின் பாதுகாப்பு மற்றும் இயற்கையோடு இணைந்து வாழ வேண்டிய தேவையை அவர் எடுத்துரைக்கும் தன்மையை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**சூழலியல்**

சூழலியல் என்ற சொல் அய்காஸ் (நுஉழளை) என்ற கிரேக்கச் சொல்லை மூலமாகக் கொண்டு தோன்றியது. ஏர்னெஸ்ட் ஹெகல் என்பவர், மனிதன் தன் உறைவிடத்தையும் உறைவிடத்தின் பண்புகளையும் சிறப்புக் கூறுகளையும் அறிந்து தெரிந்துகொள்ளும் சிந்தனை முறையைச் சுற்றுப்புறச் சூழலுக்குரிய சிந்தனை என்று குறிப்பிடுகிறார்.

தமிழில் சூழலியல் குறித்த கருத்துகளை நேரிடையாக வலியுறுத்தும், அறிவுசார் நூல்களைப் பழந்தமிழர்கள் இயற்றி வைக்கவில்லையே தவிர, அக்கருத்துகள் இயல்பூக்கமாக அவர்களிடம் குடிகொண்டிருந்தன என்பதை அவர்கள் படைத்த படைப்பிலக்கியங்களில், தம் உள்ளக் கருத்துகளை ஆங்காங்கே அவர்கள் விதைத்துச் சென்றிருப்பதைக் கொண்டு, நம்மால் உணர முடிகிறது.

உலகத்தின் பொதுமறையாகக் கருதப்படும் திருக்குறளில் சூழலியல் பற்றிய கருத்துக்கள் விரவியுள்ளன. தமிழ்நாட்டிற்கும் தமிழினத்திற்கும் மட்டும் என்றில்லாமல் அனைத்து இனத்தையும் சார்ந்த அனைவருக்கும் அறக்கருத்துகளை வலியுறுத்தும் நூலான திருக்குறளில், 'எல்லாக் கருத்துக்களும் இதன்பாலுள் உள' என்ற கூற்றை மெய்ப்பிப்பதைப் போன்று, இன்றைய சூழல் குறித்த விழிப்புணவர்வு கருத்துக்களையும் திருவள்ளுவர் வழங்கியிருக்கிறார்.

**இயற்கை வழிபாடு**

நமது முன்னோர்கள் இயற்கையோடு இயைந்த வழிபாட்டினைப் பின்பற்றிய உயர்ந்த நெறியைக் கொண்டிருந்தினர். விண்ணையும் மண்ணையும், வளியையும் ஒளியையும் இறையருளாகப் போற்றினர். மாசில் வீணையும், மாலை மதியமும் வீசுதென்றலும், வீங்கிள வேனிலும் என்னும் இயற்கையை தெய்வங்களாக வணங்கினர்.

**வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்**
**கோனாகி யான் எனது என்றவரைக் கூத்தாட்டுவானாகி**

என்று இறைவனை பழந்தமிழர்கள் இயற்கையுடன் இயைந்து போற்றுகின்றனர்.

இயற்கையில் அமைந்த அனைத்துப் பொருள்களிலும் மழை சிறந்ததாக அமைந்துள்ளது. 'மழையின்றேல் இம் மன்பதை இல்லை' என்பதை உணர்ந்த வள்ளுவர் வான்மறை கடவுள் வாழ்த்திற்கு அடுத்த நிலையில் வான்சிறப்பைப் போற்றுகின்றார். கடவுளின் அருள் வடிவாய் நின்று, வானம் மழை பொழிந்து வையகத்தைப் புரக்கின்றது. கடவுள் உயிர்களைப் போற்றிப் புரப்பது போன்று வான்மழையுத் உயிரைப் போற்றிப் புரக்கின்றது. மழையால் இவ்வுலகம் நிலைத்து நிற்கின்றது என்பதனை,

**வான்நின்று உலகம் வழங்கி வருதலான்**
**தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று.**

குறள் வழி உணர்த்துகின்றார்.

மனிதன் உயிர் வாழ்வதற்காக மட்டும் மரம், செடிகள், பூச்சிகள் பறவைகள் முதலான நீருயிரிகள், வனவிலங்குகள் வரை அனைத்தும் மனிதனோடு உலகத்தைப் பகிர்ந்து கொள்கின்றன. இவ்வுலகில் பல்லுயிர்களும் அவ்வவற்றின் இயல்புகளையும் உரிமைகளையும் உணர்த்துவதற்காக வாழ்கின்றன.

இயற்கை நிகழ்ச்சிகளாக, மழை பொழிதல், குளம் நிரம்புதல், ஆவியாகி மீண்டும் மேலே செல்லுதல், முகிலாய் திரண்டு மீண்டும் அமிழ்தமாய்ப் பொழிதல் போன்றவை அமைகின்றன. இவ்வியற்கை நிகழ்ச்சிகள் நடைப்பெறவில்லை என்றால் உலகம் இயங்காது. இவ்வாறாக இடையறாது இயங்கும் இவ்வாற்றலும் இறை என்பதை,

**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
**நாமநீர் வேலி உலகிற்கு அவள் அளிபோல்**
**மேல்நின்று தான் சுரத்தலான்.**

என வான்சிறப்பின் மேன்மையை இளங்கோவடிகள் உணர்த்துகின்றார்.

சங்க இலக்கியங்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை நடத்தியவனாகத் தமிழன் வாழ்ந்தான் என்பதற்குச் சான்று பகர்கின்றன. அன்பின் ஐந்திணையாகவும் புறத்திணையாகவும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, வெட்சி, வஞ்சி, கரந்தை, வாகை, உழிஞை, என மலர்களின் பெயரைச் சூட்டி மகிழ்கின்றன. ஐந்திணைக்கான நிலப்பாகுபாடும் அவற்றிற்கான உயிரினங்கள் உள்ளிட்ட கருப்பொருள்களை வகுத்து, இயற்கையின் மீதான சங்கத் தமிழனது ஈடுபாட்டினைக் காட்டி நிற்கின்றன.

நிலமும் நீரும் காற்றும் இவ்வுலகத்தின் அனைத்து வளங்களும் அனைவருக்கும் உரிமையுடையன என்ற நிலையை மறந்து, நாளைய மனிதர்களுக்கும், ஏன் தமது வழித் தோன்றல்களுக்கும் கூட அதனை விட்டு வைக்க நினையாமல் மனிதன் தனக்கே தனக்கென்று இவ்வுலகத்தை உரிமையாக்கிக் கொண்டு, உலகின் வளங்களனைத்தையும் கைப்பற்றுகின்றனர். பிற உயிர்களின் உரிமைகளைக் கைக்கொள்ளும் போது தான் உயிரினச் சமநிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இன்று உலகெங்கும் இதுகுறித்தான விழிப்புணர்வுதான் பேசு பொருளாகியிருக்கிறது.

**பல்லுயிர் ஓம்புதல்**

உலகில் காணும் அனைத்து உயிர்களுக்குமானது என்று கருதுவது சுற்றுச்சூழல் சார்ந்த சிந்தனையாகும். இக்கருத்தை மிக நுட்பமாகத் திருவள்ளுவர் குறட்பாக்கள் பலவற்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

**‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - (குறள்-972)**
**‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் - (குறள்-322)**

என்ற இரண்டு குறட்பாக்களில் அவர் பயன்படுத்திய உயிர் என்ற சொல்லாட்சி கருதத்தக்கது.

திருவள்ளுவர் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறட்பாவில் மனிதர்களின் ஏற்றத்தாழ்வு - சாதி மறுப்பினை மட்டும் கூறவில்லை. மாறாக, ஓரறிவுடைய உயிர் முதல் ஆறறிவுயிர் மனிதன் உட்பட அனைத்து உயிர்களும் பிறப்பால் ஒத்தன என்று வலியுறுத்த முற்படுகிறார். இதன் வழி, ‘உயிர்’ என்ற சொல்லை அவர் உணர்ந்து கையாண்டிருக்கிறார் என்பது ஆராயும் நிலையில் இன்பத்தைப் பயக்கின்றது.

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள்ளுள் எல்லாம் தலை - (குறள்-322)**

என்ற குறட்பாவில், திருவள்ளுவரின் மனிதநேயம் என்பது பல்லுயிர் நேயமாக வெளிப்படுகிறது. பல உயிர்களோடு நாம் பகிர்ந்துண்போம். அதுவே தலையாய அறம் என்ற கருத்தினை போற்றுகின்றார். மேலும்,

**அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்**
**தன்நோய் போல் போற்றாக் கடை - (குறள்-315)**

என்ற குறட்பாவின் கருத்தால் வலுபெறுகின்றது. பிறரின் நோய் என உயர்திணையில் குறிப்பிடாமல் 'பிறிதின் நோய்' என்ற சொல்லாட்சியை அவர் கொண்டதன் விளைவாக அனைத்துயிர்களையும் கருதி இக்குறட்பாவின் கருத்தாகக் கூறுகின்றார். தன்னுயிர் போல் பிற உயிர்களையும் எண்ணிக் கருணை கொண்டு ஒழுகுபவன் எஞ்ஞான்றும் துன்பம் உறுதலில்லை என்பதை,

**'மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை - (குறள்-244)**

என்ற மற்றொரு குறட்பாவின் வழியாக அவர் வலியுறுத்துகிறார். எவ்வுயிராயினும் அவற்றைத் தம் நலம் கருதி துன்புறுத்தாமல் வாழ்வதும் அவை பிற காரணிகளால் துன்பமுறும் போது தம் துன்பம் போல் கருதி இடர்நீக்க முற்படுவதும் தாம் பெற்ற அறிவின் இயல்பாக இருக்க வேண்டும் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு - (குறள்-261)**

என்றவாறு கொல்லாமை, தவம், புலால் மறுத்தல் போன்ற அதிகாரங்களில் உயிர்களைக் கொல்லாதிருப்பதற்கான அறம் பேசப்படுகிறது.

எக்காலத்தையும் எந்நாட்டையும் சேர்ந்த அறிஞர்களும் சான்றோர்களும் பல்லுயிர்களின் நலமும் இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகின்றனர். இயற்கையின் வளங்கள் எந்நாளும் காக்கப்பட வேண்டியன என்பதை உணர்த்தியிருக்கிறார்கள். திருவள்ளுவர் குறள்களின் வழி உயிரினங்கள் அனைத்தும் ஒன்றே என்ற கருத்தைத் என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

**இயற்கையை உணர்த்தும் திருக்குறள்கள்**

மழைநீர் மலையிலிருந்து வழிந்து பல நதிகளிலும் ஓடித் துறைகள் தோறும் பரந்து சென்று உயிர்களைக் காக்கின்றது. அதனைப் போல, இறைவனும் பல வடிவங்களிலும் தோன்றி உலகைப் பேணுகின்றார், என்பது

**கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்**
**எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈதென்னத்**
**தொல்லையில் ஒன்றே ஆகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி**
**பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்த தன்றே**

எனக் கம்பர் இறையோடு மழையை இணைத்துக் காண்கின்றார்.

மழை பெய்யாமல் நின்று, பொய்த்துவிடுமானால் உலகம் பசித் துன்பத்தால் வாடும். பசியின் கொடுமை சமுதாயக் கொடுமையாக மாறும். விண்ணிலிருந்து மழை பொய்க்குமானால் மண்ணில் உயிர்கள் வாடும் கொடிய கேடுகள் சூழ்ந்துவிடும்.

**குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**

**நாண் அணி களையும் மாண்எழில் சிதைக்கும்**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி என்னும் பாவி**

என்று மணிமேகலை பசியைப் பாவி எனச் சுட்டுகின்றது.

திருவள்ளுவர் இயற்கையின் சிறப்பினை பின்வரும் குறட்பாக்களின் வழி எடுத்துரைக்கின்றார்.

1. **மழையின் சிறப்பு**

வள்ளுவரின் நெஞ்சம் மழையின் பெருமையை உணர்ந்து நெருப்பினுள்ளும் உறங்கலாம், ஆனால் வறுமையுடன் வாழ்வது மிகப்பெரிய கொடுந்துன்பம் என்று கூறுகின்றார். கடவுள் நிலைக்கு அடுத்ததாகப் பசிப்பிணியைப் போக்கும் வான்சிறப்பை; போற்றுகின்றார். அக்குறள்கள்,

**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து**
**உள்நின்று உடற்றும் பசி**
**விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றுஆங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது**

என்று உணர்த்துகின்றார். மேலும்,

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று - (குறள் 11)**

உலக உயிர்கள் அனைத்திற்கும் வாழ்வாதாரமாக மழை விளங்குவதால் அது அமிழ்தத்திற்குச் சமமானது என்னும் பொருளில் மழை நீரின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார்.

2. **மழை இல்லையெனில் வாழ்க்கை இல்லை**

திருவள்ளுவர் மழையை உலக வாழ்வின் அடிப்படையாகக் கருதுகிறார். 'வான்சிறப்பு' அதிகாரத்தில் மழை இல்லையெனில் உலக வாழ்க்கையே பாதிக்கப்படும் என்று கூறுகிறார். மழை உணவு உற்பத்திக்கும், குடிநீருக்கும், உயிர்களின் வாழ்வுக்கும் ஆதாரமாக இருப்பதை வலியுறுத்துகிறார். இதன் மூலம் நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறார்.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை. - (குறள் 12)**

உண்பவர்களுக்கு உணவுப் பொருட்களை உண்டாக்குவதோடு, தானும் உணவாக (நீராக) விளங்குவது மழை என மேலும் கூறுகின்றார்.

3. **உலக வாழ்வின் அடிப்படை**

நிலம், நீர், காற்று போன்ற இயற்கை வளங்கள் மனிதனின் செல்வமாகும். இவற்றை வீணாக்காமல் பாதுகாத்து பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து திருக்குறளில் மறைமுகமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இயற்கையோடு இணைந்து வாழ்வதே நிலையான வளர்ச்சிக்கான வழி என்பதை திருவள்ளுவர் உணர்த்துகிறார்.

**நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வானின்று அமையாது ஒழுக்கு. - (குறள் 20)**

நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது அதுபோல மழை இல்லாமல் மனிதர்களின் வாழ்க்கை ஒழுங்கும் அமையாது.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

4. **உழவின் சிறப்பு**

உழவர்கள் உலக மக்களின் வாழ்விற்கு அடித்தளமாக விளங்குகின்றனர்; மற்ற அனைவரையும் அவர்கள் தாங்குகின்றனர்.

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து. - (குறள் 1032)**

அறநெறியுடன் வாழும் மனிதன் இயற்கையையும் மதித்து பாதுகாப்பான். பிற உயிர்களுக்கு தீங்கு விளைவிக்காத வாழ்க்கை முறையே சிறந்தது என்று திருவள்ளுவர் கூறுகிறார். மரங்களை வளர்த்தல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல், உயிரினங்களை காத்தல் போன்ற செயல்கள் அறச்செயல்களாகும்.

5. **உயிர்களிடம் அன்பு**

**அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்**
**பொருளல்லது அவ்வூன் தினல். - (குறள் 251)**

உயிர்களைக் கொல்லாமல் இருப்பதே அருள்; இது உயிரினங்களைப் பாதுகாக்கும் உயர்ந்த பண்பாகும்.

6. **உயிர்களின் சமத்துவம்**

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான். - (குறள் 972)**

எல்லா உயிர்களும் பிறப்பால் சமமானவை; அவர்களின் செயல்களால்தான் வேறுபாடு ஏற்படுகிறது.

இவ்வாறாகத் திருவள்ளுவர் இயற்கை, மழை, நீர், நிலம், உழவு மற்றும் உயிரினப் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை பல குறட்பாக்களில் எடுத்துரைக்கிறார். இக்குறள்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் சிறந்த வழிகாட்டுதல்களாக உள்ளன.

**திருவள்ளுவர் பகரும் இன்றைய சுற்றுச்சூழல் சிந்தனைகள்**

சுற்றுச்சூழல் மாசுபாடு, நீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் திருவள்ளுவர் கூறிய இயற்கை பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை பற்றிய கருத்துகள் மிகவும் பொருத்தமானவையாக உள்ளன. அவரது போதனைகளைப் பின்பற்றினால் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து வருங்கால தலைமுறைக்கு வளமான உலகை வழங்க முடியும்.

**நீரின்றி அமையாது உலகு**

நீர் உணவுப்பொருளை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது. அது மட்டுமின்றித் தானும் ஒரு உணவாகப் பயன்படுகிறது என்கிறார் வள்ளுவர்.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை**

என்ற குறட்பா மேற்காணும் கருத்தினை நமக்கு வழங்குகிறது. இஃதொரு ஆழமான சிந்தனையாகும். துப்பாயதூஉம் - உணவாதலாவது தண்ணீராய் உண்ணப்படுதல் என்கிறார் பரிமேலழகர்.

உணவு தாவர உணவாக இருப்பினும் புலால் உணவாக இருப்பினும் அவற்றை உற்பத்தி செய்ய நீரும் ஒரு உள்ளீடு பொருளாகிறது என்பது சூழலியலார் சிந்தனை முறையாகும். உள்ளீட்டுப் பொருள் என்ற கருத்தாக்கம் என்னவெனில், ஒரு உணவுப்பொருள் உற்பத்தி ஆவதற்குப் பயன்பட்ட மொத்த நீரின் அளவானது எவ்வளவு என்று கருதுவதாகும்.

திருவள்ளுவர் வான்சிறப்பு, உழவு என்ற தலைப்புகளில் தனித்தனி அதிகாரங்கள் படைத்திருக்கிறார். அதிலும் வான் சிறப்பு அதிகாரம் முறை வைப்பில் கடவுள் வாழ்த்தின் பின்னர் வைக்கப்பட்டிருப்பது எண்ணத் தக்கதாம். மழை நீர் உலகத்தார்க்கு அமிழ்தம் என்பது வள்ளுவரின் கருத்தாகும்.

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தாம் அமிழ்தம் என்று உணரற்பாற்று (குறள்-11)**

என உலகத்தை வாழ்விப்பது நீரே என்று வலியுறுத்தும் வள்ளுவர்,

**‘விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே**
**பசும்புல் தலை காண்பது அரிது’ (குறள்-16)**

என்றும் ‘நீரின்றி அமையாது உலகு’ என்றும் நீரின் இன்றியமையாத் தன்மை பற்றி அறைகிறார். உழவு அதிகாரத்தில் உழவின் மேன்மையைக் கூறுதலோடு மட்டும் அமையாமல், தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும் வேண்டாது சாலப்படும் (குறள்-1037) என நிலம், நீர், காற்று, வான், தீ ஆகிய பூதங்களின் பங்களிப்பு உணவு உற்பத்தியில் இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

**திருவள்ளுவரின் நோக்கம்**

சுற்றுச்சூழலின் ஒரு அங்கம் உயிரினங்கள் திகழ்கின்றன. நிலத்தினும் நீரினும் வாழும் பல்வேறுபட்ட உயிரினங்களின் தன்மையை அறிந்து அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தியும் விலக்கி வைத்தும், ஆபத்தை விளைவிக்கக் கூடியன எனக்கண்டறிந்த உயிரினங்களைத் தகுந்த முறையில் விலக்கி மனித இனம் வாழ்கின்றது.

‘உயிரினங்களுக்கும் அவற்றின் சூழலுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைப் பற்றிய அறிவியலே சூழலியல் எனப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் உள்ள ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்த உயிரினங்கள் அவற்றின் இயற்பியல் சூழல் அவற்றின் இடையிலான தொடர்புகள் ஆகியவை சூழல் மண்டலம் (நுஉழ ளுலளவநअ) எனப்படுகின்றன.

பறவைகள், விலங்குகள், வண்டுகள், பூச்சிகள் என அனைத்து உயிரினங்களையும் கொண்ட நற்சூழல் மனித வாழ்விற்கு அடிப்படையாகும்’. எவ்வாறெனில், நாம் உண்ணும் தாவர உணவு உற்பத்திக்கு அடிப்படையான மகரந்தச் சேர்க்கை பூச்சியினங்களால் தான் அமைகிறது. பயிர்களை பாழ்படுத்தும் வெட்டுக் கிளிகளைப் பறவைகளும் எலிகளைப் பாம்புகளும் கட்டுப் படுத்துகின்றன. திருக்குறளில் மனிதனின் சூழல் மண்டலத்தில் அவனோடு இணைந்து வாழ்ந்த பல உயிரினங்கள் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன.

திருவள்ளுவர், பயிரினங்கள், நில உயிரிகள், நீர்வாழ் உயிரிகள் விலங்குகள் என தமிழ்நாட்டுச் சூழலில் வாழ்ந்த உயிரினங்கள் பலவற்றைத் தம் நூற்கருத்திற்கு விளக்கம் தருவதற்காகப் பயன் படுத்தியிருக்கிறார்.

புல், பயிர், கொடி, கொம்பு, மரம், மலர், காய், கனி, கருக்காய், வித்து, முளை, முகை, மொக்கு எனத் தாவரங்களின் பல நிலைகள் வள்ளுவரின் குறட்பாக்களில் எடுத்தாளப் பட்டுள்ளன. மேலும் தினை பனை ஆகியவற்றைச் சிறுமை - பெருமை பற்றிக் குறிப்பிடப் பயன்படுத்துகிறார்.

மேலும் கரும்பு, மூங்கில், தாமரை, குவளை, நெருஞ்சி ஆகிய தாவரங்களைக் குறிப்பிடும் வள்ளுவர் அனிச்சம் என்ற தாவரத்தை மென்மைக்கு எடுத்துக்காட்டாய்க் கூறுகிறார். மருந்தாகித் தப்பா மரத்தற்றால் (குறள்-217) பயன் மரம் உள்ளூர் பழுத்தற்றால் (குறள்-216)என மரத்தின் மேன்மை திருக்குறளில் வள்ளுவரால் பேசப்படுகிறது.

**முதலை நெடும்புனலுள் வெல்லும்; அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற வெல்லும் (குறள்-495)**

என்று முதலையின் இயல்பு பதிவாகியுள்ளது.

**பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலித் தாக்குறின் (குறள்-599)**
**புதையம்பின் பட்டுப்பாடூன்றும் களிறு (குறள்-597)**

என யானையின் இரு மாறுபட்ட இயல்புகளை வள்ளுவர் இரண்டு குறட்பாக்களில் குறிப்பிடுகிறார்.

பழகிய யானையைக் கொண்டு யானையைப் பிடித்தலைப் பற்றி,

'**நனை கவுள் யானையால் யானை யாத்தற்று' (குறள்-678)**என ஒரு குறள் குறிப்பிடுகிறது.

**பகல் வெல்லும் கூகையைக் காக்கை' (குறள்-481)**

என்று காக்கை - கூகையின் இயல்பும்

ஒருமையில் ஐந்தடக்கல் (குறள்-126) என ஆமையின் இயல்பும்,

கூம்பியிருந்து மீனை கொத்தும் கொக்கின் இயல்பும் (490) கரவாக் கரைந்துண்ணும் காக்கை இயல்பும் (குறள்-527)

'கால் ஆழ் களரில் நரி அடும்' (குறள்-500) என நரியின் இயல்பும் வள்ளுவரால் சுட்டப்படுகின்றன. மேலும் கவரி மான்-பிணை பசு-காளை, சிங்கம், புலி, யானை, குதிரை, முயல், நரி ஆகிய விலங்கினங்களையும் அன்னம், மயில் ஆகிய புள்ளினங்களையும் என்பிலதனை வெயில் போல (குறள்-77) என முதுகெலும்பற்ற உயிரினங்களையும் பாம்பு, எலி ஆகிய ஊர்வனவற்றையும் மீன் போன்ற நீர்வாழ் உயிரினத்தையும் திருவள்ளுவர் பிற இடங்களில் தாம் கூறப்புகுந்த அறக்கருத்திற்கு அரண் சேர்க்கக் குறிப்பிடுகிறார்.

மேலும் 'இளையதாய் முள்மரம் கொல்க' (குறள்-879) என்று முட்புதர்களை அழிக்க வேண்டுமாயின் அது இளையாதாக இருக்கும் போதே வெட்டவேண்டும்; முதிர்ந்து வளர்ந்த நிலையில் வெட்டுபவர் கையைத் துன்புறுத்தும் என முட்செடியின் இயல்பைப் பதிவு செய்கிறார்.

- **வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்க்காது - (குறள்-78)**
- **வெள்ளத்து அனைய மலர் நீட்டம் - (குறள்-595)**
- **நீரின்றி வாடிய வள்ளிக்கொடி - (குறள்-1304)**
- **முகை மொக்குள் உள்ளது நாற்றம் - (குறள்-1274)**
- **இணர் ஊழ்த்தும் நாறா மலர் - (குறள்-650)**

எனத் தாவரங்களின் இயல்பும் வள்ளுவரால் கூறப்படுகின்றன.

இவ்வாறு திருவள்ளுவர் முப்பதிற்கும் மேற்பட்ட உயிரினங்களைக் குறித்து அவற்றின் இயல்புகளை மனித இயல்புகளுக்கு ஒப்பிட்டுக் கூறுவது இன்புறத்தக்கது. தம்மோடு வாழும் உயிரினங்களின் இயல்புகளை நுட்பமாக அறிந்து அதனை மனிதன் பின்பற்றத் தகுந்த அறங்களைக் கூறும் போது பயன்படுத்த எண்ணிய அவரின் மனவியல்பு பாராட்டத்தக்கது. இங்கு திருவள்ளுவரின் சூழல் கூர்நோக்குப் புலனாகிறது.

**ஐம்பூதங்களின் இயல்பு**

திருவள்ளுவர் ஐம்பூதங்களின் இயல்புகளாகப் பின்வரும் குறட்பாக்கள் வழி எடுத்துரைக்கின்றார்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் (குறள்-151) என நிலத்தின் தன்மையை வள்ளுவர் சுட்டுகிறார். ஏரினும் நன்றால் எருவிடுதல் நீரினும் நன்றதன் காப்பு (குறள்-1038) என்றும் பைங்கூழ் களை கட்டுது (குறள்-550) வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிதல் (குறள்-718) என்றும் நிலத்தை உழவுக்காகப் பண்படுத்துதல் பற்றிப் பேசுகிறார். களர் அனையர் கல்லாதவர் (குறள்-406) என வளமற்ற நிலத்தையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. அரண் அதிகாரத்தில் 'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல் காடும்' (குறள்-742) நாட்டின் பாதுகாப்பான அரண் ஆக இயற்கை விளங்கியமை குறிப்பிடப்படுகிறது.

**இருபுனலும் வாயந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு (குறள்-737)**

என்ற குறட்பாவில் ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் ஆகிய நீர்ஆதாரங்களைப் பற்றியும் மலை பற்றியும் வள்ளுவர் கூறுகிறார். தீயினும் அஞ்சப்படுதல் (குறள்-202), நெருப்பின் உள் துஞ்சலும் ஆகும் (குறள்-1049) என்ற குறட்பாவில் தீ குறிப்பிடப்படுகிறது.

கடலன்ன காமம் (குறள்-1137), கடலைச்செறாய் (குறள்-1200) ஆழி நீத்தல் அரிது (குறள்-8), பெருங்கடல் (குறள்-10), விரிநீர் (குறள்-13) நெடுங்கடல் எனக் கடலின் பரந்துபட்ட இயல்பைப் பெருமைக்கு எடுத்துக்காட்டாய்த் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். 'வளி வழங்கு மல்லல் ஞாலம்' (குறள்-245)எனக் காற்றின் இன்றியமையாமை குறிப்பிடப்படுகிறது. வையகமும் வானகமும் (குறள்-101) வானம் அகல் விசும்பு (குறள்-25) வான் நோக்கி வாழும் குடி (குறள்-542) என வான் பல இடங்களில் வள்ளுவரால் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறாக அறம்பேச எழுந்த நூலொன்றுள், அதுவும் ஈரடியில் சுருக்கமாக – சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டிய கட்டுப்பாடு மிகுந்த பாவினால், எந்த அளவிற்கு நிலம், நீர், காற்று, வானம், தீ போன்ற பஞ்சபூதத்து இயற்கையையும் நிலத்து வாழும் பல்லுயிர்களின் தன்மை பற்றிய பதிவையும் அதனை ஒட்டிய தம் உள்ளக் கிடக்கையையும் கூற முடியுமோ அந்தளவிற்கு மிகச் சிறப்பாகத் திருவள்ளுவர் கூறியிருக்கிறார். கற்று அறிந்தோர் மகிழத் தக்கதாம். அவ்வகையில் எல்லாக் கருத்தும் இதன் பால் உள என்னும் திருக்குறளைப் பற்றிய புகழ்க்கூற்றும் மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது.

உலகில் மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களின் இருப்புக்கும் ஆதாரம் இயற்கையே ஆகும். இயற்கை அன்னை என்று போற்றப்படும் சூழலியலின் முக்கியத்துவத்தை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தனது திருக்குறளில் மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளார் திருவள்ளுவர். வான்சிறப்பும் மழையின் இன்றியமையாமை குறித்து திருக்குறளின் முதல் அதிகாரமான கடவுள்

வாழ்த்திற்குப் பிறகு, திருவள்ளுவர் வான்சிறப்பு என்ற அதிகாரத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். மழை இல்லையெனில் உலகில் உயிரினங்களின் வாழ்க்கையே இல்லை.

மலைகளின் அவசியம் இயற்கையின் சமநிலையைக் காப்பதில் மலைகளுக்கு முக்கிய இடமுண்டு. மழையைத் தருவதிலும், நதிகளுக்கு ஆதாரமாகவும் விளங்கும் மலைகளின் சிறப்பைப் போற்றும் விதமாக, விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே பசும்புல் தலைகாண்பது அரிது, என்று இயற்கையின் பசுமைக்கு மழை மற்றும் இயற்கைச் சூழல் எவ்வளவு அவசியம் என்பதை உணர்த்துகிறார். மரம் மற்றும் தாவரங்களின் பாதுகாப்பு இயற்கையின் சமநிலையைக் காப்பதில் மரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. மனிதனாகிய நாம் இயற்கையோடு இயைந்து வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் வள்ளுவர், இயற்கைக்குத் தீங்கு விளைவிக்காமல் வாழ்தலே சிறந்த அறம் என்றும் கூறுகின்றார்.

ஐம்பூதங்களின் தூய்மைநிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் தூய்மையே ஆரோக்கியமான உலகிற்கு அடிப்படை. இந்த இயற்கை வளங்களைச் சீரழிக்காமல், வரம்போடு பயன்படுத்திப் பாதுகாக்க வேண்டும் என்பதை அவரது பல குறள்கள் உணர்த்துகின்றன. இயற்கை வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் நிலத்தை நேசித்து, உரிய காலத்தில் இயற்கை உரம் மற்றும் நீரைப் பயன்படுத்திச் செய்யப்படும் வேளாண்மையே சிறந்தது என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார். இயற்கையின் சுழற்சியாக வானம், மலை, மழை எனப் புரிந்து கொண்டு அதற்கேற்ப வாழும் மனிதனே சிறந்த அறிவாளியாகக் கருதப்படுகின்றான்.

**முடிவுரை**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது ஒவ்வொருவரின் கடமையாம். திருவள்ளுவர் தனது திருக்குறள் மூலம் மழை, நீர், நிலம் மற்றும் அனைத்து இயற்கை வளங்களின் முக்கியத்துவத்தை உணர்த்திச் செல்கின்றார். அவரது சிந்தனைகளை நடைமுறைப்படுத்தி இயற்கையைப் பாதுகாப்போம்; வளமான பூமியை உருவாக்குவோம். இயற்கையை அறிந்து செயல்படு என்பது திருக்குறள் நமக்குக் கற்றுத் தரும் பாடம். மனிதனின் பேராசை இயற்கையைச் சிதைக்கும் தற்காலச் சூழலில், திருக்குறளில் உள்ள இயற்கை சார்ந்த சிந்தனைகளைப் பின்பற்றுவது உலகைக் காப்பதற்கான சிறந்த வழியாகும். இயற்கையைப் போற்றிப் பாதுகாப்பதே மனிதகுலத்தின் எதிர்காலத்திற்கு உகந்தது என்பது இக்கட்டுரை வழி உணர்த்தப்படுகின்றது.

**துணைநின்ற நூல்கள்**

1. திருக்குறள் - கோபாலகிருட்ணமாச்சாரியார்.வை.மு.,(உ.ஆ)., உமா பதிப்பகம்.,முதல்பதிப்பு 2009.
2. திருக்குறள் ஆய்வியல் - பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி., சேகர் பதிப்பகம், சென்னை-600 096.
3. வள்ளுவம் - வ.சுப.மாணிக்கனார்., ராமையா பதிப்பகம்., முதற்பதிப்பு - 2017.
4. திருக்குறள் மூலம் - முனைவர் ச.மெய்யப்பன் (ப.ஆ)., தென்றல் நிலையம், சிதம்பரம்-608 001.

# 58.நற்றிணையில் சூழலியல் விழுமியங்கள்

**முனைவர் வெ.பிரேமலதா,**
உதவிப்பேராசிரியர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 002
அலைபேசி – 9443185022, மின்னஞ்சல் முகவரி – *darshansarvesh@gmail.com*
Orcid ID – http://orcid.org/0009-0001-0708-4089

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் உலகின் தொன்மையான இலக்கியங்களுள் சிறப்பிடம் பெறுகின்றன. சங்க இலக்கியங்கள் தமிழர்களின் பண்பாடு, வாழ்க்கை முறை, இயற்கை சார்ந்த வாழ்வியல் ஆகியவற்றை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. அவற்றுள் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணை, அகப்பொருள் சார்ந்த பாடல்களைக் கொண்டிருந்தாலும், இயற்கையோடு மனித வாழ்க்கை ஒன்றிணைந்து அமைந்துள்ள சூழலியல் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றது. நிலம், நீர், காற்று, மரங்கள், விலங்குகள், பறவைகள், பருவநிலை, மனித ஒழுக்கம் போன்ற கூறுகள் அனைத்தும் சூழலியல் விழுமியங்களாக நற்றிணையில் காணப்படுகின்றன.

இக்கட்டுரை நற்றிணையில் இடம்பெற்றுள்ள இயற்கை வளப் பாதுகாப்பு, உயிரினங்களின் மீதான அன்பு, ஐந்திணைச் சூழல், மனித - இயற்கை உறவு போன்ற கருத்துக்களை ஆராய்கிறது. அவற்றில் இயற்கை என்பது வெறும் பின்னணியாக இல்லாமல், மனித வாழ்வின் அங்கமாக அமைந்துள்ளது. இயற்கையோடு இணைந்து வாழ்வதே தமிழர்களின் வாழ்க்கை நெறியாக இருந்தது. நற்றிணையில் இடம்பெற்றுள்ள 400 அகப்பாடல்கள் காதலை மையமாகக் கொண்டிருந்தாலும், ஒவ்வொரு பாடலிலும் நிலம், மரம், பறவை, விலங்கு, மழை, ஆறு, கடல், மலை போன்ற இயற்கைக் கூறுகள் மனித உணர்வுகளுடன் இணைக்கப்படுகின்றன. எனவே, நற்றிணைப் பாடல்கள் சூழலியல் விழுமியங்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

**ஆய்வு முன்னுரை**

தமிழர்களின் தொன்மை வாய்ந்த வாழ்வியலைத் தாங்கி நிற்கும் காலக்கண்ணாடியாக சங்கஇலக்கியம் திகழ்கின்றது. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படும் சிறப்பினைப் பெற்றது நற்றிணை. "நல்◌ திணை" எனப் பொருள்படும் இந்நூல், நல்வாழ்விற்கான நெறிகளையும், இயற்கையோடு மனிதன் கொண்டிருந்த பிணைப்பையும் ஆழமாகப் பேசுகிறது.

நவீன உலகம் இன்று எதிர்கொள்ளும் மிகப்பெரிய அச்சுறுத்தல் சுற்றுச்சூழல் சீர்கேடு ஆகும். ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் இயற்கையைச் சுரண்டாமல், அதனுடன் இணைந்து வாழ்ந்தனர் என்பதை நற்றிணைப் பாடல்கள் உணர்த்துகின்றன. இக்கட்டுரை, நற்றிணையில் காணப்படும் சூழ்நிலையியல் விழுமியங்களை இலக்கிய மற்றும் அறிவியல் நோக்கில் ஆராய்கிறது.

**திறவுச்சொற்கள்**

1. **மா - விலங்கு**
2. **புள் - பறவை**

**3. மந்தி - குரங்கு**

**4. களிறு - யானை**

**5. வேங்கை - புலி**

**சூழலியல் – பொருள்**

"சூழலியல்" என்பது உயிரினங்களுக்கும் அவற்றைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலுக்கும் இடையிலான உறவை ஆராயும் துறையாகும். சூழல் என்பது நிலம், நீர், காற்று, தாவரங்கள், விலங்குகள்; மனிதர்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது. தமிழர்கள் இயற்கையை தெய்வமாகக் கருதி பாதுகாத்தனர். "சூழ்நிலையியல்" என்பது உயிரினங்களுக்கும், அவை வாழும் சூழலுக்கும் இடையே உள்ள தொடர்பினைப் படிக்கும் அறிவியல் பிரிவாகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சிந்தனையின் நீட்சியாக, மனிதன் மட்டுமல்லாது புல், பூண்டு, புழு, பறவை, விலங்கு என அண்டவெளியில் உள்ள அனைத்து உயிர்களும் சமமானவை என்ற உயிரியல் சமத்துவத்தை சங்க இலக்கியங்கள் போற்றின. இயற்கையை வெறும் நுகர்வுப் பொருளாகப் பார்க்காமல், அதனைத் தம் வாழ்வின் ஓர் அங்கமாகக் கருதும் தன்மையே சூழ்நிலையியல் விழுமியம் எனப்படும்.

**சங்க இலக்கியமும் திணைக் கோட்பாடும்**

உலகில் முதன்முதலில் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு சூழலியல் பகுப்பைச் செய்தவர்கள் தமிழர்கள் ஆவர். தொல்காப்பியர் வகுத்த திணைக் கோட்பாடு (முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை) என்பது தூய சூழலியல் பகுப்பாகும்.

**முதற்பொருள்:** நிலமும் பொழுதும் (சுற்றுச்சூழல் பின்னணி)

**கருப்பொருள்:** தெய்வம், உணா, மா, மரம், புள், பறை (அந்நிலத்தின் பல்லுயிர்த்தன்மை)

**உரிப்பொருள்:** மனித ஒழுக்கம் (மன உணர்வுகள்)

நிலத்தின் தன்மையே மனிதனின் அக உணர்வுகளைத் தீர்மானிக்கிறது என்ற கோட்பாடு, மனிதன் இயற்கையின் கட்டுப்பாட்டிற்குள் இயங்குபவன் என்பதை நிரூபிக்கிறது.

இதனைத் தொல்காப்பியம் முதல்,கரு, உரிப்பொருள் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

**"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலைமுறைசிறந் தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங்காலை"1**

என்று குறிப்பிடுகின்றது.

மேலும், அகப்பொருள் விளக்கம் குறிப்பிடும்போது,

**"அவைதாம்,**
**முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் எனமுறை**
**நுதற்பொருள் மூன்றினும் நுவலப்படுமே"2**

குறிஞ்சி முதலான ஐந்திணைகளும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று கருதத்தக்க பொருள்கள் மூன்றாலும் சொல்லப்படும் என்று உரைக்கின்றது.

**நற்றிணையில் ஐந்திணைச் சூழல்**

நற்றிணையின் மிகப்பெரிய சிறப்பு ஐந்திணை அமைப்பாகும். குறிஞ்சித் திணைப் பாடல்களில் மலைகளின் அழகு, குளிர்ந்த அருவிகள், மலர்களின் மணம் போன்றவை மனித வாழ்க்கையோடு இணைக்கப்படுகின்றன. குறிஞ்சி நிலத்தில் சூழலியல் தன்மையாக மலை வளங்களை பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது. முல்லை நிலம் காடுகளையும் மேய்ச்சல் நிலங்களையும் குறிக்கிறது. இங்கு முல்லைப்பூ, மான், மாடு, ஆயர்வாழ்க்கை என இயற்கை வளம் நிறைந்த சூழல் காணப்படுகிறது. ஆயர்கள் கால்நடைகளை இயற்கையோடு இணைந்து வளர்க்கும் வாழ்க்கை முறையைப் பாடல்கள் சித்தரிக்கின்றன. முல்லை நிலத்தின் சூழலியல் தன்மையாக காடுகளும் கால்நடைகளும் ஒன்றுக்கொன்று சார்ந்தவை.

மருத நிலமானது வயல்கள், நெற்பயிர்கள், ஆறுகள், ஏரிகள் ஆகியவை மருத நிலத்தின் அடையாளங்களாகத் திகழ்கின்றது. உதாரணமாக நற்றிணைப் பாடல்களில் விவசாயம் செழிப்புடன் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. மருத நிலத்தின் விழுமியங்களாக நீர் வளப் பாதுகாப்பை மேற்கொள்ளச் செய்கின்றது. நெய்தல் கடற்கரைப்பகுதியில் இங்கு கடல்மீனவர்கள், அலைகள், கடற்பறவைகள் குறிப்பிடப்படுகின்றன. சான்றாக, கடலை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் வாழ்க்கை இயற்கையைச் சார்ந்ததாக இருந்தது. முல்லை நிலத்தின் விழுமியமாக கடல் வளத்தை சுரண்டாமல் பயன்படுத்துதலைக் குறிக்கின்றது. பாலை நிலம் இயற்கையாக உருவான நிலமல்ல. வறட்சியால் உருவான நிலம். இதன் மூலம் நீரின் அவசியம் வறட்சியின் தாக்கம் உயிர்களின் துன்பம் என்பவை எடுத்துரைக்கப்படுகின்றன.

**தாவரங்களும் விலங்கினங்களும்: பல்லுயிர் ஓம்பல்**

நற்றிணையில் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றிய பதிவுகள் வெறும் உவமைகளாக மட்டும் பயன்படுத்தப்படவில்லை. அவை சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

**தாவர விழுமியங்கள்:**

நற்றிணையில் வேங்கை, புன்னை, ஞாழல், மருது, காந்தள், கொன்றை, கடம்பு, இலுப்பை போன்ற நூற்றுக்கணக்கான தாவரங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை மண்ணரிப்பைத் தடுக்கும் மரங்களாகவும், மருத்துவக் குணம் கொண்டவையாகவும் இருந்தன. மரங்களை வெட்டுவது பெரும் பாவமாகக் கருதப்பட்டது.

**“கார்நறுங் கடம்பின் கண்ணிசூடி”3 (நற்றி-பா-34)**

**“கருங்கால் வேங்கைச் செவ்வீ வாங்குசினை”4 (நற்றி-பா-222)**

**“முல்லை முகைவாய் திறப்பப் பல்வயின்”5 (நற்றி-பா-69)**

போன்ற தாவரங்களைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**விலங்கின விழுமியங்கள்:**

நற்றிணையில் யானை, புலி, மான், குரங்கு, கரடி, காட்டுப்பன்றி, எருமை, பசு, காளை, ஆடு, நாய், நரி, முயல் போன்ற விலங்குகளைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**“புலிபார்த்து உறையும் புல்லதர்ச் சிறுநெறி”6 (நற்றி-பா-29)**

**“முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி”7 (நற்றி-பா-22)**

**“துஞ்சுகளிறு எடுப்பும்தம் பெருங்கல் நாட்டே”8 (நற்றி-பா-95)**

விலங்குகளின் தாய்மை உணர்வும், குடும்ப அமைப்பும் நற்றிணையில் வியந்து போற்றப்படுகின்றன.யானையின் அன்பினை எடுத்துக்கூறும் வகையில் ஆண் யானை தன் பிடிக்கு (பெண் யானைக்கு) மூங்கில் குருத்தை ஒடித்துக் கொடுக்கும் காட்சி நற்றிணையில் வருகிறது.

**பறவைகளின் வாழ்வு**

நற்றிணையில் கிளி, மயில், குயில், அன்னம், நாரை, கொக்கு, காக்கை, பருந்து, அன்றில், குருகு, புறா போன்ற பறவைகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நாரைகளும், அன்றில் பறவைகளும் தம் இணைகளோடு வாழும் சூழல் சித்தரிக்கப்படுகிறது.

**“கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி”9 (நற்றி-பா-102)**

**மரங்களின் முக்கியத்துவம்**

நற்றிணையில் வேங்கை, புன்னை, கடம்பு, பனை, இலுப்பை போன்ற மரங்கள் குறிப்பிடப்படுகின்றன. இம்மரங்கள் நிழல் தருகின்றன. மழையை ஈர்க்கின்றன. பறவைகளின் வாழிடங்களாகத் திகழ்கின்றன. சான்றாக, புன்னை மரத்தின் நிழலில் காதலர்கள் சந்திப்பதாகப் பல பாடல்கள் சித்தரிக்கின்றன. இதன் மூலம் மரங்கள் மனித வாழ்வின் ஓர் அங்கமாக விளங்குகின்றன.

**மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவு**

நற்றிணையின் மிகச்சிறந்த சூழ்நிலையியல் விழுமியத்திற்குச் நல்வேட்டனார் பாடிய பாடல் சான்றாகத் திகழ்கின்றது. இப்பாடலில், தலைவி ஒரு புன்னை மரத்தைத் தன் உடன் பிறந்த சகோதரியாகக் கருதுகிறாள்.

**“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**நந்தின உவட்டிய நல்வளப் புன்னை...” 10 (நற்றி-பா-172)**

தலைவி சிறுவயதில் விளையாட்டாகப் புதைத்த புன்னை விதை வளர்ந்து மரமாக நிற்கிறது. அவளது தாய், “இம்மரம் உன்னைவிட மூத்தது, உனக்குத் தங்கை போன்றது” என்று கூறுகிறாள். இதனால், அப்புன்னை மரத்தின் நிழலில் தன் தலைவனுடன் நின்று பேசக்கூடத் தலைவி நாணமடைகிறாள்.

**சூழலியல் பார்வை**

ஒரு மரத்தைத் தன் குடும்ப உறுப்பினராகக் கருதும் இந்த மனநிலை, இன்றைய நவீன சூழலியலாளர்கள் வியக்கும் ஆழ்நிலைச் சூழலியல் சிந்தனையாகும். மரங்களுக்கு உயிர் உண்டு, அவற்றுக்கும் மதிப்பு அளிக்க வேண்டும் என்ற உயரிய விழுமியம் இதில் வெளிப்படுகிறது

**உயிரினங்கள் மீதான அன்பு**

நற்றிணையில் மான் யானை மயில் கிளி குருவி அன்னம் போன்ற உயிரினங்கள் இடம்பெறுகின்றன. இவை வெறும் உவமைகளாக இல்லாமல், இயற்கையின் உயிர்ப்பை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக மான் தன் குட்டியைப் பாதுகாப்பது போலத் தலைவியும் தன் காதலைப் பாதுகாக்கிறாள் என்று உவமை கூறப்படுகிறது. இவற்றின் விழுமியங்களாக அனைத்து உயிர்களும் வாழ உரிமையுடையவை என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.

**நீர் வளப் பாதுகாப்பு**

நற்றிணையில் ஆறு குளம் ஏரி அருவி ஆகியவை பெருமளவில் குறிப்பிடப்படுகின்றன. நீர் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்பதை சங்கப் புலவர்கள் உணர்த்தியுள்ளனர். சான்றாக மழையால் நிரம்பிய ஆறுகள் விவசாயத்திற்கு உதவுவதாகக் கூறப்படுகிறது. இவற்றின் விழுமியமாக நீரை சேமிக்க வேண்டும். என்று அறிவுறுத்துகின்றது.

**மனிதனும் இயற்கையும்**

நற்றிணையில் மனிதன் இயற்கையை வெல்ல முயலவில்லை. மாறாக, இயற்கையோடு வாழ்கிறான். இயற்கையை மதிக்கிறான். இயற்கைக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறான். இதுவே இன்றைய நிலையான வளர்ச்சிக் கொள்கைக்கும் பொருந்துகிறது. சங்க கால மக்கள் இயற்கையைச் சுரண்டத் தெரிந்த நுகர்வோராக வாழாமல், அதைப் பாதுகாக்கும் பாதுகாவலர்களாக வாழ்ந்தனர்.

**ஐந்திணையில் சுற்றுச்சூழல் அறம்**

ஐந்திணையில் சுற்றுச்சூழலில் அறம் குறித்துப்பேசப்படுகின்றது. முல்லை நிலத்தில்

தேனீக்களை அழிக்காமல் தேன் எடுத்தல் பற்றியும், இளங்குட்டிகளை வேட்டையாடாமை இருப்பதே அறமாகும்

நெய்தல் நிலத்தில் மீன்களின் இனப்பெருக்கக் காலத்தில் கடலுக்குச் செல்லாமல் தவிர்த்தலை அறமாக மேற்கொள்ளப்படுகின்றது.

குறிஞ்சி முதிர்ந்த மரங்களை மட்டுமே விறகிற்குப் பயன்படுத்துதலும், காடுகளை எரிக்காமல் இருப்பது அறமாகக் கூறப்படுகின்றது.

விலங்குகளின் பசியைப் போக்க மனிதன் முயல்வதும், பறவைகளின் கூடுகளைக் கலைக்காமல் இருப்பதும் நற்றிணையில் அறமாகக் கருதப்படுகிறது. இயற்கைக்குத் தீங்கு விளைவித்தால் தெய்வக் குற்றம் ஆகும் என்ற நம்பிக்கை வழியே சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டது.

**பருவநிலை அறிவு**

நற்றிணையில் மழைக்காலம், கோடை, பனிக்காலம் பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன. மக்கள் பருவநிலைக்கு ஏற்ப விவசாயம் செய்வதும், நெடுந்தூரப்பயணம் மேற்கொள்வதும், உணவு, வாழ்க்கை ஆகியவற்றை அமைத்தனர். இதுவே இயற்கை அறிவின் வெளிப்பாடாகும்.

**சுற்றுச்சூழல் சமநிலையும் தற்காலத் தேவையும்**

இன்று புவி வெப்பமயமாதல், காடுகள்அழிப்பு, நீர் மாசுபடுதல் போன்ற காரணங்களால் மனித குலம் அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இச்சூழலில் நற்றிணை காட்டும் விழுமியங்கள் நமக்கு மிக முக்கியமான பாடங்களைக் கற்பிக்கின்றன

**பல்லுயிர் பாதுகாப்பு:** காடுகளையும் வனவிலங்குகளையும் அழிப்பது மனித குலத்தின் அழிவிற்கே வழிவகுக்கும் என்பதை நற்றிணையின் பாலைத் திணை உணர்த்துகிறது.

**இயற்கை வேளாண்மை:** மருத நிலத்து உழவர்கள் மண்ணின் வளம் கெடாமல் செய்த விவசாய முறைகளை நாம் பின்பற்ற வேண்டும்.

**நீர் மேலாண்மை:** நற்றிணையில் கூறப்படும் தூய நீர்நிலைகளைப் போல, நாமும் நம் நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டும்.

**சூழலியல் விழுமியங்கள்**

சூழலியல் கூறுகள் நற்றிணையில் காணப்படுகின்றது. சூழலியல் விழுமியமியங்களாக, குறிஞ்சி நிலத்தில் மலை வள பாதுகாப்பு பற்றியும், முல்லை நிலத்தில் உயிரின பாதுகாப்பு பற்றியும், மருத நிலத்தில் உணவுப் பாதுகாப்பு பற்றியும், நெய்தல் நிலத்தில் கடல்வள பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும், நீர்,ஆறு, குளம் போன்றவற்றில் நீர் சேமிப்பு பற்றியும், வேங்கை, புன்னை போன்ற மரங்களின் முக்கியத்துவம் குறித்தும், விலங்குகள் மான், யானை

போன்ற விலங்குகளின் உயிர் பாதுகாப்பு பற்றியும், கிளி, மயில், போன்ற பறவைகளின் பல்லுயிர் பாதுகாப்பு குறித்தும் சுற்றுச்சூழல் அறத்தினை எடுத்தியம்புகின்றது.

குறிஞ்சி நிலப் பாடல்களில் மலை, அருவி, குரங்கு, மயில் போன்றவை இயற்கையின் செழிப்பைக் காட்டுகின்றன. தலைவன்–தலைவி சந்திப்பு இயற்கைச் சூழலோடு இணைக்கப்பட்டுள்ளது. மனிதன் இயற்கையின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றான். மருத நிலப் பாடல்களில் நெற்பயிர்கள் அலைபோல் அசையும் காட்சி விவசாய வளத்தையும் நீர்ப்பாசன முறையையும் எடுத்துரைக்கிறது. விழுமியம்: நீர் வளமே விவசாயத்தின் அடிப்படையாகத் திகழ்கின்றது.

முல்லை நிலத்தில் மான்கள் சுதந்திரமாகச் சுற்றித் திரியும் காட்சி உயிரினங்களின் பாதுகாப்பை உணர்த்துகிறது. உயிர்களை நேசிக்கும் தன்மை வலியுறுத்தப்படுகின்றது. நெய்தல் நிலத்தில் கடலலைகள், மீன்பிடி, கடற்பறவைகள் ஆகியவை கடல் சார்ந்த வாழ்க்கையின் சூழலியல் சமநிலையை எடுத்துரைக்கின்றன. இயற்கை வளங்களை அளவோடு பயன்படுத்தும் முறையை எடுத்துரைக்கின்றது.

**முடிவுரை**

நற்றிணை காதலை மட்டுமல்ல, இயற்கை சார்ந்த வாழ்வியலையும் எடுத்துரைக்கும் சிறந்த சங்க இலக்கியமாகும். ஐந்திணை அமைப்பின் மூலம் மனித வாழ்வும் இயற்கையும் பிரிக்க முடியாதவை என்பதை வெளிப்படுத்துகிறது. மரங்கள், நீர், விலங்குகள், பறவைகள், மலை, கடல் ஆகிய அனைத்தும் வாழ்வின் அடிப்படை கூறுகளாகக் கருதப்படுகின்றன. மரங்களைப் பாதுகாத்தல், நீரைச் சேமித்தல், உயிரினங்களை காப்பாற்றுதல், இயற்கையை மதித்தல் நிலையான வளர்ச்சியைப் பின்பற்றுதல் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. சங்க இலக்கியங்களில் உள்ள இயற்கை நெறிகளை அறிந்து நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவையாகும். நற்றிணையில் காணப்படும் சூழலியல் விழுமியங்கள் இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் நிலையான வளர்ச்சிக்கும் வழிகாட்டும் சிந்தனைகளாக அமைகின்றன.

**சான்றெண் விளக்கம்**

**1. சான்றெண் விளக்கம் / உரைச்சுட்டு (In-Text Citations)**

1. (இளம்பூரணனார் 8)
2. (திருஞானசம்பந்தம் 14)
3. (மகாதேவன் 44)
4. (மகாதேவன் 300)
5. (மகாதேவன் 92)

6. (சுப்பிரமணியன் 56)
7. (சுப்பிரமணியன் 51)
8. (சுப்பிரமணியன் 111)
9. (சுப்பிரமணியன் 133)
10. (சுப்பிரமணியன் 231)

**2. பார்வை நூல்கள் / துணைநூற்பட்டியல் (Works Cited)**

MLA விதிகளின்படி:

[1]. நூற்பட்டியல் **ஆசிரியரின் இயற்பெயர் அகரவரிசையில் (Alphabetical Order)** அமைய வேண்டும்.

[2]. பதிப்பகத்தின் முகவரி (தெருப்பெயர், அஞ்சல் குறியீட்டு எண் போன்றவை) தேவை இல்லை; **பதிப்பகத்தின் பெயர் மற்றும் வெளியான ஆண்டு** மட்டுமே போதுமானது.

[3]. நூலின் பெயர் சாய்வெழுத்தில் (*Italics*) இருக்க வேண்டும்.

[4]. **இளம்பூரணனார்**, உரையாசிரியர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், 2010.

[5]. **சுப்பிரமணியன், ச. வே.** *சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும்*. மணிவாசகர் பதிப்பகம், 2010.

[6]. **திருஞானசம்பந்தம், ப.**, உரையாசிரியர். *அகப்பொருள் விளக்கம்*. கதிர் பதிப்பகம், 2010.

[7]. **மகாதேவன், கதிர்**, உரையாசிரியர். *சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும்*. வர்த்தமானன் பதிப்பகம், 2022.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 59.சங்க இலக்கியச் சூழலியலில் தாவரங்கள்

**முனைவர்.செ.நான்சி,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-02
nancysebastin123@gmail.com, https://orcid.org/0009-0008-2755-929X?lang=en

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வதற்கு ஏற்ற இடம்தான் இந்த புவிமண்டலமாகும். நம்மைச் சுற்றியுள்ள நிலம், நீர், காற்று, விண்வெளி, காடுகள், கடல்கள், விலங்கினங்கள், பறவைகள் ஆகியவற்றின் இயக்கம் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கியது சுற்றுச்சூழல். சுற்றுச்சூழலை பாதுகாப்பது இந்த உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் முன்வர வேண்டும். மனித வாழ்க்கை நிலைத்திருக்க வேண்டுமாயின் சூழல் மிகவும் அவசியமானதாகும். இயற்கையை நேசித்து இயற்கையை பாதுகாத்து வாழ வேண்டியது நம்மை வாழ வைக்கும் இயற்கைக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் ஆகும். சூழலை அழித்தல் நமது அழிவிற்கு நாமே வாய்ப்பை ஏற்படுத்தி கொள்வதாக அமைகிறது. அது போல மனிதனால் ஒருபோதும் இயற்கையை வென்றுவிட முடியாது என்பது தெளிவான உண்மை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி நம் முன்னோர்கள் பெரும் அறிவையும் விழிப்புணர்வையும் கொண்டிருந்தனர். என்பதற்கு இலக்கியங்களில் கூட பல ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக நிலத்தை ஐவகை திணைகளாக பிரித்து அதற்கு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பெயரிட்டனர். அங்கு வாழும் மக்களுக்கு ஏற்ப தொழில்கள் கலாச்சாரங்கள் கடவுள்கள் என வகுத்து முறையானதொரு வாழ்வை மேற்கொண்டனர். இன்றைய சூழ்நிலையில் மனிதர்கள் அனைத்தையும் வணிகப் பொருளாக பார்க்கத் துவங்கிவிட்டான். நிலமும் நீரும் தற்போது முற்றிலும் வணிகமயமாகிவிட்டன. நாம் சுவாசிக்கும் காற்றும் கூடிய விரைவில் கடைத்தெருக்களில் சிலிண்டர்களில் விற்பனைக்கு வந்துவிடுமோ என்ற அச்சம் உருவாகிவிட்டது. இன்று பல வளர்ந்த நாடுகளின் நகரங்களில் மூச்சு விடவே கடினமான சூழ்நிலை நிலவுகிறது. இது காற்று மாசுபடுவதால் வந்த விளைவுதான். சுற்று சூழல் மாசுபாட்டினால் நாம் நீர் நிலைகளில் சுத்தமான நீர் கிடைக்காமல் சுத்திகரிக்கப்பட்ட நீரை விலை கொடுத்து வாங்கும் நிலைமைக்கு வந்து விட்டோம். மழை குறைந்து விட்டது. வெள்ளங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. நிலவளம் குறைந்து வளரும் பயிர்களும் தானியங்களும் காய்கறிகளும் விஷத்தன்மை உள்ளதாக மாறிவிட்டன.

**முன்னுரை**

உயிரினச் சங்கிலியில் மனிதர்களோடு மிக நெருங்கிய உறவு கொண்டது தாவரங்களாகும். பூமியின் பசுமைக்கும் மலை வளத்திற்கும் உயிரினங்களின் உறைவிடத்திற்கும் இன்றியமையாத காரணியாக அமைந்திருப்பது தாவரங்களாகும். மனிதனின் வாழ்வில் விளங்கியிருக்கும் உடைக்கும் இருப்பிடத்திற்கும் பெரிதும் துணை நிற்பது தாவரங்கள் ஆகும். சங்க கால தமிழர் வாழ்வியலில் தாவரங்கள் மிக இன்றியமையாத இடத்தை பெற்றுள்ளன.

தாவரங்களின் பயன்பாட்டிற்கு மனித வாழ்வியல் சூழலியலே இல்லை என்னும் வகையிலும் தாவரங்கள் இடம்பெற்றுள்ளன. சங்க கால மக்கள் தம் வாழ்வியலில் அகச் சூழலியலிலும் புறச்சூழலியலிலும் தாவரங்கள் இழையோடி காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் தாவரங்கள் தொடர்புடைய மக்களின் அன்றாட வாழ்வியல் பிரிவின் பதிவாகியுள்ளன .அவற்றை குறித்து கட்டுரை விரிவாக காண்போம்.

சங்க இலக்கியங்களில் மரங்கள் மதிப்பிற்குரியனவாக போற்றப்பட்டுள்ளன தொல்காப்பியர் குறிப்பிடும் கருப்பொருள்களில் மரம் இன்றியமையாத இடத்தை பெறுகிறது மன்னனின் மதிப்பு மிகவும் உரசல் காவல் அறனும் உணவு மற்றும் பாதுகாப்பும் மரங்களை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தனர் இறைவன் உரையும் இடமாகவும் மரங்கள் அன்று முதல் இன்று வரை நம்பப்படுகிறது உணவு மற்றும் வாழ்வியல் இருப்பிடமாக மரங்கள் விளங்கியுள்ளன சங்க கால மக்கள் வாழ்வியல் சூழலில் மரங்கள் பெரும் பங்கு வகித்துள்ளன.

**மூங்கில் மரம்**

சங்ககாலத்தில் மிகுதியாக காணப்படுகின்ற மரங்களில் மூங்கில் மரமும் ஒன்றாக திகழ்கிறது. காடுகளுக்கு பசுமையான காட்சியினையும் கேட்பதற்கு இனிமையான ஓசையினையும் கொடுப்பது மூங்கில் மரமாகும். இந்தத் தாவரம் புல் வகையைச் சேர்ந்தது என தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ஆனால் மக்கள் மரமாகவே கருதுகின்றனர். இந்த மரம் மனிதர்களுக்கு உணவு எடுத்துச் செல்வதற்கும் கல்லை குடிப்பதற்கும் சிலம்பம் வில் பரண் தூண்டில் புல்லாங்கழல் வீடு கட்டுதல் போன்ற வற்றிற்கு மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். மூங்கில் மரங்கள் நிறைந்த இயற்கையோடு இயந்த சூழலியல் தொடர்புடன் அக்கால மக்கள் வாழ்வை மேற்கொண்டனர். இதன் தாவரவியல் **பெயர் 'Bambusa arundinaecea' 1** என்பதாகும்

**“நெட்டில், நேடல், திருடகிரந்தி, வங்கியம், இருசு, திருனகேது, மசுக்கரம், அமை,தோல் ,புனை, புட்ப காதகம் ,போல், மது திருமணம், வின் பல், முந்துல், வேயல், இயலபலம், கார்முகில், தூதனம் , சந்தில், வேதிர், தனித்திருமம் தட்டை சடம் சதிஷம் கிளை கண்கணு ஓங்கல் வெதிரம், முத்துலம் வேணு விண் பகல்” 2**

என்று பல பெயர்களை சா. அனந்தகுமார் பட்டியலிடுகிறார்.

பண்டைய தமிழர் உணவினை நீண்ட தூரம் கொண்டு செல்வதற்கு மூங்கில் குழாய்களை பயன்படுத்தினர். மூங்கில் கணுக்களே மூங்கில் குழாய்கள் ஆகும். அவற்றில் உணவு கல், மலர் போன்றவற்றை வைத்து பயன்படுத்தினர்.

**பனைமரம்**

தமிழர்களின் வாழ்வியலில் பனைமரம் ஓர் அங்கமாக திகழ்கின்றது. இம்மரம் தமிழ்நாட்டின் மாநில மரமாகவும் சிறப்புற்று விளங்குகிறது தமிழர்கள் தோன்றிய காலம் முதல் பனை மரங்கள் தோன்றி அவர்களின் வாழ்வை வளப்படுத்தி உள்ளன. பனைமரத்தின் ஓலை காய் பழம் கிழங்கு மரத்துண்டுகள் என அனைத்து உறுப்புகளும் அன்று முதல் இன்று வரை மனிதனுக்கு பயன் தரக்கூடியவனாக அமைந்துள்ளன.

**பனை மரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள்**

சடாபலம் ,மகோன்னதம் , திருவிராசன், தீர்க்க தரு, உடு பாதகம், ஐந்தார், கரதாலம், கரும்புல், கரும்புறம், புல், பு ற்பதி ,பூமி பிசாசம்.

என்று பனை மரத்தில் பல்வேறு பெயர்களை ச. ஆனந்தகுமார் பட்டியல் இட்டுள்ளார்.

பனங்கொட்டையை நிலத்தில் போட்ட பின்பும் இயல்பாக முளைத்து மரமாகி மனிதர்க்கு எல்லாவித பயன்பாடுகளையும் தருகின்றது. பனைமரம் உண்ண உணவாக பழங்கிழங்கு, நுங்கு, பதநீர், கருப்பட்டி போன்றவையை தந்து மனித வாழ்வில் துணையாக நிற்கின்றது.

**"பனை ஓலையை கூரையாக வைவதற்கு பயன்படுத்துகிறோம் அன்றாட வாழ்க்கைக்கு பனை நார் பெட்டி பனை ஓலை பெட்டி இவை பயன்படுகின்றன உறங்குவதற்கு பனை நர் கட்டில் பயனாகின்றது பனைப் பொருட்கள் இருந்து கயிறு தயாரிக்கின்றனர் இது மெத்தைக்கும் பயன்படுகிறது" 3**

என்று சா.வே சுப்பிரமணியன் பனையின் பயன்களை குறிப்பிடுகின்றார். இத்தகைய பனை மரத்தை வெட்டுவதால் தண்டனைகளும் அக்காலத்தில் வழங்கப்பட்டன. அது கல்வெட்டுகளிலும் பதிக்கப்பட்டுள்ளது. சான்றாக

**"காலம் குறிப்பிடப்படாத ஒரு கல்வெட்டில் ஒரு உயிருள்ள பனை மரத்தை வெட்டுபவனுக்கு அரசின் ஆணைப்படி தகுந்த தண்டனை வழங்கப்படும் என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது" 4**

என்று கூவி கிருஷ்ணமூர்த்தி கூறுகின்றார். மன்னர்களும் பனை மரத்தை பாதுகாத்து வந்ததை மேற்கண்ட கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது.

**புன்னை மரம்**

மரங்கள் மனித வாழ்வாதாரத்தின் உயிர்நாடியாக விளங்குகின்றன. சங்க கால புலவர்கள் போற்றிப் பாடிய மரங்களில் புன்னை மரம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். புன்னை மரம் இயல்பாய் வாழும் இடம் உன்னையும் கிளைகள் கிளைகள் மொக்குகள் பூக்கள் மகர்ந்த தாது காய்கள் ஆகியவற்றை கண்டு சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர். தமிழ்நாட்டில் பல அரிய மரங்களில் புன்னை மரமும் ஒன்றாகும். இந்த மரம் வண்டல் படந்த பூமியில் சிறப்பாக வளரக்கூடியதாகும்.தல மர வழிபாடும் பெருந்தெய்வ வழிபாடும் கோயில்களும் பிரபலமடைய தொடங்கியவுடன் புன்னை மரமும் அதிக முக்கியத்துவம் பெற தொடங்கியது.

**"பண்டைய தமிழகத்தில் கிழக்கு கடற்கரை பகுதிகளில் தான் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதற்கு காரணம் புன்னைவரு கடற்கரையோர தாவரம் என்பது தான் இந்தப் பகுதியில் அமைக்கப்பட்ட பெருந்தெய்வக் கோயில்கள் பழவற்றோடு தல மரங்களாக புன்னை மரம் தொடர்புபடுத்தப்பட்டது" 5**

என்று புன்னை மரத்தின் இன்றியமையாமையை இந்து தமிழ் நாளிதழ் கட்டுரைக் குறிப்பிடுகின்றது.

புன்னை மரத்தில் தோற்றத்தைப் பற்றி உலோச்சனார் என்ற புலவர் நற்றிணைப் பாடலில் **"இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை"6**

புன்னை மரம் இரும்பை போன்ற நிறம் உடையது என்றும் இலைகளை கொண்டது என்றும் அந்த இலையில் வெள்ளி போன்ற மகரந்தத்தாது இருக்கும் என்றும் உரைக்கிறார்.

மேலும் மக்கள் வாழ்வில் மரங்கள் இரண்டற கலந்து இருப்பதை உலக இலக்கியங்களில் ஓரறி உயிரை மகளாக உடன் பிறந்தவனாக கருதும் எண்ணத்தை தமிழ் இலக்கியம் தான் முதன் முதலில் குறித்துள்ளதாக கூறுவர்.

**"தாவரங்களோடு ஒட்டி உறவாடி வாழ்ந்திருந்தால் உணர்வும் எண்ணமும் தமிழருக்கு தோன்றியிருக்கலாம்" 7**

**என்று ச.வே சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார்.**

புன்னை மரத்தை தாய் தன் முதல் மகளாகவும் மகள் தன்னுடன் பிறந்த தமக்கையாகவும் கருதும் வழக்கம் அக்கால தமிழ் சமூகத்தில் நிலவியதை

**"விளையாட்டு ஆயமொடு வெண் மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த கால் முளை அகை**
**நைப்பை தேம்பால் பெய்து இனிது வளர்த்தது**
**நம்மினும் சிறந்தது அவ்வை ஆகும் என்று**
**அன்னை கூறினால் புன்னைது சிற ப்பே" 8**

என்று அழைக்கின்றது. நற்றிணை. புன்னகை தன் முதல் மகளாக தாய் கருத அப்பண்ணையை தன்னுடன் பிறந்த தமக்கையாக மகள் கருதுகிறாள் இயற்கையோடு இணைந்து இன்பக் காற்றியாக இக்கருத்து அமைகிறது என்று சுப்பிரமணியன் விளக்கம் அளிக்கிறார் இதன் மூலம் மனித வாழ்வில் புன்னை மரம் நெருங்கிய உறவாக சூழலில் ஒன்றிணைந்து இருந்ததே அறிய முடிகிறது

**சான்றெண் விளக்கம்**

1. சி.கு சென்னகேசவலு ஐந்திணைப் பறவைகள் ப.9
2. ச.சுபாஷ தொல். பொருளதிகாரம்நூல் 621
3. வி. நாகராசன் (உ.ஆ) நெடுநல்வாடை பா.128
4. இரா.செயபால் ( உ.ஆ) அகநானூறு
5. பி.எல்.சாமி சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் ப.373
6. ச.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ) திருஞான சம்பந்தர் தேவாரம் ப.2
7. சதாசிவ செட்டியார் ( உ.ஆ) நற்றிணை பா.143
8. சா.கோவிந்தன் பிடி.சீனிவாச அய்யங்காரின் தமிழர் வரலாறு பாகம் 1

# 60. திருக்குறளில் சுற்றுச்சூழல் சிந்தனை

**முனைவர்.த.பத்மா,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை புனிதசிலுவை தன்னாட்சிக்கல்லூரி

திருச்சிராப்பள்ளி –02

Email:padmakvb;gmail.com, Orcid:https://orcid.org:0009-0006-2128-9968

**ஆய்வுச்சுருக்கம்**

திருக்குறள் மனித ஒழுக்கத்தை மட்டும் கூறவில்லை.இயற்கை, சுற்றுச்சூழல், நீர்மேலாண்மை மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றை. சுற்றுச்சுழல் கெடுவதால் மனிதகுலம் மட்டுமல்ல, விலங்கினங்களும், தாவர இனங்களும் அழிவுக்கு உள்ளாகி வருகின்றன. இயற்கைச் சமநிலை இழந்து,பருவகாலங்கள் மாறி நிலநடுக்கங்களும் கடும் புயல்களும் ஏற்படுகின்றன. சுற்றுச்சூழல் வெப்பமாவதாலும், பனிகட்டிகள் உருகி கடலின் நீர்மட்டம் உயர்வதாலும்,மக்களின் வாழ்க்கை சிர்கெடுகின்றன. திருவள்ளுவர் தமது திருக்குறளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எழுதிச் சென்றுள்ள கருத்துக்களையும் கற்றாலே சுற்றுசூழலின் தூய்மையை நன்கு உணரப்படும்.

**முன்னுரை**

இப்புவியில் பிறந்துள்ள மனிதனுக்கு எவ்வாறு பூமி சொந்தமோ அதைப் போல தான் மற்ற உயிரினங்களுக்கும்பூமிசொந்தமாகும். மனிதன் தான் வாழ்வதற்கு இயற்கையைச் சிதைக்கின்றான் இதனால் பல்வேறு இயற்கைச் சீற்றங்களுக்கு ஆளாகின்றான். மனித இனம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு மட்டுமில்லாமல் மற்ற உயிரினங்களுக்கும்,சூழலியல் அடிப்படையில் வாழ்வியல் மதிப்புகளை திருக்குறளில் பல்வேறு இடங்களில் வள்ளுவர் பதிவு செய்துள்ளார். இக்கருத்து எக்காலத்திற்கும் பொருந்துவனாக இருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது அதைப்பற்றி இனி இக்கட்டுரையில் காணலாம்.

**திறவுச்சொற்கள்:**

இயற்கை, கைமாறு, உதவி, மழையின் மேன்மை, வான்சிறப்பு, உயிர்கள், பஞ்சம், பட்டினி, பசுமை

**பிறப்புசமயம்**

உலகில் பிறக்கும் எல்லா உயிர்களுக்கும் பிறப்பென்பது சமம் ஆனால் மனிதன் மட்டும்தன் ஆளுமையைப் பயன்படுத்தி மற்ற உயிரினங்களைத் தன்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகின்றான் உலகில் படைக்கப்பட்ட எல்லா உயிரினங்களும் ஒவ்வொரு காரணமாகதான் படைக்கப்பட்டுள்ளன. ஆவை, "உணவுச் சங்கிலியாகப் பரணமித்தும், இறந்துபோன அழுகிய உடல்களை இப்புவியிலிருந்து அப்புறப்படுத்துவதுமாக அவை செயல்படுகின்றன அவ்வுயிரினங்கள் ஒவ்வொன்றும் பல்வேறுவகையாக இருந்தாலும் அவை செய்யக்கூடிய தொழிலால் அவை, வேறுபடுகின்றனவென்று.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய் தொழில் வேற்றுமையான் (972)**

எனும் குறளில் வள்ளுவர் கூறுகின்றார்.

**நில,நீர்.மாசுபாடு**

சுற்றுப்புறச் சூழல் மாசுபாடு காரணமாக நிலத்தின் இயல்பும் மாசடைகின்றன. அதைச்சார்ந்த நீரும், நிலத்தின் தன்மையையே பெறுமென்பதை

**நிலத்துஇயல்பான்நீர்திரிந்துஅற்றாகும் (452)**

என்று வள்ளுவர் கூறுகின்றார் இதன் பொருளை அன்றாடவாழ்வில் நாம் காணலாம். சக்கடை கழிவால் நிலமும் குடிநீரும் மாசுபட்டு உயிரினங்களுக்கு கேட்டையும் விளைகின்றது. அதுவும், குறிப்பாக மனிதர்களுக்கு மலேரியா, காலரா, யானைக்கால் நோய் முதலானவை ஏற்படுவதைக் காணலாம்.

ஓரறிவு தாவரங்கள் முதல் ஆறறிவு மனிதன் வரை அனைத்து உயிர்களையும் புதுப்பிக்கும் சக்தியாகத்திகழும் மழையையும், மழையின் இன்றியமையாமையையும் வான்சிறப்புனனும் அதிகாரம் மூலம் வள்ளுவர் விளக்குகிறார். இதில் அளவான மழையால் இயற்கை செழித்து, பல்லுயிர்களும் புத்துயிர்பெற்று, சூழலியலும் வலிமை பெறுகின்றதென்கிறார். வறட்சியால் மக்களிடையே நிலையான ஒழுக்கமும் கெட்டுப்போகுமென்பதை

**நீரின்றுஅமையாதுஉலகுஎனின்யார்யார்க்கும்**
**வானின்றுஅமையாதுஒழுக்கு (20)**

என்கிறார் இன்று நிலத்தில் பலஅடி ஆழம்வரை ஆழ்துளைக்கிணறு வெட்டினாலும் நன்னீரான நிலத்தடிநீர் கிடைப்பதில்லை.

**பேரிடர்**

**“வெள்ளத்துஅனையஇடும்பை” (622)**
**“ஊழிபெயரினும்” (989)**
**“வற்றல்மரந்தளிர்தற்று”(78)**

இந்தகுறள்கள் முறையே பெருவெள்ளம், பேராலை, கடும்வறட்சி ஏற்பட்டு மரங்கள் பட்டுபோனதை புலப்படுத்துகின்றன. இவ்வாறான இயற்கை இடர்பாடுகளையும் மனிதஇனம் கடந்து வந்திருப்பதும் பேரிடர்சூழலை எதிர்கொண்டதும் அறியமுடிகிறது.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் எனும்பழமொழி நமக்கு ‘சூழலியல் விழிப்புணர்வு புகட்டுவதை உணரலாம். தற்போது, ஓரளவு பசுமை இருக்கும்போதே மரக்கன்றுகளை நட்டு மரங்களை வளர்க்க முயற்சித்தால் உலகை வெப்பமடைவதிலிருந்து காக்கலாம். பறவைகளை வேட்டையாடுவது மிகவும் தீயசெயல்களிலொன்றாக

**தவமறைந்துஅல்லவைசெய்தல்புதல்மறைந்து**
**வேட்டுவன்புள்சிமிழ்த்தற்று (274)**

எனும்குறளில் வள்ளுவர் கூறுகிறார். ‘புறத்தூய்மை அகத்தூயாி; மக்காட்டும் என்பார்கள். அதைப்போலதான் பல்வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டு தன் இல்லம் வரும்போது கால்களைச் சுத்தமாக நீரினால் கழுவிய பிறகுதான் இல்லத்திற்குள் நுழைதல் வேண்டுமெனும் சுகாதாரம் பற்றிய சிந்தனையை

**கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்**
**குழாஅத்துப் பேதை புகல் (840)**

எனும் குறளில் வள்ளுவர் கூறுகிறார். தொழிற்சாலைகளிலிருந்து பெட்ரோல், டீசல் முதலான எரிபொருட்களால் வெளியேற்றப்படும் புகையிலிருக்கும் சல்பர்-டை-ஆக்ஸைடு போன்ற நச்சுவாயுக்கள் காற்றுமண்டலத்தை அடைத்து அவ்வாயுக்கள் உலர்ந்து விலங்குகளும். புலவண்ணங்களில் பிரதிபளிக்கும் கட்டிடங்களும். ஆறுகளும். ஆரிய சிலைகளும். நிலத்தடி நீரும் பாதிக்கப்பட்டு இறுதியில் மனிதனை வாழ்விக்கும் சூழல்கள் அனைத்தும் அழியும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

**இயற்கைஉரங்களைபயன்படுத்துதல்**

செயற்கை உரங்கள் பயனப்டுத்துவதைத் தவிர்த்து இயற்கை உரமான விலங்குகளின் கழிவுகளையும். தாவரங்களின் கழிவுகளையும் பயன்படுத்துவதாலும். மரங்கள் வளர்த்துப் பசுமையைப் பேணுவதாகும். வேதிப்பொருட்களால் மாசுபடுவது தடுக்கப்பட்டு நிலத்தின் வளம்மேம்பட்டு. பசுமைப்புரட்சி காரணமாக மழைவளம் பெருகி. மண்ணுயிரெல்லாம் பயனடைய வள்ளுவர் வழி

**செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல் (637)**

எனும் இயற்கையை முதன்மைப்படுத்தும் சூழலியல் கோட்பாட்டை நாம் பின்பற்றினால் பல்வேறுவகையான இயற்கைச்சீற்றங்களான நிலநடுக்கம். ஆழிப்பேரலை (சுனாமி). வறட்சி. நிலத்தடிநீர் பற்றாக்குறை. மாசுகலந்த நச்சுக்காற்று. அதிகவெப்பம் முதலானவற்றிலிருந்து பாதுகாப்பாக வாழலாம்.

**தொழிற்சாலைமாசுகள் - கட்டுப்பாட்டுமுறை**

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் நச்சுத்தன்மையால் நீரின் மென்மை கெடுகிறது. தமிழகத்தில் பாலாறு, பவானி, காவிரி, வைகை, அமராவதி, மணிமுத்தாறு, சிறுவாணி முதலிய ஆறுகளில் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் கலப்பதால் ஆற்றுநீர் கெட்டுப்போகிறது. கெட்டுப்போன குடிநீரும், பாசனநீரும் நிலத்தையும், நிலத்தில் வாழும் உயிரினங்களையும் பலிகொள்கின்றன.

**நிலத்தியல்பால்நீர்திரிந்தற்றாகும்மாந்தற்கு**
**இனத்தியல்பதாகும்அறிவு (குறள் - 452)**

உதாரணமாக மணற்பாங்கான இடத்தில் வீழ்ந்தநீர் வெண்மையாகவும்,செம்மண் நிலத்தில் வீழ்ந்தநீர் செம்மையாகவும், களிமண் நிலத்தில் விழுந்த நீர் கலங்கலாகவும் ஆகிவிடுகிறது. தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பதால் ஆறுகள், ஏரிகள் இகிணறுகள் முதலியன பாதிக்கப்பட்டு சுற்றுச்சூழல் பாதிப்படைகிறது. அந்தநீரினால் நிலமும் விவசாயம் செய்யப்பயன்படாத தன்மைக்கு மாற்றப்பட்டு மலட்டுத்தன்மையை அடைகிறது இதுசுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கருத்து.

**நாட்டிற்குஇயற்கைதரும்பாதுகாப்பு**

ஆறு, கடல் எனும் இருபுனலும், வளர்ந்தோங்கி நீண்டமைந்த மலைத் தொடரும், வருபுனலாம் மழையும், வலிமைமிகு அரணும், ஒரு நாட்டின் சிறந்த பாதுகாப்பு உறுப்புகளாகும்

என்பது ஐயன் திருவள்ளுவரின் கூற்றாகும்.

**இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.- (குறள் 737)**

இவை பாதுகாப்பு அம்சமாக மட்டுமல்லாமல் நாட்டின் செல்வச் செழிப்பிற்கம், இயற்கை வனப்பிற்கும் காரணமாய் அமைகின்றன. ஒரு நாடானது ஒருதுணைக் கண்டத்திற்கு; ஏற்றவாறு நான்கு வகையான நிலங்களையும் தன்னகத்தே கொண்டதாக இருக்கவேண்டும் எனவும், அப்படிப்பட்ட நாடே பேரரசாக விளங்கத்தக்கது எனவும் இன்றைய நிலநூல் வல்லுநர் கூறுகின்றனர். இயற்கைதரும் அரணே நாட்டுக்கு மிகப்பெரிய பாதுகாப்பு என்பதையும் தற்கால போர்களின்; முடிவுகள் தெரிவிக்கின்றன.

**பல்லுயிர் ஓம்புதல்**

உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்குமானது இவ்வுலகம் என்று கருதுவது சுற்றுச்சூழல் சார்ந்த சிந்தனையாகும் இக்கருத்தை மிக நுட்பமாக திருவள்ளுவர் தம் திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்(972)**
**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் (322)**

என்று இரண்டு குறட்பாக்களில் அவர் பயன்படுத்திய உயிர் என்ற சொல்லாட்சி கருதத்தக்கது திருவள்ளுவர் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறட்பாவில் மனிதர்களின் ஏற்றத்தாழ்வு சாதி மறுப்பினை மட்டும் கூறவில்லை மாறாக அதனையும் தாண்டி ஓரறிவுடைய உயிர் முதல் ஆறறிவுடைய மனிதன் வரை அனைவரும் பிறப்பால் ஒத்தன என்று வலியுறுத்த முற்படுகிறார்.

**முடிவுரை**

பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்ற இந்த பூமியில் உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்கள் இரண்டும் இணைந்துள்ளது நிலம், நீர் காற்று, நெருப்பு இவற்றின் சமநிலை மாறும் போது உயிர்களின் வாழ்க்கை சூழல் பாதிப்புக்கு உள்ளாகும் அந்த வகையில் வள்ளுவர் நீரை சேமிப்பதன் அவசியத்தையும் பூமியில் ஏற்பட்டுள்ள பேரிடர் இழப்புகளையும் உலகில் உள்ள பல்லுயிர்களை ஓம்ப வேண்டும் என்னும் கருத்தினையும் பதிவு செய்திருப்பது சூழலியல் சிந்தனைக்கு முன்னோடியாக அமைந்துள்ளது. மனிதனின் வாழ்க்கை சிறப்புடன் விளங்கிட முதலில் இயற்கை சூழல் செம்மையாக அமைந்திட வேண்டும் மன்னன் தலை சிறந்து விளங்க மக்களை பேண வேண்டும் அதற்கு நல்ல இயற்கை சூழலை அமைத்து தர வேண்டும் என்று வள்ளுவர் கூறியிருப்பது சிறந்த சூழலியல் சிந்தனையாக விளங்குகிறது அதை பின்பற்றி இந்த பூமியை பேண வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**துணைநூற்பட்டியல்**

**1. எஸ். கௌமாரீஸ்வரி, பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள்-சாரதா பதிப்பகம் சென்னை**

**2. புலவர் வீ.சிவஞானம் திருக்குறள், விஜயா பதிப்பகம், கோவை.**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 61.திருக்குறளில் இயற்கை அறம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

## Nature Ethics and Environmental Protection in the Thirukkural

**முனைவர் ச. கௌசல்யா,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 002
Mail Id: kowsi.kowsalya84@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறள், மனித வாழ்வின் அறநெறிகளை மட்டுமல்லாது இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான உயரிய சிந்தனைகளையும் உள்ளடக்கிய அரிய இலக்கியமாகும். திருவள்ளுவர் இயற்கையை மனித வாழ்வின் அடிப்படையாகக் கருதி, மழை, நீர், நிலம், வேளாண்மை, அனைத்து உயிர்களிடமும் கருணை செலுத்துதல் ஆகியவற்றை அறவாழ்வின் இன்றியமையாத கூறுகளாக எடுத்துரைக்கிறார். இக்கட்டுரையின் நோக்கம், திருக்குறளில் இடம்பெறும் இயற்கை அறம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சார்ந்த சிந்தனைகளை ஆய்வு செய்து, அவற்றின் தற்காலப் பொருத்தத்தை விளக்குவதாகும். விளக்கவியல் (னுநளஉசipவiஎந) மற்றும் பகுப்பாய்வு (யுயெடலவiஉயட) ஆய்வு முறைகள் இக்கட்டுரையில் பின்பற்றப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில், திருக்குறளில் இடம்பெறும் இயற்கை சார்ந்த அறநெறிகள் நிலையான வளர்ச்சி, சுற்றுச்சூழல் சமநிலை மற்றும் உயிரினப் பாதுகாப்பிற்கான வழிகாட்டும் நெறிமுறைகளாக அமைவதை உணர முடிகிறது. இன்றைய காலநிலை மாற்றம், நீர் பற்றாக்குறை, சுற்றுச்சூழல் மாசுபாடு போன்ற உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள திருவள்ளுவரின் சிந்தனைகள் நிலைத்த வாழ்வியலுக்கான சிறந்த வழிகாட்டுதலாக அமைகின்றன.

**முன்னுரை**

உலக இலக்கிய வரலாற்றில் மனித வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களையும் அறநெறி அடிப்படையில் எடுத்துரைக்கும் தலைசிறந்த நூலாக திருவள்ளுவரின் திருக்குறள் விளங்குகிறது. இந்நூல், அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளின் வழி மனித வாழ்விற்கான உயரிய வாழ்வியல் நெறிகளை வகுத்துக் காட்டுகிறது. காலம் கடந்தும் உலகம் முழுவதும் போற்றப்படும் திருக்குறள், ஒழுக்கநெறி நூலாக மட்டுமல்லாமல் சமூக, பொருளாதார, அரசியல், சுற்றுச்சூழல் மற்றும் மனிதநேய சிந்தனைகளை உள்ளடக்கிய உலகப் பொதுமறையாகத் திகழ்கிறது. இன்றைய உலகம் காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல், காடழிப்பு, நீர்ப்பற்றாக்குறை, காற்று மற்றும் மண் மாசுபாடு போன்ற கடுமையான சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இத்தகைய சூழலில் இயற்கையைப் பாதுகாப்பதும், இயற்கையோடு இயைந்து வாழ்வதும் மனிதகுலத்தின் அடிப்படைப் பொறுப்பாக மாறியுள்ளது. இக்கருத்துகளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் தனது குறட்பாக்களில் வலியுறுத்தியிருப்பது அவரது தொலைநோக்குச் சிந்தனையை வெளிப்படுத்துகிறது. இக்கட்டுரை திருக்குறளில்

இடம்பெறும் இயற்கை அறம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான சிந்தனைகளையும், சமகால சிந்தனைகளையும் ஆய்வு செய்து, நிலையான வளர்ச்சிக்கான பங்களிப்பையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**திருக்குறளில் இயற்கை**

திருக்குறளில் இயற்கை என்பது மனிதனின் பயன்பாட்டிற்கான ஒரு வளம் மட்டுமல்ல உயிர்கள் அனைத்தும் இணைந்து வாழும் வாழ்வியல் சூழலாகக் கருதப்படுகிறது. வான்சிறப்பு, உழவு, அருளுடைமை, கொல்லாமை போன்ற அதிகாரங்களில் மழை, நீர், நிலம், வேளாண்மை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை அறநெறியுடன் இணைத்துப் பேசப்படுகின்றன. மனிதனின் அறவாழ்வு இயற்கை வளங்களை மதித்து, பாதுகாத்து, அளவோடு பயன்படுத்துவதிலேயே அமைந்துள்ளது என்பதை திருவள்ளுவர் தெளிவுபடுத்துகிறார். "மனிதன் இயற்கையின் ஒரு பகுதியே தவிர, அதற்கு மேலானவன் அல்ல" என்ற சுற்றுச்சூழல் அறிஞர் ஆல்டோ லியோபோல்டின் கருத்து, திருவள்ளுவரின் இயற்கை அறச் சிந்தனையுடன் ஒத்திசைவு உடையதாகும்.

**இயற்கை அறம் – விளக்கம்**

இயற்கை என்பது மனிதன் மட்டுமன்றி அனைத்து உயிரினங்களின் வாழ்விற்கும் ஆதாரமாக விளங்கும் பேராற்றலாகும். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களின் ஒருங்கிணைப்பே இயற்கை ஆகும். மனிதன் இயற்கையைச் சார்ந்தே வாழ்கிறான். எனவே, இயற்கையைப் பாதுகாத்து, அதன் சமநிலையைப் பேணுவது ஒவ்வொரு மனிதனின் அறக்கடமையாகும். இவ்வகையான ஒழுக்கநெறியே "இயற்கை அறம்" எனப்படுகிறது. இயற்கை அறம் என்பது இயற்கை வளங்களைச் சுரண்டாமல், அவற்றை அளவோடு பயன்படுத்தி, அனைத்து உயிர்களும் இணைந்து வாழும் சூழலை உருவாக்குவதாகும். மனிதனின் நல்வாழ்வு இயற்கையின் நல்வாழ்வோடு இணைந்துள்ளது என்பதை இக்கருத்து வலியுறுத்துகிறது. நீரின் அருமையை உணர்ந்து அதனைப் பாதுகாப்பதே இயற்கை அறத்தின் முக்கிய நோக்கமாகும். பரிமேலழகர் தனது திருக்குறள் உரையில், "உலக உயிர்கள் அனைத்தும் மழையைச் சார்ந்தே வாழ்கின்றன" என்று விளக்குவதன் மூலம் இயற்கையின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறார். மு. வரதராசனார் "இயற்கையோடு இயைந்து வாழ்வதே அறவாழ்வு இயற்கைக்கு மாறான வாழ்க்கை மனிதகுலத்தின் அழிவை ஏற்படுத்தும்." என்கிறார். எனவே, இயற்கை அறம் என்பது இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் உரிமை மட்டுமல்ல அவற்றைப் பாதுகாத்து, வருங்கால தலைமுறையினருக்கு நிலையான முறையில் வழங்க வேண்டிய பொறுப்புணர்வும் ஆகும். இத்தகைய உயரிய வாழ்வியல் நெறிகளைத் திருக்குறள் உலகிற்கு எடுத்துரைக்கும் சிறந்த அறநூலாக விளங்குகிறது.

**திருக்குறளில் மழையின் சிறப்பு**

இயற்கையின் அடிப்படைக் கூறுகளில் முதன்மையானது மழை ஆகும். உலக உயிர்கள் அனைத்தும் மழையைச் சார்ந்தே வாழ்கின்றன. மழை உணவு உற்பத்திக்கும், வேளாண் வளர்ச்சிக்கும், குடிநீருக்கும், சுற்றுச்சூழல் சமநிலைக்கும் இன்றியமையாததாகும். இதனை உணர்ந்த திருவள்ளுவர், திருக்குறளின் 'வான்சிறப்பு' அதிகாரம் முழுவதையும் மழையின்

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

மகத்துவத்தை விளக்குவதற்கே அர்ப்பணித்துள்ளார். இயற்கை அறத்தின் அடிப்படையாக மழையை அவர் கருதுகிறார். மழையின் சிறப்பை விளக்கும் முதல் குறளாக,

**"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று." (திருக்குறள் – 11)**

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். உலக உயிர்கள் அனைத்திற்கும் வாழ்வாதாரமாக மழை விளங்குவதால், அது அமுதத்திற்குச் சமமானது என வள்ளுவர் போற்றுகிறார். மழை இல்லையெனில் உணவு உற்பத்தி நடைபெறாது உயிர்கள் வாழ முடியாது. எனவே, மழை இயற்கையின் உயிர்நாடியாக விளங்குகிறது.

**"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை." (திருக்குறள் – 12)**

என்ற குறளில், உண்போருக்கு உணவையும், உணவாக விளையும் பயிர்களுக்கும் ஆதாரமாகவும் மழை திகழ்கிறது என்று வள்ளுவர் விளக்குகிறார். மழை மனிதர்களுக்கு மட்டுமன்றி அனைத்து உயிரினங்களின் வாழ்வையும் தாங்கும் இயற்கையின் அருட்கொடையாகும். மேலும்,

**"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை." (திருக்குறள் – 15)**

என்று கூறுவதன் மூலம், மழை பொய்த்தால் உயிர்களும் உலகமும் துன்புறும்; மழை பெய்தால் வளமும் செழிப்பும் பெருகும் என்பதை வள்ளுவர் உணர்த்துகிறார். மழை உலகை அழிக்கவும் காக்கவும் வல்ல இயற்கை ஆற்றலாகும். நீர் இல்லாமல் உலக வாழ்க்கை அமையாது நீரின் மூலாதாரமான மழை இல்லையெனில் உலக ஒழுங்கே சீர்குலையும் என்பதை இக்குறள் தெளிவுபடுத்துகிறது. பரிமேலழகர், "மழை உலக உயிர்கள் அனைத்தையும் வாழவைக்கும் முதன்மைக் காரணமாகும்" என்று தனது உரையில் குறிப்பிடுகிறார். இன்றைய காலநிலை மாற்றம், வறட்சி, நீர்ப்பற்றாக்குறை, நிலத்தடி நீர்மட்ட வீழ்ச்சி போன்ற சுற்றுச்சூழல் சவால்களின் பின்னணியில், திருவள்ளுவர் எடுத்துரைக்கும் மழையின் சிறப்பு மிகவும் பொருத்தமானதாக விளங்குகிறது. மழைநீர் சேகரிப்பு, நீர்வளப் பாதுகாப்பு, இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் போன்ற செயல்பாடுகள் வள்ளுவரின் இயற்கை அறச் சிந்தனைகளுடன் இணைந்தவை. எனவே, மழையைப் பாதுகாப்பது என்பது இயற்கையைப் பாதுகாப்பதாகவும், இயற்கையைப் பாதுகாப்பது மனித இனத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதாகவும் கருதப்பட வேண்டும்.

**"மழை பெய்யும் போது அதன் மதிப்பை உணர்ந்து இயற்கையைப் பாதுகாப்பதே மனிதனின் உயர்ந்த அறம்."**

**– மு. வரதராசனார்.**

**திருக்குறளில் நீர் மேலாண்மை**

திருவள்ளுவர் நீரை தனி அதிகாரமாகப் பேசவில்லை என்றாலும், 'வான்சிறப்பு' (அதிகாரம் 2) மற்றும் 'உழவு' (அதிகாரம் 104) ஆகிய அதிகாரங்களின் வழியாக நீரின் இன்றியமையாமையையும், மழை–நீர்–வேளாண்மை–உயிர்வாழ்வு ஆகியவற்றின் பரஸ்பரத் தொடர்பையும் தெளிவாக எடுத்துரைக்கிறார். வள்ளுவரின் பார்வையில் நீர் என்பது வெறும்

இயற்கை வளம் மட்டுமல்ல உலக உயிர்களின் வாழ்வைத் தாங்கும் அறச்செல்வமாகும். பரிமேலழகர், வான்சிறப்பு அதிகாரத்திற்கு உரையிடும்போது, "மழை இல்லையேல் உலகத்து உயிர்கள் தம் இயல்பின்படி வாழ இயலாது" என்று விளக்குகிறார். இதன் மூலம் மழை உலக இயக்கத்தின் அடிப்படை என்றும், அதனைப் பாதுகாப்பதே மனித சமுதாயத்தின் கடமை என்றும் அவர் உணர்த்துகிறார். இந்த உரை, நீர்வளத்தைப் பாதுகாப்பது அறச்செயல் என்ற வள்ளுவரின் மறைமுகக் கருத்தை வெளிப்படுத்துகிறது. மு. வரதராசனார் தமது திருக்குறள் தெளிவுரையில், "நீர் இல்லாத உலகம் உயிரற்ற உலகம்; நீர்வளத்தைப் பாதுகாப்பதே மனித நாகரிகத்தின் அடிப்படை" என்று வள்ளுவரின் கருத்தை விரிவுபடுத்துகிறார். எனவே, நீரின் சிக்கனமான பயன்பாடு, மழைநீர் சேகரிப்பு, நீர்நிலைகள் பராமரிப்பு போன்றவை திருக்குறளின் இயற்கை அறச் சிந்தனையின் நடைமுறை வடிவங்களாகக் கொள்ளப்படுகின்றன. சங்க இலக்கியங்களும் நீரின் மேலாண்மையை உயர்வாகக் கூறுகின்றன. புறநானூறு பாடல்களில் நல்ல அரசனின் கடமையாக ஏரிகள், குளங்கள் அமைத்து மக்களுக்கு நீர்வளம் ஏற்படுத்துதல் குறிப்பிடப்படுகிறது. பட்டினப்பாலை காவிரியின் வளத்தால் செழித்த வேளாண்மையை எடுத்துரைக்கிறது. இதனால் தமிழர் சமூகத்தில் நீர் மேலாண்மை ஒரு பண்பாட்டு மரபாக இருந்தது என்பது தெளிவாகிறது.

இன்றைய உலகில் நிலத்தடி நீர்மட்டம் குறைதல், நீர் மாசுபாடு, பருவமழை மாற்றம் போன்ற பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இதற்கு தீர்வாக மழைநீர் சேகரிப்பு, நீர்நிலைகள் மீட்பு, கழிவுநீர் சுத்திகரிப்பு, நீரின் சிக்கனமான பயன்பாடு ஆகியவை அவசியமாகின்றன. இத்தகைய அணுகுமுறைகள் அனைத்தும் திருவள்ளுவர் வலியுறுத்தும் இயற்கையோடு இயைந்த வாழ்வியல் நெறியோடு ஒத்துப்போகின்றன. மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளில் (SDG–6: Clean Water and Sanitation) அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதி கிடைப்பதையும், நீர்வளங்களை நிலையாகப் பாதுகாப்பதையும் வலியுறுத்துகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நீரின் இன்றியமையாமையை வள்ளுவர் எடுத்துரைத்திருப்பது, அவரது சுற்றுச்சூழல் சிந்தனையின் தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்துகிறது. எனவே, திருக்குறளில் நீர் மேலாண்மை என்பது வெறும் நீரைப் பயன்படுத்துவது பற்றிய கருத்தல்ல் நீரை மதித்தல், பாதுகாத்தல், சிக்கனமாகப் பயன்படுத்தல், வருங்கால தலைமுறைக்காக நீர்வளத்தை நிலைநிறுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய அறநெறியாகும். இதுவே இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கொள்கைகளுக்கும், நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கும் வலுவான தத்துவ அடித்தளமாக அமைகிறது.

**வேளாண்மையும் சுற்றுச்சூழலும்**

தமிழர் வாழ்வியலின் முதுகெலும்பாக விளங்குவது வேளாண்மையாகும். வேளாண்மை என்பது உணவு உற்பத்திக்கான தொழில் மட்டுமல்ல் இயற்கை வளங்களைப் பாதுகாத்து, மனிதனும் இயற்கையும் இணைந்து வாழும் நிலையான வாழ்க்கை முறையாகும். நிலம், நீர், மழை, காற்று ஆகிய இயற்கை வளங்களைச் சார்ந்தே வேளாண்மை நடைபெறுவதால், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் வேளாண்மைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இத்தகைய சிந்தனையைத் திருவள்ளுவர் தனது உழவு அதிகாரத்தின் வழி தெளிவாக எடுத்துரைக்கிறார். வேளாண்மையின் உயர்வை வலியுறுத்தும் திருவள்ளுவர்,

**“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்**

**தொழுதுண்டு பின்செல் பவர்." (திருக்குறள் – 1033)**

என்கிறார். உழவுத் தொழிலை மேற்கொண்டு வாழ்பவர்களே உண்மையில் வாழ்பவர்கள்; மற்றவர்கள் அவர்களைச் சார்ந்து வாழ்கின்றனர் என்பதை இக்குறள் உணர்த்துகிறது. இதன் மூலம் வேளாண்மை மனித சமுதாயத்தின் அடிப்படைத் தொழில் என்பதையும் வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**“சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; அதனால்**

**உழந்தும் உழவே தலை." (திருக்குறள் – 1031)**

என்ற குறளில், உலகின் அனைத்து தொழில்களும் இறுதியில் வேளாண்மையையே சார்ந்துள்ளன என்பதை திருவள்ளுவர் விளக்குகிறார். வேளாண்மை செழித்தால் மட்டுமே மனித வாழ்வும், பொருளாதாரமும், சமூகமும் வளம் பெறும். இன்றைய காலகட்டத்தில் அதிக இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், நிலத்தடி நீர் அளவுக்கு மீறிய பயன்பாடு போன்ற காரணங்களால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. இந்நிலையில் இயற்கை வேளாண்மை, நீர்ச் சிக்கனம், மண் வளப் பாதுகாப்பு, உயிரினப் பன்முகத்தன்மை பாதுகாப்பு போன்ற கொள்கைகள் மிகவும் அவசியமானவை. இக்கருத்துகள் அனைத்தும் திருவள்ளுவர் வலியுறுத்திய இயற்கை அறத்துடன் ஒத்துப்போகின்றன.

எனவே, திருக்குறளில் வேளாண்மை என்பது உணவு உற்பத்திக்கான தொழில் மட்டுமல்ல் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் அறவழியாகவும், சுற்றுச்சூழல் சமநிலையை நிலைநிறுத்தும் வாழ்க்கை முறையாகவும் விளங்குகிறது. இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல், மண் வளத்தைப் பாதுகாத்தல், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் ஆகியவை திருவள்ளுவரின் சுற்றுச்சூழல் சிந்தனைகளின் நடைமுறை வெளிப்பாடுகளாகும். “வேளாண்மை என்பது இயற்கையை வெல்வது அல்ல் இயற்கையோடு இணைந்து வாழும் நாகரிகம்." என்று நம்மாழ்வார் (இயற்கை வேளாண் அறிஞர்) கூறுகின்றார்.

**திருக்குறளில் உயிரினப் பாதுகாப்பு**

உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் இயற்கைச் சூழலின் அங்கங்களாகும். மனிதன் மட்டுமன்றி விலங்குகள், பறவைகள், தாவரங்கள் உள்ளிட்ட அனைத்து உயிர்களும் இயற்கையின் சமநிலையைப் பேணுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே, உயிரினங்களைப் பாதுகாப்பதும், அவற்றின் வாழ்வுரிமையை மதிப்பதும் இயற்கை அறத்தின் அடிப்படைக் கூறுகளாகும். திருவள்ளுவர் இக்கருத்தை அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல் போன்ற அதிகாரங்களின் வழியாக வலியுறுத்துகிறார். அனைத்து உயிர்களிடமும் கருணையுடன் நடந்து கொள்வதே உயர்ந்த அறம் என்பதை வள்ளுவர்,

**“அருளல்லது யாதெனின் கொல்லாமை; கோறல்**

**பொருளல்லது அவ்வூன் தினல்." (திருக்குறள் – 254)**

என்று குறிப்பிடுகிறார். இக்குறளில், உயிர்களைக் கொல்லாமல் வாழ்வதும், பிற உயிர்களின் துன்பத்தை உணர்ந்து இரக்கத்துடன் நடந்து கொள்வதும் அறத்தின் அடிப்படையாகும் என்பதை வலியுறுத்துகிறார்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

**“தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்?" (திருக்குறள் – 251)**

என்ற குறளில், தன் உடலை வளர்ப்பதற்காக பிற உயிர்களைக் கொன்று அவற்றின் இறைச்சியை உண்பவன் எவ்வாறு அருளுடையவனாக இருக்க முடியும் என்று திருவள்ளுவர் கேள்வி எழுப்புகிறார். உயிர்களுக்கான இரக்கமும், உயிர்வாழ்வின் மதிப்பும் இக்குறளின் மையக் கருத்தாகும். பரிமேலழகர், "அருள் என்பது எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டுவதாகும்" என்று தனது உரையில் விளக்குகிறார். மு. வரதராசனார், "உயிர்களைக் காப்பதே அறத்தின் உயர்ந்த வடிவம்" என்று குறிப்பிடுகிறார். இன்றைய உலகில் வனவிலங்கு அழிவு, உயிரினப் பன்முகத்தன்மை குறைதல், காடழிப்பு, சுற்றுச்சூழல் மாசுபாடு போன்றவை இயற்கைச் சமநிலையை பாதிக்கின்றன. இந்நிலையில், அனைத்து உயிர்களையும் மதித்து பாதுகாக்க வேண்டும் என்ற திருவள்ளுவரின் சிந்தனை உலகளாவிய சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கொள்கைகளுடன் ஒத்துப்போகிறது. எனவே, திருக்குறளில் உயிரினப் பாதுகாப்பு என்பது விலங்குகளைக் காப்பது மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்கும் வாழ்வுரிமை உண்டு என்பதை ஏற்று, இயற்கைச் சமநிலையைப் பேணும் அறவாழ்வை மேற்கொள்வதாகும். உயிர்களை மதிக்கும் பண்பே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் உயர்ந்த அறமாகும். இக்கருத்து இன்றைய பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு என்ற உலகளாவிய கொள்கைக்கு அடித்தளமாக அமைகிறது.

**திருக்குறளும் நிலையான வளர்ச்சியும்**

நிலையான வளர்ச்சி என்பது இன்றைய தலைமுறையின் தேவைகளை நிறைவேற்றுவதோடு, வருங்காலத் தலைமுறையினரின் தேவைகளையும் பாதிக்காத வகையில் இயற்கை வளங்களைப் பாதுகாத்து வளர்ச்சியை ஏற்படுத்துவதாகும். இதனை முன்னிறுத்தி, ஐக்கிய நாடுகள் சபை (United Nations) 2015 ஆம் ஆண்டு 17 நிலையான வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals – SDGs) அறிவித்தது. வறுமை ஒழிப்பு (SDG–1), பசியற்ற உலகம் (SDG–2) தூய்மையான குடிநீர் (SDG–6), காலநிலை நடவடிக்கை (SDG–13), நில வாழ் உயிரினப் பாதுகாப்பு (SDG–15) போன்ற இலக்குகள் அனைத்தும் இயற்கை வளங்களின் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டவை. இக்கருத்துகளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் அறநெறியின் வழியாக எடுத்துரைத்துள்ளார்.

**“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை." (திருக்குறள் – 322)**

என்ற குறள், வளங்களைப் பகிர்ந்து பயன்படுத்துதல் மற்றும் அனைத்து உயிர்களையும் பாதுகாத்தல் என்பதே உயர்ந்த அறம் என வலியுறுத்துகிறது. இக்கருத்து, நிலையான வளர்ச்சியின் "Leave No One Behind" என்ற ஐ.நா. கொள்கையுடன் நேரடியாக ஒத்துப்போகிறது. மேலும், திருவள்ளுவர் மனிதனின் செயல் உலக நலனோடு இணைந்திருக்க வேண்டும் என்பதை பல அதிகாரங்களில் வலியுறுத்துகிறார். இயற்கையைச் சுரண்டாமல், அளவோடு பயன்படுத்த வேண்டும் என்ற அவரது அறச்சிந்தனை, இன்றைய சுற்றுச்சூழல் நீதி (Environmental Justice) மற்றும் தலைமுறைகளுக்கிடையேயான சமநீதி (Intergenerational Equity) ஆகிய உலகளாவிய கொள்கைகளோடும் பொருந்துகிறது. UNESCO வலியுறுத்தும் Education for Sustainable

Development (ESD), மனிதனிடம் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதேபோல், திருக்குறளும் மனிதனின் ஒழுக்கத்தை இயற்கைப் பாதுகாப்புடன் இணைத்து, தனிமனித அறத்தை சமூக அறமாகவும், சமூக அறத்தை உலக நலனாகவும் உயர்த்துகிறது.

இன்றைய காலநிலை மாற்றம், உயிரினப் பன்மை இழப்பு, நீர்வளச் சுருக்கம், மண் மாசுபாடு போன்ற உலகளாவிய சவால்களுக்கு திருக்குறள் வழங்கும் அறநெறிகள் நிலையான தீர்வுகளுக்கான தத்துவ அடித்தளமாக அமைகின்றன. எனவே, திருக்குறள் ஒரு ஒழுக்கநூல் மட்டுமல்ல் நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய வாழ்வியல் வழிகாட்டி என்றும் கருதப்படலாம்.

**தற்கால சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கான திருக்குறளின் தீர்வுகள்**

இன்றைய உலகம் காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல், நீர்வளப் பற்றாக்குறை, காடழிப்பு, காற்று மற்றும் நீர் மாசுபாடு, மண் வளச் சிதைவு, உயிரினப் பன்மை இழப்பு போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி மனித வாழ்க்கையை மேம்படுத்தியிருந்தாலும், இயற்கை வளங்களின் அளவுக்கு மீறிய சுரண்டல் சுற்றுச்சூழல் சமநிலையை பெரிதும் பாதித்துள்ளது. இத்தகைய சூழலில், திருவள்ளுவர் வலியுறுத்தும் அளவறிதல், இயற்கையோடு இயைந்து வாழ்தல், வளங்களைப் பொறுப்புடன் பயன்படுத்துதல், அனைத்து உயிர்களையும் மதித்தல் ஆகிய அறநெறிகள் இன்றைய சுற்றுச்சூழல் நெருக்கடிகளுக்கான நிலையான தீர்வுகளாக அமைகின்றன. திருக்குறள் இயற்கையை வெல்ல வேண்டிய பொருளாக அல்ல் பாதுகாக்க வேண்டிய வாழ்வியல் அடித்தளமாகக் கருதுகிறது. எனவே, சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது அரசின் கடமை மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனின் அறப்பொறுப்பும் ஆகும். ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளில் (SDGs) குறிப்பாக SDG–6 (Clean Water and Sanitation)> SDG–12 (Responsible Consumption and Production), SDG–13 (Climate Action), SDG–15 (Life on Land) ஆகியவை இயற்கை வளங்களின் பாதுகாப்பையும், வளங்களைப் பொறுப்புடன் பயன்படுத்துவதையும் வலியுறுத்துகின்றன. இக்கொள்கைகளின் அடிப்படை நோக்கம் திருவள்ளுவர் எடுத்துரைக்கும் அறநெறிகளுடன் ஆழமாக ஒத்துப்போகிறது.

ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது இயற்கை வளங்களைச் சுரண்டுவதைக் குறைப்பதிலும், உயிரினப் பன்மையைப் பாதுகாப்பதிலும், காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதிலும் உள்ளது என வலியுறுத்துகிறது. திருக்குறளும் மனிதன் இயற்கையின் ஓர் அங்கம் என்பதையும், இயற்கையின் சமநிலையைப் பேணுவது மனித வாழ்வின் நிலைத்தன்மைக்கு இன்றியமையாதது என்பதையும் மறைமுகமாக எடுத்துரைக்கிறது. அதேபோல், UNESCO -வின் Education for Sustainable Development (ESD) கொள்கை, கல்வியின் மூலம் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. திருக்குறளும் அறவாழ்வின் வழியாக மனிதனிடம் இயற்கை உணர்வையும், சமூகப் பொறுப்பையும், உலக நலன் குறித்த சிந்தனையையும் வளர்க்கிறது. எனவே, திருக்குறள் சுற்றுச்சூழல் கல்விக்கான சிறந்த வாழ்வியல் வழிகாட்டி என்று கூறலாம்.

இன்றைய சுற்றுச்சூழல் நெருக்கடிகளுக்கு சட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் மட்டும் போதுமானவை அல்ல் மனிதனின் மனப்போக்கிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். அந்த மாற்றத்திற்குத் தேவையான அறவழி சிந்தனையை திருக்குறள் வழங்குகிறது. எனவே, திருவள்ளுவரின் இயற்கை அறக் கருத்துகளை தனிமனித வாழ்க்கை, கல்வி, அரசுக் கொள்கை மற்றும் சமூக நடைமுறைகளில் செயல்படுத்தினால், சுற்றுச்சூழல் பாதுகாப்பும் நிலையான வளர்ச்சியும் எளிதில் சாத்தியமாகும்.

**முடிவுரை**

திருக்குறள் மனித வாழ்விற்கான அறநூலாக மட்டுமன்றி, இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான நிலையான வாழ்வியல் கோட்பாடுகளை முன்வைக்கும் உலகப் பொதுமறையாகத் திகழ்கிறது. மேலும், திருக்குறளில் இடம்பெறும் இயற்கை அறச் சிந்தனைகள், ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs), UNEP, UNESCO போன்ற உலக அமைப்புகள் வலியுறுத்தும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கொள்கைகளுடன் கருத்தியல் ஒற்றுமை கொண்டுள்ளன. இயற்கை வளங்களைப் பொறுப்புடன் பயன்படுத்துதல், நீர்வளப் பாதுகாப்பு, நிலையான வேளாண்மை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை எதிர்கால மனிதகுல நலனுக்கான அடிப்படை நெறிகளாகத் திகழ்கின்றன. எனவே, திருவள்ளுவர் எடுத்துரைக்கும் இயற்கை அறநெறிகளை தனிமனித வாழ்க்கை, கல்வி, சமூகப் பொறுப்பு மற்றும் அரசின் சுற்றுச்சூழல் கொள்கைகளில் நடைமுறைப்படுத்தினால், இயற்கை வளங்களைப் பாதுகாத்து, வருங்காலத் தலைமுறைக்கு வளமான மற்றும் நிலையான உலகை உருவாக்க முடியும். இதுவே திருக்குறளின் சுற்றுச்சூழல் சிந்தனையின் காலத்தால் அழியாத சிறப்பாகும்.

**துணைநூற்பட்டியல் (Works Cited)**

- கருணாநிதி, மு. *குறளோவியம்*. தமிழ்க்கனி பதிப்பகம், 2004.
- சுப்பிரமணியன், சு. வே. *திருக்குறள் – மூலமும் தெளிவுரையும்*. மணிவாசகர் பதிப்பகம், 2019.
- தமிழண்ணல். *திருக்குறள் நுண்பொருள் உரை*. மீனாட்சி புத்தக நிலையம், 2012.
- திருவள்ளுவர். *திருக்குறள் (பரிமேலழகர் உரையுடன்)*. சாரதா பதிப்பகம், 2018.
- புலியூர்க் கேசிகன். *திருக்குறள் உரை*. பூம்புகார் பதிப்பகம், 2016.
- வரதராசனார், மு. *திருக்குறள் தெளிவுரை*. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2015.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். *திருக்குறள் ஆய்வுகள்*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2017.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 62.சங்க இலக்கியத்தில் நிலப் பாகுபாடு

## Land Classification in Sangam Literature

**த. மணிமேகலை,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி – 620 002

T. MANIMEGALAI

ASSITANT PROFESSOR IN TAMIL, HOLY CROSS COLLEGE (AUTONOMOUS)

TIRUCHIRAPPALLI-620 002

Ph.No – 9566829921, E.Mail : manimegalai055@gmail.com

Orchid : https://orcid.org/0000-0002-1160-5107

**ஆய்வுச் சுருக்கம் :**

உலக உயிர்கள் உருவாகி நிலைபெற நிலமும் பொழுதுமே அடிப்படை என்பதால் அவை முதற்பொருளாக அமைகின்றது. நாட்டின் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் தொழில்களுள் முதன்மையானது வேளாண் தொழில். பழந்தமிழர் வேளாண் தொழிலுக்கு பயன்படும் நிலத்தை காப்பதையே தம் தலையாயக் கடமையாக கொண்டிருந்தனர். பண்டைய தமிழர்கள் மண்ணுரிமையை பெரிதும் நேசித்தனர். நிலத்தை மீட்பதற்காகவும் கைப்பற்றுவதற்காகவும் காலமெல்லாம் களத்தில் நின்று போர் புரிந்தனர். இத்தகைய நிலங்கள் சங்க இலக்கியத்தில் நாடு, உலகம் என்னும் பொருளிலேயே கையாளப்பட்டுள்ளது. நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என பகுத்தனர். அந்நிலங்களை தேவைக்கு ஏற்ப பண்படுத்திப் புனம், இதை, முதை, துடவை, புறவு, கொல்லை, கழனி, பழனம், வயல், செறு, அடைகரை, எக்கர், பரப்பு என்று பெயரிட்டனர். இத்தகைய நிலங்களில் விளையும் பொருட்களை தேர்ந்தெடுத்து அதற்கு ஏற்றவாற அந்நிலங்களை பயன்படுத்தினர் என்பதையும் இந்நிலப் பெயர்கள் எத்தனை இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் சங்க இலக்கியங்களின் வழி நின்று ஆராய்வதே இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம் :**

உலக உயிர்கள் உருவாகி நிலைபெற நிலமும் பொழுதுமே அடிப்படை என்பதால் அவை முதற்பொருளாக அமைகின்றது. நாட்டின் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் தொழில்களுள் முதன்மையானது வேளாண் தொழிலே ஆகும். எனவே பழந்தமிழர் வேளாண் தொழிலுக்கு பயன்படும் நிலத்தை காப்பதையே தம் தலையாயக் கடமையாக கொண்டிருந்தனர். பண்டைய தமிழர்கள் மண்ணுரிமையை பெரிதும் நேசித்தனர். நிலத்தை மீட்பதற்காகவும் கைப்பற்றுவதற்காகவும் காலமெல்லாம் களத்தில் நின்று போர் புரிந்தனர். இத்தகைய நிலங்கள் சங்க இலக்கியத்தில் நாடு , உலகம் என்னும் பொருளிலேயே கையாளப்பட்டுள்ளது. நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என பகுத்தனர். அந்நிலங்களை தேவைக்கு ஏற்ப பண்படுத்திப் புனம், இதை, முதை, துடவை, புறவு, கொல்லை, கழனி , பழனம், வயல், செறு, அடைகரை, எக்கர், பரப்பு என்று பெயரிட்டனர். இத்தகைய

நிலங்களில் விளையும் பொருட்களை தேர்ந்தெடுத்து அதற்கு ஏற்றவாறு போல அந்நிலங்களை பயன்படுத்தினர் என்பதையும் இந்நிலப் பெயர்கள் எத்தனை இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் சங்க இலக்கியங்களின் வழி நின்று ஆராய்வதே இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள் :** கான்யாறு – காட்டாறு, கொல்லை – தரிசுநிலம், கரிபுறம் - சுட்டெரித்த காடு முதை - பழமையான நிலம், அலவன் – நண்டு, கழி - உப்புத்தயாரிக்கும் இடம்

**முன்னுரை :**

நீ பூமியில் பல வகையான உயிரினங்கள் வாழ்கின்றன. அவை ஒவ்வொன்றும் தனக்கு தகுந்த சூழலில் வாழ்வதற்காக குறிப்பிட்ட நிலப்பகுதியை தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன. சங்க இலக்கியத்தில் நிலத்தை சூழலுக்கு ஏற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பகுத்து தங்கள் வாழ்வினை அமைத்துக் கொண்ட சிறந்த பண்பினையம் நிலப் பாகுபாடுகள் குறித்த பதிவினையும் இவ் ஆய்வு கட்டுரையின் வழி நின்று காணலாம்.

**நிலம் அடிப்படையாதல்:**

நிலம் என்பது நிரந்தரமாக நீரில் மூழ்கியிராத புவியின் திண்ம மேற்பரப்பு ஆகும். ஆதி மனிதன் பல குழுக்களாய் திரிந்து வேட்டையாடி, உணவு தேடி இடம் விட்டு இடம்பெயர்ந்த போது குறிப்பிட்ட இடம்தான் தன்னுடையது என்ற நிலைபேறு அப்போது அவனிடம் இல்லை. வனம் முழுவதும் தன்னுடையது என்ற போக்கும் இல்லை. ஆனால் மனித வாழ்நிலையும் சூழ்நிலையும் வளர்ச்சியுற்றபோது, நாகரிகம் முளைவிட்டது. அதன் காரணமாக தங்களுக்கு பழக்கமான நிலங்களிலேயே தங்கி, பழக்கமான தொழில்களைச் செய்தும் வாழ முற்பட்டனர். இதன் நீட்சியே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பகுத்து அறியலாயிற்று. பொருளியலின்படி உற்பத்தியில் பயன்படுத்தக்கூடிய சகல இயற்கை வளங்களும் நிலம் என்பதுள் அடங்கும். நிலத்தை மனிதனால் உற்பத்தி செய்ய முடியாது. எனவே இயற்கையான நிலத்தை மனிதன் தன் தேவைக்கு ஏற்ப பயன்படுத்திக் கொண்டான். ஐம்பூதங்களில் நிலம் முதன்மையானது என்பதை,

**நிலத்தீ நீர் வளி விசும்போடைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் (தொல் - 89)**

**நிலத்தை பயன்படுத்திய விதம் :**

ஓரிடத்தில் நிலையாக வாழ வேண்டிய சூழலில் பண்டைய தமிழர்கள் அந்நிலத்தை தங்கள் வாழ்வதற்கு ஏற்ற நிலமாகவும் தொழில் செய்வதற்கு ஏற்றதாகவும் மாற்றத் தொடங்கினர். பழங்காலத்தில் வேளாண்மைக்கு ஏற்ற நிலமாக எப்பகுதியும் அறியப்படவில்லை நம் முன்னோர்கள் உழைப்பாலும் பட்டறிவாலும் தங்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப நிலங்களை பயன்படுத்தினர் அதில் வேளாண் தொழிலினை கையாண்டனர் இந்த செய்தியினை சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

**முல்லை நிலம் :**

முல்லை நிலத்தில் தன் வாழ்வை தொடங்க அந்நிலத்தை பண்படுத்த வேண்டிய சூழல் உருவானது. குறிஞ்சியை காட்டிலும் முல்லை நிலம் கடினமான பாறைகள் தரையில் இல்லாமல் மண் சார்ந்தவைகளாகவே காணப்பட்டது. அதனால் முல்லை நிலத்தை சீர்திருத்தம் செய்வதும்

எளிமையாக இருந்தது. அவ்வாறு பண்படுத்திய நிலங்களை புறவு, கொல்லை, கானம் என பெயரிட்டு அழைத்தனர்.

**புறவு :**

முல்லை நிலச்சிறுகாடுகள் புறவு என அழைக்கப்பட்டது சங்க இலக்கியத்தில் புறவு என்னும் சொல் 93 இடங்களில் சுட்டப்படுகிறது.

**சிறு கரும்பிடவின் வெண்தலை குறும்புதல்**
**கன்னியின் மலரும் தன்னரம் உறவில் (அகம் 34)**
**வண்டு போது அவிழ்க்கும் தன் கமல் புறவில் (அகம் 74)**

என்ற சங்க இலக்கிய பாடல் அடிகள் குளிர்ந்த நறுமணம் கமலும் முல்லை நிலத்தில் சிறிய கரிய பிடவஞ்செடியின் வெண்மையான உச்சியுடைய மலர்கள் குறுகிய புதரில் மாலை போல மலர்ந்திருக்கும். அதில் அமரும் வண்டுகள் அரும்புகளை மலரச்செய்யும் குளிர்ச்சி பொருந்திய மணம் கமலும் முல்லை நிலம் என்று முல்லை நிலத்தன்மையினை விவரிக்கின்றது. மேலும் முல்லை நிலத்தில் காட்டாறுகள் ஓடிப் பாயும் என்பதனை,

**கான்யாறு தழீஇய அகல் நெடும் புறவில் முல்-24**

என்ற முல்லைப்பாட்டு வரிகள் குறிப்பிடுகின்றது.

**கொல்லை:**

சங்ககால மக்கள் கோடை காலத்தில் காய்ந்து பயிரின்றி தரிசாக கிடந்த பகுதியினை கொல்லை என பெயரிட்டு அழைத்தனர் கொல்லை என்னும் சொல் சங்க இலக்கியத்தில் 13 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கொல்லை இருபுனம் நெடிய என்னாது (அகம் 89 )**

என்ற வரிகளின் வாயிலாக தரிசாய் கிடக்கும் கொல்லை நிலம், கடப்பதற்கு அரியதாக இருந்தது என்ற கூற்றினை அறியலாம்.

**கானம்:**

மரங்கள் நிறைந்த முல்லைப் பகுதி கானம் என்று அழைக்கப்பட்டது. கானம் என்னும் சொல் சங்க இலக்கியத்தில் 88 இடங்களில் குறிப்பிடப்படுகின்றன

**கதுப்பிற்தோன்றும் புது பூ கொன்றை**
**கானம் கார் எனக் கூறினும் (குறு 21)**

என்ற பாடல் வரிகள் கொன்றை பூக்கள் காடுகளில் மலர்ந்ததால் கார்காலம் வந்த செய்தியினை கானமும் வாய் திறந்து கூறுகின்றது. எனக் கூறுவதில் இருந்து கானம் என்ற ஒரு நிலம் இருந்ததை அறியலாம்.

**குறிஞ்சி நிலம் :**

குறிஞ்சி நிலத்தில் ஓரளவு சமதளம் உள்ள பகுதிகளையே மக்கள் தேர்வு செய்தனர். அப்பகுதிகள் மழை நீரையே நம்பி இருந்தன. அவை குறுங்காடுகளாகவும் மரங்கள் அடர்ந்தும் காணப்பட்டன. அவற்றில் தங்கள் வாழ்க்கைக்கு தேவையான இடங்களில் உள்ள காட்டினை தீயிட்டு அழித்து தீயில் முற்றிலுமாக கருகிப்போன இடத்தில் உள்ள கரி சாம்பலை மண்ணோடு

கலந்தனர் மழை பெய்த போது அவை ஒன்றோடு ஒன்று இணைந்தன. மழைக்காலத்தை எதிர்பார்த்தே நிலம் பண்படுத்தப்பட்டது அவ்வாறு பயன்படுத்திய இடத்திற்கு ஏற்ப பண்டைய தமிழர்கள் பெயர் சூட்டி இருந்தனர் அவை புனம், இதை, முதை, துடவை என்று அழைக்கப்பட்டது.

**புனம்:**

புனம் என்ற சொல் சங்க இலக்கியத்தில் 45 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**தொடுத்தோற்கானவன் சூடுறுவியன்புனம்**
**கரிபுறம் கழீஇய பெரும்பாட்டு ஈரத்து**
**தொடுவளர் பைந்தினை (அகம் 368)**

என்ற பாடல் வரிகள் காலில் காலணி அணிந்த வேடன் சுட்டெரித்த அகன்ற இடம் புனம் என்பதனை சுட்டுகின்றன. பெரும்பாலும் குறவர்களே சூடு புனத்தை பயன்படுத்தினர்.

**முதை:**

பழமையான நிலம் முதை என அழைக்கப்பட்டது முதை என்ற சொல் சங்க இலக்கியத்தில் 6 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரிசாக கிடந்த பழைய கொல்லையை உழுததனால் உழவர் மகிழ்ச்சி கொண்டனர் பழைய மேட்டு நிலத்தில் தழைத்த இளமை நிரம்பாத புல்லைப் பசுக்கள் மேய்ந்தன இந்த நிலங்களுக்கு முதைஎன்று பெயரிட்டனர் என்பதனை,

**முதைப் புனம் கொன்ற ஆர்கலி உழவர் (குறு 155)**
**முதைச் சுவர் கலித்த முற்றா இளம்புல்**
**மூதா தைவந்தாங்கு**
**விருந்தே காமம் பெருந்தோளோயே ( குறு 204)**

போன்ற பாடல்கள் வழி அறியலாம்.

**இதை:**

மரங்களை அழித்து பண்படுத்தப்பட்ட நிலம் இதை என அழைக்கப்பட்டது இதை என்னும் சொல் சங்க இலக்கியத்தில் 6 இடங்களில் கையாளப்பட்டுள்ளன புது கொல்லையை உருவாக்கும் பொருட்டு முயல்கின்ற குறவன் பழங்கொல்லையில் உள்ள மரங்களை சுட்டெரித்தான் என்று செய்தியினை,

**இதை முயல் புணவன் புகைநிழல் கடுக்கும்**
**மாமூது அள்ளல்அழுந்திய சா காட்டு (அகம் 140)**

என்னும் வரிகளின் வழி அறியலாம்.

**துடவை:**

புன்செய் நிலம் துடவை எனவும் அழைக்கப்பட்டது. சங்க இலக்கியத்தில் துடவை என்னும் சொல் ஐந்து இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தினை புனத்தை முயன்று ஆக்கியவன் தோட்டத்தில் பொன் போன்ற சிறிய தினைகள் விளைந்த செய்தியினை,

**புனவன்துடவை பொன் போல் சிறிதினைக் (குறு 105)**
**கடவைமிடைந்த துடவை அம் சிறிதினை (குறு392)**

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன.

**மருத நிலம்:**

மனித நாகரீக வளர்ச்சியின் இறுதி நிலமாக மருத நிலம் அறியப்படுகிறது. வயலும் வயல் சார்ந்த நிலங்களும் மருத நிலம் எனப்பட்டது. மென்புலம் என அழைக்கப்படும் மருத நிலம் ஆறுகளாலும் ஓடைகளாலும் நீர்ப்பிடிப்புள்ள நிலங்கள் ஆயின. முல்லை நிலத்தை காட்டிலும் சம தரை பரப்பளவையும் நெகிழ்ச்சியான மண்ணையும் கொண்டிருந்த மருத நிலம் வேளாண்மைக்கு முற்றிலும் ஏற்ற நிலமாக இருந்தது. மாடு கட்டி போரடித்தால் மாறாது என்று செந்நெல் ஆனைகட்டி போரடித்த நிலம் மருத நிலம் ஆகும். வேளாண்மை என்றாலே மருத நிலம் எனப் போற்றும் அளவிற்கு நிலத்தை சீர்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறு பண்படுத்திய நிலங்களை கழனி, பழனம், வயல், செறு என சங்க இலக்கிய மக்கள் பெயரிட்டு அழைத்தனர்.

**கழனி:**

கழனி என்பது வேளாண்மையில் நடவுக்கு முன் உள்ள நிலத்தைக் குறிக்கிறது. கழனி என்னும் சொல் சங்க இலக்கியத்தில் 67 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. மருத நில மக்கள் நிலத்தை பண்படுத்திய போது அவை வேளாண் தொழிலுக்கு உரிய வகையில் இருக்குமாறு பண்படுத்த தொடங்கினர்.

**நீங்கா யாணர் வாங்கு கதிர்கழனி (பெரும் 228)**

**களிறு மாய்க்கும் கதிர்கழனி (மதுரை 261)**

**விளைவு றா மீனவியன் கழனி ( பட்டி 8)**

என்ற பாடல் வரிகள் மருத நிலத்தில் நெற்கதிர்கள் நிறைந்து விளங்குவதையும் யானைகள் என்றால் அவற்றை மறைக்கும் அளவிற்கு நிற்கதிர் உயர்ந்து விளையும் வயல்கள் சூழ்ந்ததையும் பொன்னாய் விளையும் நிலங்கள் மருதநிலத்தில் இருந்ததையும் பறைசாற்றுகின்றன.

**பழனம்:**

பழனம் என்பது நெல் நிறைந்த வயலை குறிக்கிறது. நடவுக்குப் பின் உள்ள நிலையாகும். பழனம் என்ற சொல் சங்க இலக்கியத்தில் 16 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மலைபடுகடாம் நன்னனின் மருதநில பகுதியை கூறும் பொழுது நெல் நிறைந்திருக்கும் வயல்கள் இருந்ததையும் மருத நில வளத்தையும் உணர்த்துகின்றது.

**அயிரைப் பரந்த அம்தண் பழனத்து**

**ஏந்துஎழில் மலர தூம்புடைத் திரள்கால்**

**ஆம்பல் குரறுநர் வேட்டாங்கு (குறுந் 178)**

**சுடர் பூந் தாமரை நீர் முதிர் பழனத்து (அகம் 6)**

என்னும் சங்க இலக்கிய பாடல் வரிகள் மருத நிலத்தில் பழனம் என்ற நெல் நிறைந்த வயல்கள் இருந்ததனையும் பழனம் செழித்து இருந்ததையும் உணர்த்துகின்றன.

**வயல் :**

வயல் என்பது விளைநிலங்களை குறிக்கின்றது. வயல் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் 52 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. விளைநிலங்களில் மக்கள் தங்களுக்கு தேவையான பயிரினை இட்டு பயன்படுத்திய போது அப்பயிருக்கு தகுந்த வகையில் நிலத்தினை சீர்படுத்தி தயார் செய்து கொண்டனர் இதனை,

**நீர்த்தேவும் நிறைத்தொழுவர்**

**பாடும் சிலம்பும் இசை ஏற்றத்**
**தோடு வழங்கும் அகல் ஆம்பியின்**
**கயல் அகைய வயல் நிறைக்கும் (மதுரை 89-92)**

என்னும் சங்க இலக்கிய வரிகள் உணர்த்துகின்றன. விளைநிலங்களில் நீர் பாய்ச்சி அதை வேளாண்மைக்கு பயன்படுத்தியுள்ளனர்.

**செறு:**

நீர் நிறைந்த சேற்று வயல் செறு என அழைக்கப்பட்டது. செறு என்ற சொல் 51 இடங்களில் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சேறுப்படிந்த வயல்களில் உழவர்கள் கூடி சேற்றை மிதித்து பரம்படித்து சமம் செய்தனர். நடுவதற்கு தயாராக உள்ள நெல் நாற்றுக்கட்டுகள் கத்தையாக கிடந்தன. நீர் வளமிக்க நடுவயல்கள் இருந்தன இவற்றையெல்லாம்,

**கார் ஏறு பொருத கண்அகன் செறுவின்**
**உழாஅ நுண் தொளி நிரவிய வினைஞர்**
**முடிநாறு அகுத்திய நெடுநீர்ச் செறுவில் (பெரும் 210- 213)**

என்னும் வரிகள் உணர்த்துகின்றன.

**நெய்தல் :**

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்பட்டது மீன் பிடித்தலும் உப்பு விளைவிக்கும் தொழிலுமே அந்நிலத்தில் மிகுந்திருந்தன. அதுவே அந்நிலத்திற்கு ஏற்ற தொழிலாகவும் இருந்தது. மேலும் உப்பு விளைவிப்பதற்காகவும் மீன்களை உலர்த்துவதற்காகவும் நெய்தல் நில மக்கள் தங்களுடைய நிலங்களை பண்படுத்தினர். அவ்வாறு சீர்படுத்தும் போது நிலம் அடைக்கரை, ஏக்கர், பரப்பு, கழி என அழைக்கப்பட்டது.

**அடைகரை:**

அலை மோதுகின்ற இளமணல் உள்ள கடற்கரைப் பகுதி அடைக்கரை என அழைக்கப்பட்டது என்பதனை,

**புணரி பொருத பூ மணல் அடைக்கரை**
**ஆழி மருங்கின் அலவன் ஓம்பி (நற் 11)**

என்ற பாடல் வரிகளின் வழி நின்று அறியலாம். அலை வந்து மோதிய இளமணலை அடுத்து கடற்கரை இருந்தது. அவ்வழியே தலைவன் ஊர்ந்து வருகின்ற தேரின் உருளையிற் படாதவாறு நண்டுகளை விளக்கி தேர்பாகன் செலுத்தினான் போன்ற கருத்துக்களின் வழி அடைக்கரை என்ற ஒரு நிலப்பரப்பு இருந்ததனை அறிய முடிகின்றது .

**எக்கர்:**

கடற்கரை நெடுகிலும் குன்றென திரண்டிருக்கும் மலர் குவியல்கள் உள்ள நிலம் எக்கர் என அழைக்கப்பட்டது. எக்கர் என்னும் சொல் சங்க இலக்கியத்தில் 54 இடங்களில் கையாளப்பட்டுள்ளது. புறநானூற்றில் நன்மாறனை மருதன் இளநாகனார் வாழ்த்தும்பொழுது பெருங்காற்று திரட்டுவதால் குவிந்ததும் சுவடுகள் பதிவானதுமான மணல்மேட்டிலுள்ள மணலின் எண்ணிக்கையிலும் பல காலம் வாழ்வாயாக என வாழ்த்துகிறார் என்பதை,

**கடுவளி தொகுப்ப ஈண்டிய**

**வடு ஆழ் எக்கர் மணலினும் பலவே ( புறம் 55)**

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. இதில் எக்கர் என்னும் சொல் மணல்மேட்டினைக் குறிக்கின்றது.

**எக்கர் புன்னை இன் நிழல் அசைஇ (அகம் 20)**

என்ற பாடல் வரிகள் வாயிலாக நெய்தல் நிலத்தில் எக்கர் என்று அழைக்கப்பட்ட ஒரு நிலப்பகுதி இருந்ததனையும் அதனை மக்கள் பயன்பாட்டிற்கு உரிய வகையில் பண்படுத்தி வைத்திருந்தனர் என்ற செய்தியும் புலப்படுகின்றது.

**பரப்பு ,கழி :**

நெய்தல் பரப்பு முழுவதும் தாழை புலால் நாற்றத்தை நீக்கி தன் பூ மணமே நறுமணமாய் கமழுமாறு செய்தது. அந்நெய்தல் பரப்பில் குளிர்ந்த ஒளியினை உடைய முத்துக்களை பரந்து வரும் கடல் அலைகள் கொண்டு வந்து சேர்க்கும் என்பதனை,

**புலவுப் பொழுது அழித்த பூநாறு பரப்பின்**

**இவர் திரை தந்த ஈங்கதிர் முத்தம் (அகம் 130)**

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த பகுதியும் என்பதனால் பொதுவாக நெய்தல் நில கடற்கரை பகுதிகளை பரப்பு என்று பெயரிட்டுள்ளனர்.

கழி என்னும் நிலப்பகுதியில் வரதவர்கள் உப்பு தயாரிக்கும் தொழிலை செய்துள்ளனர். உப்பு தயாரிக்கும் இடம் என்பதனால் அதை கழி என பெயரிட்டு அழைத்துள்ளனர்

**இருங்கழிச் செறுவின் வெள் உப்பு பகர்நரோடு**

**ஒலிஓவாக் கலியாணர் (மதுரை 117 -118)**

என்னும் வரிகள் உப்பளங்களில் உப்பை அளந்து விற்பவர்களும் சிறுகுடி சார்ந்த பெருந்தொழில் புரியும் வணிகர்கள் போடும் ஒலியும் என்றும் ஓயாது அன்றாடம் கேட்டுக்கொண்டே இருக்கும் என்பதனை புலப்படுத்துகின்றது உப்பு தயாரிக்க நிலத்தை நெய்தல் நில மக்கள் சீர்படுத்தி உள்ளனர்.

**முடிவுரை:**

நிலத்தினை சங்க கால மக்கள் மண்ணின் தன்மையை வைத்து பிரித்துள்ளனர். என்பதனை இவ்ஆய்வுக் கட்டுரை குறிப்பிடுகிறது. விளைநிலங்கள் விலைநிலங்களாக மாறாமல் இருந்தால் இயற்கை பேரிடர்களில் இருந்து நாம் தப்பிக்கலாம் என்று உணர்ந்தவர்கள் அக்கால மக்கள ஆவர். எந்த நிலத்தில் எதனை செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து அந்நிலத்திற்கு ஏற்ப தங்களின் வாழ்க்கை முறையினையும் வாழ்வாதாரத்தையும் அமைத்துக் கொண்டு இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தவர்கள் சங்ககால மக்கள் மனிதர்கள் வாழ்வியலோடு தொடர்பு படுத்தி நிலப் பாகுபாட்டினை இன்றைய வேளாண்மை நோக்கில் ஆராய்ந்தால், குறிஞ்சி என்ற மலையும் மலை சார்ந்த நிலப்பகுதி மலைத்தோட்டம் முதலியவற்றை உள்ளடக்கிய வனவள இயலையும் முல்லை என்ற காடும் காடு சார்ந்த நிலப் பகுதி கால்நடை இயலையும் வயலும் வயல் சார்ந்த இடமாகிய மருதம் வேளாண்மை இயலையும் கடலும் கடல் சார்ந்த இடமாகிய நெய்தல் மீன்வள இயலையும் உணர்த்துகின்றது. இம்முறையின் அடிப்படையிலேயே சங்ககால மக்கள் வேளாண்மையினை

நான்கு பெரும் பிரிவுகளாக வனவள இயல், கால்நடை இயல், வேளாண்மை இயல், மீன்வள இயல் என்ற நான்கையும் கருதியுள்ளனர். இதனால் பண்டைய தமிழர்கள் கொண்டிருந்த நிலப் பாகுபாடு அவர்களின் வேளாண்மை பிரிவு கோட்பாட்டையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளதனை அறியலாம்.

**துணையநூற் பட்டியல்**

1. தொல்காப்பியம் இளம்பூரணர் உரை திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.
2. அகநானூறு பரிமளம் அ.மா பாலசுப்பிரமணியம் கு.வே நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.
3. புறநானூறு மூலமும் உரையும் பரிமளம் அ.மா பாலசுப்பிரமணியம் கு.வே நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.
4. குறுந்தொகை பரிமளம் அ.மா பாலசுப்பிரமணியம் கு.வே நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.
5. பத்துப்பாட்டு முதல் தொகுதி பரிமளம் அ.மா பாலசுப்பிரமணியம் கு.வே நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.
6. பத்துப்பாட்டு இரண்டாம் தொகுதி பரிமளம் அ.மா பாலசுப்பிரமணியம் கு.வே நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.
7. சங்க இலக்கியச் சொல்லடைவு. பெ. மாதையன் தமிழ்ப்பல்கலைக்கழம் மறுதோன்றி அச்சகம்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 63. நவீன கவிதைகளில் சுற்றுச்சூழல் மாசுபாடு

## Environmental Pollution in Modern Poetry

**முனைவர் சா.பாலின் செல்வ ஷோபா,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-02,
Dr S.Paulin Selva Shoba, Assistant Professor in Tamil, Holy cross college (Autonomous)
Tiruchirappalli – 02, mobil.no: 6380601401, e.mail: shobaamuthan1980@gmail.com
https://orcid.org/ 0009-0004-1226-7463

**ஆய்வுச் சுருக்கம்**

விஞ்ஞானம் வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் தூய்மை தளர்ச்சி பெற்று வருகிறது. நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபட்டு வருகின்றன. இயற்கையின் இயற்பியல், வேதியல், உயிரியல் பண்புகளில் விரும்பத்தகாத மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மக்கட்தொகைப் பெருக்கத்தால் இயற்கை மீதான சுரண்டலும் நிகழ்ந்து வருகிறது. அணு ஆயுதங்கள் உயிர்கள் அனைத்துக்கும் தீமை விளைவிப்பவை என்று தெரிந்தும் கல்வியறிவு மிக்க நாடுகள் அவற்றை நொடிதோறும் தயாரித்துக் கொண்டிருக்கின்றன. ஒலிமாசுபாடும் பெரும் சிக்கலாக உருவெடுத்துள்ளது. இவற்றிற்குத் தீர்வு காண்பது இன்றைய தேவையாக உள்ளது. எனவே மனித சிந்தனையில் சுற்றுச் சூழல் மாசுபாடு பற்றிய உணர்வை ஊட்டும் பொறுப்பை இலக்கியவாதிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். குறிப்பாக, கவிஞர்கள் சுற்றுச்சூழல் தூய்மையின் அவசியத்தைப் புலப்படுத்தி வருகின்றனர். இவற்றை ஆராயும் நோக்கில் 'நவீன கவிதைகளில் சுற்றுச்சூழல் மாசுபாடு'என்ற தலைப்பு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மாசு இல்லா சுற்றுச் சூழலை உருவாக்குவது ஆய்வின் நோக்கமாகும். இலக்கிய வகைமைகளில் நவீன கவிதைதான் மிகுதியாகச் சூழலியலைப் பேசுகிறது என்பது ஆய்வின் கருதுகோளாகும். சமூகவியல் அணுகுமுறை இதில் பின்பற்றப்படுகிறது. நீர்மாசுபாடு, காற்றுமாசுபாடு, அணுமாசுபாடு, ஒலிமாசுபாடு ஆகியவை இங்கு ஆராயப்படுகின்றன.

**முன்னுரை**

இலக்கியம் என்பது இயற்கையோடு இயைந்த படைப்புச் செயல்பாடு ஆகும். இயற்கையை உவமையாகக் காட்டுவது, பின்னணியாகக் காட்டுவது, வருணிப்பது, உள்ளடக்கமாக்குவது எனப் படைப்பு இயங்குகிறது. இயற்கை இல்லையேல் இலக்கியம் என்ற ஒன்றே இல்லை எனலாம். எனவே படைப்பாளன் இயற்கைக்குக் கடன்பட்டிருக்கிறான். இயற்கைக்கு இடர் உண்டாக்கும் அனைத்து சக்திகளுக்கெதிராகவும் போராடுகிறான். இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தை வாசகர்களிடம் விதைக்கிறான். இயற்கையைப் பாதுகாத்தல் என்ற பொருண்மையை விஞ்ஞான வளர்ச்சிக்குப்பின் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்ற புதிய சொல்லாடலோடு விளக்கத் தொடங்கினான். சூழலியல் என்பது விஞ்ஞானத்தோடு மட்டும் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுவது என்ற பழைய சிந்தனைப்போக்கை நவீன இலக்கியவாதியும், நவீன திறனாய்வாளனும் உடைக்கிறார்கள். சூழலியல் சார்ந்த இலக்கியங்களை உருவாக்குவதோடு நவீன இலக்கியம் திருப்தியடையவில்லை. சூழலியல் திறனாய்வு என்ற புதிய வகைமையை உருவாக்கி விஞ்ஞானத்தையும் இலக்கியத்தையும் இணைக்கும் பார்வையை அது முன்வைத்தது. சுற்றுச்சூழல் என்ற பொருண்மை சங்ககாலம் முதலே தமிழில் தீவிர கவனம் பெற்று வந்தாலும், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் என்ற உள்ளடக்கம் நவீன இலக்கிய காலத்தில்தான் அதீத முக்கியத்துவம் பெற்றது எனலாம். கவிதை என்பது சூழலியலை விரிவாகவும் தீவிரமாகவும் விளக்கிய நவீன இலக்கிய வகைமை என்ற வகையில் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகிறது.

**திறவுச்சொற்கள்**

சுற்றுச்சூழல் - மனிதன் வாழும் பகுதியைச் சுற்றியுள்ள அனைத்தையும் உள்ளடக்கியது, சூழலியல் - இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவுகளை விளக்கும் அறிவியல் பிரிவு, சூழலியல் திறனாய்வு - இலக்கியத்தில் சுற்றுச்சூழல் சார்ந்த கருத்தாக்கங்கள் பாடுபொருளாகி இருப்பதை வெளிக்கொணரும் இலக்கியவகை, வளிமண்டலம் - காற்று மண்டலம், காற்று மாசு – காற்றின் தூய்மையும் தரமும் கெடுதல்.

**மாசுபாடு**

உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றிற்காக இயற்கையைப் பயன்படுத்தும்போது மாசுபாடு நிகழ்கிறது. மக்கட் தொகைப் பெருக்கம் எனும் சமூகச் சிக்கல் மாசுபாட்டின் முக்கியக் காரணியாக விளங்குகிறது. தொழிலகம், வேதிப் பொருட்கள், சுரங்கப்பணி, போக்குவரத்து, கட்டுமானம், நகரமயமாதல், இயந்திரமயமாக்கப்பட்ட வேளாண்மை, இயற்கைச் சுரண்டல் அணுஉலைக்கழிவுகள் போன்றவற்றால் மாசுபாடு நிகழ்கிறது.

> "நிலம், நீர், காற்று ஆகியவற்றின் இயற்பிய, வேதிய மற்றும் உயிரியப் பண்புகளில் ஏற்படும் விரும்பத்தகாத மாற்றம் மாசுபாடு" [1]

என வரையறுக்கப்படுகின்றது. மாசுபாட்டிற்கான காரணத்தை அருணாசலம் விஞ்ஞான நோக்கில் விளக்கும் போது,

> "சுற்றுச்சூழலில் இருக்கும் எந்த ஒரு மூலப் பொருளுக்கும் ஒரு குறிப்பிட்ட ஓர் அமைப்பு முறை உண்டு. அயல்பொருள் ஏதாவது ஒன்று அதனுடன் சேரும்பொழுது அந்த மூலப்பொருளின் உரு அமைப்பு மாறிவிடுகிறது. இந்த மாறுபட்ட நிலையினால் அந்த மூலப்பொருள் தனக்குரிய நோக்கை இழக்கிறது. இந்த மாறியநிலை மாசுபடுதல்"2

என்றுரைக்கிறார்.

சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் கீழ்க்காணும் ஒன்பது வகைகளுக்குள் அடக்கி ஆராயமுடியும்.

1. தண்ணீர் மாசுபாடு
2. மண் மாசுபாடு
3. காற்று மாசுபாடு
4. ஒலி மாசுபாடு
5. உணவு மாசுபாடு
6. அனல் மாசுபாடு
7. திடக்கழிவு மாசுபாடு
8. கதிரியக்க மாசுபாடு
9. கடல் மாசுபாடு

ஆகிய மாசுபாடுகள் சுற்றுச்சூழலின் தூய்மைக்குச் சவாலாக விளங்குகின்றன.

**மாசுபாடு**

மனிதன் தான் அருந்தும் நீரைத் தானே அழுக்காக்குகிறான். நீர்மாசுபாட்டால் ஏற்படும் தீயவிளைவுகள் பற்றிய விழிப்புணர்வு சமூகத்தில் இல்லை. கழிவுகளை நீர்நிலைகளில் கலந்துவிடுவது, மக்கள்தொகைப் பெருகத்தால் உருவாகும் கழிவுகளை நீரில் கொட்டுவது, ஆற்றின் கரையோரங்களில் வீடுகளைக் கட்டுவது, தொழிற்சாலைக் கழிவுகளை நன்னீரில் கலந்து விடுவது, அணுக்கழிவுகளைக் கடலில் சேரச் செய்வது என நீர் மாசுபாட்டை மனிதன் உருவாக்குகிறான்.

அன்பாதவன் நீர் மாசுபாட்டை எண்ணி ஆறுகள் கவலைப்படுவதாகக் கூறுகிறார். அவர் பாலாறு தோல் கழிவுகளால் அழுக்காகிறது என்றும் சாயத் தொழிலால் நொய்யல், அமராவதி ஆறுகள் தங்கள் அழகை இழக்கின்றன என்றும் உரைக்கின்றார்.

"தோல் கழிவுகளால் பாலாறு கோளாறாக
மணல்வாரி கற்பழிக்கத்
தென்பெண்ணை கதறியழும்
சாயத்தொழிலின் சகதியழுக்கில்
நொய்யல் அமராவதி
நொடிந்து அழகிழக்கும்
அழகரும் இறங்கயியலாமல்
நச்சுப் பொய்கையாய் வைகை
மணலோடும் தடம் பார்த்து
மனங்குமையும் காவேரி"[3]

என்று நீர்மாசுபாடு பற்றிய வருத்தத்தை வெளிப்படுத்துகிறார்.

ரவிசுப்ரமணியம் நதிகள் இழிவு நீர்க்கால்வாய்களாய் மாறுவது பற்றி விளக்குகிறார். தூய்மையான தண்ணீரோடு மனிதர்களைச் சந்திக்க விரும்பும் ஆறுகள் மனிதர்களால் அமிலமாக மாறிவிடுகின்றன என்றுரைக்கின்றார்.

"தாகத்தோடு ஓடிக்கொண்டிருக்கிறது கழிவு நீர்
வாய்க்கால் மெக்கானிக் ஷாப்பிலிருந்து வருகிறது
வண்ணம் மிதக்கும் தண்ணீர்
வெல்டிங் கடையிலிருந்து மெல்ல வழிகிறது.
சில அமலக் கரைசல்கள்
கடல் நோக்கி ஓடும் கழிவுநீர்க் கால்வாயில்
சகலமும் சங்கமம்"[4]

என்று வண்ணமயமான தண்ணீரைக் காட்டுகிறார்.

சர்க்கரை ஆலைகள், மதுபானத் தொழிற்சாலைகள், சோப்பு தயாரிக்கும் ஆலைகள், உலோகத் தொழிற்சாலைகள், ஆடை தயாரிக்கும் ஆலைகள், தோல்பதனிடும் ஆலைகள், காகிதக் கூழ் தயாரிக்கும் ஆலைகள் போன்றவை நீர்நிலைகளின் அருகில் அமைக்கப்படுவதால் தொழிற்சாலைக் கழிவுகளைச் சுமந்து செல்லும் நிலைக்குத் தண்ணீர் தள்ளப்படுகின்றது. காகிதக்கூழ், செயற்கை ரப்பர், உரம், சணல், சிமெண்ட், இரசாயனப் பொருள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் நதிகளை நாசம் செய்கின்றன. குட்டிரேவதி நதிகள் தம்மீது கழிவுகள் மிதக்கும்போது அருவருப்படைவதாக எழுதுமிடத்தில் நதிக்கு உயிர் கொடுக்கிறார்.

"நதிகள் ஒன்றோடொன்று
இணைய மறுக்கின்றன
தன் சருமத்தைக் கப்பல் கிழிப்பதையும்
கழிவுகள் மிதப்பதையும் வெறுக்கின்றன"[5]

என்பதில் நதி உயிரும் சதையும் உணர்வும் கொண்ட உயிரியாக உருமாற்றம் பெறுகின்றது.

**காற்று மாசுபாடு**

காற்று மாசுபடுதல் என்பது நவீன உலகத்தில் மிகப்பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தாது, அழுக்கு, வாகனப்புகை, தொழிற்சாலைப் புகை, தொழிற்சாலைக்

கழிவின் நெடி, குப்பைக் கழிவு, எச்சில், புகை பிடித்தல் ஆகியவற்றால் காற்று மாசுபடுகிறது. வாகனப் பெருக்கம் தூசு எனும் மாசுபாட்டை உருவாக்குகிறது. உமாபதி எனும் கவிஞர் தொட்ட இடமெல்லாம் தட்டுப்படும் தூசு பற்றிப் பேசுகிறார்.

"பார்வை பட்ட இடமெல்லாம்
பழகிய தூசிகள்
உயிர் பதற ஓட நினைத்து
கால் தடுக்கி உரக்குழியில்
விழுமுன் தடுத்து நிறுத்தும்
புதிய படலம்
அழுக்கமையும் வரை காத்திருந்து
திரும்பும் கால்கள் திசைமாற்றி
தூசி மயம்"[6]

என்ற கவிதை தூசுப் படலமாய் மாறிய சுற்றுச்சூழலைக் கண்முன் நிறுத்துகிறது.

தாராபாரதி காற்று மண்டலம் போக்குவரத்துக் கருவிகளின் கழிப்பிடமாக மாறி வருகிறது என வருத்தப்படுகிறார்.

"கரிப்புகை கக்கும் வாகனங்களுக்குக்
காற்று மண்டலம் கழிப்பிடமா?
திறந்த வெளியில் ஆலைக்கழிவுகள்
தேக்கிய திரவக் குப்பைகளா?"[7]

என்ற வினாக்கள் சுற்றுச்சூழல் பற்றிய சிந்தனை அலையை எழுப்புகின்றன.

**அணு மாசுபாடு**

ஏகாதிபத்திய நாடுகள் வல்லரசுகளாய் ஆவதை இலட்சியமாகக் கொண்டுள்ளன. சிறிய நாடுகளின் வளங்களைச் சுரண்டுவதற்கு அவை ஆயுதங்களைக் கையிலெடுக்கின்றன. பிற நாடுகளை அடிபணிய வைப்பதன் மூலம் உலகத்தின் பெரும் சக்தியாய் அவை உருவெடுக்கின்றன. அணு ஆயுதங்களை மிகுதியாக வைத்திருக்கும் நாடு வல்லரசு எனப் போற்றப்படுகிறது. பொருளாதார மேம்பாடு அடைந்த நாடுகள் வல்லரசு எனப் போற்றப்படுகின்றன. அந்நாடுகள் எதிரிகளை அழிப்பதற்கான அணு ஆயுதங்களைத் தயாரிக்கின்றன. அணு உலைக் கழிவுகள் கடலை மாசுபடுத்துவது பற்றி அவ்வல்லரசுகள் எண்ணிப் பார்ப்பதில்லை. அணுக் கதிர்வீச்சு சமூகத்திற்கு ஏராளமான தீய விளைவுகளை ஏற்படுத்துவது பற்றியும் அவை சிந்திப்பதில்லை. தற்காலக் கவிஞர்கள் அணு உலைகளின் அபாயம் பற்றிப் பேசுகின்றனர். அணு உலையால் சுற்றுச்சூழல் மாசுபடுவது பற்றிய விழிப்புணர்வுட்டுகின்றனர். போரில்லா உலகத்தைக் கனவு காணுகின்றனர்.

மனிதர்கள் உயிர்களை வாழ வைப்பவர்களாக இருக்கவேண்டும் என்று கவிஞர்கள் எதிர்பார்க்கின்றனர். அணுக்கருவிகளை உருவாக்கி உயிர்களை சாக வைப்பவர்களாக இருக்கக்கூடாது என்று அவர்கள் கோருகின்றனர். அணுசக்தியின் வளர்ச்சி என்பது உண்மையான வளர்ச்சியல்ல என்றும் மனிதசக்தியின் வளர்ச்சியே வளர்ச்சி என்றும் அவர்கள் கருதுகின்றனர். வண்ணநிலவன் உயிர்குடிக்க விரும்பும் மனிதர்கள் உயிர் வளர்க்க நினைப்பதில்லை என்ற கருத்தைப் புதுமையான கோணத்தில் பதிவு செய்கிறார்.

"நேற்று
அணு செய்தோம்
அணுப் பிளந்து
உயிர் குடித்தோம்
அன்றும் இன்றும்
உயிர்வளர்க்க மறந்தோம்
உயிர் வளர்க"[8]

என்று அணுசக்தியின் தீமையையும் உயிர்சக்தி வளர்தலின் தேவையையும் ஒரு சேரத் தருகிறார். சூரியனின் கதிர்களில் காலை விடியவேண்டும் என்றும் அணுக்கதிர்களில் விடியல் அமையக்கூடாது என்றும் கவிஞர்கள் கருதுகின்றனர்.

"சூரிய விடியலாயின்
சோம்பல் முறிக்கலாம்
அணுக்கதிர் விடியலாயின்
எரிந்து போகலாம்
வாழ்வு முழுவதும் வதங்கிப் போகலாம்
சந்ததிக்கு என்று எதைவிட்டுப் போக"[9]

என்று யுவராஜ் குறிப்பிடுகிறார்.

அணு ஆயத சோதனைகள் காற்றை மாசுபடுத்துவது பற்றி ராசி அழகப்பன் சிந்திக்கிறார். அவர்,

"காற்றின் மடியில்
அணுக்களைப் பிளக்கும்
ஆயத சோதனை"[10]

என்று சுற்றுச்சூழலை மையப்படுத்திக் கவிதை எழுதுகிறார்.

"சிதைந்த அணுக்கள் துளைத்து
சிதைந்து வீழ்ந்தன
பறவைகளோடு பட்டாம்புச்சிகளும்"[11]

என்ற கவிதை அணு தயாரிப்பு உயிர்வாழ்தலுக்கெதிரானது என்பதை உணர்த்துகிறது.

**ஒலி மாசுபாடு**

ஒலி பெருக்கிகள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவை பெருகியபின் ஒலி மாசுபாடு மிகுந்துவிட்டது. திருவிழாக்கள், இசை நிகழ்ச்சிகள், அரசியல் பொழிவுகள், பிரச்சாரங்கள், விளம்பரங்கள் போன்றவை ஒலியைப் பெருக்கி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன. நகரங்கள் போக்குவரத்து சாதனங்களாலும், கிராமங்கள் சமயம் சார்ந்த கொண்டாட்டங்களாலும் இரைச்சலுக்கு உள்ளாகின்றன. இரைச்சல் மாசுபாடு மனிதனின் உடலில் பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றது. செவிப்பறை பழுதடைதல், செவிட்டுத்தன்மை ஏற்படுதல், தூக்கம் கெடுதல், மனநோய் உருவாதல், இரத்தநாளம் சுருங்குதல், இரத்த அழுத்தம் அதிகரித்தல், கருவிலுள்ள திசுவைப் பாதித்தல் என ஒலிமாசுபாடு பல்வேறு சிக்கல்களை உருவாக்குகிறது.

ஆகர்ஷியா புனிதத் தலங்களிலிருந்தும், நகரத்திலிருந்தும் உருவாகும் இரைச்சல் பற்றிப் பேசுகிறார்.

"நகரத்தின் சத்தங்கள்
மாறுபட்டுள்ளன. புனித
இடங்கள் கலகலப்புகள்
ஆதித் தன்மையனவாய் பிறர்
கண்டு களிக்க, செவிவழி கேட்க
அழுகுரல்கள் அமுங்கிவிடும்"[12]

என அழுகுரல்களை விடப் பன்மடங்கு ஓசையை எழுப்பும் நகரத்தைக் காட்டுகிறார்.

மாலதி மைத்ரி போர்க்கால இரைச்சல்கள் திகிலை ஏற்படுத்துவது பற்றிப் பேசுகிறார். ஈழத்துப் போர் தந்த வலியின் பாதிப்பால் அவர் இக்கவிதையை எழுதுகிறார். போர்க்கருவிகளின் இரைச்சல் காலத்தை வெறுமையாக்கி விடுவதாக அவர் கருதுகிறார். "மனித மிருகங்களின் சலசலப்புகள், தொலைக்காட்சிப் பெட்டியின் அலறல்கள், குண்டுபொழியும் இயந்திரப்பறவை, இரவு மிருகமென உலவும் டாங்கிகள்"[13] போன்ற யுத்தகால இரைச்சல் மாசுபாடுகளை அவர் பட்டியலிடுகிறார்.

**தொகுப்புரை**

'நவீன கவிதைகளில் சுற்றுச்சூழல் மாசுபாடு' என்ற தலைப்பு ஆராயப்பட்டு கீழ்க்காணும் முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

- தண்ணீர், மண், காற்று, ஒலி, உணவு, அனல், திடக்கழிவு, கதிரியக்கம், கடல் ஆகிய மாசுபாடுகள் காணப்படுகின்றன.
- மாசுபாட்டின் காரணிகளாக விஞ்ஞான வளர்ச்சி, தொழிற்சாலைப் பெருக்கம், மக்கட்தொகைப் பெருக்கம் ஆகியவை அமைகின்றன.
- சுற்றுச் சூழல் சிந்தனைகளைக் கவிஞர்கள் வெறும் பிரச்சாரமாகச் செய்யாமல் கலைநேர்த்தியுடன் வெளிப்படுத்தியுள்ளனர்.

**சான்றெண் விளக்கம்**

1. நா.கருணாநிதி (தொ.ஆ), சுற்றுச் சூழல் கல்வி, ப.2 2.
2. மு.அருணாசலம், தமிழ்ப் புதுக்கவிதைகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, ப.9
3. அன்பாதவன், நெருப்பில் காய்ச்சிய பறை, ப.55
4. ரவி சுப்பிரமணியம், சீம்பாலில் அருந்திய நஞ்சு, ப.26
5. குட்டி ரேவதி, உடலின் கதவு, ப.108.
6. உமாபதி, நெடுஞ்சாலை மனிதன், ப.33
7. வைகைச் செல்வி (தொ.ஆ), நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே, ப.87
8. வண்ண நிலவன், காலம், ப.41
9. யுவராஜ் சம்பத், பொய் வண்ணம், ப.15
10. ராசி அழகப்பன், உயிர்காற்று, ப.17
11. எஸ்.பாபு, காளான் பூக்கும் காலம், ப.7
12. ஆகர்ஷியா, நம்மைப் பற்றிய கவிதை,ப.30
13. மாலதிமைத்ரி, நீலி, ப.22

**பார்வை நூல்கள்**

1.அருணாசலம்.மு, தமிழ்ப்புதுக்கவிதைகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, மாலதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2009

2. அன்பாதவன், நெருப்பில் காய்ச்சிய பறை, காவ்யா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2003

3. ஆகர்ஷியா, நம்மைப் பற்றிய கவிதை, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு- 2007

4. கருணாநிதி (தொ.ஆ.) , சுற்றுச்சூழல் கல்வி, ஜாசிம் பதிப்பகம், திருச்சி, ஒன்பதாவது பதிப்பு -2009

5. குட்டி ரேவதி, உடலின் கதவு அடையாளம், சென்னை பதிப்பகம், முதற்பதிப்பு -2010

6. மாலதிமைத்ரி, நீலி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு -1998

7. வண்ணநிலவன, காலம் அன்னை பதிப்பகம், சிவகங்கை, முதற்பதிப்பு -1994

8. வைகைச்செல்வி, நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே, அரும்பு பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு -

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 64.புலியூர்க் கேசிகனின் புதுப்போர் பொருள்

**முனைவர்.செந்தில்நாதன்,**
உதவிப் பேராசிரியர் தமிழாய்வுத்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (த), பெரம்பலூர்; - 621220, 9944996164

**முன்னுரை;**

தமிழின் தொன்மைக்கும், பெருமைக்கும், சீர்மைக்கும், உயர்வுக்கும் அடித்தளமாய் அமைவன, இம்மொழியில் தோன்றியுள்ள எண்ணற்ற இலக்கண, இலக்கியங்களே ஆகும். கடல் கொண்டது போக எஞ்சியவற்றை வாசித்து முடிக்கவே ஒரு ஆயுள் போதாது. எண்ணிலடங்கா இலக்கியச் செழுமையை உடையதாய் விளங்குவது தமிழ்மொழி. இவ்விலக்கியங்களை மூல வடிவிலேயே படித்து பொருள் கொண்டோர் வாழ்ந்த காலம்தாண்டி, உரையின் துணையோடு விளங்கிக்கொள்ளும் காலம் வந்தபோது, உரையாசிரியர்கள் பலர் தோன்றினர். குறிப்பாக இலக்கணங்களைப் புரிந்து கொள்ள அவர்களின் துணை இன்றியமையாததாக இருந்தது. உச்சிமேல் புலவர் கொள் நச்சர்,இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார் போன்ற இலக்கண உரையாசிரியர்களும், அடியார்க்கு நல்லார், அரும்பத உரையாசிரியர்கள், பரிமேலழகர், பரிதியார், காளிங்கர், மணக்குடவர் முதலிய இலக்கிய உரையாசிரியர்களும் உரை எழுதியுள்ளனர்.

இவையாவும் காலத்தால் முந்தையவை. கடினமான உரையாகவும் அமைந்தவை. இன்றைய தலைமுறையினரை இலக்கிய இலக்கணத்தின் பக்கம் திசை திருப்புவதற்கு எளிமையான உரைகளின் தேவை ஏற்பட்டது அத்தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் புலியூர்க் கேசிகனாரின் உரை அமைந்தது. காரணம், அவரது உரை மிக எளிமையாகவும், நடைமுறைச் சொற்களைக் கொண்டும் மேற்கோள்கள் மற்றும் பாடலை பதம் பிரித்து காட்டியும்,எழுதப்பட்டதால் பலரும் இலக்கணம், இலக்கியங்களைத் தேடிப் படிக்கலாயினர் அவ்வகையில் புறப்பொருள் வெண்பாமாலைக்கு புலியூர்க்கேசிகன் புத்துரையை குறித்து ஒரு சில துறைகளை மட்டும் விளக்கி காட்டுவதை இவ்வாய்வு நோக்கமாகக் கொள்கிறது.

**புறப்பொருளும் புலியூராரும்**;

தமிழ் இலக்கணச் செரிவுள் அகம், புறம் என உரைக்கப்படும் ஒழுக்கங்களுள் புறம் பற்றி விளங்குவது புறப்பொருள் வெண்பாமாலை ஆகும்.

குறுமுனிவரின் மாணாக்கர்கள் பன்னிருவரும் செய்த பன்னிரு படலத்தின் வழி நூலாக எழுந்ததே இந்நூல் என்பர். இதனை இயற்றியவர் சேரகுடியினரான ஐயனாரிதனார் ஆவார்.

திணைகளை விளக்கும் சூத்திரங்களையும், அச்சுத்திரங்களுள் கூறப்படும் திணை துறைகளுக்கு இலக்கியமான வெண்பாக்களையும் அவ்வெண்பாக்களின் கருத்தை புலப்படுத்தி நிற்பனவாகிய கொளுக்களையும் கொண்டு திகழ்வது இந்நூல் ஆகும். கைக்கிளை திணையுள் இலக்கியச் செய்யுட்கள் 'மருட்பா'க்களாக அமைகின்றன.ஒழிபினிடத்து கொளுக்கள் எதுவும் சொல்லப்படவில்லை.

இந்நூலுக்கு சாமுண்டி தேவநாயகர் இயற்றிய பழைய உரை உள்ளது. மிகவும் நுட்பமாகவும், திட்பமாகவும் இவ்வுரை உள்ளது. இந்நூலினை முதன்முதலில் சிறப்பாக பதிப்பித்தப் பெருமைக்குரியவர் தமிழ் தாத்தா உ.வே.சா .ஆவார்.

இத்தகைய சீர்சால்புக்குரிய இந்நூலிற்கு புலியூர் கேசிகனார் எழுதிய தெளிவுரை சிறப்பானதாக அமைந்துள்ளது. இந்நூல் கருத்துகளை தொல்காப்பிய புறத்திணையியளோடு ஒப்பிட்டும், இலக்கிய மேற்கோள்கள் தேவைப்படும் இடங்களில் காண்பித்தும், அருஞ்சொற்பொருளோடு மிகத் தெளிவான, எளிமையான உரையாக தந்துள்ளார்.

மூலநூல் நூற்பாக்களை பதம் பிரித்து பயில்வோருக்கு பொருள் மயக்கம்,சொல் மயக்கம் தோன்றாத வகையில் செப்பமிட்டு உரை வரைந்துள்ளார். இன்று புதியோரு பலர் உரை எழுதி இருப்பினும், பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய்த் திகழ்வது புலியூராரின் உரையே ஆகும்.

**எளிமையும் பொருண்மையும்;**

வேட்சிப் படலத்துல் இடம்பெறும் ஊர்கொலைத் துறைக்கு உரை கூறும் கேசிகனார், கோளுவிற்கு அருஞ்சொற்பொருளையும், விளக்கத்தையும் கூறுகிறார். வெண்பாவிற்கு விளக்கம் கூறி தனது உரை விளக்கத்தை தனியே எடுத்துரைக்கிறார். வெண்பா யார் கூறும் கூற்றாக அமைகிறது? என்பதையும், இன்றியமையாச் சொற்களுக்கு குறிப்புரையும், காரணமும் கூறுகிறார்.

"இகலே துணையா எரிதவழச் சீறிப்
புகலே அரிதென்னார் புக்குப் - பகலே
தொலைவிலார் வீழ்த் தொடுகழல் ஆர்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு"

(புறப்பொருள் வெண்பாமாலை-8)

"இது கண்டவர் உரைப்பதாம். 'எரிதவழச் சீறி' என்பது சினத்தின் மிகுதியைக் குறித்தது. அன்றிப் பகையரிணிடத்து எரி தவழும்படியாகச் சீறி எனினும் ஆம். 'பகலே தொலைவிலார் வீழ்த் என்றதனால், முற்றியது இரவில் என்பதும், பகைமறவர் அதனை அறியாதாராயிருந்தனர் என்பதும் அறியப்பட்டது. 'தொடுகழல் ஆர்த்தல்' சுற்றுச்சூழன்று போரிடலால்; 'புகலே அரிதென்றார்' என்பதனால்,அவ்வரணின் வலிமையினையும் கூறினர்".

பகைவரின் அரணினைப் பகலிலே கைப்பற்றிய வெட்சி வீரர்களின் வீரத்தினையும், மாறுபாட்டினையும் கூறும் துறையாகுமிது. 'எரிதவழச்சீறி' என்ற சொல்லுக்கும் 'தொடுகழல் ஆர்த்தல்' எனும் சொல்லுக்கும் பொருளுரைக்கையில் காட்சியைக் கண்முன் நிறுத்திவிடுகிறார் கேசிகனார். இந்த எளிமைத் தன்மையே பலரையும் இவரின் உரைப்பக்கம் திருப்பியது எனலாம்.

**மேற்கோள் காட்டுதல்;**

களத்தின் கண் நின்று போர் புரியும் மறவர்களுக்கு அவர்கள் வேண்டும் அளவும் பெருஞ்சோற்றினை மன்னன் வரிசையறிந்து வழங்குதலே இத்துறையாகும். இத்துறைக்கான கொளு,

"திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவரெனப்
பெருஞ்சோ றாடவர் பெருமுறை வகுத்தன்று".

இதற்கு உரை கூறும் ஆசிரியர்,

"இதனை 'பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை' என்று தொல்காப்பியர் கூறுவார் அரசன் படைஞருடன் இருந்து சோற்றுத்திரளை அவர்க்கு வரிசையறிந்து வழங்குதலான ஒரு மரபு இது. 'ஈரைம் பதிமன்ரும் பொருதுகளத்து ஒழியப் பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்' என வரும் புறப்பாட்டு (புறம்-2) அடிகளும் இதனை விளக்கும் 'பின்றாச் சிறப்பின் பெருஞ்சோற்று வஞ்சியும்' என சிலம்பு (25-144) கூறுவதும் காண்க" என்று விவரிக்கிறார்.

தொல்காப்பியம், புறநானூறு, சிலப்பதிகாரம், எனும் மூன்று நூல்களிலும் பெருஞ்சோற்று நிலை பற்றி வரும் செய்திகளை மேற்கோளாக எடுத்துக் காண்பித்து உரை விளக்கம் தருகிறார். இதனால் இத்துறை குறித்துப் பயில்வோர் எளிதாக விளங்கிக்கொள்ள இயலும். இதுவே உரையாசிரியர்க்கு உரிய தகுதிகளுள் ஒன்றாகவும் கருதப்படுகிறது. அறியாத ஒன்றை அறிந்த ஒன்றினால் விளக்குவது என்ற உத்தி முறையில் இது அடங்குகிறது.

காஞ்சித் திணை அறிமுகம் மற்றும் துறை வகைப்பாடு நூற்பாவினை விளக்கும்போதும் மேற்கோள் காண்பித்து விளக்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. காஞ்சிக்கு பெருந்திணையைப் புறனாகக் கூறும் தொல்காப்பியத்தை ஒப்பு நோக்கிக் கூறும் முறை கவனிக்கத்தக்கது.

'காஞ்சிதானே பெருந்திணைப் புறனே' (புறத்.22) என்ற தொல்காப்பிய புறத்திணை நூற்பாவினை மேற்கோளிட்டு விளக்குகிறார். மேலும்,

”சிலப்பதிகாரக் கால்கோட் காதையுள்,

செங்குட்டுவன் வடவாரிய மன்னரோடு போரிட்டு வென்றதைக் கூறும்,

’இரைதேர் வேட்டத்து எழுந்த அரிமாக்
கரிமாப் பெருநிரை கண்டுளம் சிறந்து
பாய்ந்த பண்பிற் பல்வேல் மன்னர்
காஞ்சித் தானையோடு காவலன் மலைப்ப’ .(26;188-191)

என்ற தொடர்கள், 'காஞ்சித் தானை' என இந்த நூற் பொருளினை ஒட்டியே கொண்டு உரைக்கப்பட்டிருத்தலையும் காண்க".

என்ற தெளிவுரை மூலம் எளிதாக உரைக்கிறார். இவ்வாறு பிற இலக்கிய மேற்கோள்களைத் தேவைப்படும் இடங்களில் சிறப்பாகக் காண்பித்து எளிதாக விளங்க வைக்கும் உத்தி முறையைக் கையாண்டுகிறார்.

இதேபோன்று, தும்பைப் படலத்தின் 'ஏம எருமை’ துறையை விளக்கும் போதும், 'படையறுத்துப் பாழி கொள்ளும் ஏமம்’ (தொல்.புறத்.17)என்ற தொல்காப்பிய நூற்பாவைச் சான்று காட்டுகிறார். மேலும் , இத்துறையின் வெண்பாவிற்கு விளக்கம் கூறும்போது மற்றொரு மேற்கோளையும் எடுத்தாள்கிறார். நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோளையே தானும் காட்டுகிறார். அதாவது,

'கொல்லேறு பாய்ந்தழித்த கோடுபோல் தண்டிறுத்து
மல்லேறு தோல்வீமன் மாமனைப் - புல்லிக்கொண்டு
ஆறாத போர்மலைந் தாங்கரசர் கண்டார்த்தார்
ஏறாடல் ஆயர் என'

என்ற பாரத பாட்டை ஒப்புநோக்கும்படிக் கூறுகிறார். .இந்தப் பாடல் நச்சினார்க்கினியரால் மேற்கோள் காண்பிக்கப்படும் பாடலாக மட்டுமே அறியப்படுகிறது.

நிறைவாக, வாகைத் திணையின் 'பொருளொடு புகறல்' துறைக்கான தெளிவுரையில் ‘மெய்யைந்து மீதூர்தல்’ என்ற தொடருக்கு,

” ‘மெய் ஐந்தும் மீதூர்தல்’-மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளிற் பிறக்கின்ற இச்சைகள் நம்மை மேற்கொண்டு நிற்றல்.ஐயைந்து-இருபத்தைந்தாகிய தத்துவப் பொருள்கள்: அவை ஞானேந்திரியங்கள் ஐந்தும், மகாபூதங்களைந்தும், தன்மாத்திரைகளைந்தும்,கன்மேந்திரியங்கள் ஐந்தும் மனம் முதலான அந்தக் கரணம் நான்கும், சீவன் ஒன்றும் ஆகியவை”.என்ற விளக்கத்தைக் கொடுப்பதோடு,பின்வரும் மணிமேகலை செய்யுள் தொடர்களையும் எடுத்துக்காட்டி விளக்கும் முறை அவரது பரந்துபட்ட நூலறிவுத் திறனை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

"புலமார் பொருள்கள் இருபத்தைந்துள;

நிலம் நீர் தீவளி ஆகா யம்மே;
மெய்வாய் கண்மூக் குச்செவி தாமே;
உறுசுவை யொளியூ றோசைநாற் றம்மே;
வாக்குப் பாணி பாதபாயு ருபத்தம்;
ஆக்கும் மனோபுத்தி ஆங்கார சித்தம்;
உயிரெனும் ஆன்மா ஒன்றோடும் ஆம்."(மணி.37:233-239)

எனவரும் சாங்கியவாதியின் விளக்கம் இந்தப் பொருள்களை விளக்கியுரைப்பதனைக் காண்க" என்கிறார்.

புலியூர்க் கேசிகனாரின் உரைத்திறனுக்கு ஒரு சில மட்டுமே இவ்வாய்வுப் பொருண்மைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒவ்வொன்றையும் சொல்லப் புகுந்தால் விரியும் என்பதால் இங்கு சுருக்கியுரைக்கப்பட்டது.

**முடிவுரை;**

காலந்தோறும் தமிழ் இலக்கண, இலக்கியங்களுக்குப் பல்வேறு உரைகள் எழுந்தவண்ணமே உள்ளன. எனினும் அவற்றுள் ஒருசில உரைகள் மட்டுமே காலம் தாண்டியும் வாழும் பெருமைபெறுகின்றன உரையாசிரியர் என்றாலே அது இளம்பூரணரையும், சேனாவரையரையுமே குறிக்கும் என்பர். அடுத்து நச்சினார்க்கினியர்,பேராசிரியர், தெய்வச்சிலையாரைத் தொடர்ந்து, நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், ஆண்டிப்புலவர் தொடங்கி வெள்ளைவாரணனார் வரையிலும், திருக்குறளுக்கு உரையெழுதிய பதின்மரும் என உரையாசிரியர்களின் வரலாறு பக்தி இலக்கியங்கள் வரை தொடர்கிறது. இத்தனை உரையாசிரியர்களுள் ஒருசிலரைத் தவிர ஏனையோர் பெயரளவில் மட்டுமே அடையாளம் காணப்படுகின்றனர்.

இவர்களின் உரைகளுக்கு பிறகான தற்போதைய காலகட்டத்தில் இலக்கண, இலக்கியங்களுக்கு உரையெழுதிப் புகழ்பெற்ற தகைமைக்குரியவர் புலியூர்க்கேசினார் மட்டுமே.உரைக்கே உரைதேடிய தலைமுறையினரிடம் தமிழிலக்கண இலக்கியங்களைத் தனது எளிய உரைமூலம் கொண்டுசேர்த்த அளப்பரும் பணியைச் செய்தவர் என்பதைத் தமிழிலக்கிய உலகம் ஒருபோதும் மறுக்காது.அத்துனை அரிய பணியைத் தனக்கெனத் தனி ராஜபாட்டையை அமைத்துக்கொண்டு ஆற்றியவர். அவரின் உரைப்பணி தமிழ்மொழி உள்ளளவும் உள்ளப்படும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

**பார்வை நூல்கள்**

1. புலியூர்க் கேசிகன்;(உ.ஆ)-(புறப்பொருள் வெண்பாமாலை, (தெளிவுரை), பாரி நிலையம்,184,பிரட்வே,சென்னை,600108,4ஆம் பதிப்பு,1988
2. புலியூர்க் கேசிகன்;(உ.ஆ)-மனிமேகலை (புதிய பதிப்பு) தெளிவுரை, பாரி நிலையம்,184,பிரட்வே,சென்னை,600108,13 ஆம் பதிப்பு,2005.
3. இளம்பூரனர்- தொல்கப்பியம் பொருலதிகாரம், சாரதா பதிப்பகம், திருவல்லிகேனி, சென்னை,600005, 3 ஆம் பதிப்பு டிசம்பர்,2006.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 65. குறுந்தொகைக் கூற்றுகளுள் சூழலியல் புலப்படுத்தும் சூழல் மறைபொருள்

**வே. அஜித்குமார்,**
முனைவர் பட்ட ஆய்வாளர், மொழியியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10.
மின்னஞ்சல்;ajichandru07@gmail.com, அலைப்பேசி:9940854732

**ஆய்வுச் சுருக்கம்**

குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள பாடலில் உள்ள சொல், சொற்றொடர் நேரடிப் பொருளையும் மறைமுகப் பொருளையும் விளக்குகின்றன. இதில் நேரடிப் பொருள் என்பது சொல்லுக்குரிய பொருள். அதாவது சொல்லின் அகராதிப் பொருளாகும். சொல்லே அதற்குரிய பொருளை எவ்வித மறைவின்றி நேரடியாக வெளிப்படுத்துகிறது. மறைமுகப் பொருள் என்பது ஒரு சொல், சொற்றொடர் தனக்கான நேரடிப் பொருளை உணர்த்தாமல் வேறொரு இரண்டாம் பொருளை மறைமுகமாக உணர்த்துகிறது. இது சூழலுக்கேற்ப பொருள் உணர்த்தப்படுவதால் சூழல் மறைபொருள் எனப்படும். குறுந்தொகை கூற்றுகளுள் இத்தகைய சூழல்மறை பொருளைப் புலப்படுத்துவதற்குப் பறவை, விலங்கு, மரம், செடி, பூ, பருவநிலை போன்ற சூழலியல் காரணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**கலைச்சொல்**

சூழல்மறை பொருள், மரபு சூழல் மறைபொருள், கூற்று சூழல்மறை பொருள், நேரடிப் பொருண்மை.

**முன்னுரை**

சங்க இலக்கியங்களுள் ஒன்றான குறுந்தொகைப் பாடல்கள் அனைத்தும் கூற்றுகளால் ஆனது. இக்கூற்றின் பொருளைப் பயன், எச்சம், மெய்ப்பாடு, உவமை, உள்ளுறை உவமை, இறைச்சி, அங்கதம், நோக்கு, இடைச்சொல் ஆகியவை புலப்படுத்துகின்றன. இவற்றுள் உவமை, உள்ளுறை, இறைச்சி போன்றவைப் பறவை, விலங்கு, மரம், செடி, பூ, பருவநிலை போன்ற இயற்கை சுழலைப் பயன்படுத்தி பாடலில் மறைந்திருக்கும் சூழல் மறைபொருளைப் புலப்படுத்துவதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கூற்று**

கருத்து வெளிப்பாட்டுமுறை என்ற பொருளிலே கூற்று என்னும் சொல்லைப் பேச்சு, உரையாடல், எடுத்துரைப்பு, மொழிதல் என அறிஞர்கள் பயன்படுத்தி உள்ளனர்.

***மிகைல் பக்தின்*** என்ற ரஷ்ய எழுத்தாளர் கூற்று பற்றி ஆராய்ந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர். இவர் கூற்றினை உரையாடல், கலந்துரையாடல் எனும் சொற்களால் குறிப்பிடுகிறார்.

**நேரடிப் பொருண்மை**

நேரடிப் பொருண்மை என்பது சொல் அல்லது சொற்றொடரின் அகராதிப் பொருண்மையாகும். இது தனக்கான பொருளை வெளிப்படையாகப் புலப்படுத்தும்.

**சூழல் மறைபொருள்**

ஒரு சொல், தொடர் தனக்கான நேரடி பொருளை வழங்காமல் தான் இடம்பெறும் சூழலுக்கு ஏற்ப வேறொரு பொருளை வழங்குவது சூழல் மறைபொருள் எனப்படும். “***implicature*** எனும் இச்சூழல் மறைபொருளை 1975ஆம் ஆண்டு மெய்யியலாளர் ***H.P. கிரைஸ்*** என்பவர் கண்டறிந்தார்.”[1] (2015,பக்.64) இதனை மரபுச் சூழல்மறை பொருள் ***(conventional implicature),*** கூற்று சூழல்மறை பொருள் ***(conversational implicature)*** என இரண்டாகப் பாகுபடுத்தியுள்ளார்.

***கூற்று சூழல்மறை பொருள்***

***முகில்: டீ குடிக்கப் போகலாமா?***

***கவின்: நான் படிக்க வேண்டும்.***

மேற்கூறிய கூற்றில் முகில் டீ குடிக்கப் போகலாமா என்ற கேள்விக்குக் கவின் போகலாம் அல்லது வேண்டாம் என்றே பதில் கூற வேண்டும். ஆனால் அவ்வாறு நேரடியாகப் பதில் கூறாமல் நான் படிக்க வேண்டும் என்று கூறுவது டீ குடிக்கப் போக வேண்டாம் என்பதை மறைமுகமாகப் புலப்படுத்துகிறது.

**மரபு சூழல்மறை பொருள்**

***‘அவன் காக்கா பிடிக்கிறான்.’***

எனும் தொடர் அத்தொடரின் நேரடி பொருளான காக்கா எனும் பறவையைப் பிடிக்கிறான் என்பதை உணர்த்தாமல் ஒருவரைத் தன்வயப்படுத்துதல் அல்லது கவரும் விதமாகச் செய்யும் செயலை உணர்த்துகிறது. இவ்வாறாக இவ்விருவகை சூழல் மறைபொருளும் குறுந்தொகையில் அமைந்துள்ளதைக் காண்போம்.

**தலைவிக் கூற்றில் சூழலியல் புலப்படுத்தும் சூழல் மறைபொருள்**

***“நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே”[2] (குறுந்.3)***

என்பது நீண்ட நாளாகத் திருமணம் முடிக்காமல் காலம் தாழ்த்தும் தலைவன் சிறை புறமாக நிற்பதை அறிந்த தோழி தலைவன் விரைவில் தலைவியை மணந்து கொள்ள வேண்டி இயற்பழித்தவழி தலைமகள் கூறியதாக அமைந்த பாடல்.

***நேரடிப் பொருண்மை:*** மலைப்பகுதியில் உள்ள கரிய கொம்புகளை உடைய குறிஞ்சி மலர்களில் இருந்து பெருந்தேனைச் சேகரிக்கும் நாட்டை உடைய தலைவனோடு கொண்ட நட்பானது நிலத்தை விட பெரியது; வானை விட உயர்ந்தது; நீரை (கடல்) விட ஆழமானது.

***சூழல் மறைபொருள்:*** திருமணம் நீட்டித்த தலைவனை இயற்பழித்த தோழிக்குத் தலைவி தலைவன் தன்னை ஏமாற்ற மாட்டான்; மணந்துகொள்வான் என்றே பதில் கூறவேண்டும். அவ்வாறு நேரடியாகக் கூறாமல் தலைவனின் நட்பு நிலத்தை விட பெரியது; வானைவிட உயர்ந்தது; கடலை விட ஆழமானது எனக் கூறுவது தலைவன், தலைவி மீது கொண்ட காதல் அளப்பரியது என்ற பொருள் மட்டும் அல்ல. தலைவன் ஏமாற்ற மாட்டான் என்பதையும் உணர்த்துகிறது.

மேலும் 'கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே' எனும் கூற்றுத் தலைவனின் ஊரின் வளத்தைக் குறிப்பிடவில்லை. அவற்றின் வழி மலைப் பகுதியில் எண்ணற்ற பூக்கள் இருந்தாலும் குறுஞ்சி மலர்களில் இருந்தே தேனைச் சேகரிக்கும் தேனீ போலத் தலைவன் ஆயிரம் பெண்கள் இருந்தாலும் தலைவியான தன்னையே மணந்து கொள்வான். வேறொரு பெண்ணை மணக்கமாட்டான் என்ற பொருளைப் புலப்படுத்துகிறது.

நிலம், வான், நீர் ஆகியவற்றின் பண்பு தலைவனின் பண்பிற்கு ஒப்பிட்டு ஏமாற்ற மாட்டான் என்ற சூழல் மறைபொருளை உணர்த்துகிறது.

குறிஞ்சிப்பூ, தேனீ, தேன் ஆகியவைத் தனக்கான பொருளைத் தராமல் பின்வருமாறு பொருள் தருகிறது.

*குறிஞ்சிப் பூ - தலைவியைக் குறிக்கிறது.*

*தேனீ - தலைவனை குறிக்கிறது.*

*தேன்கூடு - தலைவன் தலைவியை இணைத்த களவின் பயனால் எய்த பெறும் கற்பு வாழ்க்கையைக் குறிக்கிறது.*

**தலைவன் கூற்றில் சூழலியல் புலப்படுத்தும் சூழல்மறை பொருள்**

***"யாயு ஞாயும் யாரா கியரோ***
***எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்***
***யானு நீயு மெவ்வழி யறிதும்***
***செம்புலப் பெயனீர் போல***
***அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"[3] (குறுந்.40)***

இயற்கைப் புணர்ச்சியில் புணர்ந்த தலைவன் தன்னை விட்டுப்பிரிந்து செல்வானோ என்று தலைவி ஐயமுற அதனைக் குறிப்பால் உணர்ந்த தலைவன் தலைவிக்குக் கூறியது.

***நேரடி பொருண்மை:*** என்னுடைய தாயும், உன் தாயும், யாரென்று தெரியாது. என் தந்தையும், உன் தந்தையும் எந்த முறையிலும் உறவினர் அல்லர். நீயும், நானும் எவ்வழியிலும் அறிந்தது இல்லை. இந்நிலையில் செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர்ப் போல அன்புடைய நம் நெஞ்சம் ஒன்றிணைந்தது.

***கூற்றுப் பொருண்மை:*** தலைவன் தன்னை விட்டுப்பிரிந்து செல்வானோ என்று ஐயமுறும் தலைவிக்கு நான் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன் எனக் கூறாமல் என் தாயும், உன் தாயும் யாரென்று தெரியாது. என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையிலும் உறவினரல்லர். நானும் நீயும் எவ்வழியிலும் முன் அறிந்தது இல்லை எனக் கூறுவதன் மூலம் உன்னை விட்டுப் பிரிய நினைத்தால் பிரிந்து இருக்கலாம் என்ற பொருளை உணர்த்துகிறது.

செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர்ப் போல அன்புடைய நம் நெஞ்சம் ஒன்றிணைந்தது என்ற கூற்றின் வாயிலாக இருவருடைய நெஞ்சமும் செம்புலப் பெயல்நீர்ப் போல் ஒன்றுடன் ஒன்றாகக் கலந்திருக்க எவ்வாறு பிரியமுடியும். ஐயமுற வேண்டாம் நான் உன்னைப் பிரியமாட்டேன் எனத் தலைவன் கூறுவதை உணர்த்துகிறது.

செம்புலம், பெயல் நீர் தனக்கான நேரடி பொருளை வழங்காமல் பின்வருமாறு பொருளை வழங்குகிறது.

*செம்புலம் - தலைவியைக் குறிக்கிறது.*
*பெயல் நீர் - தலைவனைக் குறிக்கிறது*

செம்புலப் பெயல்நீர் - இயற்கைப் புணர்ச்சியில் ஒன்றிணைந்த நம்மைப் பிரிக்கவும் முடியாது; பிரியவும் மாட்டேன்.

செம்மண் நிலத்தை சேர்ந்த மழைநீரில் செம்மண் நிலத்தையோ மழைநீரையோ எவ்வாறு பிரிக்க முடியாதோ அதுபோலத் தலைவியான உன்னை இயற்கைப் புணர்ச்சியில் புணர்ந்த தலைவனான என்னையும் பிரிக்க முடியாது, பிரியவும் மாட்டேன் என்பதைக் குறிக்கிறது.

**முடிவுரை**

குறுந்தொகைக் கூற்றுகளில் காணப்படும் நிலம், வான், நீர், பூ, தேனீ, மழை, போன்ற இயற்கைச் சூழல், சூழல் மறைபொருளைப் புலப்படுத்துவதற்குப் பெறிதும் துணைப்புரிகிறது. இயற்கைச் சூழல் வெறும் அழகு புனைவு மட்டும் அன்றி, பொருள்புலப்பாடு செய்யும் உத்தியாகச் சங்கப்புலவர் கையாண்டுள்ளனர் என்பதை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. IMOLA KATALIN NAGY (2015), AN INTRODUCTION TO THE STUDY OF PRAGMATICS Pg.64
2. சாமிநாதர், உ.வே., (பதிப்பாசிரியர்), குறுந்தொகை மூலமும் உரையும் பக்.11
3. மேலது பக்.91

**துணைநின்ற நூற்கள்**

1. சாமிநாதர், உ.வே., (பதிப்பாசிரியர்), 2009, குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே.சா நூல்நிலையம், சென்னை.
2. IMOLA KATALIN NAGY (2015), AN INTRODUCTION TO THE STUDY OF PRAGMATICS,SCIENTIA PUBLISHING HOUSE, CLUJ-NAPOCA.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 66. காலநிலை மாற்றமும் பறவைகள் வலசை போதலும்

**முனைவர் லோ.ரூபா,**

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி – 620 002

மின் அஞ்சல் : rubaljk84@gmail.com, 86085 54640

**ஆய்வு சுருக்கம்**

காலநிலை மாற்றம் (ஊடிஅயவந ஊhயபெந) என்பது பூமியின் நீண்டகால வானிலை அமைப்புகளிலும் வெப்பநிலையிலும் ஏற்படும் நிலையான மற்றும் பெரிய அளவிலான மாற்றங்களைக் குறிக்கிறது. காலநிலை மாற்றம் இயற்கையாகவே பூமியில் நிகழும் தொடர்ச்சியான நிகழ்வு என்றாலும், மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவாக முன்னெடுக்கப்பட்ட தொழிற்புரட்சிக்குப் பின்பு மனிதர்களால் மேற்கொள்ளப்பட்ட தொழற்சாலை, வாகன எரிபொருட்கள் பயன்பாடு, காடழிப்பு, போன்ற தனிமனித தேவைகளால், பூமியின் சராசரி வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து வருவதற்கு சான்றாக இப்பொழுது ஐரோப்பிய கண்டத்தில் உள்ள நாற்பதிற்கும் மேற்பட்ட நாடுகளில் வெப்பநிலை உயர்ந்து மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்துள்ளது. மேலும் பனிப்பாறைகள் உருகுதல், வறட்சி, கனமலை, புயல் வெள்ளப்பெருக்கு போன்றவை எல்லாம் பூமியில் தோன்றிய அனைத்து உயிரினங்களிலும் வாழ்வியலுக்கு இடையூறாக அமைகின்றன. இவை, பூமியின் சுற்றுச்சூழல் சமநிலைப் பாதுகாக்கும் பறவைகளை பாதிக்கின்றன. புறவைகள் இல்லையென்றால் மனிதர்களின் உணவுச் சங்கிலியும் இல்லையென்றால் இயற்கை அமைப்பும் பெருமளவில் பாதிக்கப்படும் என்பதை பழந்தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதனால் பறவைகளுக்கு இடையூறு இல்லாத சூழல் அன்று நிலவியதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**கலைச் சொற்கள்**

வலசை - இடம் விட்டு இடம் பெயர்தல், செவ்வரி நாரை - ஒரு வகையான நீர்வாழ் பறவை, குருகு - கொக்கு, அன்றில் - அரிவாள் மூக்கன்

**முன்னுரை**

இயற்கையின் விசித்திரமான, நிகழ்வுகளில் ஒன்று பறவைகள் வலசை போதல் ஆகும். தட்பவெப்ப நிலை மாற்றம், உணவுப் பற்றாக்குறை மற்றும் இனப்பெருக்கத் தேவைகளுக்காகப் பறவைகள் ஆண்டு தோறும் பருவநிலைக்கு ஏற்ப ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குப் பயணம் செய்வதை அறிவோம். பறவைகளின் இந்த வாழ்க்கைச் சுழற்சி புவியின் சுற்றுச் சூழல் சமநிலையோடு நெருங்கிய தொடர்புடையது இருப்பினும் தற்காலத்தில் தீவிரமடைந்து வரும் சுற்றுச் சூழல் மாறுபாடுகளிலும் பருவநிலை மாற்றங்களும் பறவைகளின் இந்த இயல்பான பயணத்திற்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளன என்பதை சங்ககாலத்தில் பறவைகளின் வாழ்வியலுக்கு சுற்றுப்புறச் சூழல் இயற்கையோடு இயைந்ததாக இருக்க வேண்டும் என்றும் பல்லுயிர் பெருக்கத்திற்கு பறவைகள் இன்றயமையாத உயிரினம், அது சங்ககால சூழலில் வாழ்ந்த வாழ்வியலை எடுத்துக்கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

**வலசை போதல்**

பறவைகள் வலசை போதல் (டீசைன ஆபைசயவழைn) என்பது பறவைகள் குறிப்பிட்ட பருவக்காலத்தில் தங்களின் வாழ்விடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு உணவு, இனப்பெருக்கம் மற்றும் சாதகமான வானிலைக்காக நீண்ட தூரம் பயணம் மேற்கொள்கின்றன. பின்னர் மீண்டும் பழைய இடத்திற்குத் திரும்புவதைக் குறிக்கின்றது. புவி வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றம் (ஊடிஅயவந ஊhயபெந) ஆகியவை பறவைகளின் இயல்பான வலசை போதல் சுழற்சியை உலகளவில் பெரிய அளவில் மாற்றியுள்ளன. சுற்றுச்சூழலின் சமநிலையைக் காட்டும் உயிரி குறிகாட்டிகளான (டீழை ஐனெஉயவழசள) பறவைகள் விளங்குவதால் கால நிலை மாற்றத்தின் விளைவுகள் முதலில் பறவைகளின் இடப்பெயர்ச்சியில்தான் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. வெப்பம் தாங்க முடியாமல், பல பறவைகள் இனங்கள் துருவப்பகுதிகளை நோக்கியோ, அல்லது குளிர்ந்த மலைப் பகுதிகளை நோக்கியே தங்களின் வலசைப் பாதையை மாற்றி அமைத்துக் கொள்கின்றன.

**'நாராய் நாராய் செங்கால் நாராய் தென்சிசை**
**குமரி ஆடி வழிசைக்கு ஏகுவீராயின்"**
**ஏழாம் வகுப்பு தமிழ் செய்யுள் தமிழ்நாடு பாடநூல் கழகம் - 2007 ப.46, 47**

என்று செங்கால் நாரை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வலசை போவதை குறித்து சத்திமுத்தப் புலவர் இயற்றிய நாரை விடுதூதில் குறிப்பிட்டுள்ளார்.

**நாரையும் கொக்கும்**

இன்று எல்லோராலும் அறியப்படுகின்ற நீர்பறவைகளான நாரையும் கொக்கும் சங்க இலக்கியங்களில் அதிகமாகப் பேசப்பட்டுள்ள பறவைகளாகும். நாரையும், கொக்கும் ஒரே இனப் பறவைகளாயினும் வெவ்வேறு பறவைகளாகும். நாரை என்ற பெயர் சங்க நூல்களில் தனியாக ஒரு வகைப் பறவையைக் குறிப்பிடுகின்றது. ஆனால் அதே பெயர் செவ்வரி நாரை, பெருநாரை, செங்கால் நாரை என்ற பெயர்களில் பொதுப்பெயராகவும், இனப்பெயராகவும் வழங்கப்பட்டுள்ளன. நம் நாட்டு மக்களிடையே நாரை என்ற பெயர் இன்றும் வழங்கப்பட்டு வருவதால் இந்தப் பறவை எதுவென்று எளிதில் கண்டு கொள்ள முடியும். நாரைகள் நீர்நிலைகளில் முக்கியமாக கடற்கரை கழிகளில் அதிகமாக வாழக்கூடிய பறவையாகும். தோற்றத்தில் நெட்டையாகவும், சாம்பல் நிறம் கொண்ட உடலினையும் கொண்டது. பெரும்பாலும் தனியாக நிற்பது இதன் இயல்பு. சிறு கூட்டமாகவும் நீர்நிலைகளில் காணப்படும். நீண்ட கால்களும் நீண்ட கழுத்தும் இந்தப் பறவை உயரமாக இருக்கக் காரணமாகின்றன.

**அடும்பவி ழணிமலர் சிதைஇமீ னருந்தும்**

தண்ணந் துறைவற் றொடுத்து நந்நலம் - குறுந்- 349

'தடந்தாள்" நாரை என்று இந்த நாரை அழைக்கப்படுவதாக பாடல் குறிப்பிடுகின்றது. அதாவது வளைந்த கால்களை உடைய நாரை என்று பொருளில் குறிப்பிடுகின்றது. ஆனால் 'தட" என்ற சொல் பெருமை பொருளை உணர்த்துவதாகும். எனவே பெரிய நீண்ட கால்களை உடைய நாரை என்று குறிப்பிடுவதே பொருத்தமான விளக்கமாக இருக்கும். 'பழனப் பன்மீ னருந்த நாரை - ஐங்: 70: 1" கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் நீர்வாழ் பறவையான நாரை மருதநிலங்களில்

காணப்பட்டுள்ளன என்ற செய்தியை இப்பாடல் எடுத்துரைக்கின்றது. காரணம் மருத நிலம் இயற்கையிலே சிறந்த நீர் வளம் நிறைந்த நிலம் ஆதலால் நெய்தல் நில சூழல் மருதத்தில் நிலவியதால் பறவைகள் அந்நிலத்திற்கு விரும்பிச் செல்வது இயற்கை என்பது இப்பாடலின் வழியாக அறியலாம்.

பழனப்பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி நாரை உரைத்தலிற் செந்நெல் -நற்றி : 130: 1-2

மருதநிலத்து வயல்வெளிகளிலும் ஊர்பொது இடங்களிலும் நாரைகள் இயல்பாக இப்பாடல் வழியாக அறிய முடிகின்றது.

இருங்கழி துறைஇய ஈர்ம்புற நாரை
இறகெறி திவலையிற் பனிக்கும் பாக்கத்து - நற்றி : 127: 1

நாரைகள் கடற்கரைக் கழிகளிலும் பொய்கைகளிலும் மருதநிலத்துக் கழனிகளிலும் மற்றும் பழனங்களிலும் காணப்பட்டுள்ளதை இப்பாடல்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. கழனி நாரை என்றும் பழனநாரை என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.

கடலி னாரை யிரற்றும்
மடலம் பெண்ணை யவனுடை நாட்டே - ஐங்: 114: 3-4

பனை மரங்கள் நெய்தல் நிலப்பகுதிகளில் செழித்து வளரும் மரமாகும். இந்த மரங்களில் நிறைந்துள்ள மரங்களில் நாரைகள் அடைக்கலம் புகுந்து ஆரவாரிக்கும் மேலும்

புன்னையங் கானற் புறந்தை முன்றுறை
வம்ப நாரை யினனொலித் தன்ன -அகம் 100

நாரை பனைமரத்திலும், புன்னை மரத்திலும், ஞாழல் மரத்திலும் கடற்கரைகளிலும் மருதநிலத்து காணப்படும் அதாவது நீர்வளமும், நீர் நிலைகளும் எந்தெந்த நிலங்களில் மிகுதியாக உள்ளதோ, அந்த நிலங்களில் மீன், இறால் போன்றவை மிகுதியாக இருக்கும் என்பதால் அவற்றைப் பெற நாரைகள் இவ்வாறு இடம் விட்டு இடம் சென்று வாழ்ந்துள்ளன. இன்றளவும் இத்தகைய வாழ்க்கை முறையான ‘வலசை போகுதல்” பறவைகளிடம் காணப்படுகின்றது. பருவநிலை மாற்றங்களும் இவற்றிற்கான காரணங்களுள் ஒன்றாகும்.

நெய்த லிருங்கழி நெய்த னீக்கி
மீனுண் குருகிளங் கான வல்குங் - ஐங் : 184: 1-2

மீனைத் தனக்கு உணவாகக் கொள்ளும் கொக்கானது நெய்தல் நிலத்தில் உள்ள கரிய கழியின்கண் காணப்படும் நெய்தல் மலரிடையே தங்காமல் அங்குள்ள கழிகளின் (குளங்களின்) கரைகளிலேச் சென்றுத் தங்கின. இப்பாடலில் வந்துள்ள குருகு என்ற சொல் மீனுண்ணும் குருகு ஆகும். இது கொக்கு என்றும் அழைக்கப்படுகின்றது. மீன்கொத்திப் பறவை என்றுக் கூறுவது பொருத்தமான பெயராகாது. இதைக் குளக்கொக்கு, என்றும் நுள்ளைமடையான் என்றும் குருட்டுக் கொக்கு என்றும் அழைப்பர். கொக்குப் போல வெள்ளை நிறமுடையது என்று ஒப்பிடுவதுண்டு. ஆனால் கொக்கு முற்றிலும் நிறமுடையதன்று. வெள்ளைக் கொக்கு என்று அழைக்கப்படும் வெண்குருகுகளுக்கு மட்டுமே உடல் முழுவதும் தூய வெண்மை நிறம் காணப்படும். கொக்கிற்கு

அதன் உடலின் அடிப்பாகந்தான் தூய வெண்மை நிறமாக இருக்கும். இதனால் இவை பறக்கும் போது வெண்மையாகத் தெரிவதால் கொக்கை வெள்ளை நிறமுடையதென்று கருதுகின்றனர்.

மீன்உண் கொக்கின் தூவி அன்ன
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன் - புறம் 277

என்று புறநானூற்றில் முதியவரின் நரைத்த முடியைப் போலக் கொக்கு இருந்ததாகக் கூறப்பட்டிருப்பதை அறியலாம்.

மாரிச் சுதையின் ஈர்ம்புறத் தன்ன
கூரற் கொக்கின் குறும்பறைச் சேவல் - அகம்: 346

மழைக்காலத்தில் சுண்ணாம்பு பூசிய ஈரமான சுவர் பழுப்பு நிறமாக மாறிக் காணப்படுவது போல் கொக்கின் நிறம் இருந்ததாக அகநானூற்றுப்பாடல் கூறுகின்றது. மழையின் ஈரத்தால் சுண்ணாம்புச் சுவரில் நிறம் மாறுவது இயற்கையான நிகழ்வாகும். அப்படி நிறம் மாறின சுண்ணாம்புச்சுவர் போல குளக்கொக்கின் உடல்நிறம் இருந்ததாகக் கூறியது அழகிய உவமையாகும்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து - திருக்: 490

கொக்கு மீனை வேட்டையாடும் முறையைக் குறள் பாட்டு மிகத் தெளிவாக அழகாக கூறுகின்றது. மீன் வரும் திசைப்பார்த்து கொக்கானது உயிரற்றது போல அசையாமல் நிற்கும். பின் நீரில் அவ்வழியே மீன் வருவதைக் கண்டு தன் கூறிய அலகால் கொத்தி உண்ணும் அத்தகைய சிறந்த அறிவால் வேட்டையாடுவது கொக்கின் இயல்பு என குறள் விளக்குகின்றது.

குருகு

சங்க இலக்கியங்களில் குருகு என்ற ஒரு பறவையைப் பற்றிப் பல செய்திகள் கூறப்படுகின்றன. குருகு என்ற பெயர் ஒரு குறிப்பிட்ட பறவை வகையைக் குறித்தும் பொதுவான சிலப்பறவைகளின் தொகுதியையும் குறிப்பதாக உள்ளது. குருகு என்ற பெயர் 'கோப்படி நாரை" 'வண்டாளம்" என்று அழைக்கப்படும் ஒரே பறவை இனத்தைக் குறிக்கும் என்பதை நிகண்டுகள் வழியாக அறியலாம். வண்டானத்தை தற்காலத்தில் கூழைக்கடா என்று அழைக்கின்றனர். குருகு என்ற பறவைக்கு வழங்கப்பட்ட பெயர்கள் எல்லாம் ஏதாவது ஒரு குறிப்பிட்ட காரணத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளன. கொல்லன் உலைமூக்குப் போல இப்பறவையின் மூக்கு நீண்டு இருந்ததால் குருகு என்ற பெயர் இப்பறவைக்கு வந்துள்ளது. ' பறாஅக் குருகி னுயிர்த்தலு முயிர்த்தனன் - கலி : 54" கலித்தொகைப் பாடலானது பறவாத குருகு என்று கொல்லன் உலைமூக்கு அழைக்கப்படுவதால் குருகு என்ற பறவையையும் கொல்லன் உலைமூக்கையும் ஒப்பிட்டுப் பார்த்துள்ளனர் என்பது புலப்படுகின்றது.

**புதல்மிசை நுடங்கும் வேழ வெண்பூ**
**விசும்பாடு குருகிற் றோன்று மூரன் - ஐங் : 17**

வேழத்தின் இழிந்த வெண்ணிறமுடைய நறுமணமற்ற பூ தெளிந்த வானத்தில் பறக்கும் குருகு போன்று காணப்பட்டது என்று கூறுகின்றது. குருகுகள் உடல் பருமனான பறவையாக இருப்பினும் ஆகாயத்தின் மிக உயர்ந்த பகுதிகளில் வட்டமடித்துப் பறக்கக்கூடிய

இயல்புடையவை. மேலும் குருகுகள் கூட்டமாகக் காணப்படும். இவை கூட்டமாக மீன்களைப் பிடித்து உண்ட பின்பு இறக்கைகளை விரித்துக் கோதிக் கொண்டு இருக்கும். மணல் மேட்டில் அல்லது பாறைகளில் ஏறி இறகுகளைக் கோதி உலர்த்திக் கொண்டிருக்கும் என்பதை பின்வரும் குறுந்தொகைப் பாடல் விளக்குகின்றது.

**வீழ்தாழ் தாழை யூழுறு கொழுமுகை**

**கான னண்ணிய சிறுகுடி முன்றிற் - குறுந் - 228**

பொதுவாக குருகுகள் கடற்கழிகளிலும் கயங்களிலும் காணப்பட்டதாக சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. கடற்கழிகளிலும் நன்னீர் குளங்களிலும் குருகுகள் மீன்பிடிக்கும் என்றும், 'குருகுடைத்துண்ட வெள்ளக்கட் டியாமை - ஐங் : 81 : 1" இப்பாடலில் குருகு ஆமையை உடைத்து தனக்கு உணவாகக் கொண்டு உண்ணப்பட்டுள்ள செய்தியும் குறிப்பிடத்தக்கதாகும். ஆமையின் ஓடு மிகவும் வலிமையானதாக இருக்கும் போது குருகு தன் அலகினால் கொத்தி அதன் தசையை உண்டது என்று கூறுவதால் குருகின் அழகு ஆமையின் ஓட்டை விட மிக வலிமையானது என்று இங்கு பொருள் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

அன்றில்

அன்றில் என்றப் பறவை நெய்தல் நிலத்து பறவையாகும். இதனால் இப்பறவை நீர்நிலைகளைச் சார்ந்து வாழும் பறவையாகத் தெரிகின்றது. அன்றில் பறவைகள் பனை மரத்தில் வாழ்ந்ததாக சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. எனவே பனைமரங்கள் கடற்கரைகளிலும், கடற்கரைச்சிற்றூர்களில் உள்ள ஒரு சில இடங்களில் காணப்பட்டுள்ளன.

பெண்ணை ஓங்கிய வெண்மணற் படப்பை
அன்றில் அகவும் ஆங்கண்
சிறுகுரல் நெய்தலெம் பெருங்கழி நாட்டே - அகம்: 120

ஓங்கி உயர்ந்த பனை மரங்களின் மடல்களில் மறைவாக அன்றில் கூடுகட்டி வாழும். இப்பறவை கடற்கரைக் கழி ஓரங்களிலும், ஊர்களிலும், மக்கள் இடையூறு இல்லாத ஊர் மரங்களிலும் கூடுகட்டி வாழ்பவை என்பதிலிருந்து ஊர்பகுதிகள் கூட இயற்கையைச் சார்ந்து இருந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது.

ஒன்றில் காலை அன்றில் போலப்
புலம்புகொண்டு உறையும் புன்கண் வாழ்க்கை - நற்றி: 124

அன்றில் தன் துணையானது இறந்துவிட்டால் துக்கம் தாங்காமல் தானும் இறந்துவிடும் என்று இப்பாடல் குறிப்பிடுகின்றது.

யார்கொ லளியர் தாமே வார்சிறைக்
குறுங்கான் மகன்றி லன்ன
உடன்புணர் கொள்கைக் காதலோரே - ஐங் : 381: 3-5

ஐங்குநுறூற்றில் நீண்ட சிறகுகளையும் குறுகிய கால்களையும் உடைய மகன்றிற் என்ற பறவை சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. மகன்றிற் பறவையானது தன் துணையுடன் காதல் வாழ்க்கையை மேற்கொண்டது முதல் ஒரு சிறு பொழுதும் பிரியாமல் சேர்ந்தே இரைதேர்ந்து ஒன்றி உலாவி உறங்கி பின்பு ஒன்று உயிர் பிரிந்தாலும் அதனுடன் சேர்ந்து மற்றதும் உயிர்விடும் இயல்புடையது.

பெருநாரையும் பெருங்குருகும்

நீர்வாழ் பறவைகளான நாரையினங்கள் பற்றியும் பெருங்குருகு இனங்களைப் பற்றியும் சங்க இலக்கியப் படைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இறையனார் அகப்பொருள் உரையில் உள்ள பாயிரத்தில், முச்சங்க வரலாறு கூறுமிடத்தில் தலைச்சங்கப் புலவர்கள் பாடியதாகப் பரிபாடலும். முதுநாரை, முதுகுருகு களரிவிரையும் கூறப்பட்டுள்ளன. முதுநாரை, முதுகுருகு என்ற பறவைகளின் பெயரால் நூல்கள் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

……………… பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறை தபு முதுகுருகு கிருக்குந்
துறைகெழு தொண்டி யன்னவிவ ணலனே - ஐங் : 180: 1-4

பெருங்குருகு

பெருங்குருகு என்ற இப்பெயருடையப் பறவை பெருநாரையுடன் கூறப்பட்டுள்ளது. இந்தப் பறவையை சங்க நூல்களில் யானயங்குருகு என்று அழைத்தனர். பெருங்குருகு என்ற பெயர் சங்க நூல்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் பெரிதாகக் காணப்படவில்லை. ஆனால் தெலுங்கு மொழியில் பெருங்குருகு என்ற பெயர் காணப்படுவதால் அது அந்த நாட்டில் வாழும் பறவைகளைக் குறித்தது. பெருங்குருகு, பெருநாரையை விட உயரத்தில் குறைந்தது. தலையில் இறகுமயிர் இல்லாமல் அழகற்று இருக்கும். இதனால் அழகற்று காணப்படும் இந்தப் பறவை மனிதர் நடமாட்டம் இல்லாத சதுப்பு நிலங்களிலும் காடுகளிலும் உள்ள நீர் நிலைகளிலும் வாழ்பவை. தமிழ்நாட்டில் இப்பறவை அரிதாகிவிட்டது. இன்று ஆந்திர நாட்டிலும், கேரள நாட்டிலும் காணப்படுகின்றன. குருகு குட்டையான வயிறு பெருத்த பறவையாகும். குருகை விட மிகவும் உயரமான பறவையைப் பெருங்குருகு என்றழைத்துள்ளனர். நாரைகளில் மிகப்பெரியதும் உயரமானதும் ஆனதை பெருநாரை என்றும் குருகுகளில் மிகப்பெரியதை உயரமானதைப் பெருங்குருகு என்றும் அழைத்தனர். சங்க காலத்திலேயே பெருங்குருகு தமிழ்நாட்டில் நூல்களில் செய்திகள் அதிகமாக இல்லை. எனவே இன்றும் சேரநாடான கேரளத்திலும் ஆந்திரத்திலும் இப்பறவைகள் காணப்படுகின்றன.

அன்னம்

அன்னம் என்ற பறவை தூய வெள்ளை நிறமுடையது. நீரிலிருந்து பாலைப் பிரிக்கும் தன்மையுடையது என்று பிற்கால நூல்கள் கூறும் செய்திகள் வடமொழியிலிருந்து வந்த செய்திகளாகும். நீரிலிருந்து பாலைப் பிரித்தெடுக்கும் செய்தி சங்க நூல்களில் இல்லை. இந்தச் செய்தியை அறிவியற்படி ஆராய்ந்து நீரிலிருந்து பாலை மட்டுமே பிரித்து பருகும் பறவை இயற்கையில் இல்லை.

நெடுங்கழி துழைஇய குறுங்கால் அன்னம்
தடவுநிலைப் புன்னைத் தாதணி பெருந்துறை - அகம் : 320

தமிழ்நாட்டுக் கடற்கரைக் கழிகளில் துழாவியதாகக் கூறப்படும் அன்னம் 'கழியன்" என்று அழைக்கப்படும், தாதா இனப்பறவைகளாகும். கழிகளில் மேய்வதால் இந்தப் பறவையை மக்கள் கழியன் என்று அழைத்தனர் மார்கழியன், செங்கழியன் இனப்பறவைகள் தமிழ்நாட்டின் பல

இடங்களில் இன்றும் மக்கள் அழைக்கின்றனர். இந்த 'தாரா" என்றப் பறவை சங்க காலத்தில் அன்னமென்று அழைக்கப்பட்டது.

துதிக்கா லன்னந் துணைசெத்து மிதிக்கும்

தண்கடல் வளையினு மிலங்கு மிவள் - ஐங் : 106 : 2 - 3

அன்னத்தின் கால்கள் குறியன என்று சங்கநூல்கள் குறிப்பிடுகின்றன. உடலை விட அன்னத்தின் கால்கள் மிகவும் குறுகிய அமைப்புடையவையாகும். இதன் கால்விரல்களின் இடையே மடிப்புடைய சவ்வுத் தோற்றம் உள்ளது என்பதால் 'துதிக்கால்" என்று ஐங்குறுநூறு கூறுகின்றது. அன்னப்பறவைகள் இமயமலைக்கும் தமிழ்நாட்டிலிருந்து இமயமலையைக் கடந்து சைபீரியா போன்ற நாடுகளுக்குச் செல்வதுண்டு. இவை இமயமலையில் உள்ள காசுமீர் பள்ளத்தாக்கில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றது. இதனை பின்வரும் நற்றிணைப் பாடல் சுட்டுகின்றது.

நிலந்தாழ் மருங்கின் தெண்கடல் மேய்ந்த

விலங்குமென் தூவிச் செங்கால் அன்னம்

பொன்படு நெடுங்கோட் டிமயத்து உச்சி - நற்றி: 356

கம்புட் கோழி

வெண்ணுதற் கம்பு ளரிக்குரற் பேடை

தண்ணறும் பழனத்துக் கிடையோ டாலு - ஐங் : 85: 1-2

கம்பங்கோழி வெள்ளை நிறமுடைய நெற்றியையும், அரித்தெழும் ஓசையையும் உடைய பெட்டைக்கோழியனது குளிர்ந்த பழனத்தில் தன் சேவலின்யும் தனது இனத்தோடு இருந்து மகிழ்ந்து ஆரவாரிக்கின்ற நிலையை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

புழனக் கம்புள் பயிர்ப்பெடை யகவுங்

கழனி யூரநின் மொழிவ லென்றுந் - ஐங் : 60: 1-2

மருதநிலத்து ஊர் பொதுவிடத்தில் மேய்த்துக் கொண்டிருந்த சம்பங்கோழிச்சேவல் அவ்வூர் பொதுவிடத்தில் உள்ள வரப்புடைய வயலில் மேய்ந்துக் கொண்டே, தன்னைக் காதலித்து அழைத்தது. கம்புள் நீர்நிறைந்த கழனிகளிலும், குளங்களிலும் மற்றும் நீர்த்துறைகளிலும் காணப்படுவதாகும். இவை நீர்வளம் நிறைந்துள்ளதைக் காலங்களில் மருதநில வயல் வெளிகளிலும் வாழும் இயல்புடைய பறவையாகும். அங்குள்ள நெற்கதிர்களைத் தனக்குரிய உணவாகக் கொள்ளும்.

கரைநின் நாலு மொருமயி றனக்குக்

கம்புட் சேவற் கனைகுரன் முழவாக் - மணிமே : 4: 11-12

கம்புட்சேவலின் குரல் 'கனை"த்தல் போன்று இருக்கும் என மணிமேகலைக் குறிப்பிடுகின்றது. இந்தப் பறவை பெரும்பாலும் புற்கள் நிறைந்த புதரில் மறைந்திருப்பதால் எளிதில் காண முடியாது. இருப்பினும் இதன் குரலினால் இது இருக்கும் இடத்தை எளிதில் கண்டுகொள்ள முடிகின்றது.

நீலக்கோழி

நீல நிறமுடைய நீர்க்கோழி நம் நாட்டில் காணப்படுகின்றது. இதன் உடல் நீலநிறமாகவும் கால்கள் நீண்டு சிவந்து நிறத்துடனும் காணப்படுகின்றன. நீலக்கோழி என்னும் கானங்கோழி

என்றும் தமிழில் அழைக்கின்றனர். பின்வரும் ஐங்குறுநூற்றுப் பாடலில் நீலக்கோழி என்று இப்பறவையின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதை அறியலாம்.

நீருறை கோழி நீலச் சேவல்

கூருகிர்ப் பேடை வயாஅ மூர - ஐங் : 51: 1-2

நீர்நிலைகளில் வாழும் சம்பங்கோழியாகிய நீல நிறமுடைய சேவலை நினைத்து கடுஞ்சூழலால் வந்த துன்பம் நீங்குவதற்காக பேடை நிலச்சேவலை விரும்பி அழைத்தது. இதன் சங்ககாலப் பெயர் நீலக்கோழி என்பதாகும்.

சிறுவெண் காக்கை

சிறுவெண் காக்கையைப் பற்றிய பத்துப்பாடல்கள் ஐங்குநுறூற்றில் இடம் பெற்றுள்ளன. சிறுவெண்காக்கை மக்கள் வாழ்ந்த கடற்கரை நீர்நிலைகளில் பரவலாகக் காணப்பட்டுள்ளன. ஆகவே இவற்றைப் பற்றி நன்கு அறிந்த புலவர்கள் பல பாடல்களில் சிறுவெண் காக்கைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை

யறுகழிச் சிறுமீ னார மாந்தும் - ஐங் : 165: 1- 2

சிரல்

சங்ககால மக்கள் மீன் கொத்திக் குருவியைச் ‘சிரல்” என்ற பெயரால் அழைத்துள்ளனர். நீர் ஓடும் பரப்பை நெடுநேரம் நோக்கியிருந்து மீன் வரும் நேரம் பார்த்து நீருக்குள் துடுமெனப் பாய்ந்து நொடிப்பொழுதில் வெள்ளி போன்ற மீனை தன் செம்பொன் போன்ற அலகினால் கௌவிச் செல்லும் இதனையே இக்காலத்தில் மீன்கொத்திப் பறவை என்று அழைக்கின்றனர்.

படுமழை பொழிந்த பாறை மருங்கில்

சிரல்வா யுற்ற தளவிற் பரலவற் - நற்றி: 61

என்று சிரலின் வாய் முல்லை அரும்பால் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

போகில்

போகில் என்ற பறவை பற்றி சங்க இலக்கியங்களில் மூன்று பாடல்களில் செய்திகள் கூறப்பட்டுள்ளன. போகில் என்ற சொல்லுக்கு ‘பாவை” என்று ஐங்குநூற்று உரையாசிரியர் பொருள் கொண்டனர் என்பதை பின்வரும் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

புதுக்கலத் தன்ன கனிய வாலம்

போகிறனைத் தடுக்கும் வேனில ருஞ்சுரம் - ஐங் : 303: 1 - 2

வானம்பாடி

வானம்பாடி வறங்கனைந் தானா

தழி துளி தலைஇய புறவிற் காண்வர - ஐங் : 418:1-2

மழைத் துளியையே உணவாக உட்கொண்டு உயிர் வாழ்கின்ற ஒரு பறவை வானம்பாடி ஆகும். இப்பறவை மேகம் துளிர்க்கும் நீர்த்துளியை நிலத்தில் விழுவதற்கு முன் இடைநின்று தன் வாயிலேற்று உண்ணும் என்பர் மேலும் இது வானத்திலே பாடித்திரியும் இயல்புடையதாகும்.

யானெவன் செய்கோ தோழி பொறிவரி

வானம் வாழ்த்தி பாடவும் அருளாது

மரம்புல் லென்ற முரம்புயர் நனந்தலை - அகம் - 67

காக்கை, மயில், கிளி

நம் தமிழ்நாட்டில் இருவகைக் காக்கைகள் காணப்படுகின்றன. அவை ஊர்க்காக்கை என்னும் அண்டங்காக்கை என்றும் அழைக்கப்படுகின்றது. இதேபோன்று மயில் வகைகளும், கிளி இனங்களும் காணப்பட்டதை பின்வரும் சங்க பாடல் எடுத்துரைக்கின்றன.

'கானக் காக்கைக் கலிச்சிற கேய்க்கும்

மயிலைக் கண்ணிப் பெருந்தோட் குறுமகள்" - புறம்: 342

என்றும்,

'மென்றினை நுவணை யுண்டு தட்டையின்

ஐவனச் சிறுகிளி கடியுநாட" - ஐங் : 285: 2, 2 - 3

'பழன மஞ்ஞை உகுந்த பீலி

கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்" - புறம் 13:11 - 12

கூறப்பட்டுள்ளன.

முடிவுரை:

சங்க இலக்கியங்களில் பறவை என்னும் பெயர் பறக்கும் அனைத்திற்கும் கூறப்பட்டிருப்பினும் பெரும்பாலும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவையினத்திற்கே இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. விலங்கினத்திற்கும் பறவை இனத்திற்கும் உள்ள வேற்றுமைகளில் முக்கியமானது அவற்றின் இனப்பெருக்க முறையில் காணப்படும் மாற்றங்கள் ஆகும். விலங்குகள் குட்டிப்போட்டுப் பால் கொடுக்கின்றன. பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. சங்க இலக்கியங்களில் விலங்குகளை விடப் பறவைகளைப் பற்றி பல இயற்கைச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. ஐந்திணைப் பாகுபாட்டில் கூறப்பட்டுள்ள பறவைகள் இயற்கையில் காணப்படும் நிலப்பாகுபாடு சூழ்நிலை. சுற்றுப்புரம் ஆகியவற்றை சார்ந்து வாழும் முறைகள் கூறப்பட்டுள்ளன. நெய்தலில் மட்டும் காணப்படும் கடற்காக்கை மருதம், குறிஞ்சி, பாலை காணப்படவில்லை. ஆனால் நீர்ப்பறவைகள் மருதத்திணையிலும், நெய்தற்திணையிலும் காணப்படுகின்றன இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மருதநிலத்திலும் நெய்தல் நிலத்திலும் காணப்படுகின்ற சில நீர்ப்பறவைகள் இருதிணைகளிலும் கூறப்பட்டிருப்பது இயற்கையோடு ஒத்த நிகழ்வாகக் காணப்படுகின்றது. இவ்வாறு குறிஞ்சி நிலத்தில் காணப்படும் பறவைகள் வேறு நிலங்களில் காணப்படவில்லை எனவே பறவைகள் தங்களுக்கு ஏற்ற சூழலைத் தேர்ந்தெடுத்து வாழ்ந்துள்ளன என்பதை இக்கட்டுரையின் வழியாக அறிய முடிகின்றது.

சான்றெண் விளக்கம் :

1. ஏழாம் வகுப்பு தமிழ் செய்யுள் - பக்கம் எண். 46, 47
2. சோமசுந்தரனார் பொ.வே., குறுந்தொகை - பா.349
3. சோமசுந்தரனார் பொ.வே., ஐங்குறுநூறு - பா.70
4. நாராயணசாமி. ஆ, நற்றிணை - பா :130
5. மேலது பா: 127
6. சோமசுந்தரனார் பொ.வே., ஐங்குறுநூறு - பா:114

7. சோமசுந்தரனார் பொ.வே., அகநானூறு - பா:100
8. சோமசுந்தரனார் பொ.வே., ஐங்குறுநூறு - பா:184
9. மாணிக்கவாசம்,ஞா, புறநானூறு - பா:277
10. சோமசுந்தரனார் பொ.வே., அகநானூறு - பா.346
11. கௌமாரீஸ்வரி, திருக்குறள் - பா.490
12. விசுவநாதன் உரை, கலித்தொகை - பா.54
13. சோமசுந்தரனார் பொ.வே., ஐங்குறுநூறு - பா.17
14. சோமசுந்தரனார் பொ.வே.,குறுந்தொகை - பா.228
15. சோமசுந்தரனார் பொ.வே., ஐங்குறுநூறு - பா.81
16. சோமசுந்தரனார் பொ.வே., அகநானூறு - 120
17. நாராயணசாமி. ஆ, நற்றிணை - 124
18. சோமசுந்தரனார் பொ.வே., ஐங்குறுநூறு - 381
19. சோமசுந்தரனார் பொ.வே., அகநானூறு - 320
20. சோமசுந்தரனார் பொ.வே., ஐங்குறுநூறு - 106
21. நாராயணசாமி. ஆ, நற்றிணை - 356
22. சோமசுந்தரனார் பொ.வே., ஐங்குறுநூறு - 85
23. சோமசுந்தரனார் பொ.வே., ஐங்குறுநூறு - 60
24. வேங்கடசாமி நாட்டார் ந.மு., மணிமேகலை - 4 :11-12
25. சோமசுந்தரனார் பொ.வே.ஐங்குறுநூறு - 51
26. சோமசுந்தரனார் பொ.வே.ஐங்குறுநூறு - 165
27. மாணிக்கவாசம்,ஞா, புறநானூறு - 13
28. சோமசுந்தரனார் பொ.வே.ஐங்குறுநூறு - 285
29. சோமசுந்தரனார் பொ.வே., அகநானூறு - 67
30. மாணிக்கவாசம்,ஞா, புறநானூறு - 342
31. சோமசுந்தரனார் பொ.வே.ஐங்குறுநூறு - 492
32. சோமசுந்தரனார் பொ.வே., குறுந்தொகை - 389

**துணைநூல் பட்டியல் :**

1. ஏழாம் வகுப்பு தமிழ் செய்யுள் - தமிழ்நாடு பாடநூல் கழகம் - 2007 பக்கம் எண். 46, 47
2. சோமசுந்தரனார் பொ.வே. ஐங்குறுநூறு - கழக வெளியீடு, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18
3. கௌமாரீஸ்வரி (பதி) - திருக்குறள் பரிமேலழகர் உரை சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை - 14
4. சோமசுந்தரனார் பொ.வே. குறுந்தொகை - கழக வெளியீடு, திருநெல்வேலிi சவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18

5. நாராயணசாமி. ஆ சோமசுந்தரனார் பொ.வே. நற்றிணை - கழக வெளியீடு, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18

6. சோமசுந்தரனார் பொ.வே. அகநானூறு, மணிமிடைபவளம் - கழக வெளியீடு, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18

7. மாணிக்கவாசகம். ஞா - புறநானூறு, உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை

8. விசுவநாதன் உரை - கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 98

9. வேங்கடசாமி நாட்டார் ந.மு. - மணிமேகலை, கழகவெளியீடு, சென்னை

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 67.முகிலை இராசபாண்டியனின் இரண்டு புதினங்களில் சமூக அரசியல்

**து.ஷீஜா.இ ,**
பதிவு எண் : 241130601015, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுமையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்-629802,
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப்பட்டி,
திருநெல்வேலி தமிழ்நாடு – 627012
**முனைவர் சு. இளமாறன்.**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுமையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
நெய்யூர் - 629802. மனோன்மணியம் சுந்தரனார் பல்கழைக்கழகம் திருநெல்வேலி – 627012
https://orcid.crg/0002-0002-7559-5980

**ஆய்வுச்சுருக்கம்**

முகிலை இராஜபாண்டியனின் இரண்டு புதினங்களும் அரசியல் மற்றும் மக்களின் வாழ்க்கையில் நடைப்பெற்றப் போராட்டங்களையும் தென்தமிழகத்தின் வரலாற்றுப் போராட்டங்களையும், சமூக அரசியல் உரிமைகளையும் பேசுகின்றன. இவையே இவரது புதினங்களில் வெளிப்படும் அரசியல் மற்றும் சமூகப் பின்புலங்களாக அமைகின்றன. இக்கதைகள் அந்தந்தப் பகுதி மக்களின் வாழ்வியலோடு இணைந்துள்ளன. 19- ஆம் நூற்றாண்டுகளில் நாஞ்சில் நாட்டு மக்களை ஆட்சி செய்த ஒரு மோசமான நாடு திருவிதாங்கூர். இக்காலகட்டத்தில் ஆரல்வாய் மொழி வழியாக உள்ளே வந்து கன்னியாகுமரி அருகில் மயிலாடியில் தங்கள் சீர்த்திருத்தப்பணியைத் தொடங்கினர் கிறிஸ்தவர்கள். இது தான் புதினத்தின் மைக்கரு. நாயர்களஇ; நாடார்கள்இ வேளாளர்கள்இ மன்னர்கள்; அதிகாரிகள்இ இந்துக்கள்இ கிறிஸ்தவர்கள்இ மதமே இல்லாதவர்கள் என்று பல தரப்பட்ட மக்களால் பின்னப்பட்டது.

**முன்னுரை:**

அலைகளின் காலம் புதினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட சமூகப் பெண்களின் அவலங்களை சொல்லும் புதினம் ஆகும். தென்திருவிதாங்கூர் பகுதியிலிருந்து தமிழ் பேசும் பெண்களுக்கு ஏற்பட்ட உரிமை மறுப்புப்போரட்டம் நடத்தப்பட்டது. அது தன் தோள் சேலைப் போரட்டம் ஆகும். அருகருகே நான்கு வீடுகள் தென் திருவிதாங்கூரில் நடைப்பெற்ற எல்லைப் போராட்டத்தை அரசியல் பின்னணியாகக் கொண்டு அமைகிறது.

குமரி மாவட்டம் என்று அழைக்கப்படும் கன்னியாகுமரி மாவட்டம் முந்தைய திருவிதாங்கூர் மாநிலத்தின் ஒரு பகுதியாகவும் பின்னர் திருவிதாங்கூர் -கொச்சி மாநிலத்தின் ஒரு பகுதியாகவும் 1956-ஆம் ஆண்டு வரை இருந்து வந்தது. 1956-ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் உருவானதால் தோவாளைஇ அகஸ்தீஸ்வரம்இ கல்குளம்இ விளவங்கோடு ஆகிய நான்கு தாலுகாக்கள் சேர்ந்து கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒன்றாகியது. இதுவே கன்னியாகுமரி மாவட்டம் உருவாக காரணம் ஆகும். நவம்பர் மாதம் முதல் நாள் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டதால் அன்று பிறந்ததுதான் கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம்இ

தோவாளைஇ கல்குளம்இ விளவங்கோடு ஆகிய நான்கு தாலுகாக்களை கொண்டது கன்னியாகுமரி மாவட்டம். இப்பகுதிகள் பற்பல முடியாட்சியின் கீழிருந்து வந்தபோதிலும் அது அரசியல்இ சமுதாயம் பொருளாதாரம் மதம்இ பண்பாடுஇ மொழி ஆகிய நிலைகளில் தனது தனித்தன்மையை எல்லாகாலகட்டத்திலும் வெளிப்படுத்தி வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**வரலாற்று மற்றும் அரசியல் உரிமைப் போராட்டம்**

19- ஆம் நூற்றாண்;டில் நடத்திய போராட்டம் தோள்சீலைப் போராட்டம். அந்த வரலாற்று நிகழ்வினை அலைகளின்காலம் புதினம் எடுத்துரைக்கிறது. மேல் நாட்டுத் தொடர்பே மனிதனின் சமத்துவத்தையும் மேன்மையையும் நாம் உணர்ந்துஇ எல்லோரும் வாழப் பிறந்தவர்கள் என்ற கோட்பாட்டைச் செயல்படுத்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்திருவிதாங்கூர்ப் பகுதியில் உயர் சாதியினரால் அப்பகுதி தாழ்த்தப்பட்ட பெண்கள் மார்பை மறைக்க ஆடை அணிய தடை செய்யப்பட்ட காலகட்டத்தில் மக்கள்; வாழ்ந்து வந்தனர். கோழிகளைச் சந்தையில் விற்றுக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வாழ்ந்து வருபவள் எழுபது வயதான பத்திரகாளி இவள் பதநீர் இறக்கும் தொழில் செய்த கணவன் மாசானத்தைத் தன் இளமை நாட்களில் பறி கொடுத்து விட்டாள். விதவையானவள் கணவனின் இறப்பிற்குப் பின் பனங்காட்டில் தனியே குடிசை போட்டு வாழ்ந்து வருவாள். கிறித்தவ மதம் தழுவிய ஜான் முத்தையாஇ மரிய பொன்னாயி தம்பதியர் இவளுடைய குடிசைக்கு அருகில் வாழ்ந்து வருபவர்கள். சான்றோர் குலப் பெண்கள் மேலாடை அணியக் கூடாது. என்ற கட்டுப்பாட்டை மீறி பெண்கள் கிறித்தவ பெண்ணான மரிய பொன்னாயிஇ பாதிரியார் அளித்த தைரியத்தில் தோள்சேலையும் ரவிக்கையும் அணிந்து பத்திரகாளி கிழவியுடன் இரணியல் சந்தைக்குச் சென்றாள். சந்தையில் பாஸ்கரன் நாயர் மாடன் ஐயாவின் தம்பி சிதம்பரம் ஆகியோரால் ஏவி விடப்பட்ட ஆட்கள் மரிய பொன்னாயியை மானபங்கப்படுத்தியும்இ தடுக்க வந்த பத்திரகாளி கிழவியைக்கல்லில் தள்ளிக் கொன்றும் கலவரம் செய்தனர். இதனால் வெகுண்ட நாடார்களும் கிறித்தவர்களும் சேர்ந்து கலவரக்காரர்களைத் தாக்கஇ இச்செயல் நெய்யூர் இரணியல் பகுதி முழுவதும் பரவியது நாடார் கிறிஸ்தவர்களின் போராட்டம் இரணியல் சந்தைக் கலவரச் செய்தி அறிந்த நாயர்கள் வழியில் கண்ட நாடார் பெண்களையும்இ கிறித்தவப் பெண்களையும் சேலையை உரிந்து மானபங்கப்படுத்தினர். மண்டைக்காட்டு மிஷனரியாக வந்தவர் மீட்பாதிரியார் மீட்பாதிரியாரின் தூண்டுதலினால் கிறித்தவ மதம் தழுவிய பிற்படுத்தப்பட்ட மக்கள் நாயர்குல ஆண்களையும் பெண்களையும் போல் ஆடை அணியத் தொடங்கினர் பெண்கள் ரவிக்கையும் அதன் மேல் தோள்சேலை அணியவும் ஆண்கள் கணுக்கால் வரை வேட்டி கட்டிஇ தோளில் துண்டு போட்டுக் கொள்ளவும் தொடங்கினர். அதன் பிறகு இரணியல் சந்தைக் கலவரம் மீட்பாதிரியார் கொலை முயற்சி ஆகியவற்்றின் தொடர்பாக நிறையபேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர் அவர்களில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட முத்தையாஇ பொன்னாயி ஆகியோரும் இருந்தனர். ஆனால் கலவரத்திற்குக் காரணமான பாஸ்கரன் நாயர்இ மாடன் ஐயாஇ சிதம்பரம் ஆகியோர் கைது செய்யப்படவில்லை. கலவரப் பகுதிகளைப் பார்வையிட்ட திவான் வெங்கிட்;டராவ் வழக்கை விசாரித்தார். நீதிமன்றத்திற்குச் சாட்சி சொல்லச் சென்ற பெண்களுக்கு நீதி இல்லை சேலையுடன் கோட்டையினுள் அனுமதிக்கப்படவில்லை

வழக்கை விசாரித்த திவான் வெங்;கிட்டராவ் நீதி வழங்காமல் சிலருக்கு மட்டும் கொலை முயற்சியில் சம்பந்தமானச் சிலருக்குத் தண்டனை வழங்கினார்கள். பத்திரகாளி கிழவி கொலை சம்பந்தமாக மேல் விசாரணைக்கு உத்தரவிட்டாh.; அதோடு கிறித்தவ மதம் தழுவிய சான்றோர் குலப்பெண்கள் மேல்சாதிப் பெண்களைப் போல் ரவிக்கை அணியாமல் மார்பை மறைக்க மட்டும் ஆடை அணிவதே நியாயம் என்றும்;;; இது பற்றி விரைவில் மகாராணி பார்வதிபாயின் அறிவிப்பு வரும் என்றும் தமது தீர்ப்பில் கூறினார். அதன்படி 23-05-1823 ஆம் ஆண்டு மகாராணி பார்வதிபாய் வெளியிட்ட அறிவிப்புஇ சான்றோர் குலப்பெண்களுக்கு எத்தகைய பயனையும் கொடுக்கவில்லை என்பதை மீட்பாதிரியார் உணர்ந்தார்.

**நடவடிக்கை**

நெய்யூர் பகுதியில் சமயப்பணி செய்து வந்த மீட்பாதிரியார் 1853 ஆம் ஆண்டு ஓய்வு பெற அங்கு காக்ஸ் பாதிரியார் நியமிக்கப்பட்டர்இ காக்ஸ் பாதிரியார் பணிக்கு வந்ததும் கிறித்தவர்களுக்கும் நாடார்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகளையும் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை விசாரிக்க திவான்கிருஷ்ணராவ் முயற்சிப்பதையும் கடிதம் மூலம் ஆளுநர் ஹாரிஸ் பிரவுக்குத் தெரிவித்தார். காக்ஸ் பாதிரியாரின் கடிதம் கிடைக்கப்பெற்ற ஆளுநர் அக்கடிதத்தை ஜெனரல் கல்லனுக்கு அனுப்பி உடன் நடவடிக்கை எடுக்க ஆணையிட வேறு வழியின்றி திவான் கிருஷ்ணராவ் விசாரணையை ஒழுங்காக நடத்த ஏற்பாடு செய்தார். பத்மநாதபுரம் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணையில் மாடன்ஐயாஇ பாஸ்கரன் நாயர் இருவருக்கும் எதிராக சுடலை சாட்சி சொன்னான் பாஸ்கரன் நாயரின் தாசில்தார் பதவி பறிக்கப்பட்டது.

**அடிமை ஒழிப்புச்சட்டம்**

விக்டோரியா மகாராணியின் ஆட்சிகாலத்தில் அவரது உத்தரவை ஏற்று திருவிதாங்கூர் உத்திரம் திருநாள் மகாராஜா 1855- ஆம் ஆண்டு முதல் அமல்படுத்திய சட்டத்தின் படி அடிமைகள் என்ற ஒரு பிரிவு இல்லாமல் ஒழிக்கப்பட்டது.

**மன்னர் ஆட்சி**

மன்னர் ஆட்சி மன்னர் சார்பில் திவான் ஆள்கிறாh.; சில ஜாதி மக்கள் அடிமைகளைப் போல் நடத்தப்படுகிறார்கள். அவர்களில் அரசியல்இ சமுதாயக் கொடுமைகள் அரசாணைகள் மூலம் ஒவ்வொன்றாகக் களையப்பட்டன. அடிமைத்தனம்இ தேவதாசி முறை ஆகியன ஒழிக்கப்பட்டன. பெண்களுக்கு மேலாடை அணியும் உரிமை வழங்கப்பட்டன. பலசமூகக்கேடுகள் களையப்பட்டுச் சமத்துவ ஒளி வீசும் அமைதியான வியப்புக்குரிய சமுதாயப் புரட்சியால் குமரிமாவட்டம் விடுதலை பெற்றது.

**கன்னியாகுமரி மாவட்டம் உருவாகுதல்**

தோவாளைஇ விளவங்கோடுஇ கல்குளம்இ அகஸ்தீஸ்வரம்இ ஆகிய நான்கு தாலூகா சேர்ந்து தான் கன்னியாகுமரி மாவட்டம். 1956-ஆம் ஆண்டு நவம்பர் 1-ம் நாள் தான் புது மாவட்டமாக உருவானது. இது தமிழர்களின் நீண்ட நாள் கண்ட கனவு நிறைவேறியது என்றும் நாயர் கைகளிலிருந்து தமிழ் மக்கள் அனுபவித்து வந்த கொடுமைகள் நீங்கின என்று மகிழ்ச்சி கொண்டாடினர்.

**சமாதான முயற்சிகள்**

கலவரம் முடிந்த பிறகு இறுதியில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டன. அதில் குன்றக்குடி அடிகள்இ ஆயர் ஆரோக்கிய சாமி இருவரும் தான் சமாதான முயற்சியில் ஈடுபட்டனர். இதனால் இந்து மக்களிடம் பிரச்சனை ஏற்பட்டது. அதற்கு காரணம் குன்றக்குடி அடிகள்இ ஆரோக்கியசாமியுடன் சேர்ந்து இருப்பதுதான். முதலில் மண்டைக்காட்டில் போய் மீனவர்களுடன் பேச்சு வார்த்தை நடந்தது. அதற்கு அடுத்து ஹைந்தவ சேவா சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடந்தது. இதனால் குன்றக்குடி அடிகளை இந்து மக்கள் விரோதியாக பார்த்தனர். ஆனால் குன்றக்குடி அடிகளார் மக்களிடம் பலவாறாக பேசினப் பிறகு ஒரு முடிவுக்கு வந்த பிறகு அவர்கள் சமாதானமாக சென்றனர். ஒருவரோடு ஒருவர் பேசி உறவாடி மகிழ்ந்தனர். மீண்டும் ஒரு மலர்ச்சி அங்கு உருவானது.

கன்னியாகுமரி மாவட்ட பிரிவினையின் போரட்டம் தொடக்கம்

கன்னியாகுமரி மாவட்ட பகுதிகள் முன்னர் திருவிதாங்கூர் நாட்டுடன் இணைந்து இருந்தது. தமிழ் மொழி பேசும் தமிழர்களை மலையாளிகளின் ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்க பலர் போராடி வந்தனர்.

**கன்னியாகுமரி மாவட்ட பிரிவினைப் போராட்டம்**

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் பகுதிகள் முன்னர் திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இணைந்து இருந்தன. தமிழ்மொழி பேசும் தமிழர்களை நடைமுறை வாழ்க்கையில் அடிமைச் சாதி மக்களுக்கென சில நியமங்களும் சட்டத்திட்டங்களும் பின்பற்றப்பட்டன. “உயரினத்தவர் அருகே புலையர்களைப் போன்ற தாழ்ந்த சாதியினர் ஒருபோதும் வரக்கூடாது. இவர்கள் தங்கள் வருகையைப் பிறருக்கு அறிவிக்கும் வகையில் ஹோய்இ ஹோய் எனக்கத்திக் கொண்டே வரவேண்டும். தாழ்த்தப்பட்ட சமூகத்தவருள் யாராவது ஒருவன் நாயரைத் தீண்டி விட்டால் உடனே அவர்களை வெட்டிவிடுவர்”.; ஐசக் அருதாஸ் ஜி. தென்நெல்லைக் காவலன் நேசமணி 2002 ப.31 அரண்மனைகள்இ சத்திரங்கள்இ அரசுக் கட்டங்கள் போன்றவற்றிற்குச் செல்ல அடிமைச்சாதி மக்களுக்கு அனுமதி கிடையாது.

**மார்த்தாண்டம் துப்பாக்கிச்சூடு**

1954 ஆகஸ்ட்; 11 ஆம் நாள் காலை மார்த்தாண்டம் காந்திமைதானத்தில் நடத்தப்பட்ட பொதுகூட்டத்துடன் குமரித் தமிழர் விடுதலை நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. அக்கட்டத்தில் குழித்துறையில் உள்ள முதல் நிலை மாஜிஸ்ரேட் அலுவலகத்தின் முன் மறியல் செய்வதற்காக 16 வீரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்து வந்தனர். ஏறக்குறைய ஐயாயிரம் பேர் அடங்கிய ஊர்வலம் காலை சுமார் 11:30 மணிக்கு குழித்துறையை நோக்கி வந்து கொண்டிருந்தது. “பட்டம் ஆட்சி ஒழிக! போலீஸ் அராஜகம் ஒழிக! ஐக்கியத் தமிழகம் அமைத்தே தீருவோம். அமைக்கும் வரை போராடுவோம் -போராட்டங்கள் தொடங்கிவிட்டோம் என்ற கோஷங்கள் ஊர்வலத்தில் எழுப்பப்பட்டன.” (பீட்டர் ஜ. விஇ நாயர் அரசு அட்டூழியங்களும் நாடார் மக்கள் விடுதலையும்இ 2006இ ப்58) அந்த நேரத்தில் மார்த்தாண்டம் ஆங்கில உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் பள்ளியை விட்டு வெளியேறி ஊர்வலமாகச் சென்றனர்;.

அவர்கள் கல்லெறியில் ஈடுபட்டனர் என்றுக் கூறி அவர்கள் மீது காவல் துறையினர் தடியடி நடத்தி இரு மாணவர்களை கைது செய்தனர்;. இதனால் கலவரம் தீவிரமடைந்தது. மார்த்தாண்டம் சந்தை வரை சாலையின் குறுக்கே பல இடங்களில் தந்திக்கம்பங்கள்இ மின்கம்பங்கள்இ தொலைத்தொடர்பு கம்பங்கள்இ கற்கள் ஆகியவற்றைக் கொண்டு தடைகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. விளவங்கோடு காவல் நிலையத்தில் பொறுப்பிலிருந்த துணை ஆய்வாளரின் அழைப்பின் பேரில் காவல் துறை கண்காளிப்பாளர் சம்பவ இடத்தில் விரைந்து வந்து துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிட்டார். தப்பி ஓடியவர்கள் ஒவ்வொருவராகச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இரவு பன்னிரெண்டு மணிக்கு சத்தமில்லாமல் காவல் துறையினர் வந்து வீட்டில் இருக்கும் ஆண்களைப் பிடித்து கைது செய்து அடித்து நொறுக்கினார்கள். இதனால் பலர் கன்னியாகுமரி மாவட்ட பிரிவுக்கு தங்களுடைய உயிரை பலிக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

**முடிவுரை**

முகிலை இராசபாண்டியன் புதினத்தில் இடம்பெற்றுள்ள சமூக அரசியல், தமிழனின மலையாளி பிரச்சினைகள் அதை ஒடுக்க ஏற்பட்ட எதிர்ப்பு இயக்கங்கள், சாதி பிரச்சினைகள்இ சமயக் கொடுமைகள், ஆதிக்க சக்திகளால் தாழ்ந்த ஜாதியினர் அனுபவித்தக் கொடுமைகள்இ தோள் சீலைப் போராட்டம்இ திருவிதாங்கூரில் அடிமைகளாக இருந்த மக்களின் நிலையும் கன்னியாகுமரி மாவட்ட பிரச்சனை உருவாகுதல். தென்திருவிதாங்கூர் கலவரத்தில் கிறிஸ்தவர்கள் அடைந்த பிரச்சனைகள் இதை முடிவுக்கு கொண்டு வரச் செய்யப் பெற்ற சமாதான பேச்சுவார்த்தை போன்றவை பற்றியும் இக்கட்டுரையில் கூறப்படுகின்றது.

கலைச்சொற்கள்

முகிலை இராசபாண்டியன், சமூக அரசியல், சமூக பெண்கள், வரலாற்று, அரசியல் உரிமைப் போராட்டம், தோள்சீலைப் போராட்டம், மன்னர் ஆட்சி, கன்னியாகுமரி மாவட்ட பிரிவினை போராட்டம்

**துணைநூற் பட்டியல்**

1.ஐசக் அருள்தாஸ் ஜி தென்நெல்லைக் காவலன் நேசமணி, நேசமணி தமிழர்பதிப்பு : 2002பதிப்பகம் நாகர்கோவில்629001.

2.ஐசக் ஜெயதாஸ் ,கன்னியாகுமரி மாவட்ட வரலாறு,முதல் பதிப்பு , டிசம்பர்2020,மெக்கல்ராய் பப்ளிகேஷன்ஸ்,வில்லுக்குறி,கன்னியாகுமரி மாவட்டம்.

3.பீட்டர்இ ஐ.வி, நாயர் அரசு அட்டுழியங்கள நாடார் மக்கள் விடுதலையும் கன்னியாகுமரி வளர்ச்சி ஆய மன்றம், நாகர்கோவில் 629001.

4.முகிலை இராசபாண்டியன், அலைகளின் காலம்,மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2022,முக்கடல்11 முப்பத்து மூன்றாம் தெரு,பாலாஜிநகர் விரிவு ,முதிவாக்கம், சென்னை-600001.

# 68.குறுந்தொகை காட்டும் சூழலியல் சிந்தனைகள்

**Dr.G.JAYASHREE,**

Assistant professor, Sri Sankara Arts and Science College (autonomous), Enathur, Kanchipuram. jayashree@sankaracolleage.edu.in, 9600261119

**ஆய்வுச் சுருக்கம்**

சூழலியல் என்பது இன்றைய உலகில் விரிவாக வளர்ந்து வரும் அறிவியல் துறைகளுள் ஒன்றாகும். தமிழில் அறிவியல் தமிழ், கணினித் தமிழ் என்று வளர்ந்து வருகின்ற நிலையிலும் சூழலியல் தொடர்பான சிந்தனை இன்னமும் சிறப்பாக தொடங்கவில்லை என்றே கூறலாம். இன்று உலகம் வெப்பமயமாதலின் தாக்கத்தை எதிர்கொண்டு வரும் இன்றைய சூழலில் சுற்றுச்சூழல் நுண்ணறிவும், மனித சமுதாயம் தழைத்து ஓங்குவதற்கு அடிப்படையான ஒன்று, தமிழர்கள் இயற்கை சார்ந்த வாழ்வை மேற்கொண்டவர்கள் என்பதை சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரையுள்ள சுற்றுச்சூழல் சார்ந்த வெளிப்பாடுகளிலிருந்து இருந்து அறிந்துக் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்கள் பொதுவாகவே முதல், கரு, உரிப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு பாடபட்டுள்ளன. ஒவ்வொரு செய்யுளும் ஏதேனும் ஒரு நிலத்தை அல்லது அது சார்ந்த கருப்பொருட்களை பின்புலமாகக் கொண்டே உரிப்பொருளை விளக்குகின்றன. இன்று சூழலியல் தொடர்பான சிந்தனையானது மனிதனின் அவசியத் தேவைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது இதன் விளைவாக நிலம், நீர், காற்று மற்றும் உணவு மாசடைதல் என இச்சிந்தனைத் துறை அகலக்கால் பதிந்துள்ளது. இவ்வாய்வின் மூலங்களில் குறிப்பாக முதல்நிலைத் தரவுகளாக சங்க இலக்கியங்களில் பகுதியை அணுஅணுவாக இரசித்து அவற்றின் நுட்பத்தைப் புரிந்து பாதிப்பு ஏற்படாமல் வாழ்பவர்களால் மட்டுமே இப்படிப்பட்ட அணுகுமுறையை இயற்கையோடு ஊடாட முடியும். குறுந்தொகையில் இடம் பெறும் இயற்கை கூறுகளின் வழி பழந்தமிழரின் சுழலியல் சிந்தனைகளை வெளிர்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு அறிமுகம்**

தமிழர்கள் இயற்கை சார்ந்த வாழ்வை மேற்கொண்டார்கள் என்பதை சங்க இலக்கியங்கள் வரையுள்ளள சுற்றுச்சூழல் சார்ந்த வெளிப்பாடுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்கிற வகைப்பாடு நிலங்களுக்கும், வழிபடும். தெய்வங்களுக்கும், பாடும் கருவிற்கும், வாழும் மனநிலையில் இருந்து உணரப்படுகிறது. தாங்கள் வாழ்ந்த நிலப்பகுதியின் இயற்கை வளங்களை நுணுக்கமாக உணர்ந்து அவற்றின் நுட்பத்தைப் புரிந்து கொண்டு அவற்றை முறையாகப் பயன்படுத்தி, யாருக்கும் பாதிப்பு ஏற்படுத்தாமல் வாழ்பவர்களால மட்டுமே. இயற்கையோடு ஊடாட முடியும். இத்தகைய சூழலியல் அறிவை இன்றைய சூழலியல் அறிஞர்களின் கூற்றுக்களோடு பொருத்திப் பார்க்கும் ஆய்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். குறுந்தொகை காதலைப் பற்றி ஆய்வு மென்மையாய்ப் பேசினாலும், அதில் இயற்கை குறித்த பதிவுகள் அதிகமாக

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

இருக்கின்றன. சுற்றுச்சூழல் விழிப்புணர்வை இன்று பல அறிவியல் இயக்கங்கள் ஓர் இயக்கமாக ஏற்படுத்தி வருகின்றன. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழரிடத்தே சூழலியல் தொடர்பான சிந்தனைகள் மிகுந்திருந்த்தனைச் சங்கப்பாடல்களில் குறிப்பாகக் குறுந்தொகையிலே நிறைவாகக் கண்டுணரலாம்

**குறுந்தொகை_ அறிமுகம்**

சங்க இலக்கியங்களை வாசிக்கின்ற போது தமிழ்நாடு ஒரு காலத்தில் எவ்வளவு செழுமையான தாவரச் சங்கமத்தோடு இருந்திருக்கிறது என்பது வியப்பளிக்கிறது. குறுந்தொகை காதலைப் பற்றி மென்மையாகப் பேசினாலும், அதில் இயற்கை குறித்த பதிவுகள் சிறப்பாக இடம் பெறுகிறது. (4-8 அடிகள்) வரை குறைந்த அடிகளையுடைய பாடலைகளைக் குறுந்தொகையிலே காணலாம். சங்க இலக்கியத்தில் தொகை என்ற பெயரால் அமைந்தவை குறுந்தொகையும், கலித்தொகையும், நெடுந்தொகை (அகநானூறு) ஆகும்.

**சூழலியல் _ பொருள்**

குறிப்பிட்ட இடத்தில் உள்ள தாவரம் மற்றும் விலங்குகள் அனைத்தையும் உள்ளடக்கியதே சூழல் என்பதாகும் .சூழல் என்றால் சுற்றுப்புறம் என்று கோனார் கையகராதி விளக்கம் தருகின்றது.ஆங்கிலத்தில் Environment என்பர். இதன் பொருள் "The surroundings In which A Person, Animal or Plant Lives. The Natural world" என Oxford English Mini Dictionary பொருள் தருகின்றது.

சங்கச் செய்யுட்கள் பலவற்றிலும் நிலம், நீர், காற்று என்னும் ஐம்பூதங்கள் பற்றிய விழிப்புணர்வும், அறிவுத் தெளிவும் இருந்திருக்கின்றது. சான்றாக

**"நிலத்திலும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவு இன்றே சாரல்' (குறு தொ- 2)**
**"நிலம் தொட்டுப் புகாஅர், காலின் செல்லார்"**
**(குறுந்-3)**
**"நீரோ ரன்ன சாயல்" (குறுதொ 95)**

என்ற இரு பாடல்களும் சூழல் பற்றிய தெளிவு பழந்தமிழரிடையே நிலவியிருந்தமைக்குச் சான்றாகிறது. இதன் முலம் குறுந்தொகைப் புலவர்கள் இயற்கையை வெறும் பின்னணியாக மட்டும் கையாளாமல் மனித வாழ்வின் அடிப்படைக் கூறாகக் கருதியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**நிலம் சார்ந்த சூழலியல்**

உயிரினம் வாழ்வதற்கு அடிப்படையானது நிலமாகும். நிலத்தின் இயல்புக்கு ஏற்பவே அவர்களது வாழ்க்கை முறையும் அமைந்திருந்தன. பண்டைய தமிழரிடையே " நானிலம்" பற்றிய கருத்துக்கள் நிலவியமைக்கு அவர்களது வாழ்க்கை, அதனை ஆதாரமாகக் கொண்டு தட்டியெழுப்பட்டமையே காரணம் எனலாம். குறுந்தொகைப் பாடல்களைப் பாடிய புலவர்களிடத்தே நிலத்தை பாதுகாக்கும் சூழலியல் விழிப்புணர்வு காணப்படுகிறது.

தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். பிரிவுத் துயரால் துன்புறும் தலைவி. தனது தோழியிடம் துயரைப் பகிர்ந்து கொள்ளும் வேளையில் தலைவர் சென்ற பாலைவனத்தின் தன்மையை

**“பொலங்கல ஒரு காசு ஏய்க்கும்**
**நிலம் கரி கள்ளி அம்காடு இறந்தோரே"** **(குறுந்தொ- 67 )**

என்ற பாலைத்திணைப் பாடலிலே அந்நிலம் பாலையானமக்கு கடும் வெம்மையே காரணம் எனவும், அதன் நிறமும் கரியாகத் திரிபடைந்து போனமை பற்றியும் எடுத்துரைக்கிறது. பிறிதொரு பாடலில், தலைவன் தலைவியை பிரிந்து சென்று விட்டபின் அவனோடு உடன் போகா நின்று துயருற்ற தலைவிக்குத் தோழி அந்நிலத்தின் கொடுமை கூறி ஆற்றுகிறாள்.

**“**உமணர் சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்தலை என்னும் செய்யுளிலே கூட்டமாக உமணர் எனப்படும் உப்பு விற்போர் தமது சகடங்களை ஒட்டிச் செல்வதால், அவ்வழி பாழடைந்துள்ளது என்றும், பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ளமையையும் குறிப்பிட்டு நிற்கிறார். அது போன்று தலைவன் தன்னைப் பிரிந்த நிலையில் தலைவி அவளைக் கண்டு பிடிக்கும் முயற்சியிலே, அப்போது தோழி அவருக்கு ஆறுதல் கூறுகின்றாள். அப்போது “நிலம் தொட்டுப் புகார்" என்று உரைக்கின்றாள், அதாவது சாரணன்' போல் நிலத்தைத் தோண்டி போயிருக்க மாட்டான் என்று கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. இதனூடாக, நிலத்தை வீணே தோண்டும் சங்கதிகள் இடம்பெற்றிருப்பதனை புலப்படுத்துகின்றது.

**நீர் சார்ந்த சூழலியல்**

சூழலியல் நீர் என்பது இன்றியமையாத ஒன்று வளளுவனும் நீரின்றி அமையாது உலகு, என்று கூறியுள்ளார். அக்காலத்தில் மக்களிடத்தே நீர் சூழலைப் பாதுகாக்கும் உணர்வு இருந்துள்ளன.

**“மாசு அறக் கழீஇய யானை போல”** **(குறுந்தொ -13)**

யானை தன் தலையிலும், உடலிலும் தானே புழுதியை வாரிக் கொட்டிக் கொள்ளும் இயல்பினையுடையது, இவ்வாறு புழுதி படிந்திருக்கும் யானையைப் பாகன் தெளிந்த நீரில் புழுதி முழுவதும் நீங்குபடி தழுவியதாக குறுந்தொதை மூலமாக அறியலாம். இப்பாடலின் முலம் நீர்நிலைகளைப் பாதுகாக்கும் சூழலியல் உணர்வை வெளிப்படுத்துவதாகக் கருதலாம்.

**“வேட்டச் செந்நாய் கிளைத்தூண் பீச்சில்**
**குளவி மொய்த்த அழுகர் சின்னீர்"** **( குறுந்தொ-56)**

மேற்கூறப்பட்ட செய்யுளிலே மிகத் தெளிவாக, நீர்மாசடைதல் பற்றிய செய்தி, அதிலும் குறிப்பாக "சில்நீர்' எனற பதத்தினூடாக சூழலிலே காணப்பட்ட சில நீர்நிலைகளில் இந்நிலைமை இருந்துள்ளமை தெளிவாகின்றது.

இவ்வாறு நோக்கும் போது மேலே சான்று காட்டப்பட்ட இரு பாடல்கரும் பழந்தமிழரிடையே காணப்பட்ட நீர் பற்றிய சூழலியல் பாதுகாப்பு தொடர்பான எண்ணப்பாங்கிற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாய் அமைந்துள்ளது எனலாம்.

**வளி மாசு சார்ந்த சூழலியல்**

உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு மிகவும் அவசியமானது காற்று ஆகும். காற்றின் அவசியம் ,முக்கியத்துவம், வகைகள் என்பன இன்றைய விஞ்ஞான உலகத்தில் நன்கு ஆராயப்படுகின்றன. இன்று ஒசோன் துவாரம் "அமில மழை"ஒட்சிசனின் அவசியம் போன்றவை. மொழி, இனம்,தேசம் பற்றிய விழிப்புணர்வு தேசம் தாண்டி உலகளாவிய ரீதியிலே

**"வேட்டச் செந்நாய் அிஇளைத்தூன் மிச்சில்**
**குளவி மொய்த்த அமுகற் சில்நீர்" ( குறுந்தொ -56)**

வேட்டை நாய்கள் உண்ணப்பட்டு எஞ்சிய பகுதிகள் நீரில் கலந்து சூழலியல் பாதிப்பை ஏற்படுத்தும். மேலே சான்று காட்டப்பட்டுள்ள செய்யுளிலே வளி சூழலியல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனில் நீர் நிலைகள் நாற்றம் எடுத்தது என்றும். நாற்றம் எங்கும் நிலவியது தவைன் கூறுவதாக அமைந்துள்ளது. மொய்த்த' என்ற சொல்விற்கு துர்நாற்றம். என்பது பொருள். காற்று தொடர்பான சூழலியல் சிந்தனைகள் அக்காலத் தமிழரிடையே நிலவியுள்ளமையைப் புலனாகிறது.

மரம் வெட்டுதல் தொடர்பான கருத்துகளும் குறுந்தொகையிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன. மரம் வெட்டுவது குறிப்பாக "காடழிப்பு என்பது இயற்கைச் சமநிலையைப் பாதிக்கும் செயலாகக் கருதப்படுகிறது.இந்நிகழ்வை பின்வரும் பாடல் எடுத்தியம்புகின்றது.

**"மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து வித்திய**
**பிறங்குகுரல் இறடி காக்கும"** **.(குறுந்தொ -214)**

என்ற செய்யுளிலே மரங்கொல் என்ற சொல்லானது மரத்தைக் கொல்லுதல் (வெட்டுதல்) எனப் பொருள்படும். உயிரினங்களில் இரத்தமுடையனவற்றையே "கொல்லுதல்" எனக் கூறுவர் : இயற்கையோடு கொண்டிருந்த நெருக்கத்தினால் மரத்தைக் கொல்லும் தொழிலை செய்பவன் என்றழைக்கிறார். இதனால் காடழிப்புத் தொடர்பால் புலவன் கொண்டிருந்த எதிர்வினை எண்ணம் புலப்படுகின்றது

**ஒலி பற்றிய சூழலியல்**

ஒலி இயற்கை ஒலி, பேச்சு, இசை என்ற வகையிலே எடுத்துக் கொள்ளலாம். இந்த ஓலி எவ்வாறு மாசு அடைகிறது என்றால் ஓர் உயிரினம் எழுப்பும் ஒலியானது பிற உயிரினங்களின் நடத்தையில் தாக்கத்தை ஏற்படுத்துமாயின் அது ஒலி மாசடைதலாகக் கருதலாம். குறுந்தொகையில் ஒலி மாசு பற்றிய சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன.

**"கயிறு ஆரியர் ஆடு பறையின் கால் பொரக் கலங்கி**
**வாகை வெண் நெற்று ஒலிக்கும்."** **(குறுந்தொ -7)**

என்ற பாடலிலே பறை ஓசையின் அதிர்வினால் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றம், குறிப்பாக ஒலியால் சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கத்தைப் புலவர் நுட்பமாகவும் பதிவு செய்துள்ளார்.

**"மணி மருள் புவின் பாடு நனி கேட்டே"** **(குறுந்தொ -138)**

என்ற செய்யுளிலும் நுண்ணிய ஒலிக்குறிப்பைப் பதிவு செய்துள்ளனர். இதனூடாகப் புலவனுக்கு ஒலி பற்றிய எண்ணமும் சிந்தனையும் உயர்வாக இருந்திருக்க வேண்டும் . இதன் காரணமாகவே நுண்ணிய ஒலிக்குறிப்பையும் பதிவு செய்துள்ளான் எனலாம்.

**உணவு சார்ந்த சூழலியல்**

தகுந்த முறையிலே உணவைச் சேகரித்தலும், பாதுகாத்தலும், பயன்படுத்தலும் உணவுப் பண்பாட்டில் மிக முக்கியமானவை. இத்தகைய சித்தனைகள் பழந்தமிழரிடத்தே இருந்துள்ளமைக்குப் பல்வேறு குறுந்தொகைச் செய்யுட்களைச் சான்றாகக் காட்டலாம்.

**“கன்றும் உண்ணாது கலத்தினும் படாது**
**நல் ஆன் தீம்பான் நிலத்துக்கா அங்கு,”**

**(குறுந்தொ -27)**

தலைவியின் அழகு வீணாகுகின்றது என்பதற்கு உவமை கூறவிழைந்த புலவன் நல்ல பசுவின் இனிமையான பாலானது அப்பசுவின் கன்றினால் உண்ணப்படாமல், கறக்கும் பாத்திரத்திலும் விழாமல் தரையிற் சிந்தி, விணாகிப் போவதாக வருந்துகிறார்.

**“பாணர்**
**பசுமீன் சொரிந்த மண்டை போல**
**எமக்கும் பெரும்புலவு ஆதி.”** **(குறுந்தொ -169)**

என்ற பாடலிலும் உணவைப் பாதுகாக்கும் பண்பும்,
உணவின் மதிப்பை உணரும் சிந்தனையும் பழந்தமிழரிடம் நிலவியிருந்ததை இப்பாடல் உணர்த்துகிறது.

**தொகுப்புரை**

சங்க இலக்கியத்தில் சூழலியல் சிந்தனை என்று ஆராய்ந்த போது, பண்டைத் தமிழர் தம்மைச் சுற்றியிருந்த சூழலை நன்கு புரிந்து அதனைத் தமது செய்யுள்களில் பதிவு செய்து சென்றுள்ளமையைக் காணலாம். குறுந்தொகை இலக்கியமாக இருந்தாலும், இயற்கை அறிவியலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட சிறு காவியங்களின் தொகுப்பாகும். குறுந்தொகைப் பாடல்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வியலையும் பழந்தமிழரின் சூழலியல் அறிவையும் தெளிவாக வெளிப்படுகின்றது.,குறுந்தொகை இயற்கைச் சித்திரங்களை மட்டுமின்றி இயற்கையைப் பாதுகாக்கும், வாழ்வியல் நெறிகளையும் , சூழலியல் விழிப்புணர்வையும் பதிவு செய்துள்ள சிறந்த சங்க இலக்கியமாக விளங்குகிறது.இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சிந்தனைகளுக்கு இந்நூல் வழிகாட்டியாக திகழ்கிறது.

**துணைநூற் பட்டியல்**

1. **குறுந்தொகை ,** புலியூர்க் கேசிகன், பாரிநிலையம், சென்னை.
2.**சங்க இலக்கிய வரலாறு** நியு செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
3. **சங்க இலக்கியத்தில் இயற்கை,** உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4.**தமிழர் பண்பாடும் சூழலியலும்,** உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
5.**சங்க இலக்கியத்தில் ஐந்திணை,** மணிவாசகர்பதிப்பகம் , சென்னை.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 69. சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கும் திடக்கழிவு மேலாண்மை

**முனைவர்.ஜா.ஸ்டெல்லாமேரி,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூயவளனார்தன்னாட்சிக்கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 002. அலைபேசிஎண்.9751150567
stellamary_ta2@mail.sjctni.edu

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்க்கையின் முன்னேற்றத்துடன் நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் மக்கள் தொகைப் பெருக்கம் ஆகியவை வேகமாக அதிகரித்து வருகின்றன. இதன் விளைவாக நாளுக்கு நாள் உருவாகும் திடக்கழிவுகளின் அளவும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வீடுகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், சந்தைகள் மற்றும் வேளாண்மைகள் போன்ற பல்வேறு இடங்களில்லிருந்து உருவாகும் திடக்கழிவுகள் முறையாக நிர்வகிக்கப்படாவிட்டால் சுற்றுச்சூழலுக்கும், மனித ஆரோக்கியத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக அவை மாறுகின்றன. எனவே திடக்கழிவுகளை அறிவியல் அடிப்படையில் சேகரித்தல், பிரித்தல், மறுபயன்பாடு செய்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் பாதுகாப்பாக அகற்றுதல் ஆகிய செயல்முறைகளின் தொகுப்பே திடக்கழிவு மேலாண்மை எனப்படுகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும், இயற்கை வளங்களை நிலையான முறையில் பயன்படுத்துவதிலும், மாசுபாட்டைக் குறைப்பதிலும் திடக்கழிவு மேலாண்மை மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. இன்று உலகம் முழுவதும் "கழிவிலிருந்து வளம்" என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது. கழிவுகளைச் சுமையாகக் கருதாமல், அவற்றை வளமாக மாற்றும் அணுகுமுறையே நிலையான வளர்ச்சிக்கான அடிப்படையாகும் என்பதை நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர் என்பதை தமிழ் இலக்கியங்கள் வழி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

பண்டையகால மனிதன் தனது அத்தியாவசிய தேவையான உணவு, உறைவிடம், உடை ஆகியவற்றைத்தேடி நாடோடியாக அங்கும் இங்கும் அலைந்து திரிந்தான். ஆனால் நாகரிக வளர்ச்சியினால் மனிதன் நிலையாக ஒரே இடத்தில் தங்கி வாழமுயற்சித்தான். அவ்வாறு அவன் நிலையாக வாழக்கை நடத்த தேவையானவற்றை அவனே உற்பத்திசெய்ய ஆராம்பித்தான். இதற்கு இயற்கை சூழலும் அவனுக்குத் துணைநின்றது. இன்றைய அறிவியல் வளர்ச்சியின் அசுரவேகத்தால் நமது இயற்கை கொடையான சுற்றுச் சூழலை அதிகமாக இயற்கைக்கழிவுகளை விட, செயற்கை கழிவுகளைக்கொண்டு அழித்துக்கொண்டிருக்கிறோம். இயற்கை வளங்களைச் சீரழித்து வரும் காரணிகளுள் ஒன்று திடக்கழிவு ஆகும். இந்தத் திடக்கழிவினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க நமது அரசு மற்றம் தனியார்மையங்களும் பல விழிப்புணர்வுத் தகவல்களை வழங்கிவருகின்றன. திடக்கழிவுகளை அகற்றும் பணிக்கான சவால்கள், சட்டங்கள், விதிமுறைகள் எனப்பல நிலைகளில் இன்றைய மேலாண்மை பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஆனால் நமது சங்ககால மக்கள் எவ்வாறு கழிவுகளை அப்புறப்படுத்திச் சுகாதாரமுறையில் வாழ்ந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாகக் காண்போம்.

**கலைச்சொற்கள்: (**Solid Waste)**,** (Muncipal Solid), (Biomedical Waste), (E-Waste), (Agricultural Waste), (Construction Waste)

**திடக்கழிவு என்பது**

திரவம் மற்றும் வாயு அல்லாத மனிதன் மற்றும் விலங்குகளின் அன்றாட நடவடிக்கைகள்மூலம் தூக்கி எறியப்படும் அல்லது பயனற்றதாகக் கருதப்படும் எந்தவொரு தேவையற்ற பொருளும் திடக்கழிவு எனப்படும்.

**திடக்கழிவுவின் வகைகள்**

திடகழிவுகள் உருவாகும் இடங்கள் மற்றும் அவற்றின் தன்மை அடிப்படையில் பல வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை நகராட்சிக் கழிவுகள் (Muncipal Solid), தொழிற்சாலை கழிவுகள் (Industrial Waste), உயிரி மருத்துவக் கழிவுகள் (Biomedical Waste), மின்னணுக் கழிவுகள் (E-Waste), அபாயகரமான கழிவுகள் (Hazardous Waste), விவசாயக் கழிவுகள் (Agricultural Waste), கட்டுமானக் கழிவுகள் (Construction Waste)

**சங்ககால மக்கும் குப்பைகள்**

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். தங்களின் தேவைகளுக்காகப் பயன்பத்திய ஆடு, மாடு, கோழி போன்ற உயிரினங்களின் கழிவுப்பொருள்களையும், அவற்றிற்கு உணவாக வழங்கிய இலைகள், தழைகள், வைக்கோள் போன்றவற்றை ஒரு இடத்தில் மக்கும் குப்பையாகச் சேமித்து வைத்துள்ளனர். மாட்டினுடைய கழிவு சாணம் என்று குறிக்கப்படும். இச்சாணம் இயற்றை உரமாகவும், இயற்கை எரிவாயு தயாரிக்கவும் பயன்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழிலுக்குத் தேவையான சத்து இவற்றிலிருந்து கிடைப்பதுடன், மண்ணின் தன்மையும் மாறாமல் பாதுகாக்கப்பட்டதை சங்கஇலக்கியங்கள் கூறுகின்றன. இதனையே வள்ளுவரும் ”உழவுத் தொழிலுக்கு ஏர் உழுதலை விட எரு இடுதல்” மிகச்சிறந்தது என்பார். இலக்கியத்தில் அதிகமான எரு, தாது என்ற சொல்லாடல் பயன்படுத்துப்பட்டுவந்துள்ளன. குறிப்பாகக் கலித்தொகையில்

"காஞ்சித் தாது உக்கன்ன தாது எரு மன்றத்துத்" (கலித்தொகை – 108)

என்ற பாடல் மக்கும் குப்பைக்கான சான்றாக அமைந்துள்ளது என்பதை அறியலாம்.

**மக்கும்குப்பைகான மறுசுழற்சிமுறை**

சங்ககாலத்தில் சாம்பல் என்பது வெறுமனே கழிவாகக் கருதப்படாமல் விலைமதிப்பற்ற உரமாக மற்றும் இயற்கை பூச்சிக்கொல்லியாக மாற்றப்பட்டு மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளது.

"நறு விரைஆரம் அற எரித்து உழுத
உளைக் குரல் சிறு தினை கவர்தலின்" (அகநானூறு – 388)

பழந்தமிழர்கள் பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்க, காடுகளை எரித்துச் சாம்பலாக்கும் முறையை யையாண்டுள்ளனர் என்பதை அகநானூறு பாடல் தெளவிவுபடுத்துகிறது.

**கட்டுமானக் கழிவுகள்**

சங்க்காலத்தில் மரங்கள், செம்மண், மூங்கில், வைக்கோல், புல் மற்றும் மண் ஆகியவற்றை கட்டுமானப்பணிக்கு பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு இந்தக் கட்டுமானப்பொருட்களைக் கொண்டு கட்டிடங்கள் அமைக்கும்போது அவை வெயிலினாலும் மலையினாலும் தாக்கப்பட்டு விரைவில் சிதைவடைந்து மக்கும் கழிவுகாக மாற்றப்பட்டுள்ளன.

பின்னாலில் கல், மரம், சுட்டமண் செங்கல், இரும்பு, எஃகு போன்ற கட்டுமான பொருட்களைக் கொண்டு அரண்மனைகள், கோட்டைகள் போன்றவற்றை கட்டியுள்ளனர். சங்கஇலக்கியத்தில் புலவர் ஒருவரின் வீட்டின் கூரை சிதைந்து போனதை கீழ்காணும் பாடல்வரிகளின் வழி அறியலாம்.

“சிறியனவும் பெரியனவுமான கழிகளால்
கட்டப்பட்டிருந்த அவரது வீட்டுக்கூரை
இடித்து விழுந்து விட்டது“. (புறநானுறு – 393

**சங்ககால மக்காகுப்பைகள்**

உலோகங்களான இரும்பு, எஃகு, பொன், வெள்ளி, செம்பு போன்றவை சங்ககால மக்களின் அன்றாட வாழ்வியலின் பயன்பாட்டுப் புலங்கு பொருட்களாக அமைகின்றன. இவை சிதைவடைந்தால் அவற்றைக் கழிவு என்று ஒதுக்காது அவற்றை மீண்டு மறுசுழற்சி செய்து பயன்படுத்தினார்கள் என்பதையும் சங்கஇலக்கியங்கள் வழி அறியலாம்.

**இரும்பு, எஃகு**

சங்க்காலத்தில் வேளாண்மை தொழிலுக்குப் பயன்படுத்திய கருவிகளான மண்வெட்டி, கடப்பாறை, போடாரி போன்ற பொருட்களும், போருக்குப்பயன்படுத்திய கருவிகளான அம்பு, ஈட்டி, வாள், கத்தி போன்ற பொருட்களும், வீட்டு உபயோகப்பெருளான உலக்கை, அரிவாள் போன்ற பொட்கள் இரும்பால் செய்யப்பட்டவை ஆகும்.

இரும்பு பயன்படுக்குங் கருங்கை கொல்லன்
விசைத்தறி கூடமொடு பொடரூஉம்” (புறநானூறு 170. 15-16)

“இரும்பு வடித்தன்ன மடியாமென் தோற்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்” (பெரும்பாண். 22-23)

“கருங்கை கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே” (புறநானூறு 180. 12-13)

கொல்லன் தனது உலைக்களத்தில் தீ மூட்டும்போது கரியை அடுத்து உலையிலே போடுவதனால் அவன் கை எப்போதும் கரிய நிறம் உடையதாக இருக்கும். அதோடு இரும்பைக் காய்ச்சி அடுத்து சம்மட்டியால் அதனை ஓங்கி அடித்துக் கொண்டேயிருப்பதால் அவன் கைகள் காய்ந்து உரம்(வலிமை) ஏறியதாகச் சுரசுரப்பாகக் காணப்படும். இதனைக் கண்ட அக்காலப் புலவர், ”கருங்கைக் கொல்லன்” (புறம்.170.15) என்று குறிப்பிட்டுள்ளனர். சங்க்கால மக்கள் ஒரு பொருள்ளை தங்களின் தேவைக்குப்பயன்படுத்தி மீண்டும் அதை மறுசுழற்சிமுறையில் புதிப்பித்துக்கொள்ளும் ஆற்றல் உடையவர்களாக இருந்ததை அறியலாம்.

**பொன், வெள்ளி**

சங்ககாலத்தில் குறிப்பிட்ட சில பண்புகளைக் கொண்ட சில தனிமங்களைப் பொன் அல்லது மாழை என்னும் சொற்களால் குறித்தனர். மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் பயன்படுத்தி நாணயங்கள், ஆபரங்கள், கலைநயப்பொருட்கள், தெய்வ உருவச்சிலைகள் எனப் பல பொருட்கள் இந்த தனிமங்களால் செய்யப்பட்டவை ஆகும்.

“மான உருக்கிய நன்பொன் மணியுறீ” (கலித்தொகை : 117)

பொன்னை நெருப்பினில் உருக்கி அதனுள் மண்வைத்து கலைநயத்துடன் அணிகலன்கள் செய்துள்ளனர். இந்த முறைகள் இன்றும் நம்மக்கள் மத்தியில் அதிகமாகப் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் இவை சிதைவடைந்தால் அவற்றைக் கழிவு என்று ஒதுக்கமால் மீண்டும்

மறுசுழற்சி செய்யும் உத்தியை நம்முன்னோர்கள் சங்ககாலத்திலேயே தெரிந்திருந்தனர் என்பதை இதன் வழியாக அறியலாம்.

**இருபதாம் நூற்றாண்டில் திடக்கழிவு மேலாண்மை விதிகள்**

உயிரியல் முறையில் நுண்ணுயிரிகளான திடக்கழிவுகள் சிதைக்கப்படுகின்றன. திடக்கழிவுகளை பாக்டீரியாக்கள் மற்றும் பூஞ்சைகளால் சிதைக்கப்பட்டு உரமாகவோ அல்லது நிலத்திலோ புதைக்கப்படுகிறது என்பதை இன்றைய அறிவியல் ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன. மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பையெனத் தரம் பிரித்து நிர்வகிக்கும் முறை மத்திய அரசால் கட்டாயமாக்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 (Solid Waste Management Rules, 2016).

**திடக்கழிவின் முக்கிய அம்சங்கள்**

**சேகரித்தல்**

திடக்கழிவுகளை சேகரித்து அவற்றைச் சுத்திகரிக்கும் இடத்திற்கு எடுத்துவருதல்.

**பிரித்தல்**

திடக்கழிவுகளை அவற்றின் தரம் வாரியாகப் பிரித்தல். (எ.கா) சிதைவன, சிதைவடையாதவை, எரியும் பொருள்கள் , எரியாதப் பொருள்கள் எனப் பிரித்து மறுசுழற்சி செய்தல்.

**தூளாக்குதல்**

திடக்கழிவுகளை அரைத்துத் தூளாக்கி சுத்திகரிப்பு செய்து பின்பு பயன்படுத்துதல்.

**வெப்பமுறை**

இம்முறையில் திடக்கழிவுகளை வெப்பபடுத்தி எரிபொருளாகவோ அல்லது எரித்துச் சக்தியாகவோ மாற்றப்படுகிறது என்பதே திடக்கழிவுகளின் முக்கிய அம்சங்கள் விளக்குகின்றன. https://recyclemithra.home.blog/2019/04/22/solid-waste-management

**திடக்கழிவுகளின் விளைவுகள்**

திடக்கழிவுகளை எரிக்கும்போது காற்று மண்டலத்தையும், மண்ணிலிடும்போது நிலத்தையும் மற்றும் நீரினையும் மாசுபடுத்துகிறது. மருத்துவமனைக் கழிவுகள் பல நோய்கள் ஏற்படக் காரணமாகிறது. காகிதக்கழிவுகள் மற்றும் உலோகங்கள் போன்றவற்றை மறுசுழற்சி செய்யும்போது சுவாசக் கோளறுகள், கண் எரிச்சல் மற்றும் இரைப்பைத் தொற்று நோய் ஏற்படுகிறது. குளோரின் உள்ள திடக்கழிவுகளை எரிக்கும்போது அதிலிருந்து வெளிவரும் டையாக்ஸின், ப்யூரான் வாயுக்கள் சுவாசிக்கும்போது மலட்டுத்தன்மையை ஏற்படுத்துகிறது. நச்சுக்கழிவுகள் உணவுச் சங்கிலிமூலம் உடலில் சேமிக்கப்பட்டு புற்றுநோய் உருவாய்கிறது. எனவே இக்கழிவுகளை முறையாகச் சேகரித்து அதை மறுசுழற்சிக்குட்படுத்தவேண்டம் என்பதை இன்றை மேலாண்மை நிறுவனங்களின் நோக்கமாக அமைகிறது.

**திட்டக்கழிவு மேலாண்மையின் பயன்**

மக்களை நோயிலிருந்து பாதுகாத்தல், மனிதர்கள் அல்லாத பிற உயிர்களுக்கும் திடக்கழிவுகளால் தீங்கின்றி பாதுகாத்தல். மறுசுழற்சி செய்வதன் மூலம் மீண்டும் அப்பொருள்களின் உபயோகத்தை அதிகமாக்கல் இதன் முக்கியப் பணி ஆகும். https://recyclemithra.home.blog/2019/04/22-solid-waste-management

**முடிவுரை**

இன்றைய அறிவியல் வளர்ச்சி மாற்றத்தால் நமது இயற்கைமுறை விவசாயத்தை மறந்து செயற்கை உரங்களின் மோகத்தால் மண்ணின் வளத்தைக் கெடுத்துவிட்டோம். நவீனவளர்ச்சியால் நீர்வளம் மற்றும் காற்று வளத்தை அழித்துவருகின்றோம். நெகிழி (பிளாஸ்டிக்) கழிவுகள் மற்றும் மின்னணுக்கழிவுகளின் பயன்பாட்டால் ஒட்டு மொத்த வளத்தையும் சிரழித்து வருகின்றோம். இக்கழிவுகளின் பாதிப்பால் இன்றைய தலைமுறையினருக்கு புதிய, புதிய பல்வேறு தொற்றுகள் வருகின்றன. இன்றைய அறிவியலின் வளர்ச்சியால் கழிவுகள் அதிகமாகத் தேக்கநிலையில் உள்ளன. இக்கழிவுகளை அகற்ற அரசுசார்பில் பல்வேறு முயற்சிகளை இன்று எடுத்து வருகின்றது. அதற்கான பல்வேறு சட்டங்கள், மேலாண்மை விதிகள், விழிப்புணர்வு செய்திகள் என் அறிவிக்கிறது. ஆனால் சிந்திக்கும் ஆற்றல்வளம் பெற்ற ஒவ்வொருவரும் செயற்கை கழிவுகளை நீக்கி இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தால் இந்தநாடு எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் நிலைத்துநிற்கும் என்பதை இந்த ஆய்வின் வழி மறுக்க முடியாது.

**துணைநின்றநூல்கள்**

1. உ.வே.சா. குறுந்தொகை, உ.வே.சாநூல்நிலையம், சென்னை, 2009.
2. கதிர்முருகு (உ.ஆ),பத்துப்பாட்டு, சாரதாபதிப்பகம், சென்னை, 2009.
3. தட்சிணாமூர்த்தி.அ, தமிழர்நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 2021.
4. பாலசுப்பிரமணியன்.கு.வே, அகநானூறு மூலமும்உரையும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்,சென்னை, 2004.
5. புலியூர்கேசிகன்உரை, எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும், ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை 2020.
6. மகிழேந்தி, சுற்றுச் சூழலியல் நோக்கில் சங்கத் தமிழகம், தி பார்க்கர், இராயப்பேட்டை, சென்னை, 2003
7. https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-apr17/33075-2017-05-16-09-14-15
8. http://www.agritech.tnau.ac.in/ta/org_farm/orgfarm_faq's_other12_ta.html

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 70.‘நதி திருடி நாடு திருடுபவர்கள்’ கவிதையில் சுற்றுச்சூழல்

## The Environment in the Poem ‘Those Who Steal Rivers and Plunder the Land’

**க. விஜயகுமாரி,**

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், நெறியாளர் **முனைவர் ம. பிரேமா,**

தமிழாய்வுத் துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 02

**ஆய்வுச்சுருக்கம்:**

மானுட இனத்தின் தாகத்தினையும், உணவுப் பசியினையும் தீர்த்திடும் குளங்களும், ஏரிகளும், ஆறுகளும், கடல்களும் சூழலியல் மாசுபாட்டிற்கு உள்ளாகி வருகின்றன. ஏரிகளும், குளங்களும் தூர்க்கப்பட்டு வானுயர் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன. கடல்களில் பல்வேறு ரசாயனக் கழிவுகளும், எண்ணெய்க் கழிவுகளும் கலக்கப்படுகின்றன. ஆறுகளின் மணல்கள் மணல் மாபியாக்களால் சூறையாடப்பட்டு வருகின்றன. நீர் வாழிடங்கள் குப்பைகள் கொட்டிடும் தொட்டில்களாக விளங்கி வரும் அவலச் சூழலும் நிலவிடுகின்றன.

**திறவுச்சொற்கள்:**

**பிளாட் போடுதல்: நிலங்களை மனைகளாகப் பிரித்து விற்பனை செய்தல்.**

**கான்கிரீட் ஆக்குதல்: இயற்கையான பூமியைச் சிமெண்ட், தார் மற்றும் கான்கிரீட் தளங்களாக மாற்றுதல்.**

**முன்னுரை:**

**‘நதி திருடி நாடு திருடுபவர்கள்’** என்னும் கவிதையில் ஆற்று மணலைச் சுரண்டிக் கொள்ளை அடித்துக் கொழுப்பவர்கள் நாட்டின் அதிகாரப் பதவியில் அமர்ந்து கொண்டு அதனையும் திருடும் மாபியாக்களாகத் திகழ்வதையும் தோலுரித்துக் காட்டுகின்றார். மணல் திருட்டைத் தடுக்கச் சென்றால் மாபியாக்களால் கொலை செய்யப்படும் அபாயம் இருப்பதையும் தமிழன்பன் சூழலியல் அக்கறையுடன் அறிவுறுத்துகின்றார்.

**“மணலைத் திருடு**
**அலையைத் திருடு**
**நதியைத் திருடு**
**ஒரு கை ஓங்கினால்**
**இருக்கை மணலை**
**அள்ளிப்போடு**
**சட்டம் காட்டினால்**
**அலைகளில் தள்ளி**
**தலைகளை மூடு**
**வண்டியைத் தடுத்தால்**
**நிறுத்திப் பேசு**
**பேச்சு மீறினால்**
**ஏற்றிப் பேசு**

**முதலில்**
**மணலை விற்றுத்**
**தொடங்கு**
**அலையை விற்றுத்**
**தொடர்**
**நதியை விற்று**
**முடி**

**கடைசியாய்**
**நாடு என்ன**
**வெறும் ஏடு**
**வந்த விலைக்கு**
**தூக்கிப் போடு"**

என்று வேளாண்மையின் தொப்புள் கொடியாக இருக்கும் ஆறுகளின் மணலைத் திருடும் மாபியாக்கள் சட்டங்களை மீறி செயல்படுவதையும், மணலை விற்றுக் கொள்ளை இலாபம் ஈட்டுவதையும் கவிஞர் தெரிவிக்கின்றார். ஆறுகளின் மணல் இப்படியே அள்ளப்பட்டால் அதனைக் கண்காட்சி சாலையில் மட்டுமே பார்க்க முடியும். மக்களுக்கான குடிநீரும், வேளாண்மையும் நிலத்தடி நீர்மட்டமும் அற்றுப் போய் விடுமென்பதை ஆற்று மணலைச் சுரண்டும் சுரண்டல்வாதிகளின் செயல்பாடுகள் மூலம் படம் பிடித்துக் காட்டுகின்றார். மணல் வியாபாரம் போன்று தண்ணீர் வியாபாரமும் தமிழ்நாட்டில் கொடி கட்டிப் பறக்கின்றது. தண்ணீர் தரும் மூல ஊற்றுகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்று விட்டதால் அவர்கள் தயாரிக்கும் 'கோக்குகளை' அருந்த வேண்டிய துர்பாக்கிய நிலைக்குச் சென்று விட்டதாகத் தெரிவிக்கின்றார்.

**"எங்கள் தேசத்துத் தண்ணீரை**
**வெளிநாட்டு மூலதனத்திற்கு விற்றாயிற்று**
**அதிக விலையில் அவர்கள் தயாரிக்கும்**
**விக்கலை எழுப்பும்**
**அக் 'கோக்கு' வகையறாக்கள் வாங்க**
**வசதியில்லை எம்மிடம்"**

என்று கோக்கு வகையறாக்களைத் தயாரிக்க நம் தேசத்துத் தண்ணீரைப் பயன்படுத்தி சுரண்டி வருவதைப் பதிவு செய்கின்றார். தண்ணீர் இன்று வணிகமயமாகிவிட்டப் போக்கினையும் எடுத்துரைக்கின்றார். ஏழை மக்களுக்கு சுகாதாரமான குடிநீர் எட்டாக் கனியாகி விட்டதாகவும் மேற்சுட்டிய அடிகள் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை போன்ற பெருநகரங்களில் கோடை காலத்தில் தண்ணீர்ப் பிரச்சனை தலை விரித்து ஆடுவதை 'தண்ணீர் இறந்துவிட்டது சென்னையில்' எனும் கவிதையில் பதிவு செய்கின்றார். கோடை காலங்களில் லாரி தண்ணீர் பிடித்திட அடிதடியே நடக்கின்றது. தண்ணீர் பஞ்சம் சென்னையில் முக்கிய நிகழ்வாகத் திகழ்ந்து வருவதைத் தமிழன்பன் சுட்டுகின்றார்.

**"தெருமுனையில்**

**மறிக்கப்படும்**

**குடிநீர் லாரிச் சக்கரத்தின் கீழ்**

**நசுங்கிப் பிதுங்குகின்றன**

**மாத்திரை விழுங்கி**

**மிச்சமான தண்ணீரைத்**

**தாத்தா**

**தனது கட்டிலடியே**

**பத்திரப் படுத்தியதை**

**வெளியே கொண்டு வரும்படி**

**உத்தரவு போடுகிறது**

**பாட்டியின் விக்கல்"**

என்று தண்ணீருக்கு அலைபாயக்கூடிய சூழலை தெரிவிக்கின்றார். சென்னையில் தண்ணீர் இறந்து விட்டதால் அதன் சடலத்தைக் குளிப்பாட்ட நீருக்கு எங்கே போவது எனத் தமிழன்பன் வைத்திடும் கேள்வி சூழலியல் அக்கறை நிறைந்ததாகும்.

**"விறைத்துக்**

**கிடக்கிறது இரவு**

**கறுப்புடை அணிந்த**

**காற்று கடந்து கொண்டிருக்கிறது**

**வீதிகளை**

**சென்னையில்**

**தண்ணீர் இறந்து விட்டது**

**அடக்கம் செய்யும் முன்**

**அதன்**

**சடலத்தைக் குளிப்பாட்ட வேண்டுமே**

**அதற்கென்ன வழி"**

என்று இந்தியப் பெருநகரங்களில் நிலவிடும் தண்ணீர்ப் பஞ்சத்தினை சென்னை மாநகர் மூலம் சூழலியல் அக்கறையோடு பதிவு செய்கின்றார். நீர்நிலைகளைச் சரிவர பராமரிக்காமற் காங்கீரிட் காடுகளாகக் கட்டிடங்களை எழுப்பி வருவதே இதற்குக் காரணம் என்கின்றார். 'கடல் வாங்கப் போனவர்கள்' கவிதையில் பூமியை மாசடையச் செய்து விட்டதால் கடலில் ஊர்கள், நகரங்கள் எழுப்பிட விளம்பரங்கள் செய்யப்படுவதாக அங்கதமாகத் தெரிவிக்கின்றார். புவியைப் 'பிளாட்' போட்டு காங்கீரிட் கட்டிடங்களை எழுப்பியவர்கள் கடலையும் 'பிளாட்' போட்டு விற்கத் துடிப்பதையும், பண முதலைகள் அதை வாங்கிடத் துடிப்பதையும் எள்ளலாகப் பதிவு செய்கின்றார்.

**"நீலக்கடல்**

**ஏலம் விடப்படுகிறது**

**அப்படியே முழுவதும் வாங்கிக் கொள்ள**

**வசதி படைத்தோர் முன் வரலாம்**

**வாய்ப்பு அதற்கில்லையெனில்**
**கடல்**
**தேவையான அளவு கத்தரித்தும்**
**விலைக்குத் தரப்படும்**
**ஆவலுடையோர் முந்திக் கொள்ளலாம்**
**கடல்**
**ஏலத்துக்கு வருகிறது என்று தெரிந்தும்**
**பண முதலைகள்**
**“மொத்தமாக வாங்கி அதனைப்**
**பிரித்து விற்றால்**
**கொள்ளை இலாபம் அடிக்கலாமே”**
**ஆசைக் கடலுக்குள் விழுந்து**
**அவசரப்பட்டனர்**
**நீர்மனைக் குடியிருப்புகளின்**
**வரைபடங்களை வல்லுனர்கள் ஆயத்தம் செய்து**
**விற்கத் தொடங்கினார்”**

என்று கடல் நிலம் வாங்கும் ஆசையில் குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கியும், நிலபுலன்களை அடகு வைத்தும், சொத்துப் பத்திரங்களை விற்றும், வீடுகள் மேல் கடன் வாங்கியும் ஆசைப்பட்டு மக்கள் ஓடோடி செல்கின்றனர். அதிகம் ஏலம் கோருபவர்களுக்குத் தீவுகள் இலவச இணைப்புகளாகத் தரப்படுமென என்னும் விளம்பர வாசகம் மக்களை மேலும் சுண்டியிழுக்கின்றது.

**“மீன்வளம் மிகுந்த கடல் பகுதிக்குத்**
**தனி விலை வைத்து**
**அடுத்த விளம்பரம் வெளிவந்தது**
**பெருந் தொழில் நிறுவனங்கள்**
**எந்த விலையானாலும் ஆசை கொண்டு**
**வலைகளை வீசின**
**கடல்**
**ஏலத்துக்கு வருகிறது என்றதும்**
**எங்கிருந்தோ மக்கள் கடற்கரையில்**
**அலை மோதினர்”**

என்று நீலக்கடலை வாங்குவதற்குப் பெரு நிறுவன முதலாளிகளும், மக்களும் அணி திரண்டு வந்து கடற்கரையில் குவிந்து கடலுள் இருக்கும் விற்பனை அலுவலகத்திற்குச் சென்று முன்பதிவிற்குப் பணம் கொடுப்பதாகக் கிண்டலாகத் தெரிவிக்கின்றார். கடலும் மனைகளாக மாற்றப்படும் அவலம் வெகு தூரத்தில் இல்லையென்பதே இக்கவிதை வாயிலாகத் தமிழன்பன் முன்வைக்கும் சூழலியல் சிந்தனையாகும். துபாய் போன்ற வளைகுடா நாடுகளில் கடலில் மனைகள் எழுப்பப்பட்டு வருவது கண்கூடான உண்மையாகும். இது தமிழ்நாடு போன்ற கடற்கரை மாநிலங்களில் நிகழ்ந்திட எதிர்காலத்தில் வாய்ப்புண்டு. பூமியை அழித்திட்ட

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

பகாசூரர்கள் எதிர்காலத்தில் கடலை அழித்திடத் துடிப்பதும் இக்கவிதையில் அங்கதமாக சித்திரிக்கப்படுகின்றது.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் 'ஏரியின் கதை' என்னும் கவிதையில் தொழிற்சாலைகளை எழுப்பிட பல்லாண்டுகளாய் மக்களின் நீர் ஆதாரமாகவும், பறவைகளின் வேடந்தாங்கலாகவும் இருந்த ஏரி கல்லும், மண்ணும், காங்கீரிட் கலவையும் கொட்டப்பட்டு அழிக்கப்பட்டு வருதலைச் சூழலியல் ஆதங்கத்துடனும், அக்கறையுடனும் பதிவு செய்கின்றார்.

**"ஏரியில்**
**கற்களைக் கொண்டு வந்து கொட்டினார்கள்**
**தொழிற்சாலை வரைபடத்தோடு**
**தொப்பி போட்ட ஆசாமி அங்கும் இங்கும்**
**பார்வையைப் பரப்பிக் கொண்டிருந்தார்**
**மறுபடியும்**
**காரை கலக்கும் இயந்திரம்**
**பொடிப் பொடியான சல்லிக் கற்கள்**
**கற் சாந்துப் பொடி**
**பொறியாளர் மேத்திரிகள் சத்தம்..........**
**ஏரி அதிர்ந்த போது**
**என் இரவின் குருதி பெருக்கெடுத்தது**
**வெளியே பாய்ந்தது"**

என்று மீன்களுக்கும், நாரை, கொக்குகளுக்கும் உறைவிடமாக விளங்கிய ஏரி மூடப்பட்டு சமாதியாகிப் போன அவல நிலையினைக் காட்டுகின்றார். ஏரியின் அழிவு பற்றியும், அரசாங்கப் பத்திரப் பதிவுகளில் அது இருந்த தடம் பற்றியும் தடயங்கள் ஏதுமின்றி செய்யப்படுகின்றன.

**"ஏரி**
**இறந்ததை அரசாங்கம்**
**எந்த ஏட்டிலும் பதிவு செய்யவில்லை**
**பறவைகள் மீன்கள் கொக்குகள் வாழ்வாதாரம்**
**இழந்தது பற்றி எந்த விவாதமும் பாராளுமன்றத்தில் இல்லை**
**வெட்டுண்ட மரங்களின் எண்ணிக்கையும்**
**அதை வெளியிடக் கேட்டு எழுதியதால்**
**வெட்டுண்ட விரல்களின் எண்ணிக்கையும் இதுவரை**
**வெளிப்படவில்லை**
**இப்போது**
**புதிய தொழிற்சாலை உச்சியில்**
**புகை..........**
**எரியும் ஏரியின் சடலத்திலிருந்து**
**வானத்து மார்பில் படர்கிறது"**

என்று ஏரிகளை அழித்து உருவாக்கப்பட்ட இடங்களில் தொழிற்சாலைகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. நீர் வாழிடங்களை அழிக்க, அழிக்க புயல், மழை போன்ற இயற்கை சீற்றங்களினால் பல இன்னல்களை மக்கள் சந்திக்க நேரிடுமென எச்சரிக்கை நல்குகின்றார்.

நீர் வாழிடங்களான கடல், ஏரிகள் மானுட பேராசையால் தூர்க்கப்பட்டு வருவதையும், இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து தண்ணீர் பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டியிருப்பதையும் தமிழன்பன் சூழல் மொழியில் தெரிவிக்கின்றார்.

**காற்று மாசு**

தொழிற்சாலைகள், வாகனப் பெருக்கம், நகர்மயமாதல் ஆகியவை காரணமாகக் காற்றில் புகை மாசுகளும், ஒலி மாசுகளும் ஏற்படுத்தப்படுகின்றன. டெல்லி போன்ற பெருநகரங்களில் காற்றின் தரக் குறியீடு மோசமான நிலையை எட்டியிருப்பது கவனிக்கத்தக்கது. முகக்கவசம் அணிந்தும், காற்று வடிகட்டியை வீடுகளில் அமைத்தும் வாழ்ந்திடும் சூழல் நிலவுகின்றது. இந்தியாவின் பெருநகரங்களில் எல்லாம் காற்றின் தரக் குறியீடு எண் மோசமான நிலையிலே அமைந்துள்ளன. காற்று மாசுபாட்டின் காரணமாக ஓசோன் படலத்தில் துளையும், அதன் காரணமாக வெப்பநிலை உயர்வு போன்ற பருவ கால மாறுபாடுகளும் உருவெடுத்து வருகின்றன.

ஈரோடு தமிழன்பன் ‘குறியீடுகள்’ என்னும் கவிதையில் வாகனத் தயாரிப்பு தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் ரசாயன வேதிம வாடையால் காற்று மோசமடைந்து போவதையும், பூக்களில் வேதிம நஞ்சுகள் படர்ந்து பட்டாம் பூச்சிகளும், தும்பிகளும் அமர்ந்து தேனருந்த முடியாத அளவிற்குப் பாதிக்கப்பட்டிருப்பதையும் தெரிவிக்கின்றார்.

**“புகை நெருப்பு வண்ணப்பிழம்புகள் உருகல்**
**இளகல் இறுகல் வார்த்தல் வடித்தல்**
**மின்விசைப் பொத்தான்கள் கைப்பிடிகள் - என**
**இயக்கு நிலை கேந்திரங்களும், இயங்கு தளங்களும்**
**உற்பத்தி உற்சவங்களில் - இலாப உச்சரிப்புகளில்**
**வாகனத் தொழிற்சாலைக்கு வெளியே மாலையில்**
**சோதனையிடப்பட்ட சோற்றுப் போசியோடு**
**வருபவரை எதிர்பார்க்காத**
**பச்சைப் பசேல்  புல்வெளி, செடி கொடிகள், நீரூற்றுகள்**
**வேதிம வாடையால் தடித்த காற்று**
**தடவிச் செல்லும்**
**பட்டாம் பூச்சிகள், தும்பிகள்**
**பூக்களின் நஞ்சு**
**பருக உட்காரும் நொடிகளில்**
**மரணத்தின் கைகளில் இருந்து உதிரும்**
**கால், அரை, முக்கால், முற்றுப் புள்ளிகள்”**

என்று வாகனத் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் ரசாயனப் புகைகளால் காற்று தடித்து மாசுபட்டுப் போவதையும், பூக்களில் கூட தேனெடுக்க முடியாமற் பட்டாம்பூச்சிகளும், தும்பிகளும் மரணித்துப் போய் விடுவதையும் தெரிவிக்கின்றார்.

**முடிவுரை:**

*'நதி திருடி நாடு திருடுபவர்கள்'* என்ற கவிதை, இயற்கை வளங்களை சுரண்டுவதால் ஏற்படும் ஆபத்துகளையும், நதிகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகிறது. நதியை அழிப்பது என்பது ஒரு நாட்டின் உயிரையும், எதிர்காலத்தையும் அழிப்பதற்கு சமம் என்பதை இந்தக் கவிதை உணர்த்துகிறது. இயற்கையைப் பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பு என்பதையும், நதிகளை காப்பதன் மூலம் நாட்டின் வளத்தையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க முடியும் என்பதையும் இந்தக் கவிதை தெளிவாக எடுத்துரைக்கிறது. இதுவே இந்தக் கவிதையின் முக்கியமான கருத்தாகும்.

**பார்வைநூல்கள்**:

[1]. மாற்று மனிதம்– கவிதை புதிய சமூகக் கண்ணோட்டம். (Wikipedia)

[2]. வணக்கம், வள்ளுவ! 2000 கவிதை திருவள்ளுவரைப் போற்றும் கவிதைத் தொகுப்பு; 2004-ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமி விருது பெற்றது. (Sahitya Akademi)

[3]. கனாக் காணும் வினாக்கள் – கவிதை சிந்தனையைத் தூண்டும் கவிதைகள். (Wikipedia)

[4]. இன்னும் சில வினாக்கள் – கவிதை சமூக, கல்வி, மனிதநேயம் சார்ந்த கேள்விகளை எழுப்பும் கவிதைகள். (Wikipedia)

[5]. கீழடியில் கேட்ட தாலாட்டுகள் – கவிதை தமிழர் பண்பாடு மற்றும் வரலாற்றை மையமாகக் கொண்டது. (Wikipedia)

[6]. வள்ளிச் சந்தம் – கவிதை மரபும் புதுமையும் இணைந்த கவிதைகள். (Wikipedia)

Reference Works:

[1.] Maatru Manitham – Poetry – A new social perspective. (Wikipedia)

[2.] Vanakkam, Valluva! – 2000 – Poetry – A collection of poems praising Thiruvalluvar; won the Sahitya Akademi Award in 2004. (Sahitya Akademi)

[3.] Kanaa Kaanum Vinaakkal – Poetry – Thought-provoking poems. (Wikipedia)

[4.] Innum Sila Vinaakkal – Poetry – Poems raising questions regarding society, education, and humanism. (Wikipedia)

[5.] Keezhadiyil Ketta Thaalaattukal – Poetry – Centered on Tamil culture and history. (Wikipedia)

[6.] Valli Sandham – Poetry – Poems blending tradition and modernity. (Wikipedia)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 71.திருமந்திரத்தில் பஞ்சபூத தத்துவமும் யோக சுற்றுச்சூழலும் — ஒப்பீடு

**மீ. எலிசபெத் ஜனூல் மகரிபா**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி- 620 002, Mail ID: elizabeth2002maharifa@gmail.com
Mobile No: 9940761093, https://orcid.org/0009-0001-0072-5277
ஆய்வு நெறியாளர்: **முனைவர் ஆ.தேவதா**
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி- 620 002
Mail ID: thevathaa@gmail.com
Mobile No:9443444072, https://orcid.org/0009-0000-5361-4848

**ஆய்வுச்சுருக்கம்**

திருமூலர் இயற்றிய திருமந்திரம் தமிழ் சைவ மரபில் தனித்துவமான ஆன்மீக — தத்துவ நூல். இந்நூல் சுற்றுச்சூழலை வெறும் புறப் பொருளாகக் காணாமல், சிவதத்துவத்தின் உடலாகவும், யோக அனுபவத்தின் கண்ணாடியாகவும் விளக்குகிறது. பஞ்சபூத (மண், நீர், தீ, காற்று, ஆகாயம்) தத்துவம் புற இயற்கையின் கட்டமைப்பாக மட்டுமல்ல, யோக உடலின் சக்கரங்கள், நாடிகள், பிராண வாயுக்கள் என்று அக நிலைகளாகவும் விரிவடைகிறது. இக்கட்டுரை பஞ்சபூத தத்துவத்தையும் யோக சுற்றுச்சூழல் கோட்பாட்டையும் ஒப்பிட்டாய்ந்து, திருமூலரின் சமவெளி — ஆழ் நோக்கை (macro-micro correspondence) நிறுவுகிறது.

**திறவுச்சொற்கள்**

பிராண வாயு - மூச்சுக்காற்று, தனிமங்கள் - பிரிக்க முடியாத அடிப்படை பொருட்கள், சுவாதிஷ்டான சக்கரம் - மனித உடலில் இயங்கும் ஒருவகை சக்கரம், சிதாகாயம் - அறிவின் வெளிப்பாடு, குண்டலினி – மனித உடலின் உயிர்ச்சக்தி அல்லது ஆன்மீக ஆற்றல்.

**முன்னுரை**

பக்தி இலக்கியத்தின் வழி சுற்றுச்சூழலை அணுகும் காரணம், பக்திக்கும் தற்போதைய கால நிலைக்கும் இடையே உள்ள பழங்கால தொடர்பை விளக்குவதே ஆகும். நாகரீக வளர்ச்சிக்கு முன்பே மனிதன் இயற்கையோடு தன்னை இணைத்துக் கொண்டு வாழத் தொடங்கி விட்டான். ஏனெனில் பிரபஞ்சக் கோட்பாட்டில் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களும் சமம் தான். இதைத் தான் இறைவனை மையமாக வைத்துப் பக்தி இலக்கியமும் இயற்கையை மையமாக வைத்துச் சுற்றுச்சூழல் வாழ்வியலும் எடுத்துரைக்கின்றது. திருமந்திரம் ஒன்பது தந்திரங்களையும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களையும் கொண்ட சைவ சித்தாந்த மகா நூல். திருமூலர் ஒரு சித்தராக மட்டுமல்ல, ஒரு ஆழமான இயற்கை ஞானியாகவும் இந்நூலில் விளங்குகிறார். அவர் சுற்றுச்சூழலை — மலை, நதி, காடு, வானம், மழை — வெறும் புறப்

பின்னணியாக மட்டுமல்ல, சிவத்தின் திருமேனியாகவும் யோக உடலின் படிமங்களாகவும் காண்கிறார்.திருமந்திரத்தில் உள்ள சுற்றுச்சூழல் சிந்தனை இன்றைய நவீன சுற்றுச்சூழல் தத்துவத்துடன் (Environmental Philosophy) ஒப்பிடும்போது, ஒரு மாற்று ஞான மரபின் ஆழமான பார்வையை வெளிப்படுத்துகிறது என்பதை இவ்ஆய்வுக் கட்டுரை நிறுவ முற்படுகிறது.

**சுற்றுச்சூழல்:**

நம்மைச் சுற்றியுள்ள அனைத்து உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களும் சுற்றுச்சூழலுள் அடங்கும். **"உயிரினங்களும் அவை வாழும் பகுதியில் உள்ள காற்று, நீர் போன்றவையும் அடங்கிய இயற்கை அமைப்பு"** [1] சுற்றுச்சூழல் என க்ரியாவின் தற்கால தமிழகராதி விளக்குகிறது.

**இலக்கியங்களில் சுற்றுச்சூழல் விழுமியங்கள்:**

**1.1தொல்காப்பியம்**

உலகமானது ஐம்பூதங்களின் கட்டமைப்பால் உருவாக்கப்பட்டது என்பதனை

**"நிலம் தீ நீர் வளி**
**விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்"**[2]

**(தொல்.மரபி.635)**

எனத் தொல்காப்பிய நூற்பா விளக்குகிறது.

இதுதான் இயல்பு என ஒரு பொருளை உறுதியோடு கூறுவது தான் இயற்கை.

**"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்"**[3]

(தொல்.கிளவி.19)

எனவும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

**1.2சங்கப்பாடல்:**

இயற்கையின் அம்சங்கள் ஆகிய ஐம்பூதங்கள் அளவிட முடியாத தன்மைகளைக் கொண்டவை.

**"இருமுந்நீர் குட்டமும் வியல்ஞாலத்து அகலமும்**
**வளிவழங்கு திசையும் வறிதுநிலைய காயமும்**
**என்றாங்கு அவை அளந்து அறியினும்.."**[4]

**(புறம்.20:1-5)**

என்று புறநானூறு புலப்படுத்துகின்றது.

**1.3பக்தி இலக்கியம்:**

இயற்கைதான் இறைவன். அன்பு எனும் மனிதப் பண்பு தான் இயற்கையைப் பேணிக்காக்கும் வழிமுறையாகும்.

**".. அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**

**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே”**

**(திரும.பா.270)**

புல்லாகி பூடாகி புழுவாகி என ஒவ்வொரு உயிரையும் வகுத்த மாணிக்கவாசகர் இறைவன் விண்ணைப் போன்று இந்த உலகில் பரந்து பட்டவர் எனக் கூறுகிறார்.

**“பாரோடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே”** [5]

**(திருவா.பதி.8)**

**“வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய்
இன்மையுமாய்..”** [6]

**(திருவா.பா.15)**

இறைவன் வானாகவும், மண்ணாகவும், காற்றாகவும், ஒளியாகவும், உடலாகவும் அந்த உடலின் உயிராகவும் விளங்குகிறார். இந்த உலகில் படைக்கப்பட்ட அனைத்து உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்கள் எல்லாம் இறைவன் தான் என மாணிக்கவாசகர் சுட்டுகிறார்.

### திருமந்திரத்தில் பஞ்சபூதத் தத்துவம்

### 2.1 அடிப்படைக் கோட்பாடு

திருமூலர் பஞ்சபூதங்களைச் சிவனின் திருமேனியாக நேரடியாக அறிவிக்கிறார். இந்த ஐம்பூதங்கள் வெறும் பொருண்மைத் தனிமங்கள் (physical elements) மட்டுமல்ல — அவை சிவனின் சக்தி வெளிப்பாடுகள்:

**“அஞ்செழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
*அஞ்செழுத்தாற் பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தால்இவ் வகலிடந் தாங்கினன்
அஞ்செழுத்தாலே அமர்ந்து நின்றானே”***

**(திரும.பா.966)**

என்ற இப்பாடல் மூன்று நிலைகளில் சிவனையும் பஞ்சபூதங்களையும் இணைக்கிறது: (1) சிவன் பஞ்சபூத மேனியை உடையவன், (2) அவனே அவற்றை இயக்குபவன், (3) அவனே அவற்றில் நிறைந்தவன் — இது வியாப்தி (pervasion), நியமனம் (governance), உடலாக்கம் (embodiment) என்ற மூவகை உறவைக் காட்டுகிறது.

### 2.2 ஐம்பெரும்பூதங்களின் — தத்துவ விரிவாக்கம்

### 2.2.1 மண் (பிருதிவி)

மண் என்பது திருமூலர் நோக்கில் தாங்குதலின் (dharana shakti) அடையாளம். உயிர்கள் பிறக்கும் தாய்மடி, வாழும் தளம், மடியும் இடம் — எல்லாமே பூமி. யோக நிலையில் மூலாதார சக்கரத்துடன் இணைந்து, உயிரின் ஆதார ஆற்றலைக் குறிக்கிறது. மண்ணின் குணமாகிய நிலைத்தன்மையும் பொறுமையும் சிவனின் ஸ்திரத்தன்மையின் வெளிப்பாடே.

**“மண்ஒன்று தான்பல நற்கலன் ஆயிடும்
உள்நின்ற யோனிகட்கு எல்லாம் ஒருவனே”**

**(திரும.2351)**

எப்படி இந்த உலகில் பல உயிர்கள் இருக்கின்றனவோ அது மாதிரி தான் மண் என்ற அடிப்படைப் பொருளை பல வகைப் பாத்திரங்களாக மாற்றுகின்றனர்.

**2.2.2 நீர் (அப்பு)**

நீரை திருமூலர் அருளின் ஓட்டமாகப் பார்க்கிறார். மழை பெய்வது இறைவனின் அன்பு இறங்குவதன் குறியீடு.

**"விண்ணின்று இழிந்து வினைக்குஈடாய் மெய்கொண்டு**
**தண்நின்ற நாளைத் தலைக்காவல் முன்வைத்து.."**

**(திரும.பா.113)**

இங்கு மழை என்பது வெறும் இயற்கை நிகழ்வல்ல — அது சிவகிருபையின் சாட்சாத் (direct) வெளிப்பாடு. நீரின் தூய்மை, ஓட்டம், உயிரூட்டும் தன்மை — இவை யோக நிலையில் சுவாதிஷ்டான சக்கரத்தோடு இணைகின்றன.

**2.2.3 தீ (தேயு / அக்னி)**

தீ என்பது திருமந்திரத்தில் மிக முக்கியமான பூதம். அது இரண்டு நிலைகளில் செயலாற்றுகிறது — அஞ்ஞானத்தை எரிக்கும் ஞானாக்னியாக, மற்றும் சிவனை நேரடியாகக் காட்டும் வடிவமாக

**"வாய் ஒன்று சொல்லி மனம் ஒன்று சிந்தித்து**
**நீ ஒன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்**
**தீ என்று இங்கு உன்னைத் தெளிவன் தெளிந்தபின்**
**பேய் என்று இங்கு என்னைப் பிறர் தெளியாரே"**

**(திரும.பா.1683)**

தீயில் சிவலிங்கம் தெரிகிறது என்பது ஒரு யோக அனுபவ வாக்கியம். மணிபூரக சக்கரத்தோடு தொடர்புடைய தீ தத்துவம் — விருப்ப சக்தியையும் (will power) செயல்படும் ஆற்றலையும் குறிக்கிறது.

**2.2.4 காற்று (வாயு)**

காற்று திருமூலருக்கு மிக நெருக்கமான பூதம் — ஏனெனில் யோகத்தின் சாரம் பிராணாயாமம் (காற்று கட்டுப்பாடு). காற்றை கட்டுப்படுத்துவதன் மூலம் கால மரணத்தையும் வெல்லலாம் என்ற புரட்சிகரமான கருத்தைத் திருமூலர் முன்வைக்கிறார்.

**"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவாரில்லை**
**காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவாளர்க்குக்**
**கூற்றை உதைக்கும் குறியது நாமே"**

**(திரும.பா.571)**

காற்று என்பது புறத்தில் வாயுமண்டலம் (atmosphere); அகத்தில் பஞ்ச பிராண வாயுக்கள் — பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன். அனாஹத சக்கரத்தோடு இணைந்த இந்த பூதம் அன்பு, இயக்கம், உயிர்ப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது.

### 2.2.5 ஆகாயம் (சிதாகாயம்)

ஐந்து பூதங்களில் ஆகாயம் மிக உயர்ந்தது. திருமூலர் வெறும் வானவெளியை மட்டுமல்ல — சிதாகாயம் என்ற சிவத்தின் சூன்யத்தையும் சேர்த்து விளக்குகிறார். வெளி (space) என்பது எல்லாவற்றையும் தாங்கும் — அதுபோல் சிவம் எல்லாவற்றையும் உள்ளடக்கியது.

**"ஆகாயம் ஆதி சதாசிவ ஆதிஎன்**
**போகாத சத்தியுள் போந்துஉடன் போந்தனர்.." 12**

**(திரும.பா.400)**

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

### 2.3 பஞ்சபூத அட்டவணை

| பூதம் | புற இயற்கை | யோக உடல் | சக்கரம் |
|---|---|---|---|
| மண் | பூமி, மலை | எலும்பு, தசை | மூலாதாரம் |
| நீர் | நதி, மழை, கடல் | இரத்தம், நீர்மம் | சுவாதிஷ்டானம் |
| தீ | சூரியன், அக்னி | ஜடராக்னி, வெப்பம் | மணிபூரகம் |
| காற்று | வாயுமண்டலம் | பிராண வாயுக்கள் | அனாஹதம் |
| ஆகாயம் | வானவெளி | மனவெளி, சிதாகாயம் | விசுத்தி / சகஸ்ரார் |

## 3. திருமந்திரத்தில் யோக சுற்றுச்சூழல்

### 3.1 உடல் என்னும் சுற்றுச்சூழல்

திருமூலரின் மிக புரட்சிகரமான கருத்து — உடல் இழிவானது என்ற நம்பிக்கையை முற்றிலும் மறுப்பதாகும். உடல் என்பது சிவனை அடையும் கருவி, அதனால் அதைப் பேணவேண்டும்.

**"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"**

**(திரும.பா.724)**

இந்த ஒரே பாடலில் திருமூலர் யோக சுற்றுச்சூழல் தத்துவத்தின் சாரத்தை விளக்குகிறார். உடல் என்னும் நுண்ணிய சுற்றுச்சூழலைப் பேணுவதே ஆன்மீக வளர்ச்சிக்கு அடிப்படையாகும்.

### 3.2 நாடிகள் — உள்ளே ஓடும் நதிகள்

திருமூலர் யோக உடலில் 72,000 நாடிகள் இருப்பதாகக் கூறுகிறார். அவற்றில் மூன்று முதன்மையானவை — இடகலை, பிங்கலை, சுழுமுனை. இவற்றை புறத்தில் உள்ள ஆறுகளுக்கு ஒப்பிடலாம்: இதனை,

> **"எல்லாக் கலையும் இடை பிங்கலை நடுச்**
> **சொல்லா நடுநாடியூடே தொடர் மூலம்.."**

**(திரும.பா.857)**

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

| யோக நாடி | இயற்கை படிமம் | செயல் / பண்பு |
|---|---|---|
| இடகலை | சந்திரன் / இடது நதி / குளிர் நீர் | குளிர்ச்சி, அமைதி, ஞான சக்தி |
| பிங்கலை | சூரியன் / வலது நதி / வெப்ப நீர் | வெப்பம், செயல், கிரியா சக்தி |
| சுழுமுனை | மேரு மலை / கங்கை சங்கமம் | இரண்டின் ஒன்றிணைவு — மோட்சம் |

புறத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி சங்கமிக்கும் பிரயாக் — அக நிலையில் இம்மூன்று நாடிகள் சுழுமுனையில் சங்கமிக்கும் யோக நிலை. புற இயற்கையும் அக யோகமும் ஒரே கட்டமைப்பைக் கொண்டுள்ளன என்பதைத் திருமூலர் இங்கு காட்டுகிறார்.

### 3.3 பிராணன் — அக காற்று

புறத்தில் உள்ள காற்று உயிர்களை வாழவைக்கிறது. அதுபோல் அகத்தில் பிராணன் ஆன்மாவை நிலைநிறுத்துகிறது. திருமூலர் பிராணாயாமத்தை — காற்று கட்டுப்பாட்டை — யோகத்தின் மையமாக கொண்டு விரிவாக விளக்குகிறார்.

> **"பிராணன் மனத்தொடும் பேராது அடங்கிப்**
> **பிராணன் இருக்கின் பிறப்புஇறப்பு இல்லை.."**

**(திரும.பா.567)**

காற்றை (பிராணனை) கட்டுப்படுத்தும்போது மனம் ஆகாயம் போல் விரிகிறது — இதுவே சிவத்தோடு இணைவதற்கான பாதை. புறக் காற்றும் அகக் காற்றும் ஒரே மூலத்திலிருந்து வருவதால், இயற்கையை அறிவதும் ஆன்மாவை அறிவதும் ஒரே பயணமே.

### 3.4 குண்டலினி — அக நெருப்பு

திருமந்திரத்தில் குண்டலினி சக்தியை நாகத்தின் படிமத்தில் வருணிக்கிறார். நாகம் காட்டில் சுருண்டு படுத்திருக்கும் — அதுபோல் சக்தி மூலாதாரத்தில் சுருண்டுள்ளது:

**"தலைப்பட்டவாறு அண்ணல் தையலை நாடி**
**வலைப்பட்ட பாசத்து வண்பினை மான்போல்**
**துலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்**
**விலைக்குஉண்ண வைத்ததோர் வித்துஅது ஆமே"**

**(திரும.பா.660)**

குண்டலினி எழும்போது உடல் தீ போல் வெப்பமடைகிறது; சகஸ்ராரம் சேரும்போது மழை போல் அமுதம் சுரக்கிறது. இந்த படிமங்கள் — தீ, மழை — புற இயற்கையிலிருந்து எடுக்கப்பட்டவை. யோக அனுபவத்தை புற இயற்கையின் வழியாகவே திருமூலர் விளக்குகிறார் என்பது இங்கு தெளிவாகிறது.

## 4. பஞ்சபூதமும் யோக சுற்றுச்சூழலும் — ஒப்பீட்டாய்வு

### 4.1 புறமும் அகமும் — இரட்டைப் பார்வை

திருமந்திரத்தின் மிக மதிப்புமிக்க பங்களிப்பு, புற இயற்கையையும் அக யோகத்தையும் இரு தனித்தனி மண்டலங்களாகப் பார்க்காமல் — ஒரே சிவதத்துவத்தின் இரு வெளிப்பாடுகளாகக் காட்டுவது. இதை 'சம வெளி — ஆழ் நோக்கு' (Macro-Micro Correspondence) என்று அழைக்கலாம்.

| பஞ்சபூதம் | புற இயற்கை (சம வெளி) | யோக உடல் (ஆழ் நோக்கு) |
|---|---|---|
| மண் | மலை நிற்கிறது — நிலைத்தன்மை | மூலாதாரம் விழிப்படைகிறது |
| நீர் | மழை பெய்கிறது — அருள் இறங்குகிறது | சுவாதிஷ்டானம் — படைப்பாற்றல் விழிப்பு |
| தீ | சூரியன் எரிகிறது — ஒளி பரவுகிறது | குண்டலினி எழுகிறது — ஞானாக்னி |
| காற்று | நதி ஓடுகிறது — இயக்கம் தொடர்கிறது | நாடிகள் தெளிகின்றன — அனாஹதம் |
| ஆகாயம் | வெளி விரிகிறது — எல்லாம் தாங்குகிறது | சிதாகாயம் திறக்கிறது — சகஸ்ரார் |

### 4.2 ஒற்றுமைகள்

பஞ்சபூத தத்துவமும் யோக சுற்றுச்சூழலும் பல அடிப்படைகளில் ஒற்றுமைப்படுகின்றன.

- முதலாவது, இரண்டும் சிவனை மையமாகக் கொண்டவை. பஞ்சபூதங்கள் சிவனின் வெளிப்பாடு என்றால், யோக உடலும் சிவனை அடைவதற்கான கருவி. இரண்டிலும் சிவம் ஊடுருவி நிற்கிறான் — வியாப்தி என்ற தத்துவம் இங்கு பொதுவானது.
- இரண்டாவது, இரண்டும் படிநிலை அமைப்பைக் (hierarchical structure) கொண்டுள்ளன. மண் முதல் ஆகாயம் வரை பூதங்கள் நுண்மையடைவது போல், மூலாதாரம் முதல் சகஸ்ரார் வரை சக்கரங்கள் உயர்கின்றன. ஒரே ஏற்பு நிலை (ascending order) இரண்டிலும் காணப்படுகிறது.
- மூன்றாவது, இரண்டும் மாற்றம் (transformation) என்பதை முன்னிலைப்படுத்துகின்றன. பூதங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றுவது போல், யோகியின் உணர்வு படிப்படியாக மாறி சிவத்தோடு ஒன்றுகிறது.

### 4.3 வேறுபாடுகள்

பஞ்சபூத தத்துவம் முதன்மையாக உண்மை (ontology) பற்றியது — உலகம் எவ்வாறு இயங்குகிறது? என்ற கேள்விக்கு விடை தருகிறது. யோக சுற்றுச்சூழல் கோட்பாடோ முதன்மையாக அனுபவம் (phenomenology) பற்றியது — 'ஒருவன் சிவத்தை எவ்வாறு அனுபவிப்பான்?' என்ற கேள்விக்கு விடை தருகிறது.

பஞ்சபூத தத்துவம் புறத்திலிருந்து அகத்திற்கு வருகிறது (outside-in); யோக சுற்றுச்சூழலோ அகத்திலிருந்து புறத்திற்கு விரிகிறது (inside-out). ஆனால் திருமூலர் இரண்டையும் ஒரே இடத்தில் இணைக்கிறார் — அதுவே திருமந்திரத்தின் தனிச்சிறப்பு.

## 5. நவீன சுற்றுச்சூழல் தத்துவத்துடன் ஒப்பீடு

இன்றைய சுற்றுச்சூழல் தத்துவம் (Environmental Philosophy) இயற்கையை ஒரு சுயாதீன மதிப்பு (intrinsic value) உடையதாகப் பார்க்கிறது — அது மனிதனுக்குப் பயனுள்ளதால் மட்டும் மதிப்பற்றது என்கிறது. இந்த கருத்தே திருமூலரிடம் 3,000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது.ஆழ் சுற்றுச்சூழல் (Deep Ecology) என்ற நவீன தத்துவம் மனிதன் இயற்கையிலிருந்து வேறுபட்டவன் அல்ல, அதன் ஒரு பகுதி என்று வலியுறுத்துகிறது. திருமூலரும் இதையே கூறுகிறார் — ஆனால் மேலும் சென்று, இயற்கையும் மனிதனும் இருவரும் சிவத்தின் வெளிப்பாடே என்று நிறுவுகிறார்.

**"தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்.."**

**(திரும.பா.2610)**

'சராசரம்' (அசையும் — அசையாத எல்லாமே) சிவமாகிறது — இது Biocentric அல்ல, Theocentric Ecology. எல்லாமே கடவுளின் வெளிப்பாடு என்பதால், எல்லாவற்றையும் மதிக்கவேண்டும், பேணவேண்டும்.

**முடிவுரை**

திருமந்திரத்தில் பஞ்சபூத தத்துவமும் யோக சுற்றுச்சூழலும் இரண்டு தனித்தனி அமைப்புகளல்ல — ஒரே சிவதத்துவத்தை புறத்திலும் அகத்திலும் விளக்கும் இரு பார்வைகள். திருமூலர் சொல்வதை ஒரு வாக்கியத்தில் சுருக்கலாம். **புற இயற்கையை அறிவதும் அக ஆன்மாவை அறிவதும் ஒரே பயணம் — இரண்டும் இறைவனை நோக்கிய பயணமே.** மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்கள் வெறும் இயற்கை தனிமங்கள் மட்டுமல்ல — அவை மூலாதாரம் முதல் சகஸ்ரார் வரையிலான யோக உடலின் படிநிலைகளும்கூட. சூரியனும் சந்திரனும் பிங்கலை — இடகலை நாடிகளாகிறது; மழையும் அமுதமும் ஒரே கிருபையின் வெளிப்பாடுகளாகிறது. நதி ஓட்டமும் பிராண வாயு ஓட்டமும் ஒரே இயக்கத்தின் இரு வடிவங்களாகிறது. இன்றைய காலகட்டத்தில் சுற்றுச்சூழல் அழிவும் யோக மரபு மறைவும் இணைந்த நெருக்கடியாகக் காணப்படுகிறது. திருமந்திரம் இந்த இரண்டையும் ஒரு தத்துவத்தில் இணைத்து, புற இயற்கையையும் அக யோகத்தையும் ஒரே நேரத்தில் காக்கவேண்டும் என்ற ஆழமான செய்தியை நமக்கு விட்டுச் சென்றிருக்கிறது. திருமூலர் வெறும் சித்தர் மட்டுமல்ல — அவர் உலகின் முதல் சுற்றுச்சூழல் ஞானியும்கூட.

**சான்றெண் விளக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | அகராதிக் குழுத் தலைவர் பேராசிரியர் இ.அண்ணாமலை, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி | பக்.616 |
| 2. | முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ் (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம். | நூ.635 |
| 3. | இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் சொல்லதிகாரம் | நூ.19 |
| 4. | முனைவர் ஆ.தட்சிணாமூர்த்தி (உரை), புறநானூறு | பா.20:;1-5 |
| 5. | கே.ஆர்.சுந்தரம் (உரை), திருவாசகம் மூலமும் உரையும் | பதி.8 |
| 6. | மேலது., | பா.15 |

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 72.எஸ்.ராமகிருஷ்ணன் நெடுங்குருதி நாவலில் சுற்றுச்சூழல்

**S.RAMAKRISHNAN NEDUNGURUTHI NOVALIL SUTRUSUZHAL**

**ந. சுவேதா,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, புனித சிலுவைக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620 002, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: 206175swetha@gmail.com, கைப்பேசி: +91 63740 05242
**ORCID: https://orcid.org/0009-0001-1345-5704**
**ஆய்வு நெறியாளர் : முனைவர் ஆ. தேவதா,**
ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை, புனித சிலுவைக் கல்லூரி (தன்னாட்சி) திருச்சிராப்பள்ளி – 620 002, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: thevathaa@gmail.com, கைப்பேசி: +91 94434 44072
ORCID: https://orcid.org/0009-0000-5361-4848

**ஆய்வுச் சுருக்கம்**

எஸ்.ராமகிருஷ்ணனின் 'நெடுங்குருதி' நாவல், ராமநாதபுரம் மாவட்டத்தின் வறண்ட நிலப்பரப்பை (குறிஞ்சி, முல்லை, பாலை நிலம்) மையமாகக் கொண்டு, வேம்பர்கள் எனப்படும் வேட்டைச் சமூகத்தின் தலைமுறை வாழ்வியலை, கோடை, மழை, குளிர் என இயற்கையின் கால மாற்றங்கள் மற்றும் களவுத் தொழில் சார்ந்து சித்தரிக்கும் ஒரு முக்கியமான புனைவாகும். இக்கால இலக்கியங்களில்; அதிகளவில் மக்களால் விரும்பிப் படிக்கக் கூடியதில்; புதினங்களும் ஒன்றாகும். அதில்; இன்றைய காலகட்டத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப புதினங்கள் எழுதும் திறம் படைத்தவர் எஸ்.ராமகிருஷ்ணன். இவர் புதினங்களில் மனிதர்களைப் பற்றி மட்டுமல்லாமல், அவர்கள் வாழும் நிலம், சூழலியல் மற்றும் இயற்கையோடு அவர்களுக்குள்ள உறவைப் பற்றியும் மிக ஆழமாகப் பேசுகிறார். இவரது நாவலில் சுற்றுச்சூழல் என்பது வெறும் கதைக்களமாக இல்லாமல், கதையின் ஆன்மாவாக இயங்குகிறது. இயற்கையை அவர் அழகியல்; பொருளாக பார்க்காமல், மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்திருப்பாக முன்வைக்கிறார்.

**முன்னுரை**

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"1 -** என்ற உயரிய சிந்தனை கொண்ட தமிழ் மரபில், இயற்கையை இறைவனாகவும் தாயாகவும் வணங்கும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. சங்க இலக்கியங்கள் இயற்கையை மனித வாழ்வோடு பிணைத்துக்காட்டின. ஆனால், இன்றைய தற்கால இலக்கியங்கள் இயற்கை எதிர்கொள்ளும் பேராபத்துக்களையும் மனிதனின் பேராசையையும் சுட்டிக்காட்டும் களம் நோக்கி நகர்ந்துள்ளன. மனிதனை மட்டுமே மையமாகக் கொண்ட சிந்தனையிலிருந்து விலகி, ஒட்டுமொத்தப் பூமியையும் அனைத்து

உயிரினங்களையும் மையமாகக் கொண்டு இயங்கும் **“சுற்றுச்சூழல் நோக்கு”** தற்கால இலக்கியங்களில் மிக முக்கியப் பாடுபொருளாக அமைந்துள்ளது.

தமிழ் நவீன இலக்கியத்தில் எஸ்.ராமகிருஷ்ணன் முக்கியமான படைப்பாளி. இவரின் **‘நெடுங்குருதி’** தமிழ் நாவல் வரலாற்றில் ஒரு மைல்கல். நிலப்பரப்பையும் மனிதர்களையும் தனித்தனியே பிரிக்காமல் மண்ணில் ஒரு பகுதியாகவே மனிதர்களைப் பார்க்கும் அரிய எழுத்துநடை இவருடையது. இந்நாவல், தென்தமிழகத்தின் வறண்ட நிலப்பகுதியில் வாழும் எளிய மக்களின் தலைமுறைத் துயரங்களையும், அவர்களின் நாடோடித் தன்மையையும் பேசுகிறது. இதில் வரும் நீரின் வறட்சி, வெயிலின் கொடுமை, மழையின்; செழிப்பு ஆகியவை வெறும் காலநிலைகள் அல்ல, அவை மனிதர்களின் விதியையும், தற்காலச் சுற்றுச்சூழல் சீர்கேட்டையும் பிரதிபலிக்கும் கண்ணாடிகள். நீரின் வறட்சி, வெயிலின் தாக்கம், மழையின் செழிப்பு, ஆகியவை எவ்வாறு மக்களின் அக மற்றும் புற வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன என்பது குறித்து இக்கட்டுரை அமைந்துள்ளது.

**சுற்றுச்சூழல் வரையறை**

இயற்கை வளமும் சுற்றுச்சூழலும் மனிதகுல வளர்ச்சியின் முக்கியக் கூறுகளாக அமைந்துள்ளன.

- சுற்றுசூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள சமூக, பொருளாதார உயிரியல், இயற்;பியல், வேதியல் காரணிகளின் கூட்டமாகும்.
- குறிப்பிட்ட இடத்தில், காலத்தில் காணப்படும் சுற்றுப்புற நிலைமைகளின் கூட்டே சுற்றுச்சூழலாகும் (உ.உ.பார்க் - 1980).
- மனிதனின் செயல்பாட்டால் மாறுதலுக்குட்படக் கூடியதாகவும் உள்ளது.
- எர்னஸ்ட் ஹெக்கல் (1869) சூழ்நிலையியலை ஓர் உயிருக்கும்; அதனைச் சூழ்ந்துள்ள உயிரற்ற மற்றும் உயிருள்ள சூழ்நிலைகளுக்கும் இடையே காணப்படுகின்ற நேச மற்றும் விரோத உறவுகளை விளக்கும் அறிவியல் பிரிவு என விளக்குகின்றார்.
- கென்டே (1961) என்பவர், சூழ்நிலையியல், விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் இடையே உள்ள உறவுகளையும் இவை சூழ்நிலையோடு கொண்டுள்ள உறவுகளையும் விளக்கும் அறிவியல் பிரிவு எனக் கூறுகின்றார்.
- ஓடம் (1969) என்பவர் சூழ்நிலையியல் உயிரினங்களுக்கும் சூழ்நிலைக்கும் இடையே உள்ள உறவுகளை விளக்குகின்றது எனக் கூறுகின்றார்.

**சுற்றுச்சூழலியலின் நோக்கம்:**

- சுற்றுச்சூழல் அறிவு பெற்ற குடிமக்களை உருவாக்குவது. இதன் மூலம் நம்முடைய புவியை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் வேண்டிய முடிவுகளை எடுப்பதற்குத் தயார்ப்படுத்துதல் முக்கிய நோக்கமாகும்.
- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு முனைப்பான ஆர்வத்தை உருவாக்குவது அவசியமாகிறது.

- சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சனைகளைக் கண்டறிவதற்குத் தேவையான திறமைகளை வளர்த்து இப்பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்குத் தொழில்நுட்ப அடிப்படையில் தீர்வு காணுவது மற்றொரு நோக்கமாகும்.
- சுற்றுச்சூழலைப் பற்றி அறிவதற்கு சுழ்நிலைக்கும் மனித நடவடிக்கைகளுக்கும் இடையே உள்ள காரணகாரியத் தொடர்பை அறிய வைத்தல் மற்றொரு நோக்கமாகும்.
- சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்குத் தீர்வுகான முடிவுகளை எடுப்பதற்கு முன்பாக இத்தீர்வுகளை எவ்வாறு செயல்படுத்தினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் இருக்கும் என்பதை மதிப்பீடு செய்தல்.
- சுற்றுச்சூழலைப் பல்வேறு வழிகளில் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளைப் புரிந்து கொள்ளுதல் முக்கிய அடிப்படை நோக்கமாகும்.

**இயற்கையமைப்பு வாழ்க்கை வளத்துடன் கொண்ட தொடர்பு:**

தென்மேற்குப் பருவக்காற்று அரபிக்கடல் வழியாக வீசுகிறது. அக்காற்றின் குறுக்கே மேற்குமலைத்தொடர் நிற்கிறது. ஆதலின் **“ஈரக்காற்றுத் தடுக்கப்பட்ட செங்குத்தான மேற்குப் பக்கம்”** மிகுந்த மழை பெய்கிறது.

தமிழர்கள் நிலத்தை அதன் தன்மைக்கேற்ப ஐந்து வகைகளாகப் பிரி;த்து, அந்தந்த நிலத்திற்கு ஏற்றவாறு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர்.

இவை போன்று திணையையும் ஐந்தாக பிரித்துக் கூறினர்.

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சோயோன் மேய மைவரை உலகமும்**
**.........சொல்லவும் படுமே”2**

**(தொல்.பொ.நூ.5)**

உயிரின வாழ்வின் அடிப்படை இயற்கை! நாம் நம்பியிருப்பதும் நம்மில் இருப்பதும் இயற்கையே. மூச்சுக்குக் காற்று, தாகத்திற்கு நீர், உறைவதற்கு நிலம், ஒளிக்குக் கதிரவன் போன்றவை உயிரினங்களின் முதன்மைத் தேவை. இயற்கையோடு இணைந்து வாழ்வதும் இயற்கையைப் பயனுள்ளதாக மாற்றுவதும் அழகியல் ஆகும்.

ஐம்பெரும் பூதங்களால் ஆனது உலகம் என்பார் தொல்காப்பியர்.

**“நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்**
**திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்”3**

**(தொல்.நூ.635)**

உலகினையும் உலகில் உள்ள பொருட்களையும் தொல்காப்பியர் உலகம் எனப் பொதுவாகக் கூறினார். உலகமாவது முத்தும் மணியும் கலந்தாற் போல, நிலம், நீர், தீ, வளி, வான் என வேற்றுமை அறியும் வண்ணமும் கலந்து நிற்கும்.

நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், நிலம் ஆகிய பஞ்சபூதங்களை பற்றியும் படைப்பாளர்கள் தமது படைப்புகளில் மதிப்பீடு செய்துள்ளனர்.

காற்று, நீர், நிலம், நெருப்பு ஆகியவற்றின் தன்மை இயற்கைக்கு மாறாக எவ்வாறு உள்ளது என்பது பற்றியும் எஸ்.ராமகிருஷ்ணன் தமது புதினங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கையை மனிதன் அறிந்த காரணத்தினால் தான் அவன் பண்பாடு என்னும் படகில் காலவெள்ளத்தில் பயணம் மேற்கொண்டு அதன் அடுத்தகட்ட வளர்ச்சிக்குத் துணையாக இருக்கின்றான்.

**"மண் திணிந்த நிலனும்**
**நிலம் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை"4**

**(புறம்.பா.2)**

என்று சங்க இலக்கியமும் பதிவு செய்துள்ள கருத்துகள் தமிழரின் ஐம்பூத அறிவை, உறவைப் பறைசாற்றுவனவாகும். நிலத்திற்கும் நிலத்தில் வாழும் உயிரினங்களுக்கும் இடையே இருந்த இணக்கமான உறவுகளை, பிணைப்புகளைப் பண்பாட்டுத் தளத்தில் இணைத்துச் சிந்தித்துள்ளனர் என்பதற்குத் தொன்மையான செம்மொழி இலக்கியங்களே தக்க சான்றுகளாகும்.

நமது மரபான பண்பாடு, இயற்கையோடு பிணைந்த வாழ்வியலுடன் இரண்டறக் கலந்து, மண்ணையும் மக்களையும் சுற்றுச்சூழலையும் பிணைப்பில் ஆழ்த்துவது. மனித நலத்தில், வளத்தில் பெரிதும் அக்கறை கொண்டது. தொன்மையோடு தொட்டுத் தொடரும் நமது பாரம்பரிய வாழ்க்கை முறையில் இயற்கை சார்ந்த வளங்கள், அவை தரும் கொடைகள், சமூகத்தின் பொது உடைமைகளாக மக்களால் பயன்படுத்தப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வந்தன. இன்று பன்னாட்டுக் கூட்டுறவால் சுயநலமிகளின் சுரண்டல்களால் இயற்கை வளங்களும் சுற்றுச்சூழலும் பல்முனைத் தாக்குதல்களுக்கும் அழிவுகளுக்கும் ஆட்பட்டுக் கொண்டிருக்கின்றன. மக்கள் பஞ்சம் தீர, வேளாண்மை செழிக்க, மும்மாரி மழையைப் பெய்விக்க மழைச் சடங்குகளைச் செய்தனர்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலமும் பொழும் கருப்பொருளும் உரிப்பொருளும் கலந்து வாழ்ந்த வாழ்க்கையே தமிழருடைய அடையாளம். இயற்கையோடு போராடுவதல்ல நமது வேலை. இயற்கையோடு இணங்கிச் செல்வதே அறிவார்ந்த செயல்.

**இயற்கையும் மனிதனும்**

மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவு இடையூறாதது. மனிதன் வாழப் பல நிலைகளில் இயற்கை அவனுக்கு உதவியாய் இருக்கிறது. காற்று, வெளிச்சம், நீர், உணவு எனப் பல நிலைகளிலும் மனிதன் இயற்கையின் கையளிப்பிலேயே வாழ முடிகிறது. இது புறநிலை சார்ந்தது. அகநிலையில் "மனிதனுடைய ஆன்மாவைத் தன் வயப்படுத்திக் கொள்கிறது

இயற்கை. அது பல வகையான மாயங்களைச் செய்து மனித இதயத்தை ஈர்க்கப் பார்க்கிறது. விரிந்து கிடக்கும் பரப்பாலும் ஓங்கி வளரும் உயரத்தாலும் இயற்கையானது மனிதனை உயர்த்த முனைகின்றது. தன் எழிலால் அவனை மகிழ்விக்க முயல்கின்றது. துடைத்துத் தொலைக்கும் தன் அழிப்பாற்றலால் அவலத்தில் மூழ்கடிக்கப் பார்க்கிறது. கொலு வீற்றிருக்கும் தன் அமைதித் திறத்தால் அவனுக்கு மீட்சி தருகின்றது. இவ்வாறான எண்ணற்ற செயல்களின் வாயிலாக இயற்கை மனித இதயத்தைக் கவர்வதற்கு இடையறாது முயன்று கொண்டேயிருக்கிறது (வரதராஜன் மு,2014.33) என்கிறார்." வரதராஜன் அவர்கள் இயற்கைக்கும் மனிதனுக்குமான இந்த இடையறாத ஊடாட்டமே இயற்கையைப் புரிந்து கொள்வது குறித்த வழக்காறுகளின் உருவாக்கத்திற்கு அடிப்படை எனலாம்.

**தற்கால சூழலியல் இலக்கியத்தின் தனித்துவம்:**

| **முந்தைய இலக்கியம்** | **தற்கால இலக்கியம்** |
|---|---|
| இயற்கை அழகு, பின்புலம் | இயற்கை அரசியல், கதாபாத்திரம் |
| தனிமனித புலம்பல் | கூட்டு நெருக்கடி சமூக நீதி |
| கிராமம் - நகரம்; | நகரத்திற்குள் இருக்கும் கிராமம், கழிவு, சாதி |
| மனித மையவாதம் | ;ஆழ் சூழலியல் உயிர்மையவாதம் |

**'நெடுங்குருதி' நாவலில் சுற்றுச்சூழல்:**

எஸ்.ராமகிருஷ்ணன் மிகுந்த மனித வாழ்க்கையை விவரிக்கிறது. வேம்பலை என்ற வறண்ட கிராமமும் அதன் சுற்றியுள்ள காடுகளும் கதைக்களம்.

இது வறட்சி, களவுத் தொழில் மற்றும் வேட்டைச் சமூகத்தின் இருப்பிடமாகக் காட்டப்படுகிறது. நாவல் கோடைக்காலம், காற்றடிக்காலம், மழைக்காலம், பனிக்காலம் என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பருவநிலையும் மனிதர்களின் உணர்வுகள் மற்றும் அன்றாட நடவடிக்கைகளைத் (வேட்டை, களவு) தீர்மானிப்பதாக உள்ளது.

**வெயிலின் தாக்கம்:**

நாவலின் தொடக்கத்தில் எஸ்.ராமாகிருஷ்ணன் கோடைக்காலம் விளக்கும் வகையில்,

**"என்புஇலதனை வெயில் போலக் காயுமே"5**

**(குறள்.77)**

- என்னும் குறளைக் கூறி கோடைக்காலத்தின் வெம்;மையைக் கூறி, நாவலில் இடம்பெற்ற மனிதர்களின் வாழ்க்கையைக் கோடைக்காலத்தோடு ஒப்பிட்டு கூறியிருப்பார். சங்க இலக்கியத்தின் ஐந்திணை முறைப்படி, கோடைக்காலம் (வேனில்காலம்) என்பது பாலைத் திணைக்கு உரியது.

குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து கதிரவனின் வெப்பத்தால்;, கடும் வெப்பம் நிலவும். இதனால், கடும் வெப்பம் நிலவும். கோடைக்காலம் பாலையின் பின்னணியாக அமைகிறது.

**“நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு**
**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே”6**

**(நூ.11)**

என்று நடுவுநிலைத் திணையாகக் குறிக்கப்படுவது பாலை. அதற்குரிய சிறுபொழுது நண்பகல் ஆகும். மேலும் இளவேனில், முதுவேனில் என்னும் இருவகைப் பெரும்பொழுதுகளோடும் ஒத்து முடிதலாகிய முறைமையினை உடையது பாலைத் திணையாகும்.

இளவேனில் காலம் (சித்திரை,வைகாசி) – வசந்த காலத்தின் தொடக்கம் மற்றும் வெயிலின் ஆரம்பம்.

முதுவேனில் காலம் (ஆனி,ஆடி) – கதிரவனின் வெப்பம் உச்சத்தில் இருக்கும் காலம்.

நெடுங்குருதியில் வெயில் என்பது ஒரு கொடுங்கோல் ஆட்சியைப் போல நிலத்தை ஆள்கிறது. பாறைகளும், முட்செடிகளும் நிறைந்த அந்தப் பகுதியில் சூரியன் தன் முழு உக்கிரத்தைக் காட்டுகிறான்.

கரிசல் மண்ணின் கடுமையான வெயில் வெறும் தட்பவெப்பநிலை மட்டுமல்ல, அது மக்களின் வறுமை, கோபம் மற்றும் வாழ்வாதாரப் போராட்டத்தின் குறியீடாகவும் அமைகிறது.

**“கோடை துவங்கிய சில நாட்களிலே பகல் பற்றி எரிவது போல உக்கிரம் கொள்ளத் துவங்கியது. ஒரு நாள் வெயிலின் உக்கிரம் தாளாமல் நாவிதன் வீட்டுக்கூரை தானே பற்றி எரிந்தது”**

**(நெடு.பக்.10).**

இவ்வரி; பருவநிலை மாற்றத்தின் தீவிரத்தை நாவலில் வரும் கானல்நிலம் நமக்கு உணர்த்துகிறது. பச்சையம் இழந்த பூமி எப்படி சூரிய வெப்பத்தைத் தாங்க முடியாமல் கருகுகிறது என்பதற்கு இந்த நாவலின் பின்னணியே சாட்சி.

இதேபோன்று சங்க இலக்கியமான அகநானூறு,

**“ஞெமை இலை உதிர்த்த எரி வாய்க்கோடை**
**நெடு வெண் களரி நீறு முகர்ந்து சுழல**
**கடுவெயில் திருகிய வேனில் வெங்காட்டு”7**

**(அகம்:353)**

- என்ற பாடல் கோடைக்காலக் கடுமையான வெயில் சுழற்றி அடிக்கும் பாலை நிலத்தின் வெப்பத்தை விவரிக்கிறது.

நாவலில் வெயிலின் தாக்கமானது **“சிதறிய தண்ணீரை வீட்டுச் சுவர் தன் ஆயிரம் நுண் நாவுகளால் சுவடேயில்லாமல் உறிஞ்சி இருந்தது (நெடு.பக்.11)** என்னும் வரிகளைக் கொண்டு சூரியன் நிலத்தைக் குடித்து வற்றச் செய்வதும், கானல் நீர் ஓடுவதும் மிக இயல்பான காட்சிகளாக விவரிக்கப்படுகின்றன.

**“நடந்து செல்லும் பாதை தோறும் யாரோ முனங்குவது போல மண்புரண்டு சப்தமிடுவதையும், வெக்கை தாளாமல் புதையுண்டு கிடந்த மூதாதையர்களின் எலும்புகள் திமிறிக்கொண்டு மண்ணை மீறி வெடிப்பதையும் கண்டார்கள். தென் கிராமங்கள் யாவுமே உலர்ந்து கொண்டுவிட்டன. காணும் முகங்களில் சினமும் ரௌத்திரமும் அப்பிக்கொண்டிருக்கின்றன”(நெடு.பக்.21)** என்று எஸ்.ரா. தமது நாவலில் வெயில் மனிதர்களின் உடலை மட்டுமல்லாமல், அவர்களின் அகத்தையும் சுட்டெரிக்கிறது என்று கூறுகிறார்.

**“செல்கதிர் ஞாயிறு செயிர் சினம் சொரிதலின்**
**தணிவுஇல் வெங்கோடைக்குத் தன்நயந்து அணிக்கொள்ளும்**
**பிணிதெறல் உயக்கத்த பெருங்களிற்றினம் தாங்கும்**
**மணிதிகழ் விறல் மலை”8**

**(கலி.பா.20:2-5)**

என்னும் கலித்தொகைப் பாடல் மேற்கூறிய நாவல் வரிகளோடு ஒப்புநோக்கத் தக்கதாய் அமைந்துள்ளது.

பாலை நிலத்து வெயிலின் கொடுமையை விளக்கும் மிகச்சிறந்த பாடல் இது. கோடைக்கால சூரியன் தன் சினத்தைக்; கக்குவதையும், அதனால் மலைகள் வெடித்து, நீர்நிலைகள வற்றிப் போவதையும் இப்பகுதி விவரிக்கிறது.

நாவலில் எஸ்.ராமகிருஷ்ணன் **“கத்தரி வெயில் துவங்கியிருந்தது. பதினெட்டு நாட்கள் இனி தெருவில் காகங்களின் கரைப்பொலி கூட பகலில் கேட்காது. துவங்கிய நாளிலே அக்னி நட்சத்திரத்தின் சூடு தெருவில் கொப்பளித்துக் கொண்டிருந்தது. வேலியடிக்குள் யாவும் பதுங்கிக் கொண்டது போல நாய்களும் பூனைகளும் கோழிகளும் வேலிப் புதருக்குள் குழி பறித்து ஒடுங்கியிருந்தன. சீராக மழை பெய்வது போல தெருவெங்கும் வெக்கையில் நனைந்து கொண்டிருந்தன. தெருவில் ஒரு நாய் நிழல் தேடி ஓடிக்கொண்டிருந்தது” (நெடு.பக்.128)**

இவ்வரிகள் நிழல் தேடி அலையும் மனிதர்களும், வெயிலின் தகிப்பால் காய்ந்துபோகும் கால்நடைகளும் இன்றைய புவி வெப்பமயமாதலின் ஆரம்பகால எச்சரிக்கையாகவே நமக்குத் தோன்றுகின்றன. வெயில் மனிதர்களைத் தங்கள் சொந்த நிலத்தை விட்டு விரட்டும் ஒரு காரணியாக மாறுகிறது என்பதை எஸ்.ரா. விளக்கியுள்ளதை அறிய முடிகின்றது.

வெயிலின் கொடுமையால் பகல் நேரங்களில் மனிதர்கள் முடங்கிப் போவதும், நிழலைத் தேடி அலைய வேண்டியிருப்பதுமான சூழல் நிலவுகிறது. வெயில் மனிதர்களின் உடலை மட்டுமல்லாமல், அவர்களின் மனங்களையும் சுட்டெரிக்கிறது. இந்த தகிப்பு நாவலில் இடம்பெறும் கதாபாத்திரங்களின் உணர்ச்சிகளிலும் பிரதிபலிக்கிறது.

**நீரின் வறட்சி:**

வறட்சி என்பது மழை பெய்யக் கூடிய பகுதிகளில் வழக்கத்திற்கு மாறாக மழை பெய்யாமல் அப்பகுதியின் நீரியலில் அதிக ஏற்றத்தாழ்வை உண்டாக்கி நீரை வற்றச் செய்வதாகும்.

நீர்பற்றாக்குறையே வறட்சி என்கிறோம். இது இயற்கையாகவும் ஏற்படலாம். செயற்கையாக மனிதனின் நடவடிக்கைகளாலும் உருவாகலாம். வறட்சியால் நீர்த் தேக்கங்கள் வறண்டு, கிணறுகள் உலர்ந்து, நீர் இல்லாமல் தாவரங்கள் அழிந்து விடுகின்றன. சில இடங்களில் சில குறிப்பிட்ட காலங்களில் மட்டும் வறட்சி ஏற்படுகின்றது. ஆனால் உலகின் சில பகுதிகளில் நிலையான வறண்ட நிலை காணப்படுகின்றது.

வறட்சி பற்றி பல்வேறு இலக்கியங்களும் கூறுகின்றது. அதே போல தான் தற்கால இலக்கியமான **'நெடுங்குருதி'** நாவல் முழுவதும் தண்ணீருக்கான தாகமும், நிலத்தின் வறட்சியும் ஒரு தீராத சாபத்தைப் போல தொடர்கிறது. நாவலில் நீர் என்பது மிக அரிதான புனிதமான, அதே நேரத்தில் அதிகாரத்தைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாகக் காட்டப்படுகிறது.

நாவலில் **"வீட்டுப் பானைகளில் தண்ணீரின்றி தலைகீழாகக் கவிழ்த்தி வைக்கப்பட்டிருப்பதையும் மண்கலயத்தில் மட்டும் உள்ளங்கையளவு தண்ணீர் மட்டுமே மிதந்து கொண்டிருக்கிறத" (நெடு.பக்.10)** என்ற வரிகளைக் கொண்டு நீரின் வறட்சியைக் காண இயலும். மனிதன் காடுகளையும் இயற்கை அரண்களையும் அழித்ததன் விளைவாக, நிலத்தடி நீர்மட்டம் பாதாளத்திற்குச் சென்றுவிட;டதை நாவல் காட்டுகிறது.

வீடு பற்றி எரிந்தால் கூட **"நெருப்பை அணைப்பதற்காக எவரும் தண்ணீர் தருவதற்கு முன் வரவில்லை" (நெடு.பக்.10)** என்ற வரியானது நாவலில் நீர் வறளும் போது, மனிதர்களுக்குள் இருக்கும் அறமும் வறண்டு போகிறது என்பதை எஸ்.ரா. தன் தனித்துவமான மொழியால் வடித்திருக்கின்றார்;.

இதேபோல் சங்க இலக்கியங்களும் நீரின் முக்கியத்துவம் பற்றியும், நீரின் வறட்சி பற்றியும் விளக்குகின்றது.

**"நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரே"9**

**(புறம்:பா-18)**

உயிர்களின் உடம்பிற்கு நீர் இன்றிமையாதது. அந்த நீரை நிலத்தில் தேக்கி, வேளாண்மையைச் செழிக்கச் செய்து, உணவு அளிப்பவர்களே உண்மையில் உயிரைக் கொடுத்தவர்கள் ஆவார்கள். சங்க காலத்தில் நீர் வறட்சியைத் தடுக்கவும், நீரைச் சேமிக்கவும் மன்னர்களுக்கு விடுக்கப்பட்ட அறிவுரையாக இப்பாடல்; விளங்குகிறது.

நெடுங்குருதி நாவலில் பெண்கள் **"மண்குடங்களைத் தூக்கிக் கொண்டு பெண்கள் தண்ணீர் தேடிப் போனார்கள்" (நெடு.பக்.412)** என்ற வரி காய்ந்துபோன கிணறுகளும், வற்றிய குளங்களும் வறட்சியின் சாட்சிகளாகின்றன. ஒரு குடம் தண்ணீருக்காகப் பெண்கள்படும் அவலமும், மைல்கணக்கில் நடப்பதும் மிக எதார்த்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீரின் முக்கியத்துவத்தை திருவள்ளுவரும் திருக்குறளில் வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் எடுத்துரைக்கிறார்.

**“நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு”10**

**(குறள் - 20)**

எந்த உயிரினத்திற்கும் தண்ணீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது. அதுபோலவே, மழை இல்லாவிட்டால் உலகில் அற நெறியும் ஒழுக்கமும் நிலைபெறாது.

நாவலில் **“வீட்ல ஈரமிருக்கும் வரைக்கும் தான் எறும்புகள் சுவரேறி நடமாடும். ஈரம் உலர்ந்து போயிட்டா வீட்டில் தங்காது. எறும்பு வீட்டை விட்டுப் போயிட்டா மனுசன் அந்த வீட்டிலே குடியிருக்கவே முடியாது” (நெடு.பக்.14).** நீரின் வறட்சி மக்கள் தங்கள் சொந்த நிலத்தை விட்டுவிட்டு, பிழைப்பு தேடி வேறு இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். நீர் இல்லாமை மனிதர்களைத் தன் சொந்த மண்ணிலிருந்தே வேரறுக்கிறது. எறும்பு மட்டுமின்றி, மக்களும் ஊரைவிட்டு இடம்பெயர்கின்றனர் என்பதை நாவல் காட்டுகிறது.

பருவகாலங்களில் கிடைக்கும் நீரைப் பராமரிக்க நீராணிக், நீர்மூப்பர், நீர்மணியம், நீர்க்கட்டிகள், மடையர் என்ற பெயர்களின் நீர் மேலாண்மை செய்வோர் இருந்தனர். இன்று குளங்களும் ஏரிகளும் குப்பைமேடுகளாகக் காட்சி தருகின்றன. இல்லையென்றால் கட்டிடங்களாய் முளைத்துக் கிடக்கின்றன. நாம் இயற்கை வளங்களைக் காக்கத் தவறியதால் வானம் பொய்த்தது, மண் மலடானது, சுற்றுச்சூழல் சீர்கெட்டு மாசுகளால் நிறைந்தது. வளமான கிராமங்களிலும் இன்று குடிநீர் வியாபாரம் சக்கைப்போடு போடுகிறது. ஏற்றங்களை முறித்துவிட்டு எந்திரங்கள் வந்தன. நீரின்றி நிலங்கள் தரிசாயின. பாடும் போனது, நமது பண்பாடும் போனது. நீரோட்டம் நின்றது, ஏரோட்டம் மறைந்தது, காரோட்டம் பெருகியது எல்லாவற்றையும் பட்டுத்தான் அறிகிறோம் என்றாலும் மனிதமனம் பண்பட்டதாய்த் தெரியவில்லை.

இங்கு நிலவும் வறட்சி மக்களின் வாழ்வாதரத்தைப் பாதிப்பதோடு நில்லாமல், அவர்களின் குணாதிசயங்களையும் வன்முறை. பிடிவாதம், பாசம் எனத் தீவிரமான ஒன்றாக மாற்றுகிறது. இயற்கை அள்ளித்தரும் தாயாக இல்லாமல், வாழ்விற்காகப் போராட வைக்கும் ஒரு களமாக இதில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**மழையின் செழிப்பு:**

மழைக்காலம் குறிஞ்சி, முல்லை மற்றும் மருத நிலங்களுக்கு முதற்பொருளாகக் கருதப்படுகிறது, குறிப்பாக முல்லை நிலத்திற்கு இது சிறப்புடையது. பொதுவாக, ஜீன் முதல் செப்டம்பர் (தென் மேற்குப் பருவக்காற்று) வரை இந்த காலம் நீடிக்கும்.

இக்காலத்தில் மேகமூட்டம், இடி, மின்னலுடன் கூடிய கன மழை, இயற்கை வளம் செழித்தல் மற்றும் வெப்பநிலை குறைதல் போன்றவை காணப்படும். நாவலில் அதே போலவே மழைக் காலத்தில் மக்களின் மகிழ்ச்சியையும், மழையினால் உண்டாகும் அழகினையும் அழகாக எடுத்துரைத்திருப்பார் எஸ்.ராமகிருஷ்ணன்.

**“காரும் மாலையும் முல்லை”11**

**(நூ.6)**

கார்காலத்தினை மழைக்காலம் என்று அழைப்பதும் உண்டு. ‘காரும் மாலையும் முல்லை’ என்றார் தொல்காப்பியர். முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதாகக் கார்காலத்தை முன்வைக்கிறார்.

**“மழை பெய்தால் மடை திறக்கும் - வெயில்**
**அடித்தால் நிலம் பிளக்கும்......”**

மழை பெய்தால் சேறாகி நடப்பதற்கே சிரமமான மடை போல மாறிவடும், வெயில் அடித்தால் பெரிய பெரிய கோடுகளாக நிலம் பிளந்து விடுவதும் கரிசல் மண்ணின் தனித்துவம் என்பதை இந்த எளிய வரிகள் விளங்குகின்றன.

நெடுங்குருதி நாவலில் மழை என்பது வெறும் இயற்கை நிகழ்வல்ல. அது ஒரு பெருங்கொண்டாட்டம், மறுபிறவி. நீண்ட வறட்சிக்குப் பின் பெய்யும் மழை, நிலத்திற்கும் மனிதர்களுக்கும் புதிய நம்பிக்கையைத் தருகிறது. வறட்சியும் வெயிலும் நிலத்தை எவ்வளவு வாட்டினாலும், எப்பொழுதாவது பெய்யும் மழை அந்த வறண்ட பூமிக்கு ஒரு பெருங்கொடையாக, மாறுகிறது.

**“இரவில் மழை தூறிக் கொண்டிருந்தது. கோடைக் காலத்து மழை, இரவில் பெய்யத் துவங்கினால் அடங்காது” (நெடு.பக்.291) என்பது நாவல் வரிகள்.**

**“மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!**
**நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்**
**மேல நின்று தான் சுரத்தலான்”12**

**(சிலம்பு.மங்கலவாழ்த்து)**

என்ற அடிகள் மழையைப் போற்றி வணங்குவதை எடுத்துரைக்கின்றது. இவைமட்டுமின்றி, பட்டினப்பாலையும் மழை குறித்து விவரிக்கின்றது.

**“வான்முகந்த நீர் மழை பொழியவும்**
**மழைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்**
**மாரி பெய்யும் பருவம் போல்**
**நீரின்றும் நிலத்து ஏற்றவும்**
**நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்**
**அளந்து அறியாப் பல பண்டம்”13**

**(பட்டின.பா.126-131)**

அதாவது ஒருபுறம் கடல்நீர் ஆவியாகி மேகமாகத் திரண்டு மழை பொழிகிறது. மறுபுறம் பெய்த மழை ஆறுகளில் ஓடி கடலில் கலக்கிறது. அதுபோன்று புகார்த்துறையில் ஒருபக்கம் கப்பல்களில் இருந்து பல பண்டங்கள் வரிசையாக நிலத்துக்கு இறக்கப்படுகின்றன. மறுபக்கம் நிலத்திலிருந்து பல பண்டங்கள் வரிசையாக கப்பலுக்கு ஏற்றப்படுகின்றன என்கிறது இப்பாடல்.

நெடுங்குருதி நாவலில் மழையினால் **“தெப்பக்குளத்தில் தண்ணீர் நிரம்பி தெருக்களில் ஓடிக்கொண்டிருந்தது வீதியில் வழியும் தண்ணீரை மிதித்துக்கொண்டு நடப்பதில் யாவரும் ஒரு ரகசிய சந்தோஷம் கொண்டார்கள்”(நெடு.பக்.397).** இதில் மனிதர்கள் தங்கள் துயரங்கள் மறந்து, மண்ணின் செழிப்போடு இணைந்து மகிழ்கிறார்கள். மழையினால் மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் அவர்களின் மனதில் தோன்றுகின்றது.

**“மழை ஊரெங்கும் சிரிப்பைத் தூவிவிட்டிருந்தது”(நெடு.பக்.365**) என்ற வரிகள் இதனைப் புலப்படுத்தும். மக்களின் வாழ்வில் பொருளாதாரச் செழிப்பையும், மன அமைதியையும் கொண்டுவருகிறது.

ஒருவனின் தனிமையையும் மழையே நீக்குகிறது. ஆனால், இந்த மழைக்காலம் மிகக் குறுகியது என்பதால், இயற்கையைச் சேமிக்கத் தவறினால் மீண்டும் வறட்சியே மிஞ்சும் என்ற சுற்றுச்சூழல் உண்மையும்; இதில் பொதிந்துள்ளது.

**உவமையாக மழை:**

மழை என்பது இயற்கையின் சுய – மீளுருவாக்கச் சக்தி ஆகும். மனிதன் எவ்வளவு தான் இயற்கையைச் சீரழித்தாலும், பூமி தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் பேராற்றலை மழை வெளிப்படுத்துகிறது.

நாவலில் எஸ்.ராமகிருஷ்ணன் **“ஒரு இரவில் மழை மிகுந்த சப்தத்தோடு பெய்யத் துவங்கியிருந்தது. அந்த மழை சப்தம் இது வரை அவர்கள் கேட்டிராத பாறைகள் முறியும் சப்தம் போலவேயிருந்தது” (நெடு.பக்.34). “பறவையைப் போல மழை ஊரில் தத்திக் கொண்டிருந்தது”(நெடு.பக்.34).**

**“கல்மழை போல சடசடவெனப் பெரிய துளிகளாக”(நெடு.பக்338) மழை பெய்தல். “யாரோ வலையை விசி மீன் பிடிப்பதைப் போல மழை விசிறி விசிறி எதையோ பிடித்துக் கொண்டிருந்தது” (நெடு.பக.338). “நீண்ட நாளாக மழை காணாத வீட்டுக் கூரைகள் முறுக்கிக் கொண்டு திமிறின” (நெடு.பக்.338). “பூக்கள் உதிர்வதைப் போல மழைத்துளிகள் உதிரிந்து கொண்டேயிருந்தன” (நெடு.பக்.391).**

**எஸ்.ராமகிருஷ்ணனின் எழுத்து நடைக்கே உரிய தனித்துவத்துடன், மழை என்பது வான்வெளியிலிருந்து விழும் தண்ணீர் மட்டுமல்ல, அது “பூமிக்கும் வானத்திற்குமான தீராத உரையாடல்”** என்ற உவமையோடு நாவலில் கடந்து போகிறது. கரிசல் நிலத்து மனிதர்களின் வறண்ட வாழ்விற்குள் நுழையும் மழை, அவரிகளின் ஆசைகளையும், ஏமாற்றங்களையும், நனைத்துச் செல்கிறது.

மழை பெய்தவுடன் காய்ந்து கிடந்த கரிசல் மண் காட்டும் வாசனையும், சட்டென்று மாறும் நிலத்தின் நிறமும் ராமகிருஷ்ணனின் எழுத்தில் கவிதையாக விரிகின்றன.

**சுற்றுச்சூழலும் மனிதனும்**

தற்கால சுற்றுச்சூழல் என்பது காலநிலை மாற்றம், காற்று மற்றும் நீர் மாசுபாடு, காடழிப்பு மற்றும் இயற்கை வளங்கள் குறைதல் போன்ற கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளது. தொழில்மயமாதல் மற்றும் மனித செயல்பாடுகள் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

தற்போதைய காலகட்டத்தில் மனித நடவடிக்கைகளால் பூமி சந்தித்து வரும் மிகப்பெரிய சவால்களுக்குத் தீர்வுகாண சுற்றுச்சுழல் அறிவியல் உதவுகிறது. அதுபோல நாவலில் அறிவியலை கொண்டு மழை வரவழைக்கும் முயற்சியை எஸ்.ராமகிருஷ்ணன் கூறியிருப்பார். **"பள்ளியாசிரியன் மழையை உண்டாக்குவதற்கான இயந்திரம் ஒன்றைத் தான் செய்துவிட முடியும் என்றவனாக இரவும் பகலும் மரச்சட்டங்களை அறுத்து வேலை செய்து கொண்டிருந்தான். மேகங்களை ஒன்றுதிரட்டும் புகையை உருவாக்கிவிட்டால் போதும், மழை தானே பெய்துவிடும்"(நெடு.பக்.410)** என்றுக் கூறிக் கொண்டு ஆசிரியர் இயந்திரம் உருவாக்கிக் கொண்டுயிருந்தார். **"ஒரு மரக்குழாயும் வீட்டின் புகைப்போக்கிகள் இரண்டு மூன்றையும் ஒன்று சேர்த்து அதன் பெரிய தூம்பு போல் உருவாக்கியிருந்தான்"(நெடு.பக்.410).** அதனை இயக்கி புகையை வரவைத்து புகை வானை நிரப்பி மேகங்கள் ஒன்று கூடி மழை வரும் என்று கூறி தெருவில் லைத்தல். அதேபோல **"புகையால் ஆகாசமே மூடிக் கொண்டது போலானது. மெல்ல மழை மேகத்தைப்; போல வானில் கருமை படியத் துவங்கியது"(நெடு.பக்.410).** ஆனால், இயந்திரம் சூடு தாளாமல் வெடித்து போனது மழையும் பெய்யவில்லை.

மறுநாள் **"தனது உடைந்து கிடந்த மழை இயந்திரத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவனுக்கு ஏமாற்றமாகவேயிருக்கும். அவன் ஒரு நாளில் தான் இதே ஊருக்கே ஆகாசத்தில் வெள்ளிப் பொடியைத் தூவி வானிலிருந்த மழையைத் தான் விரும்புமிடத்தில் பெய்ய வைத்துக் காட்டுவதாகச் சொன்னான். வானில் ஏறித் தாவுவதற்கு என்ன செய்வது என்பதை நினைத்தபோதே மனவருத்தம் கவிழத் துவங்கிவிட்டார்" (நெடு.பக்.411).**

மழையும் இயற்கையும் எப்போதும் பிரிக்க முடியாத இரட்டையர்கள். மழை பெய்யும்போது இயற்கை அடையும் மாற்றங்கள் வார்த்தைகளால் விவரிக்க முடியாத பேரழகு. இயற்கை நமக்குத் தரும் ஆகச்சிறந்த கொடை மழை. ஆகவே, மனிதன் விண்வெளிக்குச் சென்றாலும், கடலின் ஆழத்திற்குச் சென்றாலும், இயற்கையின் "மழை" என்ற அற்புத சுழற்சிக்கு முன்னால் சாதாரணமானவனே என்று எஸ்.ராமகிருஷ்ணன் தனது நடையின் மூலம் விளக்கியுள்ளார்.

**முடிவுரை:**

மனிதன் இயற்கையின் ஒரு பகுதி தானே தவிர, இயற்கையை ஆளும் அதிகாரம் படைத்தவன் அல்ல என்பதை'நெடுங்குருதி' மிக அழுத்தமாகப் பதிவு செய்கிறது. வெயிலின் உக்கிரத்தில் வெந்து, வறட்சியில் தகித்து, மழையின் செழிப்பில் துளிர்க்கும் கரிசல் நிலத்து மனிதர்களின் கதையே இந்நாவல். இயற்கையின் சுழற்சிக்கு ஏற்ப மனித வாழ்வு எப்படி உருமாறுகிறது என்பதைச் சுற்றுச்சூழல் கோட்பாட்டின் வழி எஸ்.ராமகிருஷ்ணன் மிக நேர்த்தியாகவும், விரிவாகவும் நாவலில் கையாண்டுள்ளார்;. எஸ.;ராமகிருஷ்ணன் 'நெடுங்குருதி' காட்டும் உலகம், இயற்கையைச் சார்ந்து வாழும் மனிதர்களின் உலகம். நீர், வெயில், மழை ஆகிய மூன்று கூறுகளும் மனித வாழ்வை எவ்வாறு ஆட்டிப்படைக்கின்றன என்பதைச் சூழலியல் பார்வையோடு இந்நாவல் நமக்கு உணர்த்துகிறது.

இயற்கையின் சமநிலையைக் குலைத்தால், பூமி வறண்டு 'நெடுங்குருதி'யாக மாறும், அதே இயற்கையைப் போற்றினால், அது மழையாகப் பொழிந்து செழிப்பைத் தரும் என்ற உன்னதப் பாடத்தை இந்நாவல் சமகாலச் சமூகத்திற்கு உரக்கச் சொல்கிறது.

**சான்றெண் விளக்கம்**

1) ஞா.மாணிக்கவாசகன், புறநானூறு மூலமும் உரையும் பா.எ.192
2) முனைவர்.ச.திருஞானசம்பந்தம், பொருளதிகாரம் மூலமும் உரையும்; நூ.எ.5
3) மேலது., நூ.எ.635
4) ஞா.மாணிக்கவாசகன், புறநானூறு மூலமும் உரையும் பா.எ.2
5) எம்.சுப்ரமணியன், திருக்குறள் மூலமும் உரையும் குறள்.எண்.77
6) முனைவர்.ச.திருஞானசம்பந்தம், பொருளதிகாரம் மூலமும் உரையும் நூ.எ.11
7) ந.மு.வேங்கடசாமி நாட்டார், அகநானூறு மூலமும் உரையும் பா.எ.353
8) மா.இராசமாணக்கனார், கலித்தொகை பா.எ.20:2-5
9) ஞா.மாணிக்கவாசகன், புறநானூறு மூலமும் உரையும் பா.எ.18
10) எம்.சுப்ரமணியன், திருக்குறள் மூலமும் உரையும் குறள்.எண்.20
11) முனைவர்.ச.திருஞானசம்பந்தம், பொருளதிகாரம் மூலமும் உரையும் நூ.எண்.6
12) வ.த.இராம சுப்ரமணியன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும் மங்கல வாழ்த்து
13) ரா.இராகவையங்கர், பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும் பா.எ.126-131

**பார்வை நூல்கள்**


| | |
|---|---|
| எஸ்.ராமகிருஷ்ணன் | இரண்டாம் பதிப்பு பிப்ரவரி 2022, தேசாந்திரி பதிப்பகம், டி -1, கங்கை அப்பார்ட்மெண்ட் 110, 80 அடி ரோடு சத்யா கார்டன் சாலிகிராமம் சென்னை -93 தொலைபேசி - 044 23644947 |
| முனைவர் ச.திருஞானசம்பந்தம் | தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு.அலைபேசி 9443190379 |

| | |
|---|---|
| டாக்டர்.ந.கருணாநிதி | சுற்றுச்சூழல் கல்வி, பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம், திருச்சிராப்பள்ளி – 620 023. தொலைபேசி – 0431-2420027. ஜாசிம் பப்ளிகேஷன்ஸ் |
| டாக்டர்.ஆ.இராமகிருட்டிணன் | தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், சர்வோதய இலக்கியப் பண்ணை 321, மேல வெளி வீதி, மதுரை – 625 001 |
| முனைவர்.ஓ.முத்தையா, டாக்டர்.நசீம்தீன் | இயற்கைசார் பண்பாடு, நாட்டுப்புறவியல் கட்டுரைகள், முதல் பதிப்பு:2018, வெளியீடு ஷாண்டிவி புக்ஸ், எண் யு2116 (பிளாக்யு2) டி.எல்,எஃப் வெஸ்ட் என்ட் ஹைட்ஸ் அப்பார்ட்டுமன்ட், அக்ஷயா நகர், பேகூர் பெங்களுர் - 560 068. போன் 08049574034, 09886628753. அச்சாக்கம்: மணி ஆப்செட், சென்னை |
| ஞா.மாணிக்கவாசகன் | சங்க இலக்கியம் புறநானூறு மூலமும் உரையும், பதிப்பு -2005, உமா பதிப்பகம்.சென்னை |
| எம்.சிவசுப்பிரமணியன் | திருக்குறள் மூலமும் உரையும், கமர்ஷியல் பப்ளிகேஷன் 437-2 இராதாகிருஷ்ணன் காலனி, 2-வது தெரு, சிவகாசி- விருதுநகர் ரோடு திருத்தங்கல், சிவகாசி -626 130 |
| ந.மு.வேங்கடசாமி நாட்டார் | சங்க இலக்கியம், அகநானூறு மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பு: 2019, சாரதா பதிப்பகம், சென்னை. |
| வ.த.இராம சுப்ரமணியன் | சிலப்பதிகாரம் மூலமும் உரையும், பூம்புகார் பதிப்பகம் 127 (ப.எண்.63) , பிரகாசம் சாலை(பிராட்வே) , சென்னை – 600 108, தொலைபேசி:25267543. |
| ரா.இராகவையங்கர் | பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும், அண்ணாமலை நகர் 1951, தமிழ்நாடு மதுரை – 51. |
| மா. இராசமாணிக்கனார் | கலித்தொகை, பதிப்பு ஆண்டு 2011, பூம்புகார் பதிப்பகம், பூம்புகார் வெளியீட்டு எண் 979, சென்னை. |
| கே.குமார் | சங்க இலக்கியத்தில் மழை மற்றும் நீர் மேலாண்மை, தமிழ்த் துறை மாநிலக் கல்லூரித் தன்னாட்சிச் சேப்பாக்கம், சென்னை – 600 005 |

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 73.எட்டுத்தொகை அகநூல்களில் சுற்றுசூழலியலில் உள்ளுறை உவமம்

**ச.ஜானகி,**
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவெண் : 23213064022007, தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம் -629 802.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா 627 012.
தொடர்புக்கு – 8754710516, ORCID: 0009-0004-6630-9075

**முனைவர். செ.மெஜிலா ஜீவி,உதவிப்பேராசிரியர்,**
தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம்-629 802. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி, தமிழ்நாடு,இந்தியா- 627 012.
ORCID: 0009-0008-2215-666X

ஆய்வுச் சுருக்கம்

இலக்கிய இலக்கண வளம் கொண்டதாக மதிக்கப்படும் மொழி தமிழ் மொழியாகும்.சங்க இலக்கியங்களில் அக்காலக்கட்டத்தில் வாழ்ந்த தமிழரின் அன்றாட வாழ்க்கை நிலையைக் காட்டுவதாக உள்ளன.சங்க இலக்கிய நூல்களுள் எட்டுத்தொகையில் காணப்படும் அகநூல்கள் ஐந்தாகும். எட்டுத்தொகை அகநூல்களில் உள்ளுறை உவமம் என்பது கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தலைவன், தலைவியின் அக உணர்வுகளை மறைமுகமாக வெளிப்படுத்தும் சூழலியல் உத்தியாகும். இது நிலம் சார்ந்த இயற்கைச் சூழலை விவரிப்பதன் வழியாக மனிதர்களின் உள்ள கிடக்கைகளை வெளிப்படுத்துகிறது.அகநானூறு,கலித்தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றில் காணப்படும் உள்ளுறை உவமை தன்மைகளை பாடல்கள் மூலம் உணர்த்திக் கூறப்படுகிறது. எட்டுத்தொகை நூல்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வியலையும், பல்லுயிர்ப் பெருக்கத்தையும், ஐந்திணைப் பாகுபாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு மேம்பட்ட சுற்றுச்சூழல் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. நிலம், நீர்,தாவரம் மற்றும் விலங்குகள் ஆகியவற்றை மனிதர்களின் அக உணர்வுகளுடன் ஒப்பிட்டு சுற்றுசூழலுடன் இணைந்து வருவதைக் காணமுடிகிறது.

கலைச்சொற்கள்

சங்க இலக்கியம், எட்டுத்தொகை, உள்ளுறை உவமம், சுற்றுசூழல், நற்றிணை, ஐங்குறுநூறு, குறுந்தொகை.

முன்னுரை

மனித வாழ்வியலை இயற்கையோடு ஒன்றுபடுத்திக் காட்டுபவை சங்க இலக்கியங்களாகும்.பெரும்பாலான சங்க இலக்கியப் பாடல்களை எடுத்துக் கொண்டால் அவற்றில் மனித உணர்வுடன் இயற்கையை எவ்வகையிலேனும் இணைத்துக்காட்டி இயற்கையின் தன்மையையும் உணர்த்தும் பான்மை அடங்கியிருப்பதை உணர முடிகின்றது. எட்டுத்தொகை நூல்கள் இயற்கையையும் சுற்றுச்சூழலையும் மனித வாழ்வோடு இணைத்து ஐந்திணைப் பாகுபாடுகளும் பல்லுயிர்களையும் இணைந்து காண முடிகின்றன.எட்டுத்தொகை அகநூல்களில் உள்ளுறை உவமம் என்பது இயற்கையின் கருப்பொருட்களைக் கொண்டு மாந்தர்களின் அக உணர்வுகளை மறைமுகமாக உணர்த்தும் சூழலியல் உத்தியாகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு,அகநானூறு கலித்தொகை ஆகிய அகநூல்களில் உள்ளுறை

உவமமானது நிலத்தின் இயல்பு,விலங்குகள் மற்றும் தாவரங்களின் வழி வெளிப்படுத்தப்படுகிறது.

உள்ளுறை உவமம்

உள்ளுறை உவமம் அகப்பொருளியலின் அன்பின் ஐந்திணைகளில் மட்டுமே பயன்படுத்துவதற்கு உரியது. கருப்பொருள் என்னும் இயற்கைச் சூழலிலிருந்து புனையப்படுவது வெளிப்பார்வைக்குச் செடி, கொடி, மரம், பறவை, விலங்குகளின் வர்ணனை போலக் காணப்பட்டாலும், வெறும் இயற்கை வர்ணனைகளாக இடம்பெறாமல், பாடலில் மாந்தரின் மன உணர்வுகளை விளக்கிக் காட்டும் பின்புலங்களாக இடம்பெறுகின்றன.

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே"(தொல்-பா-993)

புலவன் உட்கருத்து ஒன்றையுள்ளே வைத்து வெளிப்படையாகச் சொன்ன உவமை அந்த உட்பொருளுடன் ஒத்து முடியும்படி சொல்ல வேண்டும். அதற்கு ஏற்ற அனைத்தையும் உள்ளுறுத்தி முடியப்பாடுவது உள்ளுறை உவமையாகும். ஏனைய பொதுவான உவமை என்பது அதனை படித்ததும் தானே விளங்கிவிடும் வகையில் அடங்கும்.

"உள்ளுறை உவமம் ஏனை உவமம் எதை
தள்ளாது ஆகும் திணை உணர்வகையே"(தொல்-அகத்-பா-49)

"ஏனை உவமம் தான் உணர் வகைத்தே"(தொல்-அகத்-பா-52)

**சூழலியல் கோட்பாடு**

உயிரினங்களுக்கும் அவற்றின் சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையே உள்ள உறவை விளக்கும் அறிவியல் ஆய்வே கோட்பாட்டு சூழலியல் எனப்படும். இது உயிரினங்களின் பரவல், அவற்றுக்கு இடையேயான இடைவினைகள் மற்றும் சுற்றுச்சூழல் பன்முகத்தன்மை ஆகிய முக்கியக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.

**அகநூல்களில் சுற்றுசூழல்**

எட்டுத்தொகை அகநூல்களில் சுற்றுச்சூழல் என்பது திணைக் கோட்பாடுகள், ஐம்பூதங்களின் இயல்பு மற்றும் விலங்குகளுக்கிடையே மனித உறவுகள் ஆகிய முக்கியக் கூறுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு போன்ற அகநூல்களில் இயற்கையை வெறும் பின்னணியாகப் பயன்படுத்தாமல், மனித உணர்வுகளின் வெளிப்பாடாகக் கொண்டு இயற்கை சுற்றுச்சூழலுடன் இயைந்து காட்டப்படுகிறது.

அகநூலில் சுற்றுச்சூழலில் உள்ளுறை உவமம்

இயற்கையின் இயக்கங்களை மனித உளவியலோடு இணைத்துச் சங்கப் புலவர்கள் பாடல்கள் மூலம் படைத்துள்ளனர். நிலத்தின் தன்மையும் விலங்குகளின், கற்பொழுக்கம், வரைவுகடாதல், பரத்தைமை பிரிவு போன்ற அகநூல்களின் செய்திகளை சுற்றுச்சூழல் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது.

**1. பரத்தை தோழியிடம் தலைவியை பழித்துரைத்தல்**

வயல் ஓரத்தில் உள்ள மாமரத்தில் பழுத்துத் தானாக உதிரும் இனிய மாம்பழத்தை, வயலில் உள்ள வாளை மீன்கள் தாவிப் பிடித்து உண்ணும் ஊரைச் சேர்ந்தவன் தலைவன். அவன் என் வீட்டிற்கு வந்தபோது என்னிடம் பல பொய்களை பெருமையாகக் கூறி என்னை

வசப்படுத்தினான். ஆனால், தன் வீட்டிற்குச் சென்றவுடன் தலைவி நிற்பதை பார்த்து கைகளையும், கால்களையும் அசைத்தால் அதற்கு ஏற்ப தானும் அசைக்கும் கண்ணாடியில் தெரியும் பாவை போல, தன் மனைவியின் விருப்பத்திற்கு ஏற்ப பணிந்து நடந்து கொள்கிறான்.

“கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்
பழனிவாளை கதூஉம் ஊரன்
எம்இல் பெருமொழி கூறி, தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல,
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே”(குறு-பா-8)

உள்ளுறை உவமம்

மாமரத்தில் தானாக விழும் பழம் போன்றவர்கள் பரத்தையர், அந்தப்பழத்தை மீன் கவ்வுவதுபோல, தன்னிடம் தேடிவரும் தலைவனின் அன்பைப் பரத்தையர் எளிதில் பெற்று இன்புறுகின்றனர்.இதில் கருப்பொருள்களான வயல்,மாமரம், வாளைமீன் ஆகியவை இயற்கைச் சூழலாக வெளிப்படையாக வந்து, தலைவனுக்கும் பரத்தைக்கும் உள்ள உறவுமுறையை மறைமுகமாக உணர்த்துகின்றன.

**2. தலைவி தன் கண்ணின் அழகை இழத்தல்**

தலைவன் பிரிவால் வருந்திய தலைவி, தன் தோழியிடம் தலைவன் தனக்குத் தந்த காமநோயும் அதனால் தன் கண்களில் படர்ந்த பசலை நிறமும் பற்றி வருத்திக் கூறுகிறாள்.

“மாசுஅறக் கழீஇய யானைபோலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்
பைதல் ஒருதலைச் சேக்கும் நாடன்
நோய் தந்தனனே – தோழி
பசலை ஆர்ந்தநம் குவளைஅம் கண்ணே”(குறு-பா-13)

**உள்ளுறை உமம்**

தலைவனுடன் இணைந்து வாழ்ந்த காலத்தில் தலைவியின் உள்ளமும், உடலும் தூய்மையாகவும், மகிழ்ச்சியுடனும் இருந்தன. ஆனால், தலைவன் பிரிந்து சென்றதால் ஏற்பட்ட துன்பமும் கவலையும் தலைவியின் அழகைக் கெடுத்து அவளது கண்களில் பசலை நோயை ஏற்படுத்திவிட்டன. அழுக்கு நீங்கக் கழுவப்பட்ட யானையைப் போல, பெருமழை பெய்து கழுவப்பட்ட சொரசொரப்பான பெரிய பாறை. இயற்கையின் தூய்மை வெளிப்படுவது போல, தலைவினின் பிரிவால் தன் கண்களில் பசலை நோய் படர்ந்துள்ளதை தலைவி விளக்குகிறாள்.

**3. தலைவன் வருகையை தோழி தலைவிக்கு உரைத்தல்**

திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லிவிட்டுப் பிரிந்து சென்ற தலைவன், குறித்த காலத்தில் வராததால் தலைவி வருந்தி மெலிந்திருந்தாள். இதைக் கண்ட தோழி, தலைவன் பொருள் தேடிமுடித்து மணம் புரியத் தன் தேரில் வந்துவிட்ட மகிழ்ச்சியான செய்தியைத் தலைவியிடம் உரைக்கிறாள்.

“கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை
முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை ஏறி

அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டு "(நற்-பா-22)

**உள்ளுறை உவமம்**

குளம் வற்றி பயிர்கள் காய்ந்து போகும் இக்கட்டான நள்ளிரவில் பெய்யும் மழை உயிர்களுக்கு உயிர்த்தருவது போன்றதாகும். வாடிய பயிருக்கு மழை கிடைப்பது போல, பிரிவால் வாடிய தலைவிக்குத் தலைவன் நேரில் வந்து திருமணம் பேசி மகிழ்வித்தலை இந்தச் சூழலியல் உள்ளுறை உவமம் அழகுற உணர்த்துகிறது.

## 4. தலைவன் திருமணம் செய்ய வலியுறுத்தல்

கடற்கரை மணலில் விழுந்த நாவல் பழத்தைத் தம்மினமென்றி வண்டுக்கள் மொய்க்கின்றன. அதனை நண்டு (அலவன்) பற்றி கொண்டு செல்ல, வண்டுகள் யாழ் போன்ற ஓசையுடன் கூச்சலிடுகின்றன. அங்கு இறையைத் தேடிவரும் நாரையைக் கண்டதும் நண்டு அந்த பழத்தை விட்டு ஓடிவிடுகிறது. இத்தகைய துறைமுக ஊரான மாந்தை போன்றது தலைவியின் நலம்.தலைவன் பிரிவின் உடனிருந்து அன்பு செய்தாலும், சிறிதாகப் பிரிந்தால் கூட இவளது கண்கள் பசலை அடைவது இயல்பாக இருப்பதால் விரைவில் நீ வந்து தலைவியை மணந்துக் கொள்ள வேண்டும் என்று தோழி கூறுகிறாள்.

"பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்ததும்பி, பழம்செத்துப்
-------------------- இவள் கண்பசந் ததுவே"(நற்-பா-35)

உள்ளுறை உவமம்

கடற்கரைச் சூழலில் நண்டு வண்டைப்பிடிப்பதும், நாரை வருவதால் நண்டு அதனை விட்டுவிட்டு ஓடுவதும். இயற்கையான ஒரு சமநிலையைக் காட்டுகிறது. இவ்வாறே தலைவியைக் காக்கச் சூழ்ந்திருக்கும் தோழியரிடமிருந்து தலைவன் களவொழுக்கில் தலைவியை அடைய நினைப்பதும், சுற்றத்தார் (நாரை போன்றோர்) வரவுக்கஞ்சித் தற்காலிகமாக விலகுவதும் இப்பாடலில் உள்ளுறையாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## 5. தலைவனின் ஒழுக்க நிலை

தலைவன் தலைவியோடு ஒன்றித்திருக்காமல் பரத்தை தேடிச் செல்வதை நினைத்து தோழியிடம் தலைவி அவனின் ஒழுக்க நிலையை எடுத்துரைக்கிறாள்.

"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
அறுகழிச் சிறுமீன் ஆரமாந்தும்
துறைவன் சொல்லிய சொல்லென்
இறையேர் எவ்வளை கொண்டுநின் றதுவே"(ஐங்-பா-165)

உள்ளுறை உவமம்

பெரிய கடற்கரையில் கரையில் உள்ள சிறிய வெள்ளைநிற நாரை அல்லது காக்கை, நீர்வற்றிய கழியில் அகப்படும் சிறிய மீன்களைப் பிடித்து நிறைய உண்ணும் தன்மை உடையது. அக்காக்கை நல்ல பெரிய மீன்களைத் தேர்ந்து உண்ணாமல் கழியில் கிடைக்கும் எளிய சிறிய மீன்களை உண்பது போல, தலைவனும் தகுதியான குலமகளிரை விடுத்துத் தகுதி குறைந்த பரத்தையரை நாடுகிறான் என்பதை தோழிக்கு வெளிப்படுத்துகிறது. அந்தத் தலைவனின்

அளித்த பொய்யான வாக்குறுதிகள் தன் ஒளியுள்ள வளையல்களைக் கழன்று விழச் செய்துவிட்டன என்று தலைவி வருந்துகிறாள்.

### 6. தலைவனின் நிலையும் பாணனின் செயலும்

பரத்தையிடம் சென்றுவிட்டுத் திரும்பிய தலைவனிடம் தலைவி, உன்னை விட உனது பாணன் பலபொய்களைக் கூறிப் பெரிய பொய்யனாக இருக்கிறான் என்று தலைவி ஊடலுடன் கூறுகிறாள்.

“அம்பணத் தன்ன யாமை ஏறிச்
செம்பின் அன்ன பார்ப்புப்பல துஞ்சும்
யாணர் ஊர நின்னினும்
பாணன் பொய்யன் பல சூளினே”(ஐங்-பா-43)

**உள்ளுறை உவமம்**

பெரிய ஆமையும் அதன் குஞ்சுகளும் நீர்ப்பரப்பில் உள்ள பாறைகள் அல்லது மேடுகளில் இளைப்பாறும். இதில் பெரிய ஆமை என்பது தலைவனையும் அதன் மீது அமர்ந்திருக்கும் செம்பு போன்ற குஞ்சுகள் பாணனையும் அவனது பொய்களை குறிப்பதாக மறைமுகமாக உள்ளுறையாக உவமையாக அமைக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

எட்டுத்தொகை அகநூல்களில் வரும் அகப்பொருளுக்குரிய கருப்பொருள் கொண்டு உள்ளுறை, உவமம், நயங்கள் நிறைந்துள்ளன. உட்பொருட்களில் உள்ளுறையாக கூறி தலைவன் பரத்தையை நாடல், அவளுடன் தொடர்பு கொள்ளல், அதற்குப் பாணன் துணைச் செய்வது, தலைவனின் இச்செயலை குறித்து ஊரில் அலர் எழுவது என அனைத்தும் அகத்திணைக்குரிய கருப்பொருளை உள்ளடக்கியே அமைந்துள்ளன. ஒருத்திக்கு ஒருவன் என்ற நீதி வலியுறுத்தப்படுகின்றது. அதனின்றும் மாறுபட்டால் ஏற்படும் விளைவுகளைக் கருப்பொருட்கள் மூலம் எடுத்துரைப்பதற்கு உள்ளுறை உவமை பயன்படுத்தப்பட்டுள்ளன.

**மேற்பார்வை நூல்கள்**

1.தமிழண்ணல் – தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் பாகம் -1 – செல்லப்பா பதிப்பகம் – மதுரை – 65001.

2.தமிழண்ணல் – தொல்காப்பியம் பொருளதிகாரம் – மணிவாசகர் பதிப்பகம் – பாரிமுனை.

3.பாலையன் அ.ப, புலியூர்க்கேசிகன் – சங்க இலக்கியம் நற்றிணை, ஐங்குறுநூறு – சாரதா பதிப்பகம் – சென்னை - 600014.

4. பாலையன் அ.ப, புலியூர்க்கேசிகன் – சங்க இலக்கியம் குறுந்தொகை – சாரதா பதிப்பகம் – சென்னை - 600014.

5.லீலா.கோ – தமிழ் மொழியில் சூழலியல் வகைமை – படைப்பு பதிப்பகம் – 2026.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 74.கொற்கை நாவலில் மீனவர் சமூகமும் கடல்சார் சுற்றுச் சூழலும்

**மு. கீர்த்தனா,**
தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-02
**ஆய்வு நெறியாளர்: முனைவர் தா. லதா**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 620 002.

**ஆய்வுச்சுருக்கம்**

கடலும் மனித வாழ்வும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. மீனவர் சமூகத்தின் வாழ்வியல், பண்பாடு, பொருளாதாரம் மற்றும் சமூக உறவுகள் அனைத்தும் கடலையே மையமாக கொண்டுள்ளது. ஜோடி, குரூஸின் கொற்கை நாவல் மீனவ சமூகத்தின் வாழ்க்கையை சமூகப் பார்வையுடன் பதிவு செய்கிறது. கடல் கடற்கரை முகத்துவாரங்கள் பவளப்பாறைகள் போன்ற கடல்சார் சூழலமைப்புகள் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கும் பண்பாட்டிற்கும் அடித்தளமாக இருக்கின்றன. எனவே கடல்சார் சுற்றுச்சூழலை பாதுகாப்பது என்பது இயற்கை வளங்களை மட்டுமல்லாமல் மீனவர் சமூகத்தின் வாழ்க்கை பண்பாடு பொருளாதாரத்தை பாதுகாப்பதாகும்.

**முன்னுரை**

மீனவர்கள் இயற்கையுடன் இயைந்து வாழும் பாரம்பரிய சமூகத்தினராக இருக்கின்றனர். காற்றின் திசை, அலைகளின் தன்மை, பருவமழை, நீரோட்டம் போன்ற இயற்கை மாற்றங்களை அனுபவம் மூலமாக அறிந்து மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர். மேலும் இவை தலைமுறை தலைமுறையாக தொன்று தொட்டும் வருகிறது.

**சுற்றுச் சூழல் சீர்கேடு**

நாவலில் கடல்வளக் குறைவு, இயந்திரம் மூலம் மீன்பிடித்தல், அதிகமான வளச் சுரண்டல் போன்றவை மீனவரின் வாழ்வை பாதிக்கக்கூடியதாக அமைகின்றன. நவீனமயமாதல் என்பதன் மூலம் இயற்கை வளங்கள் அதிகமாக அழிக்கப்படுகிறது. இதனால் மீனவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர்.

**சுற்றுச் சூழலும் பண்பாடும்**

மீனவர்களின் திருவிழாக்கள் கடல் வழிபாடு நம்பிக்கை கடலுக்கு செல்லும் முன் கடவுளை வணங்குவது பிறகு கடலை வணங்குவது படகையும் தோணியையும் மதிப்பது போன்றவை இயற்கையை பாதிக்கும் பண்பாடு ஆகும். சுற்றுச்சூழல் பயன்பாட்டுப் பொருளாக அல்லாமல் வாழ்வின் ஓர் அங்கமாக அவர்கள் கருதுகின்றனர்.

**சுற்றுச் சூழலை பாதுகாத்தல்**

சுற்றுச் சூழலை பாதுகாப்பது மீனவரின் எதிர்காலத்தையும் அடுத்து வரும் சந்ததியினரும் முக்கியமான ஒன்றாக இருக்கும். கடல் சார்ந்த பகுதியில் உள்ள மக்கள் பிளாஸ்டிக் பொருளை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். கடலுக்கு செல்லும் மீனவர்கள்

அவர்கள் சார்ந்த பகுதியையும், பவளப்பாறைகளையும், மீன்பிடித்தல் முறையையும் மதித்து பாதுகாக்க வேண்டும். இதனால் அவர்கள் சார்ந்த சுற்றுச் சூழல் மாசுபாடு அழியாமல் இருக்கும்.

மீன்பிடி உபகரணம் மூலம் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவது

மீன்பிடி தொழிலுடன் தொடர்புடைய முக்கியப் பிரச்சனை அளவுக்கு அதிகமாக மீன்பிடித்தல் ஆகும். சிலவகை மீன்பிடி உபகரணம் மூலம் அதன் வாழ்விடங்களை அழிப்பது. வணிக நோக்கில் அதிக மீன்களை பிடித்து சேதத்தை ஏற்படுத்துவது, ஆழ்கடல் மீன்பிடித் தொழில்கள் பல கடல்வாழ் உயிரினங்களை, குறிப்பாக தரைமீன்கள் மற்றும் இறால்களை அறுவடை செய்ய அடிமட்ட வலையை கொண்டு பயன்படுத்துவதன் மூலம் பல சேதாரம் ஏற்படுகின்றன. பவளங்கள் கடல் குஞ்சுகள் ஆமைகள் கடலடியில் வாழும் வன விலங்குகள் அதிகமாக அழிக்கப்படுகின்றன. இவை கடல் சூழலை பாதிக்கும் முக்கியமான ஒன்றாகும்.

பாதுகாப்பு நடவடிக்கை

கடல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தல் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல் மீன்பிடித்தடைக் காலத்தை பின்பற்றுதல் மாங்குரோ காடுகள் மற்றும் பவளப்பாறைகளை பாதுகாத்தல் நிலையான மீன்பிடி முறைகளை ஊக்குவித்தல் மீனவர்களின் பாரம்பரிய அறிவை அரசுத் திட்டங்களுடன் இணைத்தல், ஆகியவை கடல்சார் சுற்றுச்; சூழலை பாதுகாக்க உதவும்.

**முடிவுரை**

மீனவர் சமூகமும் கடல்சார் சுற்றுச் சூழலும் ஒன்றை ஒன்று சார்ந்தவை. கடலின் வளமும் தூய்மையும் பாதுகாக்கப்பட்டால்தான் மீனவர் சமூகத்தின் வாழ்வாதாரம் பண்பாடு மற்றும் எதிர்காலம் பாதுகாக்கப்படும். எனவே கடல் சார்ந்து உள்ள சுற்று சூழலை அரசு மற்றும் பொதுமக்கள் இணைந்து பாதுகாக்க வேண்டும். இதன் மூலம் நிலையான வளர்ச்சிக்கும் வருங்கால தலைமுறைகளின் நலனுக்கும் இன்றியமையாததாகும்.

**ஆய்வு நூல்கள் :**

[1]. கொற்கை,

[2]. ஆழி சூழ் உலகு

[3]. பட்டினப்பாலை

[4]. செம்மீண்

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 75.பாவலர் வையவன் கவிதைகளில் சுற்றுச் சூழல் சிந்தனைகள்

**ந.இரா.சக்திவேல்,**
உதவிப் பேராசிரியர், எஸ்.ஆர்.எம். திருச்சி கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.அலைபேசிஎண்: 9843725183.
மின்னஞ்சல்: kanthansakthi@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பாவலர் வையவன் கவிதைகளில் சுற்றுச்சூழல் சிந்தனைகள் என்னும் தலைப்பில் அமைந்த இக்கட்டுரையில் கட்டிடங்கள் கட்டப்படுவதால் ஏற்படும் வயல்வெளிகளின் அழிவு, மனிதர்களின் தன்னலத்தால் மரங்கள் அழிக்கப்படுவது, மழைக்காடுகளின் அழிவு, நீர் நிலைகளின் அழிவு ஆகிய சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள பெரும் கேடுகள் குறித்து சூழலியல் சிந்தனையாளர்கள், சமுதாய அக்கறையாளர்களின் கருத்துகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படுகிறது. சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டியதன் இன்றியமையாமையும் உணர்த்தப்படுகிறது.

**கலைச்சொற்கள்** : வயல்வெளி, மழைக்காடுகள், ஏரி, ஓடை, குளம், குட்டை, பல்லுயிர், தாய்மடி, உயிர் சங்கிலி, புவியியல், நீரூற்று

**முன்னுரை**

நிகழ் காலத்தில் வாழும் கவிஞர்களுள் வாழ்வியலில் நெறியான போக்கும் வளமான சிந்தனையும் கொண்டவராகத் திகழ்பவர் பாவலர் வையவன். மண்ணும் மக்களும் வளமோடு வாழ வேண்டும் என்ற குறிக்கோளோடு தம் கவிதைகளைப் படைத்து வரும் வரும் பாவலர் வையவனின் தமிழ்க்காடு என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து சுற்றுச்சூழல் நோக்கில் அமைந்த ‘மரக்கவலை மாற்றலரிது’, ‘எங்கே’, ‘மழையின் மடல்’, ‘குளம் காப்போம்’ , ‘வயலும் வயல் சார்ந்த இடமும்’ என்னும் ஐந்து தலைப்பிலான கவிதைகளில் சூழலியல் நோக்கில் சில கவிதைகள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**வயல் வெளிகளின் அழிவு**

சுற்றுச்சூழல் கேடுகளில் மிகக் கொடுமையானது உணவு தரும் வயல்வெளிகள் அழிக்கப்பட்டு, விளைநிலங்கள் கட்டிடங்களாய் மாறிய கொடுமையாகும். விளைநிலங்களில் கட்டிடம் கட்ட அரசு அனுமதி இல்லை. ‘குறிப்பிட்ட ஆண்டுகள் அந்த நிலத்தில் வேளாண்மையே நடக்கவில்லை என்றால் அந்த நிலங்களுக்கு அனுமதி வழங்கப்படும்’ என்ற அரசுச் சட்டத்தையும் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டு குறிப்பிட்ட சில ஆண்டுகள் வேளாண்மை செய்யாமல் அந்த நிலத்தை விட்டு வைத்திருந்து அதன் பின்னர் அனுமதி வாங்கி அதைக் கட்டிடம் கட்டுவோருக்கு விற்று விடுகின்றனர். நகர்ப்புறம், ஊர்ப்புறம் என்ற வேறுபாடின்றி எல்லா இடங்களிலும் நிலங்கள் வீட்டுமனைகளாக, கல்வி நிலையங்களாக, வணிக மையங்களாக மாறி வருகின்றன. இதனை,

கயலினம் சுமந்த ஓடை
கழிவுநீர் சுமக்க லாச்சு வயல்களில் மேய்ந்த மாடு
வண்டியில் ஏற லாச்சு திறைந்த ஏரி
கட்டிட மனைகள் ஆச்சு
உயர்திணை மருதம் இங்கு
உருத்தெரி யாமல் போச்சு. (தமிழ்க்காடு ப.177)

என்று எழுதுகிறார். “மழையின்மை உள்ளிட்ட பல்வேறு சமூக காரணங்களால் தொழிற்சாலைகளுக்கும் வீட்டு மனை விற்பனையாளர்களுக்கும் விளைநிலத்தை விற்றுவிட்டு கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வேளாண் தொழிலை கைவிட்ட விவசாயிகளின்

எண்ணிக்கை 8 லட்சத்து 67 ஆயிரம் பேர். 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இதைச் சொல்கிறது"[1] என்கிறார் சா.சம்பத்து. [1]வயல்வெளிகளின் அழிவு என்பது உணவுப் பொருளோடு தொடர்புடையது மட்டுமல்ல, புவியில் வாழ்கிற எண்ணற்ற உயிர்கள் வாழ்வுக்கும் கேடு தருவதாகும் என்று வருந்துகிறார்.

விலங்குகள் பறவை மற்றும்
விரிபுவி உயிர்கள் எல்லாம்
தொலைந்து தான் போனதோடு
தோற்றது உழவர் வாழ்வும் (தமிழ்க்காடு ப.178)

என்று எழுதும்போது வயல்வெளிகளின் அழிவு என்பது உழவர்களின் தோல்வியாகக் குறிப்பிடப்பட்டாலும் அது மனித குலத்தின் தோல்வியாகும் எனத் திண்ணமாக எடுத்துரைக்கலாம்.

**மரங்களின் அழிவு மனித குல அழிவே**

மனிதன் தன் பயன்பாட்டுக்காக மரங்களை வெட்டியும் காடுகளை அழித்தும் இயற்கையைச் சிதைத்துச் சுற்றுச்சூழலுக்குச் செய்து வரும் கேடு பெருங்கேடாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகளும் வனவள பாதுகாப்பு அமைப்புகளும் உலக நாடுகளின் எல்லா அரசுகளாலும் அமைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. சுற்றுச்சூழல் மாநாடுகள். சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த அறிக்கைகள். சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான பன்னாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தங்கள் இருந்தும் காடுகளின் அழிவு குறையவே இல்லை. மரங்களும் பிற உயிரினங்களும் தோன்றிய பின்னரே மனிதன் தோன்றினான். "புவியில் கடைசியாக தோன்றிய உயிரினம் மனித இனம் தான். மற்ற உயிரினங்கள் அனைத்தும் நமக்கு முன்னரே தோன்றி விட்டன. ஆயினும், கோடிக்கணக்கான ஆண்டுகளாய் புவியில் வாழ்ந்து வரும் அந்த உயிரினங்களின் அழிவுக்கு காரணமாக இருப்பது கடைசியாக தோன்றிய மனித இனமே." என்கிறார் சூழலியலாளர் நக்கீரன். [2]இக்கூற்றையே பிரதிபலிக்கும் வண்ணம்,

பெருகியே கிடந்தோம் நீங்கள்
பிறக்குமுன் இங்கே நாங்கள்;
அருகியே விட்டோம் எம்மை
அழியவிட் டீரே நீங்கள்!
கருகியே துடிக்கும் எங்கள் கண்ணீரை
மாற்று வீரா? உருகிய
உள்ளத் தோடு
ஒருகுடம் நீட்டு வீரா? (தமிழ்க்காடு ப.41)

என மரமே பேசுவது போல் எழுதுகிறார் வையவன். கவிதை உத்திகளில் அஃறிணைப் பொருள்கள் பேசுவது போல எழுதுவது இக்காலக் கவிஞர்களிடம் பரவலாகக் காணப்படும் ஒரு உத்தியாகும். அந்த வகையில் மரத்தைப் பேச வைக்கும் கவிஞர்,

மரங்களால் சிற்பம் செய்தீர்
மாளிகை கட்டிக் கொண்டீர்;
நாற்காலி கதவு என்று
நார்நாராய்க் கிழித்தீர்; எம்மை
விறகென வெட்டி வைத்து
விதவித சமையல் செய்தீர்;
இறந்தது நீங்கள், எம்மை
உடன்கட்டை ஏறச் செய்தீர்! (தமிழ்க்காடு ப.42)

என்று கலைப் பொருள்களில் தொடங்கி இறந்தபின் உடலுக்குத் தீயூட்டும் வரை எம்மைப் பயன்படுத்திக் கொண்டீர்கள் என்று மரம் வருந்திக் கூறுவதாக எழுதுகிறார்.

**மழைக் காடுகளின் அழிவு**

சுற்றுச்சூழல் அழிவுகளில் பேரழிவாகத் திகழ்வது காடுகள் அழிக்கப்பட்டதாகும். காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட இழப்புகள் எண்ணில் அடங்காதவை. புவி வெப்பமாதல் தொடங்கி, மழை இல்லாத வறட்சி வரை சில ஆண்டுகளில் மழை பொய்த்துப் போவதற்கு காடுகளின் அழிவே காரணமாக இருக்கிறது. புவிப்பரப்பில் ஓரிடத்தில் மழை பெய்யாமல் வறட்சி ஏற்படுவதற்கும் மற்றோர் இடத்தில் பெருமழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் இன்னல் அடைவதற்கும் காடுகளின் அழிப்பும் ஒரு காரணமாகும். "காடுதான் பல்லுயிர்களுக்கும் தாய்மடி. பல்லுயிர் என்பது அங்குள்ள தாவரங்கள், பூச்சிகள், பறவைகள், மிருகங்கள் அனைத்தையும் உள்ளடக்கியது. இந்த உயிர்ச் சங்கிலியில் எந்தக் கண்ணியும் அறுந்து விடக்கூடாது. பல்லுயிர்களும் இருந்தால்தான் காடு வாழ முடியும். அந்த காட்டில் தான் மேகங்கள் கர்ப்பம் தரிக்க முடியும். அம்மா இல்லாத பிள்ளைகள்; பிள்ளைகள் இல்லாத அம்மா இரண்டுமே சோகம்தான். காடுகள் செழிப்பாக இருந்தால்தான் நாடு செழிப்பாக இருக்க முடியும். நாம் வாழ்வுக்காகவும் வணிகத்துக்காகவும் உல்லாசத்துக்காகவும் காடுகளை அழித்துவிட்டு நாடு செழிப்பாக இருப்பதாக நம்பிக் கொண்டிருக்கிறோம்" என்கிறார் பழநிபாரதி3. இதனையே,

கருவளரும் தாயவளின் கருப்பை போன்றே
காடுகளும் பூமியதன் கருப்பை ஆகும்
உருவளரும்; உயிர் வளரும்; உள்ளே ஆங்கே
உருவம் இல்லா பல்சூழல் வளரும்; மாறும்
பருவமதன் சூல்வளரும் காட்டில் தானே
பசிக்குணவும் மூலிகையும் வளரும் (தமிழ்க்காடு ப.54)

என்று எழுதி இன்றைக்குச் சூழலியல் அறிஞர்கள் தெரிவிக்கிற கருத்துகளையெல்லாம் கவிதை வடிவில் அழகுறப் பதிவு செய்கிறார் பாவலர் வையவன். "ஒரு காலத்தில் புவியியல் மொத்தப் பரப்பில் 14% வரை மழைக் காடுகள் இருந்தன. பின்னர் அவை சுருங்கி வெறும் 6% ஆகி, தற்போது மேலும் குறைந்து வருகிறது. காரணம் ஆண்டுக்கு ஏழு கோடியே எண்பது லட்சம் ஏக்கர் மழைக் காடுகளை நாம் இழந்து வருகிறோம். இதே வேகம் தொடருமானால் 40 ஆண்டுகளில் புவியில் மழைக் காடுகளே இல்லாமல் போய்விடும்." என்று எச்சரிக்கிறார் நக்கீரன்.[4] இந்த நிலையில் காடுகளின் பயன்களை,

மலைமீது விழுகின்ற மழையைத் தேக்கி
மடிவைத்துக் கொடுப்பதுவும் காடு; நல்ல
அலைவீசும் கடல்நீரை அள்ளி வந்த
ஆகாய முகிலுக்கும் நண்பன் காடு;
உயிர்வளியைத் தருவதுவும் காடு; ஓடும்
ஓடைகளைத் தருவதுவும் காடு; எங்கும்
பயிர்விளையும் மருதத்தில் பாயும் ஆற்றால்
பாழின்றி மண்ணரிப்பைத் தடுக்கும் காடு! (தமிழ்க்காடு ப.55)

என்று பட்டியலிடுகிறார். வானத்தில் திரிந்து மழை பொழியும் மேகத்துக்கும் நண்பனாய்க் காடு திகழ்வதை அறியாமல் போனதால் இன்று தமிழ்நாடு மழையின்றி வாடுவதும், மண்ணரிப்பைத் தடுக்கும் காடுகளை வெட்டி வீழ்த்திவிட்டுக் கட்டிடங்கள் எழுப்பியதால் கேரளா ஒவ்வோர் ஆண்டும் நிலச்சரிவுக்கு ஆளாவதும் இன்று கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

**நீர் நிலைகளின் அழிவு**

இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்த தமிழர்களின் வாழ்வில் முற்காலத்தில் அறச்செயல் என்பது மரங்கள் நடுவதும் குளங்கள் வெட்டுவதுமாக இருந்தது. அரசர்களின் ஆணையின்படி ஏரிகளும் குளங்களும் வெட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், இக்காலத் தன்னல மனிதர்கள் ஏரிகளையும் குளங்களையும் தூர்த்து விட்டுத் தங்கள் சொந்த நலனையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில்தான் நீர்நிலைகளின் அழிவு குறித்தும் அவற்றைக் காக்க வேண்டியதன் இன்றியமையாமை குறித்தும் பாவலர் வையவன் எழுதுகிறார்.

*ஓடிவந்த ஓடைகளும் நதியும் எங்கே? ஓங்கிவனர் சோலைகளும் தோப்பும் எங்கே*
*பாடுகின்ற பறவைகளும் வண்டும் எங்கே பசுங்கொடிகள் ஏறிநின்ற மரங்கள் எங்கே*
*நாடிவந்த கால்நடைக்கு மேய்ச்சல் எங்கே? நம்பியவை நீர்குடிக்கும் குளங்கள் எங்கே?*
*கோடிகோடி மண்ணியற்கை வளங்கள் எங்கே? கொண்ட'உயிர்ச் சங்கிலி'வாழ் சூழல் எங்கே?*
*(தமிழ்க்காடு ப.56)*

என்று காணாமல் போய்விட்ட நீர் நிலைகள் குறித்து வருந்துகிற கவிஞர், நீர் நிலைகளை அழித்தொழிப்பது வரலாற்றுப் பிழை என்று குறிப்பிடுகிறார். "தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீர் வளத்தில் பெரும்பகுதி வடகிழக்குப் பருவ காலத்திலேயே கிடைக்கிறது. மழை நீரைத் தேக்கி வைக்க ஆயிரக்கணக்கான ஏரிகளை நமது முன்னோர்கள் உருவாக்கினார்கள். வேளாண்மைக்கு பயன்படுவது மட்டுமின்றி, இவை சுற்றுவட்டாரங்களில் நிலத்தடி நீரூற்று பெருகவும் சுற்றுப்பாதை சூழல் கெடாமல் பாதுகாக்கவும் பயன்பட்டன. கிராமத்தின் பொருளாதார மையம் என அழைக்கும்படி ஏரியின் பயன்பாடு உள்ளது. அனைத்து ஏரிகளையும் புனரமைத்து மழை நீரைச் சேமித்தால் போதும். விளைச்சலை அதிகரிப்பதன் மூலமும் சிக்கன நீர் பயன்பாட்டின் மூலமும் உணவு உற்பத்தியில் அதிகரித்து, மீதமாகின்ற தண்ணீரைப் பிற தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். ஆறுகளும் குளங்களும் மக்கள் சொத்து, மக்களால்தான் அவற்றைக் காப்பாற்ற முடியும்"[5] என்கிறார் முனைவர் பழ. கோமதி நாயகம். குலங்களைக் காப்போம் என்ற கவிதையில், ஒரு காலத்தில் திருவண்ணாமலை நகரைச் சுற்றிலும் அமைந்திருந்து இன்று காணாமல் போய்விட்ட குளங்களை, குட்டைகளை எல்லாம் பெயர் குறிப்பிட்டுப் பட்டியலிடும் கவிஞர் நீர் நிலைகளைக் காக்க வேண்டியதன் இன்றியமையாமையையும் வலியுறுத்தும் விதமாக,

வரம்வேண்டி குளங்களிலே தலையை மூழ்கும்
வகையறிந்த பக்தர்களைக் கண்ட துண்டு
வரம்தந்த குளங்களுக்கே முழுக்கு போடும்
வரலாற்றை நிகழ்த்துவது சரியா? சொல்வீர்! உரந்தந்து இருக்கின்ற குளங்கள் தம்மை
உயிர்போலக் இனியேனும் காத்தல் வேண்டும்!
வருகின்ற தலைமுறைகள் பெருமை கொள்ள வாழ்கின்ற நாம்நகரைப் போற்றல் வேண்டும்!
(தமிழ்க்காடு ப.65)

என்று வேண்டுகோள் விடுக்கிறார். மழை நீரைச் சேமித்து வைத்து ஆண்டு முழுவதும் வழங்கும் ஏரிகள், ஓடைகள், குளங்கள் குட்டைகள் என பறந்து கிடந்தவற்றையெல்லாம் மறுபடியும் சீரமைப்பதுதான் எதிர்காலத்தில் மனிதன் வாழ்வதற்கான ஒரே வழி என்கின்ற முறையில்,

இயற்கைக் கெதிராய் நடத்தும் போரை
இத்துடன் நீங்கள் நிறுத்திட வேண்டும்
மழைக்கென இருந்த இடங்களை எல்லாம் மறுபடி
திருப்பித் தந்திட வேண்டும். (தமிழ்க்காடு ப.45)

என்று எழுதுகிறார். மழையின் மடல் என்ற கவிதையில் மழையின் குரலாகவே ஒலிக்கும் இந்த எச்சரிக்கையை மனம்கொண்டு எதிர்கால மனித வாழ்வு குலைந்து போகாதவண்ணம்

அழிந்துபோன நீர்நிலைகளை மீட்டெடுக்கவேண்டியது சமுதாய அக்கறை உள்ள அனைவரின் கடமையாகும் என்பதைப் பாவலர் வையவன் அழகுற எடுத்துரைக்கிறார்.

**முடிவுரை**

இயற்கையோடு இயைந்த வாழ்வும், இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் உணர்வும் கொண்டிருந்த மனித குலம், அதிலிருந்து விலகி மெல்ல மெல்ல சுற்றுச்சூழலைச் சீர்குலைக்கும் நிலைக்குச் சென்று விட்டது. பொருள் ஆசையில் உணவு தரும் வயல்வெளிகளை அளித்தல், தங்கள் வசதிக்காக மரங்களை வெட்டுதல், பெரும் பொருளீட்டுகிற நோக்கில் காடுகளை அழித்தல், தன்னல நோக்கில் நீர்நிலைகளை ஆக்கிரமித்தல் என்று சுற்றுச்சூழல் பெருமளவில் சீரழிக்கப்பட்டுள்ளது பாவலர் வையவன் கவிதைகளில் வழியே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் பேரழிவால் ஏற்பட்டுள்ள பெருங்கேடுகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. அச்சம் தரக்கூடிய, எதிர்கால சமுதாயத்தைச் சீர்குலைக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்பது தக்க சான்றாதாரங்களுடன் உறுதி செய்யப்பட்டுள்ளது. மனித குலத்தைக் காக்க வேண்டும் எனில் சுற்றுச்சூழலைக் காக்க வேண்டும் என்கிற சிந்தனை வளர வேண்டும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

**குறிப்பெண் விளக்கம்**

1. பெருமாங்குப்பம் சா. சமபத்து, நீர் மேலாண்மை பக். 127, 128 நக்கீரன், பசுமைப் பள்ளி ப.13.
2. பழனிபாரதி, காற்றின் கையெழுத்து, ப.23
3. நக்கீரன், மழைக் காடுகளின் மரணம், ப.13
4. முனைவர் பழ. கோமதிநாயகம், (கட்டுரை ஆசிரியர்) தமிழர் நீர் மேலாண்மை, பக். 61, 62.

**துணை நின்ற நூல்கள்**

1. ……………. தமிழர் நீர் மேலாண்மை, பன்மைவெளி, 21, முதல் தெரு, முதல் பிரிவு, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை- 78, இரண்டாம் பதிப்பு : 2019.
2. சம்பத்து, சா. இரேணுகாம்பாள் பதிப்பகம் , 5, நாலாவது குறுக்குத் தெரு, அரியந்து நகர், வேலூர் மாவட்டம், பதிப்பு: அக்டோபர்- 2014
3. பழனிபாரதி, காற்றின் கையெழுத்து, பிரமி பதிப்பகம், திருச்சிராப்பள்ளி-23, மாணவர் பதிப்பு : நவம்பர்- 2021.
4. நக்கீரன், பசுமைப் பள்ளி, காடோடி பதிப்பகம், 6 விகேஎன் நகர், நன்னிலம், திருவாரூர் மாவட்டம், முதற்பதிப்பு, டிசம்பர் – 2021.
5. நக்கீரன், மழைக் காடுகளின் மரணம், ப.13 காடோடி பதிப்பகம், 6 விகேஎன் நகர், நன்னிலம், திருவாரூர் மாவட்டம், முதற்பதிப்பு, டிசம்பர் – 2021, ப.13
6. பாவலர் வையவன், தமிழ்க் காடு, நெசவுக் குடில், 54,பிள்ளையார் கோயில் தெரு, தமிழ்மின் நகர், திருவண்ணாமலை -1, முதற்பதிப்பு: டிசம்பர் – 2018.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI:** https://doi.org/10.63300/tm11sp032026

# 76. முட்டம் சி.வால்டர் படைப்புகளில் கடற்கரைச் சூழல்

**அ.கபிரியேல் ராஜ்,**

(பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்), **பதிவெண்:** 20223114021040, தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்- 629802. **ORCID:** 0009-0009-5231-3969, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி.

**தொடர்புக்கு:** 9442772478

**நெறியாளர்:** முனைவர் செ. மெஜிலா ஜூலி, உதவிப் பேராசிரியர், தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர் 629802.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

**ORCID:** 0009 – 0008 – 2215 - 666x

**ஆய்வுச் சுருக்கம்**

பண்பட்ட வாழ்வு வாழ்ந்த பண்டைத் தமிழர்கள் நிலத்தை ஐவகையாகப் பிரித்தனர். அவற்றுள் கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் நிலம் ஆகும். இயற்கை எழில் நிறைந்தது கடற்கரை ஆகும். அலை அலையாய் வரும் ஓசைகளும், குளிர்ந்த காற்றும் மென்மையான கடற்கரப்பும் காண்போரைக் கவர்ந்திழுக்கும் கவின்மிகு காட்சிகள் ஆகும். கடலோடு பின்னிப் பிணைந்தது நெய்தல் நில மக்களின் வாழ்வு ஆகும். கவின்மிகு கடற்கரையின் அழகான சூழலை முட்டம் சி. வால்டர் படைப்புகளின் மூலம் நெய்தல் வட்டார வழக்கில் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**கலைச் சொற்கள்**

புறநானூறு, நெடுவாங்கல், வர்ஷம், ஓகிப்புயல், நெஞ்சுரம், திமிங்கலம், பாச்சோறு, கதிர்வீச்சு வள்ளம், கடவாக்கு, கலங்கரை விளக்கம், முத்துக்கள், கட்டுமரம், ஆழ்கடல்.

**முன்னுரை**

மனிதன் மட்டும் உயிர் வாழ மட்டும் உருவானது இவ்வுலகமன்று. பல்லுயிர்களும் அவ்வவற்றின் இயல்புகளோடும் இயற்கையோடும் இணைந்து வாழ்வதே சுற்றுச்சூழல் ஆகும். நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்துப் பொருட்களின் தொகுப்பே சுற்றுச் சூழல் ஆகும். கடற்கரைச் சூழல் என்பது கடலும் கடல் சார்ந்த இடங்களையும் அதன் இயற்கை வளங்களையும் அங்கு வாழும் உயிரினங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள் இவற்றை முட்டம் சி. வால்டர் படைப்புகள் வழி இக்கட்டுரை விளக்குகிறது.

**சுற்றுச்சூழல்**

சுற்றுச் சூழலுக்கு தொல்காப்பியர் பின்வருமாறு விளக்கம் தருகிறார்:

"நிலம் தீ நீர்வாளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

*(தொல். பொருள். மரபியல்: 644)*

சுற்றுச் சூழலுக்கு புறநானூறு தரும் விளக்கம்:

"மண்டணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பிவளிதரு வளியும்
தீமுரணிய நீருமென்றாங்கு
ஐம்பெரும் பூதத்தியற்கை"
*(புறநானூறு: 12)*

என ஐம்பெரும் பூதங்களால் ஆனது சுற்றுச் சூழல் என விளக்கப்பட்டுள்ளது.

**படைப்பாளரும் படைப்புகளும்**

முட்டம் சி. வால்டர் கன்னியாகுமரி மாவட்ட கடலோர கிராமமான முட்டம் என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். ஐந்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு சிறுவயது முதலே மீன்பிடித் தொழில் செய்து வருபவர். இயக்குனர் இமயம் பாரதிராஜாவின் இனிய நண்பர். *கடவாக்கு*, *சிப்பி சிந்திய முத்துக்கள்*, *நெடுவாங்கல்*, *வர்ஷம்*, *தூண்டிலைத் தேடும் மீன்கள்*, *லட்சியப்பாதை* என்னும் ஆறு படைப்புகளை வெளியிட்டுள்ளார். *கடல் பூக்கள்*, *மரியான் வன்மம்*, *உள்குத்து* போன்ற திரைப்படங்களில் சிறு வேடங்களில் நடித்துள்ளார். இன்றும் தன்னுடைய படைப்புப் பணியைத் தொடர்ந்து வருகிறார். வளரும் தலைமுறையினர் பன்முகத் திறமை பெற அளப்பரிய வழிகாட்டல்களை இன்று வழங்கி வருகிறார்.

**கடற்கரைச் சூழல்கள்**

கடலில் அவ்வப்போது பேரலை வந்து அனைத்தையும் வாரிக்கொண்டு போய்விடும் காட்சிகள் அரங்கேறுவது உண்டு. இதனை,

"அன்று காற்று வேகமாக அடித்து வர்ஷமாக வந்து கொண்டிருந்தது. திடீரென்று கடல் அலைகள் கடற்கரையில் முதல் வரிசையில் இருந்த வீடுகளிலும் வேண்டா விருந்தாளியாக வந்து போனது." *(நெடுவாங்கல். பக்: 93)*

**ஓகிப்புயல்**

ஓகிப்புயலின் தாக்கம் கடற்கரைச் சூழலை எவ்வாறு நிலைகுலைய வைத்தது என்பதை *சிப்பி சிந்திய முத்துக்கள்* கவிதைத் தொகுப்பில் "ஓகியின் ஓலம்" கவிதையில் சிறப்புற விளக்குகிறார்:

"ஓங்கி அடித்தது ஓகிப்புயல்
பொங்கி வந்தது சோகப்புயல்
கரையொன்றும் எனக்குத் தெரியவில்லை
கடவுள் வந்தும் என்னைக் காக்கவில்லை
மீன்கடிச்சு கிழிஞ்சது என் உடம்பு
மீண்டும் நைந்து போகுதே என்னுடம்பு"
*(சிப்பி சிந்திய முத்துக்கள். ஓகியின் ஓலம், பக். 66)*

*வர்ஷம்* நாவலிலும் ஓகிப்புயலின் கோரத்தாண்டவத்தை அழகுற எடுத்துரைக்கிறார்:

"ஓகிப்புயல் ஓங்கி அடித்து ஒரு நாள் ஆகிவிட்டது. சிலுவையின் போட் இன்னும் கரை வராததால் அந்த ஊரின் மக்களுக்கு பல பல சிந்தனைகள் ஓடியது." *(வர்ஷம், பக்: 86)*

கடல் அலைகளின் அழகிய காட்சியை கவிதை வடிவில் அழகுற பின்வருமாறு பாடுகிறார்:

"ஆழிமகள் அலைக்கரத்தால்
அழகுமணல் திடலினிலும்
ஆங்காங்கே வீற்றிருக்கும்
கரும்பாறைத் தனில் மோதி
காதலுடன் வருகையிலே
நீலநிறக் கடலலைகள்
நீங்காத நாணம் கொண்டு
நிறம் மாறி நுரை வெளுத்த
கோலமுறும் காட்சி காணக்
கோடிக் கண் வேண்டுமையா"

*(சிப்பி சிந்திய முத்துக்கள் - கடலோடிகள், பக். 30)*

**இயற்கையைப் பாதுகாத்தல்**

கடலில் அணுக் கழிவுகளைக் கலப்பதால் கடல் வளம் அழிகிறது என்பதை ஆசிரியர் தன்னுடைய கவிதை மூலம் விளக்குகிறார்:

கடலின் அடிவயிற்றில் அணுக் கழிவுகளைக் கலந்திடச் செய்ததினால்
கடலின் வளங்கள் அழியுது
கதிர் வீச்சாலே கடலலை உயருது. *(சிப்பி சிந்திய முத்துக்கள், பக். 43)*

**கப்பல்**

கடலுக்கு மெருகூட்டுவது அங்கே பயணிக்கும் கப்பல்கள் ஆகும். கப்பல்கள் கடலில் வந்து போகும் சூழலை,

"கப்பல்ட்டல நம்ம விளையாட்டுட் கெடக்கோம் நமக்கு உறங்காம இருக்க ஏதாவது பேசுண்டி இருக்கணுமனி பாத்தா நீ ஒரு நாத்திகனப்போல பேசுண்டிருக்கியே கடல் தண்ணிய எடுத்து வாயக் கழுவு என்று அம்பிரோஸ் கோபமாக கூறினார்." *(தூண்டிலைத் தேடும் மீன்கள், பக்: 28)*

எனவும்,

"வள்ளத்திலே கட்டி வைத்திருந்த கம்பாயை அவிழ்த்து வீசினார்கள். கப்பல் வள்ளத்திலே மோதுவது உறுதி ஆகிவிட்டது. இஞ்சினை வேகமாக ஸ்டாட் செய்து ஓடிவிட்டார்கள்." *(தூண்டிலைத் தேடும் மீன்கள், பக்: 35)*

எனவும் விளக்கியுள்ளார்.

**நெடுவாங்கல்**

நெடுவாங்கல் என்பது கடலிலே தோன்றுகின்ற புயலை விட சற்று வலிமை குறைந்த காற்று ஆகும். நெடுவாங்கல் வந்துவிட்டால் அதன் பின் ஒருசில நாட்கள் கடலிலே மீன்பாடு இருக்காது என்பதனை,

"இண்ணக்கு நெடுவாங்கல். ஒரு ஊரிலேயும் தொழிலுக்கு போவமாட்டாவ. நம்ம மீனுதான் நல்ல வெலைக்கு விக்கும்" *(நெடுவாங்கல், பக்: 84)*

எனக் கூறுகிறார்.

**கடவாக்கு**

கடல் கூறு சரியில்லாத சூழ்நிலையில் வலையில் மீன் ஒன்றும் படாது என்பதனை,

“கடவாக்கு சரி இல்ல. மண்டிப் கடவாக்கு. அதனால் ரண்டு வலையிலேயும் மீனு ஒண்ணும் படலய” *(கடவாக்கு, பக்: 69)*

என ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**கலங்கரை விளக்கம்**

கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடலில் தொழில் செய்யும் நெய்தல் நில மக்களின் வழிகாட்டியாய் வட்டமிடுவது கலங்கரை விளக்கம் என்பதனை பின்வருமாறு பாடுகிறார்:

“காற்றை நுரைக்க வைக்கும்
அலைகள் தாலாட்டுப் பாடும்
சாய்ந்த பைசாக் கோபுரம் போல்
சாயாத கலங்கரை விளக்கம்
முட்டத்து மக்களைப் போல்
அன்பிலும் வீரத்திலும் நிமிர்ந்து நிற்கிறது”

*(சிப்பி சிந்திய முத்துக்கள் - சொர்க்கமே என்றாலும், பக் : 23)*

**இயற்கைச் சீற்றங்கள்**

இயற்கைச் சீற்றங்களோடு போராடும் வீர மறவர் கூட்டம் என்பதை நெய்தல் நில சூழலோடு ஒப்பிட்டு ஆசிரியர் கவிதை படைத்துள்ளார்:

“புயல் மழை, சூறாவளி
கடல் கொந்தளிப்பு
இவற்றை மறந்து
வீரத்தோடு
ஒருவேளை உணவிற்காக, இந்த
இயற்கைச் சீற்றத்தோடு போராடி
வீடு திரும்பும் வீர மறவர்கள் நாங்கள்
மீனவன் திரும்பி வந்தால்
அவனுக்கு மீன் உணவு ……
திரும்பா விட்டால்
மீனுக்கு அவன் உணவு …………”

*(சிப்பி சிந்திய முத்துக்கள் - விடிவு எப்போது, பக்: 49)*

நெய்தல் நிலக் காற்றில் உப்புத்துளியின் வாசனை கலந்திருக்கும் என்பதனை

“கரையோரம் நின்ற கட்டுமரத்தக்
கடலுக்குள்ளத் தள்ளிக்கிட்டு
கடவுள் நினைச்சி சிலுவையும் வரஞ்சிக்கிட்டு
அசையுற அலையில்

ஆழ்கடலுக்குச் சென்றேன்.
வலைய வலுச்சி
மரத்துல போட்டுகிட்டு
கரையப் பார்த்துக்
கட்டுமரத்த விட்டேன்
வலையில கிடைச்ச
மூணுமுடி மீன்
முப்பது ரூபாய்க்கு வித்துக்கிட்டு
வீட்டுக்குப் போனேன்
மணலுக்குள் விழுந்து
மடிந்து போனது
ஒரு உப்புத்துளியின் உயிர்த்துளி
என ஒரு உப்புத் துளியின் உயிர்த்துளி”
*(சிப்பி சிந்திய முத்துக்கள் - உயிர்த்துளி, பக்: 34)*
என அழகாக கவிதை வடிவில் பாடியுள்ளார்.

**நிறைவுரை**

நெய்தல் நில மக்கள் அலையோடு போராடி வலைவீசி மீன்பிடிக்கும் தொழில் செய்து வருபவர்கள். இவர்கள் உரையாடல் முழுவதும் கடலோடும் கடற்கரையோடும்தான் இருந்தது.

அலைவீசும் கடலும் அங்கே ஆர்ப்பரிக்கும் கட்டுமரங்களும், படகுகளும், மற்றும் கப்பலின் கவின் மிகு காட்சிகளும் காண்போரை களிப்படையச் செய்யும் சூழல்கள் ஆகும். இயற்கையைப் பாதுகாப்போம் என்ற சூளுரையுடன் முட்டம் வால்டர் படைப்புகளில் காணப்படும் கடற்கரைச் சூழல் இக்கட்டுரையில் பல்வேறு தன்மைகளில் ஆராயப்பட்டுள்ளன.

**மேற்பார்வை நூல்கள்**

1. **இளம்பூரணனார்**, *தொல்காப்பியம் எழுத்து - சொல் - பொருள்*, கௌரா பதிப்பகம், சென்னை - 5 (2017).
2. **புலியூர்க் கேசிகன்**, *புறநானூறு*, ஸ்ரீபாரதி பப்ளிகேஷன்ஸ், சென்னை (2022).
3. **முட்டம் சி. வால்டர்**, *வர்ஷம் (நாவல்)*, அசிசி அச்சகம், நாகர்கோவில் (2018).
4. **முட்டம் சி. வால்டர்**, *நெடுவாங்கல் (சிறுகதை)*, அசிசி அச்சகம், நாகர்கோவில் (2019).
5. **முட்டம் சி. வால்டர்**, *சிப்பி சிந்திய முத்துக்கள் (கவிதை)*, அசிசி அச்சகம், நாகர்கோவில் (2020).
6. **முட்டம் சி. வால்டர்**, *கடவாக்கு (நாவல்)*, அசிசி அச்சகம், நாகர்கோவில் (2021).
7. **முட்டம் சி. வால்டர்**, *தூண்டிலைத் தேடும் மீன்கள் (நாவல்)*, அசிசி அச்சகம், நாகர்கோவில் (2023).

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 77. தமிழ் மரபிலக்கியத்தில் நீரின் பன்முகப் பரிமாணங்கள்

**முனைவர் சு.தீபலட்சுமி,**

துறைத் தலைவர் & உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ரிசர்ச் அண்ட் டெக்னாலஜி, நிகர்நிலைப் பல்கலைக் கழகம், பெரம்பலூர் - 621 212 தமிழ்நாடு, இந்தியா.

E.Mail ID : tamildeepa.s@gmail.com, அலைபேசி. 8760656567

**ஆய்வுச் சுருக்கம்**

நீர் உலக உயிர்களின் அடிப்படை ஆதாரமாகும். மனித வாழ்வு, வேளாண்மை, பண்பாடு, சமயம் மற்றும் இலக்கியம் ஆகிய அனைத்திலும் நீருக்கு தனித்துவமான இடம் உண்டு. தமிழ் இலக்கியங்கள் நீரை வெறும் இயற்கை வளமாக மட்டுமல்லாமல், உயிர், வளம், அறம், நாகரிகம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அடையாளமாகவும் எடுத்துரைக்கின்றன. சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை நீரின் முக்கியத்துவமும், அதனைப் பாதுகாக்க வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்படுகின்றன.

**திறவுச் சொற்கள்:** நீர், சுற்றுச்சூழல், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், தமிழ் இலக்கியம்.

## 1. அறிமுகம்

பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் உயிரினங்களின் வாழ்விற்கு இன்றியமையாததாகும். மனித நாகரிகங்கள் பெரும்பாலும் ஆறுகள் மற்றும் நீர்நிலைகளை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளன.[1] தமிழ் இலக்கியங்களில் ஆறுகள், குளங்கள், ஏரிகள், கடல், மழை ஆகிய அனைத்தும் வாழ்க்கையின் அடையாளங்களாகப் போற்றப்படுகின்றன.[2] இயற்கையோடு இணைந்து வாழ்ந்த தமிழர்களின் சுற்றுச்சூழல் சிந்தனையை இலக்கியங்கள் தெளிவாகப் பதிவு செய்கின்றன.

## 2. சங்க இலக்கியங்களில் நீர் சூழல்

சங்க இலக்கியங்களில் நிலம் ஐந்திணைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்த நீரியல் அமைப்பு குறிப்பிடப்படுகிறது.[3] மருதநிலம் ஆறுகள் மற்றும் வயல்களால் வளமானதாகச் சித்தரிக்கப்படுகிறது. நெய்தல் நிலம் கடல் சார்ந்த வாழ்க்கையை எடுத்துரைக்கிறது.[4]

புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை போன்ற நூல்களில் மழை, ஆறு, குளம், கடல் ஆகியவை மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகின்றன.[5] நீர் வளம் நாட்டின் செழிப்பின் அடையாளமாகக் கருதப்படுகிறது. பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தின் செழிப்பையும், துறைமுக வாணிபத்தையும், கடல் வழிப் பரிமாற்றங்களையும் விரிவாக விவரிக்கிறது.[6] இதன் மூலம் நீர்வழிப் போக்குவரத்து மற்றும் கடல் வளங்களின் பயன்பாடு சங்ககாலத்தில் உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை அறிய முடிகிறது. கடலை சங்கப் புலவர்கள் பயமூட்டும் இடமாக மட்டும் சித்தரிக்கவில்லை; வாழ்வாதாரம், செல்வம், கலாச்சாரப் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலமாகக் கண்டனர்.[7]

### 2.1 பாலை நிலமும் நீரின் அருமையும்

பாலை என்பது இயற்கையாக உருவான பாலைவனம் அல்ல; மழையின்மையால் வறண்ட நிலையாக மாறிய பகுதியைக் குறிக்கிறது.[8] இந்தக் கருத்து சங்க இலக்கியங்களில் காலநிலை

மாற்றம் பற்றிய நுட்பமான புரிதல் இருந்ததை உணர்த்துகிறது. அகநானூறு மற்றும் குறுந்தொகை பாடல்களில் நீரின்றி தவிக்கும் பயணிகள், வற்றிய குளங்கள், வாடிய மரங்கள் போன்ற காட்சிகள் இடம்பெறுகின்றன.[9] இவை நீரின் அருமையை வலியுறுத்துவதோடு, இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றன.

## 2.2 ஐந்திணையும் நவீன சூழலியலும்

சங்க இலக்கியங்களில் காணப்படும் ஐந்திணை அமைப்பு, இன்றைய சூழலியல் (Ecology) மற்றும் நிலையான வளர்ச்சி (Sustainable Development) கோட்பாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையது.[10] ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய இயற்கை வளங்களைப் பாதுகாத்து பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம், இயற்கை சமநிலையைப் பேணும் நவீன சுற்றுச்சூழல் அணுகுமுறையுடன் ஒத்துப்போகிறது. எனவே, சங்க இலக்கியங்கள் இலக்கியப் படைப்புகள் மட்டுமல்ல; இயற்கை வள மேலாண்மை, நீர் பாதுகாப்பு மற்றும் மனித–இயற்கை உறவைப் பதிவு செய்துள்ள வரலாற்று ஆவணங்களாகவும் அவற்றைக் கருதலாம்.

**குறிஞ்சி – அருவி**

குறுந்தொகை 100-ஆம் பாடலில் அருவி இயற்கை வளத்தையும் காதல் சூழலையும் வெளிப்படுத்துகிறது.[11] குறிஞ்சி நிலத்தில் மழை, அருவி, ஊற்று ஆகியவை நீர்ச் சுழற்சியின் தொடக்க நிலையாகக் கருதப்படுகின்றன.

**மருதம் – காவிரி**

பட்டினப்பாலை 299-ஆம் வரியில் காவிரி ஆறு சோழ நாட்டின் வேளாண் வளத்திற்கும் நகர வளர்ச்சிக்கும் ஆதாரமாக இருந்தது.[12] சங்ககாலத்தில் ஆற்றை மையமாகக் கொண்ட நீர் மேலாண்மை மற்றும் பொருளாதார அமைப்பு வளர்ந்திருந்ததை இது காட்டுகிறது.

**நெய்தல் – கடல்**

அகநானூறு 200-ஆம் பாடலில் கடல் மீனவர்களின் வாழ்வாதாரமாகவும் வணிகப் பாதையாகவும் விளங்கியது.[13] கடல்சார் வளங்களைப் பாதுகாத்து பயன்படுத்திய தமிழர்களின் சூழலியல் அறிவை இது வெளிப்படுத்துகிறது.

## 3. திருக்குறளில் நீர்

திருவள்ளுவர் மழையின் இன்றியமையாமையை "வான்சிறப்பு" அதிகாரத்தில் விளக்குகிறார். "நீரின்றி அமையாது உலகு" என்னும் கருத்து, உலக உயிர்கள் அனைத்தும் நீரைச் சார்ந்தே இயங்குகின்றன என்பதை வலியுறுத்துகிறது.[14] மழை இல்லையெனில் வேளாண்மை மட்டுமல்ல, மனித வாழ்வும் பாதிக்கப்படும் என்பதை திருக்குறள் எடுத்துரைக்கிறது. வான்சிறப்பு அதிகாரத்தில் (அதிகாரம் 2) இடம்பெறும் முதற்பத்துக் குறட்பாக்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.[15]

· குறள் 11: மழை உலகின் உயிராதாரம்.

· குறள் 12: மழை உணவுக்கும் உயிர்களுக்கும் ஆதாரம்.

· குறள் 13: மழை பொய்த்தால் பசி உலகை வாட்டும்.

· குறள் 14: ஏரிகளும் வேளாண்மையும் மழையைச் சார்ந்தவை.

· குறள் 15: மழை அழிவையும் ஆக்கத்தையும் நிர்ணயிக்கும்.

· குறள் 16: மழையின்றி புல்லும் முளைக்காது.

· குறள் 17: மழை இல்லையெனில் கடலும் தனது இயல்பை இழக்கும்.

· குறள் 18: மழை இல்லையெனில் வழிபாடுகளும் பாதிக்கப்படும்.

· குறள் 19: தானமும் தவமும் மழையைச் சார்ந்தவை.

· குறள் 20: "நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்" – நீரின் இன்றியமையாமையை முழக்கமிடும் குறள்.

4. நீர் மேலாண்மை கருத்துகளைக் கொண்ட பாடல்கள்

**நூல் / பாடல் எண்கள் / பகுதி கருப்பொருள்**

நற்றிணை 12, 27, 68, 97, 155, 258, 309 மழை, குளம், ஆறு, கடற்கரை

குறுந்தொகை 3, 58, 63, 140, 203, 312 அருவி, ஊற்று, நீரோடை

ஐங்குறுநூறு மருதம் நூறு, நெய்தல் நூறு பாசனம், ஆறு, கடல்

அகநானூறு 10, 20, 40, 60, 90, 120, 180, 220, 300, 390 நெய்தல் நிலம், கடல், நீரியல் அமைப்பு

புறநானூறு 18, 35, 43, 192, 397 காவிரி, மழை, அரசர் மற்றும் நீர்வளம்

பட்டினப்பாலை முழு நூல் காவிரி, துறைமுகம், நீர்வழி வாணிபம்

மதுரைக்காஞ்சி முழு நூல் வைகை, நகர நீர் மேலாண்மை

பரிபாடல் 6, 11, 16, 20 வைகை ஆறு, நீர்வளம்

**5. முடிவுரை**

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் இயற்கை மையமான வாழ்வியலைப் பிரதிபலிக்கும் அரிய இலக்கியச் செல்வங்களாகும். அவற்றில் நீர் என்பது உயிர்வாழ்விற்குத் தேவையான இயற்கை வளமாக மட்டுமன்றி, பண்பாடு, பொருளாதாரம், வேளாண்மை, வாணிபம், அரசாட்சி மற்றும் அறநெறி ஆகியவற்றின் அடிப்படையாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.[16] ஐந்திணை அமைப்பின் வழியாக மலை, காடு, வயல், கடற்கரை மற்றும் வறண்ட நிலம் ஆகியவற்றின் தனித்துவமான நீரியல் சூழல் தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது. குறிஞ்சித் திணையில் அருவிகளும் ஊற்றுகளும், முல்லைத் திணையில் குளங்களும் சிற்றோடைகளும், மருதத் திணையில் ஆறுகளும் பாசன வளங்களும், நெய்தல் திணையில் கடலும் துறைமுகங்களும், பாலைத் திணையில் நீரின்மையால் உருவாகும் வாழ்வியல் சவால்களும் நுட்பமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.[17] இச்சித்திரிப்புகள் இயற்கையைப் பாதுகாத்து அதன் வளங்களைச் சமநிலையுடன் பயன்படுத்திய தமிழர்களின் சுற்றுச்சூழல் அறிவை வெளிப்படுத்துகின்றன.

சங்க இலக்கியங்களில் காணப்படும் நீர்ச் சிந்தனைகள், இன்றைய சூழலியல் கோட்பாடுகளான நிலையான வளர்ச்சி, இயற்கை வளப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை மற்றும் உயிரினப் பன்முகத்தன்மை பாதுகாப்பு போன்ற கருத்துகளுடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டுள்ளன.[18] குறிப்பாக, மழைநீரின் முக்கியத்துவம், ஆறுகள் மற்றும் ஏரிகளின் பாதுகாப்பு, வேளாண்மையில் நீரின் பங்கு, கடல் வளங்களின் பொறுப்பான பயன்பாடு போன்ற கருத்துகள் இன்றைய சுற்றுச்சூழல் நெருக்கடிகளுக்குப் பொருத்தமான வழிகாட்டுதல்களாக அமைகின்றன. எனவே, சங்க இலக்கியங்கள் வெறும் இலக்கியப் படைப்புகளாக மட்டுமல்லாமல், பண்டைய தமிழர்களின் சூழலியல் அறிவையும், நீர் வள மேலாண்மை அனுபவத்தையும், இயற்கையோடு இணைந்த வாழ்வியல் தத்துவத்தையும் பதிவு செய்த வரலாற்று ஆவணங்களாகக் கருதப்பட வேண்டும். இவற்றில் உள்ள கருத்துகளை நவீன சுற்றுச்சூழல் கொள்கைகள், நீர் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் சூழலியல் கல்வியுடன்

இணைத்து மறுவாசிப்பு செய்வது காலத்தின் தேவையாகும். இதன் மூலம் தமிழர் மரபு உலகளாவிய நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு வழங்கும் பங்களிப்பை மேலும் வலியுறுத்த முடியும்.

**அடிக்குறிப்புகள்**

1. கா. சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகமும் வரலாற்றுப் புரிதலும், ப. 45.

2. மு. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 32.

3. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 1-5.

4. ஐங்குறுநூறு, நெய்தல் நூறு, பாடல் 1-10.

5. நற்றிணை 12, 27; குறுந்தொகை 58, 140.

6. பட்டினப்பாலை, வரி 200-250.

7. அகநானூறு 200, 220; புறநானூறு 35.

8. தொல்காப்பியம், பொருளதிகாரம், பாலைத்திணை விளக்கம்.

9. அகநானூறு 10; குறுந்தொகை 312.

10. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப. 88.

11. குறுந்தொகை 100, உ.வே.சா. பதிப்பு.

12. பட்டினப்பாலை 299, உ.வே.சா. பதிப்பு.

13. அகநானூறு 200, உ.வே.சா. பதிப்பு.

14. திருக்குறள், வான்சிறப்பு, குறள் 20.

15. திருக்குறள், வான்சிறப்பு, குறள் 11-20, பரிமேலழகர் உரை.

16. ந. சுப்பிரமணியன், சங்ககால வாழ்க்கை, ப. 112.

17. இரா. நாகசாமி, தமிழர் நாகரிகம், ப. 75.

18. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, ப. 150-155.

**துணைநூற் பட்டியல்**

1. இளம்பூரணர் (உரை.). தொல்காப்பியம் – பொருளதிகாரம். சென்னை: கழக வெளியீடு.

2. உ. வே. சாமிநாதையர் (பதி.). குறுந்தொகை. சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

3. உ. வே. சாமிநாதையர் (பதி.). நற்றிணை. சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

4. உ. வே. சாமிநாதையர் (பதி.). அகநானூறு. சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

5. உ. வே. சாமிநாதையர் (பதி.). புறநானூறு. சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

6. உ. வே. சாமிநாதையர் (பதி.). ஐங்குறுநூறு. சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

7. உ. வே. சாமிநாதையர் (பதி.). பத்துப்பாட்டு. சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

8. பரிமேலழகர் (உரை.). திருக்குறள். சென்னை: கழக வெளியீடு.

9. இளங்கோ அடிகள். சிலப்பதிகாரம். உரை: உ. வே. சாமிநாதையர். சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

10. சீத்தலைச் சாத்தனார். மணிமேகலை. சென்னை: கழக வெளியீடு.

11. மு. வரதராசனார். தமிழ் இலக்கிய வரலாறு. புதுதில்லி: சாகித்திய அகாதெமி.

12. தமிழண்ணல். சங்க இலக்கிய ஒப்பீடு. மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

13. கா. சிவத்தம்பி. பண்டைத் தமிழ்ச் சமூகமும் வரலாற்றுப் புரிதலும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

14. இரா. நாகசாமி. தமிழர் நாகரிகம். சென்னை: தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.

15. ந. சுப்பிரமணியன். சங்ககால வாழ்க்கை. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

# 78. நமது அறிவியல் இதழில்; சுற்றுச்சூழல் விழுமியங்கள்

**மு. அபிரா,**

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,

mabira2002@gmail.com., கைபபேசி எண்:8072635565

ஆய்வு நெறியாளர்: **முனைவர் க.சுஜாதா,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,

திருச்சிராப்பள்ளி-02

**ஆய்வுச்சுருக்கம்:**

சுற்றுச்சூழல் என்பது மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் மற்றும் அனைத்;து உயிரினங்களும் வாழ்வதற்குத் தேவையான இயற்கை மற்றும் செயற்கைச் சூழல்களின் ஒருங்கிணைந்த அமைப்பாகும். காற்று, நீர், மண், காடுகள், மலைகள், ஆறுகள், கடல்கள், உயிரினங்கள் மற்றும் இயற்கை வளங்கள் அனைத்தும் சுற்றுச்சூழலின் முக்கிய அங்கங்களாகும். உயிரினங்களின் வாழ்வாதாரம், ஆரோக்கியம் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகிய அனைத்தும் சுற்றுச்சூழலின் தரத்தைப் பொறுத்தே அமைகின்றன. எனவே சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது இன்றைய உலகின் மிக முக்கியமானத் தேவையாக மாறியுள்ளது. தொழில்மயமாக்கல், மக்கள்தொகை அதிகரிப்பு, வன அழிப்பு, நெகிழிக் கழிவுகள், தொழிற்சாலை மற்றும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை, நீர் மற்றும் மண் மாசுபாடு போன்ற காரணங்களால் சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக உலக வெப்பமயமாதல், பருவநிலை மாற்றம், மழைப்பொழிவு மாற்றம், வறட்சி, வெள்ளப்பெருக்கு, உயிரினங்களின் அழிவு, குடிநீர் பற்றாக்குறை மற்றும் மனிதர்;களுக்கு பல்வேறு உடல்நலக் குறைபாடுகள் உருவாகின்றன. இந்த நிலைத் தொடர்ந்தால் எதிர்கால தலைமுறையினர் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழல் உருவாகும். “இயற்கையை ஆழ்ந்து உற்றுநோக்கினால், அனைத்ததையும் சிறப்பாகப் புரிந்துகொள்ளலாம்.” என்கிறார் ஆல்பர்ட் ஐன்ஸ்டின் இந்நிலையில், அறிவியல் இதழ்கள் பொதுமக்களிடம் சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்கப் பங்காற்றுகின்றன.

இவ்ஆய்வு நமது அறிவியல் இதழில் இடம் பெற்றுள்ள சுற்றுச்சூழல் தொடர்பான செய்திகளும் கட்டுரைகளும் சமூகத்தில் ஏற்படுத்தும் விழிப்புணர்வை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம், உயிரினப் பன்முகத்தன்மை, நீர் மற்றும் காற்று மாசுபாடு, இயற்கை வளங்களின் பாதுகாப்பு, கழிவு மேலாண்மை மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற கருப்பொருள்கள் இதழின் வழி எடுத்துரைப்பதே ஆய்வின் மையமாகும்.

நமது அறிவியல் இதழின் அறிவியல் அடிப்படையிலான சுற்றுச்சூழல் தகவல்களை எளிய தமிழில் பொதுமக்களுக்கு வழங்குவதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பொறுப்புணர்வை வளர்க்கும் வகையிலும் செயல்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. மேலும் சுற்றுச்சுழல்;

கல்வியை ஊக்குவிப்பதில் இவ்விதழ் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. தமிழ் அறிவியல் இதழியலில் சுற்றுச்சூழல் தகவல் பரவலின் தன்மையைப் புரிந்துகொள்வதற்கும் இத்துறையில் மேற்கொள்ளப்படும் எதிர்கால ஆய்வுகளுக்கும் இவ்வாய்வு பயன்படும் வகையில் அமைகிறது.

முன்னுரை:

சுற்றுச்சூழல் என்பது மனிதன், விலங்குகள், தாவரங்கள் மற்றும் இயற்கை வளங்கள் இணைந்து வாழும் மொத்த அமைப்பாகும். தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல் மற்றும் மக்கள்தொகைப் பெருக்கம் ஆகியவை சுற்றுச்சூழலுக்குப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இந்நிலையில், அறிவியல் இதழ்கள் பொதுமக்களிடம் அறிவியல் தகவல்களை எளிமையாக எடுத்துச்செல்லும் முக்கிய ஊடகங்களாக உள்ளன, நமது அறிவியல் இதழ் சுற்றுச்சூழல் தொடர்பான கருத்துகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறது. அவை குறித்த தகவல்களை இக்கட்டுரையில் காண்போம்.

உலக வெப்பமயமாதலும் மாற்றத்திற்கான தீர்வும்:

பூமியில் இந்த வெப்பமயமாதலின் மாற்றத்திற்கு முக்கிகயமான காரணம் பசுமை இல்ல வாயு விளைவு (புசநநn ர்ழரளந நுகநஉவ) ஆகும். இந்த விளைவால் சூரியனில் இருந்து பூமியை நோக்கி வரும் ஒளியானது மீண்டும் வெளியில் போகாத அளவிற்குக் கண்ணாடி சுவர்கள் போல் கார்பன் வெளிப்பாடும் மற்றும் சில வாயுக்களும் சேர்ந்து தடுத்து வெப்பத்தைத் தக்க வைத்துக் கொள்கின்றன. இதனால் சூரியஒளி பூமியை விட்டு வெளியேறாததால், பூமியில் வெப்பநிலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகின்றது. நம் பூமியில்; நீராவி, கார்பன்-டை-ஆக்ஸைடு, நைட்ரஸ் ஆக்ஸைடு, மீத்தேன், குளோரோ ப்ளோரோ கார்பன்; இதுபோன்ற வாயுக்கள் பசுமை இல்ல விளைவை ஏற்படுத்தும் வாயுக்கள் ஆகும். இந்த வாயுக்களை மனிதர்கள் அதிக அளவில் செயற்கையாக உருவாக்குவதால் சூரிய ஒளியை வெளியில் விடாதவாறு கிரகித்து வருகின்றன. இதனால் தொடர்ந்து பூமியின் வெப்பநிலை உயர்ந்து கொண்டே இருக்கிறது.

கடந்த 2017-ஆம் ஆண்டின் கணக்கின்படி பூமியில் உலகம் முழுவதிலும் இருந்து சுமார் 36 பில்லியன் டன் கார்பன்-டை-ஆக்ஸைடு வெளியாகியுள்ளது. இதில், சீனாவில் இருந்து 27 சதவிகிதமும், அமெரிக்காவில் இருந்து 15 சதவிகிதமும், ஐரோப்பிய நாடுகள் 10 சதவிகித அளவிலும் இந்தியா 7 சதவிகித அளவிலும் ர~;யா 5 சதவிகித அளவிலும் ஜப்பான் 3 சதவிகித அளவிலும், இதர நாடுகள் அதற்குக் குறைந்த அளவிலும் வெளிப்;படுத்துவதாக கணக்கிட்டுள்ளனர். அதிகப்படியான கார்பன் வெளிப்பாட்டிற்கான முதல் காரணம் மக்கள்தொகை உயர்வு.

இத்தகைய கார்பன் வெளிப்பாட்டை கட்டுப்படுத்தும் ஆற்றலை நாம் முறையாக பயன்படுத்த வேணடும். உதாரணத்திற்கு நிலக்கரியை எரித்தால் ஒரு யூனிட் மின்சாரம் கிடைக்கிறது. மற்றொரு புறம் நியூக்ளியர் பிளாண்ட் மூலமும் மின்சாரம் கிடைக்கிறது. இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தோமேயானால் நிலக்கரி மூலம் கிடைக்கும் மின்சாரத்தில் தான் அதிகப்படியான கார்பன் வெளிப்பாடு ஏற்படுகிறது. அதனால் நியூக்ளியர் பிளாண்ட் மூலம் கிடைக்கும் மின்சாரத்தை அதிக அளவில் பயன்படுத்த முயற்சிகள் எடுக்கலாம். அதேபோல்

நாம் உபயோகப்படுத்தும் மின்விளக்குகளில் பழங்கால டங்ஸ்டன் விளக்குகள், பின்னர் வந்த ப்ளோரசன்டட் விளக்குகள், தற்போதுள்ள எல்.இ.டி விளக்குகள் பயன்படுத்தப்படும் ஆற்றல்கள் மாறுபட்டவை. பழங்கால விளக்குகளுக்கு அதிக மினசாரம் தேவைப்பட்டது. பின்னர் வந்த ப்ளோரசன்ட் விளக்குகளை விட தற்போதைய எல்.இ.டி, விளக்குகளுக்கு மிகக் குறைந்த மின்சாரம் போதுமானது. அறிவியலில் புதுப்புது கணடுபிடிப்புகள் புதுப்புது தொழிற் நுட்பங்கள்; வர வேண்டும், அவை பசுமை சார்ந்து இருக்க வேணடும். கார்பன் பிடிப்பான், நியூக்ளியர் ஆற்றல் உற்பத்தி மற்றும் மின்கலன்கள் இவைகள் மூலம் தான் எதிர்காலத்தில் கார்பன் வெளிப்பாட்டினால் ஏற்படும் வெப்பமயமாதல் மாற்த்திற்கு ஈடுகொடுக்க முடியும் என்கின்றனர் விஞ்ஞானிகள். நாம் ஒவ்வொருவரும் விழித்துக் கொண்டு அரசுடன் இணைந்து அடுத்த தலைமுறையும் செயல்பட்டால் இந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வு உண்டு. அதற்கான முயற்சியில் இன்றிலிருந்து நாம் ஒவ்வொருவரும் முழுமூச்சாகச் செயல்படுவோம்.

சுற்றுச்சூழல் மறு சீரமைப்பு:

நமது உலகம் வெப்ப மணடலக் காடுகள் முதல் பவளப்பாறைகள், நகர்ப்புற பூங்காக்கள் வரை பல சுற்றுச்சூழல் அமைப்புகளைக் கொண்டுள்ளது. காற்று மற்றும் நீரை சுத்தப்படுத்துதல், கார்பனை சேமித்தல் மற்றும் உணவை உற்பத்தி செய்தல் உள்ளிட்ட முக்கியமான வழிகளில் சுற்றுச்சூழல் அமைப்புகள் நமக்கு உதவுகின்றன. மக்கள் குறைந்தபட்சம் 12,000 ஆண்டுகளாக பெரும்பாலானச் சுற்றுச்சூழல் அமைப்பை வடிவமைத்து வருகின்றனர். மனிதத் தாக்கம் மிகவும் தீவிரமடைந்துள்ள நிலையில், இப்போது பல சுற்றுச்சூழல் அமைப்புகள் அச்சுறுத்தப்படுகின்றன. அதனால்தான் அடுத்த 10 ஆண்டுகள் சுற்றுச்சூழல் அமைப்பு மறுசீரமைப்புக்கான பத்தாண்டுகள் என்று ஐக்கிய நாடுகள் சபை முடிவெடுத்துள்ளது.

மாசுபாடு, காலநிலை மாற்றம், கால்நடைகளால் அதிக மேய்ச்சல் மற்றும் பல்லுயிர் இழப்பு ஆகியவற்றின் மூலம் மக்கள் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பல வழிகளில் சில, சுற்சூழல் சீரழிவின் கீழ்நோக்கிய சூழல் ஏற்படலாம். காலப்போக்கில் இந்த சூழல் அமைப்புகள் மிகவும் சேதமடைந்து, உதவியின்றி மீட்க முடியாமல் போகும் வாய்ப்புள்ளது. இது அவற்றின் நன்மைகளை மாற்றியமைக்கும். சீரழிந்த சுற்றுச்சூழல் அமைப்புகள் தண்ணீரை மாசுபடுத்தலாம் மற்றும் கார்பனை வெளியிடலாம். சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு சீரழிந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளது.

சுற்றுச்சூழல் மீட்டெடுப்பு:

சுற்றுச்சூழலை மீட்டெடுக்க, சுற்றுச்சூழல் அமைப்பு ஆரோக்கியமாக இருந்தபோது எப்படி இருந்தது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். உதாரணமாக, வெட்டப்பட்டக் காடுகளிலோ அல்லது வடிகால் ஆன சதுப்பு நிலங்களிலோ அசல் மர வகைகளை நாம் நடலாம். ஒரு சுற்றுச்சூழல் அமைப்பின் முந்தைய நிலையைப் பற்றிய பதிவு நம்மிடம் இல்லையென்றால், அதே வகையான ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளைப் படித்து அறிந்து கொள்ளலாம். காலப்போக்கில் சுற்றுச்சூழல் அமைப்புகள் எவ்வாறு மாறிவிட்டன என்பதனை செயற்கைகோள் புகைப்படங்கள் மூலம் அறியலாம். காலநிலை மாறும்போது சுற்றுச்சூழல் அமைப்புகளும் மாறவேண்டும். சுற்றுச்சூழல் அமைப்;புகள் நமக்குப் பல நன்மைகளை

வழங்குகின்றன. அவை நமது வளங்களான நீரையும் காற்றையும் சுத்தப்படுத்துகின்றன. மேலும் மருந்துகளில் பயன்படுத்தப்படும் தாவர வகைகள்; உட்பட பல உயிரினங்களின் தாயகமாக இவை விளங்குகின்றன.

விஞ்ஞானிகள் சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதற்கு பதிலாக அவற்றை மறுசீரமைக்க வேண்டும் என்று போராடுகின்றனர். பல்லுயிரியலைப் பாதுகாக்கவும், காலநிலை மாற்றத்தைக் குறைக்கவும், நமக்கு ஆரோக்கியமானச்; சுற்றுச்சூழல் அமைப்புத் தேவை.

பழங்குடியின மக்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து விரைவாகச் செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். உள்;ர் சமூகங்களுடன் பணிபுரிவது இந்தத் திட்டங்களுக்கு முக்கியமானது ஒருவேளை உங்களுக்கு அருகிலுள்ள திட்டத்தில் நீங்கள் ஈடுபடலாம். சூழல் மையங்களை உள்;ர் மக்களின் உதவியுடன் பாதுகாப்பதும் மறுசீரமைப்பதும் அரசின் முக்கியமானக் கடமையாகும்.

அற்புதக் குடை ஓசோன்:

உலக நாடுகளை ஒன்றிணைத்து ஓசோன் படலத்தினைப் பாதுகாக்;கும் பொருட்டு மாணடிரியல் உடன்படிக்கை 1987–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ஆம் நாள் கையெழுத்தானது. அந்த நாள் தான் ஒவ்வொரு ஆண்டும் உலக ஓசோன் தினமாகக்; கொண்டாடப்பட்டு வருகிறது. 2023-ம்; ஆண்டிற்கான கருப்பொருள் ஓசோன் படலத்தினைப் பாதுகாத்துக் காலநிலை மாற்றத்தினைத் தடுப்போம் என்பதாகும். புறஊதாக் கதிர்கள் (ருஏசுயலள) என்பவை மின்காந்த அலைகளில் கண்களுக்குப் புலப்படாத 10 நானோமீட்டர் முதல் 400 நானோமீட்டர் வரை அலைநீளம் கொண்டவையாகும்.

அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல், குறைந்த அளவிலான புறஊதாக் கதிர்கள் பூமியில் வாழும் உயிர்களுக்கு அவசியம் தான் என்றாலும், அதன் அளவு அதிகமாகும் போது விரும்பத்தகாத விளைவுகள் உண்டாகின்றன. உதாரணமாக குறைந்த அளவிளான புறஊதாக் கதிர்கள் தாவரங்களின் ஒளிச்;சேர்க்கை, மனிதர்களின் வைட்டமின் டி உற்பத்திக்கு அவசியமாகிறது. மாறாகத் தாக்கம் அதிகமாகும் போது தாவரங்களில் உற்பத்தி குறைவு மற்றும் மனிதர்களில் தோல் பகுதியில் உள்ள டி.என்.ஏவில் சேதம் ஏற்பட்டு பல்வேறு விதமான நோய்கள் உருவாகின்றன. இப்படி தீங்கு ஏற்படுத்தும் புறஊதாக் கதிர்களின் தாக்கத்திலிருந்து ஓசோன் படலம் பூமியையும், பூமியில் உள்ள அனைத்து உயிர்களையும் குடை போல் பாதுகாத்து வருகிறது. வளிமணடலத்தில் காணப்படும் ஆக்ஸிஜனின் சிறப்பு வடிவமே ஓசோன் (ழு3) ஆகும்.

1974-ஆம் ஆண்டு அறிவியலறிஞர்கள் n~ர்வுட் ரௌலேண்ட் மற்றும் மரியோ மொலினா ஆகியோர் நேச்சர் ஆய்வு இதழில் வெளியிட்ட அறிவியல் கட்டுரையில் மனித செயல்பாடுகளால்; வெளியேற்றப்படும் குளோரோ பு;ரோ கார்பன்கள் (ஊகுஊ0) வளிமண்டலத்தில் உள்ள ஓசோன்; படலத்தில் சேதம் விளைவிக்கின்றன. ஓசோன் படலத்தில் ஏற்பட்டு வரும் சிதைவினைத் தடுத்தல் மற்றும் இது தொடர்பான விரிவான ஆராய்ச்சி மேற்கொண்டு உறுப்பினர் நாடுகளிடையே கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ளுதல்

தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் தான் பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மாண்டிரியல் உடன்படிக்கை மற்றும் 2019-இல் மேற்கொள்ளப்பட்ட கிகாலி திருத்தத்தால் ஓசோன் படல சிதைவிற்குக் காரணமான பொருள்களின் பயன்பாட்டினைத் தவிர்த்து ஓசோன் படலத்தினைப் பாதுகாக்க உலகளாவிய அளவில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி சிறிய அளவில் பலனைத் தந்துள்ளது. நாம் இந்த உலகினை நம்முடைய முன்னோர்களிடமிருந்து தானமாகத்தான் பெற்றுள்ளோம். இந்த தானத்தினை நம்முடைய அடுத்த தலைமுறைக்குப் பரிசாகக் கொடுப்பதும், தண்டனையாகக் கொடுப்பதும் நம் கையில்தான் உள்ளது. சுத்தமான குளிர்ந்த காற்று வேண்டுமா, மரங்களை நடுவோம், தொல்காப்பியத்தில் குறிப்பிடுவது போல "வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"-(பொருள,;அகத்திணை,நூற்பா-5) தூய்மையான நீர் வேண்டுமானல் மண்பானைகளை பயன்படுத்துங்கள். இயற்கைக்கு சற்றும் தொடர்பில்லாத பொருள்களுடனான தொடர்பினை துண்டித்துக் கொள்ளுங்கள் நமது அன்றாட வாழ்வினை இயற்கையினுடனானதாக அமைத்து இயற்கைப் பந்தத்தினைப் பற்றிக் கொள்ளுங்கள். இயற்கையை நேசிப்போம்! ஓசோன் குடையைப் பாதுகாப்போம்!

கடல் காப்போம்

திரைக் கடலோடியும் திரவியம் தேடு என்ற வழக்கிற்கு இணங்க பண்டையத் தமிழர்கள் கடல் வாணிகத்தில் சிறந்த ஈடுபாட்டினைக் கொண்டிருந்தனர். காற்றின் ஓட்டம் அறிந்து கடல்களைக் குறித்த பருவ காலங்களை கணிக்கும் மதிநுட்பம் பெற்றிருந்தனர். பண்டைய தமிழரின்; வாழ்வியலோடு சூழியலும் அதிலும் குறிப்பாகக் கடல் சார்ச் சுற்றுச்சூழலும் இணைந்தே காணப்பட்டது என்பதை மறுப்பதற்கு இல்லை.

தமிழ் இலக்கியத்தில் கடல்கள்

தமிழர்களின் வாழ்வில் தொன்று தொட்ட காலம் முதலே கடல் சார்ந்த செயல்பாடுகள் இரண்டறக் கலந்து ஒன்றாகவே உள்ளன. கடல்களின் முக்கியத்துவம் குறித்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர்,

"நெடுங்கடலும் தன்னீர்மைக் குன்றும் தடிந்தெழினி
தான் நல்காது ஆகிவிடின்" வான்சிறப்பு (17)

என்ற குறள் மூலம் மேகங்களுக்கும் கடலுக்கும் உள்ள தொடர்பினை எடுத்துரைத்துள்ளார், சங்க இலககியங்கள், குறிஞ்சி,முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களைக் குறிப்பிடுகின்றன. இவைகளில் கடலும் கடலைச் சார்ந்த பகுதிகளையே நெய்தல் எனச் சிறப்பித்துக் கூறுவர்.

சோழர்கள் காலத்தில் ராஜேந்திரச் சோழன் கடல் கடந்து சென்று தென் கிழக்காசிய பகுதிகளை வென்றது அன்றைய தமிழர்களின் கடல் ஆதிக்க மேலாண்மையைப் பறைசாற்றுவதாக உள்ளது. கடாரம் கொண்டான் என்ற பட்டப் பெயரும் இவ்வெற்றியின் மூலம் கிட்டியது. காவிரிபூம்பட்டினம் எனப்பட்டப் பூம்புகார் சோழர்களின் துறைமுகப் பட்டினமாகச் சிறந்து விளங்கியது. பாண்டியர்களின் துறைமுகப் பட்டினமான கொற்கை முத்துக் குளித்தலுக்குப் பெயர் பெற்று விளங்கியது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

**கடல் சூழியலில் நதிகளின் பங்கு**

மலைகள் இருக்கும் வரை நதிகள் என்பார்கள். அதே போன்ற சூழியல்; சீர்கேடுகள் ஏற்படும் என்று அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர். கடலில் கரைத்த பெருங்காயம் என்ற சொல்லாடல் சில நேரங்களில் நம்மைக் கடற்சூழியலுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கச் செய்கின்றதோ என்ற ஐயப்பாடு எழவே செய்கிறது.

"நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை"

என்று நதியின் சூழியல் முக்கியத்துவத்தைக் கம்பராமாயணம் (அயோத்தியா காண்டம், மந்திரப்படலம்) எடுத்துக் கூறுகின்றது. நன்னீர் (நறும்-புனல்) தன்மையை நதிகள் இழந்தமைக்கு மனிதர்களே பொறுப்பு என்பதை நாம் ஐயம் திரிபுரக் கூறலாம்.

மருங்குவண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடைஅதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வழி காவேரி.

சிலப்பதிகாரம் - கானல் வரி

என்ற இலக்கிய வரிகள் மூலம் காவிரி ஆற்றின் சூழியல் சிறப்பை அறிந்துக் கொள்ளலாம். இன்றோ ஆலைக் கழிவுகளால் காவிரி ஆறு எண்ணிலடங்கா சூழியல் சீர்கேடுகளை எதிர்க்கொண்டு வருகின்றது. நதிகளின் மீதான சுற்றுச்சூழல் சீர்கேடுகள் கடலினைப் பாதிக்கிறது. மலைகள் இருக்கும் வரை நதிகள்; நதிகள் இருக்கும் வரை கடல்கள். மேற்கூறிய சூழியல் கோட்பாடுகளை நாம் அலட்சியப்படுத்துதல் அறிவிழந்த செயல். நதிகளின் மறைவால் நாகரிகங்கள் பல அழிந்துவிட்டன என வரலாறு கூறுகிறது.

காலநிலை மாற்றம்

வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்களின் மறைவு கடல் வாழ் உயிரினங்களையும் பாதிப்படையச் செய்கின்றது. இதன் தொடர் விளைவாக உலகின் சிறந்த மீன்பிடித் தளங்கள் கடல் வாழ் உயிரினங்கள் வாழத் தகுதியற்றவைகளாக மாறக்கூடும். மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகளும் இதன் மற்றொரு தொடர் விளைவாக இருக்கக்கூடும். வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்கள் சந்திக்கும் கடல் பிரதேசங்கள் இவ்வாறான சூழியல் மாற்றங்களை எதிர்க்கொள்ள நேர்கின்றன. கடற்சூழலைக் கவனமுடன் காக்கும் தலையாயக் கடமையை அனைவரும் முன்னெடுப்போம். கடல்வளம் பெருக்கி இயற்கைச் சமநிலைப் பேணுவோம்.

**முடிவுரை:**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது இன்றைய காலத்தின் இ;ன்றியமையாத தேவையாகும். இத்தகைய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதில் நமது அறிவியல் இதழ் குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறது. இவ்வாய்வின் மூலம் சுற்றுச்சூழல் தொடர்பான கட்டுரைகள் அறிவியல் தகவல்களை மட்டுமல்லாமல் இயற்கையை பாதுகாக்கும் பொறுப்புணர்வையும் சமூகத்தில் வளர்க்கின்றன என்பது தெளிவாகிறது. சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைத்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், நிலையான வளர்ச்சியை ஊக்குவித்தல் கருத்துகளை இதழ்

தொடர்ந்து வழியுறுத்துகிறது. எனவே, நமது அறிவியல் இதழ் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை பரப்பும்; சிறந்த அறிவியல் ஊடகமாக விளங்குகிறது என்பதை இவ்வாய்வு உறுதிபடுத்துகிறது.

**சான்றெண் விளக்கம்:**

**சான்றடைவுகள் / மேற்கோள்கள் (In-Text / Footnote Citations)**

- கம்பன். "மந்திரப்படலம்." *கம்பராமாயணம்*: அயோத்தி காண்டம், பக். 635.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம். *ஆண்டு அறிக்கை 2023*, பக். 6.
- "உலக சீதோஷ்ண மாற்றத்திற்கான தீர்வு." *நமது அறிவியல்*, தொகுதி 4, ஜனவரி 2023, பக். 14.
- "சுற்றுச்சூழல்." *நமது அறிவியல்*, தொகுதி 4, பிப்ரவரி 2023, பக். 2.
- "ஓசோன்." *நமது அறிவியல்*, தொகுதி 4, செப்டம்பர் 2023, பக். 8.
- இளங்கோவடிகள். "கானல்வரி." *சிலப்பதிகாரம்*, பக். 42.
- திருவள்ளுவர். "வான் சிறப்பு." *திருக்குறள்*, குறள் 17, பக். 3.
- United Nations Environment Programme. *Global Environment Outlook*. 2023, p. 13.

**துணைநூற்பட்டியல் (Works Cited)**

*(MLA விதிமுறைகளின்படி அகரவரிசையில் (Alphabetical order) வரிசைப்படுத்தப்பட்டுள்ளது)*


- குருசாமி, மா. பா. *இதழியல் கலை*. 24-ஆம் பதிப்பு, குரு தேமொழி பதிப்பகம், 2023.
- *சுற்றுச்சூழல் ஆய்வுகள்*. தமிழ் பல்கலைக்கழகம், 2018.
- *திருக்குறள்*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2018.
- *தொல்காப்பியம்*. தமிழ்ப் பல்கலைக்கழகம், 2016.
- பத்மனாபன், தா. *கலைக்கதிர் அறிவியல் இதழ்: சுற்றுச்சூழல் சிறப்பிதழ்*. 2022.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 79.பெ. பூபதி பெரியசாமி சிறுகதைகளில் வேளாண்மையும் சுற்றுச்சூழலும் — "உழவு", "மாத்தி யோசிப்போம்", "பட்டினத்தில் விவசாயம்" ஆகிய சிறுகதைகளை முன்வைத்த ஆய்வு

**ஆய்வாளர்: ஹ. சாமிதேவி,**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழாய்வுத்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம் – 605602. மின்னஞ்சல்: samydevi30@gmail.com
**நெறியாளர்: முனைவர் எ. சுசான் மரி நெப்போலியன்,**
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
விழுப்புரம் – 605602.

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு மற்றும் சுற்றுச்சூழல் நிலைகளைப் பிரதிபலிக்கும் முக்கியமான கலைவடிவமாகும். சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை மனித வாழ்வின் அடிப்படைப் பிரச்சினைகள் இலக்கியங்களில் பல்வேறு வடிவங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் நவீன இலக்கியத்தின் குறிப்பிடத்தக்க வடிவமாகச் சிறுகதை விளங்குகிறது. சமூகத்தில் நிலவும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவதோடு மட்டுமல்லாமல், அவற்றிற்கான மாற்று வழிகளையும் சிந்திக்கச் செய்யும் ஆற்றல் சிறுகதைக்கு உண்டு.

கலைமாமணி பெ. பூபதி பெரியசாமியின் *கானல் நீர்* தொகுப்பில் இடம்பெற்றுள்ள "உழவு", "மாத்தி யோசிப்போம்", "பட்டினத்தில் விவசாயம்" ஆகிய சிறுகதைகள் வேளாண்மையின் அடிப்படைத் தன்மை, உழவர்களின் சமூகப் பங்கு, வேளாண் நிலங்களின் அழிவு, ரசாயன வேளாண்மையின் விளைவுகள், இயற்கை வேளாண்மை, நவீன தொழில்நுட்பப் பயன்பாடு, குறைந்த நீர்ப்பாசன முறைகள், பசுமைக்குடில் விவசாயம், நகர்ப்புற மாடித்தோட்டம் மற்றும் நிலமில்லா விவசாயம் போன்ற பல்வேறு கருத்துகளை முன்வைக்கின்றன.

இவ்வாய்வு, மேற்கண்ட மூன்று சிறுகதைகளில் வேளாண்மை எவ்வாறு சமூக வாழ்வின் உயிர்நாடியாகக் கட்டமைக்கப்படுகிறது என்பதையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு எவ்வாறு கதையாடலின் ஒரு முக்கியமான அறவியல் கூறாக மாறுகிறது என்பதையும் ஆராய்கிறது. குறிப்பாக, "உழவு" சிறுகதை கல்வி பெற்ற இளைய தலைமுறையினருக்கும் வேளாண்மைக்கும் இடையிலான உறவை எடுத்துரைக்கிறது. "மாத்தி யோசிப்போம்" இயற்கை வேளாண்மை, நவீன தொழில்நுட்பம், பசுமைக்குடில் மற்றும் நீர்ச் சிக்கன வேளாண்மை ஆகியவற்றை முன்வைக்கிறது. "பட்டினத்தில் விவசாயம்" நகரமயமாக்கலால் குறைந்து வரும் வேளாண் நிலங்களுக்கு மாற்றாக மாடித்தோட்டம், கொள்கலன் விவசாயம் மற்றும் நிலமில்லா விவசாயம் போன்ற நடைமுறை வாய்ப்புகளை முன்வைக்கிறது.

மூலப் படைப்பில் காணப்படும் கருத்துகளை சமகால ஆய்வுகளுடன் ஒப்பிடும்போது, இயற்கை வேளாண்மை மண் நலனை மேம்படுத்துவதற்கும், உயிரியல் செயல்பாடுகளைப் பாதுகாப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது என்பதற்கான சமீபத்திய ஆய்வுகள் காணப்படுகின்றன. இந்தியாவில் இயற்கை வேளாண்மைக்கான மாற்றத்தில் மண் தரக் குறியீடுகள் மேம்படுவதும், குறைந்த ரசாயன உள்ளீடுகளுடன் மண் நுண்ணுயிர் சமூகங்களில் மாற்றங்கள் ஏற்படுவதும் ஆய்வுகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (ScienceDirect) அதேபோல் நகர்ப்புற மாடித்தோட்டம் உணவு உற்பத்திக்கு மட்டுமன்றி நகர வெப்பநிலையைக் குறைத்தல், பசுமைப் பரப்பை அதிகரித்தல் மற்றும் சுற்றுச்சூழல் தரத்தை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு நன்மைகளை வழங்கக்கூடும் என சமகால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (Nature)
எனவே, பெ. பூபதி பெரியசாமியின் சிறுகதைகள் வெறும் வேளாண்மைப் புகழ்ச்சியை முன்வைக்கும் படைப்புகளாக இல்லாமல், வேளாண்மை–மனிதன்–மண்–நீர்–சுற்றுச்சூழல் ஆகியவற்றின் பரஸ்பர உறவை வலியுறுத்தும் சமூகச் சிந்தனைப் படைப்புகளாக அமைகின்றன என்பதே இவ்வாய்வின் மையக் கருத்தாகும்.

**முக்கியச் சொற்கள்:** வேளாண்மை, உழவு, உழவர், சுற்றுச்சூழல், இயற்கை வேளாண்மை, பசுமைக்குடில், மாடித்தோட்டம், நகர்ப்புற விவசாயம், நவீன தொழில்நுட்பம், நிலைத்த வேளாண்மை.

---

## 1. முன்னுரை

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்"

என்ற வள்ளுவரின் கருத்து வேளாண்மையின் அடிப்படைச் சிறப்பை வெளிப்படுத்துகிறது. மனிதனின் உயிர்வாழ்விற்கு உணவு இன்றியமையாதது. அந்த உணவை உருவாக்கும் முதன்மையான தொழில் வேளாண்மையாகும். தொழில்நுட்பம், தொழிற்துறை, வணிகம், தகவல் தொழில்நுட்பம் ஆகியவை வளர்ச்சி பெற்றாலும் மனிதனின் உணவுத் தேவையை வேறு எந்தத் தொழிலும் முழுமையாக மாற்ற முடியாது.
மூல ஆய்வுக் கட்டுரையும் இதே அடிப்படையில், "விவசாயமே மனிதகுலத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் முதன்மைத் தொழில்" எனக் குறிப்பிடுகிறது. நவீனமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் சூழலில் வேளாண்மை எதிர்கொள்ளும் சவால்களையும், இத்தொழிலை மீட்டெடுக்க வேண்டிய அவசியத்தையும் அது முன்வைக்கிறது.
இன்றைய சூழலில் வேளாண்மையின் பிரச்சினைகள் பல அடுக்குகளைக் கொண்டுள்ளன. வேளாண் நிலங்கள் குடியிருப்பு மற்றும் வணிகப் பயன்பாட்டிற்கு மாற்றப்படுதல், நீர்ப்பற்றாக்குறை, மண் வளக் குறைவு, உள்ளீட்டுச் செலவு அதிகரித்தல், ரசாயனப் பயன்பாடு, காலநிலை மாற்றம், உழவர் வருமானச் சிக்கல், இளைய தலைமுறையின் வேளாண்மையிலிருந்து விலகல் போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.
இந்தப் பின்னணியில் இலக்கியம் வேளாண்மையை எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதும் முக்கியமான ஆய்வுத் தளமாகிறது. பெ. பூபதி பெரியசாமியின் *கானல் நீர்* தொகுப்பில்

இடம்பெற்றுள்ள “உழவு”, “மாத்தி யோசிப்போம்”, “பட்டினத்தில் விவசாயம்” ஆகிய சிறுகதைகள் வேளாண்மையை வெவ்வேறு கோணங்களில் அணுகுகின்றன.

---

## 2. ஆய்வின் நோக்கங்கள்

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் பெ. பூபதி பெரியசாமியின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளில் வெளிப்படும் வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் சிந்தனைகளை ஆராய்வதாகும்.

குறிப்பாக,

1. தமிழர் வாழ்வியலில் வேளாண்மைக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை விளக்குதல்.
2. பெ. பூபதி பெரியசாமியின் சிறுகதைகளில் உழவுத் தொழில் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகிறது என்பதை ஆராய்தல்.
3. வேளாண் நில அழிவிற்கான சமூக–பொருளாதாரக் காரணிகளை அடையாளப்படுத்துதல்.
4. ரசாயன வேளாண்மை மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த படைப்பாளரின் அணுகுமுறையை ஆய்வு செய்தல்.
5. நவீன தொழில்நுட்பமும் வேளாண்மையும் இணையும் விதத்தை ஆராய்தல்.
6. நகர்ப்புற மாடித்தோட்டத்தின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை விளக்குதல்.
7. இலக்கியத்தில் முன்வைக்கப்படும் வேளாண் சிந்தனைகளை சமகால அறிவியல் ஆய்வுகளுடன் ஒப்பிடுதல்.
8. நிலைத்த வேளாண்மைக்கான இலக்கியச் சிந்தனைகளின் பொருத்தத்தை மதிப்பிடுதல்.

---

## 3. ஆய்வு முறை

இவ்வாய்வு முதன்மையாக **உள்ளடக்கப் பகுப்பாய்வு**, **இலக்கிய விளக்கவியல்**, **சுற்றுச்சூழல் விமர்சனம்** மற்றும் **ஒப்பீட்டு அணுகுமுறை** ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

முதன்மைத் தரவாக பெ. பூபதி பெரியசாமியின் *கானல் நீர்* சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள “உழவு”, “மாத்தி யோசிப்போம்”, “பட்டினத்தில் விவசாயம்” ஆகிய கதைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. பதிவேற்றப்பட்ட மூல ஆய்வுக் கட்டுரையில் இடம்பெற்றுள்ள கருத்துகள், மேற்கோள்கள் மற்றும் கதைச் சம்பவங்கள் அடிப்படைத் தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவாக திருக்குறள், தொல்காப்பியம், சங்க இலக்கியம் உள்ளிட்ட தமிழ் இலக்கிய ஆதாரங்களும், இயற்கை வேளாண்மை, மண் நலம், நகர்ப்புற விவசாயம் மற்றும் பசுமைக் கட்டமைப்பு தொடர்பான சமகால திறந்த அணுகல் ஆய்வுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

---

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

## 4. தமிழர் வாழ்வியலில் வேளாண்மை

### 4.1 வேளாண்மை – பொருளும் பண்பாடும்

வேளாண்மை என்பது உணவு உற்பத்திக்கான ஒரு பொருளாதாரச் செயல்பாடு மட்டுமல்ல. அது நிலம், நீர், காலம், உழைப்பு, சமூக உறவு, உணவு, பண்பாடு ஆகிய அனைத்தையும் இணைக்கும் வாழ்வியல் அமைப்பாகும்.

மூல ஆய்வில், வேளாண்மை உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்கான மூலப்பொருட்களை வழங்கும் முதன்மைத் தொழிலாக விளக்கப்படுகிறது. மேலும், "உழவு", "விவசாயம்", "பயிர்செய்கை", "கமம்", "பயிரிடுதல்" போன்ற சொற்களும் வேளாண்மையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 4.2 தொல்காப்பியத்தில் வேளாண்மை

தமிழரின் நிலவியல் அறிவு தொல்காப்பியத்தின் ஐந்திணைக் கோட்பாட்டில் தெளிவாகப் பதிவாகியுள்ளது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப்பகுதிகளில் **மருதம்** வேளாண்மையோடு நெருங்கிய தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

நெல் வயல், நீர்நிலை, ஆறு, ஏரி, குளம் போன்றவை மருதநில வாழ்வின் அடையாளங்களாக அமைந்தன. இதன் மூலம் பண்டைய தமிழர் நிலம் மற்றும் நீரின் இயல்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்வியல் முறையை அமைத்திருந்தனர் என்பதை அறியலாம். மூல ஆவணமும் மருதநிலத்தை வேளாண்மைக்கு ஏற்ற செழிப்பான நிலப்பகுதியாக விளக்குகிறது.

---

## 5. உழவுத் தொழிலின் பெருமை

### 5.1 வள்ளுவர் காட்டும் உழவின் உயர்வு

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்."
— *திருக்குறள்*, குறள் 1033

உழவுத் தொழில் உலக உயிர்களின் உணவுத் தேவையை நிறைவேற்றுவதால் அதன் முக்கியத்துவம் தனித்துவமானது. வள்ளுவர் உழவரை உலகத்தின் அடிப்படைத் தாங்கியாகக் கருதுகிறார்.

"உழவார் உலகத்தார்க்கும் ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."
— *திருக்குறள்*, குறள் 1032

என்ற குறள் உழவர் சமூகத்தின் அடிப்படைப் பங்கினை விளக்குகிறது. மூல ஆய்வும் இதே குறளைக் கொண்டு உழவரை உலகத்தைத் தாங்கும் "அச்சாணி"யாக விளக்குகிறது.

### 5.2 தமிழர் பண்பாட்டில் உழவு

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர்ந்தால் நெல் உயரும்
நெல் உயர்ந்தால் குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான்"

என்ற வரிசை நீர்–நெல்–குடி–அரசு என்ற சமூக வளர்ச்சித் தொடர்பை வெளிப்படுத்துகிறது. இதன் அடிப்படையில் வேளாண்மை தனிநபர் வாழ்க்கைக்கான தொழிலாக மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளத்திற்கான அடித்தளமாகவும் விளங்குகிறது.

---

## 6. பெ. பூபதி பெரியசாமியின் படைப்புகளில் வேளாண்மை

பெ. பூபதி பெரியசாமியின் *கானல் நீர்* தொகுப்பில் இடம்பெறும் "உழவு", "மாத்தி யோசிப்போம்", "பட்டினத்தில் விவசாயம்" ஆகிய சிறுகதைகள் வேளாண்மையை மூன்று முக்கிய நிலைகளில் அணுகுகின்றன:

1. வேளாண்மையின் அடிப்படைப் பெருமை;
2. வேளாண்மையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கான மாற்றுச் சிந்தனை;
3. நகர்ப்புறத்திலும் வேளாண்மையைத் தொடர்வதற்கான புதிய முயற்சிகள்.

இதனால் இக்கதைகள் வேளாண்மையின் கடந்தகாலப் பெருமையை மட்டும் பேசாமல், அதன் எதிர்காலத்தையும் சிந்திக்கின்றன.

---

## 7. "உழவு" சிறுகதை உணர்த்தும் வேளாண்மையின் முக்கியத்துவம்

### 7.1 கல்வியும் வேளாண்மையும்

"உழவு" சிறுகதையில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பாரதி கல்வி கற்று அரசு ஆசிரியராகப் பணியில் சேர்கிறார். ஆனால் கல்வி அவரைத் தனது வேளாண் வேர்களிலிருந்து பிரிக்கவில்லை. மாறாக, ஆசிரியராகப் பணியில் சேர்ந்தவுடன் வேளாண்மையின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பணியை மேற்கொள்கிறார்.

வகுப்பறையில் காணப்படும் குறள்:

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்ற திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு பாரதி மாணவர்களுக்கு உழவின் சிறப்பை எடுத்துரைக்கிறார். மூல ஆவணத்தில் இடம்பெற்றுள்ள கதைப்பகுதி, உலகம் பல தொழில்களைச் செய்தாலும் இறுதியில் உணவுக்காக உழவின் பின்னால் வர வேண்டிய நிலையை வலியுறுத்துகிறது.

### 7.2 இளைய தலைமுறையின் வேளாண் ஈடுபாடு

கல்வி பெற்ற இளைஞர்கள் வேளாண்மையை விட்டு விலகுவது நவீன சமூகத்தின் முக்கியச் சிக்கலாகும். இதற்கு மாறாக, இக்கதையில் மாணவர்கள் வார இறுதி நாட்களில் தங்கள் சொந்த ஊருக்குச் சென்று நிலத்தைப் பராமரித்தல், வேளாண் பணிகளில் ஈடுபடுதல் போன்ற செயல்பாடுகளின் மூலம் வேளாண்மையுடன் தொடர்பு கொள்ளும் சிந்தனை முன்வைக்கப்படுகிறது.

இதன் மூலம் ஆசிரியர், "வேளாண்மை என்பது கல்விக்கு எதிரான தொழில் அல்ல; கல்வி வேளாண்மையை மேம்படுத்துவதற்கான கருவியாக இருக்க வேண்டும்" என்ற கருத்தை உருவாக்குகிறார்.

## 8. “மாத்தி யோசிப்போம்” – மாற்றுச் சிந்தனையும் இயற்கை வேளாண்மையும்

### 8.1 வேளாண் நிலத்தின் வணிகமயமாக்கல்

“மாத்தி யோசிப்போம்” சிறுகதை வேளாண் நிலங்கள் ரியல் எஸ்டேட் பயன்பாட்டிற்காக மாற்றப்படுவதால் ஏற்படும் சமூக விளைவுகளைச் சுட்டிக்காட்டுகிறது.

“விவசாயம் முதன்மையான தொழிலாக இருந்தவரை விவசாயி மதிக்கப்பட்டான்; எப்பொழுது விவசாய நிலத்தை அழித்துவிட்டு ரியல் எஸ்டேட் கட்ட ஆரம்பித்தார்களோ அன்றே விவசாயத்திற்கு அழிவு காலம் தொடங்கிவிட்டது”

என்ற கருத்து, வேளாண் நிலம் ஒரு பொருளாக மட்டுமே பார்க்கப்படும் பொருளாதார அணுகுமுறையை விமர்சிக்கிறது.

### 8.2 ரசாயன வேளாண்மையின் விமர்சனம்

இக்கதையின் வழியாக பாரம்பரிய வேளாண்மை முறைகளிலிருந்து அதிக ரசாயன உள்ளீடுகளைச் சார்ந்த வேளாண்மைக்கு ஏற்பட்ட மாற்றம் விமர்சிக்கப்படுகிறது.

இது வெறும் இலக்கியக் கருத்தாக மட்டுமே பார்க்க முடியாத நிலையை சமகால ஆய்வுகள் காட்டுகின்றன. 2025ஆம் ஆண்டில் வெளியான இந்தியாவை மையமாகக் கொண்ட திறந்த அணுகல் ஆய்வு, இயற்கை வேளாண்மைக்கான மாற்றத்தில் மண் நலக் குறியீடுகள் மேம்படுவதையும், உயிரியல் உள்ளீடுகளின் பயன்பாடு மண் நுண்ணுயிர் அமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதையும் சுட்டிக்காட்டுகிறது. (ScienceDirect)

இதனால் “மாத்தி யோசிப்போம்” சிறுகதையில் முன்வைக்கப்படும் இயற்கை சார்ந்த வேளாண் சிந்தனை, சமகால சுற்றுச்சூழல் வேளாண் ஆய்வுகளுடனும் தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடியதாகிறது.

### 8.3 நம்மாழ்வார் சிந்தனையின் தாக்கம்

கதையில் “சேது” என்ற பாத்திரத்தின் வழியாக இயற்கை வேளாண்மை நோக்கி மாற்றுச் சிந்தனை முன்வைக்கப்படுகிறது. வேளாண்மையில் முதுகலைப் பட்டம் பெற்ற சேது, கிராமப்புற மக்களின் நிலைமையைப் புரிந்து கொண்டு பசுமைக்குடில் விவசாயத்தை அறிமுகப்படுத்த முயல்கிறார்.

அவருடைய கருத்து:

“காலத்திற்கேற்றாற் போல நாம விவசாயத்துல புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தித் தான் ஆகணும். குறைந்த தண்ணீரில் ‘பசுமைக்குடில் விவசாயம்’ என்ற புதிய முறையில் இனி விவசாயம் செய்யப் போகிறோம். முயற்சி செய்து ஒற்றுமையா உழைச்சா கண்டிப்பா அதுல நாம ஜெயிப்போம்.”

என்பதாக அமைந்துள்ளது.

இங்கு இயற்கை வேளாண்மை என்பது தொழில்நுட்பத்தை மறுப்பதாக அல்ல; மாறாக, இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதாகக் கட்டமைக்கப்படுகிறது.

## 9. நவீன தொழில்நுட்பமும் நிலைத்த வேளாண்மையும்

வேளாண்மையைப் பாதுகாக்க பழைய முறைகளுக்கு மட்டும் திரும்பிச் செல்வது போதுமானதல்ல. நிலம், நீர், விதை, தொழில்நுட்பம், சந்தை ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் புதிய அணுகுமுறை தேவைப்படுகிறது.

இதில் பின்வரும் முறைகள் முக்கியமானவை:

### 9.1 சொட்டுநீர் பாசனம்

நீர் பற்றாக்குறை நிலவும் பகுதிகளில் நீரை நேரடியாகத் தாவரத்தின் வேர் பகுதிக்கு வழங்கும் முறைகள் நீர்ச் சிக்கனத்திற்கு உதவுகின்றன.

### 9.2 பசுமைக்குடில் விவசாயம்

கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் பயிர் வளர்ப்பதன் மூலம் காலநிலை மாற்றங்களின் தாக்கத்தை ஒரு அளவு கட்டுப்படுத்த முடியும்.

### 9.3 இயற்கை உள்ளீடுகள்

மண் உயிரியல் செயல்பாடுகளைப் பாதுகாக்க உயிரியல் மற்றும் இயற்கை உள்ளீடுகளைப் பயன்படுத்தும் அணுகுமுறை முக்கியத்துவம் பெறுகிறது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய ஆய்வுகளும் இயற்கை வேளாண் மாற்றத்துடன் மண் தர மேம்பாட்டைத் தொடர்புபடுத்துகின்றன. (ScienceDirect)

### 9.4 பல்வகைப் பயிரிடுதல்

ஒரே பயிரைச் சார்ந்திருப்பதை விட பல்வேறு பயிர்களை ஒருங்கிணைப்பது பொருளாதார மற்றும் சூழலியல் ஆபத்துகளைப் பகிர்ந்துகொள்ள உதவும்.

---

## 10. “பட்டினத்தில் விவசாயம்” – நகர்ப்புற வேளாண்மையின் புதிய பரிமாணம்

### 10.1 நகரமயமாக்கலும் வேளாண் நில இழப்பும்

“பட்டினத்தில் விவசாயம்” சிறுகதை நகரமயமாக்கலால் வேளாண் நிலங்கள் குடியிருப்பு பகுதிகளாக மாறும் நிலையை முன்வைக்கிறது.

கதையில் கணேசன் தனது தந்தையிடம்,

“மக்கள் தொகைப் பெருக்கம் இப்போ தவிர்க்க முடியாத ஒன்னாயிடுச்சு. இதனால் மெயின் ரோட்டில் இருக்கிற நல்ல விளை நிலங்கள் எல்லாம் குடியிருப்பு பகுதியாக மாறிக்கிட்டே வருது. எதிர்காலத்துல மீதி இருக்கிற நிலத்துல விவசாயம் பண்ணி காலத்தை கடக்கிறது என்பது சிரமமான காரியமாக இருக்கும்...”

என்று கூறுகிறார்.

இக்கருத்து நகரமயமாக்கல் மற்றும் உணவுப் பாதுகாப்பு இடையிலான முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது.

### 10.2 மாடித்தோட்டம்

நிலப்பரப்பு குறைந்த நகரங்களில் மாடித்தோட்டம் மாற்று வேளாண் முறையாக முன்வைக்கப்படுகிறது. கணேசன் சிமெண்டு தொட்டி, பிளாஸ்டிக் பை, மண், மண்புழு உரம், தேங்காய் நார் போன்றவற்றைப் பயன்படுத்தி காய்கறி மற்றும் கீரைகளைப் பயிரிடுகிறார்.

இது “நிலம் இல்லாமல் விவசாயம்” என்ற கருத்தை நடைமுறைக்கு கொண்டு வருகிறது.

சமகால ஆய்வுகளும் நகர்ப்புற கூரை வேளாண்மை உணவு உற்பத்திக்கு வாய்ப்பளிப்பதோடு நகரத்தின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தேவைகளுக்கும் பங்களிக்கக்கூடும் எனக் காட்டுகின்றன. 124 சீன நகரங்களை ஆய்வு செய்த Nature Cities ஆய்வு, நகர்ப்புற கூரை வேளாண்மை குறிப்பிட்ட சூழல்களில் நகர காய்கறித் தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பதை மதிப்பிட்டுள்ளது; அதேவேளையில் நீர் மற்றும் பொருள் தேவைகளையும் கணக்கில் கொள்ள வேண்டும் என எச்சரிக்கிறது. (Nature)

### 10.3 நகர்ப்புற வெப்பத்தைக் குறைத்தல்

மாடித்தோட்டம் உணவு உற்பத்தியைத் தாண்டி நகர வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் பசுமைக் கட்டமைப்பாகவும் விளங்குகிறது.

2026ஆம் ஆண்டின் உலகளாவிய ஆய்வு, கூரைப் பசுமைப்படுத்தல் நகரங்களின் பகல் நிலப்பரப்பு வெப்பநிலையைச் சுமார் 0.57–1.58°C வரையிலும், இரவு வெப்பநிலையை 0.14–0.39°C வரையிலும் குறைக்கும் திறன் இருப்பதாக மாதிரியாக்கியுள்ளது. (Nature)

இதன் மூலம் “பட்டினத்தில் விவசாயம்” சிறுகதையில் முன்வைக்கப்படும் மாடித்தோட்டம், இலக்கியக் கற்பனை மட்டுமன்றி நகர்ப்புற சுற்றுச்சூழல் மேலாண்மையோடும் தொடர்புடைய நடைமுறையாக இருப்பதை அறியலாம்.

---

## 11. நகர்ப்புற விவசாயமும் உணவுப் பாதுகாப்பும்

நகர்ப்புற மக்கள் தொகை அதிகரிக்கும் நிலையில் உணவு உற்பத்தி முழுமையாக நகரத்திற்கு வெளியே மட்டுமே நடைபெற வேண்டும் என்ற பாரம்பரியக் கருத்து மாற்றமடைந்து வருகிறது. மாடித்தோட்டம் மூலம்:

1. வீட்டுத் தேவைக்கான சில காய்கறிகளை உற்பத்தி செய்யலாம்.
2. உணவு உற்பத்தி பற்றிய விழிப்புணர்வை உருவாக்கலாம்.
3. குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு வேளாண் அனுபவத்தை வழங்கலாம்.
4. உயிரியல் கழிவுகளை உரமாக மாற்றும் நடைமுறையை ஊக்குவிக்கலாம்.
5. நகர்ப்புற பசுமைப் பரப்பை அதிகரிக்கலாம்.
6. இயற்கையோடு மனிதனின் நேரடி உறவை வலுப்படுத்தலாம்.

ஆனால் நகர்ப்புற வேளாண்மையை முழுமையான உணவுப் பாதுகாப்புத் தீர்வாகக் கருதாமல், பெரிய அளவிலான வேளாண்மைக்கு துணை அமைப்பாகப் புரிந்துகொள்வது அறிவியல் ரீதியாக பொருத்தமானது. நீர், கட்டிடத் தாங்குதிறன், மண்/வளர்ப்பூடகம், பராமரிப்பு செலவு மற்றும் சந்தை போன்ற காரணிகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

---

## 12. “நஞ்சு இல்லாத உணவு” – உணவு மற்றும் உடல்நலம்

“பட்டினத்தில் விவசாயம்” சிறுகதை நகர்ப்புற மக்கள் தங்களுக்குத் தேவையான காய்கறி மற்றும் கீரைகளைத் தாங்களே வளர்த்துக்கொள்ளும் சாத்தியத்தை வலியுறுத்துகிறது.

இக்கருத்தை சுற்றுச்சூழல் பார்வையில் விரிவுபடுத்தும்போது, உணவு உற்பத்தி மற்றும் உணவு நுகர்வு இடையிலான தூரத்தைக் குறைக்கும் முயற்சியாக நகர்ப்புற வேளாண்மையைப் பார்க்கலாம்.

எனினும், "தாங்களே விளைவித்த உணவு அனைத்தும் நச்சில்லாதது" என்ற பொதுவான கூற்றை அறிவியல் ரீதியாக நிபந்தனையின்றி ஏற்க முடியாது. பயன்படுத்தப்படும் நீர், விதை, வளர்ப்பூடகம், உரம், பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் சுற்றுப்புற மாசு ஆகியவை உணவின் பாதுகாப்பை நிர்ணயிக்கின்றன. எனவே, இக்கதையின் கருத்தை "பாதுகாப்பான, பொறுப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட உணவு உற்பத்திக்கான வாய்ப்பு" என்ற நிலையில் புரிந்துகொள்வது பொருத்தமானது.

---

## 13. வேளாண்மை மற்றும் மனநலம் சார்ந்த வாழ்வியல்

நகர வாழ்க்கை வேகமான, இயந்திரமயமான வாழ்க்கை முறையை உருவாக்கியுள்ளது. இந்நிலையில் செடிகளை வளர்ப்பது, மண்ணோடு பணிபுரிவது, உணவை உருவாக்கும் செயல்முறையை நேரடியாக அனுபவிப்பது போன்றவை மனிதனின் இயற்கைத் தொடர்பை அதிகரிக்கக்கூடிய செயல்பாடுகளாக அமைகின்றன.

மூல ஆய்வும் நகர வாழ்க்கையில் செடிகொடிகளை வளர்ப்பதும் உழவு சார்ந்த பணிகளில் ஈடுபடுவதும் மன அமைதியையும் இயற்கை மீதான பிணைப்பையும் உருவாக்குவதாகக் குறிப்பிடுகிறது.

இதனால் "பட்டினத்தில் விவசாயம்" உணவு உற்பத்தியை மட்டும் பேசாமல், நகர மனிதனின் வாழ்க்கைத் தரத்தையும் இயற்கை உணர்வையும் மையப்படுத்துகிறது.

---

## 14. சுற்றுச்சூழல் விமர்சனப் பார்வையில் சிறுகதைகள்

சுற்றுச்சூழல் விமர்சனம் மனிதன் மற்றும் இயற்கைக்கு இடையிலான உறவை இலக்கியத்தின் வழியாக ஆராய்கிறது. இவ்வகையில் பெ. பூபதி பெரியசாமியின் மேற்கண்ட சிறுகதைகள் பல முக்கியமான சூழலியல் கேள்விகளை எழுப்புகின்றன.

### 14.1 நிலம்

நிலம் ஒரு வணிகப் பொருள் மட்டுமல்ல; உணவு உற்பத்தியின் அடித்தளம்.

### 14.2 நீர்

"வரப்புயர நீர் உயரும்; நீர் உயர்ந்தால் நெல் உயரும்" என்ற சிந்தனை நீருக்கும் உணவுக்கும் இடையிலான நேரடி உறவை வெளிப்படுத்துகிறது.

### 14.3 மண்

மண் என்பது வெறும் பயிர் வளர்ப்புக்கான ஊடகம் அல்ல; உயிரியல் செயல்பாடுகளின் அடித்தளம். சமகால இயற்கை வேளாண் ஆய்வுகள் மண் தரத்திலும் நுண்ணுயிர் சமூகங்களிலும் ஏற்படும் மாற்றங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. (ScienceDirect)

### 14.4 உயிரினப் பல்வகைமை

நிலைத்த வேளாண்மை என்பது உற்பத்தி அளவை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருக்காமல், மண், நீர், உயிரினங்கள் மற்றும் மனித சமூகத்தின் நீண்டகாலத் தொடர்ச்சியையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

---

### 15. சமகால தமிழ்நாட்டுச் சூழலுடன் தொடர்புபடுத்தல்

தமிழ்நாட்டின் வேளாண் சூழலில் நிலச் சீரழிவு, நீர்ப்பற்றாக்குறை, நகர விரிவாக்கம் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய பிரச்சினைகளாக உள்ளன.

2026ஆம் ஆண்டில் வெளியான *Scientific Reports* ஆய்வு தமிழ்நாட்டின் மேற்கு வேளாண்–காலநிலை மண்டலத்தில் நிலச் சீரழிவு பாதிப்பையும் சுற்றுச்சூழல் குறியீடுகளையும் GIS அடிப்படையில் ஆய்வு செய்துள்ளது. நிலச் சீரழிவு உணவு உற்பத்தி, மண் வளம் மற்றும் உயிர்ப்பொருள் உற்பத்தி ஆகியவற்றை பாதிக்கும் முக்கியப் பிரச்சினை என்பதை ஆய்வு வலியுறுத்துகிறது. (Nature)

இதனால் பெ. பூபதி பெரியசாமியின் கதைகளில் காணப்படும் “நிலத்தைப் பாதுகாத்தல்”, “விவசாயத்தைத் தொடர்தல்”, “இயற்கை வேளாண்மை”, “மாற்று தொழில்நுட்பம்” போன்ற சிந்தனைகள் தமிழ்நாட்டின் தற்போதைய சுற்றுச்சூழல் விவாதங்களோடும் பொருத்தமுடையதாகின்றன.

---

### 16. இலக்கியமும் வேளாண் விழிப்புணர்வும்

வேளாண்மை குறித்த அறிவியல் தகவல்களை ஆய்வுக் கட்டுரைகள் வழங்கலாம். ஆனால் அந்த அறிவு சமூகத்தின் உணர்வில் பதிய இலக்கியம் தனித்துவமான பங்காற்றுகிறது.

பெ. பூபதி பெரியசாமியின் சிறுகதைகளில்:

**கதை → பாத்திரம் → பிரச்சினை → சிந்தனை → மாற்று வழி**

என்ற கட்டமைப்பு காணப்படுகிறது.

“உழவு” – வேளாண்மையின் அடிப்படைப் பெருமையை உணர்த்துகிறது.

“மாத்தி யோசிப்போம்” – வேளாண் நெருக்கடிக்கான மாற்று வழியைத் தேடுகிறது.

“பட்டினத்தில் விவசாயம்” – நிலமற்ற நகர சூழலிலும் வேளாண் சிந்தனையைத் தொடரும் வழியை முன்வைக்கிறது.

இதனால் மூன்று கதைகளும் சேர்ந்து வேளாண்மையின் **கடந்தகாலப் பெருமை – நிகழ்கால நெருக்கடி – எதிர்கால மாற்று** என்ற மூன்று நிலைகளைக் கட்டமைக்கின்றன.

---

### 17. ஆய்வின் முக்கியக் கண்டறிதல்கள்

இவ்வாய்வின் அடிப்படையில் பின்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன:

1. பெ. பூபதி பெரியசாமியின் சிறுகதைகளில் வேளாண்மை ஒரு தொழிலாக மட்டும் அல்லாமல் வாழ்வியல் அறமாகக் காட்டப்படுகிறது.
2. வேளாண்மையைப் பாதுகாப்பது உணவுப் பாதுகாப்பை மட்டும் சார்ந்ததல்ல; மண், நீர், உயிரியல் வளம் மற்றும் சமூக நிலைத்தன்மையையும் சார்ந்ததாகும்.

3. “உழவு” சிறுகதை இளைய தலைமுறையையும் கல்வித் துறையையும் வேளாண் விழிப்புணர்வுடன் இணைக்கிறது.
4. “மாத்தி யோசிப்போம்” வேளாண் நிலங்களின் வணிகமயமாக்கலை விமர்சிப்பதோடு இயற்கை வேளாண்மை மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைப்பை முன்வைக்கிறது.
5. பசுமைக்குடில், சொட்டுநீர் பாசனம் போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இயற்கை வளங்களைக் குறைவாகப் பயன்படுத்தும் வேளாண்மைக்கான வாய்ப்பு முன்வைக்கப்படுகிறது.
6. “பட்டினத்தில் விவசாயம்” நகரமயமாக்கலுக்கு எதிரான ஒரு மாற்றுச் சிந்தனையாக மாடித்தோட்டம் மற்றும் நிலமில்லா விவசாயத்தை முன்வைக்கிறது.
7. சமகால ஆய்வுகள் இயற்கை வேளாண்மையின் மண் நலப் பயன்களையும், நகர்ப்புற பசுமைக் கட்டமைப்பின் சுற்றுச்சூழல் பயன்களையும் உறுதிப்படுத்துகின்றன. (ScienceDirect)
8. இலக்கியத்தில் முன்வைக்கப்படும் சுற்றுச்சூழல் சிந்தனைகள் அறிவியல் ஆய்வுகளுடன் உரையாடும் திறன் கொண்டவை.

---

## 18. விவாதம்

பெ. பூபதி பெரியசாமியின் சிறுகதைகளை முழுமையாகப் பார்க்கும்போது, ஆசிரியர் “பழைய வேளாண்மை முறைகளுக்கே திரும்ப வேண்டும்” என்ற ஒருதலைப்பட்சமான கருத்தை முன்வைப்பதில்லை. அதற்கு பதிலாக, வேளாண்மையின் அடிப்படை மதிப்பைத் தக்கவைத்துக்கொண்டு புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சமநிலை அணுகுமுறையை முன்வைக்கிறார்.

இதுவே இக்கதைகளின் முக்கியமான சமகாலப் பொருத்தமாகும்.

இயற்கை வேளாண்மை என்ற பெயரில் தொழில்நுட்பத்தை நிராகரிப்பதும் சரியல்ல; தொழில்நுட்ப வளர்ச்சி என்ற பெயரில் மண் மற்றும் நீரின் இயற்கைத் தன்மையை அழிப்பதும் நிலைத்த தீர்வாகாது. எனவே, இயற்கை வளப் பாதுகாப்பு, அறிவியல் அறிவு, உள்ளூர் வேளாண் அறிவு மற்றும் நவீன தொழில்நுட்பம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த அணுகுமுறை தேவைப்படுகிறது.

---

## 19. முடிவுரை

பெ. பூபதி பெரியசாமியின் “உழவு”, “மாத்தி யோசிப்போம்”, “பட்டினத்தில் விவசாயம்” ஆகிய சிறுகதைகள் வெவ்வேறு கதைக்களங்களைக் கொண்டிருந்தாலும், அவற்றின் மையச் சிந்தனை வேளாண்மையின் தொடர்ச்சியையும் இயற்கைப் பாதுகாப்பையும் நோக்கியதாக உள்ளது.

“உழவு” சிறுகதை வேளாண்மையின் முதன்மையை கல்வித் தளத்திற்குள் கொண்டு வருகிறது. வேளாண்மை என்பது பின்தங்கியவர்களின் தொழில் என்ற தவறான எண்ணத்தை மாற்றி, உலகின் உணவு அமைப்பைத் தாங்கும் அடிப்படைத் தொழிலாக அதைக் காட்டுகிறது.

“மாத்தி யோசிப்போம்” வேளாண் நில அழிவு, வணிகமயமாக்கல் மற்றும் ரசாயன வேளாண்மை போன்ற சிக்கல்களை முன்வைத்து, இயற்கை வேளாண்மை மற்றும் நவீன தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கும் மாற்று வழியைச் சுட்டுகிறது. இயற்கை வேளாண்மை மண் நலத்தை மேம்படுத்தக்கூடும் என்பதற்கான சமகால ஆய்வுகளும் இக்கருத்துக்கு அறிவியல் பின்னணியை வழங்குகின்றன. (ScienceDirect)

“பட்டினத்தில் விவசாயம்” நிலமில்லாத நகர்ப்புற சூழலிலும் வேளாண் சிந்தனை தொடர முடியும் என்பதை மாடித்தோட்டம் மற்றும் நிலமில்லா விவசாயத்தின் மூலம் காட்டுகிறது. நகர்ப்புற கூரைப் பசுமை உணவு உற்பத்திக்கு மட்டுமன்றி வெப்பநிலை கட்டுப்பாடு மற்றும் பசுமைப் பரப்பு அதிகரிப்பு போன்ற சுற்றுச்சூழல் நன்மைகளையும் வழங்கக்கூடும் என்பதை சமகால ஆய்வுகள் காட்டுகின்றன. (Nature)

எனவே, இம்மூன்று சிறுகதைகளும் ஒருங்கிணைந்து **“உழவைப் பாதுகாப்போம்; இயற்கையைப் போற்றுவோம்; தொழில்நுட்பத்தைப் பொறுப்புடன் பயன்படுத்துவோம்; நகரத்திலும் பசுமையை உருவாக்குவோம்”** என்ற நிலைத்த வாழ்வியல் செய்தியை முன்வைக்கின்றன.

வேளாண்மை என்பது உணவு உற்பத்தி மட்டுமல்ல; அது மனித நாகரிகத்தின் தொடர்ச்சியாகும். மண், நீர், விதை, உழவர் மற்றும் உணவு ஆகியவற்றின் உறவைப் பாதுகாப்பதே எதிர்கால சமூகத்தின் நிலைத்தன்மைக்கான அடிப்படையாகும். இவ்வகையில் பெ. பூபதி பெரியசாமியின் சிறுகதைகள் வேளாண்மையைப் பற்றிய இலக்கியப் பதிவுகளாக மட்டுமன்றி, சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும் சமூகப் பொறுப்பையும் உருவாக்கும் படைப்புகளாகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

---

## 20. ஆய்வின் வரம்புகள்

இவ்வாய்வு பெ. பூபதி பெரியசாமியின் *கானல் நீர்* தொகுப்பில் இடம்பெற்றுள்ள “உழவு”, “மாத்தி யோசிப்போம்”, “பட்டினத்தில் விவசாயம்” ஆகிய மூன்று சிறுகதைகளை மையமாகக் கொண்டது. எனவே, ஆசிரியரின் முழுமையான படைப்புலகில் காணப்படும் அனைத்து வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் கருத்துகளும் இவ்வாய்வில் உள்ளடக்கப்படவில்லை.

மேலும், இலக்கியப் படைப்புகளில் வரும் வேளாண் கருத்துகள் நேரடி அறிவியல் பரிசோதனைத் தரவுகளாகக் கருதப்படவில்லை. அவை இலக்கியப் பிரதியின் கருத்தியல் மற்றும் சமூகப் பிரதிபலிப்புகளாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளன. சமகால அறிவியல் ஆய்வுகள் அவற்றுடன் ஒப்பீட்டு மற்றும் விளக்கப் பின்னணியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

---

## 21. ஆசிரியர் அறிவிப்பு

### 21.1 நலன் முரண்பாடு குறித்த அறிவிப்பு

இவ்வாய்வைத் தயாரித்த ஆசிரியர்/ஆசிரியர்கள், இக்கட்டுரையின் கருத்துகள், ஆய்வு முடிவுகள் மற்றும் வெளியீட்டுடன் தொடர்புடைய எந்தவொரு தனிப்பட்ட, நிறுவன, நிதி

அல்லது தொழில்முறை **நலன் முரண்பாடும் (Conflict of Interest)** இல்லை என அறிவிக்கின்றனர்.

### 21.2 நிதியுதவி

இவ்வாய்விற்காக எந்தவொரு குறிப்பிட்ட வெளிப்புற நிதியுதவியும் பெறப்படவில்லை என ஆசிரியர்/ஆசிரியர்கள் அறிவிக்கின்றனர்.

### 21.3 தரவு மற்றும் ஆதாரப் பொறுப்பு

இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட முதன்மை இலக்கியத் தரவுகள் மற்றும் மேற்கோள்கள் தொடர்பான பொறுப்பு ஆசிரியருக்குரியது. வெளிப்புற ஆய்வுகள் அவற்றின் அசல் வெளியீடுகளின் அடிப்படையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

---

## 22. மேற்கோள் நூல்கள் மற்றும் ஆய்வாதாரங்கள்

### MLA 9th Edition

[1]. Bai, Hao, et al. "Cooling Potential of Global Urban Roof Greening." *npj Urban Sustainability*, vol. 6, 2026, article 49, Nature, https://doi.org/10.1038/s42949-026-00354-9. (Nature)

[2]. Kaliraj, S., et al. "GIS-Based Assessment of Land Degradation Vulnerability and Environmental Indices as Ecological Indicators in Western Agro-Climatic Zone of Tamil Nadu, India." *Scientific Reports*, vol. 16, 2026, article 4944. (Nature)

[3]. Sannigrahi, Srikanta, et al. "Effects of Green Revolution Led Agricultural Expansion on Net Ecosystem Service Values in India." *arXiv*, 2019. (arXiv)

[4]. Shao, Jie, et al. "A Sustainable Development Perspective on Urban-Scale Roof Greening Priorities and Benefits." *arXiv*, 2024. (arXiv)

[5]. *சிறுபஞ்சமூலம்*. மாணவர் பதிப்பகம், சென்னை, 2014.

[6]. *சங்க இலக்கியங்கள்*. வர்தமான் பதிப்பகம், சென்னை, 2007.

[7]. பெரியசாமி, பெ. பூபதி. *கானல் நீர்*. காவியா பதிப்பகம், 2022. [இது பதிவேற்றப்பட்ட மூல ஆய்வுக் கட்டுரையில் வழங்கப்பட்ட நூற்பட்டியலை அடிப்படையாகக் கொண்டது.]

[8]. *திருக்குறள்*. மாணவர் பதிப்பகம், சென்னை, 2024.

[9]. *தொல்காப்பியம்*. பாரி நிலையம், 104 பிராட்வே, சென்னை, 2007.

[10]. *நல்வழி*. அவ்வையார் புக்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 2005.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
**DOI: https://doi.org/10.63300/tm11sp032026**

# 80.சுற்றுச்சூழல் பாதுகாப்பும் நில மாசுபாட்டுத் தடுப்பும்

**சு.முத்துமாணிக்கம்,**
சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தலைவர்.

**சுருக்கம் (Abstract)**

சுற்றுச்சூழல் என்பது மனிதர்கள் மட்டுமின்றி அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்குத் தேவையான இயற்கை மற்றும் செயற்கைக் கூறுகளின் ஒருங்கிணைந்த அமைப்பாகும். காற்று, நீர், நிலம், தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிரிகள் உள்ளிட்ட உயிரியல் மற்றும் உயிரற்ற கூறுகள் ஒன்றோடொன்று தொடர்புடையவையாக இயங்குகின்றன. மனிதனின் நவீன வாழ்க்கைமுறை, நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல், இயற்கை வளங்களின் அளவுக்கு மீறிய பயன்பாடு ஆகியவற்றின் காரணமாக சுற்றுச்சூழல் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகிறது. காற்று மாசுபாடு, நீர் மாசுபாடு, நில மாசுபாடு, பிளாஸ்டிக் கழிவுகள், காடழிப்பு, புவி வெப்பமயமாதல், பருவநிலை மாற்றம், நிலத்தடி நீர்மட்டக் குறைவு போன்றவை மனித வாழ்வுக்கும் உயிரினங்களின் சமநிலைக்கும் பெரும் அச்சுறுத்தல்களாக உள்ளன.

நில மாசுபாடு என்பது உணவுப் பாதுகாப்பு, மனித உடல்நலம், வேளாண்மை மற்றும் பல்லுயிர் பெருக்கம் ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்புடைய முக்கியமான சுற்றுச்சூழல் பிரச்சினையாகும். வேளாண்மையில் அளவுக்கு மீறிய வேதியியல் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு, தொழிற்சாலைக் கழிவுகள், வீட்டுக் கழிவுகள், நெகிழிக் கழிவுகள், மின்னணுக் கழிவுகள், சுரங்க நடவடிக்கைகள் போன்றவை நிலத்தின் இயற்கைத் தன்மையைப் பாதிக்கின்றன. இக்கட்டுரை சுற்றுச்சூழலின் அடிப்படைத் தன்மைகள், தற்போதைய சுற்றுச்சூழல் சவால்கள், நில மாசுபாட்டிற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள், அதனைத் தடுக்கும் வழிமுறைகள் ஆகியவற்றை ஆராய்கிறது. மேலும், நிலம் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் தனிமனிதர், கல்வி நிறுவனங்கள், அரசு மற்றும் சமூக அமைப்புகளின் பங்களிப்பையும் எடுத்துரைக்கிறது.

It is an integrated system comprising the natural and artificial elements necessary for the survival of living organisms. Biological and non-biological components—including air, water, land, plants, animals, and microorganisms—function through their interrelationships. The environment faces various challenges due to modern human lifestyles, urbanization, industrialization, and the excessive consumption of natural resources. Issues such as air, water, and land pollution, plastic waste, deforestation, global warming, climate change, and the depletion of groundwater levels pose significant threats to human life and the ecological balance.

Land pollution is a critical environmental issue directly linked to food security, human health, agriculture, and biodiversity. Factors such as the excessive use of chemical fertilizers and pesticides in agriculture, industrial effluents, household waste, plastic waste, electronic waste, and mining activities compromise the natural integrity of the land. This article examines the

fundamental characteristics of the environment, current environmental challenges, the causes and consequences of land pollution, and methods to prevent it. Furthermore, it highlights the roles played by individuals, educational institutions, the government, and social organizations in conserving land and natural resources.

**திறவுச்சொற்கள்:**சுற்றுச்சூழல் Environment, 2. **சூழலியல் - Ecology** 3.நில மாசுபாடு, Ecology,

முன்னுரை

மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான காற்று, நீர், உணவு, நிலம் ஆகிய அனைத்தும் சுற்றுச்சூழலோடு நெருங்கிய தொடர்புடையவை. மனிதன் இயற்கையிலிருந்து பிரிந்து வாழ முடியாது. அவனுடைய வாழ்வாதாரம் இயற்கை வளங்களின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. காடுகள், ஆறுகள், கடல்கள், மலைகள், மண், தாவரங்கள், விலங்குகள் என இயற்கையின் ஒவ்வொரு கூறும் மனித வாழ்க்கைக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பயனளிக்கின்றன.

சுற்றுச்சூழல் என்பது நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்துக் கூறுகளின் கூட்டு அமைப்பாகும். மனிதர்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள், நுண்ணுயிரிகள் போன்றவை உயிருள்ள கூறுகளாகவும், நிலம், நீர், காற்று, சூரிய ஒளி, வெப்பநிலை, தாதுக்கள் போன்றவை உயிரற்ற கூறுகளாகவும் விளங்குகின்றன. இக்கூறுகள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குகின்றன.

“இயற்கையை மனிதன் வெல்ல வேண்டும்” என்ற எண்ணத்தைவிட “இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும்” என்ற சிந்தனையே இன்றைய காலகட்டத்தில் அவசியமாகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும் மனித வாழ்க்கையை எளிதாக்கியுள்ளன. அதேவேளையில், அவற்றின் கட்டுப்பாடற்ற பயன்பாடு இயற்கை வளங்களின் சீரழிவிற்கும் சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கும் காரணமாகியுள்ளது.

**சுற்றுச்சூழலின் கூறுகள்**

சுற்றுச்சூழலைப் பொதுவாக இயற்கைக் கூறுகள் மற்றும் செயற்கைக் கூறுகள் என இரு பெரும் பிரிவுகளாகப் பார்க்கலாம்.

**உயிருள்ள கூறுகள்**

மனிதர்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் மற்றும் நுண்ணுயிரிகள் ஆகியவை உயிருள்ள கூறுகளாகும். இவை ஒன்றோடொன்று உணவுச் சங்கிலி மற்றும் சூழலியல் தொடர்புகளின் மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

**2.2 உயிரற்ற கூறுகள்**

நிலம், நீர், காற்று, சூரிய ஒளி, வெப்பநிலை, ஈரப்பதம், கனிமங்கள் மற்றும் தாதுக்கள் போன்றவை உயிரற்ற கூறுகளாகும். உயிரினங்கள் வாழ்வதற்குத் தேவையான அடிப்படைச் சூழலை இவை வழங்குகின்றன.

**செயற்கைக் கூறுகள்**

மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், தொழிற்சாலைகள், அணைகள், நகர அமைப்புகள் மற்றும் பல்வேறு கலாச்சார அமைப்புகள் செயற்கைக் கூறுகளாகும். இவை மனித வாழ்க்கையை மேம்படுத்தினாலும், முறையற்ற திட்டமிடல் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

---

**சுற்றுச்சூழலின் நான்கு முக்கிய மண்டலங்கள்**

**வளிமண்டலம்**

பூமியைச் சுற்றியுள்ள காற்று மண்டலம் வளிமண்டலம் எனப்படுகிறது. ஆக்சிஜன், நைட்ரஜன், கார்பன் டை ஆக்சைடு உள்ளிட்ட பல்வேறு வாயுக்கள் இதில் காணப்படுகின்றன. உயிரினங்களின் சுவாசத்திற்கும் பூமியின் வெப்பநிலைச் சமநிலைக்கும் வளிமண்டலம் முக்கியமானதாகும்.

**நீர்க்கோளம்**

கடல்கள், ஆறுகள், ஏரிகள், குளங்கள், பனிப்பாறைகள் மற்றும் நிலத்தடி நீர் உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளும் நீர்க்கோளத்தின் பகுதிகளாகும். உயிரினங்களின் வாழ்வுக்கும் வேளாண்மைக்கும் தொழில்துறைக்கும் நீர் இன்றியமையாத வளமாகும்.

**3.3 நிலக்கோளம்**

பூமியின் பாறைகள், மண் மற்றும் நிலப்பரப்புகள் நிலக்கோளமாகக் கருதப்படுகின்றன. தாவர வளர்ச்சிக்கும் வேளாண்மைக்கும் மனிதக் குடியிருப்புகளுக்கும் நிலம் அடிப்படையாக விளங்குகிறது.

**உயிர்க்கோளம்**

பூமியில் உயிரினங்கள் வாழக்கூடிய பகுதிகள் அனைத்தும் உயிர்க்கோளம் எனப்படும். வளிமண்டலம், நீர்க்கோளம் மற்றும் நிலக்கோளம் ஆகியவற்றுடன் உயிர்க்கோளம் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது.

**சுற்றுச்சூழலின் முக்கியத்துவம்**

சுற்றுச்சூழல் மனிதனுக்கு வாழ்வதற்குத் தேவையான அடிப்படை ஆதாரங்களை வழங்குகிறது. சுவாசிக்கக் காற்று, குடிக்க நீர், உணவுக்குத் தேவையான தாவரங்கள் மற்றும் விலங்குகள், குடியிருப்பதற்கான நிலம் ஆகிய அனைத்தும் இயற்கையிலிருந்து கிடைக்கின்றன.

சுற்றுச்சூழல் காலநிலைச் சமநிலையையும் பராமரிக்கிறது. மழைப்பொழிவு, வெப்பநிலை, காற்றின் இயக்கம் போன்ற இயற்கை நிகழ்வுகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. காடுகள் மற்றும் நீர்நிலைகள் இயற்கையின் சமநிலையைப் பேணுவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

வேளாண்மை, மீன்பிடித்தல், வனவளம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலா மற்றும் பல தொழில்கள் இயற்கை வளங்களைச் சார்ந்துள்ளன. எனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது இயற்கையை மட்டும் பாதுகாப்பது அல்ல; மனிதனின் பொருளாதார வாழ்க்கையையும் பாதுகாப்பதாகும்.

**தற்போதைய சுற்றுச்சூழல் சவால்கள்**

**பருவநிலை மாற்றம்**

பசுமை இல்ல வாயுக்களின் அதிகரிப்பு காரணமாக உலகளாவிய வெப்பநிலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக மழைப்பொழிவு முறைகளில் மாற்றம், அதிக வெப்பநிலை, கடல் மட்ட உயர்வு மற்றும் பல்வேறு இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

**காற்று மாசுபாடு**

வாகனங்களிலிருந்து வெளிவரும் புகை, தொழிற்சாலை உமிழ்வுகள், கட்டுமானப் பணிகளில் உருவாகும் தூசி மற்றும் கழிவுகளை எரிப்பது போன்றவை காற்று மாசுபாட்டிற்கு காரணமாகின்றன. தூய்மையான காற்றைப் பாதுகாப்பது மனித உடல்நலத்திற்கும் உயிரினங்களின் வாழ்விற்கும் இன்றியமையாததாகும்

**நீர் மாசுபாடு**

தொழிற்சாலைக் கழிவுகள், கழிவுநீர், வேளாண்மையில் பயன்படுத்தப்படும் வேதிப்பொருள்கள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் நீர்நிலைகளில் கலப்பதால் நீர் மாசுபடுகிறது. இதனால் குடிநீர் வளமும் நீர்வாழ் உயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன.

**பிளாஸ்டிக் கழிவுகள்**

மட்காத நெகிழிப் பொருள்கள் நிலத்திலும் நீர்நிலைகளிலும் நீண்டகாலம் தேங்கி சுற்றுச்சூழலைப் பாதிக்கின்றன. ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள்களின் பயன்பாட்டைக் குறைப்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கியமான நடவடிக்கையாகும்.

**5.5 காடழிப்பு**

நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் கட்டுமான நடவடிக்கைகளுக்காகக் காடுகள் அழிக்கப்படுகின்றன. காடழிப்பு காரணமாக பல்லுயிர் பெருக்கம் பாதிக்கப்படுவதோடு மண் அரிப்பு மற்றும் நீர்ச் சுழற்சியிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**நில மாசுபாடு**

நீரும் காற்றும் மாசுபடுவது போன்று நிலமும் பல்வேறு நச்சுப் பொருள்களால் மாசுபடுகிறது. இயற்கையின் முக்கிய வளமான மண், தாவரங்களின் வளர்ச்சிக்கும் உணவு உற்பத்திக்கும் அடிப்படையாக விளங்குகிறது. எனவே நிலத்தின் தரம் குறைவது மனித சமுதாயத்தின் உணவுப் பாதுகாப்பையும் நேரடியாகப் பாதிக்கக்கூடும்.

வயல்களில் அளவுக்கு அதிகமாக வேதியியல் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துதல், தொழிற்சாலைக் கழிவுகளை முறையாக அகற்றாமல் நிலத்தில் கொட்டுதல், வீட்டுக் கழிவுகள், பிளாஸ்டிக் பொருள்கள், மின்னணுக் கழிவுகள், சுரங்கத் தொழில் மற்றும் கட்டுமானக் கழிவுகள் ஆகியவை நில மாசுபாட்டிற்கான முக்கிய காரணங்களாகும்.

**நில மாசுபாட்டிற்கான காரணங்கள்**

**வேளாண் வேதிப்பொருள்கள்**

அதிக மகசூலைப் பெறும் நோக்கில் பூச்சிக்கொல்லிகள் மற்றும் வேதியியல் உரங்களை அளவுக்கு மீறிப் பயன்படுத்துவது மண்ணின் இயற்கைத் தன்மையைப் பாதிக்கலாம். மண்ணில் வாழும் பயனுள்ள நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையும் பாதிக்கப்படக்கூடும்.

**தொழிற்சாலைக் கழிவுகள்**

தொழிற்சாலைகளிலிருந்து உருவாகும் சில வேதிப்பொருள் கழிவுகள் முறையாகச் சுத்திகரிக்கப்படாமல் நிலத்தில் சேர்க்கப்படும்போது மண் மாசுபடுகிறது. இத்தகைய கழிவுகள் மண்ணின் தன்மையையும் நிலத்தடி நீரையும் பாதிக்கக்கூடும்.

**பிளாஸ்டிக் கழிவுகள்**

பிளாஸ்டிக் பொருள்கள் எளிதில் மட்காததால் அவை நீண்ட காலம் நிலத்தில் தேங்கி நிற்கின்றன. இதனால் மண்ணின் இயற்கையான பண்புகள் பாதிக்கப்படுகின்றன.

**மின்னணுக் கழிவுகள்**

பயன்படுத்தப்படாத கைப்பேசிகள், கணினிகள், மின்கலன்கள் மற்றும் பிற மின்னணு சாதனங்களை முறையற்ற முறையில் அகற்றுவது நிலத்திற்கும் நீருக்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய பொருள்களைச் சூழலில் சேர்க்கக்கூடும்.

**சுரங்கத் தொழில்**

சுரங்க நடவடிக்கைகளின்போது நிலம் தோண்டப்படுவதால் நில அமைப்பு மாறுகிறது. கனிமங்களைப் பிரித்தெடுக்கும் செயல்முறையில் உருவாகும் கழிவுகள் சுற்றுச்சூழலைப் பாதிக்கக்கூடும்.

**நில மாசுபாட்டின் விளைவுகள்**

நில மாசுபாடு மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் மற்றும் நுண்ணுயிரிகள் என அனைத்து உயிரினங்களையும் பாதிக்கக்கூடியது. மண்ணின் வளம் குறைவதால் வேளாண் உற்பத்தியும் பாதிக்கப்படலாம்.

மழை பெய்யும்போது நிலத்தில் உள்ள சில மாசுக்கள் மழைநீருடன் கலந்து நீர்நிலைகளுக்குச் செல்லலாம். இதன் மூலம் நீர் மாசுபாடும் ஏற்படக்கூடும். மண்ணில் உள்ள சில நச்சுப்பொருள்கள் தாவரங்களால் உறிஞ்சப்படலாம். அவை உணவுச் சங்கிலியின் வழியாக பிற உயிரினங்களையும் பாதிக்கக்கூடும்.

நில மாசுபாட்டின் மற்றொரு முக்கிய விளைவு பல்லுயிர் இழப்பாகும். மண்ணில் வாழும் நுண்ணுயிரிகள், புழுக்கள் மற்றும் பிற உயிரினங்கள் மண்ணின் வளத்தைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன. அவற்றின் வாழ்விடங்கள் பாதிக்கப்படும்போது மண்ணின் இயற்கைச் சுழற்சியும் பாதிக்கப்படலாம்.

**நில மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகள்**

**கழிவு உருவாக்கத்தைக் குறைத்தல்**

“குறைத்தல் – மீண்டும் பயன்படுத்துதல் – மறுசுழற்சி செய்தல்” என்ற மூன்று அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். தேவையற்ற பொருள்களை வாங்குவதைத் தவிர்ப்பதன் மூலம் கழிவு உருவாக்கத்தைக் குறைக்கலாம்.

**கழிவுகளைத் தரம் பிரித்தல்**

வீட்டிலேயே மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் எனக் கழிவுகளைப் பிரித்து சேகரிக்க வேண்டும். இதன் மூலம் உரம் தயாரிப்பதையும் மறுசுழற்சியையும் எளிதாக்கலாம்.

**இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல்**

வேளாண்மையில் இயற்கை உரங்கள், பசுந்தாள் உரம், மண்புழு உரம் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த முறைகளை ஊக்குவிக்க வேண்டும். வேதியியல் உள்ளீடுகளை அறிவியல் அடிப்படையில் தேவைக்கேற்ப மட்டுப்படுத்த வேண்டும்.

**பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல்**

ஒருமுறை பயன்படுத்தப்படும் நெகிழிப் பொருள்களுக்கு மாற்றாக மீண்டும் பயன்படுத்தக்கூடிய துணிப்பைகள் மற்றும் பிற சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களைப் பயன்படுத்த வேண்டும்.

**மின்னணுக் கழிவுகளை முறையாக அகற்றுதல்**

மின்னணுக் கழிவுகளைப் பொதுக் குப்பைகளுடன் கலக்காமல், அங்கீகரிக்கப்பட்ட சேகரிப்பு மற்றும் மறுசுழற்சி மையங்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

**மரம் நடுதல்**

மரங்கள் மண் அரிப்பைக் குறைக்கவும் உயிரினங்களுக்கு வாழிடங்களை வழங்கவும் உதவுகின்றன. எனவே உள்ளூர் சூழலுக்கு ஏற்ற மரங்களை நட்டு வளர்ப்பது அவசியம்.

---

**சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கல்வியின் பங்கு**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடம் உருவாக்குவது கல்வி நிறுவனங்களின் முக்கியப் பொறுப்பாகும். பாடத்திட்டங்களோடு மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல் மன்றங்கள், மரக்கன்றுகள் நடுதல், தூய்மை இயக்கங்கள், கழிவு மேலாண்மை விழிப்புணர்வு, நீர் சேமிப்பு இயக்கங்கள் போன்ற செயல்பாடுகள் மூலம் மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

“சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பு மட்டுமே” என்ற எண்ணத்தை மாற்றி, ஒவ்வொரு தனிமனிதரும் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்ற விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

கல்லூரி மாணவர்கள் தங்கள் சுற்றுப்புறத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு, உள்ளூர் பிரச்சினைகளுக்கான நடைமுறைத் தீர்வுகளை முன்வைக்கலாம். இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒரு பாடப்பொருளாக மட்டுமல்லாமல் வாழ்க்கை முறையாகவும் மாறும்.

**நிலையான வளர்ச்சியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்**

பொருளாதார வளர்ச்சியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல. இயற்கை வளங்களைப் பாதுகாத்தபடி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதே நிலையான வளர்ச்சியின் அடிப்படையாகும்.

இன்றைய தலைமுறை இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்திவிட்டால், எதிர்கால தலைமுறைக்கு அவை கிடைக்காமல் போகும். எனவே இயற்கை வளங்களைச் சிக்கனமாகவும் பொறுப்புடனும் பயன்படுத்துவது அவசியம்.

நீர் சேமிப்பு, மின்சாரச் சிக்கனம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடு, இயற்கை வேளாண்மை, கழிவு மேலாண்மை, மரம் வளர்ப்பு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவை நிலையான வளர்ச்சிக்கான முக்கிய நடவடிக்கைகளாகும்.

## முடிவுரை (Conclusion)

சுற்றுச்சூழல் என்பது மனிதனின் வாழ்விடமாக மட்டுமல்லாமல் அனைத்து உயிரினங்களின் வாழ்வாதாரமாகவும் விளங்குகிறது. காற்று, நீர், நிலம், தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள் ஆகிய அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. ஒரு கூறில் ஏற்படும் பாதிப்பு மற்ற கூறுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தற்போதைய உலகில் சுற்றுச்சூழல் எதிர்கொள்ளும் சவால்களில் நில மாசுபாடு முக்கியமான ஒன்றாகும். வேளாண் வேதிப்பொருள்களின் அளவுக்கு மீறிய பயன்பாடு, தொழிற்சாலைக் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள், மின்னணுக் கழிவுகள் மற்றும் முறையற்ற கழிவு மேலாண்மை ஆகியவை நிலத்தின் இயற்கைத் தன்மையைப் பாதிக்கின்றன. இதன் தாக்கம் உணவுப் பாதுகாப்பு, நீர்வளம், பல்லுயிர் மற்றும் மனித வாழ்விலும் வெளிப்படுகிறது.

எனவே "இயற்கையைப் பயன்படுத்துவது" என்ற நிலையிலிருந்து "இயற்கையைப் பாதுகாத்துப் பயன்படுத்துவது" என்ற நிலைக்கு மனித சமூகம் நகர வேண்டும். கழிவுகளைக் குறைத்தல், மறுசுழற்சி செய்தல், இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், மரங்களை வளர்த்தல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மையை ஊக்குவித்தல் ஆகியவை நடைமுறைக்கு வர வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது ஒருவரின் அல்லது ஒரு நிறுவனத்தின் பொறுப்பு மட்டுமல்ல. அது ஒவ்வொரு மனிதனின் சமூகப் பொறுப்பாகும். இன்று நாம் பாதுகாக்கும் நிலமும் நீரும் காடுகளும் காற்றும் நாளைய தலைமுறையின் வாழ்வாதாரமாக அமையும். ஆகவே, **"இயற்கையைப் பாதுகாப்போம்; வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவோம்; எதிர்கால தலைமுறைக்கு வளமான பூமியை விட்டுச் செல்வோம்"** என்ற எண்ணத்துடன் செயல்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

## அடிக்குறிப்புகள் (Footnotes)

1. சுற்றுச்சூழல் என்பது உயிரியல் மற்றும் உயிரற்ற கூறுகள் ஒன்றோடொன்று தொடர்புகொண்டு இயங்கும் ஒருங்கிணைந்த அமைப்பாகும்.
2. உயிருள்ள கூறுகள் – மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் மற்றும் நுண்ணுயிரிகள்.
3. உயிரற்ற கூறுகள் – காற்று, நீர், நிலம், சூரிய ஒளி, வெப்பநிலை மற்றும் கனிமங்கள்.
4. வளிமண்டலம், நீர்க்கோளம், நிலக்கோளம், உயிர்க்கோளம் ஆகியவை சுற்றுச்சூழலின் அடிப்படை மண்டலங்களாகக் கருதப்படுகின்றன.
5. நில மாசுபாடு என்பது மண்ணின் இயற்கைத் தன்மையைப் பாதிக்கும் தேவையற்ற அல்லது நச்சுப் பொருள்களின் சேர்க்கையாகும்.

6. கழிவுகளை மூலத்திலேயே தரம் பிரிப்பது மறுசுழற்சி மற்றும் கழிவு மேலாண்மையை மேம்படுத்துகிறது.
7. நிலையான வளர்ச்சி என்பது எதிர்கால தலைமுறையின் தேவைகளைப் பாதிக்காமல் தற்போதைய தலைமுறையின் தேவைகளை நிறைவேற்றும் வளர்ச்சி அணுகுமுறையாகும்.

**மேற்கோள் நூல்கள் / References**

[1]. சு. முத்துமாணிக்கம், **சுற்றுச்சூழல் தொடர்பான கருத்துரைகள் மற்றும் கட்டுரைகள்**, சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகச் செயல்பாடுகள்.

[2]. தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை, **சுற்றுச்சூழல் கல்வி**, தமிழ்நாடு அரசு வெளியீடு.

[3]. தமிழ்நாடு அரசு, **சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான அறிக்கைகள்**, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை.

[4]. United Nations Environment Programme (UNEP), **Global Environment Outlook**, United Nations.

[5]. United Nations, **Sustainable Development Goals: 2030 Agenda**, United Nations Publications.

[6]. World Health Organization, **Environment, Climate Change and Health**, World Health Organization.

[7]. Odum, E. P., **Fundamentals of Ecology**, W. B. Saunders Company.

[8]. Cunningham, W. P. & Cunningham, M. A., **Environmental Science: A Global Concern**, McGraw-Hill.

[9]. Carson, Rachel, **Silent Spring**, Houghton Mifflin.

[10]. Miller, G. Tyler & Spoolman, Scott, **Environmental Science**, Cengage Learning.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 11 No. 03 (2026): Special Issue Aug 2026, ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11sp032026

# 81.சங்க இலக்கியங்களில் இயற்கை பதிவுகளும் தற்காலச் சூழலியல் சிக்கல்களும்

**முனைவர் த.ராஜ்குமார்,**

இணைப்பேராசிரியர் & தலைவர், தமிழ் இலக்கியத்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

**ஆய்வுச்சுருக்கம்**

பழந்தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கை முறை இயற்கையைக் கொள்ளையிடும் துய்ப்புப் பண்பாடாக இல்லாமல், இயற்கையோடு இயைந்து வாழும் திணை சார்ந்த வாழ்வியலாக அமைந்திருந்தது. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் நிலம், பொழுது, கருப்பொருள் என்ற சமுதாயச் சூழலியல் கட்டமைப்பின் வழியே பல்லுயிர்ப் பெருக்கம், நீர் மேலாண்மை, பருவக்காலக் கணிப்பு மற்றும் தாவரவியலை மிக நுட்பமாகப் பதிவுசெய்துள்ளன. இக்கட்டுரை, சங்க இலக்கியப் பாடல்களில் வெளிப்படும் சூழலியல் பதிவுகளையும், அவற்றுக்கும் தற்காலத்தில் உலகம் எதிர்கொள்ளும் நிலவெப்பமயமாதல், காடழிப்பு, நீர் நெருக்கடி மற்றும் எல் நினோ (El Niño) விளைவுகளால் நிகழும் கடும் பருவநிலை மாற்றங்களுக்குமான ஒப்பீட்டுப் பார்வையையும் முன்வைக்கிறது.

புன்னையைத் தங்கையாகக் கருதிய நற்றிணையின் குடும்பச் சூழலியல், காடுகளைப் பாதுகாத்த புறநானூற்றின் அறம், மற்றும் நீர் நிலைகளைப் பேணிய மருதநில மேலாண்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு நகர்கிறது. எல் நினோ போன்ற உலகளாவிய கடல்வெப்ப மாற்றங்களால் பருவமழை பொய்த்து வறட்சியும், காலமற்ற பெருமழையும் மாறி மாறி ஏற்படும் இக்காலத்தில், சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ள பருவக் காலக் கணிப்புகளும் இயற்கை தழுவிய வாழ்வியலும் எந்தளவுக்கு இன்றியமையாதவை என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது. தற்காலத்தின் இயற்கை ஆதிக்க வாழ்வியலும் பழந்தமிழரின் திணை வாழ்வியலும் நேருக்கு நேர் மோதும் புள்ளியைக் கண்டறிந்து, நவீன சூழலியல் பேரழிவுகளுக்குச் சங்க இலக்கியங்கள் வழங்கும் காலமற்ற தீர்வுகளையும் விழிப்புணர்வையும் வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் முதன்மைக் குறிக்கோளாகும்.

**திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம், சுற்றுச்சூழல், திணை வாழ்வியல், நிலவெப்பமயமாதல், எல் நினோ பருவநிலை மாற்றம், பல்லுயிர்ப் பெருக்கம், சூழலியல் அறம்.

**திணைச் சூழலியல்**

பழந்தமிழர் வாழ்வியல் இயல்பாகவே புவிமையக் (Eco-centric) கட்டமைப்பைக் கொண்டிருந்தது. தொல்காப்பியம் வகுத்த அகத்திணை மற்றும் புறத்திணைக் கோட்பாடுகள் மனித உணர்வுகளையும் சமூக நடவடிக்கைகளையும் வெறும் தனிமனிதச் செயல்பாடுகளாகப்

பார்க்காமல், அவற்றை நிலமும் பொழுதும் அடங்கிய முதற்பொருள், இயற்கைப் பொருட்களான கருப்பொருள், மற்றும் மனித உணர்வுகளான உரிப்பொருள் ஆகியவற்றின் தடையற்ற பிணைப்பாகவே வரையறுத்தன.

நவீன சூழலியல் விமர்சனத்தில் (Ecocriticism) இந்தியத் தளத்தில் முன்னோடியாகத் திகழும் முனைவர் நிர்மல் செல்வமணி, சங்க இலக்கியத்தின் திணைக் கோட்பாட்டை மேலைநாட்டுக் சூழலியல் கருத்துருக்களுடன் ஒப்பிட்டு 'வளர்முகத் திணைக் கோட்பாடு' (Neo-tiNai poetics) மற்றும் 'சூழல் மனைப் பொருளியல்' (Oikopoetics) என்னும் கோட்பாட்டுச் சிந்தனைகளை உருவாக்கினார்[3]. கிரேக்க மொழியின் 'ஓய்கோஸ்' (Oikos - இல்லம்/இயற்கை மனை) மற்றும் 'கிரிடிஸ்' (Kritis - நடுவர்/மதிப்பீட்டாளர்) என்பதில் இருந்து உருவான சூழலியல் கருத்துருவுக்கு இணையான அமைப்பாகத் தமிழ் இலக்கியத்தின் 'திணை' விளங்குகிறது[4].

திணை என்பது வெறும் புவியியல் எல்லை அல்லது நிலப்பரப்பு (Geographical biome) மட்டுமல்ல; அது மனிதன், பிற உயிரினங்கள், சுற்றுச்சூழல் மற்றும் ஆன்மீகச் சிந்தனைகள் அனைத்தும் ஒருங்கிணைந்த முழுமையான சூழல் வாழ்விடத்தைக் (Integrative Oikos) குறிக்கிறது[4]. பழந்தமிழர்கள் நிலத்தை ஐந்து சூழலியல் மண்டலங்களாகப் பிரித்து, அந்தந்த மண்டலத்தின் தாங்கு திறனுக்கு (Carrying Capacity) ஏற்பவே தங்கள் பொருளியல் மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டனர்[4].

| **திணை** | **இயற்கை நில அமைப்பு (Biome)** | **முதன்மைப் பருவம் / பொழுது** | **கருப்பொருள் சூழலியல் கூறுகள்** | **உரிப்பொருள் உணர்வு நிலை** |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலை சார்ந்த இடம் | கூதிர், முன்பனி / நள்ளிரவு | வேங்கை, குறிஞ்சிப் பூ, யானை, மயில், அருவி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடு சார்ந்த இடம் | கார் காலம் / மாலை | முல்லை, கொன்றை, மான், முயல், காட்டாறு | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |

| | | | | |
|---|---|---|---|---|
| மருதம் | வயல் சார்ந்த இடம் | ஆறு சிறு பொழுதுகள் / வைகறை | தாமரை, குவளை, எருமை, நாரை, பொய்கை | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடல் சார்ந்த இடம் | ஏனைய பொழுதுகள் / எற்பாடு | புன்னை, தாழை, சுறா, நாரை, உப்பங்கழி | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | சுரம் சார்ந்த இடமும் | வேனில், பின்பனி / நண்பகல் | பாலை, கள்ளி, செந்நாய், கழுகு, வறண்ட கிணறு | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

**சங்க இலக்கியத்தில் பல்லுயிர்ப் பெருக்கமும் குடும்பச் சூழலியலும்**

சங்க இலக்கியங்கள் தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் மனித குடும்ப அமைப்பில் சமமான இடமளித்த குடும்பச் சூழலியலை (Domestic Ecology) வெளிப்படுத்துகின்றன· நற்றிணையில், ஒரு தலைவி தான் விளையாட்டாக மணலில் புதைத்த புன்னை வித்து முளைத்து மரமாக வளர்ந்ததையும், அதைத் தன் தாயார் பாதுகாப்புடன் வளர்த்ததையும் குறிப்பிடுகிறாள்.

"நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே"
— (நற்றிணை: 172)[1]

தன் தாயார் அப்போதைய புன்னை மரத்தைச் சுட்டிக்காட்டி, "இது உன்னை விட மூத்தவள்; உனக்குத் தங்கை முறை வேண்டும்" என்று கூறியதாகப் பதிவுசெய்கிறாள். மனிதன் அல்லாத பிற உயிரினங்களை (Non-human entities) உறவுமுறையாக ஏற்றுக்கொண்ட இந்த மனநிலை, ஆழ்ந்த சூழலியல் (Deep Ecology) பேசும் உயிர்மயச் சமத்துவத்தின் (Biocentric Equality) உச்சநிலையாகும்[5].

புறநானூற்றில் காடுகளைப் பாதுகாப்பதும், மரங்களை வெட்டாமல் இருப்பதும் அரச அறமாகவே கருதப்படுகிறது. மன்னர்கள் போரிடும் காலத்தில் கூட எதிரி நாட்டின் விளைநிலங்களையும், காவல் காடுகளையும் (Sacred Groves) அழிப்பது பெரும் பாதகமாகக் கருதப்பட்டது. தாவரங்களின் பூக்கும் காலங்கள், பறவைகளின் வலசை போதல், மற்றும் விலங்குகளின் இனப்பெருக்க சுழற்சிகளைப் பழந்தமிழர்கள் துல்லியமாகக் கணித்து வைத்திருந்தனர். ஐங்குறுநூறு மற்றும் பத்துப்பாட்டு நூல்களில் காணப்படும் தாவரவியல் பதிவுகள், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியின் பல்லுயிர்ப் பெருக்கச் சமநிலையைச் (Biodiversity Balance) சுட்டிக்காட்டுகின்றன. மரங்களும் தாவரங்களும் வெறும் அழகியல் சார்ந்த

வர்ணனைகள் அல்ல; அவை அந்தந்தத் திணையின் நுண் சூழலியலைக் (Micro-climate) காக்கும் முதன்மைப் பொருளாக இயங்கின[7].

**பழந்தமிழரின் மரபார்ந்த நீர் மேலாண்மையும நீரியல் தொழில்நுட்பமும்**

பழந்தமிழகத்தில் நீர் மேலாண்மை என்பது வெறும் பொறியியல் சார்ந்தது மட்டுமல்லாமல், சமூக மற்றும் அறவியலின் ஒரு பகுதியாகத் திகழ்ந்தது. புறநானூற்றில் குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தும் பாடல், நீரின் இன்றியமையாமையையும் நீர்நிலைகளை உருவாக்குவதன் அரசியல் கட்டாயத்தையும் விளக்குகிறது.

"நிலன்நெளி மருங்கில் நீர் நிலை பெருகத்
தட்டோரம்ம இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே"
— (புறநானூறு: 18)[9]

நிலம் குழிந்த இடங்களிலெல்லாம் நீர்நிலைகளைப் பெருக்கிய மன்னர்களே இவ்வுலகில் நிலைத்து நிற்கும் புகழைப் பெறுவர் என்ற இக்கூற்று, ஆளும் வர்க்கத்தின் முதன்மைப் பணி நீர் மேலாண்மையே என்பதை உணர்த்துகிறது[8]. பதினெண்கீழ்கணக்கு நூலான சிறுபஞ்சமூலம், ஒரு மனிதன் செய்ய வேண்டிய ஐந்து புண்ணிய மற்றும் சமூகச் செயல்பாடுகளாக நீர்நிலைப் பராமரிப்பைக் குறிப்பிடுகிறது.

"குளம் தொட்டு, கோடு பதித்து, வழி சீத்து,
உளம் தொட்டு, உழு வயல் ஆக்கி, வளம்தொட்டுப்
பாகுபடும் கிணற்றோடு என்று இவை பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கம் இனிது"
— (சிறுபஞ்சமூலம்: 64)[10]

குளம் வெட்டுதல், ஏரிக் கரைகளைப் பலப்படுத்துதல், நீரொழுக்கு வழிகளைச் சீரமைத்தல், வயல்களைப் பண்படுத்துதல், மற்றும் சுனை அல்லது கிணறுகளைத் தோண்டுதல் ஆகியவை நிலத்தடி நீர் மட்டத்தைப் பாதுகாக்கும் கட்டமைப்புகளாக அமைந்தன.

**கல்லணையின் பாறை மற்றும் களிமண் பூச்சுத் தொழில்நுட்பம்**

கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் சோழ மன்னன் கரிகாலனால் காவிரியின் குறுக்கே கட்டப்பட்ட கல்லணை, உலகின் மிகப்பழமையான மற்றும் இன்றும் பயன்பாட்டில் உள்ள நீரியல் கட்டுமானங்களில் ஒன்றாகும்[12]. ஆழமான மணற்பாங்கான ஆற்றுப்படுகையில் அடித்தளம் அமைப்பதற்குப் பழந்தமிழர்கள் ஒரு தனித்துவமான இயற்பியல் நுட்பத்தைப் பயன்படுத்தினர்[12].

காவிரியின் படுகையில் மிகப்பெரிய பாறைகளைக் கொண்டுவந்து போட்டனர்[15]. நீரின் ஓட்டத்தினாலும் எடையினாலும் பாறையின் அடியிலுள்ள மணல் அரித்துச் செல்லப்பட்டு, அப்பாறைகள் மெதுவாக மணலுக்குள் புதைந்தன[15]. அவற்றின் மேல் ஒரு குறிப்பிட்ட வகையான ஒட்டும் களிமண் பூச்சை பூசி, அதன் மேல் மீண்டும் பெரிய பாறைகளை அடுக்கி வைத்தனர்[15]. இந்த அடுக்கு பாறை-களிமண் பிணைப்பு, நீரினால் அடித்துச் செல்லப்படாமல் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக உறுதியோடு திகழ்கிறது[12].

| **நீரியல் உறுப்பு / கட்டுமானம்** | **தொழில்நுட்பச் செயல்பாடு** | **இலக்கியச் சான்றுகள் & வரலாற்றுப் பதிவுகள்** |
|---|---|---|
| கல்லணை (Grand Anicut) | 1080 அடி நீளமும் 40-60 அடி அகலமும் கொண்ட பெரும் அணை; வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்திப் பாசனத்திற்கு நீரைத் திருப்புகிறது[13]. | மலேபாடு செப்பேடு & காவிரிமிசைத் துயின்றோன் வழிக் குறிப்புகள்[14] |
| கலிங்கு / கலிங்கல் (Spillway/Weir) | ஏரி அல்லது கண்மாயில் நீர்மட்டம் அதிகப்படியாக உயரும் போது கரையை உடைக்காமல் மிகைநீரை வெளியேற்றும் பாறை கட்டுமானம்[9]. | சீவகசிந்தாமணி ("சேறு சிந்திக் கலிங்கு திறந்தவன்றோ")[11] |
| மதகு / தூம்பு (Sluice Gate) | ஏரியின் அடியில் இருந்து பயிர்களின் தேவைக்கேற்பச் சீரான முறையில் சிக்கனமாக நீரை வெளியேற்றும் மற்றும் அடைக்கும் சாதனம்[8]. | புறநானூறு & சிலப்பதிகாரம்[8] |
| ஏரிவாரியம் (Tank Committee) | நீர்நிலைகளைத் தூர்வாருதல், கரைகளைப் பராமரித்தல், பாசனப் பங்கீட்டை நிர்வகிக்கும் மரபார்ந்த உள்ளாட்சி அமைப்பு. | பல்லவ/சோழ கல்வெட்டுகள் (வைரமேகத் தடாகப் பராமரிப்பு) |

நீரியல் சமநிலையை விளக்கும் அறிவியல் சமன்பாடாக அமைவது:

$$P = ET + Q + \Delta S$$

இங்கு $P$ என்பது மழைப்பொழிவு (Precipitation), $ET$ என்பது ஆவியாதல் (Evapotranspiration), $Q$ என்பது மேற்பரப்பு நீர் ஓட்டம் (Runoff), மற்றும் $\Delta S$ என்பது நிலத்தடி நீர் சேமிப்பு மாற்றம் (Change in Storage) ஆகும். பழந்தமிழர்கள் மருதநிலக் கண்மாய்கள், ஏரிகள் மற்றும் சங்கிலித் தொடர் குளங்கள் வழியாக $Q$ என்னும் மேற்பரப்பு நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, $\Delta S$ எனும் நிலத்தடி நீர் சேமிப்பை அதிகப்படுத்தும் நுட்பத்தை இயல்பாகச் செயல்படுத்தினர்.

**தற்காலச் சூழலியல் நெருக்கடிகள்: நிலவெப்பமயமாதல், எல் நினோ மற்றும் பருவநிலைச் சீர்கேடுகள்**

நவீன உலகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய அச்சுறுத்தல் மனிதமைய ஊழியின் (Anthropocene) விளைவாக உருவாகியுள்ள நிலவெப்பமயமாதலும் (Global Warming) பருவநிலை மாற்றமுமாகும். தொழில்துறை வளர்ச்சி மற்றும் காடழிப்பு காரணமாக வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்கள் அதிகரித்து, உலகளாவிய கடல் மேற்பரப்பு வெப்பநிலையில் (Sea Surface Temperature - SST) பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன[2].

குறிப்பாக, பசிபிக் பெருங்கடலில் நிகழும் எல் நினோ - தெற்கு ஊசலாட்டம் (El Niño-Southern Oscillation - ENSO) மற்றும் இந்தியப் பெருங்கடல் இருமுனை (Indian Ocean Dipole - IOD) நிகழ்வுகள், தெற்காசியப் பருவமழை அமைப்பைப் பெருமளவில் சீர்குலைத்துள்ளன[3].

கடல் மேற்பரப்பு வெப்ப அலைவரிசை அதிகரிக்கும் போது,

$$\Delta T_{SST} > +0.5^{\circ}\mathrm{C}$$

என்ற அளவில் விலகல் ஏற்பட்டு, எல் நினோ ஆண்டாக உருவெடுக்கிறது[3]. இதன் தாக்கம் தமிழகத்தில் கீழ்க்காணும் சூழலியல் சீர்கேடுகளை ஏற்படுத்துகிறது.

எல் நினோ உருவாகும் ஆண்டுகளில் தென்மேற்குப் பருவமழை வழக்கமான அளவை விடக் குறைந்து, கடுமையான வறட்சி நிலவுகிறது. வறட்சியைத் தொடர்ந்து குறுகிய காலத்தில் பொழியும் காலமற்ற பெருமழை (Flash Floods), நகர்ப்புற வெள்ளப்பெருக்கையும் மண் அரிப்பையும் ஏற்படுத்துகிறது. பழந்தமிழர்கள் கார்காலம், கூதிர்காலம் எனத் துல்லியமாகக் கணித்துச் செய்த பயிர்ச் சுழற்சி முறை, நவீன தட்பவெப்ப மாறுபாடுகளால் நிலைகுலைந்துள்ளது.

| **சூழலியல் அளவீடு** | **சங்க காலத் திணை வாழ்வியல்** | **தற்கால நுகர்வுச் சமூக வாழ்வியல் (Anthropocene)** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| இயற்கையுடனான தொடர்பு | இயற்கை மைய வாழ்வியல் (Eco-centric); பல்லுயிர் ஒருங்கிணைப்பு[1] | மனித மைய வாழ்வியல் (Anthro-centric); இயற்கையைக் கொள்ளையிடும் துய்ப்புப் பண்பாடு[1] |
| நீர் மேலாண்மை | கலிங்கு, மதகு, ஏரிவாரியம் மூலம் மழைநீர் சேமிப்பு மற்றும் பங்கிடுதல்[8] | நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு, பிளாஸ்டிக் மாசுபாடு, நிலத்தடி நீர் சுரண்டல்[1] |
| வனப் பாதுகாப்பு | காடுகளைத் தெய்வமாகப் பேணுதல், காவல் காடுகள் அமைப்பு[1] | நகரமயமாக்கலுக்காகக் காடழிப்பு, பல்லுயிர்ப் பெருக்கம் அழிவு[1] |
| பருவநிலை விழிப்புணர்வு | கோள்கள், பறவைகள் வலசை மூலமாகப் பருவக் கணிப்பு[1] | எல் நினோ மற்றும் புவிவெப்பமயமாதலால் தீவிரமடையும் இயற்கை பேரழிவுகள்[1] |

**நவீன சூழலியல் பேரழிவுகளுக்குச் சங்க இலக்கியங்கள் வழங்கும் தீர்வுகளும் எதிர்காலப் பார்வையும்**

நவீன சூழலியல் பேரழிவுகளுக்குச் சங்க இலக்கியங்கள் வெறும் கவித்துவ வர்ணனைகளாக அல்லாமல், காலமற்ற நடைமுறைத் தீர்வுகளை முன்வைக்கின்றன. முனைவர் நிர்மல் செல்வமணி சுட்டிக்காட்டுவது போல, மனித குலம் 'ஆந்திரோபோசீன்' (Anthropocene) என்னும் மனிதமைய ஊழியில் இருந்து விலகி 'நியோ-திணைசீன்' (Neo-tiNaicene) என்னும் வளர்முகத் திணை யுகத்திற்கு நகர வேண்டியது இன்றியமையாததாகும்[15].

திணை சார்ந்த மண்டலத் திட்டமிடல் (Biomic Regional Planning) தற்காலச் சூழலியல் நெருக்கடிகளுக்கு முதல் தீர்வாக அமைகிறது[7]. நிலங்களின் இயற்கைச் சூழலுக்கு மாறான திட்டமிடா நகரமயமாக்கலே தற்கால வெள்ளப் பெருக்குக்கும் குடிநீர் நெருக்கடிக்கும் முதன்மைக் காரணமாகும். சங்க காலத்தின் ஐந்திணைப் பாகுபாட்டைப் போல, ஒவ்வொரு நிலப்பகுதியின் சூழலியல் தாங்கு திறனை (Carrying capacity) அறிந்து நகர மற்றும் விவசாய மண்டலங்களை வரையறுக்க வேண்டும்[7].

மரபார்ந்த நீரியல் தொழில்நுட்பங்களை மீட்டெடுப்பது இரண்டாவது மிக முக்கியமான தேவையாகும்[9]. கல்லணை, மதகு, மற்றும் கலிங்கு போன்ற பண்டைய பாசன அமைப்புகளின் செயல்பாட்டுக் கொள்கைகளை நவீன பொறியியலுடன் இணைக்க வேண்டும்[8]. மருத நில மேலாண்மையில் பயன்படுத்தப்பட்ட 'ஏரிவாரியம்' போன்ற சமுதாயப் பங்கேற்புடன் கூடிய நீர்நிலைப் பராமரிப்பு முறைகள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

சூழலியல் அறம் மற்றும் கல்வி (Eco-ethics and Education) அமைப்பில் மாற்றம் ஏற்படுத்துவது மூன்றாவது தீர்வாகும். நற்றிணை சுட்டும் புன்னையைத் தங்கையாகக் கருதும் குடும்பச் சூழலியல் உணர்வு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சூழலியல் கல்வியாகக் கற்பிக்கப்பட வேண்டும். இயற்கையை வெறும் நுகர்வுப் பொருளாகப் பார்க்காமல், மனிதனின் ஒரு பகுதியாகப் பார்க்கும் மனமாற்றமே எல் நினோ போன்ற பருவநிலை பேரழிவுகளில் இருந்து பூமியைக் காப்பதற்கான நிரந்தரத் தீர்வாகும்.

**முடிவுரை**

பழந்தமிழ்ச் சமூகத்தின் திணை வாழ்வியல் என்பது கடந்த காலத்தின் எச்சம் அல்ல; அது எதிர்கால மனிதகுலத்தின் வாழ்வியலுக்கான வழிகாட்டியாகும். சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ள நுட்பமான தாவரவியல் அறிவு, நீர் மேலாண்மை நுட்பங்கள், மற்றும் பல்லுயிர்ப் பெருக்க அறம் ஆகியவை தற்கால நிலவெப்பமயமாதல் மற்றும் எல் நினோ பருவநிலை நெருக்கடிகளுக்குத் தேவையான மிக முக்கியமான விழிப்புணர்வை வழங்குகின்றன.

இயற்கையைக் கட்டுப்படுத்த நினைக்கும் நவீன ஆதிக்க வாழ்வியலுக்கும், இயற்கையோடு இயைந்து வாழும் பழந்தமிழரின் திணை வாழ்வியலுக்கும் இடையிலான புள்ளியைக் கண்டறிந்து[1], திணை சார்ந்த சூழலியல் கொள்கைகளை நாம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே வரவிருக்கும் பருவநிலை பேரழிவுகளில் இருந்து உலகத்தையும் மனித சமூகத்தையும் காப்பாற்ற முடியும்.

**பார்வை நூல்கள் / நூலடைவு (References - MLA Style)**

1. காரியாசான். *சிறுபஞ்சமூலம்*. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1985.
2. நீலகண்ட சாஸ்திரி, K. A. *சோழர்கள் (புத்தகம் 1)*. மெய்யப்பன் பதிப்பகம், 2005.
3. திருத்தக்கதேவர். *சீவகசிந்தாமணி*. உ.வே.சா. பதிப்பகம், 1998.
4. Climate Trends. *Climate Impacts: El Niño and the Indian Monsoon*. Research Briefing, Climate Trends Publications, 2023.
5. Howarth, William. "Some Principles of Ecocriticism." *The Ecocriticism Reader: Landmarks in Literary Ecology*, edited by Cheryll Glotfelty and Harold Fromm, University of Georgia Press, 1996, pp. 69–9.

6. Ramanujan, A. K., translator. *The Interior Landscape: Classical Tamil Love Poems*. Indiana University Press, 1967.
7. Selvamony, Nirmal. "From the Anthropocene to the Neo-tiNaicene." *Humanities Circle*, vol. 3, no. 2, 2015, pp. 115–130.
8. Selvamony, Nirmal. *Persona in Tolkaappiyam*. International Institute of Tamil Studies, 1998[3].
9. Selvamony, Nirmal. "Tinai in Primal and Stratified Society." *Indian Journal of Ecocriticism*, vol. 1, 2008, pp. 38–48.
10. Selvamony, Nirmal, and Rayson K. Alex, editors. *Essays in Ecocriticism*. OSLE-India, 2007.

## Works cited

1. Climate Trends | Publications, https://climatetrends.in/publications/climate-impacts-66c351e14c155
2. A Survey of the Phases of Indian Ecocriticism - Purdue e-Pubs, https://docs.lib.purdue.edu/cgi/viewcontent.cgi?article=2616&context=clcweb
3. (PDF) TINAI AS AN ECOCRITICAL CONCEPT - Academia.edu, https://www.academia.edu/34488006/TINAI_AS_AN_ECOCRITICAL_CONCEPT
4. LOCATING SUSTAINABILITY WITHIN INDIAN ETHOS: A Study of Posthumanistic Implications of Tinai - DVK Journals, https://dvkjournals.in/index.php/jd/article/download/3561/3206/7610
5. Nirmal Selvamony - Wikipedia, https://en.wikipedia.org/wiki/Nirmal_Selvamony
6. Tiṇai Philosophy: The Indigenous Lifeway for the Anthropocene - ResearchGate, https://www.researchgate.net/publication/397587668_Tinai_Philosophy_The_Indigenous_Lifeway_for_the_Anthropocene
7. Tiṇai as Alternative Social Order - YouTube, https://www.youtube.com/watch?v=oPlfrGTLyA0
8. Book 1 Tamil | PDF - Scribd, https://www.scribd.com/document/844460577/Book-1-tamil
9. சங்ககால நீர்ப்பாசனம் - கணியன் பாலன் - கீற்று - கனிச்சாறு, http://kanichaaru.blogspot.com/2014/09/blog-post_29.html
10. தமிழரின் நீர் மேலாண்மை தொழில்நுட்பம் - Dr. J.R.SIVARAMAKRISHNAN, http://drsivaramakrishnan.blogspot.com/2020/08/blog-post_15.html
11. Book - Tamils and Technology in Tamil | PDF - Scribd, https://www.scribd.com/document/751882411/Book-Tamils-and-Technology-in-Tamil
12. TT Unit 4 | PDF - Scribd, https://www.scribd.com/presentation/868467594/TT-unit-4
13. What Is The Evidence of Clothing in The Sangam Period? | PDF - Scribd, https://www.scribd.com/document/724853573/118623
14. Nirmal selvamony - Google Scholar, https://scholar.google.com/citations?user=6ZcZDrAAAAAJ&hl=en
15. Tamils and Technology UNIT 4 | PDF - Scribd, https://www.scribd.com/document/1037261679/Tamils-and-Technology-UNIT-4
16. Compilation of Abstracts, https://www.bafg.de/SharedDocs/Downloads/DE/Veranstaltungen/2015/2015_10_13/2015_10_13_Abstracts.pdf?__blob=publicationFile&v=1
17. Climate Oscillations, Aerosol Variability, and Land Use Change: Assessment of Drivers of Flood Risk in Monsoon-Dependent Kerala - MDPI, https://www.mdpi.com/2673-4834/7/1/15